உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ. கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்

அருளிச்செய்த

கந்தபுராணம்

மூன்றுவது

மகேந்திர காண்டம்

மூலமும்,

சம்ஸ்கிருததிராவிடபண்டிதரும் பிரபலசோதிடகணிதசித்தாந்தியும்
வித்தியாவிருத்தித்தருமகர்த்தரும் ஆகிய
யாழ்ப்பாணம் பருத்தித்துறை

பிரமஸ்ரீ. ச, சுப்பிரமணியசாஸ்திரிகள்

இயற்றிய

உரையும்.

894.81113
KAC

STACKS

இவை
ஷைசாஸ்திரிகளால்
கலாநிதியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

விலை ரூபா ௩.

1929.

தருமாலயவேளியீடு இலக்கம் ௧௩.

46892

STACKS

படலவகராதி.

படலம்.	பக்கம்.	செய்யுட்டொகை.
அதிவீரன்வதைப்படலம்	௫௦	௩௭
அவைபுகுபடலம்	௧௭௬	௧௫௯
இலங்கைவீழ்படலம்	௪௦	௨௮
கடல்பாய்படலம்	௨௫	௧௯
கயமுகன்வதைப்படலம்	௭௨	௫௫
காவலாளர்வதைப்படலம்	௨௪௦	௨௯
சகத்திரவர்குகள்வதைப்படலம்	௨௭௩	௩௩
சதமுகன்வதைப்படலம்	௨௩௩	௨௧
சயந்தன்கனவுகாண்படலம்	௧௫௪	௨௮
சயந்தன்புலம்புறுபடலம்	௧௨௬	௮௧
சூரனகர்புரிபடலம்	௩௨௯	௨௯
சூரனமைச்சியற்படலம்	௩௩௮	௧௮௦
நகரழிபடலம்	௨௪௯	௮௧
நகர்புகுபடலம்	௯௧	௯௯
மகேந்திரஞ்செல்படலம்	௬௩	௨௮
யாளிமுகன்வதைப்படலம்	௩௧௨	௪௩
வச்சிரவர்குவதைப்படலம்	௨௮௨	௧௦௧
வீரசிங்கன்வதைப்படலம்	௩௩	௧௭
வீரவர்குகந்தமர்தனஞ்செல்படலம்	௧	௫௩
வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலம்	௧௬௩	௩௫
வீரவர்குமீட்சிப்படலம்	௩௨௩	௨௨

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராணம்

மகேந்திரகாண்டம்.

மகேந்திரகாண்டமென்பது மகேந்திரநகரினிகழ்ந்தசெயல்களைக்கூறுங்காண்டமெனவிரிதலின் முற்காண்டம்போல உருபும்பொருளுமொருங்குபலதொக்க தொகை. மகா + இந்திரம்=மகேந்திரம், வடசொல். குணசந்தி. பெருவளத்தையுடையதென்பதுபொருள். வீரவாகுதேவர் மகேந்திரநகரிற்சென்று முருகக்கடவுளதுகட்டளையைச் சூரபன்மனுக்குக்கூறிமீண்டதும், அதற்குச்சூரபன்மனிணங்காது போர்செய்யநினைந்து அமைச்சியல்செய்ததும் இக்காண்டத்துவிரித்துக்கூறப்படும்.

வீரவாகுகந்தமாதனஞ்செல்படலம்.

வீரவாகுதேவர் கந்தமாதனமலையின்மேற்சென்றமையைக்கூறுதலின் இது இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

முருகக்கடவுள் சூரபன்மனிடத்து ஓர் தூதுவரையனுப்பித் தமதுகருமத்தைத்தெரிவித்து அவனிணங்காவழிப்போர்க்குச்செல்லத்திருவுளம்பற்றி, வீரவாகுதேவரையழைத்து, நீ சூரபன்மனிடஞ்சென்று தேவரைச்சிறையினின்றுநீக்கும்படியும் நீக்காவிடின் யாம் போர்க்குவருவோமென்றும் அறிவித்துவருவாய் என்று கட்டளையிட்டனர். வீரவாகுதேவர் உடன்பட்டுப்போய்க் கந்தமாதனமலையிலிவர்ந்து ஒருபெரியதிருவுருவத்தைக்கொண்டு அசுரருடையஇருப்பிடமாகிய வீரமகேந்திரபுரத்தையும் அதன்வளங்களையும்பார்த்து, பின் தமதுவடிவைச்சுருக்கி அப்பாற்செல்லத்துணிந்தார் என்பதாம்.

விரிஞ்சன்மா றேவ ராலும் வெலற்கரும் விறலோ னாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத வொழுக்கமும் பிறவு மாற்றி
யருஞ்சிறை யவர்க்குச் செய்த வவுணர்கோ னவி கொள்வான்
பரஞ்சுட ருருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

இ—ள்: விரிஞ்சன் மால் தேவராலும் வெலற்கு அரும் விறலோன் ஆகி—பிரமனாலும் திருமாலினாலும் இந்திரன்முதலிய ஏனைத்தேவர்களாலும்வெல்லுதற்கியலாத வலியையுடையவனாய், பெரும் சுரர் பதமும் வேத ஒழுக்கமும் பிறவும் மாற்றி—சிறந்த தேவர்களது அதிகாரத்தையும் வேதமுறையான ஒழுக்கத்தையும் ஏனையவற்றையும் ஒழித்து, அவர்க்கு அரும் சிறை செய்த—அவர்களுக்குக்

கடுஞ்சிறையையுண்டாக்கிய, அவுணர் கோன்—அசுரர்க்கரசனாகியசூரபன்மனது, ஆவி கொள்வான்—உயிரைக்கவரும்படி, பரஞ்சுடர் உரு ஆய் வந்த—பரஞ்சோதிவடிவாக அவதரித்த, குமரனை—முருகக்கடவுளை, பணிதல்செய்வாம்—வணங்குவாம் எ—று.

காண்டமுதற்கண் வழிபடுதெய்வத்தைத்துதித்தார் ஆசிரியர். நூன்முகத்தும் இறுதியினுந்துதித்தலேயன்றி நூற்பகுதிகடோறுந்துதித்தலும் வழக்கு. அறநெறிநின்றாரைக்காத்தல் கடனாதலின், அசுரரையழித்தற்பொருட்டு ஒருவடிவுகொண்டார்கடவுளென்பது செய்யுளினுட்கிடை.

விரிஞ்சன்-பலவகையானஉலகங்களையுமுயிர்களையும்படைப்பவன். மால்-பெருமையையுடையவன். தேவர்-விண்ணுலகத்தில்வசிப்பவர்கள். ஆலுருபைத்தனித்தனியியைத்துப்பொருள்கொள்ளப்பட்டது. முன்னையஉம்மை உயர்வுசிறப்பு. வெலல்-தொகுத்தல். விறல் ஈண்டுமெய்வலியையேயன்றி வரம் வீரம் முதலியவற்றையுமுணர்த்திநின்றது. அவுணர்குலத்தைப் பலகாலமாகஅடக்கிமேம்பட்டதேவரென்பார் 'பெருஞ்சுரர்' என்றார். தேவருமசுரருமென்னுமிருபாலாருள்ளுந் தேவர் சிறந்தசாதியாராதலின் அங்ஙனங்கூறினாரெனினுமாம். வேதவொழுக்கம்-வேதத்தில்விதித்தவாறொழுகுமொழுக்கம். பிற-கீர்த்தி பெருமை முதலாயின. அருஞ்சிறை-பெருங்குற்றத்தைச் செய்தார்க்கும்விதிக்கத்தகாத (கடுங்காவன்முதலியனவமைந்த) சிறை. பரஞ்சுடர்-மேலானசோதி. கடவுள் சூரியன்முதலிய சோதிகளெல்லாவற்றையும் விழுங்கிமேற்படவல்ல பெருஞ்சோதிவடிவினராதலின் அங்ஙனங்கூறுவது. (க)

இந்திர னாதி யான வமரரு மேனை யோரும்
புந்தியி லுவகை பூத்துப் புடைதனி லொழுகிப் போற்றச்
செந்திமா நகரந் தன்னிற் சீயமெல் லணைமேல் வைகுங்
கந்தவே ளருளி னீரா லினையன கருத லுற்றான்.

இ—ள்: இந்திரன் ஆதி ஆன அமரரும் ஏனையோரும்—இந்திரன்முதலாகிய தேவர்களும் பிறரும், புந்தியில் உவகை பூத்து புடை தனில் ஒழுகி போற்ற—மனத்தில் மகிழ்ச்சிமிகுந்து பக்கத்திலமைந்துநின்று துதிக்க, செந்தி மா நகரம் தன்னில் சீய மெல் அணை மேல் வைகும்—பெருமைவாய்ந்த திருச்செந்திப்பதியிற் சிறந்தசிங்காசனத்திலெழுந்தருளியிருக்கின்ற, கந்தவேள்—குமாரக்கடவுள், அருளின் நீரால் இனையன கருதல் உற்றான்—அனுக்கிரகத்தோடு இவ்வாறு சிந்திப்பார் எ—று.

ஏனையோர்-முனிவரும் வீரவாகுமுதலியசேனைத்தலைவரும். பணிசெய்தலாலுண்டாயஆனந்தத்தையே புந்தியிலுவகையென்றார். திருச்செந்திப்படலத்திற்கூறியபணிகளை முறைப்படி தவறாதுசெய்தென்பார் 'புடைதனிலொழுகி' என்றார். மெல்லணை-மென்மையாக (அதிவிசித்திரமாகச்) செய்யப்பட்டஆசனம். சூரனாதியரையழித்துவருமாறு சிவபிரான் கட்டளைசெய்திருப்பவும் நீதிநூன்முறைப்படி தூதனுப்பித் தமதுகட்டளையையுணர்த்தி அதற்குடன்படாவழிப்பொரநினைந்தனராதலின் 'அருளினீரால்...கருதலுற்றான்' என்றார். (உ)

நான்முக னாதி யான நாகரு முனிவ ரும்போன்
மேன்முறை யவுண ராகும் வியன்றொகை யவரு மெங்கோன்
கான்முளை நெறிய ரேனுங் கடியரை முடிவு செய்த
னூன்முறை யியற்கை யாகு நுவலரு மறனு மஃதே.

இ—ள்: நான்முகன் ஆதி ஆன நாகரும் முனிவரும் போல்—பிரமாமுதலாகிய தேவர்களையும் முனிவர்களையும்போல, மேல் முறை அவுணர் ஆகும் வியன் தொகையவரும்—மேன்மையானமுறையையுடைய அசுரர்களாகிய பெரியகூட்டத்தாரும், எம் கோன் கான்முளை நெறியர் எனும்—எங்கள்கடவுளாகிய சிவபிரானுடைய புதல்வரென்றுசொல்லத்தக்க முறையையுடையர் ஆயினும், கடியரை முடிவுசெய்தல் நூல் முறை இயற்கை ஆகும்—துட்டர்களையழிப்பது நீதிநூன்முறையான இயல்பாகும், நுவலரும் அறனும் அஃதே—சொல்லுதற்கரிய தருமமும் அதுவேயாம் எ—று.

கான்முளை-இருபெயரொட்டு. புதல்வர்க்குத்துன்பநேர்ந்தவழி மனம்பரிந்து தாய்தந்தையர் அதனைத்தீர்த்தல்போலத் தேவர்க்கும்முனிவர்க்குந்துன்பநேர்ந்தவழிக் கருணைபூத்துச் சிவபிரான்அவற்றைத்தீர்த்தலின் தேவரையும் முனிவரையுஞ் சிவபிரானுக்குப்புத்திரராகவும், தீச்செயல்களைச்செய்பவராயினும் தேவர்போலவே காசிபமுனிவர்க்கு மைந்தராய்ப்பிறந்தமையான் 'மேன்முறையவுணர்' எனவும், பலகோடிக்கணக்கினரென்பார் 'வியன்றொகையவர்' எனவும், ஏனைய தேவரையு முனிவரையும்போலக் கருணைசெய்யப்படத்தக்காரென்பார் 'எங்கோன்கான்முளைநெறியர்' எனவும், செய்யத்தகாததீச்செயல்களையெல்லாம் நேர்ந்தவாறேசெய்கின்றவரென்பார் 'கடியர்' எனவும், அங்ஙனஞ்செய்வாரையொறுத்துச் செய்யாதாரைக்காப்பது ஆன்றோர்கூற்றும் உலகியலுமாமென்பார் 'கடியரைமுடிவுசெய்தனூன்முறையியற்கையாகும்' எனவும், தீயோரையொறுக்காவழி அவர்சுகத்துடன்வாழ நல்லோர் துன்புழப்பர், அங்ஙனம் முறையிகந்து நிகழ்வது தமக்குமுடன்பாடன்றென்பதுதோன்றத் தேற்றேகாரம்புணர்த்தி 'நுவலருமறனுமஃதே' எனவும் கூறினர். (ங)

இற்றிது துணிபா மேனு மெண்ணெழிற் சூரன் றன்னை
யற்றமில் சிறப்பின் வைகு மவன்றமர் தம்மை யெல்லாஞ்
செற்றிடன் முறைய தன்றாற் றேவர்தஞ் சிறைவிட் டுய்ய
மற்றவன் றனக்கோ ரொற்றை வல்லையில் விடுத்து மன்னே.

இ—ள்: இற்று இது துணிபு ஆம் எனும்—இதுதுணியத்தக்கதாம் ஆனபோதும், எண் எழில் சூரன் தன்னை அற்றம் இல் சிறப்பின் வைகும் அவன் தமர் தம்மை எல்லாம்—மதிக்கத்தகுந்த திருவினையுடையசூரபன்மனையும் குற்றமற்ற சிறப்புடனிருக்கின்ற அவனதுசுற்றத்தவர்களையும் ஒருங்கே, செற்றிடல்—அழிப்பது, முறையது அன்று—நீதியாகாது, தேவர் தம் சிறை விட்டு உய்ய—தேவர்களதுசிறையைநீக்கி உய்யும்படி, அவன் தனக்கு ஓர் ஒற்றை வல்லையில் விடுத்தும்— அந்தச்சூரபன்மனுக்கு ஒரு தூதனை விரைவிலனுப்புவோம் எ—று.

ஆல் மன் ஒ-அசைகள். இற்றிது-இத்தன்மைத்தாகியஇது. அது-பகுதிப்பொருள்விகுதி. எழில் சிறப்பு இரண்டும் வளத்தைச்சுட்டிநின்றன. இதுபோற்பெருவளம் யாண்டுமின்றெனமதிக்கத்தகுந்ததாதலின் 'எண்ணெழில்' எனவும், வேண்டுமமைதியிற் சிறிதுங்குறைவற்றதாதலின் 'அற்றமில்சிறப்பு' எனவும், பொரவந்தகாரணத்தைத் தூதர்வாயிலாகவுணர்த்தியன்றி முன்பொரத்துணிவது தருமவிரோதமென்பார் 'செற்றிடன்முறையதன்று' எனவும், அதனைக்காலந்தாழ்த்துச்செய்யின் சிறைப்பட்டதேவர்கள் பின்னும் பலநாட்கள்காறுந் துன்பமனுபவிக்கநேரிடுமாதலின் 'வல்லையில்விடுத்தும்' எனவும் கூறினர். (ச)

தூண்டுநம் மொற்றன் மாற்றஞ் சூரனு மவுணன் கேளா
வீண்டிடு சிறையி னீக்கி யமரரை விடுப்ப னென்னின்

மாண்டிட லின்றி யின்னும் வாழிய மறுத்து ளானே
லாண்டுசென் றடுது மீதே யறமென வகத்துட் கொண்டான்.

இ—ள்: சூரன் ஆம் அவுணன்—சூரபன்மனுகிய அசுரன், தூண்டும் நம் ஒற்றன் மாற்றம் கேளா—நாமனுப்புந் தூதனுடைய வசனத்தைக்கேட்டு, அமரை—தேவர்களை, வீண்டிடு சிறையில் நீக்கி விடுப்பன் என்னில்—அகப்பட்டிருக்கின்ற சிறையினின்றும் நீக்கிவிடுவானுயின், மாண்டிடல் இன்றி இன்னும் வாழிய—இறவாமல் இன்னும்பலகாலம் வாழுக, மறுத்துளானேல்— அதற்குடன்படானுயின், ஆண்டு சென்று அடுதும்—அவ்விடத்திற்போயழிப்போம், ஈதே அறம்—இதுவேதருமம், என—என்று, அகத்துள் கொண்டான்—தமதுதிருவுள்ளத்திற் சிந்தித்தார் எ—று.

வீழ்ந்திடு என்பது அடிநோக்கிவிகாரமாயிற்று. வாழிய-வியங்கோள். ஆண்டு என்றது அவனுடைய நகரினெல்லையை. ஏ-பிரிநிலை. கடுஞ்சிறையென்பார் 'வீண்டிடுசிறை' என்றார். (ஞ)

வடித்தசெங் கதிர்வே லண்ணன் மாலயன் மகவா னுதி
யடுத்தபண் ணவரை நோக்கி யவுணர்தங் கிளையை யெல்லா
முடித்திடப் பெயர்து நாளை முன்னமோர் தூதன் றன்னை
விடுத்தன முணர்தல் வேண்டும் வெய்யசூர் கருத்தை யென்றான்.

இ—ள்: வடித்த செம் கதிர் வேல் அண்ணல்—கூரிய சிவந்தசோதியைப்பரப்புகின்ற வேற்படையையேந்தியமுருகக்கடவுள், மால் அயன் மகவான் ஆதி அடுத்த பண்ணவரை நோக்கி—திருமாலும்பிரமாவும்இந்திரனும் முதலாகத் தம்மைச்சூழ்ந்திருக்கின்ற தேவர்களைப் பார்த்து, அவுணர்தம் கிளையை எல்லாம் முடித்திட நாளை பெயர்தும்—அசுரர்களது இனத்தையெல்லாமழித்தற்கு நாளைத்தினத்திற்புறப்படுவோம், முன்னம் ஓர் தூதன் தன்னை விடுத்தனம்—அதன்முன் ஒரு தூதுவனையனுப்பி, வெய்ய சூர் கருத்தை உணர்தல் வேண்டும்—கொடியசூரபன்மனது மனக்குறிப்பை அறிதல்வேண்டும், என்றான்—என்றுதிருவாய் மலர்ந்தார் எ—று.

வடித்தவேல் செங்கதிர்வேல் எனத் தனித்தனியியையும். நாளைப்பெயர்துமென்றதனுலும் வெய்யசூர் என்றமையாலும் யாமனுப்புந்தூதிற்கவனிணங்கானென்பதும், உணர்தல்வேண்டுமென்றதனுல் நீதிவழிவழாமைப்பொருட்டு அங்ஙனஞ்செய்வாமென்பதும் குறிப்பித்தவாறுகாண்க. விடுத்தனம்-முற்றெச்சம். (சு)

கடலுடைக் கடுவை யுண்டோன் காதல னினைய செப்ப
மடலுடைப் பதுமப் போதில் வைகினோன் மாயன் கேளா
வடலுடைப் பெரும்போ ரெந்தை யாற்றுமுன் சூரன் முன்னோர்
மிடலுடைத் தூதன் றன்னை விடுத்தலே யறத்தா றென்றார்.

இ—ள்: கடல் உடை கடுவை உண்டோன் காதலன் இனைய செப்ப—பாற்கடலிற்றோற்றியநஞ்சையமுதுசெய்த சிவபிரானது புதல்வராகிய முருகக்கடவுள் இவற்றைக்கூற, மடல் உடை பதும போதில் வைகினோன் மாயன் கேளா—இதழ்களையுடையசெந்தாமரைமலராசனத்தில்வீற்றிருக்கின்ற பிரமதேவருந்திருமாலுங்கேட்டு, எந்தை—தேவரீர், அடல் உடை பெரும் போர் ஆற்றும் முன்—அழிதலையுடைய பெரியபோரைச்செய்தற்குமுன்னே, சூரன் முன்—சூரபன்மனிடத்து, ஓர் மிடல் உடை தூதன் தன்னை விடுத்தலே—வலிமையையு

டைய ஒரு தூதுவனையனுப்புவதே, அறத்து ஆறு—தருமநீதி, என்றார்—என்று கூறினார்கள் எ—று.

பின்னைய முன் எழனுருபு. எ பிரிநிலை. தறுகண்மையானபோரென்பார் ‘அடலுடைப்பெரும்போர்’ எனவும், அது சாமோபாயத்தின் பின்னிகழ்தற்பாலதாதலின் ‘தூதன்றன்னைவிடுத்தலேயறத்தாறு’ எனவும், வன்கண்மைபூண்ட அசுரர்குழுமிவாழுமிடத்தில் அஞ்சாதுதூதுசென்றுமீளவல்லானென்பார் ‘மிடலுடைத்தூதன்’ எனவும் கூறினார். (எ)

என்றலுங் குமர மூர்த்தி யிப்பெருந் திறலோர் தம்முள்
வென்றிகொள் சூரன் றன்பால் வீரமா மகேந்தி ரத்துச்
சென்றிட விடுத்தும் யாரைச் செப்புதி ரென்ன லோடு
நன்றென வதனை நாடி நான்முக னவிற லுற்றான்.

இ—ள்: என்றலும்—என்று பிரமதேவருந் திருமாலுங் கூறுதலும், குமரமூர்த்தி—முருகக்கடவுள், இ பெரும் திறலோர் தம்முள்—இந்தச்சிறந்தவீரர்களுள், வீர மா மகேந்திரத்து வென்றி கொள் சூரன் தன் பால் சென்றிட—சிறந்த வீரமகேந்திரபுரத்தில் வெற்றியையுடைய சூரபன்மனிடத்துத்தூதுபோம்படி, யாரை விடுத்தும்—ஆரையனுப்புவோம், செப்புதிர் என்னலோடும்—சொல்வீர்களென்றுதிருவாய்மலர்தலும், நான்முகன் அதனை நாடி—பிரமதேவர் அதனைக்கேட்டு, நன்று என—நல்லதென்றுசம்மதித்து, நவிறல் உற்றான்—சொல்லத்தொடங்கினார் எ—று.

மிடலுடைத்தூதன் என முற்கூறியதற்கேற்ப யாரைவிடுத்தும் என வினவினர். (அ)

மெல்லென வுலவைக் கோனும் வீரமா மகேந்தி ரத்திற்
செல்லரி தெனக்கு மற்றே செய்பணி நெறியா லன்றி
யொல்லையி லங்க ணேகி யொன்னலர்க் கடந்து மீள
வல்லவ னினைய வீர வாகுவே யாகு மென்றான்.

இ—ள்: உலவைக்கோனும் வீர மா மகேந்திரத்தில் மெல்லென செல்லரிது—வாயுதேவனும் சிறந்தவீரமகேந்திரபுரத்தில்மெல்லவாகநுழைதல்கூடாது, எனக்கும் செய் பணி நெறியால் அன்றி அற்றே—எனக்கும்செய்கின்ற வென்முறையோடுசெல்வதன்றித் தூதுசெல்லுதல்கூடாது, ஒல்லையில் அங்கண் ஏகி ஒன்னலர் கடந்து மீள வல்லவன்—விரைவாக அவ்விடத்திற்போய் எதிர்த்தபகைவர்களைவென்றுதிரும்பவல்லவர், இனைய வீரவாகுவே ஆகும்—இந்தவீரவாகுதேவரேயாம், என்றான்—என்றுகூறினார் எ—று.

உலவைக்கோன்-உலாவுந்தொழிலையுடைய தலைவன். அற்றே-அப்படியே. தடையின்றியெங்குமுலாவத்தக்கவாயுதேவன் அந்நகரத்தாரறியாதவாறு தூது செல்லினும் அவுணர்தெரிந்து கடிவரென்பார் ‘உலவைக்கோனும்வீரமாமகேந்திரத்தில்மெல்லெனச்செல்லரிது’ எனவும், யான் அவர்க்குமூதாதையாதல்பற்றித்துணிந்துசெல்லினும் தங்களரசனுக்குமாறாகத் தூதுசென்றேனென்பதைத்தெரிந்தமாத்திரத்தே முறைபாராதெதிர்ப்பரென்பதுபோதர ‘செய்பணிநெறியாலன்றி எனக்குமற்றே’ எனவும், தடுப்பாரையும் எதிர்ப்பாரையும் பொருட்படுத்தாது ஆண்மையுடன்சென்றென்பார் ‘ஒல்லையில் ஏகி’ எனவும், ஒருபுடையில்அணித்தாய்நிற்கின்றவனென்பார் சுட்டிக்காட்டி ‘இனைய’ எனவும் கூறினார். வீரவாகுவே என்பதில் ஏ-பிரிநிலை. உம்மைகள்-சிறப்பு. (கூ)

சதுர்முக னினைய வாற்றாற் சண்முக னுளத்துக் கேற்பக்
கதுமென வுரைத்த லோடுங் கருணைசெய் தழகி தென்னா
மதுமலர்த் தொடையல் வீர வாகுவின் வதன நோக்கி
முதிர்தரு முவகை தன்னா லித்திற மொழிய லுற்றான்.

இ—ள்: சதுர்முகன்—பிரமதேவர், இனைய ஆற்றால்—இப்படியாக, சண்முகன் உளத்துக்கு ஏற்ப கதுமென உரைத்தலோடும்—முருகக்கடவுளது திருவுளத்துக்கிசைய விரைவிற்கூற, கருணைசெய்து—முருகக்கடவுள் அவருக்கு அருள்செய்து, அழகிது என்னா—பிரமனே! உன்கருத்துமிகச்சிறந்ததென்றுகூறி, மது மலர் தொடையல் வீரவாகுவின் வதனம் நோக்கி—தேன்பொருந்திய பூமாலையையணிந்த வீரவாகுதேவரது முகத்தைப்பார்த்து, முதிர்தரும் உவகைதன்னால் இத்திறம் மொழியலுற்றான்—பெருமகிழ்ச்சியுடன் இவ்வாறு திருவாய்மலாத்தொடங்கினார் எ—று.

சதுர்முகன்- நான்குமுகங்களையுடையவன். சண்முகன்- ஆறுமுகங்களையுடையவன். உளம்-உள்ளமென்பதன்குறுக்கல். கதும்-விரைவுக்குறிப்பு. அழகிது-அழகு என்னும்பெயரடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. முருகவேள் வீரவாகுவையே தூதனுப்பல்வேண்டுமென நிச்சயித்திருக்கின்றாரென்பதைப் பிரமதேவரறிந்துவிடைகூறினராதலின் 'சண்முகனுளத்துக்கேற்ப—உரைத்தலோடும்' எனவும், தம்மைவினவியவுடன் சிறிதுமாலோசியாது என்பார் 'கதுமென' எனவும், தம்முளக்குறிப்பின்வழியே பிரமதேவர்கூறியதனால் அவர்மேல் மிகுந்தநேசத்தைமுகக்குறிப்பாற்காட்டினரென்பார் 'கருணைசெய்து' எனவும், வீரவாகுவையே தூதனுப்பயாமெண்ணினோம் நீயுமவ்வாறேகூறினை என்பதுதோன்ற 'அழகிது' எனவும், செய்துமுடித்தற்குஎவருமஞ்சத்தக்கதொருகாரியத்தைப் பணித்தலின் அதற்கொருப்படுத்தற்பொருட்டு மிகுந்த தண்ணளிதோன்றப் பேசினரென்பார் 'முதிர்தருமுவகைதன்னால்-மொழிதலுற்றான்' எனவும் கூறினார். (௯0)

மயேந்திர மூதூ ரேகி வல்லைநீ யமல னல்குஞ்
சயேந்திர ஞாலத் தேரோன் றனையடுத் தொருநாற் றந்தக்
கயேந்திரன் மதலை வானோர் காப்பைவிட் டறத்தா றுன்னி
நயேந்திர வளத்தி னோடு முறைகென நவிறி யன்றே.

இ—ள்: நீ—தம்பீ! நீ, வல்லை—விரைவாக, மயேந்திர முது ஊர் ஏகி—பழைய வீரமகேந்திரபுரியிற்போய், அமலன் நல்கும் சய இந்திரஞால தேரோன் தனை அடுத்து—சிவபிரான்கொடுத்தருளிய வெற்றிமிகுந்த இந்திரமாஞாலத்தேரையுடைய சூரபன்மனையணுகி, ஒரு நால் தந்த கய இந்திரன் மதலை— நான்குகொம்புகள்பொருந்திய ஐராவதயானையை வாகனமாகவுடைய இந்திரனதுபுதல்வனாகிய சயந்தனதும், வானோர்—தேவர்களதும், காப்பைவிட்டு—சிறையைநீக்கி, அறத்தாறு உன்னி—தருமநெறியைச்சிந்தித்தொழுகி, நய இந்திர வளத்தினோடும் உறைக—சிறந்த பெருஞ்செல்வத்துடன் வாழ்ந்திருப்பாய், என நவிறி—என்று சொல்வாய் எ—று.

மகேந்திரமென்பது எதுகைநோக்கி விகாரமாயிற்று. முதுமையென்னும் பண்புப்பெயர் விகுதிகெட்டு முதனீண்டது. சயேந்திரஞாலம் கயேந்திரன் நயேந்திரவளம் குணசந்திகள். அடுத்து நவிறி எனஇயையும். காப்பு-காக்கப்படுவது. காலதாமதஞ்செய்யாதென்பதும் பகைவர்க்குச்சிறிதுமஞ்சாதென்பதும் ஒருங்கேபோதர 'வல்லை' எனவும், வரத்திறத்தின்மிக்கானென்பதுபோதர 'அமலனல்

குஞ்சயேந்திரஞாலத்தேரோன்' எனவும், தேவர்முனிவர்முதலானபெரியோர்களை வருத்தாதென்பார் 'அறத்தாறுன்னி' எனவும், தருமநெறிகோடிற்செல்வமனைத்துங்கெடுமென்பார் 'அறத்தாறுன்னிநயேந்திரவளத்திரேடுமுறைக' எனவும் கூறினர். உறைக-தொகுத்தல். (கக)

அம்மொழி மறுத்து ளானே லவுணநின் கிளையை யெல்லா
மிம்மென முடித்து நின்னை யெஃகவேற் கிரையா நல்கத்
தெம்முனை கொண்டு நாளைச் செல்லுதும் யாமே யீது
மெய்ம்மைய தென்று கூறி மீள்கென வீரன் சொல்வான்.

இ—ள்: அ மொழி மறுத்துளானேல்—அந்தவாசகத்தை அவன் மறுத்துப் பேசுவானாயின், அவுண—அசுரனே!, நின் கிளையை எல்லாம் இம்மென முடித்து நின்னை எஃக வேற்கு இரையா நல்க—உன்னுடைய சுற்றத்தவர்களையெல்லாம் விரைவிலழித்து உன்னைக்கூரியவேற்படைக்கு உணவாகக்கொடுக்கும்படி, தெவ் முனை கொண்டு—பகைமுனையைப்பொருந்தி, யாம் நாளை செல்லுதும்—நாம் நாளைக்குவருவோம், ஈது மெய்ம்மையது என்று கூறி—இது உண்மையென்றுசொல்லி, மீள்க என—திரும்புவாயென்றருள, வீரன் சொல்வான்—கேட்டவீரவாகுதேவர்சொல்வார் எ—று.

இம்-விரைவுக்குறிப்பு. ஏ அசை. அது-பகுதிப்பொருள்விகுதி. மீள்கென-தொகுத்தல். மறுத்துளானேல் கூறி எனஇயையும். பலஆண்டுகழியுங்காறும் பொருதழிக்கினும் ஒழியாதபெருங்கிளையையெல்லாம் சிறிதுபோழ்திலழித்தென்பதுபோதர 'நின்கிளையையெல்லாமிம்மெனமுடித்து' எனவும், உனதுவச்சிரயாக்கையைப்பிளக்கத்தக்கவேலென்பார் 'எஃகவேல்' எனவும், போர்க்குவேண்டிய ஆயத்தங்களுடனென்பார் 'தெம்முனைகொண்டு' எனவும் கூறினர். (கஉ)

வெந்திற லவுண ரீண்டும் வீரமா மகேந்தி ரத்திற்
சுந்தரத் திருவின் வைகுஞ் சூரபன் மாவின் முன்போ
யெந்தைநீ யருளிற் றெல்லா மிசைத்தவ னுள்ள நாடி
வந்திடு கின்றே னென்னா வணங்கியே தொழுது போனான்.

இ—ள்: எந்தை—எங்கள் தலைவரே!, வெம் திறல் அவுணர் ஈண்டும் வீர மா மகேந்திரத்தில்—மிக்க வலியையுடைய அசுரர்கள் நெருங்கியிருக்கின்ற பெரிய வீரமகேந்திரபுரத்தில், சுந்தர திருவின் வைகும்—சிறந்த செல்வத்தோடிருக்கின்ற, சூரபன்மாவின் முன் போய்—சூரபன்மனுக்குமுன்சென்று, நீ அருளிற்று எல்லாம் இசைத்து—தேவரீர்திருவாய்மலர்ந்த வாசகங்களையெல்லாந்தெரிவித்து, அவன் உள்ளம் நாடி வந்திடுகின்றேன்—அவனதுகருத்தையறிந்துவருவேன், என்னா—என்றுகூறி, வணங்கி தொழுது போனான்—பணிந்து கைகுவித்து அப்பாற்சென்றார் எ—று.

வெம்மை-கொடுமை. சுந்தரம்-அழகு. மகேந்திரத்திற் போய் எனவும், என்னா போனான் எனவும் இயையும். சூரபன்மனென்னும் பெயர்ச்சொல் வடமொழிநகரவீறுபோல நின்றது. முதியோரையணுகும்பொழுதும் அகலும்பொழுதும் வணங்கலுந்தொழுதலும் இளையோர்க்குமுறையென்க. அருளிற்று-வினையாலணையும்பெயர். வந்திடுகின்றேன்-விரைவுபற்றியநிகழ்காலம். (கங)

கூர்ந்திடு குலிசத் தண்ணல் குமரவே ளொற்றன் றன்பின்
பேர்ந்தனன் சென்று வீர பெருந்திறற் சூரன் மூதூர்
சார்ந்தனை சிறையில் வானோர் சயந்தனோ டிருந்தா ரங்கட்
சேர்ந்தனை தேற்றிப் பின்னுன் செயலினை முடித்தி யென்றான்.

இ—ள்: கூர்ந்திடு குலிசத்து அண்ணல்—கூர்மையான வச்சிராயுதத்தையுடைய இந்திரன், குமரவேள் ஏற்றன் தன் பின் போந்தனன் சென்று—முருகக்கடவுளனுப்பிய தூதுவராகிய வீரவாகுதேவருக்குப்பின்னேதொடர்ந்துசென்று, வீர—வீரரே!, பெரும் திறல் சூரன் முது ஊர் சார்ந்தனை—மிக்கவலியையுடைய சூரபன்மனது பழையமகேந்திரபுரியிற்போய், வானோர் சயந்தனோடு சிறையில் இருந்தார்—தேவர்கள் (என்புதல்வனாகிய) சயந்தனோடும் சிறைப்பட்டிருக்கின்றார்கள், அங்கண் சேர்ந்தனை தேற்றி—அவ்விடத்திற்போய் அவர்களுக்குத்தேற்றங்கூறி, பின் உன் செயலினை முடித்தி—அதன்பின் நீர்செய்யவேண்டியகாரியத்தை நிறைவேற்றிவருக, என்றான்—என்றுசொன்னான் எ—று.

போந்தனன் சார்ந்தனை சேர்ந்தனை முற்றெச்சங்கள். உன்செயலென்றது முருகவேளின்கட்டளையைச் சூரனுக்குணர்த்துதலை. இலக்கைத்தவறாதுபிளக்கவல்லவென்பார் 'கூர்ந்திடு' என்றார். தேற்றம்-விரைவிற்சிறைநீங்குமென்னும் உறுதி. (கச)

அவ்வழி யமரர் கோமா னனையன வறைத லோடுஞ்
செவ்விது நிற்றி யற்றே செய்வனென் றவனை நீங்கி
யெவ்வமி றுணைவ ராகு மெண்மரு மிலக்கத் தோரு
மெய்வருந் தொடர்பிற் செல்லக் கண்ணுறீஇ விடலை சொல்வான்.

இ—ள்: அவ்வழி— அப்பொழுது, அமரர் கோமான் அனையன அறைதலோடும்—தேவர்க்கரசனாகிய இந்திரன் அவ்வாசகங்களைக்கூற, விடலை—வீரவாகுதேவர், செவ்விது நிற்றி—அரசனே! மனம்வருந்தாதுநிற்பாய், அற்றே செய்வன்—நீ கூறியவாறேசெய்வேன், என்று—என்றுகூறி, அவனை நீங்கி—அந்த இந்திரனைப்பிரிந்து, எவ்வம் இல் துணைவர் ஆறும் எண்மரும் இலக்கத்தோரும் மெய் வரும் தொடர்பில் செல்ல—குற்றமற்றதம்பியராகிய எட்டுவீரர்களும் இலக்கவீரர்களும் உண்மையானமனத்தொடர்பினுடன் பின்செல்ல, கண் உறீஇ—அவர்களைப்பார்த்து, சொல்வான்—பின்வருமாறு சொல்லுவார் எ—று.

செவ்விது-செம்மையாக. அற்றே-அப்படியே. விடலை-ஆண்மக்களுட்சிறந்தவன். சிறையிருப்பாரைக்காண்பேனோ காணேனோ எனஐயுறாதுநிற்பாயென்பார் 'செவ்விதுநிற்றி' எனவும், உடன்பிறந்தார்க்குநேருமிடுக்கண்முதலியவற்றைத் தமக்குநேர்ந்தனவாகநினையுமியல்பினரென்பார் 'எவ்வமிறுணைவர்' எனவும், தாய்ப்பசுவைவிட்டகலாதுதொடருங்கன்றுபோலவென்பார் 'மெய்வருந்தொடர்பில்' எனவும் கூறினார். (கரு)

நீயிர்கள் யாருங் கேண்மி னெடுந்திரைப் பரவை வாவித்
தியதோர் மகேந்தி ரத்திற் சென்றுசூர் முன்போய் நந்த
நாயகன் பணித்த மாற்ற நவிலுவன் மறுத்து ளானேன்
லாயவன் முதூர் முற்று மட்டபின் மீள்வ னம்மா.

இ—ள்: நீயிர்கள் யாரும் கேண்மின்—தம்பிமீர்! நீவிரெல்லீருங்கேளுங்கள், நெடும் திரை பரவை வாவி தியதது ஓர் மகேந்திரத்தில் சென்று— நெடிய திரை பொருந்திய கடலைக்கடந்து கொடிய மகேந்திரபுரிக்குப்போய், சூர் முன் போய்—(அங்கேயாசிருக்கின்ற) சூரபன்மனது முன்னிலையிற்சென்று, நம் தம் நாயகன் பணித்த மாற்றம் நவிலுவன்—எங்கள்தலைவராகிய முருகக்கடவுள்கூறியவார்த்தையைச்சொல்வேன், மறுத்துளானேல்—அவன் அதற்குமறுத்துக்கூறுவானாயின், ஆயவன் முது ஊர் முற்றும் அட்டபின் மீள்வன்—அவனது பழையநகர முழுவதையுமழித்தபின் திரும்பிவருவேன் எ—று.

எல்லாருந்தீயரென்பதுதோன்ற நகரத்தாரதுதீக்குணம் நகர்மேலேற்றிக்கூறப்பட்டது. நான் தனியேசென்று திரும்பவல்லேன், நீவிர் தொடர்ந்துவாராது நின்மின் என்பது இச்செய்யுளின் தாற்பரியம். (கசு)

என்றலும் வியந்து பின்னோர் யாவரு மிறைஞ்ச லோடும்
பொன்றிக ழாகத் தூடு பொருந்துறப் புல்லிக் கொண்டு
வன்றிறற் பூதர் தம்முண் மன்னவ ரோடு மங்க
ணின்றிட வருளி வல்லே நெடுங்கடல் வேலை போந்தான்.

இ—ள்: என்றலும்—என்று வீரவாகுதேவர்கூறுதலும், பின்னோர் யாவரும் வியந்து இறைஞ்சலோடும்—தம்பிமாரனைவரும் அவரைப்புகழ்ந்துவணங்குதலும், பொன் திகழ் ஆகத்து ஊடு பொருந்துற புல்லிக்கொண்டு—(வீரவாகுதேவர்) அழகுவிளங்குகின்றமார்பிலணைத்துத்தழுவிக்கொண்டு, வன் திறல் பூதர் தம்முள் மன்னவரோடும் அங்கண் நின்றிட அருளி—மிக்கவலியையுடைய பூதத்தலைவர்களுடன் அவ்விடத்துநிற்கும்படி அருள்செய்து, வல்லே நெடும் கடல் வேலை போந்தான்—விரைவில் நெடியசமுத்திரத்தின்கரையிற்போனார் எ—று.

பொன்றிகழாகம் என்றதற்குப் பொன்னிறமாய்விளங்குகின்றமார்பு எனினும் பொன்னாபரணம்விளங்குகின்றமார்பு எனினுமாம். நமக்கு அவுணரூரிற்றனியேசென்றுமீள்வது அருமையாகாது என்றற்றொடக்கத்தமுகமன்களைக் கூறியென்பார் 'வியந்து' என்றார். திருச்செந்தியம்பதியினின்று தென்றிசைக்கடலை நோக்கி நடந்தாரென்க. (கஎ)

அலங்கலந் திரைகொ ணேமி யகன்கரை மருங்கின் மேரு
விலங்கலி னுயர்ந்த கந்த மாதன வெற்புத் தன்னிற்
பொலங்குவ டுச்சி மீது பொள்ளென விவர்த லுற்றான்
கலன்கலன் கலனென் றம்பொற் கழலமர் கழல்க ளார்ப்ப.

இ—ள்: அலங்கலம் திரை கொள் நேமி அகன் கரை மருங்கில்—ஒன்றன்பின்னொன்றாய்ப்பெயருகின்ற திரைபொருந்திய சமுத்திரத்தின் விசாலமானகரையின்பக்கத்தில், மேரு விலங்கலின் உயர்ந்த கந்தமாதன வெற்பு தன்னில்—மேருமலையைப்போலுயர்ந்துள்ள கந்தமாதனமென்னும்பெயரையுடையமலையிலுள்ள, பொலம் குவடு உச்சி மீது—பொன்மயமான சிகரத்தின்றலையில், அம்பொன் கழல் அமர் கழல்கள் கலன் கலன் கலன் என்று ஆர்ப்ப—செம்பொன்மயமானபாதங்களிற்பொருந்திய வீரக்கழல்கள் கலன் கலன் கலன் என்னுங்குறிப்பொலிதோன்றும்படி ஆரவாரிக்க, பொள்ளென இவர்தலுற்றான்—விரைவிலேறினார் எ—று.

கந்தமாதனமலையிலேறிநின்றார்க்கு வீரமகேந்திரபுரி நன்குகாணப்படுமென்பார் 'மேருவிலங்கலினுயர்ந்த' என்றார். கால்களையுயரத்தூக்கிவிரைவாகமிதித்தலாற் கழல்களார்த்தன. (கஅ)

புஞ்சமார் தமாலச் சூழல் பொதுளிய பொதும்பர் சுற்றி
மஞ்சுநின் றறுத கந்த மாதனப் பிறங்க லும்பர்
விஞ்சுநுண் பொடிதோய் மேனி மேலவ னிவரும் பான்மை
யஞ்சன வரைமேல் வெள்ளி யடுக்கல்சென் றணைய தன்றே.

இ—ள்: புஞ்சம் ஆர் தமால சூழல் பொதுளிய பொதும்பர் சுற்றி—அடர்ச்சியான பச்சிலைமாத்தொகுதிநெருங்கியசோலைகளாற்சூழப்பெற்று, மஞ்சு நின்று அறுத—மேகங்கள்படிந்துஇடையறாதிருக்கின்ற, கந்தமாதன பிறங்கல் உம்ப

ர்—கந்தமாதனமலையின்மேல், விஞ்சும் நுண் பொடி தோய் மேனி மேலவன்—அதிகமானவிபூதிபடியப்பெற்ற வடிவத்தையுடைய தலைவராகிய வீரவாகுதேவர், இவரும் பான்மை—ஏறுந்தன்மை, அஞ்சன வரை மேல் வெள்ளி அடுக்கல் சென்று அனையது—கருமலையொன்றின்மேல் ஒரு வெள்ளிமலை ஏறிநடந்தாற்போலிருந்தது எ—று.

வண்ணமும்வடிவும்பற்றிவந்த அபூதவுவமை. நுண்பொடி நுண்மையானதிருநீறு. மேகம்படிதலைக்கூறவே மலையின்வளமும் உயரமும் பெறப்பட்டன. பச்சிலைமரச்சோலைசூழ்தலாலும் மேகங்கள்படிதலாலும் கந்தமாதனமலை கருமலைபோன்றது, விபூதியான்மேனிமறைக்கப்படுதலால் வீரவாகுதேவர் வெள்ளிமலைபோன்றார் என்க. (௧௯)

கடுங்கலி மான்றேர் வெய்யோன் கையுற நிவந்த செம்பொ
னெடுங்கிரி மிசைபோய் வீர னிற்றலும் பொறையாற் றாது
நடுங்கிய துருமுற் றென்ன நனிபகிர் வுற்ற தங்க
ணொடுங்கிய மாவும் புள்ளு மொல்லென விரிந்த வன்றே.

இ—ள்: வீரன்—வீரவாகுதேவர், கடும் கலி மான் தேர் வெய்யோன் கை உற நிவந்த செம் பொன் நெடும் கிரி மிசை—வேகமானகடிவாளம்பூண்ட குதிரைகள்கட்டப்பட்ட தேரையுடையசூரியன் அணிமையாகும்படியுயர்ந்த செம்பொன்மயமான நெடியகந்தமாதனமலையின்மேல், போய் நிற்றலும்—ஏறிநிற்க, பொறை ஆற்றாது நடுங்கியது—அம்மலை பாரத்தைத்தாங்கக்கூடாமையினால் நடுங்கி, உரும் உற்று என்ன நனி பகிர்வுற்றது—இடிவிழப்பெற்றாற்போல மிகப்பிளவுபட்டது, அங்கண் ஒடுங்கிய மாவும் புள்ளும் ஒல்லென இரிந்த—(அப்போது) அம்மலையில்வாழ்ந்த மிருகங்களும் பறவைகளும் விரைவாக அஞ்சியோடின எ—று.

கலினம் கலியெனக்குறைந்துநின்றது. கடுமான் கலிமான் எனத் தனித்தனி இயையும். கலி ஒலியெனினுமாம். கையுறல்-பக்கத்திற்பொருந்தல். நடுங்கியது-முற்றெச்சம். ஒல் விரைவுக்குறிப்பு. தமக்காதாரமானமலைநடுங்கிப் பிளவுபடுதலால் மிருகங்களும்பறவைகளும் இரிந்தன. (௨0)

உண்ணிறை புள்ளு மாவு மோலிட வொலிமேல் கொண்டு
துண்ணென வருவி தூங்கத் தோன்றிய குடுமிக் குன்ற
மண்ணலைத் தரிக்க லாற்றே னளியனே னந்தோ வென்னுக்
கண்ணிடை வாரி சிந்தக் கலுழ்தல் போலு மாதோ.

இ—ள்: உள் நிறை புள்ளும் மாவும் ஓலிட—தன்னிடத்துநிறைந்துவாழுகின்ற பறவைகளும் மிருகங்களும் அலற, ஒலி மேல்கொண்டு துண் என அருவி தூங்க—ஓசையை அதிகமாகப்பொருந்தி விரைவாக அருவிநீர் பாய, தோன்றிய குடுமி குன்றம்—காணப்பட்டுநின்றசிகரங்களையுடைய அந்தக்கந்தமாதனமலை, அளியனேன்—எளியேன், அண்ணலை தரிக்கல் ஆற்றேன்—இந்தவீரவாகுதேவரைச்சுமக்கமாட்டேன், அந்தோ—ஐயோ!, என்னு—என்று, கண் இடை வாரி சிந்த கலுழ்தல் போலும்—கண்ணினின்றும்நீர்சிந்த அழுவதுபோன்றிருந்தது எ—று.

பறவைகளினதும் மிருகங்களினதுமொலியும் அருவியோசையும் மலையினழுகையோசையாகத் தற்குறிப்பேற்றி வருணிக்கப்பட்டன. அண்ணல்-வலிவீரம் முதலியனவெல்லாமொருங்கே அண்ணுதலையுடையான். அண்ணுதல்-சார்தல். அல்-ஆண்பால்விகுதி. (௨௧)

அடல்கெழு திண்டோள் வீர னடிகளின் பொறையாற் றாது
விடர்கெழு குடுமி வெற்பு வெருவலு மாண்டை வைகும்

படவர வுமிழ்ந்த செய்ய பருமணி சிதறும் பான்மை
யுடல்கெழு குருதி துள்ளி யுருக்குமா றொப்ப தன்றே.

இ—ள்: அடல் கெழு திண் தோள் வீரன் அடிகளின் பொறை ஆற்றாது—வலிபொருந்திய திண்மையானபுயங்களையுடைய வீரவாகுதேவரதுபாதங்களின் பாரத்தைத்தாங்கமுடியாமையால், விடர் கெழு குடுமி வெற்பு வெருவலும்—முழைபொருந்திய முடிகளையுடைய அந்தமலைஅசைய, ஆண்டை வைகும் பட அரவு உமிழ்ந்த செய்ய பரு மணி சிதறும் பான்மை—அம்மலையில்வாழுகின்ற படம்பொருந்திய சர்ப்பங்கள் உமிழ்ந்தசிவந்த பெரிய இரத்தினங்கள் சிதறுந்தன்மை, உடல் கெழு குருதி துள்ளி உகுக்குமாறு ஒப்பது—சரீரத்திற்பொருந்திய இரத்தம் பாய்ந்துசிந்தியதன்மையைப்போலும் எ—று.

திண்மை-கடினத்தன்மை. ஆண்டைஎன்பதில் ஐகாரம் சாரியை. இரத்தினங்களை இரத்தமாகத்தற்குறிப்பேற்றிக்கூறினார். பெருந்தொகையானஇரத்தினங்கள் அம்மலையிற்கிடந்தனஎன்பது இதனால்விளங்கிற்று. (௨௨)

அறைகழ லண்ண னிற்ப வவ்வரை யசைய வங்க
ணுறைதரு மாக்க ளஞ்சி யொருவில வெருவி விண்மேற்
பறவைகள் போய துன்பம் பட்டுழிப் பெரியர் தாமுஞ்
சிறியரு நட்டோர்க் காற்றுஞ் செயன்முறை காட்டு கின்ற.

இ—ள்: அறை கழல் அண்ணல் நிற்ப—ஒலிக்கின்ற வீரக்கழலைத்தரித்தவீரவாகுதேவர் ஏறிநிற்றலினால், அ வரை அசைய—அந்தக்கந்தமாதனமலை அசைய, அங்கண் உறைதரு மாக்கள் அஞ்சி ஒருவில—அம்மலையிலிருக்கின்றமிருகங்கள் அச்சமுற்றபோதும்விட்டுப்பிரியாதிருந்தன, பறவைகள் வெருவி விண் மேல் போய—அங்கேவாழ்ந்தபட்சிகள் அஞ்சி ஆகாயத்திற் பறந்துசென்றன, (ஆதலால் அவை), துன்பம் பட்டுழி—இடுக்கண்வந்தவிடத்து, பெரியர் தாமும் சிறியரும்—பெரியவர்களும் சிறியவர்களும், நட்டோர்க்கு ஆற்றும் செயல் முறை காட்டுகின்ற—நண்பர்களுக்குச்செய்யுஞ்செயலின்முறையைக்காட்டுகின்றன எ—று.

பெரியோர் நண்பர்க்கு இடுக்கண்வந்துழி அவரைவிட்டுப்பிரியாது உடனிருந்து அனுபவிப்பர், சிறியோர்பிரிந்துசெல்வர், அதுபோல, அம்மலையில்வாழ்ந்த சிங்கம் புலி யானை முதலியமிருகங்கள் தமக்காதாரமானமலைசலிக்கவும் விட்டுப்பிரியாதிருந்து துன்பத்தையனுபவித்தன, மயில்முதலியபறவைகள் பறந்துபோய்த் தமக்கேற்றஇடங்களைத்தேடின என்பதாம். வேற்றுப்பொருள்வைப்பணி. நண்பர் இனத்தார் அயலார்முதலாயினோர்க்குத் துன்பநேர்ந்தவழி முன்னின்றுதீர்ப்பதும் தீர்க்குங்காறும் எத்துணைத்துன்பம் தமக்குநேரினும் சகிப்பதும் நம்மனோர்க்குமுறையென்பதும், அங்ஙனஞ்செய்யாக்கால் நம்பெருந்தகைமைநீங்குமென்பதும் இச்செய்யுளால் உய்த்துணரக்கிடந்தன. (௨௩)

மழையுடைக் கடமால் யானை வல்லிய மடங்க லெண்கு
புழையுடைத் தடக்கை யாளி பொருப்பசை வுற்ற காலை
முழையிடைத் தவறி வீழ்வ முதியகா லெறியப் பட்ட [ல்.
தழையுடைப் பொதும்பர் பைங்காய் தலைத்தலை யுதிர்க்கு மாபோ

இ—ள்: மழை உடை கட மால் யானை—மதநீர்சிந்துகின்ற கதுப்பினையுடைய பெரியயானையும், வல்லியம்—புலியும், மடங்கல்—சிங்கமும், எண்கு—கரடியும், புழை உடை தட கை யாளி—உட்டுளைபொருந்திய விசாலித்தகையையுடையயாளியும் ஆகியமிருகங்கள், பொருப்பு அசைவுற்ற காலை—அம்மலை யசைந்தபொழுது, முழையிடை தவறி வீழ்வ—முழைகளினின்றுந்தவறிக் கீழேவிழு

வண, முதிய கால் எறியப்பட்ட தழை உடை பொதும்பர்—பெருங்காற்றுவீசப் பெற்ற செழிப்பையுடையசோலைகள், பை காய் தலைத்தலை உதிர்க்குமா போல்—பசுமையானகாய்களை இடந்தோறும் உதிர்த்துந்தன்மையைப்போல எ—று.

உதிர்க்குமாபோல் வீழ்வ என இயைக்க. உபலக்கணத்தால் மலையில்வாழும் ஏனைமிருகங்களையுங்கொள்க. பெருங்காற்றென்பார் 'முதியகால்' எனவும், பெருந்தொகையானகாய்களையுடைய சோலையென்பார் 'தழையுடைப்பொதும்பர்' எனவும், பழுக்குங்காலஞ்சமீபித்தகாயென்பார் 'பைங்காய்' எனவும், சிற்சிலஇடங்களேனுந்தவறப்பெறுதென்பார் 'தலைத்தலை' எனவும் கூறினார். மிருகங்களின்வீழ்ச்சிக்குக் காய்களின்வீழ்ச்சி உவமையாயிற்று. இவ்வுவமையாற் பல்பெருந்தொகையானமிருகங்கள் தவறி இடந்தோறும்வீழ்ந்தனவென்பதுதோன்றிற்று. மிருகங்கள்வீழ்ந்தவுடன் எழுந்தோடுதலும் காய்கள்வீழ்ந்தவுடன் துள்ளிக்குதித்தலும் உண்மையின் இவ்வுவமைபொருத்தமாதல்காண்க. (உச)

நன்றிகொள் பரிதிப் புத்தே ணகுசிர மாக வென்றாழ்
துன்றிருஞ் சடில மாகச் சுரநதி தோயத் திங்க
ளொன்றொரு பாங்கர் செல்ல வோங்கிரும் பிறங்க லுச்சி
நின்றதோர் விசயத் தோளா னெற்றியங் கண்ணன் போன்றான்.

இ—ள்: நன்றி கொள் பரிதிப்புத்தேள் நகு சிரம் ஆக—நன்மைபொருந்திய சூரியபகவான் விளங்குகின்றதலையாக, என்றாழ் துன்று இரும் சடிலம் ஆக—அச்சூரியனதுகிரணங்கள் நெருங்கிய பெரியசடையாயிருப்ப, சுரநதி தோய—ஆகாயகங்கை அதன்மேற்பொருந்த, திங்கள் ஒன்றொரு பாங்கர் செல்ல—சந்திரன் ஒருபக்கத்திற் சஞ்சரித்தலால், ஓங்கு இரும் பிறங்கல் உச்சி நின்றது ஓர் விசய தோளான்—உயர்ந்த பெரிய அந்தக்கந்தமாதனமலையின்மேலேறிநின்ற வீரவாகுதேவர், நெற்றியங்கண்ணன் போன்றான்— சிவபிரானைநிகர்த்தார் எ—று.

நெற்றியங்கண்ணன்-நெற்றிக்கண்ணையுடையவன். நன்றி-இவ்வுலகத்தார் செய்யும் நல்வினை தீவினைகளுக்குச்சான்றாயிருத்தல் இருளையோட்டுதல் முதலியன. உத்தமாங்கமாதலின் 'நகுசிரம்' எனவும், அடர்ந்துகற்றையானசடையென்பார் 'துன்றிருஞ்சடிலம்' எனவும் கூறினார். சிவபிரானதுமுகமுஞ்சடையுஞ்சிவந்தநிறமாயிருத்தல்பற்றிச் சூரியனையுங்கிரணங்களையும் முறையேயுவமித்தல் பொருந்துமென்க. அவரதுசடையின்கணிருக்குங்கங்கைக்குஞ்சந்திரனுக்கும் ஆகாயகங்கையுஞ்சந்திரமண்டலமும் முறையேயுவமை. இங்ஙனமுவமித்துக்கூறுதலால் மலையினுயரமும் வீரவாகுதேவரதுவடிவத்தோற்றமும் உயரமும் பெறப்பட்டன. நின்றது என்புழி-து சாரியை. (உரு)

வலமிகு மொய்ம்பின் மேலோன் மலர்க்கழ லுறைப்ப வாற்றா
தலமரு குவட்டி னிற்ற லன்றுதீ முனிவ ருய்த்த
கொலைகெழு முயல கன்மெய் குலைந்திடப் புறத்துப் பொற்றா
ளிலவணி சடையோ னூன்றி நின்றிடு நிலைமை நேரும்.

இ—ள்: வலம் மிகும் மொய்ம்பின் மேலோன்--வெற்றிமிகுந்த புயத்தையுடைய அந்தவீரர், மலர் கழல் உறைப்ப ஆற்றாது அலமரு குவட்டில் நிற்றல்—தமது மலர்போலுந்திருவடிகள்மிதித்தவுடன் தாங்கலாற்றாது அலைகின்ற அந்தக்கந்தமாதனமலையில் நிற்றல், நிலவு அணி சடையோன்—இளம்பிறையையணிந்த சடையையுடைய சிவபிரான், அன்று தீ முனிவர் உய்த்த கொலை கெழு முயலகன் மெய் குலைந்திட—முன்னாளிற் கொடிய தாருகவனத்திருடிகள்தோற்றுவித்

தேவிய கொலைத்தொழில்பொருந்திய முயலகனதுமேனிகுலையும்படி, புறத்து பொன் தாள் ஊன்றி நின்றிடும் நிலைமை நேரும்—முதுகின்மேற் பொன்மயமா ன திருவடியைமிதித்துநின்ற நிலையைப்போலும் எ—று.

வீரவாகுதேவர்க்குச் சிவபிரானும் மலைக்குமுயலகனும் உவமை. உய்த்தமு யலகன் எனவும், நிற்றல் நேரும் எனவும் இயையும். தாருகவனத்திருடிகள் சிவ பிரானையழிக்கும்படி வேள்விசெய்து அவ்வேள்வித்தீயிற்றோன்றிய முயலகனை யேவ, சிவபிரான் அதனைப்பாதத்தால்மிதித்துநின்றனர். இச்சரித்திரத்தை மே ல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்தில் விரிவாகக்காண்க. (உசு)

மாசிருள் செறியுந் தெண்ணீர் மறிதிரை யளக்கர் வேலைப்
பாசடைப் பொதும்பர் வெற்பிற் பண்ணவன் றாத னிற்றல்
காசியி லரற்றத் தள்ளிக் களிறுடல் பதைப்பக் கம்மே
லீசனன் றடிக ளூன்றி யிருந்திய வியற்கை போலும்.

இ—ள்: மாசு இருள் செறியும் தெள் நீர் மறி திரை அளக்கர் வேலை—ம லினமாகியகருமைபொருந்திய தெளிந்தநீரையுடையதிரைமறிகின்ற கடலின்க ரையிலுள்ள, பசு அடை பொதும்பர் வெற்பில்—பச்சைநிறமானஇலைகள்செறி ந்த சோலைசூழ்ந்த அந்தக்கந்தமாதனகிரியில், பண்ணவன் தூதன் நிற்றல்—முரு கக்கடவுளதுதூதராகிய வீரவாகுதேவர்நிற்பது, அன்று—முற்காலத்தில், ஈச ன்—சிவபிரான், காசியில்—காசிப்பதியில், களிறு அரற்ற தள்ளி—கயாசுரனாகிய யானைபுலம்பும்படி உதைத்துவீழ்த்தி, உடல் பதைப்ப—அதன்சரீரம் துடிக்கு ம்படி, கம் மேல் அடிகள் ஊன்றி—மத்தகத்தின்மேல் திருவடிகளைமிதித்து, இ ருந்திய இயற்கை போலும்—அமர்த்தியதன்மையையொக்கும் எ—று.

வடிவத்தானன்றிநிறத்தாலுமொப்புமையாமென்பதுபோதர 'பாசடைப் பொதும்பர்வெற்பு' என்றார். மலைக்குயானையும் வீரவாகுதேவர்க்குச்சிவபிரானு ம் உவமை. வேலை வெற்பு எனவும், தள்ளி ஊன்றி எனவும், நிற்றல் போலும் எனவும் இயையும். (உஎ)

தாரகன் படைஞர் பல்லோர் சமரிடை யிரிந்து போனார்
பாரிடை யுறாமே யந்தப் பருவரை முழைக்க ணுற்றார்
வீரமொய்ம் புடையோ னங்கண் மேவலு மவற்கண் டேங்கி
யாருயி ருலந்தார் தீயோர்க் காவதோ ரரண முண்டோ.

இ—ள்: சமரிடை இரிந்து போனார் தாரகன் படைஞர் பல்லோர்—முன் னேநிகழ்ந்தபோரில்அஞ்சியோடிய தாரகாசுரனதுசேனைத்தலைவர்பலர், பாரிடை உறாமே அந்த பரு வரை முழைக்கண் உற்றார்—பூமியில்வெளிப்பட்டுலாவாது பெரிய அந்தக்கந்தமாதனமலையின்முழைகளிலொளித்திருந்தார்கள், (அவரெ ல்லாம்), வீர மொய்ம்பு உடையோன் அங்கண் மேவலும்—வீரவாகுதேவர் அங் கேவந்தவுடன், அவன் கண்டு ஏங்கி—அவரைக்கண்டு ஏக்கங்கொண்டு, ஆர் உயிர் உலந்தார்—அரியஉயிர்நீங்கப்பெற்றார்கள், தீயோர்க்கு ஆவது ஓர் அரணம் உண் டோ—கொடியவர்களுக்கு உய்திபயக்கத்தக்க ஒரு அடைக்கலம் (எங்காயினும்) கிடைக்குமா? (கிடையாதே) எ—று.

போனார் முற்றுப்பெயரெச்சம். உறாமே-மேயீற்றுவினையெச்சம். மேவ லும் உலந்தார் என இயையும். (உஅ)

அனையதோர் சிமயக் குன்ற மசைதலு மங்க ணுற்ற
வனைகழல் விஞ்சை வேந்தர் மங்கைய ருடன் மாற்றி

யினிதுமுன் கலந்தா ரஞ்சி யின்புறு திடைக்க ணீத்து
வினைவிளை வுன்னி நொந்து விண்மிசை யுயிர்த்துச் சென்றார்.

இ—ள்: அங்கண் உற்ற வனை கழல் விஞ்சைவேந்தர்—அம்மலையிலிருந்த அலங்கரிக்கப்பட்ட வீரக்கழலையுடைய வித்தியாதரத்தலைவர்கள், மங்கையர் ஊடல் மாற்றி இனிது முன் கலந்தார்—தங்கள்பெண்களது பிணக்கைத்தீர்த்து இணக்கமாகச்சிறிதுநேரத்திற்குமுன் புணரத்தொடங்கினராகி, அனையது ஓர் சிமய குன்றம் அசைதலும்---கொடுமுடியையுடைய அந்தமலை அசைந்தவுடன், அஞ்சி—பயந்து, இன்புறுது இடைக்கண் நீத்து—கலவியின்பமுறறாமல் இடையிற்பிரிந்து, வினை விளைவு உன்னி—தாங்கள்செய்ததீவினையின்பயனைநினைத்து, நொந்து—மனம்வருந்தி, உயிர்த்து—பெருமூச்செறிந்து, விண் மிசை சென்றார்—ஆகாயவுலகத்திற்போனார்கள் எ—று.

முன்-அசைதற்குமுன். "ஊடுதல்காமத்திற்கின்பம்" என்றபடி ஒருவர்க்கொருவர் முன்னையின்மிக்க பற்றுடையராவென்பார் 'இனிது' எனவும், கலந்துகளித்தற்குத்தடையாயும் தீர்த்தற்கரிதாயுமிருந்த ஊடலை இன்சொற்கூறியும் இரந்தும் பிறவாறுந்தணித்தோம் உடனே வேறோர்தடைநேர்ந்தது ஆதலின் இம்மகளிரோடியாங்கூடுதற்குரியநல்வினையை முன்னர்ச்செய்திலேம் என்றற்றொடக்கத்தவாகநினைந்தென்பார் 'வினைவிளைவுன்னி' எனவும் கூறினர். வித்தியாதரும்பெண்களும் இம்மலைச்சிகரமணித்தாயிருத்தலானும் வளமுடைமையானும் வந்துதங்கியிருந்தார்களென்க. (உசு)

வரைமிசை நின்ற வண்ணல் வனைகழ லவுணர் கோமான்
பொருவரு நகர்மேற் செல்லப் புந்திமேற் கொள்ளா வெந்தை
திருவுரு வதனை யுன்னிச் செங்கையாற் றொழுது மாலும்
பிரமனும் வியந்து நோக்கப் பேருருக் கொண்டு நின்றான்.

இ—ள்: வரை மிசை நின்ற அண்ணல்—கந்தமாதனமலையின்மேலேறிநின்ற வீரவாகுதேவர், வனை கழல் அவுணர் கோமான் பொரு அரு நகர் மேல் செல்ல புந்திமேல் கொள்ளா—கட்டப்பட்டவீரக்கழலையுடைய அசுரத்தலைவனாகியசூரன்மனது ஒப்பற்ற மகேந்திரபுரியிற்செல்லுதற்கு மனத்தில்நினைத்து, எந்தை திரு உரு அதனை உன்னி—எங்கள்கடவுளாகிய முருகவேளின்திருக்கோலத்தைநினைத்து, செம் கையால் தொழுது—சிவந்ததிருக்கைகளாற்றொழுது, மாலும் பிரமனும் வியந்து நோக்க—திருமாலும்பிரமதேவரும் அதிசயித்துப்பார்க்கும்படி, பேர் உரு கொண்டு நின்றான்—ஒரு பெரியவடிவத்தைக்கொண்டுநின்றார் எ-று.

எக்காரியத்தைத்தொடங்கும்போதும் முருகவேளைத்தியானித்தல் வழக்காதலின் மகேந்திரபுரிக்குச்செல்லும்போதுந்தியானித்தனர். பிரமனுந்திருமாலும், ஒருவரோடொருவர்பகைத்தபொழுது தாங்கொண்டபெரியவடிவத்தினும் இவர்கொண்டவடிவம் பெரிதாதனோக்கி வியந்தனரென்க. மகேந்திரபுரியையும் அங்குள்ளநிகழ்ச்சிகளையும் இனிதுபார்ப்பதற்குப்பேருருக்கொண்டனர். (௩0)

பொன்பொலி யலங்கற் றோளான் பொருப்பின்மேற் பொருவி லாத
கொன்பொரு வடிவங் கொண்டு குலாய்நிமிர் கொள்கை செவ்வேண்
முன்பொரு ஞான்று மேரு முடியில்வந் தமரர்க் கெல்லாந்
தன்பெரு வடிவங் காட்டி நின்றதோர் தன்மை யாமால்.

இ—ள்: பொன் பொலி அலங்கல் தோளான்—அழகுமிகுந்த மலர்மாலையையணிந்த புயங்களையுடைய வீரவாகுதேவர், பொருப்பின்மேல்— கந்தமாதனமலையின்மேல், பொரு இலாத கொன் பெரு வடிவம் கொண்டு குலாய் நிமிர்

கொள்கை——ஒப்பில்லாத எவருமஞ்சத்தகுந்த பெரியவடிவத்தைக்கொண்டு விளங்கி மீமிர்ந்துநிற்குந்தன்மை, செவ்வேள்—முருகக்கடவுள், முன்பு ஒரு ஞான்று—முன்னொருநாள், மேரு முடியில் வந்து—மேருமலையின்சிகரத்தில் வெளிப்பட்டு, அமரர்க்கு எல்லாம்—எல்லாத்தேவர்களுக்கும், தன் பெரு வடிவம் காட்டி நின்றது ஓர் தன்மை ஆம்— தமதுபெரியதிருவுருவத்தைக்காண்பித்துநின்றதன்மையைப்போலும் எ——று.

பொன்பொலியலங்கல்-பொன்னாற்செய்யப்பட்டுப்பொலிந்த மாலை எனினுமாம். கொள்கை ஆம் என இயையும். முருகவேள் மேருமலையில் விச்சுவரூபங்காட்டியது திருவிளையாட்டுப்படலத்திற் கூறப்பட்டது. கந்தமாதனத்திற்குமேருவும் வீரவாகுதேவர்க்குமுருகவேளும் உவமை. (௩௧)

ஆணடகை நெடுந்தோள் வீர னண்டமேன் மவுலி தாக்க
நீண்டிடு மெல்லை யன்னா னின்றிடு குன்ற ஞாலங்
கீண்டது பிலத்திற் சேறல் கேடில்சீர் முனிகை யூன்ற
மீண்டுபா தலத்திற் புக்க விந்தமே போலு மாதோ.

இ—ள்: ஆண்டகை நெடும் தோள் வீரன்—வீரத்தன்மைவாய்ந்த நெடியபுயங்களையுடைய அந்த வீரர், அண்ட மேல் மவுலி தாக்க நீண்டிடும் எல்லை—அண்டமுகட்டின்மேல் முடியானது தாக்கும்படி நெடியவடிவத்தைக்கொண்டபொழுது, அன்னான் நின்றிடு குன்றம்—அவர்நிற்கப்பெற்ற அந்தக்கந்தமாதனமலை, ஞாலம் கீண்டு அது பிலத்தில் சேறல்— பூமியைக்கிழித்துக்கொண்டு பாதலத்திற்செல்லுதல், கேடு இல் சீர் முனி கை ஊன்ற—அழிவில்லாத கீர்த்தியையுடைய அகத்தியமுனிவர் கையினாலமர்த்த, மீண்டு பாதலத்தில் புக்க விந்தமே போலும்—திரும்பிப் பாதலவுலகத்திலழுந்திப்போன விந்தமலையையேபோலும் எ—று.

சேறல் போலும் எனஇயையும். முழங்கால்வரைநீண்ட கையென்பார் ‘நெடுந்தோள்’ என்றார். அங்ஙனம் நீண்டிருத்தல் ஆடவர்க்குரிய நல்லிலக்கணங்களுளொன்று. பிலத்திற்சேறல் பாரந்தாங்கலாற்றாமையின். கேடில்சீர்த்தி தமிழைவளர்த்தன்முதலியவற்றாலாயதென்க. உயர்ந்தமுறையே தாழ்ந்ததென்பார் ‘மீண்டு’ என்றார். ஏ பிரிநிலை. கந்தமாதனமலைபூமியிலழுந்துதற்கு விந்தமலை பூமியிலழுந்தியதுவமையாயிற்று. அகத்தியமுனிவரை வீரவாகுதேவர்க்குவமைகூறல் பொருந்தாது, பேருருக்கொள்ளாமையின். இது ஏகதேசவுவமை. (௩௨)

விண்ணவ ருய்த்த தேர்மேன் மேவலர் புரநீ றாக்கும்
பண்ணவ னொருதா ளூன்றப் பாதலம் புகுந்த வாபோற்
கண்ணகன் வரையும் வீரன் கழல்பட வழுந்திற் றம்மா
வண்ணலந் தாதை வன்மை யருள்புரி மகற்கு றாதோ.

இ—ள்: விண்ணவர் உய்த்த தேர் மேல்—தேவர்கள் கொணர்ந்துநிறுத்திய உலகமாகிய தேரின்மேல், மேவலர் புரம் நீறு ஆக்கும் பண்ணவன் ஒரு தாள் ஊன்ற—பகைவர்களது முப்புரங்களையுமெரிக்கநினைந்த சிவபிரான் ஒருதிருவடியைத்தூக்கிவைக்க, பாதலம் புகுந்தவா போல்—அது பாதலத்திலழுந்தியதன்மைபோல, கண் அகன் வரையும்—இடமகன்ற அந்தக்கந்தமாதனமலையும், வீரன் கழல் பட அழுந்திற்று-வீரவாகுதேவரதுபாதங்கள்பட்டமாத்திரத்தில் ஆழ்ந்தது, அண்ணலம் தாதை வன்மை அருள் புரி மகற்கு உறாதோ—பெருமைபொருந்திய பிதாவினிடத்துள்ளவலிமை பெற்றபிள்ளையினிடத்திருக்கமாட்டாதா!எ-று.

போல் அழுந்திற்று எனஇயையும். முன்னொருகாலத்தில் மூன்றசுரர்கள் பொன் வெள்ளி இரும்பு என்னும் மூன்றுலோகங்களாலான முப்புரங்களைத்தம

க்கிருப்பிடமாகப்பெற்றுத் தேவர்க்குமிகத்துன்பஞ்செய்துவர, தேவர்கள் சிவபி ரானிடஞ்சென்று அவர்களையழிக்குமாறுவேண்டினர். சிவபிரான் யாஞ்சென் றுபொருது அழிப்போம், அதற்காயோர்தேரைக் கொண்டுவருதிர் என்றுகட்ட ளையிட்டனர். அவர்கள்உலகத்தையேயொருதேராக அமைத்துநிறுத்தினர். அத் தேரினடுவிடம் மேருமலையாயிருந்தது. சிவபிரான் யுத்தசன்னத்தராய் ஏறும்படி ஓர்பாதத்தைத் தூக்கி அதன்மேல்வைக்க அத்தேர் பாதலத்திலமிழ்ந்தியது. இச்ச ரித்திரமே இச்செய்யுளின்முற்கூற்றிற் சுட்டப்பட்டது. கந்தமாதனகிரிக்குச் சிவபிரானதுதேரும் வீரவாகுதேவர்க்குச்சிவபிரானும் உவமை. பொதுப்பொரு ளாற் சிறப்புப்பொருள்சாதிக்கப்பட்டமையின் வேற்றுப்பொருள்வைப்பணி. ()

கன்றிய வரிவிற் செங்கைக் காளைபொற் றாளு மந்தண்
குன்றொடு பிலத்துட் செல்லக் குறிப்பொடு விழிக்கு றாமே
சென்றிட முடியுஞ் சேண்போய்த் திசைமுகத் தயனு மாலு
மன்றடி முடிகா ணாத வசலமும் போல நின்றான்.

இ—ள்: கன்றிய வரி வில் செம் கை காளை பொன் தாளும்—உரத்த வரிந் தவில்லையேந்திய சிவந்த கையையுடைய வீரவாகுதேவரது பொன்னிறமான தி ருவடிகளும், அம் தண் குன்றொடு பிலத்துள் செல்ல-- அழகிய குளிர்ந்த கந்த மாதனமலையினுடன் பாதலத்திலமிழ்ந்த, முடியும்—தலையும், குறிப்பொடு விழி க்கு உறாமே—மனத்துக்கும் கண்காட்சிக்கும் அகப்படாமல், சேண் போய் செ ன்றிட—மேற்சென்று உயர்தலால், திசைமுகத்து அயனும் மாலும் அன்று அடி முடி காணாத அசலமும் போல நின்றான்—நான்குமுகங்களையுடைய பிரமதேவரா லும் திருமாலினாலும் முற்காலத்தில் அடியுமுடியுங்காணமுடியாமனின்ற சோ திமலையையும் போன்றுநின்றார் எ—று.

அடியுமுடியுங்காணுதற்கரியராய்நிற்றலாற் சோதிமலைபோன்றாரென்பதுக ருத்து. சிவபிரான்சோதிமலையாய்நின்றதை அடிமுடிதேடுபடலத்திற்காண்க. தா ளும் முடியும் அசலமும் என்றஉம்மைகள் எச்சங்கள். கன்றியவென்பதைக் கைக்க டையாக்கி வில்லும்பாணமும்படுமிடங்களிற்றழும்புபட்ட எனினுமாம். வளைக்கு ம்போதுமுரியாவண்ணம் விற்களைக்கயிற்றால்வரிவது. அயனுமாலும்அடிமுடி காணாத என்பது எதிர்நிரனிறை. (௩௪)

ஆளரி யன்னோன் றாளு மடுக்கலு மழுந்தும் பாரி
னீளிரு முடியார் வானி னிரந்தமாப் பறவை போதல்
சூளுடை யிமையோர் புள்ளு மாவுமாய்த் தோமில் வீரன்
றாளொடு முடியு நாடிச் சார்தருந் தகைமைத் தாமால்.

இ—ள்: ஆள் அரி அன்னோன் தாளும் அடுக்கலும் அழுந்தும் பாரில்— ஏனைமிருகங்களையெல்லாமாளுகின்ற சிங்கத்தைப்போன்ற வீரவாகுதேவருடை ய பாதங்களும் அவைநிற்றற்காதாரமான கந்தமாதனமலையும் அழுந்தப்பெற் றபூமியிலும், நீள் இரு முடி சேர் வானில்—நெடிய பெரிய முடிபொருந்தப்பெற் ற ஆகாயத்திலும், நிரந்த மா பறவை போதல்—நிரம்பிய மிருகங்களும் பட்சிகளு ம் சஞ்சரித்தல், சூள் உடை இமையோர்—ஒருவரோடொருவர் நாமேபிரமமெ ன்று சபதஞ்செய்த பிரமவிட்டுணுக்களாகிய தேவரிருவரும், புள்ளும் மாவும் ஆய்—முறையே அன்னப்பறவையும் பன்றியுமாகி, தோம் இல் வீரன் தாளொடு முடியும் நாடி சார்தரும் தகைமைத்து—குற்றமில்லாத வீரவாகுதேவரது அடியை யும் முடியையும் தேடிச்செல்லுந்தன்மையைப்போலும் எ—று.

வீரவாகுதேவர்பேருருக்கொண்டுநிற்கக் கீழிடத்தில்மிருகங்களும் மேலிடத்திற்பறவைகளுமுலாவுதல், திருமாலும் பிரமதேவரும் முறையே மிருகங்களினதும் பறவைகளினதும்வடிவங்களைக்கொண்டு அவ்வுருவத்தினடிமுடிகளைத்தேடுதல்போலுமென்பதுகருத்து. முன்னொருகாலத்தில் அவ்வடிவுகளைக்கொண்டு அடிமுடிதேடினோராதலின் அவ்விருவரையுமெடுத்துக்கூறினார். கண்டோரையஞ்சுவிக்குந்தோற்றம் பகையையடர்த்தல் முதலியவற்றால் வீரர்க்குச்சிங்கத்தையுவமிப்பது. போதல் தகைமைத்து எனஇயையும். பற்பலவுருக்கொண்டுதேடற்குக்காரணம் முன் ஒவ்வோருருக்கொண்டுதேடிக்காணப்படாமையென்க. (௫௫)

அந்தமில் வலியோ னிற்ப வாயிடைத் துஞ்சும் பாந்த
டந்தொகை வீழ ருது தழீஇமருங் காகக் கீழ்போய்
முந்துயர் கமடஞ் சேர்ந்து முழங்குதெண் டிரைக்கண் வைகு
மந்தர மென்னக் கந்த மாதனந் தோன்றிற் றம்மா.

இ—ள்: அந்தம் இல் வலியோன் நிற்ப—அழிவில்லாத வலியையுடைய வீரவாகுதேவர்நிற்கும்பொழுது, ஆயிடை துஞ்சும் பாந்தள் தம் தொகை—அம்மலையிற்றங்கிய பாம்புக்கூட்டங்கள், வீழுருது தழீஇ மருங்கு ஆக—விழாமற்றழுவிப்பக்கத்திற்சுற்றிக்கிடக்க, கந்தமாதனம்—கந்தமாதனமலையானது, கீழ் போய்—பாதலத்திற்சென்று, முந்து உயர் கமடம் சேர்ந்து—முதன்மைமிக்க ஆதிகூர்மத்தைஅணுகுதலால், முழங்கு தெள் திரை கண் வைகும் மந்தரம் என்ன—ஒலிக்கின்ற தெளிந்ததிரையையுடையபாற்கடலிற்(கடைந்தகாலத்திற்)கிடந்த மந்தரமலையைப்போல, தோன்றிற்று—விளங்கியது எ—று.

வலியோனிற்பப்போய் எனஇயையும். திருமால் பாற்கடலைக்கடைந்தகாலத்தில் மந்தரமலை வாசுகியென்னுஞ்சர்ப்பத்தாற்சுற்றப்பட்டு அக்கடலின்கீழழுந்திப்போதலின் ஒப்பாயிற்று. விநாயகரைச்சிந்தியாமையால் அம்மலை அழுந்தியது. (௫௬)

பதுமநேர் கண்ணன் வேதாப் பலவகை முனிவர் தேவர்
கதிபட ருவணர் சித்தர் கந்தரு வத்த ரொண்கோண்
மதியுடுக் கதிர்க ளேனோர் வான்பத முற்று மோங்கு
மதிர்கழல் வீரன் பல்வே றாரமா யொளிர நின்றான்.

இ—ள்: பதுமம் நேர் கண்ணன்—செந்தாமரைமலரைநிகர்த்த கண்களையுடைய திருமாலும், வேதா—பிரமதேவரும், பலவகை முனிவர் தேவர்—பலவகுப்பாயிருக்கின்ற முனிவர்களும் தேவர்களும், கதி படர் உவணர்—வேகமாகப்பறந்துசெல்லுகின்ற கருடர்களும், சித்தர்—சித்தர்களும், கந்தருவத்தர்—கந்தருவர்களும், ஒள் கோள்—ஒளியையுடைய கிரகங்களும், மதி—சந்திரனும், உடு—நட்சத்திரங்களும், கதிர்கள்—பன்னிருசூரியர்களும், ஏனோர்—பிறரும்வாழுகின்ற, வான் பதம் முற்றும்—பெரிய உலகங்களெல்லாம், பல்வேறு ஆரம் ஆய் ஒளிர—பலவேறுவகையான ஆரங்களாகவிளங்க, ஓங்கும் அதிர் கழல் வீரன்—பெரியவடிவத்தைக்கொண்ட ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த வீரவாகுதேவர், நின்றான்—அம்மலையின்மேல்நின்றார் எ—று.

பலவகை என்பதைத்தேவரோடுமியைக்க. சந்திரசூரியர் பிற்கூறப்பட்டமையின் முன் கோளென்றது ஒழிந்தோரை. ஆரம்-கழுத்திலணியப்பட்டு மார்பிற்றூங்கும் இரத்தினமாலை. மண்டலங்கள் பலநிறமுடையனவாதலின் 'பல்வேறாரமாய்' என்றார். பன்னிருசூரியராவார்: வைகர்த்தனன் விவஸ்வான் மார்த்தா

ண்டன் பாஸ்கரன் இரவி லோகப்பிரகாசன் லோகசாக்ஷி திரிவிக்கிரமன் ஆதித்தன் சூரியன் அம்சுமாலி திவாகரன் என்பவர்களாம். (கஎ)

எண்டிசை முழுது நேமி யெழுதிறத் தனவு மற்றைத்
தெண்டிரைக் கடலும் பாருஞ் சேண்கிள ராழி வெற்பு
மண்டமு முலகம் யாவு மகன்விழி பரப்பி நோக்கிக்
கண்டன னமலன் வைப்புங் கைதொழு தைய னின்றான்.

இ—ள்: ஐயன்—வீரவாகுதேவர், எண் திசை முழுதும்—எட்டுத்திக்குகள் முழுவதையும், நேமி எழுதிறத்தனவும்—ஏழுவகையானகடல்களையும், மற்றை தெள் திரை கடலும்-அவற்றுக்கப்பாலுள்ள தெளிந்ததிரைகளையுடைய புறக்கடலையும், பாரும்--பூவுலகத்தையும், சேண் கிளர் ஆழிவெற்பும்—ஆகாயமளவுமுயர்ந்த சக்கரவாளமலையையும், அண்டமும்—அண்டகடாகத்தையும், உலகம் யாவும்—எல்லாவுலகங்களையும், அகன் விழி பரப்பி நோக்கி—அகன்றகண்களைப்பரப்பிப்பார்த்து, அமலன் வைப்பும் கண்டனன்-சிவலோகத்தையும்பார்த்து, கைதொழுது நின்றான்—கைகூப்பிநின்றார் எ—று.

சிவலோகத்தைக்கண்டவுடன் கைதொழுதனரென்க. ஒவ்வோர்திக்கையும் முடிவுவரையும்நோக்கினராதலின் 'திசைமுழுதும்' என்றார். (கஅ)

ஆணமில் சிந்தை வீர னச்சுதன் முதலோர் வைகுஞ்
சேணகர் நோக்கிச் சூழுந் திசைநகர் நோக்கிப் பாரின்
மாணகர் நோக்கி வீர மகேந்திர நோக்கிச் சூர
னீணக ரிதற்கி யாவு நிகரில போலு மென்றான்.

இ--ள்: ஆணம் இல் சிந்தை வீரன்—கர்வமில்லாதமனத்தையுடைய வீரவாகுதேவர், அச்சுதன் முதலோர் வைகும் சேண் நகர் நோக்கி—திருமால்முதலியதேவர்கள்வசிக்கின்ற மேலுலகத்துள்ளநகரங்களைப்பார்த்து, சூழும் திசை நகர் நோக்கி—சுற்றியிருக்கின்ற திக்குகளிலுள்ளநகரங்களையும்பார்த்து, பாரில் மாண் நகர் நோக்கி—பூமியிலுள்ள சிறந்தநகரங்களையும்பார்த்து, வீரமகேந்திரம் நோக்கி—வீரமகேந்திரநகரத்தையும்பார்த்து, சூரன் நீள் நகர் இதற்கு—சூரபன்மனது நெடியஇந்தநகரத்திற்கு, யாவும் நிகர் இல என்றான்-மற்றையநகரங்களெல்லாம்ஒப்பல்ல என்றுநினைத்தார் எ—று.

போலும்-அசை. ஆணம்=ஆடவர்க்குரியதன்மை. பகைவர்முன்னன்றி ஏனையிடங்களில் தாழ்மையானகுணத்துடனொழுகுவோரென்பது போதர 'ஆணமில்சிந்தைவீரன்' என்றார். திசைநகர்-திக்குப்பாலகருடையநகரங்கள். எச்சவும்மைகள்தொக்கன. கந்தமாதனமலையிற் பெரியவடிவுகொண்டுநின்றபோது எல்லாநகரங்களும் ஒருங்கேகட்புலப்பட்டனவென்க. நோக்கி என்றான் எனஇயையும்.

விண்ணுலாம் புரிசை வெஞ்சூர் வியனக ரதனை நோக்கி
யுண்ணிலா வெகுளி கொண்டா னொருகர மங்க ணோச்சி
நண்ணலார் யாருந் துஞ்ச நாமறப் பிசைகோ வென்னு
வெண்ணினான் சிறையி லுற்றோர்க் கிரங்கியவ் வெண்ண மீட்டான்.

இ—ள்: விண் உலாம் புரிசை வெம் சூர் வியன் நகர் அதனை நோக்கி--ஆகாயத்தையளாவியுயர்ந்த மதிலையுடைய கொடியசூரபன்மனது சிறந்தமகேந்திரபுரத்தைப்பார்த்து, உள் நிலா வெகுளி கொண்டான்—மனத்திற்கிளர்கின்றகோபத்தைக்கொண்டு, ஒரு கரம் அங்கண் ஓச்சி நண்ணலார் யாரும் துஞ்ச நாமறப் பிசைகோ என்னு எண்ணினான்—ஒருகையை அந்நகரத்தில்நீட்டிப் பகைவரெல்

லாருமிறக்கும்படி 'ஒருங்கேபிசைவோமா என்றுநினைத்து, சிறையில் உற்றோர்க்கு இரங்கி அவ் எண்ணம் மீட்டான்—சிறையிலிருக்குந்தேவர்கள்மேலிரக்கங்கொண்டதனால் அந்நினைவைமாற்றினார் எ—று.

நாமமற என்பது நாமற என விகாரமாய்நின்றது. கொண்டான் எண்ணினான் முற்றெச்சங்கள். நாமறப்பிசைதலேதக்கது எனச்சிந்தித்து, அங்ஙனஞ்செய்யிற் சிறையிலிருக்குந்தேவருமுடனழிவாராதலின் இப்பொழுது அவ்வாறுசெய்தல் தக்கதன்று எனத்துணிந்தாரென்க. (சo)

விஞ்சைய ரியக்கர் சித்தர் வியன்சிறை யுவணர் திங்கள்
செஞ்சுடர்ப் பரிதி நாள்கோ டெய்வத கணத்தர் யாரும்
வஞ்சினத் தடுதோள் வீரன் மாலுரு நோக்க லாற்றா
தஞ்சினர் வெருவச் செங்கை யமைத்தன னழுங்க லென்றே.

இ—ள்: விஞ்சையர்—வித்தியாதரர்களும், இயக்கர்—இயக்கர்களும், சித்தர்—சித்தர்களும், வியன் சிறை உவணர்—பெரியசிறகுகளையுடைய கருடர்களும், திங்கள்—சந்திரனும், செம் சுடர் பரிதி—சிவந்தகிரணங்களையுடைய சூரியனும், நாள்—நட்சத்திரங்களும், கோள்—கிரகங்களும், தெய்வத கணத்தர் யாரும்—மற்றுந்தேவகணத்தாருமாகிய அனைவரும், வஞ்சினத்து அடு தோள் வீரன் மால் உரு நோக்கல் ஆற்றாது அஞ்சினர் வெருவ—சபதமிட்டுப்பகைவரையழிக்கின்ற புயங்களையுடைய வீரவாகுதேவரது பெரியவடிவத்தைப்பார்த்தற்கியலாமற் பயந்து வெருள, அழுங்கல் என்று செம் கை அமைத்தனன்— (வீரவாகுதேவர் அவர்களைநோக்கி) வருந்தாதீரென்று சிவந்தகையினாலமைத்தார் எ—று.

சூரியசந்திரர்கள் முன்கூறப்படுதலின் கோள் என்றது எனையோரை. வஞ்சினம்: உன்னைக்கொன்றன்றி எம்பெருமானதுபாதங்களைத்தொழப் போகேனென்பதுமுதலியன. கையமைத்தல்- நுனிவிரல்கள் மேனிற்கும்படி அகங்கையை நிறுத்திக்காட்டுதல். இது பயந்தீர்ப்பதற்குரியகுறி. வெருவ அமைத்தனன் என இயையும். (சக)

கோளியல் கருடர் தாம்வீழ் மாதரை விழைந்து கூடி
வாளுறு நகத்தி னூறு மதிக்கிலர் மயங்கித் துஞ்சி
வேளெனு நெடியோ னூன்றும் வெற்பொடும் பிலத்திற் சென்று
கேளுட னெழுந்து நாகர் கிளைதனக் கணங்கு செய்தார்.

இ—ள்: கோள் இயல் கருடர்—வலிமைபொருந்தியகருடர்கள், தாம் வீழ் மாதரை விழைந்து கூடி—தாம்விரும்பியபெண்களைநேசித்துப் புணர்ந்து, வாள் உறு நகத்தின் ஊறு மதிக்கிலர் மயங்கி துஞ்சி—ஒளிபொருந்தியநகத்தினால் வைக்கப்படுங்குறிகளை அறியாதவர்களாய் மயக்கமுற்றுத்துயின்று, வேள் எனும் நெடியோன் ஊன்றும் வெற்பொடும் பிலத்தில் சென்று—மன்மதனைப்போன்ற(பேரழகார்ந்த) நெடியவடிவத்தைக்கொண்ட வீரவாகுதேவர் மிதித்தமிழ்த்திய கந்தமாதனமலையுடன் பாதலவுலகத்திற்போய், கேள் உடன் எழுந்து—பின் தம்மினத்தவருடனெழுந்து, நாகர் கிளை தனக்கு அணங்கு செய்தார்—நாகர்கூட்டத்திற்குத் துன்பத்தைச்செய்தார்கள் எ—று.

வாளுறுநகம் கூர்மையார்ந்தநகமெனினுமாம். அங்ஙனங்கூறின் வாள் ஆகுபெயர். கண்டோரஞ்சித்தூரத்திலோடத்தக்க கொடுஞ்சீற்றமுடையராகியநாகர்களைக் கண்டமாத்திரத்திற் சினந்துகவ்வியழிக்குங்குணமுடையராதலின் 'கோளியல்கருடர்' எனவும், விரும்பியநாண்முதல் மேன்மேலும்வளர்ந்த பெருங்காதலுடன்கூடியென்பார் 'விழைந்துகூடி' எனவும், வயமழிந்துகிடந்தனரென்பார் 'நக

த்தினாறுமதிக்கிலர்மயங்கித்துஞ்சி' எனவும், மன்மதன்றான் இவ்வாறு ஓர்பேருருக்கொண்டானென்றுசொல்லத்தக்க சுந்தரரூபத்தினரென்பார் 'வேளெனுநெடியோன்' எனவும், கந்தமாதனமலைநிலத்துளமிழ்ந்தும்போது எழுந்துபறத்தற்குரிய இயற்கையறிவழிந்தமையால் நிலையியற்பொருள்போல உடனழுந்தினரென்பார் 'வெற்பொடும்பிலத்திற்சென்று' எனவும், அங்ஙனஞ்சென்றார் மிகப்பலரென்பதுதோன்ற 'சேணுடனெழுந்து' எனவும் கூறினார். நாகரைக்கண்டவுடன் அடர்ப்பது கருடருக்கியல்பு. (சஉ)

ஆதியங் குமரன் றூத னாற்றலா லூன்றி நிற்பப்
பூதலங் கீண்டு வெற்புப் பொள்ளென வாழ்ந்து கீழ்போய்ப்
பாதலங் குறுக வங்கட் பயிலராத் தொகையை நாகர்
காதலங் கேண்மை நாடிக் கலந்தனர் விருந்து செய்தார்.

இ—ள்: ஆதியம் குமரன் தூதன்—முதற்கடவுளாகிய முருகவேளின் தூதரான வீரவாகுதேவர், ஆற்றலால் ஊன்றி நிற்ப—வலிமையுடன்மிதித்துநிற்றலால், வெற்பு—கந்தமாதனமலை, பூதலம் கீண்டு—பூமியைக்கிழித்து, பொள்ளென ஆழ்ந்து கீழ் போய்—விரைவாகத்தாழ்ந்துகீழேபோய், பாதலம் குறுக—பாதலவுலகத்தையணுக, நாகர்—அங்குள்ளநாகர்கள், அங்கண் பயில் அரா தொகையை—அம்மலையிலுலாவுகின்ற சர்ப்பக்கூட்டத்தை, காதலம் கேண்மை நாடி கலந்தனர்—மனப்பற்றைவிளைக்கின்ற இனத்தன்மையைச்சிந்தித்து அளவளாவி, விருந்து செய்தார்—விருந்தூட்டினார்கள் எ—று.

நிற்ப ஆழ்ந்து குறுக எனஇயையும். வேற்றுலகத்தினராயினும் உருவொப்புமையான்மனம்பற்றி உறவுபூண்டனரென்பார் 'காதலங்கேண்மைநாடி' என்றார். ஆதியங்குமரன் சிவகுமாரனெனினுமாம். (சங)

தேன்றிகழ் தெரியல் வாகைச் சேவகன் கழல்கள் வெற்பி
னூன்றலு மனைய பாங்க ரொருசில ரரக்கர் நோற்றா
ரான்றுயர் பதத்தை வெஃகி யாங்கவர் பிலத்துள் வீழ்ந்து
மான்றன ரிரங்க லுற்றார் வன்கணார்க் குய்வு முண்டோ.

இ—ள்: தேன் திகழ் தெரியல் வாகை சேவகன்—தேன்விளங்குகின்ற மலர்மாலையையணிந்த வெற்றியையுடையவீரவாகுதேவர், கழல்கள் வெற்பின் ஊன்றலும்—பாதங்களை அந்தமலையில்மிதிக்கும்பொழுது, ஒருசிலர் அரக்கர்—சிற்சில இராக்கதர்கள், ஆன்று உயர் பதத்தை வெஃகி அனைய பாங்கர் நோற்றார்—மனமடங்கிச்சிறந்தபதவியைவிரும்பி அம்மலைச்சாரலிற்றவஞ்செய்திருந்தார்கள், அவர்—அவரெல்லாம், பிலத்துள் வீழ்ந்து மான்றனர் இரங்கலுற்றார்—பாதலத்திலமிழ்ந்தி மயங்கிப்புலம்பினார்கள், வன்கணார்க்கும் உய்வு உண்டோ—தறுகண்மையையுடையார்க்கும் உய்யும்வழிஉண்டா? (இல்லையே) எ—று.

ஆங்கு-அசை. இழிவுசிறப்பும்மை பிரித்துக்கூட்டப்பட்டது. மான்றனர் முற்றெச்சம். ஆன்றுயர்பதம்-சிறந்துயர்ந்தபதம் எனினுமாம். அரக்கர் தேவாதியோர்க்குத்தீங்குசெய்வதேயியல்பாதலின் அவரை 'வன்கணார்' எனவும், அவருட்பெரும்பாலார் வேண்டியதீத்தொழில்களையெல்லாம் விரும்பியபடிசெய்துமுடித்தற்கேற்றதவஞ்செய்வதன்றி உயர்ந்தபதவிகளைவிரும்பித்தவஞ்செய்வது அருமையாகலின் 'ஒருசிலரரக்கர் ஆன்றுயர்பதத்தைவெஃகி நோற்றார்' எனவும், அவர் அங்ஙனம்நன்னெறிப்படமுயன்றபோதும் முன்செய்ததீவினை பங்கப்படுத்தியதென்பார் 'வன்கணார்க்குய்வுமுண்டோ' எனவும் கூறினார். (சச)

புண்டர நீற்று வள்ளல் புரையுருத் தேவர் நோக்கி
மண்டலம் புகழும் வீர மகேந்திரஞ் சேறற் கன்றாற்
கொண்டவிவ் வுருவ நோக்கிற் குரைகழ லவுணர் தம்மை
யண்டமு மிடித்துச் சாடு நினைவுகொ லையற் கென்றார்.

இ—ள்: தேவர்—தேவர்கள், புண்டர நீற்று வள்ளல் புரை உரு நோக்கி—முக்குறியாகத்தரித்தவிபூதியையுடைய உருத்திரமூர்த்தியைநிகர்த்த பெரியவடிவத்தைப்பார்த்து, கொண்ட இவ் உருவம் நோக்கில்—இவர்கொண்ட இவ்வடிவத்தை யாம் ஆராயுமிடத்து, மண்டலம் புகழும் வீரமகேந்திரம் சேறற்கு அன்று—பூமியிலுள்ளோராற்புகழப்படுகின்ற வீரமகேந்திரபுரியிற்செல்லுதற்கன்று, ஐயற்கு—இந்தத்தலைவர்க்கு, அண்டமும் இடித்து—எல்லாவண்டங்களையுந்தகர்த்து, குரை கழல் அவுணர் தம்மை சாடும் நினைவு கொல்—ஒலிக்கின்றவீரக்கழலையணிந்த அசுரர்களையழிக்குங்கருத்துப்போலும், என்றார்— என்றுநினைத்தார்கள் எ—று.

உருத்திரமூர்த்தி உலகங்களையழிக்குங்காலத்தில் உக்கிரமானபெரியவடிவைக்கொள்ளுதலின் ‘புண்டரநீற்றுவள்ளல்புரையுரு’ என்றார். உம்மை சிறப்பு. மகேந்திரஞ்சேறற்கு இப்பேருருவேண்டற்பாற்றன்றாதலின் ‘அண்டமுமிடித்துஅவுணர்தம்மைச்சாடுநினைவுகொல்’ என்றார். புண்டரநீற்றுவள்ளல் வீரவாகுதேவரெனினுமாம். அங்ஙனங்கூறின் புரை-உயர்ச்சி. (௨௫)

வீரமா மகேந்தி ரத்தி லவுணரும் வீற்று வீற்றுச்
சாருறு மவுணர் தாமுஞ் சயங்கெழு புயத்து வள்ளல்
பேருரு நோக்கி யிங்ஙன் பிறந்தசொற் சழக்கே யின்னுந்
தேருவ துண்டு நந்தந் திறல்வரைப் புணர்ப்பி தென்றார்.

இ—ள்: வீர மா மகேந்திரத்தில் அவுணரும்—பெரிய வீரமகேந்திரபுரத்திலுள்ள அசுரர்களும், வீற்று வீற்று சாருறும் அவுணர் தாமும்—(மற்றையஇடங்களில்) வேறுவேறாயிருக்கின்ற அசுரர்களும், சயம் கெழு புயத்து வள்ளல்பேர் உரு நோக்கி—வீரவாகுதேவர்கொண்ட பெரியவடிவத்தைக்கண்டு, இங்ஙன் பிறந்த சொல் சழக்கே—இவ்வுலகத்திற்சிலநாட்களின்முன்பிறந்தசொற்பொய்யேயாம், இன்னும் தேருவது உண்டு—இன்னும் ஆராயவேண்டியதிருக்கின்றது, இது நம் தம் திறல் வரை புணர்ப்பு—இது எங்களது வலிய கிரவுஞ்சமலையின்மாயமேயாம், என்றார்—என்றுகூறினார்கள் எ—று.

வீற்றுவீற்று என்றது சிங்கமுகன்வாழுகின்ற ஆசுரநகரையும் கடல்களினும் தீவுகளினும் சேனைத்தலைவர்க்காயமைக்கப்பட்ட பிறநகரங்களையுமென்க. இங்ஙன்பிறந்தசொல் என்றது-கிரவுஞ்சமலையைமுருகவேள்வேலாற்பிளந்தழித்தாரென்பதை. எவராலுமழிக்கத்தகாதமலையென்பார் ‘திறல்வரை’ என்றார். கிரவுஞ்சமலை மாயத்தாற்பேருருக்கொண்டு இவ்வாறுநிற்றலைப் பலகாற்கண்டுளாராதலின் இவ்வாறயிர்த்தார். இன்னுந்தேருவது என்றது-அம்மலைவேலாற்பிளக்கப்பட்டழிந்ததோ அன்றோவென்பதை. சயங்கெழுபுயத்துவள்ளல்-வெற்றிபொருந்தியபுயங்களையுடையதலைவன். (௨௬)

ஒலிகழல் வீர வாகு வோங்கலை யூன்றி யிந்த
நிலைமையி னிற்ற லோடு நெடியமால் சுதனும் விண்ணோர்
தலைவனும் பிறரு மன்னோன் றம்பிய ரளப்பி லோருங்
கலிகெழு பூதர் யாருங் கண்டுவிம் மிதத்தி னார்த்தார்.

இ—ள்: ஒலி கழல் வீரவாகு— ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த வீரவாகு தேவர், இந்த நிலைமையில் ஓங்கலை ஊன்றி நிற்றலோடும்—இப்படியாகக் கந்தமாதனகிரியை அமிழ்த்திநிற்க, நெடிய மால் சுதனும்—நெடியதிருமாலின் புதல்வராகிய பிரமதேவரும், விண்ணோர் தலைவனும்—தேவர்க்குத்தலைவனாகிய இந்திரனும், பிறரும்—மற்றையதேவர்களும், அன்னோன் தம்பியர் அளப்பிலோரும்—அவனது தம்பிமார்பலரும், கலி கெழு பூதர் யாரும்—ஒலிமிகுந்த பூதரனைவரும், கண்டு—அதனைப்பார்த்து, விம்மிதத்தின் ஆர்த்தார்—ஆச்சரியத்தோடு ஆரவாரித்தார்கள் எ—று.

பேரொலியுடன் ஆர்க்கவல்லாரென்பார் 'கலிகெழுபூதர்' என்றார். மால் சுதனுமென்பதற்குத் திருமாலும்அவரதுபுதல்வராகியபிரமதேவருமெனினுமாம்.

தேவர்கண் முனிவ ரேனைத் திறத்தவர் யாருந் தத்த
மோவரும் பதத்தி னின்றே யொல்வதோ ருறுப்பின் மேவக்
காவரு கடிமென் பூத்தூய்க் கைதொழு தைய வெஞ்சூர்
மேவரு நகர்சென் றெங்கள் வியன்றுய ரகற்று கென்றார்.

இ—ள்: தேவர்கள்—தேவர்களும், முனிவர்—முனிவர்களும், ஏனை திறத்தவர் யாரும்—மற்றும்வகுப்பினருமாகிய எல்லோரும், தத்தம் ஓ அரும் பதத்தில் நின்றே—தங்கள்தங்களது ஒழிவில்லாதஉலகத்தில்நின்றுகொண்டே, ஒல்வது ஓர் உறுப்பில் மேவ— ஏற்றஅவயவங்களிற்சாரும்படி, கா வரு கடி மென் பூ தூய்— சோலையின்மலர்ந்த அழகிய மென்மையானமலர்களைத்தூவி, கைதொழுது— கைகுவித்து, ஐய—சுவாமீ!, வெம் சூர் மேவரும் நகர் சென்று— கொடியசூரபன்மன்வாழுகின்ற மகேந்திரநகரிற்போய், எங்கள் வியன் துயர் அகற்றுக— சிறியேங்களது பெருந்துன்பத்தை நீக்கல்வேண்டும், என்றார்—என்று வேண்டுதல் செய்தார்கள் எ-று.

ஏனைத்திறத்தவர்-கின்னரர் கிம்புருடர் முதலாயினோர். தொழுது என்றார் என இயையும். எக்காலத்தும் நிலையாய்வாழும்பதமென்பார் 'ஓவரும்பதம்' எனவும், தத்தம்பதங்களிலமைந்திருக்குமுறுப்புக்களிற்சாரும்படி தூவியென்பார் 'ஒல்வதோருறுப்பின்மேவ-தூய்' எனவும் கூறினார். தேவர் கற்பகதருச்சோலையினும் ஏனையோர் தத்தம்பதவிகளிலுள்ள சோலைகளினும் தோன்றியமலர்களைத் தூவினரென்க. (௪௮)

ஆவதோர் காலை யெந்தை யாறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க
தேவர்க டேவன் சேயோன் றிருவடி வாழ்க வென்றான்.

இ—ள்: ஆவது ஓர் காலை— அச்சமயத்தில், எந்தை— எங்கள்தலைவராகிய முருகக்கடவுளது, ஆறிரு தடம் தோள் வாழ்க— விசாலித்த பன்னிரண்டுதிருப்புயங்களும் வாழுக, மூவிரு வதனம் வாழ்க— ஆறுதிருமுகங்களும்வாழுக, முழுது அருள் விழிகள் வாழ்க—பூரணமானகிருபையைச்செய்கின்ற பன்னிரண்டுதிருக்கண்களும் வாழுக, தூ உடை நெடு வேல் வாழ்க— தூய்மையையுடைய நெடியவேற்படையும் வாழுக, தொல் படை பிறவும் வாழ்க— பழைய பிறபடைக்கலங்களும் வாழுக, தேவர்கள் தேவன் சேயோன்— தேவத்தலைவராகிய சிவபிரானது திருக்குமாரரது, திருவடி வாழ்க— திருப்பாதங்களும் வாழுக, என்றான்— என்று வீரவாகுதேவர் தோத்திரஞ்செய்தார் எ-று.

894.81113
KAC

மிருந்த தண்ணளியமைந்தபார்வையென்பார் 'முழுதருள்விழிகள்' என்றார். அகத்திலுள்ள அருளைப் புறத்தேமுதலிற்காட்டுவன கண்களேயாதலின் அவ்வருளைக்கண்கள்மேலேற்றிக்கூறினர். தூவுடைநெடுவேலென்பதற்குத் தசைப்பற்றுத்தோய்ந்த நெடியவேலெனக்கூறுவதுபொருந்தாது, தெய்வத்தன்மையுடைய படையாதலின். சிவபிரானருளியநாண்முதல் இயற்கையாய் அவ்வக்கையிலமைந்திருக்கும்படையென்பார் 'தொல்படை' என்றார். அவை குலிசமுதலாயின. வீரவாகுதேவர் ஆனந்தமேலீட்டினால் இவ்வாறுவாழ்த்தினர். இவையெல்லாம்வாழ்ந்திருப்ப எனக்கோர்குறையும்வாராதென்பது இத்துதியினுட்கிடை. வடமொழியில் ஜய என்று துதிப்பதுபோலவே தமிழில் வாழ்க என்றுதுதிப்பது. எந்தையென்பதைப் பின்னுள்ளநான்குதொடர்களுக்கும் இயைக்க. (௪௯)

ஆண்டகை தொழுத பாணி யணிமுடிக் கொண்டிவ் வாற்றா
லீண்டுசீர்க் குமர வேளை யேத்தலு மன்பின் கண்ணீர்
வீழ்ந்துதெண் கடலு ளேகி வெள்ளமிக் குவரை மாற்றப்
பூண்டகண் டிகையைமானத் தோன்றின பொடிப்பின் பொம்மல்.

இ—ள்: ஆண்டகை—ஆண்மைக்குணத்தினையுடைய வீரவாகுதேவர், தொழுத பாணி அணி முடி கொண்டு—குவித்தகைகளை அழகியமுடியின்மேல் வைத்து, இவ் ஆற்றால்—இப்படி, ஈண்டு சீர் குமரவேளை ஏத்தலும்—மிகுந்தகீர்த்தியையுடைய முருகக்கடவுளைத்துதித்தபொழுது, அன்பின் கண் நீர் வீண்டு—அன்பினாற்றோன்றியகண்ணீர்சிந்தி, தெண் கடலுள் ஏகி—தெளிந்தசமுத்திரத்திற்பாய்ந்து, வெள்ளம் மிக்கு—வெள்ளமாகப்பெருகி, உவரை மாற்ற—முன்னுள்ள உவர்த்தன்மையைநீக்க, பொடிப்பின் பொம்மல்—புளகச்செறிவானது, பூண்ட கண்டிகையை மான தோன்றின—அணிந்திருக்கின்ற உருத்திராக்கமாலையைப்போலத்தோற்றியது எ—று.

அன்பின்கண்ணீர்—ஆனந்தபாஷ்பம். வீண்டு-வீழ்ந்தென்பதன்விகாரம். மாற்ற-காரணகாரியமிரண்டுமின்றி வந்தசெயவெனெச்சம். அவரதுமேனிமுழுவதும் புளகமரும்பியிருத்தல் உருத்திராக்கவடந்தரித்தாற்போன்றதென்க. கடவுளைத்தோத்திரஞ்செய்தமாத்திரத்திற் கண்ணீர்சிந்துதலும் புளகமரும்புதலும் அடியார்க்கியல்பு. தோன்றின-துவ்விகுதிகெட்டவினைமுற்று. (௫௦)

மீதுகொள் பொடிப்பு மூட மெய்ப்புலன் சிந்தை யொன்ற
வோதுவ தவற வென்பு முருகிய செருக நாட்டங்
கோதில்பே ரருளின் மூழ்கிக் குதூகலித் திடுத லோடு
மூதுல கனைத்து மாவி முழுவது மகிழ்ந்த வன்றே.

இ—ள்: மீது கொள் பொடிப்பு மூட—வெளியிற்றோன்றியபுளகம் மேனியைமறைக்க, மெய் புலன் சிந்தை ஒன்ற—உண்மையானபுலன்களைந்தும் மனமும் ஒருவழிப்பட, ஓதுவ தவற—பேசும்வார்த்தைகள் தடுமாற, என்பும் உருகிய—எலும்பும்இளக, நாட்டம் செருக—கண்கள் இமைக்குள்ஒடுங்க, கோது இல் பேர் அருளில் மூழ்கி—குற்றமற்ற சிறந்த அருட்கடலிற்படிந்து, குதூகலித்திடுதலோடும்—ஆனந்தபரவசமாக, மூது உலகு அனைத்தும்—பழைய எல்லாவுலகங்களும், ஆவி முழுவதும்—எல்லாவுயிர்களும், மகிழ்ந்த—மனச்சந்தோஷங்கொண்டன எ—று.

எந்திரத்தின்மாட்டியகயிறுபோல மனத்தைத்தத்தஞ்சார்பிலிழுப்பனவாதலின் 'மெய்ப்புலன்' எனவும், அங்ஙனமிழுக்கப்படாவண்ணந்தடுத்து மனத்தையொருவழிநிறீஇயென்பார் 'மெய்ப்புலன்சிந்தையொன்ற' எனவும் கூறினார். செ

46892

ற்றவறல்முதலியன பத்திமுதிர்ச்சியால் நிகழ்வன. ஒருவனுடையபெருந்துக்கமும் பெருமகிழ்வும் கண்டார்க்குங்கேட்டார்க்குஞ்சிறிதுபற்றுதல்போல வீரவாகுதேவரது ஆனந்தம் அளவுகடந்தபேரானந்தமாதல்பற்றி அனைத்துலகங்களினும் உயிர்களினும் பற்றியது. (௫௧)

அவ்வகை நிகழச் செவ்வே ளாரரு ளதனைப் பெற்று
மொய்வரை மீது நின்றோன் முழுதுல களந்து சேண்போ
யிவ்வுரு வோடு செல்லி னிறந்திடு முலக மீது
செவ்விதன் றென்று வேண்டுந் திருவடி வமைந்தா னன்றே.

இ--ள்: அவ்வகை நிகழ—அத்தன்மைகள் நடைபெற, செவ்வேள் ஆர் அருள் அதனை பெற்று—முருகக்கடவுளது நிறைந்தகிருபையைப்பெற்று, மொய்வரை மீது நின்றோன்—குவிந்த கந்தமாதனமலையின்மேல்நின்ற வீரவாகுதேவர், முழுது உலகு அளந்து சேண் போம் இவ் உருவோடு செல்லின்—எல்லாவுலகங்களையுமளந்து மேலோங்கிய இந்தவடிவத்தோடுநடந்தால், உலகம் இறந்திடும்—உலகம்அழியும், ஈது செவ்விது அன்று--(ஆதலின்)இப்படிச்செல்வது தக்கதன்று, என்று—என்றுநினைத்து, வேண்டும் திரு வடிவு அமைந்தான்—கொள்ளவேண்டிய திருவுருவத்தைக்கொண்டார் எ—று.

அவ்வகை-முன்னிருசெய்யுட்களினுங்கூறப்பட்டதன்மைகள். வீரவாகுதேவர் தியானித்தமாத்திரத்தே முருகவேள்காட்சிகொடுத்து எண்ணியகருமம் இனிதுசித்தியாமென்னுங்குறிப்பைக்காட்டினரென்பதுதோன்ற 'செவ்வேளாரருளதனைப்பெற்று' என்றார். உலகமுழுதுமழிவது கால்மிதித்தல் மேனிதாக்கல்முதலியவற்றால். வேண்டுந்திருவடிவு-இயற்கையானவடிவம். மொய்வரை-வலியமலையெனினுமாம். (௫௨)

கிரிமிசை நின்ற வண்ணல் கிளர்ந்துவா னெழுந்து சென்னிக்
குருமணி மகுட மண்ட கோளகை புடைப்ப வீர
னுருகெழு சீற்றச் சிம்பு ளுருவுகொண் டேகிற் றென்ன
வரைபுரை மாட வீர மகேந்திர முன்னிப் போந்தான்.

இ—ள்: கிரி மிசை நின்ற அண்ணல்- கந்தமாதனமலையின்மேனின்ற வீரவாகுதேவர், சென்னி குரு மணி மகுடம் அண்டகோளகை புடைப்ப- தலையிலணிந்த நிறம்விளங்குகின்ற இரத்தினகிரீடம் அண்டமுகட்டைத்தாக்க, கிளர்ந்து வான் எழுந்து- உயர்ந்து ஆகாயத்திற்பாய்ந்து, வீரன் உரு கெழு சீற்ற சிம்புள் உருவு கொண்டு ஏகிற்று என்ன- வீரபத்திரக்கடவுள் எவருமஞ்சத்தக்ககோபத்தையுடைய சரபப்பறவையின்வடிவத்தைக்கொண்டுசென்றாற்போல, வரை புரை மாட வீரமகேந்திரம் முன்னி போந்தான்- மலையையொத்த மேன்மாடங்களையுடைய வீரமகேந்திரபுரத்தைக்குறித்துச்சென்றார் எ- று.

மிகுந்தஉக்கிரத்துடன் ஆகாயமார்க்கமாகச்செல்லுதலால் இங்ஙனமுவமித்தார். திருமாலினதுநரசிங்கவடிவத்தையழித்தகாலத்தில் வீரபத்திரக்கடவுள் சரபப்பறவையுருக்கொண்டு பறந்தாரென்க. (௫௩)

வீரவாகுகந்தமாதனஞ்சேல்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௫௩.

கடல்பாய்படலம்.

வீரவாகுதேவர் கடலைக்கடந்துசென்றதன்மையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் விசைக்காற்றின்வழியேசமுத்திரநீர்பாய்ந்து மகேந்திரநகரின்முட்டவும் மலைமுதலியஎல்லாப்பொருள்களும் நிலைகுலையவும் வேகமாகக் கடலைக்கடந்துசென்று இலங்கையைச்சமீபித்தார் என்பதாம்.

அழுங்கிய கழற்கால் வீர னவ்வழி யவனிக் கீழ்போய்
விழுங்கிரி நிலைமை நோக்கி மீண்டுநீ யெழுதி யென்று
வழங்கினன் வழங்கு மெல்லை வல்லையிற் கிளர்ந்து தோன்றி
முழங்கிருங் கடலின் மாடே முந்துபோ னின்ற தன்றே.

இ—ள்: அழுங்கிய கழல் கால் வீரன்—ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்தபாதங்களையுடைய வீரவாகுதேவர், அவ்வழி—அப்பொழுது, அவனி கீழ் போய் விழும் கிரி நிலைமை நோக்கி—பூமியின்கீழேபோயழுந்திய கந்தமாதனமலையின்றன்மையைப்பார்த்து, மீண்டும் நீ எழுதி என்று வழங்கினன்—திரும்பவும் நீ எழும்புவாயென்றுகூறினார், வழங்கும் எல்லை—அங்ஙனங்கூறியபொழுது, வல்லையில் கிளர்ந்து தோன்றி—அம்மலை விரைவிலுயர்ந்துதோற்றி, முழங்கு இரும் கடலின் மாடே—ஒலிக்கின்ற பெரிய சமுத்திரத்தின் பக்கத்தில், முந்துபோல் நின்றது—முன்போல நின்றது எ—று.

முன் எத்துணைப்பரப்புடனும் உயரத்துடனும் நின்றதோ அத்துணைப்பரப்புடனும் உயரத்துடனும் நின்றதென்பார் 'முந்துபோனின்றது' என்றார். (க)

வீரனங் கெழலு மன்னோன் விண்படர் விசைப்பின் காலாற்
பாருறு வரைகள் யாவும் படர்ந்தன பாங்க ராகச்
சாரதத் தலைவ ரேனைத் தம்பிய ரிலக்கத் தெண்ம
ராருமங் கவன்றன் பாலா யணிந்துடன் சேற லென்ன.

இ—ள்: வீரன் அங்கு எழலும்—வீரவாகுதேவர் அம்மலையினின்று மேற்கிளர்ந்தவுடன், அன்னோன் விண் படர் விசைப்பின் காலால்—அவர் ஆகாயமார்க்கமாகச்செல்லுதலாலுண்டான விசைக்காற்றினால், சாரத தலைவர் ஏனை தம்பியர் இலக்கத்து எண்மர் ஆரும்—பூதத்தலைவர்களும் மற்றும் தம்பிமார்களாகிய இலக்கத்தெட்டுவீரர்களுமெல்லாம், அவன் தன் பால் ஆய் அணிந்து உடன் சேறல் என்ன—அவரதுபக்கத்தில் நிரைப்பட்டு ஒருங்குசென்றாற்போல, பார் உறு வரைகள் யாவும்—பூவுலகத்திலுள்ள மலைகளெல்லாம், பாங்கர் ஆக படர்ந்தன—பக்கத்திலமைந்து சென்றன எ—று.

காற்றிலகப்பட்டபஞ்சுபோலப் பலமலைகள் அவரது விசைக்காற்றினாலிழுக்கப்பட்டு அவரைச்சூழ்ந்துசென்றன என்பதாம். தற்குறிப்பேற்றம். (உ)

விரைந்துவான் வழிக்கொள் வீரன் விசைத்தெழு காலி னண்டந்
திரிந்தன வுயிர்கண் முற்றுந் தெருமர லுற்ற தெண்ணீர்
சுரந்திடு கொண்டல் யாவுஞ் சுழன்றன வடவை யுண்ணு
விருந்திடு மூழிக் காலு மாற்றலா திரியல் போன.

இ—ள்: விரைந்து வான் வழி கொள் வீரன் விசைத்து எழு காலின்—விரைவில் ஆகாயமார்க்கமாகச்செல்லுகின்ற வீரவாகுதேவர் வேகமாகநடத்தலாலுண்டாகிய காற்றினால், அண்டம் திரிந்தன—அண்டங்கள்நிலைகுலைந்தன, உயிர்கள் முற்றும் தெருமரல் உற்ற—ஆன்மாக்களெல்லாந்துன்பமுற்றன, தெள் நீர் சுரந்திடு கொண்டல் யாவும் சுழன்றன—தெளிந்த நீரைப்பொழிகின்றமேகங்களெல்லாஞ்சுழன்றன, வடவை உண்ணை இருந்திடும் ஊழிக்காலும் ஆற்றலாது இரியல்போன—வடவாமுகாக்கினியைப் பிரளயகாலத்திற்றணிக்கும்படியிருக்கின்ற பிரசண்டமாருதமும் தாங்கமாட்டல் அலைந்துபோயிற்று எ—று.

ஊழிக்காற்று எல்லாக்காற்றையுமடக்கவல்லதாதலின் உயர்வுசிறப்பும்மை கொடுத்தார். போன-ஈறுகெட்டவினைமுற்று. (ரு)

பெருமிடல் பூண்ட தோன்றல் பெயர்தலும் விசைப்பி னூதை
பரவின வெம்மை மாற்றிப் பரிதியைக் கனலைத் திங்கள்
வருணன தியற்கை யாக்கி வடவையின் முகத்துத் தோன்றித்
திரைகட லிருந்த வூழித் தீயையு மவித்துச் சென்ற.

இ—ள்: பெரு மிடல் பூண்ட தோன்றல் பெயர்தலும்—மிக்கவலிமையையுடைய வீரவாகுதேவர்நடக்க, விசைப்பின் ஊதை—அதனாலுண்டாகிய விசைக்காற்றானது, பரவின—பரந்து, பரிதியை கனலை—சூரியமண்டலத்தையும் அக்கினியையும், வெம்மை மாற்றி—வெப்பம்நீங்கச்செய்து, திங்கள் வருணனது இயற்கை ஆக்கி—சந்திரனதும் வருணனதும் தன்மையை முறையே உண்டாக்கி, வடவையின் முகத்து தோன்றி திரை கடல் இருந்த ஊழித்தீயையும் அவித்து—பெண்குதிரையின்முகத்தில் முற்காலத்துத்தோற்றித் திரைவீசுகின்ற சமுத்திரத்தில்மறைந்திருந்த ஊழித்தீயையுந்தணித்து, சென்ற—சென்றது எ—று.

பரவின ஈறுகெட்டமுற்றெச்சம். சென்ற ஈறுகெட்டவினைமுற்று. ஊழித்தீ-உலகமுடிவுகாலத்தில் வெளிப்படுகின்ற அக்கினி. பெருங்காற்றினால் வெப்பமொருங்கேதணிந்த தென்பார் 'திங்கள்வருணனதியற்கையாக்கி' என்றார். விசைக்காற்றுண்டாகநடப்பதற்கேற்ப 'பெருமிடல்பூண்டதோன்றல்' என்றார். ( )

விரைசெறி நீபத் தாரோன் விரைந்துசெல் விசைக்கா றள்ளத்
திரைகடல் சுழித்துள் வாங்கித் திறன்மகேந் திரத்திற் சேற
லாசியல் புரிவெஞ் சூர னனிகங்க ளவன்மேற் சென்று
பொருமுர ணின்றித் தம்மூர் புகுவன விரிவ போலாம்.

இ—ள்: விரை செறி நீப தாரோன் விரைந்து செல் விசைக்கால் தள்ள—வாசனைசெறிந்த கடப்பமலர்மாலையையணிந்த வீரவாகுதேவர் விரைவாகச்செல்லுதலாலுண்டாகிய விசைக்காற்றானது உந்த, திரை கடல் சுழித்து உள்வாங்கி திறல் மகேந்திரத்தில் சேறல்—திரைவீசுகின்ற சமுத்திரம் சுழிகொண்டு உள்ளிழுக்கப்பட்டு வலியமகேந்திரநகரத்தினுட்செல்லுதல், அரசியல் புரி வெம் சூரன் அனிகங்கள்—இராச்சியபரிபாலனத்தைச்செய்கின்ற கொடிய சூரபன்மனது சேனைகள், அவன் மேல் சென்று—அந்த வீரவாகுதேவனையெதிர்த்து வந்து, பொரும் முரண் இன்றி—போர்செய்தற்கேற்றவலிமையில்லாமல், தம் ஊர் புகுவன இரிவ போல் ஆம்—தங்கள்நகரத்தை நோக்கினவாய் அஞ்சியோடுதலைப் போலிருந்தது எ—று.

புகுவன-முற்றெச்சம். நடுப்பாகத்திலிருக்கும்நீர் இயற்கையானகாற்றாற்கரையில்வந்துமோதுமியல்புமாறிக் கரையிலுள்ளநீரெல்லாம் நடுப்பாகத்திலிழுக்க

ப்பட்டமையின் ‘சுழித்துள்வாங்கி’ என்றார், அங்ஙனமுள்வாங்கிச்சென்றநீர் மகேந்திரநகரின்றரைமட்டத்திற்கு மேற்படுதலின் உட்புகுந்தது. முன்கரையைநோக்கித் திரைவீசிக்கொண்டுவந்து பின் மாறாய்ச்செல்லுதலின் சேனைகள் வீரவாகுதேவர்மேலெதிர்த்துவந்து பின்னர் இரிந்துமீளுதலை ஒத்ததென்க. தற்குறிப்பேற்றம். (ரு)

விடைத்தனி யாற்றல் சான்ற விடலைகால் வெற்பி னோடும்
படித்தலங் கீண்டு முன்னம் பாதலங் காட்டிற் றன்னா
னடற்படு விசையின் காலு மளியதோ வலிய தன்றோ
கடற்புவி கீண்டு நாக ருலகினைக் காட்டிற் றன்றே.

இ—ள்: விடை தனி ஆற்றல் சான்ற விடலை கால்—இடபத்தைப்போன்ற ஒப்பற்றவலிமைமிகுந்த வீரவாகுதேவரதுபாதங்கள், முன்னம்—சிறிதுநேரத்தின்முன்னே, வெற்பினோடு படித்தலம் கீண்டு—கந்தமாதனமலையையும் பூமியையுங்கிழித்து, பாதலம் காட்டிற்று—பாதாளலோகத்தைவெளிப்படுத்தியன, அன்னான் அடல் படு விசையின் காலும் அளியதோ—அவரது வலிமைபொருந்திய விசையினாலுண்டாகிய காற்றும் எளியதா?, வலியது அன்றோ—வலியுடையதன்றோ! (ஏனெனில்), கடல் புவி கீண்டு நாகர் உலகினை காட்டிற்று—கடலான் மறைக்கப்பட்ட பூமியைக்கிழித்துப்பாதலலோகத்தைக்காட்டியது எ—று.

முன்னம் என்பதில் அம் சாரியை. உறுப்புக்கால்மலையினின்றுமிதித்தலாற் பாதலவுலகைக்காட்டியதென்பார் ‘விடலைகால்வெற்பினோடும்படித்தலங்கீண்டு-பாதலங்காட்டிற்று’ எனவும், விசைக்கால் கடனீரைஉள்வாங்குவித்தலாற் பாதலவுலகைக்காட்டியதென்பார் ‘விசையின்காலும்-கடற்புவிகீண்டுநாகருலகினைக்காட்டிற்று’ எனவும் கூறினார். இருவகைக்கால்களும் சொல்லொப்புமையோடு செயலொப்புமையுமுடைத்தாயின என்பது குறிப்பு. ஓகாரம் அளியதோ என்பதில் எதிர்மறை. அன்றோ-தேற்றம். (சு)

பாசிழை யலங்கற் றோளான் படர்தலும் விசையின் காலைக்
காய்சின வுயிர்ப்புச் செந்தீக் கலந்துடன் றழீஇக்கொண் டேகி
மாசுறு சூரன் வைகும் வளநகர் சுற்றி யன்னோன்
றூசிய தென்ன முன்னங் கொளுவிய தூமஞ் சூழ.

இ—ள்: பசு இழை அலங்கல் தோளான் படர்தலும்—பசுமையான ஆபரணங்களையும் மலர்மாலையையுமணிந்த புயங்களையுடைய வீரவாகுதேவர்போம்பொழுது, விசையின் காலை—விசைக்காற்றை, காய் சின உயிர்ப்பு செம் தீ கலந்து உடன் தழீஇக்கொண்டு ஏகி—கடுங்கோபத்தினாலும் பெருமூச்சினாலுமுண்டான சிவந்த அக்கினி சேர்ந்து ஒருங்குகூடிச்சென்று, மாசு உறு சூரன் வைகும் வள நகர் சுற்றி—குற்றம்பொருந்திய சூரபன்மனிருக்கின்ற வளமிகுந்தநகரத்தைச்சூழ்ந்து, அன்னோன் தூசியது என்ன—அந்த வீரவாகுதேவருடைய முன்னணிச்சேனையைப்போல, தூமம் சூழ—புகையானதுபரவ, முன்னம் கொளுவிய—அவர்போய்ச்சேருமுன் பற்றியது எ—று.

பசுமையென்னும்பண்புப்பெயர் விகுதிகெட்டு முதனீண்டது. மாற்றுயர்ந்த பொன்னாற்செய்யப்பட்ட அணியென்பார் ‘பாசிழை’ என்றார். அது பகுதிப்பொருள்விகுதி. சுற்றிக்கொளுவிய எனஇயையும். தூசிப்படை முன்சென்று மாற்றார்நகரைவளைதலியல்பாதலின் ‘அன்னோன்றூசியதென்ன-கொளுவிய’ என்றார். (எ)

பூஞ்சிலம் பரற்றுந் தாளான் போர்துமுன் விரைவி னோதை
வேய்ஞ்சிலம் ப[illegible]தோட் சூரன் வீரமா மகேந்திரத்தி

ஈறுஞ்சிலம் புரிசை பொன்செய் ஙளிர்வரை குளிர்பூங் கிள்ளை
தாஞ்சிலம் புற்ற சோலை யலைத்தன தரையிற் றள்ளி.

இ—ள்: பூ சிலம்பு அரற்றும் தாளான் போதுமுன்—பொலிவான கழற்சில ம்புஒலிக்கின்ற பாதங்களையுடைய வீரவாகுதேவர் போய்ச்சேருதற்குமுன், விரை வின் ஓதை—விசைக்காற்றானது, வேய் சிலம்பு அடு தோள் வீரன் வீர மா மகே ந்திரத்தில்—மூங்கில்கள்பொருந்திய மலையையும்வென்ற புயங்களையுடைய சூரப ன்மனது பெரிய வீரமகேந்திரபுரத்திலுள்ள, ஈறுஞ்சிலம் புரிசை—உறுப்புக்களையு டையமதிலையும், பொன் செய் ஙளிர் வரை—பொன்னாற்செய்யப்பட்ட குளிர்ந்தம லைகளையும், குளிர் பூம் கிள்ளை தாம் சிலம்புற்ற சோலை—குளிர்ந்த பொலிவான கிளிகளொலிக்கப்பெற்ற சோலைகளையும், தரையில் தள்ளி அலைத்தன—பூமியில் விழுத்தி வருத்தியது எ—று.

போதுமுன்-அலைத்தன எனஇயையும். வேய்ச்சிலம்பெனறபாலது எதுகை நோக்கி விகாரமாயிற்று. இது யகரவொற்றிடைவந்த ஆசெதுகை. ஈறுஞ்சில்-மதி லுறுப்பு. தாம்-அசைநிலை. ஓதை அலைத்தன ஒருமைபன்மைமயக்கவழுவமைதி.

உறைபுகு நெடிய வேலா னுயிர்ப்புறு கனன்முன் னோடிச்
செறுநனூர் கொளுவ வன்னோன் சென்றிடு விரைவின் கால்போ
யெறிபுனற் கடலைத் தாக்க விடைந்துமற் றதுதா னேகி
முறைமுறை திரைக்கை நீட்டி மூண்டிடா தவித்துப் போமால்.

இ—ள்: உறை புகும் நெடிய வேலான் உயிர்ப்பு உறு கனல்—உறையினுட் செருகப்பெற்ற நெடிய வேற்படையையுடைய வீரவாகுதேவர்விடுகின்ற பெருமூ ச்சினின்றுண்டாகிய அக்கினியானது, முன் ஓடி—முந்திப்போய், செறுநன் ஊர் கொளுவ—பகைவனாகிய சூரபன்மனது மகேந்திரபுரத்திற்மூள, அன்னோன் செ ன்றிடு விரைவின் கால் போய்—அவர் நடத்தலாலுண்டாகிய விசைக்காற்றுச்செ ன்று, எறி புனல் கடலை தாக்க—திரைவீசுகின்ற நீரையுடைய சமுத்திரத்தைமோ த, அது இடைந்து ஏகி—அந்தச்சமுத்திரம் பின்வாங்கிச்சென்று, முறைமுறை திரை கை நீட்டி—ஒன்றன்பின்னொன்றாகத்திரையாகியகைகளைநீட்டி, மூண்டிடா து அவித்து போம்—அக்கினிமூளாவண்ணந் தணித்துச்செல்லும் எ—று.

கனல்கொளுவ அது அவித்துப்போம் எனஇயையும். திரைக்கை-உருவகம். மற்று தான் அசைநிலைகள். வீரவாகுதேவரது உயிர்ப்பினின்றுந்தோன்றி மகே ந்திரத்திற்போய்ப்பற்றும் அக்கினியை விசைக்காற்றாலெழுக்கப்பட்டவருங்கடனீர் தணித்ததென்பது கருத்து. (௯)

அண்ணலங் காளை யேக வுயிர்த்தகா லவன்செல் லோதை
கண்ணழ றுண்ட மோச்சுங் கடுங்கன லெதிரா தோடு
முண்ணிறை புணரி யாவு மொன்னலன் பதிமேற் சென்று
விண்ணில மொழிந்த பூத மடுதலின் விளைந்த பூசல்.

இ—ள்: அண்ணலம் காளை ஏக—பெருமையிற்சிறந்த வீரவாகுதேவர் நடக் கும்பொழுது, உயிர்த்த கால்—பெருமூச்சினாலுண்டாகியகாற்றும், அவன் செல் ஓதை— அவர் நடத்தலாலுண்டாகிய காற்றும், கண் அழல்— கண்களினி ன்றுந்தோற்றிய அக்கினியும், துண்டம் ஓச்சும் கடும் கனல்—மூக்கினின்றுஞ்சி தறுகின்ற கொடிய அக்கினியும், எதிராது ஓடும் உள் நிறை புணரி— எதிரேபா யாது அவர்செல்லுந்திசைவழியே பாய்கின்ற தன்னிடமுழுதும்நீர்நிரம்பப்பெற் றகடலும் ஆகிய, விண் நிலம் ஒழிந்த பூதம் யாவும்—ஆகாயமும் பூமியுந்தவிர்ந்த பூதங்கள் மூன்றும், ஒன்னலன் பதி மேல் சென்று—பகைவனாகிய சூரபன்மன

து மகேந்திரபுரியிற்போய், அடுதலின்— அழித்தலினால், பூசல் விளைத்த—பே ரொலியையுண்டாக்கின எ—று.

களை-எருதுபோல்வான்; உவமவாகுபெயர். கண்ணுற்பார்க்கும்பொழுது ம் மூக்காலுயிர்க்கும்பொழுதும் தீச்சிந்துதலின் 'கண்ணழல் துண்டமோச்சுங்க டுங்கனல்' என்றார். (௧௦)

வெள்வரைக்குவவுத் திண்டோள்வெலற்கருந்திறலோனெண்காற்
புள்விசை கொண்டு செல்லப் புறந்தரப் புணரி யங்க
ணுள்வளைந் துலாய சின்னை யொண்சுறாப் பனைமீ னூறை
தெள்விளித் திருக்கை தந்தி திமிங்கில மிரிந்து பாய்ந்த.

இ—ள்: வெள் வரை குவவு திண் தோள் வெலற்கு அரும் திறலோன்—வெள்ளியமலையைப்போன்ற குவிந்த திண்மையானபுயங்களையும் எவராலும்வெல்லுதற்கரிய வலியையுமுடையவீரவாகுதேவர், எண் கால் புள் விசை கொண்டு செல்ல—சரபப்பறவைபறப்பதுபோன்றவேகத்துடன்கூடி நடத்தலால், புணரி புறம் தர—கடல்நீர் பிற்பட்டுப்பாய, அங்கண்—அக்கடலினிடத்து, உள் வளைந்து உலாய சின்னை—உள்வளையப்பெற்று உலாவுகின்றசின்னைமீனும், ஒண் சுறா—ஒள்ளியமகரமீனும், பனைமீன்—பனைமீனும், நூறை—மலங்குமீனும், தெள்விளி திருக்கை—ஆரவாரத்தையுடைய திருக்கைமீனும், தந்தி—யானைமீனும், திமிங்கிலம்—திமிங்கிலமீனும், இரிந்து பாய்ந்த—அஞ்சிப்பாய்ந்தன எ—று.

திருநீற்றுப்பூச்சையுடைமையால் வெள்வரையையுவமித்தார். புறந்தரப்பாய்ந்த எனஇயையும். தலையையும்வாலையும்வளைத்துக்கொண்டுலாவுவனவாதலின் 'உள்வளைந்துலாயசின்னை' என்றார். பனைபோலும்வடிவத்தையுடையதாதலின் பனைமீனெனவும் யானைபோன்றதோற்றத்தையுடையதாதலின் யானைமீனெனவும் பெயர்பெற்றன. திமிங்கிலம்-யானையைவிழுங்குமீன். கடல்நீர் இயற்கைபோலின்றிப்பெருவேகத்துடன்பாயத்தொடங்குதலால் இரிந்துபாய்ந்தன. தெள்விளி-மகிழ்ச்சியாற்செய்யும் ஆர்ப்பு. (௧௧)

நாயகன் றூத னேக நளிர்கட லெதிர்ந்தி டாது
சாய்வது மீன முற்றுந் தரங்கவெண் கரங்க டாங்கித்
தீயசூர் மூதூ ருய்த்துச் சென்றது பொன்று வோர்க்கு
மேயின விச்சை யுண்டி மிகத்தமர் வழங்கு மாபோல்.

இ—ள்: நாயகன் தூதன் ஏக—முருகக்கடவுளின் தூதராகிய வீரவாகுதேவர்நடக்க, நளிர் கடல்—குளிர்ந்தகடலானது, எதிர்ந்திடாது சாய்வது—எதிராய்ப்பாயாது பிற்பட்டுப்பாய்ந்து, தமர் பொன்றுவோர்க்கு இச்சை மேயின உண்டி மிக வழங்குமா போல்—சுற்றத்தவர்கள் இறப்பவர்களுக்கு விருப்பமிக்கஉணவுப் பொருள்களை அதிகமாகக்கொடுப்பதுபோல, மீனம் முற்றும்—மீன்களெல்லாவற்றையும், தரங்க வெண் கரங்கள் தாங்கி—திரைகளாகிய வெள்ளியகைகளாற்சுமந்து, தீய சூர் முது ஊர் உய்த்து—கொடியசூரபன்மனது பழையநகரத்தில்வீசி, சென்றது—பாய்ந்தது எ—று.

இறக்கத்தகுந்தநோயாற் பீடிக்கப்பட்டார்க்குச் சுற்றத்தார் கேட்டஉணவுகளையெல்லாங்கொடுத்தல் உலகியல். மீன்கள் அசுரர்க்குமிகவிருப்பமானஉணவுப்பொருளாதலின் இங்ஙனமுவமித்தார். கடலுக்குச்சுற்றத்தாருவமை. (௧௨)

காழ்தரு தடக்கை மொய்ம்பன் கடுமைசால் செலவி னேதை
சூழ்தரு கின்ற காலைத் துண்ணெனத் துளங்கி விண்மீன்

வீழ்தர வேலை தன்னில் வேலையு மறிந்து செல்ல
வாழ்திரை யெறிமீன் முற்று மந்தரம் புகுவ மாறாய்.

இ—ள்: காழ் தரு தட கை மொய்ம்பன் கடுமை சால் செலவின் ஓதை சூழ் தருகின்ற காலை—வைரித்த விசாலமான கைகளையுடைய வீரவாகுதேவரது வேகமிகுந்தநடையாலுண்டாகியகாற்றுப் பரவியபொழுது, விண்மீன் துளங்கி தண் என வேலை தன்னில் வீழ்தர—ஆகாயத்திலுள்ளநட்சத்திரங்கள் அதிர்ந்து விரைவாகக்கடலில்விழ, வேலையும் மறிந்து செல்ல—சமுத்திரமும் திசைமாறிப்பாய்தலால், ஆழ் திரை எறி மீன் முற்றும்—ஆழமானதிரைகளால்வீசப்பட்டமீன்களெல்லாம், மாறு ஆய் அந்தரம் புகுவ—எதிராக ஆகாயத்திற்போவன எ—று.

வில் வாள் முதலியவற்றைப்பிடித்தலாற் கன்றியகையென்பார் 'காழ்தருகை' எனவும், ஆழத்திலுள்ளநீரையும் மேலேகொண்டுசெல்லும்பெருந்திரையாதலின் 'ஆழ்திரை' எனவும், விண்மீன்கள்கடலில்வீழக் கடல்மீன்கள்விண்ணிற்புகுதலால் 'மாறாய்' எனவும் கூறினார். சூழ்தருகின்றகாலை- விண்மீன்வீழ்தா-திரையெறிமீன்புகுவ எனஇயையும். (௧௫)

காமரு நயக்குங் காளை கதுமெனச் செல்லப் பாங்கிற்
றூமலர்க் கரத்தி லிட்ட சுடர்மணிக் கடக வாள்போய்
நேமியங் குவடு சூழ்ந்து நிமிர்தரு திமிர மோட்டி
யேமநல் லண்ட வில்லோ டெதிர்ந்துபோ யிகல்செய் கின்ற.

இ—ள்: காமரும் நயக்கும் காளை கதுமென செல்ல—மன்மதனும் விரும்பத்தக்க (பேரழகையுடைய) வீரவாகுதேவர்விரைவாகநடக்க, பாங்கில் தூ மலர் கரத்தில் இட்ட சுடர் மணி கடக வாள் போய்—பக்கத்தில் தூய்மையானதாமரைமலர்போலுங் கைகளிலணியப்பெற்ற ஒளிபொருந்தியஇரத்தினமழுத்தப்பெற்ற கங்கணத்தினொளி பரம்பி, நேமியம் குவடு சூழ்ந்து நிமிர்தரு திமிரம் ஓட்டி— சக்கரவாளமலையைச்சுற்றிப்பரவியிருந்தஇருட்படலத்தையகற்றி, ஏம நல் அண்ட வில்லோடு எதிர்ந்து போய் இகல்செய்கின்ற—பொன்மயமானநல்ல அண்டச்சுவரினொளியோடு மாறுபட்டுப்போய்மூரணியது எ—று.

உம்மை-சிறப்பு. நேமியங்குவடு-வட்டவடிவானமலை. இகல்செய்கின்ற-ஈறுகெட்டவினைமுற்று. இச்செய்யுளால் அவரணிந்தகங்கணத்தின் ஒளிமிகுதி வருணிக்கப்பட்டது. பாங்கில் போய் என இயையும். (௧௬)

விண்ணவர் யாருந் தேரும் படையுமாய் விரவ மேலோ
னண்ணலர் புரமே லோச்சு நகையழல் போத லொத்தான்
கண்ணழற் செலவும் போன்றான் கார்முகம் பூட்டி யுய்த்த
மண்ணுல கிடந்த கூர்வாய் வாளியு மென்னச் சென்றான்.

இ—ள்: விண்ணவர் யாரும் தேரும் படையும் ஆய் விரவ—தேவர்களெல்லோரும் தேரும் படைக்கலங்களுமாக அமைந்திருக்க, மேலோன்—சிவபிரான், நண்ணலர் புர மேல் ஓச்சும்—பகைவரது முப்புரங்களின்மேற்செலுத்திய, நகை அழல் போதல் ஒத்தான்—புன்சிரிப்பிற்றோன்றிய அக்கினிசெல்லுதலையொத்தார், கண் அழல் செலவும் போன்றான்—அவரது நெற்றிக்கண்ணினின்றுதோற்றிய அக்கினிசெல்லுதலையும்போன்றார், கார்முகம் பூட்டி உய்த்த மண் உலகு இடந்த கூர் வாய் வாளி என்னவும் சென்றான்—அச்சிவபிரான்தமதுவில்லிற்றொடுத்தேவியதிருமாலாகியகூரியமுனையினையுடைய பாணம் செல்லுதல்போலவும்சென்றார் எ—று.

வீரவாகுதேவர்மகேந்திரநோக்கிச்செல்லுதல் முப்புரங்களின்மேற் சிவபிரானது நகையழலுங்கண்ணழலும்படையும் சென்றதுபோன்றதென்பதுகருத்து. இவ்வுவமைகளால் இவர்சென்றவேகமும் உக்கிரமும் குறிக்கப்பட்டன. சிலதேவர்தேராகவும் சிலதேவர்படையாகவும் ஏற்றவாறமையவென்பார் 'விண்ணவர்யாருந்தேரும்படையுமாய்விரவ' என்றார். மண்ணுலகிடந்தவாளி-பூவுலகத்தை முன்னொருகாலத்திற்கிழித்த (திருமாலாகிய) பாணம். (௧௫)

தரைதனை யலைத்து நோற்குந் தாபதர்க் கலக்கண் செய்து
சுரர்திருக் கவர்ந்து வாட்டுஞ் சூரனைக் கிளையி னோடும்
விரைவுடன் முடிப்பான் முன்னி வெகுண்டுசெவ் வேளங் குய்த்த
வொருதனிச் சுடர்வேல் போன்றும் போயின னுயர்திண் டோளான்.

இ—ள்: தரை தனை அலைத்து—பூவுலகத்தாரையலைவுசெய்து, நோற்கும் தாபதர்க்கு அலக்கண் செய்து—தவஞ்செய்கின்ற முனிவர்களுக்குத் துன்பத்தையுண்டாக்கி, சுரர் திரு கவர்ந்து—தேவர்களது செல்வத்தையபகரித்து, வாட்டும் சூரனை—வருத்தியசூரபன்மனை, கிளையினோடும் விரைவுடன் முடிப்பான் முன்னி—சுற்றத்தவர்களோடும் விரைவிலழிக்கும்படி நினைந்து, வெகுண்டு—கோபித்து, செவ்வேள் அங்கு உய்த்த—முருகக்கடவுள் அந்தமகேந்திரபுரியின்மேற்செலுத்திய, ஒரு தனி சுடர் வேல் போன்றும்—ஒப்பற்ற ஒளிபொருந்திய வேற்படையைப்போலவும், உயர் திண் தோளான்—உயர்ந்தவலியபுயங்களையுடைய அந்தவீரர், போயினன்—போனார் எ—று.

தரை-ஆகுபெயர். வீரவாகுதேவர்செல்வது முருகவேள் திருச்செந்திப்பதியிலிருந்துகொண்டே அசுரரையழிக்குமாறு வேற்படையையேவச்சென்றாற்போலவுமமைந்ததென்க. (௧௬)

இமிழ்தரு தரங்கப் பாலி னெறிகடன் மதித்து வானோர்க்
கமிர்தினை யளிப்பான் வேண்டி யகிலமு முண்டு தொன்னா
ளுமிழ்தரு திருமா லுன்ன வுணர்ந்துமந் தரமா மோங்க
னிமிர்தரு புணரி செல்லு நிலைமைபோல் வீரன் போந்தான்.

இ—ள்: இமிழ்தரு தரங்கம் எறி பாலின் கடல் மதித்து—ஒலிக்கின்றதிரைவீசுகின்றபாற்கடலைக்கடைந்து, வானோர்க்கு அமிர்தினை அளிப்பான் வேண்டி—தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுக்கவிரும்பி, தொல் நாள் அகிலமும் உண்டு உமிழ்தரு திருமால் உன்ன—முற்காலத்தில்உலகமுழுவதையும் விழுங்கியுமிழ்ந்த விட்டுணுமூர்த்திவரும்படிநினைக்க, மந்தரம் ஆம் ஓங்கல் உணர்ந்து—மந்தரமென்னும்பெயரையுடையமலை அதனையறிந்து, நிமிர்தரு புணரி செல்லும் நிலைமை போல்—கிளர்ந்தெழுகின்ற அந்தப்பாற்சமுத்திரத்தில் வருந்தன்மைபோல, வீரன் போந்தான்—வீரவாகுதேவர்போனார் எ-று.

வேண்டி உன்ன என இயைக்க. வீரவாகுதேவர்செல்வது மந்தரமலைசென்றதுபோலுமென்பதுகருத்து. உரத்தபருத்தவடிவமுடைமையாலும் சமுத்திரத்தின்மேற்செல்லுதலாலும் தடைப்படுத்தஇயலாதவேகமுடைமையாலும் இங்ஙனமுவமித்தார். (௧௭)

சேண்டொட ருலகும் பாருந் தெருமர வனலம் வீசிக்
காண்டகு விடத்தை யீசன் களத்திடை யடக்கி வைப்ப
வீண்டெமை விடுத்தி யென்று வேந்தனு மவனங் குய்ப்ப
மீண்டது கடல்போந் தென்ன வீரருள் வீரன் சென்றான்.

இ—ள்: சேண் தொடர் உலகும் பாரும் தெருமா அனலம் வீசி--ஆகாயவுலகமும்பூவுலகமும்வருந்தும்படி அக்கினியையுமிழ்ந்துகொண்டு, காண் தகு விடத்தை—எவருங்காணத்தக்கதாய்வந்தநஞ்சை, ஈசன் களத்திடை அடக்கிவைப்ப—சிவபிரான்தமதுதிருமிடற்றிலடக்கிவைத்தபோது, ஈண்டு எமை விடுத்தி என்று ஏத்தலும்—(அந்தநஞ்சு) இங்கேஎன்னைவிட்டருளவேண்டுமென்றுதுதிக்க, அவன் அங்கு உய்ப்ப—அந்தச்சிவபிரான் அந்தத்திருக்கைலாசமலையில் விட, அது மீண்டு கடல் போந்து என்ன—அந்தநஞ்சு பின்னுஞ்சமுத்திரத்தைநோக்கிச் சென்றாற்போல, வீரருள் வீரன் சென்றான்—சிறந்தவீரராகிய வீரவாகுதேவர்போனார் எ—று.

சேண்டொடருலகு-ஆகாயத்துடன்சம்பந்தப்பட்டிருக்குமுலகம். வீரருள்வீரன்-வீரர்கூட்டத்தின்முதலாகமதிக்கப்படும்வீரன். பெரியதோற்றத்துடன்வந்தநஞ்சென்பார் 'காண்டகுவிடம்' எனவும், அதனைமிகச்சிறியதோற்றத்தினதாக்கியென்பார் 'அடக்கி' எனவும், யான் உலகத்தார்க்கு முன்போற்றீங்குசெய்யாது தோன்றியவிடத்திற்றானேபோய்மறைவேன் செய்தகுறையைப்பொறுத்து அடக்கியதிருமிடற்றினின்றும் வெளியேவிடல்வேண்டும் என்றுதுதிக்கவென்பார் 'ஈண்டெமைவிடுத்தியென்றுவேத்தலும்' எனவும் கூறினார். நஞ்சு நெருப்பையும்புகையையும்வீசிக்கொண்டு வேகமாய்ச்செல்லுமாதலின் உயிர்ப்புமுதலியவற்றிற்றோன்றிய அழலும்புகையுஞ்சூழச்செல்லும் வீரவாகுதேவருக்கு உவமித்தார். இதுகாறும் வீரவாகுதேவர் கடலின்மேல்விரைந்துசென்றமை வருணிக்கப்பட்டது. (௧௮)

பொலங்கழல் வீர வாகு புணரிமே லிவ்வா றேகி
யலங்கலந் திண்டோள் வெஞ்சூ ரணிநகர் வடாது பாலின்
விலங்கலில் வீரன் யாளி வியன்முகத் தவுணன் போற்று
மிலங்கையந் தொல்லை மூதூ ரணித்தெனு மெல்லை சென்றான்.

இ—ள்: பொலம் கழல் வீரவாகு—பொன்னாலாகிய வீரக்கழலையணிந்த வீரவாகுதேவர், புணரி மேல் இவ்வாறு ஏகி—சமுத்திரத்தின்மேல் இப்படியாகநடந்து, அலங்கலம் திண் தோள் வெம் சூர் அணி நகர் வடாது பாலின்—மாலையையணிந்த வலியபுயங்களையுடைய கொடியசூரபன்மனது அழகிய மகேந்திரபுரியின் வடக்குப்பக்கத்திலுள்ள, விலங்கல் இல் வீரன் யாளி வியன் முகத்து அவுணன் போற்றும்—இடைதலில்லாத வீரத்தையுடைய பெரிய யாளிமுகாசுரன்காவல்செய்கின்ற, இலங்கையம் தொல்லை மூது ஊர்—பழைய இலங்காபுரி, அணித்து எனும் எல்லை—அணித்தாயிற்றென்று சொல்லத்தக்கஇடத்தில், சென்றான்—போனார் எ—று.

வடாதுபாலின் ஊர் என இயையும். தொல்லை மூது ஒருபொருட்பன்மொழிகள். வடதிசையிலிருந்து மகேந்திரநோக்கிச்செல்வார் எத்தகைப்பெருவீரராயினும் செல்லவிடாது தடுக்கவல்லானென்பதுதோன்ற 'விலங்கலில்வீரன்' என்றார். (௧௯)

கடல்பாய்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௭௨.

வீரசிங்கன்வதைப்படலம்.

வீரவாகுதேவர் வீரசிங்கனென்பானைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் இலங்கையைச்சமீபித்தவுடன் அந்நகரின்வடபாகத்தைக்காவல்செய்கின்ற வீரசிங்கனென்னுமசுரன் சேனைகளோடும்வந்தெதிர்த்தான். வீரவாகுதேவர் பொருது அவனைக்கொன்று அப்பாற்சென்றார் என்பதாம்.

அன்னதோர் வேலை முன்ன மகன்றலை யாளிப் பேரோன்
றன்னுபல் லனிகத் தோடுஞ் சூரனைக் காண்பா னேக
மன்னதி வீர னென்னு மதலையா யிரமாம் வெள்ளந்
தன்னொடு மிலங்கை வைகித் தணப்பறப் போற்றி யுற்றான்.

இ--ள்: அன்னது ஓர் வேலை முன்னம்—அவ்வாறு வீரவாகுதேவர் இலங்கையின்சமீபத்திற்போதற்குமுன், அகன் தலை யாளிப்பேரோன்—அகன்றதலைகளையுடைய யாளிமுகனென்பவன், துன்னு பல் அனிகத்தோடும் சூரனை காண்பான் ஏக—நெருங்கிய பலசேனைகளுடன் சூரபன்மனைக்காணும்படிபோக, மன் அதிவீரன் என்னும் மதலை—நிலைபெற்ற அதிவீரனென்னுங்குமாரன், ஆயிரம் ஆம் வெள்ளம் தன்னொடும்— ஆயிரவெள்ளஞ்சேனைகளுடன், இலங்கை வைகி—இலங்காபுரியிலிருந்து, தணப்பு அற போற்றி உற்றான்—ஒழிவின்றிக் காவல்செய்திருந்தான் எ—று.

முன்னம் என்பதில் அம் சாரியை. தான்செய்யுங்காவலைப்புதல்வனிடத்துச்சமத்தி அரசனைக்காணும்படிசென்றானென்பதாம். ஊண் உறக்கம்முதலியவற்றிற்குச்செல்லும்போதும் காவலிற்றானே சிந்தைசெலுத்தியவனென்பார் 'தணப்பற' என்றார். (க)

ஆனதோர் மிக்க வீரத் தாண்டகை யவுணர் போற்ற
மாநகர்க் கோயி னண்ண வடதிசை வாயி றன்னின்
மேனிமி ரவுணர் தானை வெள்ளமைஞ் ஞூறொ டன்னான்
சேனையந் தலைவன் வீர சிங்கனுந் திறலோ னுற்றான்.

இ—ள்: ஆனது ஓர் மிக்க வீரத்து ஆண்டகை—அந்த அதிவீரனென்பான், அவுணர் போற்ற—அசுரர்கள்துதிக்க, மா நகர் கோயில் நண்ண—பெரிய அவ்விலங்கைநகரிலுள்ளகோயிலிலிருக்க, வடதிசை வாயில் தன்னில்—அந்நகரின் வடக்குத்திசையிலுள்ளவாயிலில், மேல் நிமிர் அவுணர் தானை வெள்ளம் ஐஞ்ஞூறொடு—மேலாகிச்சிறந்த ஐஞ்ஞூறுவெள்ளம் அசுரசேனைகளுடன், அன்னான் சேனையம் தலைவன்—அவனது சேனைத்தலைவனாகிய, வீரசிங்கன் ஆம் திறலோன்—வீரசிங்கனென்னும் வலிய அசுரன், உற்றான்—காவல்செய்திருந்தான் எ—று.

மிக்கவீரத்தாண்டகை-மிகுந்தவீரத்தையுடையஆண்மகன். மேல்நிமிர்-பெருந்தொகைப்பட்டஎனினுமாம். அவுணர்போற்றஎன்றதனால் மிகுந்ததலைமையுடனிருந்தானென்பதுகுறிக்கப்பட்டது. பிதாவினிடத்தைப்பெற்ற அதிவீரனென்பார் 'ஆனதோர்மிக்கவீரத்தாண்டகை' என்றார். (உ)

உற்றதோர் வீர சிங்க னெண்சிறைச் சிம்பு ளேபோல் [ச்
வெற்றியந் திண்டோ ளேந்தல் விரைந்துசென் றிடலுங் காணாஉ

சற்றுநங் காவ லெண்ணான் றமியன்வந் திடுவான் போலு
மற்றிவன் யாரை யென்னாச் சீறினன் வடவை யேபோல்.

இ—ள்: உற்றது ஓர் வீரசிங்கன்—அவ்வாறுகாத்திருந்த வீரசிங்கனென்பான், ஒண் சிறை சிம்புளே போல்—ஒளிபொருந்திய சிறகினையுடைய சரபப்பறவையையேபோல, வெற்றியம் திண் தோள் எந்தல் விரைந்து சென்றிடலும்—வீரவாகுதேவர் விரைவாகவருதலும், காணூஉ—கண்டு, சற்றும் நம் காவல் எண்ணான் தமியன் வந்திடுவான்—சிறிதாயினும் எங்கள்காவலைமதியாதவனாய்த்தனியே வருகின்றான், இவன் யார் என்னா—இவன் ஆரென்றுகூறி, வடவையே போல் சீறினன்—வடவாமுகாக்கினியையேபோலக் கோபித்தான் எ—று.

வெற்றியந்திண்டோளெந்தல்-வெற்றிபொருந்திய வலியபுயங்களையுடையதலைவன். வீரசிங்கன்காணூஉச்சீறினன் என இயையும். வேகமாகப்பறந்துசெல்வதாதலின் 'ஒண்சிறைச்சிம்புள்' என்றார். எண்ணான்-முற்றெச்சம். யாரையென்பதில் ஐகாரம் சாரியை. சிறந்தவீரர்பலர்கூடிப்படையெடுத்துவந்தபோதும் எமது காவலைக்கண்ணுற்றமாத்திரத்தே மிகவுமஞ்சுவர், அங்ஙனமாகவும் தனித்துவருகின்றஇவன் சிறிதுமஞ்சாது விரைந்துவருகின்றானென்பான் 'சற்றுநங்காவலெண்ணான்றமியன்வந்திடுவான்' எனவும், நம்மால்முன்னொருகாலத்துங்கண்டறியப்படாதவனாயிருக்கின்றானென்பான் 'இவன்யாரை' எனவும் கூறினான். யாராயினுமாகுக இந்நகர்க்குள்வாராவண்ணந்தடுப்போமெனத்துணிந்தானென்பார் 'சீறினன்வடவையேபோல்' என்றார். (௩)

உண்குவ னிவன்ற னாவி யொல்லையென் றுன்னிக் காலு
மெண்கிளர் மனமும் பின்ன ரெய்துமா றெழுந்து நேர்போய்
விண்கிளர் செலவிற் றானை வெள்ளமைஞ் ஞூறுஞ் சுற்ற
மண்கிளர் கடல்போல் வீர வாகுவின் முன்னஞ் சென்றான்.

இ—ள்: இவன் தன் ஆவி ஒல்லை உண்குவன் என்று உன்னி—இங்கேவருபவனுடையஉயிரை விரைவிற்கவர்வேனென்றுநினைத்து, காலும் எண் கிளர் மனமும் பின்னர் எய்துமாறு—வாயுவேகமும் நினைத்தற்றொழிலிற்சிறந்தமனோவேகமும்பிற்படும்படி, எழுந்து நேர் போய்—எழும்பி எதிரேசென்று, விண் கிளர் செலவில்—ஆகாயமார்க்கமான செல்லுகையுடன், தானை வெள்ளம் ஐஞ்ஞூறும் சுற்ற—ஐஞ்ஞூறுவெள்ளஞ்சேனைகளுந் தன்னைச்சூழ்ந்துவர, மண் கிளர் கடல் போல்—பூமியின்மேற்கிளர்ந்துவருகின்ற சமுத்திரத்தைப்போல, வீரவாகுவின் முன்னம் சென்றான்—வீரவாகுதேவருக்குமுன்னேபோனான் எ—று.

ஆவியுண்குவன் என்றது இலக்கணை. கால் மனம் ஆகுபெயர்கள். எண்-முதனிலைத்தொழிற்பெயர். அர் அம் சாரியைகள். எய்துமாறுபோய் எனவும் செலவிற்சென்றான் எனவும் இயையும். உம்மை, காலும் மனமும் என்பவற்றில் எண்ணோடுயர்வுசிறப்பு; ஐஞ்ஞூறும் என்பதில் முற்று. கடல் கரையைமீறத்தொடங்கியவுடன் பூமியைவிரைவிலழித்துவிடுமென்று எண்ணக்கிடத்தல்போல வீரசிங்கன் சேனைகளுடனெதிர்செல்லத்தொடங்கியமாத்திரத்தில் எதிர்ந்தாரைத்தவறாதழிப்பனென்றெண்ணக்கிடத்தலின் 'மண்கிளர்கடல்போல்-சென்றான்' என்றார். வீரவாகுதேவர் ஆகாயமார்க்கமாய்வருதலால் வீரசிங்கனும் அம்மார்க்கமாய்ச்சென்றானென்க. (௪)

சென்றிடு வீர சிங்கன் றிறல்கெழு புயனைப் பாரா
வின்றள வெமது காப்பு ளேகின ரில்லை யார்நீ

யொன்றொரு தமியன் போந்தா யுயிர்க்குநண் பில்லாய் நின்னைக்
கொன்றிடு முன்னீ வந்த செயன்முறை கூறு கென்றான்.

இ—ள்: சென்றிடு வீரசிங்கன்—அவ்வாறுபோனவீரசிங்கனென்பான், திறல் கெழு புயனை பாரா—வீரவாகுதேவரைப்பார்த்து, இன்றளவு எமது காப்புள் எகினர் இல்லை—இன்றுவரையும் எங்கள்காவலானஇவ்வெல்லைக்குள் வந்தவர் ஒருவருமில்லை, (அங்ஙனமாகவும்), ஒன்று ஒரு தமியன் போந்தாய்—தன்னந்தனியனாக நீவந்தாய்(ஆதலின்), உயிர்க்கு நண்பு இல்லாய்—உன்னுயிரில் நேசமில்லாதவனாகின்றாய், நீ யார்—நீ ஆர்?, நின்னை கொன்றிடும் முன்—உன்னைக்கொல்லுதற்குமுன்னே, நீ வந்த செயல்முறை கூறுக—நீ வந்ததொழின்முறையைச்சொல்வாய், என்றான்—என்றுவினவினான் எ—று.

காப்பு-ஆகுபெயர். இறக்கவருமென்பதைச்சிந்தித்திலாயென்பான் 'உயிர்க்குநண்பில்லாய்' என்றான். நின்னைக்கொல்லுமுன்கூறுக என்றதனால் காலதாமதஞ்செய்யாதுசொல்லென்பதுகுறிக்கப்பட்டது. வந்தசெயன்முறையென்றது யாதுகாரணம்பற்றிவந்ததென்பதைச்சுட்டிநின்றது. கூறுக என்பதில் அகரம்தொக்கது. (௫)

பொன்னிய றிண்டோள் வீரன் புகலுவா னிலங்கை வாவி
மன்னியல் சூரன் வைகு மகேந்திரஞ் சென்று மீள்வா
னுன்னினன் போந்தே னீதென் னுறுசெயல் வலியை யென்னி
னின்னினி வேண்டிற் றொன்றை யியற்றுதி காண்ப னென்றான்.

இ—ள்: பொன் இயல் திண் தோள் வீரன் புகலுவான்—பொன்னிறமான வலியபுயங்களையுடையவீரவாகுதேவர் அதற்கு எதிர்கூறுவார், இலங்கை வாவி—இந்தஇலங்காபுரியைக்கடந்து, மன் இயல் சூரன் வைகும் மகேந்திரம் சென்று—தலைமைபொருந்திய சூரபன்மனிருக்கின்றமகேந்திரநகரிற்போய், மீள்வான் உன்னினன்—திரும்பிவரநினைத்து, போந்தேன்—வந்தேன், ஈது என் உறு செயல்—இது யான்வந்தகாரியமாம், வலியை என்னின்—வல்லமையுடையாயானால், இன்னினி வேண்டிற்று ஒன்றை இயற்றுதி—இனி நீசெய்யவிரும்பியவற்றுள் யாதேனுமொருகாரியத்தைச்செய்வாய், காண்பன் என்றான்—அதனைப்பார்ப்பேமென்று கூறினார் எ—று.

பொன் ஆகுபெயர். பொன்னாபரணமெனினும் அழகெனினுமாம். மீள்வான்-வானீற்றுவினையெச்சம். உன்னினன்-முற்றெச்சம். இதுஎன்னுஞ்சுட்டு முதனீண்டது. இனிஇனி இன்னினியெனத்தொக்குநின்றது. என்னைத்தடுத்தல் பொருதல் கொல்லல் முதலியவற்றுள் ஒன்றையேனுஞ்செய்துமுடிக்கவலியில்லாயென்பார் 'வலியையென்னின்-வேண்டிற்றொன்றையியற்றுதி'என்றார். (௬)

திறன்மிகு சிங்க னன்னோன் செப்பிய மொழியைக் கேளா
விறையுநம் மவுண ராணை யெண்ணலன் வலியன் போலு
மறிகுது மீண்டு சேற லழகிதன் றென்னா வுன்னிக்
குறுகிய படைஞர் தம்மை யிவனுயிர் கோடி ரென்றான்.

இ—ள்: திறல் மிகு சிங்கன்— வீரசிங்கனானவன், அன்னோன் செப்பிய மொழியை கேளா—அந்தவீரவாகுதேவர்சொல்லியவார்த்தையைக்கேட்டு, நம் அவுணர் ஆணை இறையும் எண்ணலன்—அவுணராகியஎங்களது ஆஞ்ஞையைச்சற்றேனும் மதிக்கின்றிலான், வலியன் போலும்-வலியவன்போலிருக்கின்றான், அறிகுதும்- இதனைச்சோதித்தறிவோம், ஈண்டு சேறல் அழகிது அன்று—இப்பொழுது யானெதிர்த்துச்செல்லுதல் சிறப்பன்று, என்னா உன்னி—என்றுநினைத்து,

குறுகிய படைஞர் தம்மை—தன்னுடன்வந்தசேனைவீரரைப்பார்த்து, இவன் உயிர் கோடிர் என்றான்— இவனது உயிரைக்கவர்வீர்களாகவென்று கட்டளைசெய்தான் எ—று.

உம்மை இழிவுசிறப்பு. தான்கூறியவீரமொழிகட்கஞ்சாது எதிர்கூறினிற்றலால் வலியன்போலுமென்றுமதித்தான். கோள உன்னி எனஇயையும். பகைவனுடையவலியையும்வீரத்தையுமறியுமுன் எதிர்த்தல்தக்கதன்றாதலின் சேனைவீரரையேவினன். (எ)

என்றலு மரிய தொன்றை யெயினர்கள் வேட்டைக் கானிற்
சென்றனர் திரண்டு சுற்றிச் செருவினை யிழைப்ப தேபோற்
பொன்றிகழ் விசய வாகுப் புங்கவன் றன்னைச் சீற்ற
வன்றிற லவுணர் யாரும் வளைந்தமர் புரிய லுற்றார்.

இ—ள்: என்றலும்-என்றுவீரசிங்கன்சொன்னவுடன், எயினர்கள்-வேட்டுவர்பலர், வேட்டைக்கானில் சென்றனர் திரண்டு—வேட்டையாடுதற்குரியகாட்டிற்போய்க்கூடி, அரியது ஒன்றை சுற்றி—ஒருசிங்கத்தைவளைந்து, செருவினை இழைப்பதே போல்—போரைச்செய்வதையேபோல, சீற்ற வன் திறல் அவுணர் யாரும்— கோபத்தையும் மிக்கவலியையுமுடைய அசுரர்களெல்லோரும், பொன் திகழ் விசய வாகு புங்கவன் தன்னை வளைந்து—வீரவாகுதேவரைச் சூழ்ந்துநின்று, அமர் புரியலுற்றார்—போர்செய்யத்தொடங்கினார்கள் எ—று.

அது பகுதிப்பொருள்விகுதி. ஏ-பிரிநிலை. பொன்றிகழ்விசயவாகுப்புங்கவன்-பொன்னிறம்விளங்குகின்றவெற்றிமிகுந்தபுயங்களையுடையதேவன். பொன்றிகழ் என்பதற்கு ஆறுஞ்செய்யுளிற்போலப்பிறபொருள்களுங்கூறற்பாலன. வேடர் சிங்கத்தைவளைந்துழி அது தம்மேற்பாயுமோஎன்று அகத்திலச்சமுடையராய்நிற்பர், சிங்கமோ அவர்க்குச் சிறிதுமஞ்சாது அவர்மேற்பாய்ந்துசெல்லும், அதுபோல, சேனைவீரர் வீரவாகுதேவரதுஉக்கிரமானதோற்றத்திற்கு அஞ்சியவராய் அவ்வச்சத்தைப்புறத்தேகாட்டாதுநின்றுபொருதனர், வீரவாகுதேவர் சிறிதுமஞ்சாதுஅவர்மேற்பாய்ந்துசென்றார் என்பது உவமானத்தாற்குறிக்கப்பட்டது. (அ)

வேலினை விடுப்பர் தண்டம் வீசுவர் முசலந் தூர்ப்பர்
சாலம தெறிவ ராலந் தன்னையோச் சிடுவர் வார்விற்
கோல்வகை தொடுப்பர் நாஞ்சிற் கொடும்படை தூரப்பர் வெய்ய
சூலம துய்ப்பர் கொண்ட தோமரஞ் சொரிவ ரம்மா.

இ—ள்: வேலினை விடுப்பர்—அவ்வசுரர்கள் வேற்படையைச்செலுத்துவார்கள், தண்டம் வீசுவர்—தண்டாயுதத்தைவீசுவார்கள், முசலம் தூர்ப்பர்— உலக்கைகளை அதிகமாகச்செலுத்துவார்கள், சாலமது எறிவர்— பெருமரங்களைவீசுவார்கள், ஆலம் தன்னை ஓச்சிடுவர்—மழுப்படையைச்செலுத்துவார்கள், வார் வில் கோல்வகை தொடுப்பர்—நீண்டவில்லிற்பூட்டிப் பாணவகைகளைப்பிரயோகிப்பார்கள், நாஞ்சில் கொடும் படை தூரப்பர்—கொடிய கலப்பைப்படையைச்செலுத்துவார்கள், வெய்ய சூலமது உய்ப்பர்—கொடிய சூலாயுதத்தையேவுவார்கள், கொண்ட தோமரம் சொரிவர்—கையிலெடுத்த இருப்புலக்கைகளை வீசுவார்கள் எ—று.

அது பகுதிப்பொருள்விகுதிகள். துளைத்தல் வெட்டுதல்முதலியதொழில்வகைக்கேற்பப் பாணங்கள் பலவகைப்பட்டவடிவுடையனவாதலின் 'கோல்வகை' என்றார். (௯)

கிளர்ந்தெழு பரிதி தன்னைக் கேழ்கிள ருருமுக் கொண்மூ
வளைந்தென வவுணர் வீரன் மருங்குசூழ்ந் தாடல் செய்யத்
தளர்ந்தில னெதிர்ந்து தன்கைத் தாரைவா ளுறையி னீக்கி
யுளந்தனின் முனிந்தன் னோரை யொல்லைசூழ்ந் தடுத லுற்றான்.

இ—ள்: கிளர்ந்து எழு பரிதி தன்னை கேழ் கிளர் உருமு கொண்மூ வளைந்து என - உதயகிரியினின்றுமேலெழுகின்றசூரியனைக் கருநிறம்விளங்குகின்ற இடியையுமிழ்கின்றமேகங்கள்சூழ்ந்தாற்போல, அவுணர்—அசுரர்கள், வீரன் மருங்கு சூழ்ந்து ஆடல் செய்ய—வீரவாகுதேவரதுபக்கத்தில்வளைந்து போரைச் செய்ய, தளர்ந்திலன் எதிர்ந்து—அவர் மனச்சோர்வுகொள்ளாது எதிர்நின்று, தன் கை தாரை வாள் உறையில் நீக்கி—தம்மிடத்துள்ள கூரியவாளைஉறையினின் றும்உருவி, உளம் தனில் முனிந்து—மனத்திற்கோபங்கொண்டு, அன்னோரை ஒல்லை சூழ்ந்து—அவர்களை விரைவில்வளைந்து, அடுதல் உற்றான்—அழிக்கத் தொடங்கினார் எ—று.

கேழ்-நிறம். மேகங்கள் கருநிறமுடைமையாலும் பலதொகைப்பட்டனவாய் ஒன்றுகூடிமறைத்தலாலும் சிறிதுபோழ்துவளைந்துநின்று பின்சிதையுந்தன்மையினாலும் அசுரர்க்குவமை. சூரியன் சிவந்தநிறமுடைமையினாலும் சிறிது போழ்துமறைக்கப்படினும் பின் தனதுமிகுந்தசோதியுடன்பிரகாசித்தலாலும் தனித்துநிற்றலாலும் வீரவாகுதேவர்க்குவமை. கேழ்கிளர் கொண்மூ எனவும் ஆடல்செய்ய அடுதலுற்றான் எனவும்இயையும். கை-இடம். (௧௦)

அரக்குருக் கொண்ட வெற்பி னடுகனற் கடவு ளெய்தி
யுருக்கியே யதனை யெல்லா மொல்லையி னுடைக்கு மாபோ
னெருக்கிய வவுணர் தானை நீத்தம துடைய வீரன்
றிருக்கிளர் வாளொான் றேந்திச் சென்றுசென் றடுதல் செய்தான்.

இ—ள்: அரக்கு உரு கொண்ட வெற்பின்-மெழுகினல்ரூபீகரித்தமலையில், அடு கனற் கடவுள் எய்தி—அழிக்கின்றஅக்கினிதேவன்புகுந்து, உருக்கி—உருகச்செய்து, அதனை எல்லாம் ஒல்லையில் உடைக்குமா போல்— அவ்வடிவமுழுதையும் விரைவில் நிலைகுலைக்குந்தன்மைபோல, நெருக்கிய அவுணர் தானை நீத்தமது உடைய—தம்மைநெருக்கியஅசுரசேனையாகியவெள்ளம் நிலைகெடும்படி, வீரன்—வீரவாகுதேவர், திரு கிளர் வாள் ஒன்று ஏந்தி—அழகுவிளங்குகின்ற ஒருவாட்படையைக்கையிற்றாங்கி, சென்று சென்று அடுதல் செய்தான்—போய்ப்போயழித்தார் எ—று.

அது பகுதிப்பொருள்விகுதி. மலைபோலத்திரட்டப்பட்டமெழுகென்பார் 'அரக்குருக்கொண்டவெற்பு' எனவும், தன்மாட்டகப்பட்டபொருள்களையெல்லாந்தகிக்கவல்லபெருநெருப்பென்பார் 'அடுகனற்கடவுள்' எனவும், மிகுந்தகூர்மையும் விரிந்தசோதியும் கண்ணுக்கினியவடிவமுமுடைமையால் 'திருக்கிளர் வாள்' எனவும் கூறினார். மெழுகுமலையில் ஓரிடத்திற்பற்றியஅக்கினி அவ்விடம் உருகிவீழ்ந்தவுடன் உருகாதிருக்கும் ஏனையிடங்கடோறும் முறையேபற்றியழித்தல்போல வீரவாகுதேவர் ஓரிடத்திற்சென்று அங்குள்ளஅசுரசேனைகளையழித்தபின் அடுத்துள்ளஇடங்கடோறும் முறையேசென்று அழித்தனர்என்க. உடைக்குமாறென்பது ஈறுதொக்கது. (௧௧)

பனிபடர் குழும றன்னைப் பாயிருட் செறிவை யங்கிக்
கனிபடர் பொற்பிற் றோன்றுங் காய்கதிர் முடிக்கு மாபோ

னனிபட ரவுணர் தானை நைந்திடச் சுடர்வா ளொன்றாற்
றனிபடர் வீர வாகு தடிந்தனன் றிரித லுற்றான்.

இ—ள்: பனி படர் குழுமல் தன்னை—பனியினதுபரந்தகூட்டத்தையும், பாய் இருள் செறிவை—பரந்தஇருட்கூட்டத்தையும், அங்கி கனி படர் பொற்பில் தோன்றும் காய் கதிர் முடிக்குமா போல்—அக்கினித்திரள்உதித்தாற்போன்றபொலிவுடன்உதயஞ்செய்கின்றசூரியன் அழிக்குந்தன்மைபோல, தனி படர் அவுணர் தானை நைந்திட— மிகுதியாகவந்துசூழ்ந்த அசுரசேனைகள்வருந்தும்படி, சுடர் வாள் ஒன்றால்—ஒளிபொருந்தியஒருவாட்படையினால், தனி படர் வீரவாகு—தனித்துச்சென்றவீரவாகுதேவர், தடிந்தனன் திரிதல் உற்றான்—அழித்துத்திரிந்தார் எ—று.

கனி-ஆகுபெயர். காய் கதிர்-அன்மொழித்தொகை. சுடுகிரணங்களையுடையானென்பதுபொருள். முடிக்குமாறென்பதில் ஈறுதொக்கது. உதயகாலசூரியன் அக்கினிபிண்டம்போலத்தோற்றுதலின் 'அங்கிக்கனிபடர்பொற்பிற்றோன்றுங்காய்கதிர்' என்றார். பெருந்தொகையானசேனைகளையெல்லாம் கண்டோரதிசயிக்கத்தக்கவாறு மிகவிரைந்தழித்தலின் இவ்வாறுவமித்தார். (௧௨)

உறைந்தன குருதி வாரி யொல்லையி லுவரித் தெண்ணீர்
மறைந்தன வவுணர் தானை மால்கரி பரிதேர் முற்றுங்
குறைந்தன கரந்தாண் மொய்ம்பு கொடுமுடி துணிந்து வீழ்ந்த
நிறைந்தன வலகை யீட்ட நிரந்தன பரந்த பூதம்.

இ—ள்: குருதி வாரி உறைந்தன—இரத்தவெள்ளங்கள்பொருந்தின, ஒல்லையில் உவரி தெள் நீர் மறைந்தன—விரைவாகஉவர்க்கடலினுள்ளதெளிந்தநீர் (அவ்விரத்தவெள்ளத்தால்) மறைந்தன, அவுணர் தானை மால் கரி பரி தேர் முற்றும் குறைந்தன—அசுரசேனைகளும் பெரியயானைகளும் குதிரைகளும் தேர்களுமாகிய நால்வகைச்சேனைகளும் அழிந்தன, கரம் தாள் மொய்ம்பு கொடு முடி துணிந்து வீழ்ந்த—கைகளும் கால்களும் புயங்களும் கொடியதலைகளும் வெட்டுப்பட்டு விழுந்தன, அலகை ஈட்டம் நிறைந்தன—பேய்க்கூட்டங்கள்நிறைந்தன, பரந்த பூதம் நிரந்தன—பரவித்திரிகின்றபூதங்கள் நிரம்பின எ—று.

பேய்களும்பூதங்களும் தசைமுதலியவற்றையுட்கொள்ளும்விருப்பத்தால் வந்துநிறைந்தனவென்க. (௧௩)

வெள்ளநூ றவுணர் தானை விளிந்திட வினைய பாலால்
வள்ளல்சென் றடுதல் செய்ய மற்றுள வவுணர் யாரு
முள்ளநொந் திரங்கித் தத்த முயிரினை யோம்பல் செய்து
பொள்ளென நிலனும் வானும் புலந்தொறு மிரியல் போனார்.

இ—ள்: நூறு வெள்ளம் அவுணர் தானை விளிந்திட—நூறுவெள்ளமசுரசேனைகள் இறக்கும்படி, இனைய பாலால்—இவ்வாறே, வள்ளல் சென்று அடுதல்செய்ய—வீரவாகுதேவர் அங்கங்கேபோயழிக்க, மற்று உள அவுணர் யாரும்—எஞ்சிநின்றஅசுரர்களெல்லோரும், உள்ளம் நொந்து இரங்கி— மனம்வருந்தி இரக்கங்கொண்டு, தத்தம் உயிரினை ஓம்பல் செய்து— தங்கள்தங்களுயிரைப்பேணிக்கொண்டு, பொள் என—விரைவாக, நிலனும் வானும் புலம்தொறும் இரியல் போனார்—பூமியினும் ஆகாயத்தினும் திக்குகடோறும் அஞ்சியோடினார்கள் எ—று.

அடுதல்செய்ய இரியல்போனார் எனஇயையும். எதிர்நிற்பின் தவறாதிறக்க நேரிடுமென்றுதுணிந்தென்பார் 'தத்தமுயிரினையோம்பல்செய்து' என்றார். ()

போதலும் வீர சிங்கன் பொள்ளெனச் சினமேற் கொண்டு
மாதிரங் கடந்து மேல்போய் வளர்தரும் வாகை மொய்ம்பன்
மீதொரு சூலந் தன்னை விட்டனன் விட்ட காலை
யேதியங் கதனா லன்ன திருதுணி படுத்தி யார்த்தான்.

இ—ள்: போதலும்—அசுரசேனைகள் அஞ்சியோடியவுடன், வீரசிங்கன்—வீரசிங்கனென்பான், பொள் என—விரைவாக, சினம் மேல்கொண்டு—கோப மிகப்பெற்று, மாதிரம் கடந்து மேல் போய் வளர்தரும் வாகை மொய்ம்பன் மீது—திக்குகளைக்கடந்து அப்பாற்போய்வளர்ந்த வெற்றியார்ந்தபுயங்களையுடைய அவ்வீரர்மீது, ஒரு சூலம் தன்னை விட்டனன்— ஒருசூலப்படையைச்செலுத்தினான், விட்டகாலை—செலுத்தியபொழுது, ஏதி அதனால்—அந்தவாட்படையினால், அன்னது இரு துணி படுத்தி—அந்தச்சூலப்படையை (வீரவாகுதேவர்) இரண்டுதுண்டாக்கி, ஆர்த்தான்—ஆரவாரித்தார் எ—று.

முன் சேனைகளையழித்தற்குக்கருவியாயிருந்தவாட்படையாலென்பார் 'ஏதியங்கதனால்' என்றார். (௧௫)

ஆர்த்தலு மடங்கற் பேரோ னாண்டகை வீரன் மேன்மை
பார்த்தனன் றனது பாணி பற்றிய படைக டம்மிற்
கூர்த்ததோர் குலிசம் வீசக் குறுகிவா ளதனான் மாற்றிப் [ன்.
பேர்த்தொரு படையெ டாமுன் பெயர்ந்தவன் முன்னஞ் சென்றா

இ—ள்: ஆர்த்தலும்—வீரவாகுதேவர் ஆரவாரிக்க, மடங்கற்பேரோன்—வீரசிங்கனானவன், ஆண்டகை வீரன் மேன்மை பார்த்தனன்—ஆண்மையின்மிக்க வீரவாகுதேவரது சாமர்த்தியத்தைக்கண்டு, தனது பாணி பற்றிய படைகள் தம்மில்—தன்னுடையகையிலேந்தியிருந்த படைக்கலங்களுள், கூர்த்தது ஓர் குலிசம் வீச—கூர்மையான ஒருகுலிசாயுதத்தைச்செலுத்த, குறுகி வாள் அதனால் மாற்றி— வீரவாகுதேவர் அணுகிப்போய் அந்தவாட்படையினால் அப்படையைவெட்டி, பேர்த்து ஒரு படை எடாமுன்—வேறொருபடைக்கலத்தை அவன் ஏவும்படி கையிலெடுத்தற்குமுன், பெயர்ந்து அவன் முன்னம் சென்றான்—நடந்து அவ்வசுரனுக்கெதிரேபோனார் எ—று.

மடங்கற்பேரோன்-சிங்கத்தின்பெயரையுடையவன். தானேவியசூலப்படைக்குச்சிறிதுமஞ்சாதுநின்று இருதுணியாக்குதலாற் சிறந்தவீரரென்று அவரைமதித்தனனென்பார் 'ஆண்டகைவீரன்மேன்மைபார்த்தனன்' எனவும், அவனிடத்துள்ளபடைகளுட்சிறந்தபடையென்பார் 'தனதுபாணிபற்றியபடைகடம்மிற்கூர்த்ததோர்குலிசம்' எனவும், அப்படைஅணுகிவருமுன் அதற்கெதிரேபாய்ந்துசென்றுவெட்டினரென்பார் 'குறுகி-மாற்றி' எனவும், இனி எப்படையைச்செலுத்துவோமென்றுசிந்திக்குமுன் அணுகினரென்பார் 'பேர்த்தொருபடையெடாமுன்-சென்றான்' எனவும் கூறினார். (௧௬)

சென்றுதன் மணிவா ளோச்சிச் செங்கைக டுமித்துத் தீயோ
னென்றொரு முடியுங் கொய்தே யுவர்க்கட லிடையே வீட்டி
நன்றுதன் னுறையுட் செல்ல நாந்தகஞ் செறித்து முன்னோர்
வென்றிகொண் டகன்றா னென்ப வேலவன் விடுத்த தூதன்.

இ—ள்: வேலவன் விடுத்த தூதன்—முருகக்கடவுளனுப்பிய தூதராகிய வீரவாகுதேவர், சென்று—வீரசிங்கனுக்கெதிரேபோய், தன் மணி வாள் ஓச்சி—

தம்முடைய அழகிய வாட்படையைவீசி, செம் கைகள் துமித்து—சிவந்தகைகளை வெட்டி, தீயோன் ஒன்றொரு முடியும் கொய்து—கொடிய அவ்வசுரனது ஒற்றையாயிருந்ததலையையும்வெட்டி, உவர்க்கடல் இடை வீட்டி—உப்புச்சமுத்திரத்தில்விழச்செய்து, நன்று தன் உறையுள் செல்ல நாந்தகம் செறித்து—நன்றாகத்தன்னுடைய இருப்பிடமாகிய உறையினுட்புகும்படி வாளைச்செருகி, முன்னோர் வென்றி கொண்டு—முதலில் ஒருவெற்றியைப்பெற்று, அகன்றான்—அப்பாற்சென்றார் எ—று.

பலதலைகளையுடையவர்களும் அசுரருள் உளராதலின் 'ஒன்றொருமுடியுங்கொய்து' எனவும், மகேந்திரநகர்க்குச்செல்லும்போது முதலிலெதிர்த்தானிவனாதலின் இவனைக்கொன்றதை 'முன்னோர்வென்றி' எனவும் கூறினார். (கஎ)

வீரசிங்கன்வதைப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் அகூ.

இலங்கைவீழ்படலம்.

இலங்கைநகர் கடலுளாழ்ந்ததன்மையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் இலங்கையின்முடியிற்பாய்ந்தனர், பாய்ந்தவுடன் அதுகடலிலாழ்ந்தது என்பதாம்.

மலங்கொடு சுறவு தூங்கு மறிகடன் மீது மேரு
விலங்கல்சென் றிட்ட தென்ன விண்ணிடந் தன்னி னீங்கி
யலங்கலந் திண்டோள் வள்ள லவுணர்தம் மிருக்கை யாகு
மிலங்கையங் குவடு மூன்றி னிடைப்படு சிகரம் பாய்ந்தான்.

இ—ள்: அலங்கலம் திண் தோள் வள்ளல்—மாலையைத்தரித்த வலியபுயங்களையுடைய வீரவாகுதேவர், மலங்கொடு சுறவு தூங்கும் மறி கடல் மீது—மலங்குமீனும் மகரமீனும்வாழ்கின்ற திரைமறிகின்றசமுத்திரத்தின்மேல், மேரு விலங்கல் சென்றிட்டது என்ன—மேருமலைசென்றாற்போலப்போய், விண் இடம் தன்னில் நீங்கி—ஆகாயமார்க்கத்தினின்றுமிறங்கி, அவுணர் தம் இருக்கை ஆகும் இலங்கையம் குவடு மூன்றில்—அசுரர்களதுஇருப்பிடமாகிய இலங்கைநகரிலுள்ளமூன்றுசிகரங்களுள், இடைப்படு சிகரம் பாய்ந்தான்—நடுவிலுள்ளசிகரத்திற்குதித்தார் எ—று.

ஓடு-எண். தூங்குங்கடல் எனஇயையும். செம்பொன்னிறமானதோற்றமும் திண்மையும் பாரமும் பெருமையுமமைந்த உருவமுடையராய்ச்செல்லுதலின் 'மேருவிலங்கல்சென்றிட்டதென்ன' என்றார். (க)

நெடுவரை தன்னை வேலா னீறுசெய் திட்ட வண்ண
லிடவரு தமியோன் றொல்லை யிலங்கையின் மீது பாய
வடலதி வீர னென்னை யவுணர்கள் கலங்கி யேங்கி
மிடியுறு புயங்க மென்ன யாருமெய் பனித்து வீழ்ந்தார்.

இ—ள்: நெடு வரை தன்னை வேலால் நீறுசெய்திட்ட அண்ணல் விட வருதமியோன்—நெடியகிரவுஞ்சமலையை வேற்படையினாற்றுகளாக்கியழித்த முருகக்கடவுள் அனுப்பவந்த ஒப்பற்ற வீரவாகுதேவர், தொல்லை இலங்கையின் மீது பாய—பழையஇலங்கைநகரின்மேற் குதிக்க, அடல் அதிவீரன் எனை அவுணர்கள் யாரும்-(அந்நகரில்வாழ்ந்த) வலிமைபொருந்திய அதிவீரனும் மற்றையஅசுரர்களுமாகிய எல்லோரும், கலங்கி ஏங்கி— அஞ்சி ஏக்கங்கொண்டு, இடி உறு புயங்கம் என்ன—இடிமுழக்கத்தைக்கேட்ட சர்ப்பத்தைப்போல, மெய் பனித்து வீழ்ந்தார்—சரீரம் நடுங்கிவிழுந்தார்கள் எ—று.

வீரவாகுதேவர்வந்துகுதித்தாரென்பதையறியாமலே அதிர்ச்சியினால் அவசமாதலின் இடியொலிகேட்டபாம்பையுவமித்தார். (௨)

வேறு.

வைப்புறு மகேந்திர வடாதுபுல மாகி
யிப்புற மிருந்திடு மிலங்கைதனி லேந்தல்
குப்புறுத லுங்குலை குலைந்தவுண ரோடு
முப்புறு கடற்படிதல் கண்டுவகை யுற்றான்.

இ—ள்: ஏந்தல்—வீரவாகுதேவர், வைப்பு உறு மகேந்திர வடாது புலம் ஆகி— இடப்பரப்பினையுடைய மகேந்திரநகரின் வடதிசைக்கண்ணதாய், இப்புறம் இருந்திடும் இலங்கைதனில்— இப்பாலிருக்கின்ற இலங்கைநகரில், குப்புறுதலும்—குதித்தவுடன், குலைகுலைந்து—அந்நகர்நிலைகுலைந்து, அவுணரோடும் உப்பு உறு கடல் படிதல் கண்டு— தன்னிடத்தில்வாழும் அசுரர்களுடன் உவர்ச்சமுத்திலாழ்வதைப்பார்த்து, உவகை உற்றான்—மகிழ்ச்சிகொண்டார் எ—று.

வைப்பு-இடம். வடாது-வடக்கிலுள்ளது, மரூஉமொழி. மகேந்திரநோக்கிச்செல்லும்வழியிலுள்ளதாதலின் 'இப்புறமிருந்திடும்' என்றார். அசுரர்கடலிலாழ்வதுபற்றி மகிழ்ந்தாரென்க. (௩)

தந்திமுக மாமதலை தன்னடி வணங்கா
தந்தரவிண் ணோர்கட லலைத்திடலு மன்னோன்
சிந்தைமுனி வெய்தவிடை சேர்த்தகயி றோடு
மந்தர நெடுங்கிரி மறிந்தபடி மானும்.

இ—ள்: அந்தர விண்ணோர்—ஆகாயவுலகத்தில்வாழுகின்றதேவர்கள், தந்தி முக மா மதலை தன் அடி வணங்காது—யானைமுகத்தையுடைய சிறந்தபுதல்வராகிய விநாயகக்கடவுளதுபாதங்களைத்தொழாமல், கடல் அலைத்திடலும்— பாற்கடலைக்கடையும்பொழுது, அன்னோன் சிந்தை முனிவு எய்த— அந்தவிநாயகக்கடவுள் மனத்திற்கோபங்கொள்ளுதலால், மந்தர நெடும் கிரி—(மத்தாயிருந்த) நெடிய மந்தரமலையானது, இடைசேர்த்த கயிறோடும்—இடையில்மாட்டிய(வாசுகியாகிய) கயிற்றினுடன், மறிந்தபடி மானும்—கடலிலாழ்ந்ததன்மையைப்போலும் எ—று.

இலங்கைகடலுளாழ்வது பாற்கடல்கடையும்போது மந்தரமலைகடலிலாழ்ந்ததுபோலுமென்பதுகருத்து. மூத்தகுமாராதலின் 'மாமதலை' என்றார். (௪)

ஆடல்கெழு மொய்ம்பின னடித்தலம தூன்ற
மூடுதிரை வேலையிடை மூழ்கிய விலங்கை
கூடுமக வண்ணல்குலி சந்தொட ரநேமி
யூடுபுக வாற்றிடுமை நாகவரை யொக்கும்.

இ—ள்: ஆடல் கெழு மொய்ம்பினன் அடித்தலமது ஊன்ற— வீரவாகுதேவர் பாதங்களால்மிதிக்க, மூடு திரை வேலை இடை மூழ்கிய இலங்கை—மூடப்

பெற்ற திரைகளையுடையகடலினுள் அமிழ்ந்திய இலங்கைநகர், கூடும் மக அண்ணல் குலிசம் தொடர—தொகையான்மிகுந்த அசுவமேதயாகங்களைச்செய்த இந்திரனதுவச்சிராயுதம் பின்றொடர்ந்துவர, நேமி ஊடு புகல் உற்றிடும்— கடலினுட்போயொளித்த, மைநாக வரை ஒக்கும்—மைநாகமலையைப்போலும் எ—று.

ஆடல்கெழுமொய்ம்பினன்-வீரம்பொருந்தியபுயங்களையுடையவன். ஒன்றன்பின்னொன்றாகத்திரைமறிகின்றகடலென்பார் 'மூடுதிரைவேலை' எனவும், நூறுயாகங்களென்பார் 'கூடுமகம்' எனவும் கூறினார். இந்திரன் மலைகளின்சிறகையரிந்தகாலத்தில் மைநாகமென்னுமலை அஞ்சிச்சமுத்திரத்திலொளித்ததென்க.

மாமறைக டம்மைமுனம் வஞ்சனை புரிந்தே
சோமுகன் மறைந்ததிரை தூங்குகட லூடே
யேமுறு பேருரு வெடுத்ததொரு மாண்சேல்
போமதென வாழ்ந்தது பொலங்கெழு மிலங்கை.

இ—ள்: சோமுகன்—சோமுகனென்னுமசுரன், முனம்—முற்காலத்தில், மா மறைகள் தம்மை வஞ்சனை புரிந்து—சிறந்தவேதங்களைத்திருடிக்கொண்டு, மறைந்த—ஒளித்த, திரை தூங்கு கடல் ஊடு—திரைமறிகின்றகடலினிடத்து, ஏமம் உறு பேர் உரு எடுத்தது ஒரு மாண் சேல் போம் அது என—இறுமாப்பையுடைய பெரியவடிவத்தைக்கொண்ட திருமாலாகிய மாட்சிமைவாய்ந்தமீன் புகுந்ததன்மையைப்போல, பொலம் கெழும் இலங்கை ஆழ்ந்தது-அழகுவிளங்குகின்ற இலங்கைநகர் அமிழ்ந்தியது எ—று.

முதனூலாதலின் 'மாமறை' என்றார். சேல் ஈண்டு இனத்தைக்குறிக்காது பொதுமையில்நின்றது. சோமுகாசுரன் வேதங்களைத்திருடிக்கொண்டு கடலிலொளித்தகாலத்தில் திருமால் மீன்வடிவுகொண்டு அக்கடலினுட்புகுந்து அவனைக்கொன்று கைப்பற்றினரென்க. (சு)

தொல்லைதனி லோர்விதி துயின்றகடை நாளி
னெல்லைய திகந்துகட லேழுமெழ வங்க
ணெல்லைபில முற்றபுவி யுய்ப்பவொரு கேழல்
செல்லுவதி னாழ்ந்தது திரைக்கட லிலங்கை.

இ—ள்: தொல்லைதனில் ஓர் விதி துயின்ற கடை நாளின்—முற்காலத்தில் ஒருபிரமதேவர்நித்திரைசெய்த பிரளயகாலத்தில், எல்லையது இகந்து கடல் ஏழும் எழ—வரம்புகடந்து ஏழுகடல்களும்பெருக, அங்கண்—அப்பொழுது, பிலம் உற்ற புவி உய்ப்ப-பாதலத்திலமிழ்ந்தியபூமியை மேலேகொணரும்படி, ஒரு கேழல் ஒல்லை செல்லுவதின்—திருமாலாகியஒருபன்றி விரைவிற்போனதுபோல, இலங்கை—இலங்கைநகர், திரை கடல் ஆழ்ந்தது—திரைமறிகின்றகடலில் அமிழ்ந்தியது எ—று.

பிரளயவெள்ளத்திலாழ்ந்தபூமியை மேலேகொணர்ந்துநிறுத்தும்படி திருமால் பன்றிவடிவுகொண்டுசென்றனரென்க. (எ)

சிந்துவி னகன்கரையொர் திண்கிரி யழுந்த
வந்தமி லிலங்கையு மழுந்தியிடு தன்மை
முந்தொரு மடக்கொடி விருப்பின்முனி மூழ்க
விந்திர னுநேமியி னிடைப்புகுதல் போலும்.

இ—ள்: சிந்துவின் அகன் கரை ஓர் திண் கிரி அழுந்த—கடலினது விசாலமானகரையிலுள்ள திண்மையானஒருமலை முன்னேஅமிழ்ந்த, அந்தம் இல் இ

லங்கையும் அழுந்தியிடு தன்மை—முடிவில்லாத இலங்கைநகரும் பின்புஅமிழ்ந்தியதன்மை, முனி—கவுதமமுனிவர், முந்து ஒரு மடக்கொடி விருப்பில் மூழ்க-முற்காலத்தில் ஒருபெண்ணின்மேல்வைத்தஆசையினாற் கடலுளமிழ்ந்திநிற்க, இந்திரனும் நேமியின் இடை புகுதல் போலும்— இந்திரனும் அக்கடலின்கண்ணே அமிழ்ந்திநின்றதன்மையைநிகர்க்கும் எ—று.

மடக்கொடி-மடமையையுடையகொடிபோல்வாள், அன்மொழித்தொகை. கந்தமாதனகிரி ஆழ்ந்தபின் இலங்கையும் அக்கடலிலாழ்வது, கவுதமமுனிவர் கடலிலாழ்ந்துதவஞ்செய்ய இந்திரனும் அவ்வாறே ஆழ்ந்துநின்றதுபோலும் என்பது கருத்து. முன்னொருகாலத்திற்பிரமதேவர் அகலிகையென்பாளைப் பேரழகுடையவளாகப்படைத்துப் பலவருடங்காறும்சுவாசமடக்கிக்கடலிலாழ்ந்துநின்று தவஞ்செய்வார்க்கே இவளுரியளென்றுகூற, இருடிகள்பலர் அவ்வாறுதவஞ்செய்யமுயன்றும் முடிவுபெறாதொழிந்தனர். அதனையறிந்தகவுதமமுனிவர் பிரமதேவர்கூறியபடி கடலிலாழ்ந்துதவஞ்செய்யும்பொழுது, இந்திரனும் அவளைவிரும்பி ஓரிருடிவடிவங்கொண்டு தவஞ்செய்வானைப்போலநடித்து அக்கடலிலாழ்ந்தும் இடையிடையெழுந்தும் வஞ்சனைசெய்தானென்பது சரித்திரம். அளவிடற்கரியபரப்பினையுடையதென்பார் 'அந்தமிலிலங்கை' என்றார். (அ)

உலங்கொள்புய வீரனடி யூன்றுதலு முன்னோர்
விலங்கல்பணி தன்னுலக மேவியது கேளா
வலங்கல்பெறு வாகையவ னாற்றலது தாங்கி
யிலங்கையது காண்பலென வேகியது போலும்.

இ—ள்: உலம் கொள் புய வீரன் அடி ஊன்றுதலும்—திரண்டகல்லைநிகர்த்த புயங்களையுடையவீரவாகுதேவர் பாதங்களால்மிதித்தவுடன், முன் ஓர் விலங்கல் பணி தன் உலகம் மேவியது-முன்னே ஒருமலையானது பாதலவுலகத்திலமிழ்ந்தியதன்மையை, இலங்கை கேளா—இலங்கைநகரம்கேட்டு, அலங்கல் பெறு வாகையவன் ஆற்றல் அது தாங்கி—வெற்றிமாலையையணிந்த வீரவாகுதேவரது பாரத்தைச்சுமந்து, அது காண்பல் என— அத்தன்மையைப்பரீட்சிப்பேனென்றுசிந்தித்து, ஏகியது போலும்—ஆழ்ந்ததுபோலும் எ—று.

பணிதன் உலகம்·நாகங்களுடைய உலகம். அலங்கல்பெறுவாகையவன்-வீராணியுமாலையைப்பெறுதற்கேற்றவெற்றியையுடையான். காண்பல்-தன்மையொருமையெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று. கந்தமாதனமலைக்குநேர்ந்தகதி தனக்குமாமோவென்பதைப் பரீட்சிப்பேனென்றுநினைந்தென்பார் 'அதுகாண்பலென' என்றார். தற்குறிப்பேற்றம். (கூ)

இலங்கையிது பான்மையி னிருங்கடலுண் மூழ்கக்
குலங்கடொடு வைகிய கொடுந்தகுவர் யாருங்
கலங்கின ரழுங்கினர் கவன்றனர் துவன்றி
மலங்கினர் புலம்பினர் மருண்டனர் வெருண்டார்.

இ—ள்: இலங்கை இதுபான்மையின் இரும் கடலுள் மூழ்க— இலங்கைநகரம் இவ்வாறுகப்பெரியசமுத்திரத்திலமிழ்ந்த, குலங்களொடு வைகிய கொடும் தகுவர் யாரும்- கூட்டமாக அந்நகரத்தில்வாழ்ந்திருந்த கொடிய அசுரர்களெல்லோரும், துவன்றி—செறிந்து, கலங்கினர்—கலக்கமுற்று, அழுங்கினர்—வருந்தி, கவன்றனர்—கவலைகொண்டு, மலங்கினர்—வாடி, புலம்பினர்—புலம்பி, மருண்டனர்—மயங்கி, வெருண்டார்—வெருட்சிகொண்டார்கள் எ—று.

ஒவ்வோரினத்தினரும் ஒவ்வோரிடத்திற்கூடியிருந்தாராதலின் 'குலங்களொடுவைகிய' என்றார். (கo)

அற்றமுறு தானவர்க ளாழவனை யோரைச்
சுற்றிய வளப்பில சுறுவுழுவை மீனம்
பற்றிய வளைந்தன பலப்பல திரண்டே
செற்றிய திமிங்கில திமிங்கில கிலங்கள்.

இ—ள்: அற்றம் உறு தானவர்கள் ஆழ-(முற்கூறியவாறு)மெலிவுகொண்ட அசுரர்கள் கடலிலமிழ்ந்த, அளப்பு இல சுறு உழுவை மீனம்—அளவில்லாத மகரமீன்களும் உழுவைமீன்களும், பலப்பல திரண்டு—மிகப்பலவாகக்கூடி, அனையோரை சுற்றிய—அவர்களைச்சூழ்ந்து, பற்றிய வளைந்தன— கவ்வும்படிவளைந்தன, திமிங்கில திமிங்கிலகிலங்கள்— திமிங்கிலமீன்களும் திமிங்கிலகிலமீன்களும், செற்றிய—வந்துநெருங்கின எ—று.

உழுவை-புலிவடிவானமீன். திமிங்கிலம்-யானையைவிழுங்குமீன். திமிங்கிலகிலம்-திமிங்கிலத்தைவிழுங்குமீன். பற்றிய செய்யியவென்வாய்பாட்டுவினையெச்சம். அற்றமுறு-குற்றம்பொருந்திய எனினுமாம். (கக)

கையதனை யீர்ப்பசில கால்கள்சில வீர்ப்ப
வெய்யதலை யீர்ப்பசில மிக்கவுயர் தோள்கண்
மொய்யுடைய மார்பதனை யீர்ப்பசில மொய்த்தே
சையமுறழ் யாக்கையுள தானவரை மீனம்.

இ—ள்: மீனம்— மீனினங்கள், சையம் உறழ் யாக்கை உள தானவரை மொய்த்து— மலையைப்போன்ற பெரியவடிவத்தையுடைய அசுரர்மேல் மொய்த்து, சில கை அதனை ஈர்ப்ப—சிலமீன்கள் கைகளையிழுப்பன, சில கால்கள் ஈர்ப்ப—சிலமீன்கள் கால்களையிழுப்பன, சில வெய்ய தலை ஈர்ப்ப—சிலமீன்கள் கொடியதலைகளையிழுப்பன, சில—சிலமீன்கள், மிக்க உயர் தோள்கள் மொய் உடைய மார்பு அதனை ஈர்ப்ப—மிகவுயர்ந்தபுயங்களையும் வலிமையையுடையமார்புகளையுமிழுப்பன எ—று.

மிகப்பருத்தாரத்தமேனியென்பார் 'சையமுறழ்யாக்கை' எனவும், உக்கிரமானதோற்றத்தையுடையதலைகளென்பார் 'வெய்யதலை' எனவும் கூறினார். (கஉ)

அத்தனொ டியாயைமனை யன்பின்முதிர் சேயைக்
கொத்தினொடு கொண்டுசிலர் கூவியெழு கின்றார்
ரெய்த்தனர்கள் செய்வதெ னிரும்படையும் விட்டுத்
தத்தமுயிர் கொண்டுசிலர் தாமுமெழ லுற்றார்.

இ—ள்: சிலர்—சிலஅசுரர்கள், அத்தனொடு யாயை— பிதாவையும்மாதாவையும், மனை அன்பின் முதிர் சேயை—மனைவியையும் அன்பிற்சிறந்தபுதல்வனையும், கொத்தினொடு கொண்டு—கூட்டமாக அணைத்துக்கொண்டு, கூவி எழுகின்றார்—கூக்குரலிட்டு எழுந்தார்கள், சிலர்—சிலஅசுரர்கள், எய்த்தனர்கள்—இளைத்தார்கள்,(ஆதலால்), செய்வது என்— செய்யத்தக்கதுயாது?, இரும் படையும் விட்டு—பெரியபடைக்கலங்களையுந்தவறவிட்டு, தத்தம் உயிர் கொண்டு— தங்கள்தங்களுயிரைப்பேணிக்கொண்டு, தாம் எழலுற்றார்—தாமாத்திரம் எழும்பினார்கள் எ—று.

பின்னையஉம்மை அசைநிலை. செய்யத்தக்கஉபாயமொன்றுமின்மையால் தம்முயிரைமாத்திரங்காக்கவிரும்பியெழுந்தார்களென்பது பிற்றொடர்க்கருத்து. தம்முயிரையிழக்கவரினும் புதல்வருயிரைக்காக்கவேண்டுமென்னும் விருப்பமுடையாதலின் 'அன்பின்முதிர்சேயை' எனவும், உற்றபோர்களுக்கு உறுதியாயு

தவும்படையென்பார் 'இரும்படை' எனவும் கூறினர். படையுமென்றஉம்மை மீனைவிமக்கள்முதலாயினேரையுந்தழீஇநின்றது. (கங)

உற்றசில தானவரை யொய்யென வளாவித்
திற்றிவிழை வானனி திரண்டனர்க ளெல்லாம்
பற்றுழி தனித்தனி பறித்தது பொருட்டாற்
பொற்றைபுரை மீன்கள்பெரும் போர்வினை புரிந்த.

இ—ள்: பொற்றை புரை மீன்கள்—மலையைப்போன்ற (பெரியவடிவத்தையுடைய)சிலமீன்கள், உற்ற சில தானவரை ஒய் என அளாவி—தம்மையணுகியசில அசுரர்களை விரைவில்வளைந்து, திற்றி விழைவால்—உணவுவிருப்பத்தினுல், நனி திரண்டனர்கள் எல்லாம் பற்றுழி—மிகச்செறிந்த அவர்களெல்லோரையும்பிடிக்கும்பொழுது, தனித்தனி பறித்து—தனித்தனியே அவரைப்பறித்து, அதுபொருட்டால்—அதுகாரணமாக, பெரும் போர்வினை புரிந்த — ஒன்ரேடொன்று பெரியபோர்த்தொழிலைச்செய்தன எ—று.

சிலபெருமீன்கள் அசுரரைவளைந்துபற்றும்போது பற்பலமீன்கள்சென்று பறித்தலால் அவற்றுட்பெரும்போர்விளைந்தது என்பதாம். (கச)

தானவர்க ளோர்சிலவர் தம்முணல் குறித்தே
வானிமிரு மோதையென வந்துதலை யெற்றப்
பூநுனைய வாள்சுரிகை போரயில்கள் கொண்டே
மீனமொடு வெஞ்சினம் விளைத்தமர் புரிந்தார்.

இ—ள்: தம் உணல் குறித்து—தங்களுக்குணவாக்கக்கருதி, வான் நிமிரும் ஓதை என வந்து— ஆகாயத்திற்கிளர்ந்துவீசுகின்றகாற்றைப்போலவந்து, தலை எற்ற-(சிலமீன்கள்) தம்மைமோதும்பொழுது, தானவர்கள் ஓர் சிலவர் —சிலஅசுரர்கள், பூ நுனைய வாள் சுரிகை போர் அயில்கள் கொண்டு--பொலிவான நுனியையுடைய வாளும் உடைவாளும் போருக்குரியவேலும் ஆகியபடைக்கலங்களைக் கைக்கொண்டு, மீனமொடு வெம் சினம் விளைத்து அமர் புரிந்தார்— அந்தமீன்களுடன் கொடுங்கோபமூண்டு போரைச்செய்தார்கள் எ—று.

மிகுந்தவேகத்துடன்வந்தென்பார் 'வானிமிருமோதையெனவந்து' என்ருர்.

சீர்த்திகொ ளிலங்கைகடல் சென்றிடலு மங்க
ணார்த்திபெறு மங்கையர்க ளங்கையவை பற்றி
யீர்த்தபிற ரில்லுற விசைந்துகரம் பற்றுந்
தூர்த்தரை நிகர்த்தன சுறாமகர மீனம்.

இ—ள்: சீர்த்தி கொள் இலங்கை கடல் சென்றிடலும்—கீர்த்தியையுடைய இலங்கைநகர் சமுத்திரத்திலமிழ்ந்தியவுடன், சுறா மகர மீனம்—சுறாவும் மகரமுமாகியமீனினங்கள், அங்கண் ஆர்த்தி பெறும் மங்கையர்கள் அங்கை அவை பற்றி—அவ்விடத்தில் துயருறுகின்றமங்கைப்பெண்களது அழகியகைகளைப்பிடித்து, ஈர்த்த—இழுத்தன, (ஆதலின்), பிறர் இல் உற இசைந்து கரம் பற்றும் தூர்த்தரை நிகர்த்தன—பிறர்மனைவியரைச்சேரவிரும்பி அவர்களதுகையைப்பிடித்திழுக்கின்ற காமுகர்களையொத்தன எ—று.

வலிந்திழுத்தலால் இவ்வாறுவமித்தார். (கரு)

மீனொருகை பற்றியிட வேறொரு கரத்தைத்
தானவர் வலித்தொரு தடக்கைகொ டிசிப்ப

மானனைய கண்ணியர் வருந்திடுத லோரைந்
தானபுல னீர்ப்பவு ளழுங்குவது போலும்.

இ—ள்: மீன் ஒரு கை பற்றியிட—மீன்கள் ஒருகையைக்கவ்விக்கொள்ள, தானவர் வேறு ஒரு கரத்தை ஒரு தட கை கொடு வலித்து இசிப்ப—அசுரர்கள் மற்றொருகையை விசாலித்த ஒருகையினால் வலாற்காரமாகஇழுக்க, மான் அனைய கண்ணியர் வருந்திடுதல்— மானின்பார்வைபோன்றபார்வையையுடைய பெண்கள் (அவற்றால்)வருந்துந்தன்மை, ஓர் ஐந்து ஆன புலன் ஈர்ப்ப உள் அழுங்குவது போலும்—ஐம்புலன்களும் (தங்கள்தங்கள்வசமாக) இழுத்தலால் மனம் வருந்துவது போலும் எ—று.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களும் கருவியாயுள்ள பொறிகளின்வழிநின்று மனத்தைத்தத்தஞ்சார்பிலிழுக்க மனம் நிலைமாறி அவ்வவற்றின்வழியேசென்றுவருந்துதல்போல, ஓர்கையில்மீன்களும் மற்றோர்கையில் அசுரரும் பற்றியிழுத்தலால் மகளிர் தந்நிலைமாறி அங்குமிங்குமீர்ப்புண்டு வருந்தினர் என்பதாம். இங்ஙனமுவமித்தமுகத்தால் ஐம்புலங்களை யடக்காதார்பெறுமலக்கண் ஊகித்துணரக்கிடக்கின்றது. மான்-ஆகுபெயர். (௬எ)

திண்டிறல் வலம்படு திருக்கைசுற மீன
மண்டிய திமிங்கிலம் வருந்தகுவர் சூழல்
கண்டுமிசை யெற்றிடுத லுங்கடிது வாளாற்
றுண்டமுற வேயவை துணித்தெழுநர் சில்லோர்.

இ—ள்: திண் திறல் வலம் படு திருக்கை— திண்மையானவலிதன்னிடம் பொருந்தப்பெற்றதிருக்கைமீனும், சுற மீனம்—சுறாமீனும், மண்டிய திமிங்கிலம்—நெருங்கிய திமிங்கிலமீனும், வரும் தகுவர் சூழல் கண்டு— தமக்கெதிரேவருகின்றஅசுரர்கூட்டத்தைப்பார்த்து, மிசை எற்றிடுதலும்— அவர்களின்மேல் மோத, அவை துண்டம் உற—அவைகள்இருதுணியாகும்படி, வாளால் கடிது துணித்து-வாட்படையினால் விரைவில்வெட்டி, எழுநர் சில்லோர்—எழும்புகின்றவர்கள் சிலர் எ—று.

சுறு என்பது குறியதன்கீழாக்குறுகின்றது. மீன்களின்மோதுகை தம் மேற்படாமுன் வாளை எதிரேவீசினராதலின் 'கடிது' என்றார். (௬அ)

கட்டழல் விழிச்சுறவு காரவுணர் தம்மை
யட்டுணல் குறித்துவர வன்னவர்க ணீவித்
தொட்டனர் பிடித்தகடு தாரும்வகை பேழ்வா
யிட்டனர் மிசைந்தன ரெழுந்தனர்கள் சில்லோர்.

இ—ள்: கடு அழல் விழி சுறவு—பேரழலைக்காலுங்கண்களையுடைய சுறாமீன்கள், கார் அவுணர் தம்மை அட்டு உணல் குறித்து வர—கரிய அசுரர்களையழித்துத்தின்னும்படி சிந்தித்துவர, அன்னவர்கள் சில்லோர்—அவ்வசுரர்களுட்சிலர், நீவி தொட்டனர் பிடித்து—அம்மீன்களைத்தடவித்தொட்டுப்பிடித்து, அகடு தாரும் வகை— தங்கள்வயிறுநிறையும்படி, பேழ் வாய் இட்டனர் மிசைந்தனர்—பகிர்ந்தவாயிலிட்டுத்தின்று, எழுந்தனர்கள்—கடலின்மேலெழுந்தார்கள் எ—று.

வர பிடித்து மிசைந்தனர் எனஇயையும். (௬௯)

ஏற்றபுன லூடுதெரி வின்றியெம ரென்றே
வேற்றொரு மடந்தையர் வியன்கையது பற்றிப்

போர்ற்றியெழ வங்கவர் புறத்தவர்க ளாக
மாற்றின ரிசைந்துசிலர் வாழ்க்கைமனம் வைத்தார்.

இ—ள்: ஏற்ற புனல் ஊடு—சிறந்த கடனீரினுள், தெரிவு இன்றி—அறியாமையினுல், எமர் என்று—தங்கள்மனைவியரென்றுநினைத்து, வேற்று மடந்தையர் வியன் கை அது பற்றி—பிறர்பெண்களது சிறந்தகையைப்பிடித்து, போற்றி எழ — அவர்களுக்குச்சிறிதுந்தீங்குவாராவண்ணம்பேணிக்கொண்டு மேலெழுந்தபின், அவர்புறத்தவர்கள் ஆக—அவர்கள் பிறபெண்களாயிருக்க, இசைந்து மாற்றினர்—மனமிணங்கி மாற்றி, சிலர்- சிலஅவுணர்கள், வாழ்க்கை மனம் வைத்தார்- வாழுதற்கு மனங்கொண்டார்கள் எ-று.

மிகஆழமானநீரென்பார் 'ஏற்றபுனல்' எனவும், தாம்பற்றிக்கொணர்ந்த பெண்களைக்கணவர்பாற்கொடுத்துத் தம்மனைவியரை அவரிடம்பெற்றனரென்பார் 'மாற்றினர்' எனவும், ஆபத்துக்காலத்தில் அறியாது மாறிக்கைப்பற்றிய குற்றத்தைப்பொருட்படுத்தாரென்பார் 'இசைந்து' எனவும், பிறராற்காதலிக்கப்பட்டமையாற் றம்மாட்டுநிகழ்தற்பாலதாயவெறுப்பையும் தம்மனைவியர்மாட்டுநிகழ்தற்பாலதாகிய நாணத்தையும் எற்றவாறு உரையாடியொழித்தனரென்பதுபோதர 'வாழ்க்கைமனம்வைத்தார்' எனவும் கூறினர். ஒரு-அசைநிலை. (உ0)

இல்லிவ ரெனப்பிறரை யேந்தியெழ வன்னோர்
புல்லுதனி யன்பர்புடை போகவொரு சில்லோ
ரல்லலுறு வார்தமை யடைந்ததொரு கன்னி
மெல்லவயல் போந்துழி மெலிந்துழலு வார்போல்.

இ—ள்: ஒருசில்லோர்—சிலஅவுணர்கள், பிறரை—பிறஅசுரரதுமனைவியரை, இவர் இல் என எந்தி எழ-இவர் எமதுமனைவியரென்றுநினைத்துத் தூக்கிக்கொண்டு மேலெழுந்தவுடன், அன்னோர்—அப்பெண்கள், புல்லு தனி அன்பர் புடை போக—தங்களைத்தழுவுகின்ற ஒப்பற்றநாயகர்பக்கத்திற் போய்ச்சேர, தமை அடைந்தது ஒரு கன்னி மெல்ல அயல் போந்துழி மெலிந்து உழலுவார் போல்—தம்மைச்சார்ந்திருந்த ஒருபெண் மெல்லவாக அயலாருடன்கூடியபொழுது வாடிஅலைகின்றவர்களைப்போல, அல்லல் உறுவார்—துன்பப்படுவோராயினர் எ—று.

தாம்பற்றியபெண்கள் தம்மைவிட்டுக்கணவர்பாற்போக, தங்கள்பெண்பிறகணவரோடுகூடியவழிமனம்வருந்துவதுபோலப் பெருந்துயர்கொண்டார் என்பதாம். களவிற்கூடியவழியென்பார் 'மெல்லவயல்போந்துழி' என்றார். (உக)

தீமைபுரி மால்களிறு திண்புரவி யாவு
மேமரு சுறுத்தொகுதி யீர்த்துவிரைந் தேகித்
தோமறு பிணைமகரந் துய்ப்பவுத வுற்ற
காமர்கெழு பெண்மயல் கடக்கவெளி தன்றே.

இ—ள்: தீமை புரி மால் களிறு திண் புரவி யாவும்—எதிர்ப்பட்டார்க்குத் தீங்குவிளைக்கின்ற பெரியயானையும் வலியகுதிரையுமாகிய இவையெல்லாவற்றையும், ஏமரு சுறு தொகுதி ஈர்த்து விரைந்து ஏகி—மகிழ்ச்சிமிகுந்த சுறாமீன் கூட்டங்கள் இழுத்துக்கொண்டு விரைவாகப்போய், தோம் அறு பிணை மகரம் துய்ப்ப உதவுற்ற—குற்றமற்ற பெண்மீன்களுண்ணும்படிகொடுத்தன, காமர் கெழு பெண்மயல் கடக்க எளிது அன்றே—சிறப்புமிகுந்தபெண்கள்மேற்கொண்டமயக்கம் (யாவராலும்) விலக்குதற்கெளிதாகாதே! எ—று.

ஏ-தேற்றம். மிகுதியானஉணவுகிடைத்தமையால் சுறாமீன்கள் மனமகிழ்ந்த னவென்க. (உஉ)

மாற்றறு சுறாச்சில மடப்பிடிகை பற்றி
யேற்றபெண் வழிச்செல வெதிர்ந்ததனை நோக்கி
வேறறொர்பெடை யாயதென வேர்வுறுகை கையர்க்
காற்றுமுப காரவியல் பாகியதை யன்றே.

இ—ள்: மாற்று அறு சுறா சில—ஒப்பற்ற சில சுறாமீன்கள், மட பிடி கை பற்றி—மடமையையுடைய பெண்யானையின்கையைப்பிடித்துக்கொண்டு, ஏற்ற பெண் வழி செல—தங்களுக்கியைந்த பெண்மீனிடத்துப்போக, எதிர்ந்து அதனை நோக்கி—அப்பெண்மீன் எதிர்ப்பட்டு அத்தன்மையைப்பார்த்து, வேற்று ஒர் பெடை ஆயது என வேர்வு உறுகை-(தன் ஆண்மீனுடன்) வெறொருபெண்மீன் கூடிவந்ததென்றுநினைத்துக் கோபித்தல், கையர்க்கு ஆற்றும் உபகார இயல்பு ஆகியது—கீழோர்க்குச்செய்தஉதவிபோலாயிற்று எ—று.

ஐ-சாரியை. பெருமீனென்பார் 'மாற்றறுசுறா' எனவும், தம்மோடுபென்று ட்கூடிவாழ்ந்தபெண்ணென்பார் 'ஏற்றபெண்' எனவும், தனக்குஇரைதேடிக்கொ ண்டுசெல்லவும் மகிழாது சினத்தலின் 'கையர்க்காற்றுமுபகாரவியல்பாகிய து' எனவும் கூறினார். பிறர்செய்தநன்றியைப்பொருட்படுத்தாதுதீங்குசெய்த ல் கீழோர்க்கியல்பென்க. (உ௩)

சிந்துவதன் மீதிலெழு சில்லவுண ராயோர்
கந்தன்முரு கேசன்விடு காளைசெயல் காணு
நந்தமையு நின்றிடி னலிந்திடுவன் யாங்க
ளுய்ந்திடுது மென்றுகடி தோடியயல் போனார்.

இ—ள்: சிந்து அதன் மீதில் எழு சில் அவுணர் ஆயோர்—சமுத்திரத்தினி ன்றுமேலெழுந்துவந்த சிலஅசுரர்கள், கந்தன் முருகேசன் விடு காளை செயல் கா ணு—கந்தனென்னும்பெயரையுடைய முருகக்கடவுளனுப்பிய தூதராகிய வீரவா குதேவரது செயலைப்பார்த்து, நின்றிடின் நம் தமையும் நலிந்திடுவன்—சிறிது போழ்து இங்கே நிற்போமானால் இவன் எங்களையுங்கொல்வான், (ஆதலின்), யாங்கள் உய்ந்திடுதும்—நாங்கள் இவனிடத்தகப்படாமல் உய்வோம், என்று—என் றுநினைத்து, கடிது ஓடி—விரைவாகஓடி, அயல் போனார்—வேறிடத்திற்போ யொதுங்கினார்கள் எ—று.

காளை செயல் என்றது குதித்தமாத்திரத்திற்றங்களிருப்பிடத்தைக்கடலிலமி ழ்த்தியதை. கந்தன்முருகேசன்-இருபெயரொட்டு. உம்மை தம் நகரையழித்த மையைத்தழீஇநின்றது. (உச)

பீடுசெறி தங்கணவ ரைப்பிரிகி லாமே
கூடும்வழி யாழ்ந்தசில கோற்றொடிமின் னார்க
ளாடைபுன லூடுபுக வல்குறம கையான்
மூடியெழு வார்முலை முகத்தின்முகம் வைத்தே.

இ—ள்: பீடு செறி தம் கணவரை பிரிகிலாமே கூடும்வழி—பெருமைபொ ருந்திய தமதுநாயகரைப்பிரியாது புணரும்பொழுது, ஆழ்ந்த சில கோல் தொடி மின்னார்கள்—அமிழ்ந்திய கோலியவளையலையணிந்த சிலபெண்கள், ஆ டை புனல் ஊடு புக—களைந்து அருகில்வைத்திருந்த வஸ்திரம் கடலிலமிழ்ந்த, முலைமுகத்தில் முகம் வைத்து—நாணமிகுதியால் முலைக்கண்களில் முகத்தை

வைத்து, அல்குல் தம கையால் மூடி—நிதம்பத்தைத்தங்கள்கையினால் மறைத்துக்கொண்டு, எழுவார்—எழும்புவார்கள் எ—று.

பிரிகிலாமே-மேயீற்றுவினையெச்சம். தம்முடன்கூடியின்புறுதற்குத்தகுந்த அழகும் இளமையும்வாய்ந்த கணவரென்பார் 'பீடுசெறி-கணவர்' என்றார். திடரென ஆழ்ந்தனரென்பது செய்யுட்கருத்து. (௨௫)

சேண்டொட ரிலங்கைகடல் சென்றுழி யதன்பா
லாண்டசில மாதர்க ளரத்தவுடை கொண்டார்
மீண்டெழலு நீர்பட வெளிப்படுவ தல்குல்
காண்டகைய செம்மதி களங்கமடைந் தென்ன.

இ—ள்: சேண் தொடர் இலங்கை கடல் சென்றுழி—ஆகாயத்தையளாவியுயர்ந்த இலங்கைநகர் கடலிலாழ்ந்தபொழுது, அதன் பால் ஆண்ட சில மாதர்கள்—அக்கடலிலாழ்ந்த சிலபெண்கள், அரத்த உடை கொண்டார்— சிவந்தநிறமானவஸ்திரத்தைத்தரித்தவர்களாய், மீண்டு எழலும்—அக்கடலினின்று கிளம்பியெழுந்தவுடன், நீர் பட அல்குல் வெளிப்படுவது—கடல்நீர்தோய்தலினால் அவர்களுடையநிதம்பம்வெளியிற்காணப்படுதல், காண்டகைய செம் மதி களங்கம் அடைந்து என்ன—காணத்தகுந்த சிவந்தநிறமானசந்திரன் தன்னுட்களங்கமுடையனாயிருப்பதுபோலும் எ—று.

ஆண்ட ஆழ்ந்த என்பதன்விகாரம். ரத்தம் என்னும்வடமொழி ரகரத்தின்முன் இகரமேற்றுவருவதுபோல ஈண்டு அகரமேற்றுவந்தது. மெல்லியபட்டாடையாதலின் நீர்பட்டவுடன் அல்குல்காணப்பட்டது. எழலும் வெளிப்படுவது என இயையும். சந்திரன் உதயகாலத்திற்சிவந்தநிறமாய்த்தோற்றுதலின் 'காண்டகைய செம்மதி' என்றார். சிவந்தநிறவஸ்திரத்தால்மறைக்கப்பட்டமேனியில் அல்குல் வேற்றுநிறமாகத்தோன்றுதல் உதயசந்திரன் களங்கமிடையேபொருந்தத்தோற்றினாற்போலும் என்பதாம். (௨௬)

காரவுணர் மாதர்சிலர் காமர்கடல் வீழ்வார்
நீரமெழ வேயுடை நெகிழ்ந்தொருவி யேக
மூரன்முக மல்லுருவு முற்றுற மறைத்தே
தேரையென வொண்புனல் செறிந்துதிரி வுற்றார்.

இ—ள்: கார் அவுணர் மாதர் சிலர்— கருநிறமான அசுரப்பெண்கள்சிலர், காமர் கடல் வீழ்வார்—அழகிய கடலினுள் அமிழ்ந்தியவர்களாய், நீரம் எழ—நீரின்மேலெழும்பொழுது, உடை நெகிழ்ந்து ஒருவி ஏக—அணிந்திருந்தஆடை நெகிழ்ந்து நீங்கிப்போக, மூரல் முகம் அல் உருவு முற்றுற மறைத்து— பற்களையுடைய முகமாத்திரந்தவிர்ந்த ஏனைய அவயவங்களெல்லாவற்றையும் முழுதாகமறைத்து, தேரை என—தவளையைப்போல, ஒள் புனல் செறிந்து திரிவுற்றார்—சிறந்தநீரில் நெருங்கித்திரிந்தார்கள் எ—று.

தவளையையுவமித்ததற்கேற்பக் 'காரவுணர்மாதர்' எனவும், பொலிவார்ந்தமுகமென்பார் 'மூரன்முகம்' எனவும் கூறினார். கடலுக்கழகு நீர்மிகுதி ஆழம் திரைகள்நிரையாய்வீசப்பெறுதல் முதலியனவாம். நீரம் வடசொல். இது ஈறுகெட்டு நீர் என வழங்கியது. (௨௭)

ஆசறு மரைத்துகி லகன்றிட வெழுந்தே
தேசுறு மடந்தையரி லோர்சிலவர் சேண்போய்
மாசறு புயற்குழுவை வல்லைகரம் பற்றித்
தூசினியல் பாண்டுவு சுற்றியுல வுற்றார்.

இ—ள்: தேசு உறும் மடந்தையரில் ஓர் சிலவர்—பொலிவினையுடைய அசுரப்பெண்களுட்சிலர், ஆசு உறும் அரை துகில் அகன்றிட—நன்மையான அரையிற்றரித்தவஸ்திரம் நெகிழ்ந்துபோக, எழுந்து— நீரின்மேலெழுந்து, சேண் போய்—ஆகாயத்திற்சென்று, மாசு உறு புயல் குழுவை வல்லே கரம் பற்றி—கருநிறம்பொருந்திய மேகக்கூட்டங்களை விரைவாகக்கையினாற்பிடித்து, தூசின் இயல்பால் நடுவு சுற்றி—வஸ்திரத்தினியல்பமைய அரையிற்சுற்றி, உலவுற்றார்—உலாவத்தொடங்கினார்கள் எ—று.

அகன்றிட சுற்றி எனஇயையும். மறைக்கவேண்டியஉறுப்புக்களைப் பிறர்காண்பரென்று மிகுந்தநாணங்கொண்டனராதலின் விரைந்தனர். (உஅ)

இலங்கைவீழ்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ககஎ.

அதிவீரன்வதைப்படலம்.

அதிவீரனென்பானைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் இலங்கைநகரைக்கடலிலமிழ்த்தியதுகண்டு அதனைக்காவல்செய்திருந்த அதிவீரனென்னுமசுரன் அவருடனெதிர்த்தனன். அவர் அவனைக்கொன்றார் என்பதாம்.

அன்னதொர் பான்மைக ளாக விலங்கை
முன்னுறு வார்கட லாழ்ந்தது மூழ்க
விந்நகர் போற்றி யிருந்திடு கின்ற
மின்னுனை வேலதி வீர னுணர்ந்தான்.

இ—ள்: இலங்கை—இலங்கைநகரம், அன்னது ஓர் பான்மைகள் ஆக—அவ்வாறாகியதன்மைகள்நிகழ, முன் உறு வார் கடல் ஆழ்ந்தது மூழ்க—முன்னே வளைந்துநின்ற நீண்டகடலில் தாழ்ந்து அமிழ்ந்த, இ நகர் போற்றி இருந்திடுகின்ற—இந்தஇலங்காபுரியைக்காவல்செய்திருந்த, மின் நுனை வேல் அதிவீரன்- ஒளிபொருந்திய முனையையுடைய வேற்படையையேந்திய அதிவீரனென்பான், உணர்ந்தான்—அதனையறிந்தான் எ—று.

மூழ்க உணர்ந்தான் எனஇயையும். காவலின்சிறப்பைவிளக்க 'மின்னுனை வேலதிவீரன்' என்றார். (க)

தனது புரங்கடல் சார்தல் காணு
நனிதுய ரெய்தின னுணு மடைந்தான்
சினவி யுயிர்த்தழல் சிந்த நகைத்தா
னனையவ னின்ன தகத்திடை கொண்டான்.

இ—ள்: அனையவன்—அந்த அதிவீரன், தனது புரம் கடல் சாருதல் காணு-தன்காவலின்கீழ்ப்பட்டதாகிய இலங்கைநகர் கடலிலாழ்வதைப்பார்த்து, நனி து

யர் எய்தினன்—மிகத்துன்பங்கொண்டு, நாணும் அடைந்தான்—வெட்கமுங்கொண்டு, சினவி—கோபித்து, உயிர்த்து—பெருமூச்சுவிட்டு, அழல் சிந்த நகைத்தான்—அக்கினிப்பொறிசிதறச்சிரித்து, இன்னது அகத்திடை கொண்டான்—பிற்கூறப்படுவனவற்றை மனத்தில்நினைத்தான் எ—று.

எய்தினன் அடைந்தான் நகைத்தான் முற்றெச்சங்கள். நகரழிந்தமையாற்றுயரமும் காவலிகந்தமையால்நாணும் பகைவனைக்கொல்லநினைத்தலாற்சினமும் அந்நினைவுகிளர்ந்து தன்னைவலிதலால் உயிர்ப்பும் தன்வீரத்தையுணராதுபகைவர்இங்ஙனஞ்செய்ததுபற்றி நகைப்பும் உண்டாயினவென்க. (உ)

சுந்தர மேவரு சூரபன் மாவோ
வந்தமி றம்பிய ரோவனை யார்தம்
மைந்தர்க ளோமதி யேனவ ரல்லா
லிந்த வியற்கையை யார்புரி கிற்பார்.

இ—ள்: சுந்தரம் மேவரு சூரபன்மாவோ— சிறப்புப்பொருந்தியிருக்கின்ற சூரபன்மனே, அந்தம் இல் தம்பியரோ—அழிவில்லாத தம்பிமார்களோ, அனையார்தம் மைந்தர்களோ—அவர்களதுபுத்திரர்களோ, மதியேன்—அறியேன், அவர் அல்லால்—அவர்களல்லாமல், இந்த இயற்கையை யார் புரிகிற்பார்—இந்தச்செயலை யார்தாஞ்செய்யவல்லார்? எ—று.

அரசியன்முதலிய அதிகாரங்களுடன் வாழ்கின்றவென்பான் 'சுந்தரமேவரு' எனவும், பல்பெருங்காலம் அழியாதிருக்கும்வரமுடையாரென்பான் 'அந்தமிறம்பியர்' எனவும் கூறினன். சூரபன்மன்முதலாயினோரன்றி ஏனையோரிதற்குத்துணியாரென்பதுகுறிப்பு. (ந)

ஆயவ ரென்னினு மாங்கது செய்தற்
கேயதொ ரேதுவு மின்றுதம் மூர்க்குத்
தீயது செய்கலர் சிந்தைய தன்றான்
மாயையு மீது மதிக்கிலள் போலும்.

இ—ள்: ஆயவர் என்னினும்—அவர்களாயிருந்தாலும், அது செய்தற்கு ஏயது ஓர் ஏதுவும் இன்று—அச்செயலைச்செய்தற்கு இயைந்த காரணமொன்றுமில்லை, தம் ஊர்க்கு தீயது செய்கலர்—தங்கள்நகரத்திற்குத் தாங்களே அழிவுசெய்யமாட்டார்கள் (ஆதலின்), சிந்தையது அன்று—இது நினைக்கத்தகுந்ததன்று, மாயையும் ஈது மதிக்கிலள்—மாயவளும் இதனைச்செய்யநினையாள் எ—று.

உம்மை என்னினும் மாயையும் என்பனவற்றில் எச்சங்கள். (ச)

மூவரு மிச்செயன் முன்னலர் பின்னர்த்
தேவர்கள் யாரிது செய்திட வல்லா
ரேவரு நஞ்சிறை யெய்தினர் வேள்விக்
காவல னாருயிர் காத்து மறைந்தான்.

இ—ள்: மூவரும் இ செயல் முன்னலர்—மும்மூர்த்திகளும் இந்தச்செயலைச்செய்யநினையார்கள், பின்னர்—வேறுமாராயுமிடத்து, தேவர்கள் யார் இது செய்திட வல்லார்—தேவர்களுள்ளே எவர் இதனைச்செய்யவல்லவர்கள்? (ஒருவருமில்லை, ஏனெனில்) ஏவரும் நம் சிறை எய்தினர்—எல்லோரும் எங்களாலமைக்கப்பட்ட சிறையிற்புகுந்தார்கள், வேள்வி காவலன் ஆர் உயிர் காத்து மறைந்தான்—யாகாதிபனாகிய இந்திரன் தனதுஅருமையானஉயிரைப்பேணி ஒளித்தான் (ஆதலின் அவனுஞ்செய்யான்) எ—று.

மூவரும் என்பதில் உம்மைமுற்றேறெச்சம். (ரு)

மாதிர மேலவர் வானிடை வைப்பின்
மேதகும் விண்ணவர் விஞ்சையர் சித்த
ராதியர் நம்மிறை யாணையி னீங்கா
ரீது புரிந்திட வெண்ணுவர் கொல்லோ.

இ--ள்: மாதிர மேலவர்—திக்குப்பாலகர்களும், வான் இடை வைப்பில் மேதகும் விண்ணவர் —ஆகாயவுலகத்திலிருக்கின்ற சிறந்ததேவர்களும், விஞ்சையர் சித்தர் ஆதியர்—வித்தியாதரர் சித்தர்முதலானவர்களும், நம் இறை ஆணையில் நீங்கார்-எங்களரசனுடையகட்டளையினின்று திறம்பமாட்டார்கள், ஈது புரிந்திட எண்ணுவர் கொல்—இதனைச்செய்யநினைப்பார்களோ? (நினையார்களே) எ-று.

எம்மரசன்கட்டளைக்கடங்கிநடத்தலின் அவனுக்குவிரோதமான இச்செயலில் முயலார் என்பதாம். (சு)

தவ்வற வீண்டமர் தானவ ராற்ற
மெய்வலி மாயைகண் மேவின ரேனுந்
தெவ்வடு சூர்முத றிண்படை யஞ்சி
யிவ்விய றன்னை யிழைக்கலர் போலும்.

இ—ள்: தவ்வு அற ஈண்டு அமர் தானவர்—அழிவின்றி இந்நகரத்திலிருக்கின்றஅசுரர்கள், மெய் வலி மாயைகள் ஆற்ற மேவினரேனும்—சரீரவலியையும் மாயங்களையும் மிகஉடையவர்களாயினும், தெவ் அடு சூர் முதல் திண் படை அஞ்சி—பகைவரையழிக்கின்ற சூரபன்மனாகியதலைவனது வலியபடைக்குப்பயந்து, இவ் இயல் தன்னை இழைக்கலர்—இந்தச்செயலைச்செய்யமாட்டார்கள் எ—று.

படை சேனையும் ஆயுதமுமாம். இயல்-தன்மை. உம்மை சிறப்பு. (எ)

ஆதலி னன்னவ ராற்றல ரென்னி
னீதொரு செய்கை யிழைத்தவர் யாரோ
தாதை யகன்றுழி தானவ ரோடிங்
காதல னிந்நகர் காத்தது நன்றால்.

இ—ள்: ஆதலின் அன்னவர் ஆற்றலர்— ஆனகாரணத்தால் அவர்கள் இதனைச்செய்யமாட்டார்கள், என்னில்—அங்ஙனமாயின், ஈது ஒரு செய்கை இழைத்தவர் யாரோ—இந்தச்செயலைச்செய்தவர்கள் யாவரோ?, தாதை அகன்றுழி—என்பிதாஇந்நகரைநீங்கி வேறிடத்திற்போனபொழுது, காதலன்— புதல்வனாகியயான், தானவரோடும்—அசுரர்களுடன், இ நகர் காத்தது—இந்நகரத்தைக்காவல்செய்தது, நன்று—நன்றாயிருக்கின்றது! எ—று.

குறிப்பால் தன்னையிழித்துக்கூறினான். ஓ-ஐயம். (அ)

காய மொடுங்கு கனற்சிர மூடு
போயது வல்லை புறஞ்செல நோற்று
மாயை பெரும்படை வன்மைகள் வேத
னீயமுன் வாங்கிய வென்செய னன்றால்.

இ--ள்: காயம் ஒடுங்கு கனல்—உதராக்கினியானது, சிரம் ஊடு போயது—பிரமரந்திரம்வரையும் சொலித்து, வல்லை புறம் செல—விரைவிற்புறத்தே செல்லும்படி, நோற்று—தவஞ்செய்து, மாயை பெரும் படை வன்மைகள்—மாயங்களும் சிறந்தபடைக்கலங்களும் சரீரவலியும் ஆகிய இவையனைத்தையும், வேதன் ஈய -பிரமதேவர்தர, முன் வாங்கிய—முற்காலத்திற்பெற்றுக்கொண்ட, என் செயல்—என்னுடையசெய்கை, நன்று—நன்றாயிருக்கின்றது! எ--று.

காயமொடுங்குகனல்-உதராக்கினி. வாயுவையடக்கி அதனால் உதராக்கினியைச்சொலிப்பித்துப் புருவமத்தியத்திலிருக்கும்அமிர்தத்தையுருகச்செய்து சரீரத்தினுள்ளிடங்களை நனைவித்தல் தவஞ்செய்வார்க்கியல்பென்க. போயது முற்றெச்சம். போய் அது எனவகுப்பினுமாம். வேண்டியவரங்களையெல்லாம்பெற்றிருந்தும் இந்நகரைக்கடலிலாழவிடுத்தேனேயென்று தன்னையிகழ்ந்தனனென்க.

தந்தை யுறாது தணந்துழி யாங்கோர்
மைந்த னிருந்துதன் மாநக ரோடு
மந்தி லகன்கட லாழ்ந்தன னென்றா
னந்தம ரென்னை நகைப்பர்க ளன்றே.

இ—ள்: தந்தை உறாது தணந்துழி- பிதா இருந்தவிடத்திலின்றிப் பிறவிடஞ்சென்றபொழுது, ஓர் மைந்தன் ஆங்கு இருந்து- ஒருபுத்திரன் அந்தஇடத்திலிருந்துகொண்டு, தன் மா நகரோடும் — தன்னுடைய சிறந்தநகரத்துடன், அகன் கடல ஆழ்ந்தனன் என்றால்—விசாலமானசமுத்திரத்திலமிழ்ந்தினனென்றுகேள்வியுற்றால், நம் தமர் என்னை நகைப்பர்கள் அன்றே—எங்கள்சுற்றத்தவர்கள் என்னைச்சிரிப்பார்களல்லவா! எ—று.

ஆங்கு-பிதாவினிடத்தில். அந்தில்-அசைநிலை. தன்செயலைப் படர்க்கையாகக்கூறினான். (௧௦)

மன்னவ னீது மதித்திடின் மற்றென்
றன்னை யடும்பெறு தாதையு மற்றே
பின்னுள ரெள்ளுவர் பெற்றியி தாமே
லென்னிய னன்றென வெண்ணி யினைந்தான்.

இ—ள்: மற்று—இன்னும், மன்னவன் ஈது மதித்திடில்—எங்களரசனாகிய சூரபன்மன் இந்நிகழ்ச்சியையறிந்தால், என் தன்னை அடும்—என்னைத்தண்டிப்பான், பெறு தாதையும் அற்றே—என்னைப்பெற்றபிதாவும் அப்படியே (தண்டிப்பான்), பின் உளர் எள்ளுவர்—மற்றையஅசுரர்கள் இகழ்வார்கள், பெற்றி இது ஆமேல்—இத்தன்மையானசம்பவம் நிகழ்ந்திருந்தால், என் இயல் நன்று—என்னுடையசெயல் நன்றாயிருக்கின்றது!, என எண்ணி—என்றுநினைத்து, இனைந்தான்—வருந்தினான் எ—று.

இது என்னுஞ்சுட்டுப்பெயர் முதனீண்டது. அதிவீரனென்னும்பெயரைப்பெற்றயான் இனத்தாரிகழவும் என்பிதாவும் அரசனும் தண்டிக்கவுந்தக்கதாக வீரத்தையிழந்தேனேயென்று துக்கித்தான் என்பதாம். மற்று-வினைமாற்று. ()

இனைந்ததி வீர னெனுந்திறன் மைந்தன்
கனைந்திடு கின்ற கடற்கிடை யாழ்வோ
னனந்தர மூழ்வினை யாற்றலி னன்னான்
மனந்தனி லீதொரு தன்மை மதித்தான்.

இ—ள்: கனைந்திடுகின்ற கடற்கு இடை ஆழ்வோன்—ஒலிக்கின்றசமுத்திரத்தில் அமிழ்ந்துகின்ற, அதிவீரன் எனும் திறல் மைந்தன் அன்னான்—அதிவீரனென்னும்பெயரையுடைய வலிய அந்தப்புதல்வன், இனைந்து—இவ்வாறுவருந்தி, அனந்தரம்—பின்பு, ஊழ்வினை ஆற்றலின்—பழையவினையின்வலியினால், மனம் தனில்—தன்மனத்தில், ஈது ஒரு தன்மை மதித்தான்—பின்கூறப்படுவதாகிய ஒருசெயலைச்செய்யநினைத்தான் எ—று.

கனைத்திடுகின்ற எனற்பாலது மெலித்தல்விகாரமாய்நின்றது. போர்செய்திறப்பவனாதலின் 'ஊழ்வினையாற்றலின்' எனவும், கடலிலாழும்பொழுதே இவற்றையெல்லாஞ்சிந்தித்தனனென்பார் 'கனைந்திடுகின்றகடற்கிடையாழ்வோன்-மதித்தான்' எனவும் கூறினர். (கஉ)

ஒல்லொலி சேருவ ரிக்கடன் மீதாய்ச்
செல்லுவன் யாரிது செய்தன ரென்றே
வல்லையி லோர்குவன் மற்றவர் தம்மைக்
கொல்லுவன் மெய்ப்படு சோரி குடிப்பன்.

இ—ள்: ஒல் ஒலி சேர் உவரி கடல் மீது ஆய் செல்லுவன்— ஒல்லென்னுங்குறிப்பொலிபொருந்திய உவர்க்கடலின்மேலெழுந்துசெல்வேன், யார் இது செய்தனர் என்று வல்லையில் ஓர்குவன்- -எவர் இச்செயலைச்செய்தாரென்று விரைவில் ஆராய்ந்தறிவேன், மற்று அவர் தம்மை கொல்லுவன்— அன்றியும் அவர்களைக்கொல்லுவேன், மெய் படு சோரி குடிப்பன்— அவரதுசரீரத்திற்பொருந்திய இரத்தத்தையும்பருகுவேன் எ—று.

மற்று-வினைமாற்று. சென்று ஓர்ந்து கொன்று குடிப்பனென முற்றுக்களை எச்சமாக்கியியைக்க. (கங)

என்றதி வீர னிரும்படை யாவு
மொன்றற வாரி யுருத்தனி கத்து
ணின்றுளர் தங்களை நேடுபு கொண்டே
வன்றிரை வேலையின் மீமிசை வந்தான்.

இ—ள்: அதிவீரன்—அதிவீரனென்னுமசுரன், என்று— இவ்வாறுசிந்தித்து, இரும் படை யாவும் ஒன்று அற வாரி— பெரியபடைக்கலங்களெல்லாவற்றையும் ஒன்றுந்தவறாமல் எடுத்துக்கொண்டு, உருத்து—கோபங்கொண்டு, அனிகத்துள் நின்றுளர் தங்களை நேடுபு கொண்டு— சேனைவீரர்களுள்நின்றவர்களைத் தேடியழைத்துக்கொண்டு, வன் திரை வேலையின் மீமிசை வந்தான்— வலிய திரைபொருந்தியகடலின்மேல் எழுந்துவந்தான் எ—று.

கடலுளாழ்ந்தனவாயினும் முன்வைத்தகுறிப்பின்வழியேதவறாது தேடியெடுத்துக்கொண்டென்பார் 'ஒன்றறவாரி' எனவும், ஆழ்ந்தாரையும் எழுந்தோடினாரையுமொழித்து எஞ்சிநின்றாரையென்பார் 'நின்றுளர்தங்களை' எனவுங்கூறினர்.

வேறு.

விடலைதிரு முன்னமதி வீரனனி கங்கள்
புடையில்வர நீரின்மிசை பொள்ளென வெழுந்தா
னடுதொழி லியற்றியிடு மாதிதனை யெய்தக்
கொடியவிடம் வார்கடல் குலாய்நிமிர்வ தேபோல்.

இ—ள்: அடு தொழில் இயற்றியிடும் ஆதி தனை எய்த—சங்காரகிருத்தியத்தைச்செய்கின்ற முதற்கடவுளாகியசிவபெருமானையணுகநினைந்து, கொடிய விடம் வார் கடல் குலாய் நிமிர்வதே போல்— கொடியநஞ்சானது நீண்டகடலினின்றுங்கிளர்ந்தெழுவதையேபோல, அதிவீரன்—அதிவீரனானவன், அனிகங்கள் புடையில் வர—சேனைகள்பக்கத்தில்வர, நீரின்மிசை—கடனீரின்மேல், விடலை திரு முன்னம்—வீரவாகுதேவருக்கெதிரே, பொள் என எழுந்தான்— விரைவிலெழும்பினன் எ—று.

நஞ்சு கடலினின்றும்பரந்துதோற்றிச் சிவபிரானுக்கெதிரேசென்றாற்போல அதிவீரனும் சேனைகளுடன்கடலினின்றெழுந்து வீரவாகுதேவருக்கெதிரேசென்றான் என்பதாம். (௧௫)

விழுந்திடு மிலங்கைதனில் மேவுமதி வீர
னெழுந்துதன தானையொ டிருங்கட லுளங்கிக்
கொழுந்துமிசை சென்றனைய கோலமொடு நின்ற
செழுந்திறல்கொண் மொய்ம்புடைய செம்மனிலை கண்டான்.

இ—ள்: விழுந்திடும் இலங்கை தனில் மேவும் அதிவீரன்— கடலிலமிழ்ந்திய இலங்கைநகரிலிருந்த அதிவீரனென்பான், தன தானையொடு எழுந்து— தன்னுடையசேனைகளோடுமெழும்பி, இரும் கடலுள்—பெரிய சமுத்திரத்துள், அங்கி கொழுந்து மிசை சென்று அனைய கோலமொடு நின்ற— அக்கினிச்சுவாலை மேலோங்கினாற்போன்றவடிவத்தோடுநின்ற, செழும் திறல் கொள் மொய்ம்பு உடைய செம்மல் நிலை கண்டான்—செழுமையான வலிமைபொருந்திய புயங்களையுடைய தலைவராதுநிலையைப்பார்த்தான் எ—று.

வீரவாகுதேவர் அங்குநிற்பதைக்கண்டானென்பதாம். கடலுள் நின்ற செம்மல் எனஇயையும். சிவந்தநிறமும் உக்கிரமுமமைந்ததோற்றமுடையராய்நிற்றலின் ‘அங்கிக்கொழுந்துமிசைசென்றனையகோலமொடுநின்ற’ என்றார். (௧௬)

கண்டனன் வெகுண்டிதழ் கறித்துநகை செய்யா
வண்டர்குழு வானிவனொ ராண்டகைநம் மூதூர்
தெண்டிரையி லாழும்வகை செய்துமிவ னின்றா
னெண்டிசை தொழுந்தகுவ ராணையினி தென்றான்.

இ—ள்: கண்டனன்—அவருடையநிலையைப்பார்த்து, வெகுண்டு—கோபித்து, இதழ் கறித்து—உதடுகளைக்கடித்து, நகைசெய்யா—சிரித்து, அண்டர் குழுவான் இவன் ஒர் ஆண்டகை--தேவர்கூட்டத்திலுள்ளவனாகிய இந்தஒருவீரன், நம் முது ஊர் தெள் திரையில் ஆழும்வகை செய்தும்— எங்கள்பழையநகரத்தைத் தெளிந்ததிரைபொருந்திய கடலிலமிழ்ந்தும்படிசெய்தபின்னும், இவண் நின்றான்—இவ்விடத்தில் அஞ்சாதுநின்றான், எண் திசை தொழும் தகுவர் ஆணை இனிது—எட்டுத்திக்கிலுள்ளாராலுந்தொழப்படுகின்ற அசுரர்களது அரசியல் நன்றாயிருக்கின்றது!, என்றான்—என்றுசொன்னான் எ—று.

தெண்டிரை-அன்மொழித்தொகை. உம்மை எச்சம். இனிது-குறிப்பானிழித்தது. நம்மைக்கண்டவுடனஞ்சியோடுமியல்பினராகியதேவர்களதுகூட்டத்தானென்பான் ‘அண்டர்குழுவானிவனொராண்டகை’ எனவும், திக்குவிசயஞ்செய்து உலகமுழுதும்நாட்டிய எங்கள்வீரத்திறத்தை இதுகாறுங்காட்டாதொழிந்தோமென்பான் ‘எண்டிசைதொழுந்தகுவராணையினிது’ எனவும் கூறினான். (௧௭)

என்றுமொழி யாவிரைவில் யாளிமுகன் மைந்தன்
கொன்றிவன தாருயிர் குடிப்பனென வுன்னிச்
சென்றிடலு மாழ்ந்தவர் செயற்கையது காண்பா
னின்றதொரு பேரறிஞ னீர்மையது கண்டான்.

இ—ள்: யாளிமுகன் மைந்தன்—யாளிமுகனதுபுதல்வனாகிய அதிவீரன், என்று மொழியா—என்றுசொல்லி, விரைவில் கொன்று இவனது ஆர் உயிர் குடிப்பன்—விரைவாகக் கொலைசெய்து இவனுடைய அரியவுயிரைப்பருகுவேன், என உன்னி—என்றுநினைத்து, சென்றிடலும் எதிரேபோக, ஆழ்ந்தவர்செ

யற்கை அது காண்பான் நின்றது ஒரு பேர் அறிஞன்—கடலிலமிழ்ந்தியவர்களது செயலைக்காணும்படி அங்குநின்ற சிறந்தஅறிவுடையவராகிய வீரவாகுதேவர், நீர்மை அது கண்டான்—அத்தன்மையைப்பார்த்தார் எ—று.

மொழியா உன்னிச் சென்றிடலும் கண்டான் எனஇயையும். கடலிலாழ்ந்தவர்கள் எழுந்து யாதுசெய்கின்றார்களென்பதைக் கண்டுசெல்லுமாறு நின்றாராதலின் 'ஆழ்ந்தவர்செயற்கையதுகாண்பானின்றதொருபேரறிஞன்' என்றார். ()

ஆனபொழு தத்தினி லவன்புடையில் வந்த
தானவர்கள் சூழ்ந்தனர் சமர்த்தொழி லியற்ற
மானவிற லோன்றனது வாளுறை கழித்தே
யூனொடுயிர் சிந்திட வொல்லையடல் செய்தான்.

இ—ள்: ஆன பொழுதத்தினில்-அவ்வாறானசமயத்தில், அவன் புடையில் வந்த தானவர்கள்—அந்த அதிவீரனது பக்கத்திற்சூழ்ந்துவந்த அசுரர்கள், சூழ்ந்தனர் சமர்த்தொழில் இயற்ற— வளைந்துநின்றுபோர்த்தொழிலைச்செய்ய, மானவிறலோன்—எவராலுங்கொண்டாடப்படுகின்றவலியையுடைய அவர், தனதுவாள் உறை கழித்து—தம்முடைய வாட்படையைஉறையினின்றும் நீக்கி, ஊனொடு உயிர் சிந்திட—உடலுமுயிருஞ்சிதையும்படி, ஒல்லை அடல் செய்தான்—விரைவில்அவர்களையழித்தார் எ—று.

மானம்—மதிப்பு. (௧௯)

அற்றன சிரத்தொகுதி யற்றன கரங்க
ளற்றன புயத்தொகுதி யற்றன பதங்க
ளற்றன பெருமபுறமு மற்றவுடன் முற்று
மற்றனர்கள் யாருமுயி ரற்றதவர் பூசல்.

இ—ள்: சிரத்தொகுதி அற்றன—தலைக்கூட்டங்கள் வெட்டுப்பட்டன, கரங்கள் அற்றன—கைகள்வெட்டுப்பட்டன, புய தொகுதி அற்றன—புயக்கூட்டங்கள்வெட்டுப்பட்டன, பதங்கள் அற்றன—கால்கள்வெட்டுப்பட்டன, பெரும் புறமும் அற்றன- பெரியமுதுகுகளும்வெட்டுப்பட்டன, உடல் முற்றும் அற்ற—சரீரமுழுவதும் வெட்டுப்பட்டன, யாரும் அற்றனர்கள்—எல்லோரும் (இவ்வாறே) வெட்டுப்பட்டார்கள், உயிர் அற்றது—அவர்களுடைய ஆன்மாப்பிரிந்தது, அவர் பூசல் அற்றது—அவர்களுடைய போரும் முடிந்தது எ—று.

பற்பலர் இவ்வாறுவெட்டுப்பட்டுஇறக்க அவர்களுடையபோர்முயற்சி ஒய்ந்தது என்பதாம். உயிர்-சாதியொருமை. (௨௦)

பங்கிசெறி செந்தலைகள் பாய்குருதி நீர்மே
லெங்கணு மிதப்பன விருங்கடலி னூடே
செங்கொடி படர்ந்திடு செழும்பவள வைப்பி
லங்கமல மானவை யலர்ந்திடுதல் போலும்.

இ—ள்: செம் பங்கி செறி தலைகள்—செங்குஞ்சிநெருங்கியதலைகள், பாய் குருதி நீர் மேல் எங்கணும் மிதப்பன—பாய்கின்ற இரத்தவெள்ளத்தின்மேல் எங்கும் மிதக்குந்தன்மை, இரும் கடலின் ஊடே—பெரியகடலின்கண்ணே, செம் கொடி படர்ந்திடு செழும் பவள வைப்பில்-சிவந்தகொடிகளாகப்படர்ந்திருக்கின்ற செழுமையான பவளத்தையுடைய இடத்தில், அம் கமலம் ஆனவை அலர்ந்திடுதல் போலும்—அழகியதாமரைமலர்கள் அலர்ந்திருக்குந்தன்மைபோலும் எ—று.

இரத்தவெள்ளத்திற்குக்கடலும் பவளக்கொடிபடர்ந்தஇடத்துக்குச் செம்பங்கியும் முகத்திற்குத்தாமரைமலரும் உவமை. (௨௧)

அற்றமகல் வீரனவு ணப்படை துணிப்பச்
செற்றிய பிணத்தொகை திரைப்புணரி தூர்த்து
மற்றுமிசை போந்துமணி யாலுமொ ரிலங்கைப்
பொற்றைய தியற்றியது போன்றுளது மாதோ.

இ—ள்: அற்றம் அகல் வீரன் அவுணப்படை துணிப்ப—சோர்வில்லாத வீரவாகுதேவர் அசுரசேனைகளைவெட்ட, செற்றிய பிண தொகை—நெருங்கிய பிணக்கூட்டங்கள், திரை புணரி தூர்த்து—திரைபொருந்தியகடலை நிரப்பி, மற்றும் மிசை போந்து—பின்னும்மேலோங்கி, மணியாலும் ஓர் இலங்கை பொற்றையது இயற்றியது போன்று உளது—நீலரத்தினத்தாலும் ஒருஇலங்கைமலையைச்செய்தாற்போலிருந்தது எ—று.

மற்று-வினைமாற்று. உம்மைகள்-எச்சங்கள். கடலினடுவேஅகன்றுயர்ந்து கருநிறமுடையதாய்த்தோன்றுதலின் இவ்வாறுவமித்தார். அவுணருடல்கரியனவாதலின் மணி-நீலம். (௨௨)

தன்படை விளிந்துசல திக்கடலுள் வீழ
முன்பனதி வீரன்முனி யாவதனை நோக்கி
யென்புடையி னோரையெறிந் தாய்கடிதி னின்னைத்
தின்பனது காண்டியென வீரமொடு முயன்றான்.

இ—ள்: தன் படை விளிந்து சலதி கடலுள் வீழ—தன்னுடையசேனைகளிறந்து ஆழமானகடலுள் விழ, முன்பன் அதிவீரன்—அவர்களுக்குத்தலைவனாகிய அதிவீரனென்பான், அதனை நோக்கி முனியா—அத்தன்மையைப்பார்த்துக்கோபித்து, என் புடையினோரை எறிந்தாய்— என்பக்கத்தவர்களையெல்லாம் வெட்டியழித்தாய் (ஆதலின்), கடிதில் நின்னை தின்பன்—விரைவில் உன்னைக்கொன்று தின்பேன், அது காண்டி—அதனைப்பார், என—என்று வீரம்பேசி, செரு முயன்றான்—போர்செய்யத்தொடங்கினான் எ—று.

சலதிக்கடல்-இருபெயரொட்டு. நம்மவரென்பான் 'என்புடையினோர்' என்றான். (௨௩)

சொல்லுமதி வீரன்வரு தோற்றமது காணா
வல்லைவரு கென்றுதிறல் வள்ளலு மழைப்ப
வெல்லையத னிற்செருவின் ஏற்றிவனை யின்னே
கொல்லுகென வங்கணொரு குந்தமதெறிந்தான்.

இ—ள்: திறல் வள்ளலும்—வீரவாகுதேவரும், சொல்லும் அதிவீரன் வரு தோற்றம் அது காணா—அவ்வாறுவீரம்பேசிய அதிவீரன்வருகின்றதோற்றத்தைக்கண்டு, வல்லை வருக என்று அழைப்ப—விரைவில்வருவாயாகவென்று அழைக்க, எல்லை அதனில்—அப்பொழுது, செருவின் ஏற்று இவனை இன்னே கொல்லுக என—போரிலெதிர்த்து இவனையிப்பொழுதேகொல்லுவாயென்று பணித்து, அங்கண்—அவ்விடத்தில், ஒரு குந்தமது எறிந்தான்—ஒருவேற்படையைச்செலுத்தினான் எ—று.

தோற்றமென்பது போருக்கத்தை. அதுஇரண்டும்-பகுதிப்பொருள்விகுதிகள். வருக என்பதில் அகரந்தொக்கது. உம்மை-எச்சம். எல்லையதனில்—அங்ஙனம்போர்மூண்டபொழுது. வல்லைவருக என்றதனால் அவனதுவீரப்பேச்சிற்கும்

போருக்கத்திற்கும் வீரவாகுதேவர் சிறிதுமஞ்சினாரல்லரென்பது குறிக்கப்பட்டது. (உச)

உய்த்ததொரு கூரயி லுரத்தினுறு முன்னர்
மத்தகய னேர்விடலை மற்றது தெரிந்தே
கைத்தல மிருந்திடு கனற்புரையும் வாளா
லத்துணை யிரண்டுதுணி யாய்விழ வெறிந்தான்.

இ—ள்: உய்த்தது ஒரு கூர் அயில் உரத்தில் உறும் முன்னர்—அவன்செலுத்திய கூரியவேற்படை மார்பிற்படுதற்குமுன், மத்த கயம் நேர் விடலை—மதயானையைப்போன்ற வீரவாகுதேவர், அது தெரிந்து—அதனைக்கண்டு, அத்துணை—அப்பொழுது, கைத்தலம் இருந்திடு கனல் புரையும் வாளால்—கையிலிருந்த அக்கினியைப்போன்ற வாட்படையினால், இரண்டு துணி ஆய் விழ எறிந்தான்—இரண்டுதுண்டாய்விழும்படி வெட்டினார் எ—று.

திண்மையானவடிவமும் மிகுந்தசரீரபலமும் அஞ்சத்தக்ககாட்சியுமுடையராதலின் மதயானையையுவமித்தார். பேரொளியைவீசுதலின் 'கனற்புரையும்வாள்' என்றார். (உரு)

கண்டுமுற ஞாங்கரது கண்டுதிறன் மைந்தன்
றண்டம்விரைந் தொன்றொரு தடக்கைகொ டெடுத்தே
மண்டமர்செ யுன்னுயிரை வாங்குமிஃ தென்னா
வண்டர்புகழ் காளைதன தாகமுற விட்டான்.

இ—ள்: ஞாங்கர் கண்டம் உற—வேற்படை இருதுணியாக, திறல் மைந்தன் அது கண்டு—அதிவீரன் அத்தன்மையைப்பார்த்து, தண்டம் ஒன்று—ஒருதண்டாயுதத்தை, விரைந்து ஒரு தட கை கொடு எடுத்து—விரைவாக விசாலித்த ஒருகையினாலெடுத்து, இஃது—இப்படை, மண்டு அமர் செய் உன் உயிரை வாங்கும் என்னா—நெருங்கியபோரைச்செய்கின்ற உன்னுடையஉயிரைக்கவருமென்றுகூறி, அண்டர் புகழ் காளை தனது ஆகம் உற விட்டான்—தேவர்களாற்புகழப்படுகின்ற வீரவாகுதேவரது மார்பில்மோதும்படி செலுத்தினான் எ—று.

திறல்மைந்தன்-வீரத்தையுடையபுதல்வன். காளை-எருதுபோல்வான், ஆகுபெயர். யான்முன்னேவியவேற்படைபோல இத்தண்டம் துணிக்கப்படக்கூடியதன்று தவறாதுகொல்லும் என்பான் 'மண்டமர்செயுன்னுயிரைவாங்குமிஃது' என்றான். தேவர்புகழ்வது தமக்காய்த்தாதுசென்றமையாலும் அசுரரையழித்தமையாலும் பெருந்தகைமையினாலுமென்க. (உசு)

வேறு.

விட்ட காலையத் தண்டினை வெலற்கருந் திறலோ
னட்டி டான்றனி வாளினா லேற்றன னகலம்
பட்டு மற்றது நுண்டுக ளாகவப் பதகன்
மட்டி லாததோர் விம்மித மெய்தினன் மறுகி.

இ—ள்: விட்ட காலை—அவ்வாறுசெலுத்தியபொழுது, வெலற்கு அரும் திறலோன்—பிறரால்வெல்லுதற்கரியவலியையுடைய வீரவாகுதேவர், அ தண்டினை—அந்தத்தண்டாயுதத்தை, தனி வாளினால் அட்டிடான்—ஒப்பற்றவாட்படையினால் வெட்டாமல், அகலம் ஏற்றனன்—நெஞ்சுகொடுத்து ஏற்றார், அது பட்டு நுண் துகள் ஆக-(அப்பொழுது)அத்தண்டம் அவரதுநெஞ்சிற்பட்டுச்சிறுதுகளாயழிய, அ பதகன்—அந்தப்பாதகனாகிய அதிவீரன், மறுகி—மனந்தளர்ந்து, மட்டு இலாதது ஓர் விம்மிதம் எய்தினன்— அளவிறந்தஆச்சரியத்தையடைந்தான் எ—று.

மிகநொய்மையானஆயுதத்தையேவிவிட்டு வீரம்பேசினனாதலின் வாளால் வெட்டாது மார்பினேற்றுத் தம்வீரத்தை அவனுக்குக்காட்டினர். பெரியார்க்குத் தீங்குசெய்தலாற் 'பதகன்' என்றார். எதிர்ப்பட்டபொருளைத்தவறாதுதகர்க்க வல்லதண்டம் இவனதுநெஞ்சிற்பட்டமாத்திரத்திற்றுகளாயிற்றே இனியான் இவனைவெல்வதெங்ஙனம் என்றுசிந்தித்துழி, பெருவியப்பும் மனத்தளர்வுந்தோன்றின. (௨௭)

வேறோர் முத்தலைப் படையது கொண்டதி வீரன்
மாறி லாவிறன் மொய்ம்பினன் றன்மணி மார்பி
னூறு செய்திற மோச்சலுங் கண்டுநம் முரவோன்
சீறி யாங்கது பற்றினன் செங்கையா லிறுத்தான்.

இ—ள்: அதிவீரன்— அதிவீரனானவன், வேறு ஓர் முத்தலை படை அது கொண்டு— அதன்பின் வேறொருசூலப்படையையெடுத்து, மாறு இலா விறல் மொய்ம்பினன் தன் மணி மார்பின்—ஒப்பில்லாதவீரவாகுதேவரது அழகியமார்பில், ஊறு செய் திறம் ஓச்சலும்—ஊறுபாட்டைச்செய்யும்வண்ணம் வீசுதலும், நம் உரவோன் கண்டு—எங்கள்வீரவாகுதேவர் அதனைப்பார்த்து, சீறி—கோபித்து, அது பற்றினன்—அப்படையைப்பிடித்து, செம் கையால் இறுத்தான்—சிவந்தகையினால்முரித்தார் எ-று.

யுத்தப்பயிற்சி வீரம் சரீரபலம் என்பவற்றால் எவரினும்மிக்கவென்பார் 'மாறிலா' என்றார். நல்லோர்களைத்தம்பக்கத்தவராக்கூறுவது கவிஞரியல்பு. முன்போல வாளாநிற்பின் ஊறுசெய்யுமாதலின் கையாற்பற்றிமுரித்தனர். (௨௮)

இறுத்த காலையி லிலங்கையில் யாளிமா முகன்சேய்
செறுத்து மற்றிவன் றனையட லரிதெனச் சிந்தை
குறித்து மற்றொரு நாந்தக மேந்தினன் குறுகி
வெறித்த கொண்டலுட் கொட்புறு மின்னென விதிர்த்தான்.

இ—ள்: இறுத்த காலையில்—அங்ஙனம் முரித்தபொழுது, இலங்கையில் யாளி மா முகன் சேய்—இலங்கையிலிருந்த யாளிமுகனது புதல்வனாகிய அதிவீரன், செறுத்து—கோபித்து, இவன் தனை அடல் அரிது என சிந்தை குறித்து— இவனையழித்தல் அருமையானகாரியமென்று மனத்தில்நினைத்து, மற்று—பின்னும், ஒரு நாந்தகம் ஏந்தினன் குறுகி— ஒருவாட்படையைக்கையிலெடுத்துக்கொண்டு அவரையணுகி, வெறித்த கொண்டலுள் கொட்புறும் மின் என— படலமாய்ச் செறிந்தமேகத்தினுட்பெயருகின்றமின்னலைப்போல, விதிர்த்தான்— சுழற்றினான் எ—று.

பகைவனுடைய போர்த்திறமையைக்காணுந்தோறுங்கோபம்விளைதல் வீரர்க்கியல்பு. வெல்லுதலரிதென்றெண்ணியபோதும் புறங்காட்டுதல் வீரத்திற்கிழுக்காதல்பற்றி முடிந்தவாறுமுடிகவென்றுநிச்சயித்து வாட்போர்க்குத்தொடங்கினான். மிகக்கரியமேனியையுடையஅதிவீரன் விரிந்தசோதிப்பரப்பையுடைய வாளையேந்திச்சுழற்றுந்தோறும் அவ்வாட்படையின்சோதி தன்மேனியினொளியை இடையிடையேவிழுங்கியுமிழ்தலின் மேகபடலத்திலுண்டாகின்ற மின்னலையுவமித்தார். (௨௯)

கறங்கி னிற்பெரு வட்டணை புரிந்துதன் கரமே
னிறங்கொள் வாளினை யிடம்வலந் திரித்தன னெறிமே
பிறங்கு மார்கலித் தெண்டிரை யலைதரப் பெரிது
மறங்கொ ணாந்தக மீனுகண் டலமரும் வகைபோல்.

இ—ள்: கறங்கினில் பெரு வட்டணை புரிந்து—காற்றாடியைப்போலப் பெருந்தூரத்தே சாரிகைசுற்றி, பிறங்கும் ஆர்கலி தெள் திரை அலைதர—விளங்குகின்ற சமுத்திரத்திலுள்ள தெளிந்ததிரைகள் அலையும்படி, மறம் கொள் நாந்தக மீன் பெரிதும் உகண்டு அலமரும் வகை போல்–மறத்தன்மையையுடைய வாள்மீன் மிகப்பாய்ந்து சுழலுந்தன்மையைப்போல, தன் கரமேல் நிறம் கொள் வாளினை இடம் வலம் நெறியே திரித்தனன்—தன்கையிலுள்ள ஒளிபொருந்தியவாட்படையை இடப்பக்கமும்வலப்பக்கமுமாக மாறிமாறிச்சுழற்றினன் எ—று.

தன்வடிவமும் சுற்றுந்திறமுந்தோன்றுதலாறு சூழ்ந்துவருதலின் காற்றாடியையுவமித்தார். வாள்போலுதலால் வாள்மீனெனப்பெயர்பெற்றது. இதனை வாளைமீனெனவும் வழங்குவர். மறம்- இரக்கமின்மை. (ூo)

ஏதி யிங்கிது நான்முகன் றந்துள தெவர்க்கும்
பேதகஞ்செய லரியதா லன்னது பிடித்தேன்
சாதி திண்ணநீ வருகென மிசைமொழி சாற்றிக்
கோதில் வீரன்முன் னணுகலு மனையவன் கூறும்.

இ—ள்: ஏதி இது நான்முகன் தந்துளது–இந்தவாட்படை (முற்காலத்திற்) பிரமதேவராற்றரப்பெற்றது, எவர்க்கும் பேதகம் செயல் அரியது—எவராலுமழித்தற்கரியது, அன்னது பிடித்தேன்—அப்படையையேந்தினின்றேன் (ஆதலின்), நீ சாதி—நீ இப்படையாலிறக்கின்றாய், திண்ணம்—இது நிச்சயம், வருக என—வருவாயாகவென்று, மிசைமொழி சாற்றி—பழிப்புமொழிகள்பேசி, கோது இல் வீரன் முன் அணுகலும்—குற்றமில்லாத வீரவாகுதேவருக்கெதிரேநெருங்குதலும், அனையவன் கூறும்—அவர் எதிர்கூறுவார் எ—று.

வஞ்சகப்போர்செய்யாமை புறங்கொடுத்தாரைத்தொடாமை எத்தகையவீரர்க்குமிடையாமை முதலிய இலக்கணங்களாற்சிறந்தவரென்பார் 'கோதில்வீரன்' என்றார். (ூக)

நன்று நன்றுநின் னாற்றலு மாண்மையு நம்மை
வென்றி யேயெனின் யாவரு மேலுனை வியப்பார்
நின்று நீசில மொழிவதென் கடிதுநே ருதியால்
வென்றி வீரருந் தமைப்புகழ் கிற்பரோ வென்றான்.

இ—ள்: நின் ஆற்றலும் ஆண்மையும் நன்று நன்று—உனதுவலியும் வீரமும் மிகநன்று, நம்மை வென்றியே எனின் யாவரும் மேல் உனை வியப்பார்— எம்மைவெற்றிகொண்டாயாயின் எல்லோரும் அதன்பின் உன்னைப்புகழுவார்கள், நீ நின்று சில மொழிவது என்—நீ தாமதித்துநின்று சிலவீண்வார்த்தைகளைப்பேசுவதாற்பயனென்னை?, கடிது நேருதி—விரைவிலெதிர்ப்பாய், வென்றி வீரரும் தமை புகழ்கிற்பரோ— வெல்லத்தகுந்தவீரர்களுந்தம்மைப்புகழுவார்களா?, என்றான்—என்றுகூறினர் எ—று.

வலி ஆண்மை என்னுமிவை சிறிதுமில்லாயென்பார் 'நன்றுநன்றுநின்னாற்றலுமாண்மையும்' எனவும், பிறர் உன்வீரச்செயலைக்கண்டுவியப்பதேவியப்பாமென்பார் 'நம்மைவென்றியேயெனில்யாவருமேலுனைவியப்பார்' எனவும், நீ பேசும்வார்த்தைகளால்யான்சிறிதுமஞ்சேனென்பார் 'நின்றுநீசிலமொழிவதென்' எனவும், வீரர் தம்மைச் செயலாற்பெருமைப்படுத்துவாரன்றி வாக்கினாற்பெருமைப்படுத்தநினையாரென்பார் 'வென்றிவீரருந்தமைப்புகழ்கிற்பரோ' எனவும் கூறினர். (ூஉ)

என்ன வொன்னலன் கிடைத்தனன் வீரனு மெதிர்ந்தா
னன்ன பான்மையர் வாளம ராடின ரகல்வான்

மின்னு மாமுகி றோன்றியே யெதிரெதிர் விரிந்து
பின்ன ருள்புகுந் துடனுடன் செறிந்தபெற் றிமைபோல்.

இ—ள்: என்ன—என்று வீரவாகுதேவர்கூறியவுடன், ஒன்னலன் கிடைத்தனன்— பகைவனுகிய அதிவீரன் கிட்டினுன், வீரனும் எதிர்ந்தான்— வீரவாகுதேவரும் எதிர்த்தார், அன்ன பான்மையர்—அத்தன்மையாகஎதிர்ப்பட்ட இருவரும், அகல் வான்—அகன்ற ஆகாயத்தில், மின்னு— மின்னல்கள், மா முகில் தோன்றி எதிர் எதிர் விரிந்து—பெரிய மேகத்தினின்றுந்தோற்றி ஒன்றற்கொன்றெதிராகப்பரந்து, பின்னர் உள் புகுந்து—பின் உள்ளேயடங்கி, உடன் உடன் செறிந்த பெற்றிமை போல்—பின்னும் உடனே பரந்ததன்மையைப்போல, வாள் அமர் ஆடினர்—வாட்போரைச்செய்தார்கள் எ—று.

தோன்றியவுடன்மறைந்தென்பார் ‘பின்னருள்புகுந்து’ என்றார். இருவரும் வாள்வீசும்பொழுது அவற்றின்சோதி ஒன்றற்கொன்றெதிராகத்தோற்றுவதும் உடன்மறைவதும் பின்னும் உடனேதோற்றுவதுமாக மாறிமாறிநிகழ்தலால் இவ்வாறுவமித்தார். (௫௫)

சென்னி நாடுவர் களத்தினை நாடுவர் செவிதாள்
கன்ன நாடுவர் புயங்களை நாடுவர் கரங்க
ளுன்னி நாடுவ ருரத்தினை நாடுவ ருகளப்
பொன்னின் வார்கழ னாடுவர் வாளமர் புரிவார்.

இ—ள்: வாள் அமர் புரிவார்-வாட்போரைச்செய்கின்ற அவ்விருவரும், சென்னி நாடுவார்-கொய்யும்படி தலைகளைக்குறிக்கொள்வார்கள், களத்தினை நாடுவர்-கழுத்தைக்குறிக்கொள்வார்கள், செவி தாள் கன்னம் நாடுவர்-காது கால் கன்னம் என்னுமிவைகளைக்குறிக்கொள்வார்கள், புயங்களை நாடுவர்— தோள்களைக்குறிக்கொள்வார்கள், கரங்கள் உன்னி நாடுவர்-கைகளை நினைத்துக்குறிக்கொள்வார்கள், உரத்தினை நாடுவர்-மார்பைக்குறிக்கொள்வார்கள், உகள பொன்னின் வார் கழல் நாடுவர்-பொன்மயமான நீண்ட இரண்டுகால்களையுங் குறிக்கொள்வார்கள் எ—று.

கைகள்வெட்டப்பட்டவுடன் வாட்போர்முடியுமாதலின் நுண்மையாய்க்குறிக்கொண்டாரென்பதுபோதர ‘கரங்களுன்னிநாடுவர்’ என்றார். (௫௬)

இணங்கு நீரவ ரிருவரு மினையன வுறுப்பி
லணங்கு செய்திடு மரபினு லாயிடை யுய்ப்பார்
நுணங்கு விஞ்சையின் வன்மையா னொய்தின்மாற் றிடுவார்
மணங்கொள் செந்நிற வாள்கொடே வட்டணை வருவார்.

இ—ள்: இணங்கும் நீரவர் இருவரும்—ஒத்த பயிற்சியையுடைய அந்த வீரர்களிருவரும், இனையன உறுப்பில் அணங்கு செய்திடும் மரபினுல்—முற்கூறியனபோன்ற அவயவங்களில் ஊறுசெய்யும்படியாக, ஆயிடை உய்ப்பார்—அவ்வவ்விடங்களில்வீசுவார்கள், நுணங்கு விஞ்சையின் வன்மையால் நொய்தில் மாற்றிடுவார்—நுண்மையான வாட்போர்ப்பயிற்சியின்சாமர்த்தியத்தால் விரைவில் அதனைவிலக்குவார்கள், மணம் கொள் செம் நிற வாள் கொடே வட்டணை வருவார்—மணங்கமழுகின்ற சிவந்தநிறத்தையுடைய வாளைச்சுழற்றிக்கொண்டே சுற்றிவருவார்கள் எ—று.

குறிக்கொண்ட உறுப்புக்களில்வீசுந்தோறும் விலக்குதலருமையாயிருப்பவும் தமது சாமர்த்தியத்தால் உடனுடன்விலக்கினரென்பார் ‘நுணங்குவிஞ்சையின்வன்

மையாறுய்தின்மாற்றிடுவார்' எனவும், முன்பற்பலவீரரைத்துணித்தவாளென்பார் 'மணங்கொள்செந்நிறவாள்' எனவுங்கூறினர். வட்டணைவருதல் தன்னுறுப்புக்களைப்பகைவன்குறிக்கொளாமைப்பொருட்டும் பகைவனுறுப்புக்களைத்தான் குறிக்கொளற்பொருட்டுமென்க. (ருரு)

போதமின்னதி லெம்பிரான் றூதுவன் பொருவா
னேதி கொண்டுளான் றன்னையான் வலிந்திட லியல்போ
வாத லாலிவன் படைமுறை வெல்வதே யறனென்
றோதி சேருளங் கொண்டன னிடைதெரிந் துற்றான்.

இ—ள்: போதம் இன்னதில்—இவ்வாறாகியசமயத்தில், எம்பிரான் தூதுவன்—முருகக்கடவுளது தூதராகிய வீரவாகுதேவர், பொருவான் ஏதி கொண்டு உளான் தன்னை யான் வலிந்திடல் இயல்போ—போர்செய்யும்படி வாட்படையையேந்திநிற்கின்ற இந்தவீரனை நான்வலிந்துகொல்வது தகுதியாமோ? (ஆகாதே!) ஆதலால்—ஆனகாரணத்தால், இவன் படை முறை வெல்வதே அறன்—இவனைப்படைக்கலப்போர்முறைப்படி வெல்வதே தருமமாம், என்று—என்று இவ்வாறே, ஓதி சேர் உளம் கொண்டனன்—ஞானமிகுந்த தம்முடையமனத்திற்சிந்தித்து, இடை தெரிந்து உற்றான்—சமயந்தெரிந்துநின்றார் எ—று.

தூதுவன் உளங்கொண்டனன் என இயையும். வாட்போர்செய்வானைப்பிறிதோருபாயத்தாற்கொல்வது நீதியன்றென்பார் 'ஏதிகொண்டுளான் றன்னையான் வலிந்திடலியல்போ' எனவும், வாளாற்றுணித்தேகொல்லவேண்டுமென்பார் 'படைமுறைவெல்வதேயறன்' எனவும், ஒழுகலாற்றைஆய்ந்துணருஞ்சிந்தையாதலின் 'ஓதிசேருளம்' எனவும், தாம்வாட்படையைவீசும்பொழுது பகைவன்விலக்கவியலாதசமயம்பார்த்தென்பார் 'இடைதெரிந்து' எனவும் கூறினர். (ருசா)

இடைபு குந்ததி வீரன தடிகளோ ரிரண்டு
முடியு மாகமுந் தோள்களு மாங்கொரு முறையே
சுடர்பி றங்கிய வாளினா லாண்டகை துணித்துக்
கடிது வீட்டின னடுவன்வந் தவனுயிர் கவர்ந்தான்.

இ—ள்: ஆண்டகை—ஆண்மைக்குணத்தையுடைய வீரவாகுதேவர், இடை புகுந்து—சமயம்வாய்க்கப்பெற்று, அதிவீரனது அடிகள் ஓர் இரண்டும்—அதிவீரனுடைய இரண்டுகால்களையும், முடியும்—தலையையும், ஆகமும்—மார்பையும், தோள்களும்—புயங்களையும், ஒருமுறையே—ஒருமுறையிற்றானே, சுடர் பிறங்கிய வாளினால் துணித்து—ஒளிவிளங்காநின்றவாட்படையினால்வெட்டி, கடிது வீட்டினன்—விரைவில் விழுத்தினார், நடுவன் வந்து அவன் உயிர் கவர்ந்தான்—யமன் அங்கேவந்து அவ்வசுரனுடையஆன்மாவைக் கிரகித்தான் எ—று.

ஒவ்வோருறுப்பிற்கும்வெவ்வேறுசமயம்பாராது ஒன்றன்பின்னொன்றாகத் துணித்துவீழ்த்தினராதலின் 'ஒருமுறையே-துணித்து' என்றார். நடுவன்-நடுநிலையாயிருப்பவன். ஆன்மாக்கள்செய்யும் புண்ணியபாவங்களின்வகையைத்தெரிந்து அவற்றிற்கேற்ற கதியிற்செலுத்துவோனாதலின் அங்ஙனம்வழங்குப. (ருஎ)

அதிவீரன்வதைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் கநிச.

மகேந்திரஞ்செல்படலம்.

வீரவாகுதேவர் மகேந்திரபுரியிற்சென்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் இலங்கையினின்றுநீங்கி ஆகாயமார்க்கமாகச்சென்று மகேந்திரநகரையணுகி உட்புகுதற்குமுயன்றார் என்பதாம்.

வீர வாகுநின் றவ்வதி வீரனை வீட்டித்
தாரை வாளுறை செலுத்தியே வெஞ்சமர் தணித்து
நேரில் வீரமா மகேந்திரம் போவது நினைந்தே
யேரு லாவரு மிலங்கையி னெல்லைநீத் தெழுந்தான்.

இ—ள்: வீரவாகு நின்று அவ் அதிவீரனை வீட்டி—வீரவாகுதேவர் இலங்கையில்நின்று அந்த அதிவீரனென்பானைக்கொன்று, தாரை வாள் உறை செலுத்தி—கூர்மையார்ந்த வாட்படையை உறையினுட்புகுவித்து, வெம் சமர் தணித்து—கொடியபோரையொழித்து, நேர் இல் வீர மா மகேந்திரம் போவது நினைந்து—ஒப்பில்லாதபெரிய வீரமகேந்திரபுரத்திற்குப்போகநினைத்து, ஏர் உலாவரும் இலங்கையின் எல்லை நீத்து எழுந்தான்—அழகுபொருந்திய இலங்கைநகரினெல்லையைவிட்டெழும்பினார் எ—று.

கடலிலாழ்ந்தாரெழமுன்னர் அப்பாற்செல்லுதல்கூடுமாகவும் அவர்செயலைக்காணுமாறுநின்றாராதலின் 'நின்று' எனவும், போர்முயன்ற அதிவீரனென்பார் 'அவ்வதிவீரன்' எனவும், மிகுந்தவீராவேசத்துடன்செய்தபோராதலின் 'வெஞ்சமர்' எனவும், செல்வம் அழகு முதலியவற்றால் மற்றைநகரங்களெல்லாவற்றினுஞ்சிறந்தவென்பார் 'நேரில்' எனவும், கடலுளமிழ்ந்திக்கிடத்தலின் இலங்கையைநீத்தென்றது 'இலங்கையினெல்லைநீத்து' எனவும் கூறினார். (க)

எழுந்து வான்வழிச் சேறலு மார்கலி யிடையே
விழுந்து கீழுறு மிலங்கைமீண் டெழுந்தது விரைவிற்
கழிந்த தொல்பர நீங்கிய காலையிற் கடலூ
டழுந்து கின்றபொற் றோணிமீச் சென்றிடு மதுபோல்.

இ—ள்: எழுந்து வான் வழி சேறலும்—வீரவாகுதேவர் எழும்பி ஆகாயமார்க்கமாகப்போனவுடன், ஆர்கலி இடையே விழுந்து கீழ் உறும் இலங்கை—கடலுள்முழுகியாழ்ந்த இலங்கைநகர், மீண்டு எழுந்தது—பின்னும் அக்கடலின்மேலெழுந்துநின்றது, கடல் ஊடு அழுந்துகின்ற பொன் தோணி—கடலினுள்ளமிழ்ந்துகின்றஅழகியமரக்கலம், கழிந்த தொல் பரம் நீங்கிய காலையில்—மிகுதியாயேற்றப்பட்ட பழையபாரம் இறக்கப்பட்டபொழுது, விரைவில் மீ சென்றிடும் அது போல்—விரைவாக மிதக்கின்றஅத்தன்மையைப்போல எ—று.

போல் எழுந்தது என இயைக்க. அளவுகடந்தவென்பார் 'கழிந்த' எனவும், ஏற்றுந்துறையிற்சுமத்தியபாரமென்பார் 'தொல்பரம்' எனவும் கூறினார். மரக்கலம் பாரமேற்றப்பட்டவழியாழ்ந்து இறக்கப்பட்டவுடன்மிதத்தல்போல, இலங்கைநகர் வீரவாகுதேவர்குதித்தவழியாழ்ந்து மேலெழுந்தவழி எழுந்ததென்க. (உ)

வார்த்த பங்கிய கழலவன் வான்வழிக் கொளலு
மீர்த்த தெண்கட னீத்தமே லெழுதரு மிலங்கை

சீர்த்த நான்முக னுறங்குழிச் சிந்துவூ டழுந்திப்
பேர்த்து ஞாலம்விட் டெழுதரு மேருவிற் பிறழும்.

இ—ள்: வார் தயங்கிய கழலவன் வான் வழி கொளலும்—வாரினாற்கட்டப்பெற்ற வீரக்கழலையுடைய வீரவாகுதேவர் ஆகாயமார்க்கமாகவெழுந்தவுடன், ஈர்த்த தெள் கடல் நீத்த மேல் எழுதரும் இலங்கை—குளிர்ந்த தெளிந்த கடல்நீரின் மேற்கிளர்ந்த இலங்கைநகர், சீர்த்த நான்முகன் உறங்குழி சிந்து ஊடு அழுந்தி—சிறப்பினையுடையபிரமதேவர் நித்திரைசெய்யும்போதுகடலிலமிழ்ந்தி, பேர்த்தும் ஞாலம் விட்டு எழுதரும் மேருவில்—மீட்டும் பூமியினின்றுமேலோங்குகின்ற மேருமலையைப்போல, பிறழும்—விளங்கும் எ—று.

படைத்தற்றொழில்செய்பவராதலாலும் தேவத்தலைவர்களுளொருவராதலாலும் 'சீர்த்தநான்முகன்' என்றார். பூமிக்காதாரமாயிருக்கும்மேருமலை பிரளயகாலத்தில் நிலைதப்பியாழ்வதும் பின்னரெழுவதும் இயற்கையென்க. (௩)

எள்ளு நீரரைப் பற்பக லாற்றலி னிலங்கை
கொள்ளை வெம்பவ மாசிரு ளடைந்தது குறைதீர்
வள்ள றாள்பட நீத்தது பவந்துகண் மாற்றத்
தெள்ளு நீர்க்கடல் படிந்தெழுந் தாலெனத் திகழும்.

இ—ள்: எள்ளும் நீரரை பற்பகல் ஆற்றலின்—இகழப்படுமியல்பினராகிய அசுரர்களைப்பலநாளாகச்சுமத்தலினால், இலங்கை—இலங்கைநகர், கொள்ளை வெம் பவ மாசு இருள் அடைந்தது—கூட்டமான கொடிய பாவமாகியகுற்றம்பொருந்திய இருளைப்பெற்றிருந்து, குறை தீர் வள்ளல் தாள் பட பவம் நீத்தது—குற்றமற்ற வீரவாகுதேவரது பாதங்கள்படுதலினால் அப்பாவத்தைநீக்கியதாய், துகள் மாற்ற—தன்மேற்பற்றியிருந்த அழுக்கைநீக்கநினைந்து, தெள்ளும் நீர் கடல் படிந்து எழுந்தால் என—தெளிந்த நீர்மிகுந்த கடலில்முழுகியெழுந்தாற்போல, திகழும்—விளங்கும் எ-று.

எளியகுணத்தையுந்தொழிலையுமுடையரென்பார் 'எள்ளுநீரர்' எனவும், அளவிடப்படாத பெரும்பாவமென்பார் 'கொள்ளைவெம்பவம்' எனவும், அவை இருள்சூழ்ந்தாற்போலஅந்நகரின்மகிமையைமறைத்தலின் 'பவமாசிருள்' எனவுருவகப்படுத்தியும், அவற்றையெல்லாம் தீண்டியவுடன்போக்கவல்லாராதலின் 'குறைதீர்வள்ளல்' எனவும், அவரால் அகத்திருளாகியபாவம்போக்கப்பட்டதன்றே புறத்திருளாகிய அழுக்கையும் போக்கிப்புனிதமாதற்கிதுவேசமயமென்றுநினைந்தென்பார் 'துகள்மாற்ற' எனவும், படிந்தமாத்திரத்தே அழுக்குமுழுவதையும் அகற்றவல்லகடலென்பதுபோதர 'தெள்ளுநீர்க்கடல்' எனவும் கூறினார். (௪)

கந்த ரந்தவழ் தெண்புனற் கருங்கட னடுவட்
சுந்த ரஞ்செறி பொன்சுட ரிலங்கைதோன் றியது
முந்து காலையி லெம்பிரா னருள்வழி முராரி
யுந்தி நின்றெழு பிரமன்மூ தண்டமொத் துளதால்.

இ—ள்: கந்தரம் தவழ் தெள் புனல் கரும் கடல் நடுவண்—மேகங்கள் நீரைப்பருகுமாறுபடிகின்றதெளிந்தநீரையுடைய கருநிறமான கடலினடுவே, சுந்தரம் செறி பொன் சுடர் இலங்கை தோன்றியது—அழகுபொருந்திய பொன்மயமான சோதியையுடைய இலங்கைநகர்தோற்றியதன்மை, முந்து காலையில்—முற்காலத்தில், எம் பிரான் அருள் வழி—எங்கள் தலைவராகிய சிவபிரானது அனுக்கிரகத்தின்படி, முராரி உந்தி நின்று எழு—திருமாலினது உந்திக்கமலத்தினின்றுந்தோ

ற்றிய, பிரமன் முதுஅண்டம் ஒத்து உளது—பழையபிரமாண்டத்தை நிகர்த்திருந்தது எ—று.

கருநிறமுடைய திருமாலினதுஉந்தியிற் பொன்னிறமான அண்டந்தோன்றியதுபோலக் கருநிறமானகடலினடுவே பொன்னிறமான இலங்கைதோன்றியது என்பதாம். பிரமாவும் பிரமாண்டங்களும் மற்றையஎல்லாப்பொருள்களும் திருமாலினிடத்துத்தோன்றுவதை மகாநாராயணோபநிடதமுதலியவற்றாலறிக. (௫)

இன்ன தாகிய விலங்கைமா புரத்தைநீத் தெழுந்து
பின்னு மாயிரம் யோசனை வானிடைப் பெயர்ந்து
பொன்னு லாவுறு வாகையம் புயத்தவன் புலவோ
ரொன்ன லானுறை மகேந்திர வரைப்பின்முன் னுற்றான்.

இ—ள்: இன்னது ஆகிய இலங்கை மா புரத்தை நீத்து எழுந்து—இப்படிப்பட்ட பெரிய இலங்காபுரியைவிட்டு எழும்பி, பின்னும் ஆயிரம் யோசனை வான் இடை பெயர்ந்து—மேலும் ஆயிரயோசனை தூரம் ஆகாயமார்க்கமாகநடந்து, பொன் உலாவுறு வாகையம் புயத்தவன்—அழகுவிளங்குகின்ற வீரந்தங்கிய புயத்தையுடைய அவர், புலவோர் ஒன்னலான் உறை மகேந்திர வரைப்பின் முன் உற்றான்—தேவர்களுக்குப்பகைவனாகியசூரபன்மனிருக்கின்ற மகேந்திரநகரினெல்லைக்குச்சமீபத்திற் போனார் எ—று.

ஆயிரம்யோசனைதென்றிசைநோக்கிச்சென்றாரென்க. வாகையம்புயத்தவன்=வீரவாகு. (௬)

நெற்றி நாட்டத்து நந்திதன் கணத்தவ னேமிப்
பொற்றை யாமெனச் சூழ்ந்துயர் மகேந்திரப் புரிசைச்
சுற்று ஞாயிலும் வாயில்க டொறுந்தொறுந் தோன்றுங்
கற்றை மாமணிச் சிகரியு நுனித்துமுன் கண்டான்.

இ—ள்: நெற்றி நாட்டத்து நந்திதன் கணத்தவன்—நெற்றிக்கண்ணையுடைய திருநந்திதேவரது கணத்தவரான வீரவாகுதேவர், நேமி பொற்றை ஆம் என சூழ்ந்து உயர் மகேந்திர புரிசை—சக்கரவாளமலையைப்போலவளைந்து உயர்ந்திருக்கின்ற மகேந்திரநகரின்மதிலிலுள்ள, சுற்று ஞாயிலும்—சூழ்ந்திருக்கின்றமதிலுறுப்புக்களையும், வாயில்கள் தொறும் தொறும் தோன்றும் கற்றை மா மணி சிகரியும்—ஒவ்வொருவாயில்களிலுந்தோற்றுகின்ற சோதித்திரளையுடைய சிறந்தஇரத்தினங்களாலாகியகோபுரங்களையும், நுனித்து முன் கண்டான்—நுண்மையாகமுதலிற்பார்த்தார் எ—று.

சக்கரவாளமலையையுவமித்ததனால் நகரின்விசாலமும் மதிலின்றோற்றமும் குறிக்கப்பட்டன. தூரத்தேகாணுதலால் நுனித்துக்கண்டது. மாமணி மாணிக்கமெனினுமாம். (௭)

சேர லாரமர் மகேந்திர நகர்வட திசையில்
வாரி வாய்தலுட் கோபுரத் தெற்றியின் மாடே
கோர னேயதி கோரனே யெனப்படுங் கொடிய
வீரர் தானையோ டிருந்தனர் காவல்கொள் வினையால்.

இ—ள்: சேரலார் அமர் மகேந்திர நகர் வட திசையில் வாரி வாய்தலுள்—பகைவர்கள்வாழுகின்ற மகேந்திரநகரின்வடக்குத்திக்கிலமைந்த மதிலின்வாயிலிலுள்ள, கோபுர தெற்றியின் மாடு—கோபுரத்தைச்சார்ந்திருக்கின்றதிண்ணையில், கோரனே அதிகோரனே எனப்படும் கொடிய வீரர்—கோரனும் அதிகோரனுமென்றுசொல்லப்படுகின்ற கொடுந்தன்மையமைந்தவீரர்கள், காவல் கொள் வி

னையால்—காவல்செய்யுந்தொழிலுடன், தானையோடு இருந்தனர்—சேனைகளோடிருந்தார்கள் எ—று.

சேரலார்-சேர்தலில்லாதவர்கள். சிறந்தவீரரென்பார் 'கொடியவீரர்' என்றார். (அ)

சரிக ளாயிரம் வெள்ளமே தேருமக் கணிதம்
பரிக ளாங்கதற் கிருதொகை யத்தொகை பதாதி
யுரிய வப்பெருந் தானையம் பெருங்கட லுலவா
விரவி மேவர விருந்தனர் காத்திடும் வீரர்.

இ—ள்: கரிகள் ஆயிரம் வெள்ளம்—(அந்தவாயிலிலுள்ள)யானைகள் ஆயிரவெள்ளமாம், தேரும் அ கணிதம்—தேர்களும் அத்தொகையினவாம், பரிகள் அதற்கு இரு தொகை— குதிரைகள் அத்தொகைக்கு இருமடங்கு ஆம், பதாதி அத்தொகை-காலாட்களும் குதிரைகளின்றொகையினவாம், உரிய அ பெரும் தானையம் பெரும் கடல்—உரிமையான அந்தப்பெரியசேனாசமுத்திரம், உலவா விரவி மேவர—குறையாமற்பொருந்தியிருக்க, காத்திடும் வீரர் இருந்தனர்—காவல்செய்கின்ற வீரரிருவரும் அங்கேயிருந்தார்கள் எ—று.

இத்தொகைச்சதுரங்கசைனியங்கள் இவ்வாயிற்காவற்கென்று நியமிக்கப்பட்டனவாதலின் 'உரியவப்பெருந்தானையம்பெருங்கடல்' என்றார். (க)

பகுதி கொண்டிடு தானையஞ் சூழலாம் பரவைத்
தொகுதி கண்டனன் விம்மிதங் கொண்டனன் றுன்னார்
மிகுதி கொண்டுறை காவலுங் கண்டனன் வியனூர்
புகுதி கொண்டிடு முணர்விஞ னினையன புகல்வான்.

இ--ள்: வியன் ஊர் புகுதி கொண்டிடும் உணர்விஞன்—சிறந்தமகேந்திரநகரினுட்புகவேண்டுமென்னுங்கருத்தையுடைய வீரவாகுதேவர், பகுதி கொண்டிடு தானையம் சூழல் ஆம் பரவை தொகுதி கண்டனன்—பலவகுப்பையுடைய சேனைகளின்கூட்டமாகிய பரந்ததொகையைப்பார்த்து, துன்னார் மிகுதி கொண்டு உறை காவலும் கண்டனன்—பகைவர்கள் மிகுதியாயிருக்கின்ற காவலையும்பார்த்து, விம்மிதம் கொண்டனன்—ஆச்சரியமுற்று, இனையன புகல்வான்—இவற்றைத் (தமக்குத்தாமே) சொல்வார் எ—று.

சேனையின்றொகையையும்காவலினமைதியையும்பார்த்து அதிசயமுற்றுத் தன்னெண்ணத்தைநிறைவேற்றுதற்கியலாமையாற் பின்வருமாறுசிந்தித்தாரென்க.

ஈண்டு செல்லினித் தானைசூழ்ந் தமர்செயும் யானு
மூண்டு நேரினு முடிப்பவோர் பகலெலா முடியு
மாண்ட தென்னினு முலவுமோ மாநக ரிடத்து
மீண்டும் வந்திடுங் கரிபரி பதாதிதேர் வெள்ளம்.

இ—ள்: ஈண்டு செல்லின் இ தானை சூழ்ந்து அமர் செயும்—இவ்வாயிலின் வழியாக உட்புகின் இங்குள்ளசேனைகள் வளைந்துபோரைச்செய்யும், யானும் மூண்டு நேரினும் முடிப்ப ஓர் பகல் எலாம் முடியும்— யானும் பகைமூண்டு எதிர்த்தாலும் இவைகளையழித்தற்கு ஒருநாள்முழுவதுஞ்செல்லும், மாண்டது என்னினும் உலவுமோ—அப்படி இச்சேனைகளழிந்தாலும் போர்முடியுமா? (முடியாது, ஏனெனில்), கரி பரி பதாதி தேர் வெள்ளம்— யானைகளும் குதிரைகளும் காலாட்களும் தேர்களுமாகிய சதுரங்கசேனைவெள்ளம், மா நகர் இடத்தும்- பெரிய இந்தநகரினின்றும், மீண்டும் வந்திடும்—பின்னும்வந்து குவியும் எ—று.

ஊக்கங்கொண்டுபொருதாலுமென்பார் 'மூண்டுநேரினும்' என்றார். உம்மை யானுமென்பதில் எச்சம்; நேரினும் என்னினும் என்பவற்றிற்சிறப்பு. (கக)

வந்த வந்தனோர் தானவப் படையொடே மலைவுற்
றெந்தை கந்தவே ளருளினால் யானொரு வேனுஞ்
சிந்தி நிற்பனே லிந்நகர்த் தானைகள் சிதைய
வந்த மில்பகல் சென்றிடு மளியரோ வவுணர்.

இ—ள்: வந்த வந்தது ஓர் தானவ படையொடே மலைவுற்று — எதிர்த்து வந்த அசுரசேனைகளெல்லாவற்றோடும் பொருது, எந்தை கந்தவேள் அருளினால்—எங்கள்கடவுளாகிய முருகவேளின் கருணையினால், யான் ஒருவேனும் சிந்தி நிற்பனேல்— யானொருவன்மாத்திரம் அழித்துநிற்பேனாயின், இ நகர் தானைகள் சிதைய—இந்தநகரத்திலுள்ளசேனைகள் அழிதற்கு, அந்தம் இல் பகல் சென்றிடும்— அளவிறந்தநாட்கள்கழியும், அவுணர் அளியரோ—அசுரர்கள் எளியவர்களோ எ—று.

அழியுந்தோறும்வருகின்றசேனையென்பார் 'வந்தவந்ததோர்தானவப்படை' எனவும், வரம் வலி வீரம் சேனைப்பெருக்கு முதலியவற்றாற்சிறந்தாராதலின் சின்னாளிலழித்தல்கூடாதென்பார் 'அளியரோவவுணர்' எனவும் கூறினார். (கஉ)

எல்லை யில்பகல் செல்லினுஞ் செல்லுக விளைய
மல்லன் மாநக ரவுணர்மாப் பெருங்கடல் வறப்ப
வொல்லு நீர்மையால் யானடல் செய்வனே லுருத்துத்
தொல்லை மைந்தரைத் துணைவரை யுய்க்குவன் சூரன்.

இ—ள்: எல்லை இல் பகல் செல்லினும் செல்லுக— அளவிறந்தகாலங்கழிந்தாலுங்கழிக, இனைய மல்லல் மா நகர் அவுணர் மா பெரும் கடல் வறப்ப—இந்த வளப்பம்பொருந்திய பெரிய நகரத்திலுள்ள அசுரசேனையாகியமிகப்பெரியசமுத்திரம் வற்றும்படி, ஒல்லும் நீர்மையால் யான் அடல் செய்வனேல்—இயன்றவரை யான் அழிப்பேனாயின், சூரன்—சூரபன்மன், உருத்து—கோபித்து, தொல்லை மைந்தரை துணைவரை உய்க்குவன்—பழையபுத்திரர்களையும் தம்பியரையும் அனுப்புவான் எ—று.

மிகுதிபற்றி அவுணசேனையைக்கடலாகஉருவகித்தார். பற்பலபெரும்போர்களில் வெற்றிபெற்றாரென்பதுபோதர 'தொல்லைமைந்தர்' என அடைகொடுத்தார். இவ்வடையைத்துணைவர்க்குமொட்டுக. துணைவர் சூழ்ச்சித்துணைவருமாம். (கந)

உய்த்த மைந்தர்கள் சூழ்ச்சியின் றுணைவர்க ளொழிந்தோ
ரத்தி றத்துளோர் யாரையும் வெலற்கரி தயில்வேற்
கைத்த லத்தவன் வலிகொடே பற்பகல் காறு
மித்த லைச்சம ராற்றியே முடிக்குவ னெனினும்.

இ—ள்: உய்த்த மைந்தர்கள்—அவ்வாறு அவனாலேவப்பட்டபுதல்வர்களும் சூழ்ச்சியின் துணைவர்கள்—மந்திரிமாரும், ஒழிந்தோர்—பிறருமாகிய, அ திறத்து உளோர் யாரையும்—அத்தன்மையுடையோரெல்லோரையும், வெலற்கு அரிது—யான் வெல்லுதலருமை, அயில் வேல் கை தலத்தவன் வலி கொடு—கூரிய வேற்படையையேந்திய திருக்கரத்தையுடைய முருகக்கடவுளது வலிமையைக் கொண்டு, பல் பகல் காறும்—பலநாள்வரையும், இத்தலை சமர் ஆற்றி—இவ்விடத்திற்போரைச்செய்து, முடிக்குவன் எனினும்—அழிப்பேனாலும் எ—று.

எனினும் எதிர்க்கும் எனப்பிற்செய்யுளோடியைக்க. சூழ்ச்சியின்றுணைவர்கள்-ஆலோசனைசெய்தலிற்றுணையாயுள்ளவர்கள். முருகவேளருளாலென்பார் 'அயில்வேற்கைத்தலத்தவன்வலிகொடு' என்றார். (கச)

ஏவ ரும்வெலற் கரியசூர் பின்னர்வந் தெதிர்க்கு
மோவில் வெஞ்சமர் பற்பக லாற்றியா னூறினும்

வீவ தில்லையா லங்கவன் மேலைநாட் டவத்தாற்
றேவ தேவன்முன் னருளிய வரங்களின் சீரால்.

இ—ள்: ஏவரும் வெலற்கு அரிய சூர் பின்னர் வந்து எதிர்க்கும்—எவர்களாலும் வெற்றிகொள்ளுதற்கரிய சூரபன்மன் அதன்பின்புவந்து எதிர்ப்பான், யான் ஓ இல் வெம் சமர் பல் பகல் ஆற்றி உறினும்—நான் ஒழிவில்லாத கொடிய போரைப்பலநாளாகச்செய்துநின்றாலும், அவன்—அந்தச்சூரபன்மன், மேலைநாள் தவத்தால்—முன்னாளிற்செய்ததவத்தினாலும், தேவதேவன் முன் அருளிய வரங்களின் சீரால்-தேவத்தலைவராகிய சிவபிரான் (அத்தவத்திற்கெளிவந்து) முற்காலத்திற்கொடுத்த வரங்களின்சிறப்பினாலும், வீவது இல்லை—இறக்கமாட்டான் எ—று.

உறினும் என்பதில் உம்மை சிறப்பு. சிறந்தவீரர்களாலும்வெல்லுதற்கரியவென்பார் 'ஏவரும்வெலற்கரிய' எனவும், கடும்போரென்பார் 'ஓவில்வெஞ்சமர்' எனவும் கூறினார். (௧௫)

அன்ன வன்றனை மாலயன் றனக்கும்வெல் லரிதா
லின்னு மாங்கவ னாணைக்கும் வெருவியே யிருந்தார்
பின்னை யாரவன் றன்னைவென் றிடுவர்கள் பெருநாட்
டுன்னி யான்சம ராற்றினுந் தொலைகிலன் சிறிதும்.

இ—ள்: அன்னவன் தனை மால் அயன் தனக்கும் வெல்லரிது—அந்தச்சூரபன்மனைத் திருமாலினாலும் பிரமதேவராலும் வெல்லுதலருமையாம், இன்னும் அவன் ஆணைக்கும் வெருவி இருந்தார்—இதுகாறும் அவனுடையகட்டளைக்கும் அஞ்சியிருந்தார்கள், பின்னை அவன் தன்னை யார் வென்றிடுவர்கள்—அங்ஙனமாயின் அவனை வேறுயார் வெல்லவல்லார்? (ஒருவருமில்லை, ஆதலின்), யான் பெரு நாள் துன்னி சமர் ஆற்றினும்— நான் அதிகநாளாகநெருங்கிநின்று போரைச்செய்யினும், சிறிதும் தொலைகிலன்—சற்றாயினும் பின்னிடான் எ—று.

உம்மைகள் சிறப்பு. வெல்லஎன்பதில் ஈற்றகரம்தொக்கது. (௧௬)

தொலைந்து போகிலன் சூரம ரியற்றிடிற் றுன்னிக்
கலந்த யான்விற லின்றிமீண் டேகுதல் கடனோ
மலைந்து நிற்கவே வேண்டுமா லாயினும் வறிது
மலந்த லைப்படுஞ் சுரர்சிறை யகன்றிட வற்றோ.

இ—ள்: சூர் அமர் இயற்றிடில் தொலைந்து போகிலன்—சூரபன்மன்போர் செய்தால் தோற்றுப்போகமாட்டான், துன்னி கலந்த யான் விறல் இன்றி மீண்டு ஏகுதல் கடனோ—நெருங்கிப்போர்செய்யத்தலைப்பட்டநான் வெற்றிபெறாது திரும்பிப்போவது முறையாகுமோ, மலைந்து நிற்கவே வேண்டும்—போர்செய்துகொண்டேநிற்றல்வேண்டும், ஆயினும்—அங்ஙனம்நின்றாலும், வறிதும் அலந்தலை படும் சுரர் சிறை அகன்றிட வற்றோ—மிகவுந்துன்பத்தையனுபவிக்கின்ற தேவர்களதுசிறை நீங்கக்கூடியதாமோ (ஆகாதே) எ—று.

ஓகாரங்கள் எதிர்மறை, ஏ-தேற்றம். (௧௭)

மற்றி நீர்மையிற் பற்பக லவனொடு மலைந்து
வெற்றி கொண்டில னின்னுமென் றமரினை வீட்டி
யொற்றி னீர்மையை யுணர்த்துத லொல்லுமோ வுலவா
தெற்றை வைகலு மமர்செய வேண்டுமா லெனக்கே.

இ—ள்: இ நீர்மையில் பல் பகல் அவனொடு மலைந்து—இப்படிப்பலநாளாக அந்தச்சூரபன்மனொடுபொருது, இன்னும் வெற்றிகொண்டிலன் என்று—இது

காறும் வெற்றிபெற்றிலேனேயென்று சிந்தித்து, அமரினை வீட்டி—போரை விடுத்து, ஒற்றின் நீர்மையை உணர்த்துதல் ஒல்லுமோ—தூதுவந்ததன்மையைச் சொல்லுதல் தக்கதா?, உலவாது—தகாது, எனக்கு—போர்செய்யத்தலைப்பட்ட எனக்கு, எற்றை வைகலும் அமர் செய வேண்டும்—எப்போதும்போரேசெய்ய வேண்டியதாம் எ—று.

போர்செய்தாற்றுதவழித் தூதுசென்றேனெனல் வீரத்திற்கிழுக்காமாதலின் இங்ஙனங்கூறினார். (கஅ)

போத நாயகன் பரம்பொரு ணாயகன் பொருவில்
வேத நாயகன் சிவனரு ணாயகன் விண்ணோர்க்
காதி நாயக னறுமுக நாயக னமலச்
சோதி நாயக னன்றியார் சூரனைத் தொலைப்பார்.

இ—ள்: போதநாயகன்—ஞானமேவடிவாயிருக்கின்றதலைவரும், பரம்பொருள் நாயகன்—முதற்பொருளாயிருக்கின்றதலைவரும், பொரு இல் வேத நாயகன்—ஒப்பில்லாத வேதங்களுக்குத்தலைவரும், சிவன் அருள் நாயகன்-சிவபிரான்பெற்றருளியதலைவரும், விண்ணோர்க்கு ஆதி நாயகன்—தேவர்களுட்சிறந்ததலைவரும், அறுமுக நாயகன்—ஆறுமுகங்களையுடையதலைவரும், அமல சோதி நாயகன் அன்றி—மலபந்தமற்றசோதிருபராகிய தலைவருமான முருகக்கடவுளல்லாமல், யார் சூரனை தொலைப்பார்—வேறுயார்சூரபன்மனையழிக்கவல்லார்? எ—று.

ஞானம்—கடவுள் உலகம் ஆன்மா என்னுமிவற்றினிலையையுள்ளபடியுணர்தல். அவற்றினிலையையுணர்ந்தார்க்கேஇறைவன்காணப்படுதலின் 'போதநாயகன்' எனவும், அதனையுணர்தற்குக்கருவிவேதமேயாதலின் 'வேதநாயகன்' எனவும், ஆணவமுதலியமும்மலங்களினின்று அனுதியேநீங்கிநிற்றலானும் சூரியன் முதலிய சோதிகட்கெல்லாஞ்சோதிகொடுத்தலானும் 'அமலச்சோதிநாயகன்' எனவும் கூறினார். வேதநாயகன்வேதங்களாற்கூறப்படுங்கடவுளெனினுமாம். ()

இம்பர் சூரொடு பொருதுநின் றிடுவனே யென்னி
னம்பி ரானறு மாமுகன் பின்னரே நண்ணி
வெம்பு சூரனை வேலினாற் றடிந்துவெஞ் சிறையி
லும்பர் யாரையு மீட்டிட வேண்டுமே லொருநாள்.

இ—ள்: இம்பர் சூரொடு பொருது நின்றிடுவனே என்னில்—இங்கே சூரபன்மனோடு நான்போர்செய்துகொண்டுநிற்பேனேயானால் நம் பிரான் அறு மா முகன் பின்னரே நண்ணி—எங்கள் தலைவராகிய சிறந்த ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள் பின்புவந்து, வெம்பு சூரனை வேலினால் தடிந்து—கோபத்துடனெதிர்க்கின்ற சூரபன்மனை வேற்படையினாற்பிளந்து, மேல் ஒரு நாள்—வேறொருநாளில், வெம் சிறையில் உம்பர் யாரையும் மீட்டிட வேண்டும்—கொடிய சிறையிலிருக்கின்ற தேவர்களெல்லோரையும் மீட்கவேண்டும் எ—று.

யான்போர்செய்வதாற்பயனில்லை என்பதாம். கடவுளென்றுமதியாது போர்செய்பவனென்பார் 'வெம்புசூரன்' என்றார். (உ0)

ஆத லாலம ராற்றுதன் முறையதோ வஃதா
னீது நம்பெரு மான்றன தருளுமன் றினைய
தூதர் செய்கட னுங்கொலோ வமர்பெறுத் தொடர்பாற்
போத லேகட னென்றனன் பொருவில்சீ ரறிஞன்.

இ—ள்: ஆதலால் அமர் ஆற்றுதல் முறையதோ—ஆனதன்மையினால் யான்போர்செய்தல் முறையன்று, அஃது ஆன்று—அதுவன்றி, ஈது நம் பெரு

மான்தனது அருளும் அன்று—இச்செயல் எங்கள் முருகக்கடவுளது கட்டளையு மன்று, இனைய தூதர் செய் கடன் ஆம் கொல்-இவை தூதுவர்செய்கின்றசெ யலுமன்று, அமர் பெரு தொடர்பால் போதலே கடன்—போர்தொடங்காவண் ணம்போவதேமுறை, என்றனன்-என்றுசிந்தித்தார், பொரு இல் சீர் அறிஞன்-- ஒப்பில்லாத சிறப்பினையுடைய அறிஞராகியவீரவாகுதேவர் எ—று.

அன்று-முதனீண்டுநின்றது. உம்மை-எச்சம். போர்மூளாவண்ணம் உட்பு குதற்கேற்ற உபாயத்தைச்சிந்தித்தென்பார் 'அமர்பெருத்தொடர்பால்' எனவும், தக்கவாறு எண்ணித்துணிந்தனராதலின் 'பொருவில்சீரறிஞன்' எனவும் கூறி னார். (உக)

வேறு.

இப்பால் வாய்தலி னெல்லை நீங்கிய
துப்பார் தானைக டிற்று நின்றவா
லப்பா லெய்தரி தாம ருங்குபோய்
வைப்பார் கீழ்த்திசை வாயி னண்ணுவேன்.

இ—ள்: இப்பால் வாய்தலின்—இந்தப்பக்கத்திலிருக்கின்றவாயிலில், எல் லை நீங்கிய துப்பு ஆர் தானைகள் திற்று நின்ற— அளவிறந்த வலியசேனைகள் நெருங்கிநிற்கின்றன, (ஆதலின்), அப்பால் எய்தரிது ஆகும்—உட்புகுதலருமை யாம், மருங்கு போய்—பக்கமாகவளைந்துசென்று, வைப்பு ஆர் கீழ் திசை வா யில் நண்ணுவேன்—விசாலமான கிழக்குத்திக்கிலுள்ள கோபுரவாயிலையடை வேன் எ—று.

தமக்கெதிர்ப்பட்டவாயிலாதலின் 'இப்பால்வாய்தல்' என்றார். (உஉ)

என்னு வுன்னி யியன்ற வுத்தரப்
பொன்னார் வேலி புகாது பாங்கர்போய்க்
கொன்னார் கின்ற குணக்கு வாய்தலின்
முன்னு வேகினன் மொய்ம்பின் வீரனே.

இ—ள்: என்னு உன்னி—என்றுநினைத்து, இயன்ற உத்தர பொன் ஆர் வேலி புகாது—சிறந்த வடதிசையிலுள்ள பொன்னாலாகிய மதிலின் வாயிலினால் உட்புகாது, பாங்கர் போய்—பக்கமாய்ச்சென்று, கொன் ஆர்கின்ற குணக்கு வாய்தலின் முன் ஆ—அச்சத்தையுண்டாக்குகின்ற கிழக்குக்கோபுரவாயிலின் முன்னே, மொய்ம்பின் வீரன் ஏகினன்—வலிமையையுடையவீரவாகுதேவர் போனார் எ—று.

வேலி ஆகுபெயர். தறுகண்மைமிக்கபோர்வீரர்பலர்ஊக்கமாயிருந்து காவ ல்செய்தலால் 'கொன்னார்கின்ற' என்றார். கொன் பெருமையுமாம். (உ௩)

மேதிக் கண்ணவன் வீர பானுவென்
றாதிக் கத்தவு ணர்க்கு நாயக
ரேதிக் கைய ரிரண்டு வீரரு
மாதிக் கன்னதன் வாயில் போற்றினார்.

இ—ள்: மேதி கண்ணவன் வீரபானு என்று—மகிடாக்கனும் வீரபானுவு மென்றுசொல்லப்படுகின்ற, ஆதிக்கத்து அவுணர்க்கு நாயகர்—முதன்மையையு டைய அசுரத்தலைவர்களான, இரண்டு வீரரும்—இருவீரர்களும், ஏதி கையர்— வாட்படையையேந்திய கையையுடையவர்களாய், மா திக்கு அன்னதன் வாயில் போற்றினார்—சிறந்த அந்தத்திக்கிலுள்ளவாயிலைக்காவல்செய்தார்கள் எ—று.

மேதிக்கண்ணவன்-எருமையின்கண்போலுங்கண்களையுடையான். வீரபா னு-வீரத்தினாற்சூரியன்போலவிளங்குபவன். முதற்றிசையாதலின் 'மாதிக்கு' என்றார். (உச)

திருவுந் தும்வட திக்கு வாய்தலின்
விரவுந் தானையின் வெள்ள மெய்த்தொகை
பரவுஞ் சூரர் பயிற்று பல்பவத்
துருவஞ் சூழ்ந்தென வொத்து நின்றவே.

இ—ள்: திரு உந்தும் வட திக்கு வாய்தலின் விரவும் தானையின் வெள்ள மெய் தொகை—அழகுமிகுந்த வடதிசைக்கோபுரவாயிலிற்றங்கிய சேனைவெள்ளத்தின் உண்மையானதொகையே, பரவும் சூரர் பயிற்று பல் பவத்து உருவம் சூழ்ந்து என— புகழ்பரவப்பெற்ற சூரபன்மன்செய்த பலவகையானபாவங்களின் வடிவம்வளைந்துநின்றாற்போல, ஒத்து நின்ற—இணங்கிநின்றன எ—று.

சூரர் இழிவுபற்றியபன்மை. பரவுதல் அவுணராதியாரற்றுதிக்கப்படுதலுமாம். வரையறுக்கப்பட்டதொகையென்பார் 'மெய்த்தொகை' எனவும், செய்யும்பாவங்களோவ்வொன்றும் உருக்கொண்டு அவ்வுருவெல்லாமோரிடத்திற்கூடிநின்றாற்போலவென்பார் 'பயிற்றுபல்பவத்துருவஞ்சூழ்ந்தென' எனவும், காவலுக்குவேண்டிய அமைதிபெறவென்பார் 'ஒத்து' எனவும் கூறினார். கொடுந்தொழிலையுங்கோரரூபத்தையுமுடையனவாதலின் பாவத்திரட்சியையுவமித்தார். (உரு)

வண்டார் செற்றிய வாகை மொய்ம்பினான்
கண்டா னன்ன கடிக்கொள் காவலுந்
தண்டா துற்றிடு தானை நீத்தமு
மண்டா வற்புத நீர னாயினான்.

இ—ள்: வண் தார் செற்றிய வாகை மொய்ம்பினான்—வளமார்ந்த மலர்மாலைசெறியப்பெற்ற வீரமார்ந்தபுயங்களையுடைய அவர், அன்ன கடி கொள் காவலும்—அந்தச்சிறந்தகாவலையும், தண்டாது உற்றிடு தானை நீத்தமும்— குறையாதுநிற்கின்ற சேனைவெள்ளத்தையும், கண்டான்—பார்த்து, அண்டா அற்புத நீரன் ஆயினான்—அடங்காத அதிசயமுடையாரானார் எ—று.

சேனைப்பெருக்கையும் காவலின்றிறமையையுங்கண்டு ஆச்சரியமுற்றாரென்பதாம். (உசு)

ஆண்டங் குற்ற வளப்பில் சேனையைக்
காண்டு மிவ்வுழி காவல் போற்றியே
சேண்டுன் றும்புவி செற்று மாதலா
லீண்டுஞ் செல்லரி தென்று முன்னினான்.

இ—ள்: ஆண்டு அங்கு உற்ற அளப்பு இல் சேனையை— அந்த வடதிசைவாயிலின்கணுள்ளனபோன்ற அளவிறந்தசேனைகளை, இவ் உழி காண்டும்— இவ்வாயிலினுங்காண்கின்றோம், காவல் போற்றி சேண் துன்றும் புவி செற்றும்— அச்சேனைகள்காவல்செய்துகொண்டு ஆகாயத்தில்நெருங்குகின்றன பூமியிலுஞ் செறிகின்றன, ஆதலால்—ஆதலினால், ஈண்டும் செல்ல அரிது—இவ்வாயிலாலும் உட்புகுதலருமையாம், என்று முன்னினான்—என்று நினைத்தார் எ—று.

ஆண்டு அங்கு ஒருபொருட்சொற்கள். முன்கண்டவாயிலாதலின் அகரச்சுட்டாற்கூறினார். வடதிசைவாயில்போலவே சேனைத்தொகையும் காவலுமமைந்திருத்தலின் இவ்வாயிலானுஞ்செல்லுதல்கூடாதென்று நினைத்தார் என்பதாம். சேண்டுன்றும்புவி என்பதற்கு மிகவிசாலமான இடப்பரப்பில் எனினுமாம். ()

நின்றிப் பாற்பட வீர்மை யன்றரோ
தென்றிக் கின்வழி சென்று நாடுவ

னென்றுட் கொண்டவ ணீங்கி யேகினான்
குன்றிற் றொன்மிடல் கொண்ட தோளினான்.

இ—ள்: நின்று இப்பால் படல் நீர்மை அன்று—இங்கேநின்று இவ்வாயிலா லுட்புகுதல் தக்கதன்று, (ஆதலால்), தென் திக்கின் வழி சென்று நாடுவன்—தென்றிசைவழியாகப்போய்ப்பார்ப்பேன், என்று உட் கொண்டு— என்று சிந்தித்து, குன்றில் தொல் மிடல் கொண்ட தோளினான்—மலைகளைப்போன்ற பழையவலிமையைப்பெற்ற புயங்களையுடைய அந்தவீரர், அவண் நீங்கி ஏகினான்—அவ்விடத்தைநீங்கிச்சென்றார் எ—று.

தென்றிசையிற்சென்று அவ்வாயிலானுட்புகுதல்கூடுமோவென்பதை யறிவேனென்பார் 'தென்றிக்கின்வழிசென்றுநாடுவன்' என்றார். மலைகளுக்குஇயல்பாகவுள்ள வலிமுழுவதும் ஒருங்கமைந்தபுயமென்பார் 'குன்றிற்றொன்மிடல் கொண்டதோள்' என்றார். (உஅ)

மகேந்திரஞ்செல்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் கஅ௨.

கயமுகன்வதைப்படலம்.

கயமுகனென்னுமசுரனைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

மகேந்திரநகரின் கீழ்த்திசைக்கோபுரவாயிலில் ஆகாயமார்க்கத்தைக்காவல் செய்துநின்ற கயமுகனென்பான் அம்மார்க்கத்தால்வரும்வீரவாகுதேவரைக்கண்டுதடுத்துப்பொர, அவர்அவனைக்கொன்று தமதுவடிவைப்பிறரறியாவண்ணம் மறைத்துக்கொண்டு அத்திசைக்கோபுரத்தின்மேலிருந்து நகர்வளங்களைநோக்கினார் என்பதாம்.

ஏகா நிற்புழி யேந்தல் கீழ்த்திசை
மாகா வற்கொண் மதங்க மாமுகன்
மீகா னொப்ப வியன்க லத்தினுக்
காகா யத்தி னமர்ந்து போற்றுவான்.

இ—ள்: ஏந்தல் ஏகா நிற்புழி—வீரவாகுதேவர் அப்பாற்செல்லும்பொழுது, கீழ்த்திசை மா காவல் கொள் மதங்க மா முகன்—கிழக்குத்திசையினின்று சிறந்தகாவலைச்செய்கின்ற கயமுகனென்பான், வியன் கலத்தினுக்கு மீகான் ஒப்ப—சிறந்த மரக்கலத்திற்கு மாலுமி எவ்வாறோ அவ்வாறு, ஆகாயத்தின் அமர்ந்து போற்றுவான்—ஆகாயமார்க்கத்திலிருந்துகாப்பவன் எ—று.

மாலுமி மரக்கலத்திற்குக்கடுங்காற்றுமுதலியவற்றாற்றீங்குவாராவண்ணம் இடையறாதசிந்தையுடன்காவல்செய்வதுபோலக் கய முகனும் தந்நகர்க்குப்பகைவரா ற்றீங்குவிளையாவண்ணம் இடையறாதசிந்தையுடன்காவல்செய்தனனென்க. மதங்கமாமுகன் ஏகுவானென ஏழாஞ்செய்யுளோடியைக்க. (க)

நூற்றுப் பத்து நுவன்ற தோன்முகன்
மூற்றைக் கையினன் மொய்ம்பி ராயிரன்
சீற்றத் துப்புறு தீய சிந்தையான்
கூற்றத் துக்கொரு கூற்ற மேயனான்.

இ—ள்: நூற்றுப் பத்து நுவன்ற தோல் முகன்—ஆயிரமென்னுந்தொகைப்பட்ட யானைமுகங்களையுடையவன், மூற்றை கையினன்—அத்தொகையினின்று மும்மடங்கானகைகளையுடையவன், மொய்ம்பு இராயிரன்—இரண்டாயிரம்புயங்களையுடையவன், சீற்ற துப்பு உறு தீய சிந்தையான்—கோபத்தின்வலிமிகுந்த கொடியமனத்தையுடையவன், கூற்றத்துக்கு ஒரு கூற்றமே அனான்—யமனுக்கு ஒருயமனையேபோல்வான் எ—று.

இரண்டாயிரங்கைகளுடன் ஆயிரந்துதிக்கைகளுஞ்சேர்ந்து மூவாயிரமாதலின் 'மூற்றைக்கையினன்' என்றார். ஒன்று ஒற்றையென்றானாற்போல மூன்று மூற்றையென்றாயிற்று. யமனதுஉயிரையுங்கவரவல்லானென்பார் 'கூற்றத்துக்கொருகூற்றமேயனான்' என்றார். (௨)

பொன்னா ரேம புரத்து வைகலு
மன்னாய் வாழ்பவன் மாறு கொண்டுதன்
முன்னா வெய்தி முனிந்து போர்செய
வொன்னா ரின்றி யுளங்கு றைந்துளான்.

இ—ள்: பொன் ஆர் எமபுரத்து மன் ஆய் வைகலும் வாழ்பவன்—அழகுமிக்க எமபுரத்திற்கு அரசனாய் எப்போதும்வாழ்ந்திருப்பவன், மாறு கொண்டு தன் முன் ஆ எய்தி முனிந்து போர்செய—எதிர்த்துத் தனக்கெதிரேவந்துகோபித்துப் போர்செய்தற்கு, ஒன்னார் இன்றி—பகைவரில்லாமையினால், உளம் குறைந்து உளான்—மனம்வாடியிருப்பவன் எ—று.

எமபுரம் மகேந்திரத்தினெண்டிசைகளினுமுள்ள எட்டுநகரங்களுட் கிழக்கிலுள்ளது. (௩)

கருமே கங்கள் கறித்து வாரியுண்
டுருமே றோடு முரற்ற வோச்சுவான்
பெருமே தக்க பவஞ்செய் பெற்றியான்
செருமேல் கொண்டிடு சிந்தை பெற்றுளான்.

இ—ள்: கரு மேகங்கள் கறித்து வாரி உண்டு—கருநிறமான மேகங்களைக் கடித்து அவற்றிலுள்ளநீரைப் பருகி, உருமேறோடும் உரற்ற ஓச்சுவான்—இடியைக்கான்றுமுழங்கும்படி (அவைகளை) எறிபவன், பெரு மேதக்க பவம் செய் பெற்றியான்—பெருமைமிக்க பாவங்களைச்செய்யுமியல்பினையுடையான், செருமேல்கொண்டிடு சிந்தை பெற்று உளான்—போரைமேற்கொள்ளும் மனத்தையுடையவன் எ—று.

பெரு-முதனிலைப்பண்புப்பெயர். பெருமேதக்கபவம்=கடும்பாவம். இடியுகுப்பதும் முழங்குவதும் கடித்தலாலென்க. எவரோடேனும் தானாய்ப்போர்தொடுக்கவேண்டுமென்னுமெண்ணத்தையுடையானென்பார் 'செருமேல்கொண்டிடுசிந்தைபெற்றுளான்' என்றார். வாரியுண்டு ஓச்சுவான் எனஇயையும். (௪)

மஞ்சார் வேழம் வனத்தில் வல்லுளி
யெஞ்சா வெவ்வரி யாளி வல்லிய
மஞ்சா ராயிர மங்கை கொண்டுணாச்
செஞ்சோ ரிப்புனல் சிந்தும் வாயினான்.

இ—ள்: மஞ்சு ஆர் வேழம்—வலிமைபொருந்திய யானையும், வனத்தில் வல்லுளி—காட்டில்வாழுகின்ற கரடியும், எஞ்சா வெவ் அரி— தோல்வியடையாத கொடியசிங்கமும், யாளி—யாளியும், வல்லியம்—புலியுமாகியஇவைகளில், அஞ்சு ஆர் ஆயிரம்—ஐயாயிரமென்னுந்தொகைப்பட்டவைகளை, அம் கை கொண்டு உண—அகங்கையிற்கொண்டுதின்று, செம் சோரி புனல் சிந்தும்—சிவந்த இரத்தநீரைச்சிந்துகின்ற, வாயினன்—வாயையுடையவன் எ—று.

மஞ்சு-மைந்துஎன்பதன்போலி. மஞ்சார்வேழம்-மேகம்போன்றயானை எனினுமாம். மிருகராசனாதலின் 'எஞ்சாவெவ்வரி' என்றார். உண என்னுமெச்சம் எதுப்பொருட்டு. (ரு)

> காசைப் போது கடுத்த மெய்யர்தென்
> னாசைக் கால ரொராயி ரத்தர்தம்
> பாசத் தோடு பயின்று சேர்ந்தென
> வீசித் தூங்கும் வியன்று திக்கையான்.

இ—ள்: காசைப்போது கடுத்த மெய்யர்— காயாமலரைநிகர்த்த கருநிறமேனியையுடைய, தென் ஆசை காலர்—தென்றிசையில்வாழுகின்ற கூற்றுவர்கள், ஒரு ஆயிரத்தர்— ஆயிரமென்னுந்தொகைப்பட்டவர்கள், தம் பாசத்தோடு பயின்று சேர்ந்து என—தங்கள்பாசத்தையேந்திக்கொண்டு ஒருவடிவாகிவந்தாற்போல, வீசி தூங்கும் வியன் துதிக்கையான்—அலைந்து தூங்குகின்ற பெரிய துதிக்கைகளையுடையவன் எ—று.

அபூதவுவமை. துதிக்கைக்குவமை பாசமென்க. ஆயிரமுகங்களையும் ஆயிரந் துதிக்கைகளையும் உடைமையால் ஆயிரங்கூற்றுவர்சேர்ந்தவடிவையுவமித்தார். ()

> வாணா ளஃகினன் மாயு மெல்லையா
> னேனை லத்திசை யேகும் வீரனைக்
> காணா நின்று கனன்று சாலவுஞ்
> சேணா னின்னன செப்பி யேகுவான்.

இ—ள்: வாணாள் அஃகினன் மாயும் எல்லையான் — வாழ்நாள்முடிந்து இறக்குங்காலம் நெருங்கப்பெற்றவனாய், ஏனைல்—இறுமாப்போடும், அ திசை ஏகும் வீரனை காணா— அந்தத்திக்கில்வருகின்ற வீரவாகுதேவரைப்பார்த்து, நின்று கனன்று—நின்றுகோபித்து, சாலவும் சேணான்—மிகவுந்தூரத்தவனாய், இன்னன செப்பி ஏகுவான்—பின்வரும்வாசகங்களைச்சொல்லிக்கொண்டு வருவான் எ—று.

மிகத்தூரத்தில்வரும்போதே பின்வரும்வாசகங்களைக்கூறிவருவானென்பார் 'சாலவுஞ்சேணனின்னனசெப்பியேகுவான்' என்றார். (எ)

> மிக்கார் காவல் விலங்கி நீயிவட்
> புக்காய் மாயை புகன்று ளாய்கொலோ
> வக்கா லானுமெம் மாணை நீங்கியே
> யெக்கா லத்தினு மேக வல்லதோ.

இ—ள்: நீ மிக்கு ஆர் காவல் விலங்கி இவண் புக்காய்—நீ மிகுதியாயிருக்கின்றகாவலைக்கடந்து இவ்விடத்தில்வந்தாய், மாயை புகன்றுளாய் கொல்— மாயவித்தையைக்கற்றறிந்திருக்கின்றாயோ?, அ கால் தானும்— அந்தக்காற்றுத்தானும், எம் ஆணை நீங்கி—எங்கள்கட்டளையைமீறி, எ காலத்தினும் ஏக வல்லதோ— எந்தக்காலத்திலாவது வருதற்கு வல்லமையையுடையதா? எ—று.

நகரைச்சூழ்ந்திருக்கும் எண்டிசைப்புரங்களினும் கோபுரவாயில்கள்நான்கினும் பிறவிடங்களினும் பற்பலகாவல்களுளவாதலின் 'மிக்கார்காவல்' எனவும்,

அவற்றையெல்லாம் வீரத்தாற்கடந்துவருதலரிதாதலின் கட்புலப்படாதுமறைந்து வந்தாயாதல்வேண்டுமென்பான் 'மாயையுகன்றுளாய்கொல்' எனவும், மறைந்தேனும் உட்புகுதலரிதென்பதுபோதர 'அக்காறுனும்......ஏகவல்லதோ' எனவும் கூறினான். (அ)

வறியா ராகி மயங்கும் வானவச்
சிறியார் வைகிய சீரி லூரெனக்
குறியா வந்தனை கோதி லிந்நக
ரறியா யோநம தாணை யாற்றலே.

இ—ள்: வறியார் ஆகி மயங்கும் வானவ சிறியார் வைகிய சீர் இல் ஊர் என— வறியவர்களாகித்தியங்குகின்ற அற்பர்களாகிய தேவர்கள்வாழுகின்ற சிறப்பற்றநகரம்போலுமென்று, குறியா—சிந்தித்து, கோது இல் இ நகர் வந்தனை—குற்றமற்ற இந்தநகரத்திற்குவந்தாய், நமது ஆணை ஆற்றல் அறியாயோ—எமது ஆணையையும் வலியையும் அறியமாட்டாய்போலும்! எ—று.

வலிமுதலியவற்றாற் குறைந்தவரென்பான் 'வறியார்' எனவும், எமக்கமைந்தொழுகும்பேடிகளென்பான் 'சிறியார்' எனவும், வளம் அழகுமுதலியவற்றால் எங்கள்நகரத்தினின்று மிகக்குறைந்தநகரமென்பான் 'சீரிலூர்' எனவும், அவற்றுளொருசிறிதுங்குறைவற்றநகரமென்பான் 'கோதிலிந்நகர்' எனவும், எங்கள் அரசியற்றிறமையையும் காவற்றிறமையையும் உணர்ந்தாயேல் வாரத்துணியாயென்பான் 'அறியாயோநமதாணையாற்றல்' எனவும் கூறினான். (கூ)

மூண்டே குற்றனென் மொய்சி னத்தினேன்
மாண்டே போயினை வல்லை நீயினி
மீண்டே போந்திற மில்லை மேலுனக்
கீண்டே மாய விழைத்த வெல்லையே.

இ—ள்: மொய் சினத்தினேன்—மிகுந்தகோபத்தையுடையேனாகியயான், மூண்டு எகுற்றனென்—போர்மூண்டுவந்தேன், நீ வல்லை மாண்டே போயினை—நீ விரைவில் இறந்தேபோனாய், இனி மேல் மீண்டு போம் திறம் இல்லை—இனித்திரும்பிப்போந்தன்மையில்லை, உனக்கு மாய இழைத்த எல்லை ஈண்டே—உனக்கு இறக்கும்படிநியமித்தகாலவெல்லை இப்பொழுதேயாம். எ—று.

இனி மேல்- ஒருபொருட்சொற்கள். போயினை துணிவுபற்றிவந்தஇறந்தகாலம். மாண்டே ஈண்டே என்பவற்றிலேகாரம்தேற்றம். இறப்புங்கருவுளமைப்பாதலின் 'இழைத்தவெல்லை' என்றான். (கௌ)

சூராள் கின்றதொர் தொல்லை மாநகர்
சேரா நின்றனை சீறு கேசரி
பேரா வெல்லையொர் பீடின் மான்பிணை
யாராய் தற்கு வருங்கொ லாற்றலால்.

இ—ள்: சூர் ஆள்கின்றது ஓர் தொல்லை மா நகர் சேராநின்றனை—சூரபன்மனரசியல்செய்கின்ற பழைய சிறந்தநகரத்தில்வருகின்றாய், சீறு கேசரி பேரா எல்லை—கோபக்குணத்தையுடையசிங்கம் விலகாதிருக்கின்றஇடத்தில், ஓர் பீடு இல் மான் பிணை—பெருமையில்லாத ஒருபெண்மான், ஆற்றலால்—வலிமையோடு, ஆராய்தற்கு வரும் கொல்— (வெல்லுதற்கேற்றசமயமுதலியவற்றை) ஆராய்தற்பொருட்டு வருமோ? எ—று.

இதுகாறும் உன்னைப்போலொருவரும் வரப்பெறாத நகரமென்பதுகுறிப்பாற்போதர 'தொல்லைமாநகர்' எனவும், யான் மிக்கவலியுடையேனாய் விலகாதுகாத்துநிற்கின்றேன் நீயோ அற்பமேனும் வலியில்லாய் அங்ஙனமாகவும் வலிய

டையாய்போன்று வாத்துணிந்தது மிகவும் ஆச்சரியம் என்பதுபோதர 'சீறுகேசரிபோராவெல்லையொர்பீடின்மான்பிணையாராய்தற்குவருங்கொலாற்றலால்' எனவும் கூறினான். ஆராய்தல் இரைதேடலெனினுமாம். (கக)

தொடுநே மிக்கட றுண்ணெ னக்கடந்
திடைசேர் கின்ற விலங்கை நீங்கியே
கடிதே யிந்நகர் காண வுன்னியே
யடைவாய் தேவர் கணத்து ளாரைநீ.

இ—ள்: தொடு நேமி கடல் துண்ணென கடந்து—சகரரால் முற்காலத்திற் றோண்டப்பெற்ற சமுத்திரத்தைவிரைவாகக்கடந்து, இடை சேர்கின்ற இலங்கை நீங்கி—வழியிலெதிர்ப்பட்ட இலங்கைநகரைத்தாண்டி, இ நகர் காண உன்னி—இந்தநகரத்தைக்காணும்படிசிந்தித்து, கடிதே அடைவாய்—விரைவில்வருகின்றாய், நீ தேவர்கணத்துள் ஆர்—நீ தேவர்கூட்டத்தாருள்யார்? எ—று.

நேமி கடல் ஒருபொருட்சொற்கள். ஆழமாயும் அகழியாகியும்வளைந்துள்ள கடலென்பான் 'தொடுநேமிக்கடல்' எனவும், எளிதாய்க்கடந்தென்பான் 'துண்ணெனக்கடந்து' எனவும், அங்கிருந்து இந்நகர்க்குவருவாரைத் தடுத்தற்கேற்ற காவற்றானமாயுள்ள இலங்கையென்பான் 'இடைசேர்கின்றவிலங்கை' எனவும், எங்கள் காவலையெண்ணாது வருகின்றாயென்பான் 'கடிதே அடைவாய்' எனவும், தேவர்கணத்தான்போலத்தோற்றுதலால் 'தேவர்கணத்துளாரைநீ' எனவும் கூறினான். ஐ-சாரியை. (கஉ)

திருத்தங் கண்ணக றேவர் தம்முளும்
விருத்தன் போலு மிகத்து ணிந்துநீ
யொருத்தன் போந்தனை யொன்றொர் வாளொடே
வாத்தென் னிவ்விடை மாயை கற்றுளாய்.

இ—ள். நீ திருத்தம் கண் அகல் தேவர் தம்முளும் விருத்தன் போலும்—நீ திருத்தமென்பது தம்மிடத்திலமையப்பெறாத தேவர்களுள்ளும் புதியவன்போலிருக்கின்றாய், மிக துணிந்து—மிகவுந்தைரியமுடையவனாய், ஒன்று ஓர் வாளொடு—ஒருவாட்படையுடன், ஒருத்தன் போந்தனை— தனித்தவனாய்வந்தாய், மாயை கற்று உளாய்—மாயங்களைநன்குகற்றிருக்கின்றாய், இவ் இடை வாத்து என்—இங்கேவந்தகாரியம்யாது? எ—று.

விருந்தன் என்பது விருத்தன் எனவலித்தது. வலிமுதலியவற்றான்மேம்பட்டார் தம்மாலடக்கப்பட்டாரைத் திருத்தமற்றோரென இகழ்தலியல்பு. பற்பலதேவர்களைக் கண்டறிந்தானதலின் 'தேவர்தம்முளும்விருத்தன்போலும்' என்றான். முன்வந்து இந்நகர்க்காவன்முதலியவற்றையறிந்திருப்பாயேல் இவ்வாறுவாத்துணியாயென்பதும் இதனாற்போதரும். (கங)

ஆலா லத்தை யயின்ற நம்பனோ
மாலா னோவன சத்தி லண்ணலோ
பாலார் தந்தி படைத்த கள்வனோ
மேலா ரிங்குனை விட்ட தன்மையார்.

இ—ள்: ஆலாலத்தை அயின்ற நம்பனோ—நஞ்சையமுதுசெய்த சிவபிரானோ, மாலானோ—திருமாலோ, வனசத்தில் அண்ணலோ—தாமரைமலராசனத்திலிருக்கின்ற பிரமதேவரோ, பால் ஆர் தந்தி படைத்த கள்வனோ- வெண்ணிறம்பொருந்திய ஐராவதயானையை வாகனமாகவுடைய இந்திரனோ, இங்கு உனை விட்ட தன்மையார்—இந்நகர்க்கு உன்னையனுப்பியதன்மையை உடையோர், மேல் ஆர்— (இவரல்லாவிடின்) வேறியாவர்? எ—று.

பால்-ஆகுபெயர். கரந்துறைந்தானதலின் இந்திரனைக்கள்வனென்றான். ()

சுற்றா நின்றனை சூழ விந்நக
ரொற்றாய் வந்தனை போலு முன்றனை
மற்றா ருய்த்தனர் வந்த தென்கொலோ
விற்றாய் நின்னுயி ரெங்க ணுய்திநீ.

இ—ள்: இ நகர் சூழ சுற்றா நின்றனை—இந்தநகரத்தைவளைந்து சுற்றித்திரிகின்றாய், ஒற்றாய் வந்தனை போலும்—யாரோஒருவருக்குத்தூதாகவந்தாய்போலத்தோற்றுகின்றது, உன் தனை ஆர் உய்த்தனர்—உன்னை யாரனுப்பினார்கள், வந்தது என்—நீ வந்தது யாதுகருதி?, நின் உயிர் இற்றாய்—உன்னுடைய உயிரழியப்பெற்றாய், நீ எங்கண் உய்தி—நீ எவ்வாறுஉய்யப்பெறுவாய்? எ—று.

இற்றாய்-துணிவுபற்றிவந்தஇறந்தகாலம். தூதுவந்தார் நகர்ப்புறத்தேசுற்றித்திரிவதியல்பாதலின் 'சுற்றாநின்றனை..... ஒற்றாய்வந்தனைபோலும்' எனவும், தூதுசென்றநோக்கம்யாதென்பான் 'வந்ததென்கொல்' எனவும், நீ தூதுசென்றமையாற்பெற்றுக்கொள்ளும்பலன் உயிரிழத்தலேயாமென்பான் 'இற்றாய்நின்னுயிர்' எனவும், இது ஒருவாற்றானுந்தவறாதென்பான் 'எங்கணுய்திநீ' எனவும் கூறினான். (௧௪)

சிறையிற் பட்டுழ றேவர் செய்கையை
யறிகுற் றிந்திர னாளை யாகியே
நெறியிற் போக நினைந்து ளாய்கொலாங்
குறுகுற் றாயிது வுங்கு றிப்பதோ.

இ—ள்: சிறையில் பட்டு உழல் தேவர் செய்கையை அறிகுற்று—சிறையிலகப்பட்டு அலைகின்ற தேவர்களது வருத்தத்தையறிந்து, இந்திரன் ஆள் ஆகி—இந்திரனது ஏவலாளாய், நெறியில் போக நினைந்துளாய் குறுகுற்றாய் கொல்—அவனேவியவழிப்படி நடக்கநினைந்துவந்தாய்போலும், இதுவும் குறிப்பதோ—இதுவுந்துணியத்தக்கதோ? எ—று.

ஐ-சாரியை. தேவர்சிறையைமீட்கஇயலாத இந்திரனுக்கு நீஏவலாளாய் வந்தது தகாதகாரியம் என்பதாம். (௧௫)

விண்டோ யுங்கனன் மேவு மெல்லையின்
மண்டோய் பூளை மருத்த னுய்த்தெனப்
பண்டே நொய்மை படுந்தி றத்திவட்
கொண்டே வந்தது கொல்லும் வல்வினை.

இ—ள்: விண் தோயும் கனல் மேவும் எல்லையில்—ஆகாயத்தையளாவியெரிகின்ற அக்கினிதங்கிய இடத்தில், மண் தோய் பூளை—நிலத்திற்கிடந்தபஞ்சை, மருத்தன் உய்த்து என-காற்றுவீசிக்கொண்டுபோய்விட்டாற்போல, பண்டே நொய்மை—இயற்கையில் வலியில்லாதவனாயிருக்கின்றஉன்னை, கொல்லும் வல் வினை—கொல்லவேண்டியகொடியஊழ்வினையானது, படும் திறத்து—அழியும்படியாக, இவண் கொண்டு வந்தது—இவ்விடத்திற்கொணர்ந்துவிட்டது எ—று.

நொய்மை-வினையாலணையும்பெயர். ஓங்கியெரிகின்றதீயென்பான் 'விண்டோயுங்கனல்' எனவும், எவர்க்குமுபயோகப்படாததும் மிகநொய்யதுமாகியபஞ்சென்பான் 'மண்டோய்பூளை' எனவும், நம்முடனெதிர்த்துநோக்காதவழியும் வலியற்றானாய்க்காணப்படுவாயென்பான் 'பண்டேநொய்மை' எனவும், தவறாதுபலிக்கும்வினையென்பான் 'வல்வினை' எனவும் கூறினான். (௧௬)

முன்னந் நம்பணி முற்று மாற்றியே
கின்னங் கொண்டு கரந்த கீழ்த்திசை

மன்னன் பா லுறு வாரு ளன் றுநீ
யின்னும் மஞ்சலே யென்னை யெண்ணலாய்.

இ—ள்: முன்னம் நம் பணி முற்றும் ஆற்றி—முற்காலத்திலெங்களேவல்க ளெல்லாவற்றையுஞ்செய்து, கின்னம் கொண்டு கரந்த—(அதனால்) இளைப்புற்றொளித்திருக்கின்ற, கீழ்த்திசை மன்னன் பால் உறுவாருள் அன்று—கிழக்குத்திக்கிற் கதிபனாகிய இந்திரனிடத்துச்சார்ந்திருப்பவருள் ஒருவனல்லே, (ஏனெனில்), இன்னும் அஞ்சலே—இவைகளையெல்லாஞ்சொல்லவும் பயப்படுகின்றிலாய், என்னை எண்ணலாய்—என்னைச்சிறிதும்மதியாய்(ஆதலால்) எ—று.

முன்னம்நம்பணி இன்னும்மஞ்சலேயென்பவற்றில் மகரவொற்றுவிரித்தல். இந்திரன்சார்பிலுள்ளாயேல் இத்துணைத்தைரியமுளதாகாதென்பதுபோதர இந்திரனது சிறுமையையெடுத்துக்கூறினன். மீன்சுமத்தன்முதலியஎளியபணிகளையுமென்பான் 'பணிமுற்றும்' என்றான். கின்னம்-அதிகமுயற்சிசெய்தலால் உடலுக்காயினும் மனத்திற்காயினும் உண்டாகிய வருத்தம். (கஅ)

கொல்லா நிற்பதொர் கூற்ற மேயெனச்
செல்லா நின்றிடு திண்ணி யேன்முன
நில்லா யெங்கடா நீங்கு வாயெனு
வொல்லா னோதி யுரப்பி யேகினன்.

இ—ள்: கொல்லா நிற்பது ஓர் கூற்றமே என—கொல்லுந்தொழிலேயுடைய ஒரு யமனையேபோல, செல்லா நின்றிடு—வருகின்ற, திண்ணியேன் முன்ம்--வலியவனாகிய எனக்குமுன், நில்லாய்—நில், அடா எங்கு நீங்குவாய்—அடா! எங்கேதப்பிப்போவாய், எனு—என்று, ஒல்லான் ஓதி--பகைவனாகிய கயமுகன்பேசி, உரப்பி ஏகினன்—உரப்பிக்கொண்டுவந்தான் எ—று.

உன்னைத்தப்பியோடவிடேனென்பதுபோதர யமனைத்தனக்குவமித்துக்கூறினன். (கசு)

வன்றாள் கொண்ட மதக்க யாசுரன்
சென்று னின்னன செப்பி யிம்மொழி
நன்று லென்று நகைத்து நோக்கியே
நின்றான் வாகை நெடும்பு யத்தினன்.

இ—ள்: வன் தாள் கொண்ட மத கயாசுரன்—உரத்த கால்கள்பொருந்திய மதயானையின்முகம்போலு முகங்களை யுடைய அவ்வசுரன், இன்னன செப்பி சென்றான்—இவ்வாசகங்களைச்சொல்லிக்கொண்டு எதிரேவந்தான், வாகை நெடும் புயத்தினன்—வீரவாகுதேவர், நோக்கி—(அவனதுவருகையைப்)பார்த்து, இ மொழி நன்று என்று நகைத்து—நீ சொல்லியதுமிகநன்றென்றுகூறிச்சிரித்து, நின்றான்—சிறிதுபொழுதுதாமதித்துநின்றார் எ—று.

வாகைநெடும்புயத்தினன்-வெற்றியார்ந்த நெடியபுயங்களையுடையவன். நன்றென்றதுகுறிப்பாற்பழித்தது. என்வீரத்தையும் வலிமையுஞ்சிறிதுமெண்ணாதுஇத்துணைவீரங்களையெல்லாம்பேசிவருகின்றானேயென்று சிரித்தனரென்க. (உ௦)

ஓவா திவ்வகை யோதி முன்வருந்
தீவா யோனெதிர் சென்று வல்லேயிற்
சாவா யென்னிடை சார்ந்து ளாய்கொலாம்
வாவா வென்றனன் வாகை மொய்ம்பினன்.

இ—ள் ஓவாது இவ்வகை ஓதி முன் வரும் — ஒழியாது இவ்வாறேவீரம் பேசிக்கொண்டு முன்னேவருகின்ற, தீவாயோன் எதிர்— கொடிய வாயையு

டைய அவ்வசுரனுக்கெதிரே, வாகை மொய்ம்பினான்—வீரவாகுதேவர், வல்லையில் சென்று—விரைவிற்போய், சாவாய் என் இடை சார்ந்துளாய் கொல்—இறக்குங்காலங்கிட்டி என்னிடத்தில் வந்தாய் போலும், வா வா என்றனன்—வா வா என்றுகூறினார் எ—று.

அடுக்கு விரைவுபற்றியது. பலகொடுமொழிகளைகூறினானாதலின் 'தீவாயோன்' என்றார். (உக)

வானோ ரஞ்ச வருங்க யாசுரன்
றானோர் குன்று தனைப்ப றித்திடா
வூனோ டுன்னுயி ருண்ணு மீதென
வானோன் மைந்தன்மு னார்த்து வீசினான்.

இ—ள்: வானோர் அஞ்ச வரும் கயாசுரன்—தேவர்கள் பயப்படும்படி வருகின்ற கயமுகாசுரன், ஓர் குன்று தனை பறித்திடா—ஒரு மலையைப்பிடுங்கி, ஈது—இம்மலை, ஊனோடு உன் உயிர் உண்ணும் உன்னுடையஉடலையுமுயிரையுமழிக்கும், எனா—என்றுகூறி, ஆனோன் மைந்தன் முன்—சிவபிரானது குமாரராகிய வீரவாகுதேவர்க்கெதிரே, ஆர்த்து வீசினான்—ஆரவாரித்துச்செலுத்தினான் எ—று.

ஆனோன்-இடபத்தைவாகனமாகவுடையவர். தேவரஞ்சுவது இவனால் வீரவாகுதேவர்க்கு யாதுதீங்குவிளையுமோவென்பதுபற்றி. (உஉ)

விண்டோய் மேனி வியன்க யாசுரன்
கொண்டோர் கையில் விடுத்த குன்றது
வண்டோ லம்புரி மாலை மொய்ம்பினான்
றிண்டோண் மீமிசை செவ்வ னுற்றதே.

இ—ள்: விண் தோய் மேனி வியன் கயாசுரன்—ஆகாயத்தையளாவியுயர்ந்தவடிவத்தையுடைய பெரியகயமுகாசுரன், ஓர் கையில் கொண்டு—ஒருகையிலேந்தி, விடுத்த குன்று அது—வீசிய அந்த மலையானது, வண்டு ஓலம் புரி மாலை மொய்ம்பினான் திண் தோள் மீமிசை—வண்டுகளொலிக்கப்பெற்ற மலர்மாலையையணிந்த புயங்களையுடைய வீரவாகுதேவரது வலிய புயத்தின்மேல், செவ்வண் உற்றது—நன்றாகப்பட்டது எ—று.

தாக்கமாகப்பட்டதென்பார் 'செவ்வனுற்றது' என்றார். (உங)

வேழத் தோன்முகன் விட்ட பூதரம்
பாழித் தோண்மிசை பட்ட காலையில்
வாழிப் பூதியின் வட்டு விண்டெனப்
பூழித் தாகி யுடைந்து போயதே.

இ—ள்: வேழ தோல் முகன் விட்ட பூதரம்—கயமுகாசுரனெறிந்தஅந்தமலையானது, பாழி தோள் மிசை பட்ட காலையில்—வீரவாகுதேவரது பருத்தபுயத்திற்பட்டபொழுது, பூதியின் வட்டு விண்டு என—புழுதியினாற்செய்யப்பட்ட உருண்டை உடைந்தாற்போல, பூழித்து ஆகி உடைந்து போயது—துகளாயுடைந்து போயிற்று எ—று.

வாழி-அசைநிலை. வேழம் தோல் ஒருபொருட்சொற்கள். வேழமென்னும் பெயர்த்தாகியயானையெனப்பொருள்கூறுக. பூதரம்-பூமியைத்தாங்கிநிற்பது. மேருமுதலியசிலமலைகள் அங்ஙனந்தாங்கிநிற்றலியல்பு. வீரவாகுதேவரது புயத்தினின்று திண்மையால்மிகக்குறைந்ததென்பதுபோதர மலைக்குப்புழுதியுருண்டையையுவமைகூறினார். பட்டகாலையில் உடைந்துபோயது எனஇயையும். (உச)

பொடியுங் காலெதிர் புக்க தீயவன்
மிடல்கொண் டுற்றிடு வீர னாற்றல்கண்
டுடலுந் திண்சின முற்றோ ராயிரம்
படருங் குன்று பறித்தன் மேயினான்.

இ—ள்: பொடியுங்கால்—அவ்வாறுதுகளாகும்பொழுது, எதிர் புக்க தீயவன்—எதிர்த்துநின்ற கொடியவனாகிய கயமுகன், மிடல் கொண்டு உற்றிடு வீரன் ஆற்றல் கண்டு-மிடுக்குள்ளவராய்நிற்கின்ற வீரவாகுதேவரது வலியைக்கண்டு, உடலும் திண் சினம் உற்று—மூளுகின்ற கடுங்கோபத்தைக்கொண்டு, ஒரு ஆயிரம் படரும் குன்று—பரந்த ஆயிரம்மலைகளை, பறித்தல் மேயினான்—பிடுங்கத்தொடங்கினான் எ—று.

பொடியுங்காற்கண்டு எனஇயையும். எதிரேசெல்லும்மலைக்குச்சிறிதுமஞ்சாமையையும் மலைதுகளாயதையும் கண்டென்பார் 'மிடல்கொண்டுற்றிடுவீரனாற்றல்கண்டு' எனவும், இவனையிப்பொழுதே கொன்றுவிடல்வேண்டுமென்று கடுங்கோபம் வளரப்பெற்றானாதலின் 'உடலுந்திண்சினமுற்று' எனவும், முன்வீசியமலையினும்மிகப்பெரியமலையென்பார் 'படருங்குன்று' எனவும் கூறினார். ()

பறியா நின்ற பகட்டு மாமுக
னெறிவீழ் கின்ற நெடுங்கை சுற்றினா
னிறைசேர் மேரு விருந்த கோடெலாங்
கறைசேர் காலவர் கட்டெ ழுந்தபோல்.

இ—ள்: பறியாநின்ற பகட்டு மா முகன்—அங்ஙனம்பிடுங்கத்தொடங்கிய கயமுகாசுரன், இறை சேர் மேரு இருந்த கோடு எலாம்—தலைமைபொருந்திய மேருமலையிலிருந்த ஆயிரஞ்சிகரங்களையும், கறை சேர் காலவர் கட்டு எழுந்த போல்—கருநிறத்தையுடைய வாயுக்கள் பிடுங்கியெழுந்தாற்போல, நெறி வீழ்கின்ற நெடும் கை சுற்றினான்—முறையே தூங்குகின்ற நெடிய துதிக்கைகளினாற் சுற்றியெடுத்தான் எ—று.

வாயுதேவன் முன்னொருகாலத்தில் ஆதிசேடனுடன்பகைத்துமேருமலையின்மூன்றுகோடுகளைப்பிடுங்கினான், அங்ஙனமின்றி ஆயிரஞ்சிகரங்களையும் பிடுங்கினாற்போல, கயமுகாசுரன் ஆயிரமலைகளைப்பிடுங்கினான் என்பதாம். எழுந்தபோற் சுற்றினான் எனஇயையும். மலைகளுட்சிறந்ததாதலின் 'இறைசேர்மேரு' என்றார். அபூதவுவமை. (உசு)

பத்தா நூறு படுத்த வேலையுண்
மத்தா குற்றன வாசு கித்தொகை
மொய்த்தார் வன்றலை முன்பு சூழ்ந்தெனக்
கைத்தா மால்வரைக் காட்சி மிக்கவே.

இ—ள்: வேலையுள் மத்து ஆக உற்றன—பாற்சமுத்திரத்தில் மத்தாயிருந்த மந்தரமலைகள், பத்து ஆம் நூறு படுத்த-ஆயிரமென்னுந்தொகைப்பட்டனவாய், வாசுகி தொகை மொய்த்து-அத்தொகையான வாசுகிக்கூட்டங்கள்மொய்க்கப்பெற்று, ஆர் வன் தலை முன்பு சூழ்ந்து என-அவற்றினது நிறைந்த வலிய தலைகள் முன்னே தோற்றவளைக்கப்பட்டாற்போல, கை தாம் மால் வரை காட்சி மிக்க---துதிக்கைகளாலே தாவப்பட்டபெரியமலைகளின்றோற்றம் பொலிந்தது எ—று.

பாற்கடலைத்தேவர்கள் கடையும்போது மத்தாயிருந்த மந்தரமலையொன்றை வாசுகிகயிறாய் வளைந்ததன்றே, அவ்வாறு ஆயிரம்மந்தரமலைகளை ஆயிரம்வாசுகிகள் வளைந்ததுபோல, ஆயிரமலைகளையும் முறையேஆயிரந்துதிக்கைகளாலும் வளைத்துப்

பெயர்த்தெடுத்தான் என்பதாம். மலைகளுக்கு மந்தரங்களும் திக்கைகளுக்கு வாசுகிகளும் உவமை. ஆக தாவும் என்பன தொக்கன. வாசுகிகள்வலை தற்கேதுத் தோன்ற மந்தரங்களை 'வேலையுண்மத்து' என்றார். (உஎ)

துண்ணென் றேகயா சூர னாறுபத்
தெண்ணுந் தொல்கிரி யாவு மெம்பிரான்
கண்ணின் றோன்விடு காமர் காளைமேல்
விண்ணங் கான்றென வார்த்து வீசினான்.

இ—ள்: கயாசூரன்—கயமுகாசுரன், துண் என்று—விரைவாக, நூறு பத்து எண்ணும் தொல் கிரி யாவும்—ஆயிரமென்றுகணக்கிடப்பட்ட பழையமலைகளெல்லாவற்றையும், எம்பிரான் கண் நின்றோன் விடு காமர் காளை மேல்—எங்கள்தலைவராகியசிவபிரானது திருக்கண்களினின்றுந்தோற்றிய முருகக்கடவுள் அனுப்பிய அழகிய வீரவாகுதேவர்மேல், விண்ணம் கான்று என ஆர்த்து வீசினான்—மேகம் இடியைக்கான்றாற்போலஆரவாரித்துச்செலுத்தினான் எ—று.

கயாசூரன்-நீட்டல்விகாரம். காளை-ஆகுபெயர். விண்ணம் என்பதில் அம் பகுதிப்பொருள்விகுதி. பெருமலைகளென்பார் 'தொல்கிரி' எனவும், பேரொலி தோன்ற ஆர்த்தென்பார் 'விண்ணங்கான்றெனவார்த்து' எனவும் கூறினார். ()

பாடார் பல்கிரி பற்றி வீசலு
மீடார் வெம்புலி யாளி கேசரி
கோடார் தந்திகள் கோடி கோடிகள்
வீடா வார்ப்பொடு விம்மி வீழ்பவே.

இ—ள்: பாடு ஆர் பல் கிரி பற்றி வீசலும்—பெருமைபொருந்திய பலமலைகளைப்பிடுங்கி (அவ்வாறு அவன்) எறிய, ஈடு ஆர் வெம் புலி—வலிமைபொருந்திய கொடிய புலிகளும், யாளி—யாளிகளும், கேசரி—சிங்கங்களும், கோடு ஆர் தந்திகள்—கொம்புகளையுடைய யானைகளும், கோடி கோடிகள்—கோடிகோடியென்னுந்தொகையாக, வீடா ஆர்ப்பொடு—ஒழியாத ஆரவாரத்துடன், விம்மி வீழ்ப—துயருற்றனவாய் விழுவன எ—று.

கோடிகோடி-கோடியானுறழ்ந்தகோடி. மிகப்பலவென்பார் 'கோடிகோடிகள்' என்றார். தம்மிருப்பிடத்தினின்று தவறிய அச்சத்தால் ஆர்த்தன. (உக)

கேடாய் மன்னர் கிடப்ப வாங்கவர்
வீடா வாக்க மிசைந்து ளாரெனப்
பாடா வண்டு பரூரை மால்வரை
யூடார் தேன்க ளுகுப்ப வுண்டவே.

இ—ள்: மன்னர் கேடு ஆய் கிடப்ப—அரசர்கள் அழிவெய்திக்கிடக்க, அவர் வீடா ஆக்கம் மிசைந்துளார் என—அவர்களது அழியாத செல்வத்தையனுபவிப்பவர்களைப்போல, பரூ அரை மால் வரை ஊடு ஆர் தேன்கள் உகுப்ப—பருத்த அடியையுடைய பெரிய மலையிலுள்ளதேன்கள் கீழேசிந்த, வண்டு பாடா உண்ட—வண்டுகள் (அதன்மேல்வந்துமொய்த்துக்) கீதத்தைப்பாடிப்பருகின எ—று.

பெருஞ்செல்வமென்பார் 'வீடாவாக்கம்' எனவும், மனமுவந்துண்டவென்பார் 'பாடா-உண்ட' எனவும் கூறினார். மிசைந்துளாரென உண்ட என இயையும். பாடா-செய்யாவென்வாய்பாட்டுவினையெச்சம். அரசர் அரசியன்முதலியவற்றையிழந்து அழிந்தகாலத்தில் அவரதுசெல்வத்தைப் பிறர் மனமுவந்தனுபவித்தாற்போல, மலைகள்பெயர்த்தெறியப்படும்போது அவற்றினின்றுஞ்சிந்திய தேனை வண்டுகள் மனமகிழ்ந்து பருகின என்பதாம். மலர்முதலியவற்றிற்சிறிதுசிறி

தாயெடுக்கப்படுந்தேனை உண்டுவாழும்வண்டுகளுக்கு முன்னொருகாலுங்கிடைக்கப்பெறாத பெருவெள்ளமானதேன் எளிதிற்கிடைத்தலால் இவ்வாறுவமித்தார். மலைச்சார்பிற் சோலைகள்மிகுதியாயிருத்தலால் தேன்கூடுகளுமிகுதியாயின. (௩௦)

வேறா கும்பல வெற்பி டந்தொறு
மூறா நின்றுல வுற்ற வான்புனன்
மாறா மற்கவிழ் வுற்று வல்லைபே
ராறா கிக்கட லென்ன வார்த்ததே.

இ—ள்: வேறு ஆகும் பல வெற்பு இடம் தொறும்— வெவ்வேறாகிய பலமலைகளினிடங்கடோறும், ஊறாநின்று உலவுற்ற-ஊறிப்பாய்கின்ற, வான் புனல்—பெரிய அருவிநீர், மாறாமல் கவிழ்வுற்று—விலகப்பெறாது சிந்தி, வல்லை பேர் ஆறு ஆகி—விரைவிற் பெரிய ஆறாகி, கடல் என்ன ஆர்த்தது—சமுத்திரம்போல ஆரவாரித்தது எ—று.

ஒவ்வொருமலைகளினுமென்பார் 'வேறாகும்பலவெற்பிடந்தொறும்' எனவும், ஒருங்கேசிந்தியென்பார் 'மாறாமற்கவிழ்வுற்று' எனவும், சிந்தியவுடனொருங்குகூடிப்பாய்ந்தென்பார் 'வல்லைபேராறாகி' எனவும் கூறினார். (௩௧)

வரைவீழ் பூம்புனன் மாந திக்கணே
யிரையா மாக்க ளியாவும் வீழ்தலாற்
றிரைசேர் வாரிகள் சென்று சேணெழீஇ
விரைவால் வெய்யவன் வெப்ப நீக்குமே.

இ—ள்: வரை வீழ் பூம் புனல் மா நதிக்கண்— மலையினின்றுஞ்சிந்தியபொலிவார்ந்த அருவிநீராகிய பெரியயாற்றில், மாக்கள் யாவும் இரையா வீழ்தலால்—அம்மலையில்வாழ்ந்த மிருகங்களெல்லாம் ஆரவாரித்துக்கொண்டுவிழுதலினால், திரை சேர் வாரிகள்—திரைபொருந்தப்பெற்ற அந்தநீர், சென்று சேண் எழீஇ—துள்ளி ஆகாயத்திலெழும்பிப்போய், வெய்யவன் வெப்பம் விரைவால் நீக்கும்—சூரியனுடைய வெப்பத்தை விரைவிற்போக்கும் எ—று.

மலைகளினின்றுவீழ்ந்த அருவிநீர்வெள்ளத்தில் மிருகங்கள் தவறிவிழும்பொழுது மேற்கிளம்புகின்றநீர் சூரியமண்டலத்திற்பட்டு அம்மண்டலத்தின்வெப்பத்தையாற்றும் என்பதாம். இதுகாறும் நான்குசெய்யுட்களாற் கயமுகன்வீசியமலைகளின்வளனும் பெருமையும் வருணிக்கப்பட்டன. (௩௨)

பேசுஞ் சீரிவை பெற்ற வெற்பெலா
மீசன் றூதுவன் முன்ன ரெய்தின
பாசஞ் சுற்றிய பம்ப ரத்தொகை
வீசுங் காலை சுழன்று வீழ்வபோல்.

இ—ள்: பாசம் சுற்றிய பம்பர தொகை—கயிற்றினாற்சுற்றப்பட்ட பம்பரக்கூட்டங்கள், வீசும் காலை—எறியப்பட்டபொழுது, சுழன்று வீழ்வ போல்—சுழன்றுவிழுந்தன்மைபோல, பேசும் சீர் இவை பெற்ற வெற்பு எலாம்— இதுகாறுஞ்சொல்லப்பட்ட இந்தச்சிறப்புக்களைப்பொருந்திய மலைகளெல்லாம், ஈசன் தூதுவன் முன்னர் எய்தின—முருகக்கடவுளது தூதராகிய வீரவாகுதேவருக்குமுன் சென்றன எ—று.

கோல்களிற்கயிறுகளாற்சுற்றப்பெற்ற பம்பரங்களை வீச அவை சுழன்றுவிழுந்தன்மைபோல, சிகரங்களிற்றுதிக்கைகளால்வாரியெடுக்கப்பட்ட மலைகளைக்கயமுகன்வீச அவை அந்தவீச்சின்வேகத்தாற்சுழன்றுபோய்வீழ்ந்தன என்பதாம் ()

வேறு.

சுடர்ப்பெ ருங்கதி ராதவன் றுண்ணெனக் கரப்ப
வடுக்க லாயிர மின்னவா றொருதலை யாகக்
கடற்பு குங்கண முகிலென வருதலுங் கண்டான்
றடக்கை வேலுடை யண்ணறாண் முன்னினன் றமியோன்.

இ—ள்: சுடர் பெரும் கதிர் ஆதவன் துண்ணென கரப்ப—ஒளிமிகுந்த பெரியகிரணங்களையுடைய சூரியன் விரைவில்மறையும்படி, அடுக்கல் ஆயிரம்—ஆயிரம்மலைகளும், இன்னவாறு—இப்படி, ஒரு தலை ஆக—ஒரேகூட்டமாக, கடல் புகும் கண முகில் என வருதலும்—கடலில்நீரைப்பருகும்படிபுகுந்த கூட்டமாகிய மேகங்களைப்போலவர, தமியோன்—தனித்துநிற்பவராகிய வீரவாகுதேவர், கண்டான்—அவற்றைப்பார்த்து, தட கை வேல் உடை அண்ணல் தாள் முன்னினன்—பெருமைபொருந்திய திருக்கரத்தில் வேற்படையையேந்திய முருகக்கடவுளது திருவடிகளைத் தியானித்தார் எ—று.

கரப்ப வருதலும் என இயையும். ஆகாயத்திலிடைவெளிதோன்றாவண்ணம் ஒன்றோடொன்றடர்ந்து கருநிறமுடையனவாய்வந்தனவாதலின் 'கடற்புகுங் கணமுகிலெனவருதலும்' என்றார். தடுத்தலரிதாதலின் அவற்றாற்றமக்குத்தீங்கு விளையாவண்ணம் முருகவேளைத்தியானித்தனர். (௫௪)

நிற்கு மெல்லையில் வெங்கொலைத் தொழின்முறை நிரம்பக்
கிற்கும் வெய்யவன் விடுத்திடு மாயிரங் கிரியும்
பற்கன் மால்வரை காப்பவன் றன்மிசை பழிதீ
ரற்கன் மேல்வரு மெழிலிக ளெனவடைந் தனவே.

இ—ள்: நிற்கும் எல்லையில்—அவ்வாறு தியானித்துநிற்கும்பொழுது, வெம் கொலை தொழில் முறை நிரம்ப கிற்கும் வெய்யவன் விடுத்திடும் ஆயிரம் கிரியும்—கொடிய கொலைத்தொழிலின்முறையை மிகப்பயின்ற தீயவனாகிய கயமுகன் செலுத்திய ஆயிரம்மலைகளும், பழி தீர் அர்கன் மேல் வரும் எழிலிகள் என—குற்றமற்ற சூரியமண்டலத்தின்மேல் வந்துமறைக்கின்ற மேகங்களைப்போல, பற்கன் மால் வரை காப்பவன் தன் மிசை—சிவபிரான்வீற்றிருக்கின்ற பெரிய திருக்கைலாசகிரியைக்காவல்செய்கின்ற வீரவாகுதேவர்மேல், அடைந்தன—வந்தணுகின எ—று.

பர்க்கன் அர்க்கன் என்னும்வடமொழிகள் விகாரமாய்நின்றன. கிரியும் அடைந்தன என இயையும். சிறிதுமிரக்கமின்றி உயிர்களைக்கொன்றுபயின்றவனென்பார் 'வெங்கொலைத்தொழின்முறைநிரம்பக்கிற்கும்வெய்யவன்' எனவும், நந்திகணத்தவரென்பார் 'பற்கன்மால்வரைகாப்பவன்' எனவும், சுடுகிரணங்களைப்பரப்புகின்றவென்பார் 'பழிதீர்' எனவும் கூறினார். மேகங்கள்மூடுதலாற் சூரியனுக்குச்சிறிதுந்தீங்குவிளையாமைபோல மலைகளடர்ந்துவருதலால் வீரவாகுதேவர்க்குச் சிறிதும் தீங்குநேராதென்பதுகுறிப்பு. (௫௫)

வேறு.

மறுவரை யாத திங்கள் வார்சடைக் கடவு ணல்க
வறுவரை யனையாப் பெற்றோ னருளினு லைய னிற்ப
வுறுவரை பத்து நூறு மொருங்குமா யுற்று மற்றோர்
சிறுவரை தன்னில் யாவுஞ் சிதறியே யுடைந்த வன்றே.

இ—ள்: மறு வரையாத திங்கள் வார் சடை கடவுள் நல்க—குற்றம்பொருந்தப்பெறாத சந்திரனையணிந்த நீண்டசடையையுடைய சிவபிரான்தோற்றுவிப்ப,

அறுவரை அனையா பெற்ருேன்—கார்த்திகைப்பெண்களறுவரையுந் தாயாகப்பெற்றவராகிய முருகக்கடவுளது, அருளினல்—திருவருளைப்பெற்று, ஐயன் நிற்ப—வீரவாகுதேவர்நிற்க, உறு வரை பத்து நூறும்— அணுகிவந்தஆயிரம்மலைகளும், ஒருங்கு ஆய் உற்று—ஒருங்கேவந்து, ஓர் சிறுவரை தன்னில்—ஒருமாத்திரைப்பொழுதினுள், யாவும் சிதறி உடைந்த—எல்லாம் சிதறி உடைந்தன எ—று.

ஒருங்கும் என்பதில் உம் அசைநிலை ஞானசந்திரனென்பார் 'மறுவரையாததிங்கள்' என்ருர். வீரவாகுதேவர் யாதொருமுயற்சியுஞ்செய்யாதுநிற்பவும் முருகவேளருளால் உடைந்துசிதறின என்பதாம். மாயுற்று எனக்கண்ணழித்து அழிந்தெனப்பொருள்கூறினுமாம். (௩௬)

தெளிதரு வீரன் றன்மேற் செறிந்திடு மடுக்கல் யாவும்
விளிவொடு மாய்ந்த வன்றி விளைத்தில வேறங் கொன்றும்
வளநனி சுருங்கி வானம் வறந்தநாள் வெளிற்றுக் கொண்மூக்
கிளர்வன பயனின் ருகிக் கேடுபட் டுடையு மாபோல்.

இ—ள்: வளம் நனி சுருங்கி வானம் வறந்த நாள்—வளங்கள்மிகவுங்குறைந்து மழை அற்பமானகாலத்தில், வெளிற்று கொண்மூ கிளர்வன—வெண்மேகங்கள்தோன்றி, பயன் இன்று ஆகி கேடுபட்டு உடையுமா போல்— பிரயோசனமற்றதாய்க்கெட்டுச்சிதறுந்தன்மையைப்போல, தெளிதரு வீரன் தன் மேல் செறிந்திடும் அடுக்கல் யாவும் —சிறந்த வீரராகிய வீரவாகுதேவர்மேல் நெருங்கியமலைகளெல்லாம், விளிவொடு மாய்ந்த அன்றி—அழிந்தொழிந்தனவேயல்லாமல், வேறு ஒன்றும் விளைத்தில—வேறொருதீமையையுஞ்செய்தில எ—று.

போல் மாய்ந்த எனஇயையும். பற்பலபெரும்போர்களில் இளையாதுநின்று பொருதுபயின்றவீரனென்பார் 'தெளிதருவீரன்' எனவும், மரமுதலியவைகள் உலர்ந்துவாடியென்பார் 'வளநனிசுருங்கி' எனவும், கருக்கொள்ளாதமேகமென்பார் 'வெளிற்றுக்கொண்மூ' எனவும், மழைபெய்யாதென்பார் 'பயனின்ருகி' எனவும், காற்றினற்பிரிக்கப்பட்டென்பார் 'கேடுபட்டு' எனவும் கூறினர். சுக்கிரன் சூரியனுக்குப்பின்னேசஞ்சரித்தல் முதலியகாரணங்களால் மழைகுறையவேண்டிய ஆண்டுகளில் மேகங்கள்மழைபொழியுமென்றுகண்டோரெண்ணத்தக்கதாய்மூடிச் சிறிதுநேரத்துள் மழைபொழியாதுஅழிவதுபோல, கயமுகனேவியமலைகள் வீரவாகுதேவரையழிக்குந்தோற்றத்தினவாயடர்ந்துபோய் அணுகியவுடன் அவர்மேலோருறுஞ்செய்யாது உடைந்துவீழ்ந்தன என்பதுகருத்து. பயனின்ருகி என்பதற்கு நீர்பொழிதலின்றி எனப் பதப்பொருள்கூறினுமாம். (௩௭)

மட்பகை வினைஞ ராலேனோர் வனைதரு கலங்கண் முற்றுந்
திட்பமொ டமர்ந்த கற்றூண் சேர்ந்துழிச் சிதறு மாபோற்
கொட்புறு புழைக்கை வெய்யோன் குறித்தெறி பிறங்கல் யாவு
மொட்பம தடைந்த வீரன் மிசைபட வுடைந்த வன்றே.

இ—ள்: மட்பகைவினைஞர் ஆனோர் வனைதரு கலங்கள் முற்றும்—குயவராற்செய்யப்பட்ட மட்பாத்திரங்களெல்லாம், திட்பமொடு அமர்ந்த கல் தூண் சேர்ந்துழி சிதறுமா போல்—கடினத்தன்மையுடன்கூடியுள்ள கற்றூணிலெறியப்பட்டவுடன் (உடைந்து)சிதறுந்தன்மைபோல, கொட்பு உறு புழை கை வெய்யோன் குறித்து எறி பிறங்கல் யாவும்—சுழலுகைபொருந்திய துதிக்கையினுற்கொடியவனுகிய கயமுகாசுரன்குறிப்பிட்டெறிந்தமலைகளெல்லாம், ஒட்பமது அடைந்த வீரன் மிசை பட—மனத்தெளிவையடைந்தவீரராகிய வீரவாகுதேவர்மேற்பட்டவுடன், உடைந்த—உடைந்துசிதறின எ—று.

போல் உடைந்த எனஇயையும். மட்பகைவினைஞர்-மண்ணுக்குப்பகையான தொழிலையுடையார். அரைத்தல் நெரித்தல் உருட்டுதல் முதலியதொழில்களால் மண்ணினியற்கையைமாற்றுதலால் குயவரைமட்பகைஞரெனவழங்குவர். தவறு தழிக்குமென்று சிந்தித்தெறிந்தவென்பார் 'குறித்தெறி' என்றார். இவ்வுவமான த்தால் வீரவாகுதேவரதுசரீரத்தினின்று மலைகள் மிகமென்மையாயினவென்ப துபெறப்பட்டது. (௯௮)

விறல்கெழு புயத்தி னான்மேல் விடுத்திடு கிரிகள் யாவும்
வறிதுபட் டிடலுங் காணு மால்கரி முகத்த னின்றா
னறநெறி யொருவி மொய்ம்பா லாற்றிய வெறுக்கை யாவும்
பிறர்கொள வுகுத்தி யாது மூதியம் பெறுகி லார்போல்.

இ—ள்: விறல் கெழு புயத்தினான் மேல் விடுத்திடு கிரிகள் யாவும்—வீரவாகுதேவர்மேலெறிந்த மலைகளெல்லாம், வறிதுபட்டிடலும்—பிரயோசனமற்றவைகளாயழிய, மால் கரிமுகத்தன்-பெரிய யானைமுகத்தையுடைய அசுரன், காணு நின்றான்—அதனைப்பார்த்து நின்றான், அற நெறி ஒருவி மொய்ம்பால் ஆற்றிய வெறுக்கை யாவும்—தருமநெறியினின்றுபிறழ்ந்து வலாற்காரமாகத்தேடிய செல்வமெல்லாவற்றையும், பிறர் கொள உகுத்து—பிறர்கவரும்படிசொரிந்து, யாதும் ஊதியம் பெறுகிலார் போல்—சிறிதும்பயன்பெறாத பாவிகளைப்போல எ—று.

போல் நின்றான் எனஇயையும். தீயார் கொள்ளையிடுதல்முதலியவற்றால்வவிதிற்கவர்ந்தபொருளைப் பிறர்க்குக்கொடுத்து (அறம்பொருளுடையார்க்காகத்) தாம்சிறிதும் நன்மையைப்பெறாமைபோல, கயமுகன் தன்சரீரபலத்தாற்பிடுங்கியமலைகளை வீரவாகுதேவர்மேலேவி அவற்றாற்சிறிதும்பலன்பெறாதுநின்றான் என்க. (௯௯)

கண்டுவிம் மிதத்த னாகிக் கயாசு ரன் முனிந் தோர் தண்டந்
திண்டிறன் மொய்ம்பன் றன்மேற் செலுத்தலு மதனைக் காணு
வொண்டழல் புரையு மொள்வா ளுறைகழித் தொல்லை வீழத்
துண்டம தாக்கி யன்னோ னெதிருறத் துன்ன லுற்றான்.

இ—ள்: கயாசுரன்—கயமுகாசுரன், கண்டு விம்மிதத்தன் ஆகி—அதனைப் பார்த்து ஆச்சரியமுற்று, முனிந்து—கோபித்து, திண் திறல் மொய்ம்பன் தன் மேல்—வீரவாகுதேவர்மீது, ஓர் தண்டம் செலுத்தலும்—ஒரு தண்டாயுதத்தையேவ, அதனை காணு—வீரவாகுதேவர் அதனைப்பார்த்து, ஒள் தழல் புரையும் ஒள் வாள் உறை கழித்து—சிறந்தஅக்கினிபோன்ற ஒளிபொருந்தியவாட்படையை உறையினின்று நீக்கியெடுத்து, ஒல்லை வீழ துண்டமது ஆக்கி—விரைவில்விழும்படி துண்டாக்கி, அன்னோன் எதிருற துன்னல் உற்றான்—அவ்வசுரனுக்கெதிரேபோனார் எ—று.

திண்டிறல்மொய்ம்பன்-உரத்த வலிய புயங்களையுடையவர். கொழுந்துவிட்டெரியுந்தீயென்பார் 'ஒண்டழல்' என்றார். (௱)

மத்தவெங் கயமாந் தீயோன் வாகையந் தடந்தோ ளண்ணன்
மெய்த்தனி யாற்றல் காணு விழுத்தகு படைக்கை யோச்சிப்
பத்துநூ றான சாலப் பழுமரம் பறியா வேந்தி
யுய்த்திட லொருதன் வாளா லொய்யெனச் சிந்தி யார்த்தான்.

இ—ள்: மத்த வெம் கயம் ஆம் தீயோன்—மதத்தைப்பொழிகின்ற கொடிய யானையின்முகங்களையுடைய அசுரன், வாகையம் தடம் தோள் அண்ணல் மெய் தனி ஆற்றல் காணு—வெற்றிமிகுந்தவிசாலித்தபுயங்களையுடைய அந்தவீரரது

தேகத்தின் ஒப்பற்றவலியைப்பார்த்து, விழுத்தகு பனை கை ஒச்சி—சிறந்த பனைக ள்போலுங்கைகளைநீட்டி, பத்து நூறு ஆன சால பழு மரம் பறியா ஏந்தி— ஆயி ரமென்னுந்தொகையான பெருத்தமராமரங்களைப்பிடுங்கியெடுத்து, உய்த்திட— செலுத்த, ஒரு தன் வாளால் ஒய் என சிந்தி ஆர்த்தான்—வீரவாகுதேவர் ஒப்பற் றதமதுவாட்படையினால் விரைவாக அவைகளைவெட்டி ஆரவாரித்தார் எ-று.

நீண்டபனையென்பார் 'விழுத்தகுபனை' என்றார். வீரவாகுதேவரது பெரு வலியையுடையசரீரத்தை ஊறுசெய்தற்கேற்றமரங்களைத் தெரிந்துபிடுங்கினனாத லின் 'மெய்த்தனியாற்றல்காணு-பறியா' என்றார். (௪௧)

காயெரி கலுழும் வெங்கட் கயாசுரன் விடுவான் பின்னுஞ்
சேயுயர் வரைபல் வேறு தெரிந்தனன் பறிக்கு மெல்லை
நாயகன் றூதன் காணு நாந்தகங் கொடுபோ யன்னா
னாயிர மாகி யுள்ள புழைக்கையு மறுத்தா னன்றே.

இ—ள்: காய் எரி கலுழும் வெம் கண் கயாசுரன்—சுடுகின்ற அக்கினியை ச்சிந்துகின்ற கொடிய கண்களையுடைய கயமுகாசுரன், விடுவான்—எறியும்படி, பின்னும்-பின்பும், சேய் உயர் பல் வேறு வரை தெரிந்தனன் பறிக்கும் எல்லை— மிகவுயர்ந்த பலவகையானமலைகளைத் தேடிப்பிடுங்கும்பொழுது, நாயகன் தூத ன் காணு—முருகக்கடவுளது தூதுவராகிய வீரவாகுதேவர்பார்த்து, நாந்தகம் கொடு போய்—வாட்படையையேந்திக்கொண்டு அணுகி, அன்னான் ஆயிரம் ஆ கி உள்ள புழை கையும்—அவனது ஆயிரமென்னுந்தொகைப்பட்ட உட்டுளைபொ ருந்திய கைகள்முழுவதையும், அறுத்தான்—வெட்டினார் எ—று.

பறிக்குமெல்லை அறுத்தான் எனஇயையும். (௪௨)

அறுத்தலுங் கவன்று தீயோ னாயிரத் திரட்டி கையுஞ்
செறித்திவன் றன்னைப் பற்றித் திற்றியாக் கொள்வ னென்றே
குறித்தன்ன் வளைப்ப வாளாற் கொம்மென வாற்றல் வீரன்
றறித்தன னொருசார் வந்த வாயிரந் தடக்கை முற்றும்.

இ—ள்: அறுத்தலும்—வெட்டியவுடன், தீயோன் கவன்று— கொடியவ னாகிய கயமுகாசுரன் துன்பமுற்று, ஆயிரத்து இரட்டி கையும் செறித்து—எஞ்சி யிருந்த இரண்டாயிரங்கைகளையுஞ்சேர்த்து, இவன் தன்னை பற்றி திற்றியா கொ ள்வன் என்று குறித்தனன்—இவனைப்பிடித்து உணவாகக்கொள்வேனென்றுசிந் தித்து, வளைப்ப—அவரைவளைக்க, ஆற்றல் வீரன்—வலிமையையுடைய வீரவா குதேவர், ஒரு சார் வந்த ஆயிரம் தட கை முற்றும்—ஒருபக்கத்தில் நீட்டப்பட்ட விசாலித்த ஆயிரங்கைகள்முழுவதையும், வாளால் கொம்மென தறித்தனன்—வா ட்படையினால் விரைவில்வெட்டினார் எ—று.

செறித்து வளைப்ப எனஇயையும். (௪௩)

செற்றமால் கரியின் பேரோன் றிண்கையா யிரமும் வீட்ட
மற்றையா யிரங்கை யாலும் வாகையஞ் செம்மன் மார்பி
னெற்றினா னெற்று மெல்லை யெல்லையில் வெகுளி யெய்தி
யற்றுவீழ்ந் திடவே வாளா லவையெலா மடுதல் செய்தான்.

இ—ள்: செற்ற மால் கரியின் பேரோன்— கோபத்தையுடைய பெரியயா னையின்பெயரமைந்த அசுரன், திண் கை ஆயிரமும் வீட்ட—வலியஆயிரங்கைக ளையும் (வீரவாகுதேவர்) வெட்டிவிழுத்த, மற்றை ஆயிரம் கையாலும்—மற்றைய ஆயிரங்கைகளினாலும், வாகையம் செம்மல் மார்பின் எற்றினான்—வீரவாகுதேவ

ருடைய மார்பிலடித்தான், எற்றும் எல்லை—அடிக்கும்பொழுது, எல்லை இல் வெகுளி எய்தி—(வீரவாகுதேவர்) அளவிறந்தகோபத்தைக்கொண்டு, அற்று வீழ்ந்திட—துணிபட்டுவிழும்படி, வாளால்—வாட்படையினால், அவை எலாம் அடுதல் செய்தான்—அந்தக்கைகளெல்லாவற்றையும் வெட்டினார் எ—று.

வெட்டப்படாதகைகளென்பார் 'மற்றை-கை' என்றார். (சச)

கொலைகெழு தறுக ணால்வாய்க் குஞ்சர முகத்து வெய்யோ
னிலைகெழு பாணி முற்று நீங்கியீ ரைந்து நூற்றுத்
தலைகெழு நிலைமைத் தாகித் தண்சினை பலவு மல்கி
யலைகெழு வீழ்போ யுற்ற வாலமே போல நின்றான்.

இ—ள்: கொலை கெழு தறுகண் நால் வாய் குஞ்சர முகத்து வெய்யோன்—கொலைத்தொழில்பயின்ற தறுகண்மைமிக்க தூங்குகின்றவாய்பொருந்திய யானையின்முகத்தையுடைய கொடியஅசுரன், நிலை கெழு பாணி முற்றும் நீங்கி—நிலையாயிருந்த கைமுழுவதும் நீக்கப்பெற்று, ஈரைந்து நூற்று தலை கெழு நிலைமைத்து ஆகி—ஆயிரந்தலைகள்மாத்திரம் விளங்குகின்ற தன்மையையுடையவனாய், தண் சினை பலவும் மல்கி அலை கெழு வீழ் போய் உற்ற ஆலமே போல நின்றான்—செழித்தகொப்புகள் பலவும்நிறையப்பெற்று அலையுந்தன்மைபொருந்திய விழுதுகளைத்தூங்கவிடுத்துநிற்கின்ற ஆலமரத்தைப்போலநின்றான் எ—று.

கொலை கெழு குஞ்சரம் தறுகட்குஞ்சரம் எனவும் ஆகி நின்றான் எனவும் இயையும். ஆலமரம் பலகொப்புகளையும் பலவிழுதுகளையுமுடைத்தாய்நின்றாற்போல, கயமுகன் பலதலைகளையும் பல குறைக்கைகளையுமுடையனாய்நின்றான் என்பதாம். (சரு)

பாணிக ளிழந்து நின்ற பகட்டுடை வதனத் தீயோ
னாணின னிவனை யட்டு நம்முயிர் துறத்து மென்னா
மாணறு மனத்திற் கொண்டு மற்றொழின் முன்னித் தோளாற்
றாணுவின் கயிலை காப்போன் றடம்புயந் தாக்கி யார்த்தான்.

இ—ள்: பாணிகள் இழந்து நின்ற பகட்டு உடை வதன தீயோன்—கைகளையிழந்துநின்ற யானையின்முகத்தையுடையகொடியஅசுரன், நாணினன்—வெட்கமுற்று, இவனை அட்டு நம் உயிர் துறத்தும் என்னா—இவனையழித்துவிட்டு அதன்மேல் என்னுயிரையானே மாய்த்துக்கொள்வேனென்று, மாண் அறு மனத்தில் கொண்டு—பெருமையற்ற மனத்திற்சிந்தித்து, மல்தொழில் முன்னி—மல்யுத்தத்தைச்செய்யநினைத்து, தோளால்—தன்னுடைய புயங்களால், தாணுவின் கயிலை காப்போன் தடம் புயம் தாக்கி—சிவபிரானது திருக்கைலாசமலையைக் காவல்செய்கின்ற வீரவாகுதேவரது விசாலமான புயங்களில் இடித்து, ஆர்த்தான்—ஆரவாரித்தான் எ—று.

நாணியதும் தன்னுயிரைமாய்க்கநினைந்ததும் கைகள்வெட்டுப்பட்டு அழகுகுன்றுதலால். கைகள்வெட்டுப்பட்டபின் பொருதுகொல்லுதலியலாதாகவும் புத்திக்குறைவால்முயன்றானாதலின் அவனதுமனத்தை 'மாணறுமனம்' எனவும், நந்திகணவீரரென்பார் 'தாணுவின்கயிலைகாப்போன்' எனவும் கூறினார். (சசு)

ஐயன தொற்றன் காணா வாற்றலின் றாகி முற்றுங்
கையினை யிழந்து நின்றான் கடுங்கதிர் வாளின் வெம்போர்
செய்பல வினியா னென்னாச் சிந்தைசெய் துறைவா ளோச்சி
பொய்யென வவன்றன் மார்பி னுதைத்தன னொருதன் றாளால்.

இ—ள்: ஐயனது ஒற்றன் காணு—முருகக்கடவுளது தூதராகியவீரவாகு தேவர் அதனைப்பார்த்து, ஆற்றல் இன்று ஆகி கையினை முற்றும் இழந்து நின்றான்—(இவன்)வலிமையில்லாதவனுய்க்கைகளெல்லாவற்றையுமிழந்து நிற்கின்றான், (ஆதலின்), இனி யான் கடும் கதிர் வாளின் வெம் போர் செய்யலன்—இனி நான் கடுமையான ஒளிபொருந்திய வாட்படையினுற்செய்யுங்கொடியபோரைச்செய்யேன், என்னு சிந்தை செய்து—என்றுநினைத்து, உறை வாள் ஒச்சி—உறையின்கண் வாளைச்செருகி, ஒரு தன் தாளால்—தம்முடையஒருபாதத்தினுல், ஒய் என அவன் தன் மார்பின் உதைத்தனன்—விரைவாக அவனுடையநெஞ்சிலுதைத்தார் எ—று.

கடும்போர் எனவும் காணுச்சிந்தைசெய்து எனவும்இயையும். எளிதிற்கொல்லப்படத்தக்கானை வாட்போர்செய்துகொல்வது தவறென்றுசிந்தித்துப் பாதத்தாலுதைத்தனரென்க. (சஎ)

உதைத்திடு கின்ற காலே யொல்லெனை வரற்றி வீழ்ந்து
மதத்தினை யுறுக போல மால்கரி முகத்து வெய்யோன்
பதைத்தன னுவி சிந்திப் பட்டனன் பகிர்ந்த மார்பிற்
குதித்திடு சோரி நீத்தங் குரைகடற் போய தன்றே.

இ—ள்: உதைத்திடுகின்ற காலே—அவ்வாறு உதைத்தபொழுது, மதத்தினை உறு கபோல மால் கரி முகத்து வெய்யோன்—மதத்தைப்பிலிற்றுகின்ற கதுப்பமைந்த பெரிய யானையின்முகத்தையுடைய கொடிய அவ்வசுரன், ஒல் என அரற்றி வீழ்ந்து—விரைவிற்புலம்பி விழுந்து, பதைத்தனன்—பதைத்து, ஆவி சிந்தி பட்டனன்—உயிர்பிரிந்து இறந்தான், பகிர்ந்த மார்பில் குதித்திடு சோரி நீத்தம்—பிளவுபட்டமார்பினின்றுபாய்ந்த இரத்தவெள்ளம், குரை கடல் போயது—ஒலிக்கின்றசமுத்திரத்திற்பாய்ந்தது எ—று.

உதைத்திடுகின்றகாலே பட்டனன் எனஇயையும். கடலிற்பாய்ந்ததென்றதனுல் இரத்தவெள்ளத்தின் மிகுதிபெறப்பட்டது. (சஅ)

அவ்வியல் கண்டு பல்லோ ரவுணர்க ணமரே யீண்டு
தெவ்வியன் முறையி னின்று செருவினை யிழைப்பார் போலு
மிவ்விவ ராடற் கேது வென்கொலோ வறிது மென்றே
கவ்வையி னெறிக டோறுங் காண்பது கருதிப் போந்தார்.

இ—ள்: பல்லோர் அவுணர்கள்—பல அசுரர்கள், அவ் இயல் கண்டு—அத்தன்மையைப்பார்த்து, நமரே ஈண்டு தெவ் இயல் முறையில் நின்று செருவினை இழைப்பார் போலும்—நம்மவர்களே இவ்விடத்திற்பகைமைபொருந்தியமுறையுடனின்று போரைச்செய்கின்றார்கள்போலும், இவர் ஆடற்கு ஏது என் கொல்—இவர்கள் போர்செய்தற்குக்காரணம்யாதோ!, அறிதும் என்று—அதனைஆராய்ந்தறிவோமென்று (ஒருவரோடொருவர்) பேசிக்கொண்டு, கவ்வையின்—துக்கத்தோடும், காண்பது கருதி—அறிதற்குநினைந்து, நெறிகள் தோறும் போந்தார்—பலவழிகளினும்போனார்கள் எ—று.

தங்கள்நகரில்வந்தெதிர்க்கத்தக்காரில்லையென்றுதுணிதலால் தம்மவருட்போர்மூண்டதாகநினைத்தனர். (சகூ)

சென்றிடல் வீரன் காணுத் தியரென் செய்கை நோக்கிற்
கன்றிவெஞ் சினமேற் கொண்டு கடுஞ்சம ரிழைப்பர் யானு
நின்றமர் புரிதல் வேண்டு நிலைமையீ தென்று லம்மா
வின்றொடு முடியுங் கொல்லோ வியற்றினு மிவர்போ ரென்றான்.

இ—ள்: சென்றிடல் வீரன் காணா—அவ்வாறுபோதலை வீரவாகுதேவரறிந்து, தீயர் என் செய்கை நோக்கில்—கொடியவர்களாகிய அசுரர்கள் என்னுடையசெயலையறிந்தால், கன்றி வெம் சினம் மேற்கொண்டு—மனம்புழுங்கிக் கொடியகோபம் மிகப்பெற்று, கடும் சமர் இழைப்பர்—கடுமையான போரைச்செய்வார்கள், யானும் நின்று அமர் புரிதல் வேண்டும்—நானும்நின்று போரைச்செய்தல் வேண்டும், நிலைமை ஈது என்றால்—இந்நிகழ்ச்சிநடைபெறுமானால், இவர் போர்—இவர்களுடன்செய்யும்போர், இயற்றினும்—ஊக்கமாய்ச்செய்தாலும், இன்றொடு முடியும் கொல்—இன்றுடன் முடியுமா? (முடியாதே), என்றான்—என்றுநினைத்தார் எ—று.

காணா என்றான் என இயையும். (௫௦)

ஆரணந் தனக்குங் காணா வாதியங் கடவுள் சொற்ற
பேரருண் மறந்தே யின்னே பீடிலார் தம்மோ டேற்றுப்
போரினை யிழைத்து நிற்றல் புல்லிது புலமைத் தன்றாற்
சூருறை மூதூர் தன்னிற் றுன்னுவன் கடிதி னென்றான்.

இ—ள்: ஆரணம் தனக்கும் காணா ஆதியம் கடவுள் சொற்ற பேர் அருள் மறந்து—வேதங்களாலுமறிதற்கரிய முதற்கடவுளாகிய முருகவேள்சொல்லிய சிறந்தகட்டளையைமறந்து, இன்னே—இப்பொழுது, பீடு இலார் தம்மோடு ஏற்று—பெருமையில்லாத இவ்வசுரரோடெதிர்த்து, போரினை இழைத்து நிற்றல்—போரைச்செய்து நிற்றல், புல்லிது—எளியதொழிலாம், புலமைத்து அன்று—அது அறிவுடையார்செய்யுந்தொழிலாகாது, சூர் உறை மூது ஊர் தன்னில்—சூரபன்மனிருக்கின்ற பழைய நகரத்தினுள், கடிதில் துன்னுவன்—விரைவிற்போவேன், என்றான்—என்றுசிந்தித்தார் எ—று.

உம்மை சிறப்பு. பதியிலக்கணங்களைச்செவ்வனே கூறும்நூலாதலிற்சிறப்பும்மைதந்து 'ஆரணந்தனக்கும்' என்றார். பேரருளென்றது தேவர்சிறையைவிடும்படி சூரபன்மனுக்குணர்த்திமீளுதலை. (௫௧)

எப்பெரு வாயில் சார வேகினு மங்க ணெல்லாங்
கைப்படை யவுணர் வெள்ளங் காவல்கொண் டுற்ற வாற்றாற்
றப்பினன் சேற லொல்லா தமியனிப் படிவத் தோடு
மெய்ப்பதி யிதற்குச் செல்வன் வேற்றுரு வெய்தி யென்றான்.

இ—ள்: எ பெரு வாயில் சார ஏகினும்—பெரியனவாயிருக்கின்ற எந்தவாயிலாற் செல்லநினைத்துப் போனாலும், அங்கண் எல்லாம்—அவ்விடங்களிலெல்லாம், கை படை அவுணர் வெள்ளம் காவல்கொண்டு உற்ற ஆற்றால்—கையிற்படைகளையேந்திய அசுரசேனாவெள்ளம்காவலாயிருக்கின்றதன்மையினால், தமியன்—யான், இ படிவத்தோடு தப்பினன் சேறல் ஒல்லா—இந்தவடிவத்தோடு தப்பிப்போதல்கூடாது, வேற்று உரு எய்தி—வேறுவடிவங்கொண்டு, மெய் பதி இதற்கு செல்வன்—மெய்ம்மையாகிய இந்நகரத்தினுட்புகுவேன், என்றான்—என்றுநினைத்தார் எ—று.

அங்கணெல்லாம் ஒல்லா என இயையும். காவல்செய்வாரறியாவண்ணம் போதல்கூடாதென்பார் 'தப்பினன்சேறலொல்லா' என்றார். (௫௨)

கூற்றினை யுறழும் வைவேற் குமரவே ளருளா லீண்டோர்
வேற்றுரு வதனைக் கொண்டு வெய்யபா மவுண வீரர்
போற்றுமிக் குணபால் வாய்தல் பொள்ளெனக் கடந்து பின்னர்
மாற்றல னூரிற் செல்வ னென்றனன் வாகை மொய்ம்பன்.

இ—ள்: வாகை மொய்ம்பன்—வீரவாகுதேவர், கூற்றினை உறழும் வை வேல் குமரவேள் அருளால்—யமனைநிகர்த்த கூரியவேற்படையையுடைய முருகக்கடவுளின் திருவருளால், ஈண்டு ஓர் வேற்று உரு அதனை கொண்டு—இவ்விடத்தில் வேறொருவடிவத்தைக்கொண்டு, வெய்யர் ஆம் அவுண வீரர் போற்றும் இகுணபால் வாய்தல் பொள்ளென கடந்து—கொடியவர்களாகிய அசுரவீரர்கள் காவல்செய்கின்ற இந்தக்கிழக்குத்திசைவாயிலை விரைவிற்கடந்து, பின்னர் மாற்றலன் ஊரில் செல்வன்—அதன்மேற்பகைவனாகிய சூரபன்மனது நகரத்துட்செல்வேன், என்றனன்—என்றுநினைத்தார் எ—று.

பாவஞ்செய்தாரைக்கடிந்து புண்ணியஞ்செய்தாரைக்காத்தலால் முருகவேளது வேற்படைக்கு யமனையுவமித்தார்; எண்ணியவுயிரைத்தவறாது கவர்தலாலெனினுமாம். வாகைமொய்ம்பன் என்றனன் எனஇயையும். (௫௩)

நொய்யதோ ரணுவி னாற்ற நுணுகியு மேன்மை தன்னிற்
பொய்யில்சீர் பெருமைத் தாயும் பூரண மாகி வைகுஞ்
செய்யதோர் குமரன் பொற்றாள் சிந்தைசெய் தன்பிற் போற்றி
யொய்யென வருளி னீரா லோரணு வுருவங் கொண்டான்.

இ—ள்: பூரணமாகி வைகும் செய்யது ஓர் குமரன் பொன் தாள் சிந்தைசெய்து—எங்கும் நிறைந்திருக்கின்ற சிவந்தநிறத்தையுடைய ஒப்பற்ற முருகவேளது பொன்மயமானபாதங்களைத்தியானித்து, அன்பில் போற்றி—அன்பினுடன் துதித்து, அருளின் நீரால்—அவரது கிருபையினால், நொய்யது ஓர் அணுவின் ஆற்ற நுணுகியும்—மிருதுவான அணுவிலும்பார்க்க மிகநுண்மையாயும், மேன்மை தன்னில் பொய் இல் சீர் பெருமைத்து ஆயும்—மகத்துவத்தாற்பொய்படாதசிறப்பையும் பெருமையையுமுடையதாயும், ஓர் அணு உருவம்—ஒருசிறியவடிவத்தை, ஒய்யென கொண்டான்—(வீரவாகுதேவர்) விரைவிலெடுத்தார் எ—று.

உருவத்தாற்சிறுமையானதன்றி வலிமுதலியவற்றாற்குறைவற்ற வடிவமொன்றைக்கொண்டார் என்பதாம். (௫௪)

நுணுகுதன் னுணர்வே போல நோக்கருந் திறத்தாற் றானோ
ரணுவுருக் கொண்டு வீர னடுகள மதனை நீங்கி
யிணையறு குமரற் போற்றி யெழுந்துவிண் படர்ந்து மூதூர்க்
குணதிசை வாய்த னின்ற கோபுர மிசைக்க ணுற்றான்.

இ—ள்: வீரன்—வீரவாகுதேவர், நுணுகு தன் உணர்வே போல—நுண்மையான தம்முடையஅறிவையேபோல, நோக்க அரும் திறத்தால்—எவருங்காணுதற்கரியதன்மையாக, தான் ஓர் அணு உரு கொண்டு—தாம் ஒருசிறியவடிவத்தையெடுத்து, அடு களம் அதனை நீங்கி—கயமுகனைக்கொன்றவிடத்தினின்றுநீங்கி, இணை அறு குமரன் போற்றி—ஒப்பற்ற முருகவேளைத்துதித்து, எழுந்து விண் படர்ந்து—எழும்பி ஆகாயமார்க்கமாகப்போய், முது ஊர் குணதிசை வாய்தல் நின்ற கோபுர மிசை கண் உற்றான்— பழைய அந்நகரத்தின் கிழக்குத்திக்குவாயிலினின்ற கோபுரத்தின்மேலிறங்கினார் எ—று.

அறிவையுவமித்ததனால் அவரது ஆழ்ந்தபுத்தியுஞ்சிறப்பிக்கப்பட்டது. (௫௫)

கயமுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௨௩௭.

நகர்புகுபடலம்.

வீரவாகுதேவர் மகேந்திரநகருட்புகுந்ததன்மையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் கோபுரத்திலிருந்து நகர்வளங்களைநோக்கி, பின் ஆகாயமார்க்கமாயெழுந்து உட்சென்று பானுகோபன்முதலியவர்களது மாளிகைகளையும்பார்த்து, மேல் தேவர்கள்சிறையிருக்குமிடத்திற்செல்லநினைத்தார் என்பதாம்.

அண்டம் யாவையு மெழுவகை யுயிர்த்தொகை யனைத்தும்
பிண்ட மாம்பொருண் முழுவது நல்கியெம் பெருமான்
பண்டு பாரித்த திறமென மகேந்திரப் பதியின்
மண்டு தொல்வள நோக்கியே யின்னன மதிப்பான்.

இ--ள்: அண்டம் யாவையும்— எல்லாஅண்டங்களையும், எழுவகை உயிர்தொகை அனைத்தும்- எழுவகையான உயிர்க்கூட்டங்களெல்லாவற்றையும், பிண்டம் ஆம் பொருள் முழுவதும்—கூட்டமானமற்றுமெல்லாப்பொருள்களையும், எம் பெருமான் நல்கி— எங்கள்தலைவராகியசிவபிரான் படைத்து, பண்டு பாரித்த திறம் என— முற்காலத்திற்பெருக்கத்தன்மைபோல, மகேந்திர பதியில் மண்டு தொல் வளம் நோக்கி —மகேந்திரநகரத்தில் நெருங்கியுள்ள பழையவளங்களைப்பார்த்து, இன்னன மதிப்பான்— இவைகளைச்சிந்திப்பார் எ—று.

பண்டு-சிருட்டியாரம்பத்தில். தொல்வளம்-தொன்றுதொட்டுப்பெருகியவளம். பாரித்ததிறமென மண்டு எனஇயையும். பிறராற்படைக்கப்பட்டனவும் ஈட்டப்பெற்றனவுமாகிய பொருள்கள் உவமையாகாமையின் கடவுளாற்படைத்துத்தொகுக்கப்பட்டனவற்றையுவமித்தார். எழ்வகையுயிர்-தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பனவாம். (க)

எந்தை முன்னரே சூரபன் மாவினுக் கீந்த
முந்து மண்டங்க ளலமரு முவரிகண் முழுதும்
வந்து மொய்த்தன போலுமால் வரைபுரை காட்சிக்
கந்து பற்றியே யார்த்திடு மெல்லைதீர் கரிகள்.

இ—ள்: வரை புரை காட்சி கந்து பற்றி ஆர்த்திடும் எல்லை தீர் கரிகள்—மலையைப்போன்றதோற்றத்தையுடைய தூண்களிற்பிடித்துக்கட்டப்பட்டுநிற்கின்ற அளவிறந்த யானைகள், எந்தை- எங்கள்கடவுளாகிய சிவபிரான், முன்னர்—முற்காலத்தில், சூரபன்மாவினுக்கு ஈந்த—சூரபன்மனுக்குக்கொடுத்த, முந்தும் அண்டங்கள் அலமரும் உவரிகள் முழுதும்—சிறந்த அண்டங்களில் அலைமோதிக்கொண்டுநிற்கின்ற உவர்க்கடல்களெல்லாம், வந்து மொய்த்தன போலும்—வந்துகூடினாற்போலும் எ--று.

மிகவிசாலமான இடமுழுவதும் நெருக்கமாகக்கட்டப்பட்டுநிற்றலால் இவ்வாறுவமித்தார். (உ)

இயனு மைப்பெரு நிறத்தினண் டங்களி னிருந்த
புயலி னம்பல வோர்வழித் தொக்கன வொருவ
மயிலி ருஞ்சர முயலொடு யூகமற் றெழிலைப்
பயில்ப ரித்தொகை யளப்பில வயின்றொறும் பரவும்.

இ—ள்: ஐம் பெரு நிறத்தின் இயலும் அண்டங்களின் இருந்த புயலினம் பல— ஐந்துவகையான சிறந்தநிறங்களுடனமைந்திருக்கின்ற அண்டங்கடோறுந் தங்கியிருந்த பலமேகங்கள், ஓர் வழி தொக்கன பொருவ— ஓரிடத்திற்கூடினாற் போல, மயில் இரும் சரம் முயலொடு யூகம் மல் தொழிலை பயில்—மயூரகதியும் பெரியசரகதியும் சசகதியும் வானரகதியும் மல்லகதியுமாகிய ஐவகைக்கதிகளையு ம்பயின்ற, பரித்தொகை அளப்பு இல—குதிரைக்கூட்டங்கள் அளவிறந்தனவாகி, வயின் தொறும் பரவும்—இடங்கடோறும்பரந்திருக்கும் எ—று.

ஐவகைநிறம்-வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்பன. பொருவப்பரவும் என இயையும். ஐவகைநிறங்களமைந்தகுதிரைகளாதலின் உபமானமாகிய மேகங்களையும் அவ்வாறே (ஐந்துநிறங்களையுடையனவாகக்) கொண்டார். (௩)

அண்ட மாயிரத் தெட்டினுள் மேதகு மடன்மாத்
தண்ட மால்கரி யாயின தடம்பெருந் தேர்க
ளெண்ட ரும்பொரு ளியாவுமீண் டிருந்தன விவற்றைக்
கண்டு தேர்ந்தன ரல்லரோ வகிலமுங் கண்டோர்.

இ—ள்: அண்டம் ஆயிரத்து எட்டினுள் மேதகும்— ஆயிரத்தெட்டண்டங்களிலுள்ளனவற்றுட்சிறந்த, அடல் மா—வலியகுதிரைகளும், மால் கரி தண்டம் ஆயின—பெரியயானைச்சேனைகளும், தடம் பெரும் தேர்கள்—விசாலித்தபெரிய தேர்களும், எண் தரும் பொருள் யாவும்—மதிக்கத்தகுந்த மற்றுமெல்லாப்பொருள்களும், ஈண்டு இருந்தன—இவ்விடத்திலமைந்திருக்கின்றன, இவற்றை கண்டு தேர்ந்தனர் அல்லரோ அகிலமும் கண்டோர்— இவைகளைக்கண்டறிந்தவர்களன்றோ எல்லாவற்றையுங்கண்டவர்கள்! எ—று.

எண்டரும்பொருளென்றது அரசர்க்குவேண்டிய பிறகருவிகளை. இந்நகரில் எல்லாவண்டங்களிலுமுள்ள சிறந்தபொருளெல்லாந்தொக்கிருத்தலால், இவற்றைக்கண்டார் எல்லாவுலகங்களிலுமுள்ள எல்லாப்பொருள்களையுங்கண்டாராவர் என்பதாம். (௪)

இணையி லிவ்விடைத் தானையின் வெள்ளமோ ரிலக்க
நணுகு மென்றன னந்தண னாற்பெரும் படையுங்
கணித மில்லன விருந்தன வெள்ளிகண் ணிலன்போ
லுணர்வி லன்கொலாங் கனகனுங் கேட்டசொல் லுரைத்தான்.

இ—ள்: அந்தணன்—வியாழன், இணை இல் இவ் இடை—ஒப்பற்ற இந்தநகரத்தில், தானையின் வெள்ளம் ஓர் இலக்கம் நணுகும் என்றனன்— சேனைவெள்ளம் ஓரிலக்கம்பொருந்தியிருக்குமென்றுகூறினார், நால் பெரும் படையும் கணிதம் இல்லன இருந்தன— சிறந்த நால்வகையானசேனைகளும் அளவிறந்தனவாயிருக்கின்றன, வெள்ளி கண் இலன் போல்—சுக்கிரன் கண்ணில்லாதவராயிருப்பதுபோல, கனகனும் உணர்வு இலன் கொல்— வியாழனும் அறிவில்லாதவராயினார்போலும், கேட்ட சொல் உரைத்தான்—கேள்விப்பட்டவார்த்தையையே கூறினார் எ—று.

சுக்கிரனை ஒருகண்ணுடையாரெனவழங்குதலின் 'கண்ணிலன்' என்றார். அறிவை அகக்கண்ணெனவழங்குதலால் அஃதில்லாதாரைப் புறக்கண்ணில்லாதாரோடொப்பிட்டார். வியாழன் முன்னமேமுருகவேட்குக்கூறக் கேட்டிருந்தாராதலின் இவ்வாறுநிந்தித்தார். (௫)

உரையின் மிக்கசூர் பெற்றவன் டாந்தொறு முளவாம்
வரையின் மிக்கதேர் கடல்களின் மிக்கவை மாக்க

டிரையின் மிக்கவாம் பரித்தொகை யாயிடைச் செறிந்த
பரவை நுண்மணா றன்னினு மிக்கன பதாதி.

இ—ள்: உரையில் மிக்க சூர் பெற்ற அண்டம் தொறும் உள ஆம்—புகழான் மேம்பட்டசூரபன்மன் (தனதாட்சியாகப்) பெற்றுக்கொண்ட ஆயிரத்தெட்டண்டங்களினுமுள்ள, வரையில்—மலைகளினின்றும், தேர் மிக்க—இந்நகரிலுள்ள தேர்கள் அதிகமாயின, கடல்களின்—சமுத்திரங்களினின்றும், கைமாக்கள் மிக்க—யானைகள் அதிகமாயின, திரையில்—கடற்றிரைகளினின்றும், வாம் பரி தொகை மிக்க—தாவிப்பாய்கின்றகுதிரைக்கூட்டங்கள் அதிகமாயின, ஆயிடை செறிந்த பரவை நுண் மணல் தன்னினும்—அவ்வண்டங்களிற்செறிந்திருக்கின்ற கடற்கரைகளிலுள்ள நுண்மையாகிய மணல்களினின்றும், பதாதி மிக்கன—காலாட்சேனை அதிகமாயின எ—று.

ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள மலைமுதலியவற்றைக் கணக்கிட்டதொகையினும் இந்நகரிலுள்ளதேர்முதலியவற்றின்றொகை அதிகமாயின என்பதாம். பரவை-ஆகுபெயர். (சு)

மண்கொ ளாயிரத் தெட்டெனு மண்டத்தின் வளமு
மெண்கொ ளெண்பதி னுயிர யோசனை யெல்லைக்
கண்கொள் பான்மையி லீண்டிய தற்புதங் கறைதோய்
புண்கொள் வேலுடைச் சூர்தவத் தடங்கிய போலாம்.

இ—ள்: மண் கொள் ஆயிரத்தெட்டு எனும் அண்டத்தின் வளமும்—பூமியின்கூறாகிய ஆயிரத்தெட்டென்னுந்தொகைப்பட்ட அண்டங்களின் வளங்களெல்லாம், எண் கொள் எண்பதினுயிர யோசனை எல்லை—மதிக்கத்தகுந்த எண்பதினுயிரயோசனைவிசாலமான இடத்தில், கண்கொள் பான்மையில்—எவருங்காணும்படியாக, ஈண்டியது அற்புதம்—அடங்கியது அதிசயமாயிருக்கின்றது, கறை தோய் புண் கொள் வேல் உடை சூர் தவத்து அடங்கிய போல் ஆம்—நஞ்சுபூசப்பெற்ற புண்களையுண்டாக்குகின்றவேற்படையையுடைய சூரபன்மனது தவத்தினுலடங்கியதுபோலும் எ—று.

எண்பதினுயிரயோசனையளவையுடைய இந்நகரத்தினுள் இத்துணைவளங்களெல்லாம் தவத்தாலன்றிப்பிறவாற்ருனமைதல் கூடாது என்பதாம். புண்கொள் வேலென்பதிற் பிறவினைவிகுதிதொக்கது. (எ)

உரைசெ யாயிரத் தெட்டெனு மண்டத்தி னுளவாங்
கரையில் சீரெலாந் தொகுத்தன னீண்டவை கண்டாந்
தரும மெய்யளி கண்டில மவற்றையுந் தந்து
சுரர்க டம்முடன் சிறையிட் டான்கொலோ சூரன்.

இ—ள்: சூரன்—சூரபன்மன், உரைசெய் ஆயிரத்தெட்டு எனும் அண்டத்தின் உள ஆம்—சொல்லப்படுகின்ற ஆயிரத்தெட்டென்னுந்தொகைப்பட்ட அண்டங்களிலுள்ளனவாகிய, கரை இல் சீர் எலாம்—அளவிறந்த சிறப்புக்களெல்லாவற்றையும், ஈண்டு தொகுத்தனன்—இவ்விடத்துச்சேர்த்துவைத்தான், அவை கண்டாம்—அவற்றையெல்லாங்கண்டோம், தருமம் மெய் அளி கண்டிலம்—தருமத்தையும் உண்மையையும் அன்பையுமேகாணப்பெற்றிலேம், அவற்றையும் தந்து சுரர்கள் தம் உடன் சிறையில் இட்டான் கொல்—அவைகளையுந்தொகுத்துத்தேவர்களோடு சிறையிருக்கவைத்தானே! எ—று.

வெளியாய்த்தோன்ருமையாற் 'சிறையிலிட்டான்கொல்' என்ருர். தருமமுதலியனவேயன்றி மற்றெல்லாம் நிறைந்திருக்கின்றன என்பது தாற்பரியம். ( )

அரண்ட ருங்கழற் சூரன்வாழ் மகேந்திர மதனிற்
றிரண்ட பல்லியத் துழனியேழ் கடலினுந் தெழிப்ப
முரண்டி றத்தவை யியம்புவா ரளவையார் மொழிவா
ரிரண்டு பத்துநூ றியோசனை யுண்டவ ரிடங்கள்.

இ-ள்: அரண் தரும் கழல் சூரன் வாழ் மகேந்திரம் அதனில்—வீரக்கழலையுடைய சூரபன்மன்வாழுகின்ற மகேந்திரபுரத்திலுள்ள, திரண்ட பல் இய துழனி—கூட்டமாகியபலவாத்தியங்களின் ஒலிகள், ஏழ் கடலினும் தெழிப்ப - எழுகடல்களினதுமொலியினின்றுபெரிதாக ஒலிப்பன, முரண் திறத்து அவை இயம்புவார் அளவை யார் மொழிவார்—முரணுந்தன்மையோடு அவற்றையியம்புகின்றவர்களதுதொகையை யார்தாஞ்சொல்லவல்லார்?, (ஒருவருமில்லை), அவர் இடங்கள்-அவர்களுடையஇருப்பிடங்கள், இரண்டு பத்து நூறு யோசனை உண்டு-இரண்டாயிரயோசனைவிசாலமுடையனவாயிருக்கின்றன எ-று.

ஒவ்வொருகூட்டத்தாரும் பிறகூட்டத்தாரோடெதிர்த்தியம்புதலால் 'முரண்டிறத்தவையியம்புவார்' என்றார். (௯)

கரிகள் சேவக மொருபதி னாயிரங் கடுந்தேர்
விரியு நீளிடை யொருபதி னாயிரம் விசயப்
பரியி னெல்லையோ ரிருபதி னாயிரம் பையத்
தருவி னின்னமு முண்டுகொல் யோசனைத் தொகையே.

இ-ள்: கரிகள் சேவகம் ஒரு பதினாயிரம்—யானைகள்துயிலுமிடம் பதினாயிரயோசனையாம், கடும் தேர் விரியும் நீள் இடை ஒரு பதினாயிரம்—வேகமாய்ச்செல்லுகின்ற தேர்கள்பரந்துநிற்கும் நீண்ட இடம் பதினாயிரயோசனையாம், விசய பரியின் எல்லை ஓர் இருபதினாயிரம்—வெற்றியையுடையகுதிரைகள்தங்குமிடம் இருபதினாயிரயோசனையாம், பைய தருவின்—மெல்லஆராயின், யோசனை தொகை இன்னமும் உண்டு கொல் —யோசனையின்றொகுதி (இங்கேகாட்டப்பட்டகணக்கிலடங்காது) வேறுமுண்டுபோலும்! எ-று.

நுட்பமாயாராய்ந்துபார்ப்பினென்பார் 'பையத்தருவின்' என்றார். (௧௦)

இவுளி வாயினு மால்கரிக் கரத்தினு மிழிந்து
திவளு நீர்மைசால் விலாழியுந் தானமுஞ் செறிந்து
குவளை யுண்கணார் நீத்தசாந் தணிமலர் கொண்டே
யுவள கந்தரு மகழிசென் றகன்கட லுறுமால்.

இ-ள்: இவுளி வாயினும்—குதிரைகளினுடைய வாய்களினின்றும், மால் கரி கரத்தினும்—பெரியயானைகளின் துதிக்கைகளினின்றும், இழிந்து திவளும் நீர்மை சால்— முறையே சிந்திப்பாயுந்தன்மையையுடைய, விலாழியும் தானமும் செறிந்து—விலாழிநீரும் மதநீரும் ஒருங்குகூடி, குவளை உண் கண்ணார் நீத்த சாந்து அணி மலர் கொண்டு - குவளைமலர்போன்ற மைதீட்டப்பெற்றகண்களையுடைய பெண்கள் அணிந்துகழித்த சந்தனக்குழம்பையும் அழகிய பூக்களையும்வாரிக்கொண்டு, உவளகம் தரும் அகழி சென்று—மதிலைச்சூழ்ந்திருக்கின்ற அகழியிற்பாய்ந்து, அகன் கடல் உறும்—அகன்றகடலிற்கலக்கும் எ-று.

இச்செய்யுளால் விலாழிநீரினதும்மதநீரினதும்பெருக்கு வருணிக்கப்பட்டது. (௧௧)

வளமை மேதகு மிப்பெரு மகேந்திரம் வகுத்தன்
முளரி யண்ணலி னொருவனான் முடிந்திட வற்றோ

வொளிறு வாட்படை யவுணர்கோ னுடையவண் டத்தி
னளவி றான்முகர் யாரும்வந் திறுத்தன ராமால்.

இ—ள்: வளமை மேதகும் இ பெரும் மகேந்திரம் வகுத்தல்—செல்வத்தான்மேம்பட்ட இந்தச் சிறந்தமகேந்திரநகரைப்படைத்தல், முளரி அண்ணல் இங்கு ஒருவனல் முடிந்திட வற்றே—இவ்வண்டத்தில்வாழுகின்ற பிரமதேவரொருவரால்நிறைவேறத்தக்கதா? (அன்று), ஒளிறு வாள் படை அவுணர்கோன் உடைய அண்டத்தின்—விளங்குகின்ற வாட்படையையேந்திய சூரபன்மனது ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள, அளவு இல் நான்முகர் யாரும் வந்து இறுத்தனர் ஆம்– அளவிறந்தபிரமர்களெல்லோரும்இங்கேவந்துகூடிச்சிருட்டித்திருத்தல்வேண்டும் எ—று.

இந்நகர்வளங்கள் பிரமனுலும்படைத்துமுடித்தற்கரியனஎன்பது தாற்பரியம். (௧௨)

புரந்த ரன்றன துலகமு மொழிந்தபுத் தேளி
ரிருந்த வானமு மெண்டிசை நகரமும் யாவும்
வருந்தி யிந்நகர் சமைந்திட முன்னரே வண்கை
திருந்த வேகொலாம் படைத்தனர் திசைமுகத் தலைவர்.

இ—ள்: புரந்தரன் தனது உலகமும்–இந்திரனதுசுவர்க்கலோகமும், ஒழிந்த புத்தேளிர் இருந்த வானமும்—மற்றைத்தேவர்களிருக்கின்ற விண்ணுலகங்களும், எண் திசை நகரமும்–எட்டுத்திக்குகளிலுமுள்ள(திக்குப்பாலகரது)நகரங்களும், யாவும்–ஆகியஎல்லாவற்றையும், வருந்தி இ நகர் சமைத்திட முன்னர்—வருத்தமுற்று இந்தநகரத்தைப்படைக்கமுன், வண் கை திருந்த—சிறந்த கையானது திருந்தும்படி, திசைமுக தலைவர்—நான்குமுகங்களையுடைய தலைவராகியபிரமதேவர், படைத்தனன் கொல்—படைத்தார்போலும்! எ—று.

திருந்தல்-தொழிற்பயில்வான்மேம்படுதல். அதிகமான ஆலோசனைசெய்தலால்வரும் மனவருத்தத்தையும் மிகவுஞ்சித்திரமாகவகுத்தலால்வருங்கைவருத்தத்தையும் அடக்க 'வருந்தி' என்றார். சுவர்க்கமுதலியபிறநகர்களெல்லாம் இந்நகரினின்று அழகுமுதலியவற்றான் மிகக்குறைந்தனவென்பது தாற்பரியம். (௧௩)

பொன்பு லப்படு துறக்கம்வான் மாதிரம் புவிகீழ்
துன்பில் போகமா ருலகென்பர் தொடுகடற் பெருமை
முன்பு காண்கலர் கோட்டகம் புகழ்தரு முறைபோ
லின்பம் யாவையு முளநக ரீதுபோ லியாதோ.

இ—ள்: தொடு கடல் பெருமை முன்பு காண்கலர் கோட்டகம் புகழ்தரு முறை போல்—தோண்டப்பட்டசமுத்திரத்தின்பெருமையை முன்அறியாதவர்கள் குளத்தைப்பெரிதென்றுபுகழுந்தன்மைபோல, பொன் புலப்படு துறக்கம்—பொன்னிலமாயிருக்கின்ற சுவர்க்கலோகத்தையும், வான்—ஆகாயவுலகத்தையும், மாதிரம்—திக்குநகரங்களையும், புவி—பூவுலகத்தையும், கீழ்—பாதலவுலகத்தையும், துன்பு இல் போகம் ஆர் உலகு என்பர்—துன்பத்தைத்தாராதபோகபூமியென்று (உளம்போனவாறே)சொல்வார்கள், இன்பம் யாவையும் உள நகர் ஈது போல் யாது– எல்லாவின்பங்களுமமையப்பெற்றநகரம் இதுபோல வேறொன்றுண்டா? (இல்லையே) எ—று.

இந்நகரத்தைக்கடலாகவும் ஏனையிடங்களைக் குளமாகவுமுவமித்தார். இந்நகரைக்காணுமையாற்றான் பிறநகரங்களைப்போகபூமியென்றுகூறுவரென்பதாம்.

கறைப டைத்தகாட் கரிபரி யவுணர்தேர்க் கணங்க
ளறைப டைத்திவ ணீண்டிய வண்டங்க ளனைத்து

முறைகடற்றொகை முழுவதுஞ் சூர்கொணர்ந் தொருங்கே
சிறைபடுத்திய போலும்வே றொன்றிலை செப்ப.

இ—ள்: கறைபடைத்த தாள் கரி—உரல்போன்ற கால்களையுடைய யானைகளும், பரி—குதிரைகளும், அவுணர்—அசுரர்களும், தேர்க்கணங்கள்—தேர்க்கூட்டங்களும், அறைபடைத்து இவண் ஈண்டிய—ஆரவாரம்பொருந்தி இந்நகரத்தில்நெருங்கியிருத்தல், அண்டங்கள் அனைத்தும் உறை கடல் தொகை முழுவதும்—எல்லாவண்டங்களிலுமிருக்கின்ற எல்லாக்கடல்களையும், சூர் கொணர்ந்து—சூரபன்மன்கொண்டுவந்து, ஒருங்கே சிறைபடுத்திய போலும்—ஒருகூட்டமாகச்சிறைவைத்ததன்மையைப்போலும், செப்ப வேறு ஒன்று இலை—உவமைசொல்லுதற்கு வேறொருபொருளுமில்லை எ—று.

தொகையான்மிகுத்தலாற் கடலையுவமித்தார். (௧௫)

ஐய பூழியு மாரகி லாவியு மாற்ற
நொய்ய வாகிய வணுக்களு நுழைவரி தென்னிற்
செய்ய விந்நக ராவண மெங்கணுஞ் செறிந்த
வெய்ய தேர்கரி யவுணர்தம் பெருமையார் விரிப்பார்.

இ—ள்: ஐய பூழியும்—மிகநுண்மையான தூளியும், ஆர் அகில் ஆவியும்—நிறைந்த அகிற்புகையும், ஆற்ற நொய்ய ஆகிய அணுக்களும்—மிகமிருதுவாகிய அணுக்களும், நுழைவரிது என்னில்—நுழைதல் கூடாதாயின், செய்ய இ நகர் ஆவணம் எங்கணும் செறிந்த—செப்பமான இந்நகரின்வீதிகடோறும் நெருங்கியிருக்கின்ற, வெய்ய தேர் கரி அவுணர் தம் பெருமை—கொடிய தேரும் யானையும் அசுரருமாகிய்சேனைகளின் தொகைப்பெருமையை, யார் விரிப்பார்—எவர் விரித்துக்கூறவல்லவர்? (ஒருவருமில்லை) எ—று.

ஆற்றநொய்யவாகியவணு—பரமாணு. அவை சாளரமுதலியவற்றின்வழியாய்ச் சூரியகிரணமுட்புகும்போது கட்புலப்படத்தக்கன. பூழிமுதலியனவும் நுழைதற்கரிதாக மிகச்செறிந்துலாவுதலால் எவராலுங்கணக்கிடுதல் கூடாதென்பதாம். (௧௬)

அள்ளல் வேலைசூழ் மகேந்திர புரிக்கிணை யாகத்
தெள்ளி தாவொரு நகருமின் றுளதெனச் செப்ப
வெள்ள லின்றிய வண்டமோ ராயிரத் தெட்டி
னுள்ள சீரெலா மீதுபோ லொருபுரத் துளதோ.

இ—ள்: அள்ளல் வேலை சூழ் மகேந்திரபுரிக்கு இணை ஆக—சேறுபொருந்திய கடலாற்சூழப்பெற்ற மகேந்திரநகரத்துக்கு ஒப்பாக, உளது என செப்ப—உண்டென்றுகூறுதற்கு, தெள்ளிது ஆ ஒரு நகரும் இன்று—சிறந்ததாகவேறொருநகரமுமில்லை, எள்ளல் இன்றிய அண்டம் ஓர் ஆயிரத்து எட்டின் உள்ள சீர் எலாம்—இகழப்படுதலில்லாத ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள சிறப்புக்களெல்லாம், ஈது போல் ஒரு புரத்து உளதோ—இந்நகரிற்போல வேறொருநகரத்திலுண்டா? (இல்லையே) எ—று.

ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ளசிறப்பெல்லாம் இந்நகரின்மாத்திரமேயமைந்திருத்தலின் இதற்குவேறொருநகருமிணையாகாது என்பதாம். (௧௭)

கழிந்த சீர்த்திகொ ளிந்நகர் தன்னிடைக் கனல
வழிந்து தொல்லுரு மாறையின் மணிநிழ லாகி
யிழிந்து வான்பெறு திருவெனப் பயன்பெறு தெவர்க்கு
மொழிந்த வேலைக டம்புகழ் கொள்வதிவ் வுவரி.

இ—ள்: இவ் உவரி—இந்த உவர்க்கடலானது, கழிந்த சீர்த்தி கொள் இ நகர் தன் இடை கனல—மிகுந்த கீர்த்தியையுடைய இந்த மகேந்திரநகரத்தினிழல் தன்னிடத்துத்தோன்ற, தொல் உரு அழிந்து—பழையநிறங்கெட்டு, மாழையின் மணி நிழல் ஆகி—பொன்னினது அழகிய சோதியையுடையதாய், இழிந்துளான் பெறு திரு என—இழிகுலத்தான்பெற்றசெல்வம்போல, எவர்க்கும் பயன் பெறாது—ஒருவர்க்கும் பிரயோசனப்படாமல், ஒழிந்த வேலைகள் தம் புகழ் கொள்வது—மற்றைய கடல்கள்பெற்றிருக்கும்புகழைமாத்திரம் பெறுவது எ—று.

நகர் ஆகுபெயர். இழிகுலத்தான் செல்வத்தைப்பெற்றிருப்பினும் அவனிடம்போயிரப்பாரின்மையாற் பிறர்க்குப்பயன்படாமைபோல, உவர்க்கடல் பொன்னிறத்தைப்பெற்றிருப்பினும்தன்னிடம்வந்துபருகுதல்முதலியவற்றைச்செய்வாரின்மையாற் பிறர்க்குப்பயன்படாதிருந்ததென்க. புகழ்-நற்கடலாகமதிக்கப்படுதல்.

ஏற்கு நேமிசூழ் மகேந்திர வெறுக்கையிவ் வுலகோ
ரார்க்கு மோர்பயன் பெற்றில துயிர்ப்பலி யருந்துங்
கார்க்கு ழாம்புரை யலகைசூழ் காளிமந் திரத்திற்
சீர்க்கொள் கற்பகம் பிறர்க்குத வாதமர் செயல்போல்.

இ—ள்: உயிர் பலி அருந்தும் கார் குழாம் புரை அலகை சூழ் காளி மந்திரத்தில்—உயிர்களைப்பலியாக உண்ணுகின்ற மேகக்கூட்டங்களைப்போன்ற பேய்கள்சூழப்பெற்ற காளியின்கோயிலில் நிற்கின்ற, சீர் கொள் கற்பகம்—சிறப்புப்பொருந்திய கற்பகதருவானது, பிறர்க்கு உதவாது அமர் செயல் போல்—பிறருக்குப் பயன்படாதிருக்குந்தன்மைபோல, ஏற்கும் நேமி சூழ் மகேந்திர வெறுக்கை—சிறந்தகடலாற்சூழப்பெற்ற மகேந்திரநகரிலுள்ளசெல்வம், இவ் உலகோர் ஆர்க்கும் ஓர் பயன் பெற்றிலது—இந்த உலகத்திலுள்ளாருளெவர்க்காயினும் சிறிதும் பிரயோசனப்படாதிருந்தது எ—று.

உயிரென்றது மனுடர் ஆடு கோழி முதலியவைகளை. உயிர்ப்பலியருந்துங் காளி எனஇயையும். கருநிறமுடையனவாதலின் 'கார்க்குழாம்புரை'எனவும், விரும்பியபொருளெல்லாவற்றையும் வரையாதுகொடுக்குங்கற்பகமென்பார் 'சீர்க்கொள்கற்பகம்' எனவும்கூறினர். கற்பகத்தின்பயன்களைப்பெறப் பலர்க்கும்விருப்பந்தோன்றுமாயினும் காளியினாலும் அதன்பரிவாரங்களாகியபேய்களினாலும் விளையுந்தீங்கைநினைத்து ஒருவருமுயலாமைபோல, மகேந்திரநகரின்வளத்தைப் பெறப்பலர்க்கும் விருப்பமுளதாயினும் சூரபன்மனாலும் அவனைச்சார்ந்தஅவுணராலும் விளையுந்தீங்கைநினைந்து முயன்றிலரென்பதாம். (ககூ)

மறக்கொ டுந்தொழி லிரவியம் பகையழன் மடுப்பத்
துறக்க மாண்டது பட்டிமை யாகுமத் தொல்லூர்
சிறக்கு மிந்நகர் நோக்கியே தன்னலந் தேய்ந்து
பொறுக்க ரும்பெரு நாண்சுடக் கரிந்தது போலாம்.

இ—ள்: மற கொடும் தொழில் இரவியம்பகை அழல் மடுப்ப—மறத்தன்மையையுங்கொடுஞ்செயலையுமுடைய பானுகோபன் அக்கினியைக்கொளுவ, துறக்கம் மாண்டது பட்டிமை ஆகும்—சுவர்க்கலோகமழிந்ததென்பதுபொய்யாம், அ தொல் ஊர்—அந்தப்பழையநகரம், சிறக்கும் இ நகர் நோக்கி—தன்னிலும் அழகுமுதலியவற்றாற்சிறப்பெய்திய இந்தமகேந்திரநகரைப்பார்த்து, தன் நலம் தேய்ந்து—தன்னுடைய அழகுகுன்றி, பொறுக்க அரும் பெரும் நாண் சுட—சகித்தற்கரிய பெரியவெட்கமானதுசுட, கரிந்தது போல் ஆம்—அதனாற்கருகியது போலும் எ—று.

மறம்-இரக்கமின்மை. அவநுதியென்னுமலங்காரம். (உ0)

துங்க மிக்கசூர் படைத்திடு மண்டமாத் தொகையுட்
செங்க திர்த்தொகை யாங்கவன் பணியினாற் சென்று
பொங்கு தண்சுடர் நடாத்திநின் றென்னவிப் புரியி
லெங்கு முற்றன செழுமணிச் சிகரமெண் ணிலவே.

இ—ள்: துங்கம் மிக்க சூர் படைத்திடும் அண்ட மா தொகையுள் செம் கதிர் தொகை—முதன்மைமிக்க சூரபன்மன் பெற்றுக்கொண்ட அண்டங்களின் பெரிய தொகைகளிலுள்ள சிவந்தநிறத்தையுடைய சூரியர்களெல்லாம், அவன் பணியினால் சென்று—அந்தச்சூரபன்மனது ஏவற்படிவந்து, பொங்கு தண் சுடர் நடாத்தி நின்று என்ன—பொலிவார்ந்த குளிர்ந்த கிரணத்தைவீசிநின்றாற்போல, இ புரியில்—இந்தநகரத்தில், செழு மணி சிகரம் எண் இல—செழுமையான மாணிக்கரத்தினத்தாலாகிய தூபிகள் அளவிறந்தன, எங்கும் உற்றன—எல்லாவிடங்களிலுமிருக்கின்றன எ—று.

மாணிக்கரத்தினத்தினால் வட்டவடிவாகச்செய்யப்பட்ட தூபிகள் கோபுரமுதலியவற்றின்மேற் பேரொளிவீசிக்கொண்டிருத்தலால் இவ்வாறுவமித்தார். உதித்தலும்மறைதலும் இயங்குதலுமின்றி நின்றாற்போலவென்பார் 'நின்றென்ன' என்றார். (உக)

மாணி லைப்படு மெழுவகை யுலகின்வைப் பென்ன
வேணி லைப்பெருஞ் சிகரிகள் செறிந்தன யாண்டுங்
கோணி லைக்கதி ருடுப்பிறர் பதங்களிற் குழுமி
நீணி லைத்தலம் பலவுள மாடங்க ணிரந்த.

இ—ள்: மாண் நிலை படும் எழுவகை உலகின் வைப்பு என்ன—மாட்சிமைபொருந்திய நிலைமையமைந்த ஏழுவகையான உலகங்களின் அடுக்குப்போல, ஏழ் நிலை பெரும் சிகரிகள் செறிந்தன—ஏழென்னுந்தொகைப்பட்ட நிலைகளையுடைய பெரிய கோபுரங்கள்நெருங்கியிருக்கின்றன, கோள் நிலை கதிர் உடு பிறர் பதங்களில் குழுமி—கிரகங்களுளொன்றாந்தன்மையையுடைய சூரியனதும் நட்சத்திரங்களதும் செவ்வாய்முதலியபிறரதும் உலகங்களைப்போலச்செறிந்து, நீள் நிலை தலம் பல உள மாடங்கள்—நெடிய நிலையான இடங்கள் பல அமையப்பெற்ற மாடங்களானவை, யாண்டும் நிரந்த—எங்கும்பரம்பியிருக்கின்றன எ—று.

எழுநிலைக்கோபுரங்களும் அடுக்குமெத்தைவீடுகளும்பலவுள என்பதாம். அதிகமான இடப்பரப்பையுடையனவாயும் ஒன்றற்கொன்று மேலுங்கீழுமாயும் அமைந்தவென்பார் 'மாணிலைப்படும்' எனவும், பலர் ஒருங்கேதங்கியிருத்தற்கேற்ற இடமென்பார் 'நீணிலைத்தலம்' எனவும் கூறினார். ஏழுலகங்களையுவமித்ததனாற் கோபுரத்தினுயாமும் விசாலமும், கிரகங்களையும் நட்சத்திரங்களையும் உவமைகூறியதனால் மாடங்கள் பலநிறஇரத்தினங்களாலமைக்கப்பட்டிருந்தனவென்பதும் பெறப்பட்டன. (உஉ)

நூறு யோசனை சேண்படு நீட்சியு நுவலு
மாறு யோசனைப் பரவையும் பெற்றவா வணங்க
ளேறு தேர்பரி களிறுதா னவர்படை யீண்டிச்
சேற லாயிடை யருமையால் விசும்பினுஞ் செல்லும்.

இ—ள்: நூறு யோசனை சேண்படும் நீட்சியும்—நூறுயோசனை தூரமான நீளமும், நுவலும் ஆறு யோசனை பரப்பும்—சொல்லப்படுகின்ற ஆறுயோசனையளவான அகலமும், பெற்ற ஆவணங்கள்—அமையப்பெற்றவீதிகளில், ஏறு தேர் பரி களிறு தானவர் படை—வீரர்களேறப்பெற்ற தேர்களும் குதிரைகளும்

யானைகளும் அசுரர்களுமாகிய நால்வகைச்சேனைகளும், ஈண்டி—நெருங்கப்பெற்று, ஆயிடை சேறல் அருமையால்—அந்தவீதிவழியாகச்செல்லுதலருமையாயிருத்தலால், விசும்பினும் செல்லும்—ஆகாயமார்க்கமாகவுஞ்செல்லும் எ—று.

தானவரென்றது காலாள்வீரரை. (௨௩)

அடன்மி குத்திடு தானவ ரகலிரு விசும்பிற்
கடிதி னிற்செல மத்திகை காட்டுமா றொப்ப
நெடுமு கிற்கணந் தழுவுசூ ளிகைமிசை நிறுவுங்
கொடிக ளெற்றிடப் போவன விரைவிகொய் யுளைமா.

இ—ள்: அடல் மிகுத்திடு தானவர்—வலிமைமிகுந்த அசுரர்கள், அகல் இரு விசும்பில் கடிதினில் செல—அகன்றபெரிய ஆகாயத்தில்விரைவிற்செல்லும்படி, மத்திகை காட்டுமாறு ஒப்ப—சவுக்கைக்காட்டுந்தன்மைபோல, நெடு முகில் கணம் தழுவு சூளிகை மிசை—நெடிய மேகக்கூட்டங்களையளாவியிருக்கின்ற சூளிகைகளின்மேல், நிறுவும்—நாட்டப்பெற்ற, கொடிகள் எற்றிட—கொடிக்கூட்டங்கள் (காற்றினால்வீசப்பட்டுத்) தாக்க, இரவி கொய் உளை மா போவன—சூரியனது கொய்யப்பட்ட பிடர்மயிருடைய குதிரைகள் ஓடுவன எ—று.

சூளிகை-தூபிவைத்துச்செய்யப்பட்ட மாளிகை. ஒப்பப்போவன எனஇயையும். கிரகதேவர்களையுமஞ்சுவிக்கத்தக்க ஆற்றலுடைய அசுரரென்பார் 'அடன்மிகுத்திடுதானவர்' எனவும், இயற்கைவேகத்தினின்றும் அதிகமானவேகத்துடன் செல்லவென்பார் 'கடிதினிற்செல' எனவுங்கூறினார். சூளிகைகளின்மேற்கட்டப்பட்டகொடிகள் காற்றுவீசுந்தோறும் சூரியனதுதேர்க்குதிரைகளிற்றாக்குதல், விரைந்துசெல்லும்படி அசுரர்கள் சவுக்கால் வீசுதல்போலும் என்பதாம். இதனாற் சூளிகைகளினுயரம்பெறப்பட்டது. மர்த்திகையென்னும்வடமொழி மத்திகையெனநின்றது. அடித்தற்கருவியென்பதுபொருள். (௨௪)

மேலு லாவிய படிகமா ளிகைசில மின்னார்
மாலை தாழ்குழற் கிடுமகி லாவியான் மறைவ
சீல நீங்கிய வவுணர்தஞ் சீர்த்திக ளனைத்து
மேல வேயவர் பவத்தினு ளொடுங்குமா றென்ன.

இ—ள்: சீலம் நீங்கிய அவுணர் தம் சீர்த்திகள் அனைத்தும்—ஒழுக்கமில்லாத அசுரர்களது கீர்த்திகள்முழுவதும், ஏல-இசைவாக, அவர் பவத்தினுள் ஒடுங்குமாறு என்ன—அவர்கள்செய்தபாவத்திலொடுங்குந்தன்மைபோல, மேல் உலாவிய படிக மாளிகை சில—மேலுயர்ந்த பளிங்குமாளிகைகள்சில, மின்னார் மாலை தாழ் குழற்கு இடும் அகில் ஆவியால் மறைவ— அசுரப்பெண்கள் மாலைதூங்கப்பெற்ற தங்கள்கூந்தலுக்கு ஊட்டுகின்ற அகிற்புகையால் மறைவன எ—று.

கீர்த்தியைவெண்ணிறமாகவும் பாவத்தைக்கருநிறமாகவுங் கூறுவதியல்பாதலின், பளிங்குமாளிகைக்குக்கீர்த்தியையும் புகைக்குப்பாவத்தையுமுவமித்தார். சிறிதும்பிரகாசிக்காவண்ணமென்பார் 'ஏல' என்றார். (௨௫)

அணிகு லாயகோ மேதக மரகத மாரந்
துணியு நீலம்வச் சிரம்வயி டூரியந் துப்பு
நணிய பங்கயம் புருடரா கம்மெனு நவமா
மணிக ளாற்செய்து மிளிர்வன வாய்பில்பொன் மாடம்.

இ—ள்: அணி குலாய கோமேதகம்—அழகுவிளங்குகின்ற கோமேதகமும், மரகதம்—மரகதமும், ஆரம்—முத்தும், துணியும் நீலம்—வேகடஞ்செய்

யப்பெற்ற நீலமும், வச்சிரம்—வைரமும், வயிரேரியம்—வைடூரியமும், துப்பு—பவளமும், நணிய பங்கயம்—செறிந்த மாணிக்கமும், புருடராகம்—புட்பராகமும், எனும்—என்றுசொல்லப்படுகின்ற, நவம் ஆம் மணிகளால்—ஒன்பதுவகையான இரத்தினங்களாலும், செய்து மிளிர்வன—செய்யப்பட்டுவிளங்குவன, வரம்பு இல் பொன் மாடம்—அளவிறந்த பொன்னாலாகிய மாடங்கள் எ—று.

நவ மா மணி எனவகுப்பினுமாம். தாமரைமலர்போலும் நிறமுடைமையின் மாணிக்கத்தைப்பங்கயமெனவும், சிறந்தகோமேதகமென்பார் 'அணிகுலாயகோமேதகம்' எனவும், ஏனையிரத்தினங்களினின்றுமிகுதியாகமாணிக்கரத்தினமழுத்தப்பட்டிருத்தலின் 'நணியபங்கயம்' என அடைகொடுத்தும் கூறினார். (உசு)

இயல்ப டைத்தவெண் படிகத்தி னியன்றமா ளிகைமேற்
புயல்ப டைத்திடு களிமயில் வதிந்திடப் புடையே
கயல்ப டைத்தகண் ணியர்புரி யகிற்புகை கலப்ப
முயல்ப டைத்திடு மதியினைச் சூழ்தரு முகில்போல்.

இ—ள்: இயல் படைத்த வெண் படிகத்தின் இயன்ற மாளிகை மேல்— தகுதிபொருந்திய வெள்ளியபளிங்கினாற்செய்யப்பட்ட மாளிகையின்மேல், புயல் படைத்திடு களி மயில் வதிந்திட—மேகங்களினாலுண்டாகின்ற களிப்பையுடைய மயில் இருக்க, புடையே—(அம்மாளிகையின்) பக்கத்தில், கயல் படைத்த கண்ணியர் புரி அகிற்புகை கலப்ப— கயல்மீன்போன்ற கண்களையுடைய பெண்கள் (கூந்தற்கூட்டுதற்காய்) உண்டாக்கிய அகிற்புகைசூழ்வது, முயல் படைத்திடு மதியினை சூழ்தரு முகில் போல்—முயற்களங்கத்தையுடைய சந்திரனைச்சூழுகின்ற மேகங்களைப்போல எ—று.

முகில்போற்கலப்ப எனஇயையும். சிறந்தபளிங்கென்பார் 'இயல்படைத்த-படிகம்' எனவும், கார்காலந்தொடங்கியவுடன் மயில்கள் போரானந்தங்கொண்டு நடித்துத்திரிவனவாதலின் 'புயல்படைத்திடுகளிமயில்' எனவும் கூறினர். மயிற்பறவைக்குமுயலும் பளிங்குமாளிகைக்குச்சந்திரனும் அகிற்புகைக்குமேகங்களும் உவமை. (உஎ)

வளனி யன்றிடு செம்மணிப் பளிங்குமா ளிகைமே
லொளிறு பொற்றலத் தரிவையர் வடிமிசைந் துறுதல்
வெளிய சேயன பங்கயப் பொகுட்டின்மீ மிசையே
யளியி னங்கடேன் மாந்தியே வைகுமா றனைய.

இ—ள்: வளன் இயன்றிடு செம்மணி பளிங்கு மாளிகை மேல்—வளம்பொருந்திய மாணிக்கத்தினாலும் பளிங்கினாலுஞ்செய்யப்பட்ட மாளிகைகளின்மேல், ஒளிறு—விளங்குகின்ற, பொன் தலத்து—பொன்னிலங்களில், அரிவையர்—அசுரப்பெண்கள், வடி மிசைந்து உறுதல்—கள்ளைப்பருகிக்கொண்டிருத்தல், வெளிய சேயன பங்கய பொகுட்டின் மீ மிசை—வெண்ணிறமுடையனவும் செந்நிறமுடையனவுமாகிய தாமரைமலர்களின்பொகுட்டின்மேல், அளி இனங்கள்—வண்டுக்கூட்டங்கள், தேன் மாந்தி—தேனைப்பருகிக்கொண்டு, வைகுமாறு அனைய—இருக்குந்தன்மையைப்போலும் எ—று.

நல்லிலக்கணங்கள்வாய்ந்தவென்பார் 'வளனியன்றிடு' என்றார். பளிங்குமாளிகைக்குவெண்டாமரைமலரும் மாணிக்கமாளிகைக்குச்செந்தாமரைமலரும் பொன்னிலத்திற்கு அம்மலர்களின்பொகுட்டுக்களும் அசுரப்பெண்களுக்குவண்டுகளும் கள்ளுக்குத்தேனும் உவமை. அசுரப்பெண்கள்கருநிறமுடையாரதலின் வண்டுகளையுவமித்தார். (உஅ)

தூய்ய வாலரி புனற்கிறை மண்ணியே தொகுப்பச்
செய்ய தீயவ னூன்களோ டவைபதஞ் செய்ய
மையன் மாதரோ டவுணர்க ளரம்பையர் வழங்க
நெய்ய ளாவுண்டி யுண்குவர் மறுசிகை நீக்கி.

இ—ள்: புனற்கு இறை—சமுத்திரத்திற்குத்தலைவனாகியவருணன், தூய்ய வால் அரி மண்ணி தொகுப்ப—தூய்மையாகிய வெள்ளியஅரிசியைக்கழுவிக்குவிக்க, செய்ய தீயவன்—சிவந்தநிறத்தையுடைய அக்கினிதேவன், ஊன்களோடு அவை பதம் செய்ய—தசைவர்க்கங்களுடன் அவற்றைச்சமைக்க, அரம்பையர் வழங்க—தேவரம்பையர்கள் (வேண்டியவாறு) படைக்க, அவுணர்கள்—அசுரர்கள், மையல் மாதரோடு—மயக்கத்தைத்தருகின்ற பெண்களுடன், நெய் அளாவு உண்டி—நெய்வார்க்கப்பெற்ற அந்தவுணவை, மறுசிகை நீக்கி உண்குவர்—மறுக்கப்படும்பொருள்களைநீக்கி உண்பார்கள் எ—று.

நொய்யும் நொறுங்கும் நீங்கும்படி கொழித்தெடுக்கப்பட்டவென்பார் 'தூய்ய' எனவும், பல்வகையானதசைக்கறிகளும் பொரியல்வகைகளும் பிறவும் அன்னஞ்சமைத்தபின்னர் ஆக்கப்பட்டனவாதலின் 'ஊன்களோடவைபதஞ்செய்ய' எனவும், உடலிரண்டுயிரொன்றெனும்படி கூடிவாழும் பெண்களென்பார் 'மையன்மாதர்' எனவும், படைக்கப்பட்டனவற்றில் விரும்பியனவற்றையுண்டு விருப்பமற்றனவற்றைக் கழித்தாராதலின் 'மறுசிகைநீக்கி' எனவும் கூறினார். பெருஞ்செல்வர்கள் படைக்கப்பட்டபோசனப்பொருள்களுள் விரும்பாதனவற்றைநீக்கியுண்பதை "அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட-மறுசிகைநீக்கியுண்டாரும்" எனப் பிறர்கூறுதலானுமறிக. (௨௯)

துப்பு றுத்தன குஞ்சியங் காளையர் தொகையுஞ்
செப்பு றுத்துசி றடிமினார் பண்ணையுஞ் செறிந்து
மெய்ப்பு றத்தியல் காட்சியுங் கலவியும் வெறுப்பு
மெப்பு றத்தினு நிகழ்வன மதனுல கிதுவே.

இ—ள்: துப்பு உறுத்தன குஞ்சியம் காளையர் தொகையும்—சிவந்தநிறம் பொருந்திய குடுமியையுடைய ஆடவாதுதொகுதியும், செப்பு உறுத்து சிறு அடி மின்னார் பண்ணையும்—செம்பஞ்சூட்டப்பெற்ற சிறியகால்களையுடைய மங்கையாதுதொகுதியும், செறிந்து—நெருங்கி, மெய் புறத்து இயல் காட்சியும்—மெய்ம்மையான புறவிடங்களில் உலாவுகின்றகாட்சியும், கலவியும்—அவர்களதுபுணர்ச்சியும், வெறுப்பும்—ஊடலும் ஆகியஇவைகள், எப்புறத்தினும் நிகழ்வன—எல்லாவிடங்களினும்நடைபெறுவன (ஆதலின்), மதன் உலகு இது—மன்மதனுடையஉலகம் இதுவேயாம் எ—று.

துப்பு-ஆகுபெயர். செப்பு-செம்மையென்னும்பண்படியாகப்பிறந்தபெயர். மினார்-தொகுத்தல். புறம்-மாளிகையின்புறத்துள்ள இடம். இயலல்-உலாவுதல். மன்மதனரசுசெய்யும்உலகத்திற் பெண்களுடன் குலாவுதலுங் கூடலும் ஊடலுமே பிரசைகளுக்குத்தொழிலாமாதலின், அத்தொழில்கள்மிகுதியாகநடைபெறும் மகேந்திரத்தை 'மதனுலகு' என்றார். ஏ-தேற்றம். மெய்ப்புறத்தியல்காட்சி-தேகத்தில் அலங்காரத்தைச்செய்கின்ற காட்சியுமாம். (௩௦)

பூணு பாரமுங் கலாபமு மிழைகளும் பொன்செய்
நாணு மொற்றராற் பரத்தையர் பாற்பட நல்கிப்
பேணி மற்றவர் விலக்கினை நயந்தன பிறவு
மாணு மைந்தர்க ளேடுறுவா னுறுபார்த் தயர்வார்.

இ—ள்: ஆனு மைந்தர்கள்—ஆடவர்களாகிய காளையர்கள், பூணும்—பூணப்படுவனவற்றையும், ஆரமும்—முத்துவடங்களையும், கலாபமும்—பதினறுகோவைமணியையும், இழைகளும்—இரத்தினமிழைக்கப்பட்டனவற்றையும், பொன்செய் நாணும்—பொன்னாற்செய்யப்பட்ட நாண்களையும், ஒற்றால்—தூதுப்பெண்களால், பரத்தையர் பால் பட நல்கி—பரத்தைமகளிரிடஞ்சேரும்படி செலுத்தி, மற்று—பின்னும், அவர் விலக்கின நயந்தன பிறவும் தேறுவான் பேணி—அப்பெண்கள் கழித்தனவற்றையும் விரும்பியேற்றுக்கொண்டனவற்றையும் பிறவற்றையும் அறியும்படி ஆவல்கொண்டு, ஆறு பார்த்து அயர்வார்—வழிபார்த்துவருந்திநிற்பார்கள் எ—று.

பூண்-பாடகம் பாதசாலம்முதலியன. இழை-காதணிமுதலியன. ஒற்றால் நல்கி என இயையும். மற்று-வினைமாற்று. பிற-தம்முடன்கலத்தற்குடன்படுதல் தினங்குறித்தல் முதலியன. ஆறுபார்த்தல்-சென்றதூதியர்மீண்டுவரும்வழியை அடிக்கடிபார்த்தல். விரைவில்வாராமையால் யாதாயிற்றோவென்று அயர்வாரென்க. ஆனு என்பதில் உ-சாரியை. ஆனும் எனக்கண்ணழித்துப் பெயரெச்சமாகக் கொண்டு காதன்மீதூர்ந்தவெனப் பொருள்கூறினுமாம். (௩௧)

துன்று தானவர் தெரியலின் மாதர்பூந் தொடையின்
மன்றன் மாளிகைச் சோலையி னிலஞ்சியின் மலரிற்
குன்ற மால்கரித் தண்டத்தின் யாழ்முரல் குழுவிற்
சென்று சென்றென துணர்வுபோ லளிகளுந் திரியும்.

இ—ள்: துன்று தானவர் தெரியலில்—நெருங்கிய அசுரர்களணிந்திருக்கின்ற மலர்மாலைகளிலும், மாதர் பூம் தொடையில்—பெண்களணிந்திருக்கின்றபூமாலைகளிலும், மன்றல் மாளிகை சோலையில்—அழகியமாளிகைகளிலுள்ளசோலைகளிலும், இலஞ்சியில் மலரில்—குளங்களிலுள்ளபூக்களிலும், குன்ற மால் கரி தண்டத்தின்—மலைபோன்ற பெரியயானைகள் செல்லும்வழிகளிலும், யாழ்முரல் குழுவில்—யாழ்வாசிக்குங்கூட்டங்களிலும், சென்று சென்று—போய்ப்போய், எனது உணர்வு போல்—என்னுடையஅறிவுபோல, அளிகளும் திரியும்—வண்டுகளும் உலாவும் எ—று.

சென்றவிடத்திற்றானே தங்காது மாறிமாறிச்சஞ்சரித்தலால் 'சென்றுசென்று' எனஅடுக்கிக்கூறினர். யானைசெல்வழியில்மதநாற்றத்தாலும் யாழ்வாசிக்குங்கூட்டத்திற் கீதங்கேட்கும்விருப்பத்தாலும் வண்டுகள்செல்வனவென்க. அந்நகரின் பற்பலவிடங்களிலும் மாறிமாறிச்செல்லுதலால் தம்முணர்வை உவமித்தார். (௩௨)

மாறி லாதசூ ராணையால் வந்திடும் வசந்த
னூறு தெண்கட லளவியே தண்டலை யுலவி
வீறு மாளிகை நூழையி னிடந்தொறு மெல்லத்
தேறல் வாய்மடுத் தோரென வசைந்துசென் றிடுமால்.

இ—ள்: மாறு இலாத சூர் ஆணையால் வந்திடும் வசந்தன்—ஒப்பில்லாதசூரபன்மனது கட்டளையின்படியொழுகுகின்ற தென்றற்காற்று, ஊறு தெண் கடல் அளவி—நீரூறுகின்ற தெளிந்தகடலின்கண்ணேயுலாவி, தண்டலை உலவி—(அதன்பின்)பூஞ்சோலைகளிலுலாவி, வீறு மாளிகை நூழையின் இடம் தொறும்—சிறந்தமாளிகைகளிலுள்ளசாளரவாயிலினிடங்கடோறும், மெல்ல—மிருதுவாக, தேறல் வாய் மடுத்தோர் என—கள்ளை வாயினால் நிறையப்பருகினவர்களைப்போல, அசைந்து சென்றிடும்—அசைந்து நுழையும் எ—று.

கடலிலுலாவுதலாற்றண்மையையும் சோலைகளிலுலாவுதலால் வாசனையையும்பெறுமென்க. நீர்ப்பெருக்கினையுடையகடலென்பார் 'ஊறுதெண்கடல்' எனவும், நிறையப்பருகினோரென்பார் 'வாய்மடுத்தோர்' எனவும் கூறினர். மெல்லச்சென்றிடும் என இயையும். கள்ளைமிகப்பருகினோர் சோர்ந்தநடையுடன் தள்ளாடிச்செல்வதுபோல, தென்றற்காற்றும் மெல்லெனஅங்குமிங்குமலைந்துவீசிச் சாளரவாயில்களாலுட்புகுமென்க. (௩௩)

மாட மீதமர் மடந்தையர் தம்முரு வனப்புக்
கூட வேபுனைந் தணிநிழற் காண்பது குறித்துப்
பாடு சேர்கர நீட்டியே பகலவற் பற்றி
யாடி நீர்மையி னோக்கியே யந்தரத் தெறிவார்.

இ—ள்: மாடமீது அமர் மடந்தையர்—மாடங்களின்மேலிருக்கின்றஅசுரப்பெண்கள், தம் உரு—தங்களுடையமேனியை, வனப்பு கூட புனைந்து—முன்னையினுமழகுபெருகும்படியலங்கரித்து, அணி நிழல் காண்பது குறித்து—தமது அழகியநிழலைப்பார்க்கும்படிகருதி, பாடு சேர் கரம் நீட்டி—பெருமைபொருந்தியகையைநீட்டி, பகலவன் பற்றி—சூரியனைப்பிடித்து, ஆடி நீர்மையில் நோக்கி—கண்ணாடியாகக்கொண்டுபார்த்து, அந்தரத்து எறிவார்—(பின்)ஆகாயத்திலெறிவார்கள் எ—று.

செய்தஅலங்காரங்களாற்றமதுமேனி அழகுடைத்தாயிற்று அன்று என்பதைப்பார்க்கநினைந்தென்பார் 'அணிநிழற்காண்பதுகுறித்து' என்றார். சூரியனைக் கண்ணாடியாகக்கொண்டாரெனவே மாடங்களினுயரமும் அசுரராணைக்குக்கிரகங்களஞ்சிநடப்பதுந்தோன்றின. (௩௪)

வன்ன மாடமே லாடவர் பரத்தைமை மகளி
ருன்னி யூடியே பங்கியீர்த் தடிகளா லுதைப்பப்
பொன்னி னாணறத் தமதுகை யெழிலியுட் போக்கி
மின்னு வாங்கியே யார்த்தனர் குஞ்சியை வீக்கி.

இ—ள்: வன்ன மாட மேல் ஆடவர்— அழகுபொருந்தியமாடத்தின்மேலிருக்கின்றகாளையர்கள், பரத்தைமை மகளிர் உன்னி ஊடி பங்கி ஈர்த்து அடிகளால் உதைப்ப—பரத்தைப்பெண்கள்நினைத்து ஊடல்கொண்டு குடுமியைக்கையாலிழுத்துக் கால்களாலுதைக்கும்பொழுது, பொன்னின் நாண் அற—(அக்குடுமியைவீக்கியிருந்த) பொன்னாற்செய்யப்பட்டகயிறு அற, தமது கை எழிலியுள் போக்கி—தங்கள்கையை மேகத்தினுள்ளேநுழைத்து, மின்னு வாங்கி—அங்குள்ளமின்னலையிழுத்தெடுத்து, குஞ்சியை வீக்கி ஆர்த்தனர்—குடுமியை இறுக்கிக்கட்டினார்கள் எ—று.

ஆடவர் ஆர்த்தனர் என இயையும். அகத்தே ஊடல்தோன்றாதிருப்பவும் ஆடவர்தம்மைப்பணியவேண்டுமென்னும்நோக்கமாக ஊடினாராதலின் 'உன்னியூடி' என்றார். இச்செய்யுளாற்பரத்தையர்செருக்கும் காளையரதுவன்மையும் மாடங்களினுயரமுங் குறிக்கப்பட்டன. (௩௫)

முழங்கு வானதி தோய்ந்தசின் மாளிகை முகட்டி
னழுங்க லென்பதை யுணர்கிலா மாதரா ரகல்வான்
வழங்கு கோளுட னுடுமினைப் பற்றியம் மனையுங்
கழங்கு மாவெறிந் தாடுவ ரலமரக் கண்கள்.

இ—ள்: முழங்கு வான் நதி தோய்ந்த சில் மாளிகை முகட்டில்— ஒலிக்கின்ற ஆகாயகங்கையையளாவியிருக்கப்பெற்ற சிலமாளிகைகளின்மேலிடத்தில்,

அழுங்கல் என்பதை உணர்கிலா மாதரார்— வருத்தமென்பதையறியாதசிலபெண்கள், அகல் வான் வழங்கு கோளுடன் உருமினை பற்றி—அகன்ற ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற கிரகங்களையும் இடியையும்பிடித்து, அம்மனையும் கழங்கும் ஆய் எறிந்து—அம்மனையும் கழங்குமாகக்கொண்டெறிந்து, கண்கள் அலமர ஆடுவர்—கண்கள்சுழல விளையாடுவார்கள் எ—று.

அம்மனையுங்கழங்கும் பெண்களெறிந்துவிளையாடும்பொருள்கள். பிறந்தநாட்டொட்டு எந்நாளும் இன்பத்தையேயனுபவிப்பவரென்பார் 'அழுங்கலென்பதையுணர்கிலாமாதரார்' எனவும், மிகுந்தஊக்கத்துடன் விளையாடுவரென்பார் 'கண்களலமர ஆடுவர்' எனவும் கூறினர். இச்செய்யுளால் மாளிகைகளினுயர்வும் பெண்களதுசெல்வமும் வருணிக்கப்பட்டன. (ருசு)

ஈண்டை மாளிகை மங்கையர் தஞ்சிறா ரிரங்க
வாண்டு மற்றவ ராடுவான் பற்றியா தவன்றேர்
பூண்ட மான்றொகை கொடுத்தலு மாங்கவன் போந்து
வேண்டி நின்றிட வாங்கியே யுதவுவார் மெல்ல.

இ—ள்: ஈண்டை மாளிகை மங்கையர்—இந்நகரத்தின் மாளிகைகளிலுள்ள அசுரப்பெண்கள், தம் சிறார் இரங்க- தங்கள்சிறுவர்கள் அழ, ஆண்டு அவர் ஆடுவான்—அவ்விடத்தில் அந்தச்சிறுவர்கள்(அழுகைநீங்கி)விளையாடும்படி, ஆதவன் தேர் பூண்ட மான் தொகை பற்றி கொடுத்தலும்— சூரியனதுதேரிற்கட்டப்பெற்ற குதிரைகளைப்பிடித்துக்கொடுக்க, அவன் போந்து வேண்டி நின்றிட—அந்தச்சூரியன்வந்து அவற்றைத்தரும்படிமெலிந்துநிற்க, மெல்ல வாங்கி உதவுவார்-மெல்லவாக அவற்றை அச்சிறுவரிடத்துவாங்கி அவனுக்குக்கொடுப்பார்கள் எ-று.

இரங்கக்கொடுத்தனர், கொடுக்கவேண்டிநின்றனன், நிற்க உதவினர் என இயைக்க. சிறுவர் அக்குதிரைகளைக்கொடுத்தற்குமறுத்தபோதும் இன்சொற்கூறிவாங்கினராதலின் 'மெல்லவாங்கி' என்றார். இச்செய்யுளால் மாளிகைகளினுயரமும் அசுரப்பெண்களதுவன்மையும் தேவர்களின்மெலிவும் அசுரச்சிறுவர்களின் பெருமையும் குறிக்கப்பட்டன. (ருஎ)

நீடு மாளிகை மிசைவரு மாதர்கை நீட்டி
யீடு சாலுரு மேறுடன் மின்பிடித் திசைத்தே
யாடு கிங்கிணி மாலையா மைந்தருக் கணியா
வோடு கொண்டலைச் சிறு துகி லாப்புனைந் துகப்பார்.

இ—ள்: நீடு மாளிகை மிசை வரும் மாதர்—நெடியமாளிகைகளின்மேலிருக்கின்ற அசுரப்பெண்கள், கை நீட்டி—தங்கள்கைகளைநீட்டி, ஈடு சால் உருமேறு உடன் மின் பிடித்து இசைத்து— வலிமைபொருந்தியஇடியையும் மின்னலையும்பிடித்துத்தொடுத்து, ஆடு கிங்கிணி மாலை ஆ—அசைகின்றகிங்கிணிமாலையாக, மைந்தருக்கு அணியா—தங்கள்புதல்வர்களுக்கணிந்து, ஓடு கொண்டலை சிறு துகிலா புனைந்து—ஓடித்திரிகின்றமேகங்களைச் சிற்றுடையாகவுடுத்து, உகப்பார்—மகிழ்வார்கள் எ--று.

மின்னலை நாணாகவும் இடியை இடையிடையேசேர்க்கப்பெற்ற மணிகளாகவுந் தொடுத்தணிந்தாரென்க. இச்செய்யுளால் மாளிகைகளினுயரமும் அசுரப்பெண்களது வன்மையுங்குறிக்கப்பட்டன. மகிழ்தல் சிறப்புநோக்கி. (ருஅ)

பொங்கு மாமணி மேற்றலத் திரவிபோந் திடலு
மிங்கி தோர்கனி யெனச்சிறா ரவன்றனை யெட்டி
யங்கை பற்றியே கறித்தழ லுறைப்பவிட் டழுங்கக்
கங்கை வாரிநீ ரூட்டுவார் கண்டநற் றாயர்.

இ—ள்: பொங்கும் மாமணி மேல் தலத்து இரவி போந்திடலும்—பொலிவான மாணிக்கரத்தினங்களாற்செய்யப்பெற்ற மேல்வீட்டையணுகிச் சூரியன்வருதலும், சிறார்—(அங்கேதவழுகின்ற) சிறுவர்கள், இது ஓர் கனி என—இது ஒரு பழமென்றுநினைந்து, அவன் தனை அங்கை எட்டி பற்றி—அந்தச்சூரியனை அகங்கையினால் எட்டிப்பிடித்து, கறித்து—(வாயில்வைத்துக்) கடித்து, அழல் உறைப்ப விட்டு—அம்மண்டலத்தினழற்சியானது உறைக்க(உடனே)கைநெகிழவிட்டு, அழுங்க—வருந்த, கண்ட நல் தாயர்—அதனைக்கண்ட பெற்றதாய்மார், கங்கை வாரி நீர் ஊட்டுவார்—(அந்த அழற்சிதீரும்படி) ஆகாயகங்கையாகியதீர்த்தத்திலுள்ள நீரையள்ளிப் பருக்குவார்கள் எ—று.

மிகப்பெரியனவாகிய இரத்தினங்களென்பார் 'பொங்குமாமணி' என்றார். போந்திடலும் பற்றி என இயையும். இச்செய்யுளால் மேன்மாளிகைகளினுயரமும் சிறுவரதுவலியும் குறிக்கப்பட்டன. (௩௯)

கண்டு வந்தனை வரும்புகழ் தஞ்சிறார் கலுழ
விண்டு வந்தனை செய்தெனத் தாழ்ந்தமே னிலத்தில்
வண்டு வந்தனைப் படுகதிர் கைம்மலர் வலிந்து
கொண்டு வந்தனை மாரிரங் காவகை கொடுப்பார்.

இ—ள்: கண்டு உவந்து அனைவரும் புகழ் தம் சிறார் கலுழ—பார்த்துமகிழ்ந்து எல்லோரும்புகழத்தக்க தம்முடையசிறுவர்கள் அழ, அனைமார்—தாய்மார், விண்டு வந்தனை செய்து என தாழ்ந்த மேல் நிலத்தில்—ஆகாயமும்பணிந்தாற்போலத்தாழ உயர்ந்த மேல்வீட்டின்கண், வண் துவம் தனை படு கதிர்—வண்மையானநிலையைப்பொருந்தியசூரியனை, கை மலர் வலிந்து கொண்டு வந்து—மலர்போலுங்கைகளால் வலிதிற்கவர்ந்துவந்து, இரங்கா வகை கொடுப்பார்—அழாவண்ணம் கொடுப்பார்கள் எ—று.

கண்டவுடன்புகழத்தக்கவென்பார் 'கண்டு-புகழ்' எனவும், ஆகாயமுந்தாழ்ந்ததெனும்படியுயர்ந்த மேல்வீடென்பார் 'விண்டுவந்தனைசெய்தெனத்தாழ்ந்தமேனிலம்' எனவும், எவராலும் பெயர்க்கப்படாதமண்டலமாதலின் 'வண்டுவந்தனைப்படுகதிர்' எனவும் கூறினார். இச்செய்யுளால் மாளிகைகளினுயரமும் அசுரப்பெண்களது வன்மையும் வருணிக்கப்பட்டன. மேனிலத்திற்கொண்டுவந்து கொடுப்பார் என இயையும். விண்டுமென்பதிற் சிறப்பும்மைதொக்கது. (௪௦)

அஞ்சி லோதியர் மாளிகை மிசைச்சில ரகல்வான்
விஞ்சு தேவரை விளித்தலு மெய்யுறன் மறுப்ப
வஞ்சர் வஞ்சரென் றாற்றியவ் வானவ ரிசைய
நஞ்சி றாருட னாடுது மென்பர்நண் ணினர்க்கு.

இ—ள்: அம் சில் ஓதியர் சிலர்—அழகிய சில்வைத்துமுடிக்கப்பெற்றகூந்தலையுடைய அசுரப்பெண்கள்சிலர், மாளிகை மிசை—தாமிருக்கும் மாளிகையின் மேல்(நின்று), அகல் வான் விஞ்சு தேவரை விளித்தலும்—அகன்ற ஆகாயத்திலுள்ள சிறந்ததேவர்களைப் (புணருமாறு) அழைக்க, மெய்யுறல் மறுப்ப—அவர்கள் புணர்தற்குமறுக்க, வஞ்சர் வஞ்சர் என்று ஆற்றி—அத்தேவர்களை வஞ்சகர் வஞ்சகர் என்றுவைது புலம்பி, அவ் வானவர் இசைய—(பின் அவரதுகோபத்தாற்றமக்குத்தீங்குவிளையுமென்றெண்ணி) அந்தத்தேவர்கள் உடன்பட்டுக்கூட, நண்ணினர்க்கு—அங்கேவந்த அயலார்க்கு, நம் சிறாருடன் ஆடுதும் என்பர்—எங்கள் சிறுவர்களுடன் விளையாடுகின்றோமென்பார்கள் எ—று.

அழகு அதிகாரம்முதலியவற்றாற்சிறந்தாரென்பார் 'விஞ்சுதேவர்' என்றார். அடுக்கு இழிவுபற்றிவந்தது. இச்செய்யுளால் அசுரப்பெண்களது காமமிகுதியும் நாணமின்மையும் குறிக்கப்பட்டன. (௪௧)

பொருளின் மாளிகைப் படிற்றியர் புணர்வரென் றுன்னி
வரவு மஞ்சுவர் வாராமையு மஞ்சுவர் மடவார்
கரவின் மேவுத லவுணர்கள் காண்பர்கொ லென்றும்
வெருவு கின்றன ரென்செய்வார் விண்ணெறிப் படர்வார்.

இ—ள்: விண் நெறி படர்வார்—ஆகாயமார்க்கத்திற்சஞ்சரிக்கின்ற தேவர்கள், பொருளின் மாளிகை படிற்றியர் புணர்வர் என்று உன்னி—பொன்னாலாகிய மாளிகைகளிலுள்ள தூர்த்தப்பெண்கள் வலிந்துதம்முடன்கூடுவார்களென்று நினைத்து, வரவும் அஞ்சுவர்—இந்நகரத்திற்கு வரவும் பயப்படுவார்கள், வராமையும் அஞ்சுவர்—வராதுவிடவும் பயப்படுவார்கள், மடவார் கரவில் மேவுதல் அவுணர்கள் காண்பர் கொல் என்றும் வெருவுகின்றனர்—அசுரப்பெண்கள் மறைவாகத்தம்முடன்புணர்வதை அசுரர்கள் காண்பார்களோவென்றும் பயப்படுகின்றார்கள், என் செய்வார்—யாது செய்வார்கள்? எ—று.

தேவர்கள், மகேந்திரநகரில்வரின் காமமிக்கஅசுரப்பெண்கள் புணருமாறு வலிதலால் தமக்கு ஒழுக்கக்கேடும் அப்பெண்களது கணவர்முதலாயினோராற்றண்டமும் உண்டாமென்றும் வராதுவிடின் தமதுபணிகளைச்செய்யாமைபற்றி அசுரர் தேடிவந்தொறுப்பரென்றும் நினைந்து, செய்யும்வகையறியாராய் மயங்கினர் என்பதாம். இச்செய்யுளால் அசுரப்பெண்களது காமமிகுதியும் தேவர்களது அச்சமிகுதியும் குறிக்கப்பட்டன. (சஉ)

மேனி லந்தனின் மங்கையர் சிறார்விடா திரங்க
வூன மில்கதிர் தேர்வர வவரையாண் டுய்த்து
வான கந்தனிற் சில்லிடை யேகிநம் மகவைப்
பானு வந்துநீ தருகென விடுக்குநர் பலரால்.

இ—ள்: மேல் நிலம் தனில் மங்கையர் பலர்—மேல்வீடுகளிலுள்ள அசுரப்பெண்களுட்பலர், சிறார் விடாது இரங்க—தங்கள்சிறுவர்கள் இடையறாது அழ, ஊனம் இல் கதிர் தேர் வர—குற்றமற்றசூரியனது தேர் (அப்பொழுது) அணுகிவர, அவரை ஆண்டு உய்த்து—அப்புதல்வர்களை அத்தேரிலேற்றி, பானு நீ—சூரியனே! நீ, வானகம் தனில் சில் இடை ஏகி—ஆகாயத்திற்சிறிது தூரம்போய், வந்து—பின் இவ்விடத்திற்றிரும்பிவந்து, நம் மகவை தருக என—எங்கள்சிறுவர்களைத்தருவாயாகவென்று, விடுக்குநர்—அனுப்புகின்றார்கள் எ—று.

எவ்விதமானவிளையாட்டுக்களைக் காட்டியபோதும் அவற்றிற்சிறிதுஞ்சித்தை செலுத்தாதழுவென்பார் 'விடாதிரங்க' எனவும், சந்திரனைப்போலத்தேய்தல் வளர்தன்முதலிய வேறுபாடுகளில்லாதவென்பார் 'ஊனமில்' எனவும் கூறினார். சூரியனதுதேரிலேற்றிச்சிறிது தூரங்கொண்டுசென்று மீள்விக்கின் அழுகைநீங்குமென்றெண்ணி இவ்வாறு அசுரப்பெண்கள் கற்பித்தனர். இச்செய்யுளால் மேல்வீடுகளினுயரம்குறிக்கப்பட்டது. (சங)

கலதி யாகிய வவுணர்தம் மாதர்கால் வருடிச்
சிலதி யாமென வணங்கினோ ரேவல்செய் கிற்பார்
சலதி யார்தரு முலகமேற் றெரிகுறிற் றவமே
யலதி யாவுள வேண்டியாங் குதவநின் றனவே.

இ—ள்: அணங்கினோர்—தேவப்பெண்கள், சிலதியார் என—தோழிப்பெண்களைப்போலநின்று, கலதி ஆகிய அவுணர் தம் மாதர் கால் வருடி—மூதேவிகளாகிய அசுரப்பெண்களது காலைத்தடவி, ஏவல் செய்கிற்பார்—அவர்பணித்த ஏவல்களைச்செய்வார்கள்(ஆதலால்), தெரிகுறில்—ஆராயுமிடத்து, சலதி ஆர்தரும் உலகமேல்—கடலாற்சூழப்பெற்ற இந்நிலவுலகத்தில், தவமே அலது—தவமொன்

றேயன்றி, வேண்டியாங்கு உதவ நின்றன யா உள—விரும்பியபடி (எல்லாவற்றையுந்)கொடுக்கவல்லனவாக வேறெவையிருக்கின்றன? (ஒன்றுமில்லை) எ-று.

தவமொன்றுற்றான் விரும்பியவையெல்லாங்கைகூடுமென்பதாம். செல்வப்பெண்களுக்கு ஏவற்பெண்கள்கால்பிடித்தலியல்பு. அழகற்றவரென்பார் 'கலதியாகிய-மாதர்' என்றார். அழகின்மிக்காரும் உயர்குலத்தாருமாகிய தெய்வப்பெண்கள் அழகுஅற்பமேனுமில்லாதாரும் இழிகுலத்தாருமாகிய அசுரப்பெண்களுக்கு ஏவல்செய்தலாகியநிதர்சனத்தால் தவத்தின்மாட்சி வலியுறுத்தப்பட்டது. எ-பிரிநிலை. (௪௪)

ஐந்த வாகிய தருக்களு மணியுநல் லாவு
நந்து மம்புய நிதியமும் பிறவுமிந் நகரின்
மைந்தர் மாதர்க ளிருந்துழி யிருந்துழி வந்து
சிந்தை தன்னிடை வேண்டியாங் குதவியே திரியும்.

இ—ள்: ஐந்த ஆகிய தருக்களும்—ஐந்தென்னுந்தொகையினையுடையனவாகிய தெய்வவிருட்சங்களும், மணியும்—சிந்தாமணியுஞ் சூடாமணியுமாகிய இருமணிகளும், நல் ஆவும்– நல்ல காமதேனுவும், நந்தும் அம்புய நிதியமும்— சங்கநிதியும் பதுமநிதியும், பிறவும்---மற்றுள்ளதேவலோகப்பொருள்களும், இ நகரில்---இந்த மகேந்திரபுரியில், மைந்தர் மாதர்கள் இருந்துழி இருந்துழி வந்து—ஆடவர்களும் பெண்களுமிருக்குமிடந்தோறும் வந்து, சிந்தை தன் இடை வேண்டியாங்கு உதவி திரியும்—அவரவர்மனத்தில் விரும்பியவாறு விரும்பியபொருள்களைக்கொடுத்துத்திரியும் எ-று.

ஐந்தென்னும் எண்ணுப்பெயர் அஃறிணைப்பன்மையையுணர்த்தும் அகரவிகுதிபெற்றுமுடிந்தது. (௪௫)

மீது போகிய மாளிகைக் காப்பினுள் மேவு
மாதர் வானெறிச் செல்லுவோர் சிலர்தமை வலித்தே
காத லாற்பிடித் தொருசிலர் முறைமுறை கலந்தே
போதி ராலென விடுப்பர்பின் னசமுகி போல்வார்.

இ--ள்: மீது போகிய மாளிகை காப்பினுள் மேவும்—மேலுயர்ந்தமாளிகையாகிய காவலிலமைந்திருக்கின்ற, மாதர் ஒருசிலர்—அசுரப்பெண்கள்சிலர், அசமுகி போல்வார்—அசமுகியையொத்தவர்களாய், வான் நெறி செல்லுவோர் சிலர் தமை வலித்து—ஆகாயமார்க்கமாகச்செல்லுகின்ற சிலதேவர்களைவலிந்தழைத்து, காதலால் பிடித்து—ஆசையோடு கைப்பிடித்து, முறை முறை கலந்து—ஒருவர்பின்னொருவராகக்கூடி, பின்—பின்பு, போதிர் என விடுப்பர்—போங்களென்றுசொல்லி அனுப்புவார்கள் எ—று.

பலஆடவரை ஒருவர்பின்னொருவராகக்கூடுபவளாதலால் அசமுகியை உவமித்தார். (௪௬)

வேறு.

மேதாவி கொண்டகதிர் வெய்யவனை வெஞ்சூர்
சேய்தான் வலிந்துசிறை செய்திடலின் முன்னம்
மேதா மினங்கொலென வெண்ணியவ னென்றாழ்
வாதாய னங்கடொறும் வந்துபுக லின்றே.

இ—ள்: முன்னம்—முன்னாளில், மேதாவி கொண்ட கதிர் வெய்யவனை—புத்தியுடையனுந்தன்மைபொருந்திய கிரணங்களைப்பரப்புகின்ற சூரியனை, வெம் சூர் சேய்—கொடிய சூரபன்மனதுபுதல்வனுகிய பானுகோபன், வலிந்து சிறை செய்திடலின்—வலாற்காரமாகப்பிடித்துச் சிறைப்படுத்துதலால், இன்னம் ஏது

ஆம் கொல் என எண்ணி—இன்னும் யாதுநிகழுமோவென்று ஆலோசித்து, அவன் என்றாழ்—அச்சூரியனுடைய கிரணங்கள், வாதாயனங்கள் தொறும் வந்து புகல் இன்று—சாளரவாயில்கடோறும்வந்து நுழைதலில்லை எ—று.

மேதாவி வாதாயனம்-வடசொற்கள். வாத+அயனம்=வாதாயனம். காற்றுட்புகுதற்குரியவழி. இனம்-தொகுத்தல். இனியுட்புகின் முன்னையினும்பெரிதான இடர் நேருமென்றுசிந்தித்தெனபார் 'எதாமினங்கொலெனவெண்ணி' என்றார். இச்செய்யுளாற்சூரியனும் அசுரர்க்கஞ்சிநடத்தல் குறிக்கப்பட்டது. (௪எ)

தேசுற்ற மாடமுறை சீப்பவரு காலோன்
வாசப் புனற்கலவை வார்புணரி கொண்கன்
வீசப் புலர்த்தியிட விண்படரும் வெய்யோ
னாசுற்ற தானவ ரமர்ந்திவ ணிருந்தார்.

இ—ள்: வரு காலோன்—வருகின்ற வாயுதேவன், தேசு உற்ற மாடம் முறை சீப்ப- ஒளிபொருந்திய மாடங்களை முறையேபெருக்க, வார் புணரி கொண்கன்—நீண்டசமுத்திரத்திற்குத்தலைவனாகியவருணன், வாசப்புனல் கலவை வீச—பனிநீரிற்கரைத்த சந்தனக்குழம்பைத்தெளிக்க, விண் படரும் வெய்யோன்—ஆகாயமார்க்கமாகச்செல்லுகின்ற சூரியன், புலர்த்திட—அவ்விடங்களையுலர்த்த, ஆசு உற்ற தானவர்—குற்றம்பொருந்திய அசுரர்கள், இவண் அமர்ந்து இருந்தார்—இந்நகரத்தில் வாழ்ந்திருந்தார்கள் எ-று.

வாசப்புனல்-பனிநீர். புனலுடன்கூடியகலவை எனவிரிக்க. இரத்தினமிழைக்கப்பட்டமையின் 'தேசுற்றமாடம்' எனவும், கெட்டமனமுஞ்செயலுமுடையவர்களாதலின் 'ஆசுற்றதானவர்' எனவும் கூறினார். (௪அ)

பால்கொண்ட தெண்கடன் மிசைப்பதுமை தன்னை
மால்கொண்டு கண்டுயிலும் வண்ணமிது வென்ன
மேல்கொண்ட நுண்பளித மேனில மதன்கட்
சூல்கொண்ட காரெழிலி மின்னினொடு துஞ்சும்.

இ—ள்: மால்—திருமால், பால் கொண்ட தெள் கடல் மிசை—பாலினாலாகிய தெளிந்தகடலின்மேல், பதுமை தன்னை கொண்டு—இலக்குமிதேவியையணைத்துக்கொண்டு, கண் துயிலும் வண்ணம் இது என்ன—நித்திரைசெய்யுந்தன்மையிதுவென்று கண்டோர்சொல்லும்படி, மேல் கொண்ட நுண் பளித மேல் நிலம் அதன் கண்—மேன்மைபொருந்திய நுண்மையான கருப்பூரந்தீற்றிய மேல்வீட்டின்மேல், சூல் கொண்ட கார் எழிலி—கருக்கொண்ட கரியமேகம், மின்னினொடு துஞ்சும்—மின்னலோடுகூடப்படிந்திருக்கும் எ—று.

படிகமேனிலமெனப்பாடமாயின் பளிங்கினாற்செய்யப்பட்ட மேல்வீடென்க. பதுமை-தாமரையாசனத்திலிருப்பவள். வெள்ளைமாளிகைக்குப்பாற்கடலும் மேகத்திற்குத்திருமாலும் மின்னலுக்கு இலக்குமியுமுவமை. (௪௯)

வேறு.

குழலி னோதையு மெழால்களி னோதையுங் குறிக்கும்
வழுவில் கோட்டொடு காகளை வோதையு மற்றை
முழவி னோதையும் பாடுந ரோதையு முடிவில்
விழவி னோதையுந் தெண்டிரை யோதையின் மிகுமால்.

இ—ள்: குழலின் ஓதையும்—வேய்ங்குழலினோசையும், எழால்களின் ஓதையும்—யாழ்களினொலியும், குறிக்கும் வழு இல் கோட்டொடு காகள ஓதையு

ம்-குறிப்பிட்டூதுகின்ற குற்றமற்றகொம்பும் காகளமுமாகிய இவற்றின் ஓசையும், முழவின் ஓதையும்—முரசவாத்தியத்தினோசையும், பாடுநர் ஓதையும்—பாடல்களைப்பாடுகின்றவர்களது ஓசையும், முடிவு இல் விழவின் ஓதையும்—அளவிறந்த விழாக்கொண்டாட்டங்களினோசையும், தெள் திரை ஓதையின் மிகும்—தெளிந்த திரைபொருந்திய கடலினோசையினுமதிகமாம் எ—று.

வெற்றிமுதலியகாரணங்களைக்கருதி ஒலிக்கப்படுகின்றவென்பார் 'குறிக்கும்' என்றார். பாடுநர்-மிடற்றாற்பாடுகின்றவர்கள். விழவு-மணமுதலியன. மற்றை-அசை. (௫௦)

மதனி ழுக்குறு மைந்தரு மாதரும் வனமா
மதனி ழுக்கிய வீதியில் வீசும்வண் கலவை
பதனி ழுக்குறச் சேதக மாகுமீன் பலவும்
பதனி ழுக்கிய வாந்தினம் புனைந்தெறி பணிகள்.

இ—ள்: மதன் இழுக்கு உறும் மைந்தரும் மாதரும்—மன்மதனும்வசையெய்தக்கூடிய (அழகிற்சிறந்த) ஆடவர்களும் பெண்களும், வன மா மதன் இழுக்கிய வீதியில்—காட்டில்வாழுமியல்பையுடையயானைகளின் மதநீர்சிந்தப்பெற்ற வீதிகளில், வீசும் வண் கலவை—வீசிவிளையாடிய வளமார்ந்தசந்தனக்குழம்பு, பதன் இழுக்கு உற சேதகம் ஆகும்—கால்கள்வழுக்கும்படி சேறாயிருக்கும், தினம் புனைந்து எறி பணிகள்—(இந்நகரார்)தினந்தோறுந்தரித்துக்கழித்தெறிந்தஆபரணங்கள், மீன் பலவும் பதன் இழுக்கிய ஆம்—நட்சத்திரங்கள்பலவும் தங்களிருப்பிடத்தினின்று தவறிவீழ்ந்திருப்பனபோலும் எ—று.

மதம் பதம் என்பனபோலியாயின. மன்மதனிலுஞ்சிறந்தஅழகுள்ளவென்பார் 'மதனிழுக்குறும்' எனவும், பெருஞ்சேறுமென்பார் 'பதனிழுக்குறச்சேதகமாகும்' எனவும், கழித்தஆபரணங்களின்சிறப்புத்தோன்ற 'மீன்பலவும்பதனிழுக்கியவாம்' எனவும், வேண்டியகந்தப்பொருள்களெல்லாங் குறைவறக்கலக்கப்பெற்றமையால் 'வண்கலவை' எனவும் கூறினார். கலவை-சந்தனத்துடன் பலவகைச்சுகந்தப்பொருள்கள்கலந்த குழம்பு. பலவுமென்றஉம்மைமுற்று. இச்செய்யுளால் அந்நகரத்தாரதுவளப்பெருக்குவருணிக்கப்பட்டது. (௫௧)

அளப்பில் வேட்கையங் கொருவர்கண் வைத்துமற் றதனை
வெளிப்ப டுக்கிலர் மெலிதலுங் குறிகளே விளம்ப
வொளிப்ப தென்னுளம் பகரென வாற்றலா துடைந்து
கிளிப்பெ டைக்கிருந் தொருசில மடந்தையர் கிளப்பார்.

இ—ள்: ஒருசில மடந்தையர்—சிலபெண்கள், ஒருவர்கண் அளப்பு இல் வேட்கை வைத்து—ஒருஆடவரிடத்து அளவிறந்தகாதலைவைத்து, அதனை வெளிப்படுக்கிலர் மெலிதலும்—அதனைப்பிறர்க்குவெளிப்படுத்தாது (அடக்கிக்கொண்டு) வாட்டமடைய, குறிகளே விளம்ப—அவரதுகருத்தைஅவரிடத்துண்டாகியகுறிகளேதெரிவிக்க, உளம்—மனமே!, ஒளிப்பது என்—எண்ணியதைமறைத்துவைத்திருக்கவேண்டியகாரணம்யாது?, பகர் என—வெளிப்படுத்திச்சொல்வாயென்றுகூறி, ஆற்றலாது உடைந்து—சகிக்கமாட்டாமல்வருந்தி, கிளிப்பெடைக்கு இருந்து கிளப்பார்—பெண்கிளிக்குமுன்னிருந்து சொல்வார்கள் எ—று.

குறி-முகக்குறிமுதலியன. அகத்திலடக்கிக்கொள்ளஇயலாமையாற் கூறினரென்பார் 'ஆற்றலாதுடைந்துகிளப்பார்' என்றார். இச்செய்யுளால் அந்நகர்ப்பெண்களின் காமமிகுதிவருணிக்கப்பட்டது. (௫௨)

குருளை மான்பிணித் திளஞ்சிறு ரூர்ந்திடுங் கொடித்தே
ருருளை யொண்பொனை மணித்தலங் கவர்ந்துகொண் டுறுவ
வெருளின் மாக்களை வெறுப்பதென் முனிவரும் விழைவார்
பொருளி னாசையை நீங்கினர் யாவரே புவியில்.

இ—ள்: இளம் சிறார்—இளம்பிராயத்தையுடைய சிறுவர்கள், குருளை மான் பிணித்து ஊர்ந்திடும்—குதிரைக்குட்டிகளைப்பூட்டிச்செலுத்துகின்ற, கொடி தேர் உருளை—கொடிகட்டப்பெற்றதேரினுருளையிலுள்ள, ஒள் பொன்னை—சிறந்தபொன்னை, மணித்தலம் கவர்ந்து கொண்டு உறுவ—மாணிக்கநிலங்கள் கவர்ந்துகொண்டிருப்பன, வெருளின் மாக்களை வெறுப்பது என்—அறியாமையையுடையமனிதர்களை வெறுப்பதுஎதற்காக?, முனிவரும் விழைவார்—முனிவர்களும் ஆசைப்படுவார்கள், புவியில்—இந்நிலவுலகத்தில், பொருளின் ஆசையை நீங்கினர் யாவர்—பொன்னாசையைநீக்கியிருப்பவர்எவர்?, (ஒருவருமில்லை) எ—று.

உம்மை சிறப்பு. சிறுவர்கள் தேர்களைச்செலுத்தும்போது அவற்றினுருளைகளுரைதலால் அந்நகரிலுள்ளமாணிக்கநிலங்களும் பொன்னிறத்தைப்பெற்றன, ஆதலின், முற்றத்துறந்த முனிவர்தாமும் பொன்னைக்கண்டுழி ஆசைகொள்வர், அறிவிலிகளாகிய ஏனைமாந்தர் ஆசைப்படுவதுபுதுமையன்று என்பதுகருத்து. இந்த நிதர்சனத்தாற் பொன்னினருமைபெருமைகளும் மகேந்திரநகரின்செல்வப்பெருக்கும் வருணிக்கப்பட்டன. (௫௩)

விழைவு மாற்றிய தவத்தின ரேனுமிவ் வெறுக்கை
மொழியி னோரினு மவுணரா கத்தவ முயல்வா
ரொழியு மேனையர் செய்கையை யுரைப்பதென் னுலகிற்
கழிபெ ரும்பக னோற்றவ ரேயிது காண்பார்.

இ—ள்: விழைவு மாற்றிய தவத்தினரேனும்—ஆசையையடக்கிய முனிவர்களாயிருந்தாலும், இவ் வெறுக்கை மொழியின் ஓரினும்—இந்தச்செல்வத்தைச் சொல்லக்கேட்டறிந்தாலும், அவுணர் ஆக தவம் முயல்வார்—அசுரராகப்பிறக்கும்படி தவஞ்செய்வார்கள், ஒழியும் ஏனையர் செய்கையை உரைப்பது என்—அவரல்லாத மற்றையோரதுசெயலைச் சொல்லவேண்டுவதென்ன?, உலகில் கழி பெரும் பகல் நோற்றவரே இது காண்பார்—இந்நிலவுலகத்தில் அளவிறந்தகாலந் தவஞ்செய்தவர்களே இச்செல்வத்தைக்காணத்தக்கவர்கள் எ—று.

உம்மைகள்-சிறப்பு- எ-பிரிநிலை. முனிவர் சொல்லக்கேட்டவுடனே அளவுகடந்தஆசைகொண்டு முத்தியின்பத்தைப்பெறும்பொருட்டுமுயலுந்தவத்தை இடையில்விடுத்து இவ்வளத்தைப்பெறும்பொருட்டுத்தவஞ்செய்வார் என்பது முற்றொடர்க்கருத்து. சொல்லக்கேட்டுழிஇங்ஙனமாமேற் கண்ணுற்கண்டுழியெங்ஙனமாமென்பதும் முற்றத்துறந்த முனிவரியல்பு இவ்வாறுமேல் ஏனையர்திறமெவ்வாறுமென்பதும் இந்நகர்வளத்தைக்காணுதற்கேகழிபெரும்பகல்நோற்கவேண்டுமாயின் அனுபவித்தற்கு யாதுசெய்தல்வேண்டுமென்பதும் ஊகிக்கற்பாலன.()

குழவி வான்மதிக் கிம்புரி மருப்புடைக் கொண்மூ
விழுமெ னச்சொரி தானநீ ராறுபோ லேகி
மழலை மென்சிறா ராவணத் தாடும்வண் சுண்ணப்
புழுதி யீண்டலின் வறப்பவான் கங்கையும் புலர்.

இ—ள்: வான் குழவி மதி கிம்புரி மருப்பு உடை கொண்மூ—ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற இளம்பிறையைநிகர்த்த கிம்புரிப்பூணையணிந்த கொம்புகளையுடை

யயானைகள், இழும் என சொரி தான நீர்—இழுமென்னுங்குறிப்பொலியுடன் சொரிந்த மதநீர், ஆறுபோல் எகி—யாறுபோலப்பெருகி, மழலை மென் சிறார் ஆவணத்து ஆடும் வண் சுண்ண புழுதி ஈண்டலின்—குதலைவார்த்தைதையைப்பேசுகின்ற இளம்பாலகர்கள் வீதிகளில் வீசிவிளையாடிய வளமார்ந்தபொற்சுண்ணமாகிய புழுதிசெறிதலினால், வான் கங்கையும் புலர—ஆகாயகங்கையும்வற்ற, வறப்ப—வற்றுவன எ—று.

இளம்பிறை மருப்பிற்குவமை. கொண்மூ-ஆகுபெயர். வீசும்போதுமேற்சென்றசுண்ணத்தால் ஆகாயகங்கையும் கீழேபரந்தசுண்ணத்தால் மதநீராறும் புலர்வனவெனக. இச்செய்யுளால் மதநீர்ப்பெருக்கும் பொற்சுண்ணத்தின்மிகுதியுங் குறிக்கப்பட்டன. (ருரு)

கங்கை யூண்பய ளுகவுந் தூயதெண் கடனீ
ரங்கண் மாநகர்ப் பரிசன மாடவு மணைந்து
துங்க மேனிலை மாளிகை யாவணஞ் சோலை
யெங்கும் வாவியும் பொய்கையும் பிறவுமா யீண்டும்.

இ—ள்: கங்கை ஊண் பயன் ஆகவும்—கங்கைநீர் பருகுஞ்சலமாகவும், தூய தெள் கடல் நீர் அங்கண் மா நகர் பரிசனம் ஆடவும்—தெளிந்தநன்னீர்க்கடல் இடமகன்ற பெரியநகரத்தில்வாழுகின்றசனங்கள்ஆடும் நீராகவும், அணைந்து—வந்து, துங்க மேல் நிலை மாளிகை—உயர்ச்சிபொருந்திய மேன்மாளிகைகளும், ஆவணம்—வீதிகளும், சோலை—சோலையுமாகிய, எங்கும்—எல்லாவிடங்களிலும், வாவியும் பொய்கையும் பிறவும் ஆய்—வாவிகளும் தடாகங்களும் பிறவுமாக, ஈண்டும்—நெருங்கும் எ—று.

பயம் பயனெனப்போலியாயிற்று. அணைந்து ஈண்டும் எனஇயையும். பிற-கிணறுமுதலியன. (ருசு)

வில்லி யற்றுவோர் வாட்படை யியற்றுவோர் வேறு
மெல்லை யில்படை யுள்ளவு மியற்றுவோ ரிகலான்
மல்லி யற்றுவோர் மாயம தியற்றுவோர் மனுவின்
சொல்லி யற்றுவோர் கண்ணுறு புலந்தொறுந் தொகுமால்.

இ—ள்: வில் இயற்றுவோர்—விற்போரைப்பயிலுகின்றவர்களும், வாட்படை இயற்றுவோர்—வாட்போரைப்பயிலுகின்றவர்களும், வேறு ஆம் எல்லை இல் படை உள்ளவும் இயற்றுவோர்— வேறுள்ள அளவிறந்த படைவகைகளாற்செய்யும்போர்களைப்பயிலுகின்றவர்களும், இகலால் மல் இயற்றுவோர்—வலிமையோடுமற்போரைப் பயிலுகின்றவர்களும், மாயமது இயற்றுவோர்—மாயங்களைப்பயிலுகின்றவர்களும், மனுவின் சொல் இயற்றுவோர்—மந்திரஉச்சாரணத்தைப் பயிலுகின்றவர்களும் (ஆகியஇவர்தொகுதி), கண் உறு புலம் தொறும் தொகும்—கண்ணுக்கெட்டியவிடங்களெங்கும் தொகுதியாயிருக்கும் எ—று.

மனுவின்சொல் என்றது தெய்வப்படைகளைப்பூசித்தல்ஏவுதல் முதலியவற்றிற்குரியமந்திரவிதிகளை. ஒருவர்க்கொருவர் இளையாதவலியோடுநின்று பொருதலின் 'இகலான்மல்லியற்றுவோர்' என்றார். (ருஎ)

நாடி மேலெழத் தசையிலா துலறியே நரையாய்க்
கோடு பற்றிமுத் தசைந்திடு வோரையுங் கூற்றால்
வீடு வோரையும் பிணியுழப் போரையு மிடியால்
வாடு வோரையுங் கண்டில மிதுதவ வலியே.

இ—ள்: நாடி மேல் எழ—நரம்புகள்வெளிப்பட்டுத்தோன்ற, தசை இலாது உலறி—தசைப்பற்றின்றிக்காய்ந்து, நரை ஆய்—மயிர்கள்நரைக்கப்பெற்று, கோ

டு பற்றி—தண்டைப்பிடித்து, மூத்து அசைந்திடுவோரையும்-வயதான் முதிர்ந்து தள்ளாடுகின்றவர்களையும், கூற்றால் வீடுவோரையும்—யமனுலிறப்பவர்களையும், பிணி உழப்போரையும்—நோயையனுபவிப்பவர்களையும், மிடியால் வாடுவோரையும்—வறுமையால்வருந்துகின்றவர்களையும், கண்டிலம்—காணப்பெற்றிலோம், இது தவ வலியே—இது தவத்தினுற்கிடைத்தவலிமையேயாம் எ—று.

தவவலியால் இவையொன்றுமின்றி வாழ்கின்றுரென்பதாம். பின்னைய ஏ-தேற்றம். (கஅ)

கன்னன் மாண்பயன் வாலளை நெய்கடுந் தேற
றுன்னு தீயபா லளக்கர்தம் பேருருச் சுருக்கி
மன்ன னுணையா லிந்நகர் மனைதொறு மருவிப்
பன்னெ டுங்குள னுகியே தனித்தனி பயில்வ.

இ—ள்: கன்னல் மாண் பயன் வால் அளை நெய் கடும் தேறல் துன்னு தீய பால் அளக்கர்—கரும்பினின்றெடுக்கப்பட்ட மாட்சிமைபொருந்திய சாறும் வெண்மையாகியதயிரும் நெய்யும் கொடியகள்ளும் செறிந்த இனிமையாகிய பாலும் ஆகிய சமுத்திரங்கள், மன்னன் ஆணையால்—சூரபன்மனது கட்டளையினுல், தம் பேர் உரு சுருக்கி—தங்கள்பெரியவடிவங்களைச் சிறியனவாக்கி, இ நகர் மனைதொறும் மருவி—இந்நகரத்திலுள்ள வீடுகடோறும்வந்து, பல் நெடும் குளன் ஆகி-பலவகையான நெடியகுளங்களாகி, தனித்தனி பயில்வ—வெவ்வேருக அமைந்திருப்பன எ—று.

இனிமைமிக்கதாதலின் 'மாண்பயன்' எனவும், பருகினுரை மயக்குவதாதலின் 'கடுந்தேறல்' எனவும், ஒவ்வொருமனையினுமமைதலின் 'பன்னெடுங்குளனுகி' எனவும் கூறினுர். (கக)

அட்ட தேறலு மடாதமை தேறலு மருந்திப்
பட்டு வார்துகில் கிறியே தம்மொடு பறைந்து
விட்ட நாணினே ரொருசில மடந்தையர் வியன்கை
கொட்டி யாவரும் விழைவுறக் குரவையாட் டயர்வார்.

இ—ள்: ஒரு சில மடந்தையர்—சில அசுரப்பெண்கள், அட்ட தேறலும் அடாது அமை தேறலும் அருந்தி-காய்ச்சப்பெற்றகள்ளையும் காய்ச்சப்பெறுதகள்ளையும்பருகி, பட்டு வார் துகில் கீறி—(களிப்புமிகுதியால்) தாமணிந்தநீண்டபட்டுவஸ்திரத்தைக்கிழித்து, தம்மொடு பறைந்து—தம்மொடுதாம்பேசி, விட்ட நாணினேர்-வெட்கம்நீங்கியவர்களாய், வியன் கை கொட்டி—பெரிய கையைத்தட்டி, யாவரும் விழைவுற—அனைவரும்விரும்பிப்பார்க்கும்படி, குரவையாட்டு அயர்வார்—கைகோத்தாடலைச்செய்வார்கள் எ—று.

காய்ச்சியகள்ளை இக்காலத்திற்சாராயமெனவழங்குவர். (௨0)

திலக வாணுதன் மாதரா டவர்சிறு வரையி
னலகி லாமுறை புனைதலி னணிந்தணிந் தகற்று
மிலகு பூண்டுகின் மாலைகந் தம்பிற வீண்டி
யுலகில் விண்ணக மெனச்சிறந் தாவண முறுமே.

இ—ள்: திலக வாள் நுதல் மாதர்—பொட்டிட்டப்பெற்றஒளிபொருந்திய நெற்றியையுடைய பெண்களும், ஆடவர்—காளையர்களும், சிறுவரையின் அலகு இலா முறை புனைதலின்—ஒவ்வொருமாத்திரைப்பொழுதினுள்ளும்அளவிறந்த முறை அலங்கரித்தலால், அணிந்து அணிந்து அகற்றும்—அக்காலங்களிற்றரித்து த்தரித்துக் கழித்த, இலகு பூண்—விளங்குகின்ற ஆபரணங்களும், துகில்—வ

ஸ்திரங்களும், மாலை — மலர்மாலைகளும், சந்தம்—வாசனைத்திரவியங்களும், பிற—மற்றும்பொருள்களும், ஈண்டி — நெருங்கப்பெற்ற, உலகில் விண் நகர் என சிறந்து—நிலவுலகத்திலுள்ள சுவர்க்கலோகம்போலச்சிறப்புற்று, ஆவணம் உறும்—(இந்நகரிலுள்ள) வீதிகள் பொருந்தும் எ—று.

பூலைதலின் ஈண்டி உறும் என இயையும். செல்வத்தான்மிகுத்தலாற்சுவர்க்கலோகத்தையுவமித்தார். ஈண்டியென்னுமெச்சம் எதுப்பொருட்டு. (௬௧)

கொய்த லர்ந்தபூ நித்தில மணியுடன் கொழித்துப்
பொய்த லாடுவார் முற்றிலா லெற்றுபொற் பூழி
யெய்த லானதிந் நகரள வோகட லிகந்து
நெய்த லங்கரைக் கானலை யடைந்துமே னிமிரும்.

இ—ள்: கொய்து அலர்ந்த பூ—கொய்யப்பட்டனவாய் மலர்ந்திருக்கின்ற பூக்களையும், நித்திலம்—முத்துக்களையும், மணியுடன் கொழித்து—இரத்தினங்களையும்கொழித்து, பொய்தல் ஆடுவார்—பொய்தல்விளையாடலைச்செய்யும் பெண்கள், முற்றிலால் எற்று பொன் பூழி—சுளகினுல்வீசுகின்ற பொற்புழுதியானது, எய்தலானது இ நகர் அளவோ—பரக்கப்பெறுவது இந்த மகேந்திரநகரின் மாத்திரமா!, கடல் இகந்து—(இந்நகரைச்சூழ்ந்திருக்கின்ற) கடலையுங்கடந்து, நெய்தலம் கரை கானலை அடைந்து—நெய்தனிலமென்னும்பெயர்பெற்ற கடற்கரையைச்சார்ந்தகழிநிலத்தையணுகி, மேல் நிமிரும்— அப்பாற்செல்லும் எ—று.

சிறுமியர்கள் மண் கல் முதலியவற்றைச் சிறியசுளகினுற் கொழித்துவிளையாடுதல்போல அந்நகரிலுள்ள அசுரச்சிறுமியர் மலர்களையும் முத்துக்களையும் இரத்தினங்களையும் கொழித்துவிளையாடினர். அங்ஙனம்விளையாடும்பொழுது சுளகாலெற்றப்பட்ட பொற்பூழிகள் மகேந்திரநகர்முழுவதும்பரந்து அதனைச்சூழ்ந்தகடலினும்போய் அப்பாலுஞ்சென்றன என்பதாம். இச்செய்யுளால் அந்நகரின்செல்வமிகுதி குறிக்கப்பட்டது. (௬௨)

சுந்த ரங்கெழு செய்யவெண் மலர்களாற் றொடுத்த
கந்து கங்களைச் சிறுவர்கள் கரங்களி னேந்தி
யந்த ரம்புக வெறிதலு மாங்கன மேகி
வந்து வீழுமா லிருகதிர் வழுக்கிவீழ் வனபோல்.

இ—ள்: சுந்தரம் கெழு செய்ய வெண் மலர்களால் தொடுத்த—அழகுவிளங்குகின்ற செந்நிறப்பூக்களாலும் வெண்ணிறப்பூக்களாலும் முறையே தொடுக்கப்பெற்ற, கந்துகங்களை—பந்துகளை, சிறுவர்கள் கரங்களின் ஏந்தி—இந்நகரிலுள்ள பாலர்கள் கைகளிலெடுத்தேந்தி, அந்தரம் புக எறிதலும்—ஆகாயத்திற்செல்லும்படி எறிய, ஆங்ஙனம் ஏகி—அவை அங்கேபோய், இரு கதிர் வழுக்கி வீழ்வன போல்—சூரியனுஞ்சந்திரனுமாகிய இரண்டுமண்டலங்களுந்தவறிவீழுந்தாற்போல, வந்து வீழும்—மீண்டுவந்துவிழும் எ—று.

செந்நிறப்பூம்பந்துவீழ்தல் சூரியமண்டலம்வீழ்தலையும் வெண்ணிறப்பூம்பந்துவீழ்தல் சந்திரமண்டலம்வீழ்தலையும் நிகர்க்குமென்க. (௬௩)

கழக மீதுமுன் போந்திட முதுகணக் காயர்
குழகு மென்சிறார் தனித்தனி வந்தனர் குறுகிப்
பழகு கற்பினால் பயின்றனர் மாலையிற் பட்ட
வழகு சேர்மதிப் பின்னெழு கணங்கண்மொய்த் தனையார்.

இ—ள்: முதா கணக்காயர்—அறிவான்முதிர்ந்த உபாத்தியாயர், கழக மீது முன் போந்திட—வித்தியாசாலைகளில் முதலில்வந்தசேர, குழகு மென் சிறார்—அழகிய சிறுபிராயத்தையுடையபுதல்வர்கள். தனித்தனி வந்தனர் குறுகி—வேறு வேறாகவந்துசேர்ந்து, மாலையில் பட்ட அழகு சேர் மதி பின்—மாலைக்காலத்தி லுதித்த அழகுநிறைந்த சந்திரனுக்குப்பின், எழு கணங்கள் மொய்த்து அனையார்— உதிக்கின்றநட்சத்திரங்கள் மொய்த்தாற்போன்ற தன்மையையுடையவராய், பழகு கற்பின் நூல் பயின்றனர்—தினந்தோறும்பயிலுகின்ற வழக்கப்படி நூல்களைக்கற்றார்கள் எ—று.

குழகு-அழகு. நிறைமதியென்பார் 'அழகுசேர்மதி' என்றார். சந்திரனுதித்தவுடன் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக விரைவிற்றோன்றிச்செறிவதுபோல உபாத்தியாயர்வந்தவுடன் மாணக்கர்ஒவ்வொருவராய்விரைவில்வந்து கூடினரென்க. நிறைமதியையுவமைகூறியதனால் உபாத்தியாயரது குணமுதலியவைகளுங் குறிக்கப்பட்டன. முதுமை வயதானுமாம். (கூச)

கள்ளி னாற்றலாற் களிப்பவர் தேறலைக் கரத்திற்
கிள்ளை யாணினுக் கூட்டியே காமநோய் கிளர்த்தி
யுள்ள மோடிய சேவலு மிரங்கவோ திமத்துப்
புள்ளின் மென்பெடை மீமிசை கலந்திடப் புணர்ப்பார்.

இ—ள்: கள்ளின் ஆற்றலால் களிப்பவர்—தாம்பருகிய கள்ளின்வீறினாற் களிமயக்கமுற்றவர்கள்சிலர், தேறலை கள்ளை, கரத்தில் கிள்ளை ஆணினுக்கு ஊட்டி—கையிலுள்ள ஆண்கிளிக்குப்பருக்கி, காமநோய் கிளர்த்தி—காமநோயைமிகுவித்து, உள்ளம் ஓடிய சேவலும் இரங்க—மனம்பற்றியிருக்கின்ற சேவலன்னமும்வருந்த, ஓதிமத்து புள்ளின் மென் பெடை மீமிசை கலந்திட— மெல்லிய பெடையன்னப்பறவையின்மேற்சேரும்படி, புணர்ப்பார்-கூட்டுவார்கள் எ-று.

கூடும்படிவிரும்பிக்கொண்டிருந்தசேவலென்பார் 'உள்ளமோடியசேவல்' என்றார். இரங்குதல் தான்விரும்பியபெடையன்னத்துடன் வேற்றினத்தானை ச் சேர்ப்பித்தலால். உம்மை எச்சம். (கூரு)

உரத்தின் முன்னரே வெளிவந் தீட்டிய வும்பர்
சிரத்தின் மாமுடித் திருமணி பறித்தொரு சிலவ
ராத்த மேயதம் பங்கியிற் பஞ்சிக ளழுத்துப்
பரத்தை மாரடிப் பாதுகைக் கணிபெறப் பதிப்பார்.

இ—ள்: ஒரு சிலவர்—சிலஅசுரர்கள், முன்னரே உரத்தில் வெளிவந்து ஈட்டிய—முற்காலத்தில் வலாற்காரமாகக்கவர்ந்துகொண்டுவந்துதொகுத்த, உம்பர் சிரத்தில் மா முடி—தேவர்களது தலைகளிற்றரிக்கப்பெற்றிருந்த சிறந்தகிரீடங்களிலுள்ள, திரு மணி-சிறந்த இரத்தினங்களை, பறித்து—பிரித்தெடுத்து, அரத்தம் மேய தம் பங்கியில் பஞ்சிகள் அழுத்தும் பரத்தைமார் அடி பாதுகைக்கு—சிவந்தநிறம்பொருந்திய தங்கள்குடுமிகளிற்செம்பஞ்சையழுத்துகின்ற கணிகைப்பெண்களதுகாலில்மாட்டப்படும் மிதியடிகளுக்கு, அணி பெற—அழகுபொருந்தும்படி, பதிப்பார்—அழுத்துவார்கள் எ--று.

பாதுகை-வடசொல். காலிலணியப்பெறுவதென்பதுபொருள். வலிந்து வெளியென்பார் 'உரத்தின்-வெளி' எனவும், ஊடனீங்கிக்கூடும்படிவணங்குந்தோறும் உதைக்கின்றவென்பார் 'அரத்தமேய தம்பங்கியிற் பஞ்சிகளழுத்தும்' எனவும்கூறினர். இச்செய்யுளால் அசுரர்கள் கணிகையர்மேல்வைக்குங்காதல் வருணிக்கப்பட்டது. (கூகூ)

தேவி மார்பலர் வருந்தவு மனையர்பாற் சேரா
ராவி போவது நினைகில ராகியே யயலார்
பாவை மார்தமை வெஃகியே பட்டிமை நெறியான்
மேவு வார்சிலர் காண்பதே யிதுவுமென் விழியே.

இ—ள்: சிலர்—சிலஅசுரர்கள், தேவிமார் பலர் வருந்தவும்—பலமனைவியர்கள் மனவருத்தங்கொள்ளவும், அனையர் பால் சேரார்—அவர்களுடன்புணராதவர்களாய், ஆவி போவதும் நினைகிலர் ஆகி—அதனால் அவர்களதுஉயிர்பிரியுமென்பதையுஞ்சிந்தியாதவர்களாய், அயலார் பாவைமார் தமை வெஃகி-பிறர்பெண்களைவிரும்பி, பட்டிமை நெறியால் மேவுவார்—களவிற்புணர்வார்கள், இதுவும் என் விழி காண்பதே—இந்தஎளியசெயலையும் என்னுடையகண்கள்காணுகின்றனவே! எ—று.

முன்னையஉம்மைகள் சிறப்பு. பின்னையஉம்மை இழிவு. காண்பதே என்பதில் ஏ-இரக்கம். பேரழகுடையராய பலமனைவியர் தம்மைப்புணரவேண்டுமென்று பேராவல்கொண்டிருப்பவும், அவரைவிரும்பாது பிறபெண்களைக்கூடுவர் என்பதாம். கணவன் இனத்தார்முதலாயினோரறியாவண்ணமென்பார் 'பட்டிமைநெறியால்' என்றார். (கூஎ)

நெருக்கு பூண்முலை யியக்கர்தம் மங்கையர் நெஞ்ச
முருக்கு மேருடை யமரர்தம் மங்கைய ருளத்தி
னிரக்க நீங்கிய வவுணர்தம் மங்கைய ரேனை
யரக்கர் மங்கையர் கணிகைமங் கையர்களா யமர்வார்.

இ—ள்: நெருக்கு பூண் முலை இயக்கர் தம் மங்கையர்—ஒன்றையொன்று நெருக்குகின்ற ஆபரணங்களையணிந்த தனங்களையுடைய இயக்கப்பெண்களும், நெஞ்சம் உருக்கும் ஏர் உடை அமரர் தம் மங்கையர்—ஆடவர்களதுமனத்தை நெகிழ்ச்செய்கின்ற அழகையுடைய தேவப்பெண்களும், உளத்தின் இரக்கம் நீங்கிய அவுணர் தம் மங்கையர்—மனத்தில் இரக்கமில்லாத அசுரப்பெண்களும், ஏனை அரக்கர் மங்கையர்—ஒழிந்த இராக்கதப்பெண்களும், கணிகைமங்கையர்கள் ஆய் அமர்வார்—பரத்தைப்பெண்களாக (இந்நகரத்தில்)இருப்பார்கள் எ—று.

நெருக்கு முலை என இயையும். பூண்-முத்துவடமுதலியன. பேரழகுடையவென்பார் 'நெஞ்சமுருக்குமேருடை' என்றார். (கூஅ)

கந்த மானபல் களபமுஞ் சுண்ணமுங் கமழும்
பந்து மாலையுஞ் சிவிறிநீ ரொடுபரத் தையர்கண்
மைந்த ரோடெறிந் தாடல்யா ருளத்தையு மயக்கு
மிந்த வீதிகொ லுருவுகொண் டனங்கன்வீற் றிருத்தல்.

இ—ள்: கந்தம் ஆன பல் களபமும்—வாசனைகலந்த பலவகையான குழம்புகளையும், சுண்ணமும்—பொற்சுண்ணங்களையும், கமழும் பந்துமாலையும்—மணங்கமழுகின்ற பந்துவடிவான பூமாலைகளையும், சிவிறி நீரொடு—பனிநீரையும், பரத்தையர்கள் மைந்தரோடு எறிந்து ஆடல்—கணிகைப்பெண்கள் ஆடவர்களோடு வீசிவிளையாடுதல், யார் உளத்தையும் மயக்கும்—கண்டாரனைவருடையமனத்தையும் மயக்கும் (ஆதலின்), அனங்கன் உருவுகொண்டு வீற்றிருத்தல்—மன்மதன் உருவமெடுத்து அரசுசெய்திருப்பது, இந்த வீதி கொல்— இந்நகரத்திலுள்ள வீதிகள்தாம்போலும்! எ—று.

சந்தனத்தேய்வையுடன் பலவகையானகந்தங்களைக்கலக்கும்வகையாற் பலவகைக் குழம்புகளாயின. முற்றத்துறந்தாரையுமயக்குமென்பார் 'யாருளத்தையுமயக்கும்' என்றார். வீற்றிருத்தல்-பெருமையுடனிருத்தல். பெண்களைவிரும்பச்செய்

வது மன்மதனது தொழிலாதலால் இந்நகர்க்கணிகையர்வீதியை அவனரசுவீற்றிருக்குந்தானமாகக்கூறினர். மன்மதன் கட்பொறியால்வெந்துசாம்பராயபின் சிவபிரான் எழுப்பி இரதிக்குமாத்திரம்உருவமாகவும் ஏனையோர்க்கு அருவமாகவுந்தோற்றும்வண்ணம் அருள்புரிந்தாராதலின், அனங்கனென்னும்பெயர்பெற்றனனென்க. அருவமாயிருந்துநடத்துமாணையினும் உருவத்துடனிருந்துநடத்துமாணை சிறக்குமாதலின் உருவுகொண்டிருப்பதாகக்கூறினர். (௬௧)

பொன்னி னன்னமும் பதுமரா கம்புரை புறவுஞ்
செந்ந லங்கிளர் மஞ்ஞையுஞ் சாரிகைத் திறனும்
பன்னி றங்கெழு புள்ளின மினையன பலவு
மின்ன தொன்னகர் மங்கையர் கரந்தொறு மிருப்ப.

இ—ள்: பொன்னின் அன்னமும்—பொன்னிறமான அன்னப்பறவையும், பதுமராகம் புரை புறவும்—பதுமராகரத்தினத்தைப்போன்றநிறமமைந்த புறாவும், செம் நலம் கிளர் மஞ்ஞையும் சாரிகை திறனும்—சிவப்புநிறமான அழகுமிகுந்தமயிலும் நாகணவாய்ப்பறவைகளும், பல் நிறம் கெழு புள் இனம் இனையன பலவும்—பலவகையான நிறம்விளங்குகின்ற இவைபோன்ற பலபறவையினங்களும், இன்ன தொல் நகர் மங்கையர் கரம் தொறும இருப்ப—இந்தப்பழையநகரத்திலுள்ளபெண்களது கைகடோறுமிருப்பன எ—று.

புதுமையான நிறங்களையுடைய பறவைகளையேந்தியிருக்கின்றனரென்பதாம்.

பண்டு வேட்டவர் பின்முறைப் பாவையர் பரிவிற்
கண்டு பின்வரை மங்கையர் கானம தியற்றிக்
கொண்ட வில்வழிப் பாத்தையர் கணிகையர் குழாத்துள்
வண்டு பூவுறு தன்மைசென் றாடவர் மணப்பார்.

இ—ள்: பண்டு வேட்டவர்—முதலில்விவாகஞ்செய்தமனைவியரும், பின் முறை பாவையர்—பின் முறையாய்மணந்துகொண்ட மனைவியர்களும், பரிவில் கண்டு பின் வரை மங்கையர்—ஆசையோடு தனியித்திற்கண்டு பின்னர்மணஞ்செய்துகொண்ட மனைவியர்களும், கானமது இயற்றி கொண்ட இவ்வழி பாத்தையர்—கீதங்களைப்பாடுதலால் ஏற்றுக்கொண்ட இலலப்பாத்தையர்களும், கணிகையர்—வேசியர்களுமாகிய, குழாத்துள்—இக்கூட்டத்தாருள், ஆடவர்—புருடர்கள், வண்டு பூ உறு தன்மை சென்று—வண்டுகள் பூவில்மொய்க்குந்தன்மைபோலப் போய், மணப்பார்—கூடுவார்கள் எ—று.

பண்டுவேட்டவர்-முதன்மனைவியர். இவர்பெறும்புதல்வரே பெற்றோரது அதிகாரம்முதலியவற்றைப்பெறுதற்குரியர். பின்முறைப்பாவையர்-மைத்துனிமுறையாற்பின்வரையப்பட்டார். பரிவிற்கண்டுபின்வரைமங்கையர்-முற்கூறிய இருவகைமனைவியர்களுமிருப்பவும் கண்டுழிக்கொண்டவேட்கையாற்காந்தருவமுறைப்படி மணஞ்செய்துகொள்ளப்பட்டார். இல்வழிப்பாத்தையர்-பாத்தையர்குலத்தாளாய் ஒருவனுக்கேமனைவியாயிருப்பவள். கணிகையர்-பொருள்கொடுத்தன்முதலிய உபாயங்களாற் கூடும்பொதுப்பெண்கள். இவ்வைவகைத்தொகுதியுள் விரும்பியவாறேகூடுதலால் 'வண்டுபூவுறுதன்மைசென்றுமணப்பார்' என்றார். ()

தக்க மெல்லடிப் பரிபுர முழவுறத் தனமா
மிக்க தாளங்க ளொத்தமென் புள்ளிசை விரவ
விக்கு வேள்வை காணிய பூந்துகி லெழினி
பக்க நீக்கியே மைந்தரோ டாடுவார் பலரே.

இ—ள்: பலர்—பலபெண்கள், தக்க மெல் அடி பரிபுரம் முழவு உற—சிறந்தமென்மையான கால்களிலணிந்தசிலம்பு முரசுபோலொலிக்க, தனம் ஆம் மிக்க

தாளங்கள் ஒத்த—முலைகளாகிய பெரியதாளங்கள் ஆடவர்மார்பில் ஒற்ற, மென்புள் இசை விரவ—மென்மையான பறவைகளின் இசைஉண்டாக, இக்கு வேள் அவை காணிய—கருப்புவில்லையேந்திய மன்மதனது அத்தாணிமண்டபமாகிய அல்குல்தோன்றும்படி, பூ துகில் எழினி பக்கம் நீக்கி—பொலிவார்ந்த வஸ்திரமாகிய திரையைப்பக்கத்திலகற்றி, மைந்தரோடு ஆடுவார்—ஆடவருடன் கிரீடை செய்வார்கள் எ—று.

முழவு உற-முரசின் றன்மையையடைய. முழவு-ஆகுபெயர். கலவியாகியஆட்டத்திற்குச்சிலம்பொலிமுரசமாகவும் முலையொற்றுத்தாளமாகவும் பறவையொலிசின்னமாகவும் வருணிக்கப்பட்டன. இன்னிசையென்பார் 'மென்புள்ளிசை' என்றார். இக்குவேளவையென்பது குறிப்புமொழி. அல்குலை மன்மதனாசிருக்குமண்டபமாகவழங்குவது கவிஞரியல்பு. (எ௨)

பாட்ட மைந்திடு காளைய ரணிநலம் பாரா
வேட்டு மங்கைய ரொருசிலர் தமதுமெய் விளர்ப்பக்
கூட்ட முன்னியே பன்னிறக் கலையையுங் குழைத்துத்
தீட்டு வாரவ ருருவினை வியன்கிழி திருத்தி.

இ—ள்: மங்கையர் ஒரு சிலர்—சிலமங்கையர்கள், பாட்டு அமைந்திடு காளையர் அணி நலம் பாரா—புகழ்பொருந்திய சிலகாளையர்களது அழகினலத்தைப் பார்த்து, வேட்டு—விரும்பி, கூட்டம் உன்னி—அவருடன் கலவிசெய்யநினைந்து, தமது மெய் விளர்ப்ப—(கலவி நிகழாமையால்) தம்முடையமேனிவெளுப்பேற, பல் நிற கலையையும் குழைத்து—பலநிறங்களமைந்த கலைகளெல்லாவற்றையுங்குழைத்துவைத்து, வியன் கிழி திருத்தி—பெரிய வஸ்திரக்கிழியைச்செப்பனிட்டு, அவர் உருவினை தீட்டுவார்—அவர்களதுவடிவத்தையெழுதுவார்கள் எ—று.

காளையர்-இளம்பிராயமுடைய ஆடவர். வஸ்திரத்திற்கிழித்தெடுத்ததுண்டைக் கிழியெனவழங்குப. முற்காலத்தார் படந்தீட்டுங்கால வஸ்திரத்துண்டொன்றையெடுத்து லேபனங்களால் அழுத்தமுறச்செய்து பின் எண்ணியசித்திரங்களைப் பலநிறக்கலைகளாலெழுதுவதியல்பு. உருத்தீட்டுவது தூதியர்வழியாயனுப்பித் தம்மையலை அவர்க்குத்தெரிவித்தற்கென்க. (எ௩)

சுற்று விட்டலர் தாருடை வயவர்தொல் லுருவிற்
பற்று விட்டுட னுளத்தையும் விட்டுமென் பார்ப்பைப்
பெற்று விட்டிலாப் பெடைமயி றழீஇத்துயர் பேசி
யொற்று விட்டன ரொருசில ராறுபார்த் துழல்வார்.

இ—ள்: ஒரு சிலர்—சில அசுரப்பெண்கள், சுற்று விட்டு அலர் தார் உடை வயவர்—முகைவிண்டலரப்பெற்ற மலர்மாலையையணிந்த அசுரவீரர்களது, தொல் உருவில்—பழையவடிவத்தில், பற்று விட்டு—வேட்கையைச்செலுத்தி, உடன் உளத்தையும் விட்டு—உடனே மனத்தையுமேவி, மெல் பார்ப்பை பெற்று விட்டிலா பெடை மயில் தழீஇ துயர் பேசி—மெல்லியகுஞ்சைப்பெற்றுவிட்டுப்பிரியாதிருக்கின்ற மயிற்பெடையையணைத்துத் தமது துன்பத்தையுணர்த்தி, ஒற்று விட்டனர்—அவ்வீரர்பாற்றூதாகஅனுப்பி, ஆறு பார்த்து உழல்வார்—வழிபார்த்துநின்றுஉழலுவார்கள் எ—று.

பகற்பொழுதிற்கண்டவடிவமென்பார் 'தொல்லுரு' எனவும், முட்டையினின்று வெளிப்பட்டுச்சின்னாட்கடாமுஞ்செல்லப்பெறாதகுஞ்சென்பார் 'மென்பார்ப்பு' எனவும், நீ உனதுபார்ப்பைவிட்டகன்றாலெத்துணைத்துன்புறுவாயோ அத்துணைத்துன்பைஅடைகின்றோம் ஆதலால் நீயேசென்றுகூறி எமக்குமையல்

பூட்டியஆடவரைவருவிப்பாய் அதுகாறும் உனதுபார்ப்பை யாம் காத்துக்கொள்வோம் என்றின்னவாறுகூறித்தெருட்டியென்பார் 'துயர்பேசி' எனவும், தூது சென்றமயில் வரும்வழியை இடையிடையே நோக்கியென்பார் 'ஆறுபார்த்து' எனவும், பலமுறைநோக்கியுங்காணுமையால் மனஞ்சோர்வாரென்பார் 'உழல்வார்' எனவும் கூறினார். பார்ப்பைவிட்டுப்பிரியாதமயிலைத் தூதனுப்பியது விரைந்து வருதற்காக. (எ௪)

அகன்ற கொண்கரை நனவினெக் காலமு மகத்திற்
புகன்று மட்டித்த வெம்முலைச் சாந்தொடும் புலர்வார்
பகன்றை போன்முரல் சிலம்படிப் பாவையர் பல்லோர்
முகன்ற னிற்கரு மணிகளிற் சொரிதர முத்தம்.

இ—ள்: பகன்றைபோல் முரல் சிலம்பு அடி பாவையர் பல்லோர்—கிலுகிலுப்பையைப்போல ஒலிக்கின்ற சிலம்புகளையணிந்தகால்களையுடைய அசுரப்பெண்கள் பலர், அகன்ற கொண்கரை நனவின் எ காலமும் அகத்தில் புகன்று—தம்மைப்பிரிந்துசென்ற நாயகரை விழிப்பில் எல்லாக்காலத்தும் மனத்துள்நினைத்து, முகன் தனில் கரு மணிகளில் முத்தம் சொரிதர—முகத்திலுள்ள கருமணிகளினின்றும் நீர்த்துளிகள்சிந்த, வெம் முலை மட்டித்த சாந்தொடும் புலர்வார்—விரும்பத்தக்க தனங்களிலப்பியசந்தனக்குழம்புடன் புலர்வார்கள் எ—று.

புகலல்-விரும்பிநினைத்தல். முத்தம்-ஆகுபெயர். சாந்துபுலர்வதும் மேனிவாடுவதும் காமாக்கினிசொலித்தலால். விழித்திருக்குங்காலமுழுவதுமென்பார் 'நனவினெக்காலமும்' என்றார். (எ௫)

மங்கை மார்சில ராடவர் தம்மொடு மாடத்
துங்க மேனிலத் திடைப்படு சேக்கையிற் றுன்னி
வெங்கண் மெல்லிதழ் வேறுபட் டணிமுகம் வியர்ப்பக்
கங்கு லொண்பக லுணர்கிலர் விழைவொடு கலப்பார்.

இ—ள்: மங்கைமார் சிலர்—சிலமங்கையர்கள், ஆடவர் தம்மொடும்— ஆடவர்களுடன், மாட துங்க மேல் நிலத்து இடை படு சேக்கையில் துன்னி—மாடமாகக்கட்டப்பட்டிருக்கின்ற உயர்ந்த மேல்வீட்டிலுள்ள படுக்கையிற்பொருந்தி, வெம் கண் மெல் இதழ் வேறுபட்டு— கொடியகண்களும் மெல்லிய அதரங்களும் நிறமாறப்பெற்று, அணி முகம் வியர்ப்ப—அழகியமுகம் குறுவியர்வைகொள்ள, கங்குல் ஒள் பகல் உணர்கிலர்— இராக்காலத்தையும் விளங்குகின்ற பகற்காலத்தையுமறியாதவர்களாய், விழைவொடு கலப்பார்—ஆசைமிகுப்புணர்வார்கள் எ—று.

வியர்ப்பக்கலப்பார் என இயையும். ஆடவரைமயக்குவனவாதலின் 'வெங்கண்' எனவும், சூரியப்பிரகாசம்பொருந்தப்பெற்றபகலென்பார் 'ஒண்பகல்' எனவும், கழிபேரின்பத்தின் மூழ்கினவராய்க்கலந்தனரென்பார் 'கங்குலொண்பகலுணர்கிலர்-கலப்பார்' எனவும் கூறினார். கலவிசெய்தபெண்களுக்குக்கண்சிவத்தலும் இதழ்வெளுத்தலுமியல்பு. (எ௬)

மறிகொள் சோரிநீர் பலியுட னேக்கிநாண் மலர்தூ
யிறைகொ ளில்லிடைத் தெய்வதம் வழிபட வியற்றிப்
பறைக றங்கவக் கடவுளை யாற்றுறப் படுத்தி
வெறிய யர்ந்துநின் றுடுவ ரளப்பிலர் மின்னார்.

இ—ள்: அளப்பு இலர் மின்னார்—அளவிறந்த அசுரப்பெண்கள், மறி கொள் சோரி நீர் பலியுடன் நோக்கி-ஆட்டுகிடாவையறுத்தெடுத்த இரத்தநீரைப்பலிக

ளுடன்சேர்ந்து, நாள் மலர் தூய்--(அவற்றின்மேல்) அன்றலர்ந்த பூக்களைத்தூவி, இறை கொள் இல் இடை தெய்வதம் வழிபடல் இயற்றி— கோயிலின்கண்ணே தெய்வத்தைவழிபாடுசெய்து, பறை கறங்க—பறைகள் முழங்க, அ கடவுளை ஆற்றுற படுத்தி—அந்தத்தெய்வத்தை வழிப்படுத்தி, வெறி அயர்ந்து நின்று ஆடுவர்-சன்னதங்கொண்டுநின்றுஆடுவார்கள் எ—று.

பலி-நிவேதனங்கள். இறைகொளில்-தலைமைபொருந்திய இல். வழிப்படுத்தல்-தம்மேலாவேசிக்கச்செய்தல். (எஎ)

அலங்கல் வேல்விழி மாதரு மைந்தரு மமர்ந்த
பொலங்கொண் மாடமே லாடுறு பெருங்கொடி பொலிவ
மலங்கு சூழ்தரு தெண்டிரைப் புணரியில் வைகுங்
கலங்கண் மேவிய கூம்பெனக் காட்டிய வன்றே.

இ—ள்: அலங்கல் வேல் விழி மாதரும் மைந்தரும் அமர்ந்த பொலம் கொள் மாடமேல்—மாலையைத்தரித்த வேல்போலுங்கண்களையுடைய பெண்களும் ஆடவர்களுமிருக்கின்ற பொன்னுலாகிய மாடங்களின்மேல், ஆடுறு பெரும் கொடி பொலிவ—அசைகின்ற பெரிய கொடிகள் பொலியுந்தன்மை, மலங்கு சூழ்தரு தெள் திரை புணரியில் வைகும்—மலங்குமீன்கள்சூழுகின்ற தெளிந்ததிரைபொருந்திய கடலிற்றங்கிநிற்கின்ற, கலங்கள் மேவிய கூம்பு எண-மரக்கலங்களிற்பொருந்திய கூம்பைப்போல, காட்டிய--தோற்றியன எ—று.

அலங்கல் மாதர் என இயையும். மாடத்திற்குமரக்கலமும் கொடிக்குக்கூம்பும் உவமை. (எஅ)

புரசை வெங்கரி புரவிதேர் பொருபடைத் தலைவர்
பரிச னங்களா தோரணர் வாதுவர் பரவ
முரச மேமுத லியமெலா முன்னரே முழங்க
வரச வேழமா வெண்ணில கோயில்வந் தடைவ.

இ—ள்: புரசை வெம் கரி—கழுத்திடுகயிற்றையுடைய கொடியயானைகளும், புரவி—குதிரைகளும், தேர்—தேர்களும், பொரு படைத்தலைவர்—போர்செய்யவல்ல சேனைத்தலைவர்களும், பரிசனங்கள்—பரிவாரசனங்களும், ஆதோரணர்—யானைப்பாகர்களும், வாதுவர் பரவ—குதிரைப்பாகர்களுஞ்சூழ்ந்துவர, முரசம் முதல் இயம் எலாம் முன்னரே முழங்க—முரசுமுதலியவாத்தியங்களெல்லாம் முன்னே ஒலித்துச்செல்ல, அரச வேழ மா எண் இல— இராசயானைகள் அளவிறந்தன, கோயில் வந்து அடைவ—கோயிலில்வந்துசேர்வன எ—று.

ஏ-அசைநிலை. இராசமாளிகையின்வாயிலில் இராசயானைகள் வரிசையின்பொருட்டுக்கொணர்ந்துகட்டப்படுவனவென்க. எழுமுழஉயரமும் ஒன்பதுமுழநீளமும் பதின்மூன்றுமுழச்சுற்றுமுள்ளயானை இராசயானையெனப்படும். (எகூ)

கள்ளு றைத்திடு மாலையம் பங்கியர் கமஞ்சூல்
வள்ளு றைப்புயன் மேனிய ரொருசிலர் வார்வி
லொள்ளு றைப்படை பிறவினிற் கவரிதூங் குறுத்துத்
தள்ளு தற்கரும் வயமுரச் சறையமுன் சார்வார்.

இ—ள்: கள் உறைத்திடு மாலையம் பங்கியர்—தேன்சிந்துகின்ற மலர்மாலையையணிந்த குடுமியையுடையவர்களும், கமம் சூல் வள் உறை புயல் மேனியர்—நிறைந்தகருவையுடைய பெரிய நீர்த்தாரையைச்சிந்துகின்ற மேகத்தைப்போன்றகருநிறவடிவத்தையுடையவர்களுமாகிய, ஒரு சிலர்—சில அசுரவீரர்கள், வார் வி

ல் ஒள் உறை படை பிறவினில்—நீண்டவில்லினும் ஒளிபொருந்திய உறையில் வைக்கப்படுகின்ற பிறபடைக்கலங்களிலும், கவரி தூங்குறுத்து—சாமரைகளைத் தூக்கி, தள்ளுதற்கு அரும் வய முரசு அறைய—விலக்குதற்கரிய வெற்றிக்காக இயம்பப்படும்முரசம் முழங்க, முன் சார்வார்—முன்னே வருவார்கள் எ—று.

உறை-மழை. அன்றலர்ந்தமலர்களாற்றொடுக்கப்பெற்றமாலையென்பார் 'கள்ளுறைத்திடுமாலை' எனவும், எவராலுமறுக்கப்படாதவெற்றியென்பார் 'தள்ளுதற்கரும்வயம்' எனவும் கூறினார். சென்றவிடங்களிலுள்ள சிற்றரசர்களெல்லாம் பணிந்து இன்சொற்கூறியுபசரித்தபின் மீண்டு இந்நகரிலுள்ள தமதுமாளிகையைநோக்கிவருகின்றார்களென்பதுகுறிப்பு. படைகளிற் சாமரந்தூக்குவது வெற்றிக்கறிகுறியென்க. (௮௦)

அறுகு வெம்புலி வலியுடை மடங்கன்மா னாமாச்
சிறுகு கண்ணுடைக் கரிமரை யிரலையித் திறத்திற்
குறுகு மாக்களைப் படுத்தவற் றூன்வகைக் குவால்கண்
மறுகு ளார்பெறப் பண்டிகொண் டளப்பிலோர் வருவார்.

இ—ள்: அறுகு—யாளியும், வெம் புலி—கொடியபுலியும், வலி உடை மடங்கல்—வலிமையையுடைய சிங்கமும், மான்—மானும், ஆமா—காட்டுப்பசுவும், சிறுகு கண் உடை கரி—சிறுத்தகண்களையுடையயானையும், மரை—மரையும், இரலை—கலைமானும் ஆகிய, இ திறத்தில்—இவைமுதலியனவாக, குறுகும் மாக்களை—கிடைத்தமிருகங்களை, படுத்து—கொன்று, அவற்று ஊன் வகை குவால்கள்—அம்மிருகங்களின் தசைவருக்கங்களாகிய குவியல்களை, மறுகு உளார் பெற—வீதியிலுள்ளவர்கள்பெற்றுக்கொள்ளும்படி, பண்டி கொண்டு—வண்டியிலேற்றிக்கொண்டு, அளப்பிலோர் வருவார்—அளவிறந்தவர்கள் வருவார்கள் எ—று.

மிருகங்கட்கெல்லாமரசனாதலின் 'வலியுடைமடங்கல்' என்றார். மறுகுளார்பெற என்றமையான் ஒவ்வொருவீதிகளினுஞ்சென்று உரத்தஒலியுடன்கூறிக்கொடுத்துத்திரிவாரென்பது பெறப்பட்டது. (௮௧)

மஞ்சு லாவரு சிகரியுஞ் சூளிகை வரைப்பும்
விஞ்சு மேனில வடுக்கமுஞ் சோலையும் வெற்புஞ்
சஞ்ச ரீகமா ரோடையும் வாவியுந் தடமு
மெஞ்ச லில்லதோர் மாடங்க ளெங்கணு முளவே.

இ—ள்: மஞ்சு உலாவரு சிகரியும்—மேகங்களுலாவப்பெற்றகோபுரங்களும், சூளிகை வரைப்பும்—தூபிவைத்துக்கட்டப்பட்ட இடங்களும், விஞ்சும் மேல் நில அடுக்கமும்—பெரிய மேல்நிலங்களையுடைய அடுக்குவீடுகளும், சோலையும்—சோலைகளும், வெற்பும்—செய்குன்றுகளும், சஞ்சரீகம் ஆர் ஓடையும்—வண்டுகள் செறிந்த ஓடைகளும், வாவியும்—வாவிகளும், தடமும்—தடாகங்களும், எஞ்சல் இல்லது ஓர் மாடங்கள் எங்கணும் உள—குறைவில்லாதமாடங்களெல்லாவற்றினும் அமைந்திருக்கின்றன எ—று.

ஓடை-நீண்டவடிவானநீர்நிலை. வாவி-அகன்றும் நீண்டுமிருக்கின்ற பெரிய நீர்நிலை. தடம்-வட்டம் சதுரமுதலியவடிவுகளானமைந்த சிறியநீர்நிலை. மலர்கள் நிறைந்த ஓடையென்பார் 'சஞ்சரீகமாரோடை' என்றார். (௮௨)

எற்றி முன்செலு முரசினர் கம்பிய ரெல்லிற்
பற்று தீபிகைச் சுடரினர் மாலைதாழ் படைய
ரொற்றை முக்குடை யிருபுடைக் கவரிய ருலப்பில்
கொற்ற வீரரீண் டளப்பிலோர் வந்தனர் குலவி.

இ—ள்: எற்றி முன் செலும் முரசினர்—அடித்துக்கொண்டு முன்செல்லப்படுகின்ற முரசவாத்தியத்தையுடையவர்களும், கம்மியர் எல்லில் பற்று தீபிகை சுடரினர்—ஏவலாளர்களாற் பகற்காலத்திற்பிடிக்கப்படுகின்ற தீபச்சுடரையுடையவர்களும், மாலை தாழ் படையர்—மாலை தூங்கப்பெற்ற படைக்கலங்களையுடையவர்களும், ஒற்றை முக் குடை இரு புடை கவரியர்—ஒப்பற்ற மூன்றுகுடைகளையும் இருபக்கத்தும்வீசுகின்ற சாமரங்களையுமுடையவர்களும் ஆகிய, உலப்பு இல் கொற்ற வீரர் அளப்பு இலோர்—குறைதலில்லாதவெற்றியையுடைய வீரர்கள் அளவில்லாதவர்கள், குலவி—உல்லாசமாகி, ஈண்டு வந்தனர்— இந்நகரத்தில் வந்தார்கள் எ—று.

முரசவாத்தியமியம்பத் தீவர்த்திகள்பிரகாசிக்கக் குடைகள்கவிப்பச் சாமரங்கள்வீச வந்தனரென்க. தமக்குமேற்கவிப்பதும் இருபுடையுங் கவிப்பனவுமாகக் குடைகள்மூன்றாயின. இராசமரியாதைக்காகப்பகலிலுந் தீவர்த்திகளைப்பிடித்தனர்.

மண்ப டைத்திடு தவமெனு மகேந்திர மலிசீ
ரெண்ப டைத்தகண் ணிரண்டினர் காணுத லெளிதோ
விண்ப டைத்தவற் காயினு மமையுமோ மிகவுங்
கண்ப டைத்தவர்க் கன்றியே கண்டிட லாமோ.

இ—ள்: மண் படைத்திடு தவம் எனும் மகேந்திர மலி சீர்—பூவுலகஞ்செய்ததவத்தின்பயனென்றுசொல்லத்தக்க இந்தமகேந்திரநகரில் நிறைந்திருக்குஞ்சிறப்புக்களை, எண் படைத்த கண் இரண்டினர் காணுதல் எளிதோ—கணக்காகவமைந்த இரண்டுகண்களையுடையவர்கள் பார்த்துமுடித்தல் எளிதாகுமா?, விண் படைத்தவற்கு ஆயினும் அமையுமோ—சுவர்க்கலோகத்தைத்தனதாகப்பெற்றுக்கொண்ட இந்திரனுக்காயினும் அடங்குமா?, மிகவும் கண் படைத்தவர்க்கு அன்றி கண்டிடல் ஆமோ—அதிகமாகக்கண்களைப்பெற்றவர்களாலன்றி (ஏனையோரால்)பார்த்துமுடித்தல் கூடுமோ? எ—று.

ஓகாரங்கள் எதிர்மறை. ஆயிரங்கண்களையுடைய இந்திரனாலுங்கூடாதாகவே இரண்டுகண்களையுடையார் பார்த்துமுடிப்பதெங்ஙனம் என்பதாம். ஏனையுலகங்களிலுள்ளநகரங்களிலமையாத பெருஞ்சிறப்பைப்பெற்றுக்கொண்டமையால் 'மண்படைத்திடுதவமெனுமகேந்திரம்' எனவும், இரண்டுகண்களேசாமானியமாக அமைவதுநியதியாதலின் 'எண்படைத்தகண்ணிரண்டு' எனவும், ஆயிரத்தின்மேற்பட்ட கண்களையுடையாரென்பார் 'மிகவுங்கண்படைத்தவர்' எனவும் கூறினார்.()

வரம்பில் கட்புலங் கொண்டவ ரேனுமற் றிவ்வூர்
விரும்பி யித்திரு நோக்கினு மளத்தன்மே வருமோ
வரும்பு யற்குழ வைகலும் பருகினு மதனாற்
பெரும்பு னற்கட லானது முடிவுபெற் றிடுமோ.

இ—ள்: வரம்பு இல் கட்புலம் கொண்டவரேனும்—அளவிறந்த கண்களாகிய பொறியையுடையவராயிருந்தாலும், இவ் ஊர் விரும்பி இ திரு நோக்கினும்—இந்தநகரைவிரும்பி இங்குள்ளசிறப்புக்களெல்லாவற்றையும் பார்த்தாலும், அளத்தல் மேவருமோ—அளவிடுதல் கூடுமா?, அரும் புயல் குழு வைகலும் பருகினும்—சிறந்த மேகக்கூட்டங்கள் தினந்தோறும்பருகினாலும், அதனால்—அக்காரணத்தால், பெரும் புனல் கடல் ஆனது முடிவுபெற்றிடுமோ—மிகுந்தநீரையுடைய கடலானது வற்றுமா?(வற்றாதே) எ—று.

கண்களுக்குமேகமும் மகேந்திரச்சிறப்பிற்குக்கடலும் உவமை. பலமேகங்கள் பலநாட்களாகப்பருகினும் கடனீர் சிறிதும்வற்றாமைபோல, அளவிறந்தகண்களையுடையார்பலநாளாகப்பார்க்கினும் இந்நகர்ச்சிறப்புப்பார்த்துமுடியாது என்பதாம்.

கழியு மிந்நக ராக்கமோர் கரையில விவற்றுள்
விழிக ளெண்ணில பெற்றுளார் தாங்கண்ட வெறுக்கை
மொழிவ ரென்னினு நாவதொன் றான்முடிந் திடுமோ
வழிவி லாயிர கோடிநாப் பெறுவரே லறைவார்.

இ—ள்: கழியும் இ நகர் ஆக்கமோ கரை இல—சிறந்தஇந்தநகரத்திலுள்ள செல்வங்களோ அளவிறந்தன, இவற்றுள்—இந்தச்செல்வங்களுள், விழிகள் எண் இல பெற்று உளார் தாம் கண்ட வெறுக்கை மொழிவர் என்னினும்—அளவிறந்த கண்களைப்பெற்றிருப்பவர்கள் தாங்கள்கண்டசெல்வத்தைச் சொல்லத்தொடங்கு வாரானாலும், நாவது ஒன்றால் முடிந்திடுமோ-ஒருநாக்கினாற்சொல்லிமுடியுமா?, அழிவு இல் ஆயிரகோடி நா பெறுவரேல் அறைவார்—அழிவில்லாத ஆயிரகோடி நாக்குகளைப்பெற்றார்களேயானால் ஒருவாறுசொல்லிமுடிப்பார்கள் எ—று.

இவற்றுட்கண்ட எனஇயையும். ஓ-முன்னையது அசை. பின்னையது எதிர்மறை. அளவிறந்தகண்களைப்பெற்றாரும் முற்றுங்காணமாட்டாரென முற்செய்யுளிற்கூறியதற்கேற்ப அற்பமாகக்கண்டவென்பார் 'விழிகளெண்ணிலபெற்றுளார்தாங்கண்ட' எனவும், கண்டனவெல்லாவற்றையுங்கண்டபடியே கூறத்தக்கநாவென்பார் 'அழிவில்-நா' எனவும் கூறினார். பார்த்தற்கு அளவிறந்தகண்கள்வேண்டுவதுபோலவே சொல்லுதற்கும் அளவிறந்தநாக்கள்வேண்டுமென்பது தாற்பரியம். (௮௬)

வாழ்வின் மேதகு மகேந்திரப் பெருமித வளத்தைத்
தாழ்வி லாநெறி கண்டனர் தாலுவெண் ணிலவாற்
சூழ்வி னாடியே பகரினு மெய்யெலாந் துதையக்
கேள்வி மூலங்க ளில்லவ ரெங்ஙனங் கேட்பார்.

இ—ள்: வாழ்வின் மேதகும் மகேந்திர பெருமித வளத்தை—வாழ்க்கையினுள் மேம்பட்ட இந்தமகேந்திரநகரின்சிறந்தவளத்தை, தாழ்வு இலா நெறி கண்டனர்—(அளவிறந்தகண்களாற்) குறைவில்லாதபடிபார்த்தவர்கள், தாலு எண்ணில வால் சூழ்வின் நாடி பகரினும்—அளவிறந்த நாக்குகளால் ஆலோசனையோடுஆராய்ந்துகூறினாலும், மெய் எலாம் துதைய கேள்விமூலங்கள் இல்லவர்—சரீரமெங்கும்நெருக்கமாகக் காதுகளில்லாதவர்கள், எங்ஙனம் கேட்பார்—எவ்வாறுகேட்டுமுடிப்பார்கள்? எ—று.

கேள்விமூலம் கேட்டற்காதாரமானகருவி. கண்டனர்-வினையாலணையும் பெயர். நல்வாழ்வுக்கிடனானவென்பார் 'வாழ்வின்மேதகும்' எனவும், ஒன்றுந்தவறாமற்கண்டாரென்பார் 'தாழ்விலாநெறிகண்டனர்' எனவும், ஒன்றுந்தவறாது நினைத்தென்பார் 'சூழ்வினாடி' எனவும் கூறினார். காண அளவிறந்தகண்களும் கூற அளவிறந்தநாக்களும்வேண்டப்படுதல்போலவே கேட்கவும் அளவிறந்தகாதுகள்வேண்டும் என்பதாம். (௮௭)

ஆயி ரம்பதி னாயிரங் கோடிநா வளவி
லாயி ரம்விழி யாயிர மாயிரஞ் செவிக
ளாயி ரம்புந்தி கொண்டுளார்க் கல்லதிவ் வகன்சீ
ராயி ரம்புகங் கண்டுதேர்ந் துரைப்பினு மடங்கா.

இ—ள்: ஆயிரம் பதினாயிரம் கோடி நா—ஆயிரம் பதினாயிரம் கோடி என்னுங்கணக்குகளமைந்த நாக்குகளையும், அளவில் ஆயிரம் விழி—அனேகமாயிரங்கண்களையும், ஆயிரம் ஆயிரம் செவிகள்—அனேகமாயிரங்காதுகளையும், ஆயிரம் புந்தி—ஆயிரக்கணக்கானமனங்களையும், கொண்டு உளார்க்கு அல்லது—பெற்றுடையவர்களுக்கேயன்றி, இவ் அகன் சீர்—இந்தநகரத்தினது பரந்தசிறப்புக்கள், ஆயி

ரம் யுகம் கண்டு தேர்ந்து உரைப்பினும்—ஆயிரம்யுகம்வரைபார்த்து நினைத்துக் கூறினும், அடங்கா—அமையாவாம் எ—று.

சீர் அடங்கா எனஇயையும். ஆயிரமாயிரம் என்பதில் முதலாயிரம்பன்மை குறித்துநின்றது. செவிகள் கூறப்பட்டமையின் கேட்பினுமென்பதை வருவித்துரைத்துக்கொள்க. இதுமுன்னையநான்குசெய்யுட்களுத்தையுந்தொகுத்துக்கூறியது. (அஅ)

பொய்த்த லின்றியே யிந்நகர்த் திருவையைம் புலத்துந்
துய்த்தன் முன்னியே விழைந்துகொ ளேற்றிடுந் தொடர்பாற்
பத்து நூறுட னாயிரங் கோடியாப் பகரு
மித்தொ கைச்சிரங் கொண்டன ரீண்டுளா ரெவரும்.

இ—ள்: ஈண்டு உளார் எவரும்—இந்நகரத்திலுள்ளாரனைவரும், பொய்த்தல் இன்றி—பொய்படாமல், இ நகர் திருவை ஐம்புலத்தும் துய்த்தல் முன்னி விழைந்து கொல்—இந்த நகரத்தின்வளத்தை ஐம்புலன்களாலும் அனுபவிக்கநினைத்து ஆசையுற்றுப்போலும், நோற்றிடும் தொடர்பால்—தவஞ்செய்ததன்மையினால், பத்து நூறு உடன் ஆயிரம் கோடி ஆ பகரும் இ தொகை சிரம் கொண்டனர்—பத்தும் நூறும் ஆயிரமும் கோடியுமென்று சொல்லப்படுகின்ற இவைபோன்றதொகைகளமைந்த தலைகளைப்பெற்றிருக்கின்றார்கள் எ—று.

ஒருதலையிலுள்ள பொறிகளின்வழியே அனுபவித்தெஞ்சுமாகலின் பலதலைகளைத்தவத்தாற்பெற்று அனுபவித்துமுடிக்கவிரும்பினர்போலும் என்பதாம். வீண்படாமலென்பார் 'பொய்த்தலின்றி' என்றார். விழைந்துகொல் கொண்டனர் என இயையும். (அகூ)

முன்ன வர்க்குமுன் னாகிய வறுமுக முதல்வன்
றன்ன ருட்டிறத் தெல்லையில் பேருருச் சமைந்தே
யிந்ந கர்த்திரு யாவையுங் காண்குவ னின்னே
யொன்ன லர்க்கெனைக் காட்டுத றகாதென வொழிந்தேன்.

இ—ள்: முன்னவர்க்கு முன் ஆகிய அறுமுக முதல்வன் தன் அருள் திறத்து—முதற்றேவர்கட்கெல்லாம் முதற்கடவுளாகிய சண்முகப்பெருமானது கிருபையினால், எல்லை இல் பேர் உரு சமைந்து—அளவிறந்த பெரியவடிவத்தைக் கொண்டு, இ நகர் திரு யாவையும்—இந்நகரத்திலுள்ள சிறப்புக்களெல்லாவற்றையும், இன்னே காண்குவன்—இப்பொழுதே பார்ப்பேன், ஒன்னலர்க்கு எனை காட்டுதல் தகாது என ஒழிந்தேன்—பகைவர்களுக்கு என்னைவெளிப்படுத்திக்காட்டுதல் தக்கதன்றென்று (அவ்வெண்ணத்தை) விடுத்தேன் எ—று.

பிரமாவுந்திருமாலு முதலாகிய தேவத்தலைவர்களினுஞ்சிறந்தவென்பார் 'முன்னவர்க்குமுன்னாகிய' என்றார். தம்மைக்காட்டின் எதிர்ப்பவர்களோடு பன்னெடுங்காலம்பொருதுநிற்கவேண்டுமாதலின் ஒழிந்தனரென்க. (கூ0)

இனைத்த வாகிய பெருவள மெல்லையின் றிவற்றை
மனத்தி னாடினும் பற்பகல் செல்லுமான் மனக்கு
நுனித்து நன்றுநன் றாய்ந்திவை முழுவது நோக்க
நினைத்து ளேனெனி னிங்கிது பொழுதினி னிரம்பா.

இ—ள்: இனைத்த ஆகிய பெரு வளம் எல்லை இன்று—இவ்வியல்பினவாகிய சிறந்தவளங்கள் அளவிடப்படாதிருக்கின்றன, இவற்றை மனத்தில் நாடினும் பற்பகல் செல்லும்—இவைகளை மனத்தால் நினைத்துமுடிக்கினும் பலநாட்கள்செல்லும், மனக்கு நுனித்து நன்று நன்று ஆய்ந்து இவை முழுவதும் நோக்க நி

னைத்துளேன் எனில்—மனத்தினாலே நுண்மையாக மிகநன்றாயாராய்ந்து இவை யெல்லாவற்றையும்பார்க்கநினைத்தேனாயின், இது பொழுதினில் நிரம்பா—இப் பொழுதுமுடியாது எ—று.

மனத்தால் நினைத்துமுடிக்கவே பலநாட்செல்லுமாதலின் இப்பொழுது பார்த்துமுடித்தல் கூடாது என்பதாம். இப்படலமுதற்செய்யுண்முதல் இதுகாறு ங்கூறப்பட்டனவும் கூறப்படாதொழிந்தபிறவுமென்பார் 'இனைத்தவாகிய' என்றார். (கக)

அம்பு யாசனன் றெளிகிலா வருமறை முதலைக்
கும்ப மாமுனிக் குதவியே மெய்யருள் கொடுத்த
வெம்பி ரான்பணி புரிகிலா திந்நக ரிருஞ்சீர்
நம்பி நாடியே தெரிந்துபா ணிப்பது நலனே.

இ—ள்: அம்புய ஆசனன் தெளிகிலா அரு மறை முதலை—தாமரைமலரா சனராகிய பிரமதேவராலும் அறியப்படாத சிறந்த பிரணவப்பொருளை, கும்ப மா முனிக்கு உதவி— அகத்தியமகாமுனிவருக்குபதேசித்து, மெய் அருள் கொடுத்த—சிறந்த அருளைச்செய்த, எம் பிரான் பணி புரிகிலாது—எங்கள் தலைவராகிய முருகவேளின் ஏவலைச்செய்யாது, இ நகர் இரும் சீர் நம்பி நாடி தெரிந்து—இந்நகரத்தின் பெருஞ் சிறப்புக்களை விரும்பி ஆராய்ந்துபார்த்து, பாணிப்பது—பொழுதுபோக்குவது, நலனே—தகுதியா? எ—று.

ஓ-எதிர்மறை. மறைமுதல்-ஆகுபெயர். பிரணவப்பொருளை அகத்தியமாமுனிவர்க்குபதேசித்தசரித்திரம் முன் அயனைச்சிறைநீக்குபடலத்திற்கூறப்பட்டது. (கஉ)

என்று முன்னியே யறுமுகன் றூதுவ னிமயக்
குன்ற மன்னகீழ்த் திசைமுதற் கோபுரக் குடுமி
நின்று மாநகர் வளஞ்சில நோக்கியே நெடுஞ்சீர்
துன்று சூருறை திருநக ரடைவது துணிந்தான்.

இ—ள்: அறுமுகன் தூதுவன்—முருகக்கடவுளது தூதராகிய வீரவாகு தேவர், என்று முன்னி—இவ்வாறு சிந்தித்து, இமய குன்றம் அன்ன கீழ் திசை முதல் கோபுர குடுமி நின்று— இமயமலையைப்போன்ற கிழக்குத்திசையி லுள்ள முதற்கோபுரத்தின் முடியினின்று, மா நகர் வளம் சில நோக்கி—சிறந்த அந்நகரத்தின் வளங்களுட்சிலவற்றைப்பார்த்து, நெடும் சீர் துன்று சூர் உறை திரு நகர்—பரந்தகீர்த்தியையுடைய சூரபன்மனிருக்கின்ற சிறந்த அந்நகரத்துள், அடைவது துணிந்தான்—போதலைநிச்சயித்தார் எ—று.

மிகவுயர்ந்ததாதலின் இமயமலையையுவமித்தார். முற்கூறியவாறு நினைத்துக் கொண்டுபார்த்தாரென்பார் 'முன்னி-நோக்கி' என்றார். (கங)

வனைந்த மாளிகை யொளியினி லிடைப்படு மறுகிற்
கனைந்து செற்றியே பரிசனம் பரவுதல் காணா
நினைந்த சூழ்ச்சியான் கீழ்த்திசைச் சிகரியை நீங்கி
நனைந்த லைப்பட நகரத்து விண்ணிடை நடந்தான்.

இ—ள்: வனைந்த மாளிகை ஒளியினில் இடைப்படும் மறுகில்— அலங்கரிக்கப்பட்ட மாளிகைகளின்சோதியிலகப்பட்டிருக்கின்ற வீதிகளில், பரிசனம் கனைந்து செற்றி பரவுதல் காணா—சூரபன்மனது பரிசனங்களாகிய அசுரர்கள் நெருங்கிச்செறிந்துபரந்துலாவுதலைப் பார்த்து, நினைந்த சூழ்ச்சியான்—அவர்கள்காணுவண்ணஞ்செல்லநினைந்த உபாயபுத்தியையுடையவராய், கீழ்த்திசை சிகரி

யை நீங்கி—கிழக்குத்திசையிலுள்ளகோபுரத்தைவிட்டு (எழுந்து), நகரத்து நணந்தலை பட—அந்நகரத்தினடுவிடத்தையடையும்படி, விண் இடை நடந்தான்—ஆகாயமார்க்கமாகச்சென்றார் எ—று.

பரிசனம்-சூழ்ந்துவாழுஞ்சனங்கள். இருபுறங்களினுமுள்ளமாளிகைகளின் சோதிகள் பரவப்பெற்றவீதியென்பார் 'மாளிகையொளியினிலிடைப்படுமறுகு' என்றார். (கச)

வான மாநெறி நீங்கியே மறைகளிற் றுணிபா
ஞான நாயக வறுமுக னருள்கொடு நடந்து
தூநி லாவுமி ழெயிறுடைச் சூர்முதற் சுதனும்
பானு கோபன துறையுளை யெய்தினன் பார்த்தான்.

இ—ள்: வான மா நெறி நீங்கி-(சென்றபின்) ஆகாயமார்க்கத்தினின்றுமிறங்கி, மறைகளில் துணிபு ஆம் ஞான நாயக அறுமுகன் அருள் கொடு நடந்து—வேதங்களில் நிச்சயித்துரைக்கப்படும்பொருளாகிய ஞானமுதல்வரான முருகக்கடவுளின் கிருபையைப்பெற்றுப்போய், தூ நிலா உமிழ் எயிறு உடை சூர் முதல் சுதன் ஆம் பானுகோபனது உறையுளை எய்தினன்—தூய்மையான ஒளியைக்காலுகின்ற வக்கிரதந்தங்களையுடைய சூரபன்மனது முதற்குமாரனாகியபானுகோபனுடைய மாளிகையையடைந்து, பார்த்தான்—அதன் சிறப்புக்களைப்பார்த்தார் எ-று.

வேதங்கள் முருகவேளை முதற்கடவுளென்று சித்தாந்தப்படுத்துவனவென்பார் 'மறைகளிற்றுணிபாம்-அறுமுகன்' எனவும், முற்றறிவுடையரென்பார் அன்றேல் ஞானமேதிருமேனியாகவுடையவிறைவரென்பார் 'ஞானநாயகன்' எனவும், வெள்ளொளியென்பார் 'தூநிலா' எனவும் கூறினர். (கரு)

பாய்ந்து செஞ்சுடர்ப் பரிதியைப் பற்றினோ னுறையு
ளேந்தல் காணுறீஇ விம்மிதப் பட்டவ ணிகந்து
காந்து கண்ணுடை யங்கிமா முகனகர் கடந்து
சேந்த மெய்யுடை யாடக னுறையுளுந் தீர்ந்தான்.

இ—ள்: செம் சுடர் பரிதியை பாய்ந்து பற்றினோன் உறையுள்—சிவந்த ஒளிபொருந்திய சூரியனைப்பாய்ந்துபிடித்தவனாகிய பானுகோபனுடைய மாளிகையை, ஏந்தல் காணுறீஇ—வீரவாகுதேவர்பார்த்து, விம்மிதப்பட்டு அவண் இகந்து—ஆச்சரியமுற்று அவ்விடத்தைக்கடந்து, காந்து கண் உடை அங்கி மா முகன் நகர் கடந்து—அழலுகின்றகண்களையுடைய அக்கினிமுகாசுரனது மாளிகையுந்தாண்டி, சேந்த மெய் உடை ஆடகன் உறையுளும் தீர்ந்தான்—சிவந்தநிறமான மேனியையுடைய இரணியனது மாளிகையையுங்கடந்துசென்றார் எ—று.

முன்கண்டமாளிகைகளெல்லாவற்றினுஞ்சிறந்ததாதலின் ஆச்சரியமுற்றனர். அக்கினிப்பொறிகளைச்சிந்துதலால் 'காந்துகண்' என்றார். (கசு)

உச்சி யையிரண் டிருபது கரதல முடைய
வச்சி ரப்பெரு மொய்ம்பினோன் மாளிகை வரைப்பு
மச்செ னத்தணந் தேகிமூ வாயிர ராகு
மெச்ச மெய்திய மைந்தர்தம் மிருக்கையு மிகந்தான்.

இ—ள்: உச்சி ஐயிரண்டு இருபது காதலம் உடைய—பத்துத்தலைகளையும் இருபது கைகளையுமுடைய, வச்சிர பெரு மொய்ம்பினோன்—வச்சிரவாகுவினுடைய, மாளிகை வரைப்பும்—மாளிகையினெல்லையையும், அச்சென தணந்து ஏகி—விரைவாகக்கடந்துபோய், மூவாயிரர் ஆகும் எச்சம் எய்திய மைந்தர் தம் இருக்கையும்—மூவாயிரரென்றுசொல்லப்படுகின்ற எஞ்சியிருக்கின்றபுதல்வர்களுடைய இருப்பிடத்தையும், இகந்தான்—கடந்தார் எ—று.

வச்சிரப்பெருமொய்ம்பினேன்-வைரமான பெரியபுயங்களையுடையான். அச்சு-விரைவுக்குறிப்பு. (கஎ)

உரிய மந்திரத் துணைவரிற் றலைமைபெற் றுறையுந்
தரும கோபன்றன் கடிமனைச் சிகரமேற் றங்கிச்
சுரரும் வாசவன் மதலையு மவுணர்கள் சுற்றப்
பரிவு கொண்டமர் சிறைக்கள நாடியே பார்த்தான்.

இ—ள்: உரிய மந்திர துணைவரில் தலைமை பெற்று உறையும்—உரிமைபூண்ட மந்திரிமாராகிய துணைவர்களுள் தலைமைவாய்ந்திருக்கின்ற, தருமகோபன் தன் கடி மனை சிகர மேல் தங்கி-தருமகோபனுடைய சிறந்த மாளிகையின்முடியின்மேலிருந்து, சுரரும் வாசவன் மதலையும்—தேவர்களும் இந்திரனது புதல்வனாகியசயந்தனும், அவுணர்கள் சுற்ற—அசுரர்கள்சூழ, பரிவு கொண்டு அமர்—வருந்திக்கொண்டிருக்கின்ற, சிறைக்களம்-சிறைச்சாலையை, நாடி பார்த்தான்—ஆராய்ந்துபார்த்தார் எ—று.

சூரபன்மனது அரசியற்சபைக்கு மந்திரிமாராகநியமிக்கப்பட்டாரென்பார் 'உரியமந்திரத்துணைவர்' என்றார். (கஅ)

கறைய டித்தொகை பிரிதலுங் கயமுனி கவர்ந்து
மறைவி டத்தினில் வேட்டுவ ருய்ப்பவை குவபோற்
பொறையு டைத்துய ரிந்திரன் போந்தபின் புல்லார்
சிறையி லுற்றவர் செய்கையிற் சிறிதுரை செய்வாம்.

இ—ள்: கறை அடி தொகை பிரிதலும்—யானைக்கூட்டங்கள் பிரிந்துபோனசமயத்தில், கயமுனி கவர்ந்து—(தனித்துநின்ற)யானைக்கன்றையகப்படுத்தி, மறைவிடத்தினில் வேட்டுவர் உய்ப்ப வைகுவ போல்—மறைவானஇடத்திற்கொண்டுசென்று வேடர்கள்வைக்க அது அவரது காவலிலடங்கியிருந்தாற்போல, பொறை உடை துயர் இந்திரன் போந்தபின்—மிகுதியான துன்பத்தையுடைய இந்திரன் ஒளித்தோடியபின், புல்லார் சிறையில் உற்றவர் செய்கையில்—எளியவர்களாகியஅசுரர்களது சிறையிலகப்பட்டிருக்கின்ற தேவர்களதுசெயல்களுள், சிறிது உரை செய்வாம்—சிலவற்றைக்கூறுவாம் எ—று.

பொறை-பாரம். தப்பியோடுஞ்சூழ்ச்சிதெரியாதகப்பட்டமைபற்றி இங்ஙனமுவமித்தார். சிறையிலுற்றவரென்றது சயந்தன்முதலியவர்களை. அவர்கள்சிறைப்பட்டசரித்திரம் முன்னர் அசுரகாண்டத்து அமரர்சிறைபுகுபடலத்திற்கூறப்பட்டது. இது ஆசிரியர் கூற்று. (கக)

நகர்புகுபடலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௩௩௬.

சயந்தன்புலம்புறுபடலம்.

சிறையிலிருக்குஞ்சயந்தன் துயராற்றாதுபுலம்பியதைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சயந்தன்முதலாகிய தேவர்கள் சிறையிலிருக்க, அவர்களைக்காவல்செய்கின்ற அசுரர்கள் இந்திரனுமிந்திராணியுமொளித்தவிடத்தைச்சொல்லுவீர்களென்று வி

ளுவி அவர்கள் கூறுமையாற் பலவிதமான தண்டனைகளைச்செய்தனர். தேவர்கள் ஆற்றாதவராய்ப்பலவாறுபுலம்பி அறிவுமயங்கி வீழ்ந்தனர் என்பதாம்.

பரஞ்சுடர் நெடுங்கணை படுத்த பாயலில்
வருஞ்சசி யனையதோர் வாணு தற்சசி
தருஞ்சிறு குமரனுஞ் சயந்த னவ்விடை
யருஞ்சிறை யிருந்தன னமரர் தம்மொடும்.

இ—ள்: பரஞ்சுடர் நெடும் கணை படுத்த பாயலில் வரும் சசி அனையது ஓர் வாள் நுதல் சசி—சிவபிரானுக்கு (முப்புரமெரிக்கச்சென்றபொழுது) நெடியபாணமாயிருந்ததிருமால் கண்டுயிலுகின்ற சேக்கையாகிய பாற்கடலிலுதித்த சந்திரனைநிகர்த்த ஒளிபொருந்திய நெற்றியையுடைய இந்திராணி, தரும்—பெற்ற, சிறு குமரன் ஆம் சயந்தன்—சிறுபுதல்வனாகிய சயந்தனென்பான், அவ் இடை—அந்தஇடத்தில், அமரர்தம்மொடும்—தேவர்களுடன், அரும் சிறை இருந்தனன்—கடுமையானசிறையிலிருந்தான் எ—று.

பரஞ்சுடர்நெடுங்கணை-குறிப்புச்சொல். பரஞ்சுடர்-மேலானசோதிவடிவானவர். சசியென்றது ஈண்டு எண்ணாட்டிங்களை. (௪)

வாலிதா மமரர்சூழ் வைப்பி லிந்திரன்
கோலமா கியதனிக் குமரன் வைகுதல்
மேலைநா ளமுதெழும் வேலை தன்னிடை
நீலமா முகிலுறை நீர்மை போலுமே.

இ—ள்: வாலிது ஆம் அமரர் சூழ் வைப்பில்—வெண்ணிறமுடையவர்களாகிய தேவர்கள்சூழ்ந்திருக்குமிடத்தில், இந்திரன் கோலம் ஆகிய தனி குமரன் வைகுதல்—பிதாவாகியஇந்திரனைப்போன்றகருநிறவடிவத்தையுடையவனாகிய ஒப்பற்ற சயந்தன்இருக்குந்தன்மை, மேலைநாள் அமுது எழும் வேலை தன் இடை—முன்னைநாளில் அமிர்தந்தோற்றியபாற்கடலில், நீல மா முகில் உறை நீர்மை போலும்—நீலநிறமான பெரியமேகம் இருக்குந்தன்மையைப்போலும் எ—று.

வெண்ணிறமானதேவர்கூட்டத்துட்கருநிறமுடையவனாகியசயந்தனிருப்பது பாற்கடலில் மேகம்நீர்பருகச்சென்றிருந்தாற்போலுமென்பதாம். நீலமாமுகில் அடையடுத்தஆகுபெயரெனக்கொண்டு திருமாலெனப்பொருள்கூறினுமாம். ()

மழைபுரை யவுணர்சூழ் வைப்பில் வாலொளி
தழுவிய வமரருட் சயந்தன் மேயினன்
கழிதரு பணிபல கவரச் சோர்தரு
முழுமதி யதனிடை முயலுற் றென்னவே.

இ—ள்: கழி தரு பணி பல கவர சோர்தரும் முழு மதி அதன் இடை—மிகுதியாகிய பலசர்ப்பங்கள் பற்றுதலால் வாட்டமடைகின்றபூரணசந்திரனுக்குநடுவில், முயல் உற்று என்ன—முயற்களங்கமிருந்தாற்போல, மழை புரை அவுணர் சூழ் வைப்பில்—மேகங்களைப்போன்ற(கருநிறத்தையுடைய)அசுரர்கள் வளைந்திருக்குமிடத்தில், வால் ஒளி தழுவிய அமரருள்—வெண்ணிறமான ஒளிபொருந்தப்பெற்ற தேவர்களுக்குநடுவே, சயந்தன் மேயினன்—சயந்தன் இருந்தான் எ—று.

என்ன மேயினன் எனஇயையும். அசுரர்க்கு நாகர்களும் தேவர்சூழ்விற்குச் சந்திரபிம்பமும் சயந்தனுக்குக்களங்கமும் உவமை. பணிபலகவர என்றதனால் அபூதவுவமை. (௬)

வென்றிவில் வியற்றிய விஞ்சை நீர்மையாற்
கன்றிய சரமெனக் காவற் சாலையிற்

பொன்றிகழ் வல்லிகள் பூண்டு பற்பக
றன்றுணைத் தாள்களிற் றழும்பு சேர்ந்துளான்.

இ—ள்: வென்றி வில் இயற்றிய விஞ்சை நீர்மையால் கன்றிய காம் என—வெற்றியைத்தருகின்ற விற்றொழிற்செய்யப்படுகின்ற பயிற்சியின்றிறத்தால் தழும்பேறியகையைப்போல, காவற் சாலையில்—சிறைச்சாலையில், பொன் திகழ் வல்லிகள் பற்பகல் பூண்டு—பொன்னாற்செய்யப்பட்ட விலங்குகளைப்பலகாலமாகப்பூண்டிருத்தலால், தன் துணை தாள்களில் தழும்பு சேர்ந்து உளான்—தனது இரண்டுகால்களிலும் அடையாளம்பொருந்தப்பெற்றுள்ளான் எ—று.

காற்றழும்பிற்குக்கைத்தழும்பையுவமித்ததனுல், பற்பலபெரும்போர்களில் அழியாவென்றிபெற்றவீரனென்பதும் இவ்வசுரருடன்செய்தபோரின்மாத்திரந் தோற்றுச்சிறைப்பட்டுப்பெருந்துயருழக்கின்றனென்பதும் குறிக்கப்பட்டன. அரசனுதலிற் பொன்விலங்குபூட்டப்பெற்றன். (ச)

இயற்படு மானமு மிகலு நாணமு
மயற்பட வெம்பழி யனலஞ் சுற்றிட
வுயிர்ப்பெனு மோதைநின் றுயிர லைத்திடத்
துயர்ப்பெரும் பரவையூ டழுந்திச் சோருவான்.

இ—ள்: இயல் படும் மானமும் இகலும் நாணமும் அயல் பட—இயல்பாகத்தன்னிடத்துள்ள அபிமானமும் பகையும் வெட்கமும் ஆகிய இவையெல்லாம் புறத்தேயகல, வெம் பழி அனலம் சுற்றிட—கொடியபழியாகிய நெருப்புச்சூழ்ந்துகொள்ள, உயிர்ப்பு எனும் ஓதை நின்று உயிர் அலைத்திட—பெருமூச்சாகிய காற்று நின்று உயிரையலைவுசெய்ய, துயர் பெரும் பரவை ஊடு அழுந்தி சோருவான்—துன்பமாகிய பெரியகடலிலமிழ்ந்திச்சோர்வான் எ—று.

மானம்-தன்னைத்தகுதியுடையவனுகமதித்தல். இகல்-தனக்குத்தீங்குசெய்வாரையெவ்வாற்றானுந்தொலைக்கவேண்டுமென்னுங்கோட்பாடு. நாணம்-தனக்குநேர்ந்த இளிவரவைநினைக்குந்தோறு முதிக்கின்றவெட்கம். பழி-தன்னைக்குறித்துப் பிறர் இழித்துக்கூறுதலாகிய நிந்தை. கடும்பழியென்பார் 'வெம்பழி' எனவும், மானமுதலியவற்றையடக்கி மேற்கிளர்ந்து மனத்தைவெவச்செய்தலின் 'வெம்பழியனலம்'எனவும், பேருயிர்ப்பாதலின் 'உயிர்ப்பெனுமோதை' எனவும், துயர்மிகும்போதே உயிர்ப்புத்தோன்றுதலின் 'ஓதைநின்றுயிரலைத்திட' எனவும், முடிவுகாணப்பெருந்துன்பமாதலின் 'துயர்ப்பெரும்பரவை' எனவும் கூறினர்.

அண்டருஞ் சிறையினல் வீடு மல்லதே
லெண்டரு முகம்பல விடருண் மூழ்கலின்
மண்டுதொல் பழியற வலிது துஞ்சுமா
லுண்டநல் லமுதினு லவையொ ழிந்துளான்.

இ—ள்: அண்டு அரும் சிறையினல் வீடும்—அணுகுதற்கரியசிறையிலிருத்தலால் இறப்பான், அல்லதேல்—அல்லாவிட்டால், எண் தரும் உகம் பல இடருள் மூழ்கலின் மண்டு தொல் பழி அற வலிது துஞ்சும்—தொகையான்மேம்பட்ட பலயுகங்களாகத்துன்பத்திலழுந்துதலால் நெருங்கிய பழையநிந்தையானதுநீங்கும்பொருட்டு வலாற்காரமாகஇறப்பான், உண்ட நல் அமுதினல் அவை ஒழிந்து உளான்—(முற்காலத்திற்)புசித்தநல்லஅமிர்தத்தின்வன்மையால் அவ்விருவகையிறப்புக்களையும் நீங்கியுள்ளான் எ—று.

அல்லதேல் துஞ்சும் என இயையும். சகித்தற்கரியவேதனையைத்தருஞ்சிறையென்பார் 'அண்டருஞ்சிறை' எனவும், அமுதுண்டார் இறப்பதில்லையாகலின் 'உண்டநல்லமுதினுலவையொழிந்துளான்' எனவும் கூறினர். (சு)

தணிப்பரும் வெஞ்சினத் தகுவர் மன்னவன்
பணிப்படு சிறைக்களம் பட்டுத் தம்முட
றுணிப்புறு வோரெனத் துயர்கொண் டோர்கணங்
கணிப்பரு முகங்களாக் கழித்து வைகுவான்.

இ—ள்: தணிப்பு அரும் வெம் சின தகுவர் மன்னவன் பணி படு சிறைக்களம் பட்டு—ஒழித்தற்கரிய கொடுங்கோபத்தையுடைய அசுரர்க்கரசனாகியசூரபன் மனதுகட்டளையினாலமைந்த சிறைச்சாலையிலகப்பட்டு, தம் உடல் துணிப்புறுவோர் என துயர் கொண்டு—தங்கள்சரீரம்வெட்டுப்படுபவர்களைப்போலத் துன்பமுற்று, ஓர் கணம் கணிப்பு அரும் உகங்களா கழித்து வைகுவான்—ஒவ்வொரு கணப்பொழுதையும் அளவிடுதற்கரியயுகங்களாகநினைத்துக் கழித்துக்கொண்டிருப்பான் எ—று.

சிறிதுமிரக்கமின்றிப்பணித்தானென்பதுபோதர 'தணிப்பரும்வெஞ்சினத்தகுவர்மன்னவன்' என அடை கொடுத்தும், வேதனையின்கடுமைதோன்ற 'தம்முடறுணிப்புறுவோரென' என உவமித்தும் கூறினார். துயர்மிக்காருக்கு இராப்பகல்கள் நீடித்துத்தோற்றுதல் இயல்பு. (எ)

தேவியன் மரகதந் தெளித்துத் தீட்டிய
வோவிய வுருவமா சுண்ட தன்மையர்
னாவியம் புனலறா தமருங் காவியம்
பூவியன் மென்றொடை புலர்ந்த தேயனன்.

இ—ள்: தே இயல் மரகதம் தெளித்து தீட்டிய—தெய்வத்தன்மைபொருந்திய மரகதரத்தினத்தைச்சாணைதீர்த்துச்செய்த, ஓவிய உருவம்—சித்திரப்பாவை, மாசுண்ட தன்மையான்—அழுக்கடைந்தாற்போன்ற தன்மையையுடையான், ஆவியம் புனல் அறாது அமரும் காவியம் பூ—குளத்துநீரைவிட்டுப்பிரியாதிருக்கப்பெற்ற கருங்குவளைமலரினால், இயல் மென் தொடை—இயற்றிய மெல்லியமாலையானது, புலர்ந்ததே அனான்—வாடியதையேயொக்கப்பான் எ—று.

மிகச்சிறந்தமரகதமென்பார் 'தேவியன்மரகதம்' என்றார். முற்றொடரால் பேரொளிபடைத்ததேகம் ஒளிகுன்றிற்றென்பதும், பிற்றொடரால் துன்பங்களைச்சகித்துப்பயிலாததேகமாதலால் மிகவாடிற்றென்பதும் பெறப்பட்டன. (அ)

வியலுக நூறுடன் மிக்க வெட்டினு
ளியலுறு சிறுவரை யெனினுந் துஞ்சுமேன்
மயல்சிறி தகலுமா னமரபின் வைகலுந்
துயில்கில னதலா லறாத துன்பினன்.

இ—ள்: வியல் உகம் நூறுடன் மிக்க எட்டினுள்—பெரியயுகங்கள் நூற்றெட்டனுள்ளும், இயலுறு சிறுவரை எனினும்—பொருந்திவருகின்ற ஒருகணப்பொழுதளவாயினும், துஞ்சுமேல்—துயில்வானாயின், மயல் சிறிது அகலும்—அவனுடையதுயரஞ்சற்றேதீரும், மரபின் வைகலும் துயில்கிலன் ஆதலால்—அம்முறையாக ஒருதினத்திலாயினும்நித்திரைசெய்திலானாதலால், அறாத துன்பினன்—ஒழியாததுன்பத்தையுடையான் எ—று.

வியலுகமென்றது மகாயுகத்தை. இதனைச்சதுர்யுகமெனவும் வழங்குப. துயிலுங்காலத்தில் மனமானது ஒய்ந்துஅடங்குதலால் துயர்நீங்குமென்க. நூறுடன்மிக்க எட்டு-நூறுடன்கூடியஎட்டு. (௯)

நெஞ்சழி துன்பிடை நீட வைகலிற்
றுஞ்சலன் வலிதுயிர் துறப்பு மாற்றல
னெஞ்சுமோ ரிறைவரை யிமையுங் கூட்டலன்
விஞ்சிய தவந்துயர் விளைக்கு மாங்கொலோ.

இ—ள்: நெஞ்சு அழி துன்பு இடை நீட வைகலில்—மனமானது புண்படுதற்கேற்ற துயரத்தில் நெடுநாளாக அகப்பட்டிருத்தலால், துஞ்சலன்—இறக்கின்றிலான், வலிது உயிர் துறப்பும் ஆற்றலன்—வலாற்காரமாக உயிரைப்போக்குதலையுஞ்செய்திலான், எஞ்சும் ஓர் இறை வரை இமையும் கூட்டலன்—சிறிதான ஒருகணப்பொழுதளவு நித்திரைசெய்யவும்பெற்றிலான், விஞ்சிய தவம் துயர் விளைக்கும் ஆம் கொல்—பெருந்தவமுஞ்சிலகாலங்களிற்றுன்பத்தைவிளைக்கும்போலும்! எ—று.

கடுந்துயரென்பார் 'நெஞ்சழிதுன்பு' எனவும், இறவாமலுந்துயிலாமலுமிருக்கும்படி தவஞ்செய்யாதொழியின் இதுபொழுது இறந்தேனுந்துயின்றேனுந் துன்பத்தையாற்றுவனென்பார், அன்றேல் அருந்தவங்களைச்செய்துடையனுகியஇவனுக்கு இத்துணைத்துன்பம்நேர்ந்தவாறென்னையென்பார்' விஞ்சியதவந்துயர்விளைக்குமாங்கொல்' எனவும் கூறினார். (கo)

இலங்கிய மரகதந் தியன்று பொன்குலாய்
நலங்கிளர் தன்வனப் பிழந்து நாடொறுஞ்
சலங்கெழு மவுணர்க டமைக்கண் டஞ்சியே
கலங்கின னுய்வகை யாதுங் காண்கிலான்.

இ—ள்: இலங்கிய மரகதத்து இயன்று—விளங்குகின்ற மரகதரத்தினம்போல நிறம்வாய்ந்து, பொன் குலாய்—அழகுபொருந்தி, நலம் கிளர்—நன்மை விளங்குகின்ற, தன் வனப்பு—தன்னுடையமேனியழகை, இழந்து—நீங்கி, நாள் தொறும்—தினந்தோறும், சலம் கெழும் அவுணர்கள் தமை கண்டு அஞ்சி—கோபமிகுந்த அசுரர்களைக்கண்டுபயந்து, உய்வகை யாதும் காண்கிலான்—உய்தற்கேற்றவுபாயம்யாதொன்றையுங் காணுதவனாய், கலங்கினன்—கலக்கமடைந்தான் எ—று.

நலம்-காட்சிக்கினிமையாயிருத்தல். இயன்று குலாய்க்கிளர் வனப்பு என இயையும். (கக)

சுந்தர மரகதத் தனது தொல்லுரு
வெந்துய ருழத்தலின் வெய்து யிர்ப்பென
வந்தெழு புகைபட மறைந்து கட்புனல்
சிந்திட வுடனுடன் றிகழத் தோன்றுமால்.

இ—ள்: சுந்தர மரகத தனது தொல் உரு—அழகியமரகதரத்தினத்தைப் போன்ற தன்னுடையபழையவடிவம், வெம் துயர் உழத்தலின் வெய்து உயிர்ப்பு என வந்து எழு புகை பட மறைந்து—கொடிய துன்பத்தையனுபவித்தலினுற் பெருமூச்சென்னும்பெயர்பெற்றுவந்துதோன்றுகின்ற புகையானதுபட்டு மறையப்பெற்று, கண் புனல் சிந்திட உடனுடன் திகழ தோன்றும்—கண்ணீர்சிந்த அவ்வப்பொழுதின்மாத்திரம் விளங்கத்தோற்றும் எ—று.

உருமறைந்து தோன்றும் என இயைக்க. துயரமாகியநெருப்பு அகத்தே மூண்டுகொண்டிருத்தலால் நெட்டுயிர்ப்புப்புகையாயிற்று. கண்ணீர்சிந்தலாற்றோன்றுமெனவே சிந்துங்கண்ணீர் மேனிமுழுதையும்நனைக்குமென்பதும், உடனுடன்றிகழத்தோன்றுமென்பதாற் பின்னும் நெட்டுயிர்ப்புப்புகை மறைக்குமென்பதும் பெறப்பட்டன. (கஉ)

முழுதுறு தன்றுயர் முன்னி முன்னியே
யிழுதைய ரவுணரு மிரங்க வேங்குறு
வழுதிடின் காப்பினோ ரச்சஞ் செய்தலும்
பழுதுகொ லென்றுவாய் பொத்தும் பாணியால்.

இ—ள்: முழுது உறு தன் துயர் முன்னி முன்னி—இடைவிடாதமைந்தத னது துன்பத்தைநினைத்துநினைத்து, இழுதையர் அவுணரும் இரங்க—அறிவிலிக ளாகிய அசுரர்களும் இரக்கங்கொள்ளும்படி, ஏங்குறு அழுதிடும்—ஏங்கியழுவா ன், காப்பினோர் அச்சஞ்செய்தலும்—காவலாளர்கள் அதனைக்கண்டுபயமுறுத்து தலும், பழுது கொல் என்று—தவறாய்முடிந்ததோவென்று, பாணியால் வாய் பொத்தும்—கையினால்வாயைப்பொத்துவான் எ—று.

இரக்கமெட்டுணையேனுமில்லாத அசுரரென்பார் 'இழுதையரவுணர்' எனவு ம், அழுவதுகுற்றமாயின் இனியழாதிருக்கின்றேனென்றுகூறியென்பார் 'ப ழுதுகொலென்று' எனவும் கூறினார். (கங)

இந்திரன் சசியொடு மிருந்த சூழல்போய்த்
தந்தனர் பற்றினர் தமரெ னச்சிலர்
முந்துறு காவலோர் மொழிந்த பொய்யுரை
யந்தம தடையுமுன் னயர்ந்து வீழுமே.

இ—ள்: தமர்—தங்கள்சுற்றத்தவர்கள், இந்திரன் சசியொடும் இருந்த சூழ ல்போய்—இந்திரன் இந்திராணியோடுமிருந்த மறைவிடத்திற்போய், பற்றினர் தந்தனர் என—பிடித்துக்கொண்டுவந்தார்களென்று, முந்து உறு காவலோர் சிலர் மொழிந்த பொய் உரை— முன்னிலையில்வந்த காவலாளர்சிலர் கூறியபொய் வசனம், அந்தமது அடையும் முன்—முடிவையடைதற்கிடையில், அயர்ந்து வீ ழும்—சோர்ந்து விழுவான் எ—று.

பிதாமாதாக்களகப்படின் தன்னைப்போலவே துன்புழப்பரென்பதுபற்றியும் அசுரரைக்கொன்று தங்கள் சிறையைமீட்கமுயல்வாரொருவருமில்லையென்பது பற்றியும் இந்திராணியைச்சூரபன்மன் மனையாளாக்கமுயல்வனென்பதுபற்றியு ம் கூறிமுடியுமுன் அவசமாய்விழுவானென்க. (கச)

ஐந்தரு நீழலை நினைக்கு மாய்மலர்
தந்தமென் பள்ளியை யுன்னுந் தானெனப்
புந்திகொண் மங்கையர் புணர்ப்பை யுட்கொளு
மிந்திரப் பெருவள மெண்ணிச் சோருமே.

இ—ள்: ஐந்தரு நீழலை நினைக்கும்—ஐந்துவகைப்பட்ட தெய்வதருக்களின் நிழலைச்சிந்திப்பான், ஆய் மலர் தந்த மென் பள்ளியை உன்னும்—தெரிவுசெய்ய ப்பட்ட பூக்களாலமைந்த மெல்லியசேக்கையை நினைப்பான், தான் என புந்தி கொள் மங்கையர் புணர்ப்பை உட்கொளும்—தன்னுயிரென்றுகருதப்படுகின்ற தேவமங்கையர்களது கலவியைநினைப்பான், இந்திர பெரு வளம் எண்ணி சோ ரும்—பெரிய இந்திரச்செல்வத்தை நினைத்துவாடுவான் எ—று.

ஐவகைத்தெய்வதருக்கள்: சந்தானம் அரிசந்தனம் மந்தாரம் பாரிசாதம் கற்பகம் என்பன. கழிபெருங்காதலைத்தருகின்றவென்பார் 'தானெனப்புந்தி கொள்' என்றார். ஐந்தருநீழலில் மென்மலர்ச்சேக்கையில் விரும்பியஅரம்பைய ருடன்புணர்ந்து இந்திரச்செல்வத்துடனிருந்தேன், விலங்குபூண்டு சிறைச்சா லையிலிருந்து இவ்வாறுதுயருழக்கலாயிற்றே என்று நினைந்து வருந்தினான் எ ன்பதாம். (கரு)

தன்னிணை யில்லதோர் தருவி னீழலு
ணன்னலந் துய்த்தியா நாளு மின்புறும்
பொன்னகர் பூழியாய்ப் போங்கொ லோவெனு
முன்னிடுந் தொன்மைபோ லுறுவ தென்றெனும்.

இ—ள்: யாம்—நாங்கள், தன் இணை இல்லது ஓர் தருவின் நீழலுள்—தன க்கிணையானதுபிறிதொன் றுமில்லாத கற்பகதருவினீழலில், நல் நலம் துய்த்து—சிறந்த இன்பத்தையனுபவித்து, நாளும் இன்பு உறும்—எப்போதுஞ்சுகமனு பவித்தற்கிடமாயிருந்த, பொன்னகர்—சுவர்க்கலோகம், பூழி ஆய் போம் கொல் எனு—சாம்பராய்ப்போகத்தக்கதாவென்று, உன்னிடும்—நினைப்பான், தொன் மைபோல் உறுவது என்று எனும்—முற்காலம்போல (இனி) நல்வாழ்வு பெற்றி ருப்பது எக்காலத்தில் என்றுநினைப்பான் எ—று.

விரும்பியபொருள்களெல்லாவற்றையுங்கொடுக்கும்பொன்மரமாதலின் 'த ன்னிணையில்லதோர்தரு' என்றார். (கசு)

ஈண்டையி லவுணர்கோ னேவத் தானைகள்
சேண்டொடர் துறக்கமேற் செல்ல நாடியே
காண்டகு தம்முருக் கரந்து போயினார்
யாண்டைய ரோவெமை யீன்று ளாரெனும்.

இ—ள்: ஈண்டையில் அவுணர்கோன் ஏவ—இந்நகரத்திலிருக்கின்ற அசுரர் க்கரசனாகிய சூரபன்மன் அனுப்புதலால், தானைகள் சேண் தொடர் துறக்க மே ல் செல்ல—அவனது சேனைகள் ஆகாயத்திலுள்ள சுவர்க்கலோகத்திற்புக, எ மை ஈன்றுளார்—எம்மைப்பெற்ற தாய்தந்தையர்கள், நாடி—அதனையறிந்து, கா ண் தகு தம் உரு கரந்து போயினார்—காணத்தகுந்த தமது வடிவத்தை மறைத்துக் கொண்டு ஓடினார்கள், யாண்டையரோ எனும்—(இப்பொழுது) எங்கேயிருக்கி ன்றார்களோ என்று நினைப்பான் எ—று. (கஎ)

எயினா துறக்கநா டிழிந்து தொல்லைநாட்
டாயொடு பயந்துள தந்தை பாரகம்
போயின னெனச்சிலர் புகலக் கேட்டன
னாயிடைப் புகுந்தன வறிகி லேனெனும்.

இ—ள்: பயந்துள தந்தை—என்னைப்பெற்றபிதா, தாயொடு—எனது தாயாகிய இந்திராணியோடும், தொல்லை நாள்—முன்னாளில், எயினா துறக் கநாடு இழிந்து-வாழ்ந்திருந்த சுவர்க்கலோகத்தினின்றுமிறங்கி, பாரகம் போயி னன்—பூவுலகத்திற்போயினார், என—என்று, சிலர் புகல கேட்டனன்—சிலர் சொல்லக்கேள்விப்பட்டேன், ஆயிடை புகுந்தன அறிகிலேன்—அவ்விடத்தில் நி கழ்ந்தசெயல்களையறியேன், எனும்—என்றுநினைப்பான் எ—று. (கஅ)

அண்டர்க ளொருசில ரயர்வு கூறவுட்
கொண்டன ரேகினர் குறுகி யெந்தையைக்
கண்டன ரேகொலோ கலந்து ளார்கொலோ
விண்டன ரேகொலோ வினைவெ னேனெவனும்.

இ—ள்: அண்டர்கள் ஒருசிலர்—சிலதேவர்கள், அயர்வு கூற—தங்கள் வரு த்தத்தைச்சொல்லும்படி, உட்கொண்டனர் ஏகினர்—நினைத்துப்போனார்கள், எ ந்தையை குறுகி கண்டனர் கொல்—(அவர்கள்) என்பிதாவையணுகிக்கண்டார்க ளோ?, கலந்துளார் கொல்—அவரிருக்குமிடத்திற்குப்போனார்களோ?, விண்ட

னர் கொல்—(இருக்குமிடமறியாது)உலைந்துதிரிந்தார்களோ?, விளைவு என்னே எனும்—நடைபெற்றது யாதோ என்றுநினைப்பான் எ—று.

எந்தையையென்பதைக் கலந்துளார்கொல் என்பதனோடுமியைத்துரைக்க. ()

சீகர மிக்கசூர் செயிர்த்துச் செய்திடு
மாகுல முழுவது மறைய வம்மைமோர்
பாகம துடையநம் பரமன் மால்வரைக்
கேகினை னேகொலோ வெந்தை யென்றிடும்.

இ—ள்: எந்தை—என்பிதா, சீகரம் மிக்க சூர் செயிர்த்து செய்திடும் ஆகுலம் முழுவதும் அறைய—இலட்சுமீகரத்தான்மிகுந்த சூரபன்மன் கோபித்துச் செய்கின்ற துன்பமுழுதையும் விண்ணப்பம்செய்யும்படி, அம்மை ஓர் பாகமது உடைய நம் பரமன் மால் வரைக்கு—உமையம்மையை இடப்பாகத்திலுடைய எங்கள்தலைவராகியசிவபிரான்வீற்றிருக்கின்ற பெரிய திருக்கைலாசமலைக்கு, ஏகினன் கொல்—போனரோ, என்றிடும்—என்றுநினைப்பான் எ—று.

ஸ்ரீகரம் என்னும்வடமொழி சீகரம் எனநின்றது. சிறந்தவளங்களையநுபவிப்பவனாதலிற் 'சீகரமிக்கசூர்' என்றான். (௨௦)

பொருந்தலர் கண்ணுறாப் பொருட்டுத் தம்முருக்
கரந்தன ரோவழீஇக் குரவர் கள்வர்பாற்
பொருந்தின ரேகொலோ புவன மெங்குமாய்த்
திரிந்தன ரேகொலோ தெளிகி லேனெனும்.

இ—ள்: குரவர்—எனது தாய்தந்தையர்கள், பொருந்தலர் கண் உறா பொருட்டு தம் உரு கரந்தனரோ—பகைவர்களுடைய கண்ணிலகப்படாதபடி தம்முடைய வடிவத்தை மறைத்திருந்தார்களோ, அழீஇ கள்வர் பால் பொருந்தினர் கொல்—நிலைகெட்டுக் கள்வராகியஅசுரரிடத்து அகப்பட்டார்களோ, புவனம் எங்கும் ஆய் திரிந்தனர் கொல்—உலகமெங்குமாகத்திரிந்தார்களோ, தெளிகிலேன் எனும்—அறியேனென்று நினைப்பான் எ—று.

மறைவுவெளிப்பட்டதென்பான் 'அழீஇ' என்றான். மாறுவேடம்பூணுதல்முதலான உபாயங்களோடு தேடித்திரிபவராதலின் 'கள்வர்' என்றான். ஒளித்திருத்தற்கேற்றஇடமின்மையால் அலைந்துதிரிகின்றார்களோவென்பான் 'புவனமெங்குமாய்த்திரிந்தனரேகொல்' என்றான். வழீஇ—எனக்கண்ணழித்துப்பொருள்கூறி வழுவியென்பதன் விகாரமெனினுமாம். (௨௧)

மாண்கிளர் சூரபன் மாவி னேவலா
லேண்கிள ரவுணர்கள் யாயைத் தந்தையை
நாண்கொடு பிணித்திவ ணல்கப் போயினார்
காண்கில ரேகொலோ கரந்த வாறெனும்.

இ—ள்: ஏண் கிளர் அவுணர்கள்—இறுமாப்புமிகுந்த அசுரர்கள், மாண் கிளர் சூரபன்மாவின் ஏவலால்—பெருமைமிகுந்த சூரபன்மனது கட்டளைப்படி, யாயை தந்தையை—எனதுபிதாவையும்மாதாவையும், நாண்கொடு பிணித்து—கயிற்றினாற்கட்டி, இவண் நல்க போயினார்—இவ்விடத்திற்கொண்டுவந்துகொடுக்கும்படிபோனார்கள், கரந்தவாறு காண்கிலர் கொல்—(அவர்கள்) மறைந்திருப்பதையறியவில்லையோ, எனும்—என்றுநினைப்பான் எ—று.

எவ்வாற் போயினரென இயையும். எவ்வாற்றானுந் தேடிப் பற்றிவருவோமென்று துணிந்துசென்றனரென்பதுபோதர 'ஏண்கிளரவுணர்கள்' என்றான். (௨௨)

அன்புடை யம்மனை யத்த னிங்கிவர்
வன்புடை யவுணர்கள் வரவு காண்பரேற்
றுன்புடை மனத்தராய்த் துளங்கி யேங்கியே
யென்படு வார்கொலோ வறிகி லேனெனும்.

இ—ள்: அன்பு உடை அம்மனை அத்தன் இவர்—என்மேல் மிகுந்தஅன்பையுடைய தாயுந்தந்தையுமாகிய இவர்கள், வன்பு உடை அவுணர்கள் வரவு காண்பரேல்—வன்கண்மையையுடைய அசுரர்களது வருகையைக்காணுவார்களாளுல், துன்பு உடை மனத்தர் ஆய்—துன்பமிக்க மனத்தையுடையவர்களாய், துளங்கி ஏங்கி—நடுங்கி ஏக்கமுற்று, என்படுவார் கொல்—என்னபாடுபடுவார்களோ, அறிகிலேன் எனும்—அறியேனென்று நினைப்பான் எ—று.

காண்பரேல் என்படுவார் என இயையும். இன்சொற்கூறினும் மெலியினும் பணியினும் இரங்காரென்பதுபோதர 'வன்புடையவுணர்' என்றான். (உங)

பொன்னகர் கரிந்ததும் புதல்வ னாகுமென்
றன்னையிம் முதுநகர் தந்து தானவர்
துன்னருஞ் சிறையிடு துயருங் கேட்டபி
னென்னினைந் திரங்குமோ வீன்ற தாயெனும்.

இ—ள்: பொன்னகர் கரிந்ததும்-சுவர்க்கலோகமெரியப்பெற்றதையும், தானவர்—அசுரர்கள், புதல்வன் ஆகும் என் தன்னை இ முது நகர் தந்து—புத்திரனாகிய என்னை இந்தப்பழையநகரத்திற்கொணர்ந்து, துன்ன அரும் சிறை இடு துயரும்—அணுகுதற்கரிய சிறையில்வைத்த துயரநிகழ்ச்சியையும், கேட்டபின்—கேள்விப்பட்டவுடன், ஈன்ற தாய்—என்னைப்பெற்றதாய், என் நினைந்து இரங்குமோ-யாதுநினைத்துவருந்துவாளோ, எனும்—என்றுநினைப்பான் எ—று.

மைந்தர்மாட்டுப் பேரன்புடைமையில் தாயேசிறந்தாளாதலின் தந்தையைவிடுத்து 'ஈன்றதாய்-என்னினைந்திரங்குமோ' என்றான். (உச)

பன்னெடு மாயைகள் பயின்ற தானவ
ரன்னையொ டத்தனை யாய்ந்து பற்றியென்
முன்னுறக் காண்டகு முறையி னுய்ப்பினு
மென்னுயிர் பின்னரு மிருக்குங் கொல்லெனும்.

இ—ள்: பல் நெடு மாயைகள் பயின்ற தானவர்—பலவகையான பெரியமாயங்களைக்கற்ற அசுரர்கள், அன்னையொடு அத்தனை ஆய்ந்து பற்றி—தாயையுந்தந்தையையுந்தேடிப்பிடித்து, என் முன் உற-எனக்குமுன்னே, காண் தகு முறையின் உய்ப்பினும்—காணத்தக்கவாறு கொணர்ந்துநிறுத்தினுலும், பின்னரும்—அதன்பின்னும், என் உயிர் இருக்கும் கொல்—என்னுடையஆன்மா இறவாதிருக்குமா?, எனும்—என்று நினைப்பான் எ—று.

உம்மை முன்னையது சிறப்பு, பின்னையது எச்சம். சூழ்ச்சிசெய்து தேடிப்பற்றவல்லாரென்பான் 'பன்னெடுமாயைகள்பயின்றதானவர்' என்றான். உடனேயிறந்துபடுவேனென்பான் 'என்னுயிர்பின்னருமிருக்குங்கொல்' என்றான்.

ஆற்றருஞ் செல்லலு ளழுந்தும் பான்மையான்
மேற்றிகழ் பரஞ்சுடர் விமலற் போற்றியே
நோற்றனர் முத்தியி னுழைகுற் றார்கொலோ
பேற்றின ரிருந்தசொற் பிறந்த தில்லெனும்.

இ—ள்: பேற்றினர்-என்னைப்பெற்ற தாய்தந்தையர்கள், ஆற்ற அரும் செல்லலுள் அழுந்தும் பான்மையால்—சகித்தற்கரிய துன்பத்திலகப்பட்டதன்மையி

னல், மேல் திகழ் பாஞ்சுடர் விமலன் போற்றி--மேலாகவிளங்குகின்ற பாஞ்சோதிமயமான சிவபிரானைத்தியானித்து, நோற்றனர்—தவஞ்செய்து, முத்தியில் நுழைகுற்றார் கொல்—மோட்சத்திற்சேர்ந்தார்கள் போலும், இருந்த சொல் பிறந்தது இல்—(எங்கேயாயினும்) இருக்கின்றார்களென்றசொற்பிறக்கவில்லை, எனும்—என்று சிந்திப்பான் எ—று.

முதலாகமதிக்கப்படுகின்றவென்பான் ‘மேற்றிகழ்’ என்றான். கடுந்துயரில் நெடுநாளமிழ்ந்தினார்க்கு இகபோகங்களில் வெறுப்புத்தோன்றுதலுண்மையின் இவ்வாறுநினைந்தான். (உ௬)

> தீங்கதிர்ப் பகையொடு செருமு யன்றநாட்
> டாங்கியெற் கொண்டுழித் தந்த மிற்றிட
> வாங்கனம் வீழ்ந்ததா லதற்கு மேற்பட
> யாங்குசென் றதுகொலோ யானை யென்றிடும்.

இ—ள்: யானை—ஐராவதயானை, தீ கதிர் பகையொடு செரு முயன்ற நாள்—கொடியகிரணங்களையுடையசூரியனதுபகைவனாகியபானுகோபனுடன் போரைச்செய்தநாளில், தாங்கி என் கொண்டுழி—பிடர்மேல்வைத்து என்னைச்சுமந்தபொழுது, தந்தம் இற்றிட—கோடுகள்முரிய, ஆங்கனம் வீழ்ந்தது—அங்கே விழுந்தது, அதற்கு மேற்பட---அதன்பின்பு, யாங்கு சென்றது கொல்—எவ்விடத்திற்போனதோ, என்றிடும்—என்றுநினைப்பான் எ—று.

முயன்றநாள் வீழ்ந்தது எனஇயையும். ஆங்கனமென்றது போர்க்களத்தை.

> பிறப்புறு வைகலைத் தொட்டுப் பின்னரே
> யிறப்புறு நாள்வரை யாவர்க் காயினு
> முறப்படு துய்ப்பெலா மூழி னூற்றமால்
> வெறுப்பதென் னவுணரை வினையி னேனெனும்.

இ—ள்: பிறப்பு உறு வைகலை தொட்டு—பிறந்தநாளைமுதலாகக்கொண்டு, பின்னர் இறப்பு உறும் நாள் வரை—ஆயுண்முடிந்து இறத்தலையடையும்நாள்காறும், யாவர்க்கு ஆயினும்—எவர்களுக்கானாலும், உற படு துய்ப்பு எலாம்—அடைதற்பாலனவாகிய அனுபவங்களெல்லாம், ஊழின் ஊற்றம்---ஊழ்வினையின்பயனும், வினையினேன்—பாவியேன், அவுணரை வெறுப்பது என்—அசுரரை வெறுக்கவேண்டியதென்ன?, எனும்—என்றுநினைப்பான் எ—று.

பின்னர்-பின்வயதில். உறு என்னும்பகுதியுடன் அம் என்னுஞ்செயப்படுபொருள்விகுதிபுணர்ந்து ஊற்றமெனமுடிந்தது. யாம் முற்பிறப்பிற்செய்தவினை இத்துணைத்துன்புகளைத்தருதற்குக்காரணமாயிருப்ப அசுரரைவெறுப்பதாலென்னபயனென்பதுகுறிப்பு. (உ௮)

> தாவறு தொன்னகர் விளியத் தந்தைதா
> யாவியொ டிரிந்திட வளிய னோர்மகன்
> வீவருஞ் சிறைப்பட மேலை நாட்புரி
> தீவினை யாவதோ தெளிகி லேனெனும்.

இ—ள். தா அறு தொல் நகர் விளிய—குற்றமற்ற பழைய சுவர்க்கலோகம் அழியவும், தந்தை தாய் ஆவியொடு இரிந்திட—பிதாவும் மாதாவும் உயிருடனலைந்துதிரியவும், அளியன் ஓர் மகன் வீவு அரும் சிறை பட—அன்புள்ள ஏகபுத்திரனாகியயான் அழியாதசிறையிலகப்படவும், மேலைநாள் புரி தீவினை யாவதோ—முன்னாளிற்செய்த பாவம்யாதோ?, தெளிகிலேன் எனும்—அறியேனென்றுநினைப்பான் எ—று.

தொன்றுதொட்டுச்சிறப்பாற்குறைவற்றிருக்கும் நகரமென்பான் 'தாவறு தொன்னகர்' என்ருன். இனம் செல்வம் சுகம் முதலாகியவெல்லாவற்றையுமிழந்து உயிரைமாத்திரமுடையவராய் அலையவென்பான் 'ஆவியொடிரிந்திட' என்ருன். அருமைமகனென்பான் 'அளியனேர்மகன்' என்ருன். (உகூ)

துப்புறழ் சடையினன் சூரற் கீறிலா
வப்பெரு வரத்தினை யளித்த லாலவன்
மெய்ப்பட விளிகிலன் வீடுஞ் செய்கில
னெப்பொழு திச்சிறை தீரு மென்றிடும்.

இ—ள்: துப்பு உறழ் சடையினன்—பவளம்போன்ற (சிவந்த) சடையையுடைய சிவபிரான், சூரற்கு ஈறு இலா அ பெரு வரத்தினை அளித்தலால்— சூரபன்மனுக்கு இறத்தலில்லாமையாகிய அந்தப்பெரியவரத்தைக்கொடுத்தலினுல், அவன் மெய்ப்பட விளிகிலன்—அவன் உண்மையாக இறக்கமாட்டான், வீடும் செய்கிலன்—விடுதலையுஞ்செய்யான், (ஆதலால்), இ சிறை எப்பொழுது தீரும்—இந்தச்சிறை எக்காலத்தில்நீங்கும், என்றிடும்—என்றுநினைப்பான் எ—று.

நிச்சயமாகவென்பான் 'மெய்ப்பட' என்ருன். சூரபன்மனிறத்தல் அல்லது மனமிரங்கிவிடுதல் என்னுமிரண்டுள் ஒன்றுமில்லாமையால் இச்சிறை எஞ்ஞான்றுந்தீராது என்பதாம். (ஙo)

மட்டறு வெறுக்கையு நகரும் வாழ்க்கையும்
விட்டனர் கடந்தனர் மேலை யோரென
வுட்டெளிந் தகன்றில னுவர்பி ணித்திடப்
பட்டன னேகொலோ பாவி யேனெனும்.

இ—ள்: மேலையோர்—எனதுபெற்ருர்கள், மட்டு அறு வெறுக்கையும் நகரும் வாழ்க்கையும் விட்டனர்—அளவிறந்த செல்வங்களையும் நகரத்தையும் வாழ்வையும் கைவிட்டு, கடந்தனர் என—ஒளித்தோடினுர்களென்று, உள் தெளிந்து அகன்றிலன்—மனத்திற்றெளிந்து தப்பியோடாமல், பாவியேன்—பாவியாகியநான், உவர் பிணித்திட பட்டனனே– இந்தஅசுரர்கள்கட்ட அகப்பட்டேனே!, எனும்—என்றுநினைப்பான் எ—று.

மூத்தோரொழுகியவாறொழுகாது புத்தியீனத்தாலகப்பட்டேனேயென்பது குறிப்பு. துன்பமனுபவிக்கநேர்ந்தமையாற் 'பாவியேன்' என்ருன். எ-இரக்கம்.

மாற்றல னிவ்வுயிர் வசையு ருவகை
போற்றலன் சூரவர்பாற் புகுந்த புன்கணைத்
தேற்றலன் றமியனுந் தெளிகி லன்சிறை
யாற்றலே னாற்றலே னைய கோவெனும்.

இ—ள்: இவ் உயிர் மாற்றலன்—இந்த உயிரைப்போக்குகின்றிலேன், வசை உருவகை போற்றலன்—(அல்லது) நிந்தைசாராவண்ணம் காக்கின்றிலேன், சூரவர் பால் புகுந்த புன்கணை தேற்றலன்—என்பெற்ருரிடத்துவந்த துன்பத்திற்கு ஆறுதல்கூறவும் பெற்றிலேன், தமியனும் தெளிகிலன்—யானுந்தேறப்பெற்றிலேன், சிறை ஆற்றலன் ஆற்றலன்—சிறைவேதனையையுந்தாங்கமாட்டேன் தாங்கமாட்டேன், ஐயகோ—ஐயோ!, எனும்—என்றுநினைப்பான் எ—று.

நிந்தைசாராவண்ணங்காப்பதும் காத்தலியலாவழியிறப்பதுமே ஆண்மை அவ்விருவழியையும்விட்டேன், பிதாமாதாக்களுக்கு யாதேனுமிடுக்கணேரின் மைந்தர் தேற்றங்கூறித்தீர்ப்பதேகடன் அதனையுஞ்செய்யாதொழிந்தேன், இவற்றுளொன்றையுஞ் செய்யாதொழியின் யானுய்தற்கேற்றவழியையாவது கடைப்பிடி

த்தல்வேண்டும் அதனையுஞ்செய்திலேன், சகித்தற்கரிய சிறைத்துன்பத்திலகப்பட்டேன், என்று தனக்குநேர்ந்தஆபத்தையெண்ணி இனைந்தானென்பது குறிப்பு.

துறந்ததோ பேரறந் தொலையுந் தீப்பவஞ்
சிறந்ததோ மாதவப் பயனுந் தேய்ந்ததோ
குறைந்ததோ நன்னெறி கூடிற் றேகலி
யிறந்ததோ மறைசிவ னில்லை யோவெனும்.

இ—ள்: பேர் அறம் துறந்ததோ—சிறந்த தருமம் நீங்கியதா?, தொலையும் தீ பவம் சிறந்ததோ—அழிவடைகின்ற கொடிய பாவம் சிறப்பெய்தியதா?, மாதவ பயனும் தேய்ந்ததோ—பெரிய தவத்தால்வரும்பயனும் வலிகுன்றியதா?, நல் நெறி குறைந்ததோ—சன்மார்க்கம்தாழ்ந்ததா?, கலி கூடிற்றே—கலியுகம்பிறந்துவிட்டதா?, மறை இறந்ததோ—வேதம் அழிந்ததா?, சிவன் இல்லையோ—கடவுள் இல்லையோ, எனும்—என்றுநினைப்பான் எ—று.

தலையெடுத்தோங்குந்தருமமென்பான் 'பேரறம்' எனவும், தருமத்தின் வளர்ச்சியைக்கண்டவுடன் சாய்ந்து தேயும்பாவமென்பான் 'தொலையுந்தீப்பவம்' எனவும், எண்ணியவைகளையெல்லாமெய்துவிக்குந் தவமென்பான் 'மாதவம்' எனவும், நீதிநெறியென்பான் 'நன்னெறி' எனவும், தருமமுதலியனதாழ்வெய்தப் பாவந்தழைத்தோங்குவது கலியுகத்தியல்பாதலின் 'கூடிற்றேகலி' எனவும், தவமுதலியனசெய்வார்நற்பலனும் அல்லனசெய்வார்தீப்பலனும் அனுபவிப்பரெனவேதங்கள்நிச்சயித்திருப்பவும் மாறாய்நிகழுதலின் 'இறந்ததோமறை' எனவும், இவற்றையெல்லாமியற்றுவார் இறைவராதலின் அவரிருப்பின் இவ்வாறு மாறிநிகழாவென்பதுபோதர 'சிவனில்லையோ' எனவும் எண்ணினான். (நக)

கூடலர் வருத்தலிற் குரவர் தங்களைத்
தேடினர் விரைவுடன் சென்ற தேவர்போ
லோடினர் புகாவகை யொழிந்து ளோரையும்
வீடருஞ் சிறையிடை வீட்டி னேனெனும்.

இ—ள்: கூடலர் வருத்தலில்—பகைவர்களாகிய அசுரர்கள்வருத்துதலால், குரவர் தங்களை தேடினர் விரைவுடன் சென்ற தேவர் போல்— என்பெற்றோரைத் தேடி விரைவிற்போனதேவர்களைப்போல, ஓடினர் புகாவகை—ஓடிப்போகாவண்ணம், ஒழிந்துளோரையும்— எஞ்சியவர்களையும், வீடரும் சிறையிடை வீட்டினேன்—விடுதற்கரிய சிறையிலகப்படுத்தினேன், எனும்—என்றுநினைப்பான் எ—று.

தேவர்கள் அவுணர்செய்யுந்துன்பத்தை முறைமையிடும்படி இந்திரனிருக்குமிடந்தேடிப்போயதை முற்காண்டத்திற்றேவர்புலம்புறுபடலத்தாலுணர்க. ஒழிந்துளோரென்றது சிறையிலிருப்பாருட்டன்னையொழித்ததேவர்களை. பானுகோபன் சுவர்க்கலோகத்திற்படையெடுத்துவந்தபோது போர்செய்யுமாறுதெருட்டினனாதலின் இங்ஙனஞ்சிந்தித்தான். (நச)

அந்தியின் மறைமொழி யயர்த்து வைகினன்
சந்தியில் வினைகளுந் தழலு மோம்பல
னெந்தையை வழிபடு மியல்பு நீங்கினன்
முந்தையி னுணர்ச்சியு முடிந்து ளேனெனும்.

இ—ள்: அந்தியில் மறைமொழி அயர்த்து வைகினன்—சாயங்காலத்திற்குரிய வேதமந்திரங்களை மறந்திருந்தேன், சந்தியில் வினைகளும் தழலும் ஓம்பலன்—சந்தியாவந்தனத்தையும் ஔபாசனத்தையுஞ்செய்திலேன், எந்தையை வழிபடும்

இயல்பும் நீங்கினன்—எங்கள்பரமபிதாவாகிய சிவபெருமானைப்பூசிக்கும்வழக்கத்தையுந் தவிர்ந்தேன், முந்தையின் உணர்ச்சியும் முடிந்துளேன்—பழைய நல்லுணர்வுகளும்நீங்கப்பெற்றேன், எனும்—என்றுசிந்திப்பான் எ—று.

காலை உச்சி மாலை என்னும்மூன்றுகாலங்களிலும் உபஸ்தானஞ்செய்யுமந்திரங்கள் வெவ்வேறும், அவற்றுட் சாயங்காலத்திற்கூறப்படும் மந்திரத்தை மறந்தானென்க. சந்தியில்வினை-சந்தியாகாலத்திற்செய்யப்படுந்தொழில். நித்தியானுட்டானங்கள் தவறவே அவற்றால்வளரும்நல்லறிவுங் குறைந்ததென்பான் 'முந்தையினுணர்ச்சியுமுடிந்துளேன்' என்றான். (ரு௫)

மெய்யுயி ரகன்றிட விளிகி லேனெனி
னெய்புறு மலக்கணீத் தினிது மேவலன்
வையுறு நெடும்புரி வடிவம் வெந்தெனப்
பொய்யுடல் சுமந்தனன் புலம்புற் றேனெனும்.

இ—ள்: மெய் உயிர் அகன்றிட விளிகிலேன்—சரீரத்தினின்றும் ஆன்மாப்பிரிய இறந்திலேன், எனின்—அங்ஙனமிறவாவிடின், எய் உறும் அலக்கண் நீத்து இனிது மேவலன்—இளைப்பைத்தருகின்ற துன்பத்தினின்று நீங்கிச் சுகமாயிருந்திலேன், வை உறும் நெடும் புரி வடிவம் வெந்து என—வைக்கோலினாற்செய்யப்பட்ட நெடிய பழுதையின்வடிவம் தீப்பற்றியெரிந்தாற்போல, பொய் உடல் சுமந்தனன்—பொய்மையானசரீரத்தைச்சுமந்து, புலம்பு உற்றேன் எனும்—வருத்தமுற்றேனென்றுநினைப்பான் எ—று.

சுகத்தோடிருத்தல்வேண்டும் அல்லது இறத்தல்வேண்டும் இரண்டுமின்றி இருந்துமிறந்தவனாகின்றேன் என்பதுகுறிப்பு. சாரமற்றவுடலென்பான் 'பொய்யுடல்' என்றான். வைக்கோற்பழுதை எரிந்தகாலத்திலும் முந்தியவடிவமாகக்காட்சிக்குத் தோற்றுமென்க. (ரு௬)

சொல்லுவ தென்பிற தொல்லை வைகலின்
மெல்லென வாற்றிய வினையின் பான்மையா
லல்லுறழ் மிடற்றினெம் மடிக ளேயெமக்
கெல்லையி லித்துய ரியற்றி னானெனும்.

இ—ள்: தொல்லை வைகலில்—முன்னாளில், மெல் என ஆற்றிய வினையின் பான்மையால்—அற்பமற்பமாகச்செய்த பாவத்தின்வலியால், அல் உறழ் மிடற்றின் எம் அடிகளே—இருளையொத்த (கரிய) கண்டத்தையுடைய எங்கள்தலைவராகியசிவபெருமானே, எமக்கு எல்லை இல் இ துயர் இயற்றினான்—எங்களுக்கு அளவிறந்த இந்தத்துன்பத்தைவருவித்தார், பிற சொல்வது என்—வேறுசொல்வதென்ன?, எனும்—என்றுநினைப்பான் எ—று.

பிறசொல்லுதல்-அசுரரைவைதன்முதலியன. (ரு௭)

ஆவியு முலகமு மனைத்து மாகியு
மோவியுங் கருணையி னுருக்கொண் டாடல்செய்
தேவர்க டேவனாஞ் சிவன்மற் றல்லதை
யேவரென் குறையுணர்ந் திரங்கு வாரெனும்.

இ—ள்: ஆவியும் உலகமும் அனைத்தும் ஆகியும்—உயிர்களும் உலகங்களும் பிறபொருள்களுமாயிருந்தும், ஓவியும்—ஒழிந்திருந்தும், கருணையின் உரு கொண்டு ஆடல் செய்—கிருபாமூர்த்தியாயிருந்து திருவிளையாடலைச்செய்கின்ற, தேவர்கள் தேவன் ஆம் சிவன் அல்லது—முதற்கடவுளாகியசிவபிரானேயன்றி,

என் குறை உணர்ந்து இரங்குவார் எவர் எனும்— என்னுடைதுன்பத்தையறிந்திரங்கத்தக்கவர்கள்வேறியாரென்றுநினைப்பான் எ—று.

பிறபொருள்கள் உடல் புலம்முதலியன. இறைவர் உலகம்நடைபெறுங்காலத்தில் எல்லாப்பொருள்களிலும்வியாபித்துநிற்றலும், அழியுங்காலத்தில் தமதுவியாபகத்தையொடுக்குதலும் இயல்பாதலின் 'அனைத்துமாகியும் ஒவியும்' என்றான். அருள்பெற்றாரே அவரைக்காண்பராதலின் 'கருணையினுருக்கொண்டு' என்றான். படைத்தன்முதலியதொழில்களைநடாத்துகின்றவென்பான் 'ஆடல்செய்' என்றான். அனைத்துமாகியும் கருணையினுருக்கொண்டும்நிற்றலால் தன்னிடரையறிந்து இரங்குவாரென்பதும், கடவுளன்றிப் பிறர் அறியவும் இரங்கித்தீர்க்கவும் வல்லாரல்லரென்பதும் குறிப்பு. (௩௮)

பெறலருந் திருவெலாம் பிழைத்துச் சூருயி
ரறுவது மவுணர்க ளவிந்து மாய்வதுஞ்
சிறையிது கழிவதுந் தீர்கி லாவசை
யிறுவது மொருபக லெய்து மோவெனும்.

இ—ள்: பெறல் அரும் திரு எலாம் பிழைத்து— பெறுதற்கரிய செல்வங்களெல்லாவற்றையுமிழந்து, சூர் உயிர் அறுவதும்—சூரபன்மனுடையஉயிர் ஒழிவதும், அவுணர்கள் அவிந்து மாய்வதும்—மற்றையசுரர்கள் வலிகுன்றியிறப்பதும், சிறை இது கழிவதும்—இந்தச்சிறைநீங்குவதும், தீர்கிலா வசை இறுவதும்—நீங்கக்கூடாதவசைநீங்குவதும், ஒரு பகல் எய்துமோ—யாதேனுமொருநாளில்நிகழுமா?, எனும்—என்றுநினைப்பான் எ—று.

திருஎன்றதீண்டு அரசியற்குரிய அங்கங்களை. (௩௯)

நூறொடர் கேள்வியோர் நுணங்கு சிந்தைசேர்
கூறுடை மதிமுடிக் குழகன் றன்னருட்
பேறுடை யேனெனிற் பெருந்து யர்க்கட
லேறுவன் வினையினேற் கில்லை கொல்லெனும்.

இ—ள்: நூல் தொடர் கேள்வியோர் நுணங்கு சிந்தை சேர்— நூற்கேள்விகளையுடைய ஞானிகளது நுண்மையான அறிவில்வெளிப்படுகின்ற, கூறு உடை மதி முடி குழகன் தன்—பிறையையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது, அருள் பேறு உடையேன் எனில்— கிருபையாகிய பேற்றைப்பெற்றேனேயானால், பெரும் துயர் கடல் எறுவன்—பெருந்துன்பமாகிய சமுத்திரத்தினின்றுகரையேறுவேன், வினையினேற்கு இல்லை கொல்—பாவியேனுக்கு அப்பேறு இல்லையோ?, எனும்—என்றுநினைப்பான் எ—று.

நூல் தொடர் கேள்வி-நூல்களிற்றொடருகின்றகேள்வி. கூறுடைமதி-தன்னுடையவடிவத்திலொருபாகத்தைமாத்திரமுடையனாய்த்தோன்றுகின்ற சந்திரன். துயரைக் கடலென்றதற்கேற்ப எறுவன் என்றான். அருள்பெறுதற்குத் தகுதியில்லாதேனென்பான் 'வினையினேன்' என்றான். குழகன்-அழகன். (௪௦)

இத்திற மளப்பில வெண்ணி யெண்ணியே
மெய்த்துய ருழந்துவெய் துயிர்த்து விம்மியே
யத்தலை சுற்றிய வமரர் யாவருந்
தத்தமி லிரங்குறச் சயந்தன் வைகினான்.

இ—ள்: இத்திறம்—இப்படி, அளப்பு இல எண்ணி எண்ணி— அளவிறந்த எண்ணங்களையெல்லாம் நினைத்துநினைத்து, மெய் துயர் உழந்து— மெய்ம்மையாகிய துன்பத்தையனுபவித்து, வெய்துயிர்த்து விம்மி— பெருமூச்சுவிட்டு

விம்மி, அத்தலை சுற்றிய அமரர் யாவரும் தத்தமில் இரங்குற— அவ்விடத்திற்சூழ்ந்திருந்த தேவர்களெல்லோரும் தங்கள்தங்களுள்ளேவருந்த, சயந்தன் வைகினன்—சயந்தன் சிறையிலிருந்தான் எ—று.

விம்மி வைகினன் எனஇயையும். பெருந்துயரென்பார் 'மெய்த்துயர்' எனவும், அவனுடன்சிறையிலிருக்கின்றவென்பார் 'அத்தலைசுற்றிய' எனவும், தங்கள்வருத்தத்தை ஒருவர்க்கொருவர்கூறின் அசுரர்ச்சுறுத்துவராதலின் சயந்தனைப்போலவே தம்முளெண்ணிவருந்தினரென்பார் 'தத்தமிலிரங்குற' எனவும் கூறினர். (சுக)

கண்டக னுதாவகன் கராளன் மாபலன்
சண்டக னிசங்கனே சங்க னாதியா
வெண்டரு மவுணர்க ளெண்ணி லோர்குழீ இக்
கொண்டனர் சிறைக்களங் குறுகி யோம்பினர்.

இ—ள்: கண்டகன்......சங்கன் ஆதியா—கண்டகனும் உதாவகனும் கராளனும் மாபலனும் சண்டகனும் நிசங்கனும் சங்கனும் முதலாக, எண் தரும் அவுணர்கள் எண் இலோர்—மதிப்புவாய்ந்த அளவிறந்தஅசுரர்கள், குழீஇ கொண்டனர்—கூட்டமாய், சிறைக்களம் குறுகி—சிறைச்சாலையையணுகி, ஓம்பினர்—காவல்செய்தார்கள் எ—று.

சிறையிருப்போர்தப்பியோடாமலும் பிறருட்புகாமலும் தடுத்துக் காக்கவல்லாரென்பதுபோதர 'எண்டருமவுணர்கள்' என்றார். (சுஉ)

ஆயதோர் காப்பினோ ரறுமு கத்தனி
நாயகன் றூதுவ னணுகு மப்பக
லேயுறு சயந்தனை யிமைப்பி லாரொடு
காயெரி யாமெனக் கனன்று சுற்றினர்.

இ—ள்: ஆயது ஓர் காப்பினோர்—அந்தக்காவலாளர்கள், அறுமுக தனி நாயகன் தூதுவன் நணுகும் அ பகல்—முருகக்கடவுளது தூதராகிய வீரவாகுதேவர்வருகின்றஅத்தினத்தில், ஏயுறு சயந்தனை—சிறையிலிருக்கின்ற சயந்தனை, இமைப்பிலாரொடு—மற்றுந்தேவர்களுடன், காய் எரி ஆம் என கனன்று—சுடுகின்ற அக்கினியைப்போலக்கோபித்து, சுற்றினர்—வளைந்தார்கள் எ—று.

அறுமுகத்தனிநாயகன்-ஆறுமுகங்களையுடைய ஒப்பற்ற தலைவன். பெருஞ்சீற்றங்கொண்டென்பார் 'காயெரியாமெனக்கனன்று' என்றார். (சுங)

வேறு.

மன்னு நங்கோன் றன்பணி நில்லா மகவேந்து
மின்னு டானும் யாண்டுறு கின்றார் விரைவாகிச்
சொன்னா லுய்வீ ரல்லது மாவி தொலைவிப்பே
முன்னா ளேபோ லெண்ணலி ருண்மை மொழிகென்றார்.

இ—ள்: மன் ஆம் நம் கோன் தன் பணி நில்லா மகவேந்தும்—முதல்வனாகியஎங்களரசனது ஏவற்படியமைந்தொழுகாத இந்திரனும், மின்னாள் தானும்—அவனதுமனைவியும், யாண்டு உறுகின்றார்—எங்கேயிருக்கின்றார்கள், விரைவு ஆகி சொன்னால் உய்வீர்—விரைவிற்சொன்னீரானால் உய்ந்திருப்பீர்கள், அல்லது உம் ஆவி தொலைவிப்பேம்—சொல்லாவிட்டால் உங்களுயிரையழிப்போம், முன் நாள் போல் எண்ணலிர்—முன்னையநாட்களைப்போலநினையாதீர், உண்மை மொழிக-உண்மையைச்சொல்லுங்கள், என்றார்-என்று(காவலாளர்கள்) கூறினார்கள் எ—று.

நம்மனோர்க்கும் எங்களரசனே அதிபதியாயினன் அவனுடையசொற்கீழ் உங்களரசனாயிருந்த இந்திரனும் அமையவேண்டும் என்பதுபோதர 'மன்னுநங்

கோன்றன்பணிநில்லாமகவேந்து' எனவும், முன்னாட்களில் வினையபோதுசொல்லாதொழியவும் இரங்கிவிட்டோம் இன்றுசொல்லாதொழிவீரேற்றவறுதுகொல்வோமென்பார் 'முன்னாளேபோலெண்ணலிர்' எனவும் கூறினார். (சச)

என்னுங் காலைக் கேட்ட சயந்த னெம்மாயு
மன்னும் வானின் றோடின கண்டா மற்றன்னோர்
பின்னங் குற்ற தன்மையு மோராம் பிணிநோயுட்
டுன்னுந் தீயேம் யாவ துரைத்துஞ் சூழ்ந்தென்றான்.

இ--ள்: என்னும் காலை—என்றுஅவுணர்வினவியபொழுது, கேட்ட சயந்தன்—அதனைக்கேட்டசயந்தன், எம் ஆயும் மன்னும் வான் நின்று ஓடின கண்டாம்—எனது தாயுந்தந்தையும் விண்ணுலகத்தினின்று ஓடியதைக்கண்டோம், அன்னோர் பின் அங்கு உற்ற தன்மையும் ஓராம்—அவர்கள் பின்புஅங்கே வந்ததன்மையையுமறிந்திலோம், பிணி நோயுள் துன்னும் தீயேம்—சிறையாகியதுன்பத்திலகப்பட்டிருக்கின்றபாவியேம், சூழ்ந்து யாவது உரைத்தும்—ஆலோசித்துஎதனைச்சொல்வோம், என்றான்—என்றுவிடைகூறினான் எ-று.

சயந்தன் என்றான் எனஇயையும். உங்கள்சேனைகள்வளைந்தவுடன் புறப்பட்டோடி யாஞ்சிறைப்படும்வரையில்வந்திலாதலின் அவர்சென்றவிடத்தையெவ்வாறுஅறிந்துகூறுவோம் என்றான் என்பதாம். பிணி-சிறை. (சரு)

விண்டோய் மன்னன் முன்னொரு நாண்மெல் லியறன்னைக்
கொண்டே போனா னின்னுழி யென்று குறிக்கொள்ளேங்
கண்டோ மல்லங் கேட்டிலெ முள்ளங் கழிவெய்தப்
புண்டோய் கின்றோ மென்சொல்வ தென்றார் புலவோர்கள்.

இ—ள்: விண் தோய் மன்னன்— சுவர்க்கலோகத்திலரசுசெய்திருந்த இந்திரன், முன் ஒரு நாள்—முன்னொருநாளில், மெல் இயல் தன்னை கொண்டு போனான்—மெல்லியசாயலையுடையளாகிய இந்திராணியையுடன்கொண்டுஓடிப்போனான், இன்னுழி என்று குறிக்கொள்ளேம்—இன்னவிடம்போனானென்றறியேம், கண்டேம் அல்லம் கேட்டிலம்—போனவிடத்தைக்கண்டிலேம் யாரேனுஞ்சொல்லக்கேட்டிலேம், உள்ளம் கழிவு எய்த புண் தோய்கின்றோம்—மனம்மிகப்புண்படப்பெற்றோம், என் சொல்வது— யாதுசொல்வோம், என்றார்—என்றுகூறினார்கள், புலவோர்கள்—அங்கிருந்ததேவர்கள் எ—று.

மனம் பலவாறு ஆலோசித்துவருந்துகின்றதென்பார் 'உள்ளங்கழிவெய்தப் புண்டோய்கின்றோம்' என்றார். (சசு)

சொற்றா ரிவ்வா றன்னது போழ்திற் றுணிவெய்தி
யுற்றார் போலு மிங்கிவ ரெல்லா முளமொன்றி
யெற்றா லுண்மை யோதுவ ரின்னோ ரெனவெண்ணாச்
செற்றா ராகுங் காவலர் துன்பஞ் செய்கின்றார்.

இ—ள்: இவ்வாறு சொற்றார்—(சயந்தனுந்தேவர்களும்)இவ்வாறுகூறினார்கள், அன்னது போழ்தில்—அப்பொழுது, செற்றார் ஆகும் காவலர்—பகைவராகியகாவலாளர்கள், இவர் எல்லாம்—இவர்களெல்லோரும், உளம் ஒன்றி—மனமொருமித்து, துணிவு எய்தி உற்றார் போலும்— தைரியங்கொண்டிருக்கின்றார்கள்போலும், இன்னோர்—இவர்கள், எற்றால் உண்மை ஓதுவர்—யாதுசெய்தாலுண்மைசொல்வார்கள், என எண்ணா—என்றுஆலோசித்து, துன்பம் செய்கின்றார்—அவர்களைத்துன்பப்படுத்தத்தொடங்கினார்கள் எ-று.

சொற்றுரிவ்வாறு என்றது முற்செய்யுளிரண்டையுமனுவதித்தது. சிறிது மிரக்கமற்றுத்துன்பஞ்செய்பவராதலின் 'செற்றுராகுங்காவலர்' என்றுர். (சஎ)

வென்னஞ் சென்னக் காயெரி யென்ன மிகுதீஞ்சொன்
முன்னஞ் சொற்றே ஷவவர் தெழிப்பர் முரணோடுங்
கன்னஞ் செல்லத் தோமர முய்ப்பர் கடைகிற்பார்
சின்னஞ் செய்வார் போலுடன் முற்றுஞ் சேதிப்பார்.

இ—ள்: வெல் நஞ்சு என்ன காய் எரி என்ன மிகு தீம் சொல்—வெல்லுகின்றநஞ்சைப்போலவும் சுடுகின்ற அக்கினியைப்போலவும் வருத்துகின்றகொடிய சொல்லை, முன்னம் சொற்று—எதிர்நின்றுகூறி, வைவர்—ஏசுவார்கள், தெழிப்பர்– உரப்புவார்கள், முரணோடும்—வலிமையுடன், கன்னம் செல்ல தோமரம் உய்ப்பர்—காதினுட்புகும்படி தோமராயுதத்தை நுழைப்பார்கள், கடைகிற்பார்—நுழைத்தபின் அவ்வாயுதத்தை முறுக்குவார்கள், சின்னம் செய்வார் போல் உடல் முற்றும் சேதிப்பார்– அடையாளப்படுத்துகிறவர்களைப்போலச் சரீரமுழுவதையுந்துணிப்பார்கள் எ–று.

உண்டவுடன்கொல்லும்நஞ்சையும் பட்டவுடன்சுடுந்தீயையும்போல அவர் கூறியகடுஞ்சொல் கேட்டவுடனுயிர்பதைக்கச்செய்யுமென்க. தோமரம்-நுனிகூர்மையாகவும் தண்டாகாரமாயும் செய்யப்பட்ட ஓராயுதம். இது குந்தமெனவும்படும். கொடியநஞ்சென்பார் 'வென்னஞ்சு' எனவும், ஊன்றிநுழைப்பரென்பார் 'முரணோடும்-உய்ப்பர்' எனவும், ஒவ்வொருவர்க்கும்வேறுவேறாக அங்கவீனமாகியஅடையாளத்தைவைப்பவர்கள்போலென்பார் 'சின்னஞ்செய்வார்போல்' எனவும் கூறினுர். (சஅ)

கண்டந் துண்டஞ் செய்திடு மங்கங் கடிதொன்றிப்
பிண்டந் தன்னிற் கூட வெகுண்டே பேராற்றல்
கொண்டங் கையால் வாள்கொடு மார்பங் குடைகிற்பார்
தண்டந் தன்னுன் மோதுவ ரன்னோர் தலைகீற.

இ—ள்: கண்டம் துண்டம் செய்திடும் அங்கம்—வேறுகும்படி துண்டாக்கப்பட்ட உறுப்புக்கள், கடிது ஒன்றி—விரைவில்ஒன்றுபட்டு, பிண்டம் தன்னில் கூட—(அத்தேவர்களது)சரீரத்திற்பொருந்த, வெகுண்டு–(காவலாளர்கள்) கோபித்து, பேர் ஆற்றல் கொண்டு—மிகுந்த வலிமையைக்கொண்டு, அங்கையால் வாள் கொடு– அகங்கையினுல் வாளையெடுத்து, மார்பம் குடைகிற்பார்– நெஞ்சைக்குடைவார்கள், அன்னோர் தலை கீற– அவர்களது தலை கிழியும்படி, தண்டம் தன்னுல் மோதுவர்—தண்டாயுதத்தாலடிப்பார்கள் எ—று.

பேராற்றல்கொண்டுகுடைதல்-ஊன்றிக்குடைதல். சிதைந்த அங்கங்கள்பொருந்துவது அமிர்தமுண்டமையால். (சகூ)

இத்தன் மைத்தாக் காவலர் யாரு மெண்ணில்லா
மெய்த்துன் பத்தைச் செய்திட மைந்தன் விண்ணோர்தங்
கொத்துந் தானு மாற்றல னுகிக் குலைவெய்தி
நித்தன் றன்னை யுன்னி யரற்று நிற்கின்றுன்.

இ—ள்: காவலர் யாரும்—காவலாளர்களெல்லோரும், இத்தன்மைத்து ஆ—இவ்வாறாக, எண் இல்லா மெய் துன்பத்தை செய்திட—அளவிறந்த சரீரவருத்தங்களை ச்செய்ய, மைந்தன்—சயந்தகுமாரன், விண்ணோர் தம் கொத்தும் தானும்—தேவர்கூட்டத்தாருந் தானுமாக, ஆற்றலன் ஆகி—தாங்கமாட்டாதவனுய், குலை

வு எய்தி—நிலைகுலைந்து, நித்தன் தன்னை உன்னி—சிவபிரானைநினைத்து, அரற்றுநிற்கின்றான்— புலம்புவானாயினன் எ--று. (௫௰)

சீற்றத் துப்போர் பல்படை கொண்டே செறுபோழ்து
மாற்றத் துன்பம் பட்டத லான்மெய் யழிவாகி
யீற்றுத் தன்மை சேர்ந்திலன் விண்ணோ ரிறைமைந்தன்
கூற்றிற் பட்டுச் செல்ல லுழக்குங் கொடியோர்போல்.

இ--ள்: சீற்ற துப்போர்—பெருங்கோபத்தையுடைய அசுரர்கள், பல் படை கொண்டு செறு போழ்தும்—பலபடைக்கலங்களால் ஊறுசெய்தபொழுதும், விண்ணோர் இறை மைந்தன்—இந்திரனது புதல்வனாகியசயந்தன், ஆற்ற துன்பம் பட்டது அலால்—மிகவுந்துயரத்தையெய்தியதேயன்றி, மெய் அழிவு ஆகி ஈற்றுத் தன்மை சேர்ந்திலன்—சரீரமழியப்பெற்று இறத்தலையடைந்திலான், கூற்றில் பட்டு செல்லல் உழக்கும் கொடியோர் போல்—யமனிடத்தகப்பட்டுத்துன்பத்தையனுபவிக்கின்றபாவிகளைப்போல எ--று.

பாவிகளுடையஉயிர் யமனுடையகையிலகப்பட்டபின் செய்தபாவங்களுக்குத்தக்கதண்டனைகளையனுபவித்துக்கொண்டு இறவாதிருத்தல்போலச் சயந்தன் அவுணரூறுசெய்தபோதும் அதனாலுண்டான உபத்திரவங்களையனுபவித்துக்கொண்டு இறவாதிருந்தான் என்பதாம். சீற்றத்துப்பு-கோபத்தினூக்கம். (௫௧)

நெஞ்சினில் வாலறி வெய்தின ரைம்புல நெறிநின்று
மெஞ்சிய மேல்வினை பெற்றில தேயென விறும்வண்ணந்
தஞ்செயல் வெய்யோர் செய்யவு மைந்தன் றமரோடுந்
துஞ்சில னூறும் பெற்றில னுற்றான் றுயரொன்றே.

இ—ள்: நெஞ்சினில் வால் அறிவு எய்தினர்—மனத்திற்றூய்மையான அறிவைப்பெற்றபெரியோர்கள், ஐம்புல நெறி நின்றும்— ஐம்புலன்களின்வழியேயொழுகியபோதும், எஞ்சிய மேல் வினை பெற்றிலது என— (இப்பிறப்பிலனுபவிக்கப்படாது) எஞ்சிநின்ற ஆகாமியவினை அவர்களைச்சாராதவாறுபோல, வெய்யோர்—கொடியவர்களாகிய அவுணர்கள், இறும் வண்ணம் தம் செயல் செய்யவும்—இறக்கத்தக்கவாறு தாஞ்செய்யக்கூடியதீமைகளெல்லாவற்றையும் செய்தபோதும், மைந்தன் தமரோடும் துஞ்சிலன்—சயந்தகுமாரன் சுற்றத்தவர்களோடுமிறந்திலான், ஊறும் பெற்றிலன்—ஊறுபாட்டையுமடைந்திலான், துயர் ஒன்றே உற்றான்—அவற்றால்வருந்துன்பத்தைமாத்திரமனுபவித்தான் எ—று.

ஞானமுற்றியபெரியோர்கள் மனையாளுடன்கூடியிருந்து இருவினைகளைச் செய்தபோதும் அவற்றின்பயனான இன்பதுன்பங்களை மேல்அனுபவிப்பதில்லை, அதுபோல, சயந்தன்முதலியதேவர்கள் இறக்கத்தக்க உபத்திரவத்தைப்பெற்றபொழுதும் அவற்றால்வரும் அங்கக்குறை ஊறுபாடு மரணம் முதலியவைகளை அடைந்திலார் என்பதுகருத்து. வினைகள் பிராரத்தம் சஞ்சிதம் ஆகாமியமென மூன்றுவகைப்படும். அவற்றுட் பிராரத்தமாவது முற்பிறவிகளிற்செய்தவினைகளுள் இப்பிறப்பிற்கு அனுபவமாய்நிற்பது. சஞ்சிதமாவது செய்தவினைகள் பிறவிதோறுமெஞ்சித்தொகுந்துநிற்பது. ஆகாமியமாவது இப்பிறப்பிற்செய்பவற்றில் அனுபவிக்கப்படாதெஞ்சி மறுபிறப்பிற்குத் தொடர்ந்துநிற்பது. இவற்றின்விளக்கங்களைப் பிறவாறுங்கூறுவர். பசுகரணநீங்கிப் பதிகரணம்பெற்றமையால் இவ்வினை அவரைச்சாராதென்க. (௫௨)

மாடே சூழ்வார் கம்மொடு மைந்தன் சிறைபுக்கான்
காடே போனா னிந்திர னேனோர் கவலுற்றார்

பாடே விண்ணோர் தம்பத முக்கட் பரனல்கும்
வீடே யல்லாற் றுன்பறு மாக்கம் வேறுண்டோ.

இ—ள்: மைந்தன்—சயந்தகுமாரன், மாடே சூழ்வார் தம்மொடும் சிறைபுக்கான்—பக்கத்திற்சூழ்ந்துநின்ற தேவர்களோடு சிறையிலகப்பட்டான், இந்திரன் காடே போனான்—இந்திரன் காட்டிலொளித்தான், எஞ்ஞோர் கவலுற்றார்—எஞ்சியதேவர்கள் மனக்கவலையடைந்தார்கள், (ஆதலின்), விண்ணோர் தம் பதம் பாடே— தேவர்களது உலகவாழ்வெல்லாம் அழிவெய்துவனவே, முக்கண் பரன் நல்கும் வீடே அல்லால்—மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரானருளுகின்றமுத்தியேயன்றி, துன்பு அறும் ஆக்கம் வேறு உண்டோ— துன்பத்திற்கிடனாகாத செல்வம் பிறிதொன்றுண்டா? எ—று.

ஓ-எதிர்மறை. ஏகாரம் மாடே காடே என்பவற்றில் அசைநிலையும் பாடே என்பதில் தேற்றமும் வீடே என்பதிற்பிரிநிலையுமாம். சுவர்க்கமுதலியபதங்களின் வாழ்வெல்லாம் சிலகாலம்இன்பம்போலத்தோன்றிப் பின்துன்பத்தைத்தருதலால் அவற்றைவிரும்பாதீர், மனத்தையடக்கிக்கடவுட்டியானஞ்செய்து முத்தியின் பத்தைப்பெறுவீர் என ஆசிரியர் நம்மனோரைத்தெருட்டியசெய்யுளிதுவென்க. வெயில் மழை முதலியன ஒன்றுமணுகப்பெறாத பொன்னுலகத்தின்கண்ணே தெய்வதருக்களும் சிந்தாமணிசூடாமணியென்னும் இருமணிகளும் காமதேனுவும் பிறவும் வேண்டியஅனுபவப்பொருள்களையெல்லாம் நேர்ந்தவாறுகொடுக்க வேண்டியவாறனுபவித்திருந்ததேவர்திறம் இவ்வாறாயதென்பதைக் கற்றாவது கேட்டாவது உய்த்துணர்ந்துகொள்ளாதார்சிலர், அற்பமானசெல்வத்தைப்பெற்றவுடனிறுமாந்து நல்வழிகளைக்கைவிட்டுத் துன்பப்படுகின்றார்கள். அவர்க்கெல்லாம் இன்னோரன்னசெய்யுட்களும் சரித்திரங்களுமே நன்மதிபயக்கத்தக்கன. (௫௩)

அந்தா வாளந் தோமர வெஃக மடுதண்ட
முந்தா வுற்ற பல்படை யாவு முரிவெய்தச்
செந்தார் மார்பிற் காவலர் கையுந் திறலெஞ்ச
நொந்தா ரின்னா செய்வது நீத்தார் நுவல்கின்றார்.

இ—ள்: செம் தார் மார்பில் காவலர்—செந்நிறமான மலர்மாலையையணிந்த மார்பையுடைய காவலாளர்கள், வாளம்—வாளும், தோமரம்—தோமராயுதமும், எஃகம்—வேலும், அடு தண்டம்—அழிக்கவல்லதண்டாயுதமும், முந்து ஆ உற்ற பல் படை யாவும்—முதலாகஇருக்கின்ற பலபடைக்கலங்களெல்லாம், முரிவு எய்த—முரிய, கையும் திறல் எஞ்ச— தமதுகைகளும்வலிகுன்ற, நொந்தார்— வருந்தி, இன்னா செய்வது நீத்தார்— ஊறுசெய்வதைவிட்டு, நுவல்கின்றார்— சொல்லுகின்றார்கள் எ—று.

அந்தா அசைநிலை. அம் தா எனப்பிரித்து-அழகிய கூர்மையான எனப்பொருள்கோடலுமொன்று. வாளம் என்பதில் அம் பகுதிப்பொருள்விகுதி. கையுமென்பதில் உம்மை எச்சம். பகைவர்மெய்யில்மோதியவுடன் தவறாதழிக்கவல்ல உரத்தபருத்ததண்டமென்பார் 'அடுதண்டம்' என்றார். மேன்மேலுந்தண்டஞ்செய்ததனாற்படைகள்முரிந்து கைகளுமோய்ந்தனவென்க. (௫௪)

வீவார் பின்னா ளல்லது வேறோர் வினையத்தாற்
சாவா ரெஞ்சார் பேரமிர் துண்டார் தவமிக்கார்
நோவார் நாமிங் காற்றிய பாலா னேய்நொந்து
மாவா யாதுஞ் சொற்றில ரென்றற் புதமுற்றார்.

இ—ள்: பேர் அமிர்து உண்டார்—(இந்தத்தேவர்கள் முற்காலத்திற்) சிறந்த அமிர்தத்தை யுண்டவர்கள், தவம் மிக்கார்—தவத்தானுமேம்பட்டவர்கள், (ஆ

தலின்), பின் நாள் வீவார் அல்லது—முடிவுகாலம்வந்திறப்பார்களேயன்றி, வேறு ஓர் வினையத்தால் சாவார்—வேறோருபாயங்களாலுமிறக்கமாட்டார்கள், எஞ்சார்—வலிகுன்றவுமாட்டார்கள், நாம் இங்கு ஆற்றிய பாலால்—நாங்களிங்கே செய்த தண்டனைகளால், நோவார்—வருத்தத்தைமாத்திரமடைவார்கள், நோய் நொந்தும்—உபத்திரவத்தால் வருந்தியும், ஆ ஆ—ஆகா!, யாதும் சொற்றிலர்—(எங்கள் வினக்களுக்கு) உண்மையானவிடையொன்றையுங்கூறினாரல்லர், என்று—என்றுநினைத்து, அற்புதம் உற்றார்—அதிசயத்தையடைந்தார்கள் எ—று.

ஆவா-அதிசயக்குறிப்பு. (௫௫)

இன்னோர் யாரு மைந்தனை வானோ ரினமோடு
மெய்ந்நோ வாகும் பாங்கி னலைத்த வினையாலே
கைந்நோ வெய்தி வன்மையு நீங்கிக் கவலுற்றார்
முன்னோர் தம்பாற் செய்த துடன்சூழ் முறையேபோல்.

இ—ள்: இன்னோர் யாரும்—இவ்வாறு அதிசயமுற்றகாவலாளரானவரும், மைந்தனை—சயந்தகுமாரனை, வானோர் இனமோடும்—தேவர்கூட்டத்துடன், மெய் நோ ஆகும் பாங்கின் அலைத்த வினையால்—சரீரம்வருந்தத்தக்கதாக வேதனை செய்த பாவத்தால், கை நோ எய்தி—கைநோவப்பெற்று, வன்மையும் நீங்கி—வலிமையும்நீங்கப்பெற்று, கவலுற்றார்—வருத்தமடைந்தார்கள், முன்னோர் தம் பால் செய்தது உடன் சூழ் முறையே போல்—பெரியோர்க்குச்செய்ததீமை உடனே தமக்குப்பலிக்கின்றதன்மையையேபோல எ—று.

முறையேபோற் கவலுற்றார் என இயையும். பெரியோர்க்குத்தீமைசெய்யின் அத்தீமை உடனே செய்தாரைச்சார்வதுபோல, தேவர்க்குச்செய்தவருத்தமெல்லாம் அவுணரைச்சார்ந்தன என்பதாம். (௫௬)

வேறு.

அத்தகைய காவ லவுண ரவர்க்கணித்தாய்
மொய்த்தொருசா ரீண்டி முறைநீங் கலர்காப்ப
வெய்த்த வமரருட னிந்திரன்சேய் பண்ணவரு
ளுத்தமனுங் கண்ணுதலை யுன்னிப் புலம்புறுவான்.

இ—ள்: அத்தகைய காவல் அவுணர்—அப்படிப்பட்ட காவலாளராகிய அசுரர்கள், அவர்க்கு அணித்து ஆய் மொய்த்து ஒருசார் ஈண்டி முறை நீங்கலர் காப்ப—அந்தத்தேவர்களுக்குச்சமீபமாகக்குழுமி ஒருபக்கத்திலிருந்து முறைதவறாது காவல்செய்ய, இந்திரன் சேய்—இந்திரனதுபுதல்வனாகிய சயந்தன், எய்த்த அமரர் உடன்—இளைப்புற்ற தேவர்களுடன், பண்ணவருள் உத்தமன் ஆம் கண்ணுதலை உன்னி புலம்புறுவான்—தேவர்களுட்டலைவராகிய சிவபிரானைநினைத்துப்புலம்பத்தொடங்குவான் எ—று.

மிக்ககொடுஞ்செயல்களைச்செய்கின்றவென்பார் 'அத்தகைய' எனவும், பராமுகமின்றியென்பார் 'முறைநீங்கலர்' எனவும் கூறினார். (௫௭)

வந்திப் பவர்பவங்கண் மாற்றுவோ யெத்தேவர்
சிந்தைக்கு மெட்டாச் சிவனே செழுஞ்சுடரே
யிந்தப் பிறவி யிடருழப்பச் செய்தனையோ
வந்தித்த நின்புணர்ப்பை யாரே கடந்தாரே.

இ—ள்: வந்திப்பவர் பவங்கள் மாற்றுவோய்—வழிபாடுசெய்பவர்களது பாவங்களைத்தீர்ப்பவரே!, எ தேவர் சிந்தைக்கும் எட்டா சிவனே—எல்லாத்தேவர்களதுமனத்திற்கும் அதீதமாய்நிற்கின்றசிவபிரானே!, செழும் சுடரே—செழுமை

யானசோதியே!, இந்த பிறவி இடர் உழப்ப செய்தனையோ—இந்தப்பிறப்பில் துன்பத்தையனுபவிக்கும்படி விதித்தீரோ, அந்தித்த நின் புணர்ப்பை ஆரே கடந்தார்-முடிவுசெய்த உம்முடையகற்பனையை யார்தாம்வென்றவர்? எ—று.

தமியேனது துதியையேற்றுப் பாவங்களைத்தொலைத்துக் காக்கவேண்டுமென்பதுபோதர 'வந்திப்பவர்பவங்கண்மாற்றுவோய்' எனவும், பிரமன் திருமால்முதலிய தேவத்தலைவர்களாலுமறிதற்கரியவரேயென்பான் 'எத்தேவர்சிந்தைக்குமெட்டாச்சிவனே' எனவும், கோடிசூரியர்கள் ஒருங்குகூடினாற்போலொளிர்கின்ற சோதியேயென்பான் 'செழுஞ்சுடரே' எனவும், வாழ்நாண்முடியும்வரை சிறைத்துன்பத்திலழுந்தும்படி விதித்தீரோவென்பான் 'இந்தப்பிறவியிடருழப்பச்செய்தனையோ' எனவும், அங்ஙனந்தேவரீர்விதித்திருந்தாற் பிறரெவராலுமாற்றுதல்கூடாது தேவரீரேமாற்றியருளவேண்டுமென்பதுபோதர 'அந்தித்தநின்புணர்ப்பையாரேகடந்தார்' எனவும் கூறினான். (௫௮)

கைந்நாகத் துக்குங் கயவாய்க்கு நாரைக்கும்
பைந்நாகத் துக்கும் படருஞ் சிலந்திக்கும்
பின்னா கியவுயிர்க்கும் பேரருண்முன் செய்தனையா
லென்னா யகனே யெமக்கே னருளாயே.

இ—ள்: என் நாயகனே—எனதுகடவுளே!, கை நாகத்துக்கும்—துதிக்கையையுடைய யானைக்கும், கயவாய்க்கும்—கரிக்குருவிக்கும், நாரைக்கும்—நாரைப்பறவைக்கும், பை நாகத்துக்கும்—படம்பொருந்திய பாம்புக்கும், படரும் சிலந்திக்கும்—ஊருகின்ற சிலந்திப்பூச்சிக்கும், பின் ஆகிய உயிர்க்கும்—மற்றைய ஆன்மாக்களுக்கும், முன்-முற்காலத்தில், பேர் அருள் செய்தனை-சிறந்த கிருபையைச்செய்தீர், எமக்கு ஏன் அருளாய்—எங்களுக்கு ஏன் அருள்செய்கின்றிலீர் எ—று.

அஃறிணையான்மாக்களுக்கும் அருள்செய்ததேவரீர் அருள்பெறுதற்கேற்ற சன்மமாகிய நமக்கு அருள்செய்யாதகாரணம் யாது என்பதாம். நாகமென்னும்பெயர் யானைக்கும்பாம்புக்கும்பொதுவாதலின் தனித்தனி குறிப்பிப்பான் கைந்நாகம் எனவும் பைந்நாகம் எனவும் அடைபுணர்த்திக் கூறினான். யானைக்கும் பாம்புக்கும் சிலந்திக்குமருள்செய்தசரித்திரங்களை முன்னர்உற்பத்திகாண்டத்தில் வழிநடைப்படலத்து எழாஞ்செய்யுளினுரையிற்காண்க. கரிக்குருவிக்கும் நாரைக்குமருள்செய்தசரித்திரங்களை முறையே திருவிளையாடற்புராணத்துக் கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலத்தாலும் நாரைக்குமுத்திகொடுத்தபடலத்தாலுமுணர்க. பின்னாகியவுயிரென்றதற்கு ஈண்டெடுத்துக்காட்டப்படாதனவாய் அருள்பெற்றுள்ள அஃறிணையான்மாக்களையெல்லாம் ஆங்காங்குதெரிந்து கூறுக. (௫௯)

கங்கை முடித்தாய் கறைமிடற்றாய் கண்ணுதலாய்
திங்கள் புனைந்தாய் சிவனே சிவனேயென்
றிங்கு நினதடியே மெல்லேலங் கலுமாற்ற
னங்க ளுயிர்க்குயிரா நாயகநீ கேட்டிலையோ.

இ—ள்: கங்கை முடித்தாய்—கங்கைநதியைச்(சிறிதாகஅடக்கிச்)சடையில் வைத்து முடித்தவரே!, கறை மிடற்றாய்- நஞ்சையுட்கொண்ட திருமிடற்றையுடையவரே!, கண் நுதலாய்- நெற்றிக்கண்களையுடையவரே!, திங்கள் புனைந்தாய்-பிறையையணிந்தவரே!, சிவனே சிவனே—சிவபிரானே! சிவபிரானே!, என்று— என்றிங்ஙனமாக, இங்கு நினது அடியேம் எல்லேலங்களும் ஆற்றல்- இவ்விடத்தில் தேவரீருடைய அடியவர்களாகிய நாங்களெல்லேமும் புலம்புதலை, நங்கள் உயிர்க்கு உயிர் ஆம் நாயக- எங்கள் ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாயிருக்கின்ற தலைவரே!, நீ கேட்டிலையோ- தேவரீர்கேட்டிலீரோ? எ—று.

எங்கள்புலம்பலைக்கேட்கவல்லீரென்பதுபோதர 'நங்களுயிர்க்குயிராநாயக' என்றான். (சுo)

பாசங்கொண் டாவி பலவும் பிணிப்போனு
நேசங்கொண் டாங்கதனை நீக்கியருள் செய்வோனு
மீசன் சிவனென் றியம்புமறை யீயிழைத்த
வாசொன் றிமித்தீமை யார்தவிர்க்க வல்லாரே.

இ—ள்: பாசம் கொண்டு ஆவி பலவும் பிணிப்போனும்– பாசத்தினலே எல்லாவுயிர்களையும் பந்திப்பவரும், நேசம் கொண்டு அதனை நீக்கி அருள் செய்வோனும்– அவ்வுயிர்கண்மேலன்புவைத்து அப்பாசத்தையகற்றி அனுக்கிரகஞ்செய்பவரும், ஈசன் சிவன் என்று– ஈசனென்னும்பெயர்வாய்ந்த சிவபிரானேயென்று, மறை இயம்பும்– வேதங்கள்கூறுநிற்கும், (ஆதலின்), நீ இழைத்த ஆசு ஒன்றும் இ தீமை– தேவரீர்வருவித்த குற்றம்பொருந்திய இந்தத்தீவினையை, ஆர் தவிர்க்க வல்லார்–(தேவரீரேயன்றி வேறு) யார் விலக்கவல்லவர்கள்? எ–று.

படைத்தன்முதலியதொழில்களைநிகழ்த்தும்போது அவரவர்வினைக்கீடாகப் பாசபந்தத்திலழுத்திப் பிறந்திறந்துழல்வித்துப் பின்னர்ப் பக்குவந்தெரிந்தருள் செய்பவர் நீரேயாதலின் எங்கள்வினைப்பயனுக்கேற்பக்கற்பித்த இந்தத்துன்பத்தையும் நீக்கியருளவேண்டும் என்பதாம். (சுக)

நாரா யணனுமந்த நான்முகனு நாடரிய
பேரா தியான பெருமா னுயிர்க் கெல்லா
மாராயி னீயன்றி யாரே துணையாவார்
வாராய் தமியே னுயிரளிக்க வாராயே.

இ—ள்: நாராயணனும் அந்த நான்முகனும் நாட அரிய பேர் ஆதி ஆன பெருமான்—திருமாலும் அந்தப்பிரமதேவரும் தேடியறிதற்கரிய முழுமுதல்வராகிய கடவுளே!, ஆராயின்—ஆராயுமிடத்து, உயிர்க்கு எல்லாம் நீ அன்றி—ஆன்மாக்களுக்கெல்லாம் தேவரீரே துணையாவதன்றி, ஆர் துணை ஆவார்—வேறு யார் துணையாயிருப்பவர்?, தமியேன் உயிர் அளிக்க வாராய் வாராய்—துணையற்றேனாகிய எனதுஉயிரைக்காக்கும்பொருட்டுவந்தருளுக வந்தருளுக எ–று.

ஆர் இன்மைகுறித்துநின்றது. முழுமுதற்கடவுளாகிய நீரே ஆன்மாக்களுக்குநேருந் துன்பங்களைத்தீர்க்கவல்லீர், ஆதலின், எங்கள் துன்பத்தைத்தீர்க்குமாறு முயல்வீர் என்பதாம். (சுஉ)

சீற்றம் விளைத்துமுனந் தேவர் தொகையலைப்பான்
கூற்றமெனவே குறுகுற்ற வந்தகனு
மாற்ற லிழப்ப வகன்மார்பின் முத்தலைவே
லேற்றியவ னீயன்றோ வெமக்கேக னிரங்கலையே.

இ—ள்: முன்னம்–முற்காலத்தில், சீற்றம் விளைத்து—கோபத்தைக்கொண்டு, தேவர் தொகை அலைப்பான்— தேவர்கூட்டத்தைவருத்தும்படி, கூற்றம் என குறுகுற்ற அந்தகனும் —யமனைப்போலவந்த அந்தகாசுரனும், ஆற்றல் இழப்ப—வலிகுன்றும்படி, அகல் மார்பில் முத்தலை வேல் ஏற்றியவன்—அவனுடையஅகன்ற மார்பிற் சூலப்படையைநுழைத்தவர், நீ அன்றோ—தேவரீரன்றோ?, எமக்கு என் இரங்கலை— இப்பொழுது எம்மைக்குறித்து என் இரக்கங்கொள்ளுகின்றிலீர் எ—று.

தேவர்தொகையைக்காக்கும்படி அந்தகனைக்கொன்றதுபோல இப்பொழுதும் நம்மைக்காக்கும்படி சூரனுதியரையழிப்பீரென்பது குறிப்பு. உயிரைக்கவருங்

கோலமாய்வந்தவென்பான் 'கூற்றமெனவேகுறுகுற்ற' என்றான். உம்மை-சிற ப்பு. அன்றே-பலரறிதேற்றம். (கூ௩)

ஏங்கி யமரர் ரிரிந்தோட வேதுரந்த
வோங்கு குரண்டத் துருக்கொண்ட தானவனைத்
தீங்கு பெறத்தடிந்து சின்னமா வோர்சிறையை
வாங்கி யணிந்தவரு ளிங்கென்பால் வைத்திலையே.

இ—ள்: அமரர் ஏங்கி இரிந்து ஓட துரந்த- தேவர்கள் ஏங்கி அஞ்சியோடு ம்படி துரத்திய, ஓங்கு குரண்டத்து உரு கொண்ட தானவனை-உயர்ந்த கொக்கி ன்வடிவத்தைக்கொண்ட அசுரனை, தீங்கு பெற தடிந்து-தீமையைப்பெறும்படி கொன்று, ஓர் சிறையை வாங்கி-அந்தக்கொக்குருவத்தின் சிறகிலொன்றைப்பிடு ங்கி, சின்னமா அணிந்த அருள்-அடையாளமாகத்தரித்த அனுக்கிரகத்தை, இங் கு என்பால் வைத்திலையே-இப்பொழுது தமியேனிடத்துவைத்திலீரோ! எ—று.

முற்காலத்திற்பகனென்னுமசுரன் கொக்குவடிவங்கொண்டு தேவர்களையடர் க்க, சிவபிரான் அவனையழித்து ஒருசிறையைப்பிடுங்கி அடையாளமாகத்தரித்தா ரென்க. அக்காலத்திற்போல இப்பொழுதும் எம்மைக்காப்பீராகவென்பது கு றிப்பு. ஏ-இரக்கம். (கூச)

ஞாலத் தினையளித்த நான்முகனு நின்றவற்றைப்
பாலித் தவனும் பிறரும் பணிந்திரங்க
வோலக் கடலு ளுலகந் தொலைப்பவந்த
வாலத்தை யுண்டவரு ளென்பா லயர்த்தனையோ.

இ—ள்: ஞாலத்தினை அளித்த நான்முகனும்-உலகங்களைப்படைக்கின்ற பி ரமதேவரும், நின்று அவற்றை பாலித்தவனும்—நின்று அவ்வுயிர்களைக்காக்கின்ற திருமாலும், பிறரும்—மற்றையதேவர்களும், பணிந்து இரங்க—வணங்கிப்புலம் ப, ஓல கடலுள் உலகம் தொலைப்ப வந்த ஆலத்தை-ஒலிபொருந்திய கடலினின் றும்உலகங்களையழிக்குமாறுதோன்றிவந்தநஞ்சை, உண்ட அருள்—அமுதுசெய் தகருணையை, என்பால் அயர்த்தனையோ-தமியேனிடத்துவைத்தற்குமறந்தீரா? எ—று.

தமதுகட்டப்பாடாகக்கொண்டு காப்பவரென்பான் 'நின்றவற்றைப்பாலித்தவ னும்' என்றான். நஞ்சுண்டசரித்திரம் பின்னர்த்தக்ஷகாண்டத்திற்கூறப்படும். ()

மோடி தரவந்த முக்க ணுடைக்காளி
யோடி யுலகுயிர்க ளுண்ணும் படியெழுவு
நாடி யவள்வெருவி நாணிச் செருக்ககல
வாடி யருள்செய்த வருளிங் கணுகாதோ.

இ—ள்: மோடி தர வந்த முக் கண் உடை காளி—காடுகாள்பெறத்தோற்றி ய மூன்றுகண்களையுடைய காளியானவள், ஓடி உலகு உயிர்கள் உண்ணும்படி எழு வும்—ஓடித்திரிந்து உலகத்திலுள்ளஆன்மாக்களை உண்ணும்படி தொடங்குதலு ம், நாடி—அதனையறிந்து, அவள் வெருவி நாணி செருக்கு அகல—அவள்பயந் து வெட்கமடைந்து செருக்கடங்கும்படி, ஆடி அருள்செய்த அருள்—(ஒருபாத த்தைத்தூக்கித்)திருநடனஞ்செய்தருளியகருணை, இங்கு அணுகாதோ—இப்பொ ழுது (தமியேனுக்குக்) கிடைக்காதா? எ—று.

காளிசெருக்ககலச்சிவபிரான் நடனஞ்செய்தசரித்திரத்தைத்திருவாலங்காட் டுப்புராணத்திற்காண்க. (கூகூ)

பொற்றைக் கயிலைப் புகல்புக்க தேவர்தமைச்
செற்றத் துடனடவே சென்ற சலந்தரனை

யொற்றைத் திகிரிப் படையா லுடல்பிளந்தே
யற்றைப் பகலவரை யஞ்சலென்றாய் நீயன்றோ.

இ—ள்: கயிலை பொற்றை புகல் புக்க தேவர் தமை—திருக்கயிலாசமலையில் அடைக்கலம்புகுந்ததேவர்களை, செற்றத்துடன் அட சென்ற-கோபத்துடனழிக்கும்படிதொடர்ந்துசென்ற, சலந்தரனை—சலந்தராசுரனை, ஒற்றை திகிரி படையால் உடல் பிளந்து—ஒப்பற்ற சக்கராயுதத்தாற் சரீரத்தைப்பிளந்து, அற்றை பகல்—அத்தினத்தில், அவரை—அத்தேவர்களை, அஞ்சல் என்றாய்-அஞ்சாதீரென்று அபயங்கூறினீர், நீ அன்றோ-தேவரீரல்லவா! எ-று.

தேவர்தமை அடச்சென்ற சலந்தரனைப் பிளந்து எனஇயையும். என்றாய்-வினையாலணையும்பெயர். அப்பொழுது அருள்செய்ததுபோல இப்பொழுதும் இரங்குவீர் என்பதாம். இச்சரித்திரம் பின்னர்த்தக்ஷகாண்டத்திற் கூறப்படும். ()

நந்துற்ற கங்கை நதிசெறியுங் காசிதனிற்
றந்திக் கொடியோன் றவத்தோர் தமைத்துரந்து
வந்துற் றிடச்சினவி வன்றோ லினையுரித்த
வந்தக் கருணைக் களியமோம் பற்றிலமோ.

இ—ள்: நந்து உற்ற கங்கை நதி செறியும் காசி தனில்-சங்குகள்பொருந்தப்பெற்றகங்கைநதிபாய்கின்ற காசிப்பதியில், தந்தி கொடியோன்-கொடியவனாகிய கயாசுரன், தவத்தோர் தமை துரந்து வந்து உற்றிட—முனிவர்களைத்துரத்திக் கொண்டுவந்துசேர, சினவி-கோபித்து, வன் தோலினை உரித்த-(அவனைக்கொன்று)வலியதோலையுரித்துப்போர்த்த, அந்த கருணைக்கு—அந்தக்கிருபையைப்பெறுதற்கு, அளியமோம் பற்று இலமோ—எளியேங்கள் தொடர்பற்றவர்களோ? எ-று.

நந்துற்றகங்கை-பெருகிப்பாய்கின்றகங்கை எனினுமாம். (சுஅ)

ஈரஞ்சு சென்னி யிருபான் புயங்கொண்டோ
ரோரஞ் சரக்க ருலகலைப்ப வன்னவரை
வீரஞ்செய் தட்ட விமல வெமையவுணர்
கோரஞ்செய் கின்ற கொடுந்தொழிலுட் கொள்ளாயோ.

இ—ள்: ஈரஞ்சு சென்னி இருபான் புயம் கொண்டோர்-பத்துத்தலைகளையும் இருபதுபுயங்களையுமுடையவர்களாகிய, ஓரஞ்சு அரக்கர்-ஐந்துஇராக்கதர்கள், உலகு அலைப்ப-உலகத்தவர்களைவருத்த, அன்னவரை வீரம் செய்து அட்ட விமல—அவர்களை வீரங்காட்டியழித்தகடவுளே!, எமை அவுணர் கோரம் செய்கின்ற கொடும் தொழில்—எங்களை அசுரர்கள்வருத்துகின்றதீச்செயலை, உள் கொள்ளாயோ—மனத்திற்சிந்திக்கிலீரோ எ—று.

பஞ்சராட்சதர்களைக்கொன்றதுபோல எமக்கிப்பொழுது துன்பஞ்செய்கின்ற அசுரர்களையுங்கொன்றருள்க என்பதாம். ஓரஞ்சரக்கர்-பஞ்சராவணர். இந்திரன்வலிந்துசெய்தவேண்டுகோளினாலே சப்தரிஷிகள் இராக்கதர்களுடைய நாசத்தையுத்தேசித்தவர்கள்போலக்காட்டி உண்மையில் அக்கருத்தில்லாதவர்களாய் ஒரு யாகத்தைச்செய்ய, அவ்வேள்வித்தீயினின்று பஞ்சராவணர்கள்பிறந்து அரிபிரமேந்திராதிதேவர்களுக்கும் மற்றையுயிர்களுக்குங்கொடுந்துன்பங்களைச்செய்தார்கள், சிவபிரான் அவர்களைக் குண்டோதரரைக்கொண்டு வதைப்பித்துத் தேவர்முதலாயினோரைக்காத்தனர் என்பது சரித்திரம். (சுக)

பண்டை மகவான் பரிசுணராத் தக்கனைப்போ
லண்டர்பிரா னின்னை யறியாதோர் வேள்விசெயத்

துண்டமது செய்து சுரரையவன் றேண்முரித்தாய்
தண்ட மதனையின்று தானவர்பாற் காட்டாயோ.

இ—ள்: அண்டர் பிரான்– தேவநாயகரே!, பண்டை மகவான்– முற்காலத்திலிருந்த ஒரு இந்திரன், பரிசு உணரா தக்கனே போல்– ஒழுகவேண்டியமுறையையறியாத தக்கனைப்போல, நின்னை அறியாது ஓர் வேள்வி செய—தேவரீரது பெருமையையுணராது ஒருயாகத்தைச்செய்ய, சுரரை துண்டமது செய்து—அச்சபையிலிருந்ததேவர்களை வெட்டி, அவன் தோள் முரித்தாய்— அவ்விந்திரனுடைய புயங்களை முரித்தீர், தண்டம் அதனை—அன்று அவர்பாற்செய்ததண்டனையை, இன்று தானவர் பால் காட்டாயோ—இத்தினத்தில் அசுரர்களிடத்துக்காட்டமாட்டீரா? எ—று.

தேவரீரையழைத்து அவிதராதென்பான் 'நின்னையறியாது' என்றான். ()

சிந்தப் புரங்கொடிய தீயவுணர் மூவகைத்தா
மந்தப் புரங்க ளடல்செய்தா யெம்பெருமான்
சந்தப் புரங்கொண்ட தானவரோ டொன்றாகு
மிந்தப் புரமு மெரிக்குதவ வொண்ணாதோ.

இ—ள்: எம் பெருமான்—எங்கள்கடவுளே!, கொடிய தீ அவுணர் புரம் சிந்த—மிகக்கொடியபாவிகளாகிய அசுரர்களது சரீரமழிய, மூவகைத்து ஆம் அந்த புரங்கள் அடல் செய்தாய்—மூன்றென்னுந்தொகையான அவர்களது புரங்களை அழித்தீர், சந்து அப்பு உரம் கொண்ட தானவரோடு— சந்தனத்தை நிறையப்பூசியமார்பையுடைய அசுரர்களுடன், ஒன்று ஆகும் இந்த புரமும்—இந்தஒருநகரத்தையும், எரிக்கு உதவ ஒண்ணாதோ—அக்கினிக்கிரையாகக்கொடுக்கக்கூடாதா? எ—று.

தானவரோடு உதவ என இயையும். முப்புரங்களையெரித்ததுபோல இப்புரத்தையுமெரித்து எங்களைக்காத்தருள்க என்பதாம். (எக)

அன்பா னவருக் கருளுதியாற் பத்திநெறி
யென்பா லிலையா லிறையு மெவனளித்தி
நன்பான் மதிமிலைச்சு நாயகனே நல்லருள்கூ
ருன்பான் மிகநொந்தே யோதியதென் பேதைமையே.

இ—ள்: நன் பால் மதி மிலைச்சும் நாயகனே–நல்லவெண்ணிறமாகியபிறையையணிந்த கடவுளே!, அன்பு ஆனவருக்கு அருளுதி—தேவரீரிடத்தன்புவைத்தவர்களுக்கு அருள்செய்கின்றீர், என் பால் பத்தி நெறி இறையும் இலை—தமியேனிடத்து அன்புமுறை சிறிதேனுமில்லை, எவன் அளித்தி—(ஆதலால்)எவ்வாறு காப்பீர், நல் அருள் கூர் உன் பால்—சிறந்தகருணையையுடைய தேவரீரிடத்து, மிக நொந்து ஓதியது–மிகவும்பரிதபித்துவிண்ணப்பஞ்செய்தது, என் பேதைமை—என்னுடைய அறியாமையேயாம் எ—று.

கருணைசெய்பவனென்பதைவிளக்க 'நன்பான்மதிமிலைச்சுநாயகன்' என அடைபுணர்த்தினன். அன்புடையாரதுசொற்களைச்செவிசாய்த்து அருள்செய்வதும் அன்பில்லாதார்சொற்களுக்குச் செவிகொடாதுபராமுகங்காட்டுவதும் தேவரீரது இயல்பு, ஆதலின், அன்பில்லேனுயிரக்குந் தமியேன்மேற்றவறுளதேயன்றித் தேவரீரிடத்திற்றவறில்லை என்பதாம். (எஉ)

ஆனாலுந் தீயே னழுங்க வருள்கொடுநீ
தானாக நண்ணித் தலையளிசெய் தாண்டாயே
லானாத வித்துயர மாறுமே யாறியக்கான்
மேனா ளெனயான் றுறக்கவளன் வேண்டிலனே.

இ—ள்: ஆனாலும்—அங்ஙனமாயினும், நீயேன் அழுங்க—பாவியேன் வருந்தும் இப்பொழுது, அருள் கொடு—கிருபையைக்கொண்டு, நீ தான் ஆக நண்ணி—தேவரீராகவேமுன்வந்து, தலை அளி செய்து ஆண்டாயேல்-சிறந்தகருணையைச்செய்து இரட்சித்தீரானால், ஆனத இ துயரம் ஆறும்—நீங்காதிருக்கின்ற இந்தப்பீடைநீங்கும், ஆறியக்கால்-நீங்கினால், மேல் நாள் என— முன்னைநாள்போல, யான் துறக்க வளன் வேண்டிலன்— தமியேன் சுவர்க்கலோகச்செல்வத்தை விரும்பேன் எ—று.

ஆனாலும்-அன்பில்லாதேன் அருள்செய்யுமாறுசேட்பது தவறாயினும். துறக்கவளம்வேண்டிலன் நின்றொல்பதமே வேண்டுவன் என எழுபத்தாறுஞ்செய்யுளோடியையும். அன்பில்லாதேனென்று பராமுகஞ்செய்யாது அருள்செய்தீரானல் தேவரீரது தொண்டனாவேனென்பது குறிப்பு. (எங)

வென்றி யரக்கரான் மேதகைய தானவரா
லன்றி முனிவரா லண்டரா லேனையரா
லொன்றுசெய வொன்றா யுறுதுயரத் தாழ்ந்ததன்றி
யென்று மகிழ்வா யிடரற் றிருந்தனமே.

இ—ள்: வென்றி அரக்கரால்— வெற்றியையுடைய இராக்கதர்களாலும், மேதகைய தானவரால்— மேன்மைபொருந்திய அசுரர்களாலும், அன்றி—அல்லாமலும், முனிவரால்— முனிவர்களாலும், அண்டரால்— தேவர்களாலும், ஏனையரால்—பிறராலும், ஒன்று செய ஒன்று ஆய் உறு—ஒருநோக்கமாக ஒருகருமத்தைச்செய்ய அதுமற்றொன்றாய்முடிந்து விளைகின்ற, துயரத்து ஆழ்ந்தது அன்றி—துன்பத்தில் அமிழ்ந்தியதேயன்றி, என்று—எந்நாளில், மகிழ்வு ஆய் இடர் அற்று இருந்தனம்--உவகையுற்றுத் துன்பமின்றியிருந்தோம்? எ—று.

நம்மினும் வலிமுதலியவற்றான்மேம்பட்டவென்பான் 'மேதகைய' என்றான். ஒன்றுசெயவொன்றாயுறுதல்- அமிர்தத்தைவேண்டிக்கடலைக்கடைய நஞ்செழுதல்போன்றன. சுவர்க்கவின்பந்துன்பத்தைத்தருவதென்பது இச்செய்யுட்குறிப்பு. முன் துறக்கவளன்வேண்டிலனென்றதற்குக்காரணம் இதனாற்பெறப்பட்டது. (எச)

கீற்று மதியுங் கிளர்வெம் பொறியரவு
மாற்றினொடு மிலைந்த வாதியே நின்னருளா
லேற்றமிகு மலக்க ணேகி னிழிந்தவளம்
போற்றுகில னோற்றல் புரிவேன் புரிவேனே.

இ—ள்: கீற்று மதியும்— பிறைச்சந்திரனையும், கிளர் வெம் பொறி அரவும்— சீறியெழுகின்ற கொடிய புள்ளியையுடைய சர்ப்பங்களையும், ஆற்றினொடு மிலைந்த—கங்கைநதியுடன்றரித்த, ஆதியே—முதற்கடவுளே!, நின் அருளால் ஏற்றம் மிகும் அலக்கண் ஏகின்—தேவரீரது கருணையினாற் பெருக்கமிகுந்த இந்தத் துன்பந்தீர்ந்தால், இழிந்த வளம் போற்றுகிலன்—இழிவானசெல்வத்தைவிரும்பமாட்டேன், நோற்றல்புரிவேன் புரிவேன்— தவஞ்செய்வேன் தவஞ்செய்வேன் எ—று.

அடுக்குத்துணிவுபற்றிவந்தது. (எரு)

தண்டேன் றுளிக்குந் தருநிழற்கீழ் வாழ்க்கைவெஃகிக்
கொண்டேன் பெருந்துயரம் வான்பதமுங் கோதென்றே
கண்டேன் பிறர்தம் பதத்தொலைவுங் கண்டனனாற்
றொண்டேன் சிவனேநின் றொல்பதமே வேண்டுவனே.

இ—ள்: தண் தேன் துளிக்கும் தரு நிழல் கீழ் வாழ்க்கை வெஃகி—குளிர்ச்சியான தேனைச்சிந்துகின்ற கற்பகவிருட்சத்தின் நிழலில்வாழும்வாழ்வைவிரும்பி, பெரும் துயரம் கொண்டேன்—மிக்கதுன்பத்தையடைந்தேன், வான் பதமும் சோரு என்று கண்டேன்—சுவர்க்கபதமுங்குற்றமுள்ளதென்றறிந்தேன், பிறர் தம் பத தொலைவும் கண்டனன்—மற்றையதேவத்தலைவர்களது பதங்களினழிவையுமறிந்தேன், (ஆதலின்), சிவனே—சிவபிரானே!, தொண்டேன்—அடியவனுகியதமியேன், நின் தொல் பதமே வேண்டுவென்—தேவரீரது பழையபதவியையேவிரும்புவேன் எ—று.

துன்புபயத்தலாற்சுவர்க்கபதத்தைக்குற்றமுடைத்தென்றான். சுவர்க்கபதம் நிலையற்றதென்பதை அனுபவத்திலறிதலால் பிறர்பதங்களும்நிலையற்றனவென்பதை ஊகித்தறிந்தானென்க. (எசு)

> அல்லற் பிறவி யலமலம்விண் ணுடுறைந்து
> தொல்லைத் திருநகருந் துன்பு மலமலமாற்
> றில்லைத் திருநடஞ்செய் தேவே யினித்தமியேற்
> கொல்லைத் துயர்தீர்த் துனதுபதந் தந்தருளே.

இ—ள். அல்லல் பிறவி அலம் அலம்—துன்பத்தைத்தருகின்றபிறவி போதும் போதும், விண் நாடு உறைந்து தொல்லை திரு நகரும் துன்பும் அலம் அலம்—சுவர்க்கலோகத்திலிருந்து பழைய செல்வத்தையனுபவித்தலால்வருந்துன்பமும் போதும்போதும், தில்லை திரு நடம் செய் தேவே—சிதம்பரத்தில் திருக்கூத்தாடியருளுகின்ற கடவுளே!, இனி—மேல், ஒல்லை—விரைவில், துயர் தீர்த்து—துன்பத்தைநீக்கி, தமியேற்கு—பற்றுக்கோடற்றேனுக்கு, உனது பதம் தந்தருள்—தேவரீரதுபதவியைத்தந்தருளுக எ—று.

பிறவிதோறுந்துன்புழத்தலால் 'பிறவியலமலம்' எனவும், அனுபவித்தசுவர்க்கவின்பத்தினும் ஆயிரமடங்கதிகமான துன்பத்தைத்தருதலால் 'விண்ணுடுறைந்துதொல்லைத்திருநகருந்துன்புமலமலம்' எனவும், சிவபதமேதுயரைப்பயவாததாகலின் 'உனதுபதந்தருள்' எனவும் கூறினான். (எஎ)

> ஒன்றா யிருதிறமா யோரைந்தா யையைந்தா
> யன்றா தியின்மீட்டு மைந்தா யளப்பிலவாய்
> நின்றாய் சிவனேயிந் நீர்மையெலாந் தீங்ககற்றி
> நன்றாவி கட்கு நலம்புரிதற் கேயன்றோ.

இ—ள்: சிவனே—சிவபிரானே!, ஒன்று ஆய்—ஒருவடிவாயும், இரு திறம் ஆய்—இரண்டு வடிவங்களாயும், ஓர் ஐந்து ஆய்—ஐந்துவடிவங்களாயும், ஐயைந்து ஆய்—இருபத்தைந்துமூர்த்திகளாயும், அன்று—அன்றியும், ஆதியில் மீட்டும் ஐந்து ஆய்—முன்போலவே வேறும் ஐந்துவடிவங்களாயும், அளப்பு இல ஆய்—அளவிறந்த வடிவங்களாயும், நின்றாய்—நின்றீர், இ நீர்மை எலாம்—இத்தன்மைகளெல்லாம், தீங்கு அகற்றி நன்று ஆவிகட்கு நலம் புரிதற்கே அன்றோ—தீமையைநீக்கி நன்றாக ஆன்மாக்களுக்கு அருள்செய்தற்பொருட்டேயல்லவா! எ—று.

ஒன்றாதல்-சிவமெனை ஒருபொருளாய்நிற்றல். இருதிறமாதல்-சிவமுஞ்சத்தியுமெனை இருபொருள்களாய்நிற்றல். ஐந்தாதல்- கர்மசாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம் சிவசாதாக்கியம் என்னும் ஐந்துசாதாக்கியவடிவங்களாய்நிற்றல். ஐயைந்தாதல்- இருபத்தைந்துமகேவலரூபங்களாய்நிற்றல். மீட்டுமைந்தாதல்-பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் ஐந்துகருத்தாக்களாய்நிற்றல். அளப்பிலவாதல்-அடியார்

பொருட்டு வேறும்வேண்டியவருவங்களையெடுத்தல். இருபத்தைந்துருவங்கள்: சந்திரசேகரர் உமாமகேசர் இடபாரூடர் சபாபதி கலியாணசுந்தரர் பிக்ஷாடனர் காமாரி காலாரி திரிபுராரி சலந்தராரி மாதங்காரி வீரபத்திரர் அரியர்த்தர் அர்த்தநாரீசுரர் கிராதர் கங்காளர் சண்டேசானுக்கிரகர் நீலகண்டர் சக்கரப்பிரதர் கயமுகானுக்கிரகர் சோமாஸ்கந்தர் ஏகபாதர் சுகாசீனர் தக்ஷிணாமூர்த்தி இலிங்கோற்பவர் என்பனவாம். கங்காளரைநீக்கிக் கங்காதரரைச்சேர்த்துக்கூறுவர் சிலர். உயிர்களுக்கு அருள்செய்யுநோக்கமாக இவ்வுருக்களையெல்லாங் கொண்டநீர் தமியேனுக்கருள்செய்யாதொழியீரென்பது இச்செய்யுட்குறிப்பு. ஏ-தேற்றம். (எஅ)

பொன்பொலியுங் கொன்றைப் புரிசடையா யிவ்வழிசேர்
துன்ப மகற்றித் துறக்கத்துட் டாழாது
பின்புநனி நோற்றுப் பெறற்கரிதா நின்னடிக்கீ
ழின்ப மொருதலையா வெய்தவரு ளாயெனக்கே.

இ—ள்: பொன் பொலியும் கொன்றை புரி சடையாய்—பொன்னைப்போல விளங்குகின்ற கொன்றைமலர்மாலையையணிந்த முறுகியசடையையுடையவரே!, இவ் வழி சேர் துன்பம் அகற்றி—இப்பொழுதுநேர்ந்திருக்கின்றதுன்பத்தைநீக்கி, துறக்கத்துள் தாழாது—சுவர்க்கபதத்திலகப்படாது, பின்பு நனி நோற்று—பின்புமிகவுந்தவத்தைச்செய்து, பெறற்கு அரிது ஆம் நின் அடி கீழ் இன்பம்—பெறுதற்கரியதாகிய உம்முடையபாதத்தின்கீழிருக்கின்ற இன்பத்தை, ஒருதலை ஆ எய்த—நிச்சயமாகப்பெறும்பொருட்டு, எனக்கு அருளாய்—தமியேனுக்கு அருள்செய்வீர் எ—று.

நின்னடிக்கீழின்பமென்றது சாயுச்சியத்தை. (எகூ)

வேறு.

என்று பற்பல விரங்கியே விடஞ்செறிந் தென்னச்
சென்று சென்றிடர் மூடுற வுணர்வெலாஞ் சிதைப்ப
வொன்று மோர்கிலன் மயங்கின னுயிர்கரந் துலையப்
பொன்றி னார்களின் மறிந்தன னிந்திரன் புதல்வன்.

இ—ள்: என்று பற்பல இரங்கி—என்று பலவற்றைக்கூறிப்புலம்பி, விடம் செறிந்து என்ன சென்று சென்று இடர் மூடுற உணர்வு எலாம் சிதைப்ப—நஞ்சுதலைக்கேறினாற்போல வந்துவந்து துன்பமானதுமூடி அறிவுமுழுதையும் மயக்க, ஒன்றும் ஓர்கிலன் மயங்கினன்—ஒன்றுமறியாதவனாய்மயங்கி, உயிர் கரந்து உலைய—உயிரானது(உண்டோவில்லையோவென்னும்படி) ஒடுங்கிஅலைய, பொன்றினார்களின் மறிந்தனன்—இறந்தவர்களைப்போல நிலத்தில்விழுந்தான், இந்திரன் புதல்வன்—இந்திரனதுமகனாகிய சயந்தன் எ—று.

பற்பல-மிகப்பல. விடந்தலைக்கொண்டார்க்கு அறிவு இடையிடையேமயங்குவதும் தெளிவதுமாகிப் பின்முற்றும்மயங்குவதுபோல, சயந்தனுக்கும் துன்பநினைவுகள் மீறுந்தோறும் மயங்குவதுந்தெளிவதுமாகிப் பின்முற்றும்மயங்கியதென்க. (அ0)

ஆங்க வன்றனைப் போலவே யமரரு மழுங்கி
யேங்கி யாருயிர் பதைத்திட வீழ்ந்துணர் விழந்தார்
தூங்கு வீழுறு பழுமரஞ் சாய்தலுந் தொடர்ந்து
டங்கர் சுற்றிய வல்லிக டியங்கிவீழ் பரிசின்.

இ—ள்: அமரரும்—மற்றையதேவர்களும், அவன் தனை போலவே—அந்தச்சயந்தனைப்போலவே, அழுங்கி—வருந்தி, எங்கி—ஏக்கமுற்று, ஆர் உயிர் பதைத்திட—அரியஉயிரானது துடிக்க, வீழ்ந்து உணர்வு இழந்தார்—நிலத்தில்

விழுந்து அறிவுகெடப்பெற்றார்கள், தூங்கு வீழ் உறு பழுமரம் சாய்தலும்—தூங்குகின்றவிழுதினையுடைய ஆலமரமொன்றுசரிய, தொடர்ந்து பாங்கர் சுற்றிய வல்லிகள்—அதனைத்தொடர்ந்து பக்கத்திற்சூழ்ந்திருக்கின்ற கொடிகளெல்லாம், தியங்கி வீழ் பரிசின்—(அம்மரத்துடன்)சோர்ந்துவிழுந்தன்மையைப்போல எ—று.

பரிசின் வீழ்ந்தார் எனஇயையும். மரஞ்சாய்ந்துவிழுந்தவுடன் அதனைப்பற்றிநின்றகொடிகளும் விழுந்தாற்போலச் சயந்தன்விழுந்தவுடன் அவனைத்துணைக்கொண்டிருந்ததேவர்களும் விழுந்தார்களென்பதாம். (அக)

சயந்தன்புலம்புறுபடலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௬௪௭.

சயந்தன்கனவுகாண்படலம்.

சயந்தன் கனவுகண்டமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சயந்தன் அறிவுமயங்கிவிழுந்துகிடக்கும்போது முருகக்கடவுள் கனவிற்றோற்றி, 'வீரவாகுதேவரைநாமின்றுதூதனுப்பினேம் அதற்குச்சூரனிணங்கான் நாளைப்போர்க்குவந்து அவனையழித்து உங்கள்சிறையைமீட்போம்' என்று கூறித்தெருட்டி, ஏனைத்தேவர்களுக்கும் அவ்வாறே கனவிலருள்செய்து மறைந்தனர். பின்அவர்களெல்லாம் துன்பநீங்கி மகிழ்ச்சியெய்தி எழுந்திருந்தார்கள் என்பதாம்.

விண்ணு ளார்களுஞ் சயந்தனும் வியன்மகேந் திரத்தி
னுண்ணி லாம்பெருந் துயருடன் மாழ்கிய துணர்ந்தா
னெண்ணி லாவுயிர் தோறுமுற் றின்னருள் புரியு
மண்ண லார்கும ரேசனு மறுமுகத் தமலன்.

இ—ள்: விண் உளார்களும் சயந்தனும்—தேவர்களும் சயந்தகுமாரனும், வியன் மகேந்திரத்தின்—பெரியமகேந்திரபுரியில், உள் நிலாம் பெரும் துயருடன் மாழ்கியது—மனத்திற்பெருகுகின்ற பெருந்துன்பத்துடன்மயங்கிவீழ்ந்ததை, உணர்ந்தான்—அறிந்தார், எண் இலா உயிர் தோறும் உற்று இன் அருள் புரியும்—அளவிறந்தஆன்மாக்கடோறும்வியாபித்துநின்று சிறந்தகருணையைச்செய்கின்ற, அண்ணல் ஆர்—பெருமைபொருந்திய, குமரேசன் ஆம்—குமரேசனென்னும்பெயர்பெற்ற, அறுமுகத்து அமலன்—சண்முகப்பெருமான் எ—று.

அமலன் உணர்ந்தான் எனஇயையும். குமரேசன்-இருபெயரொட்டு. எஞ்ஞான்றுங்குமாரப்பிராயமாயிருக்கின்ற அல்லது ஆன்மாக்களதுகுற்றிதங்களைப்போக்குகின்றகடவுள் என்பதுபொருள். மகேந்திரத்திற்சயந்தன்முதலியோர்க்கு நிகழ்ந்ததுன்பத்தை அறியவல்லாரென்பதுதோன்ற 'உயிர்தோறுமுற்றின்னருள் புரியும்-அமலன்' என்றார். (க)

வெஞ்சி றைத்தலை மூழ்கியே யவுணரான் மெலிந்து
நெஞ்ச ழிந்திடு மவர்தமை யருள்வது நினைந்தான்

நஞ்ச மின்றியே தனித்தயர் சிறுவரைத் தழுவி
யஞ்ச லென்றுபோற் றிடவரு மீன்றயா யனையான்.

இ—ள்: வெம் சிறை தலை மூழ்கி—கொடியசிறையிலகப்பட்டு, அவுணரால் மெலிந்து—அசுரர்செய்தவருத்தத்தால்வாடி, நெஞ்சு அழிந்திடும் அவர் தமை—அறிவுகெட்டஅத்தேவர்களுக்கு, அருள்வது நினைந்தான்—கிருபைசெய்யநினைத்தார், தஞ்சம் இன்றி தனித்து அயர் சிறுவரை—அடைக்கலமாவாரின்றித் தனித்து அழுகின்ற பாலர்களை, தழுவி அஞ்சல் என்று போற்றிட வரும்—அணைத்துப்பயப்படாதீர்களென்றுசொல்லிக் காக்கும்படிவருகின்ற, ஈன்ற யாய் அனையான்—பெற்றதாயைப்போன்றமுருகவேள் எ—று.

அனையான் நினைந்தான் என இயையும். தண்ணளியின்பெருக்கந்தோன்றத் தாயையுவமித்தார். (உ)

இனிய சிறடிக் குமரனிற் செந்திவந் திமையோர்
வினைகொள் கம்பலை யகற்றுவா னிருந்திடும் விமலன்
றனது ணர்ச்சியின் றாகியே யவசமாஞ் சயந்தன்
கனவின் முன்னுற வந்தன னருள்புரி கருத்தால்.

இ—ள்: இனிய சிறு அடி குமரனில் செந்தி வந்து—கண்ணுக்கழகானசிறியபாதங்களையுடைய பாலரூபத்துடன் திருச்செந்திப்பதியிலெழுந்தருளிவந்து, இமையோர் வினை கொள் கம்பலை அகற்றுவான் இருந்திடும் விமலன்—தேவர்களது தீவினையால்நேர்ந்ததுன்பத்தை நீக்கும்படியிருக்கின்ற முருகக்கடவுள், தனது உணர்ச்சி இன்று ஆகி அவசம் ஆம் சயந்தன் கனவில்—தன்னுடைய அறிவுகெட்டுப் பரவசமான சயந்தகுமாரனுடைய கனவில், அருள் புரி கருத்தால்—கருணைசெய்யுந்திருவுளத்தோடும், முன் உற வந்தனன்—வெளிப்பட்டுவந்தார் எ—று.

தக்கன்யாகத்திலவியேற்றபாவத்தால் அவுணரால்வருந்தும்படிநேர்ந்ததாதலின் 'வினைகொள்கம்பலை' எனவும், சூரனுதியரையழித்தற்பொருட்டுப் பாலகராயவதரித்தாரென்பதுதோன்ற 'குமரனிற்செந்திவந்து' எனவும் கூறினார். (ங)

வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிக
மாறி லாதவே லபயமே வலமிடம் வாத
மேறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
வாறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே ளடைந்தான்.

இ—ள்: வேள்—முருகக்கடவுள், வீறு கேதனம்—சிறந்தகொடியும், வச்சிரம்—வச்சிராயுதமும், அங்குசம்—அங்குசமும், விசிகம்—பாணமும், மாறு இலாத வேல்—ஒப்பில்லாதவேற்படையும், அபயம்—அபயமும், வலம்—வலப்பக்கத்திலும், வரதம்—வரதமும், ஏறு பங்கயம்—சிறந்ததாமரைமலரும், மணி—மணியும், மழு—மழுப்படையும், தண்டு—தண்டாயுதமும், வில்—வில்லும், இடம்—இடப்பக்கத்திலும், இசைந்த—அமைந்த, ஆறிரண்டு கை—பன்னிரண்டுதிருக்கரங்களையும், அறு முகம்—ஆறுதிருமுகங்களையும், கொண்டு—உடையாகி, அடைந்தான்—(அவனுடைய கனவில்) வெளிப்பட்டார் எ—று.

வரதம்-வரத்தைக்கொடுப்பது. அபயம்-பயத்தைத்தீர்ப்பது. விரல்கள்கீழாகத் தமதுபாதத்தைக்காட்டிநிற்குங்கையை வரதமெனவும், விரல்கள்மேலாகஎதிரேநிறுத்தியகையை அபயமெனவும் வழங்குப. (ச)

தந்தை யில்லவீதார் பரமனைத் தாதையா வுடைய
கந்த னேகியே யனையதன் னுருவினைக் காட்ட

விந்திரன்மக னுளப்படும் யாக்கையு ளிருந்த
முந்து கண்களாற் கண்டனன் றொழுதனன் மொழிவான்.

இ—ள்: தந்தை இல்லது ஓர் பரமனை தாதை ஆ உடைய கந்தன்—தம்மைத் தோற்றுவிப்பாரொருவருமில்லாதகடவுளாகிய சிவபிரானைப் பிதாவாகவுடைய முருகக்கடவுள், ஏகி—போய், அனைய தன் உருவினை காட்ட— முற்கூறிய இயல்புவாய்ந்த தமது திருவுருவத்தைக் காண்பிக்க, இந்திரன் மகன்—இந்திரனது புதல்வனாகியசயந்தன், உளப்படும் யாக்கை உள் இருந்த முந்து கண்களால் கண்டனன்—மனத்திலமைந்த சரீரத்தினுள்ளிருக்கின்ற சிறந்தகண்களாற் பார்த்து, தொழுதனன்—கைதொழுது, மொழிவான்—விண்ணப்பஞ்செய்வான் எ—று.

கனவுகாணும்பொழுது புறத்துறுப்பாகிய கண்முதலியவை தொழில்செய்யாது தூங்கிக்கிடப்ப அகத்துறுப்புக்களே அவ்வத்தொழில்களைச்செய்தலின் 'உளப்படும்யாக்கையுளிருந்தமுந்துகண்களாற்கண்டனன்' என்றார். (௫)

தொண்ட னேன்படு மிடுக்கணை நாடியே தொலைப்பான்
கொண்ட பேரரு ணீர்மையிற் போந்தனை குறிக்கின்
விண்டு மல்லையப் பிரமனு மல்லைமே லாகு
மண்டர் நாதனு மல்லைநீ யேவர்மற் றருளே.

இ—ள்: தொண்டனேன் படும் இடுக்கணை நாடி—அடியேனனுபவிக்கின்ற துன்பத்தையறிந்து, தொலைப்பான் கொண்ட பேர் அருள் நீர்மையில் போந்தனை—அதனைத்தீர்க்கும்படிசிந்தித்த பெருங்கருணையினால் வந்தீர், குறிக்கின்—ஆராயுமிடத்து, நீ—தேவரீர், விண்டும் அல்லை— திருமாலுமல்லீர், அ பிரமனும் அல்லை— அந்தப்பிரமதேவருமல்லீர், மேல் ஆகும் அண்டர்நாதனும் அல்லை—அவர்களின்மேற்பட்டவராகிய சிவபிரானுமல்லீர், மற்று ஏவர்—வேறுயார்?, அருள்—கூறியருளவேண்டும் எ—று.

அ-பண்டறிசுட்டு. அருண்மூர்த்தியாகத்தோற்றுதலின் தன்றுயரைத்தீர்க்க வந்ததாகக்கூறினன். (௬)

என்ற காலையி லறுமுகப் பண்ணவன் யாமக்
கொன்றை வேணியின் மிலைச்சிய பரஞ்சுடர் குமர
னுன்ற னல்லலு மிரக்கமு மையலு முணர்ந்து
சென்ற னம்மெனக் கூறியே பின்னருஞ் செப்பும்.

இ—ள்: என்ற காலையில்—என்று சயந்தன்வினவியபொழுது, அறுமுக பண்ணவன்—ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள், யாம்—நாம், கொன்றை வேணியில் மிலைச்சிய அ பரஞ்சுடர் குமரன்— கொன்றைமலர்களைச் சடையிலணிந்த அந்தச்சிவபிரானது புதல்வர், உன் தன் அல்லலும் இரக்கமும் மையலும் உணர்ந்து—நீபடுந்துன்பத்தையும் அழுகையையும் மயக்கத்தையும் அறிந்து, சென்றனம்—வந்தோம், என கூறி—என்று அருளிச்செய்து, பின்னரும் செப்பும்—பின்னுந்திருவாய்மலர்வார் எ—று.

பண்ணவன் கூறி என இயையும். அ-பண்டறிசுட்டு. பரஞ்சுடர்-மேலான சோதி. துன்பப்பட்டு அழுது மயங்கிக்கிடப்பதையுணர்ந்தென்பார் 'அல்லலுமிரக்கமுமையலுமுணர்ந்து' என்றார். (௭)

நுந்தை தன்குறை நுங்குறை யாவையு நுவன்று
வந்து நந்தமை வேண்டலும் வரம்பில்சே னையொடு

மிந்த ஞாலத்தி னெய்தியே கிரவுஞ்ச மென்னு
மந்த வெற்பையுந் தாரகன் றன்னையு மட்டாம்.

இ—ள்: நுந்தை—உன்பிதாவாகிய இந்திரன், தன் குறை நும் குறை யாவையும் நுவன்று—தன்னுடையகுறைகளையும் உங்களுடையகுறைகளையும் பிறவற்றையுங்கூறி, வந்து நம் தமை வேண்டலும்— வந்து எம்மைவேண்டுதல்செய்ய, வரம்பு இல் சேனையொடும் இந்த ஞாலத்தின் எய்தி—அளவிறந்தசேனைகளோடும் இப்பூவுலகத்தில்வந்து, கிரவுஞ்சம் என்னும் அந்த வெற்பையும் தாரகன் தன்னையும் அட்டாம்— கிரவுஞ்சமென்னும் அந்தமலையையுந் தாரகாசுரனையுமழித்தோம் எ—று.

தான் சுவர்க்கலோகராச்சியத்தையிழந்து ஒளித்துத்திரிவதையும் நீயும் பலதேவர்களுஞ்சிறையிலிருப்பதையும் எஞ்சியதேவர்கள் குற்றேவல்செய்வதையும் என்பார் 'தன்குறைநுங்குறையாவையும்' என்றார். (அ)

அனைய வன்றனை யட்டபின் செந்திவந் தமர்ந்தாம்
வனச மீமிசை யிருந்திடு பிரமனு மாலு
முனது தாதையு மமரு நம்வயி னுறைந்தா
ரினையல் வாழிகே ணுங்கையு மேருவி னிருந்தாள்.

இ—ள்: அனையவன் தனை அட்ட பின்—அந்தத்தாரகாசுரனையழித்தபின்பு, செந்தி வந்து அமர்ந்தாம்—திருச்செந்திப்பதியில் வந்திருந்தோம், வனச மீமிசை இருந்திடு பிரமனும்— தாமரைமலராசனத்தின்மேலிருக்கின்ற பிரமதேவனும், மாலும்—விட்டுணுவும், உனது தாதையும்—உன்னுடைய பிதாவாகிய இந்திரனும், அமரரும்—மற்றுந்தேவர்களும், நம் வயின் உறைந்தார்— எம்முடனிருக்கின்றார்கள், நுங்கையும் மேருவின் இருந்தாள்— உன்தாயும் மேருமலையிலிருக்கின்றாள், இனையல்—வருந்தாதே, கேள்—கேட்பாயாக எ—று.

வாழி-முன்னிலையசை. (கூ)

வீர வாகுவாந் தூதனை யாமிவண் விடுத்தேஞ்
சூரன் மைந்தனங் கொருவனைப் பலரொடுந் தொலையா
நேரி லாதவிக் கடிநக ரழித்துநீ றாக்கிப்
பாரின் மாலையின் மீண்டிடப் புரிதுமிப் பகலின்.

இ—ள்: வீரவாகு ஆம் தூதனை யாம் இவண் விடுத்தேம்—வீரவாகுவென்கின்ற தூதுவனை நாம் இன்று இந்நகரிலனுப்பினோம், சூரன் மைந்தன் ஒருவனை பலரொடும் தொலையா-(அவன்)சூரபன்மனது புதல்வர்களுளொருவனைப் பலவீரர்களுடன் அழித்து, நேர் இலாத இ கடி நகர் அழித்து நீறு ஆக்கி— ஒப்பில்லாத சிறந்த இந்நகரத்தையழித்துத்தூளாக்கி, இ பகலின் மாலையில்—இற்றைத்தினத்து மாலைக்காலத்தில், பாரில் மீண்டிட புரிதும்—பூமியிலே திரும்பிவரச்செய்வோம் எ—று.

வச்சிரவாகுவையும் வேறும்நேர்ந்த பலவீரர்களையுமழித்தென்பார் 'சூரன் மைந்தனங்கொருவனைப்பலரொடுந்தொலையா' எனவும், மகேந்திரங்கடலிலுள்ளதாகலின் 'பாரின்-மீண்டிடப்புரிதும்' எனவும் கூறினர். (கo)

செல்லு மிப்பகல் கழிந்தபி னானையே செந்தி
மல்ல லம்பதி நீங்கியிந் நகர்க்கயல் வைகிச்
சொல்லு மைந்திரு வைகலி னவுணர்தந் தொகையு
மல்ல லாற்றிய சூரனு முடிந்திட வடுதும்.

இ—ள்: செல்லும் இ பகல் கழிந்தபின்—நிகழுகின்ற இந்தத்தினங்கழிந்தபின்பு, நாளையே—நாளைத்தினத்திற்றனே, மல்லலம் செந்தி பதி நீங்கி—வளப்பம்பொருந்திய திருச்செந்திப்பதியைநீங்கி, இ நகர்க்கு அயல் வைகி—இந்தநகரத்தின்பக்கத்தில்வந்திருந்து, சொல்லும் ஐந்திரு வைகலின்—சொல்லப்படுகின்ற பத்துநாட்களுள், அவுணர்தம் தொகையும்—அசுரர்கூட்டமும், அல்லல் ஆற்றிய சூரனும்—நுமக்குத்துன்பத்தைச்செய்த சூரபன்மனும், முடிந்திட—அழியும்படி, அடுதும்—சங்கரிப்போம் எ—று.

தாமதஞ்செய்யாதென்பார் 'நாளையே' எனப்பிரிநிலையேகாரங்கொடுத்தார். இச்சொற்றவறுதென்பதுபோதர 'சொல்லுமைந்திருவைகலின்' என்றார். ()

அட்ட பின்னரே நின்னைவா னவருட னவுண
னிட்ட வெஞ்சிறை நீக்கி நுந் திருவெலா மீதும்
விட்டி டிங்குன தாகுல மென்றனன் வினைதீர்ந்
துட்டெ ளிந்தவர் போதத்தி னுணர்வுமா யுறைவோன்.

இ—ள்: அட்ட பின்னர்—சங்கரித்தபின்பு, நின்னை—உன்னை, வானவருடன்—தேவர்களுடன், அவுணன் இட்ட வெம் சிறை நீக்கி—சூரபன்மன்வைத்த கொடியசிறையினின்றும்நீக்கி, நும் திரு எலாம் ஈதும்—உங்கள்செல்வங்களெல்லாவற்றையுந்தருவோம், உனது ஆகுலம் விட்டிடு என்றனன்—உன்னுடைய துன்பத்தைநீக்குவாய் என்றுகூறியருளினார், வினை தீர்ந்து உள் தெளிந்தவர் போதத்தின் உணர்வும் ஆய் உறைவோன்—தீவினைகள்நீங்கி மனத்தெளிவுபெற்ற பெரியோர்களதுஅறிவின்கண்ணே சின்மயமாயும்வீற்றிருக்கின்றமுருகக்கடவுள் எ—று.

சுவர்க்கலோகவாழ்வுமுதலியஎல்லாவற்றையுமென்பார் 'திருவெலாம்' என்றார். ஞானிகள் எத்தொழிலைச்செய்யினும் சிந்தை கடவுண்மாட்டேபதிந்திருக்குமாதலின் அவருள்ளத்தே இடையறாதுகடவுள்வெளிப்பட்டுநிற்பரென்க. உம்மை—எச்சம். (கஉ)

ஐய னீங்கிவை யுரைத்தவை கேட்டலு மகத்துண்
மையன் மாசிரு ளகன்றன புகுந்தன மகிழ்ச்சி
மெய்யு ரோமங்கள் சிலிர்த்தன வுகுத்தன விழிநீர்
சைய மேயென நிமிர்ந்தன சயந்தன தடந்தோள்.

இ—ள்: ஐயன் உரைத்தவை இவை கேட்டலும்—முருகவேள்கூறியருளிய இவ்வாசகங்களைக்கேட்டவுடன், அகத்துள் மையல் மாசு இருள் அகன்றன—மனத்திலுள்ள மயக்கமாகிய குற்றம்பொருந்திய இருள்நீங்கியது, மகிழ்ச்சி புகுந்தன—சந்தோஷம்வந்தது, மெய் உரோமங்கள் சிலிர்த்தன—சரீரத்திலுள்ளமயிர்க்கால்கள் புளகமாயின, விழி நீர் உகுத்தன—கண்கள் ஆனந்தமிகுதியால் நீரைச்சிந்தின, சயந்தன தடம் தோள்—சயந்தகுமாரனதுவிசாலித்தபுயங்கள், சையமே என நிமிர்ந்தன—மலையைப்போலப்பூரித்துயர்ந்தன எ—று.

சயந்தன என்பதை ஒவ்வொருதொடர்க்குமியைக்க. மிகப்பெருத்துயர்ந்தனவென்பார் 'சையமேயெனநிமிர்ந்தன' என்றார். (கங)

பற்றி னல்வரு மமிர்தினை யெளிதுறப் படைத்துத்
துற்று ளோரெனத் தண்ணெனத் தக?மெய் சுருதி
கற்ற கற்றன பாடினு னாடினன் களித்தான்
மற்ற வன்பெறு முவகையின் பெருமையார் வகுப்பார்.

இ—ள்: பற்றினல் வரும் அமிர்தினை எளிதுற படைத்து துற்றுளோர் என—ஆசையுடன் பெறவேண்டிய அமிர்தத்தை எளிதாகப்பெற்றுண்டவர்க

ளேப்போல, தனது மெய் தண்ணென — தன்னுடைய சரீரங்குளிர்ச்சியடைய, கற்ற கற்றன சுருதி பாடினுன் — கற்றறிந்த வேதகீதங்கள்பலவற்றாலுந்தோத்திரஞ்செய்து, ஆடினுன் — கூத்தாடி, களித்தான் — களிப்பெய்தினுன், அவன் பெறும் உவகையின் பெருமை யார் வகுப்பார் — அந்தச்சயந்தன்பெற்றசந்தோஷத்தின்பெருமையை யார்சொல்லவல்லார்? (ஒருவருஞ்சொல்லிமுடிக்கமாட்டார்) எ — று.

அருந்தவஞ்செய்துபெறவேண்டியவென்பார் 'பற்றினுல்வரும்' எனவும், சிறிதும்வருத்தமின்றியென்பார் 'எளிதுற' எனவும், கற்றனவெல்லாமமைய 'கற்றகற்றன' என அடுக்கியும் கூறினர். சிறையிருத்தன்முதலியவற்றால் அந்நாள்காறும்நேர்ந்தசரீரமெலிவெல்லாம் ஒருங்கேதீரப்பெற்றனவாதலின் இவ்வாறுவமித்தார். (கஅ)

வேறு.

நிகழ்ந்திடு மறவியை நீங்கி யிவ்வகை
மகிழ்ந்திடு மிந்திரன் மதலை யெம்பிரான்
றிகழ்ந்திடு பதமலர் சென்றி றைஞ்சியே
புகழ்ந்தன னினையன புகல்வ தாயினுன்.

இ — ள்: நிகழ்ந்திடும் மறவியை நீங்கி — தனக்குண்டான மயக்கத்தைநீங்கி, இவ்வகை மகிழ்ந்திடும் இந்திரன் மதலை — இவ்வாறு மகிழ்ச்சிபெற்ற இந்திரனது புதல்வனுகியசயந்தன், எம்பிரான் திகழ்ந்திடு பதமலர் சென்று இறைஞ்சி — எங்கள்கடவுளாகிய முருகவேளது விளங்குகின்ற பாததாமரைகளையணுகி வணங்கி, புகழ்ந்தனன் — துதித்து, இனையன புகல்வதாயினுன் — இவ்வாசகங்களைச்சொல்லத்தொடங்கினுன் எ — று.

அன்றலர்ந்தமலர்போன்ற பாதங்களென்பார் 'திகழ்ந்திடுபதமலர்' என்றார்.

நொய்யசீ ரடியரே நோவு மாற்றியே
யையநீ வலிதுவந் தளித்தி யானுரை
செய்வது முண்டுகொல் சிறிது நின்கணே
கையடை புகுந்தனங் காத்தி யாலென்றான்.

இ — ள்: ஐய — சுவாமீ!, நீ — தேவரீர், வலிது வந்து - நீராகவேவந்து, நொய்ய சீர் அடியரேம் நோவு மாற்றி — மிகநொய்மையான இயல்பினையுடைய அடியேங்களது வருத்தத்தைத்தீர்த்து, அளித்தி — காத்தீர், யான் உரை செய்வது சிறிதும் உண்டு கொல் — (ஆதலால்)யான்சொல்லவேண்டியன சிறிதாயினும் உண்டா (இல்லையே), நின்கணே கையடை புகுந்தனம் — உம்மிடத்தே அடைக்கலமாகப்புகுந்தேம், காத்தி — காத்தருளுக, என்றான் — என்று விண்ணப்பஞ்செய்தான் எ — று.

யானிரவாதிருப்பவும் நீராகவேவந்தருளினீராதலின் யாதுங்கூறுதொழியினும் எமதுதுன்பமுழுவதையுமறிந்து தீர்ப்பீரென்பதுபோதர 'யானுரைசெய்வதுமுண்டுகொல்சிறிது' என்றான். கையடை - கையிலடுக்கப்படுவது, நீரேபாதுகாத்துத்தருதல்வேண்டுமென்று சமர்ப்பிக்கப்படுவது. (ககூ)

சயந்தன்மற் றிவ்வகை சாற்ற யாரினு
முயர்ந்திடு பரஞ்சுட ரொருவன் கேட்குறு
வயர்ந்தநுங் குறையற வளித்துந் திண்ணமென்
றியைந்திட மேலுமொன் றிசைத்தன் மேயினன்.

இ—ள்: சயந்தன் இவ்வகை சாற்ற—சயந்தகுமாரன் இவ்வாறு விண்ணப்பஞ்செய்ய, யாரினும் உயர்ந்திடு பரஞ்சுடர் ஒருவன் கேட்குறா—எல்லாத்தேவர்களினுஞ்சிறந்த பரஞ்சோதிரூபமான ஒப்பற்ற முருகவேள் திருச்செவிசாத்தி, அயர்ந்த நும் குறை அற அளித்தும்—வருந்துகின்ற உங்கள்குறையைத்தீர்த்துக்காப்போம், திண்ணம் என்று—இதுநிச்சயமென்றுகூறி, இயைந்திட—பொருந்துமாறு, மேலும் ஒன்று இசைத்தல் மேயினன்—பின்னுமொரு வாசகத்தைக்கூறுவாராயினர் எ—று.

தான்கூறியவாசகத்தை நம்பும்படியாகவென்பார் 'இயைந்திட' என்றார். ()

இந்நகர் குறுகயா மேய தூதவ
னின்னையுஞ் சுரரையு நேர்ந்து கண்ணுறீஇ
நன்னயங் கூறியே நடப்ப வுய்க்குது
மன்னதுங் காண்கென வருளிப் போயினான்.

இ—ள்: இ நகர் குறுக யாம் ஏய தூதவன்—இந்நகரத்தில் வரும்படி யாமேவிய தூதன், நின்னையும் சுரரையும் நேர்ந்து கண் உறீஇ—உன்னையும் மற்றுந்தேவர்களையுஞ்சந்தித்துக்கண்டு, நல் நயம் கூறி நடப்ப—சிறந்த இன்சொற்களைப்பேசிவரும்படி, உய்க்குதும்—அனுப்புவேம், அன்னதும் காண்க என அருளி—அதனையுங்காண்பாயாகவென்று அருள்செய்து, போயினன்—மறைந்தருளினர் எ—று.

இந்நிகழ்ச்சிநடைபெறுதலால் யாங்கூறியவற்றையுண்மையென்றுணர்தி என்பதாம். (கஅ)

படைப்புறு தயர்ந்திடு பங்க யன்களு
வடுத்துனக் கருள்செய வாறொ டைவரை
விடுத்துமென் றேகிய விமலன் போலவே
யிடர்ப்படு சயந்தன்மு னிவைசொற் றேகினான்.

இ—ள்: படைப்பு உறுது அயர்ந்திடு பங்கயன் களு அடுத்து—படைத்தற்றொழில் சித்திபெறாதுவருந்துகின்ற பிரமதேவராதுகனவிற்போய், உனக்கு அருள்செய ஆறொடு ஐவரை விடுத்தும் என்று ஏகிய—உனக்குக்கிருபைசெய்யும்படி பதினொருருத்திரரையனுப்புவோமென்றுகூறிச்சென்ற, விமலன் போல—சிவபிரானைப்போல, இடர் படு சயந்தன் முன்—துன்பத்தையனுபவிக்கின்ற சயந்தனுக்குமுன்னே, இவை சொற்று ஏகினன்—இவற்றை அருளிச்செய்து மறைந்தார் எ—று.

இச்செய்யுளிற்சுட்டியசரித்திரம் முன்னர் அசுரகாண்டத்தில் உருத்திரர்கேள்விப்படலத்திற்கூறப்பட்டது. (கக)

ஏகிய காலையி னிறந்து முன்னரே
போகிய புலமெலாம் பொறியிற் றோன்றலு
மாகிய கனவினை யகன்று பைப்பைய
நாகர்கோன் றிருமக னனவி னண்ணினான்.

இ—ள்: ஏகிய காலையின்—(அவ்வாறு)மறைந்துசென்றபொழுது, முன்னர் இறந்து போகிய புலம் எலாம்—முன்னே அடங்கிக்கிடந்த புலன்களெல்லாம், பொறியில் தோன்றலும்—பொறிகளின்வழியேவந்துதோற்ற, ஆகிய கனவினை அகன்று—தோற்றிக்கொண்டிருந்த கனவைநீங்கி, பைப்பைய—மெல்லமெல்லவாக, நாகர் கோன் திரு மகன்—இந்திரனது சிறந்தபுதல்வனாகிய சயந்தன், நனவில் நண்ணினன்—விழிப்பையடைந்தான் எ—று.

அடங்கியிருந்த ஐம்புலன்களும் பொறிகளிற்சென்றுதொழினிகழ்த்தவெ ன்பார் 'இறந்த-போகியபுலமெலாம்பொறியிற்றேன்றலும்' என்றார். சொப்ப னுவத்தையைநீங்கிச் சாக்கிராவத்தையைப்பெற்றானென்பது கருத்து. பையப்பை ய எனற்பாலது பைப்பைய என விகாரமாய்நின்றது. (௨௦)

வேறு.

தந்தி நஞ்சந் தலைக்கொளச் சாய்ந்தவர்
மந்தி ரத்தவர் வாய்மைவந் துற்றுழிச்
சிந்தை மையலைத் தீர்ந்தெழு மாறுபோ
லிந்தி ரன்றன் மதலை யெழுந்தனன்.

இ—ள்: தந்தி நஞ்சம் தலைக்கொள சாய்ந்தவர்—சர்ப்பத்தினுடைய நஞ்சா னது தலையிலேற மூர்ச்சையாய்விழுந்தவர்கள், மந்திரத்தவர் வாய்மை வந்து உற் றுழி— மாந்திரிகர்களதுவாய்ச்சொல்வந்துசேர்ந்தபொழுது, சிந்தை மையலை தீ ர்ந்து எழுமாறு போல்—மனமயக்கத்தைநீங்கியெழுந்தன்மைபோல, இந்திரன் த ன் மதலை—இந்திரனதுகுமாரனாகிய சயந்தன், எழுந்தனன்—எழுந்தான் எ-று.

சர்ப்பத்தின்விடந் தலைக்கேறப்பெற்றுவீழ்ந்தார் மாந்திரிகரதுவாயினாலுச்ச ரிக்கப்படுமெந்திரமேறியவுடன் மெல்லமெல்லவாக இயற்கையறிவுவரப்பெற்று எ ழுந்தாற்போல, அசுரராலூறுபடுத்தப்பெற்று மயங்கிவீழ்ந்தசயந்தன் முருகவேள துவாக்குச்செவிப்புலப்பட்டவுடன் மெல்லமெல்லவாக இயற்கையறிவுவரப்பெற் றெழுந்தான் என்பதாம். தந்தி-தந்தத்தையுடைமையால்வந்தகாரணப்பெயர். ()

நனவு தன்னிடை நண்ணிய சீர்மகன்
கனவி னெல்லையிற் கண்டன யாவையு
நினைவு தோற்றின னெஞ்சங் குளிர்ந்துநம்
வினையெ லாமிவண் வீடிய வோவென்றான்.

இ—ள்: நனவு தன் இடை நண்ணிய சீர் மகன்—சாக்கிராவத்தையைய டைந்த சிறந்த சயந்தகுமாரன், கனவின் எல்லையில் கண்டன யாவையும்—சொப் பனுவத்தையிற்கண்டநிகழ்ச்சிகளெல்லாம், நினைவு தோற்றினன்—நினைவின்க ண்ணேதோன்றப்பெற்று, நெஞ்சம் குளிர்ந்து—மனமகிழ்ந்து, நம் வினை எலாம் இவண் வீடியவோ என்றான்—எங்களுடைய தீவினைகளெல்லாம் இப்பொழுது அழிந்தனவோவென்றுகூறினான் எ—று.

தீவினைகள்தீர்ந்தவழியேதுயருந்தீருமாதலின் 'வினையெலாம்-வீடியவோ' என்றான். ஓ-வியப்பு. (௨௨)

கவலை தூங்கிக் கடுந்துயர் நீரதா
யவல மாகிய வாழியி லாழ்ந்துளான்
சிவகு மாரன் றிருவரு ளுன்னியே
யுவகை யென்னு மொலிகடன் மூழ்கினான்.

இ—ள்: கவலை தூங்கி—கவலைமிகப்பெற்று, கடும் துயர் நீரது ஆய்—கடு ந்துன்பத்தைத்தருவதாயிருக்கின்ற, அவலம் ஆகிய ஆழியில்— துக்கமாகியகடலி ல், ஆழ்ந்துளான்—அமிழ்ந்தியவனாகியசயந்தன், சிவகுமாரன் திருவருள் உன் னி—சிவபிரானதுபுதல்வராகிய முருகவேளின் சிறந்தகருணையைச்சிந்தித்து, உவ கை என்னும் ஒலி கடல் மூழ்கினான்-மகிழ்ச்சியாகியகடலிலமிழ்ந்தினான் எ—று.

திருவருளென்றது பத்துநாளுள் அசுரரைச்சங்கரித்துச் சிறைமீட்போமெ ன்றதை. ஒலிகடல்-சாதியடை. (௨௩)

அனைய காலை யயர்ந்திடு வானுளோர்
கனவு தோறுங் கடிதுசென் றிந்திரன்
றனய னுக்குமுன் சாற்றிய வாறுசொற்
றினைய லீரென வேகின னெம்பிரான்.

இ—ள்: அனைய காலை—அப்பொழுது, எம்பிரான்—எங்கள் தலைவராகிய முருகக்கடவுள், அயர்ந்திடு வானுளோர் கனவு தோறும்—மயங்கிக்கிடக்கின்ற தேவர்களது கனவுகளொவ்வொன்றினும், கடிது சென்று-விரைவிற்போய், இந்திரன் தனயனுக்கு முன் சாற்றியவாறு சொற்று—இந்திரனதுபுதல்வனாகிய சயந்தனுக்கு முன்னருளியபடியே கூறி, இனையலீர் என—வருந்தாதீர்களென்று தேற்றி, ஏகினன்-மறைந்தருளினார் எ—று. (உச)

அம்மென் கொன்றை யணிமுடிக் கொண்டவன்
செம்ம லேகலுந் தேவர் கனவொரீஇ
விம்மி தத்தின் விழித்தெழுந் தேயிரீஇத்
தம்மி லோர்ந்து தவமகிழ் வெய்தினன்.

இ—ள்: அம் மென் கொன்றை அணி முடி கொண்டவன் செம்மல்—அழகிய மென்மையானகொன்றைமலரை அழகியசடைமுடியிலணிந்த சிவபெருமானதுபுதல்வராகிய முருகக்கடவுள், ஏகலும்—மறைந்தருளுதலும், தேவர் கனவு ஒரீஇ--தேவர்கள் கனவினின்றும்நீங்கி, விம்மிதத்தின் விழித்து எழுந்து இரீஇ—ஆச்சரியத்தோடு விழித்தெழும்பியிருந்து, தம்மில் ஓர்ந்து--தம்முள்ளேயாராய்ந்து, தவ மகிழ்வு எய்தினர்—மிகமகிழ்ச்சியையடைந்தார்கள் எ—று.

கண்டகனவை ஆதியந்தமாகச்சிந்தித்தென்பார் 'தம்மிலோர்ந்து' என்றார்.

சில்லை வெம்மொழித் தீயவர் கேட்பரே
லல்லல் செய்வரென் றஞ்சிக் கனத்திற
மல்லன் மைந்தன் மருங்குறு வார்சிலர்
மெல்ல வங்கவன் கேட்க விளம்பினர்.

இ—ள்: சில்லை வெம் மொழி தீயவர் கேட்பரேல் அல்லல் செய்வர் என்று அஞ்சி—இழிவானதீமொழிகளைப்பேசுகின்ற கொடியஅவுணர்கள் கேட்பார்களானற்றுயர்செய்வார்களென்றுபயந்து, மல்லல் மைந்தன் மருங்கு உறுவார் சிலர்-வலிமைபொருந்திய சயந்தகுமாரனதுபக்கத்திலிருக்கின்றதேவர்கள்சிலர், அவன் கேட்க—அச்சயந்தன்கேட்குமாறு, மெல்ல—மெல்லவாக, கனத்திறம்—கனவினிகழ்ச்சியை, விளம்பினர்—சொன்னார்கள் எ—று.

பிறர்க்குக்கேளாதவாறென்பார் 'மெல்ல' எனவும், கனவுகண்டபின் தைரியமிக்கானதலின் 'மல்லன்மைந்தன்' எனவும் கூறினர். (உசு)

வேறு.

அண்டர்கண் மொழிதரு மற்பு தத்தையுட்
கொண்டன னன்னவை குமரன் றன்முனங்
கண்டது போன்றிடக் களித்துப் பாரெலா
முண்டவ னெனவுடலம் விம்மினன்.

இ—ள்: குமரன்—சயந்தகுமாரன், அண்டர்கள் மொழிதரும் அற்புதத்தை உட்கொண்டனன்—தேவர்கள்சொல்லியஅதிசயநிகழ்ச்சியை மனத்திலமைத்து, அன்னவை—அவர்கண்டகனக்கள், தான் முனம் கண்டது போன்றிட—தான் முன்கண்டகனவையேபோலிருக்க, களித்து—மகிழ்ச்சியடைந்து, பார் எலாம்

உண்டவன் ஆம் என—பூமிமுழுவதையுமுண்டதிருமாலைப்போல, உடலம் விம்மினன்—சரீரம்பூரிக்கப்பெற்றான் எ—று.

சரீரம் உயர்ந்துபருக்கப்பெற்றானதலால் 'பாரெலாமுண்டவனுமென' என்றார். (உஎ)

அறுமுக முடையதோ ராதி நாயக
னிறைதரு முலகெலா நீங்க லின்றியே
யுறைவதுங் கருணைசெய் திறனு முன்னியே
மறைமுறை யவனடி வழுத்தி வைகினான்.

இ—ள்: அறுமுகம் உடையது ஓர் ஆதிநாயகன்—ஆறுதிருமுகங்களையுடைய முதற்கடவுளாகிய முருகவேள், நிறைதரும் உலகு எலாம் நீங்கலின்றி உறைவதும்—பரந்த உலகங்களெல்லாவற்றிலும் நீங்காமல் வியாபித்திருப்பதையும், கருணை செய் திறனும்—(எல்லாவுயிர்களுக்கும் வினைத்திறந்தெரிந்து) அருள் செய்யுந்தன்மையையும், உன்னி—நினைத்து, மறைமுறை—வேதவிதிப்படி, அவன் அடி வழுத்தி வைகினான்—அவரது பாதங்களைத்துதித்துக்கொண்டிருந்தான் எ—று.

எல்லாத்தேவர்களுக்கும் ஒரேகாலத்திற்கனவில்வெளிப்பட்டருள்செய்தமையால் எங்கும்வியாபித்து எல்லாவுயிர்களுக்குமருள்செய்பவரென்பதைத்தெளிந்தானென்க. வேதமந்திரங்களாலென்பார் 'மறைமுறை' என்றார். (உஅ)

சயந்தன்கனவுகாண்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் சஉ௫.

வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலம்.

வீரவாகுதேவர்சயந்தனுக்குத்தேற்றங்கூறியதைக் கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் சிறைச்சாலையையணுகிக் காவலாயிருந்தஅசுரரைமந்திரத்தான்மயக்கி உட்புகுந்து சயந்தன்முதலியதேவர்களைக்கண்டு, 'முருகவேள்என்னைத்தூதனுப்பியிருக்கின்றார், அதற்குச்சூரனிணங்காவழி அனைவரையுஞ்சங்கரித்து உங்கள்சிறையைமீட்பார், அஞ்சாதீர்' என்று தேற்றங்கூறி வெளியேவந்து காவலாளரதுமயக்கத்தைநீக்கிப்போயினர் என்பதாம்.

இத்திற மமரரொ டிந்தி ரன்மக
னத்தலை யிருத்தலு மனையர் யாவரு
மொய்த்திடு சிறையக முன்கண் டானரோ
வித்தக வறிவனும் வீர வாகுவே.

இ—ள்: இத்திறம்—இவ்வாறாக, அமரரொடு—தேவர்களுடன், இந்திரன் மகன்—இந்திரனது புதல்வனாகியசயந்தன், அத்தலை இருத்தலும்—அவ்விடத்திலிருக்க, வித்தக அறிவன் ஆம் வீரவாகு—பேரறிவினையுடையராகிய வீரவாகுதேவர், அனையர் யாவரும் மொய்த்திடு சிறையகம்—அவர்களெல்லோருஞ்செறிந்திருக்கின்ற சிறைச்சாலையை, முன் கண்டான்—முன்னேகண்டார் எ—று.

வித்தகவறிவு-சாதுரியமான அறிவு. தாமறியாதபுதுநகரின்கண்ணேசென்ற வுடன் தேவர்வைகுஞ்சிறைச்சாலையை ஒருவரையுமுசாவாதுதெரிந்துகொண்ட ஆராய்ச்சிதோன்ற 'வித்தகவறிவன்' எனவிசேடித்தார். (க)

வேறு.

மாகண்ட மொன்பான் புகழுந்திறல் வாகு வங்க
ணாகண் டலன்மைந் தனைவிண்ணவ ராயி னாரைக்
காய்கண் டகரா மவுணத்தொகை காத்தல் கண்டான்
பேய்கண்ட செல்வந் தனைக்காத்திடும் பெற்றி யேபோல்.

இ-ள். மா கண்டம் ஒன்பான் புகழும் திறல் வாகு—பெரிய ஒன்பது கண்டத்திலுள்ளவர்களாலும் புகழப்படுகின்ற வீரவாகுதேவர், அங்கண்—அவ்விடத்தில், ஆகண்டலன் மைந்தனை—இந்திரனது புதல்வனாகியசயந்தனையும், விண்ணவர் ஆயினாரை—மற்றுந்தேவர்களையும், காய் கண்டகர் ஆம் அவுண தொகை—வருத்துகின்ற கீழ்மக்களாகிய அசுரர்கூட்டத்தார், பேய் கண்ட செல்வம் தனை காத்திடும் பெற்றியே போல்—பேய்கள் தாங்கண்டசெல்வத்தைக்காவல் செய்திருக்குந்தன்மையையேபோல, காத்தல் கண்டான்—காவல்செய்வதைக்கண்டார் எ—று.

ஆகண்டலன்=மலைகள்முழுவதையும் கண்டிப்பவன். கண்டமொன்பதாவன: பரதகண்டம் குருகண்டம் கிம்புருடகண்டம் இளாவிருதகண்டம் அரிகண்டம் கேதுமாலகண்டம் இரமியகண்டம் பத்திராசுவகண்டம் இரணியகண்டம் என்பன. எல்லாத்தேசத்தாராலும் புகழப்படுகின்றவென்பார் 'மாகண்டமொன்பான் புகழும்' எனவும், எளியனவாகியபேய்கள் அரியனவாகியபுதையல்முதலியவற்றைக்கண்டுழி அவற்றையொருவரும்பெற்றுக்கொள்ளாமலும் அணுகாமலும் காப்பதுபோல எளியவர்களாகிய அவுணர்கள் உயர்ந்தவர்களாகிய தேவர்களைச்சிறையில்வைத்துப் புறத்தேசெல்லாமலும் எவருமுட்புகாமலும் காவல்செய்தலின் 'பேய்கண்டசெல்வந்தனைக்காத்திடுபெற்றியேபோல்' எனவும் கூறினார். (உ)

கண்ணோட லின்றித் துயர்வேலியிற் காவல் கொண்ட
வெண்ணோ ரெனைக்கண் டிலராயுணர் வின்றி மாழ்க
விண்ணோர்கள் காணத் தமியேன்செல வேண்டு மென்றான்
மண்ணோ ரடியா லளக்குந்தனி மாய னொப்பான்.

இ—ள்: கண்ணோடல் இன்றி—சிறிதுமிரக்கமின்றி, துயர் வேலியில் காவல் கொண்ட—துன்பமாகியவேலியைப்போலக் காவல்செய்துகொண்டிருக்கின்ற, எண்ணோர்—இந்தப்பகைவர்கள், எனை கண்டிலர் ஆய் உணர்வு இன்றி மாழ்க—என்னைக்காணாதவர்களாயறிவின்றிமயங்கவும், விண்ணோர்கள் காண—தேவர்கள் காணவும் (தக்கவாறு), தமியேன் செல வேண்டும் என்றான்—யான் இச்சிறைச்சாலையினுட்புகவேண்டுமென்றுசிந்தித்தார், மண் ஓர் அடியால் அளக்கும் தனி மாயன் ஒப்பான்—பூமியை ஓரடியாலளந்த ஒப்பற்ற திருமாலையொத்த வீரவாகுதேவர் எ—று.

கண்ணோடல்- கண்சாய்த்தல். இடையறாததுன்பங்களைவிளைத்துக்கொண்டுகாக்கின்றவென்பார் 'துயர்வேலியிற்காவல்கொண்ட' எனவும், சூழ்ச்சியின் வல்லாரென்பார் 'மண்ணோரடியாலளக்குந்தனிமாயனொப்பான்' எனவும் கூறினார். (௩)

ஓங்கார மூலப் பொருளாயுயிர் தோறு மென்று
நீங்கா தமருங் குமரேசனை நெஞ்சி னுன்னி

யாங்கா குவதோ ரவன்மந்திர மன்பி னோதித்
தீங்கா மவுணர் செறிகாப்பகஞ் சென்று புக்கான்.

இ—ள்: ஓங்கார மூல பொருள் ஆய்—பிரணவமெனப்படும் முதலெழுத்தின் பொருளாகி, உயிர் தோறும் என்றும் நீங்காது அமரும்—ஆன்மாக்கடோறும் எக்காலத்தும் அகலாது வியாபித்திருக்கின்ற, குமரேசனை— முருகக்கடவுளை, நெஞ்சின் உன்னி—மனத்திற்றியானித்து, ஆங்கு ஆகுவது ஓர் அவன் மந்திரம் அன்பின் ஓதி—அச்சமயத்திற்கேற்றதாகிய அப்பெருமானுடைய மந்திரங்களுளொன்றை அன்பினுடன்செபித்து, தீங்கு ஆம் அவுணர் செறி காப்பகம் சென்று புக்கான்—தீமைநிறைந்த அசுரர்கள்நெருங்கியசிறைச்சாலையினுட் போய்ப்புகுந்தார் எ—று.

காவல்செய்வாரைமோகிக்கத்தக்கமந்திரமென்பார் 'ஆங்காகுவதோர்-மந்திரம்' என்றார்.		(௪)

தாமந் தருமொய்ம் புடைவீரன் சயந்தன் விண்ணோ
ரேமந் தருவன் சிறைச்சூழலு ளேக லோடுந்
தூமந் திகழ்மெய் யுடைக்காவலர் துப்பு நீங்கி
மாமந் திரமாம் வலைப்பட்டு மயங்க லுற்றார்.

இ—ள்: தாமம் தரு மொய்ம்பு உடை வீரன்—மலர்மாலையைத்தரித்த புயங்களையுடையவீரவாகுதேவர், சயந்தன் விண்ணோர் ஏமம் தரு வன் சிறை சூழலுள் ஏகலோடும்—சயந்தகுமாரனும் மற்றுந்தேவர்களுமிருக்கின்ற கடுங்காவலமைந்த வலியசிறைச்சாலையினுட்புக, தூமம் திகழ் மெய் உடை காவலர்—புகைநிறமாய் விளங்குகின்ற சரீரத்தையுடைய காவலாளர்கள், துப்பு நீங்கி—வலியழிந்து, மா மந்திரம் ஆம் வலை பட்டு மயங்கலுற்றார்—சிறந்த மந்திரமாகிய வலையிலகப்பட்டு அறிவுமயங்கினார்கள் எ—று.

காக்குந்திறமின்றி என்பதுபோதர 'துப்புநீங்கி' எனவும், கருநிறமேனியுடையவென்பார் 'தூமந்திகழ்மெய்யுடை' எனவும் கூறினார்.		(௫)

எண்டா னவரிற் புடைகாப்பவர் யாரு மையல்
கொண்டார் குயிற்றப் படுமோவியக் கொள்கை மேவத்
தண்டா ரயில்வேற் படைநாயகன் றானை வேந்தைக்
கண்டார் சயந்த னொடுதேவர் கருத லுற்றார்.

இ—ள்: எண் தானவரில் புடை காப்பவர் யாரும்—மதிக்கப்படுகின்றஅசுரர்களுள்ளே சூழ்ந்திருந்து காவல்செய்வாரனைவரும், மையல் கொண்டார்—மயக்கத்தைக்கொண்டு, குயிற்றப்படும் ஓவிய கொள்கை மேவ—சித்திரிக்கப்பட்ட பாவையினியல்பைப்பொருந்த, சயந்தனொடு தேவர்—சயந்தனும் மற்றுந்தேவர்களும், தண் தார் அயில் வேல் படை நாயகன் தானை வேந்தை கண்டார்—குளிர்ந்த மாலை தூங்கப்பெற்ற கூரியவேலாயுதத்தையேந்திய முருகக்கடவுளது சேனைத்தலைவராகிய வீரவாகுதேவரைப்பார்த்து, கருதலுற்றார்—(பின்வருமாறு) சிந்தித்தார்கள் எ—று.

பாவை வைத்தவிடத்திற்றனே தொழிலற்றிருத்தல்போலக் காவலாளர் இருந்தவிடங்களிற்றனே அசைவற்று மயங்கியிருந்தாரென்க.		(௬)

ஏமாந் தவுணர் சிறுகாலையி னின்னல் செய்ய
நாமாண் டனர்போ லவசத்தி னணுகு மெல்லை

மாமாண் படைய வருள்செய்தநம் வள்ள றூத
ருமா மிவனென் றகங்கொண்டன ரார்வ முற்றார்.

இ—ள்: அவுணர் ஏமாந்து சிறு காலையின் இன்னல் செய்ய—அசுரர்கள் இறுமாப்புக்கொண்டு சிறிதுநேரத்தின்முன் துன்பங்களைச்செய்ய, நாம் மாண்டனர் போல் அவசத்தில் நணுகும் எல்லை—நாங்கள் இறந்தவர்களைப்போல மயக்கத்திலமிழ்ந்தியபொழுது, மா மாண்பு அடைய அருள் செய்த— சிறந்த மாட்சிமையைப்பெறும்படி அனுக்கிரகஞ்செய்த, நம் வள்ளல் தூதன்—எங்கள்தலைவராகிய முருகக்கடவுளனுப்பிய தூதுவர், இவன் ஆம் ஆம்—இவராகும் இவராகும், என்று அகம் கொண்டனர்—என்று மனத்திற்சிந்தித்து, ஆர்வம் உற்றார்—(அவர்மேல்) அன்புகொண்டார்கள் எ—று.

மயக்கநீங்கிப்பெருமகிழ்வடையவென்பார் 'மாமாண்படைய' எனவும், காணவும் அளவளாவிப்பேசவும் விரும்பினார்களென்பார் 'ஆர்வமுற்றார்' எனவும் கூறினர். (எ)

அன்ன ரமருங் களஞ்சென்றயி லேந்து நம்பி
நன்ன யகமாந் திருநாம நவின்று போற்றிப்
பொன்ன டிறைகூர் திருநீங்கிய புங்க வன்றன்
முன்ன வணுகி யிருந்தானடன் மொய்ம்பின் மேலோன்.

இ—ள்: அடல் மொய்ம்பில் மேலோன்—வீரவாகுதேவர், அன்னார் அமரும் களம் சென்று—அந்தத்தேவர்களிருக்குஞ் சிறைக்களத்திற்போய், அயில் ஏந்தும் நம்பி நல் நாயகம் ஆம் திருநாமம் நவின்று போற்றி—வேற்படையையேந்திய முருகக்கடவுளது நல்லதலைமைபூண்ட சிறந்தபெயரையுச்சரித்துத் துதித்து, பொன் நாடு இறை கூர் திரு நீங்கிய புங்கவன் தன் முன் ஆ அணுகி—சுவர்க்கலோகத்தையாசியற்றுதலாகியசெல்வத்தை இழந்திருக்கின்ற சயந்தனுக்குமுன்னே போய், இருந்தான்—இருந்தார் எ—று.

அடன்மொய்ம்பின்மேலோன்-வீரமார்ந்தபுயங்களையுடைய தலைவர். புங்கவன்-உயர்ச்சியுடையவன். (அ)

செறிகின்ற ஞானத் தனிநாயகச் செம்மனாம
மெறிகின்ற வேலை யமுதிற்செவி யேக லோடு
மறிகின்ற துன்பிற் சயந்தன்மகிழ் வெய்தி முன்ன
ரறிகின் றிலன்போற் றொழுதின்ன வறைத லுற்றான்.

இ—ள்: செறிகின்ற ஞான தனி நாயக செம்மல் நாமம்— நிறைந்த ஞானமே வடிவாயிருக்கின்ற ஒப்பற்றதலைவராகிய முருகவேளது திருநாமம், எறிகின்ற வேலை அமுதில் செவி ஏகலோடும்— திரைவீசுகின்ற பாற்கடலிற்றோற்றிய அமிர்தத்தைப்போலக்காதில்நுழைந்தவுடன், மறிகின்ற துன்பில் சயந்தன்—பெருந்துன்பத்தையுடையசயந்தன், மகிழ்வு எய்தி—உவகையைப்பெற்று, முன்னர் அறிகின்றிலன் போல்—முன்னே அவரை அறியாதவன்போலநின்று, தொழுது—கைகூப்பி, இன்ன அறைதல் உற்றான்—இவற்றைச்சொல்லத்தொடங்கினான் எ—று.

மறிகின்றதுன்பு-இறக்கத்தக்கதுன்பம். அமிர்தம் வாய்க்குச்சுவைபயந்து சரீரமெலிவையுந்தீர்த்தல்போல வீரவாகுதேவர்உச்சரித்த குகநாமம் செவிக்கின்பம்பயந்து சரீரத்தையும் பூரிக்கச்செய்ததென்க. முன்னாறிந்தது முருகவேள் கனவிற்கூறியபொழுது. (கூ)

தாவம் பிணித்த தெனுங்குஞ்சித் தருவ ரானோர்
பாவந் தலைச்சூழ் வதுபோலெமைப் பாடு காப்ப

மாவெம் படரி லிருந்தேங்கண் மருங்கி னைய
நீவந்த தென்னை யினிதிங்கு நிகழ்த்து கென்றான்.

இ—ள்: தாவம் பிணித்தது எனும் குஞ்சி தருவர் ஆனோர்—காட்டுத்தீயை முடித்தாற்போன்ற செங்குஞ்சியையுடைய அசுரர்கள், பாவம் தலை சூழ்வது போல் எமை பாடு காப்ப—பாவம்புறத்தேசூழ்ந்தாற்போலவளைந்து எங்களைப் பக்கத்திலிருந்துகாவல்செய்ய, மா வெம் படரில் இருந்தேங்கள் மருங்கின்—கொடிய பெருந்துன்பத்துடனிருந்த எங்களிடத்து, ஐய-சுவாமீ!, நீ வந்தது என்னை—தேவரீர்வந்தகாரணம்யாது?, இனிது இங்கு நிகழ்த்துக—நன்றாக இப்பொழுது கூறல்வேண்டும், என்றான்—என்றுவினாவினான் எ—று.

விரிந்தசெம்பங்கி தீயின்சுவாலையைநிகர்க்குமென்க. பெருஞ்சுவாலையைப்பரப்பியெரிதலாற் காட்டுத்தீயையெடுத்துக்கூறினார். பாவங்கள் முடியுங்காறும் அகலாதுசூழ்ந்து துன்பத்தைப்பயத்தல்போல அசுரரும் எந்நாளும் அகலாதுசூழ்ந்து துன்பத்தைவிளைத்தலின் 'பாவந்தலைச்சூழ்வதுபோலெமைப்பாடுகாப்ப' எனவும், விரிவாகக்கூறவேண்டுமென்பான் 'இனிது-நிகழ்த்துக' எனவும்கூறினான்,　(க0)

வேறு.

முறையுணர் கேள்வி வீரன் மொழிகுவான் முதல்வன் றந்த
வறுமுக வையன் றன்பி னடுத்துளே னவன்றூ தானேன்
விறல்கெழு நந்தி பாலேன் வீரவா கென்பேர் நுங்கள்
சிறைவிடும் பொருட்டுச் சூர்முன் செப்புவான் வந்தேனென்றான்.

இ—ள்: முறை உணர் கேள்வி வீரன் மொழிகுவான்—முறைப்படியறிந்த நூற்கேள்வியையுடைய வீரவாகுதேவர் அதற்குவிடைகூறுவார், முதல்வன் தந்த அறுமுக ஐயன் தன் பின் அடுத்துளேன்—சிவபிரான்பெற்ற (குமாராகிய) ஆறுதிருமுகங்களையுடைய முருகவேளுக்குப் பின்றோன்றினேன், அவன் தூது ஆனேன்—அவருடைய தூதுவனானேன், விறல் கெழு நந்தி பாலேன்—வலிமை பொருந்திய நந்திகணத்திலுள்ளேன், வீரவாகு என் பேர்— வீரவாகுவென்பது என்னுடையபெயர்; நுங்கள் சிறை விடும் பொருட்டு சூர் முன் செப்புவான் வந்தேன்—உங்கள்சிறையை நீக்குமாறு சூரபன்மனுக்குமுன்னே சொல்லும்படிவந்தேன், என்றான்—என்றுகூறினார் எ—று.

ஐயமும் திரிபும் அறியாமையுமாகிய முக்குற்றங்களுநீங்கவுணர்ந்தவென்பார் 'முறையுணர்' என்றார்.　(கக)

என்னலு மமரரோடு மிந்திரன் குமரன் கேளாச்
சென்னியி னமிர்துள் ளூறல் செய்தவத் தயின்ற மேலோ
ரன்னதற் பின்னர் நேமி யமிர்தமும் பெற்றுண் டாங்கு
முன்னுறு மகிழ்ச்சி மேலு முடிவிலா மகிழ்ச்சி வைத்தான்.

இ—ள்: என்னலும்—என்று வீரவாகுதேவர்சொல்ல, இந்திரன் குமரன் அமரரோடும் கேளா—இந்திரனதுமகனாகிய சயந்தன் (தன்னுடனிருக்கின்ற) தேவர்களுடன்கேட்டு, சென்னியின் அமிர்து உள் ஊறல் செய் தவத்து அயின்ற மேலோர்—சிரசிலிருக்கின்ற அமிர்தமாகியஉள்ளூறலைச் செய்கின்றதவத்தினாற் பருகிய பெரியோர்கள், அன்னதன் பின்னர்—அதன்பின்பு, நேமி அமிர்தமும் பெற்று உண்டாங்கு— பாற்கடலிற்றோன்றிய அமிர்தத்தையும்பெற்று உண்டாற்போல, முன் உறு மகிழ்ச்சி மேலும் முடிவு இலா மகிழ்ச்சி வைத்தான்— முன்கிடைத்த உவகையின்மேலும் அளவிறந்த உவகையைக்கொண்டான் எ—று.

உள்ளூறல்-உள்ளேஊறப்படுவது. யோகசாதனைக்கிரமத்தாற் சரீரத்திலுள்ள அமிர்தத்தையுண்டு மகிழ்ந்தவர்கள் புறத்தமிர்தமாகிய தேவாமிர்தமுங்கிடைக்கப்பெற்றுண்டால் அளவிறந்த ஆனந்தமெய்துவர், அதுபோல, உண்ணிகழ்ச்சியாகியகனவினால் தங்களிடர்தீர்வதையறிந்துஉவகையெய்தினர் புறநிகழ்ச்சியாகிய வீரவாகுதேவரது அறிவிப்பாலுமுணர்ந்து அளவிறந்த உவகையெய்தினர் என்பதாம். வாயுவை ரேசகம் பூரகம் முதலியதொழில்களாலடக்கி உதாரக்கினியைச்சொலிப்பித்துப் புருவமத்தியத்திலுள்ள அமிர்தத்தை உருக்கி உதரத்தினிறைத்து ஆனந்திப்பார் யோகிகளென்க. (கஉ)

அந்தர முதல்வன் மைந்த னறைகுவா னைய துன்பூர்
புந்தியேங் குறைவி னுதற் பொருட்டினாற் போந்தா யற்றால்
விந்தவன் சிறையு நீங்கிற் றிடரெலா மகன்றி யாங்க
ளுய்ந்தனம் பவங்க டீரு மூதியம் படைத்து மென்றான்.

இ—ள்: அந்தர முதல்வன் மைந்தன் அறைகுவான்— விண்ணுலகத்துக்குத்தலைவனாகிய இந்திரனது புதல்வன் சொல்வான், ஐய—சுவாமீ!, துன்பு ஊர் புந்தியேம் குறை வினுதற்பொருட்டினால் போந்தாய்—துன்பமிக்கமனத்தையுடைய சிறியேங்களது குறையைவினவும்பொருட்டு வந்தீர், அற்றால்—அதனால், இந்த வன் சிறையும் நீங்கிற்று—இந்த வலிய சிறையுந்தீர்ந்தது, யாங்கள்—நாங்கள், இடர் எலாம் அகன்று உய்ந்தனம்—துன்பங்களெல்லாம் நீங்கி உய்ந்தேம், பவங்கள் தீரும் ஊதியம் படைத்தும்— பாவங்கள்நீங்குதலாகிய பயனையும்பெற்றேம், என்றான்--என்றுகூறினான் எ—று.

குறை-இடர். வன்சிறை-கடுந்துன்பத்தைத்தருஞ்சிறை. உம்மை-எச்சம். எங்கள்குறைகளைத் தேவரீர்தவறாதுதீர்ப்பீரென்பதுபோதர இறந்தகாலத்தால் 'இந்தவன்சிறையுநீங்கிற்று, இடரெலாமகன்றியாங்களுய்ந்தனம்' எனவும், பெரியோர்களைக்காணிற்பாவம்நீங்குமாதலின் 'பவங்கடீருமூதியம்படைத்தும்' எனவும் கூறினான். (கந)

பூண்டகு தடந்தோள் வீரன் புகலுவான் சூர்மே லொற்றா
வீண்டெனை விடுத்த வேற்கை யெம்பிரான் வலிதே நும்மை
யாண்டிடு கின்றான் முன்ன ராக்கமும் பெறுதிர் பின்னும்
வேண்டிய தெய்து கின்றீ ரென்றனன் மேலுஞ் சொல்வான்.

இ—ள்: பூண் தகு தடம் தோள் வீரன் பகலுவான்—ஆபரணங்களையணிந்த விசாலித்தபுயங்களையுடைய வீரவாகுதேவர்சொல்வார், சூர் மேல் ஒற்று ஆ ஈண்டு எனை விடுத்த வேல் கை எம் பிரான்—சூரபன்மனிடத்துத்தூதாக இந்நகரத்திலென்னையனுப்பிய வேலாயுதத்தையேந்திய திருக்கரத்தையுடையமுருகவேள், வலிதே நும்மை ஆண்டிடுகின்றான்—தாமாகவே உங்களையடிமைகொள்வார், முன்னர் ஆக்கமும் பெறுதிர்—நீவிர்முன் பெற்றிருந்தசெல்வத்தையும்பெறுவீர்கள், பின்னும் வேண்டியது எய்துகின்றீர்—பின்னும்வேண்டியவரங்களைப் பெறுவீர்கள், என்றனன்—என்றுகூறி, மேலும் சொல்வான்—பின்னுஞ்சொல்வார் எ—று.

உம்மைகள் எச்சம். நுமக்குநேர்ந்தகுறையைத் தீர்க்கநினைந்து நுமதுவேண்டுகோளின்றியேமுன்வருவாரென்பார் 'வலிதேநும்மையாண்டிடுகின்றான்' என்றார். (கச)

உலமெலாங் கடந்த தோளீ ருன்னுதி ருன்னி யாங்கு
நலமெலாம் வழிபட் டோர்க்கு நல்கிய குமரன் றன்னாற்

நலமெலாம் படைத்த தொல்லைச் சதுர்முகன் முதலாம் வானோர்
குலமெலா முய்ந்த தென்று னுமக்கொரு குறையுண் டாமோ.

இ—ள்: உலம் எலாம் கடந்த தோளீர்---திரண்டகற்களையெல்லாம்வென்ற புயங்களையுடைய தேவிர்காள்!, உன்னுதிர்—(யான்கூறுவனவற்றைச்) சிந்தியுங்கள், வழிபட்டோர்க்கு—தம்மைவழிபாடுசெய்தவர்களுக்கு, நலம் எலாம் உன்னியாங்கு நல்கிய—எல்லாநன்மைகளையும் நினைந்தவாறேகொடுக்கின்ற, குமரன் தன்னால்—முருகக்கடவுளால், தலம் எலாம் படைத்த தொல்லை சதுர்முகன் முதல் ஆம் வானோர் குலம் எலாம் உய்ந்தது என்றால்—உலகங்களெல்லாவற்றையும்படைத்த பழைய பிரமாமுதலாகியதேவர்களதுகூட்டமுழுதும் உய்ந்தனவேயானால், உமக்கு ஒரு குறை உண்டாமோ—உமக்கு யாதேனுமொருகுறை உண்டாகுமோ?(ஆகாதே) எ—று.

இம்மைமறுமையிரண்டினும்பெறுஞ்சுகங்களையெல்லாமென்பார் 'நலமெலாம்' என்றார். பிரமாமுதலியதேவர்க்கும் அருள்செய்யுங்கடவுளாதலால் உங்களிடரைத்தவறாதுதீர்ப்பார் என்பதாம். குலமெலாமுய்ந்தது-ஒருமைபன்மைமயக்கம்.

தேவர்க டேவன் வேண்டச் சிறைவிடுத் தயனைக் காத்த
மூவிரு முகத்து வள்ளன் முழுதருள் செய்தா னும்பாற்
பாவமும் பழியுந் தீங்கும் பையுளும் பிறவு மெல்லாம்
போவது பொருளோ தோற்றப் புணரியும் பிழைத்தீ ரன்றே.

இ—ள்: தேவர்கள் தேவன் வேண்ட—எல்லாத்தேவர்களுக்கும் முதற்கடவுளாகியசிவபிரான் வேண்டுதல்செய்ய, அயனை சிறை விடுத்து காத்த—பிரமதேவரைச்சிறையினின்றுநீக்கியிரட்சித்த, மூவிரு முகத்து வள்ளல்—ஆறுதிருமுகங்களையுடையமுருகக்கடவுள், முழுது அருள் செய்தால்—பூரணமானகருணையைச்செய்தால், நும் பால் பாவமும் பழியும் தீங்கும் பையுளும் பிறவும் எல்லாம் போவது பொருளோ— உம்மிடத்துள்ளபாவங்களும் நிந்தைகளும் தீமைகளும் துன்பமும்பிறவுமாகிய எல்லாம்நீங்குவது ஒருபொருளாமோ?, தோற்ற புணரியும் பிழைத்தீர்— பிறவியாகியகடலையுங்கடந்தீர் எ—று.

ஓ-எதிர்மறை. புணரியுமென்றஉம்மை எச்சம். அன்பர்விரும்பும்வரங்களையெல்லாமீந்தருள்பவராதலின் 'வள்ளல்' என்றார். இம்மையிற்பாவமுதலியனவற்றையெல்லாம் எளிதினீங்கி நல்வாழ்வுபெற்று முடிவின்முத்தியின்பமெய்துவீர் என்பதாம். அருள்செய்தாற்பிழைத்தீரென்றது மழைபெய்யினெல்விளைந்ததென்பதுபோலத் துணிவுபற்றிய இறந்தகாலம். இன்னோரன்னவாக்கியங்களுக்கு ல்ருங் எனப்படுங்கிரியாபதத்தை வடமொழியிற்புணர்த்துவர். (௧௬)

சீர்செய்த கமலத் தோனைச் சிறைசெய்து விசும்பி னோடும்
பார்செய்த வுயிர்கள் செய்த பரஞ்சுடர் நும்மை யெல்லாஞ்
சூர்செய்த சிறையி னீக்கத் தொடர்ந்திவ ணுற்றா னென்றா
னீர்செய்த தவத்தை யாரே செய்தனர் நெடிது காலம்.

இ—ள்: சீர்செய்த கமலத்தோனை சிறைசெய்து—சிறப்புப்பொருந்தியதாமரைமலராசனத்திலிருக்கின்ற பிரமதேவரைச்சிறையில்வைத்து, விசும்பினோடும் பார் செய்த உயிர்கள் செய்த பரஞ்சுடர்—விண்ணுலகத்தினுமண்ணுலகத்தினுமுள்ள உயிர்களெல்லாவற்றையும்படைத்தகடவுளாகியகுமரவேள், நும்மை எல்லாம் சூர் செய்த சிறையில் நீக்க தொடர்ந்து— உங்களையெல்லாஞ் சூரபன்மன்வைத்தசிறையினின்றும்விடுவிக்கும்படி திருவுளம்பற்றி, இவண் உற்றான் என்றால்—இவ்விடத்திலெழுந்தருளிவந்தாரென்றால், நீர் செய்த தவத்தை நெடிதுகாலம் யார் செய்தனர்—நீங்கள்செய்ததவத்தை நெடுங்காலமாக வேறியார்தாஞ்செய்தார்கள்? எ—று.

யார்-எதிர்மறை. எண்ணிறந்தகாலம் அருந்தவஞ்செய்தார்க்குச்செய்யும்பேர் ருளை உமக்குச்செய்யத்தலைப்பட்டார் என்பதாம். பிரமதேவரைச்சிறைசெய்தமையையும் விடுத்தமையையும் இச்செய்யுளானும் முற்செய்யுளானுங்கூறியது முருகவேளதுகடவுட்டன்மையைத்தெருட்டுதற்கென்க. (கஎ)

சங்கையில் பவங்க ளாற்றுந் தானவர் செறிந்த மூதூ
ரிங்கிதி னறிஞர் செல்லா ரெம்பிரா னருளி னால்யா
னங்கணம் படர்வோ ரென்ன வகமெலிந் துற்றே னீண்டே
யுங்களை யெதிர்த லாலே யுலப்பிலா வுவகை பூத்தேன்.

இ—ள்: சங்கை இல் பவங்கள் ஆற்றும் தானவர் செறிந்த மூதூர் இதின்—அளவிறந்த பாவங்களைச்செய்கின்ற அசுரர்கள்நெருங்கிய இந்தப்பழையநகரத்தில், அறிஞர் செல்லார்—அறிவுடையோர்வரமாட்டார்கள், யான்—நான், எம்பிரான் அருளினால்—முருகவேளின் கட்டளையினால், அங்கணம் படர்வோர் என்ன—சேற்றில்நடப்பவர்களைப்போல, அகம் மெலிந்து உற்றேன்—மனம்வருந்திவந்தேன், ஈண்டு உங்களை எதிர்தலால்—இவ்விடத்திலுங்களைச்சந்தித்தலால், உலப்பு இலா உவகை பூத்தேன்—குறைவற்றமகிழ்ச்சியை அடைந்தேன் எ—று.

அங்கணம்- அழுக்குநீர்கள் பாய்ந்துபோதற்காயமைக்கப்பட்ட கால்வாய்களிலுள்ளசேறு. பாவம்விளையுமென்பதுதோன்றச் சேற்றுநிலத்தில்நடப்பாரையுவமித்தார். வருதற்குத்தகாதநகரமாயினும் முருகவேளதுஏவற்காய்வந்தேனென்பார் 'எம்பிரானருளால்-உற்றேன்' என்றார். (கஅ)

என்றலு மகிழ்ச்சி யெய்தி யிந்திரன் மதலை யாங்கள்
வன்றளைப் படுமுன் போனார் மற்றெமைப் பயந்தோ ரன்னோ
ரன்றுதொட் டின்று காறு மாற்றிய செயலு மற்றா
லொன்றிய பயனும் யாவு முரைமதி பெரியோ யென்றான்.

இ—ள்: என்றலும்—என்று வீரவாகுதேவர்சொல்லியவுடன், இந்திரன் மதலை—இந்திரனதுமகனாகியசயந்தன், மகிழ்ச்சி எய்தி—சந்தோஷமடைந்து, பெரியோய்-பெரியவரே!, எமை பயந்தோர்-எங்களைப்பெற்றபிதாமாதாக்கள், யாங்கள் வன் தளை படும் முன் போனார்—நாங்கள்வலியசிறையிலகப்படுதற்குமுன் ஒளித்தோடினார்கள், அன்னோர்—அவர்கள், அன்று தொட்டு இன்று காறும் ஆற்றிய செயலும்—அன்றுமுதல் இன்றுவரையுஞ்செய்தசெயல்களையும், அற்றால் ஒன்றிய பயனும்—அதனாற்பெற்றபிரயோசனத்தையும், யாவும்—மற்றுமெல்லாநிகழ்ச்சிகளையும், உரை—சொல்வீராக, என்றான்—என்றுவேண்டினான் எ—று.

மதி-முன்னிலையசை. அசுரரையழிப்பிக்குமாறுசெய்தமுயற்சிகளையும் அவைகைகூடியவழியையும் பின்னிகழ்ந்தனவற்றையுங்கூறுமாறு இரந்தனனென்க.

வீரனங் கதனைக் கேளா விண்ணவர் கோமான் றொன்னா
ளாரணங் குடனே காழி யடைந்ததே யெழுவா யாகச்
சீரலை வாயி லந்நாட் சென்றிடு காறு முள்ள
காரிய நிகழ்ச்சி யெல்லாங் கடிதினிற் கழறி னானே.

இ—ள்: வீரன் அதனை கேளா—வீரவாகுதேவர் அவ்வாசகத்தைக்கேட்டு, விண்ணவர் கோமான் தொல் நாள் ஆரணங்கு உடன் காழி அடைந்தது எழுவாய் ஆக—தேவர்க்கரசனாகியஇந்திரன் முன்னாளில் இந்திராணியோடுசீகாழிப்பதியையடைந்ததுமுதலாக, அந்நாள் சீரலைவாயில் சென்றிடுகாறும் உள்ள-அற்றை

த்தினத்திற்றிருச்செந்திப்பதியில்வந்ததீருகவுள்ள, காரியநிகழ்ச்சி எல்லாம்-செயனிகழ்ச்சிகளெல்லாவற்றையும், கடிதினில் கழறினான்—விரைவாகஎடுத்துக் கூறினார் எ-று.

ஆரணங்கு-அருமையானதேவப்பெண். (உ0)

மேதகு தடந்தோள் வீரன் விண்ணவர் கோமான் செய்கை
யோதலுஞ் சயந்தன் கேளா வுரைசெய்வா னன்னை தன்னைத்
தாதையை யடிக டன்னைச் சண்முகத் தனிவேற் செங்கை
யாதியை யெதிர்ந்தா லொத்தே னையநின் மொழிகேட் டென்றான்.

இ—ள்: மேதகு தடம் தோள் வீரன்—மேன்மைபொருந்தியவிசாலித்தபுயங்களையுடைய வீரவாகுதேவர், விண்ணவர் கோமான் செய்கை ஓதலும்—தேவர்க்கரசனாகிய இந்திரனதுசெயல்களைக்கூறியவுடன், சயந்தன் கேளா—சயந்தன் கேட்டு, உரைசெய்வான்—சொல்வான், ஐய—சுவாமீ!, நின் மொழி கேட்டு—தேவரீரதுவாசகத்தைக்கேட்டு, அன்னை தன்னை—என்தாயையும், தாதையை—பிதாவையும், அடிகள் தன்னை—குருவையும், சண்முக தனி வேல் செம் கை ஆதியை—ஆறுதிருமுகங்களையும் ஒப்பற்றவேலாயுதத்தையேந்திய சிவந்ததிருக்கரத்தையுமுடைய முதற்கடவுளாகிய முருகவேளையும், எதிர்ந்தால் ஒத்தேன்—எதிர்ப்படக்கண்டவன்போலானேன், என்றான்—என்றுமுகமன்கூறினான் எ—று.

பிதாமாதாக்களதும் முருகவேளதும் செயல்களை ஒன்றுந்தவறாமற்கூறியதனால் 'எதிர்ந்தாலொத்தேன்' என்றான். குருவென்றது வியாழனை. (உக)

இறைதரு மமரர் தம்மோ டிந்திரன் புதல்வன் றன்னை
யறிவரி லறிவன் கண்ணுற் றறுமுகம் படைத்த வண்ணன்
மறையிடை வதிந்த நுங்கள் வன்சிறை மாற்றும் வைகல்
சிறிதிவ ணிருத்தி ரென்று பின்னருஞ் செப்பு கின்றான்.

இ—ள்: அறிவரில் அறிவன்—அறிவுடையார்களுட்சிறந்தவராகியவீரவாகுதேவர், இறை தரும் அமரர் தம்மோடு இந்திரன் புதல்வன் தன்னை கண்ணுற்று—தலைமைபொருந்தியதேவர்களுடன் இந்திரனதுபுதல்வனாகிய சயந்தனைப்பார்த்து, அறுமுகம் படைத்த அண்ணல்—ஆறுதிருமுகங்களையுடையமுருகக்கடவுள், மறை இடை வதிந்த நுங்கள் வன் சிறை மாற்றும் வைகல் சிறிது—மறைவிடத்திலிருக்கின்ற உங்களுடைய வலியசிறையைநீக்குதற்கிடையிலுள்ளதினம்அற்பமாம், இவண் இருத்திர் என்று—(அதுகாறும்) இவ்விடத்திலிருங்களென்றுகூறி, பின்னரும் செப்புகின்றான்—பின்னுங்கூறுகின்றார் எ—று. (உஉ)

தன்னிக ரின்றி மேலாய்த் தற்பர வொளியா யாரு
முன்னரும் பரமாய் நின்ற வொருவனே முகங்க ளாறும்
பன்னிரு புயமுங் கொண்டு பாலகன் போன்று கந்த
னென்னுமோர் பெயரு மெய்தி யாவருங் காண வந்தான்.

இ—ள்: தன் நிகர் இன்றி மேல் ஆய்—தமக்கொப்பாவார்பிறரின்றிமேம்பட்டு, தற்பர ஒளி ஆய்—தற்பரனென்னும்பெயர்பெற்றசோதியாய், யாரும் உன்ன அரும் பரம் ஆய் நின்ற—எவர்களாலுஞ்சிந்தித்தறிதற்கரிய பரப்பிரமமாகிநின்ற, ஒருவனே—முதற்கடவுளே, முகங்கள் ஆறும் பன்னிரு புயமும் கொண்டு—ஆறுதிருவதனங்களையும் பன்னிரண்டுதிருப்புயங்களையுங்கொண்டு, பாலகன் போன்று—சிறுபிள்ளைபோலுருவங்கொண்டு, கந்தன் என்னும் ஓர் பெயரும் எய்தி—கந்தனென்னும் ஒருதிருநாமத்தையும்பெற்று, யாவரும் காண வந்தான்—எல்லோருங்காணும்படி அவதரித்தார் எ—று.

ஏ தேற்றம். சிவபிரானே சிறுபிள்ளைவடிவாய்க்கந்தனென்னுந்திருநாமத் தோடுதித்தார் என்பதாம். தற்பரன்-ஆன்மாவுக்குமேலானவர். உருவம் குணம் தொழில்முதலியன அமையப்பெருமையின் சிந்தித்தறிதலரிதாமென்க. பெய ருமென்றஉம்மை-எச்சம். (உ௩)

பங்கய முகங்க ளாறும் பன்னிரு புயமுங் கொண்டே
யெங்கடம் பெருமான் போந்த வேதுமற் றென்னை யென்னிற்
செங்கண்மா லுந்தி பூத்தோன் சிறுமையு மகவான் றுன்பு
முங்கடஞ் சிறையு நீக்கி யுலகெலா மளிப்பக் கண்டாய்.

இ—ள்: எங்கள் தம் பெருமான்—எங்கள்கடவுள், பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு புயமும் கொண்டு—தாமரைமலர்போன்றஆறுதிருவதனங்களையும் பன்னிரண்டுதிருப்புயங்களையுமுடையவராகி, போந்த ஏது—வந்தகாரணம், என்னை என்னில்—யாதென்பீராயின், செம் கண் மால் உந்தி பூத்தோன் சிறுமையும்—சிவந்தகண்களையுடைய திருமாலினதும் அவரதுஉந்திக்கமலத்திலுதித்தபிரமதேவரதும் சிறுமையையும், மகவான் துன்பும்—இந்திரனதுதுன்பத்தையும், உங்கள் தம் சிறையும் நீக்கி—உங்கள்சிறையையும் அகற்றி, உலகு எலாம் அளிப்ப—உலகங்களெல்லாவற்றையுங்காத்தற்கேயாம் எ—று.

கண்டாய்-முன்னிலையசை. கடவுள் பாலகராயவதரித்தது சூரனாதியரைச்ச ங்கரித்தற்கேயாமென்பதுகுறிப்பு. தேற்றேகாரந்தொக்கது. (உ௪)

சிறுவிதி வேள்வி நண்ணித் தீயவி நுகர்ந்த பாவ
முறைதனில் வீரன் செற்று முற்றவு முடிந்த தில்லை
குறைசில விருந்த வாற்றாற் கூடிய துமக்கித் துன்ப
மறுமுகப் பெருமா னன்றி யாரிது நீக்கற் பாலார்.

இ—ள்: சிறுவிதி வேள்வி நண்ணி தீ அவி நுகர்ந்த பாவம்—தக்கனுடைய யாகத்திற்புகுந்து கொடியஅவியைப்புசித்த பாவமானது, முறை தனில் வீரன் செற்றும்—முறைப்படிவீரபத்திரர்தண்டித்தபோதும், முற்றவும் முடிந்தது இல்லை—முழுதும்நீங்கியதன்று, குறை சில இருந்த ஆற்றால்—அதன்சேடம் அற்பமாக இருந்தபடியால், உமக்கு இ துன்பம் கூடியது—உங்களுக்கு இந்தத்துயரம்நேர்ந்தது, அறுமுக பெருமான் அன்றி—ஆறுதிருமுகங்களையுடைய முருகவேளையன்றி, ஆர் இது நீக்கற்பாலார்—வேறியார் இதனைநீக்கவல்லார்? (ஒருவருமில்லை) எ—று.

சிவபிரானுக்குக்கொடாது புசித்தஅவியாதலின் 'தீயவி' எனவும், செய்தகுற்றத்தின் பெருமைசிறுமைகளுக்கேற்பவென்பார் 'முறைதனில்' எனவும் கூறினர். பாவம் முடிந்ததில்லை எனஇயையும். (உ௫)

தாட்கொண்ட கமல மன்ன சண்முகத் தெந்தை வேலாற்
காட்கொண்ட கிரியி னோடு தாரகற் கடந்த பூச
றோட்கொண்ட மதுகை சான்ற சூர்முதல் களைய முன்ன
நாட்கொண்ட தன்மை யன்றோ நறைகொண்ட வலங்கற் றோளாய்.

இ—ள்: நறை கொண்ட அலங்கல் தோளாய்—வாசனைபொருந்திய மலர் மாலையையணிந்தபுயங்களையுடையவனே!, தாள் கொண்ட கமலம் அன்ன சண்முகத்து எந்தை—நாளத்தையுடைய செந்தாமரைமலர்போன்ற ஆறுதிருமுகங்களையுடைய முருகவேள், வேலால்—வேற்படையினால், காள் கொண்ட கிரியினோடு தாரகன் கடந்த பூசல்—வைரமான கிரௌஞ்சமலையையுந்தாரகனையும் அழித்தபோரானது, தோள் கொண்ட மதுகை சான்ற சூர் முதல் களைய—புயவலியா

ண்மிக்க சூரபன்மனாகியதலைவனைச்சங்கரிக்கும்படி, முன்னம்— முதலில், நாள் கொண்ட தன்மை அன்றோ—நாட்கொண்டதன்மையாமல்லவா! எ—று.

காழ் எனற்பாலது அடிநோக்கி விகாரமாயிற்று. நாட்கொளல்- சுபதினத்திற்றொடங்குதல். தோட்கொண்டமதுகை-புயங்கள்பெற்றிருக்கும் வலி. (உசு)

காலுறக் குனித்துப் பூட்டிக் கார்முகத் துய்ப்ப வோர்செங்
கோலினுக் குண்டி யாற்றார் குணிப்பிலா வவுணர் யாரு.
மாலினுக் கரிதா மண்ணன் மாமகன் கரத்திற் கொண்ட
வேலினுக் கிலக்க தில்லை விடுப்பது மிகைய தன்றே.

இ—ள்: கால் உற குனித்து பூட்டி—குதைகளிரண்டும்நேர்படும்படி வளைத்துநாண்பூட்டி, கார்முகத்து உய்ப்ப—வில்லில்வைத்து எவினால், குணிப்பு இலா அவுணர் யாரும்—அளவிறந்த அசுரர்களெல்லோரும், ஓர் செம் கோலினுக்கு உண்டி ஆற்றார்— ஒரு சிவந்தபாணத்திற்கு உணவாகப்போதமாட்டார்கள், மாலினுக்கு அரிது ஆம் அண்ணல் மா மகன் கரத்தில் கொண்ட வேலினுக்கு— திருமாலுந்தேடியறிதற்கரியரான சிவபிரானது சிறந்தபுதல்வரான முருகவேள் திருக்கரத்திலேந்தியவேற்படைக்கு, இலக்கது இல்லை—இலக்கானபொருள் ஒன்றுமில்லை, விடுப்பது மிகையது—அதனையேவுவதுமிகையேயாம் எ—று.

ஒரு சிறுபாணத்துக்கு ஆற்றாத அற்பர்கள்மேற் பெரியவேலாயுதத்தையேவுவது பெருமைக்குறைவாம் என்பதுகருத்து. ஒருபாணம் இவ்வசுரரனைவரையுமழித்து வேறும்நேர்ந்தாரையழிக்குமென்பார் 'ஓர்செங்கோலினுக்குண்டியாற்றார்' என்றார். (உஎ)

வாரிதி யேழு மெண்ணில் வரைகளும் பிறவுங் கொண்ட
பாருட னுலகீ ரேழும் படைத்தபல் லண்டம் யாவு
மோரிறை முன்ன மட்டே யுண்டிடு மொருவன் செவ்வேல்
சூரனை யவுண ரோடுந் தொலைப்பதோர் விளையாட் டம்மா.

இ—ள்: ஒருவன் செவ் வேல்— ஒப்பற்ற முருகவேளேந்திய சிவந்தநிறமான வேற்படை, வாரிதி எழும் எண் இல் வரைகளும் பிறவும் கொண்ட பாருடன்— எழுகடல்களையும் அளவிறந்தமலைகளையும் பிறவற்றையுமடக்கியிருக்கின்ற பூமியுடன்கூடிய, உலகு ஈரேழும்— பதினாலுலகங்களையும், படைத்த—கொண்டிருக்கின்ற, பல் அண்டம் யாவும்— பலவகையான அண்டங்களெல்லாவற்றையும், ஓர் இறை முன்னம் அட்டு— ஒருகணப்பொழுதின்முன் சங்கரித்து, உண்டிடும்— உணவுகொள்ளவல்லது, (ஆதலின்), சூரனை அவுணரோடும் தொலைப்பது ஓர் விளையாட்டு—(அப்படை)சூரபன்மனை அசுரர்களுடனழிப்பது ஒரு விளையாட்டாகும் எ—று. (உஅ)

சுறமறி யளக்கர் வைகுஞ் சூரபன் மாவின் மார்பி
னெறிசுட ரெஃகம் வீசி யிருபிள வாக்கி னல்லாற்
சிறையுளீர் மீள்கி லாமை தேற்றியும் பொருநர் செய்யு
மறநெறி தூக்கி யொற்று வடியனை விடுத்தா னையன்.

இ—ள்: சுற மறி அளக்கர் வைகும் சூரபன்மாவின் மார்பின்—சுறாமீன்கள்மறிகின்றகடலினடுவேயிருக்கின்ற சூரபன்மனதுமார்பில், எறி சுடர் எஃகம் வீசி இரு பிளவு ஆக்கின் அல்லால்— எறிக்கின்ற சோதியையுடைய வேற்படையைச்செலுத்தி இரண்டுபிளவாக்கி அழித்தாலன்றி, சிறை உளீர் மீள்கிலாமை தேற்றியும்- சிறையிலிருக்கின்ற நீவிர் மீளமாட்டீரென்பதை அறிந்திருந்தும், பொருநர் செய்யும் அறநெறி தூக்கி—வீரர்கள்செய்கின்ற தருமநீதியைநினைந்து,

ஐயன்—முருகவேள், அடியனை ஒற்று ஆ விடுத்தான்—அடியேனைத் தூதாக அனுப்பினார் எ—று.

தேற்றி-ஈண்டுத்தன்வினை. சுரு என்பது குறியதன்கீழாக்குறுகிநின்றது. நுஞ்சிறையைவிடானென்றறிந்தும் தமதுட்கிடையைமாற்றானுக்குத்தெரிவித்து இணங்காவழியேபொருதழிப்பது தருமநீதியாதலின் தூதனுப்பினர் என்பதாம். (௨௯)

ஆளுடை முதல்வன் மாற்ற மவுணருக் கிறைவன் முன்போய்க்
கேளிதென் றுரைப்ப னற்றே கிளத்தினுங் கடனாக் கொள்ளான்
மீளுவன் புகுந்த தெல்லாம் விளம்புவன் வினவி யெங்கோ
னாளைவந் திவரை யெல்லா நாமற முடிப்பன் காண்டி.

இ—ள்: ஆள் உடை முதல்வன் மாற்றம்—எங்களையடிமையாகவுடைய தலைவராகிய முருகவேள்கூறியகட்டளையை, அவுணருக்கு இறைவன் முன் போய்—அசுரர்க்கரசனாகிய சூரபன்மனுக்குமுன்போய், இது கேள் என்று உரைப்பன்—இதனைக்கேளென்று யான் சொல்வேன், அற்றே கிளத்தினும் கடன் ஆ கொள்ளான்— அவ்வாறு யான்கூறியபோதும் அவன் அதனைச்செய்யவேண்டியகடமையாக ஏற்றுக்கொள்ளமாட்டான், மீளுவன்— (மறுத்தவுடனே) திரும்பிப்போய், புகுந்தது எல்லாம் விளம்புவன்— நிகழ்ந்தவைகளெல்லாவற்றையுங்கூறுவேன், எம் கோன் வினவி-எங்கள்கடவுளாகிய முருகவேள் அவற்றைக்கேட்டு, நாளை வந்து— நாளைத்தினத்திற்போர்செய்யவந்து, இவரை எல்லாம் நாமற முடிப்பன்— இவ்வசுரர்களெல்லோரையும் அடியறச்சங்கரிப்பார், காண்டி— இதனைத்தெரிவாய் எ—று.

காண்டி-முன்னிலையசையெனினுமாம். மீளுவன்-முற்றெச்சம். நாமமற என்பது நாமற எனத்தொக்கது. மாற்றம் உரைப்பன் எனஇயையும். (௩௦)

நீண்டவன் றனக்கு மெட்டா நெடியதோர் குமரன் செவ்வே
லாண்டிருந் தேயு முய்த்தே யவுணர்யா வரையுங் கொல்லும்
பாண்டிலந் தேர்மேற் கொண்டு படைபுறங் காத்துச் சூழ
வீண்டுவந் தடுத லன்னாற் கிதுவுமோ ராட லன்றே.

இ—ள்: நீண்டவன் தனக்கும் எட்டா நெடியது ஓர் குமரன்—நெடியவடிவத்தையுடைய திருமாலுக்குமெட்டாத அதீதப்பொருளாகிய முருகவேள், ஆண்டு இருந்தும்—தாமிருக்குமிடத்திருந்துகொண்டும், செவ் வேல் உய்த்து—சிவந்த நிறத்தையுடைய வேற்படையையேவி, அவுணர் யாவரையும் கொல்லும்—அசுரனைவரையுஞ்சங்கரிக்கவல்லார், பாண்டிலம் தேர் மேல் கொண்டு—உருளைபொருந்திய தேரின்மேலேறி, படை புறம் காத்து சூழ—சேனைகள் புறத்தேகாத்துச்சூழ, ஈண்டு வந்து அடுதல்—இங்கேவந்தழிப்பதாகிய, இதுவும்—இந்தச்செயலும், அன்னாற்கு—அந்தமுருகவேளுக்கு, ஓர் ஆடல்— ஒரு திருவிளையாடலாம் எ—று.

கடவுள் செய்வனவற்றையெல்லாந்திருவிளையாடலென்பது முறை. (௩௧)

ஈரிரண் டிருமூன் றாகு மிரும்பக லிடையே யெங்கோ
னாரிருஞ் சமர மூட்டி யவுணர்தம் மனிகந் தன்னைச்
சூரொடு முடித்து நும்மைத் துயர்ச்சிறைத் தொடர்ச்சி நீக்கிப்
பேரிருஞ் சிறப்பு நல்கும் பிறவொன்று நினையன் மன்னோ.

இ—ள்: எம் கோன்—எங்கள் கடவுளாகிய முருகவேள், ஈரிரண்டு இருமூன்று ஆகும் இரும் பகல் இடை—பத்தென்னுந்தொகைப்பட்ட சிறந்தநாட்களுள்,

ஆர் இரும் சமரம் மூட்டி—நிறைந்த பெரியபோரைத்தொடக்கி, அவுணர் தம் அனிகம் தன்னை சூரொடு முடித்து—அசுரசேனைகளைச் சூரபன்மனுடன் அழித்து, நும்மை துயர் சிறை தொடர்ச்சி நீக்கி—உங்களைத் துன்பத்தைத்தருகின்ற சிறைத்தொடர்பினின்று அகற்றி, பேர் இரும் சிறப்பு நல்கும்—பெரிய தருந்தசிறப்புகளையெல்லாந்தருவார், பிற ஒன்றும் நினையல்—வேறொன்றையும் நினையாதே எ—று.

ஈரிரண்டிருமூன்று=நான்கும் ஆறும். சமரம்-வடசொல். அசுரரெல்லாமழியும்நாட்களாதலின் 'இரும்பகல்' எனவும், மானமும் வீராவேசமுங்கொண்டு சோர்வடையாதுசெய்யும்போரென்பார் 'ஆரிருஞ்சமரம்' எனவும், விடாச்சிறையாதலின் 'சிறைத்தொடர்ச்சி' எனவும், ஐயப்படற்கவென்பார் 'பிறவொன்று நினையல்' எனவும் கூறினார். நும்மை நீக்கி என இயையும். சிறப்பு-பழையசெல்வங்களும் வேண்டியபிறவுமாம். (௯௨)

என்றிவை பலவும் வீர னிமையவர் குழாத்தி னோடுங்
குன்றெறி பகைஞன் மைந்த னுணர்தரக் கூற லோடு
நன்றென வுவகை பூத்து நாமவே னம்பி யாற்ற
வென்றிபெற் றிடுக வென்று வீற்றுவீற் றாசி சொற்றார்.

இ—ள்: வீரன்—வீரவாகுதேவர், இமையவர் குழாத்தினோடும் குன்று எறி பகைஞன் மைந்தன் உணர்தர—தேவர்கூட்டத்துடன் மலைகளின்சிறகையரிந்தபகைவனாகியஇந்திரனது புதல்வன் அறியும்படி, என்று இவை பலவும் கூறலோடும்—என்று இவைபோன்ற பலதேற்றமொழிகளையெல்லாஞ்சொல்ல, நன்று என உவகை பூத்து—கேட்டிருந்த தேவர்களெல்லாரும் நன்றென்றுகூறிமகிழ்சிறந்து, நாம வேல் நம்பி ஆற்ற வென்றி பெற்றிடுக என்று—புகழ்பெற்ற வேற்படையையேந்தியமுருகவேள் மிகவும்வெற்றியைப்பெறுகவென்று, வீற்று வீற்று ஆசி சொற்றார்-வேறுவேறாக வாழ்த்துமொழிகளைக்கூறினார்கள் எ—று.

மலைகளெல்லாஞ்சிறகுடையனவாய்ப்பறந்து எண்ணியவிடங்களில்வீழ்ந்து அங்குள்ளஉயிர்களையழித்தமையின் இந்திரன் வச்சிராயுதத்தால் அவற்றின்சிறகுகளையரிந்தானென்க. நீர்கூறியவாறே நடைபெறல்வேண்டுமென்பார் 'நன்று' எனவும், ஒருவருந்தவறாமலென்பார் 'வீற்றுவீற்று' எனவும்கூறினார். நாமம் அச்சமெனினுமாம். (௯௩)

எண்டகு மாசி கூறி யிந்திரன் றனது மைந்த
னண்டரோ டங்கை கூப்பி யளியரேந் தன்மை யெல்லாங்
கண்டனை தாதை கேட்பக் கழறுதி யிவணீ யுள்ளங்
கொண்டது முடிக்கப் போதி குரைகழற் குமர வென்றான்.

இ—ள்: இந்திரன் தனது மைந்தன்—இந்திரனதுபுதல்வனாகிய சயந்தன், அண்டரோடு—மற்றுந்தேவர்களுடன், எண் தகும் ஆசி கூறி—மதிக்கத்தகுந்த ஆசிமொழிகளைச்சொல்லியபின், அங்கை கூப்பி—அகங்கைகளைக்குவித்து (தொழுது), குரை கழல் குமர—ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய வீரரே!, அளியரேம் தன்மை எல்லாம் கண்டனை—எளியேங்களது செயல்களெல்லாவற்றையும் பார்த்திருக்கின்றீர், தாதை கேட்ப கழறுதி—(அவைகளை) எனது பிதாக்கேட்கும்படி சொல்வீராக, இவண்—இப்பொழுது, நீ உள்ளம் கொண்டது முடிக்க போதி—நீர் மனத்தில்நினைத்தகாரியத்தை முடிக்கும்படிசெல்வீர், என்றான்—என்றுகூறினான் எ—று.

மைந்தன் என்றான் என இயையும். கண்டனையென்றமையால் யான்சொல்லவேண்டியதில்லையென்பதைக்குறிப்பித்தான். தன்பிதாத்தங்கள்செயல்களையறிதற்கு ஆவலுடையவனாயிருப்பானென்றெண்ணினனாதலின் 'தாதைகேட்பக்கழ

றுதி' எனவும், முருகவேள்கட்டளையைச்சூரனுக்குணர்த்தச்செல்வீரென்பாலி 'உள்ளங்கொண்டதுமுடிக்கப்போதி' எனவும் கூறினன். (௩௪)

வயந்திகழ் விடலை யங்கண் மற்றவர் தம்மை நீங்கிச்
கயந்தரு காவ லோர்தங் கருத்தின்மா லகற்றி யேக
வியந்திர மன்னோர் தேறி யிமையவர் குழாத்தி னோடு
சயந்தனைச் சுற்றி முன்போற் றடைமுறை யோம்ப லுற்றார்.

இ—ள்: வயம் திகழ் விடலை—வீரவாகுதேவர், அங்கண்—அப்பொழுது, அவர் தம்மை நீங்கி—அவர்களைப்பிரிந்து, கயம் தரு காவலோர் தம் கருத்தில் மால் அகற்றி ஏக—கீழ்மைமிகுந்த காவலாளர்களது மனத்திலுண்டாகிய மயக்கத்தைநீக்கிச்செல்ல, இயந்திரம் அன்னோர் தேறி—சூத்திரப்பாவையைநிகர்த்த அவ்வசுரர்கள் மனந்தெளிந்து, இமையவர் குழாத்திேனாடு சயந்தனை சுற்றி—தேவர் கூட்டத்துடன் சயந்தனைவளைந்து, முன்போல்—முன்காத்ததுபோலவே, தடைமுறை ஓம்பல் உற்றார்—தடைமுறையாகக்காவல்செய்தார்கள் எ—று.

வயந்திகழ்விடலை-வெற்றிவிளங்கப்பெறுகின்ற வீரர். சிறிதும்நற்குணமில்லாதவர்களாதலின் 'கயந்தருகாவலோர்' எனவும், சிறைப்பட்டார்புறத்தேயோடாமலும் புறத்தாருள்ளேவாராமலுமென்பார் 'தடைமுறை'எனவும்கூறினார். சூத்திரப்பாவை இயக்கியகாலத்திலியங்கியும் தடுத்தகாலங்களிற்றடைப்பட்டும்நிற்றலின் உவமிக்கப்பட்டது. (௩௫)

வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௪௮௦.

அவைபுகுபடலம்.

வீரவாகுதேவர் சூரனவைக்களத்திற்புகுந்தமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் சிறைச்சாலையைநீங்கிச் சூரபன்மன்ராசிருக்குமவையிற்சென்று, "அரசனே! தேவர்சிறையைநீக்கி நீதிகோடாவண்ணம் அரசியற்றுதி, அன்றேல் முருகவேள்வந்து உங்களெல்லோரையும்போரிலழித்துத் தேவரைச்சிறைமீட்பார் அவரே உனக்குஇதனைத்தெரிவிக்கும்படி என்னைத்தூதாகஅனுப்பினார்" என்றனர். சூரபன்மன் மறுத்தனன். பின்னும் வீரவாகுதேவர் பலநற்புத்திகளைக்கூறித்தெருட்டினர். சூரன் அவற்றைச்சிறிதும் பொருட்படுத்தாது அவரைப்பிடிக்குமாறு ஆயிரம்வீரரையேவ, வீரவாகுதேவர்அவர்களைக்கொன்று மீண்டுசென்றனர் என்பதாம்.

மடந்தையர் டிரிந்திடும் வாச வன்மக
ணடைந்திடு சிறைக்கள மகன்று வானெறி
நடந்தன னவுணர்கோ னண்ணு கோநக
ரிடந்தரு கிடங்கரை யிகந்து போயினன்.

இ—ள்: மடந்தையொடு இரிந்திடும் வாசவன் மகன் அடைந்திடு சிறைக்களம் அகன்று—மனைவியாகிய இந்திராணியோடும்அலைந்துதிரிகின்ற இந்திரனது புதல்வனாகிய சயந்தன் புகுந்திருக் கஞ்சிறைச்சாலையை(வீரவாகுதேவர்)நீங்கி, வான் நெறி நடந்தனன்—ஆகாயமார்க்கமாகநடந்து, அவுணர் கோன் நண்ணு கோநகர் இடம் தரு கிடங்கரை இகந்து—அசுரர்க்கரசனாகிய சூரபன்மனிருக்கின்ற கோயிலின்புறத்தேயுள்ள விசாலமான அகழியைக்கடந்து, போயினான்—சென்றார் எ—று. (க)

அகழியை நீங்கினா னயுதந் தன்னினு
மிகுதிகொ ணாற்படை வெள்ளந் தானைக
டகுதியின் முறைமுறை சாரச் சுற்றிய
முகிறவழ் நெடுமதின் முன்ன ரேகினான்.

இ—ள்: அகழியை நீங்கினான்—அகழியைக்கடந்து, அயுதம் தன்னினும் மிகுதி கொள் நாற்படை தானைகள் வெள்ளம்—பதினாயிரத்தினும்மிகமான சதுரங்க சேனைகளின்வெள்ளம், தகுதியில் முறை முறை சார—தகுதியோடும்நிரைநிரையாக அணுகிநிற்ப, சுற்றிய—வளைந்திருக்கின்ற, முகில் தவழ் நெடு மதில் முன்னர்-மேகங்கள்படிகின்ற நெடியமதிலினெதிரே, ஏகினான்—போனார் எ—று.

ஆயுதமுதலியகருவிகளுடனும்ஊக்கத்துடனுமென்பார் 'தகுதியில்' எனவும், காவற்றொழிற்குவேண்டிய அமைதியாகவென்பார் 'முறைமுறை' எனவும், மிகவுயர்ந்தமதிலென்பார் 'முகிறவழ்நெடுமதில்' எனவும் கூறினார். (உ)

கான்கொடி கங்கைநீர் கரப்ப மாந்தியே
மீன்கதி ருடுபதி விழுங்கி விட்டிடும்
வான்கெழு கடிமதில் வரைப்பின் முன்னரே
தான்கிளர் கோபுரங் கண்டு சாற்றுவான்.

இ—ள். கான் கொடி—கூட்டமாகியகொடிகள், கங்கை நீர் கரப்ப மாந்தி—ஆகாயகங்கையிலுள்ளநீர்வற்றும்படிபருகி, மீன் கதிர் உடுபதி விழுங்கி விட்டிடும்—நட்சத்திரங்களையும் சூரியனையும் சந்திரனையும் (இடையிடையே) மறைத்து வெளிப்படுத்துகின்ற, வான் கெழு கடி மதில் வரைப்பின் முன்னர்—ஆகாயமளவுமுயர்ந்த சிறந்த மதிலெல்லையின்முகத்தில், கிளர் கோபுரம் கண்டு—உயர்ந்திருக்கின்ற கோபுரத்தைப்பார்த்து, சாற்றுவான்— சொல்வார் எ—று.

கொடியாடைகள் காற்றுவீசுந்தோறும்நீரிற்றோய்தலாற் கங்கைவற்றுவதும், அலைதலால் கிரகங்களும் நட்சத்திரங்களும் மறைந்துவெளிப்படுவதும் என்க. தான்-அசைநிலை. (ங)

குரைகட லுண்டவன் கொண்ட தண்டினால்
வருபுழை மீமிசை வாய்ப்பத் தாரகன்
பெருவரை நிமிர்ந்திடு பெற்றி போலுமாற்
றிருநிலை பலவுடைச் சிகரி நின்றதே.

இ—ள்: திரு நிலை பல உடை சிகரி நின்றது—சிறந்தபலநிலைகளையுடைய இக்கோபுரம்நின்றதன்மை, குரை கடல் உண்டவன் கொண்ட தண்டினால்—ஒலிக்கின்றசமுத்திரத்தை (உழுந்தளவாகஉள்ளங்கையிலடக்கிப்) பருகிய அகத்திய முனிவர் கையிலேந்தியதண்டாயுதத்தினால், வரு புழை மீமிசை வாய்ப்ப—உண்டாகியதுவாரங்கள் ஒன்றன்மேலொன்றாகப்பொருந்த, தாரகன் பெரு வரை—தாரகாசுரனது இருப்பிடமாகிய பெரியமலை, நிமிர்ந்திடு பெற்றி போலும்—உயர்ந்துநின்றதன்மையைப்போலும் எ—று.

ஒன்றன்மேலொன்றாகப்பலநிலைகள்வைத்துக்கட்டப்பட்டிருக்கின்றகோபுரம் அகத்தியமுனிவரது தண்டினால் ஒன்றன்மேலொன்றாகக்குற்றப்பட்ட துவாரங்களுடனின்ற கிரவுஞ்சமலையைப்போன்றது என்பதாம். இதனாற்கோபுரத்தினுயரமும் பெருமையுங்குறிக்கப்பட்டன. (௪)

தூணம துறழ்புயச் சூர னென்பவன்
சேணுறு மண்டமேற் செல்லச் செய்ததோ
ரேணிகொ லோவிது வென்ன நின்றதா
னீணிலை பலவுட னிமிர்ந்த கோபுரம்.

இ—ள்: தூணமது உறழ் புய சூரன் என்பவன்—தூண்போன்றபுயங்களையுடைய சூரபன்மனானவன், சேண் உறும் அண்டமேல் செல்ல செய்தது—மேலேயிருக்கின்ற அண்டங்களுக்குஏறிச்செல்லும்படி செய்யப்பட்ட, ஏணி கொல் இது என்ன—ஏணியோ இதுவென்றுகண்டோரையுறும்படி, நின்றது—நின்றது, நீள் நிலை பல உடன் நிமிர்ந்த கோபுரம்—நெடிய பலநிலைகளுடனுயர்ந்திருக்கின்ற கோபுரமானது எ—று.

கோபுரம் நின்றது என இயையும். அது பகுதிப்பொருள்விகுதி. இவ்வுவமையாற் கோபுரத்தினுயரமும் நிலைகளின்மிகுதியும்விளக்கப்பட்டன. (௫)

துங்கமொ டிறைபுரி சூர்ன் கோயிலிற்
பொங்குசெம் மணிசெறி பொன்செய் கோபுர
மெங்கணு முடியுநா ளிவுளி வாய்ப்படு
மங்கியின் காறெழும் வடிவ மன்னதே.

இ—ள்: துங்கமொடு இறை புரி சூரன் கோயிலில்—பெருமையோடிருந்து அரசியல்செய்கின்றசூரபன்மனதுகோயிலிலுள்ள, பொங்கு செம்மணி செறி பொன் செய் கோபுரம்—பொலிவான மாணிக்கரத்தினங்களழுத்தப்பெற்ற பொன்னாலாகியகோபுரமானது, எங்கணும் முடியும் நாள்—எல்லாவுலகங்களுமழியுங்காலத்தில், இவுளி வாய் படும் அங்கி—குதிரையின்வாயினின்றுதோன்றுகின்றஅக்கினியானது, விண் காறு எழும் வடிவம் அன்னது—ஆகாயம்வரையுயர்ந்திருக்கின்றவடிவத்தைப்போலும் எ—று.

இவுளிவாய்ப்படுமங்கி-வடவாமுகாக்கினி. பொலிவு சோதியினாலும் வடிவத்தாலுமென்க. செந்நிறச்சோதியைப்பரப்பிக்கொண்டிருத்தலின் இவ்வாறுவமித்தார். (௬)

அண்டமெங் கெவற்றினு மடர்ந்து நிற்புறும்
விண்டொடர் வரைகளு மேரு வானவும்
பண்டிதன் மிசையுறப் பதித்த தொக்குமாற்
கொண்டியல் சிகரியுட் கூட சாலைகள்.

இ—ள்: அண்டம் எவற்றினும் அடர்ந்து நிற்புறும்—எல்லாவண்டங்களினுஞ் செறிந்துநிற்கின்ற, விண் தொடர் வரைகளும்—ஆகாயத்தையளாவியுயர்ந்தமலைகளையும், மேரு ஆனவும்-மேருமலைகளையும், பண்டிதன் மிசை உற பதித்தது ஒக்கும்—தொழில்வல்லானொருவன்மேலேபதித்துவைத்தாற்போலும், கொண்டு இயல் சிகரியுள் கூடசாலைகள்—அக்கோபுரந்தாங்கியிருக்கின்றமுடிகளிலுள்ள கூடங்களாயமைந்தசாலைகள் எ—று.

கூடசாலைகள் மிகப்பெரியனவாயும் அளவிறந்தனவாயுமுள்ளனவென்பது தாற்பரியம். சாலைகள் ஒக்கும் என இயையும். மேரு பிற்கூறப்பட்டமையால் வ

ரைகளுமென்றது பிறவற்றை. ஒவ்வோரண்டங்களினும் ஒவ்வொருமேருவாதலிற்பலவாயின. (எ)

மெய்ச்சுடர் கெழுமிய வியன்பொற் கோபுர
முச்சியிற் றொடுத்திட முழங்கு கேதன
மச்சுத னாஞ்சிவ னளவை தீர்முகத்
துச்சிதொ றிருந்தரா வொலித்தல் போலுமால்.

இ—ள்: மெய் சுடர் கெழுமிய வியன் பொன் கோபுர முச்சியில் தொடுத்திட—மெய்ம்மையானஒளிபொருந்திய சிறந்தபொன்னாலாகிய கோபுரத்தினுச்சியிற் கட்டப்பட்டு, முழங்கு கேதனம்—(காற்றினசைவினால்)ஒலிக்கின்றகொடிகள், அச்சுதன் ஆம் சிவன் அளவை தீர் முகத்து உச்சிதொறு இருந்து—அழியாக்கடவுளாகியசிவபிரானது அளவிறந்தமுகங்களின் உச்சிகடோறுமிருந்து, அரா ஒலித்தல் போலும்—சர்ப்பங்கள்ஒலிப்பதுபோலும் எ—று.

பெருஞ்சோதியென்பார் 'மெய்ச்சுடர்' எனவும், ஐம்முகமென்பார் 'அளவைதீர்முகம்' எனவும் கூறினார். பலமுகங்களைக்கொண்டு இல்பொருளுவமையின்பாற்படுத்தினுமாம். (அ)

திசைபடு சிகரியிற் செறிந்த வான்கொடி
மிசைபடு மண்டமேல் விடாம லெற்றுவ
பசைபடு மதளுடைப் பணைய கத்தினி
லிசைபடப் பலகடிப் பெறிதல் போலுமால்.

இ—ள்: திசை படு சிகரியில் செறிந்த வான் கொடி—நாற்றிசைகளினும் பொருந்திய கோபுரங்களின்மேல்நெருங்கியுள்ள பெரியகொடிகள், மிசை படும் அண்டமேல் விடாமல் எற்றுவ மேலேபொருந்தியஆகாயத்தின்மேல் இடையறாதுமோதுந்தன்மை, பசை படும் அதள் உடை பணையகத்தினில்—பசைபூசப்பெற்றதோலை இருபக்கங்களினுமுடையமுரசினிடத்து, இசை பட—ஒலிபிறக்கும்படி, பல கடிப்பு எறிதல் போலும்—பலகுறுந்தடிகள் அடிக்குந்தன்மையைப்போலும் எ—று.

பல கொடியாடைகள் காற்றினான்மோதப்பட்டு ஆகாயத்திற் பேரொலிபிறக்கத்தாக்குதல் பலகுறுந்தடிகள் முரசவாத்தியத்திற் பேரொலிபிறக்கத்தாக்குதல் போலும் என்பதாம். (கூ)

விண்ணவர் தாமுறை வியன்ப தத்தொடுந்
திண்ணிலை யிடந்தொறுஞ் சிவண வைகின
ரண்ணலங் கோபுர மதனிற் கைவலோன்
பண்ணுறு மோவியப் பாவை யென்னவே.

இ—ள்: அண்ணலம் கோபுரம் அதனில்—பெருமைபொருந்திய இக்கோயிற்கோபுரத்தில், கைவலோன் பண்ணுறும் ஓவிய பாவை என்ன—சித்திரத்தொழில்வல்லானொருவன் செய்துவைத்த சித்திரப்பாவையைப்போல, விண்ணவர்—தேவர்கள், தாம் உறை வியன் பதத்தொடும்— தாங்களிருக்கின்ற பெரியபதவிகளுடன், திண் நிலை இடம் தொறும் சிவண வைகினர் வலிய நிலைவாயில்களினிடங்கடோறும் பொருந்த இருந்தார்கள் எ—று.

ஒன்றன்மேலொன்றாக அடுக்கிச்செய்யப்பட்டிருக்கின்ற நிலைவாயில்கடோறுந் தேவபதங்களமைந்து, தொழில்வல்லானொருவன் அழகின்பொருட்டமைத்துவைத்தசித்திரங்கள் போன்றிருந்தன என்பதாம். இச்செய்யுளால், கோபுரம் தேவலோகங்களெவற்றினும் மேம்பட்ட உயரத்தையும்பெருமையையுமுடையதென்பது விளக்கப்பட்டது. (கo)

என்பன பலபல வியம்பி யீறிலாப்
பொன்புனை தோணியம் புரிசைச் சூழலின்
முன்புறு கோபுர வனப்பு முற்றவு
நன்பெரு மகிழ்ச்சியா னம்பி நோக்கினான்.

இ—ள்: நம்பி —வீரவாகுதேவர், என்பன பல பல இயம்பி— என்றிவ்வாறு பலபல அற்புதங்களைத் தம்முட்டாங்கூறி, ஈறு இலா பொன் புனை தோணியம் புரிசை சூழலின் முன்பு உறு அழிவில்லாத பொன்னாற்செய்யப்பட்ட உறுப்புக்களமைந்த மதிற்சுற்றின்முன்னேயிருக்கின்ற, கோபுர வனப்பு முற்றவும்— கோபுரத்தினழகுமுழுவதையும், நன் பெரும் மகிழ்ச்சியால் நோக்கினான்— நல்ல சிறந்த மகிழ்வுடன்பார்த்தார் எ—று.

ஈறிலாப்புரிசை எனஇயையும். தோணி-மதிலுறுப்பு. (கக)

புதவுறு கோபுரப் பொருவில் வாய்தலுண்
மதவலி யுக்கிரன் மயூர னாதியோ
ரதிர்தரு நாற்படை யயுதஞ் சுற்றிடக்
கதமொடு காப்பது காளை நோக்கினான்.

இ—ள்: புதவு உறு கோபுர பொரு இல் வாய்தலுள்—கதவினையுடைய ஒப்பற்ற கோபுரவாயிலினுள், மத வலி உக்கிரன் மயூரன் ஆதியோர்—மிக்க வலியையுடைய உக்கிரனும் மயூரனும் முதலானவீரர்கள், அதிர்தரு நால் படை அயுதம் சுற்றிட—ஒலிக்கின்ற சதுரங்கசேனை பதினாயிரக்கணக்காகச்சூழ, கதமொடு காப்பது—உற்சாகத்துடன்காவல்செய்வதை, காளை நோக்கினான்—வீரவாகுதேவர் பார்த்தார் எ—று.

மதம்-மிகுதி. கர்வத்தையும் வலிமையையுமுடைய உக்கிரனெனக்கூறினுமாம். வாய்தலுட் காப்பது எனஇயையும். எத்தகையசூழ்ச்சியானுமுட்புகாவண்ணங் காத்தலின் 'கதமொடுகாப்பது' என்றார். மதவலியென்பதைமயூரனுக்குமொட்டுக. (கஉ)

நோக்கிய திறலவ னொச்சி தாவியே
யாக்கமொ டமர்தரு மவுணன் கோயிலு
ளூக்கமொ டும்பரா னோடி முன்னுறு
மேக்குயர் சூளிகை மிசையிற் போயினான்.

இ—ள்: நோக்கிய திறலவன்—அவ்வாறு காவல்செய்வதைப்பார்த்த வீரவாகுதேவர், நொச்சி தாவி—மதிலைத்தாண்டி, ஆக்கமொடு அமர்தரும் அவுணன் கோயிலுள்—செல்வத்துடனிருக்கின்ற சூரபன்மனது கோயிலினுள், ஊக்கமொடு உம்பரான் ஓடி—உற்சாகத்துடன் ஆகாயமார்க்கமாய்விரைந்துசென்று, முன் உறு மேக்கு உயர் சூளிகை மிசையில் போயினான்—எதிரிலிருக்கின்ற மிகவுயர்ந்த ஒருசூளிகையின்மேற்போனார் எ—று.

அரசவைக்கணித்தாயுள்ளவென்பார் 'முன்னுறு' எனவும், மதிலினுட்பட்ட இடமுழுவதினுமுள்ள எல்லாநிகழ்ச்சிகளையும் இருந்துகாணத்தக்கவென்பார் 'மேக்குயர்' எனவும் கூறினார். (கங)

வேறு.

சூளிகை மிமிசை துன்னுபு சூரன்
மாளிகை யுள்ள வளந்தனை யெல்லா
மீளரி தாவிழி யோடுள மேவ
வாளரி நேர்தரு மாண்டகை கண்டான்.

இ—ள்: ஆளி அரி நேர்தரும் ஆண்டகை—மிருகங்களையாளுகின்ற சிங்கத்தைப்போன்ற ஆண்டகைமையையுடைய வீரவாகுதேவர், சூளிகை மீமிசை துன்னுபு—சூளிகையின்மேற்போயிருந்து, சூரன் மாளிகை உள்ள வளம் தனை எல்லாம்—சூரபன்மனது மாளிகையிலுள்ள செல்வங்களெல்லாவற்றையும், விழியோடு உளம் மீள அரிது ஆ மேவ—கண்ணுங்கருத்தும் மீளுதலருமையாகியமைய, கண்டான்—பார்த்தார் எ—று.

ஓடு-எண். எல்லாமிருகங்களையும் கண்டவுடனஞ்சுவிக்குமாற்றலுடைத்தாகலின் சிங்கத்தை மிருகராசனென்பர். கண்வேறொன்றைப்பார்க்கவிரும்பாதும் கருத்துவேறொன்றைநினைக்கவிரும்பாதும் ஒருமிக்கவென்பார் 'மீளரிதாவிழியோடுளமேவ' என்றார். (கச)

கண்டதோ ரண்ணல் கடுந்திறல் வெஞ்சூர்
திண்டிறல் வாளரி சென்னிகொள் பீடத்
தெண்டகு மாணை யியற்றிய செம்பொன்
மண்டபம் வைகுறும் வண்மை தெரிந்தான்.

இ—ள்: கண்டது ஓர் அண்ணல்—அவ்வாறு பார்த்தவீரவாகுதேவர், கடும் திறல் வெம் சூர்—மிக்கவலியையுடைய கொடியசூரபன்மன், திண் திறல் வாள் அரி சென்னி கொள் பீடத்து-பெருவலியையுடைய ஒளிமிகுந்தசிங்கம் தலையினாற்சுமக்கின்ற ஆசனத்தில், எண் தகும் ஆணை இயற்றிய—மதிக்கத்தகுந்த அரசியலைநடாத்திய, செம் பொன் மண்டபம் வைகுறும் வண்மை—செம்பொன்னாற்செய்யப்பட்ட மண்டபம் அமைந்திருக்கின்றவளப்பத்தை, தெரிந்தான்—பார்த்தார் எ—று.

சூர் ஆணையியற்றிய மண்டபம் என இயையும். (கரு)

அருந்தவ வேள்வி யயர்ந்தர னீயும்
பெருந்திரு மிக்கன பெற்றுல கெல்லாந்
திருந்தடி வந்தனை செய்திட வெஞ்சூ
ரிருந்திடு கின்ற வியற்கை யிசைப்பாம்.

இ—ள்: அரும் தவ வேள்வி அயர்ந்து—கடுந்தவமாகிய யாகத்தைச்செய்து, அரன் ஈயும் பெரும் திரு மிக்கன பெற்று—சிவபிரான்கொடுத்த பெருவளங்களை அதிகமாகப்பெற்று, உலகு எல்லாம் திருந்து அடி வந்தனை செய்திட—உலகத்தவரெல்லாம் சிறந்த தனதுகால்களை வணங்க, வெம் சூர்—கொடிய சூரபன்மன், இருந்திடுகின்ற இயற்கை—(அப்போது) அரசிருக்கின்றதன்மையை, இசைப்பாம்-கூறுவாம் எ—று.

இதுகவிக்கூற்று. மிக்கன முற்றெச்சம். உலகு-ஆகுபெயர். (கசு)

ஐயிரு நூறெனும் யோசனை யான்றே
மொய்யொளி மாழையின் முற்றவு மாகித்
துய்யபன் மாமணி துஞ்சிவில் வீசி
மையறு காட்சிகொண் மண்டப மொன்றின்.

இ—ள்: ஐ இரு நூறு எனும் யோசனை ஆன்று—ஆயிரம்யோசனை விசாலமுடையதாய், மொய் ஒளி மாழையில் முற்றவும் ஆகி—மொய்த்த சோதியையுடைய பொன்னினால்முழுவதுஞ்செய்யப்பட்டு, துய்ய பல் மா மணி துஞ்சி—தூய்மையான பல சிறந்த இரத்தினங்களழுத்தப்பெற்று, வில் வீசி—ஒளியைப் பரப்பி, மை அறு காட்சி கொள்—குற்றமற்ற தோற்றத்தையுடையதாயிருக்கின்ற, மண்டபம் ஒன்றின்—ஒருமண்டபத்தில் எ—று.

மாற்றுயர்ந்தபொன்னென்பார் 'மொய்யொளிமாழை' எனவும், குற்றமற்றவென்பார் 'தூய்ய' எனவும், கண்டார்ஒருகுறையைத்தானுஞ்சொல்லுதற்குஇடனாகாதவென்பார் 'மையறுகாட்சிகொள்' எனவும் கூறினர். மண்டபமொன்றின் இருந்தானென முப்பத்தெட்டாஞ்செய்யுளோடியையும். (கஎ)

மேனகை யோடு திலோத்தமை மெய்யி
னூனமில் காம ருருப்பசி யாதி
வானவர் மங்கையர் வட்ட மசைத்தே
மேனிமிர் சீகரம் வீசினர் நிற்ப.

இ—ள்: மேனகையோடு—மேனகையும், திலோத்தமை—திலோத்தமையும், மெய்யின் ஊனம் இல் காமர் உருப்பசி—அங்கலக்கணங்களிற் சிறிதுங்குறைபாடில்லாத அழகுமிக்க உருப்பசியும், ஆதி—முதலாகிய, வானவர் மங்கையர்—தேவதாசிகள், வட்டம் அசைத்து—ஆலவட்டங்களையசைத்தும், மேல் நிமிர் சீகரம் வீசினர் நிற்ப—மேலாகவுயருகின்ற சாமரங்களைவீசியும்நிற்க எ—று.

மெய் ஆகுபெயர். சிலர் ஆலவட்டங்களையசைத்தும் சிலர் சாமரங்களைவீசியும் நின்றனரென்க. வீசுந்தோறும் மேற்கிளம்புவனவாதலின் 'மேனிமிர்சீகரம்' என்றார்.

சித்திர மாமதி செங்கதிர் பாங்காய்
முத்தணி வேய்ந்து முகட்டிள நீல
முய்த்து மணித்தொகை யுள்ள மழுத்துஞ்
சத்திர மாயின தாங்கினர் நிற்ப.

இ—ள்: சித்திர மா மதி—அழகிய சிறந்த சந்திரனும், செம் கதிர்—சிவந்த நிறத்தையுடைய சூரியனும், பாங்கு ஆய்-பக்கங்களிற்பொருந்தி, முத்து அணி வேய்ந்து—முத்துத்தொங்கல்களால்வேயப்பெற்று, முகட்டு இள நீலம் உய்த்து-உச்சியில் இளமையானநீலரத்தினம் பதிக்கப்பெற்று, உள்ளம் மணித்தொகை அழுத்தும்-உட்பக்கத்தில் மாணிக்கரத்தினங்களழுத்தப்பட்ட, சத்திரம் ஆயின—குடைகளை, தாங்கினர் நிற்ப—ஏந்திநிற்க எ—று.

உள்ளமென்பதில் அம் பகுதிப்பொருள்விகுதி. இடையின்றித்தூக்கப்பெற்றென்பார் 'வேய்ந்து' எனவும், தண்மையானசோதியைப்பரப்புகின்றநீலமென்பார் 'இளநீலம்' எனவும் கூறினர். மதிசெங்கதிர் பாங்காய் நிற்ப என இயையும்.

வெள்ளடை பாகு வெளிற்றுறு சுண்ணங்
கொள்ளு மடைப்பைமென் கோடிகம் வட்டில்
வள்ளுடை வாளிவை தாங்கி மருங்காய்த்
தள்ளரு மொய்ம்புள தானவர் நிற்ப.

இ—ள்: தள்ள அரும் மொய்ம்பு உள தானவர்— விலக்குதற்கரிய வலிமையையுடைய அசுரர்கள், வெள் அடை பாகு வெளிற்று உறு சுண்ணம் கொள்ளும் அடைப்பை—வெற்றிலையும் பாக்கும் வெண்ணிறமான சுண்ணமும் அமைந்திருக்கின்ற அடைப்பையும், மென் கோடிகம்— மென்மையான பூந்தட்டும், வட்டில்—படிக்கமும், வள் உடை வாள்-கூர்மையான உடைவாளும் ஆகிய, இவை தாங்கி—இவைகளையேந்தி, மருங்கு ஆய் நிற்ப—பக்கத்திலமைந்துநிற்க எ—று.

முற்காலத்தில் தாம்பூலமருந்துங்கால் கர்ப்பூரசூரணத்தைச்சேர்ப்பது வழக்காதலின் 'வெளிற்றுறுசுண்ணம்' எனவும், அதிவிசித்திரமாகச்செய்யப்பெற்றபூந்தட்டென்பார் 'மென்கோடிகம்' எனவும், எவராலும்வெல்லுதற்கரிய பெருவலியென்பார் 'தள்ளருமொய்ம்பு' எனவும் கூறினர். (உ0)

வெம்மைகொள் பானுவை வெஞ்சிறை யிட்ட
செம்மலு மேனைய சீர்கெழு மைந்தர்
மும்மைகொ ளாயிர மூவரு மாகத்
தம்முறை யாற்புடை சார்ந்தனர் வைக.

இ—ள்: வெம்மை கொள் பானுவை வெம் சிறை இட்ட செம்மலும்—சுடுகிரணங்களையுடையசூரியனைக் கொடியசிறையில்வைத்தபுதல்வனாகிய பானுகோபனும், ஏனைய சீர் செழு மைந்தர்—மற்றைய சிறந்த புதல்வர்களாகிய, மும்மை கொள் ஆயிர மூவரும் ஆக—மூவாயிரத்துமூவருமாக, தம் முறையால் புடை சார்ந்தனர் வைக—தாமிருக்கவேண்டிய முறைப்படி பக்கத்திலமைந்திருக்க எ—று.

மூவாயிரத்துமூவரென்றது பதுமகோமளையிடத்துதித்த அக்கினிமுகன் இரணியன் வச்சிரவாகு என்னுமூவரையும் ஏனைமனைவியரிடத்துதித்த மூவாயிரவரையும் என்க. மூப்பிளமைகளுக்கேற்றவாறு உயர்வுந்தாழ்வுமாக அமைக்கப்பட்ட ஆசனங்களில் அணுகியும் அகன்றுமிருக்கவென்பார் 'தம்முறையால்-வைக' என்றார். (உக)

பாவ முயன்று பழித்திற னாற்றுங்
காவிதி யோர்கரு மங்கண் முடிப்போ
ராவதொர் சாரண ராய்படை மள்ள
ரேவரு ஞாங்கரி னெங்கணு நிற்ப.

இ—ள்: பாவம் முயன்று பழி திறன் ஆற்றும் காவிதியோர்— பாவத்தொழிலின்முயன்று நிந்தையானகருமங்களைச்செய்கின்ற காவிதியர்களும், கருமங்கள் முடிப்போர்-(தங்கள் தங்களுக்குவிதித்த) காரியங்களைச் செய்துமுடிப்பவர்களும், ஆவது ஒர் சாரணர்—சிறந்தசாரணர்களும், ஆய் படை மள்ளர்—சிறந்த சேனைத்தலைவர்களும் ஆகிய, ஏவரும்—எல்லாவங்கத்தினரும், ஞாங்கரின் எங்கணும் நிற்ப—பக்கத்திலெவ்விடங்களிலும்நிற்க எ—று.

காவிதியோர்-அமைச்சரிலொருசாரார். கருமங்கண்முடிப்போர்-கருமாதிகாரிகள். சாரணர்-தேசங்கடோறுமுலாவித்திரிந்து அறியவேண்டியனவற்றையறிந்துகூறுவோர். பாவஞ்செய்தலின் மனம்வைத்தென்பார் 'பாவமுயன்று' எனவும், எத்தகைய இரகசியகாரியங்களையும் அங்கங்கேபோயறிந்துவந்துகூறவல்லாராதலின் 'ஆவதொர்சாரணர்' எனவும், பலபெரும்போர்முனைகளில் அஞ்சாநெஞ்சராய்நின்று வென்றிபெற்றாரென்பார் 'ஆய்படைமள்ளர்' எனவுங்கூறினார் பாவமுயன்றுபழித்திறனாற்றுங்காவிதியோர் என்றதனால் அரசனினின்றும் தறுகண்மையாலும் தீச்சிந்தையாலும் ஏறிய மந்திரிமாரென்பது பெறப்பட்டது. இச்செய்யுளிற்கூறப்பட்டார் அரசவைக்கின்றியமையாமையின் அரசவெண்பேராயத்துட் கூறப்பட்டனரென்க. (உஉ)

நாடக நூன்முறை நன்று நினைந்தே
யாட வரம்பைய ராயுள ரெல்லாஞ்
சேடியர் கின்னரர் சித்த ரியக்கர்
பாடுற வீணைகள் பண்ணினர் பாட.

இ—ள்: அரம்பையர் ஆய் உளர் எல்லாம்—தேவதாசியராயுள்ளவர்களெல்லோரும், நாடக நூல் முறை நன்று நினைந்து ஆட—பரதநூன்முறைகளை நன்றாகச்சிந்தித்து நடிக்க, சேடியர்—வித்தியாதரர்களும், கின்னரர் சித்தர் இயக்கர்—கின்னரர்களும் சித்தர்களும் இயக்கர்களும், பாடு உற வீணைகள் பண்ணினர் பாட—அமைதிபொருந்தயாழ்களைப்பண்படுத்தி இசைக்க எ—று.

தாளம் அபிநயம் காலம் முதலியவற்றாற்சிறிதும்பிறழாவண்ணமென்பார் 'நாடகநூன்முறைநன்றுநினைந்து' எனவும், இசைக்கத்தக்கவாறு நரம்புகளை வீக்கியென்பார் 'பாடுற-பண்ணினர்' எனவும் கூறினர். (உ௫)

ஏகனை யீசனை யெந்தையை யெண்ணு
ராகிய தொல்லவு ணக்குழு வென்ன
வேகு முளத்தினர் கஞ்சுகர் வெங்கண்
மாகதர் சூரல் பிடித்து வழுத்த.

இ—ள்: ஏகனை ஈசனை எந்தையை எண்ணார் ஆகிய தொல் அவுண குழு என்ன—முதல்வரும் உலகத்தையாள்பவரும் எங்கள்பரமபிதாவுமாகிய சிவபிரானை நினையாதுமறந்த பழைய அசுரர்கூட்டத்தாரைப்போல, வேகும்— எரிகின்ற, உளத்தினர்—மனத்தையுடையவர்களும், கஞ்சுகர்— சட்டையைத்தரித்தவர்களுமாகிய, வெம் கண் மாகதர்—தறுகண்மையையுடைய துதிபாடகர்கள், சூரல் பிடித்து வழுத்த—பிரம்பைக்கையிலேந்திநின்றுதுதிக்க எ--று.

விசேடணங்கடோறுமுருபுவிரிப்பது வடநூல்வழக்கு. தொல்லவுணக்குழு என்றது முப்புரத்தசுரரை. சிவபத்தியிற்சிறந்தாராகிய அவ்வசுரருள் மூவர்தவிர்ந்த ஏனையரெல்லாம் திருமாலின்கபடபோதனையாற் புத்தமதத்தைமெய்யென்றுநம்பிச் சிவனைமறந்தாரென்க. மாகதர் அரசன்சமீபத்தில் வருவாரைப்பிரம்புகாட்டியகற்றி நிற்கவேண்டியவிடங்களினிறுவி அவனதுகீர்த்திகளையெடுத்துக்கூறிப்புகழ்ந்து நிற்பாரென்க. பெருஞ்சீற்றமுடையரென்பார் 'அவுணக்குழுவென்னவேகுமுளத்தினர்' என்றார். (உ௪)

உள்ளிடு மாயிர யோசனை யெல்லை
கொள்ளிட மான குலப்பெரு மன்றந்
தள்ளிட வற்ற சனங்கண் மிகுத்தே
யெள்ளிட வெள்ளிட மின்றென வீண்ட.

இ—ள்: உள்ளிடும் ஆயிர யோசனை எல்லை கொள்ளிடம் ஆன குல பெருமன்றம்—உள்ளடங்கியிருக்கின்ற ஆயிரயோசனையளவானபரப்பமைந்தகோயிலாகியபெரியஅந்தச்சபாமண்டபம், தள்ளிட அற்ற சனங்கள் மிகுத்து—விலக்குதற்கரியசனங்களால் நிறைந்து; எள் இட வெள்ளிடம் இன்று என ஈண்ட—எள்ளிடுதற்குத்தானும்வெளியிடமில்லையென்னும்படிநெருங்க எ—று.

ஆயிரயோசனைப்பரப்பையுள்ளடக்கியிருக்கின்றமன்றமென்பார் 'உள்ளிடு.........மன்றம்' எனவும், பணிசெய்தல் குறைமுறையிடல் முதலியகாரணங்களைக்கருதிவந்தசனங்களென்பார் 'தள்ளிடவற்றசனங்கள்' எனவும், மிகநெருங்கியென்பார்' எள்ளிடவெள்ளிடமின்றென்' எனவும் கூறினர். (உ௫)

வச்சிர மெய்வயி ரேரிய மொண்பல்
லுச்சியில் வாலுளை யேயொளிர் முத்த
மச்சுறு கண்மணி யாமரி மாவின்
மெய்ச்சிர மேந்தும் வியன்றவி சின்கண்.

இ—ள்: மெய் வச்சிரம்—சரீரம்வைராத்தினமாகவும், ஒள் பல் வயிரேரியம்—ஒளிபொருந்தியபற்கள் வயிரேரியரத்தினமாகவும், உச்சியில் வால் உளை ஒளிர் முத்தம்—உச்சியிற்பொருந்தியவெள்ளியமயிர் விளங்குகின்றமுத்தாகவும், அச்சுறு கண் மணி ஆம்—கண்டோரஞ்சத்தக்க கண்கள் நீலரத்தினமாகவும் அமைக்கப்பட்ட, அரிமாவின் மெய் சிரம் ஏந்தும்--சிங்கத்தினதுமெய்ம்மையாகியதலைகள்தாமக்கின்ற, வியன் தவிசின் கண் —சிறந்த ஆசனத்தில் எ—று.

உச்சியில்வாலுளை-பிடர்மயிர். நிறவேற்றுமைக்கேற்ப இரத்தினங்கள் தெரிந்துபதிக்கப்பெற்றிருத்தல்காண்க. உக்கிரமானபார்வையாதலின் 'அச்சுறுகண்' எனவும், உயிர்ச்சிங்கத்தின்சிரம்போறலின் 'மெய்ச்சிரம்' எனவும் கூறினார். (உக)

மீயுயர் நீல வியன்கிரி யும்பர்
ஞாயிறு காலையி னண்ணிய வாபோற்
பாயிருள் கீறிய பன்மணி கொண்ட
சேயபொன் மாமுடி சென்னியின் மின்ன.

இ—ள்: மீ உயர் நீல வியன் கிரி உம்பர்—ஆகாயமளவுமுயர்ந்த நீலநிறமான பெரிய உதயமலையின்மேல், ஞாயிறு காலையில் நண்ணியவா போல்—சூரியன் உதயகாலத்தில்வந்தாற்போல, பாய் இருள் கீறிய பல் மணி கொண்ட—பரந்தஇருளைப்போக்குகின்றபலஇரத்தினங்களழுத்தப்பெற்ற, சேய பொன் மா முடி சென்னியில் மின்ன—செம்பொன்னாற்செய்யப்பட்ட பெரியகிரீடம் சிரசில்விளங்க எ—று.

மீ-ஆகாயம். கருநிறமுடையனாகிய சூரனது உச்சியின்மேற் செம்பொன்னாற்செய்யப்பெற்றுமாணிக்கரத்தினங்களழுத்தப்பெற்றகிரீடந்தங்கிச் செவ்வொளிவீசிக்கொண்டிருத்தலால் கரியஉதயமலையிற்சூரியனுதிப்பதுபோலுமென்க. சூரபன்மனதுவடிவம் திண்ணென்றுபருத்துயர்ந்திருத்தலானும் கிரீடம்வட்டவடிவாயிருத்தலானும் இவ்வுவமைபொருந்துதல்காண்க. அதிகதூரத்திலுள்ளஇருளையும் ஓட்டுகின்றவென்பார் 'பாயிருள்கீறிய' என்றார். நீலவியன்கிரியும்பர் என்றதனால் அபூதவுவமை. (உஎ)

கறுத்தவ ராத்துணை கண்டிரு வெய்யோ
ருறுப்பிடை கவ்வி யொசிந்து தலைப்போய்
முறுக்கிய வாலொடு முன்கலந் தென்ன
மறுத்தவிர் குண்டலம் வார்குழை தூங்க.

இ—ள்: கறுத்த அரா துணை—கருநிறமான இரண்டுசர்ப்பங்கள், கண்டு—பார்த்து, இரு வெய்யோர் உறுப்பு இடை கவ்வி—இரண்டுசூரியர்களது பிம்பங்களை நடுவிற்கவ்வி, ஒசிந்து—வளைந்து, தலை போய் முறுக்கிய வாலொடு—தலையைநோக்கிப்போய்முறுக்கப்பெற்றவாலினுடன், முன் கலந்து என்ன—அந்தச்சூரியபிம்பங்களின்முன்பொருந்தினாற்போல, மறு தவிர் குண்டலம் வார் குழை தூங்க—குற்றமற்றகுண்டலங்கள் நீண்ட இரண்டுகாதுகளினுந் தூங்க எ—று.

மாணிக்கரத்தினமழுத்தி வட்டவடிவாகச்செம்பொன்னாற்செய்யப்பட்ட அணியினடுவே சர்ப்பம்பற்றி வாலைத்தலைவரையும்வளைத்துமுன்னேநின்றாற்போன்றகோலமாகக் குண்டலங்கள் செய்யப்படுவனவென்க. கறுத்தவராத்துணையென்றதனால் அவைநீலமணியாற்செய்யப்பட்டனவென்பதுதோன்றிற்று. கறுத்த-சீறிய எனினுமாம். தொழிற்சித்திரத்தாற்சிறிதுங்குறைவற்றகுண்டலமென்பார் 'மறுத்தவிர்குண்டலம்' என்றார். (உஅ)

வீறிய மாமணி வெற்பின் மிசைக்க
ணேறிய வொண்பக லிந்து வியற்கை
மாறிய வந்தென மால்வள மாகு
நீறு செறிந்திடு நெற்றி யிலங்க.

இ—ள்: வீறிய மா மணி வெற்பின் மிசை கண்—பெருமைபொருந்திய சிறந்த நீலநிறமாகிய உதயமலையின்மேல், ஏறிய ஒள் பகல் இந்து—இவர்ந்த பூருவபக்கத்துச்சந்திரன், இயற்கைமாறிய வந்து எனா—இயல்புக்குமாறாகத்தோற்

றிஞற்போல, மால் வளம் ஆரும் நீறு செறிந்திடும் நெற்றி இலங்க-சிறந்தசெல்வமாகிய திருநீறுதரிக்கப்பெற்ற நெற்றியானது விளங்க எ-று.

இயற்கைமாறிவருதல்- கீழ்நோக்கியகோடுகள் மேல்நோக்கியனவாக மாறியுதித்தல். சூரபன் மனதுவடிவம்மலையாகவும் சிரம்சிகரமாகவும் விபூதிப்பூச்சு இயற்கைமாறியுதித்தசந்திரனாகவும் உவமிக்கப்பட்டன. இருபக்கங்களும்மேலோங்க நடுத்தாழப்பூசப்பட்ட திருநீற்றையுடையவனுயிருந்தானென்பது இவ்வுவமையாற் போதரும். இச்செய்யுட்குப் பிறவாறும்பொருள்கூறுவர், அவைபொருந்தா. திருநீறுசிறந்தசெல்வமாதலினன்றே விபூதி பூதிமுதலியசொற்களைப் பரியாயமாகப்பெற்றது. (உக)

விண்டுமிழ் கின்ற வியன்புழை தோறுந்
தண்டுளி வந்தமர் தன்மைய தென்னப்
புண்டரி கம்பொறை போற்றி யுயிர்க்கும்
வண்டர ளத்தொடை மார்பின் வயங்க.

இ-ள்: விண்டு உமிழ்கின்ற வியன் புழை தோறும்—மலைகளிற்றோன்றுகின்ற பெரிய துவாரங்களினின்று, தண் துளி வந்து அமர் தன்மையது என்ன—குளிர்ந்த அருவிநீர்த்துளிகள்சிந்திக்கொண்டிருக்குந்தன்மையைப்போல, புண்டரிகம் பொறைபோற்றி உயிர்க்கும் வண் தாள தொடை—தாமரைகள் சுமந்து வெளிப்படுத்துகின்ற வளமார்ந்தமுத்துக்களாலானமாலைகள், மார்பின் வயங்க—நெஞ்சில்விளங்க எ-று.

உமிழ்கின்ற-இலக்கணை. முத்துத்தோன்றுமிடங்களுள்ளே தாமரையுமொன்றுமென்க. குணத்தான்மிக்கனவும் காட்சிக்கினியனவுமாதலின் 'வண்டாளத்தொடை' என்றார். மலைப்புரைகளினின்றுவரும்அருவிநீர் துளித்துக்கீழ்நோக்கியிழிதலின் முத்துமாலைக்குவமையாயிற்று. (௩௦)

பங்கமில் சந்தொடு பாளித நானங்
குங்கும மேனைய கந்திகள் கூட்டி
யங்க மதன்க ணணிந்தன வண்ட
மெங்கு முலாவி யிருங்கடி தூங்க.

இ-ள்: பங்கம் இல் சந்தொடு—குற்றமற்ற சந்தனத்தேய்வையுடன், பாளிதம் நானம் குங்குமம் ஏனைய கந்திகள் கூட்டி—பச்சைக்கர்ப்பூரத்தையும் கத்தூரியையும் குங்குமத்தையும் மற்றுஞ்சுகந்தப்பொருள்களையும் கலந்து, அங்கம் அதன் கண் அணிந்தன—சரீரத்திலணிந்திருக்குங்குழம்பு, அண்டம் எங்கும் உலாவி—எல்லாவண்டங்களிலும்பரந்து, இரும் கடி தூங்க—சிறந்தவாசனைகமழ எ-று.

ஏனையகந்தி-பனிநீர்முதலியன. கந்தத்தான்மிகுந்தகுறட்டைத்தெரிந்து மிகமென்மையாயரைத்தவென்பார் 'பங்கமில்' என்றார். (௩க)

வான்றிகழ் நீனிற மாமுகி லின்பாற்
றோன்றிய மின்புடை சுற்றிய தென்ன
வான்றுள வண்ட மனைத்தையு மாற்று
மான்றுயர் தோளிடை யங்கத மல்க.

இ-ள்: வான் திகழ் நீல் நிற மா முகிலின் பால் தோன்றிய மின்—ஆகாயத்தில்விளங்குகின்ற கருநிறமான பெரியமேகத்திற்றோற்றிய மின்னலானது, புடை சுற்றியது என்ன—(தோன்றியவுடன்மறையாது அம்மேகத்தைப்)பக்கத்தில் வளைந்திருந்தாற்போல, ஏன்று உள அண்டம் ஏனைத்தையும் ஆற்றும்—பாந்திருக்கின்றஎல்லாவண்டங்களையுஞ்சுமக்கின்ற, ஆன்று உயர் தோள் இடை—அகன்றுயர்ந்தபுயங்களில், அங்கதம் மல்க—தோளணிபொருந்த எ-று.

நீல் கடைக்குறை. ஆயிரத்தெட்டண்டங்களையுமென்பார் 'ஏன்றுளவண்ட மௌனத்தையும்' என்றார். அவ்வண்டங்களிலுள்ளாரெல்லாரையுந் தன்னாணையின் வழியெயொழுகுவிப்பதுபுயவலியேயாதலின் இலக்கணையாக 'அண்டமெனைத்தையு மாற்றும்-தோள்' என்றார். தோள்களகன்றுயர்ந்திருத்தல் ஆடவர்க்குச்சிறப்பெ ன்க. சூரபன்மனுடையகருநிறமேனிக்கு முகிலும் செம்பொன்னாற்செய்து இர த்தினங்களிழைக்கப்பெற்றதோளணிக்கு மின்னலும் உவமை. (௯௨)

மெய்த்துணை யாமிரு வெம்பணி ஞாலம்
பைத்தலை கொள்வ பரம்பொறை யாற்று
தெய்த்தன பூண்கொ டியாப்புறு மாபோற்
கைத்தல முன்கட கஞ்செறி வெய்த.

இ—ள்: ஞாலம் பை தலை கொள்வ— நிலவுலகத்தைப் படம்பொருந்தியத லையினாற்சுமப்பனவாய், மெய் துணை ஆம் இரு வெம் பணி— சிறந்தஇணையான கொடிய இரண்டுபாம்புகள், பரம் பொறை ஆற்றுது எய்த்தன— பாரத்தைச்சும க்கமாட்டாமல்இளைத்து, பூண் கொடு யாப்புறுமா போல்—(தலையின்கீழே)பூணி ட்டிறுக்கப்பெற்றதன்மையைப்போல, கைத்தல முன்— கையின்முற்பாகத்தில், கடகம் செறிவு எய்த - கங்கணம்நெருங்கியிருக்க எ—று.

ஒன்றோடொன்றுசிறிதும்வேறுபாடற்றவென்பார் 'மெய்த்துணையாம்' என வும், பூணால்யாக்கப்படுதற்கேதுத்தோன்ற 'பரம்பொறையாற்றதெய்த்தன' என வும் கூறினர். பெரும்பாரத்தைச்சுமக்கும்பொழுது கழுத்துளுக்காவண்ணம் பூ ணிட்டியாப்பதென்க. இருகைகளுக்கும் இருபாம்புகளுவமை. (௯௩)

நீலம தாய நெடுங்கிரி மேல்பால்
வாலிய கங்கை வளைந்திடு மாபோற்
கோல மிடற்றிடை கோவைகொண் முத்தின்
சால்வுறு கண்ட சரங்க ளிமைப்ப.

இ—ள்: நீலமது ஆய நெடும் கிரி மேல்பால்—நீலநிறமானநெடியமலையின் மேலிடத்தில், வாலிய கங்கை வளைந்திடுமா போல்— தூய்மையானகங்கைநதிசூ ழ்ந்துநின்றாற்போல, கோல மிடற்று இடை- அழகிய கழுத்தின்கண், கோவை கொள் முத்தின் சால்வு உறு கண்டசரங்கள்-கோக்கப்பட்ட முத்துக்களாலமைத லைப்பெற்ற கண்டசரங்களானவை, இமைப்ப—விளங்க எ—று.

நீலமலையின்மேற் கங்கைவளைந்துநிற்றல்போலென்றது இல்பொருளுவமை. நீலம லைக்குச்சூரபன்மனும் கங்கைநதிவளைந்துநிற்றற்குக் கண்டசரங்களணியப்பட்டி ருத்தலும் உவமை. கண்டசரம்-கழுத்தில்மாலைபோலணியப்படுவதோரணி. உச் சிக்கணித்தானஇடத்தென்பார் 'மேல்பால்' என்றார். (௯௪)

வீர மடந்தையர் மேதக நாளுஞ்
சீரிய தோளிணை செல்கதி யென்ன
வேரியல் பன்மணி யிட்டணி செய்த
வார வடுக்கல்பொன் னாக மிலங்க.

இ—ள்: வீர மடந்தையர்— வீரலக்குமிகள், மேதக- மேன்மைபொருந்த, நாளும்—தினந்தோறும், சீரிய தோள் இணை செல் கதி என்ன- சிறந்த இரண் டுபுயங்களிலும் ஏறிப்போதற்குச்செய்துவைக்கப்பட்டபடிகளைப்போல, ஏர் இய ல் பல் மணி இட்டு அணிசெய்த—அழகுபொருந்திய பலஇரத்தினங்களையழுத்தி அழகுபெறச்செய்த, ஆர அடுக்கல்- பதக்கநிரைகள், பொன் ஆகம் இலங்க— அ ழகியமார்பில்விளங்க எ—று.

ஒன்றுக்கொன்று இடைவெளிசிறிதுளதாகச் சூரபன்மனதுமார்பிற்றரிக்கப்பெற்றபதக்கங்கள் வீரலக்குமிகால்வைத்தேறிச்செல்லுதற்கேற்பஅமைத்த படிகள்போன்றன என்பதாம். இதனாற் சூரபன்மன் மிகவுயர்ந்தவடிவத்தையுடையனென்பதுந்தோன்றிற்று. கதி-ஆகுபெயர். பலஅண்டங்களினின்றும் பலர்வந்துசேர்வாராதலின் பன்மைப்படுத்தி 'வீரமடந்தையர்' எனவும், இலக்குமிகுடியேறின் இராச்சியம் அதிகாரமமுதலியவைபெருகுமாதலின் 'மேதக' எனவும், மாலையிற்றங்கள்மாளிகைகளிற்போய்ப் பின்னும காலையில் அரசிருக்குஞ்சமயத்தில்வந்தேறுவரென்பதுபோதர 'நாளும்-செல்கதி' எனவும், அவரிருத்தற்குத்தக்க புயங்களென்பதுபோதர 'சீரியதோளிணை' எனவும், பலசாதியானமணிகளையெல்லாம் இணைபார்த்துநிரைந்து காட்சிக்கினிமைபெறப் பதித்தவென்பதுபோதர 'எரியல்பன்மணியிட்டணிசெய்த' எனவும், அவ்வணிகளுக்கும் அவன்மார்பிற்குமுள்ள பொருத்தந்தோன்ற 'பொன்னுகம்' என அடைகொடுத்தும் கூறினர். (௧௫)

அந்தியின் வண்ணமு மத்தொளி யூருஞ்
சுந்தர மாலிடை சுற்றிய வாபோல்
முந்து பராரைகொண் மொய்ம்மணி யாடை
யுந்தியி னொண்பணி யோடு வயங்க.

இ—ள்: அந்தியின் வண்ணமும்- செவ்வானத்தினிறமும், அத்து ஒளி ஊரும்-சிவந்தசோதியையுடைய பரிவேடமும், சுந்தர மால் இடை சுற்றியவா போல்—அழகிய திருமாலினரையிற்சூழ்ந்தாற்போல, முந்து பரு அரை கொள் மொய் மணி ஆடை—சிறந்தபெரிய அரையிற்றரிக்கப்பெற்ற அழகுமிகுந்தவஸ்திரம், உந்தியின் ஒள் பணியோடு வயங்க—வயிற்றிற்றரிக்கப்பெற்ற சிறந்த ஆபரணத்தோடுகூடி விளங்க எ—று.

ஊர்-பரிவேடம். உந்தியினொண்பணி=உதரபந்தனமென்னும் அணி. கூடியென்னுஞ்சொல் எஞ்சிநின்றது. திருமாலினரையிற் செக்கர்மேகமும் அதன்மேற்செந்நிறப்பரிவேடமுஞ்சூழ்ந்தாற்போலச் சூரபன்மனது அரையிற் செம்பட்டாடையும் அதன்மேல் உதரபந்தனமுஞ் சூழப்பெற்றுவிளங்கின என்பதாம். சூரனுக்குத் திருமாலையுவமித்ததனால் மேனியின்றோற்றமும் அழகும் கருநிறமும், ஆடைக்குச் செவ்வானத்தையுவமித்ததனாலும் மொய்ம்மணியாடை என அடைகொடுத்தமையாலும் செந்நிறப்பட்டினாற்செய்யப்பட்டு இடையிடையே பொன்னாற்கோடுகளுஞ்சித்திரங்களும்பதிக்கப்பெற்றதென்பதும், உதரபந்தனத்திற்குச் செந்நிறப்பரிவேடத்தையுவமைகூறியதனால் சிவந்தநிறஇரத்தினங்களழுத்திச் செம்பொன்னாற்செய்யப்பட்டதென்பதும்தோன்றின. சுந்தரமால் அழகியகருமேகமெனக்கொண்டு ஏற்றவாறு அகலங்கூறினுமாம். (௧௬)

இருபணி பார்முக மிட்டிட வீட்டி
யுருமொடு மின்னு முலப்பில சுற்றிக்
கருமிட றாடு கலந்தென நுண்ணூல்
குரைகழல் வார்கழல் கொண்டு குலாவ.

இ—ள்: இரு பணி பார் முகம் இட்டிட வீட்டி—இரண்டுசர்ப்பங்கள் நிலத்திற்றலைபொருந்தும்படிவிழுத்தி, உருமொடு மின்னும் உலப்பு இல கரு மிடறு ஊடு சுற்றி—இடிகளும் மின்னல்களும் அளவிறந்தனவாகக் கருநிறமானகழுத்திற்சூழப்பெற்று, கலந்த என—நின்றாற்போல, நுண் நூல் குரை கழல்—நுண்மையான [illegible] வினாற்கட்டப்பட்ட ஒலிக்கின்ற வீரக்கழல்களை, வார் கழல் [illegible] கள் [illegible] அணியப்பெற்றுவிளங்க எ—று.

[illegible] சுற்றி கலந்தென என இயையும். பார்முகமிட்டிடவீட்டி என்றதனாற் காலடிகளுக்குச் சர்ப்பங்களின்றலை உவமையாதல்தெளிக. கழலுக்கு இடியு

ம் நூலுக்கு மின்னலும் உவமை. இவ்வுவமைகளால் வீரக்கழலினதும் நூலினதும் ஒளிப்பெருக்கம் தோன்றிற்று. கலந்தென்பதிற்படுவிகுதிதொக்கது. கண்ணுக்குப்புலப்படாத நூலென்பார் 'நுண்ணூல்' என்றார். (௬௭)

மென்மணி மாலையின் வேத னியற்றிப்
பன்மணி மீது படுத்திய பல்பூண்
டொன்மணி மெய்புனை சூரபன் மாவோர்
பொன்மணி மாமுகில் போல விருந்தான்.

இ—ள்: வேதன்—பிரமதேவர், மெல் மணி மாலையின் இயற்றி— மென்மையான அழகிய பொன்னினாற்செய்து, பல் மணி மீது படுத்திய—பலவகையான இரத்தினங்களைமேலேபதித்த, பல் பூண்—பலவகையான அணிகளை, தொல் மணி மெய் புனை—பழைய கரியசரீரத்திலணிந்த, சூரபன்மா—சூரபன்மன், ஓர் பொன் மணி மா முகில் போல—பொன்னையும் இரத்தினங்களையுமணிந்த கரியவொருமேகத்தைப்போல, இருந்தான்—அரசிருந்தான் எ—று.

மணிமெய் அழகுபொருந்தியமேனி எனினுமாம். மாற்றுயர்ந்தபொன்மென்மையாயிருத்தலியல்பு. இருபத்தேழாஞ்செய்யுண்முதலிதுகாறும்பன்னிருசெய்யுட்களாற் சூரபன்மனதுவடிவம் முடிமுதற்பாதமீறாகவருணிக்கப்பட்டது. ()

இருந்திடு கின்ற வியற்கை விழிக்கோர்
விருந்தமு தாக வியப்பொடு நோக்கிச்
சுரந்திடு மன்பொடு குளிகை வைகும்
பெருந்திறன் மாமுகி லிங்கிவை பேசும்.

இ—ள்: இருந்திடுகின்ற இயற்கை விழிக்கு ஓர் விருந்து அமுது ஆக—அவ்வாறு சூரபன்மனரசிருக்குஞ்சிறப்புத் தமதுகண்களுக்கு ஒருவிருந்தாகிய அமிர்தத்தைப்போல்வதாக, குளிகை வைகும் பெரும் திறல் மா முகில்—குளிகையின் மேலிருக்கின்ற மிக்கவலிமையையுடைய சிறந்தமேகம்போல்வாராகிய வீரவாகுதேவர், வியப்பொடு நோக்கி—அதிசயத்துடன்பார்த்து, சுரந்திடும் அன்பொடு—பெருகுகின்ற அன்பினுடன், இவை பேசும்—இவற்றைச்சொல்வார் எ—று.

முகில் ஆகுபெயர். குளிகையிற்படிந்திருத்தலாலும் அரசவைச்சிறப்புக்களையெல்லாங்கண்ணுற்பருகுதலாலும் அன்புசுரத்தலாலும் வீரவாகுதேவரைமுகிலென்றார். நிறவொப்புமைபற்றியன்று. அமிர்தம் வாய்க்கு எத்துணைச்சுவையைப்பயக்குமோ அத்துணைச்சுவையைக் கட்புலனுக்குப்பயத்தலின் 'விழிக்கோர்விருந்தமுதாக' எனவும், பிறவரசவைச்சிறப்புக்களெல்லாம் இச்சிறப்பைநோக்க மிகத்தாழ்ந்தமையை மதித்து நோக்கியென்பார் 'வியப்பொடுநோக்கி' எனவும், இவற்றையெல்லாம் இவன்செய்ததவத்தாலிழக்கின்றானேயென்று இரக்கங்கொண்டென்பார் 'சுரந்திடுமன்பொடு' எனவும் கூறினார். (௬௯)

மூவரின் முந்திய முக்கண னம்பொற்
சேவடி பேணிய தேவர்க டம்முட்
டூவுடை வேலுள சூரபன் மாப்போ
லேவர் படைத்தன ரித்திரு வெல்லாம்.

இ—ள்: மூவரில் முந்திய முக்கணன் அம் பொன் சே அடி பேணிய தேவர்கள் தம் உள்—மும்மூர்த்திகளுட்சிறந்தவராகிய சிவபிரானது அழகிய பொன்மயமான சிவந்த திருவடிகளை வழிபட்டதேவர்களுள், தூ உடை வேல் உள சூரபன்மா போல்—தசைப்பற்றுப்பொருந்திய வேற்படையையேந்திய சூரபன்மனைப்போல, இ திரு எல்லாம்— இந்தச்செல்வங்களெல்லாவற்றையும், ஏவர் படைத்தனர்—வேறெவர் பெற்றிருக்கின்றார்கள்? எ—று.

98.

முக்கணன்-மூன்றுதிருக்கண்களையுடையவன். பிரமாமுதலியதேவர்கள் முற்காலத்தில் அருந்தவங்கள்செய்துபெற்ற செல்வமெல்லாம் இவன்பெற்றசெல்வத்திற்குச் சிறிதும் இணையாகாதென்று வியந்தாரென்க. எதிர்ந்தாருயிரைத்தவறாது கொல்லவல்லதென்பதுபோதர 'தூவுடைவேல்' என்றார். ஏவர் என்னும்வினாப்பெயர் இன்மைகுறித்துநின்றது. (சO)

ஓய்ந்து தவம்புரி வோருளுவன்போன்
மாய்ந்தவ ரில்லை மறத்தொடு நோற்றே
யாய்ந்திடின் முக்கணெம் மையனு மின்னோர்க்
கீந்தது போற்பிறர்க் கீந்தது மின்றால்.

இ—ள்: ஆய்ந்திடின்—ஆராயுமிடத்து, ஓய்ந்து தவம் புரிவோருள்—உடல்தளரத்தவஞ்செய்பவர்களுள், மறத்தொடு நோற்று—தறுகண்மையுடன் தவமியற்றி, உவன் போல் மாய்ந்தவர் இல்லை—இவனைப்போல இறந்தவர்களில்லை, முக்கண் எம் ஐயனும்—மூன்றுதிருக்கண்களையுடைய எங்கள்தலைவராகிய சிவபிரானும், இன்னோற்கு ஈந்தது போல்— இவனுக்குவரங்கொடுத்ததுபோல, பிறர்க்கு ஈந்ததும் இன்று—பிறரெவருக்காயினும் வரங்கொடுத்ததுமில்லை எ—று.

தவமும்பெரிது வரமும்பெரிது என்பதாம். தன்மேனியினுள்ளஅங்கங்களைத்துணித்து ஓமஞ்செய்தலும் ஈற்றில் யாகாக்கினியுள்வீழ்தலும் பிறவுமடங்க 'மறத்தொடுநோற்று' என்றார். உம்மைகள் எச்சங்கள். (சக)

பாடுறு வேள்வி பயின்றழல் புக்கும்
பீடுறு மிவ்வள மாயின பெற்று
நீடுறு மாறு நினைந்திலன் வெய்யோன்
வீடுறு கின்ற விதித்திற னன்றே.

இ—ள்: பாடு உறு வேள்வி பயின்று அழல் புக்கும்— பெருமைபொருந்தியயாகத்தைச்செய்து (முடிவில்) ஓமாக்கினியுள்வீழ்ந்தும், பீடு உறும் இவ் வளம் ஆயின பெற்றும்—பெருமைபொருந்திய இந்தவளங்களையெல்லாம்பெற்றிருந்தும், வெய்யோன்—கொடியவனாகியசூரபன்மன், நீடு உறுமாறு நினைந்திலன்—நீண்டகாலம்வரை இருக்கும்படி நினைத்திலான், வீடுறுகின்ற விதி திறன் அன்றே—(அங்ஙனம்நினையாமை) இறக்கின்றவிதியின்வலியினாலன்றே எ—று.

அன்றே-பலரறிதேற்றம். உம்மைகள்சிறப்பு. இவ்வளங்களை மிகவருந்திப்பெற்றும் அழியும்விதியனாகுதலாற் காக்கநினைந்திலான் என்பதாம். வருந்தித்தேடியபொருளை அழிந்துபோகாவண்ணம் இயன்றவரைகாப்பதுலகியல். இறக்கும்விதியனுகினோர்க்கு நற்புத்திகைகூடாதாதலின் 'வீடுறுகின்றவிதித்திறனன்றே' என்றார். தேவர்சிறையைநீக்காவிடிற் செல்வம்நிலையாதென்னுமுண்மை இவனுடையபுத்தியில் நுழையாமையால் இங்ஙனங்கூறினர். (சஉ)

வேறு.

மெய்ச்சோதிதங்கு சிறுகொள்ளிதன்னை விரகின்மைகொண்டகுருகார்
கச்சோத மென்று கருதிக் குடம்பை தனிலுய்த்து மாண்ட கதைபோ
லச்சோ வெனப்ப லிமையோரை யீண்டு சிறைவைத்த பாவ மதனா
லிச்சூர பன்மன் முடிவெய்து நாளை யிதனுக்கொ ரைய மிலையே.

இ—ள்: மெய் சோதி தங்கு சிறு கொள்ளி தன்னை— சிறந்தஒளிபொருந்தப்பெற்ற சிறியநெருப்புக்கொள்ளியை, விரகு இன்மை கொண்ட குருகு— உபாயபுத்தியில்லாத பறவை, ஆர் கச்சோதம் என்று கருதி—உண்ணுதற்கேற்ற மின்மினியென்று சிந்தித்து, குடம்பை தனில் உய்த்து—(தனதுஇருப்பிடமாகிய)கூ

ட்டிற் கொண்டுபோய்வைத்து மாண்ட கதை போல்— இறந்தசரித்திரம்போல, அச்சோ என பல் இமையோரை ஈண்டு சிறை வைத்த பாவம் அதனால்— ஐயோவென்றிரங்கும்படி பலதேவர்களை இங்கேசிறையில்வைத்த பாவத்தினால், இ சூரபன்மன்— இந்தச்சூரபன்மன், நாளை முடிவு எய்தும்—நாளைக்கு இறப்பான், இதனுக்கு ஓர் ஐயம் இலை—இதற்கொருசந்தேகமுமில்லை எ—று.

ஏ-அசை. அச்சோ-இரக்கத்தைக்காட்டுங்குறிப்புமொழி. சுவாலைதணிந்து நெடுநேரஞ்சென்றும் கருகாது தழன்மயமாயிருக்குங்கொள்ளியென்பார் 'மெய்ச்சோதிதங்கு-கொள்ளி' எனவும், பெருமையானும் நீட்சியானும் மிகக்குறைந்தவிறகுப்பிளவின்றலையிற்பற்றியிருக்குங்கொள்ளியென்பார் 'சிறுகொள்ளி' எனவும், தீக்கொள்ளியினதும் மின்மினியினதும் வேற்றுமையைத்தெளிதற்கேற்ற அறிவாற்றலில்லாதவென்பார் 'விரகின்மைகொண்ட' எனவும், பற்பலமின்மினிகளை உணவின்பொருட்டு நாடோறுங்கவ்விச்சென்று கூட்டில்வைத்துத்தின்ற பயிற்சிதோன்ற 'ஆர்கச்சோதம்' என அடைபுணர்த்தியும், பெரியோரெடுத்துக்கூறும் பழமொழியாதலின் 'மாண்டகதைபோல்' எனவும், ஆற்றொணாத்துயர்கூர்ந்தென்பதுபோதர 'அச்சோவென' எனவும், தனக்குத்தீங்குசெய்தாரிவர் செய்யாதாரிவர் என ஆராயாது அகப்பட்டாரையெல்லாஞ்சிறைசெய்தானாதலின் 'பல்இமையோரை-சிறைவைத்த' எனவும், விரைவிலிறப்பானென்பார் 'நாளை முடிவெய்தும்' எனவும், இத்துணைச்சேனைகளோடும் பெருவலியோடும் வரங்களோடும் வாழ்வான் இறப்பதெவ்வாறென்னுமையம் சிறிதுங்கொள்ளற்பாற்றன்றென்பார் 'இதனுக்கோரையமிலை' எனவும் கூறினார். தீக்கொள்ளியைக்கூட்டிலுய்த்தலால் அது அங்குள்ள மெல்லிய அடைகளில்மூண்டுபற்ற அக்கூடும் அயற்கூடுகளும் அவற்றிலுள்ள பறவையினங்களுடன் விரைவிலழிதல்போல, தேவரைச்சிறைவைத்தலால் அப்பாவம் செய்தார் செய்வித்தார் உடன்பட்டார்முதலிய தொடர்புகளால் அனைவரையும்பற்ற அவரெல்லாம் தங்கள்வளத்துடன் விரைவிலழிவார் என்பதுகுறிப்பு. (௬௩)

மிகையான வீரம் வளமாற்றல் சால மேவுற்று ளோரு மிறையும்
பகையார்க ணேனு முளராகி வாழ்தல் பழுதன்றி நன்றி படுமோ
மகவானை மங்கை யுடனே துரந்து மவர்மைந்த னோடு சுரரை
யகலாம லீண்டு சிறைசெய்த பாவ மதனா லிழப்ப னரசே.

இ—ள்: மிகை ஆன வீரம் வளம் ஆற்றல் சால மேவுற்றுளோரும்—அளவின்மேம்பட்ட வீரத்தையும் செல்வத்தையும் வலியையும் மிகப்பொருந்தியுள்ளவர்களாயினும், இறையும் யார் கண் ஏனும் பகை உளர் ஆகி வாழ்தல்—சிறிதாயினும் எவரிடத்திலாயினும் பகையுள்ளவர்களாய்வாழுதல், பழுது அன்றி நன்றி படுமோ—தீதாய்முடியுமன்றி நன்மையாகுமா? (ஆகாது; ஏனெனில்), மகவானை மங்கை உடனே துரந்தும்—இந்திரனை மனையாளுடன் துரத்தியும், அவர் மைந்தனோடு சுரரை அகலாமல் ஈண்டு சிறைசெய்த பாவம் அதனால்—அவர்களதுபுதல்வனாகியசயந்தனையும் மற்றுந்தேவர்களையும் விலகாவண்ணம் இந்நகரிற்கொணர்ந்து சிறையில்வைத்தபாவத்தினால், அரசு இழப்பன்—அரசியலையிழப்பான் (ஆதலின்) எ—று.

இறை-விரலிறை, ஆகுபெயராய்ச் சிறுமையையுணர்த்தியது. கொணர்ந்தென்பது சொல்லெச்சம். உம்மை-இறையுமென்பதில் இழிவு. துரந்துமென்பதில் உயர்வு. பகையைவெல்லுதற்குவேண்டிய அளவினின்று அதிகமான வீரமுதலியனவென்பார் 'மிகையானவீரம் வளம் ஆற்றல்' எனவும், எண்ணியாங்குகிடைக்கப்பெற்றாரென்பார் 'சாலமேவுற்றுளோர்' எனவும், தம்மினும் வலியான்மிகக்குறைந்தார்மாட்டுமென்பார் 'யார்கணேனும்' எனவும், அரசியலையும் ஊரையும் விடுத்து அலையச்செய்துமென்பார் 'துரந்தும்' எனவும் கூறினார். (௬௪)

மன்னுந் திறத்தி னமர்சூர பன்மன் மாமக்கள் சுற்ற நகர
முன்னும் படிக்கு மரிதான செல்வ முடனுளே மீறு படுமேல்
முன்னென் பவர்க்கு முன்னாகு மாறு முகனல்கு முத்தி யலதே
யென்னுண்டு நாளும் வினைசெய் துழன்ற விவனு ருயிர்க்கு நிலையே.

இ—ள்: மன்னும் திறத்தின் அமர் சூரபன்மன்—நிலைபெற்றிற்சூரியகாரணங்களுடனிருக்கின்ற இந்தச்சூரபன்மன், மா மக்கள் சுற்றம் நகரம் உன்னும்படிக்கும் அரிது ஆன செல்வம் உடன்—சிறந்த புதல்வரும் இனத்தாரும் நகரமும் நினைத்தற்குமரியதாயிருக்கின்ற செல்வமும் ஆகியஇவற்றோடு, நாளை ஈறுபடுமேல்—நாளைக்குஇறப்பானாயின், முன் என்பவர்க்கும் முன் ஆகும் ஆறுமுகன் நல்கும் முத்தி அலது—முதற்கடவுளெனப்படுவார்க்கெல்லாம் முதற்கடவுளாயிருக்கின்ற முருகவேளருளும் மோட்சமொன்றேயன்றி, நாளும் வினை செய்து உழன்ற இவன் ஆர் உயிர்க்கு—தினந்தோறும் பாவங்களைச்செய்தலைந்த இவனுடைய அரிய உயிருக்கு, நிலை—நிலைபேறானபொருள், என் உண்டு—வேறியாதுளது? எ—று.

ஈறுபடுமேல் என் உண்டு எனஇயையும். உன்னும்படிக்குமென்பதில் உம்மை இழிவு. என் என்னும்வினா இன்மைகுறித்தது. அழிவடைவானென்று எவரும் நினைத்தற்கிடமின்றியென்பார் 'மன்னுந்திறத்தின்' எனவும், வீரம் அழகு இளமை முதலியவற்றாற்குறைவற்றபுதல்வரென்பார் 'மாமக்கள்' எனவும், பிறர் பெறுதற்கியலாதசெல்வமென்பார் 'உன்னும்படிக்குமரிதானசெல்வம்' எனவும், ஒவ்வொருசமயத்தாரும் ஒவ்வொருதேவரையே முதற்கடவுளென்றுநிச்சயிக்க அவர்க்கெல்லாம் முதற்கடவுளாய் அவரையதிட்டித்துநின்று வேண்டியஅருளை ஏற்றபடிசெய்யும் முழுமுதற்கடவுளென்பார் 'முன்னென்பவர்க்குமுன்னாகுமாறுமுகன்' எனவும், நன்னெறிச்செல்லாதானென்பதுபோதர 'வினைசெய்துழன்ற' எனவும், சிறந்தவாழ்வுடையாரை அருமைபாராட்டுதலியல்பாகலின் 'ஆருயிர்' எனவும் கூறினர். முருகவேள்முன்னிலையில் அவரேவியவேலாயுதத்தாலிறத்தலின் முத்திசித்திக்குமென்று துணிந்தனரென்க. அலதேயென்னும்பாடஞ்சிறப்பின்று. (௩௫)

என்றித் திறங்க ளருளோடு பன்னி யெழில்கொண்ட வேர மிசைமேய, துன்றுற்ற வீரன் வளனோ டிருந்த சூரன்மு னேக றுணியாக், குன்றத்தி னின்று மெல்லை போன்று குமரேச னெந்தை யடிக, ளொன்றக் கருத்தி னிடைகொண் டெழுந்து நடைகொண் டவைக்க ணுறுவான்.

இ—ள்: என்று இ திறங்கள் அருளோடு பன்னி—என்றுஇன்னோன்ன வசனங்களைக்கருணையோடுகூறி, எழில் கொண்ட வேரம் மிசை துன்றுற்ற வீரன்—அழகுபொருந்திய சூளிகையின்மேலிருந்த வீரவாகுதேவர், வளனோடு இருந்த சூரன் முன் ஏகல் துணியா—செல்வத்துடனிருக்கின்ற சூரபன்மனுக்குமுன் போகநினைத்து, குமரேசன் எந்தை அடிகள் ஒன்ற கருத்தின் இடை கொண்டு—எங்கள் பரமபிதாவாகிய முருகவேளின் திருவடிகளை ஒருவழிப்பட மனத்திற்றியானித்து, குன்றத்தில் நின்றும் இவர் எல்லை போன்று எழுந்து நடைகொண்டு—உதயமலையினின்றுகிளர்கின்ற சூரியனைப்போல எழும்பிநடந்து, அவைக்கண் உறுவான்—சபாமண்டபத்தைநோக்கிவருவார் எ—று.

முப்பத்தொன்பதாஞ்செய்யுளிற் 'சுரந்திடுமன்பொடு' என்றதற்குரைத்தவாறு இரக்கங்கொண்டமனத்தினராயென்பார் 'அருளோடு' எனவும், அரசியற்குரிய அங்கங்களுடனென்பார் 'வளனோடு' எனவும், சபைவளங்களைப்பார்த்தன்முத

வியவற்றிற் சிறிதும்புலன்செலுத்தாதென்பார் 'ஒன்ற' எனவும் கூறினார். வீரவாகுதேவரும் வேரமும் சிவந்தநிறமுடைமையால் உதயமலையினின்றெழுஞ்சூரியனையுவமித்தார். தமதுவடிவத்துடன்வெளிப்பட்டு அவையிற்புகவேண்டுதலான் தீங்குவிளையாமைப்பொருட்டு முருகவேளைத்தியானித்தனர். (சுசு)

வேறு.

நலஞ்செய் சூளிகை நீங்கிவிண் ணெறிக்கொடு நடந்து
கலஞ்செய் திண்டிறல் வாகுவாம் பெயருடைக் கடவுள்
வலஞ்செய் வாட்படை யவுணர்கோன் மன்னிவீற் றிருக்கும்
பொலஞ்செய் கின்றவத் தாணிமண் டபத்திடைப் போனான்.

இ—ள்: கலம் செய் திண் திறல் வாகு ஆம் பெயர் உடை கடவுள்—வீரவாகென்னும்பெயரையுடைய தேவர், நலம் செய் சூளிகை நீங்கி—அழகுவிளங்குகின்ற வேரத்தினின்றுமெழுந்து, விண் நெறி கொடு நடந்து—ஆகாயமார்க்கமாக நடந்து, வலம் செய் வாள் படை அவுணர் கோன் மன்னி வீற்றிருக்கும்—வெற்றியைத்தருகின்ற வாட்படையையேந்திய அசுரர்க்கரசனாகிய சூரபன்மன் நிலைபெற்று அரசிருக்கின்ற, பொலம் செய்கின்ற அத்தாணி மண்டபத்து இடை—பொன்னாற்செய்யப்பட்ட அத்தாணிமண்டபத்தின்கண், போனான்-சென்றார் எ-று.

நடந்து போனான் என இயையும். கலஞ்செய்திண்டிறல்வாகு-ஆபரணங்களையணிந்த திண்ணிய திறலார்ந்தபுயங்களை உடையான். கலஞ்செய் என்பது புயத்துக்கடை, செய்-இலக்கணை. நலஞ்செய்சூளிகை என்றதற்கு நன்மையைச்செய்த வேரமெனப்பொருள்கொண்டு, அவைக்களத்தையும் அவ்விடத்துள்ளநிகழ்ச்சிகளையும் காணுதற்குத்துணையாயிருந்தவென அகலங்கூறலுமொன்று. வீசியவழித்தவருந்துதுணிக்கவல்ல வாளென்பார் 'வலஞ்செய்வாள்' எனவும், நாடோறுந்தவறுதாசிருக்கப்பெறுவதாகலின் 'மன்னிவீற்றிருக்கும்' எனவும் கூறினார். (சஎ)

எல்லை யில்லதோர் பெருந்திரு நிகழவீற் றிருந்த
மல்ல லங்கழ லிறைவனைக் குறுகிமாற் றலரால்
வெல்ல ருந்திறல் வீரவா குப்பெயர் விடலை
தொல்லை நல்லுருக் காட்டினா னவைக்கெலாந் தோன்ற.

இ—ள்: மாற்றலரால் வெல்ல அரும் திறல் வீரவாகு பெயர் விடலை—பகைவர்களால் வெல்லுதற்கரிய வலிபொருந்திய வீரவாகுவென்னும்பெயரையுடைய வீரர், எல்லை இல்லது ஓர் பெரும் திரு நிகழ வீற்றிருந்த மல்லலம் கழல் இறைவனை குறுகி—அளவிறந்த பேருபசாரங்கள்நடைபெறஅரசிருந்த வலிமைபொருந்திய வீரக்கழலைத்தரித்த தலைவனாகிய சூரபன்மனையணுகி, அவைக்கு எலாம் தோன்ற—சபையாரனைவர்க்குந்தோற்றும்படி, தொல்லை நல் உரு காட்டினன்—பழைய சுயரூபத்தைக்காண்பித்தார் எ—று.

இப்படலத்திற்பதினேழாஞ்செய்யுள்முதல் நாற்பத்தெட்டாஞ்செய்யுள்காறுங்கூறி வருணிக்கப்பட்டவாறுநிகழுமென்பார் 'எல்லையில்லதோர்பெருந்திருநிகழ' எனவும், அவைக்களத்தாரெதிர்ப்பினும் பொருதுவெல்வேனென்றதுணிவுடையாரென்பார் 'மாற்றலரால்வெல்லருந்திறல்-விடலை' எனவும்கூறினார். (சஅ)

ஒற்றை மேருவி லுடையதோர் பாம்பொரு ளுதவுங்
கொற்ற வேலுடைப் புங்கவன் றூதெனக் கூறி
யிற்றை யிப்பக லவுணர்கோன் கிழியா னொளிவாய்
நிற்ற லெம்பிரான் பெருமையி னிழிபென நினைந்தான்.

இ—ள்: ஒற்றை மேரு வில் உடையது ஓர் பரம்பொருள் உதவும்—ஒப்பற்றமேருமலையை வில்லாகவுடைய பரம்பொருளாகிய சிவபிரான்பெற்றருளிய, கொற்றவேல் உடை புங்கவன்—வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளது, தூது என கூறி—தூதனென்றுசொல்லி, இற்றை இ பகல்—இத்தினத்தில், அவுணர்கோன் கீழ்—சூரபன்மனுக்குக்கீழ்ப்பட்டு, யான்—நான், எளிவு ஆய் நிற்றல்-எளிமையாய்நிற்பது, எம்பிரான் பெருமையின் இழிபு என—எங்கள் தலைவராகிய முருகவேளது பெருமைக்குக்குறைவாமென்று, நினைந்தான்—நினைத்தார் எ—று.

கீழ் நிற்றல் என இயையும். எளிவு-எளிமை. தமக்குவருமிழிவை முன்பிறந்தாராகிய முருகவேட்குவருமிழிவாகமதித்தலின் யாதுசெய்யத்தக்கதென்றுசிறிது ஆலோசித்தனரென்க. இற்றையிப்பகல்-ஒருபொருட்பன்மொழி. (சக)

மாயை தந்திடு திருமகன் மன்னிவீற் றிருக்கு
மீயு யர்ந்திடு மரியணைக் கொருபுடை விரைவிற்
போயி ருப்பது மேலன்று புன்மையோர் கடனே
யாய தன்றியும் பாவமென் றுன்னினு னகத்துள்.

இ—ள்: மாயை தந்திடு திரு மகன் மன்னி வீற்றிருக்கும்—மாயவள்பெற்ற சிறந்த புதல்வனுகிய சூரபன்மன் நிலைபெற்று அரசிருக்கின்ற, மீ உயர்ந்திடும் அரி அணைக்கு ஒரு புடை—மேலாகவுயர்ந்த சிங்காசனத்திினொருபக்கத்தில், விரைவில் போயிருப்பதும் மேல் அன்று—விரைவாகப்போயிருப்பதுந்தகுதியன்று, புன்மையோர் கடனே—அது எளியவர்கள்செய்யுஞ்செயலேயாம், ஆயது அன்றியும்—அதுவலலாமலும், பாவம் என்று—பாவமுஞ்சம்பவிக்குமென்று, அகத்துள் உன்னினன்—மனத்திற்சிந்தித்தார் எ—று.

சூரபன்மனுடையஆசனத்தில் அவனுடனிருப்பது அயோக்கியமானசெயலென்றும் அங்ஙனமிருத்தலால் அவன்செய்தபாவங்கள் தம்மையுஞ்சிறிதுதொடருமென்றும் எண்ணினர் என்பதாம். (௫௦)

இனைய துன்னியே யறுமுகப் பண்ணவ னிருதா
ணினையு மெல்லையி னங்கவ னருளினு னிசியிற்
றினக ரத்தொகை யாயிர கோடிசேர்ந் தென்னக்
கனக மாமணித் தவிசொன்று போந்தது கடிதின்.

இ—ள்: இனையது உன்னி—இவ்வெண்ணத்தையெண்ணி, அறுமுக பண்ணவன் இரு தாள் நினையும் எல்லையின்—ஆறுதிருமுகங்களையுடைய முருகவேளின் இரண்டுதிருவடிகளையுந் தியானிக்கும்பொழுது, அவன் அருளினுல்—அவருடைய கிருபையினுல், நிசியில் தினகர தொகை ஆயிரகோடி சேர்ந்து என்ன—இராக்காலத்தில் ஆயிரகோடி சூரியர்கூட்டம் ஒருமித்துவந்தாற்போல, கனக மாமணி தவிசு ஒன்று—பொன்னுற்செய்யப்பட்ட மாணிக்கத்தினங்களாபதிக்கப்பெற்ற ஒருசிங்காசனம், கடிதின் போந்தது—விரைவில் வந்தது எ—று.

நிற்றலும் அவனுசனத்திலுடனிருத்தலும் தகாதென்றுசிந்தித்தென்பார் 'இனையதுன்னி' எனவும், "எம்பெருமானே தமியேனுக்குவருமிழிவு நுமக்கேயாதலின் இதுபொழுது யாதுசெய்யத்தக்கது? அருள்வீராக' என்று மனத்துட்சிந்தித்தவுடனென்பார் 'அறுமுகப்பண்ணவனிருதாணினையுமெல்லையின்' எனவும், முருகவேள் தமது தம்பியெண்ணுவதை முற்றறிவானுணர்ந்து தக்கவோராசனம் அந்த அவைக்களத்திற்செல்லுமாறு திருவுளம்பற்றவென்பார் 'அவனருளினுல்' எனவும் கூறினர். சந்திரனதுநிலவும் நாண்மீன்களின் சிற்றொளிகளும்பரந்த இராக்காலத்தில் ஆயிரகோடிசூரியர் ஒருங்குசேர்ந்துதிப்பின் நிலவினதும் நட்சத்திரங்களினதும் ஒளிகளும் இராக்காலத்தினியல்பும் உடனேயழிந்து அச்சூரியருடைய

சோதியேபரத்தல்போல, முருகவேளனுப்பிய ஆசனம் சபையில்வந்தவுடன் சபா
மண்டபத்தின்சோதியெல்லாமழிந்து அவ்வாசனத்தின்சோதியே பரந்ததென்க.

நித்தி லப்படு பந்தருஞ் சிவிகையு நெறியே
முத்த மிழ்க்கொரு தலைவனு மதலைக்கு முதல்வ
னுய்த்த வாறெனக் குமரவேள் வீரனுக் குதவ
வத்த லைப்பட வந்தது மடங்கலேற் றணையே.

இ—ள்: நித்தில படு பந்தரும் சிவிகையும்—முத்துப்பந்தரையும் முத்துச்சி
விகையையும், நெறியே—முறைப்படி, முத்தமிழ்க்கு ஒரு தலைவன் ஆம் மதலைக்
கு இயலுமிசையுநாடகமுமாகிய மூவகைத்தமிழ்களினுஞ்சிறந்த தலைவராகிய தி
ருஞானசம்பந்தப்பிள்ளையார்க்கு, முதல்வன் உய்த்தவாறு என—சிவபிரான் அ
னுப்பியதன்மைபோல, குமரவேள் வீரனுக்கு உதவ—முருகக்கடவுள் வீரவாகு
தேவருக்கனுப்ப, மடங்கலேற்று அணை—சிங்காசனம், அத்தலை பட வந்தது—அ
வ்விடத்திற்பொருந்தும்படி வந்தது எ—று.

சிவபிரான் பிள்ளையாகிய திருஞானசம்பந்தமூர்த்திக்குச் சமயந்தெரிந்தனு
ப்பினாற்போல முருகவேளும் தம்பியாகியவீரவாகுதேவர்க்குச் சமயந்தெரிந்து அ
னுப்பினார் என்பதாம். திருஞானசம்பந்தமூர்த்தி பற்பலசிவத்தலங்கடோறுஞ்செ
ல்லவும் சுவாமிதரிசனஞ்செய்யவுந்திருவுளம்பற்றியிருத்தலால் வெயில்முதலியவ
ற்றால்வருந்தாவண்ணம் திருவரத்துறையென்னுந்தலத்தில்வீற்றிருக்கின்றகடவுள்
அங்குள்ளபிராமணர்பால் முத்துச்சிவிகைமுதலியவற்றைக்கொடுத்தனுப்பினர் எ
ன்பது சரித்திரம். பிடிப்பார் சுமப்பார்முதலியஅமைதியுடனென்பார் 'நெறியே'
எனவும், ஈரடிமேல்வைப்பு மூவடிமேல்வைப்பு ஏகபாதம் எழுகூற்றிருக்கை மா
லைமாற்றுமுதலிய இலக்கணங்கள்பலவற்றானுந்தேவாரமோதியதனால் 'முத்தமி
ழ்க்கொருதலைவன்' எனவும், ஆளுடையபிள்ளையென்னும்பெயரைக்கொடுத்தா
ராதலின் 'மதலை' எனவும் கூறினார். (ருஉ)

பன்னி ரண்டெனுங் கோடிவெய் யவரெலாம் பரவப்
பொன்னின் மால்வரை திரைக்கட லடைந்தவா போல
மின்னு லாவிய பொலன்மணிப் பீடிகை விறல்சேர்
மன்னர் மன்னவ னவைக்களத் தூடுவந் ததுவே.

இ—ள்: பன்னிரண்டு எனும் கோடி வெய்யவர் எலாம் பரவ— பன்னிரு
கோடியென்னுந்தொகைப்பட்ட சூரியர்களெல்லாஞ்சூழ, பொன்னின் மால் வ
ரை திரை கடல் அடைந்தவா போல—பொன்மயமான பெரியமேருமலையானது
திரைபொருந்தியகடலிற்புகுந்ததுபோல, மின் உலாவிய பொலன் மணி பீடி
கை—ஒளிபொருந்திய பொன்னாற்செய்யப்பட்ட இரத்தினமழுத்தப்பெற்ற ஆச
னம், விறல் சேர் மன்னர் மன்னவன் அவைக்களத்து ஊடு—வலிபொருந்திய அ
ரசர்க்கரசனாகிய சூரபன்மனதுசபையில், வந்தது—வந்துசேர்ந்தது எ—று.

ஒவ்வொருசூரியனுக்கும் ஒவ்வொருகோடியாகப் பன்னிருசூரியர்களுக்கும்
பன்னிருகோடி பரிசனசூரியருளராதலின் 'பன்னிரண்டெனுங்கோடிவெய்யவ
ரெலாம்' என்றார். பேரொளிவீசும்மாணிக்கரத்தினங்கள் பதிக்கப்பட்டிருத்தற்கு
ச் சூரியர்சூழ்வதுவமை. சனங்கள் எள்ளிடற்குமிடமின்றியீண்டுதலாற் சபைக்
குக்கடலையுவமித்தார். (ருங)

சிவன்மகன் விடு பொலன்மணித் தவிசுசேண் விளங்கிப்
புவன முற்றுறத் தன்சுடர் விடுத்தலிற் பொல்லாப்
பவமனத்தொடு தீமையே வைகலும் பயிற்று
மவுணர் மெய்யையுந் தெய்வதப் படிவமாக் கியதால்.

இ—ள்: சிவன் மகன் விடு பொலன் மணி தவிசு—சிவபிரானது புதல்வராகிய முருகக்கடவுளனுப்பிய பொன்னாற்செய்யப்பட்ட இரத்தினமழுத்தப்பெற்ற ஆசனம், சேண் விளங்கி—மிகுந்த தூரத்தினும்பிரகாசித்து, புவனம் முற்றுற தன் சுடர் விடுத்தலின்—உலகமுழுவதினுந்தன்னுடையசோதியைப்பரப்புதலால், பொல்லா பல மனத்தொடு வைகலும் தீமையே பயிற்றும்—பொல்லாதபாவம் நிறைந்தமனத்தினுடன் தினந்தோறுந்தீமையையேசெய்துவருகின்ற, அவுணர் மெய்யையும்—அசுரர்களதுமேனியையும், தெய்வத படிவம் ஆக்கியது—தெய்வத்தன்மையானரூபமாக்கியது எ—று.

ஏ-பிரிநிலை. மெய்யையும் என்ற உம்மை இழிவு. இரக்கமற்றவென்பார் 'பொல்லா' எனவும், அதிகமாகச்செய்கின்றவென்பார் 'பயிற்றும்' எனவும், கண்டோர்வெறுக்கத்தக்ககருநிறத்தைமாற்றி விரும்பத்தக்கசெந்நிறச்சோலமாக்கியதென்பார் 'தெய்வதப்படிவமாக்கியது' எனவும் கூறினர். (ருச)

அயிலெ யிற்றுடை யவுணர்க ளணிகலந் தன்னிற்
குயிலு டைப்பல மணிகளுங் குமரவே ளுய்த்த
வியலு டைப்பெருந் தவிசொளி பரத்தலி னிரவி
வெயிலி டைப்படு மின்மினி போல்விளங் கிலவே.

இ—ள்: அயில் எயிறு உடை அவுணர்கள் அணி கலம் தன்னில்—கூரியவக்கிரதந்தங்களையுடைய அசுரர்களணிந்திருக்கின்ற ஆபரணங்களில். குயில் உடை பல மணிகளும்—அழுத்தப்பெறுதலையுடைய பல்வகையான இரத்தினங்களெல்லாம், குமரவேள் உய்த்த இயல் உடை பெரும் தவிசு ஒளி பரத்தலின்—முருகவேளனுப்பிய தகுதியையுடைய பெரிய ஆசனத்தினொளிபரவுதலால், இரவி வெயில் இடைபடும் மின்மினி போல்—சூரியனுடையகிரணங்களுக்கெதிர்ப்பட்ட மின்மினியையொத்து, விளங்கில—பிரகாசித்தில எ—று.

குயில்—முதனிலைத்தொழிற்பெயர். மணிகளும் விளங்கில என இயையும். ஆசனச்சோதியின் மாட்சியும் அணிகலச்சோதியின்றாழ்ச்சியுந்தோன்ற 'இரவி வெயிலிடைப்படுமின்மினிபோல்' என உவமித்தார். (ருரு)

செக்கர் வானிற மதிக்கதி ருடுக்களின் றிரட்சி
தொக்க பாயிருள் பலவகை யெழிலியின் றுளக்க
மிக்கெ லாஞ்செறி மாலையி னும்பர்மேல் வெய்யோன்
புக்க தேயெனத் தொலைத்ததா லச்சபைப் பொலிவை.

இ—ள்: செக்கர் வான் நிறம்—செவ்வானத்தினிறமும், மதி கதிர்—சந்திரனுடைய கிரணங்களும், உடுக்களின் திரட்சி—நட்சத்திரங்களின்றொகுதியும், தொக்க பாய் இருள்—கூட்டமான பரந்த இருளும், பலவகை எழிலியின் துளக்கம்—பலவகையானமேகங்களின் சஞ்சாரமும் ஆகிய, எலாம்—இவையெல்லாம், மிக்கு செறி மாலையின்—மிகுந்துநெருங்குகின்ற மாலைக்காலத்தில், உம்பர் மேல் வெய்யோன் புக்கதே என—ஆகாயத்திற்சூரியன்வந்ததையேபோல, அச்சபை பொலிவை தொலைத்தது—(அந்த ஆசனம்) அந்த அவைக்களத்தின்பொலிவைக்குறைத்தது எ—று.

மாலைக்காலத்தில் மேகங்கள் பலவாறு நிறவேற்றுமைபெறுதலால் 'பலவகையெழிலி' எனவும், பல நிறங்கள் ஒன்றோடொன்றுபொருதலால் 'மிக்கு-செறி' எனவும், உதயமலையிற்றோற்றியெழாது திடீரென உச்சியிலுதித்தாற்போலவென்பார் 'உம்பர்மேல்-புக்கதேயென' எனவும் கூறினர். ஏனைக்காலங்களிற் பலசோதித்திரள்கள் பரவாமையின் மாலைக்காலத்தையெடுத்துக்கொண்டார். துளக்கம் மின்னுமாம். (ருசு)

திசைமு கத்தனுஞ் செயற்கருந் தவிசொளி செறிந்தே
யசைவ ருந்திறற் சூரபன் மாவெனு மவுண
னிசைமை தன்னையு மாணை தன்னையுமவ னியாக்கை
மிசைகொள் பேரணிக் கதிரையும் விழுங்கின விரைவில்.

இ—ள்: திசைமுகத்தனும் செயற்கு அரும் தவிசு ஒளி சிறந்து—பிரமதேவராலுஞ்செய்தற்கரிய அந்த ஆசனத்தின் சோதி பரம்பி, அசைவு அரும் திறல் சூரபன்மா எனும் அவுணன் இசைமை தன்னையும்—இளையாதவலியையுடைய சூரபன்மனென்கிய அசுரனது கீர்த்தியையும், ஆணை தன்னையும்—கட்டளையையும், அவன் யாக்கை மிசை கொள் பேர் அணி கதிரையும்—அவனது சரீரத்திற்பொருந்திய சிறந்த ஆபரணத்தின்சோதிகளையும், விரைவில் விழுங்கின—விரைவிலடக்கியது எ—று.

விழுங்கின-இலக்கணை. படைத்தற்றொழிலிற்பயின்றவராதலின் பிரமதேவரைத்தெரிந்துகூறினர். சூரனுணையின்றிநுழைதலால் அவனதுகீர்த்தியையும் ஆணையையும் அடக்கியதென்க. (ருஎ)

அனைய வான்றவி சவுணனே ரிருத்தலு மதுகண்
டெனது நாயகன் விடுத்தனன் போலுமென் றெண்ணி
மனம கிழ்ச்சியா லறுமுகப் பிரானடி வழுத்தி
வினைய நாடுவா னிருந்தன னங்கதன் மிசையே.

இ—ள்: அனைய வான் தவிசு அவுணன் நேர் இருத்தலும்—அந்தப்பெரியசிங்காசனம் சூரபன்மனுக்கெதிரில்வந்துதங்க, அது கண்டு—(வீரவாகுதேவர்) அதனைப்பார்த்து, எனது நாயகன் விடுத்தனன் என்று எண்ணி—எங்கள்தலைவராகியமுருகவேள் இதனையனுப்பினரென்றுநினைத்து, மன மகிழ்ச்சியால்—மனச்சந்தோஷத்தோடும், அறு முக பிரான் அடி வழுத்தி—ஆறுமுகங்களையுடைய அந்த முருகக்கடவுளின் திருவடிகளைத்துதித்து, வினையம் நாடுவான்—அவரது திருவுளக்குறிப்பை அறிபவராய், அதன் மிசை இருந்தனன்—அவ்வாசனத்தின்மேலிருந்தார் எ—று.

அவ்வாசனத்திலிருப்பது குமரவேளின்திருவுளமென்பதையறிந்தென்பார் 'வினையநாடுவான்' என்றார். வினை-மனக்குறிப்பு. அம் பகுதிப்பொருள்விகுதி. எளிமையாகிநில்லாவண்ணமருள்புரிந்தமையால் மனமகிழ்ந்தனர். (ருஅ)

பெருந்த னிச்சுட ரெறித்திடு பொன்மணிப் பீடத்
திருந்து மேதகு சிறப்பொடு விளங்கிய வேந்தல்
விரிந்த பல்கதி ருடையதோர் வெய்யவ னடுவட்
பொருந்தி வைகிய கண்ணுதற் பரமனே போன்றான்.

இ—ள்: பெரும் தனி சுடர் எறித்திடு பொன் மணி பீடத்து இருந்து—சிறந்த ஒப்பற்றசோதியைப்பரப்புகின்ற பொன்னுலாகிய இரத்தினமழுத்தப்பெற்ற ஆசனத்தில் இருந்து, மேதகு சிறப்பொடு விளங்கிய ஏந்தல்—பெருஞ்சிறப்புடன் விளங்கிய வீரவாகுதேவர், விரிந்த பல் கதிர் உடையது ஓர் வெய்யவன் நடுவண்—பரந்த பலகிரணங்களையுடைய சூரியனுக்குநடுவே, பொருந்தி வைகிய—அமைந்திருக்கின்ற, கண் நுதல் பரமனே போன்றான்—நெற்றிக்கண்ணையுடையசிவபெருமானையே நிகர்த்தார் எ—று.

சூரபன்மன்சிங்காசனத்திலரசிருப்பதினுமிக்க சிறப்புடனென்பார் 'மேதகுசிறப்பொடு' எனவும், ஆயிரங்கிரணங்களையுடையனுதலின் 'விரிந்தபல்கதிருடையதோர்வெய்யவன்' எனவும், அந்தர்யாமியாயிருக்கின்றனென்பார் 'பொருந்தி வைகிய' எனவும் கூறினர், சூரியமண்டலத்தினடுவே சிவபிரானிருக்கின்றனெ

ன்றுசைவர்களும், நாராயணமூர்த்தியிருக்கின்றாரென்று வைணவர்களும், தத்தங் கடவுளிருக்கின்றாரென்று வேறு சிலசமயத்தாரும் கூறுவர். செம்மணிகளழுத்தப்பெற்ற ஆசனத்தினடுவே செந்நிறவடிவத்துடனிருத்தலால் இவ்வாறுவமித்தார்.

மின்னி ருந்தவே லவுணர்கோ னெதிருறும விடலை
முன்னி ருந்தவா டகன்றனை படுமுரட் சீயஞ்
செந்நி ணங்கவர்ந் தலமர வணுகிமுன் றெற்றப்
பொன்னி ருந்தவி சிருந்திடும வீரனே போன்றான்.

இ—ள்: மின் இருந்த வேல் அவுணர்கோன் எதிர் உறும் விடலை—ஒளி பொருந்திய வேற்படையையேந்திய அசுரர்க்கரசனாகியசூரபன்மனுக்கெதிரிலிருந்த வீரவாகுதேவர், முன் இருந்த ஆடகன் தனை அடும் முரண் சீயம்—முற்காலத்திலிருந்தஇரணியனையழித்தவலியையுடைய (திருமாலாகிய)நரசிங்கமானது, செம் நிணம கவர்ந்து அலமர—(அவ்விரணியனது) சிவந்தநிறமான நிணத்தைத்தின்றமையாற்றருக்குற்றுத்திரிய, அணுகி—அச்சிங்கத்தைதக்கிட்டி, முன்—அதனெதிரே, தெற்ற—தடைபடும்படி, பொன் இரும்தவிசு இருந்திடும்—பொன்னாலாகிய பெரியஆசனத்தில்வீற்றிருந்த, வீரனே போன்றான்—வீரபத்திரக்கடவுளையேநிகர்த்தார் எ—று.

எ-தேற்றம். விடலை போன்றான் எனவும் முன் இருந்திடும் எனவும் இயையும். இவ்வுவமையாற்சூரபன்மனுக்குச்சிறிதுமஞ்சாது ஆண்மையுடனிருந்தாரென்பதுதோன்றிற்று. (கூ0)

வெம்மைக் காலிருள் வேலைபோன் மூடிவிண் புவியைத்
தம்முட் சித்தரிற் காட்டலுஞ் சதுர்முகத் தொருவ
னம்மொத் தாரிலை யென்றிடச் சிவன்புகழ் நவிலுஞ்
செம்மைத் தொல்குண மாலுநேர்ந் திருந்தனன் றிறலோன்.

இ—ள்: வெம்மை கால் இருள் வேலை போல்—கொடியகாற்றையுடைய கரியகடலைப்போல, விண் புவியை தம்முள் மூடி—ஆகாயத்தையும்பூமியையுந்தம்முள்மறைத்து, சித்தரில் காட்டலும்—சித்தர்களைப்போலக்காட்டியபோது, சதுர்முகத்து ஒருவன் நம் ஒத்தார் இலை என்றிட—நான்குமுகங்களையுடைய பிரமதேவர் எம்மைநிகர்த்தவர்வேறொருவருமில்லையென்று தருக்குற, சிவன் புகழ் நவிலும்—சிவபிரானதுகீர்த்தியை எடுத்துக்கூறிய, செம்மை தொல் குண மாலும் நேர்ந்து—செப்பமான பழையகுணத்தையுடைய திருமாலையும்போன்று, திறலோன் இருந்தனன்—வீரவாகுதேவர் இருந்தார் எ—று.

உம்மை-எச்சம். பெருங்காற்றென்பார் 'வெம்மைக்கால்' எனவும், மறைத்தற்கரியபொருளை மறைத்தலும் பின்னர் விரைவில்வெளிப்படுத்திக்காட்டுதலுஞ்சித்தர்தொழிலாதலின் 'சித்தரிற்காட்டலும்' எனவும், தாமேபிரமமென்றுகூறவென்பார் 'நம்மொத்தாரிலையென்றிட' எனவும், அங்ஙனம்கூறியபிரமதேவர்க்குநற்போதனைகூறத்தொடங்கியவென்பார் 'சிவன்புகழ்நவிலும்' எனவும், சாத்துவிககுணமென்பார் 'செம்மைத்தொல்குணம்' எனவும் கூறினர். சூரபன்மன் நற்புத்தியில்லானாய்த் தருக்குற்றிருந்தமையாற் பிரமதேவரையும், வீரவாகுதேவர் அடக்கமானமனத்துடன் அவனுக்கு நற்போதனைசெய்யப்புகுதலாற்றிருமாலையும்நிகர்த்தனர். (கூக)

இவற்றி யற்கையால் வீரவா குப்பெய ரேந்த
னிவப்பின் மிக்கதோர் பொன்மணித் தவிசின்மே னெஞ்சி
னுவப்பும் வீரமு மேதக விருத்தலு முற்ற
வவைக்க ளத்தினர் யாவருங் கண்டன ரதனை.

இ—ள்: இவற்று இயற்கையால்—இவ்வியல்புகளமைய, வீரவாகு பெயர் வந்தல்- வீரவாகுவென்னும்பெயரையுடைய தலைவர், நிவப்பில் மிக்கது ஓர் பொன் மணி தவிசின் மேல்- உயரத்தான்மிகுந்த ஒப்பற்ற பொன்னாற்செய்யப்பட்ட இரத்தினமழுத்தப்பெற்ற அந்த ஆசனத்தின்மேல், நெஞ்சின் உவப்பும் வீரமும் மேதக இருத்தலும்—மனமகிழ்ச்சியும் வீரமுஞ்சிறக்கவீற்றிருக்க, உற்ற அவைக் களத்தினர் யாவரும்- அங்கிருந்தசபையாரனைவரும், அதனை கண்டனர்- அந்நிகழ்ச்சியைப்பார்த்தார்கள் எ- று.

சபையாரது ஆசனங்களெல்லாவற்றினும் உயரத்தான்மிக்கதாதலின் 'நிவப்பின்மிக்கதோர்-தவிசு' எனவும், பெருந்தொகையான அவுணர்குழாத்துட்டனித்திருப்பதனல் அச்சமும் ஆலோசனையுஞ்சிறிதும்பெற்றிலரென்பார் 'உவப்பும்வீரமுமேதகவிருத்தலும்' எனவும் கூறினர். (சு௨)

> நோற்றன் முற்றுறும் வினைஞர்பா னொய்தின்வந் திறுத்த
> வாற்றல் சால்வளம் போலவே யரியணை யதன்கட்
> டோற்று மேலவ னிலைமையைக் காண்டலுந் துளங்கி
> யேற்ற வற்புத மெய்தின ரவைக்களத் திருந்தார்.

இ—ள்: நோற்றல் முற்றுறும் வினைஞர் பால் நொய்தின் வந்து இறுத்த ஆற்றல் சால் வளம் போல —தவத்தைச்செய்துமுடித்ததலைவர்களிடத்து விரைவாக வந்து தங்கிய பெருமைமிக்க வளத்தைப்போல, அரி அணை அதன் கண் தோற்றும் மேலவன் நிலைமையை காண்டலும்- சிங்காசனத்தின்மேலேதோற்றப்பட்ட வீரவாகுதேவரதுநிலையைக்கண்டவுடன், அவைக்களத்து இருந்தார்- சபாமண்டபத்திலிருந்தவர்கள், துளங்கி- நடுங்கி, ஏற்ற அற்புதம் எய்தினர்—மிகுந்த அதிசயத்தைக்கொண்டார்கள் எ—று.

போல தோற்றும் என இயையும். ஏற்றவற்புதம் நிகழ்ந்தபுதுமைக்குத்தக்க அதிசயம் செய்ததவத்திற்குப்பயனாக இறைவனலருளப்பட்டசெல்வம் ஈட்டுஞ்செல்வம்போல மெல்லெனவந்துசேராது ஒருங்கேவிரைந்துவந்துதங்குமாதலின் 'நொய்தின்வந்திறுத்த' எனவும், புதுமையும் அற்புதமுமானநிகழ்ச்சி கண்டவுடன் எவரையும்நடுங்கச்செய்தலின் 'துளங்கி' எனவும், பின் அந்தஅச்சத்தை உடனேமாற்றி அந்நிகழ்ச்சியினாராய்ச்சியின்மனத்தையேவினரென்பதுபோதர 'ஏற்றவற்புதமெய்தினர்' எனவும் கூறினர். (சுங)

வேறு.

> வாரிலங் கியகழன் மன்னன் முன்னரே
> தாரிலங் கியமணித் தவிசி னுற்றுளான்
> வீரனும் போலுமால் வினைய மோர்கிலேம்
> யாரிவன் கொல்லென வியம்பு வார்சிலர்.

இ—ள்: வார் இலங்கிய கழல் மன்னன் முன்னர்- வாரினாற்றொடுக்கப்பெற்று விளங்குகின்றவீரக்கழலையுடைய எங்களரசனுக்குமுன்னே, தார் இலங்கிய மணி தவிசின் உற்றுளான்—வரிசையாகப்பதிக்கப்பெற்ற இரத்தினங்களையுடைய இவ்வாசனத்துடன்வந்திருப்பவன், வீரனும் போலும்- சிறந்தவீரன்போலவுமிருக்கின்றான், வினையம் ஓர்கிலேம்- இவனது மனக்குறிப்பையறியோம், இவன் யார் என-இவன் ஆர் என்று, இயம்புவார் சிலர்-சொல்வார்கள்சிலர் எ—று.

உம்மை- மாயம் புத்தி முதலியவற்றையுடையானென்பதையுமவாவிநிற்றலின் எச்சம். முற்செய்யுளினீற்றிலுள்ள அவைக்களத்திருந்தார் என்பதை இச்செய்யுளினும் பிற்செய்யுட்களினும் சிலரென்பதனோடு இயைத்துரைக்க. (சுச)

முந்திவட் கண்டிலை முடிவி லாற்றல்சே
ரெந்தைமு னிதுபொழு திருத்தன் மேயினு
னிந்தமை நீங்கியே நடுவ ணேயிவன்
வந்ததெவ் வாறெனா வழங்கு வார்சிலர்.

இ—ள்: முந்து இவண் கண்டிலம்—இவனை முன் இவ்விடத்திற்கண்டிலேம், முடிவு இல் ஆற்றல் சேர் எந்தை முன் இதுபொழுது இருத்தல் மேயினன்—அளவில்லாத வலியையுடைய எங்களரசனுக்குமுன் இப்பொழுது இருக்கின்றான், இவன்—இந்தவீரன், நம் தமை நீங்கி— எங்களைத்தாண்டி, நடுவண் வந்தது எவ்வாறு—எங்கள்சூழலினடுவில் வந்ததெப்படி?, என வழங்குவார் சிலர்—என்று சொல்வார்கள் சிலர் எ—று.

கோயில்வாயிலினின்றவரக்கண்டிலமென்பார் அன்றேல் முன்னொருகாலுங்காணப்படாதவனுயிருக்கின்றானென்பார் 'முந்திவட்கண்டிலம்' எனவும், கண்டவுடனுயிர்கவாத்தக்கபோராற்றலுடையவென்பார் 'முடிவிலாற்றல்சேர்' எனவும், வழியில் ஒருவர்கண்ணினுமகப்படாது எங்ஙனம் வந்தானென்பார் 'நடுவணே-வந்ததெவ்வாறு' எனவும் கூறினர். (சு௬)

ஒப்பருஞ் சனங்களோ டொன்றி நம்மெலாந்
தப்பினன் புகுந்தனன் றமிய னென்னினு
மிப்பெருந் தவிசிவ ணிருந்த தாற்றவு
மற்புத மற்புத மாமென் பார்சிலர்.

இ—ள்: ஒப்பு அரும் சனங்களோடு ஒன்றி—ஒப்பில்லாதசனங்களுடன்கலந்து, நம் எலாம் தப்பினன்—எங்களெல்லோர்க்குந்தப்பி, தமியன் புகுந்தனன் என்னினும்—தனித்தவனாகி (இவன்)வந்தானாயினும், இ பெரும் தவிசு இவண் இருந்தது— இந்தப்பெரியசிங்காசனம் இவ்விடத்தில்வந்திருந்ததன்மை, ஆற்றவும் அற்புதம் அற்புதம் ஆம்—மிகவும் அதிசயமாகும் அதிசயமாகும், என்பார் சிலர்-எனறுசொல்வார்கள் சிலர் எ—று.

பெருந்திரளானசனங்களென்பார் 'ஒப்பருஞ்சனங்கள்' எனவும், மாற்றானென்பது சிறிதுந்தோன்றாதவாறொன்றுதங்கியென்பார் 'ஒன்றி' எனவும், எங்களுளொருவருங்காணவண்ணமென்பார் 'நம்மெலாந்தப்பினன்' எனவும், மறைத்துக்கொணர்தற்கரிய பெரிய ஆசனமென்பதுபோதர 'பெருந்தவிசு' எனவும், ஒருவாற்றானும் வருதற்கேதுவில்லாமையின் 'ஆற்றவுமற்புதமற்புதம்' எனவும் கூறினர். ()

சீயமெல் லணையொடு செம்மன் முன்னரே
யேயெனு மளவையி னீண்டு தோன்றினு
னையப வருண்டெனி னறைவ னம்மினு
மாயனிங் கிவனென வகுக்கின் றார்சிலர்.

இ—ள்: சீய மெல் அணையொடு— சிறந்தசிங்காசனத்தினுடன், செம்மல் முன்னர்—எங்களரசனுக்குமுன், ஏ எனும் அளவையின்—ஏயென்றுசொல்லுங்காலவெல்லையினுள், ஈண்டு தோன்றினன்—இவ்விடத்திற்றோற்றினன், ஐயபவர் உண்டு எனின் அறைவன்— என்வந்தாயென்று கேட்பவர்களுண்டானால் விடைகூறுவான், இவன் நம்மினும் மாயன்— இவன் எங்களினும் மாயத்தாற்சிறந்தான், என வகுக்கின்றார் சிலர்—என்றுசொல்வார்கள் சிலர் எ—று.

ஏயெனுமளவையின்=விரைவில். யாதும்பேசாதிருத்தலால் 'ஐயபவருண்டெனினறைவன்' எனவும், நாம் முன்னொருபோதுஞ்செய்யாதமாயத்தைச்செய்தானென்பார் 'நம்மினுமாயன்' எனவும் கூறினர். (சு௭)

அறைகழ லொருவனை யவையத் தென்முனங்
குறுகிய விடுத்ததென் குழாங்கொண் டீரென
விறையவ னங்களை யாது செய்யுமோ
வறிகில மெனப்பதைத் தழுங்கு வார்சிலர்.

இ—ள்: குழாம் கொண்டீர்—கூட்டமாயிருக்கின்ற நீவிர், அறை கழல் ஒருவனை—ஒலிக்கின்ற வீரக்கழலைக்கட்டிய ஒருவீரனை, அவையத்து என் முனம் குறுகிய விடுத்தது என்—சபையில் என்முன்னிலையில் வரவிட்டதெதற்காக?, என—என்று, இறையவன் நங்களை யாது செய்யுமோ—அரசன் எங்களை என்செய்வானோ, அறிகிலம் என—அறியோம் என்று, பதைத்து அழுங்குவார் சிலர்—நடுங்கிவருந்துவார்கள் சிலர் எ—று.

ஓ-ஐயம். இத்தொகைப்பெருந்திரளாயினீருள் ஒருவரேனும் தடுத்திலீரென்பதுபோதர 'குழாங்கொண்டீர்' என்றார். (௬௮)

ஒட்டல னொருவனை யொறுத்தி டாதிவண்
விட்டதெ னென்றிறை வெகுளு முன்னரே
கிட்டின மவன்றனைக் கெழுமிச் சுற்றியே
யட்டனம் வருதுமென் றறைகின் றார்சிலர்.

இ—ள். ஒட்டலன் ஒருவனை ஒறுத்திடாது இவண் விட்டது என் என்று—தனித்தவனாய்வந்தபகைவனைத் தண்டிக்காமல் இவ்விடத்தில்விட்டகாரணம்யாதென்று, இறை வெகுளும் முன்னர்—எங்களரசன்கோபிக்குமுன், அவன் தனை கிட்டினம்—அவ்வீரனையணுகி, கெழுமி சுற்றி—நெருங்கிவளைந்து, அட்டனம் வருதும்—அழித்துவருவோம், என்று அறைகின்றார் சிலர்—என்றுசொல்லுகின்றார்கள் சிலர் எ—று.

உட்புகத்தகாதவனென்பார் 'ஒட்டலன்' எனவும், பலர்வரும்போதாயிற்றவறலுமாகும் ஒருவனேவந்திருக்கத்தடைசெய்யாதது உங்கள்பராமுகமேயாமென்றென்பார் 'ஒருவனையொறுத்திடாதிவண்விட்டதெனென்று' எனவும், சிறிதுந்தாமதஞ்செய்யாதென்பதுபோதர 'இறைவெகுளுமுன்னரே' எனவும் கூறினார்.

விளிவிலாத் திறலுடை வேந்தன் றன்னெதிர்
களியுலா மனத்தொடு கடி தி னுற்றுளான்
றெளிவிலா மாயையின் றிறலன் போலுமா
லளியனே நுங்களுக் கவனென் பார்சிலர்.

இ—ள்: விளிவு இலா திறல் உடை வேந்தன் தன் எதிர்—அழியாதவலிமையையுடைய எங்களரசனுக்குமுன்னே, களி உலாம் மனத்தொடு கடிதின் உற்று உளான்—உவகைமிகுந்த மனத்தினுடன் விரைவில்வந்தவனாகிய இவன், தெளிவு இலா மாயையின் திறலன் போலும்—பிறராலறியப்படாத மாயத்தொழிலிற்சாமர்த்தியமுடையான்போலும், நுங்களுக்கு அவன் அளியனோ—உங்களுக்கு அவன் எளிமைப்படுவானோ, என்பார் சிலர்—என்று சொல்வார்கள் சிலர் எ—று.

ஓ-எதிர்மறை. தன்னின்மேற்பட்டவீரரில்லையென்று உலகமெல்லாம்பெருங்கீர்த்திபடைத்தானென்பார் 'விளிவிலாத்திறலுடைவேந்தன்' எனவும், அவனது வீரப்பாட்டைக்கேள்வியுற்றும் சிறிதுமச்சமின்றித் துணிந்துவந்தானென்பார் 'களியுலாமனத்தொடுகடிதினுற்றுளான்' எனவும், மாயத்திறத்தின்மிக்காராகிய நாமும் உணராவண்ணம் மாயஞ்செய்தனனென்பார் 'தெளிவிலாமாயையின்றிறலன்' எனவும், இவனது ஆற்றன்முதலியவற்றை அளந்தறியாது அணுகுதல்கூடாதென்பார் 'அளியனோநுங்களுக்கவன்' எனவும் கூறினார். (௭௦)

மன்னவ னெதிருற வந்து ளான்றனை
யன்னவன் பணியினு லடுவ தல்லதை
முன்னுற வதனையா முன்னு வோமெனிற்
பின்னது பிழையெனப் பேசு வார்சிலர்.

இ—ள்: மன்னவன் எதிர் உற வந்துளான் தனை—எங்களரசனுக்குமுன் வந்திருக்கின்ற இவனை, அன்னவன் பணியினுல் அடுவது அல்லது– அவ்வரசனது கட்டளைப்படி அழிப்பதேயன்றி, முன்னுற யாம் அதனை முன்னுவோம் எனில்–அவன்கட்டளைசெய்யமுன் நாங்கள் அதனைச்செய்யநினைப்போமானுல், பின் அது பிழை—பின்பு அது தவருய்முடியும், என பேசுவார் சிலர்—என்றுசொல்வார்கள் சிலர் எ—று.

ஐ-சாரியை. அரசன்முன்னிலைப்பட்டகருமத்தை விசாரணைசெய்வதும் தீர்ப்பதும் அவன்கடமையேயாதலின், யாங்கள் அவனெண்ணம் வெளிப்படுமுன் யாதொன்றுஞ்செய்யலாகாது என்பதாம். (எக)

யாரிதை யறிகுவ ரினைய னிவ்விடைச்
சூருற வுன்னியே துன்னி ஞன்கொலோ
சேரலர் பக்கமாய்ச் சேர்ந்து ளான்கொலோ
வோருது மேலென வுரைசெய் வார்சிலர்.

இ—ள்: இனையன்—இந்தவீரன், இவ் இடை—இந்தஇடத்தில், சூர் உறவு உன்னி துன்னினுன் கொல்–சூரபன்மனுடைய நண்பைவிரும்பிவந்தானே?, சேரலர் பக்கம் ஆய் சேர்ந்துளான் கொல்—பகைவர்பக்கமாய்வந்தானே?, யார் இதை அறிகுவர்—ஆர் இதனை அறிவார்கள்?, மேல் ஒருதும்—பின்அறிவோம், என உரைசெய்வார் சிலர்— என்றுசொல்வார்கள் சிலர் எ—று.

யார் இன்மைகுறித்துநின்றது. சூரபன்மனுடனுரையாடுங்காற்ருேன்றுமாதலின் 'மேல்ஒருதும்' என்ருர். (எஉ)

கடுந்தகர் முகத்தவள் கையொன் றற்றநாட்
டடிந்தனன் காவலோர் தம்மை மன்னவன்
றொடுங்கழ லிவன்வருஞ் சூழ்ச்சி நோக்கியின்
றடும்பலர் தம்மையென் றச்சுற் ருர்சிலர்.

இ—ள்: கடும் தகர் முகத்தவள் கை ஒன்று அற்ற நாள்—கொடிய அசமுகியினது ஒருகைவெட்டுப்பட்டநாளில் மன்னவன்— எங்களரசன், காவலோர் தம்மை தடிந்தனன்—காவலாளர்களுட்சிலரைத் தண்டித்தான், தொடும் கழல் இவன் வரும் சூழ்ச்சி நோக்கி—கட்டப்பட்டவீரக்கழலையுடைய இவ்வீரன் வந்த தந்திரத்தைநினைத்து, இன்று பலர்தம்மை அடும்— இன்றைக்குப்பலரையழிப்பான், என்று அச்சுற்ருர் சிலர்— என்றுபயந்தார்கள் சிலர் எ—று.

தங்கையின்கைவெட்டுப்பட்டநாளில் வெட்டினுனைத் தேடிப்பற்ருமைக்கும் அகப்படாவிடில் தனக்கு அறிவிக்காமைக்குமாகக் காவலாளருட்சிலரைத்தண்டித்ததுபோல, இன்றும், இவனுட்புகுந்தபோது தடுக்காமைபற்றி நம்முட்பலரைத்தண்டிப்பானென்றச்சுற்றனரென்க. (எங)

வாசவன் முதலினேர் மருளத் தொல்லைநாட்
டேசுறும் விஞ்சையர் வடிவிற் சேர்வுறீஇ
யாசிலோர் புன்னிறுத் தானை காட்டிய
வீசனே யிங்கிவ னென்கின் ருர்சிலர்.

இ—ள்: வாசவன் முதலினேர் மருள—இந்திரன்முதலியதேவர்கள் அதிசயங்கொள்ளும்படி, தொல்லை நாள்—முற்காலத்தில், தேசு உறும்விஞ்சையர் வ

டிவில் சேர்வுறீஇ— தேசினையுடைய சித்தாதுவடிவத்தைக்கொண்டுவந்து, ஆசு
இல் ஓர் புல் நிறுத்து—குற்றமற்ற ஒருதுரும்பைநாட்டி, ஆணை காட்டிய—தம்மு
டைய ஆஞ்ஞையைக்காண்பித்த, ஈசனே இவன்— சிவபிரானே இவன், என்கி
ன்றார் சிலர்—என்றுகூறுகின்றார்கள் சிலர் எ—று.

தேசு-அவ்வச்சாதிக்குந்தொழிற்குமேற்றவடிவமைதி. மருளக்காட்டிய என
இயையும். ஒருசிறுதுரும்பு தம்மாற்பிடுங்கப்படாமைபற்றி மருண்டனர். எவரு
மையப்படாவண்ணம் இனிதமைந்த சித்தவேடமென்பார் 'தேசுறும்விஞ்சையர்வ
டிவு' எனவும், இது பூமியிற்கிடந்ததொன்றே இதில் யாதொருதந்திரமுமில்லை
மந்திரமுமில்லை மாயமுமில்லை என்றுகூறிநாட்டியென்பார் 'ஆசிலோர்புல்நிறுத்
து' எனவும், உலகமெல்லாந் தன்னியக்கத்தாலியங்குவதென்பதைக்காட்டிய
வென்பார் 'ஆணைகாட்டிய' எனவும், பிறரெவராவது இவ்வாறுவந்திருக்கத்து
ணியாரென்று தெளிந்தாராகலின் ஐயப்பாடறத்தேற்றேகாரங்கொடுத்து 'ஈச
னே' எனவும் கூறினார். இச்சரித்திரம் முன்னர் உற்பத்திகாண்டத்திற் காமதக
னப்படலத்து நாற்பத்தோராஞ்செய்யுளுரையிற்குறிக்கப்பட்டது. (௭௪)

ஆயதோர் காசிப னதிதி தங்கள்பாற்
சேயனாய் வந்தொரு சிந்தன் போன்றுலாய்த்
தூயவான் புவியெலா மளப்பச் சூழ்ந்திடு
மாயனே யிவனென மதிக்கின் றார்சிலர்.

இ—ள்: ஆயது ஓர் காசிபன் அதிதி தங்கள் பால்— அந்தக்காசிபமுனிவரு
ம் அதிதியுமாகிய இவர்களிடத்து, சேயன் ஆய் வந்து— புத்திரராகப்பிறந்து, ஒ
ரு சிந்தன் போன்று உலாய்—ஒருகுறளன்போலுலாவி, தூய வான் புவி எலா
ம் அளப்ப சூழ்ந்திடும்— தூய்மையான ஆகாயவுலகத்தையும் பூவுலகத்தையும் முற்
றாக ஒவ்வோரடியாலளக்கும்படி மாயஞ்செய்த, மாயனே இவன் என–திருமாலே
இவரென்று, மதிக்கின்றார் சிலர்—நினைக்கின்றார்கள் சிலர் எ—று.

தங்களுற்பத்திக்கு மூலமாயிருந்த காசிபரென்பார் 'ஆயதோர்காசிபன்' என
வும், பிறரித்துணைமாயஞ்செய்யத்தக்காரல்லரென்னுந்துணிவுபற்றித் தேற்றே
காரங்கொடுத்து 'மாயனேயிவன்' எனவும் கூறினார். மாவலியென்னுமசுரனுட
ன்பொருதுதோற்ற இந்திரன் திருமாலிடஞ்சென்று அவனையடக்குமாறுவேண்
ட, திருமால், அதிதியின்வேண்டுகோட்படி அவள்வயிற்றில் வாமனரூபத்துடன்
காசிபமுனிவர்க்குமைந்தராகஅவதரித்து மாவலிசெய்தயாகத்திற்போய் மூவடிம
ண்ணிரந்து அவன்கொடுத்தற்குடன்பட்டபின் பேருருக்கொண்டு பூவுலகத்தை ஒ
ரடியாகவும் ஆகாயவுலகத்தை மற்றோரடியாகவும் அளந்து மாவலியையும்ஆட்கொ
ண்டார் என்பது சரித்திரம். இதன்விரிவைக்கூர்மபுராணத்து மாவலிமூவடிமண்
ணளித்தவத்தியாயத்தானுணர்க. (௭௫)

விண்டொடு சூளினை விளம்பி விண்புவி
யுண்டொரு கணந்தனி லுந்தி காட்டிய
புண்டரி கத்தனே புணர்ப்பி னிவ்வுருக்
கொண்டன னெனக் கூறு வார்சிலர்.

இ—ள்: விண்டொடு சூளினை விளம்பி—திருமாலினுடன் சபதத்தைப்பே
சி, விண் புவி உண்டு—ஆகாயத்தையும்பூமியையும்விழுங்கி, ஒரு கணம் தனில் உ
ந்தி காட்டிய—ஒருகணப்பொழுதினுள் வயிற்றிலடக்கிய, புண்டரிகத்தனே—பி
ரமதேவரே, புணர்ப்பின் இவ் உரு கொண்டனன்— மாயத்தினால் இந்தவடிவத்
தைக்கொண்டுவந்தார், என கூறுவார் சிலர்—என்றுசொல்வார்கள் சிலர் எ—று.

ஏ-தேற்றம். பிரமதேவரிவ்வுருக்கொண்டுவரத்தக்காரென்பதுபோதர இயை
ந்தசரித்திரத்தையெடுத்துக்கூறினார். செய்தற்கரிதாகியமாயத்தை முன்னேசெய்

தவாதலின் அவரே இன்றுஇதனையுஞ்செய்தார் என்பதாம். இச்செய்யுளினும் முன்னிருசெய்யுட்களினுமுள்ள ஏகாரங்கள்மூன்றையும்பிரிநிலையெனக்கூறி ஏற்றவாறகலமுரைப்பினுமாம். (எசு)

மூவரு ளாகுமோ முடிவின் மாதிரத்
தேவரு ளாகுமோ சேணில் வைகிய
தாவரு முனிவரர் தம்முளாகுமோ
ஏவரு ளாகுமோ வியனென் பார்சிலர்.

இ—ள்: இவன் —இந்தவீரன், மூவருள் ஆகுமோ—மும்மூர்த்திகளுளொருவனுமோ, முடிவு இல் மாதிர தேவருள் ஆகுமோ—அழிவில்லாததிக்குப்பாலகர்களுளொருவனுமோ, சேணில் வைகிய தா அரும் முனிவரர் தம் உள் ஆகுமோ—மேலுலகத்தில்வசிக்கின்ற குற்றமற்றமுனிவர்களுளொருவனுமோ, ஏவருள் ஆகுமோ—மற்றையோர்களிலொருவனுமோ, என்பார் சிலர்—என்றுசொல்வார்கள்சிலர் எ—று.

திக்குகளினெல்லை மிகநீண்டதாதலின் 'முடிவின்மாதிரம்' எனவும், தபோலோகத்திலென்பார் 'சேணில்' எனவும் கூறினர். (எஎ)

மாலைதாழ் மார்புடை மன்னற் கின்னமு
மாலமார் கண்டனே யருளி னின்னதோர்
கோலமாய் வரந்தரக் குறுகி னன்கொலோ
மேலியா முணருதும் விளைவென் பார்சிலர்.

இ—ள்: ஆலம் ஆர் கண்டனே—நஞ்சுதங்கிய திருமிடற்றையுடையசிவபிரானே, அருளின்—கிருபையோடு, இன்னது ஓர் கோலம் ஆய்—இந்தவடிவத்தைக்கொண்டு, மாலை தாழ் மார்பு உடை மன்னற்கு— மாலைதூங்கப்பெற்றமார்பையுடைய எங்களரசனுக்கு, இன்னமும் வரம் தர—பின்னும்வரங்கொடுத்தற்கு, குறுகினன் கொல் — வந்தார்போலும், யாம்—நாங்கள், மேல் விளைவு உணருதும்—பின்உண்மையையறிவோம், என்பார் சிலர்—என்றுகூறுவார்கள் சிலர் எ-று.

ஏ-முன்னரும்வரங்கொடுத்தாரென்பதைச்சுட்டிற்று. பிறகாரணங்களின்மையால் 'வரந்தரக்குறுகினன்கொல்' என்றார். அருளின் குறுகினன் என இயையும்.

காற்றுட னங்கியுங் கடுங்கட் காலனுங்
கூற்றனு மோருருக் கொண்டு வைகிய
தோற்றமி தன்றியிச் சூரன் முன்வரு
மாற்றலர் யாரென வறைகின் றார்சிலர்.

இ—ள்: காற்று உடன் அங்கியும்—வாயுதேவனும் அக்கினிதேவனும், கடுங்கண் காலனும் — தறுகண்மையையுடையகாலனும், கூற்றனும்—யமனும், ஓர் உரு கொண்டு வைகிய தோற்றம் இது— ஒருவடிவத்தைக்கொண்டிருந்தகாட்சியேயிதுவாகும், அன்றி—அங்ஙனமன்றி, இ சூரன் முன் வரும் ஆற்றலர் யார்— இந்தச்சூரபன்மனுக்குமுன் வந்திருக்கத்தகுந்த வலியையுடையவர் யார்?, என அறைகின்றார் சிலர் —என்றுசொல்லுகின்றார்கள் சிலர் எ—று.

சிலதைவிகசத்திகளும் சிலபௌத்திகசத்திகளுந் திரண்டுவந்த வடிவமிதுவென எண்ணினர் என்பதாம். ஒன்றோடொன்றிணக்கமுடையனவாதலின், உம்மைதொடாது உடனென்னுஞ்சொல்லை இடைப்பெய்து 'காற்றுடனங்கியும்' எனவும், உயிரெடுத்தலிற்கைவந்தானாதலின் 'கடுங்கட்காலன்' எனவும் கூறினர்.()

குன்றமு மவுணனுங் குலைந்து பாடுற
வொன்றொரு வேலினை யொருவ னுய்த்தன

னென்றன ரன்னவ னீண்டு மன்னன்முன்
சென்றன னோவெனச் செப்பு வார்சிலர்.

இ—ள்: குன்றமும் அவுணனும் குலைந்து பாடு உற— கிரவுஞ்சமலையுந்தாரகாசுரனும் நிலைகெட்டுஇறக்க, ஒன்று ஒரு வேலினை ஒருவன் உய்த்தனன்—ஒரு வேற்படையை ஒருவீரர்வீசினார், என்றனர்—என்று சிலர்கூறினார்கள், அன்னவன் —அவ்வீரர், ஈண்டும்—இங்கேயும், மன்னன் முன் சென்றனனோ-எங்களரசனுக்குமுன்வந்தாரோ, என செப்புவார் சிலர்-என்றுசொல்வார்கள் சிலர் எ-று.

தாரகாசுரனைக்கொன்றதுபோலச் சூரபன்மனையுங்கொல்லவந்தாரோவென்றையுற்றுப்பேசினரென்பது குறிப்பு. (அ0)

செற்றிய பன்மணிச் செம்பொன் மன்றமு
முற்றிடு மவுணரு மொளிறு வான்கதிர்
மற்றிவ னணிகளின் றவிசின் வாள்பட
வற்றது பகற்சுட ராயென் பார்சிலர்.

இ—ள்: செற்றிய பல் மணி செம் பொன் மன்றமும் உற்றிடும் அவுணரும் ஒளிறு வான் கதிர்—செறிந்த பல இரத்தினங்களழுத்தப்பெற்ற செம்பொன்னாற் செய்யப்பட்ட இந்தச்சபையும் இச்சபையிலிருக்கின்ற அசுரரும் பிரகாசித்தலாலுண்டானபெரியசோதியானது, இவன் அணிகளின் தவிசின் வாள் பட— இவனணிந்த ஆபரணங்களினதும் இருக்கின்ற ஆசனத்தினதும் ஒளிதாவ, பகல் சுடர் ஆய் அற்றது—பகற்காலத்தீபம்போலாய்க்குன்றியது, என்பார் சிலர்— என்று சொல்வார்கள் சிலர் எ—று.

பகற்காலத்தில் தீபத்தினொளி சூரியனுடையவொளியிலடங்குதலின் 'பகற்சுடராய்' என்றார். (அக)

இருந்திடு மவுணர்கள் யாரு மித்திறம்
வருந்திற நினைகிலர் மறந்து மிவ்விடை
தெரிந்திடி னிங்கிது திறல்கொள் மன்னனே
புரிந்திடு மாயையின் புணர்ப்பென் பார்சிலர்.

இ—ள்: இருந்திடும் அவுணர்கள் யாரும்—இருக்கின்ற அசுரர்களெல்லோரும், மறந்தும்—மறந்தாயினும், இ திறம் இவ் இடை வரும் திறம் நினைகிலர்—இவ்வாறு இங்கேவரும்படி நினைக்கமாட்டார்கள், தெரிந்திடில்— ஆராயுங்கால், இது—இச்செயல், திறல் கொள் மன்னன் புரிந்திடு மாயையின் புணர்ப்பே—வலியையுடைய சூரபன்மன்செய்த மாயச்செயலேயாம், என்பார் சிலர்— என்று சொல்வார்கள் சிலர் எ—று.

ஏகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. பிரிநிலையென்றேனுந் தேற்றமென்றேனும் பொருள்கொள்க. தங்களரசனுக்குத் தாமேயவமானஞ்செய்யவும் தண்டிக்கப்படவுந்துணியாராதலான் 'மறந்தும் நினைகிலர்' என்றார். (அஉ)

நென்னலி னிறந்துயிர் நீத்த தாரகன்
முன்னுறு தன்னுரு முடிய விப்பக
லின்னதோர் பொன்னுரு வெடுத்து முன்னைபாற்
றுன்னினன் கொல்லெனச் சொல்கின் றார்சிலர்.

இ—ள்: நென்னலின் இறந்து உயிர் நீத்த தாரகன்—முந்தியநாளிலிறந்து உயிரைவிட்டதாரகாசுரன், முன் உறு தன் உரு முடிய—முன்னேயுளதாயிருந்த தன்னுடையவடிவம் அழிய, இ பகல்—இத்தினத்தில், இன்னது ஓர் பொன் உரு எடுத்து—இந்தஅழகியஒருவடிவத்தைக்கொண்டு, முன்னை பால் துன்னினன் கொ

ல்-தலைமயனுகியசூரபன்மனிடத்துவந்தானே, என சொல்கின்றார் சிலர்—என்று சொல்லுகின்றார்கள் சிலர் எ—று.

கொல்-ஐயம். முன்னை-முன்பிறந்தான். இயல்பாகவுள்ளவடிவமென்பார் 'முன்னுறுதன்னுரு' என்றார். இறவாவரம்பெற்றனென்றுசிந்தித்தலின் இவ்வா றயிர்த்தார். (அக)

வேறு.

சங்க மேவின ரினையன வளப்பில சாற்ற
வங்க ணோரரி மான்றவி சிருக்கையி லவுணன்
றுங்க மெத்துணை யத்துணைச் சிறப்பொடு தோன்றிச்
செங்கை வேலவற் புகழ்ந்துவீற் றிருந்தனன் றிறலோன்.

இ—ள்: சங்கம் மேவினர் இனையன அளப்பு இல சாற்ற—சபையிலிருந்தவர்கள் இவைபோன்ற அளவிறந்த வாசகங்களைக்கூற, திறலோன்—வீரவாகுதேவர், அங்கண்—அவ்விடத்தில், ஓர் அரிமான் தவிசு இருக்கையில்—ஒருசிங்காசனத்தில், அவுணன் துங்கம் எத்துணை அத்துணை சிறப்பொடு தோன்றி—சூரபன்மனது பெருமைஎவ்வளவோ அவ்வளவு சிறப்பினுடன்தோற்றி, செம் கை வேலவன் புகழ்ந்து வீற்றிருந்தனன்—சிவந்ததிருக்கரத்தில் வேற்படையையேந்திய முருகக்கடவுளைப்புகழ்ந்து வீற்றிருந்தார் எ-று.

எத்துணையத்துணை என விஞமுகத்தான்விளக்குவது வடநூல்வழக்கு. சாற்ற இருந்தனன் என இயையும். சரவணபவ சண்முகநாதாஎன்றற்றொடக்கத்தவற்றை உச்சரித்துக்கொண்டிருந்தனராதலின் 'செங்கைவேலவற்புகழ்ந்துவீற்றிருந்தனன்' என்றார். (அச)

அறிவர் மேலவன் றவிசில்வீற் றிருந்தலு மவுணர்க்
கிறைவ னுங்கது நோக்கியே யெயிற்றணி கறித்துக்
கறுவி யேநகைத் துரப்பிமெய் வியர்ப்பெழக் கண்கள்
பொறிசொ ரிந்திடப் புகையுமிழ்ந் தினையன புகல்வான்.

இ—ள்: அறிவர் மேலவன் தவிசில் வீற்றிருத்தலும்—அறிஞருட்சிறந்தவராகிய வீரவாகுதேவர் (அவ்வாறு) சிங்காசனத்தில் வீற்றிருக்க, அவுணர்க்கு இறைவன் அது நோக்கி- அசுரர்க்கரசனுகிய சூரபன்மன் அத்தன்மையைப்பார்த்து, எயிற்று அணி கறித்து- பல்நிரைகளைக்கடித்து, கறுவி- கோபித்து, நகைத்து—சிரித்து, உரப்பி- உறுக்கி, மெய் வியர்ப்பு எழ—சரீரத்திற் குறுவியர்வைதோன்ற, கண்கள் பொறி சொரிந்திட--கண்கள் அக்கினிப்பொறிகளைச்சிந்த, புகை உமிழ்ந்து- மூக்கினின்றும் புகையையுமிழ்ந்து, இனையன புகல்வான்-பின்வரும் வாசகங்களைச்சொல்வான் எ—று.

நீதிநெறிகளை இனிதுதெரிந்தாரென்பார் அன்றேல் ஞானவுணர்ச்சியிற்சிறந்தாரென்பார் 'அறிவர்மேலவன்' எனவும், மேலுங்கீழுமுள்ள பற்களெல்லாம் முறையே ஒன்றையொன்றுகடித்தனவாதலின் 'எயிற்றணிகறித்து' எனவும் கூறினர். தன்னரசிருக்கைக்கு அவமானமான காரியத்தைச்செய்தானுதலின் கோபித்து, அற்பனுகிய இவனுக்கு இத்துணைத்தைரியமுண்டாயிற்றேயென்றெண்ணுதலாற் சிரித்தானென்க. பெருங்கோபமுளுங்காற் பற்கடித்தலும் சரீரம்வியர்த்தலும் பிறவுமுண்டாதலியல்பு. சொற்களாயமையாது நெஞ்சினின்று எதிர்நின்ருரையச்சுறுத்தற்கேற்றவாறெழும் பேரொலியை உரப்பென்பர். (அரு)

சுற்ற நீங்கியே யிலையுண்டு விலங்கெனச் சுழன்று
வற்றன் மாமரக் காட்டகத் திருந்துடல் வருத்துஞ்

சிற்று ணர்ச்சியோர் வல்லசித் தியல்பிது சிறியோய்
கற்று ளாய்கொலாங் காட்டினை நமதுமுன் காண.

இ—ள்: சுற்றம் நீங்கி—இனத்தாரைவிட்டுப்பிரிந்து, வற்றல் மா மர காட்டு அகத்து இருந்து—செழிப்பற்ற பெரிய மரங்கள்செறிந்த காட்டிற்போயிருந்து, இலை உண்டு—அங்குள்ள இலைகளைத்தின்று, விலங்கு என சுழன்று—மிருகங்களைப்போலத்திரிந்து, உடல் வருத்தும்—சரீரத்தைவருத்துகின்ற, சிற்று உணர்ச்சியோர்—சிற்றறிவினையுடையோர், வல்ல சித்து இயல்பு இது— செய்துபயின்ற சித்துவிளையாட்டின்றன்மை இது, சிறியோய்—சிறியவனே!, கற்று உளாய் கொல்- (இந்தஎளியவித்தையை) நீயும்பயின்றிருக்கின்றாய்போலும், காண—காணும்படி, நமது முன் காட்டினை—எம்முன்னிலையிற்செய்துகாட்டினாய் எ—று.

இலைகளைத்தின்னுதலாலும் காட்டிற்றிரிதலாலும் விலங்கையுவமித்தார். பசியிருந்தும் சாரமற்றசருகைத்தின்றும் தேகத்தைவலிகுன்றச்செய்கின்றவென்பான் 'உடல்வருத்தும்' எனவும், அங்ஙனமுணவொறுத்தலால்மறுமையிற்பலனுண்டென்றெண்ணி இம்மையிலனுபவிக்கவேண்டியசுகங்களை இழப்பவரென்பான் 'சிற்றுணர்ச்சியோர்' எனவும், அப்படிப்பட்ட வீணர்களேயன்றி அறிவுடையோர் இதனைப்பயிலவுஞ்செய்யவும்விரும்பாரென்பதுபோதர 'சிற்றுணர்ச்சியோர் வல்லசித்தியல்பிது' எனவும், நீயும் அதனைப்பயின்று காலம்போக்கினையாதலின் அறிவாலுஞ்செயலாலுந் தாழ்ந்தாயென்பதுபோதர 'சிறியோய்' எனவும், நீ காட்டிய இவ்வொருசித்தால் வேறும்பலவற்றைப்பயின்றாயென்பதையறிகின்றேனென்பதுபோதர 'கற்றுளாய்கொலாங்காட்டினைநமதுமுன்காண' எனவும் கூறினான். (௮௬)

துன்று வார்சடை யோகினோ ரல்லது தொலைந்து
பின்று தேவரும் வல்லரிச் சிறுதொழில் பெரிது
மொன்று மன்னதை யிவ்விடைக் காட்டல ருன்போ
னன்று நன்றுநீ நம்முனர்க் காட்டிய நடனம்.

இ—ள்: துன்று வார் சடை யோகினோர் அல்லது—நெருங்கிய நீண்டசடையையுடைய முனிவர்களேயன்றி, தொலைந்து பின்று தேவரும்—நமக்குத்தோற்றுப்பின்கொடுத்ததேவர்களும், இ சிறு தொழில் பெரிதும் வல்லர்—இந்த எளியதொழிலைச்செய்தலில் மிகவும்வல்லவர்கள், உன் போல்—உன்னைப்போல, அன்னதை ஒன்றும் இவ் இடை காட்டலர்—(அவர்கள்) அந்தச்சித்தைச்சிறிதாயினும் இவ்விடத்திற்காட்டவிரும்பார்கள், நீ நம் முனர் காட்டிய நடனம் நன்று நன்று—நீ எம்முன்னிலையிற்காண்பித்தநடிப்பு நன்றாயிருக்கின்றது! நன்றாயிருக்கின்றது!! எ—று.

உம்மை தேவருமென்பதில் எச்சத்தோடிழிவும், ஒன்றுமென்பதில் இழிவுமாம். உன்னினுமதிகமாகப்பயின்ற முனிவருந்தேவரும் என்முன்செய்தற்கஞ்சுவராகவும் அற்பனாகியநீ அஞ்சாது செய்யத்துணிந்ததென்னை என்பதுகருத்து.()

சித்த ராயினோர் செங்கண்மான் முதலிய தேவ
ரித்தி றத்தன காட்டுதற் கஞ்சுவ ரென்முன்
றத்த மெல்லையிற் புரிந்திட லல்லது தமியோய்
பித்த னேகொலா நமக்கிது காட்டுதல் பிடித்தாய்.

இ—ள்: தமியோய்—தனித்தவனே!, சித்தர் ஆயினோர்—சித்தர்களும், செம் கண் மால் முதலிய தேவர்—சிவந்தகண்ணையுடைய திருமால்முதலாகிய தேவர்களும், தத்தம் எல்லையில் புரிந்திடல் அல்லது—தாந்தாமிருக்குமிடங்களிற் செய்துகொள்வதேயன்றி, இத்திறத்தன—இவைபோன்றவிளையாட்டுக்களை, என்

முன் காட்டுதற்கு அஞ்சுவர்—எனக்குமுன்னே காட்டுதற்குப்பயப்படுவார்கள், நமக்கு இது காட்டுதல் பிடித்தாய்—நீ எமக்கு இதனைக்காட்டத்துணிந்தாய், பித்தன் சொல்—பைத்தியகாரன்போலும்! எ—று.

உன்னிற்பெரியாரெல்லாம் என்முன்செய்யத்துணியாராகவும் நீ அஞ்சாது செய்துகாட்டத் துணிந்தனை, அறிவுடையாயேல் உன்னுயிர்க்குவருந்தீங்கையெண்ணித்தவிர்ப்பாய், தவிர்த்திலாயாதலின், அறிவு மாறுபட்டமே இங்ஙனஞ்செய்யுமாறுன்னையேவிற்றென்று துணிந்தேன் என்பதாம். இதனால் வீரவாகுதேவருடைய தைரியத்தைப்பழித்தானென்பது தாற்பரியமாயிற்று. (அஅ)

உரைசெ யிந்நகர் மகளிருஞ் செய்வரூன் முற்றாக்
கருவி னுள்ளுறு குழவியுஞ் செய்திடுங் கருத்தில்
வரைக ளுஞ்செயு மாக்களுஞ் செய்யுமற் றதனு
லரிய தன்றரோ பேதைநீ புரிந்திடு மாடல்.

இ—ள்: பேதை—அறிவில்லாதவனே!, நீ புரிந்திடும் ஆடல்—நீ செய்த இந்த விளையாட்டை, உரை செய் இ நகர் மகளிரும் செய்வர்— புகழ்பெற்ற இந்த மகேந்திரபுரியிலிருக்கின்ற பெண்களுஞ்செய்வார்கள், ஊன் முற்றா கருவின் உள் உறு குழவியும் செய்திடும்—தசைமுற்றாத கருப்பத்தினுள்ளிருக்கின்ற குழந்தையுஞ்செய்யும், கருத்து இல் வரைகளும் செயும்—உணர்ச்சியில்லாத மலைகளுஞ்செய்யும், மாக்களும் செய்திடும்—மிருகங்களுஞ்செய்யும், அதனல்—ஆதலினுல், அரியது அன்று—இது அருமையானகாரியமன்று எ—று.

சிறுகுழந்தையென்பான் 'ஊன்முற்றாக்கருவினுள்ளுறுகுழவி' என்றான். உம்மைகள் எச்சங்கள். (அக)

என்னை யெண்ணலை யெதிருற விருந்தனை யிதனுன்
மின்னல் வாட்படை யுறைகழித் தொய்யென வீசிச்
சென்னி வீட்டுவ னின்செயன் முற்றவுந் தெரிந்து
பின்ன ரத்தொழில் புரிவனென் றேயுளம் பிடித்தேன்.

இ—ள்: என்னை எண்ணலை எதிர் உற இருந்தனை—என்னை மதியாமல் எதிரகவிருந்தாய், இதனுல்—இதற்காக, மின்னல் வாள் படை உறை கழித்து—ஒளிபொருந்திய வாட்படையை உறையினின்றும்நீக்கி, ஒய் என வீசி—விரைவாகவீசி, சென்னி வீட்டுவன்—தலையைவிழுத்துவேன், நின் செயல் முற்றவும் தெரிந்து—நீ செய்யுஞ்செயல்களை முழுதாக அறிந்து, பின்னர் அ தொழில் புரிவன் என்று—பின்பு அந்தத்தண்டனையைச்செய்வோமென்று, உளம் பிடித்தேன்—மனத்திலெண்ணினேன் எ—று.

செய்தகுற்றம் மிகப்பெரிதென்பதை வன்சொல்லாற்கூறிமுடித்தான். (கo)

ஏனுற் றாரெலாம் வழுத்திய வவுணரும் யானுங்
காணக் காட்டினை நீயறி விஞ்சையைக் கண்டாம்
பூணித் தாயென வருமுனக் கித்துணைப் பொழுது
பாணித் தாவியை யளித்தன னன்னது பரிசே.

இ—ள்: ஏண் உற்றார் எலாம் வழுத்திய அவுணரும் யானும் காண—(எம்மின்மிக்காரில்லையென்று) இறுமாந்திருந்த வீரர்களெல்லாருந்துதிக்கின்ற அசுரர்களும் (அரசனுகிய) யானும் பார்க்கும்படி, நீ அறி விஞ்சையை காட்டினை—நீ கற்றறிந்த வித்தையைக்காட்டினுய், கண்டாம்—கண்டோம், பூணித்தாய் என வரும் உனக்கு—வேடம்பூண்டாய்போலவந்தஉனக்கு, இத்துணை பொழு

து பாணித்து—இவ்வளவுநேரம்வரைதாமதித்து, ஆவியை அளித்தனன்—உயிரைத்தந்தேன், அன்னதே பரிசு—அதுவேசன்மானமாம் எ—று.

பிரிநிலையேகாரம்பிரித்துக்கூட்டப்பட்டது. பேராற்றலையுடையவென்பான் 'எணுற்றுரெலாம்வழுத்திய' எனவும், நாடககாரர்பூண்டவேடத்திற்கேற்றவாறு நடித்தலில் விருப்பமும் உவகையுமுடையாராதல்போல நீயும் கொண்டகோட்பாட்டைமுடித்தலில் விருப்பமும் மகிழ்வுமுடையனுய்வந்தாயென்பான் 'பூணித்தாயெனவருமுனக்கு' எனவும் கூறினன். (கூக)

வாச வன்கரந் தோடினன் பிறரிது மதியார்
கேச வன்னிது நினைகிலன் மறைகளின் கிழவோ
ஞசி கூறியே திரிந்திடு மவர்க்கெலா முதலா
மீச னென்னிடை வருகிலன் யாரைநீ யென்றுன்.

இ—ள்: வாசவன் கரந்து ஓடினன்—இந்திரன் ஒளித்தோடினன், பிறர் இது மதியார்—மற்றையதேவர்கள் இச்செயலைச்செய்ய நினைக்கமாட்டார்கள், கேசவன் இது நினைகிலன்—திருமாலும் இதனைச்செய்யநினையார், மறைகளின் கிழவோன் ஆசி கூறி திரிந்திடும்-வேதங்களுக்குரியவராகிய பிரமதேவர் ஆசிமொழிகளைச்சொல்லித்திரிவார், அவர்க்கு எலாம் முதல் ஆம் ஈசன்— அவர்களெல்லோர்க்குந்தலைவராகிய சிவபிரான், என்னிடை வருகிலன்—என்னிடத்துவரமாட்டார், நீ யார் என்றுன்—நீ யார்? என்றுவினவினன் எ—று.

தேவர்களுந் தேவத்தலைவர்களும் செய்யமாட்டார்களென்பது குறிப்பு. வாசவன்-வசுவையுடையான், வசு செல்வம். கேசவன் கேசியென்னுமசுரனைக்கொன்றவன். பிறபொருள்களுங்கூறுப. கேசவன்னிது என்பதில் னகரவொற்றுவிரித்தல். யாரையென்பதில் ஐ சாரியை. (கூஉ)

தீய னித்திற முரைத்தன கேட்டலுந் திறலோன்
காய மீனெனக் காயமேல் வியர்ப்பெழக் கனன்று
மாயை செய்துழல் வலியிலார் போலெனை மதித்தா
யாய புந்தியை விடுமதி கேளிதென் றறைவான்.

இ—ள்: தீயன் இத்திறம் உரைத்தன கேட்டலும்—கொடியவனுகிய சூரபன்மன் இவ்வாறுகூறியவாசகங்களைக்கேட்டவுடன், திறலோன்—வீரவாகுதேவர், காய மீன் என காயமேல் வியர்ப்பு எழ—ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைப் போலச் சரீரத்தில் வியர்வையரும்ப, கனன்று—கோபித்து, மாயை செய்து உழல் வலியிலார் போல்— மாயங்களைச்செய்தலைகின்ற நொய்யர்களைப்போல, எனை மதித்தாய்—என்னை நினைத்தாய், ஆய புந்தியை விடு— அந்தநினைவையொழிப்பாய், இது கேள்—இதனைக்கேட்பாய், என்று—என்றுகூறி, அறைவான்—மேலுஞ்சொல்வார் எ—று.

மதி-முன்னிலையசை. வியர்வைத்துளிகள் சிறியனவும் பெரியனவுமாய் மேனியிற்செறிந்திருத்தலால் நட்சத்திரங்களையுவமித்தார். கனன்று அறைவான் என இயையும். என்னை நீ கூறிய சித்தருளொருவனுகமதியாதொழியென்பார் 'ஆயபுந்தியைவிடு' என்றுர். (கூ௩)

புரந்த ரன்குறை யயன்முத லமரர்தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலா நீக்கிமற் றவர்தந்
திருந்து தொல்லிறை யுதவுவா னெந்திமா நகர்வந்
திருந்த வாதியற் பண்ணவ னடியனேன் யானே.

இ—ள்: புரந்தரன் குறை—இந்திரனது குறையும், அயன் முதல் அமரர் தம் புன்மை—பிரமாமுதலிய தேவர்களது இழிவும், வருந்தும் வானவர் சிறை—வ

ருத்தத்தையனுபவிக்கின்ற தேவர்களது சிறையும் ஆகிய, எலாம் நீக்கி— எல்லாவற்றையுமொழித்து, அவர் தம் திருந்து தொல் இறை உதவுவான் --அவர்களது சிறந்த பழைய தலைமைகளைக்கொடுக்கும்பொருட்டு, செந்தி மா நகர் வந்து இருந்த— பெருமைபொருந்திய திருச்செந்திப்பதியில் எழுந்தருளிவந்திருக்கின்ற, ஆதியம் பண்ணவன்— முதற்கடவுளாகிய முருகவேளது, அடியனேன் யான்—அடியவன் யான் எ—று.

யான் அடியனேன் எனஇயைக்க. புரந்தரன் குறை என்றது-சுவர்க்கலோகவரசியலிழந்தமையை. அயன்முதலமரர்தம்புன்மை என்றது அவரெல்லாஞ்சூரபன்மனுக்கடங்கியொழுகுதலை. இறையென்றதற்கும் இவ்வாறே அவரவர்க்கேற்பனவற்றையுரைக்க. (௯௪)

துன்னு தானைகட் கரசரா யறுமுகத் தொல்லோன்
பின்னர் வந்துளா ரொன்பதோ டிலக்கமாம் பெயரா
லன்ன வர்க்குளே யொருவன்யா னந்திபாங் கமர்ந்தே
னொன்ன லார்புகழ் வீரவா கெனும்பெய ருள்ளேன்.

இ—ள்: துன்னு தானைகட்கு அரசர் ஆய்—நெருங்கியசேனைகளுக்குத்தலைவர்களாக, அறுமுக தொல்லோன் பின்னர் வந்துளார் — ஆறுமுகங்களையுடைய பழைய முருகவேளின்பின்பிறந்தவர்கள், ஒன்பதோடு இலக்கம் ஆம் பெயர்--இலக்கத்தொன்பது வீரர்களாம், யான் அன்னவர்க்குள் ஒருவன்— நான்அவ்வீரர்களுளொருவன், நந்தி பாங்கு அமர்ந்தேன்--நந்திகணத்திலுள்ளேன், ஒன்னலார் புகழ் வீரவாகு எனும் பெயர் உள்ளேன்— பகைவர்களாற்புகழப்படுகின்ற வீரவாகென்றுசொல்லப்படும் பெயரையுடையேன் எ—று.

ஆல்-அசை. அமர்ந்தேனென்று இறந்தகாலத்தாற்கூறுதலின் முருகவேளின்றம்பியாதற்குமுன்னென்பதுதோன்றும். ஒன்னலார் புகழ் என்றதனால் தன் வீரத்திறத்தையும் ஒருவாறுகுறித்துக்கூறினார். (௯௬)

தாரகப்பெய ரிளவலைத் தடவரை தன்னை
யோரி றைக்குமுன் படுத்தவே லறுமுகத் தொருவன்
சூரெ னப்படு நின்னிடைத் தமியனைத் தூதாப்
பேர ருட்டிறத் துய்த்தன னென்றனன் பெரியோன்.

இ—ள்: தாரக பெயர் இளவலை—தாரகனென்னும்பெயரையுடைய உனது தம்பியையும், தட வரை தன்னை—விசாலித்த கிரவுஞ்சமலையையும், ஓர் இறைக்கு முன் படுத்த—ஒருகணப்பொழுதினுள் அழித்த, வேல்—வேற்படையையேந்திய, அறுமுகத்து ஒருவன்—ஆறுமுகங்களையுடையஒப்பற்ற பெருமான், பேர் அருள் திறத்து—சிறந்த கருணைத்தன்மையினால், தமியனை-என்னை, சூர் என படும் நின் இடை— சூரபன்மனென்றுசொல்லப்படுகின்ற உன்னிடத்து, தூது ஆ உய்த்தனன்— தூதாக அனுப்பினார், என்றனன்—என்றுகூறினார், பெரியோன்—பெரியவராகியவீரவாகுதேவர் எ—று.

நற்புத்திகூறுவித்து உய்விக்கநினைந்தாராதலின் ‘பேரருட்டிறத்து' என்றார்.

கொடுத்தி டாதவென் கொண்டவ னுரைத்தசொற் கொடுங்கோ
னடத்து மன்னவன் கேட்டலு மாங்கவ னம்மேல்
விடுத்த காரண மென்னையோ விளம்புதி யென்ன
வெடுத்து மற்றிவை யெம்பிரான் றூதுவ னிசைப்பான்.

இ—ள்: கொடுத்திடாத வென் கொண்டவன் உரைத்த சொல்— பகைவர்க்குக்காட்டாத முதுகையுடையவராகிய வீரவாகுதேவர் கூறிய வார்த்தைகளை, கொடும் கோல் நடத்தும் மன்னவன் கேட்டலும்— கொடுங்கோலரசைநடாத்து

கின்ற சூரபன்மன்கேட்டவுடன், அவன் நம்மேல் விடுத்த காரணம் என்னை--அந்த முருகவேள் எம்மாட்டு உன்னைத் தூதனுப்பிய காரணம்யாது?, விளம்புதி-சொல்வாய், என்ன-என்றுவினவ, எம் பிரான் தூதுவன்—முருகவேளின் தூதராகிய வீரவாகுதேவர், இவை எடுத்து இசைப்பான்—இவற்றை எடுத்துக்கூறுவார் எ—று.

கொடுத்திடாதவென்கொண்டவன் வடநூன்முடிபு. ஓ-அசை. நீதிமார்க்கந் தவறிய அரசைக்கொடுங்கோலரசென்ப. (கஎ)

மருத்து வன்றனைச் சசியொடு துரந்துசேண் வதிந்த
புரத்தை யாரழற் கூட்டியே யனையவன் புதல்வ
னொருத்த னோடுபல் லமரரை யுவளகந் தன்னி
லிருத்தி னாயென வினவின னறுமுகத் திறைவன்.

இ—ள்: மருத்துவன் தனை சசியொடு துரந்து-இந்திரனை இந்திராணியோடுந்துரத்தி, சேண் வதிந்த புரத்தை ஆர் அழற்கு ஊட்டி—ஆகாயத்திலிருக்கின்ற சுவர்க்கலோகத்தை நிறைந்த அக்கினிக்கிரையாக்கி, அனையவன் புதல்வன் ஒருத்தனோடு பல் அமரரை—அவ்விந்திரனது ஒருமகனாகிய சயந்தனுடன் பலதேவர்களை, உவளகம் தன்னில் இருத்தினாய் என—சிறையில்வைத்தாயென்று, அறுமுகத்து இறைவன் வினவினன்—ஆறுதிருமுகங்களையுடைய முருகவேள்கேட்டறிந்தார் எ—று.

ஏ-அசை. நீ செய்தகொடுமைகளையறிந்தார் என்பதாம். (கஅ)

இந்தி ராதிப ரயன்முதற் பண்ணவர் யாரும்
வந்து வந்துவேண் டிடுதலு மவர்குறை மாற்றப்
புந்தி கொண்டுபன் னிருபுயத் தெம்பிரான் புவிக்க
ணந்த மின்றுறை பாரிடத் தானையோ டடைந்தான்.

இ—ள்: இந்திர அதிபர் அயன் முதல் பண்ணவர் யாரும்—இந்திரனாகிய தலைவனும் பிரமாமுதலியதேவர்களுமாகிய எல்லோரும், வந்து வந்து வேண்டிடுதலும்—வந்துவந்து (நீசெய்த தீங்குகளைக்கூறி) இரந்துநிற்ப, பன்னிரு புயத்து எம்பிரான்—பன்னிரண்டுதிருப்புயங்களையுடைய முருகவேள், அவர் குறை மாற்ற புந்திகொண்டு— அவர்களது குறையைத்தீர்க்கும்படி திருவுளம்பற்றி, அந்தம் இன்று உறை பாரிட தானையோடு - அளவின்றியிருக்கின்றபூதசேனைகளுடன், புவிக்கண் அடைந்தான்—பூவுலகத்தில்வந்தருளினார் எ—று.

இந்திராதிபர்-தலைமைபற்றிய பன்மை. தீர்க்கசந்தி. (கக)

தரையி னண்ணிநின் னிளவலை வரையொடு தடிந்து
நெருந லேவந்து செந்தியின் வைகினா னினையும்
விரைவின் வந்தட வுன்னினா னின்றுநும் மிசையே
யருள்கொ டேசில புகன்றெனைத் தூண்டின னதுகேள்.

இ—ள்: தரையில் நண்ணி-(அப்பெருமான்)பூவுலகத்தில்வந்து, நின் இளவலை வரையொடு தடிந்து - உனது தம்பியாகியதாரகனைக் கிரவுஞ்சமலையுடனழித்து, நெருநல் வந்து செந்தியின் வைகினான்--நேற்றைத்தினத்தில்வந்து திருச்செந்திப்பதியிலிருக்கின்றார், நினையும் விரைவில் வந்து அட உன்னினான்- உன்னையும்விரைவாகவந்து சங்கரித்தற்குத் திருவுளம்பற்றினார், (பற்றியும்), நும் மிசை அருள் கொடு-உங்கள்குழுவினரிடத்துக்கருணையைவைத்து, சில புகன்று-சிலவாசகங்களைக்கூறுமாறுகூறி, எனை இன்று தூண்டினன்—என்னை இத்தினத்திலனுப்பினார், அது கேள்—அவற்றைக்கேட்பாய் எ—று. (௧00)

நிறையு மிந்துவைப் படவராக் கவர்ந்தெண நிகளச்
சிறைப டுத்தியே யமரரை வருத்தினை செய்யு
மறையொ ழுக்கமு நீக்கினை யுலகமாண் மன்ன
ரறமு மன்றிது வீரர்தஞ் செய்கையு மன்றால்.

இ—ள்: நிறையும் இந்துவை பட அரா கவர்ந்து எண -பூரணசந்திரனைப்படம்பொருந்தியசர்ப்பம்பற்றினார்போல, அமரரை —தேவர்களை, நிகள சிறை படுத்தி —விலங்குபூட்டப்படுகின்ற சிறையில்கப்படுத்தி, வருத்தினை —வருந்தச்செய்தாய், செய்யும் மறை ஒழுக்கமும் நீக்கினை —அவர்களனுட்டித்துவந்தவைதிகவொழுக்கத்தையும் விலக்கினாய், இது —இச்செயல், உலகம் ஆள் மன்னர் அறமும் அன்று —உலகத்தையாளுகின்ற அரசர்களது தருமமுமன்று, வீரர் தம் செய்கையும் அன்று —வீரர்களதுசெயலுமன்று எ—று.

உம்மைகள் எச்சம். உலகத்திற்குநன்மைசெய்பவராதலின் தேவர்க்குச்சந்திரனையும் நல்லோரைவருத்துதலின் சூரபன்மனுக்கு இராகுவையும் உவமித்தார். தண்டிக்கவேண்டாதவர்களைத்தண்டித்தல் இராசதருமமாகாமையானும் தனக்கிணையாகாதவீரரோடுபகைசாதித்தல் வீரத்திறமாகாமையானும் 'மன்னரறமுமன்றிதுவீரர்தஞ்செய்கையுமன்று' என்றார். அரசன் தண்டிக்கத்தகாதாரைத்தண்டித்தலால் நிந்தையையும் நரகத்துன்பத்தையுமடைவானென மனுதர்மசாஸ்திரங்கூறுவதும் ஈண்டுய்த்துணரற்பாலது. (கDக)

தாதை யாகியோன் காசிப னுங்கவன் றனய
னாத லாலுனக் கமரரைச் சிறைசெய்வ தறனோ
வேத மார்க்கமும் பிழைத்தனை சிறுபொருள் விழைந்தாய்
நீதி யாலுல களிப்பதே யரசர்தந் நெறியே.

இ—ள்: தாதை ஆகியோன் காசிபன் — உனதுபிதாவாயுள்ளவர்காசிபமுனிவரன்றோ, அவன் தனயன் ஆதலால் —அவருடையபுத்திரனாதலால், அமரரை சிறை செய்வது உனக்கு அறனோ —தேவர்களைச்சிறையில்வைப்பது உனக்குத்தருமமாகுமா?, வேத மார்க்கமும் பிழைத்தனை — வேதவொழுக்கத்தினின்றுந்தவறினாய், சிறு பொருள் விழைந்தாய் அற்பமானபொருள்களிலே ஆசையுற்றாய், நீதியால் உலகு அளிப்பதே அரசர் தம் நெறி— நீதிநெறிப்படிஉலகங்களைக்காப்பதே அரசர்களுடையமுறையாகும் எ—று.

தந்தையினுடையஒழுக்கத்தை மைந்தன் அனுசரிக்கவேண்டியது நூற்றுணிபாதலால் உன்றந்தையாகியகாசிபமுனிவரைப்போல எவ்வுயிர்களிலுமிரக்கமுடையனாயொழுகாது தேவர்மேல்வன்கண்மைபூணுதல் தகாதென்பார் 'காசிபன்றனயனாதலாலுனக்கமரரைச்சிறைசெய்வதறனோ' எனவும், உன்றந்தையைப்போலத்தவஞ்செய்யாது துராசாரங்களையுடையனாய்வீணேகாலத்தைக்கழிக்கின்றாயென்பார் 'வேதமார்க்கமும்பிழைத்தனை' எனவும், பேரின்பமாகியமுத்தியைப்பெறவிரும்பாது சிற்றின்பமாகியமாதர்போகத்தையுஞ் செல்வத்தையுமேபேணினாயென்பார் 'சிறுபொருள்விழைந்தாய்' எனவும், அங்ஙனம்பேணினும் நீதிகோடாமலரசியற்றினால் அறனும்புகழுமுண்டாமென்பார் 'நீதியாலுலகளிப்பதேயரசர்தந்நெறி' எனவும் கூறினார். (கDஉ)

உலத்தின் மாண்டதோட் சலந்தர னந்தக னொருங்கே
கலத்த லில்லதோர் புரத்தவ ராதியோர் கடவுட்
குலத்தை வாட்டலி னிமைப்பினில் வீந்தனர் கொடியோய்
நிலத்தி னும்பரை வருத்துத லழகிதோ நினக்கே.

இ—ள்: உலத்தில் மாண்ட தோள் சலந்தரன் — திரண்டகல்லைப்போலச்சிறந்தபுயங்களையுடையசலந்தராசுரனும், அந்தகன்—அந்தகாசுரனும், ஒருங்கே

கலத்தல் இல்லது ஓர் புரத்தவர்—ஒன்றுடனொன்றுகூடுதலில்லாது பறந்துதிரிகின்ற மூப்புரங்களிலிருந்த அசுரர்களும், ஆதியோர்—முதலானவர்கள், கடவுள் குலத்தை வாட்டலின்—தேவர்குலத்தாரைவருத்துதலால், இமைப்பினில் வீந்தனர்—விரைவில் அழிந்தார்கள், கொடியோய்—பாவியே!, உம்பரை நிலத்தில் வருத்துதல்— மேலுலகவாசிகளாகியதேவர்களைப்பூவுலகத்திற்கொணர்ந்துவைத்து வருத்துதல், நினக்கு அழகிதோ—உனக்குத்தக்கதா? எ—று.

தேவரைவருத்தினால்நீயுமழிவாயென்பதுகுறிப்பு. அந்தகாசுரன்தேவரைவருத்திமாண்டமையைக்கூர்மபுராணத்து அந்தகாசுரன்சாரூபம்பெற்றவத்தியாயத்தாலுணர்க. மூப்புரங்களுமொருங்குகூடினழியுமென்பது பிரமதேவாற்கொடுக்கப்பெற்றவரம். (௧0௫)

மெய்ம்மை நீங்கியே கொலைகள வியன்றுமே லுள்ள
செம்மை யாளரைச் சீறியே யணங்குசெய் தீயோர்
தம்மி லாற்றரும் பழிசுமந் தொல்லையிற் றமரோ
டிம்மை வீடுவ ரெழுமையுந் துயரினூ டிருப்பார்.

இ—ள்: மெய்ம்மை நீங்கி—உண்மையினின்றுதவறி, கொலை களவு இயன்று—கொலையையுங்களவையுஞ்செய்து, மேல் உள்ள செம்மையாளரை சீறி—மேலாகவாழுகின்றபெரியோர்களைக்கோபித்து, அணங்குசெய்— வருத்துகின்ற, தீயோர்—கொடியவர்கள், இம்மையில்—இப்பிறப்பில், தம்மில் ஆற்ற அரும் பழி சுமந்து—தம்முள்ளேசுமத்தற்கரியநிந்தையைவகித்து, ஒல்லையில்—விரைவில், தமரோடு வீடுவர்—சுற்றத்தவர்களோடிறப்பார்கள், எழுமையும் துயரினூடு இருப்பார்— எழுபிறப்புமுடியுங்காறுந்துன்பத்திலழுந்துவார்கள் எ—று.

பொய்பேசியென்பார் 'மெய்ம்மைநீங்கி' எனவும், செய்தபாவம் வாழ்நாளைக்குறைத்தலால் 'ஒல்லையில்-வீடுவர்' எனவும், உடன்பட்டிருந்தகுற்றத்தாற்சுற்றத்தாரையும்பற்றுமென்பார் 'தமரோடு-வீடுவர்' எனவும், ஒருபிறப்பிலனுபவித்துமுடித்தலியலாதென்பார் 'எழுமையுந்துயரினூடிருப்பார்' எனவும் கூறினர்.

இங்ங னந்திரு நீங்கியே துயருழந் திறப்ப
ரங்ங னம்பெரி தாரிருண் மூழ்குவ ரதற்பி
னுங்ங னம்பிறந் தயருவ ரென்றுமீ துலவா
ரெங்ங னுய்வரோ பிறர்தமக் கல்லல்செய் திடுவோர்.

இ—ள்: இங்ஙனம் திரு நீங்கி துயர் உழந்து இறப்பர்—இப்பிறப்பிற்செல்வத்தையிழந்து துன்பத்தையனுபவித்து இறப்பார்கள், அங்ஙனம் பெரிது ஆர் இருள் மூழ்குவர்—மறுபிறப்பில்நெடுங்காலம் கொடியநரகத்திலழுந்துவார்கள், அதன் பின்—அதன்மேல், உங்ஙனம் பிறந்து அயருவர்—இவ்வுலகத்திற்பிறந்து நோய்முதலியவற்றால்வருந்துவார்கள், என்றும் ஈது உலவார்—எக்காலத்திலும் இந்தத்துன்பந் தொலையப்பெறமாட்டார்கள், (ஆதலின்), பிறர்தமக்கு அல்லல் செய்திடுவோர்—பிறருக்குத்துன்பத்தைச்செய்பவர்கள், எங்ஙன் உய்வர்— எவ்வாறுய்வார்கள்? எ—று.

ஆரிருள்-அடையடுத்தஉவமவாகுபெயர். எத்தனைபிறவிகளிற்பிறந்திறந்தாலுமென்பார் 'என்றும்' எனவும், ஓரிடத்தினும் ஒருகாலத்தினும் உய்தியில்லையென்பார் 'எங்ஙனுய்வர்' எனவும் கூறினர். பாவத்தொடர்ச்சியாற் பாவத்தையே பின்னும்பின்னுஞ்செய்து வருந்துவர் என்பதுதாற்பரியம். (௧௦௬)

தீது நல்லன வாயிரு திறத்தவுந் தெரிந்தே
யேதி லார்க்கவை செய்வரேற் றமக்குட னெய்தும்

பேதை நீரையா யமரரைச் சிறைசெய்த பிழையான்
மாது யர்ப்பட லன்றியே யிறுதியும் வருமால்.

இ—ள்: தீது நல்லன ஆய் இருதிறத்தவும்—தீமையும்நன்மையுமாகிய இருவகைச்செயல்களையெல்லாம், தெரிந்து—பிரித்தறிந்து, அவை—அவற்றை, ஏதிலார்க்கு செய்வரேல்—பிறருக்குச்செய்வார்களாயின், தமக்கு உடன் எய்தும்-(அவற்றின்பயன்) செய்தாருக்கு உடனேகிடைக்கும், பேதைநீரை ஆய் அமரரை சிறைசெய்த பிழையால்— (நீ) அறிவில்லாதவனாய்த் தேவர்களைச்சிறையில் வைத்தகுற்றத்தினால், மா துயர் படல் அன்றி—பெருந்துன்பத்திலழுந்துதன்மாத்திரமன்றி, இறுதியும் வரும்—மரணமுஞ்சம்பவிக்கும் எ—று.

முன் படர்க்கையாகவும் பின்முன்னிலைப்படுத்தியுங்கூறினர். பேதைநீரையாய்-விளியெனினுமாம். (௧0௬)

அண்ட ராற்றலை வவ்விய தாரக னாவி
யுண்ட கொற்றவே லிருந்தது விடுத்திடி னுனையுங்
கண்ட துண்டம தாக்குமா லறநெறி கருதித்
தண்டம் வல்லையிற் புரிந்தில னித்துணை தாழ்த்தான்.

இ—ள்: அண்டர் ஆற்றலை வவ்விய தாரகன் ஆவி உண்ட கொற்ற வேல் இருந்தது — தேவர்களதுவலிமையைக்கவர்ந்த தாரகாசுரனது உயிரையழித்த வெற்றிவேலாயுதம் (எம்பெருமானதுகையில்) இருக்கின்றது, விடுத்திடின் உனையும் கண்டதுண்டமது ஆக்கும்-(அது) ஏவினால் உன்னையுந்துணிபடுத்தும், அறநெறி கருதி-தருமநெறியைச்சிந்தித்து, வல்லையில் தண்டம் புரிந்திலன்-விரைவிற்றண்டனையைச்செய்யாது, இத்துணை தாழ்த்தான்— இதுகாறுந்தாமதித்தார் எ—று.

கண்டதுண்டம்- கண்டமாகிய துண்டு. சிறந்தவீரனென்பார் 'அண்டராற்றலைவவ்வியதாரகன்' எனவும், அவனையழித்ததனாலாயவெற்றிதோன்ற 'கொற்றவேல்' எனவும், தமதுகோட்பாட்டையுணர்த்தி இணங்காவழியேகொல்லலினைந்தாரென்பார் 'அறநெறிகருதி-தாழ்த்தான்' எனவும் கூறினர். (௧0௭)

கெடுத லில்லதோ ரமரர்கள் சிறையிடைக் கிடப்ப
விடுதல் செய்தனை பல்லுக மவர்தமை யின்னே
விடுத லுய்வகை யாகுமான் மறுத்தியேல் விரைந்து
படுத லேநினக் குறுதியா முறையுமப் பரிசே.

இ—ள்: கெடுதல் இல்லது ஓர் அமரர்கள் சிறையிடை கிடப்ப—அழிவில்லாததேவர்கள் சிறையிலிருக்கும்படி, பல் உகம் இடுதல் செய்தனை—பலயுகங்களாக வைத்தாய், அவர் தமை இன்னே விடுதல் நினக்கு உய்வகை ஆகும்—அவர்களையிப்பொழுதேசிறைநீக்குதல் உனக்கு உய்யத்தக்கவழியாம், மறுத்தியேல்— அதனைமறுப்பாயானால், விரைந்து படுதல் உறுதி ஆம்— விரைவிலிறத்தல் நிச்சயமாம், முறையும் அ பரிசே—நீதியும் அவ்வாறே எ—று.

பெரியோர்க்கல்லல்செய்யுந்துட்டரைக்கொல்வதே நீதியென்பார் 'முறையுமப்பரிசே' என்றார். (௧0௮)

ஆண்ட ளப்பில நோற்றனை வேள்வினின் றாற்றி
மூண்ட தீயிடை மூழ்கினேய்க் கெந்தைமுன் னளித்த
மாண்டி டாதபே ராயுளைத் திருவொடும் வாளா
வீண்டொ ராபுன்னெறி யாற்றியே யிழுக்குவ தியல்பே.

இ—ள்: ஆண்டு அளப்பு இல நோற்றனை—அளவிறந்தகாலம்வரை தவஞ்செய்து, வேள்வி நின்று ஆற்றி—யாகத்தைநிலைப்பட்டுச்செய்து, மூண்ட தீ இடை மூழ்கினேய்க்கு—(அருள்கிடைக்காமையால்) சொலித்தெரிகின்ற அக்கினியிலமிழ்ந்திய உனக்கு, எந்தை முன் அளித்த மாண்டிடாத பேர் ஆயுளை—எங்கள்பரமபிதாவாகிய சிவபெருமான் முற்காலத்திற்றந்த அழியாத நீடித்தஆயுளை, திருவொடும்—இந்தப்பெருஞ்செல்வத்தோடும், வாளா—வீணாக, ஈண்டு ஓர் புல் நெறி ஆற்றி இழுக்குவது—இங்கேஒருஎளியகாரியத்தைச்செய்து வழுவவிடுவது, இயல்போ—தகுதியாமோ? எ-று.

மிகவருந்தித்தேடியவரங்களை அற்பகாரியத்திற்காயிழப்பது தக்கதன்று என்பதாம். மூழ்கினேய்க்கு இயல்போ எனவும், வாளா இழுக்குவது எனவும் இயையும். (௧௦௯)

சையமேற்படு வளத்தொடு நீயுநின் றமரு
முய்ய வேண்டுமே லமரர்தஞ் சிறையினை யொழித்து
வையமேலறத் தியல்புளி வாழிமற் றிதனைச்
செய்யலாயெனி னீங்குவந் தடுவனற் றிண்ணம்.

இ—ள்: சையம் மேல் படு வளத்தொடு—மலையினின்றும் பெரிதான செல்வத்தோடு, நீயும் நின் தமரும் உய்யவேண்டுமேல்—நீயும் உன்னுடையசுற்றத்தவர்களும் வாழ்ந்திருக்கவேண்டுமானால், அமரர் தம் சிறையினை ஒழித்து—தேவர்களுடைய சிறையைநீக்கி, வையமேல் அறத்து இயல்புளி வாழி—இப்பூவுலகத்தில் தருமநெறியாக (அரசியற்றி) வாழ்ந்திருப்பாய், இதனை செய்யலாய் எனின்—இக்காரியத்தைச் செய்யாதுவிடுவாயானால், ஈங்கு வந்து அடுவன்-(முருகவேள்) இங்கேவந்து கொல்வார், திண்ணம்—இது நிச்சயம் எ—று. (௧௧௦)

என்று மற்றிவை யாவையும் வரைபக வெறிந்தோ
னுன்ற னக்கறை கென்றன னீங்கினி யும்பர்
வன்ற ளைச்சிறை நீக்கியே யறத்தினிவ் வளத்தை
நன்று துய்த்தனை நெடிதுநீ வாழ்கென நவின்றான்.

இ—ள்: வரை பக எறிந்தோன்—கிரவுஞ்சமலை பிளவுபடும்படி (வேற்படையை)வீசிய முருகவேள், என்று இவை யாவையும்—என்று இந்த வசனங்களெல்லாவற்றையும், உன் தனக்கு அறைக என்றனன்—உனக்குக்கூறுதியென்று (எனக்குக்) கட்டளைசெய்தார், (ஆதலின்), நீ—நீ, இனி உம்பர் வன் தளை சிறை நீக்கி—இனித்தேவர்களது வலிய விலங்குபூட்டிய சிறையைநீக்கி, அறத்தின்—தருமநெறிப்படி, இவ் வளத்தை நன்று துய்த்தனை—இந்தச்செல்வத்தை நன்றாக அனுபவித்து, நெடிது வாழ்க—நெடுங்காலம்வாழுக, என நவின்றான்—என்று கூறினார் எ—று. (௧௧௧)

மறமகன்றிடா வீரனிங் கினையன வகுத்தே
யறையும் வாசகங் கேட்டலும் வெகுளிமூ ளகத்தன்
பொறியு மிழ்ந்திடு கண்ணினன் புகையுமி ழுயிர்ப்ப
னெறியு மங்கைய னிறந்திடு முறுவல னிசைப்பான்.

இ—ள்: மறம் அகன்றிடா வீரன்—தைரியங்குன்றாத வீரவாகுதேவர், இனையன வகுத்து அறையும் வாசகம்—இவ்வாறாக வகுத்துக்கூறிய வசனத்தை, கேட்டலும்-(சூரபன்மன்)கேட்டவுடன், வெகுளி மூள் அகத்தன்—கோபாக்கினி மூளுகின்ற மனத்தையுடையவனும், பொறி உமிழ்ந்திடு கண்ணினன்—அக்கினிப்பொறிகளைச்சிந்துகின்ற கண்களையுடையவனும், புகை உமிழ் உயிர்ப்பன்—புகையைக்காலுகின்ற பெருமூச்சையுடையவனும், எறியும் அங்கையன்—ஒன்றோடொன்று தாக்குகின்ற அகங்கைகளையுடையவனும், இறந்திடும் முறுவலன்—மிகுந்த சிரிப்பையுடையவனும், இசைப்பான்—இவ்வாறு சொல்வான் எ—று.

வீரன் அறையும் எனஇயையும். சூரனச்சுறுத்தியபோதும் தன்னுண்மைசிறிதுங்குன்றாதிருந்து பேசினராதலின் 'மறமகன்றிடாவீரன்' என்றார். (௧௧௨)

மேலை யாயிரத் தெட்டெனு மண்டமும் வென்றே
யேலு கின்றதோர் தனியிறை யாகிய வெனக்குக்
கோல வாலெயி றின்னமுந் தோன்றிலாக் குதலைப்
பால னேகொலா மினையன புந்திகள் பகர்வான்.

இ—ள்: மேலை ஆயிரத்து எட்டு எனும் அண்டமும் வென்று—பழைய ஆயிரத்தெட்டென்னுந்தொகைப்பட்ட அண்டங்களையெல்லாம் வெற்றிகொண்டு, ஏலுகின்றது—மகிமைபெற்ற, ஓர் தனி இறை ஆகிய எனக்கு—ஒப்பற்ற சிறந்தஅரசனாகிய எனக்கு, கோல வால் எயிறு இன்னமும் தோன்றிலா குதலை பாலனே—அழகிய வெள்ளிய பற்கள் இன்னும்முளைக்கப்பெறாத மழலைவார்த்தையைப்பேசுகின்ற சிறுவனா, இனையன புந்திகள் பகர்வான்— இந்தப்புத்திகளைச்சொல்லவல்லான்! எ—று.

சிறுபாலனென்பான் 'கோலவாலெயிறின்னமுந்தோன்றிலாக்குதலைப்பாலன்' என்றான். ஏலுகின்றது என்பதில் து சாரியை. (௧௧௩)

விறலின் மேதகு மவுணராம் வலியிலார் மிகவும்
வறிய ராகிய தேவரா மேலவர் மழலைச்
சிறுவ ராந்தனி முதல்வற்கு மமைச்சியல் செய்வா
ரெறியு நேமிசூ ழுலகத்து வழக்கநன் றிதுவே.

இ—ள்: விறலின் மேதகும் அவுணர் வலி இலார் ஆம்— விறலான்மேம்பட்ட அசுரர்கள் வலியில்லாதவர்களாம், மிகவும் வறியர் ஆகிய தேவர் மேலவர் ஆம்—மிகவும் வறியவர்களாகியதேவர்கள் உயர்ந்தவர்களாம், மழலை சிறுவர் தனி முதல்வற்கும் அமைச்சு இயல் செய்வார் ஆம்—குதலைமொழிதிருந்தாத பாலர் ஒப்பற்ற அரசனுக்கும் மந்திரித்தொழில்செய்யவல்லவராம், எறியும் நேமி சூழ் உலகத்து வழக்கம் இது—திரைவீசுகின்ற கடலாற்சூழப்பட்ட நிலவுலகத்தினிகழும் இந்தவழக்கம், நன்று—நன்றாயிருக்கின்றது எ—று.

முதல்வற்கும் என்ற உம்மை சிறப்பு. ஆம் அன்றென்றகுறிப்பு. வலி வீரம் முதலியவற்றால் இணையாவாரெவருமில்லாதவென்பான் 'விறலின்மேதகும்' எனவும், அவர் முருகவேளாலழிக்கப்படத்தக்காரல்லரென்பான் 'வலியிலாராம்' எனவும், வலி ஆண்மை வீரம் செல்வம் முதலியனசிறிதுமில்லாரென்பான் 'மிகவும் வறியர்' எனவும், அவரை மேலோரென்றுகூறியகூற்றைமறுப்பான் 'தேவரா மேலவர்' எனவும், உலகமெல்லாவற்றையும் ஒருகுடைக்கீழ்ப்படுத்தியாளுமரசனென்பான் 'தனிமுதல்வன்' எனவும், செவ்வனேயுரையாடத்தானும் பயிலாத பாலரென்பான் 'மழலைச்சிறுவர்' எனவும், அவர் நுண்ணியபுத்தியும் தொழில்களைநடாத்துவிக்குந்திறலும் அரசனைநன்மதி கூறித்தெருட்டித்தன்னெண்ணப்படியிசைவிக்கவல்லசொற்சாதுரியமும்உடையார்செய்யும் மந்திரித்தொழிலை என்பாற்பெறவிரும்பி நன்மதிகூறுவிப்பான்றுணிந்தது சிறிதுமொவ்வாது என்பான் 'சிறுவராம்—அமைச்சியல்செய்வார்' எனவும், உலகத்தாருளெவராயினும் இதுகாறும் இவ்வாறு கூறினாரல்லர் ஒழுகினாருமல்லர் என்பதுபோதர 'எறியுநேமிசூழுலகத்துவழக்கம்' எனவும், இவ்வாறேநீ கூறியயாவும் இயல்பிற்குமாறாயிற்றென்பான் 'இதுநன்று' எனவும் பரிகாசவசனத்தாற்கூறினான். (௧௧௪)

நறைகொ டார்முடி யவுணர்தங் குலத்தினை நலித்து
வறுமை செய்தனர் கடவுள ரவர்திரு மாற்றிக்
குறிய வேவலுங் கொண்டன னொழுக்கமுங் கொன்றேன்
சிறையும் வைத்தன னங்குடித் தமர்முறை செய்தேன்.

இ—ள்: கடவுளர்—தேவர்கள், நறை கொள் தார் முடி அவுணர் தம் குலத்தினை நலித்து—தேன்பொருந்திய மலர்மாலையையணிந்த முடியையுடைய அசுரர்களது குலத்தை மெலிவித்து, வறுமை செய்தனர்—வறுமைப்படுத்தினார்கள், (ஆதலின்), அவர் திரு மாற்றி—அத்தேவர்களது செல்வத்தைக்கெடுத்து, குறிய ஏவலும் கொண்டனன்—எளிய ஏவல்களையுஞ்செய்வித்து, ஒழுக்கமும் கொன்றேன்—அவரொழுகிய ஒழுக்கத்தையுந்தவிர்த்து, சிறையும் வைத்தனன்—சிறையிலும்வைத்தேன், நம் குடி தமர் முறை செய்தேன்– எங்கள்குலத்து முன்னோர்செய்தமுறையையே (யானும்) செய்தேன் எ—று.

முறையே என்பதிற்பிரிநிலையேகாரந்தொக்கது. வறுமை-வெறுமை. கொண்டனன் கொன்றேன்-முற்றெச்சங்கள். உம்மைகள் எச்சம். அன்றலர்ந்த மலராற்றொடுக்கப்பட்டமாலையென்பான் 'நறைகொடார்' எனவும், குலப்பகைமைபற்றிக்கொன்றும் வென்றும் தழைத்தோங்காவண்ணந்தகைந்தும் என்பான் 'நலித்து' எனவும், அரசியலும் அதிகாரமும் வளமுமுதலிய அனைத்தையுமொருங்கேநீக்கி என்பான் 'அவர்திருமாற்றி' எனவும், மீன்சுமத்தன்முதலிய தகாதஏவல்களையும் வலிந்துசெய்வித்தேனென்பான் 'குறியவேவலுங்கொண்டனன்' எனவும், சந்தியாவந்தனமுதலிய கிரியைகளையுஞ்செய்யாவண்ணந்தவறுவித்தேனென்பான் 'ஒழுக்கமுங்கொன்றேன்' எனவும், முன்னோர்செய்தசெயலைப்பின்னோர்தொடர்ந்து செய்தல்நூற்றுணிபாதலான் யான்செய்ததுகுலதருமமே நீ கூறியவாறு பாவமாகாதென்பான் 'நங்குடித்தமர்முறைசெய்தேன்' எனவும் கூறினான். (ககடு)

நெடிய மான்மக னுறங்குநா ளாணையை நீங்கித்
தொடுபெ ருங்கட லுலகெலாங் கொள்ளினுஞ் சுரரை
விடுவ னல்லன்யான் வீடருஞ் சிறையினை விண்மே
லுடைய வண்டத்தி னுச்சியி னொருதலை யுய்ப்பேன்.

இ—ள்: நெடிய மால் மகன் உறங்கும் நாள்—நீண்டவடிவத்தையுடைய திருமாலினது புதல்வராகிய பிரமதேவர் நித்திரைசெய்கின்ற பிரளயகாலத்தில், தொடு பெரும் கடல்—சகரரால் முற்காலத்திற்றோண்டப்பட்ட பெரியசமுத்திரம், ஆணையை நீங்கி உலகு எலாம் கொள்ளினும்–(இறைவனாற்செய்யப்பட்ட) கட்டுப்பாட்டைக்கடந்து எல்லாவுலகங்களையும் மூடினாலும், யான் சுரரை விடுவன் அல்லன் –நான்தேவர்களைவிடமாட்டேன், வீடு அரும் சிறையினை– விடுதற்கரியசிறையை, விண் மேல் உடைய அண்டத்தின் உச்சியின் ஒரு தலை-- ஆகாயத்தின் மேலுள்ள அண்டமுகட்டின் ஒருபாகத்தில், உய்ப்பேன்— கொண்டுபோய்வைப்பேன் எ—று.

உலகமெல்லாமழிந்தாலும் தேவர்சிறையைவிடமாட்டேன் என்பதாம். கடவுளாணையாற்கட்டுப்பட்டுநிற்குங்கடலானது ஆயிரஞ்சதுர்யுகவளவுகொண்ட பிரமதேவரது பகற்காலமுடியுந்தோறும் பெருகி உலகமெல்லாவற்றையுமழிக்குமென்க. உம்மை-சிறப்பு. (கசகூ)

தப்பல் செய்திடு மகபதி முதலினோர் தமையு
மிப்ப திக்கணே கொணர்ந்தனன் சிறைசெய விருந்தேன்
கைப்பு குஞ்சிறை விடுவனோ விடுகிலன் கண்டா
யொப்ப ருந்திறற் சூரனென் றொருபெய ருடையேன்.

இ—ள்: தப்பல் செய்திடும் மகபதி முதலினோர் தமையும்—அகப்படாததவ்றிய இந்திரன்முதலியமற்றுந்தேவர்களையும், கொணர்ந்தனன்— பற்றிக்கொண்டுவந்து, இ பதி கண் சிறைசெய இருந்தேன்— இந்தமகேந்திரபுரத்திற் சிறைவைக்கும்படி எண்ணியிருந்தேன், ஒப்பு அரும் திறல் சூரன் என்று ஒரு பெயர் உடையேன்—நிகரற்றதிறலையுடைய சூரனென்னும் ஒருபெயரைப்பெற்றிருக்கும்

யான், கை புகும் சிறை விடுவேனோ—கையகப்பட்ட சிறையை விடுவேனோ?, விடுகிலன்—விடமாட்டேன் எ—று.

கண்டாய்-முன்னிலையசை. உம்மை-எச்சம் அருமை இன்மை குறித்துநின்றது. வீரனென்னும்பொருளையுட்கொண்டசூரனென்னும்பெயரையுடையேனாதலின், பிறர்க்கஞ்சிச்சிறைவிடேன் என்பதாம். திக்குவிசயஞ்செய்தநாளினும் பானுகோபன்சுவர்க்கத்திற்போர்செய்யப்புகுந்தநாளினும் அதன்பின்னும் நேர்படாதுமறைந்தானாதலின் 'தப்பல்செய்திடுமகபதி' எனவும், மாறுவேடம்பூண்ட ஒற்றர்முதலாயினோரால் இருக்குமிடத்தையாராய்ந்து அகப்படுத்தநினைந்தானாதலின் 'சிறைசெயவிருந்தேன்' எனவும் கூறினான். (கக௭)

மின்னு வச்சிரப் படிவமும் வேறுபல் வரமு
முன்னொர் ஞான்றுதன் றாதையெற் களித்திடு முறையைப்
பின்னர் யாவரே பெயர்ப்பவர் பெருஞ்சம ரியற்றி
யென்னை யாற்றலால் வென்றிடு நீர்மையோ ரெவரே.

இ—ள்: மின்னு வச்சிர படிவமும்—விளங்குகின்றவச்சிரயாக்கையையும், வேறு பல் வரமும்—மற்றும்பலவரங்களையும், முன் ஒர் ஞான்று—முன்னொருநாள், தன் தாதை எற்கு அளித்திடும் முறையை—அவனதுபிதா எனக்குத்தந்தமுறைமையை, பின்னர் யாவர் பெயர்ப்பவர்—வேறுயார் மாற்றவல்லார்?, பெரும் சமர் இயற்றி—பெரியபோரைச்செய்து, ஆற்றலால் என்னை வென்றிடும் நீர்மையோர் எவர்—வலிமையினாலென்னைவெல்லத்தக்கவீரர்யாவர்? எ—று.

வரமும் அளித்திடும் என இயையும். வினாக்களிரண்டும் இன்மைகுறித்தன. நீகூறியபாலனதுபிதாவென்பான் 'தன்றாதை' எனவும், நியதிப்பட்டதாகலின் 'முறை' எனவும், பகையும்மானமும்மிக்குச்செய்யும்போரென்பான் 'பெருஞ்சமர்' எனவும் கூறினான். (கக௮)

தான மாமுகத் தாரக வெம்பியைத் தடிந்த
மான வேற்படை யவன்மிசை வருவது வலித்தேன்
பானல் வாய்ச்சிறு சேயொடு நீயமர் பயிற
லூன மேயெனத் தடுத்தன ராதலா லொழிந்தேன்.

இ—ள்: தான மா முக தாரக எம்பியை தடிந்த—மதத்தைச்சிந்துகின்ற யானைமுகத்தையுடைய எனதுதம்பியாகிய தாரகாசுரனைக்கொன்ற, மான வேல் படையவன் மிசை—மதிப்பையுடைய வேலாயுதத்தையேந்தியமுருகவேளின்மீது, வருவது வலித்தேன்—போர்செய்யவருவதற்குத்துணிந்தேன், பால் நல் வாய் சிறு சேயொடு—முலைப்பால்வழிகின்ற அழகியவாயினையுடைய சிறுபிள்ளையோடு, நீ அமர் பயிறல்—அரசர்க்கரசனாகிய நீபோரைச்செய்வது, ஊனமே என—பெருமைக்குறைவேயாமென்று, தடுத்தனர்—(இங்குள்ளார்) தடைசெய்தார்கள், ஆதலால் ஒழிந்தேன்—அதனால் (அதனைத்) தவிர்த்தேன் எ—று.

திருமால்முதலிய தேவத்தலைவர்களையும்கண்டவுடனஞ்சுவிக்கும்பேராற்றலுடையாய் ஒருசிறிதுமாற்றலில்லாத சிறுவனோடுபோர்நிகழ்த்தின் உனதாற்றலுக்கு மாசியற்குமுள்ளபெருமைகுன்றும் இதற்கையமில்லையென்றென்பான் 'சிறுசேயொடு-அமர்பயிறல்-ஊனமேயென' என்றான். (கக௯)

தூங்கு கையுடைத் தாரக விளவலைத் தொலைபோங்க
போங்க றன்னொடு மட்டது றென்னலே யுணர்ந்தேன்
பாங்கி னோரையப் பாலன்மே லுந்தியென் பழியும்
வாங்கு கின்றனை னெளயே காண்டியான் மன்னே.

இ—ள்: தூங்கு கை உடை தாரக இளவலை— தூங்குகின்ற துதிக்கையையுடைய எனது தம்பியாகிய தாரகனை, தொல்லை ஓங்கல் தன்னொடும் அட்டது— பழைய கிரவுஞ்சமலையோடும் அழித்தமையை, நென்னலே உணர்ந்தேன்— நேற்றேயறிந்தேன், பாங்கினோரை அ பாலன் மேல் உந்தி— என்பக்கத்திலுள்ளசிலவீரர்களை அந்தச்சிறுவன்மேற் (பொருதற்கு) அனுப்பி, நாளையே— நாளைக்கே, என் பழியும் வாங்குகின்றனன்— என்னுடையபழியையும் வாங்குவேன், காண்டி— (நீ இதனை) அறிவாய் எ—று.

ஏ இரண்டும் பிரிநிலை. தொன்றுதொட்டு அசுரர்க்கு அரணாக அமைந்ததுபற்றி 'தொல்லையோங்கல்' எனவும், அன்றேயென்பான் 'நென்னலே' எனவும், தப்பாமற்செய்வேனென்பான் 'காண்டி' எனவும் கூறினான். பழிவாங்கல்-தனக்குத்தீங்குசெய்தானுக்கு எதிர்செய்தலால் வந்தநிந்தையைமாற்றல். (௧௨௦)

அரிக ளெண்ணில ரிந்திர ரெண்ணில ரல்லாச்
சுரர்க ளெண்ணில ரண்டங்க டொறுந்தொறு மிருந்தார்
செருவி னாற்றலர் வழுத்தியே போயினர் சிவன்க
ணெருநல் வந்திடு சிறுவனோ வென்னெதிர் நிற்பான்.

இ—ள்: அரிகள் எண் இலர்—அளவிறந்த விட்டுணுக்களும், இந்திரர் எண் இலர்—அளவிறந்த இந்திரர்களும், அல்லா சுரர்கள் எண் இலர்—வேறும்அளவிறந்ததேவர்களும், அண்டங்கள் தொறும் தொறும் இருந்தார்—ஒவ்வோரண்டங்களினுமிருந்தார்கள், செருவின் ஆற்றலர் வழுத்தி போயினர்—(அவரெல்லாம்) போர்செய்தாற்றாதவர்களாய் என்னைப்புகழ்ந்து போனார்கள், (அங்ஙனமாக), சிவன் கண் நெருநல் வந்திடு சிறுவனோ— சிவபிரானது நெற்றிக்கண்ணினின்று நேற்றுப்பிறந்தபிள்ளையா, என் எதிர் நிற்பான்—எனக்கெதிரேநின்றுபோர்செய்யவல்லான்? எ—று.

ஓ எதிர்மறை. அடுக்கு பன்மைபற்றியது. (௧௨௧)

ஓதி யென்பல வமரரை விடுகில னுணர்ச்சி
யேது மில்லதோர் மகவுதன் புன்மொழி யேற்றுப்
பேதை யாதலி னொற்றனாய் வந்தனை பிழைத்துப்
போதி நின்னுயிர் தந்தனன் யானெனப் புகன்றான்.

இ—ள்: பல ஓதி என்—பலவற்றைக்கூறியதாற்பயனென்னை?, அமரரை விடுகிலன்-தேவரைச்(சிறையினின்றும்) விடேன், பேதை ஆதலின்—அறிவில்லாயாதலால், உணர்ச்சி ஏதும் இல்லது ஓர் மகவு தன் புன் மொழி ஏற்று—அறிவு சிறிதுமில்லாத பாலனது பயனற்றபேச்சைக்கேட்டு, ஒற்றன் ஆய் வந்தனை—(அவனுக்குத்) தூதனாய்வந்தாய், யான் நின் உயிர் தந்தனன்— நான் உன்னுடைய உயிரைத்தந்தேன், பிழைத்து போதி—உய்ந்து போவாய், என புகன்றான்—என்று சொன்னான் எ—று.

உம்மை இழிவு. வினா இன்மைகுறித்தது. நீ பின்னும்மறுத்துக்கூறினும் யான்கூறுவதிதுவே ஆதலின் உன்பேச்சையொழிக்குதி என்பான் 'ஓதியென்பல' எனவும், தொடங்குங்கருமங் கடைபோமோவென்னுஞ்சூழ்ச்சி சிறிதுமில்லாதவென்பான் 'உணர்ச்சியேதுமில்லதோர்' எனவும், விளையாட்டுப்பேச்சென்பான் 'பன்மொழி' எனவும், அம்மொழியைக்கேட்டுப்பேராற்றலுடையயானரசிருக்குமிடத்தில் அஞ்சாதுவந்தாயென்பதுபோதர 'பேதை' எனவும், உன்னைக் கோறல்மிகஎளிதாயினும் உனதறிவின்மைக்கிரங்கி விடுத்தேனென்பான் 'நின்னுயிர் தந்தனன்' எனவும், யான்விடுத்தவழியும் இங்கராருன்னைத்தவறாதுகொல்

யர் அவர்க்ககப்படாவண்ணம்விரைந்துபோதி என்பதுகுறிப்பாற்போதர 'பிழைத்துப்போதி' எனவும் கூறினன். (௧௨௨)

அகில மார்பவ னிங்கிவை மொழிதலு மையன்
வெகுளி வெங்கனல் சிந்திட வுளஞ்சுட வெகுண்டு
புகையு மங்கியு முயிர்ப்புற மயிர்ப்புறம் பொடிப்ப
நகையும் வந்திடச் சிவந்திட விழியிவை நவில்வான்.

இ—ள்: அகிலம் ஆர்பவன் இவை மொழிதலும்—உலகங்களெல்லாவற்றையுமரசியல்செய்கின்ற சூரபன்மன் இவ்வசனங்களைக்கூற, ஐயன்— வீரவாகுதேவர், வெகுளி வெம் கனல் சிந்திட—கோபமாகிய கொடியஅக்கினி சிதற, உளம் சுட—மனம் எரிய, வெகுண்டு—கோபித்து, புகையும் அங்கியும் உயிர்ப்பு உற— புகையும் நெருப்பும் சுவாசத்தினின்றுவெளிப்பட, மயிர் புறம் பொடிப்ப—புறத்திலுள்ள உரோமங்கள் பொடிபட, நகையும் வந்திட—சிரிப்புந்தோன்ற, விழி சிவந்திட—கண்கள்சிவக்க, இவை நவில்வான்— மேல்வரும்வசனங்களைச்சொல்வார் எ—று.

மயிர்ப்புறம்-பின்மொழிநிலையல். அக்கினி தன்மேலிட்டவிறகுமுதலியவற்றில்மூண்டு மேன்மேலுங்கிளருதல்போலச் சூரபன்மனெதிர்கூறுந்தோறும் அவ்வசனந்தன்னையுந்தன்கடவுளையுமிழித்தல்பற்றிக் கோபந்தோன்றி மேன்மேலும் பெருகிற்றென்க. கடவுளைப்பாலனென்றெண்ணிப்பழித்தமையின் சிரித்தாரென்க. (௧௨௩)

உய்ய லாவதோர் பரிசினை யுணர்வுறா துழலுங்
கைய கேண்மதி கட்செவி மதியொடு கலந்த
செய்ய வார்சடைப் பரம்பொருட் டிருநுதல் விழிசே
ரையன் மேதக வுணர்ந்திலை பாலனென் றறைந்தாய்.

இ—ள்: உய்யல் ஆவது ஓர் பரிசினை உணர்வுறாது உழலும் கைய—உய்தற்கேற்ற நல்வழியையறிந்துகொள்ளாது அலைகின்றகீழ்மகனே!, கேள்- கேட்பாய், கட்செவி மதியொடு கலந்த செய்ய வார் சடை பரம்பொருள்—சர்ப்பங்கள் சந்திரனோடு இணங்கியிருக்கப்பெற்ற சிவந்த நீண்டசடையையுடைய சிவபிரானது, திரு நுதல்விழி சேர்— அழகிய நெற்றிக்கண்ணினின்றுமுதித்த, ஐயன்—முருகக்கடவுளது, மேதகவு—பெருமையை, உணர்ந்திலை—அறியாது, பாலன் என்று அறைந்தாய்—சிறுவனென்றிகழ்ந்தாய் எ—று.

கட்செவி-கண்ணையேசெவியுமாகவுடையது. உய்யும்வழியைத்தெருட்டிய போதுந்தெருளாதமூடனேயென்பார் 'உய்யலாவதோர் பரிசினையுணர்வுறாதுழலுங்கைய' எனவும், பகையாடாதுவாழ்கின்றவென்பார் 'கலந்த' எனவும் கூறினார். ஒன்றற்கொன்று பகையுடையனவாய அரவும் மதியும் இணங்கிவாழுஞ்சடையையுடையாரது குமாரரெனக்குறித்தலால், இணக்கமுகத்தாற்றேவரைவிடுவிக்குமாறு நினைந்தாரென்பதைச்சுட்டினார். (௧௨௪)

மானு டத்தரைத் தேவென்பர் வானகத் தவரை
யேனை முத்தொழி லவரென்ப ரிருவர்தங் களையு
நானி லத்தினிற் பரம்பொரு ளிவரென நவில்வா
ரான சொற்றிற முகமனே சாதமற் றன்றால்.

இ—ள்: நால் நிலத்தினில்—அகன்ற இந்தநிலவுலகத்தில், மானுடத்தரை தே என்பர்—மனிதரைத்தேவர்களென்றுசொல்வார்கள், வானகத்தவரை ஏனை முத்தொழிலவர் என்பர்—சாமானியரான தேவர்களை ஒழித்த மும்மூர்த்திகளென்றுசொல்வார்கள், இருவர் தங்களையும் பரம் பொருள் இவர் என நவில்வார்—பிர

மாவையும் விட்டுணுவையும் இவரே பரப்பிரமமென்று (தனித்தனி) சொல்வார்கள், ஆன சொல் திறம் முகமனே—அவ்வாறாகிய சொற்களெல்லாம் உபசாரவார்த்தைகளேயாம், சரதம் அன்று- உண்மையல்ல எ—று.

உம்மை முற்று. நிலவுலகமெங்குமென்பார் 'நானிலத்தினில்' என்றார். கவிபாடும்போதும் இரக்கும்போதும் துதிக்கும்போதும் இவ்வாறுபுகழ்ந்துகூறுவதியல்பென்க. நானிலம்-குறிஞ்சிமுதலியநால்வகைத்திணைகள்விரவிய நிலமெனினுமாம். (கஉ௫)

ஆய புல்லிய புகழ்ச்சிபோற் கொள்ளலை யறிவோர்
தேய மாவது யார்க்குமெட் டாதது தெளியிற்
றூய வீடுபே றருளுவ துபநிடத் துணிவாம்
வாய்மை யாவது புகலுவன் கேளென வகுப்பான்.

இ-ள்: ஆய புல்லிய புகழ்ச்சி போல் கொள்ளலை—அப்படிப்பட்ட சிறுமையானபுகழைப்போலநினையாதே, அறிவோர் தேயம் ஆவது—ஞானிகளாற்றியானிக்கப்படுவது, யார்க்கும் எட்டாதது—எவர்களுக்கும் அதீதமானது, தெளியில் தூய வீடுபேறு அருளுவது—தெளிந்துணர்ந்தால் தூய்மையாகிய முத்திப்பேற்றைப்பயப்பது, உபநிடத் துணிவு ஆம் வாய்மை ஆவது—உபநிடத்துக்களின்சித்தாந்தமான மெய்ப்பொருளாயிருப்பது, புகலுவன்— அதனைச்சொல்வேன், கேள் என—கேட்பாயென்று, வகுப்பான்—கூறுவார் எ—று.

யான் உண்மையைக்கூறுவேனென்பதாம். உபநிடத்-வடசொல்; உபநிடதமெனவும் தமிழில்வழங்கும். சிறியாரைப்பெரியாராகக்கூறுதலின் 'புல்லியபுகழ்ச்சி' எனவும், இயமமுதலிய எண்வகையங்கங்களின்வழிதவறாதுநின்று யோகசாதனைசெய்வாரென்பார் 'அறிவோர்' எனவும், அவரால் இடையீடின்றிச் சிந்திக்கப்படுவதாதலின் 'தேயமாவது' எனவும், அங்ஙனஞ்சிந்திப்பினும் அவர்க்குவரையறுத்துக்கூறற்கேற்றவாறமையாமையின் 'யார்க்குமெட்டாதது' எனவும், அவ்வியல்பினதாயஉண்மையைச் சற்குருவினுபதேசத்தாற்றெரிந்துழியென்பார் 'தெளியில்' எனவும், அங்ஙனந்தெளிந்துழி சிற்றறிவுமுதலானவைகளெல்லாநீங்கிப் பதித்துவம்பெறுதலின் 'தூயவீடுபேறருளுவது' எனவும், பிரமத்தினியல்பை வேதசாரங்களாகிய உபநிடதங்களேவரையறுத்துக்கூறுவனவென்பதும் அக்கூற்றுப் பிறிதொருநூலானும் மறுக்கத்தக்கதன்றென்பதும்போதர 'உபநிடத்துணிவாம்வாய்மையாவது' எனவும், முன்போற்சினஞ்செய்யாது கூறிமுடிக்குந்துணையும் அமைந்துகேட்பாயென்பார் 'புகலுவன்கேள்' எனவும் கூறினார். (கஉ௬)

மண்ண ளந்திடு மாயனும் வனசமே லவனு
மெண்ண ரும்பக றேடியுங் காண்கிலா திருந்த
பண்ண வன்னுதல் விழியிடைப் பரஞ்சுட ருருவா
யுண்ணி றைந்தபே ரருளினான் மதலையா யுதித்தான்.

இ—ள்: மண் அளந்திடு மாயனும்—பூமியை ஓரடியாலளந்ததிருமாலும், வனச மேலவனும்—தாமரைமலராசனத்திலிருக்கின்ற பிரமதேவரும், எண்ண அரும்பகல் தேடியும் காண்கிலாது இருந்த—அளவிறந்தகாலமாகத்தேடியுங்காணப்படாதுநின்ற, பண்ணவன்—சிவபிரானது, நுதல் விழி இடை—நெற்றிக்கண்களினின்றும், உள் நிறைந்த பேர் அருளினால்—திருவுளத்தினிறைந்த பெருங்கருணையினால், பரஞ்சுடர் உருவாய்—மேலானசோதிவடிவாகி, மதலை ஆய் உதித்தான்—குழந்தையாக அவதரித்தார் எ—று.

தேடியும் என்றஉம்மை சிறப்பு. தேவர்வேண்டுகோட்படியுதித்தாராதலின் 'உண்ணிறைந்தபேரருளினால்-உதித்தான்' எனவும், 'இறைமைக்குணங்களிற்சிறிதுங்குறைவறவென்பார் 'பரஞ்சுடருருவாய்' எனவும் கூறினார். (கஉ௭)

முன்ன வர்க்குமுன் னாகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னை நேரிலா தீசனாந் தனிப்பெயர் தாங்கி
யின்னு யிர்க்குயி ராயரு வுருவமா யெவர்க்கு
மன்னை தாதையா யிருந்திடும் பரமனே யவன்காண்.

இ—ள்: முன்னவர்க்கு முன் ஆகுவோர் தமக்கும் முற்பட்டு—முன்னைப்பழம்பொருட்கும்முன்னைப்பழம்பொருளாய், தன்னை நேர் இலாது—தம்மையொப்பார்பிறரின்றி, ஈசன் ஆம் தனி பெயர் தாங்கி—ஈசனென்னும் ஒப்பற்றபெயரைக்கொண்டு, இன் உயிர்க்கு உயிர் ஆய்— சிறந்த ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாய், அரு உருவம் ஆய்—அருவமும்உருவமும் ஆகி, எவர்க்கும் அன்னை தாதை ஆய்—அனைவர்க்குந்தாயுந்தந்தையுமாய், இருந்திடும் பரமனே—வீற்றிருக்கின்றசிவபிரானே, அவன்—அப்பாலகர் எ—று.

ஏ-தேற்றம். முன்னவர்க்குமுன்னாகுவோர்தமக்குமுற்பட்டு என்றதில் உபலக்கணத்தால் பின்னவர்க்கும்பின்னாகுவோர்தமக்கும்பிற்பட்டு என்பதையுமமைத்துரைக்க. முடிவிலாற்றலுடைமையால் 'தன்னைநேரிலாது' எனவும், தன்னையாள்வார்பிறரின்றித் தாமேயனைவரையுமாளுந்தகையினரென்பதுபோதர 'ஈசனாந்தனிப்பெயர்தாங்கி' எனவும், மற்றெல்லாப்பொருள்களினும் உயிரையேவிரும்பிப்பேணுதலியல்பாதலின் 'இன்னுயிர்' எனவும், உடலையியக்குதற்குயிர் இன்றியமையாமைபோல உயிரையியக்குதற்கு இறைவனின்றியமையாமையின் 'உயிர்க்குயிராய்' எனவும், தமக்கெனவோருருவமில்லாதுநிற்றலின் 'அரு-ஆய்' எனவும், அடியார்க்கருள்செய்யுமாறு இயைந்தவடிவோடுவெளிப்படுதலின் 'உருவமாய்' எனவும், அடியார்க்குநேருந்துன்பங்களைத்தீர்த்துக்காத்தலின் 'அன்னை தாதையாய்' எனவும் கூறினர். கடவுளே முற்செய்யுளிற்கூறியவாறுதித்தாரென்பதாம். (கஉஅ)

ஈச னேயவ னாடலான் மதலையா யினன்கா
ணாசி லாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
றேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

இ—ள்: அவன் ஈசனே— அக்குமாரர் சிவபிரானேயாம், ஆடலால் மதலை ஆயினன்—திருவிளையாடல்காரணமாகக்குழந்தைவடிவாயவதரித்தார், (இதனை), ஆசு இலா அவன் அறுமுகத்து உண்மையால்—குற்றமில்லாத அப்பாலகரது ஆறுமுகங்களின் உண்மையினால், நீ அறி—நீ அறிந்துகொள், பேசில்—கூறுங்கால், தேசு உலாவு அகன்மணி இடை— ஒளிபொருந்திய பெரியஇரத்தினத்தினின்று, கதிர் வரு திறம் போல்—ஒளிபிறக்குந்தன்மையைப்போல, அவன் பரனொடு பேதகன் அல்லன்— அப்பாலகர் சிவபிரானோடுபேதமுடையரல்லர் எ—று.

ஈசனேயவன் என்றது முற்செய்யுளை அநுவதித்தது. அவனறுமுகத்துண்மையாலறிநீ என்றதை "நன்முகமிருமூன்றுண்டானமக்கவைதாமேசுந்தன் றன்முகமாகியுற்ற" என்று திருவிளையாட்டுப்படலத்தில்வரும் சிவபிரான்கூற்றானுமுணர்க. இரத்தினத்தினின்று ஒளிதோன்றினும் அஃது அதனின்வேறாகாமைபோல முருகவேள் சிவபிரானிடத்துப்பாலகராய்த்தோன்றினும் அவரின்வேறாகார் என்பது பிற்றொடர்க்கருத்து. (கஉகூ)

பூத மைந்தினுட் கீழ்நிலைக் காகிய புவியு
ளோது கின்றபல் லண்டத்தி னோராயிரத் தெட்டுங்
கோதி லாக்கமும் படைகளு முனக்குமுன் கொடுத்த
வாதி யீசனே யவனெனின் மாற்றுவ தரிதோ.

இ—ள்: பூதம் ஐந்தினுள் கீழ் நிலத்து ஆகிய புவியுள் ஓதுகின்ற பல் அண்டத்தின்—ஐந்துபூதங்களுள்ளுங் கீழுள்ளதாகிய பூமியின்கூறாகச்சொல்லப்படுகின்ற பல அண்டங்களுள், ஓராயிரத்து எட்டும்—ஆயிரத்தெட்டண்டங்களையும், கோது இல் ஆக்கமும்—குற்றமற்றசெல்வத்தையும், படைகளும்—படைக்கலங்களையும், உனக்கு முன் கொடுத்த—உனக்குமுன்னே தந்தருளிய, ஆதி ஈசனே அவன் எனில்—முதற்கடவுளாகிய சிவபெருமானே அப்பாலகரானால், மாற்றுவது அரிதோ—அவர் அவற்றைநீக்குதல் அருமையாமோ? எ—று.

ஓ எதிர்மறை. தந்தவராதலின் தவிர்க்கவும் வல்லார் என்பதாம். ஆயிரகோடியண்டங்கள் பூமியின்கூறுயுளவாதலின் 'புவியுளோதுகின்றபல்லண்டம்' என்றார். (௧௫௦)

ஏத மில்புவி யண்டங்கள் பெற்றன மென்றே
பேதை யுன்னினை சிறிதவன் றன்னருள் பெறுவோர்
பூத மைந்தினு மேனைய திறத்தினும் புறத்து
மீது மாமண்ட மெவற்றிற்கும் வேத்தியல் புரிவார்.

இ—ள்: பேதை—உய்த்துணர்வில்லாதவனே!, ஏதம் இல் புவி அண்டங்கள் பெற்றனம் என்று உன்னினை—குற்றமற்ற பூமியின்கூறாகிய அண்டங்கள்பலவற்றைப்பெற்றேமென்று நினைத்தாய், சிறிது அவன் தன் அருள் பெறுவோர்—சற்றே அந்தக்கடவுளது கிருபையைப்பெறுபவர்கள், பூதம் ஐந்தினும்—பஞ்சபூதங்களிலும், ஏனையதிறத்தினும்—(ஆன்மதத்துவத்தின்பாற்பட்ட) பிறதத்துவங்களிலும், புறத்தும்—அப்பாலுள்ளவித்தியாதத்துவத்திலும், மீதும் ஆம்—மேலாகிய சிவதத்துவத்தினுமமைந்திருக்கின்ற, அண்டம் எவற்றிற்கும்—எல்லாவண்டங்களுக்கும், வேத்து இயல் புரிவார்—அரசியலைச்செய்வார்கள் எ—று.

அற்பமானவளங்களைப்பெரிதென்றுநினைந்து தருக்குற்றாயென்பதுகுறிப்பு. ஏனையதிறத்தும் என்றது ஞானேந்திரியமைந்தும் கன்மேந்திரியமைந்தும் தன்மாத்திரையைந்தும் அந்தக்கரணம்நான்குமாகிய பத்தொன்பதுதத்துவங்களையுமென்க. 'தூயபார்முதலாகவேகுடிலையின்றுணையு மேயவண்டமும்' என மேல் சூரனமைச்சியற்படலத்துங்கூறினார். (௧௫௧)

ஆதி யாகிய குடிலையு மைவகைப் பொறியும்
வேதம் யாவையுந் தந்திரப் பன்மையும் வேறு
வோத நின்றிடு கலைகளு மவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையுங் குமரவேள் பொருவிலா வுருவம்.

இ—ள்: ஆதி ஆகிய குடிலையும்—எவற்றிற்கும் முதலிலுச்சரிக்கப்படுவதாகிய பிரணவமும், ஐவகை பொறியும்—பஞ்சாட்சரமும், வேதம் யாவையும்—நான்குவேதங்களும், தந்திர பன்மையும்—இருபத்தெட்டாகமங்களும், வேறு ஆ ஓத நின்றிடு கலைகளும்—வேறாகச்சொல்லப்படுகின்ற புராணமுதலியநூல்களும், அவ்வவற்று உணர்வு ஆம் போதம் யாவையும்—அவ்வந்நூல்களினுணர்ச்சியாகிய ஞானங்கள்முழுவதும், குமரவேள் பொரு இலா உருவம்—முருகக்கடவுளது ஒப்பில்லாதவடிவமாம் எ—று.

இவையெல்லாம் குமரவேளதுபிரபாவத்தையேவிளக்குவனவென்பதுகுறிப்பு. பொறி-எழுத்து. வேதமுதலிய எல்லாநூல்களும் எல்லாமந்திரங்களும் எல்லாவெழுத்துக்களும் பிறவும் பிரணவத்தினின்று தோன்றினவென்று நூல்கள்கூறுதலின், ஆதியாகிய குடிலையென்பதற்கு அவையெல்லாந் தோன்றுதற்கிடனாயிருக்கின்ற பிரணவமெனப் பொருள்கூறினுமாம். வேறாவோதநின்றிடுகலைகளென்பதற்கு இறைவனிலக்கணத்தையும் பிரபாவங்களையுமெடுத்துக்கூறும் ஏனைநூல்களையெல்லாந்தெரிந்துகூறுக. (௧௫௨)

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிக
ளெங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்க
ளெங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவ
மெங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே.

இ—ள்: எங்கணும் செறிந்து அருள் செயும் அறுமுகத்து இறைக்கு—எங்கும்வியாபித்துநின்று (அடியார்க்குக்) கருணையைச்செய்கின்ற ஆறுதிருமுகங்களையுடைய பெருமானுக்கு, எங்கணும் பணி வதனங்கள்—எல்லாவிடங்களிலும் (யாவராலும்) வணங்கப்படுகின்ற திருமுகங்களுண்டு, எங்கணும் விழிகள்—எல்லாவிடங்களிலுந்திருக்கண்களுண்டு, எங்கணும் திரு கேள்விகள்—எல்லாவிடங்களிலுந்திருச்செவிகளுண்டு, எங்கணும் கரங்கள்—எல்லாவிடங்களிலுந் திருக்கைகளுண்டு, எங்கணும் திரு கழல் அடி—எல்லாவிடங்களிலும் வீரக்கழலையணிந்த திருவடிகளுண்டு, எங்கணு வடிவம்—எல்லாவிடங்களிலுந்திருவுருவம் உண்டு எ—று.

எக்கணுமெனற்பாலது எங்கணுமெனவிகாரமாயிற்று. எங்கும்வியாபித்துநிற்றலால் இவ்வாறுகூறினார். (கஙங)

தாம ரைக்கணன் முதலிய பண்ணவர் தமக்கு
மேமு றப்படு மறைக்கெலா மாதிபெற் றியலு
மோமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றாமவன் றன்மையார் வகுப்பார்.

இ—ள்: தாமரைக்கணன் முதலிய பண்ணவர் தமக்கும்—பிரமாமுதலிய தேவர்களுக்கும், ஏமுற படும்—மயங்கத்தக்கதாயிருக்கின்ற, மறைக்கு எலாம்—வேதங்களுக்கெல்லாம், ஆதி பெற்று இயலும்—முதலாதலைப்பெற்றிருக்கின்ற, ஓம் என படும் குடிலையே—ஓமென்றுசொல்லப்படும் பிரணவமே, ஒப்பு இலா முருகன் மா முகத்துள் ஒன்று ஆம்—நிகரற்ற முருகவேளது சிறந்தமுகங்களுளொன்றாகும், (ஆதலின்), அவன் தன்மை யார் வகுப்பார்—அப்பெருமானுடைய பெருமையை யார் கூறவல்லார்? (ஒருவருமில்லை) எ—று.

தேவர்கள் வேதங்களையினிதுபயின்றாராதலிற் சிறப்பும்மைகொடுத்தார். ஏ-தேற்றம். தாமரைக்கணன்-தாமரைக்கண்ணையுடைய திருமாலுமாம். (கஙச)

முக்கண் மூர்த்தியு மாங்கவன் முண்டகா சனனுஞ்
சக்க ரப்படை யண்ணலு மாங்கவன் றானே
திக்குப் பாலருங் கதிர்களு முனிவருஞ் சிறப்பின்
மிக்க தேவரு மாங்கவன் யாவர்க்கு மேலோன்.

இ—ள்: முக்கண் மூர்த்தியும் அவன்—மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரானும் அவரே, முண்டக ஆசனனும் சக்கர படை அண்ணலும் அவன் தானே—தாமரைமலராசனராகிய பிரமதேவரும் சக்கராயுதத்தையேந்திய திருமாலும் அவரே, திக்குப்பாலரும் கதிர்களும் முனிவரும் சிறப்பில் மிக்க தேவரும் அவன்—திசைக்காவலாளர்களும் சூரியசந்திரர்களும் முனிவர்களும் சிறப்பான்மேம்பட்ட தேவர்களும் அவரே, (ஆதலின்), யாவர்க்கும் மேலோன்—அவரே எல்லாரினுஞ்சிறந்தகடவுள் எ—று.

தேற்றேகாரத்தையொவ்வொருதொடர்க்குமியைத்துரைக்க. உம்மை மூர்த்தியும் என்பதில் எச்சம்; யாவர்க்கும் என்பதில் முற்று; ஏனைய எச்சத்தோடு எண். அதிட்டித்தும் வியாபித்தும்நிற்றலால் இவ்வாறுகூறினார். (கஙரு)

ஈட்டு மன்னுயி ரெவற்றிற்கு மிருவினைப் பயனைக்
கூட்டு வானவ னங்கவை துலையெனக் கூடின்

வேட்ட மேனிலைக் கதிபுரி வானவன் மேலாய்க்
காட்டு வான்முதற் றிறமெலா மாங்கவன் கண்டாய்.

இ—ள்: இரு வினை பயனை—புண்ணியமும் பாவமுமாகிய இருவினைகளினதும் பலனை, ஈட்டும் மன் உயிர் எவற்றிற்கும் கூட்டுவோன் அவன்—ஈட்டுகின்ற நிலைபெற்ற ஆன்மாக்களெல்லாவற்றிற்குஞ் சேர்ப்பிப்பவர் அவரே, அவை துலை என கூடின்—அவ்வினைகளிரண்டுந் தராசுநிறைபோல் ஒத்தவழி, வேட்ட மேல் நிலை கதி புரிவான் அவன்—அவ்வான்மாவிரும்பிய மேற்பதவியாகிய முத்தியைக்கொடுப்பவரும் அவரே, மேல் ஆய் காட்டுவான் முதல் திறம் எலாம் அவன்—மேலாயிருந்துகாட்டுவான் முதலிய சாதனசதுட்டயங்களும் அவரே எ-று.

கண்டாய்-முன்னிலையசை; அறிகுதியெனப்பொருள்கூறினுமாம். ஈட்டுதல்-சம்பாதித்தல். துலை-ஆகுபெயர். இருவினையொப்பாகிய பக்குவமெய்தியவழியென்பார் 'அவைதுலையெனக்கூடின்' எனவும், பரமுத்தியென்பார் 'மேனிலைக்கதி' எனவும், காண்பான் முதலியனாற்பொருள்களுள்ளுங் காட்டுவானேமேலாதலின் 'மேலாய்க்காட்டுவான்' எனவும் கூறினார். சாதனசதுட்டயம்: காண்பான் காட்டுவான் காட்சி காட்சிப்பொருள் என்பன. (கரு.சு)

சிறுவன் போலுறுங் குரவனே போலுறுந் திணையிற்
குறியன் போலுறு நெடியவ னாகியுங் குறுகு
நெறியி னின்னணம் வேறுபல் லுருக்கொடு நிலவு
மறிவர் நாடருங் கந்தவே ளாடலா ரறிவார்.

இ—ள்: சிறுவன் போல் உறும்—பாலர்போலவுமிருப்பார், குரவனே போல் உறும்—முத்தோர்போலவுமிருப்பார், திணையில் குறியன் போல் உறும்—(திணையினும்) சிறியவடிவமுடையவர்போலவுமிருப்பார், நெடியவன் ஆகியும் குறுகும்—(மலையினும்) பெரிய வடிவமுடையவராகவுமிருப்பார், நெறியின் இன்னணம் வேறு பல் உரு கொடு நிலவும்—முறைப்படி இவ்வாறு வேறுபலவகையான வடிவங்களைக்கொண்டும் விளங்குவார், அறிவர் நாட அரும் கந்தவேள் ஆடல் ஆர் அறிவார்—ஞானிகளாலுந்தேடியறிதற்கரிய முருகவேளது திருவிளையாடலை யார் அறியவல்லார்? (ஒருவருமில்லை) எ-று.

சிறப்பும்மை தொக்கது. ஒன்றற்கொன்றியைபற்ற பலவேறுவடிவங்களைக் கொள்வரென்பதுபோதர 'நெறியினின்னணம்வேறுபல்லுருக்கொடுநிலவும்' எனவும், இவையெல்லாம் அவரது திருவிளையாட்டேயாமென்பார் "கந்தவேளாடல்" எனவும், அவ்வுண்மை அறிவிற்சிறந்தபெரியோர்க்கும் அவரருளின்றிப்புலப்படாது அறிவிலியாகிய உனக்கு எங்ஙனம்புலப்படுமென்பார் 'ஆரறிவார்' எனவுங் கூறினர். (கரு.எ)

சிவனை தாடலின் வடிவமா யுற்றிடுஞ் செவ்வே
ளவனை தாணையி னன்றியே பெயர்கிலா தணுவு
மெவர வன்றனி யாற்றலைக் கடந்தவ ரிவணீ
தவம யங்கினை யவன்றனி மாயையிற் சார்வாய்.

இ—ள்: செவ்வேள்—முருகக்கடவுள், சிவனது ஆடலின் வடிவம் ஆய் உற்றிடும்—சிவபிரானது லீலாரூபங்களுளொன்றாயிருப்பார், அவனது ஆணையின் அன்றி—அவரதுகட்டளையினாலன்றி, அணுவும் பெயர்கிலாது-அணுவும் அசையமாட்டாது, அவன் தனி ஆற்றலை கடந்தவர் எவர்—அவருடையஒப்பற்றவலிமையைவென்றவர்கள்யாவர்? (ஒருவருமில்லை), இவண் நீ—இவ்விடத்தில் நீ, அவன் தனி மாயையில் சார்வாய்—அவருடைய ஒப்பற்றமாயையில் அகப்பட்டாய் (ஆதலால்), தவ மயங்கினை—மிகமயங்கினாய் எ-று.

உம்மை இழிவு. சிவனதாடலின்வடிவமாயுற்றிடும் என்றதை 'ஈசனேயவனு டலான்மதலையாயினன்காண்' என்று நூற்றிருபத்தொன்பதாஞ்செய்யுளிற் கூறுதலானுமுணர்க. அணு மிகச்சிறுமையும் நொய்மையுமானபொருள். உலகங்கள் தோன்றுதலும் நடத்தலும் பிறவும் கடவுளினுடையமாயையினுலென்று நூல்கள் கூறுதலால் 'அவன்றனிமாயையிற்சார்வாய்' என்றார். (கஙஅ)

எல்லை யில்லதோர் பொருளெலா மாகுறு மியாவு
மல்ல னாகியு மிருந்திடு மருவமு மாகும்
பல்வ கைப்படு முருக்கொளும் புதியரிற் பயிலுந்
தொல்லை யாதியா மணுதியு மாகியே தோன்றும்.

இ—ள்: எல்லை இல்லது ஓர் பொருள் எலாம் ஆகுறும்— அளவிடப்படாத எல்லாப்பொருள்களுமாயிருப்பார், யாவும் அல்லன் ஆகியும் இருந்திடும்—அவை யெல்லாமல்லாதவராயுமிருப்பார், அருவமும் ஆகும்—அருவமாயுமிருப்பார், பல் வகை படும் உரு கொளும்— பலவகையான வடிவங்களைக்கொண்டுமிருப்பார், புதியரில் பயிலும்—புதியவர்போலவுந்தோன்றுவார், தொல்லை ஆதி ஆம்—பழையமுதற்பொருளாகியுமிருப்பார், அணுதி ஆகியும் தோன்றும்— அணுதிப்பொருளாயுங்காணப்படுவார் எ—று.

விசுவரூபனென்பார் 'பொருளெலாமாகுறும்' எனவும், விசுவாதிகனென்பார் 'அல்லனாகியுமிருந்திடும்' எனவும், நரை திரை மூப்பு முதலியனஇன்றிநிற்றலின் 'புதியரிற்பயிலும்' எனவும், உலகந்தோன்றுதற்குமுன்உளராதலின் 'தொல்லையாதியாம்' எனவும், தோற்றமின்மையின் 'அணுதியுமாகி' எனவும் கூறினார். அருவமாயும்உருவமாயுமிருத்தலை கஉஅஞ்செய்யுளில் விளக்கினும். (கஙக)

வாரி வீழ்தரும் புன்னுனித் துள்ளிகண் மான
நேரி லாதமர் குமரவே ணெடியபே ருருவி
னோரு ரோமத்தி னுலப்பிலா வண்டங்க ளுதிக்கு
மார வன்றிரு மேனியின் பெருமையை யறிவார்.

இ—ள்: வாரி வீழ்தரும் புல் நுனி துள்ளிகள் மான—மழைசிந்தப்பெற்றபுல்நுனிகளிற்காணப்படும் நீர்த்துளிகளைப்போல, நேர் இலாது அமர் குமரவேள் நெடிய பேர் உருவின்—ஒப்பில்லாதிருக்கின்ற முருகக்கடவுளது நெடிய பெரிய திருவுருவத்திலுள்ள, ஓர் உரோமத்தின்—ஒரு உரோமத்துவாரத்தினின்றும், உலப்பு இலா அண்டங்கள் உதிக்கும்—அளவிறந்த அண்டங்கள் தோன்றும், அவன் திருமேனியின் பெருமையை அறிவார் ஆர்— அப்பெருமானுடைய திருமேனியின்பெருமையை அறியவல்லார் யாவர்? (ஒருவருமில்லை) எ—று.

மான உதிக்கும் என இயையும். இலகுவாகவும் மிகஅதிகமாகவும்பிறத்தலாற் புன்னுனித்துளியையுவமித்தார். (கசо)

தொலைவி லாவுயிர்த் தொகுதியுந் தொல்லையம் பூதத்
தலகி லண்டமு மேனவு மாதியங் குமர
னிலைகொண் மேனியி னிவர்தரு முரோமத்தி னின்றே
யுலைவை யின்றிமுன் னுதித்திடி மிறுதிநா ளொடுங்கும்.

இ—ள்: தொலைவு இலா உயிர் தொகுதியும்—அழிவில்லாதஉயிர்க்கூட்டங்களும், தொல்லை ஐம் பூதத்து அலகு இல் அண்டமும்—பழைய பஞ்சபூதங்களின் கூறுன அளவிறந்த அண்டங்களும், ஏனவும்—பிறபொருள்களும், ஆதியம் குமரன் நிலை கொள் மேனியின் இவர்தரும் உரோமத்தில் நின்று—முதற்கடவுளாகிய

முருகவேளது நிலையானதிருமேனியிலமைந்துள்ள உரோமங்களினின்றும், உலவை இன்றி — குறைவின்றி, முன் உதித்திடும் — முற்காலத்திலுதிக்கும், இறுதி நாள் ஒடுங்கும் — முடிவுகாலத்தில் (தோன்றியவாறே அவ்வுரோமங்களில்) அடங்கும் எ—று.

என என்றது அவ்வுயிர்க்குவேண்டியபோக்கியப்பொருள்களை. இறக்குந்தோறும்பிறந்துபெருகுகின்றவென்பார் 'தொலைவிலா' எனவும், மூப்பிளமை முதலியவற்றைப்பெறாதமேனியென்பார் 'நிலைகொண்மேனி' எனவும் கூறினர்.()

ஆவ தாகிய வடிவத்தி னகிலமுஞ் செறிந்து
மேவு மந்நிலை யனையனே யல்லது வேறிங்
கேவர் கண்டன ரவ்வுரு வியற்கையை யெங்கோன்
றேவர் யாவர்க்குங் காட்டிடக் கண்டனர் சிறிது.

இ—ள்: ஆவது ஆகிய வடிவத்தின் — அப்படிப்பட்ட முருகக்கடவுளின் திருமேனியில், அகிலமும் செறிந்து மேவும் — எல்லாப்பொருள்களும் அமைந்திருக்கும், அ நிலை — அந்தநிலைமையை, அனையனே அல்லது வேறு எவர் இங்கு கண்டனர் — அந்தக்கடவுளேயன்றிவேறியார் இவ்வுலகத்தில் அறிந்தவர்கள் (ஒருவருமில்லை), அ உரு இயற்கையை — அந்தவிச்சுவரூபத்தின் தன்மையை, எம்கோன் — எங்கள்பெருமான், தேவர் யாவர்க்கும் காட்டிட — எல்லாத்தேவர்களுக்குங்காண்பிக்க, சிறிது கண்டனர் — அற்பமாகக்கண்டார்கள் எ—று.

எ—பிரிநிலை. முருகவேள் தேவர்க்குவிச்சுவரூபங்காட்டியதைத் திருவிளையாட்டுப்படலத்தாலுணர்க. (கசஉ)

தண்ட லில்லதோ ரொன்றொரு மயிர்நுனித் தலையி
னண்ட மெண்ணில கோடிகள் கோவைபட் டசையப்
பண்டு மேருவிற் கந்தவேள் கொண்டதோர் படிவங்
கண்டி லாய்கொலாங் கணிப்பிலாப் பவம்புரி கடியோய்.

இ—ள்: தண்டல் இல்லது ஓர் ஒன்று ஒரு மயிர் நுனி தலையின் — குறைவில்லாமலிருக்கின்ற ஒவ்வொருரோமங்களினதும் நுனியினிடத்து, அண்டம் எண் இல கோடிகள் கோவைபட்டு அசைய — அளவிறந்தகோடியண்டங்கள் நிரையாகப்பொருந்திஅசைய, பண்டு — முன்னாளில், கந்தவேள் மேருவில் கொண்டது ஓர் படிவம் — முருகவேள்மேருமலையிற்கொண்ட வடிவத்தை, கணிப்பு இலா பவம் புரி கடியோய் — அளவிறந்த பாவங்களைச்செய்கின்ற கொடியவனே?, கண்டிலாய்கொல் — பார்த்திலாய்போலும் எ—று.

கண்டால் இழித்துப்பேசாயென்பதும் பாவஞ்செய்தலாலுன்கண்ணுக்குத் தோன்றாதென்பதும் குறிப்பு. (கசங)

அன்று கந்தவே ளமைந்ததோர் பெருவடி வதனு
ளொன்று ரோமத்தி னிருந்ததற் காற்றிடா துனதாய்த்
துன்று மாயிரத் தெட்டெனு மண்டமாந் தொகையு
மின்று நீயது தெரிகிலை சிறுவனென் றிசைத்தாய்.

இ—ள்: அன்று கந்தவேள் அமைந்தது ஓர் பெரு வடிவு அதனுள் — அந்நாளில் (தேவர்கள்காணும்பொருட்டு) முருகக்கடவுள்கொண்ட ஒப்பற்ற பரமேச்சுவரூபத்தில், ஒன்று உரோமத்தின் இருந்ததற்கு — ஒருரோமத்திலடங்கியிருந்த அண்டங்களின்றொகைக்கு, உனது ஆய் துன்றும் ஆயிரத்து எட்டு எனும் அண்டம் ஆம் தொகையும் — உன்னுடைய அரசாட்சியின்பாற்பட்டிருக்கின்ற ஆயிரத்தெட்டென்னுந்தொகைப்பட்ட அண்டங்களெல்லாம், ஆற்றிடாது — போதாது,

இன்றும் நீ அது தெரிகிலை—இன்றுகாறும் நீ அதனையறிந்திலாய், சிறுவன் என்று இசைத்தாய்—பாலனென்று இகழ்ந்தாய் எ--று.

உன்னரசாட்சிக்குட்பட்ட அண்டங்களினுமதிகமான அண்டத்தொகுதி உன்னுலிகழப்பட்ட குமரவேளது ஒவ்வோருரோமங்களினுந் தூங்கினவன்றோ இதனையறியாது என் தருக்குகின்றாய் என்பதாம். (௧௫௪)

அளப்ப ருங்குணத் தாதியா மெம்பிரா னமரர்
தளைப்ப டுஞ்சிறை மாற்றவுஞ் சதுர்முகன் முதலோர்
கொளப்ப டுந்துய ரகற்றவுங் கொடியரை யறுத்து
வளப்ப டும்பரி சுலகெலாம் போற்றவும் வந்தான்.

இ—ள்: அளப்பு அரும் குணத்து ஆதி ஆம் எம்பிரான்- அளவிடுதற்கரிய குணங்களமைந்த முதற்கடவுளாகிய முருகவேள், அமரர் தளை படும் சிறை மாற்றவும்—தேவர்களது விலங்குபூணப்பெற்ற சிறையைநீக்கவும், சதுர்முகன் முதலோர் கொளப்படும் துயர் அகற்றவும்-பிரமாமுதலிய தேவர்கள்கொண்டிருக்கின்ற துன்பத்தைப்போக்கவும், கொடியரை அறுத்து உலகு எலாம் வளப்படும் பரிசு போற்றவும்—துட்டர்களைச்சங்கரித்து உலகங்களெல்லாவற்றையும் வளம்பெறும்பொருட்டுக்காக்கவும், வந்தான்—அவதரித்தார் எ—று.

அறுவகையான இறைமைக்குணங்களையுடையராதலின் 'அளப்பருங்குணத்தெம்பிரான்' என்றார். (௧௫௫)

வாழி யானநின் னாயுளும் வன்மையும் வரமுங்
கேழில் சுற்றமும் படைகளும் வான்றொடக் கிளர்ந்து
பூழி யானுயர் மால்வரைச் சூழலிற் புகுந்த
வூழி மாருதம் போலடு மெம்பிரா னொருவேல்.

இ—ள்: வாழி ஆன நின் ஆயுளும்—வாழ்தலையுடைய உன்னுடையஆயுளையும், வன்மையும்—வலியையும், வரமும்—வரங்களையும், கேழ் இல் சுற்றமும்—ஒப்பில்லாத இனத்தாரையும், படைகளும்—சேனைகளையும், வான் தொட கிளர்ந்து பூழியால் உயர் மால் வரை சூழலில் புகுந்த ஊழிமாருதம் போல்—ஆகாயத்தையளாவவளர்ந்து தூளியினுலுயர்ந்திருக்கின்ற பெரியமலையினிடத்துச் சென்ற பிரசண்டமாருதத்தைப்போல, எம் பிரான் ஒரு வேல்—எங்கள்பெருமானுடைய ஒப்பற்றவேற்படை, அடும்—அழிக்கும் எ---று.

வாழி-தொழிற்பெயர். படை-ஆயுதங்களுமாம். தூளியாலான மலையின்கண் ஊழிக்காற்றுப்புகின் உடனே இருந்தவிடந்தானுந்தெரியாவண்ணம் அழித்துச் செல்லுதல்போல், நுங்குழுவுக்கெதிரே வேலாயுதம்வரின் உடனே உங்களெல்லோரையும் அழிக்கும் என்பதாம். (௧௫௬)

ஆகை யாலிவை யுணர்ந்திலை யிணையிலா தமர்ந்த
வேக நாயக முதல்வனைப் பாலனென் றிகழ்ந்தாய்
சேகு லாவிய மனமுடைக் கற்பிலாச் சிறியோய்
போக போகயா மிவ்வொரு தவற்றையும் பொறுத்தாம்.

இ—ள்: ஆகையால்—ஆதலினால், இவை உணர்ந்திலை—இவ்வுண்மைகளைக் கேட்டறியாமல், இணை இலாது அமர்ந்த ஏகநாயக முதல்வனை—ஒப்பில்லாதிருக்கின்ற முதற்கடவுளாகிய சுப்பிரமணியப்பெருமானை, பாலன் என்று இகழ்ந்தாய்-சிறுவனென்று நிந்தித்தாய், சேகு உலாவிய மனம் உடை கற்பு இலா சிறியோய்—வைரம்பொருந்திய மனத்தையுடைய கற்றறிவில்லாதமூடனே,! போக போ

க-கழிக கழிக, யாம் இவ் ஒரு தவற்றையும் பொறுத்தாம்—நாம் இந்த ஒருபிழையையுஞ்சகித்துக்கொண்டோம் எ-று.

முருகவேளதும் அவரேந்தியபடைகளினதும் இயல்பிங்ஙனமாகவும் அவற்றையறியாமலிகழ்ந்தாய், ஆயினும் இக்குற்றத்தைப்பொருட்படுத்தாது பொறுத்துக்கொண்டோம் என்பதாம். கொண்டதுவிடாதவனென்ஞ்சென்பார் 'சேகுலாவியமனம்' எனவும், பின்னுமிகழ்வாயாகுல் இரங்காது உன்னைத்தாக்குவேனென்பதுபோதர 'இவ்வொருதவற்றையும்பொறுத்தாம்' எனவும் கூறினுர். (கசஎ)

> நொய்ய சொற்களா லெந்தையை யிகழ்ந்தனை நொடிப்பின்
> வெய்ய நாத்துமித் துன்னுயிர் வாங்குவம் விடுத்த
> வைய னாணையன் றாதலி னளித்தன மதனு
> லுய்தி யிப்பகல் வேற்படைக் குண்டியா யுறைவோய்.

இ—ள்: வேற்படைக்கு உண்டி ஆய் உறைவோய்—வேலாயுதத்திற்கு இரையாயிருக்கின்றவனே!, நொய்ய சொற்களால் எந்தையை இகழ்ந்தனை-புன்மையான வசனங்களால் எங்கள் கடவுளை நீ நிந்தித்தாய், (ஆதலின்), நொடிப்பின் உன் வெய்ய நா துமித்து உயிர் வாங்குவம்—ஒருமாத்திரைப்பொழுதினுள் உனது கொடியநாக்கைவெட்டி உயிரைக்கவர்வோம், விடுத்த ஐயன் ஆணை அன்று ஆதலின் அளித்தனம்—அங்ஙனஞ்செய்தல் எம்மையேவிய முருகக்கடவுது கட்டளையன்று ஆதலிஞல்(உயிரைத்)தந்தோம், அதனுல் இ பகல் உய்தி—அதனுல் இத்தினத்தில் உய்ந்திருப்பாய் எ—று.

வேற்படைக்குண்டியாயுறைவோய் என்றதனுல் ஏனைப்படைகள் அவனைக் கொல்லாதென்னும் உட்கிடைதோன்றிற்று. இப்பகலுய்தி என்றதனுல் விரைவிலிறப்பாயென்பதுகுறிக்கப்பட்டது. (கசஅ)

> உறுதி யின்னமொன் றுரைக்குவ நீயுமுன் கிளையு
> மிறுதி யின்றியே யெஞ்சுதல் வேண்டுமே லிமையோர்
> சிறைவி டுக்குதி யிகலினைத் தவிருதி செவ்வே
> ளறைக ழற்றுணை யரணமென் றுன்னியே யமர்தி.

இ—ள்: உறுதி இன்னம் ஒன்று உரைக்குவம்—இன்னுமொருமுடிவுரையைச்சொல்வோம், நீயும் நின் கிளையும் இறுதி இன்றி எஞ்சுதல் வேண்டுமேல்—நீயும் உன்னுடைய சுற்றத்தவர்களும் அழியாது உய்ந்திருக்கவேண்டுமேயாயின், இமையோர் சிறை விடுக்குதி—தேவர்களுடையசிறையைநீக்குவாய், இகலினை தவிருதி—பகையையொழிப்பாய், செவ்வேள் அறை கழல் துணையே அரணம் என்று உன்னி அமர்தி—முருகவேளது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த இரண்டுதிருவடிகளையுமே சரணமென்று சிந்தித்துக்கொண்டிருப்பாய் எ—று.

பிரிநிலையேகாரம்பிரித்துக்கூட்டப்பட்டது. தேவர்பாற்கொண்டிருக்கும் வன்கண்மையும் முருகவேள்பாற்கொண்டிருக்கும்பகைமையுமடங்க இகலெனப்பொதுமையிற்கூறினுர். (கசகூ)

வேறு.

> என்றிவை பலப்பல விகப்பில்பெரு மாயைக்
> குன்றெறி படைக்குரிசில் கொள்கைய தியம்பப்
> புன்மொழில் படைத்துடைய பூரிய னுணர்ந்தே
> கன்றின னுயிர்த்தினைய கட்டுரைசெய் கின்றுன்.

இ—ள்: என்று இவை பலப்பல—என்றிவ்வாறுபலபலவிதமாக், இகப்பு இல் பெரு மாயை குன்று எறி படை குரிசில் கொள்கையது இயம்ப-கடத்தற்கரிய

பெரியமாயங்களில்வல்ல கிரவுஞ்சமலையைப்பிளந்தவேற்படையையேந்திய முருக க்கடவுளது பெருமைகளைக்கூற, புன் தொழில் படைத்து உடைய பூரியன் உண ர்ந்து—எளியதொழில்களைப்பயின் றுள்ள கீழ்மகனாகியசூரபன்மன்கேட்டு, கன் றினன்—கோபித்து, உயிர்த்து—பெருமூச்சுவிட்டு, இனைய கட்டுரைசெய்கி ன்றான்—மேல்வருவனவற்றை முடிவுரையாகக்கூறுவான் எ—று.

கோபமிகுதியாற்பெருமூச்சுவிட்டனனென்க. (கடுo)

கூரெயி றெழாதகுழ விச்சிறுவ னுய்த்த
சாரென நினைந்துனது தன்னுயிர் விடுத்தேன்
பேரலை யவன்பெருமை பின்னுமொழி கின்றாய்
வீரமு முரைக்குதியென் வெய்யசின முன்னாய்.

இ—ள்: கூர் எயிறு எழாத குழவி சிறுவன் உய்த்த சார் என நினைந்து-கூ ர்மையானபற்கடோன்றப்பெறாத சிறுபாலகனனுப்பிய தூதனென்று நினைத்து, உனது தன் உயிர் விடுத்தேன்—உன்னுடைய உயிரைக்கவராதுவிட்டேன், பேர லை—(அங்ஙனம்விடுத்தும்)எழுந்துபோகாது, அவன் பெருமை பின்னும் மொழி கின்றாய்— அவனுடைய மகிமையைப்பின்னுமெடுத்துக்கூறுகின்றாய், என் வெய் ய சினம் உன்னாய்—எனது கொடுங்கோபத்தைச்சிந்தியாது, வீரமும் உரைக்கு தி—வீரவசனங்களையும்பேசுகின்றாய் எ—று.

சாரனென்னுஞ்சொல்ஈறுகெட்டது. உன்னைக்கொன்றால் வசையுண்டாமே யன்றிப்புகழுண்டாகாமையினென்பான் 'சிறுவனுய்த்தசாரெனநினைந்து' என வும், தண்டனைசெய்வேனென்பதை நினையாதென்பான் 'என்வெய்யசினமுன் னாய்' எனவும் கூறினான். (கடுக)

கொஞ்சுமொழி கொண்டகுழ விச்சிறுவன் மேலா
லெஞ்சலில தோர்முதல்வ னேயெனினு மாக
வஞ்சிடுவ னோசிறிது மண்டநிலை தோறும்
விஞ்சியமர் பண்ணவர்கள் யாவரையும் வென்றேன்.

இ—ள்: கொஞ்சும் மொழி கொண்ட குழவி சிறுவன்—நிரம்பாமென்சொ ல்லையுடைய குழந்தையாகியபாலகன், மேல் ஆய் எஞ்சல் இலது ஓர் முதல்வ ன் எனினும் ஆக—சிறப்புற்று(இறைமைக்குணத்திற்சிறிதும்)குறைவுபடாதிருக் கின்ற கடவுளாயிருந்தாலும் இருக்க, அண்ட நிலை தோறும் விஞ்சி அமர் பண் ணவர்கள் யாவரையும் வென்றேன்—ஒவ்வோரண்டங்களிலுமுள்ள இருப்பிடங்க டோறும் மிகுதியாயிருக்கின்ற தேவர்களெல்லோரையும் வெற்றிகொண்டவ னாகிய நான், சிறிதும் அஞ்சிடுவனோ—சற்றாயினும்பயப்படுவேனோ? எ—று.

ஏ அசை. ஓவும் எனினுமென்றஉம்மையும் எதிர்மறை. (கடுஉ)

சேண்புரம தாகியமர் தேவர்சிறை தன்னை
வீண்படு கனாவினும் விடுக்கநினை கில்லே
னேண்பல பகர்ந்தனை யெனக்கெதி ரிருந்தே
காண்பன தெலாமொரு கணத்திலினி யென்றான்.

இ—ள்: சேண் புரமது ஆகி அமர் தேவர் சிறை தன்னை—ஆகாயவுலகத் தையிருப்பிடமாகக்கொண்டிருக்கின்ற தேவர்களது சிறையை, வீண் படு கனாவி னும் விடுக்க நினைகில்லேன்—வீணாய்முடிகின்றகனவிற்றானும் விடநினையேன், (அதுநிற்க), எனக்கு எதிர் இருந்து—என்முன்னிருந்துகொண்டு, ஏண் பல பக ர்ந்தனை—பலஇறுமாப்புவசனங்களைப்பேசினை, அது எலாம்—அத்தன்மையெல்

லாவற்றையும், இனி ஒரு கணத்தில் காண்பன்—இனிஒருகணப்பொழுதினுட் பார்ப்பேன், என்றான்—என்றுகூறினான் எ—று.

உம்மை-இழிவு. நனவிற்பயன்படாமையின் 'வீண்படுசனு' என்றான்.

கொற்றமிகு சூரனிவை கூறியய னின்ற
வற்றமறு மானவரு ளாயிரரை நோக்கி
யொற்றுமைசெய் தோனுயி ரொறுத்தல்பழி வல்லே
பற்றியிவ னைச்சிறை படுத்திடுதி ரென்றான்.

இ—ள்: கொற்றம் மிகு சூரன் இவை கூறி—வெற்றிமிகுந்த சூரபன்மன் இவ்வசனங்களைச்சொல்லி, அயல் நின்ற அற்றம் அறும் மானவருள் ஆயிரரை நோக்கி—தன்பக்கத்தில்நின்ற குற்றமற்ற வீரர்களுள் ஆயிரமென்னுந்தொகையானரைப்பார்த்து, ஒற்றுமை செய்தோன் உயிர் ஒறுத்தல் பழி— தூதுவந்தவனுடைய உயிரைக்கவருதல் வசையாகும், இவனை வல்லே பற்றி-இவனை விரைவிற்பிடித்து, சிறை படுத்திடுதிர்—சிறையில்வைப்பீர்கள், என்றான்—என்றுகட்டளைசெய்தான் எ—று.

ஒற்றுமை- தூதுத்தன்மை. (௧௫௪)

என்னலுமவ் வாயிரரு மேற்றெரி விழித்துத்
துன்னுகன லைப்புகை சுலாவுவது மானப்
பொன்னின்மிளிர் பீடிகை யமர்ந்தபுகழ் வீரன்
றன்னைவளை குற்றனர் தருக்கினொடு பற்ற.

இ—ள்: என்னலும்—என்றுசூரபன்மன் கட்டளைசெய்தவுடன், அவ் ஆயிரரும்—அந்த ஆயிரம்வீரர்களும், ஏற்று—உடன்பட்டு, எரி விழித்து— அக்கினிப்பொறிகள்தோன்றப்பார்த்து, துன்னு கனலை புகை சுலாவுவது மான— சொலித்தெரிகின்ற அக்கினியைப்புகைவளைந்தாற்போல, பொன்னின் மிளிர் பீடிகை அமர்ந்த புகழ் வீரன் தன்னை பற்ற—பொன்னாலாகிய ஆசனத்திலிருக்கின்ற கீர்த்தியையுடையவீரவாகுதேவரைப்பிடிக்குமாறு, தருக்கினொடு வளை குற்றனர்—கர்வத்துடன் சூழ்ந்தார்கள் எ—று.

புகைவளைதலால் அக்கினிக்கு யாதோரிடையூறுமுண்டாகாமைபோல அசுரர்வளைதலால் வீரவாகுதேவர்க்கு யாதுந்தீங்குநேராதென்பது குறிப்பு. நிரம்பற்றியும் உவமை. (௧௫௫)

மிடற்றகுவர் சூழ்வரலும் வீரனெழுந் தன்னோர்
முடிச்சிகையொ ராயிரமு மொய்ம்பினொரு கையாற்
பிடித்தவுணர் மன்னனமர் பேரவை நிலத்தி
னடித்தனனொ டிப்பிலவ ராவிமுழு துண்டான்.

இ—ள்: மிடல் தகுவர் சூழ்வரலும்—வலிமைபொருந்திய அசுரர்கள் வளைந்தவுடன், வீரன் எழுந்து—வீரவாகுதேவர் எழும்பி, அன்னோர் முடி சிகை ஓராயிரமும் ஒரு கையால் மொய்ம்பின் பிடித்து—அவர்களது தலைகளிலுள்ள ஆயிரங்குடுமிகளையும் ஒருகையினால் இறுகப்பற்றி, அவுணர் மன்னன் அமர் பேர் அவை நிலத்தின் அடித்தனன்—அசுரர்க்கரசனாகிய சூரபன்மனிருக்கின்ற பெரிய சபாமண்டபத்தினிலத்தில் மோதி, நொடிப்பில் அவர் ஆவி முழுது உண்டான்- கணப்பொழுதினுள் அவர்களுடைய உயிர்முழுவதையுங்கவர்ந்தார் எ—று.

உண்டான்-இலக்கணை. (௧௫௬)

மார்புடைய மொய்ம்பொசிய வார்குருதி சோர
வோர்புடையின் யாவரையு மொல்லைதனி னட்டே

சூர்புடையின் முன்னநனி துன்னும்வகை வீசிச்
சீர்புடைய நம்பியிவை செப்பல்புரி கின்றான்.

இ—ள்: மார்பு உடைய—நெஞ்சு உடையவும், மொய்ம்பு ஒசிய—புயங்கள் முரியவும், வார் குருதி சோர—நீண்ட இரத்தநீர் சிந்தவும், ஓர் புடையின் யாவரையும் ஒல்லைதனின் அட்டு—ஓரடியினால் எல்லோரையும் விரைவிலழித்து, சூர் புடையின் முன்னம் நனி துன்னும் வகை வீசி—சூரபன்மனது பக்கத்திலும் முன்னும் மிகநெருக்கமாய்விழும்படி எறிந்து, சீர்பு உடைய நம்பி—சிறப்பையுடைய வீரவாகுதேவர், இவை செப்பல்புரிகின்றான்—இவ்வசனங்களைச்சொல்வார் எ—று.

சீர்பு என்பதிற் பு பகுதிப்பொருள்விகுதி. (௧௫௭)

எந்தைநெடு வேலுனை யினித்தடித றிண்ண
மந்தமுறு முன்னமுனை தைம்புலனும் வெஃக
வந்தபல துப்புரவும் வல்லைபெரி தார்ந்தே
புந்திதெளி வாயமர்தி போந்திடுவ னென்றான்.

இ—ள்: எந்தை நெடு வேல் உனை இனி தடிதல் திண்ணம்—எம்பெருமானுடைய நெடியவேற்படை உன்னை இனிக்கொல்வது நிச்சயம், அந்தம் உறும் முன்னம்—இறக்கமுன், உனது ஐம் புலனும் வெஃக வந்த பல துப்புரவும்—உன்னுடைய ஐம்புலன்களும் விரும்பத்தக்கனவாயிருக்கின்ற பல அநுபவங்களையும், வல்லை பெரிது ஆர்ந்து—விரைவில்நன்றாக அநுபவித்து, புந்தி தெளிவாய் அமர்தி—மனத்தெளிவுபெற்றிருப்பாய், போந்திடுவன்—யான்போகின்றேன், என்றான்—என்று கூறினார் எ—று.

முன்னம் என்பதில் அம் சாரியை. உலகவின்பங்களின்மனம்பற்றினார் இறக்குமுன்வேண்டியவின்பங்களை யநுபவித்தறமுடிக்கநினைத்தலியல்பாதலின் 'அந்தமுறுமுன்......பெரிதார்ந்து' எனவும், இனி இருந்தாலென் இறந்தாலென் என மனத்தையொருப்படுத்தியென்பார் 'புந்திதெளிவாய்' எனவும் கூறினார். (௧௫௮)

சீயவிற லண்ணலிவை செப்பியகல் காலை
யாயவ னிருந்திடு மரித்தவிசு தானு
மீயுற வெழுந்துவிசும் பிற்றலையி னேகி
மாயையென வொல்லையின் மறைந்துபடர்ந் தன்றே.

இ—ள்: சீய விறல் அண்ணல் இவை செப்பி அகல் காலை—சிங்கத்தைநிகர்த்த வலியையுடைய வீரவாகுதேவர் இவற்றைக்கூறி மீண்டுசெல்லும்பொழுது, ஆயவன் இருந்திடும் அரி தவிசு தானும்—அவனிருந்த சிங்காசனமும், மீ உற எழுந்து—மேலாகக்கிளர்ந்து, விசும்பிற்றலையின் ஏகி—ஆகாயத்தினிடத்துச்சென்று, மாயை என ஒல்லையில் மறைந்து படர்ந்தன்று—மாயம்போல விரைவாகமறைந்துபோயிற்று எ—று.

படர்ந்தன்று-றுவ்விகுதியீற்றுவினைமுற்று. மாயையென- மாயத்தான்வந்த பொருள் சிறிதுநேரத்துண்மறைவதுபோல. (௧௫௯)

அவைபுகுபடலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௬௧௯.

சதமுகன் வதைப்படலம்.

வீரவாகுதேவர் சதமுகனென்னுமசுரனைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சூரபன்மன் ஆயிரவருமிறந்ததைக்கண்டு சதமுகனென்பானையழைத்து வீரவாகுதேவரைப்பற்றிவருமாறனுப்ப, அவன் இலக்கவீரருடன்சென்று அவரையெதிர்த்தான். வீரவாகுதேவர் அவ்வீரர்களையும் அவனையும் கொன்றார் என்பதாம்.

ஒண்ணில வெயிற்றின ரோராயிரரை யட்டே
யெண்ணல னவைக்கள மிகந்துபடர் காலைக்
கண்ணினழல் காலும்வகை கண்டுபுடை யாக
நண்ணுசத மாமுகனை நோக்கிநவில் கின்றான்.

இ--ள்: ஒள் நிலவு எயிற்றினர் ஓராயிரரை அட்டு—(வீரவாகுதேவர்) ஒளிபொருந்திய பிறையைநிகர்த்த வக்கிரதந்தங்களையுடைய ஆயிரம்வீரர்களையுமழித்து, எண்ணலன் அவைக்களம் இகந்து படர் காலை—பகைவனாகிய சூரபன்மனது சபையினின்றும்நீங்கிப்போகும்பொழுது, கண்ணின் அழல் காலும் வகை கண்டு—(அந்தச்சூரபன்மன்) கண்களினின்றும் நெருப்புப்பொறிகள்சிந்தும்படி அந்நிகழ்ச்சியைப்பார்த்து, புடை ஆக நண்ணு சத மா முகனை நோக்கி—பக்கத்தினிற்கின்ற சதமுகனென்னுமசுரனைப்பார்த்து, நவில்கின்றான்—(பின்வருமாறு)சொல்வான் எ—று. (க)

ஆறுமுக னாளிவ னுயிரரை யிங்ஙன்
கோறல்புரிந் தானெனது கொற்றமுழு தெள்ளி
வேறலுடை யோர்களென மேன்மைபல செப்பிச்
சேறல்புரி வான்றவிசு மும்பரிடை செல்ல.

இ—ள்: ஆறுமுகன் ஆள் இவன்—முருகவேளனுப்பிய தூதனாகிய இவன், ஆயிரரை இங்ஙன் கோறல் புரிந்தான்—ஆயிரம்வீரர்களை இச்சபையிற்கொன்று, எனது கொற்றம் முழுது எள்ளி—எனதுவெற்றிமுழுவதையும் இகழ்ந்துபேசி, வேறல் உடையோர்கள் என பல மேன்மை செப்பி—வெற்றியுள்ளவர்களைப்போலப் பலமிடுக்குரைகளைக்கூறி, தவிசும் உம்பர் இடை செல்ல—தானிருந்த ஆசனமும் ஆகாயமார்க்கத்திற்கிளர்ந்துபோக, சேறல்புரிவான்—போதலைச்செய்வான் எ—று.

ஐ-சாரியை. (உ)

ஒட்டியநம் வீரரை யொறுத்தகல்வ னேனும்
விட்டதொரு தூதனொடு வெஞ்சம ரியற்றி
யட்டல்பழி யாகுமவ னாற்றலை யடக்கிக்
கட்டிவிரை வால்வருதி யெனக்கழற லோடும்.

இ—ள்: ஒட்டிய நம் வீரரை ஒறுத்து அகல்வனேனும்—(அவன்)நம்மைச்சேர்ந்த வீரர்களைக்கொன்று செல்கின்றானாயினும், விட்டது ஒரு தூதனொடு வெம் சமர் இயற்றி அட்டல் பழி ஆகும்—ஒருவனாலேவப்பட்ட தூதனுடன் கொடியபோரைச்செய்து கொல்லுதல்வசையாம், அவன் ஆற்றலை அடக்கி—அவனுடையவலிமையையடக்கி, கட்டி—பிடித்துக்கட்டி, விரைவால் வருக—விரைவிற்கொண்டுவருவாய், என கழறலோடும்—என்றுசொல்லியவுடன் எ—று. (ங)

சூற்குல முகிற்பொருவு சூரனடி தாழா
வேற்கும்விடை பெற்றிசைவி னேகுதல் புரிந்தா
னற்கடலு மேவினு நதுப்பரிய வூழிக்
காற்கனலி னோதைதொடர் காட்சியது மான.

இ—ள்: சூல் குல முகில் பொருவு சூரன் அடி தாழா—கருக்கொண்டகூட்டமானமேகத்தைப்போன்ற [கருநிறத்தையுடைய] சூரபன்மனது பாதங்களைவணங்கி, ஏற்கும் விடை பெற்று—தகுந்த அனுமதியைப்பெற்று, இசைவின்—மனவொருப்பாட்டுடன், நால் கடலும் மேவினும் நதுப்பு அரிய ஊழி கால் கனலின் ஓதை தொடர் காட்சியது மான—நாற்றிசைக்கடல்களும் ஒருங்குகூடிப்பெருகி வந்தாலுந்தணித்தற்கரிய வடவாமுகாக்கினியிற் பிரசண்டமாருதந்தொடர்ந்துசெல்லுந்தோற்றத்தைப்போல, ஏகுதல் புரிந்தான்—சென்றான் எ—று.

ஊழிக்காற்கனல்-ஊழிக்காலத்திலெழுகின்றஅக்கினி. ஓதை-காற்று. மனமகிழத்தக்கஇன்சொற்களைக்கூறினனாதலின் 'ஏற்கும்விடைபெற்று' என்வும், தணித்தற்கரியபெருஞ்சீற்றத்துடன் வேகமாய்நடந்தானாதலின் 'ஊழிக்காற்கனலினோதைதொடர்காட்சியதுமான—ஏகுதல்புரிந்தான்' எனவும் கூறினார். (௪)

ஏகுசத மாமுக னிலக்கமற வீரர்
பாகம்வர வெண்ணில்படை பாணிமிசை பற்றி
வேகமொடு சென்றுதனி வேலன்விடு வீர
வாகுவினை யெய்தியொரு மாற்றமறை கின்றான்.

இ—ள்: ஏகு சத மா முகன்—அவ்வாறுசென்ற சதமுகன், இலக்கம் மற வீரர் பாகம் வர—வன்கண்மையையுடைய இலக்கம்வீரர்கள்பக்கத்திற்சூழ்ந்துவர, எண் இல் படை பாணி மிசை பற்றி—அளவிறந்தபடைக்கலங்களைக்கையிலேந்தி, வேகமொடு சென்று—விரைந்துபோய், தனி வேலன் விடு வீரவாகுவினை எய்தி—ஒப்பற்ற முருகவேளனுப்பிய தூதராகிய வீரவாகுதேவரையணுகி, ஒரு மாற்றம் அறைகின்றான்—ஒருவசனத்தைச்சொல்வான் எ—று. (௫)

காவல்பல நீங்கிவரு கள்வவுல குள்ளோ
ரேவரும் வியப்பவரு மெங்களிறை முன்னம்
மேவினை யிகழ்ந்துசில வீரருயிர் வௌவிப்
போவதெவ னில்லுனது போர்வலி யழிப்பேன்.

இ—ள்: காவல் பல நீங்கி வரு கள்வ—பலகாவல்களையெல்லாங்கடந்துவந்த திருடனே!, உலகு உள்ளோர் எவரும் வியப்ப வரும் எங்கள் இறை முன்னம் மேவினை—உலகத்திலுள்ளாரனைவரும்புகழ வாழுகின்ற எங்களரசனுக்குமுன்னே போய், இகழ்ந்து—அவனைநிந்தித்து, சில வீரர் உயிர் வௌவி போவது எவன்—சிலவீரர்களதுஉயிரையுங்கவர்ந்துசெல்வதெங்கே?, நில்—நிற்பாய், உனது போர் வலி அழிப்பேன்—உன்னுடையபோர்வலியைக்கெடுப்பேன் எ—று.

எச்சவும்மை தொக்கது. (௬)

பட்டிமை யுருக்கள்கொடு பாறலரி தாசை
யெட்டுள பரப்பதனுள் யாண்டகல்வை யேனும்
விட்டிடுவ னோவென விளம்பிவரி மெய்திக்
கிட்டுதலும் வீரனிது கேட்டன னெதிர்ந்தான்.

இ—ள். பட்டிமை உருக்கள் கொடு பாறல் அரிது—(நீ இனி) மாறுவேடங்களைக்கொண்டு தப்பிப்போதல்கூடாது, ஆசை எட்டு உள பரப்பு அதனுள் யாண்டு அகல்வையேனும்—எட்டுத்திக்குகளையெல்லையாகவுடைய நிலப்பரப்பினுள் எங்

கேபோனாலும், விட்டிடுவேனோ—தப்பவிடுவேனோ?, என விளம்பி—என்றுகூறி, வெரிந் எய்தி கிட்டுதலும்—முதுகுப்பக்கத்திற்போய்நெருங்க, வீரன்—வீரவாகுதேவர், இது கேட்டனன் எதிர்ந்தான்—இவ்வசனத்தைக்கேட்டு எதிர்த்தார் எ—று.

ஓ-எதிர்மறை. பின்றொடர்ந்தென்பார் 'வெரிநெய்தி' எனவும், அவனுக்கெதிர்முகமாய்த்திரும்பினரென்பார் 'எதிர்த்தான்' எனவும்கூறினார். (எ)

வேறு.

கொற்ற வேலுடை யண்ணறன் மொழியினைக் கொண்டில னிகழ்ந்தென்
பற்ற வாயிரர் தங்களை விடுத்தலும் படுத்தனன் பெயர்காலை [னைப்
மற்று மீதொரு வயவனை யுய்த்தனன் மன்னவ னிவனாவி
செற்று மாநக ரந்தனை யழித்தனன் செல்லுவ னினியென்றான்.

இ—ள்: மன்னவன்—சூரபன்மன், கொற்ற வேல் உடை அண்ணல் தன் மொழியினை கொண்டிலன்-வெற்றிபொருந்தியவேற்படையையுடைய முருகக்கடவுளது கட்டளையை ஏற்றுக்கொள்ளாதவனாய், இகழ்ந்து—நிந்தித்து, என்னை பற்ற ஆயிரர் தங்களை விடுத்தலும்—என்னைப்பிடிக்கும்படி ஆயிரம்வீரர்களையேவ, படுத்தனன் பெயர் காலை—யான் அவர்களைக்கொன்றுசெல்லும்பொழுது, மற்றும் ஈது ஒரு வயவனை உய்த்தனன்—பின்னும் இந்தஒருவீரனை ஏவினான், (ஆதலின்), இனி—மேல், இவன் ஆவி செற்று—இவனுடையஉயிரைக்கொன்று, மாநகரம் தனை அழித்தனன்—பெரியஇந்தநகரத்தையுமழித்து, செல்லுவன்—போவேன், என்றான்—என்றுசிந்தித்தார் எ—று.

கோபமூட்டுதலால் நகரத்தையுமழிக்கத்துணிந்தாரென்க. (அ)

கருதி யின்னணஞ் சதமுக னெனப்படு காவலன் றனைநோக்கிக்
குருதி வேலுடைப் பண்ணவ னடிமனங் கொண்டு திண் டிறல்வாகு
பொருத லுன்னியே யீண்டறை கூவினை பொள்ளெனப் படையோடு
வருதியாலெனத் தெள்விளி யெடுத்தனன் மறலிக்கு மிறைபோல்வான்.

இ—ள்: மறலிக்கும் இறை போல்வான்-(உயிரெடுத்தலில்) யமனுக்குந்தலைவர்போன்றவராகிய, திண் திறல் வாகு—வீரவாகுதேவர், இன்னணம் கருதி—இவ்வாறுசிந்தித்து, குருதி வேல் உடை பண்ணவன் அடி மனம் கொண்டு- இரத்தந்தோய்ந்த வேற்படையையுடையமுருகவேளது திருவடிகளைத்தியானித்து, சதமுகன் என படு காவலன் தனை நோக்கி—சதமுகனென்றுசொல்லப்படுகின்ற அசுரத்தலைவனைப்பார்த்து, பொருதல் உன்னி ஈண்டு அறைகூவினை—போர்செய்யநினைத்து இப்பொழுது அழைத்தாய், பொள் என படையோடு வருதி—விரைவாகச்சேனைகளுடன்வருவாய், என—என்று, தெள்விளி எடுத்தனன்—பேரொலியுடன் கூறினார் எ—று.

அறைகூவுதல்-போர்க்கழைத்தல். தெள்விளி-மகிழ்ச்சியோடுசெய்யும்ஆரவாரம். யமனாற்கவர்தற்கியலாதஉயிரையுங்கவரவல்லாராதலின் 'மறலிக்குமிறைபோல்வான்' என்றார். (கூ)

எல்லை யன்னதிற் சதமுகற் சூழ்தரு மிலக்கரு மெதிரூன்றி
வில்லு மிழ்ந்திடு வெஞ்சரந் தொடுத்தனர் வேற்படை விடுகின்றார்
கல்லெ லும்படி நேமிக ளுருட்டினர் கப்பணஞ் சிதறுற்றார்
வல்லை முத்தலைப் படையெழ வோச்சினர் மழுக்கொடே யெறிகின்றார்.

இ—ள்: எல்லை அன்னதில்—அப்பொழுது, சதமுகன் சூழ்தரும் இலக்கரும் எதிரூன்றி—சதமுகனைச்சூழ்ந்துநின்றஇலக்கவீரரும் எதிர்ப்பட்டுநின்று, வீ

ல் உமிழ்ந்திடு வெம் சரம் தொடுத்தனர்—வில்லினின்றுமேவப்படுகின்ற கொடிய பாணங்களைப் பூட்டிச்செலுத்தினார்கள், வேற்படை விடுகின்றார்-வேலாயுதங்களைச்செலுத்தினார்கள், கல் எனும் படி நேமிகள் உருட்டினர்—கல்லென்னுங்குறிப் பொலிதோன்றச் சக்கராயுதத்தைச்சுழற்றிவிட்டார்கள், கப்பணம் சிதறுகின்றார்—கைவேல்களைச்செலுத்தினார்கள், வல்லை முத்தலைப்படை எழு ஒச்சினர்—விரைவாகச்சூலப்படைகளையும் எழுப்படைகளையுஞ்செலுத்தினார்கள், மழு கொடு எறிகின்றார்—மழுப்படைகளையுமெடுத்துச்செலுத்தினார்கள் எ—று. (௧0)

அணிகள் பட்டவர் விட்டவிப் படைவகை யண்ணன்மேற் புகலோடுந்
துணிகள் பட்டன நெரிந்தன வெரிந்தன துகளுமாய்ப் போயிற்றான்
மணிகள் பட்டிடு மிருஞ்சிறைக் கலுழர்க்குள் வலியன்மேற் படுநொய்ய
பணிகள் பட்டன போன்றன வேறிலை படியெடுத் துரைத்தற்கே.

இ—ள்: அணிகள் பட்டவர் விட்ட இ படைவகை—நிரைபட்டுநின்ற இலக்கவீரர்களுஞ்செலுத்திய இந்த ஆயுதவகைகளெல்லாம், அண்ணல் மேல் புகலோடும்-வீரவாகுதேவரதுமேனியிற்பட்டவுடன், துணிகள் பட்டன-சில துண்டாய்முரிந்தன, நெரிந்தன—சிலநெரிந்துபோயின, எரிந்தன—சில எரிந்துபோயின, துகளும் ஆய் போயிற்று—சிலதுகளாயும்போயின, (ஆதலின்), மணிகள் பட்டிடும் இரும் சிறை கலுழர்க்குள் வலியன் மேல் படும் நொய்ய பணிகள் பட்டன போன்றன—அழகுபொருந்திய பெரியசிறகையுடையகருடர்களுக்கரசன்மேற்சென்ற வலியற்ற பாம்புக்கூட்டங்களழிந்தாற்போன்றன, எடுத்து உரைத்தற்கு படி வேறு இலை—எடுத்துச்சொல்லுதற்கு உவமைவேறில்லை எ—று.

படைகள்கூர்மையுடன்வேகமாய்ச்சென்று வீரவாகுதேவர்மேற்பட்டவுடன் மழுங்கிவீழ்தலின் இவ்வுவமைதக்கது என்பதாம். (௧௧)

இலக்க மாகிமுன் னின்றபே ராண்டகை யிவர்செய லினைநோக்கி
யிலக்க மாய்முழு துலகமுந் துளக்கியே யிராயிரப் பத்தென்னு
மிலக்க மாமுடி கொண்டதோர் சூளிகை யிம்மெனப் பறித்தேந்தி
யிலக்க மாகியே யெதிர்பொரு தானவர் தங்கண்மே லெறிந்திட்டான்.

இ—ள்: இலக்கம் ஆகி முன் நின்ற பேர் ஆண்டகை—இலக்காகஎதிரேநின்ற சிறந்தவீராகியவீரவாகுதேவர், இவர் செயலினை நோக்கி—இந்தஅசுரர்களது செய்கையைப்பார்த்து, இலக்கமாய்-விளக்கமாகி, முழுது உலகமும் துளக்கி—எல்லாவுலகங்களையும்நடுங்கச்செய்து, இராயிர பத்து என்னும் இலக்க மா முடி கொண்டது ஓர் சூளிகை—இருபதினாயிரமென்னுந்தொகைப்பட்ட பெரியசிகரங்களைக்கொண்டுநின்ற ஒரு சூளிகையை, இம்மென பறித்து ஏந்தி—விரைவிற்பிடுங்கிக்கையிற்றாங்கி, இலக்கம் ஆகி எதிர் பொரு தானவர் தங்கள் மேல் எறிந்திட்டான்—இலக்கமென்னுந்தொகைப்பட்டு எதிரிற்போர்செயதுநின்ற அசுரர்கள் மேல் வீசினார் எ—று.

ஆயுதங்கள்வரும்போது பின்கொடாதுநின்றாரென்பார் 'இலக்கமாகிமுன்னின்றபேராண்டகை' எனவும், பெருஞ்சினமுற்றெனபார் 'இலக்கமாய்' எனவும் கூறினார். முழுதுலகமுந்துளக்கியது அதிர்ச்சியால். (௧௨)

எதிலான்விடு சூளிகை சிறகர்பெற் றிறந்துவீழ் மேருப்போன்
மீது சென்றம ரியற்றியே நின்றிடும் வெய்யவர் மிசையெய்திச் [டே
தாது முற்றவுஞ் சாந்துபட் டொருங்குறத் தனுவெலாஞ் சிதைந்திட்
டோத நீர்முகி லார்ப்பொடு புவிக்கண்வீழ்ந் துடைந்தன வுதிராகி.

இ—ள்: ஏது இலான் விடு சூளிகை—குற்றமில்லாத வீரவாகுதேவரெறிந்த சூளிகையானது, சிறகர் பெற்று இறந்து வீழ் மேரு போல்—சிறகுகளைப்பெற்றுப் பறந்துவிழுகின்ற மேருமலையைப்போல, மீது சென்று அமர் இயற்றி நின்றிடும் வெய்யவர் மிசை எய்தி—எதிர்சென்றுபோரைச்செய்துநின்ற கொடியவர்களாகிய அசுரர்கள்மேற்போய், தாது முற்றவும் சாந்துபட்டு ஒருங்கு உற—எழுவகைத்தாதுக்களுங்குழம்பாயொன்றுபடும்படி., தனு எலாம் சிதைத்திட்டு—சரீர முழுவதையுமழித்து, ஓத நீர் முகில் ஆர்ப்பொடு—கடனீரைப்பருகிய மேகத்தைப்போன்ற பேரொலியுடன், புவிக்கண் வீழ்ந்து—பூமியில் விழுந்து, உதிர் ஆகி உடைந்தன—தூளாகியுடைந்தது எ—று.

இறத்தல்-சஞ்சரித்தல். எழுவகைத்தாதுக்களாவன: தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்பன. ஏதம் கடைக்குறையாய்நின்றது; ஏதிலான் அசுராதுபகைவனென உரைப்பர்சிலர். (௧௫)

கொடிசெ றிந்திடு சூளிகை தன்னுட னவுணர்தங் குழாங் கொண்ட
முடிசி தைந்தன நாசிநீ டலையெலா முடிந்தன முடிவில்லா
வடிவ மைந்திடு கன்னகூ டத்தொகை மாய்ந்தன நிலைகொள்ளு
மடித கர்ந்தன கொடுங்கையு மாண்டன வொழிந்தவு மழிவுற்ற.

இ—ள்: கொடி செறிந்திடு சூளிகை தன் உடன் அவுணர் தம் குழாம் கொண்ட முடி சிதைந்தன—கொடிகள்நெருங்கப்பெற்றசூளிகையுடன் அசுரர்களதுகூட்டம் கொண்டிருந்த முடிகள் சிதைந்தன, நாசி நீள் தலை எலாம் முடிந்தன—மூக்குகளும் நெடிய தலைகளுமெல்லாம்அழிந்தன, முடிவு இல்லா வடிவு அமைந்திடு கன்னகூட தொகை மாய்ந்தன—அளவிடப்படாத அழகுபொருந்திய காதுக்கூட்டங்களுமழிந்தன, நிலை கொள்ளும் அடி தகர்ந்தன—நிற்றற்குக்கருவியாகிய கால்களும் ஒடிந்தன, கொடும் கையும் மாண்டன—கொடிய கைகளும் அழிந்தன, ஒழிந்தவும் அழிவுற்ற—பிறவுறுப்புக்களும்அழிந்தன எ—று.

சூளிகையின் சிகரங்களும் அவுணரதுமுடிகளும் அழிந்தன என்பார் 'சூளிகை தன்னுடன்அவுணர்தங்குழாங்கொண்ட முடிசிதைந்தன' என்றார். கன்னகூடம்-காதாகியகூடம். உள்ளேவெளியுளதாக மூடப்பட்டிருக்குமிடத்தைக்கூடமென்பர். (௧௬)

இலக்கர் தம்மையுஞ் சூளிகை தன்னுட னிமைப்பொழு தினிலட்டு
நிலக்கண் வீரனின் றிடுதலுஞ் சதமுக னிரைவிழி கொடுநோக்கிக்
கலக்க நண்ணியே தமரினைக் காண்கிலன் கவன்றனன் றெளிவெய்தி
யுலக்கை சூலம்வேல் சக்கரந் தோமர மோச்சுத லுறுகின்றான்.

இ—ள்: வீரன்—வீரவாகுதேவர், இலக்கர்தம்மையும் சூளிகைதன்னுடன் இமைப்பொழுதினில் அட்டு—இலக்கமசுரர்களையுஞ்சூளிகையுடன் ஒருமாத்திரைப்பொழுதினுள் அழித்து, நிலக்கண் நின்றிடுதலும்—பூமியில்நிற்க, சதமுகன் நிரை விழி கொடு நோக்கி—சதமுகனென்பான் நிரையானகண்களாற்பார்த்து, கலக்கம் நண்ணி—மனக்கலக்கமடைந்து, தமரினை காண்கிலன் கவன்றனன்—சுற்றத்தாரைக்காணுமையாற் கவலையுற்று, தெளிவு எய்தி—(பின் ஒருவாறு) தேற்றங்கொண்டு, உலக்கை சூலம் வேல் சக்கரம் தோமரம் ஓச்சுதல் உறுகின்றான்—இருப்புலக்கையையும் சூலப்படையையும் வேற்படையையும் சக்கராயுதத்தையும் தோமராயுதத்தையும் (அவர்மேற்) செலுத்தினான் எ—று.

விரைவிலென்பார் 'இமைப்பொழுதினில்' எனவும், நூறுமுகங்களிலுமுள்ள இருநூறுகண்களாலும் பார்த்தனனாதலின் 'நிரைவிழிகொடுநோக்கி' எனவும் கூறினார். (௧௭)

உற்ற காலையி னொண்டிறன் மொய்ம்பினே னுருகெழு சினஞ்செய்தோர்
பொற்றை நேர்தரு சிகரியைப் பறித்தனன் பொள்ளென வெறிகாலை
மற்றோர் வார்சிலை வணக்கியே வெய்யதீ வாளியா யிரம்பூட்டி
யிற்று வீழ்வகை யிடைதனி லறுத்தன னெறிதரு கதிர்வேலான்.

இ—ள்: உற்றகாலையின்—அப்படைகள் தமக்கெதிரேவந்தபொழுது, ஒள்திறல் மொய்ம்பினேன்-வீரவாகுதேவர், உரு கெழு சினம் செய்து—கண்டோரஞ்சத்தக்க கோபத்தைக்கொண்டு, ஓர் பொற்றை நேர்தரு சிகரியை பறித்தனன்—மலையைப்போன்ற ஒரு கோபுரத்தைப்பிடுங்கியெடுத்து, பொள் என எறி காலை—விரைவிலெறிந்தார் எறிந்தபொழுது, எறிதரு கதிர் வேலான்—வீசுகின்ற கிரணங்களமைந்த வேற்படையையுடையவனாகிய சதமுகன், மற்று ஓர் வார் சிலை வணக்கி—பின் பும் ஒரு நீண்ட வில்லை வளைத்து, வெய்ய தீ வாளி ஆயிரம் பூட்டி—கொடிய அக்கினியைக்காலுகின்ற ஆயிரம்பாணங்களைத்தொடுத்து, இற்று வீழ் வகை இடைதனில் அறுத்தனன்—உடைந்துவிழும்படி (அக்கோபுரத்தை) நடுவில் வெட்டினான் எ—று.

மற்று-வினைமாற்று. ஒண்டிறன்மொய்ம்பினேன்-சிறந்த வீரமார்ந்த புயங்களையுடையான். பெருஞ்சினமென்பார் 'உருகெழுசினம்' எனவும், பருத்தோங்கிய கோபுரமென்பார் 'பொற்றைநேர்தருசிகரி' எனவும் கூறினார். (கசு)

அறுத்து நூறுகோல் பின்னரு மாங்கவ னாகத்தி னடுவெய்தச்
செறித்த காலையின் வீரவா குப்பெயர்ச் செம்மல்போ யவன்வில்லைப்
பறித்த னன்முறித் தெறிதலுஞ் சதமுகன் பற்றவீ திடையென்னாக்
குறித்தொ ரைம்பதிற் றிருகர மோச்சியே குரிசிலைப் பிடித்திட்டான்.

இ—ள்: அறுத்து—வெட்டி, பின்னரும்—பின்பும், அவன் ஆகத்தின் நடு எய்த—அந்த வீரவாகுதேவரது மார்பிலழுந்தும்படி, நூறுகோல் செறித்த காலையின்—நூறுபாணங்களையழுத்தியபொழுது, வீரவாகு பெயர் செம்மல் போய்—வீரவாகுவென்னும்பெயரையுடையவீரர் சென்று, அவன் வில்லை பறித்தனன் முறித்து எறிதலும்—அந்தச்சதமுகனுடைய வில்லைப்பறித்துமுறித்தெறிய, சதமுகன்—(அதுகண்ட) சதமுகன், பற்ற ஈது இடை என்னா குறித்து—இவனைப் பிடித்தற்கு இதுவேசமயமென்றுசிந்தித்து, ஒரு ஐம்பதிற்று இரு கரம் ஓச்சி—ஒருபக்கத்திலுள்ள நூறுகைகளையும்நீட்டி, குரிசிலை பிடித்திட்டான்—வீரவாகுதேவரைப்பிடித்தான் எ—று.

பிரிநிலையேகாரம் தொக்கது. வலக்கைகள்நூற்றையும் நீட்டிப் பிடித்தானென்க. (கஎ)

பிடித்த தானவத் தலைவனை யண்ணலோர் பெரும்புயங் கொடுதாக்கிப்
படித்த லைப்படத் தள்ளலும் வீழ்ந்துளான் பதைபதைத் தெழுகாலை
யடித்த லத்தினா லுதைத்தன னசனியா லழுங்குறு மரவம்போற்
றுடிப்ப வேயுரத் தொருகழ லுறுத்தினன் சோரிவாய் தொறுஞ்சோர.

இ—ள்: பிடித்த தானவ தலைவனை—அவ்வாறுபிடித்த அசுரத்தலைவனை, அண்ணல்—வீரவாகுதேவர், ஓர் பெரும் புயம் கொடு தாக்கி—பெரிய ஒரு புயத்தாலிடித்து, படித்தலை பட தள்ளலும்—பூமியில்விழும்படி தள்ளுதலும், வீழ்ந்துளான்—விழுந்த சதமுகன், பதைபதைத்து எழு காலை—மிகப்பதைத்து எழும்பொழுது, அடித்தலத்தினால் உதைத்தனன்—ஒருபாதத்தாலுதைத்து, அசனியால் அழுங்குறும் அரவம் போல் துடிப்ப—இடியால்வருந்துகின்ற சர்ப்பத்தைப்போலத்துடிக்கும்படியும், வாய் தொறும் சோரி சோர—வாய்களினின்று இரத்

தஞ்சிந்தும்படியும், உரத்து ஒரு கழல் உறுத்தினன்—மார்பில் ஒருபாதத்தால் மிதித்தார் எ—று.

சகித்தற்கரியவாதனையையனுபவிக்கவென்பார் 'அசனியாலழுங்குறுமரவம் போற்றுடிப்ப' என்றார். (கஅ)

கந்தெ னப்படு மொய்ம்புடை வெய்யசூர் கட்டுரை முறைபோற்றி
வந்தெ திர்த்திடு சதமுகத் தவுணனை மிதித்திடு மறமைந்த
னந்த கப்பெய ரசுரனை யாற்றல்பெற் றமர்முய லகன்றன்னைத்
தந்தி யைப்பத மொன்றுகொண் டூன்றிய தாதைபோற் றிகழ்கின்றான்.

இ—ள்: கந்து என படு மொய்ம்பு உடை வெய்ய சூர் கட்டுரை முறை போற்றி வந்து எதிர்த்திடு—தூணைநிகர்த்தபுயங்களையுடைய கொடியசூரபன்மனது கட்டளையாகியமுறைமையைப் பேணிவந்தெதிர்த்த, சதமுகத்து அவுணனை—சதமுகனென்னுமசுரனை, மிதித்திடும்—நெஞ்சில் மிதித்துநின்ற, மற மைந்தன்—தறுகண்மையையுடைய வீரவாகுதேவர், அந்தக பெயர் அசுரனை—அந்தகனென்னும் பெயரையுடையஅசுரனையும், ஆற்றல் பெற்று அமர் முயலகன் தன்னை—வலிமை பொருந்தியிருக்கப்பெற்ற முயலகனையும், தந்தியை—கயாசுரனையும் பதம் ஒன்று கொண்டு ஊன்றிய—ஒருபாதத்தினால் மிதித்துநின்ற, தாதை போல்—பிதாவாகியசிவபிரானைப்போல, திகழ்கின்றான்—விளங்கினார் எ--று.

சிவபிரான் முயலகன்மேற்பாதத்தையூன்றிநின்றசரித்திரமும் கயாசுரன்மேற்பாதத்தையூன்றிநின்று தோலையுரித்தசரித்திரமும் மேல் தக்ஷகாண்டத்திற்கூறப்படும். (ககூ)

வேறு.

மின்னல் வாளெயிற் றவுணன் மார்பகம் விடரெ னும்படி விள்ளவே
தன்னொர் பாத முறுத்தி மற்றொரு தாளி னைக்கொடு தள்ளியே
சென்னி யாவு முருட்டி னன்றிசை முற்று நின்று பரித்திடுங்
கன்ன மார்மத மால்க ளிற்றினும் வன்மை சான்றிடு கழலினான்.

இ—ள்: திசை முற்றும் நின்று பரித்திடும் கன்னம் ஆர் மத மால் களிற்றினும்—திக்குகளெல்லாவற்றினும் நின்றுதாங்குகின்ற இருகதுப்புகளினின்றுஞ் சிந்துகின்றமதத்தையுடைய பெரியயானைகளினும்பார்க்க, வன்மை சான்றிடு—வலிமைமிக்க, கழலினான்—பாதங்களையுடைய வீரவாகுதேவர், மின்னல் வாள் எயிற்று அவுணன் மார்பகம் விடர் எனும் படி விள்ள—மின்னல்போன்ற ஒளிபொருந்திய வக்கிரதந்தங்களையுடைய சதமுகாசுரனது மார்பு மலைமுழைபோலக் குழிதோன்றும்வண்ணம், தன் ஓர் பாதம் உறுத்தி—தம்முடைய ஒருபாதத்தையூன்றி, மற்று ஒரு தாளினை கொடு தள்ளி—மற்றொருபாதத்தாலுதைத்து, சென்னி யாவும் உருட்டினான்—தலைகளெல்லாவற்றையும் உருளச்செய்தார் எ—று.

சதமுகனெழாவண்ணம்ஊன்றிநிற்றற்கும் தலைகளையுதைத்துருட்டுதற்கும் ஏற்றபாதங்களென்பதுபோதர அடைபுணர்த்தினார். (உ0)

நூறு சென்னியு மிடறி யாங்கொரு நொடிவ ரைப்பின்மு னவுணனை
யீறு செய்தன னதுமு டித்தபி னெல்லை யில்சின மெய்தியே
யாறு மாமுக வள்ளல் வாய்மை யிகழ்ந்து ளானவை யத்தைமுன்
னீறு செய்துபி னடுவ னிந்நக ரத்தை யென்று நினைந்தனன்.

இ—ள் ஒரு நொடி வரைப்பின் முன்—ஒருநொடிப்பொழுதினுள், நூறு சென்னியும் இடறி—நூறுதலைகளையும் பாதத்தாற்றள்ளி, அவுணனை ஈறு செய்

தனன்—சதமுகாசுரனைக்கொன்றார், அது முடித்த பின்—அக்கருமத்தைச் செய்துமுடித்தபின்பு, எல்லை இல் சினம் எய்தி—அளவிறந்த கோபத்தைக்கொண்டு, ஆறு மா முக வள்ளல் வாய்மை இகழ்ந்துளான் அவையத்தை முன் நீறுசெய்து—சிறந்த ஆறுதிருமுகங்களையுடைய முருகவேளதுகட்டளையை நிந்தித்த சூரபன்மனிருக்குஞ்சபாமண்டபத்தை முதலிலழித்து, பின் இ நகரத்தை அடுவென்—பின்பு இந்நகரத்தையழிப்பேன், என்று நினைந்தனன்—என்று சிந்தித்தார் எ—று.

சதமுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் சுசுo.

காவலாளர்வதைப்படலம்.

வீரவாகுதேவர் சூரபன்மனது அரமனைக்காவலராகிய அசுரர்களைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் சூரபன்மனதுசபையையும் நகரையும் அழிக்கநினைந்து ஒருபெரியவடிவத்தைக்கொண்டுநிற்ப அச்சூரபன்மனது மாளிகையின் காவலாளராகிய ஐம்பதுவெள்ளம் அசுரவீரர் அவரையெதிர்த்தனர், வீரவாகுதேவர் அவர்களைக்கொன்றார் என்பதாம்.

சுடரும் வேற்படைத் தொல்குமரேசன
தடிகண் முன்னி யருளுட னண்டகை
படிய ளந்திடு பண்ணவ னாமெனா
நெடிய பேருருக் கொண்டுநின் றனரோ.

இ—ள்: ஆண் தகை—வீரராகிய வீரவாகுதேவர், சுடரும் வேல் படை தொல் குமரேசனது அடிகள் முன்னி—ஒளிபொருந்திய வேற்படையையேந்திய பழைய முருகவேளின்திருவடிகளைத்தியானித்து, அருளுடன்—அவரது திருவருளைப்பெற்று, படி அளந்திடு பண்ணவன் ஆம் என—பூவுலகத்தை ஓரடியாலளந்த திருமாலைப்போல, நெடிய பேர் உரு கொண்டு நின்றான்—நெடிய பெரிய ஒருதிருவுருவத்தைக்கொண்டு நின்றார் எ—று.

எண்ணியகருமஞ்சித்தியாமென்பதை முருகவேள்குறிப்பாலுணர்த்தினராதலின் 'அருளுடன்' என்றார். (க)

திசைய ளந்தன திண்புயஞ் சென்றுசேண்
மிசைய ளந்தன மேதகு நீண்முடி
வசுதை யாவு மளந்தன வார்கழ
லசைவ் ருந்திற லாடவ னிற்பவே.

இ—ள்: அசைவு அரும் திறல் ஆடவன் நிற்ப—எத்தகையவீரர்முன்னும் இளையாத வலியையுடைய வீரவாகுதேவர் (அவ்வாறு பெரியவடிவங்கொண்டு)நிற்க, திண் புயம் திசை அளந்தன—வலியபுயங்கள் திக்குகளையளந்தன, மேதகும் நீள் முடி சென்று சேண் மிசை அளந்தன—சிறந்த நெடிய முடியானதுபோய் மேலுலகத்தையளந்தது, வார் கழல் வசுதை யாவும் அளந்தன—நீண்டபாதங்கள் பூமிமுழுவதையும் அளந்தன எ—று.

முடி அளந்தன-ஒருமைபன்மைமயக்கம். சேண் மிசை ஒருபொருண்மொழிகள். அகன்றும் உயர்ந்தும் பரந்துமிருத்தலின் முறையே 'அளந்தன' என்றார். (உ)

திருவு லாங்கழற் சீறடிச் செம்மல்பே
ருருவு தாங்கி யுகந்தன னிற்றலு
மரவின் வேந்தரு மாதியங் கூர்மரும்
வெருவி னார்கள் வியன்பொறை யாற்றலார்.

இ—ள்: திரு உலாம் கழல் சிறு அடி செம்மல்—அழகுவிளங்குகின்ற வீரக்கழலையணிந்த சிறிய பாதங்களையுடைய வீரவாகுதேவர், பேர் உருவு தாங்கி உகந்தனன் நிற்றலும்—பெரியவடிவத்தைக்கொண்டு மகிழ்கூர்ந்து நிற்க, அரவின் வேந்தரும் ஆதியம் கூர்மரும்— சர்ப்பங்களுக்கரசராகிய ஆதிசேடரும் ஆதிகூர்மரும், வியன் பொறை ஆற்றலார் வெருவினார்கள்—பெரிய பாரத்தைத்தாங்கமாட்டாதவர்களாய் அஞ்சினார்கள் எ—று.

பெரும்பாரமானபூவுலகத்தை எளிதிற்றாங்குஞ்சிறப்புப்பற்றி 'அரவின்வேந்தருமாதியங்கூர்மரும்' எனப் பன்மையாற்கூறினார். தம்மாற்சுமத்தற்கியலாத பாரமாதலின் வெருவினார்களென்க. (௩)

கதிரெ றித்திடு காமரு பூணினான்
மதுகை பெற்ற வடிவொடு நிற்றலு
மதுப ரித்தற் கருமையி னாற்றவும்
விதலை யுற்றது வீர மகேந்திரம்.

இ—ள்: கதிர் எறித்திடு காமரு பூணினான்—சோதியைப்பரப்புகின்ற அழகிய ஆபரணங்களையணிந்த வீரவாகுதேவர், மதுகை பெற்ற வடிவொடு நிற்றலும்—வலிமைபொருந்திய பெரியவடிவத்தோடு நிற்க, வீரமகேந்திரம்—வீரமகேந்திரநகரம், அது பரித்தற்கு அருமையின்—அவ்வடிவத்தைச்சுமத்தற்கியலாமையால், ஆற்றவும் விதலை உற்றது—மிகவும் நடுக்கமெய்திற்று எ—று. (௪)

உலங்கொள் வாகுவி னொண்பத மூன்றலும்
விலங்கி யேதளர் வீர மகேந்திர
மிலங்கை நீர்மையெய் தாம லிருந்ததாற்
குலங்கொ டானவக் கோமக னாணையால்.

இ—ள்: உலம் கொள் வாகுவின் ஒள் பதம் ஊன்றலும்—திரண்டகல்லைநிகர்த்த புயங்களையுடைய அந்தவீரரது சிறந்தபாதங்கள் மிதிக்க, விலங்கி தளர் வீரமகேந்திரம்—நடுங்கித்தளர்வுற்ற வீரமகேந்திரநகரம், குலம் கொள் தானவ கோமகன் ஆணையால்—கூட்டமாகிய அசுரர்க்குத் தலைவனாகிய சூரபன்மனதுகட்டளையினால், இலங்கை நீர்மை எய்தாமல் இருந்தது—இலங்கைநகர்பட்டபாட்டைப் பெறாமலிருந்தது எ—று.

சூரபன்மனுடைய அரசியலென்னுந்தெய்வீகசத்தியினாற்கடலுளாழாது நின்றது என்பதாம். ஊன்றலும் தளர் என இயையும். உலங்கொள்வாகு-அன்மொழித்தொகை. (௫)

சேணை ளாவிய சென்னிய னெண்டிசை
காண நிற்புறு காட்சியன் கந்தவே
ளாணை காட்டி நிறுவிய வாடலந்
தானு வென்னத் தமியன் விளங்கினான்.

இ—ள்: தமியன்—ஒப்பற்ற வீரவாகுதேவர், சேண் அளாவிய சென்னிய ன்—ஆகாயத்தையளாவிய தலையையுடையவராயும், எண் திசை காண நிற்புறு காட்சியன்—எட்டுத்திக்கிலுள்ளாருங்காணும்படிநிலைபெற்ற தோற்றத்தையுடைய வராயும், கந்தவேள் ஆணை காட்டி நிறுவிய ஆடல் ஆம் தாணு என்ன—முருகக்க டவுள் தமது கட்டளையைக்காட்டிநிறுத்திய வெற்றித்தம்பம்போல, விளங்கினன்-பிரகாசித்தார் எ—று.

சூரபன்மனது அரசியற்கைக்கு விரோதமான கருமத்தைச்செய்யத்துணிந் துநின்றமையான் இவ்வாறுவமித்தார். புதிதாக ஒருதேயத்தைப்பற்றுமரசன் மு ன்னிருந்த அரசனுடையஆணையைமாற்றித் தன்னுணையைநிறுவுதற்கறிகுறியாக ஓர் தம்பம்நாட்டி அதன்மேல் தன்னுடையகொடியையுயர்த்துதல் இயல்பு. (சு)

சான்ற கேள்வித் தலைமகன் றாட்டுணை
யூன்று கின்ற வுழிதொறு மாநில
மான்று கீண்டிட வவ்வப் புழைதொறுந்
தோன்று கின்றன சூழ்கட னீத்தமே.

இ—ள்: சான்ற கேள்வி தலைமகன் தாள் துணை ஊன்றுகின்ற உழி தொறு ம்-மிகுந்தநூற்கேள்வியையுடைய வீரவாகுதேவர் இரண்டுபாதங்களாலும் மிதிக்கு மிடந்தோறும், மா நிலம் ஆன்று கீண்டிட-பெரியபூமி பிரிந்துகிழிய, அவ் அ புழை தொறும்- அந்தஅந்தத் துவாரங்களெல்லாவற்றினும், சூழ் கடல் நீத்தம் தோன்றுகின்றன— சூழ்ந்துநிற்கின்ற கடனீரின்வெள்ளம் வெளிப்பட்டன எ-று.

பாதங்களின்மிதிக்குட்பட்ட நிலமுழுவதும்தகர்ந்து ஆழமானகுழிகளாக, அ வற்றினின்று நீரூறிக்கடல்போலப்பெருகிற்று என்பதாம். (எ)

ஆத்த னூன்று மடிதொறுந் தோன்றிய
நீத்தம் யாவு நெடுந்திறல் வெய்யசூர்
வாய்த்த கோயில் வளைந்திறை போற்றிய
வேத்த வைக்களந் தன்னினு மேவிய.

இ—ள்: ஆத்தன் ஊன்றும் அடி தொறும் தோன்றிய நீத்தம் யாவும்— வீர வாகுதேவரூன்றிய பாதமிதிகடோறுந்தோன்றிய வெள்ளமுழுவதும், நெடும் திறல் வெய்ய சூர் வாய்த்த கோயில் வளைந்து—மிக்கவலியையுடைய கொடியசூர பன்மனது சிறந்த மாளிகையைச்சூழ்ந்து, இறை போற்றிய வேத்து அவைக்களம் தன்னினும் மேவிய-அரசியலைச்செய்த இராசசபையிலும் புகுந்தன எ—று. (அ)

பூழை கொண்டு புறம்படர் நீத்தநீர்
மாழை கொண்டவன் கோயில் வளைந்துராய்ப்
பேழை கொண்ட பிணிப்பறு பாந்தள்போற்
கூழை கொண்ட மறுகிற் குலாயதே.

இ—ள்: பூழை கொண்டு புறம் படர் நீத்த நீர்—பாதமிதிகளாலுண்டானது வாரங்களினின்று வெளியேவந்த நீர்வெள்ளம், மாழை கொண்டவன் கோயில் வளைந்து உராய்--செல்வத்தையுடையவனுகிய சூரபன்மனது மாளிகையைச்சூழ் ந்துபாய்ந்து, பேழை கொண்ட பிணிப்பு அறு பாந்தள் போல்—பெட்டியிலிருந் த தடைநீங்கிய பாம்பைப்போல, கூழை கொண்ட மறுகில் குலாயது—அருகேயு ள்ளவீதிகளிலும்பாய்ந்தது எ—று.

வாயிலின்வழியேபுறப்பட்டு அயலிலுள்ள வீதிகடோறுஞ்செறிதலாற் பாம்பாட்டியின்பெட்டியினின்று புறப்பட்டு வளைந்தூர்ந்துசெல்லுஞ்சர்ப்பத்தை நிகர்த்ததென்க. மாழை கொண்டவன் கோயில் என வகுத்து ஏற்றவாறுபொருள்கூறினுமாம். (௯)

தூய்ய பூழை தொறுந்தொறுந் தோன்றுநீர்
மையல் வெங்கரி வாம்பரி தேர்படை
கைய ரிக்கொடு காசினி யாறுபோற்
செய்ய மாநகர் யாங்கணுஞ் சென்றதே.

இ—ள்: தூய்ய பூழை தொறும் தொறும் தோன்றும் நீர்-தூய்மையான துவாரங்களோவ்வொன்றினும் தோற்றிய வெள்ளம், மையல் வெம் கரி வாம் பரி தேர் படை-மதமயக்கத்தையுடைய கொடிய யானையும் தாவிச்செல்லுகின்றகுதிரையும் தேரும் காலாளுமாகிய நால்வகைச்சேனைகளையும், கையரிக்கொடு-கவர்ந்துகொண்டு, காசினி ஆறு போல்—நிலவுலகத்திலுள்ளஆற்றைப்போல, செய்ய மாநகர் யாங்கணும் சென்றது—சிறந்தபெரிய அந்நகரமெங்கும் பாய்ந்தது எ—று.

வீரவாகுதேவரது பாதங்களின்மிதிப்பினாற்றோன்றுதலின் 'தூய்யபூழை' என்றார். (௧௦)

தோட்ட தன்ன சுழிப்படு வாரியி
னீட்ட மாநகர் வீதிதொ றேகியே
பாட்டின் மாளிகை பற்பல சாடியே
மீட்டு மொல்லையின் வேலை மடுத்ததே.

இ—ள்: தோட்டது அன்ன சுழிப்படு வாரியின் ஈட்டம்—தோண்டப்பட்டாற்போற்பெருகுகின்ற சுழிபொருந்தியநீரின்வெள்ளம், மா நகர் வீதிதொறு ஏகி—பெரிய அந்நகரத்தின்வீதிகடோறும்பாய்ந்து, பாட்டின் மாளிகை பற்பல சாடி-பக்கத்திலுள்ள பலபலமாளிகைகளையழித்து, மீட்டும்—பின்பும், ஒல்லையின்—விரைவாகப் பாய்ந்து, வேலை மடுத்தது—கடலைநிறைத்தது எ—று.

தொட்டது எனற்பாலது நீட்டல்விகாரமாய்நின்றது. மிகவிசாலமும் ஆழமுமாகத்தோண்டப்பட்டவிடத்திலெழுந்தாற்போல எழுகின்றவென்பார் 'தோட்டதன்ன' என்றார். (௧௧)

எம்மை யாளுடை யெந்தைதன் றூதுவன்
செம்மை நீடு திருவுரு நோக்கியே
கைம்ம றிக்கொடு கண்டனர் யாவரு
மம்ம வோவென வச்சமுற் றோடினார்.

இ—ள்: எம்மை ஆள் உடை எந்தை தன் தூதுவன்—எங்களையடிமையாகவுடைய முருகவேளது தூதாகிய வீரவாகுதேவருடைய, செம்மை நீடு திருவுரு நோக்கி—செப்பமிகுந்த திருவுருவத்தைப்பார்த்து, கண்டனர் யாவரும்—கண்டவர்களெல்லோரும், கைமறிக்கொடு—கைகளையுதறிக்கொண்டு, அம்ம வோ என அச்சமுற்று ஓடினார்—ஐயோவென்றுவாய்விட்டுப் பயந்தோடினார்கள் எ—று.

அம்மவோ-இரக்கக்குறிப்பு. (௧௨)

மாவு லாவரு மன்னவன் கோயிலுட்
காவ லாளரிக் காளையை நோக்குறீ இ
யோவி தோர்வஞ்ச னுற்றன னீண்டெனக்
கூவி னித்தனர் தத்தமிற் கூடினார்.

இ—ள்: மா உலாவரும் மன்னவன் கோயிலுள் காவலாளர்— இலக்குமி விலாசம்பொருந்திய சூரபன்மனது மாளிகையிலிருந்த காவற்காரர்கள், இ காளையை கண்ணுறீஇ—இந்நவீரவாகுதேவரைப்பார்த்து, ஓ—ஓகோ!, இது ஓர் வஞ்சன் ஈண்டு உற்றனன் எனா—இந்தக்கள்வனொருவன் இங்கேவந்தானென்று, கூவினித்தனர்—கூவியழைத்து, தத்தமில் கூடினார்—தங்களுள்ளேகூடினார்கள் எ—று.

ஓ-வியப்பு. கூவிளித்தல்-பிறர்வந்துகூடும்படி சத்தமிட்டழைத்தல். (கங)

கூடு கின்ற குணிப்பருங் காவலோர்
நீடு மெய்கொடு நின்றவற் கஞ்சியே
யாடல் பூண்டில மென்னி னரசனே
சாடு நம்மைச் சரதமென் றெண்ணினார்.

இ—ள்: கூடுகின்ற குணிப்பு அரும் காவலோர்—அங்ஙனம்வந்துகூடிய அளவிறந்தகாவலாளர்கள், நீடு மெய் கொடு நின்றவற்கு அஞ்சி ஆடல் பூண்டிலம் என்னின்— நெடியவடிவத்தைக்கொண்டுநின்ற இவனுக்குப்பயந்து போர்செய்யாதுவிட்டோமானால், நம்மை அரசனே சாடும்—எங்களை எங்களரசனேகொல்வான், சரதம் என்று எண்ணினார்—இது நிச்சயமென்றுநினைத்தார்கள் எ—று.

அரசனேயென்பதில் ஏ-தமக்குத்தீங்குநேராவண்ணங்காக்குங்கடப்பாடுடையானென்பதையுணர்த்திற்று. காவலோர் எண்ணினார் என இயையும். (க௪)

குமரி மாமதிற் கோயிலுட் போற்றியே
யமரி யோர்களொ ரைம்பது வெள்ளத்தர்
திமிர மேனியர் தீயுகு கண்ணினர்
சமரி யற்றத் தலைத்தலை மண்டினார்.

இ—ள்: குமரி மா மதில் கோயிலுள் போற்றி அமரியோர்கள்— புதிதான பெரியமதிலையுடைய அரமனையிற் காவல்செய்திருந்த, ஓர் ஐம்பது வெள்ளத்தர்—ஐம்பதுவெள்ளம் அசுரர்கள், திமிர மேனியர்— இருளைப்போன்ற (கரிய) சரீரத்தையுடையவர்களும், தீ உகு கண்ணினர்– நெருப்புப்பொறிகளைச்சிந்துங்கண்களையுடையவர்களுமாய், சமர் இயற்ற- போர்செய்யமுயன்று, தலைத்தலை மண்டினார்—இடந்தோறும்வந்து நெருங்கினார்கள் எ—று.

குமரி-புதுமை; இ-பண்புப்பெயர்விகுதி. (கரு)

மண்டி மற்றவர் வல்லெழுத் தோமரம்
பிண்டி பாலம் பெருங்கதை யாதியாக்
கொண்ட கொண்ட கொடும்படை வீசியே
யண்டம் விண்டிட வார்த்தன ராடினார்.

இ—ள்: அவர்—அந்தஅசுரர்கள், மண்டி—நெருங்கி, வல் எழு—வலியஎழுவும், தோமரம்—தோமரமும், பிண்டிபாலம்–பிண்டிபாலமும், பெரும் கதை–பெரியதண்டும், ஆதி ஆ—முதலாக, கொண்ட கொண்ட கொடும் படை வீசி—தாங்தாம்வைத்திருக்கின்ற கொடியபடைக்கலங்களை யேவி, அண்டம் விண்டிட ஆர்த்தனர்—அண்டமுமுடையும்படி [பெருமுழக்கமாக] ஆரவாரித்து, ஆடினார்-போர்செய்தார்கள் எ—று.

சிறப்பும்மைதொக்கது. (கசு)

ஆடு மெல்லை யடுபடைத் தானவர்
பாடு சூழ்ந்த பரிசினை நோக்கினா

னீடு சான்ற விடித்தொகை யாயிர
கோடி போற்புயங் கொட்டிநின் றார்ப்பவே.

இ—ள்: ஆடும் எல்லை—அங்ஙனம்பொரும்பொழுது, அடு படை தானவர் பாடு சூழ்ந்த பரிசினை நோக்கினன்— கொலைசெய்யத்தக்கபடைக்கலங்களையேந்திய அசுரர்கள் பக்கத்தில்வந்துவளைந்ததன்மையை(வீரவாகுதேவர்)பார்த்து, ஈடு சான்ற இடித்தொகை ஆயிரகோடி போல்— வலிமைமிகுந்த இடிக்கூட்டங்கள் ஆயிரகோடி ஒருங்குதோன்றினாற்போல [பேரொலிபிறக்க], புயம் கொட்டி நின்று—தம்முடையபுயத்திற் கையாற்றட்டிநின்று, ஆர்ப்ப—ஆரவாரிக்க எ—று.

ஆர்ப்ப ஆய எனப்பிற்செய்யுளோடியையும். (கஎ)

அலைக்க வந்த வவுணப் படையெலாம்
கலக்க மூழ்கிக் கருத்துணர் வஃகியே
யுலக்கு றாத வுருமிடி யுண்டிடும்
புலைக்க டுந்தொழிற் புள்ளென லாயவே.

இ—ள்: அலைக்க வந்த அவுண படை எலாம்—அவரைவருத்தும்பொருட்டு வந்த அசுரசேனைமுழுவதும், கலக்கம் மூழ்கி கருத்து உணர்வு அஃகி—நடுக்கமிகுந்து நினைத்தற்குக்கருவியாகியஅறிவு குன்றி, உலக்கு உறாத உருமு இடி உண்டிடும்—குறைவுபடாத இடியேற்றைக்கேட்ட, புலை கடும் தொழில் புள் எனல் ஆய—புலாலைத்தின்னுகின்ற கொடுந்தொழிலையுடைய அசுணமாவைப்போலுதலையடைந்தன எ—று.

உருமு இடி ஒருபொருட்சொற்கள். அசுணமா இன்னிசையைக்கேட்டவழியுவப்பதும் இடிமுதலிய பேரோசையைக்கேட்டவுடன் மயங்கிவீழ்தலும் இயல்பென்க. பேரிடியென்பார் 'உலக்குறாவுருமிடி' என்றார். (கஅ)

வேறு.

பன்மழைக் குலங்களிற் படைக்கலங்கள் யாவையும்
வன்மைபெற்ற வீரருய்ப்ப வந்துமேனி படுதலுஞ்
சின்மயத்த னொற்றன்மிக்க செய்யவீழ் விழுத்திய
தொன்மரத் தியற்கைபோன்று சோரிசோர நின்றனன்.

இ—ள்: வன்மை பெற்ற வீரர்—வலிமையையுடைய அசுரவீரர்கள், பல் மழை குலங்களில்—பலமேகக்கூட்டங்களைப்போல, படைக்கலங்கள் யாவையும் உய்ப்ப—ஆயுதங்களெல்லாவற்றையுஞ்செலுத்த, வந்து மேனி படுதலும்—அவைகள் வந்து தமது சரீரத்திற்பட்டவுடன், சின்மயத்தன் ஒற்றன்—முருகவேளது தூதுவராகிய வீரவாகுதேவர், மிக்க செய்ய வீழ் விழுத்திய தொன்மரத்து இயற்கை போன்று—பெருந்தொகையான சிவந்த விழுதுகளைத்தூங்கவிட்டுநின்ற ஆலமரத்தின்றன்மையைப்போன்று, சோரி சோர நின்றனன்—இரத்தஞ்சிந்த நின்றார் எ—று.

சின்மயத்தன்-ஞானமே திருமேனியாகவுடையான். மழைபெய்தாற்போலப் பெருந்தொகையாய்வீசினராதலின் 'பன்மழைக்குலங்களில்-உய்ப்ப' எனவும், புதிதானவிழுதுகளென்பார் 'செய்யவீழ்' எனவும் கூறினார். (கக)

ஆனகாலை வீரவாகு வறிவனங்கி யிற்சினை இ
மானவீரர் மீதலாது வாளெடுக்க லேனெனாத்
தேனின்பாப் பெருங்கடற் றிளைத்தலைக்கு மத்தெனத்
தானவப் பதாதியைத் தடிந்தலைத்தன் மேயினான்.

இ—ள்: ஆனகாலை-அப்பொழுது, வீரவாகு அறிவன்-நல்லறிவையுடைய வீரவாகுதேவர், அங்கியில் சினை இ—அக்கினியைப்போலக்கோபித்து, மான வீரர் மீது அலாது வாள் எடுக்கலேன் என—மதிக்கத்தகுந்த வீரர்மேலன்றி (இந்த அற்பர்கள்மேல்) வாட்படையைக்கைக்கொள்ளேனென்று சிந்தித்து, தேனின் மா பெரும் கடல் திளைத்து அலைக்கும் மத்து என—பெரியதேன்கடலிலமிழ்ந்திக் கலக்குகின்ற மத்தைப்போல, தானவ பதாதியை தடிந்து அலைத்தல் மேயினன்—அசுரசேனைகளை யடர்த்து அழிக்கத்தொடங்கினார் எ—று.

சினை இ-சினவியென்பதன்விகாரம். சிவந்தநிறமானகுடுமியுடன்செறிந்துவளைந்துநிற்றலின் தேன்கடலையுவமித்தார். (உo)

மிதித்தனன் கொதித்தனன் விடுத்திலன் படுத்தனன்
சதைத்தனன் புதைத்தனன் றகர்த்தனன் றுகைத்தன
னுதைத்தனன் குதித்தன னுருட்டினன் புரட்டினன்
சிதைத்தனன் செகுத்தனன் செருக்கினன் றருக்கினன்.

இ—ள்: மிதித்தனன்—சிலரைமிதித்தார், கொதித்தனன்—சிலரைச்சினந்தார், விடுத்திலன் படுத்தனன்—சிலரைப்பிறவிடத்திலோடவிடாது கொன்றார், சதைத்தனன் — சிலரைநசுக்கினார், புதைத்தனன்— சிலரை நிலத்திலமிழ்த்தினார், தகர்த்தனன்—சிலரைத்தகர்த்தார், துகைத்தனன்—சிலரைத்துவைத்தார், உதைத்தனன்—சிலரையுதைத்தார், குதித்தனன்— சிலர்மேல் துள்ளிப்பாய்ந்தார், உருட்டினன்—சிலரையுருட்டினார், புரட்டினன்—சிலரைப்புரட்டினார், சிதைத்தனன்—சிலரைச்சிதைத்தார், செகுத்தனன்-சிலரையழித்தார், செருக்கினன் தருக்கினன்—செருக்குற்று அகங்கரித்தார் எ—று. (உக)

சிரத்தினை நெரித்தனன் றிறற்புய மிறுத்தனன்
கரத்தினை முரித்தனன் களத்தினைத் திரித்தன
னுரத்தினைப் பிரித்தன னுருத்தனன் சிரித்தனன்
புரத்தினை யுரித்தனன் பொடித்தனன் படைத்திறம்.

இ—ள்: சிரத்தினை நெரித்தனன்—சிலரது தலையைநெரித்தார், திறல் புயம் இறுத்தனன்—சிலரது வலியபுயங்களைமுரித்தார், கரத்தினை முரித்தனன்—சிலரது கைகளைமுரித்தார், களத்தினை திரித்தனன்—சிலரது கழுத்துகளை முறுக்கினார். உரத்தினை பிரித்தனன்—சிலரது நெஞ்சுகளைப்பிளந்தார், உருத்தனன் சிரித்தனன்—சிலர்முன்கோபித்துச்சிரித்தார், புரத்தினை உரித்தனன்—சிலரதுசரீரங்களை உரித்தார், படை திறம் பொடித்தனன்—அவரேவியஆயுதவகைகளைத் தூளாக்கினார் எ—று. (உஉ)

எடுத்தனன் சுழற்றினனெறிந்தனன் சிலோர்தமைப்
புடைத்தன னிடித்தனன் புயத்தினாற் சிலோர்தமைப்
பிடித்தனன் பிசைந்தனன் பிழிந்தனன் சிலோர்தமை
யடித்தலங்கொ டித்தலத் தரைத்தனன் சிலோர்தமை.

இ—ள்: சிலோர் தமை எடுத்தனன் சுழற்றினன் எறிந்தனன்— சிலரைத் தூக்கிச்சுழற்றியெறிந்தார், சிலோர் தமை புடைத்தனன் புயத்தினால் இடித்தனன்—சிலரைஅடித்துப் புயத்தாலிடித்தார், சிலோர் தமை பிடித்தனன் பிசைந்தனன் பிழிந்தனன்—சிலரைப்பிடித்துப்பிசைந்து பிழிந்தார், சிலோர் தமை அடித்தலம் கொடு இ தலத்து அரைத்தனன்—சிலரைப்பாதத்தினால் இந்நிலத்திலரைத்தார் எ—று.

சில்லோரென்பதில் லகரவொற்றுத்தொக்கது. (உங)

பெருத்தனன் சிறுத்தனன் பெயர்த்தும்வேறு பல்லுருத்
தரித்தன னடந்தனன் றனித்தனி தொடர்ந்தனன்
மருத்தெனக் கறங்கினன் வளைந்தனன் கிளர்ந்தன
னொருத்தன்வெள்ள மைம்பது முலக்குறக் கலக்கினான்.

இ—ள்: பெருத்தனன்—சிலசமயங்களிற்பெரியவடிவங்கொண்டார், சிறுத்தனன்—சிலசமயங்களிற்சிறியவடிவங்கொண்டார், பெயர்த்தும் வேறு பல் உரு தரித்தனன் நடந்தனன்—பின்னும் வேறு பலவகையான வடிவங்களை (வேண்டியவாறே)கொண்டுநடந்தார், தனித்தனி தொடர்ந்தனன்—ஒவ்வொருவரையும் தனித்தனி பின்றொடர்ந்தார், மருத்து என கறங்கினன்—காற்றைப்போலச்சுழன்றார், வளைந்தனன்—சூழ்ந்தார், கிளர்ந்தனன்—நிமிர்ந்தார், ஒருத்தன்—ஒருவீரரே, வெள்ளம் ஐம்பதும்—ஐம்பதுவெள்ளஞ் சேனைகளையும், உலக்குற கலக்கினன்—அழியும்படி (இவ்வாறு)கலக்கினார் எ—று. (௨௪)

மஞ்ஞையன்ன மொண்புறா மடக்குயிற் றிரட்பயில்
செஞ்ஞலங்கொண் மாடமீது சேனங்கூளி பிள்ளைகள்
பிஞ்ஞகன் குமாரனாடு பேரமர்க் களம்படு
மஞ்ஞையாளர் குருதியூ னருந்துமா றிருந்தவே.

இ—ள்: மஞ்ஞை அன்னம் ஒள் புறா மட குயில் திரள் பயில் செம் நலம் கொள் மாட மீது—மயிலும் அன்னமும் ஒள்ளியபுறாவும் இளமையான குயிற்கூட்டமுமாகிய சிறந்த பறவைகளிருந்துபயின்ற செப்பமான அழகுமிகுந்தமாடங்களின்மேல், சேனம் கூளி பிள்ளைகள்—பருந்துகளும் பேய்களும் காகங்களும், பிஞ்ஞகன் குமாரன் ஆடு பேர் அமர் களம் படும் அஞ்ஞையாளர் குருதி ஊன் அருந்துமாறு—சிவபிரானதுபுதல்வராகிய வீரவாகுதேவர் பொருத பெரிய போர்க்களத்திலிறந்த அறிவிலிகளாகியஅசுரர்களது இரத்தத்தையுந்தசையையும் உட்கொள்ளும்பொருட்டு, இருந்த-தங்கியிருந்தன எ—று.

மடம்-ஆகுபெயர். செந்நலம் என்பது போலியாயிற்று. மாடமீது இருந்த என இயையும். (௨௫)

மானினஞ் செறிந்திரைந்து வந்தவெல்லை தன்னிடைத்
தாளொர்சிங்க வேறுபுக்க தன்மைபோல வவுணர்தங்
கோனிருந்த வுறையுளிற் குலாயகாவ லாளராஞ்
சேனைவெள்ள மைம்பதுஞ் சினத்தின்வல்லை சிந்தினான்.

இ—ள்: மான் இனம் செறிந்து இரைந்து வந்த எல்லை தன் இடை—மான்கூட்டங்கள் நெருங்கியிரைந்துவந்தவிடத்தில், ஒர் சிங்க ஏறு புக்க தன்மை போல—ஒருஆண்சிங்கம் பாய்ந்துசென்றதன்மையைப்போல, அவுணர் தம் கோன் இருந்த உறையுளில் குலாய காவலாளர் ஆம்—அசுரர்க்கரசனாகிய சூரபன்மனிருந்த மாளிகையில்நின்ற காவலாளராகிய, சேனை வெள்ளம் ஐம்பதும்—ஐம்பதுவெள்ளமசுரசேனைகளையும், சினத்தின் வல்லை சிந்தினான்—கோபத்துடன் விரைவிலழித்தார் எ—று.

மிருகராசனாகிய சிங்கம் எண்ணிறந்த மானினங்கள்வந்துவளையினும் இளையாது விரைவிற்பாய்ந்து சிதைப்பதுபோல, வீரவாகுதேவர் ஐம்பதுவெள்ளமென்னுந்தொகையானகாவலாளர் தம்மைவளைந்தபோதும் இளையாது மிகவிரைந்து அழித்தார் என்பதாம். குலாய குலாவியஎன்பதன்விகாரம். (௨௬)

முறிந்தன ருறுப்பியாக்கை முற்றும்வேறு வேறவாய்ப்
பிறிந்தனர் தகர்ந்தனர் பிறங்குசென்னி சோரியுட்

செறிந்தனர் புதைந்தனர் சிதைந்தன ருருண்டனர்
மறிந்தன ரிறந்தனர் மடிந்தனர் கிடந்தனர்.

இ—ள்: உறப்பு முறிந்தனர்—(வீரவாகுதேவர் அவ்வாறழித்தபொழுது அசுரர்களுட்பலர்) அவயவங்கள்முரியப்பெற்றார்கள், யாக்கை முற்றும் வேறுவேற ஆய் பிறிந்தனர்- பலர் சரீரமுழுதும் வேறுவேறாய்ப்பிரியப்பெற்றார்கள், பிறங்கு சென்னி தகர்ந்தனர்—பலர் விளங்குகின்ற தலை உடையப்பெற்றார்கள், சோரியுள் செறிந்தனர் புதைந்தனர்—பலர் இரத்தவெள்ளத்திலமிழ்ந்திப் புதைந்தார்கள், சிதைந்தனர்- பலர் சிதைந்தார்கள், உருண்டனர்—பலர் உருண்டார்கள், மறிந்தனர்- பலர் விழுந்தார்கள், இறந்தனர் மடிந்தனர் கிடந்தனர்- இவ்வாறேயாவரும் இறந்து அழிந்து கிடந்தார்கள் எ-று. (உஎ)

இன்னபான்மை வீற்றுவீற்றி னவுணர்தானை யாவையுஞ்
சின்னபின்ன மாகியே சிதைந்துவீழ்ந் துலந்திட
வுன்னுகின்ற முன்னமட் டுலம்பினுன் சிலம்பினின்
மன்னன்மங்கை நூபுரத்தின் வந்தவீர வாகுவே.

இ—ள்: சிலம்பினில் மன்னன் மங்கை நூபுரத்தின் வந்த வீரவாகு— மலையாசனது புதல்வியாராகிய உமையம்மையாரது திருவடிச்சிலம்பிற்றோன்றிய வீரவாகுதேவர், இன்ன பான்மை —இவ்வாறு, வீற்றுவீற்றின்— வேறுவேறாக, அவுணர் தானை யாவையும்— அசுரசேனைகளெல்லாம், சின்னபின்னம் ஆகி சிதைந்து வீழ்ந்து உலந்திட— சின்னபின்னமாகிச்சிதைந்துவிழுந்திறக்கும்படி, உன்னுகின்ற முன்னம் அட்டு—நினைக்குமுன் அழித்து, உலம்பினுன்—(வீராவேசத்தினுல்) ஆரவாரித்தார் எ—று.

சின்னபின்னமாதல்-சிலவுறுப்புகள் அறுபட்டனவும் சிலவுறுப்புகள் பிளவுபட்டனவுமாதல், உன்னுகின்றமுன்னம்- அழிக்கவேண்டுமென்றுநினைத்தற்கு எத்துணைக்காலம் வேண்டுமோ அத்துணைக்காலவெல்லைக்குள்; மிகவிரைவிலென்பதுகுறிப்பு. (உஅ)

வள்ளனின்று சமரிழைப்ப மாண்டவீரர் யாக்கையி
னுள்ளதாது வானவேழு முருவம்வேறு காண்கிலா
தள்ளலாகி யொன்றுபட்ட தங்கிதன்னி னுருகியே
வெள்ளியாதி யுலகம்யாவும் விரவும்வண்ண மென்னவே.

இ—ள்: வள்ளல் நின்று சமர் இழைப்ப— வீரவாகுதேவர் இவ்வாறுநின்று போரைச்செய்ய, மாண்ட வீரர் யாக்கையின் உள்ள தாது ஆன ஏழும்— இறந்த அசுரவீரர்களது சரீரத்திலுள்ள ஏழுதாதுக்களும், வெள்ளி ஆதி உலகம் யாவும் அங்கி தன்னின் உருகி விரவும் வண்ணம் என்ன—வெள்ளிமுதலாகிய உலோகவகையேழும் அக்கினியில்வைத்துக்காய்ச்சியபொழுது உருகியொன்றாய்க்கலக்குந்தன்மையைப்போல, உருவம் வேறு காண்கிலாது அள்ளல் ஆகி ஒன்றுபட்டது—வெவ்வேறுவடிவாகக்காணப்படாமற் சேறுபட்டு ஒருமித்தன எ—று.

உலோகம் என்னுஞ்சொல் உலகமெனவிகாரமாயிற்று. ஏழுவகைத்தாதுக்களும் பலநிறமுடையனவாதலின் ஏழுலோகங்களையும் உவமித்தார். (உக)

காவலாளர்வதைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் கூஅக.

நகரழிபடலம்.

வீரவாகுதேவர் மகேந்திரநகரத்தையழித்தமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

பின் வீரவாகுதேவர் அந்நகரிலுள்ள வேரமுதலியவற்றைப்பிடுங்கியெறிந்து சூரனவைக்களத்தையும் நகரத்தையும் பலவாறு அழித்தார். அதனையறிந்தசூரபன்மன் அவரைப்பிடித்துவரும்படி சகத்திரவாகுகளையனுப்பினன் என்பதாம்.

ஆசுறு மவுண வெள்ள மைம்பது முடித்தோ னைஞ்ஞூ
றேசனை யளவை யான்றே யோராயிர மும்ப ரேகித்
தேசுறு மேரு வென்னச் சிகரமோ ரிலக்கஞ் சூடி
வீசுபொன் சுடர நின்ற வேரமொன் றங்கட் கண்டான்.

இ—ள்: ஆசு உறும் அவுண வெள்ளம் ஐம்பதும் முடித்தோன்— குற்றம் பொருந்திய ஐம்பதுவெள்ளமசுரவீரர்களையுமழித்த வீரவாகுதேவர், ஐஞ்ஞூறு ஓசனை அளவை ஆன்று— ஐஞ்ஞூறுயோசனை தூரம் அகன்று, ஒரு ஆயிரம் உம்பர் ஏகி-ஆயிரயோசனை தூரம்மேலுயர்ந்து, சிகரம் ஓர் இலக்கம் சூடி- இலக்கஞ் சிகரங்களைத்தரித்து, தேசு உறும் மேரு என்ன-ஒளிபொருந்திய மேருமலையைப்போல, வீசு பொன் சுடர நின்ற-வீசுகின்ற பொற்சோதிதுலங்கநின்ற, வேரம் ஒன்று- ஒருவேரத்தை, அங்கண் கண்டான்- அங்கேகண்டார் எ-று.

பொன்-ஆகுபெயர். மேருவென்ன நின்ற எனஇயையும். பெருந்தொகையானசிகரங்களையுடைமையாலும் பொற்சோதியைப்பரப்புதலாலும் மேருமலையைநிகர்த்ததென்க. (க)

புறத்திரு ளிரிய வைகும் பொலஞ்சுடர்ப் பொன்செய் வேரந்
திறத்தியல் கோயின் முன்னஞ் சேர்ந்தது தன்னை வீரன்
பறித்தொரு கரத்தி னேந்திப் பதகனாஞ் சூர பன்ம
னறத்தியலிழுக்கி வைகு மவைக்களம் வீசி யார்த்தான்.

இ—ள்: திறத்து இயல் கோயில் முன்னம் சேர்ந்தது— திருத்தமாகச்செய்யப்பட்ட சூரபன்மனதுகோயிலின்முன்பொருந்தியிருந்த, புறத்து இருள் இரிய வைகும் பொலம் சுடர் பொன் செய் வேரம் தன்னை— புறத்தேயுள்ளஇருளகலும்படியிருக்கின்ற அழகியசோதியையுடைய பொன்னாற்செய்யப்பட்ட அந்தவேரத்தை, வீரன் பறித்து—வீரவாகுதேவர்பிடுங்கி, ஒரு கரத்தின் ஏந்தி—ஒருகையிற்றாங்கி, பதகன் ஆம் சூரபன்மன் அறத்து இயல் இழுக்கி வைகும் அவைக்களம் வீசி—பாதகனாகியசூரபன்மன் தருமநெறிபிறழ்ந்து அரசிருக்கின்ற சபாமண்டபத்தில்வீசி, ஆர்த்தான்—ஆரவாரித்தார் எ—று. (உ)

பன்மணி செறிந்த பொற்பிற் பாயொளி யெரிபொன் வேர
மன்னவ னுறையுஞ் செம்பொன் மாயிரு மன்றிற் போதன்
மின்னவிர் மேரு வாதி வெற்பெலா மிகலி னொன்றிப்
பொன்னகர் பொடிப்பச் செல்லுந் தன்மையைப் போலு மன்றே.

இ—ள்: பல் மணி செறிந்த பொற்பில் பாய் ஒளி எரி பொன் வேரம்—பல இரத்தினங்கள் நெருங்கப்பெற்ற அழகார்ந்த பரந்தசோதிவிளங்குகின்ற பொன்னாற்செய்யப்பட்டவேரமானது, மன்னவன் உறையும் செம் பொன் மா இரு மன்றில் போதல்—சூரபன்மனரசிருக்கின்ற செம்பொன்மயமான மிகப்பெரியஅவை

க்களத்திற்செல்லுதல், மின் அவிர் மேரு ஆதி வெற்பு எலாம்—ஒளிவிளங்குகின்ற மேருமுதலியமலைகளெல்லாம், ஒன்றி—ஒருங்குகூடி, இகலின்-பகைமையுடன், பொன்னகர் பொடிப்ப செல்லும் தன்மையை போலும்— சுவர்க்கலோகத்தையழிக்கும்படிசெல்லுந்தன்மையைநிகர்க்கும் எ-று.

மா இரு ஒருபொருட்சொற்கள். மேருமுதலிய மலைகளையுவமைகூறுதலால் வேரத்தின்பெருமையுந்திண்மையும், சுவர்க்கலோகத்தையுவமைகூறியதனால் அவைக்களத்தின்சிறப்பும் விளக்கப்பட்டன. அபூதவுவமை. (௩)

வார்த்தரு கழற்கால் வீரன் வானுரு மேறு முட்க
வார்த்திடு துழனி யேகி யரசன்மே வியவத் தாணி
சேர்த்தவர் கன்னத் தூடு செறியுமுன் னெறித லுற்ற
பேர்த்திடு செம்பொன் வேரம் பேரவை மிசையுற் றன்றே.

இ—ள்: வார் தரு கழல் கால் வீரன்- வார்பொருந்திய வீரக்கழலையணிந்த பாதங்களையுடையவீரவாகுதேவர், வான் உருமேறும் உட்க ஆர்த்திடு துழனி—மேகத்திற்றோற்றுகின்றஇடியும் பயப்படும்படி ஆரவாரிக்கின்ற ஒலியானது, ஏகி—சென்று, அரசன் மேவிய அத்தாணி சேர்த்தவர் கன்னத்து ஊடு செறியுமுன்-சூரபன்மன்வீற்றிருக்கின்ற அத்தாணிமண்டபத்திலிருந்த அசுரர்களது காதில்நுழைதற்குமுன், எறிதலுற்ற பேர்த்திடு செம் பொன் வேரம்—அவராற்பிடுங்கியெறியப்பட்ட செம்பொன்மயமானவேரமானது, பேர் அவை மிசை உற்றன்று—பெரியஅந்தச்சபாமண்டபத்தின்மேல்விழுந்தது எ—று.

சேர்ந்தவரென்பது அடிநோக்கிவலித்தது, எறிதலுற்ற பேர்த்திடு என்பதைப்பேர்த்தெறிதலுற்றிடு என இயைக்க. உரத்தபேரொலியென்பதுதோன்ற 'உருமேறுமுட்கவார்த்திடுதுழனி' எனவும், மிகவிரைந்துசென்று வீழ்ந்ததென்பது தோன்ற 'துழனிஏகி-செறியுமுன்-உற்றன்று' எனவும் கூறினார். (௪)

விற்செறி தூபிச் செம்பொன் வியன்மணி கஞலும் வேரங்
கற்செறி பெருந்தோள் வீர னெறிதலுங் கடிது நண்ணிப்
பொற்செறி மார்பிற் சூரும் புதல்வருஞ் சிலரும் வைகுஞ்
சிற்சில விடையே யன்றி மற்றெலாஞ் சிந்திற் றன்றால்.

இ—ள்: வில் செறி தூபி செம் பொன் வியன் மணி கஞலும் வேரம்—ஒளிபொருந்திய தூபியையுடையசெம்பொன்னாற்செய்யப்பட்ட சிறந்தஇரத்தினங்களழுத்தப்பெற்றவேரத்தை, கல் செறி பெரும் தோள் வீரன் எறிதலும்— மலையைநிகர்த்தபெரியபுயங்களையுடைய வீரவாகுதேவர் வீசியவுடன், கடிது நண்ணி—விரைவாகவந்து, பொன் செறி மார்பில் சூரும் புதல்வரும் சிலரும் வைகும் சிற்சில இடையே அன்றி—பொன்னுபரணங்கள்நெருங்கப்பெற்றமார்பையுடைய சூரபன்மனும் அவனதுபுத்திரர்களும் வேறுசிலதலைவர்களுமிருக்கின்ற சிலவிடங்களைமாத்திரந்தவிர்த்து, மற்று எலாம் சிந்திற்று— ஏனையிடங்களெல்லாவற்றையுமழித்தது எ—று.

சூரபன்மன்முதலாயினோரிருக்குமிடத்தையழிக்காதது அவனது ஆணையின் வலியாலென்க. சிலர்-அமைச்சர்முதலாயினோர். (௫)

தடத்தவி வேரங் கீண்டு தபனியத் தவைக்க ளோச்சி
யிடித்தன னொருதா னிற்கு மெம்பிரா னேவற் றாதன்
படைத்தனித் திறுதி வேலைப் பசும்பொனார் தசும்பி னண்ட
முடைத்தல கழித்து நிற்கு மொருபெருங் கடவு ளொத்தான்.

இ—ள்: தட தனி வேரம் கீண்டு— விசாலமானஒப்பற்றவோத்தை அகழ்ந்தெடுத்து, தபனியத்து அவைக்கண் ஒச்சி— பொன்னாலாகிய சபாமண்டபத்திலெறிந்து, இடித்தனன் ஒருதான் நிற்கும்— ஆரவாரித்துத்தனியேநிற்கின்ற, எம்பிரான் ஏவல் தூதன்—முருகக்கடவுளது ஏவலின்வழிவந்த தூதராகிய வீரவாகுதேவர், படைத்து அளித்து—எல்லாவற்றையும் படைத்துக்காத்து, இறுதி வேலை—முடிவுக்காலத்தில், பசும் பொன் ஆர் தசும்பின் அண்டம் உடைத்து—செம்பொன்னாலானகுடத்தைப்போன்ற அண்டத்தையுடைத்து, உலகு அழித்து நிற்கும்— உலகங்களைச்சங்கரித்துநிற்கின்ற, ஒரு பெரும் கடவுள் ஒத்தான்—ஒப்பற்ற சிறந்தஉருத்திரமூர்த்தியைநிகர்த்தார் எ—று.

வீரவாகுதேவர் பொன்மயமானசபாமண்டபத்தைத்தகர்த்துநிற்றலால் அண்டங்களைத்தகர்த்துநிற்கின்ற உருத்திரமூர்த்தியைப்போன்றார் என்பதாம். (௬)

புலவுகொ ளலகு வெவ்வாய்ப் புட்செறி பொதும்பர் தன்னிற்
பலமுடை யுருமு வீழப் பட்டதோர் பரிச தென்னத்
தொலைவகன் மைந்தன் விட்ட சூளிகை தகர்ப்பத் தொல்சீர்
மலிவுறு சனங்க ளோடு மன்றமங் குற்ற தம்மா.

இ—ள்: புலவு கொள் அலகு வெவ் வாய் புள் செறி பொதும்பர் தன்னில்—புலாலைக்கவருகின்ற அலகாகியகொடியவாயையுடைய பறவைகள்நெருங்கியசோலையில், பலம் உடை உருமு வீழ—பெரியஇடியானதுவிழ, பட்டது ஓர் பரிசது என்ன—அழிந்ததன்மையைப்போல, தொலைவு அகல் மைந்தன் விட்ட சூளிகை தகர்ப்ப—அழியாதவலியையுடைய வீரவாகுதேவரெறிந்தவேரமானதுதகர்க்க, தொல் சீர் மலிவுறு சனங்களோடும்—பழைய கீர்த்திமிகுந்தஅசுரர்களோடும், மன்றம் மங்குற்றது—சபாமண்டபம் அழிந்தது எ—று.

மைந்து-வலி. சோலைபேரிடிவீழ்ந்தவழி அங்குள்ள பறவைகளுடன் அழிவதுபோல, சூரனரசிருந்த சபாமண்டபம் வீரவாகுதேவரெறிந்தசூளிகைவீழ்ந்தவுடன் அங்குள்ள அசுரவீரர்களுடன் அழிந்தது என்பதாம். (௭)

இடிந்தன மிசையி னெல்லை யிற்றபித் திகையின் சூழல்
பொடிந்தன வுத்தி ரங்கள் போதிகை பூழி யாகி
முடிந்தன மதலை யாவு முரிந்தன கபோதம் வீழ்ந்த
மடிந்தன திருவுஞ் சீரு மன்றழி வுற்ற தன்றே.

இ—ள்: மிசையின் எல்லை இடிந்தன—மேலிடங்களிடிந்தன, பித்திகையின் சூழல் இற்ற—சுவர்க்கூட்டங்கள் அழிந்தன, உத்திரங்கள் பொடிந்தன—உத்திரங்கள் பொடியாயின, போதிகை பூழி ஆகி முடிந்தன—போதிகைகள் துகளாயழிந்தன, மதலை யாவும் முரிந்தன—தூண்களெல்லாம் முரிந்தன, கபோதம் வீழ்ந்த—கபோதவுறுப்புக்கள்விழுந்தன, திருவும் சீரும் மடிந்தன—அழகும் புகழும் ஒழிந்தன, மன்று அழிவுற்றது—(இவ்வாறே) அச்சபை அழிந்தது எ—று.

உத்திரம்-கட்டுக்கோப்பின்மேல்விட்டம். போதிகை-சுமையடைக்கட்டை. கபோதம்-சுவர்த்தலங்களின் சித்திரவரி; கொடுங்கையுமாம். (௮)

பீடிகை புரைந்த பொற்பிற் பேரவை தகர்த லோடும்
பாடுற வரசற் சூழ்ந்த பரிசனர் தம்முட் சில்லோ
ரோடினர் சிலவர் மெய்யூ றுற்றனர் சிலவர் நெக்கு
வீடினர் சிலவ ராற்ற மெலிந்தனர் புலம்ப லுற்றார்.

இ—ள்: பீடிகை புரைந்த பொற்பில் பேர் அவை தகர்தலோடும்—ஆசனத்தைப்போன்றபேரழகினையுடைய பெரியசபாமண்டபம் அழிய, பாடு உற அரசன் சூழ்ந்த பரிசனர் தம் உள்—பக்கமாகச்சூரபன்மனைச்சூழ்ந்திருந்த பரிவாரசனங்களுள், சில்லோர் ஓடினர்—சிலர் ஓடினார்கள், சிலவர் மெய் ஊறு உற்றனர்—சிலர் சரீரத்தில்ஊறுபாட்டைப்பெற்றார்கள், சிலவர் நெக்கு வீடினர்—சிலர்சிதைந்துஇறந்தார்கள், சிலவர் ஆற்ற மெலிந்தனர் புலம்பலுற்றார்—சிலர் மிக நொந்துபுலம்பினார்கள் எ—று.

மிகநுண்மையானதொழிற்சித்திரமமைதலால் ஆசனத்தையுவமித்தார். (௯)

நெக்கது பொதியி லாக நிரந்தது செம்பொற் பூழி
திக்கொடு புவியும் வானுஞ் செறிந்தன வவுண ராகித்
தொக்கன ருடைந்து மாய்ந்து தொகைபிரிந் தழிந்தார் தொல்லைத்
தக்கனி னுணர்வு தீர்ந்த தகுவர்கோ னிவற்றைக் கண்டான்.

இ—ள்: பொதியில் நெக்கது ஆக—சபாமண்டபம் உடைய, செம் பொன் பூழி நிரந்தது—சிவந்தநிறமானபொற்றுகள் நிரம்பி, திக்கொடு புவியும் வானும் செறிந்தன—திக்குகளிலும் பூமியிலும் ஆகாயத்திலும்நெருங்கின, அவுணர் ஆகி தொக்கனர் உடைந்து மாய்ந்து தொகைபிரிந்து அழிந்தார்—அசுரர்களாகக் குழுமியிருந்தவர்கள் ஊறுபட்டும் இறந்தும் கூட்டம்பிரிந்தும் அழிந்தார்கள், (அப்பொழுது), தொல்லை தக்கனின் உணர்வு தீர்ந்த தகுவர்கோன்—பழையதக்கனைப்போல நல்லறிவற்றசூரபன்மன், இவற்றை கண்டான்— இந்நிகழ்ச்சிகளைப்பார்த்தான் எ—று.

பொதுவில் எனற்பாலது பொதியிலென்றாயிற்று. (௰)

ஆயிர நாமத் தண்ண லனையவன் வன்மை காணு
வாயிரம் வடவை யேபோ லழன்றுதன் னயலி னின்ற
வாயிர நெடுந்தோ ளைஞ்ஞூ றனனங் கொண்ட தீயோ
ராயிரர் தம்மை நோக்கி யடலுரு மேற்றிற் சொல்வான்.

இ—ள்: ஆயிரம் நாமத்து அண்ணல் அனையவன் வன்மை காணு— ஆயிரந் திருநாமங்களையுடையதிருமாலைநிகர்த்த வீரவாகுதேவரதுவலிமையைப்பார்த்து, ஆயிரம் வடவையே போல் அழன்று —ஆயிரக்கணக்கானவடவாமுகாக்கினிஒருங்கு கூடினாற்போலச்சினந்து, தன் அயலில் நின்ற-தன்பக்கத்தில்நின்ற, ஆயிரம் நெடும் தோள் ஐஞ்ஞூறு ஆனனம் கொண்ட தீயோர் ஆயிரர் தம்மை நோக்கி— நீண்டஆயிரம்புயங்களையும் ஐஞ்ஞூறுமுகங்களையுமுடைய கொடிய ஆயிரம் அசுர வீரர்களைப்பார்த்து, அடல் உருமேற்றில் சொல்வான்-வலிய இடிவீழ்ந்தாற்போலச்சொல்லுவான் எ—று.

இரண்டாமாயிரம் பன்மைகுறித்துநின்றது. இச்செய்யுளிற்கூறிய அசுரர் சகத்திரவாகுகளெனப்படுவர். நெடியவடிவங்கொண்டதனால் 'ஆயிரநாமத்தண்ணலனையவன்' என்றார். (௧௧)

விழிப்பரு திவப்பி னோங்கும் வேரமொன் றதனைக் கீண்டே
தெழிப்பொடு குமரன் றூதன் செலுத்தினன் செம்பொன் மன்ற
மிழிப்புறத் தகர்ந்து வீழ்ந்த தின்றிசில் விடமே யன்றிப்
பழிப்பெனக் கிதனை மேலுண் டோபட்ட தென் புகழு மன்னோ.

இ—ள்: குமரன் தூதன்—முருகக்கடவுளேவியதூதனாகியவீரவாகு, விழிப்பரும் திவப்பின் ஓங்கும் வேரம் ஒன்று அதனை கீண்டு—எவருங்காணுதற்கரியஉயரத்தோடுகிளர்ந்த ஒருவேரத்தையகழ்ந்து, தெழிப்பொடு செலுத்தின

ன்—ஆரவாரத்துடனெறிந்தான், (அதனால்), செம் பொன் மன்றம்—செம்பொன்னாற்செய்யப்பட்ட இந்தச்சபாமண்டபம், ஈண்டு சில் இடமே அன்றி—எனக்கருகே அற்பமானஇடமாத்திரந்தவிர (ஏனையிடமெல்லாம்), இழிப்பு உற தகர்ந்து வீழ்ந்தது—இழிவுண்டாகும்படிதகர்ந்துவிழுந்தது, எனக்கு இதன் மேல் பழிப்பு உண்டோ—எனக்குஇதனினுமேற்பட்டஅவமானம்வேறுண்டா?, என் புகழும் பட்டது—(இதனால்) என்னுடைகீர்த்தியுமழிந்தது எ—று.

இடமே என்பதில் ஏ-பிரிநிலை. ஓ-எதிர்மறை. உம்மை-எச்சம். (௧௨)

கோறலே கொற்ற மன்றா லொற்றனைக் குறுகி நீவிர்
மாறுபோ ரியற்றி யேனு மற்றவன் வழாத வாற்றால்
ஈறுசெய் திடாது பற்றி யெம்முனர்த் தருதிர் மெய்யி
னூறுசெய் தவனை வானோ ருடன்சிறை யுய்ப்ப னென்றான்.

இ—ள்: ஒற்றனை கோறல் கொற்றம் அன்று—தூதாகவந்தவனைக் கொல்வதுவெற்றியன்று, (ஆதலின்), நீவிர் குறுகி—நீங்கள் அவனையணுகி, மாறு போர் இயற்றியேனும்—எதிர்த்துநின்று போர்செய்தாயினும், அவன் வழாத ஆற்றால் பற்றி—அவன் தப்பிப்போகாவண்ணம் பிடித்து, ஈறுசெய்திடாது எம்முனர் தருதிர்—கொல்லாது எமக்குமுன்னேகொண்டுவாருங்கள், அவனை—அந்தத் தூதனை, மெய்யின் ஊறுசெய்து—சரீரத்தில் ஊறுபாடுசெய்து, வானோர் உடன் சிறை உய்ப்பன்—தேவர்களுடன்சிறையில்வைப்பேன், என்றான்—என்று கூறினான் எ—று. (௧௩)

அன்னவ ரதனைக் கேளா வரசவீ தருளிக் கேண்மோ
வொன்னலன் றூதன் சோரி யுயிரொடு குடித்தற் குற்றா
நின்னரு ளாணை நாடி நெஞ்சகம் புழுங்கி யஞ்சி
யின்னதோர் பொழுதுந் தாழ்த்தே மினியது புரிது மென்றார்.

இ—ள்: அன்னவர் அதனை கேளா— அந்தஅசுரர்கள் அவ்வாசகத்தைக்கேட்டு, அரச—அரசனே!, ஈது அருளி கேள்—யாங்கள்சொல்லும்வாசகத்தை அருள்செய்துகேட்பீராக, ஒன்னலன் தூதன் சோரி உயிரொடு குடித்தற்கு உற்றாம்—பகைவராகிய முருகக்கடவுளது தூதனாகிய இவ்வீரனுடைய இரத்தத்தை உயிருடன் பருகும்படி முயன்றிருந்தோம், நின் அருள் ஆணை நாடி—உம்முடைய அருளுடன்கூடிய கட்டளையைஎதிர்பார்த்து, நெஞ்சகம் புழுங்கி—மனம்புழுங்கி, அஞ்சி—பயந்து, இன்னது ஓர் பொழுதும் தாழ்த்தோம்—இதுகாறுந்தாமதித்தோம், இனி அது புரிதும்—இனி அக்கருமத்தைச்செய்வோம், என்றார்—என்றுகூறினார்கள் எ—று.

மோ-முன்னிலையசை. உற்றுக்கேட்பீரென்பார் 'அருளிகேள்' எனவும், இரத்தத்தைப்பருகி உயிரையழித்தற்கென்பார் 'சோரியுயிரொடுகுடித்தற்கு' எனவும், நீர் மனம்விரும்பிச்செய்யுங்கட்டளை எப்போதுகிடைக்குமோவென்று காத்திருந்தென்பார் 'நின்னருளாணைநாடி' எனவும், அத்தூதன்செய்யுந்தீமைகளைக்கண்டபோதும் பேசிய தருக்குமொழிகளைக்கேட்டபோதும் மனஞ்சகியாது வருந்தினோமென்பதுபோதர 'நெஞ்சகம்புழுங்கி' எனவும், அக்காலங்களில் அவனைக் கொல்லப்புகின் அரசனாகிய நீர் நம்மைத்தண்டிப்பீரோவென்று நினைத்தென்பார் 'அஞ்சி' எனவும் கூறினார். (௧௪)

என்றனர் வணக்கஞ் செய்ய வினிதென வுவகை பூத்துக்
கன்றிய வவுணர் தங்கள் காவலன் விடுப்ப வங்கட்
சென்றனர் பத்து நூற்றுத் திறலுடை மொய்ம்பர் முன்ன
நின்றிடு வீர வாகு நிலைமையை யுரைக்க லுற்றாம்.

இ—ள்: என்றனர் வணக்கஞ்செய்ய—அவ்வசுரர்கள் இவ்வாறுசொல்லி வணங்க, கன்றிய அவுணர் தங்கள் காவலன்— கோபங்கொண்ட அசுரர்க்கரசனுகிய சூரபன்மன், இனிது என உவகை பூத்து—நீவிர்கூறியது நன்றென்றுமகிழ்ச்சியுற்று, விடுப்ப—ஏவ, பத்து நூற்று திறல் உடை மொய்ம்பர்—வலிபொருந்திய ஆயிரம்புயங்களையுடைய வீரர்கள், அங்கண் சென்றனர்—அங்கேபோனுர்கள், (இஃது இத்துணைநிற்க இனி), முன்னம் நின்றிடு வீரவாகு நிலைமையை உரைக்கலுற்ரும்—முன்னே (அவைக்களத்தின்மேற் சூளிகையையெறிந்து)நின்ற வீரவாகுதேவர்செய்த செயல்களைக்கூறுவோம் எ--று.

அங்கண்-வீரவாகுதேவர்நின்றவிடத்து. (கரு)

வேறு.

வேரம தெறிந்தவை வீட்டி நின்றுளான்
சூருறை நகர்வளந் தொலைச்சிச் சூழுநர்
சேருறு மிருக்கையுஞ் சிதைப்ப னின்றெனு
வோருறு புந்தியி லுன்னி னுனரோ.

இ—ள்: வேரமது எறிந்து அவை வீட்டி நின்றுளான்— சூளிகையைப்பிடுங்கியெறிந்து சபாமண்டபத்தையழித்துநின்றவீரவாகுதேவர், இன்று—இத்தினத்தில், சூர் உறை நகர் வளம் தொலைச்சி—சூரபன்மனிருக்கின்றமாளிகையின் வளத்தையழித்து, சூழுநர் சேருறும் இருக்கையும் சிதைப்பன்—அவனைச்சூழ்ந்த பரிசனர்களிருக்குமிடங்களையுமழிப்பேன், எனு—என்று, ஒருறு புந்தியில் உன்னினன்—ஆராய்கின்ற மனத்தில் நினைத்தார் எ—று.

சூழுநரென்றது புதல்வர் அமைச்சர் முதலாயினேரை. ஒவ்வோர்கருமத்தையுஞ்செவ்வனே ஆலோசிக்குமனமாதலின் 'ஒருறுபுந்தி' என்றுர். (கசு)

மறிப்பிணை முதலிய மான்கள் புள்ளினஞ்
சிறப்புறு தண்டலை மணியிற் செம்பொனிற்
குறிப்பினர் குயிற்றுசெய் குன்றம் யாவையும்
பறித்தனன் றிசைதொறும் பரவ வீசினன்.

இ—ள்: மறி பிணை முதலிய மான்கள்— பெண்மான்முதலியமிருகங்களையும், புள் இனம்—பறவைகளையும், சிறப்பு உறு தண்டலை—சிறப்பமைந்தசோலைகளையும், மணியில் செம் பொனில்—இரத்தினங்களாலும் செம்பொன்னுலும், குறிப்பினர் குயிற்று—நுண்ணறிவையுடையசிற்பர்கள்செய்துவைக்கப்பெற்ற, செய்குன்றம் யாவையும்—செய்குன்றுகளெல்லாவற்றையும், பறித்தனன்—பிடுங்கி, திசை தொறும் பரவ வீசினன்—திக்குகளெங்கும்பரந்துவிழும்படிஎறிந்தார் எ—று.

தண்டலை குயிற்று என இயையும். மறி பிணை ஒருபொருட்சொற்கள். (கஎ)

வரைவயி றுயிர்த்திடு மாசில் பல்வகை
யரதன நிரைகளி னணிய செம்பொனின்
மரபினி லியற்றிய வரம்பி றெற்றிகள்
விரைவொடு தொட்டன னெடுத்து வீசினன்.

இ—ள்: வரை வயிறுயிர்த்திடும் மாசு இல் பல் வகை அரதன நிரைகளின்—மலைகளினின்றுதோற்றிய குற்றமற்ற பலவிதமான இரத்தினநிரைகளாலும், அணிய செம்பொனில்—சிறந்தசெம்பொன்னினுலும், மரபினில் இயற்றிய—முறைப்படிசெய்த, வரம்பு இல் தெற்றிகள்—அளவிறந்ததிண்ணைகளை, விரைவொடு தொட்டனன் எடுத்து—விரைவில்கழ்ந்தெடுத்து, வீசினன்—எறிந்தார் எ—று.

ரத்[illegible] என்னும் வடமொழி அரதனமெனநின்றது. வயிறுயிர்த்திடு- இலக்கணை. (கஅ)

முடிவகல் பேழையின் மூட்டு நீக்கியே
யடியுறு கொள்கல மவற்றைச் சாய்த்தெனப்
படியுறு மண்டபம் பலவுந் தொட்டெடா
விடிபுரை யோதையான் யாண்டும் வீசினான்.

இ—ள்: முடிவு அகல் பேழையின் மூட்டு நீக்கி—அளவில்லாதபேடகங்களின் பொருத்துக்களைவிடுவித்து, அடி உறு கொள்கலம் அவற்றை சாய்த்து என—அதனுள்ளிருந்தபாத்திரங்களைக் கவிழ்த்தாற்போல, படி உறு மண்டபம் பலவும் தொட்டு எடா—பூமியிலிருக்கின்ற பலமண்டபங்களையும் அகழ்ந்தெடுத்து, இடிபுரை ஓதையான்—இடியைப்போன்ற ஆரவாரத்தையுடைய வீரவாகுதேவர், யாண்டும் வீசினான்—எல்லாவிடங்களினுமெறிந்தார் எ—று.

பேடகங்களின்வாயைநீக்கி அதனுள்ளிருக்கும்பாத்திரங்களிலுள்ள ஆபரணமுதலியபொருள்கள்விழும்படி கவிழ்த்தாற்போல, மண்டபங்களையகழ்ந்து அதனுள்ளிருக்கும் பொருள்களெல்லாஞ்சிதறிவிழும்படி வீசினார் என்பதாம். ஆழமாக அடியிட்டுக் கட்டப்பட்டனவென்பதுபோதர 'படியுறுமண்டபம்' எனவும், அவைக்களத்திற் சூளிகையைவீசியவுடன் ஆர்த்தனராதலின் 'இடிபுரையோதையான்' எனவும் கூறினார். (௧௯)

மலரயன் மிசையுறு மாயற் புல்லுவா
னிலமகள் கைகளை நீட்டி யென்னவா
னுலகெலா மிகந்துமே லோங்கு கோபுரம்
பலபல பறித்தனன் பாங்க ரோச்சினான்.

இ—ள்: நிலமகள்—பூமிதேவி, மலர் அயன் மிசை உறும் மாயன் புல்லுவான்—தாமரைமலராசனராகிய பிரமதேவர்து சத்தியலோகத்தின்மேலிருக்கின்ற திருமாலைத்தழுவும்படி, கைகளை நீட்டி என்ன—தன்னுடையகைகளைநீட்டினாற்போல, வான் உலகு எலாம் இகந்து மேல் ஓங்கு—ஆகாயவுலகங்களெல்லாவற்றையுங்கடந்து மேலுயர்ந்திருக்கின்ற, கோபுரம் பலபல—மிகப்பலகோபுரங்களை, பறித்தனன்—பிடுங்கி, பாங்கர் ஓச்சினான்—பக்கங்களிலெறிந்தார் எ—று.

நீட்டியென்ன ஓங்கு எனஇயையும். (௨௦)

மூளுறு மெரிசிகை முடித்துத் தானவர்
கேளொடு தமித்தமி கெழுமி யுற்றென
வாளுறு மாமணி வயங்கு தூபிகைச்
சூளிகை பலபல தொட்டு வீசினான்:

இ—ள்: தானவர்—அசுரர்கள், மூளுறும் எரி சிகை முடித்து—மூளுகின்ற அக்கினியைக்குடுமியாகமுடித்து, கேளொடு தமித்தமி கெழுமி உற்று என—சுற்றத்தவர்களோடுந்தனித்தனியேசெறிந்துநின்றாற்போல, வாள் உறு மா மணி வயங்கு தூபிகை—ஒளிபொருந்திய மாணிக்கரத்தினங்கள்விளங்கப்பெற்ற தூபியையுடைய, சூளிகை பலபல—மிகப்பலசூளிகைகளை, தொட்டு வீசினான்—அகழ்ந்தெறிந்தார் எ—று.

அவுணரையுவமைகூறியதனால் தூபியொழிந்தவேனையிடங்கள் நீலமணிகளாற்செய்யப்பட்டனவென்பது தோன்றிற்று. (௨௧)

கற்றிடும் விஞ்சையின் கழகம் பஃகடைத்
தெற்றிகள் வேதிகை சிறந்த சாலைக
டொற்றிடு பழுமரச் சோலை வாவிகண்
மற்றுள பிறவொடு மட்டித் தானரோ.

இ—ள்: கற்றிடும் விஞ்சையின் கழகம்— மாணாக்கர்கள்படித்தற்கேற்ற வித்தியாசாலைகளையும், பல் கடை தெற்றிகள்—கடைவீதிகளிலுள்ள பலதிண்ணைகளையும், வேதிகை—மேடைகளையும், சிறந்த சாலைகள்—சிறப்பமைந்தசாலைகளையும், துற்றிடு பழு மர சோலை—நெருங்கியிருக்கின்ற பெருத்தமரங்களையுடைய சோலைகளையும், வாவிகள்— தடாகங்களையும், மற்று உள பிறவொடு—வேறும்பலவிடங்களையும், மட்டித்தான்—அழித்தார் எ—று.

பழு-பருமை. (உஉ)

கந்துக வியனிரை கரிக டேர்த்தொகை
பந்தியிற் சாலையிற் பயின்று நின்றன
வந்தமின் றாயின வள்ளி யள்ளியே
யுந்தினன் றிசைதொறு முரற்றி வீழவே.

இ—ள்: பந்தியில் சாலையில் பயின்று நின்றன—பந்திகளிலும் சாலைகளிலும் பொருந்திநின்றனவாகிய, கந்துக வியன் நிரை—பெரியகுதிரைக்கூட்டங்களையும், கரிகள்—யானைக்கூட்டங்களையும், தேர்த்தொகை—தேர்க்கூட்டங்களையும், அந்தம் இன்று ஆயின—அளவிறந்தனவாக, அள்ளி அள்ளி—வாரிவாரி, திசை தொறும் உரற்றி வீழ— திக்குகடோறும் ஒலித்துக்கொண்டுவிழும்படி, உந்தினன்—எறிந்தார் எ—று.

கட்டப்பட்டனவும் நிறுத்தப்பட்டனவுமாகிய இடங்களினின்றே நெடுங்காலம் நின்றனவாதலின் 'பயின்றுநின்றன' என்றார். (உங)

நிலவரை சூழ்தரு நேமி வெற்பென
மலிதரு செம்மணி வகையிற் பண்ணிய
பலவகை யியந்திரப் பதண விஞ்சிக
ளொலிகழற் காலினு னுதைத்து வீட்டினன்.

இ—ள்: நில வரை சூழ்தரும் நேமி வெற்பு என— பூமியினெல்லையைவளைந்திருக்கின்ற சக்கரவாளமலையைப்போல, மலிதரு செம்மணி வகையில் பண்ணிய—மிகுதியான மாணிக்கரத்தினத்தின்வகைகளாற்செய்யப்பட்ட, பலவகை இயந்திர பதண இஞ்சிகள்—பலவிதமானயந்திரங்களையும் உண்மேடைகளையுமுடைய மதில்களை, ஒலி கழல் காலினன்— ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த பாதங்களையுடையவீரவாகுதேவர், உதைத்து வீட்டினன்—உதைத்துவிழுத்தினார் எ—று.

மிகவிசாலமான இடப்பரப்பைவளைந்திருத்தலின் 'நிலவரைசூழ்தருநேமிவெற்பென' எனவும், குருவிந்தம் சாதரங்கம் சௌகந்திகம் கோவாங்கம் என மாணிக்கரத்தினம் நால்வகைப்படுதலின் 'செம்மணிவகை' எனவும், சிறுபான்மை ஏனையிரத்தினங்களும் பதிக்கப்பெற்றிருத்தலின் 'மலிதருசெம்மணிவகையிற்பண்ணிய' எனவும் கூறினார். மாற்றார்முற்றுகையிட்டவழி அவர்க்குத்தம்மாலியன்ற தீங்குகளைச்செய்யவல்ல பலவகையானயந்திரங்கள் மதிலிலமைக்கப்படுதலைத் திருநகரப்படலத்தாலுங்காண்க. உண்மேடையை இக்காலத்தார் பத்திரிப்பென்பர். (உச)

பூழியம் பொற்புயப் புனிதன் வெய்யசூர்
வாழுறு கோநகர் வளத்தை யின்னண
மூழியின் மருத்தென வுலாவி யட்டபின்
சூழுறு கிடங்கருந் தூர்த்திட் டானரோ.

இ—ள்: பூழியம் பொன் புய புனிதன்—திருநீற்றையணிந்த அழகியபுயங்களையுடையவீரவாகுதேவர், ஊழியின் மருத்து என உலாவி—ஊழிக்காலத்தில்

வீசம்பிரசண்டமாருதத்தைப்போல (வேகமாக) உலாவி, இன்னணம்-இப்படி, வெய்ய சூர் வாழுறு கோநகர் வளத்தை அட்டபின்—கொடிய சூரபன்மன்வாழுகின்ற மாளிகையின்வளங்களையழித்தபின், சூழுறு கிடங்கரும் தூர்த்திட்டான்—அதனைச்சூழ்ந்திருந்த அகழியையும் தூர்த்தார் எ—று.

இன்னவண்ணம் எனற்பாலது இன்னணமென மருவிற்று. (உரு)

அறந்தலை நின்றிடா வரசன் கோயினின்
றெறிந்திடு சிகரிக ளிலங்கு சூளிகை
நிறைந்திடு மண்டப நெருங்கு காமர்காச்
செறிந்தன பிறவொடு சென்று சேணெலாம்.

இ—ள்: அறம் தலைநின்றிடா அரசன் கோயில் நின்று எறிந்திடு—தருமநீதியின்வழியொழுகாத சூரபன்மனதுமாளிகையில்நின்று வீரவாகுதேவரெறிந்த, சிகரிகள்—கோபுரங்களும், இலங்கு சூளிகை-விளங்குகின்றவேரங்களும், நிறைந்திடும் மண்டபம்—நிறைந்தமண்டபங்களும், நெருங்கு காமர் கா—நெருங்கிய அழகியசோலைகளும், பிறவொடு—மற்றும்பொருள்களும், சேண் எலாம் சென்று செறிந்தன—ஆகாயமெங்கும்போய் நெருங்கின எ—று. (உசு)

உளர்ந்திடு வரியளி யுலாவு தொங்கலான்
வளர்ந்திடு பாணியான் மன்னன் செல்வமாய்க்
களைந்தெறி கின்றன கணிப்பி லாதவுங்
கிளர்ந்திடு நெடுமுகில் கிழித்துச் சென்றவே.

இ—ள்: உளர்ந்திடு வரி அளி உலாவு தொங்கலான்— பண்ணைப்பாடுகின்ற வரிபொருந்தியவண்டுகள் மொய்க்கப்பெற்ற மலர்மாலையையணிந்த வீரவாகுதேவர், வளர்ந்திடு பாணியால்—நீண்டகைகளால், மன்னன் செல்வம் ஆய் களைந்து எறிகின்றன கணிப்பு இலாதவும்—சூரபன்மனதுசெல்வங்களாகப் பிடுங்கியெறிந்த அளவிறந்தபொருள்களெல்லாம், கிளர்ந்திடும் நெடு முகில் கிழித்து சென்ற-உயர்ந்திருக்கின்றநெடியமேகமண்டலத்தையுங்கிழித்துமேற்சென்றன எ—று.
சிறப்பும்மைதொக்கது. (உஎ)

சூரெனு மவுணர்கோன் படைத்த தொல்வளஞ்
சேரிய மிசைவரத் தெரிந்து வானிடைச்
சாருறு கடவுளர் தம்மு ளேங்கியே
யேரிய றொகைபிரிந் திரியல் போயினார்.

இ—ள்: சூர் எனும் அவுணர்கோன் படைத்த தொல் வளம்—சூரபன்மனாகிய அசுரர்க்கரசன்பெற்றிருந்த பழையவளங்கள், சேரிய மிசை வர—(வீரவாகுதேவராலெறியப்பட்டுத்) தம்மையணுகும்படி மேலாகவர, வான் இடை சாருறு கடவுளர் தெரிந்து— ஆகாயமார்க்கமாகச்சஞ்சரித்ததேவர்கள் அதனைப்பார்த்து, தம்முள் ஏங்கி—தங்களுள் ஏக்கங்கொண்டு, ஏர் இயல் தொகை பிரிந்து இரியல் போயினார்— சிறப்புப்பொருந்திய கூட்டத்தினின்றுபிரிந்து அஞ்சியோடினார்கள் எ—று.

தமக்குத் தீங்குசெய்பவருவனவாகநினைத்தலின் அஞ்சியோடினர். (உஅ)

ஊனிவர் குருதிவே லொருவ னோச்சிய
தானவர் கோன்வளந் தகைந்து விண்ணவர்
மேனிகழ் பதங்களை வீட்டி யேகியே
வானதி தன்னையும் வல்லை தூர்த்தவே.

இ—ள்: ஊன் இவர் குருதி வேல் ஒருவன் ஓச்சிய— தசைப்பற்றுப்பொருந்திய இரத்தந்தோய்ந்த வேற்படையையுடைய வீரவாகுதேவர்செலுத்திய, தான

வர்கோன் வளம்—சூரபன்மனது செல்வப்பொருள்கள், மேல் திகழ் விண்ணவர் பதங்களை தகைந்து வீட்டி— மேலுள்ளனவாகிய தேவர்களுடையஉலகங்களை மூடியழித்து, ஏகி— அப்பாற்போய், வான் நதி தன்னையும் வல்லை தூர்த்த—தேவகங்கையையும் விரைவிற்றூர்த்தன எ—று.

உம்மை-சிறப்பு. (உ௯)

வெறித்திடு தார்ப்புய விடலை நொய்தினிற்
பறித்தெறி யவுணர்கோன் பலவ ளங்களு
மெறித்திடு திங்கதி ரெல்லை வேந்தனை
மறைத்தன பணிபல மயங்கிச் சூழ்ந்தபோல்.

இ—ள்: வெறித்திடு தார் புய விடலை— மணங்கமழுகின்ற மலர்மாலையையணிந்த புயங்களையுடைய வீரவாகுதேவர், நொய்தினில் பறித்து எறி— இலகுவாகப்பிடுங்கியெறிந்த, அவுணர்கோன் பல வளங்களும்— சூரபன்மனது பலவகையானவளங்களெல்லாம், எறித்திடு தீ கதிர் எல்லை வேந்தனை— எறிக்கின்றசுடுகிரணங்களையுடைய சூரியபகவானை, பணி பல மயங்கி சூழ்ந்த போல்— பலசர்ப்பங்கள் கலந்துவளைந்தாற்போல, மறைத்தன—மறைவுசெய்தன எ—று.

நொய்து விரைவுமாம். எல்லைவேந்தன்-பகற்காலத்திற்குத்தலைவன். (௩௦)

சோலையின் மண்டபத் தொகையிற் சூளிகைப்
பாலினிற் சிகரியிற் பயின்ற புள்ளெலா
மேலுறு செலவினில் விரைவி னேகியே
மாலயன் புள்ளொடு மருவி வைகிய.

இ—ள்: சோலையில்—(வீரவாகுதேவராலெறியப்பட்ட)சோலைகளிலும், மண்டப தொகையில்—மண்டபக்கூட்டங்களிலும், சூளிகைப்பாலினில்—வேரங்களிலும், சிகரியில்—கோபுரங்களிலும், பயின்ற புள் எலாம்-வாழ்ந்திருந்தபறவைகளெல்லாம், மேல் உறு செலவினில் விரைவின் ஏகி—மேனோக்கியசெல்லுகையுடன் விரைந்துசென்று, மால் அயன் புள்ளொடு மருவி வைகிய— திருமாலினதும் பிரமதேவரதும் வாகனங்களாகிய பறவைகளோடுபொருந்தியிருந்தன எ—று.

இனமிருக்குமிடத்திற்போய்த்தங்குதல் பறவைகளுக்கியல்பெனக. (௩௧)

செஞ்சுடர்ச் சூளிகை சிகர மாதிகள்
விஞ்சிய மிசைவர விழித்துத் தாளிலா
னெஞ்சிய வுடலமு மிறுங்கொ லின்றெனு
வஞ்சின னழுங்கின னலரி பாகனே.

இ—ள்: செம் சுடர் சூளிகை சிகரம் ஆதிகள்-(வீரவாகுதேவராலெறியப்பட்ட)சிவந்த சோதியைப்பரப்புகின்ற வேரங்களும் கோபுரங்களுமுதலியபொருள்கள், விஞ்சிய மிசை வர—அதிகமாக மேலேவருதலால், தாள் இலோன் அலரி பாகன்—காலில்லாதவனாகிய அருணன், விழித்து—பார்த்து, எஞ்சிய உடலமும் இன்று இறும் கொல் எனு அஞ்சினன்— என்னுடைய மற்றைய உறுப்புக்களும் இற்றைஞான்று அழியுமோவென்றுபயந்து, அழுங்கினன்-வருந்தினன் எ—று.

கொல்-ஐயம். அலரிபாகன்-சூரியனது தேர்ச்சாரதி. பொன்னாற்செய்யப்பட்டனவும் மாணிக்கரத்தினமழுத்தப்பெற்றனவுமாதலின் 'செஞ்சுடர்ச்சூளிகை' என்றார். (௩௨)

வள்ளுறு வசிகெழு வயிர மாமுடி
யுள்ளபல் சூளிகை யும்பர் செல்வன

பிள்ளைக ளெறிந்திடப் பிறங்கு பம்பரம்
பொள்ளென வீண்டிவான் போவ போன்றவே.

இ—ள்: வள் உறு வசி செழு வயிர மா முடி உள்ள பல் குளிகை— நுண்மையான கூர்பொருந்திய வைரத்தினங்கள்பதிக்கப்பெற்ற சிறந்தசிகரங்களையுடைய பலவேரங்கள், உம்பர் செல்வன — (வீரவாகுதேவராலெறியப்பட்டு) ஆகாயத்திற்செல்லுந்தன்மை, பிள்ளைகள் எறிந்திட— பாலர்கள் (விளையாடும்பொழுது) எறிய, பிறங்கு பம்பரம்—விளங்குகின்ற பம்பரங்கள், பொள் என— விரைவாக, ஈண்டி வான் போவ போன்ற—நெருங்கி ஆகாயத்திற்செல்லுதலை நிகர்த்தது எ—று.

வேகமாகச்சுழன்றுசெல்லுதலால் இவ்வாறுவமித்தார். (௩௩)

மீப்படு வியன்முகில் கிழித்து விண்மிசை
மாப்பெருஞ் சிகரிகள் வல்லை செல்வன
நீப்பருங் ககனமா னெடுங்க துப்பினிற்
சீப்பிடு கின்றதோர் செய்கை போலுமால்.

இ—ள்: மா பெரும் சிகரிகள்—(வீரவாகுதேவரெறிந்தமிகப்பெரிய)கோபுரங்கள், மீ படு வியன் முகில் கிழித்து—மேலேபொருந்திய பெரிய மேகங்களைக்கிழித்து. விண் மிசை வல்லை செல்வன—ஆகாயத்தில் விரைவாகச்செல்லுந்தன்மை, நீப்பரும் ககன மான் நெடும் கதுப்பினில்—விலக்குதற்கரிய ஆகாயமாகியபெண்ணினுடைய நெடியகூந்தலில், சீப்பு இடுகின்றது ஓர் செய்கை போலும்—சீப்பிட்டுவாருகின்ற தன்மையைப்போலும் எ—று.

ஆகாயம் பெண்ணாகவும் மேகங்கள் கூந்தலாகவும் கோபுரங்கள் சீப்பாகவும் உவமித்துக்கூறப்பட்டன. நிரையாயிருக்கும் பலமுடிகள் மேகங்களைக்கிழித்துச் செல்லுதலாற் கோபுரம்சீப்புப்போன்றதென்க. (௩௪)

பயனுறு பழுமரப் பைம்பொற் காமர்கா
வயனெறி தந்திட வகல்விண் செல்வன
நயனறு மவுணனூர் நணிய கற்பகம்
வியனுல கிருந்திட மீள்வ போன்றவே.

இ—ள்: பயன் உறு பைம் பொன் பழு மர காமர் கா-பயனைக்கொடுக்கின்றசெம்பொன்னாற்செய்யப்பட்ட பருத்தமரங்கள்நெருங்கிய அழகிய சோலைகள், அயன் எறிதந்திட அகல் விண் செல்வன—வீரவாகுதேவர்வீச அகன்ற ஆகாயத்திற்செல்லுந்தன்மை, நயன் அறும் அவுணன் ஊர் நணிய கற்பகம்—நீதிகேடிய சூரபன்மன்வாழுகின்ற மகேந்திரபுரத்தில் வந்திருந்தகற்பகவிருட்சங்கள், வியன் உலகு இருந்திட மீள்வ போன்ற-சுவர்க்கலோகத்திலிருக்கும்படி திரும்பிச் செல்லுதல்போலும் எ—று.

பயனுறு கா என இயையும். ஐயனென்பது அயனெனவும் நயம் என்பது நயனெனவும்போலியாயின. பலவகைப்பயன்களையுங்கொடுத்தலானும் பொன்னாற்செய்யப்பட்டிருத்தலானும் சோலைக்குக்கற்பகம் உவமையாயிற்று. மீண்டு செல்லுதற்கேதுத்தோன்ற 'நயனறுமவுணனூர்' என்றார். (௩௫)

ஐபன தொற்றுவ னள்ளி வீசிய
செய்யபல் பொருள்களுஞ் செறிந்து சேணெலாங்
கொய்யுளை வயப்பரிக் கொடிஞ்சித் தேர்மிசை
வெய்யவன் செலவினை விலக்கு கின்றவே.

இ—ள்: ஐயனது ஒற்றுவன் அள்ளி வீசிய செய்ய பல் பொருள்களும்-முருகக்கடவுளது தூதராகிய வீரவாகுதேவர் வாரியெறிந்த சிறந்த பலவகையான பொருள்கள்யாவும், சேண் எலாம் செறிந்து—ஆகாயமுழுவதும் நெருங்கி, கொய் உளை வய பரி கொடிஞ்சி தேர் மிசை வெய்யவன் செலவினை- கொய்யப்பட்டபிடர்மயிரையுடைய வெற்றிபொருந்தியகுதிரைகள்பூண்ட கூம்பினையுடையதேரின்மேல் இருக்கின்ற சூரியனது செல்லுகையை, விலக்குகின்ற—தடுக்கின்றன எ—று. (௫௬)

திருமிகு சூளிகை சிகர மாதிக
ணிரல்பட வேகியே நிரந்த பல்வகைப்
பருமணி யெரிசுடர் பரப்பி வான்பட
ரிரவிதன் கதிரையு மிகலி வென்றவே.

இ—ள்: திரு மிகு சூளிகை சிகரம் ஆதிகள் — அழகுமிகுந்த சூளிகைகளும் கோபுரங்களுமுதலியபொருள்கள், நிரல்பட ஏகி-(வீரவாகுதேவரெறிந்தபோது) நிரைபட்டுச்சென்று, நிரந்த பல் வகை பரு மணி எரி சுடர் பரப்பி—நிறைந்த பலவகையான பெரியஇரத்தினங்களின் பேரொளியைப்பரவச்செய்து, வான் படர் இரவி தன் கதிரையும் இகலி வென்ற—ஆகாயத்திற்செல்லுகின்ற சூரியனது ஒளியையும் பகைத்துவென்றன எ—று.

இரத்தினங்களின்சோதியாற் சூரியனதொளியும் குன்றிற்று என்பதாம். ()

மின்னவிர் சிகரிபொன் வேர மாதிக
ளென்னவும் வான்படர்ந் தெழாலின் விஞ்சைய
ருன்னுறு மோங்கலு முவண வைப்பெனும்
பொன்னெயில் வட்டமும் பூழி செய்தவே.

இ—ள்: மின் அவிர் சிகரி பொன் வேரம் ஆதிகள் என்னவும்—வீரவாகுதேவரெறிந்த ஒளிவிளங்குகின்ற கோபுரங்களும் பொன்னாற்செய்யப்பட்ட சூளிகைகளுமுதலாகிய எல்லாப்பொருள்களும், வான் படர்ந்து—ஆகாயமார்க்கத்திற்சென்று, எழாலின் விஞ்சையர் உன்னுறும் ஓங்கலும்—யாழ்ப்பயிற்சியையுடைய வித்தியாதரர்களிருக்கின்ற மதிக்கத்தகுந்த வெள்ளிமலையையும், உவண வைப்பு எனும் பொன் எயில் வட்டமும்—கருடர்களதுஇருப்பிடமாகிய பொன்னாற்செய்யப்பட்ட மதிலையுடைய உலகத்தையும், பூழிசெய்த— துகளாக்கின எ—று. (௫௮)

குன்றொடு சூளிகை கோபு ரம்பிற
வொன்றுட னொன்றுபட் டுரிஞ்சி யாயிடைத்
துன்றிய மணிதிசை தோறுஞ் சிந்துவ
மின்றிகழ் தாரகை விளிந்து வீழ்வபோல்.

இ—ள்: குன்றொடு சூளிகை கோபுரம் பிற—வீரவாகுதேவரெறிந்த செய்குன்றுகளும் வேரங்களும் கோபுரங்களும் பிறபொருள்களும், ஒன்றுடன் ஒன்று பட்டு உரிஞ்சி—ஒன்றோடொன்றுபட்டுத்தாக்குதலால், ஆயிடை துன்றிய மணி—அவற்றிலழுத்தப்பெற்றிருந்த இரத்தினங்கள், மின் திகழ் தாரகை விளிந்து வீழ்வ போல்—ஒளிவிளங்குகின்ற விண்மீன்கள் அழிந்துவிழுவதுபோல, திசைதோறும் சிந்துவ—திக்குகடோறுஞ்சிதறுவன எ—று. (௫௯)

பொற்றைகள் சிகரகோ புரங்க டத்தமி
லெற்றுழிப் புகையெழ வெழுந்து பூழிகள்
சுற்றிய புலிங்கமுந் தோன்று கின்றன
வெற்றவெம் புயல்களு மின்னும் போலவே.

இ—ள்: பொற்றைகள் சிகர கோபுரங்கள்—செய்குன்றுகளும் முடிகளையுடைய கோபுரங்களும், தத்தமில் எற்றுழி—ஒன்றோடொன்று தாக்கும்பொழுது, வெற்ற வெம் புயல்களும் மின்னும் போல—வெறுமையான கொடிய மேகங்களையும் அவற்றிற்றோன்றும் மின்னலையும்போல, பூழிகள் புகை என எழுந்து சுற்றிய— தூளிகள் புகையைப்போலத்தோற்றிச்சூழ்ந்தன, புலிங்கமும் தோன்றுகின்றன—பொறிகளுந்தோற்றின எ—று.

மழைபெய்யாதனவும் இடிமுதலியவற்றால் அஞ்சுவிப்பனவுமாதலின் 'வெற்றவெம்புயல்' என்றார். பூழிக்குமேகமும் பொறிக்குமின்னலும் உவமை. (சo)

ஏழுயர் களிறனா னெறிந்த யாவையுஞ்
சூழுற வானிடைத் துவன்ற வெற்றலிற்
கேழுறு நுண்டுகள் கெழுமிச் சிந்துவ
பூழியி னெடுமழை பொழியுந் தன்மைபோல்.

இ—ள்: ஏழ் உயர் களிறு அனான் எறிந்த யாவையும்—எழுமுழமுயர்ந்த யானையைநிகர்த்த வலியையுடைய வீரவாகுதேவர் எடுத்தெறிந்த பொருள்களெல்லாம், சூழுற வான் இடை துவன்ற—கூட்டமாக ஆகாயத்தில்நெருங்கும்பொழுது, எற்றலின்—(ஒன்றோடொன்று) தாக்குதலால், பூழியின் நெடு மழை பொழியும் தன்மை போல்-நெடிய புழுதியாகியமழை பெய்யுந்தன்மைபோல, கேழ் உறு நுண் துகள் கெழுமி சிந்துவ—நிறம்பொருந்திய நுண்மையாகிய தூளிகள்செறிந்து சிதறுவன எ--று.

இராசயானையென்பார் 'ஏழுயர்களிறு' என்றார். (சக)

ஆரிய னோச்சிய வணிகொண் மண்டபம்
வேரமொ டகன்பொழில் பிறவும் விண்ணுறீஇத்
தாரகை முதற்சுடர்த் தனுக்கள் சார்ந்திடச்
சோரியு மிடையிடை துளித்த தென்பவே.

இ—ள்: ஆரியன் ஓச்சிய அணி கொள் மண்டபம்-வீரவாகுதேவரெறிந்த அழகிய மண்டபங்களும், வேரமொடு—சூளிகைகளும், அகன் பொழில்—பரந்த சோலைகளும், பிறவும்—மற்றையபொருள்களும், விண் உறீஇ—ஆகாயத்திற்போய், தாரகை முதல் சுடர் தனுக்கள் சார்ந்திட—நட்சத்திரங்கள்முதலிய சோதிகளின்மேனிகளிற்படுதலால், சோரியும் இடை இடை துளித்தது—இரத்தநீரும் இடையிடையே சிந்தியது எ---று.

ஆரியன்-பூசிக்கப்படத்தக்கவர். ஒடு எண். பிந்திய உம்மை எச்சம். (சஉ)

புந்தியி லான்மகம் புகுந்த தீமையா
லிந்திர னாதியோர் யாருஞ் சூரனா
னொந்தன ரவனகர் வளமு நோவுற
வந்தரத் தவரையு மலக்கண் செய்தவே.

இ—ள்: இந்திரன் ஆதியோர் யாரும்—இந்திரன்முதலாயுள்ள தேவர்களனைவரும், புந்தி இலான் மகம் புகுந்த தீமையால்—நற்புத்தியில்லாதவனாகிய தக்கனது யாகத்திற்போயிருந்தபாவத்தினால், சூரனால் நொந்தனர்—முன் சூரபன்மன் வருத்த வருந்தினார்கள், அவன் நகர் வளமும்—அச்சூரபன்மனது மகேந்திரநகரத்திலுள்ள வளங்களும், நோ உற—வருத்தமிகும்படி, அந்தரத்தவரை—வானுலகத்தாரை, அலக்கண் செய்த—(இப்பொழுது) வருத்தின எ—று.

பிந்திய உம்மை அசைநிலை. சூரபன்மன்வருத்தியதேயன்றி அவனுடைய பொருள்களும் வருத்தின என்பதாம். (சங)

வெற்புறழ் மொய்ம்பினன் விடுத்த சூளிகை
பற்பல பொருந்தலும் பட்ட வன்னிபோ
யெற்படு கதிருடை யிரவி பச்சைமாப்
பொற்புறு கொய்யுளை பூழி செய்ததே.

இ—ள்: வெற்பு உறழ் மொய்ம்பினன் விடுத்த சூளிகை பற்பல—மலையை நிகர்த்த புயங்களையுடைய வீரவாகுதேவரெறிந்த வேரங்கள்பலவும், பொருந்தலும்—ஒன்றொடொன்றுதாக்க, பட்ட வன்னி போய்—தோற்றியதீப்பொறிசென்று, எல் படு கதிர் உடை இரவி பச்சை மா—ஒளிபொருந்திய கிரணங்களையுடையசூரியனது பச்சைநிறக்குதிரைகளிலுள்ள, பொற்பு உறு கொய்யுளை—பொலிவார்ந்த பிடர்மயிரை, பூழிசெய்தது—நீறாக்கியது எ—று.

இச்செய்யுளாற் சூளிகையின்செறிவும் தீப்பொறியின்மிகுதியுங்குறிக்கப்பட்டன. (சச)

பொன்னவிர் சிகரகோ புரங்க ளாதிய
துன்னிய தாக்கலிற் றோன்றித் தீப்பொறி
யின்னுயிர் வழங்கிய வெல்லை யெங்கணும்
வன்னிபெய் மழையென மயங்கி வீழ்பவே.

இ—ள்: பொன் அவிர் சிகர கோபுரங்கள் ஆதிய—பொன்மயமாகவிளங்குகின்ற சிகரங்களையுடைய கோபுரமுதலியபொருள்களெல்லாம், துன்னிய தாக்கலில்—நெருங்கி (ஒன்றோடொன்று) முட்டுதலால், தீ பொறி தோன்றி—அக்கினிப்பொறிகளுண்டாகி, இன் உயிர் வழங்கிய எல்லை எங்கணும்—இனியஉயிர்கள்சஞ்சரிக்கின்ற இடங்களெங்கும், வன்னி பெய் மழை என—அக்கினிமழையென்றுநினைக்கும்படி, மயங்கி வீழ்ப—இடைவெளியின்றிச்சிந்துவன எ—று.

துன்னிய-முற்றெச்சம். வன்னிபெய்மழை-அக்கினியாகப்பெய்கின்றமழை. மயங்கல்-கலத்தல். (சரு)

வழுவுறு மவுணர்கோன் வளங்கள் யாவையுங்
கெழுதகு விசும்பினைக் கிழித்துச் சேறலி
னெழிலிகள் வயிறுடைந் திரங்கி யாற்றலா
தழுதென வுலகெலா மறல்சிந் துற்றவே.

இ—ள்: வழு உறும் அவுணர்கோன் வளங்கள் யாவையும்—குற்றம்பொருந்திய சூரபன்மனுடையநகர்ப்பொருள்களெல்லாம், கெழுதகு விசும்பினை கிழித்து சேறலின்—தமக்கணித்தான ஆகாயத்தைப்பிளந்து மேற்செல்லுதலால், எழிலிகள்—மேகங்கள், வயிறு உடைந்து இரங்கி—வயிறுகிழியப்பெற்று வருந்தி, ஆற்றலாது அழுது என—சகிக்கமுடியாமலழுதாற்போல, உலகு எலாம் அறல் சிந்துற்ற—நிலவுலகமெங்கும் நீரைச்சொரிந்தன எ—று.

வழுவுறும்-நீதிநெறியின்வழுவியஎனினுமாம். ஐ-சாரியை. வயிறுகிழிந்துநீர்சிந்துதல் அழுதுகண்ணீர்சிந்துதல்போலுமென்பதாம். (சசு)

வேறு.

ஏசிலா வறிவன் விட்ட வின்னபல் வெறுக்கை யாவு
மாசகல் விசும்பி னேகி மதிமுடி யருள்பெற் றுள்ள
கோசிகன் றுறக்க முய்த்த கொற்றவன் றவறி யென்ன
வாசுற மீண்டு ஞாலத் தகிலமும் வீழ்ந்த வன்றே.

இ—ள்: ஏசு இலா அறிவன் விட்ட இன்ன பல் வெறுக்கை யாவும்—பழிக்கத்தகாதபேரறிவையுடைய வீரவாகுதேவரெறிந்த இத்தன்மையானபலபொருள்க

ளெல்லாம், மாசு அகல் விசும்பின் ஏகி—குற்றமற்றஆகாயத்திற்போய், மதிமுடி அருள் பெற்று உள்ள கோசிகன் துறக்கம் உய்த்த கொற்றவன் தவறி என்ன—சிவபிரானதுதிருவருளைப்பெற்றுள்ள விசுவாமித்திரமுனிவரால் சுவர்க்கலோகத்திற்புகும்படியெறியப்பட்ட திரிசங்குராசன் (அங்குள்ளதேவரேற்றுக்கொள்ளாமையால்) மீட்டும்பூமியைநோக்கிவந்தாற்போல, ஆசு உற மீண்டு—விரைவாகத்திரும்பி, ஞாலத்து அகிலமும் வீழ்ந்த—பூமியில் எல்லாவிடங்களிலும் விழுந்தன எ—று.

மதிமுடி-சந்திரனைமுடியிலணிந்தார்; அன்மொழித்தொகை. விசுவாமித்திரமுனிவர் திரிசங்குராசனைச்சுவர்க்கத்தெறிந்தசரித்திரம் ஆற்றுப்படலத்து இருபத்திரண்டாஞ்செய்யுளிற்குறிக்கப்பட்டது. (சஎ)

படிதனிற் றிசையின் பாலிற் பௌவத்திற் பழுவந் தன்னிற்
றடவரை தன்னி லின்ன தகையன பிறவிற் சூர
னுடையபல் வளங்க ளெல்லா முரற்றியே வீழ வாண்டு
மிடைதரு முயிரின் பொம்மல் வெருவிவீழ்ந் திரித லுற்ற.

இ—ள்: படி தனில்—பூமியிலும், திசையின் பாலில்—திக்குகளிலும், பௌவத்தில்—கடல்களிலும், பழுவம் தன்னில்—காடுகளிலும், தட வரை தன்னில்—விசாலமானமலைகளிலும், இன்ன தகையன பிறவில்—இவைபோன்றபிறபொருள்களிலும், சூரன் உடைய பல் வளங்கள் எல்லாம் உரற்றி வீழ—சூரபன்மனுடைய பலவகையான செல்வப்பொருள்களெல்லாம் இரைந்துகொண்டுவிழ, ஆண்டு மிடைதரும் உயிரின் பொம்மல்—அவ்விடங்களில் நெருங்கியிருந்த உயிர்க்கூட்டங்கள், வெருவி வீழ்ந்து இரிதலுற்ற—பயந்துவிழுந்து ஓடின எ—று.

பொருள்கள் விழுந்தோறும் அச்சத்தாற் கால்பதறியோடினவென்க. (சஅ)

அலைந்தது பரிதி யோங்க லதிர்ந்தது மேருச் சையங்
குலைந்தது சூழுங் குன்றங் குலுங்கிய வசல மேழுங்
கலைந்தது நாகர் வைப்புங் கலங்கிய கடலும் பாரு
முலைந்தன வுயிர்கண் முற்று மோடின திசையின் யானை.

இ—ள். பரிதி ஓங்கல் அலைந்தது—சக்கரவாளமலை அலைந்தது, மேரு சையம் அதிர்ந்தது—மேருமலை நடுங்கியது, சூழும் குன்றம் குலைந்தது—அதனைச்சூழ்ந்திருக்கின்றநான்குமலைகளும் நிலைதவறின, அசலம் ஏழும் குலுங்கிய—ஏழுகுலாசலங்களும் குலுங்கின, நாகர் வைப்பும் கலைந்தது-நாகலோகமும் நிலைபெயர்ந்தது, கடலும் பாரும் கலங்கிய—சமுத்திரமும் பூவுலகமும்கலக்கமடைந்தன, உயிர்கள் முற்றும் உலைந்தன—உயிர்களெல்லாம் அலைந்தன, திசையின் யானை ஓடின—திக்குயானைகள் ஓடின எ—று.

நான்குமலைகள் அண்டகோசப்படலத்து முப்பத்தோராஞ்செய்யுளாலும் குலாசலங்களேழும் ஷெடிபடலத்து நாற்பத்தேழாஞ்செய்யுளாலும் கூறப்பட்டன. சூழுங்குன்றம் என்றது மாலியவான்முதலிய எட்டுமலைகளையெனினுமாம். அவை ஷெடி படலத்து முப்பத்துநான்காஞ்செய்யுளிற்கூறப்பட்டன. முற்செய்யுளிலுள்ள வீழ என்னுமெச்சத்தை இச்செய்யுட்குமியைக்க. (சகூ)

தண்படு தொடலை மார்பன் றனெறிந் தவற்றிற் பல்வே
றெண்புவி முழுதுஞ் சிந்திற் றொழிந்தன வுலப்பி லாத
வெண்பதி னுயி ரப்பே ரியோசனை யெல்லைத் தாகிக்
கண்படு சூர னூரிற் கல்லென வீழ்ந்த மாதோ.

இ—ள்: தண் படு தொடலை மார்பன் எறிந்தவற்றில்—குளிர்ச்சிபொருந்திய மலர்மாலையையணிந்தமார்பையுடைய வீரவாகுதேவர்வீசியவற்றுள், பல்வே

று ஒள் புவி முழுதும் சிந்திற்று—பலவகையானபொருள்கள் சிறந்தபூவுலகமெங்கு ஞ்சிதறின, ஒழிந்தன—எஞ்சியவைகள், உலப்பு இலாத எண்பதினாயிர பேர் யோசனை எல்லைத்து ஆகி கண் படு சூரன் ஊரில்—குறைவுபடாதஎண்பதினாயிரமென் னுந்தொகைப்பட்டயோசனையளவையுடைத்தாகி விசாலித்திருக்கின்ற சூரபன்ம னதுநகரத்தில், கல் என வீழ்ந்த—கல்லென்னுங்குறிப்பொலியுடன் விழுந்தன எ—று.

நகரமெங்கும்வீழ்ந்தன பிறவிடங்களினும்வீழ்ந்தன என்பதாம். ஒழிந்தன வீழ்ந்த எனஇயையும். பல்வேறு சிந்திற்று-பன்மையிலொருமைமயங்கியது. (௫௦)

முடிந்திட லரிய சூரன் மொய்வள மவனூர் முற்றுந்
தடிந்தெறி யுருமே றென்னத் தணப்பற வீழ்த லோடு
மிடிந்தன மாட வீதி யாவையுங் கடிகா விற்ற
பொடிந்தன சிகரி யாதி புரிசைகண் மறிந்து மாண்ட.

இ—ள்: முடிந்திடல் அரிய சூரன் மொய் வளம்--அழிதலில்லாதசூரபன்ம னதுதொகுதியாகிய செல்வப்பொருள்கள், அவன் ஊர் முற்றும்—அவனுடை யநகரமெங்கும், தடிந்து எறி உருமேறு என்ன தணப்பு அற வீழ்தலோடும்—மி ன்னிவிழுகின்ற இடியைப்போல ஒழிவின்றிவிழ, மாட வீதி யாவையும் இடிந் தன—மாடநிரைகளெல்லாம் இடிந்தன, கடி கா இற்ற—மணங்கமழுகின்றசோ லைகள் அழிந்தன, சிகரி ஆதி பொடிந்தன—கோபுரமுதலியவைகள் துகளாயின, புரிசைகள் மறிந்து மாண்ட—மதில்கள்விழுந்து அழிந்தன எ—று.

வீதி-நிரை. பேரொலியோடுஅதிர்ந்துவிழுதலின் இடிவீழ்தலையுவமித்தார்.

மண்டபஞ் சிகரி வேர மணிமதின் மாட கூட
மெண்டகு பொதியின் முற்று மிடிபட வெழுபொற் பூழி
விண்டொடு திசைபா ரியாண்டும் வெறுக்கையின் வடிவ மாக்கி
யண்டர்த முலகீ தென்றே யறிகுறு வகைசெய் தன்றே.

இ—ள்: மண்டபம்—மண்டபங்களும், சிகரி—கோபுரங்களும், வேரம்—சூளிகைகளும், மணி மதில்—அழகியமதில்களும், மாட கூடம்—மாடங்களும் கூடங்களும், எண் தகு பொதியில் முற்றும்--மதிக்கத்தகுந்தசபைகளுமாகிய இவையெல்லாம், இடிபட—இடிந்துவிழுதலால், எழு பொன் பூழி --கிளருகின்ற பொற்றுகளானது, விண்டொடு திசை பார் யாண்டும்—ஆகாயமும் திக்குகளும் பூமியும் ஆகியஎல்லாவிடங்களையும், வெறுக்கையின் வடிவம் ஆக்கி—பொன்மயமாகச்செய்து, அண்டர் தம் உலகு ஈது என்று அறிகுறு வகை--தேவருலகமிதுவென்று எவரும்வேற்றுமையுணராவண்ணம், செய்தன்று—செய்தது எ—று.

மண்ணுலகமுதலியனவும் பொன்னுலகமும் வேற்றுமைதோன்றாது ஒருநிறமாயின என்பதாம். (௫௨)

புடையகல் பொன்செய் மூதூர் பொள்ளெனத் தகர்ந்து வீழ
மிடைதரு வீதி முற்று மேயின சனங்கள் பூசல்
கடைவரு நாள தெல்லைக் ககனமு தண்ட கூட
முடைதலு முடியு மாவி யாற்றுமா றொத்த தன்றே.

இ—ள்: புடை அகல் பொன் செய் முது ஊர் பொள் என தகர்ந்து வீழ—இடமகன்ற பொன்னாற்செய்யப்பட்ட பழைய அந்நகரம் விரைவாகஉடைந்துவிழுந்தபொழுது, மிடைதரு வீதி முற்றும் மேயின சனங்கள் பூசல்—நெருங்கிய வீதிமுழுவதிலுமுலாவிய சனங்கள்செய்த ஆரவாரம், கடைவரும் நாளது எல்

லை- ஊழிக்காலத்தினெல்லையில், ககன முது அண்டகூடம் உடைதலும்- ஆகாயத்திலுள்ள பழைய அண்டச்சுவர்உடைய, மூடியும் ஆவி அரற்றுமாறு ஒத்தது— இறக்கின்றஆன்மாக்கள் அழுகின்றஒசையை நிகர்த்தது எ—று.

மகேந்திரநகரழியும்பொழுது அசுரர்களெல்லாருஞ்செய்த இரைதலோசை உலகமுடியுங்காலத்தில் உயிர்களெல்லாஞ்செய்யுமிரைதலோசையை நிகர்த்தது என்பதாம். (௫௩)

வேறு.

நாக முந்து நறுநிழன் மாதவி
நாக முந்து நறுநிழற் பொற்கணி
சேக ரம்பல சிந்திடு காழுடைச்
சேக ரம்பல வோடு சிதைந்தவே.

இ—ள்: நாகம் உந்தும் நறு நிழல் மாதவி—ஆகாயமளவுமுயர்ந்த நறுமையுங்குளிர்மையுமுள்ள குருக்கத்திமரங்களும், நாகம்—புன்னைமரங்களும், முந்தும் நறு நிழல் பொன் கணி- முதன்மையான நல்லநிழலையுடைய அழகிய வேங்கைமரங்களும், சேகரம் பல சிந்திடு காழ் உடை சேகரம்- பலகிளைகளைப்பரப்பிநிற்கின்ற வைரத்தையுடைய மாமரங்களும், பலவோடு சிதைந்த—பலமரங்களுடன் அழிந்தன எ—று.

இதுமுதலைந்துசெய்யுட்கள் மடக்கென்னும்வனப்புடையன. குருக்கத்தியைக்கொடியென்பர்சிலர்; ஆசிரியர்க்கு அது உடன்பாடின்மையின் மரவகையிற்சேர்த்துக்கூறினர். சேகு அரம் பல சிந்திடு எனக்கண்ணழித்து வைரமானபல அரங்களையுஞ்சிதைக்கத்தக்க எனப்பொருள்கூறினுமாம். (௫௪)

கோட ரங்குல வுற்றிட வான்றொடுங்
கோட ரங்குல வுற்றிடு தண்டலைக்
கோட ரங்குலங் கோலஞ்செய் பொன்வரைக்
கோட ரங்குல வுற்றிறை கொண்டவே.

இ—ள்: கோள் தாங்கு உலவுற்றிட வான் தொடும்-கிரகங்களுடைய தடைப்படுகை உண்டாகும்படி ஆகாயத்தையளாவியிருக்கின்ற, கோடரம் குலவுற்றிடு- கொம்பர்கள்பொருந்திய, தண் தலை கோடரம்—செழித்த தலைகளையுடைய சோலைகளும், குலம்—கோயில்களும், கோலம் செய் பொன் வரை கோடு--அழகைச்செய்கின்ற பொன்மயமானசெய்குன்றுகளின் சிகரங்களும், அரங்கு- சபைகளும், உலவுற்று இறைகொண்ட— அழிந்துகிடந்தன எ—று.

தாங்கு-தடை; துன்பமெனினுமாம். (௫௫)

ஓடும் வாவியின் மீனின மோங்குபுள்
ளோடும் வாவியின் னுற்றிட வீதியின்
மாட மாலை வரிசையின் மல்கிய
மாட மாலை மறிந்திடி பட்டதே.

இ—ள்: வாவியில் ஓடும் மீன் இனம்- வாவிகளிலியங்குகின்றமீன்கூட்டங்கள், ஓங்கு புள்ளோடும் வாவி- உயர்ந்துபறக்கின்றபறவைகளோடுந்தாவி, விண் உற்றிட—ஆகாயத்திற்செல்லும்வண்ணம், வீதியின் மாடு— வீதிகளின்பக்கங்களில், அம் மாலை வரிசையில் மல்கிய —அழகியபூமாலைகள் நிரையாகத்தூக்கப்பெற்றிருக்கின்ற, மாட மாலை- மாடநிரை, மறிந்து இடிபட்டது- இடிந்துவிழுந்தது எ—று.

மறிந்திடிபட்டது என்பதை இடிபட்டுமறிந்தது எனக்கூட்டுக. உற்றிட இடிபட்டது என இயையும். அச்சத்தினால் மீனினங்கள் தாவிப்பாய்ந்தனவென்க.

அண்ட ரண்டரு மந்நகர் மாண்டன
வண்ட ரண்ட மளவிடு சூளிகை
மண்ட பம்மதின் மாடந் தரித்தயர்
மண்ட பம்மதின் மாதவம் யாவதே.

இ—ள்: அண்டு அரண் தரும் அ நகர் மாண்டன—நெருங்கியகாவலையுடைய அந்தமகேந்திரநகரத்தில் மாட்சிமைபெற்றிருந்த, அண்டர் அண்டம் அளவிடு சூளிகை—தேவருலகத்தையளாவியுயர்ந்த வேரங்களையும், மண்டபம்—மண்டபங்களையும், மதில்—மதில்களையும், மாடம்—மாடங்களையும், தரித்து அயர்—சுமந்துவருந்துகின்ற, மண்—பூமிதேவிசெய்த, தபம் அதில்—தவத்தினும்பார்க்க, மாதவம் யாவது—சிறந்ததவம்வேறியாது? எ—று.

வேரமுதலியவெல்லாமிடிந்து வீழ்ந்துகிடப்பது நிலமகட்கணிகலம்போலிருத்தலின் 'மண்டபம்மதின்மாதவம்யாவது' என்றார். அண்டர் அண்டு அரும் எனப்பிரித்துப் பகைவராணுகுதற்கரிய எனப்பொருள்கூறினுமாம். தபம் விகாரப்படாதுநின்ற வடசொல். மாண்டன அழிந்துவீழ்ந்தனவாகியஎனினுமாம். (௫௭)

பூவை யன்ன மணிமயில் பொற்புறு
பூவை யன்ன மணிமயில் பொற்புறா
வாவி யோடைவண் டான மழிந்திட
வாவி யோடைவண் டான மழியுமால்.

இ—ள்: பூவை அன்ன மணி மயில்—காயாம்பூவைநிகர்த்தகரியமயில்களும், பொற்பு உறு பூவை—அழகுபொருந்திய நாகணவாய்களும், அன்னம்—அன்னப்பறவைகளும், அணி மை இல் பொன் புறா—அழகிய குற்றமற்றபொன்மயமான புறாக்களும், வாவி ஓடு ஐ வண்டானம்—தாவிநடக்கின்ற அழகிய கொய்யடிநாரைகளும், அழிந்திட—அழிய, வாவி ஓடை வண் தானம் அழியும்—வாவிகளும் ஓடைகளுமிருக்கின்ற வளமார்ந்த இடங்கள் அழியும் எ—று.

மையில் என்பது போலியாயிற்று. பறவைகளும் அவைவாழ்தற்கிடமான இடங்களும் அழிந்தன என்பதுகருத்து. (௫௮)

மொய்யு டைத்தறி மோதித் தளைபரீஇ
மையு டைப்பெரு மால்கரி சோரிநீர்
மெய்யி டத்துக விண்முகி லச்சுறக்
கையெ டுத்துக் கதறி யுடைந்தவே.

இ—ள்: மை உடை பெரு மால் கரி—கருநிறம்பொருந்திய பெரியமதமயக்கத்தையுடைய யானைகள், மொய் உடை தறி மோதி—வலிமையையுடைய கட்டுந்தறிகளை மோதி, தளை பரீஇ—விலங்கைவிலவித்து, மெய் இடத்து சோரி நீர் உக—சரீரத்தினின்றும் இரத்தவெள்ளஞ்சிந்த, விண் முகில் அச்சுற—ஆகாயத்திலுள்ள மேகங்களும்பயப்படும்படி, கை எடுத்து கதறி உடைந்த—துதிக்கையையுயர்த்திப்பிளிறிக்கொண்டு ஓடிப்போயின எ—று.

பரீஇ—பிறவினை. சிறப்பும்மைதொக்கது. இரத்தநீர்சிந்தியது அவைநிற்குமிடங்கள் இடிந்து மேனியில்விழுதலால். மேகங்களஞ்சுவது தம்முழக்கத்தினும் பெரியவொலியைத்தோற்றுவித்தல்பற்றி. பிடுங்குதற்கியலாத தறியென்பார் 'மொய்யுடைத்தறி' என்றார். (௫௯)

ஈடு சான்ற வெருத்த முரிந்திட
நீடு பூநுத னெக்குறக் கிம்புரிக்
கோடு சிந்தக் குருதி யுகுத்தநீரா
வோடி வீழ்வ வுவாக்க ளரற்றியே.

இ—ள்: உவாக்கள்— யானைகள், ஈடு சான்ற எருத்தம் முரிந்திட—வலிமை மிகுந்த பிடர்முரியவும், நீடு பூ நுதல் நெக்குற— நெடிய பொலிவார்ந்தநெற்றி உடையவும், கிம்புரி கோடு சிந்த— பூணையணிந்தகொம்புகள் சிதறவும், குருதி உகுத்து— இரத்தநீரைச்சிந்தி, அரற்றி—கதறி, ஓடி வீழ்வ— ஓடிப்போய்விழுவன எ—று. (கூ0)

கார்கொள் சிந்துரங் காயத் திடையிடைச்
சோரி சோர்தரத் தோன்றுவ வீற்றினின்
மேரு வாதி விலங்கலை மெய்க்கனல்
சாரும் வெம்புகை தன்னொடுஞ் சூழ்ந்தபோல்.

இ—ள்: கார் கொள் சிந்துரம்— கருநிறத்தையுடையயானைகள், காயத்து இடையிடை சோரி சோர்தர—சரீரத்தில் இடையிடையேஇரத்தஞ்சிந்த, மெய் கனல்—சிறந்தவடமுகாக்கினி, ஈற்றினில்—உலகமழியுங்காலத்தில், மேரு ஆதி விலங்கலை-மேருமுதலிய மலைகளை, சாரும் வெம் புகை தன்னொடும் சூழ்ந்த போல்- தன்னைச்சார்ந்திருக்கின்றகொடியபுகையுடன் வளைந்தாற்போல, தோன்றுவ— தோன்றுவன எ—று.

யானைகள் கருநிறமானமேனியில் இடையிடை இரத்தம்பாயநிற்றல் புகையும் அக்கினியுஞ்சூழ மலைகள்நிற்றல்போலும் என்பதாம். இயற்கையாயுள்ளகருநிறத்தி ற்குப் புகைசூழ்தலும் இரத்தம்வடிவதற்கு அக்கினிசூழ்தலும் உவமை. (கூக)

கொடிக ளிற்ற கொடிஞ்சி முரிந்தன
விடைகொள் பீடிகை யெல்லைக ணெக்கன
வடிகொள் சில்லியு மாருஞ் சிதைந்தன
பொடிய தாகிப் புரண்டன தேர்களே.

இ—ள்: கொடிகள் இற்ற-கொடிகள் அழிந்தன, கொடிஞ்சி முரிந்தன-கூம்புகள் முரிந்தன, இடை கொள் பீடிகை எல்லைகள் நெக்கன—நடுவிலிருக்கின்றபீடத்தட்டுகளும் அழிந்தன, அடி கொள் சில்லியும் ஆரும் சிதைந்தன—கீழ்ப்பக்கத்திற்பொருந்திய சிற்களும் அச்சாணிகளும் அழிந்தன, தேர்கள் பொடியது ஆகி புரண்டன— (இவ்வாறே) தேர்கள் துகளாயழிந்து புரண்டன எ—று.

மேலும்நடுவும்கீழுமாகிய மூவகையிடங்களிலுமுள்ளஉறுப்புக்களெல்லாமழிந்தன என்பதுகருத்து. (கூஉ)

பந்தி தோறும் பராவிய வைங்கதிக்
கந்து கங்கள் கலங்கி நெரிந்திட
நொந்து மேனி நொறில்வரு செம்புனல்
சிந்தி யோடச் சிதறிய திக்கெலாம்.

இ—ள்: பந்தி தோறும் பராவிய ஐங்கதி கந்துகங்கள்—பந்திகடோறும் பரந்துநின்ற ஐந்துவகையான கதிகளையுடைய குதிரைகள், கலங்கி—கலக்கமுற்று, மேனி நொந்து நெரிந்திட—சரீரம்நோவடைந்துநெரிய, நொறில் வரு செம்புனல் சிந்தி ஓட— விரைவாகவருகின்ற இரத்தநீர்சிந்திப்பாய, திக்கு எலாம் சிதறிய—எல்லாத்திக்குகளிலுஞ்சிதறியோடின எ—று.

ஐங்கதிகள் நகர்புகுபடலத்து மூன்றூஞ்செய்யுளிற்கூறப்பட்டன. (கூங)

சிதவல் கொண்டிடு செம்மயிர்க் கொய்யுளை
மதுகை வெம்பரி வாய்களின் வீழ்தரு
முதிர வாரி யொலிகடற் புக்கதா
லிதுகொ லோவட வைக்கன லென்னவே.

இ—ள்: சிதவல் கொண்டிடு செம் மயிர்—சிதறியிருக்கின்ற சிவந்தமயிர்களையும், கொய் உளை—கொய்யப்பட்டபிடர்மயிரையுமுடைய, மதுகை வெம் பரி—வலிய கொடியகுதிரைகளினது, வாய்களின் வீழ்தரும்—வாய்களினின்று சிந்துகின்ற, உதிர வாரி—இரத்தவெள்ளம், வடவை கனல் இது கொல் என்ன—வடவாமுகாக்கினியிதுவோவென்று கண்டோரையுறும்படி, ஒலி கடல் புக்கது—ஒலிக்கின்ற கடலிற்பாய்ந்தது எ—று.

உடல்நெரிதலால் வாயினின்றுஇரத்தஞ்சிந்தியதென்க. குதிரைகளின்முகத்திற்றோன்றிக்கடலிற்புகுதலானும் செந்நிறமுடைமையானும் வடவாமுகாக்கினியையுவமித்தார். சிதவல்-சிதறுதல். (௬௪)

காள வெங்கரிக் காலின் வயப்பரித்
தாளி னூடகப் பட்டுத் தரைபுகா
மூளை சிந்த முழுதுடல் பூழியாய்
மாளு கின்றனர் மாநக ரோர்சிலர்.

இ—ள்: காள வெம் கரி காலின்—கருநிறம்பொருந்திய கொடியயானைகளின் கால்களிலும், வய பரி தாளின் ஊடு—வெற்றிபொருந்தியகுதிரைகளின் கால்களிலும், அகப்பட்டு—உட்பட்டு, தரை புகா-நிலத்திலழுந்தி, மூளை சிந்த—மூளைகள்சிதற, முழுது உடல் பூழி ஆய்—சரீரமுழுதுந்துகளாகி, மாளுகின்றனர்—இறக்கின்றார்கள், மா நகரோர் சிலர்— சிறந்த அந்நகரத்திலுள்ளவர்களுட்சிலர் எ—று.

தரைபுகா மாளுகின்றனர் என இயையும். (௬௫)

ஆளி மொய்ம்புடை யண்ணன்முன் வீசின
நீளு மாநகர் ஞெள்ளலின் வீழ்தலுந்
தோளி ழந்து சுவன்முரிந் தொய்யெனத்
தாளி ழந்து தாங்கமுற் றார்சிலர்.

இ—ள்: ஆளி மொய்ம்பு உடை அண்ணல் முன் வீசின—வலியபுயங்களையுடைய வீரவாகுதேவர் முன்னேயெடுத்தெறிந்தபொருள்கள், நீளும் மா நகர் ஞெள்ளலின் வீழ்தலும்—நெடிய பெரிய அந்நகரத்தின்வீதிகளில் விழுதலால், தோள் இழந்து—புயங்களையிழந்து, சுவல் முரிந்து—பிடர்முரியப்பெற்று, ஒய் என தாள் இழந்து—விரைவாகக்கால்களையுமிழந்து, தாங்கம் உற்றார் சிலர்—துன்பத்தையடைந்தார்கள் சிலர் எ—று.

ஆளி ஆகுபெயர். ஒருங்கே நிகழ்ந்தனவென்பார் 'ஒய்யென' என்றார். முற்செய்யுளிலுள்ள மாநகரோர் என்பதை இச்செய்யுட்கும் மேலும் வேண்டிய செய்யுட்களுக்கும் இயைத்துரைக்க. (௬௬)

பொற்றை யன்ன பொலன்மணி மாளிகை
யிற்று வீழ்தலு மென்னிது வென்றெழீஇ
வெற்ற வெள்ளிடை மேவுதன் முன்னியே
முற்றம் வந்திடு முன்மறிந் தார்சிலர்.

இ—ள்: பொற்றை அன்ன பொலன் மணி மாளிகை இற்று வீழ்தலும்— மலையைநிகர்த்த பொன்னாற்செய்யப்பட்ட இரத்தினங்களழுத்தப்பெற்ற மாளிகை

கள் இடிந்துவிழ, இது என் என்று எழீஇ- இச்சம்பவம் யாதென்றுநினைத்து எழும்பி, வெற்ற வெள்ளிடை மேவுதல் முன்னி-வெறுமையான வெளியிடத்திற் போகநினைத்து, முற்றம் வந்திடு முன்-முற்றத்தில்வருதற்குமுன்னே, மறிந்தார் சிலர்—விழுந்தார்கள் சிலர் எ—று.

வீழ்வனதம்மேற்படக்கூடாத வெளியிடமென்பார் 'வெற்றவெள்ளிடை' என்றார். இடிந்தமாளிகை தம்மேல் வீழ்தலால் அழிந்தாரென்க. (சு௭)

ஊடு மைந்தரு மொண்டொடி மாதரு
மாட மோடு மறிந்தனர் தம்முடல்
வீடி விண்மிசை வேற்றுரு வெய்தியே
கூடி யேவழிக் கொண்டன ரோர்சிலர்.

இ—ள்: ஊடும் மைந்தரும் ஒள் தொடி மாதரும்—கலவியிற்பிணங்கிய ஆடவர்களும் ஒளிபொருந்திய வளையலையணிந்த பெண்களுமாக, மாடமோடு மறிந்தனர்—தாமிருந்தமாடத்துடன்விழுந்து, தம் உடல் வீடி—தங்கள்சரீரமழியப்பெற்று, வேற்று உரு எய்தி கூடி—வேறுவடிவத்தைப்பெற்றுக்கூடி, விண்மிசை வழிக்கொண்டனர் ஓர் சிலர்—ஆகாயத்திற்போனார்கள் சிலர் எ—று. (சுஅ)

உவம னில்லவ னோச்சின வெங்கணு
மவதி யின்றிப் பொழிய வவைதெரீஇத்
தவறி லாதுசெய் தாழ்வரை கீண்டெடாக்
கவிகை யாத்தமைக் காத்துநிற் பார்சிலர்.

இ—ள்: உவமன் இல்லவன் ஓச்சின—ஒப்பில்லாத வீரவாகுதேவரெறிந்தவைகள், அவதி இன்றி—அளவில்லாமல், எங்கணும் பொழிய—எவ்விடங்களிலும் விழ, அவை தெரீஇ- அவற்றைப்பார்த்து, தவறு இலாது செய் தாழ் வரை கீண்டு எடா—குற்றமில்லாமற்செய்யப்பட்ட நீண்டமலைகளை அகழ்ந்தெடுத்து, கவிகையா தமை காத்து நிற்பார் சிலர்— குடையாகப்பிடித்துத்தங்களைக்காத்துநிற்பார்கள் சிலர் எ—று.

எளிதிற் பிதிரத்தகாதவென்பதுபோதர 'தவறிலாதுசெய்' என்றார். (சுகூ)

விறற்கொள் வாகு விடுத்தன கல்லக
வுறைப்பின் வீழ வொதுங்கிட மின்மையிற்
சிறக்கு மாநகர்ச் செந்தரைக் கொண்டகீ
ழுறைக்கு ளேபுக் கலமரு வார்சிலர்.

இ—ள்: விறல் கொள் வாகு விடுத்தன—வீரவாகுதேவரெறிந்தபொருள்கள், கல்லக உறைப்பின் வீழ—கன்மழையைப்போலவிழ, ஒதுங்கு இடம் இன்மையில்—அவைகள் தம்மேற்படாமல் ஒதுங்கிநிற்றற்குரிய இடம் வேறில்லாமையால், சிறக்கும் மா நகர் செம் தரை கொண்ட கீழறைக்குள் புக்கு-சிறந்தபெரிய அந்நகரத்திலுள்ளசெப்பமான நிலத்துளமைந்துள்ள சுரங்கத்திற்புகுந்து, அலமருவார் சிலர்—அலைவார்கள் சிலர் எ—று.

ஆபத்துக்காலத்திலொளித்திருத்தற்கும் மறைந்துவேறிடம்போதற்குமாகச் சுரங்கங்கள் செய்யப்படுவனவென்க. உறைப்பு-மழைபெய்கை. (௭௦)

மாதர் தங்களை மக்களை யன்னையைத்
தாதை மாரைத் தமதுகைப் பற்றியே
யேதின் மாட மிகந்துகச் சோரிநீர்
வீதி போந்து வெருவிநிற் பார்சிலர்.

இ—ள்: மாதர் தங்களை - மனைவியரையும், மக்களை - புதல்வர்களையும், அன்னையை - தாய்மாரையும், தாதைமாரை - பிதாமாரையும், தமது கை பற்றி - தங்கள் கையாற்பிடித்துக்கொண்டு, ஏது இல் மாடம் இகந்து - குற்றமற்ற மாடங்களினின்றுநீங்கி, சோரி நீர் உக - இரத்தநீர் சிந்த, வீதி போந்து—வீதிகளில் வந்து, வெருவி நிற்பார் சிலர் - பயந்துநிற்பார்கள் சிலர் எ—று.

மனைவியர்முதலானவர்களைக்கைப்பற்றிக்கொணர்ந்தது காத்தற்கென்க. ()

கருவி வானினுங் கண்ணகன் றிக்கினுந்
தரணி தன்னினுந் தாவிலன் வீசிய
திருவ ளங்கள் செறிந்தன வீழ்தலும்
வெருவிப் போய்க்கடல் வீழ்ந்தொளிப் பார்சிலர்.

இ—ள்: கருவி வானினும்—(ஏனையபூதங்கள்தோன்றுதற்குக்)காரணமாயிருக்கின்ற ஆகாயத்திலும், கண் அகன் திக்கினும் - இடமகன்ற திக்குகளிலும், தரணி தன்னினும் - பூமியிலும், தா இலன் வீசிய திரு வளங்கள் செறிந்தன வீழ்தலும்—குற்றமில்லாத வீரவாகுதேவரெறிந்த சிறந்தபொருள்கள் நெருங்கிவிழ, வெருவி போய் கடல் வீழ்ந்து ஒளிப்பார் சிலர் - பயந்தோடிப்போய் கடலில்விழுந்துமறைவார்கள் சிலர் எ—று.

கருவிவான் என்றதற்கு, மழைபெய்தலால் நிலவுலகத்தை வளப்படுத்துதற்குக்கருவியாயிருக்கும் ஆகாயமெனக் கூறினுமாம். (எஉ)

கிழிந்த சென்னியிற் கேழ்படு செம்புனல்
கழிந்து தோன்றவுங் கண்டனை ரையுறாப்
பொழிந்து மெய்ப்புறம் போர்த்தலுந் தேற்றியே
யழிந்தி ரங்குற வாகுலிப் பார்சிலர்.

இ—ள்: கிழிந்த சென்னியில் கேழ் படு செம் புனல் கழிந்து தோன்றவும் - உடைந்ததலையினின்றுஞ்செந்நிறம்விளங்குகின்ற இரத்தநீர்மிகுதியாகத்தோன்றுதலும், கண்டனர் ஐயுறா - அதனைப்பார்த்து (எவ்விடத்தால் வந்ததென்று) சந்தேகப்பட்டு, பொழிந்து மெய் புறம் போர்த்தலும் - அவ்விரத்தம்பாய்ந்து சரீரமுழுவதையும் மூடியவுடன், தேற்றி - (தங்கள் தலையினின்றும்பாய்கின்றதென்று) தெளிந்து, அழிந்து - நிலையழிந்து, இரங்குற ஆகுலிப்பார் சிலர் - கண்டோர்வருந்தும்படி கவலைப்படுவார்கள் சிலர் எ—று.

தலையுடைந்தபோதும் உணராமையுற்றனரென்வே மெய்வருத்தங்களைச்சகித்துப்பயின்றவரென்பதும் திடசித்தமுடையரென்பதும் தோன்றின. (எங)

ஆடன் மொய்ம்பின னார்த்துமுன் வீசிய
மாட வீதி வளநக ரெங்கணு
நீட வீழ்தலு நிற்றலை யஞ்சியே
யோடி யூறுற் றுயிர்துறப் பார்சிலர்.

இ—ள்: ஆடல் மொய்ம்பினன் ஆர்த்து முன் வீசிய - வீரவாகுதேவர் ஆரவாரித்து முன்னேயெறிந்த பொருள்கள், மாட வீதி வள நகர் எங்கணும் - மாடங்கள்பொருந்திய வீதிகளுடன் கூடிய செல்வமிக்க அந்நகர்முழுவதினும், நீட வீழ்தலும் - அதிகமாகவிழ, நிற்றலை அஞ்சி - தங்கிநிற்றற்குப்பயந்து, ஓடி - ஓடிப்போய், ஊறு உற்று - ஊறுபாட்டைப்பெற்று, உயிர் துறப்பார் சிலர் - உயிரை விடுவார்கள் சிலர் எ—று. (எச)

திங்கள் சூடி திருமகன் விட்டன
வெங்கும் வீழ பிறப்பினை நோக்கியே

யங்கி வெங்கணை தொட்டறுத் தன்னவை
தங்க ளாருயிர் தாங்கிநிற் பார்சிலர்.

(இ—ள்: திங்கள் சூடி திரு மகன் விட்டன— சிவபிரானது சிறந்த குமாராகிய வீரவாகுதேவரெறிந்தபொருள்கள், எங்கும் வீழும் இறப்பினை நோக்கி— எல்லாவிடங்களினும் விழுகின்றபெருக்கத்தைப்பார்த்து, அங்கி வெம் கணை தொட்டு—கொடியஅக்கினியஸ்திரங்களைச்செலுத்தி, அன்னவை அறுத்து— அவைகளைத்துணித்து, தங்கள் ஆர் உயிர் தாங்கி நிற்பார் சிலர்— தங்களுடைய அருமையான உயிரைச்சுமந்துநிற்பார்கள் சிலர் எ—று.

(எசு)

இறப்பு-மிகுதி.

மையன் மாதரு மைந்தரு மாவியும்
பொய்யில் புந்தியு மொன்றிப் புணர்தலுஞ்
செய்ய மாடஞ் சிகரமொ டேவிழ
மெய்யு மொன்றி விளிந்திடு வார்சிலர்.

இ—ள்: மையல் மாதரும் மைந்தரும்—காமமிக்க பெண்களும் ஆடவர்களும், ஆவியும் பொய் இல் புந்தியும் ஒன்றி புணர்தலும்—உயிரும் பொய்த்தலில்லாத மனமும் ஒருமித்துக்கூடும்பொழுது, செய்ய மாடம் சிகரமொடு விழ — அவர்களிருந்த சிறந்த மாடங்கள் தூபியுடன்விழுதலால், மெய்யும் ஒன்றி விளிந்திடுவார் சிலர்— சரீரமும்ஒன்றாய்த்துவையப்பெற்று இறப்பார்கள் சிலர் எ—று.

தலைவனுடைய மனந்தலைவிமேலும் தலைவியுடையமனந்தலைவன்மேலும் இனிது பதிந்தொடுங்கியென்பார் 'ஆவியும்பொய்யில்புந்தியுமொன்றி' என்றார். ()

அந்தண் மாடத் தறிவன் விடுத்தன
வந்து வீழ மறிந்துரு மேறெனச்
சிந்த வேயுகு செம்பொறி மெய்ப்பட
வெந்து சின்னம் விரவுறு வார்சிலர்.

இ—ள்: அறிவன் விடுத்தன— வீரவாகுதேவரெறிந்தபொருள்கள், அம் தண் மாடத்து வந்து வீழ— அழகிய குளிர்ந்த மாடங்களில்வந்து விழுந்தவுடன், மறிந்து உரு மேறு என சிந்த—அம்மாடங்களிடிந்து இடியைப்போலச்சிதற, உகு செம் பொறி மெய் பட— அப்பொழுது தோன்றிய சிவந்த அக்கினிப்பொறிகள் சரீரத்திற்பட, வெந்து சின்னம் விரவுறுவார் சிலர்—வெந்து அடையாளம்பொருந்தப்பெறுவார்கள் சிலர் எ—று.

(எஎ)

வரங்கொள் வீர மகேந்திரத் தின்னணந்
தரங்க மெய்திச் சனங்களெல் லாமிரீ இ
யுரங்கள் சிந்தி யழிந்துழி யொல்லென
விரங்கு மோதை யெழுகட லுண்டதே.

இ—ள்: வரம் கொள் வீரமகேந்திரத்து—மேன்மைபொருந்திய வீரமகேந்திரநகரத்தில், இன்னணம்—இப்படி, சனங்கள் எல்லாம்—எல்லாச்சனங்களும், தரங்கம் எய்தி இரீஇ—துயரமுற்று அலைந்து, உரங்கள் சிந்தி அழிந்துழி—தைரியங்கெட்டு அழிந்தபொழுது, ஒல் என இரங்கும் ஓதை—ஒல்லென்னுங்குறிப்புடனழுகின்ற ஓசையானது, எழு கடல் உண்டது—எழுகடல்களினொலியையும் அடக்கியது எ—று.

எழுகடலுங்கூடியவிரைபுமொலியினும் இந்நகரார்அழுமொலி பெரிதாயிற்று என்பதாம்.

(எஅ)

மன்றி னிற்கரி பொய்த்து மனுநெறி
கொன்று வாழுங் கொடியர்த மில்லெனத்
துன்று மாடத் தொகைவெள் ளிடையதாய்ப்
பொன்றி வீழ்ந்தன புல்லென வாகியே.

இ—ள்: மன்றினில் கரி பொய்த்து—நியாயசபையிற் பொய்ச்சான்றுகூறியும், மனு நெறி கொன்று வாழும்—மனுநீதியைமாற்றியும் வாழுகின்ற, கொடியர் தம் இல் என—பாவிகளுடைய வீட்டைப்போல, துன்றும் மாட தொகை வெள்ளிடையது ஆய்—நெருங்கிய மாளிகைக்கூட்டங்கள் வெளியிடமாகி, புல்லெனவு ஆகி—இழிவுபட்டு, பொன்றி வீழ்ந்தன—அழிந்துவிழுந்தன எ—று.

இச்செய்யுளாற் பொய்ச்சான்றுகூறினர்க்கும் நீதிநெறியைமாற்றினர்க்கும் வருங்கேடு வற்புறுத்தப்பட்டது. (எகூ)

நீறு பட்ட நெடுநக ரெங்கணு
மூறு பட்ட வுயிர்கடஞ் சோரிநீ
ராறு பட்டிட வங்கவை யோடளாய்ச்
சேறு பட்டன செக்கர்விண் போலவே.

இ—ள்: நீறு பட்ட நெடு நகர் எங்கணும்—துகளாயழிந்த நெடிய நகரமெங்கும், ஊறுபட்ட உயிர்கள் தம் சோரி நீர்—ஊறுபாட்டைப்பெற்ற ஆன்மாக்களுடைய இரத்தவெள்ளம், ஆறு பட்டிட—ஆறுபோலப்பாய, அவையோடு அளாய்—அவ்வெள்ளங்களோடுகலந்து, செக்கர்விண் போல சேறுபட்டன—செவ்வானத்தைப்போலச்சேறாயின எ—று.

எங்கணும் சேறுபட்டன எனஇயையும். (அ0)

மலிந்த சீர்த்தி மகேந்திர மாபுர
மலைந்து தொல்லைத் திருமுழு தற்றதான்
மெலிந்தி டும்படி விண்ணவர் தம்மெலா
நலிந்த வன்வள நன்றுறு மேகொலாம்.

இ—ள்: மலிந்த சீர்த்தி மகேந்திர மா புரம்—மிகுந்தகீர்த்திபொருந்திய பெரிய வீரமகேந்திரநகரம், அலைந்து—அலைவுபட்டு, தொல்லை திரு முழுது அற்றது—பழைய செல்வமுழுதும் அழியப்பெற்றது, மெலிந்திடும்படி விண்ணவர் தம் எலாம் நலிந்தவன் வளம்—மெலியும்படியாகத் தேவர்களெல்லோரையும் வருத்தியவனுடையசெல்வம், நன்று உறும் கொல்—நன்றாயிருக்குமா? எ—று.

கொல் எதிர்மறை. அழியாப்பெருஞ்செல்வமாயிருந்தும் அவன்செய்தபாவத்தாலழிந்தது என்பதாம். பெரியோர்க்குத்தீங்குசெய்வார்செல்வம் எவ்வாறுகாக்கப்படினும் அழியுமென்பது இதனாற்குறிக்கப்பட்டது. (அக)

நகரழிபடலமுற்றிற்று.

ஆகவிருத்தம் எஎ0.

சகத்திரவாகுகள்வதைப்படலம்.

வீரவாகுதேவர் ஆயிரம்புயங்களையுடைய ஆயிரமசுரர்களைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சூரபன்மனாலேவப்பட்ட சகத்திரவாகுகள் ஆயிரவரும் வீரவாகுதேவரையணுகிப்போர்செய்ய, அவர் ஒரு மாமரத்தைப்பிடுங்கிமோதி அவர்களையழித்தார் என்பதாம்.

ஏயின பான்மையி னிவன்முதூர்
மாய்தரு மெல்லையின் வருகின்ற
வாயிர வாகுள வடல்வீரர்
மேயின தன்மை விளம்புற்றாம்.

இ—ள்: ஏயின பான்மையின்—இவ்வாறு, இவன் முது ஊர் மாய்தரும் எல்லையில்—இந்தச்சூரபன்மனுடைய பழையநகரம் அழியும்பொழுது, வருகின்ற ஆயிர வாகு உள அடல் வீரர்--(அச்சூரபன்மனாலேவப்பட்டு) வருகின்ற ஆயிரம்புயங்களையுடைய வலிய வீரர்கள், மேயின தன்மை- வீரவாகுதேவரையணுகியதன்மையை, விளம்புற்றாம்-- (இனிச்) சொல்வாம் எ—று.

மாய்தருமெல்லையின்மேயினதன்மை எனஇயையும். (க)

ஓல முடைக்கட லுமிழ்கின்ற
நீல விடத்தினை நிகர்மெய்யார்
மாலை யுடைப்பல வடவைத்தீக்
கோல மெனச்சிகை கொண்டுற்றார்.

இ—ள்: ஓலம் உடை கடல் உமிழ்கின்ற நீல விடத்தினை நிகர் மெய்யார்—பேரொலியையுடைய பாற்சமுத்திரந்தோற்றுவித்த கருநிறமானநஞ்சையொத்த மேனியையுடையார், மாலை உடை பல வடவை தீ கோலம் என—வரிசையாயமைந்த பலவடவாமுகாக்கினிகளின்தோற்றத்தைப்போல, சிகை கொண்டு உற்றார்- (சிவந்தநிறமான) குடுமியைக்கொண்டிருப்பவர்கள் எ—று.

ஐஞ்ஞூறுதலைகளினும் நிரையாயமைந்திருத்தலின் 'மாலையுடைப்பலவடவைத்தீக்கோலமென' என்றார். (உ)

தீங்களி றாதிய திறன்மாக்க
டாங்குவை யோடு தலைப்பெய்தே
யாங்குள சோரி யறாதீமப்
பாங்கர்க ளன்னதொர் பகுவாயார்.

இ—ள்: தீ களிறு ஆதிய திறல் மாக்கள்- கொடிய யானைமுதலிய வலியமிருகங்களை, குவையோடு தலைப்பெய்து-கூட்டமாக நிறைத்துத்தின்று, ஆங்கு உள சோரி அறாது- அந்தமிருகங்களினின்றுதோன்றியஇரத்தம் ஒழியாது, ஈம பாங்கர்கள் அன்னது ஒர் பகு வாயார்- சுடுகாடுகளைப்போலிருக்கின்ற பகிர்ந்த வாயையுடையவர்கள் எ—று.

பாங்கர்-இடம். பலதொகையான பிணங்களையுள்ளடக்குதலின் சுடுகாட்டையுவமித்தார். தாம்-சாரியை. (ங)

எல்லையி னேமிகள் யாவுந்தா
மொல்லொலி நீரி னுடைந்தென்னக்

கல்லுறை சிந்து கருங்கொண்மூச்
செல்லென வார்த்தனர் செல்கின்றார்.

இ—ள்: எல்லை இல் நேமிகள் யாவும்– அளவிறந்தசமுத்திரங்களெல்லாம், ஒல் ஒலி நீரின் உடைந்து என்ன– பேரொலியுடன் கட்டுடைந்தாற்போலவும், கல் உறை சிந்து கரும் கொண்மூ செல் என–கன்மழையைப்பெய்கின்ற கரிய மேகங்களின் இடி வீழ்ந்தாற்போலவும், ஆர்த்தனர் செல்கின்றார்–ஆரவாரித்துக்கொண்டு நடக்கின்றவர்கள் எ—று.

நீர்–நீர்மை. அதிர்ச்சியுடன்கூடிய பேரொலியையுடையாராதலின் இவ்வாறுவமித்தார். கன்மழையைப்பெய்யு மேகத்தினிடி ஏனைமேகங்களினிடியினும் அதிர்ச்சியாலும் ஒலியாலும் மிக்கதென்க. (ச)

வேறு.

மைவரு நீல வரைத்தொகை தாங்கு
மொய்வரு கின்ற முடிக்குழு வென்ன
வைவகை நூற்றி னமர்ந்தகல் வானைத்
தைவரு கின்ற தலைத்தொகை கொண்டார்.

இ—ள். மை வரும் நீல வரை தொகை தாங்கும் மொய் வருகின்ற முடி குழு என்ன—மேகங்கள்படிகின்ற கருநிறமானமலைக்கூட்டங்களாற் சுமக்கப்படுகின்ற வலிமைபொருந்தியசிகரக்கூட்டங்களைப்போல, ஐவகை நூற்றின் அமர்ந்து–ஐஞ்ஞூறென்னுந்தொகையுடையனவாகி, அகல் வானை தைவருகின்ற—அகன்ற ஆகாயத்தைத்தடவுகின்ற, தலைத்தொகை கொண்டார்—தலைக்கூட்டங்களை உடையவர்கள் எ—று.

மலைகளொவ்வொன்றும் பலமுடிகளைத்தாங்கிநின்றாற்போல அசுரரொவ்வொருவரும் ஐஞ்ஞூறுதலைகளைத்தாங்கிநின்றாரென்க. இவ்வுவமையால் அசுரரது உயரமுந்தோற்றமுங்குறிக்கப்பட்டன. என்னக்கொண்டார் எனஇயையும். (ரு)

மராமர மானவை மாதிர மெங்கும்
பராவ விடுத்திடு பல்கவ டென்ன
விராவிய வங்கத மேவி விளங்கு
மொராயிர மாகிய வொண்புய முள்ளார்.

இ—ள்: மராமரம் ஆனவை மாதிரம் எங்கும் பராவ விடுத்திடு பல் கவடு என்ன—ஆச்சாமரங்களானவை எல்லாத்திக்குகளிலும்பரவும்படிநீட்டிய பலகிளைகளைப்போல, விராவிய அங்கதம் மேவி விளங்கும்– இறுகத்தரிக்கப்பட்ட அங்கதமென்னுமணிபொருந்திவிளங்குகின்ற, ஓராயிரம் ஆகிய ஒள் புயம் உள்ளார்–ஆயிரமென்னுந்தொகைப்பட்ட ஒளிபொருந்தியபுயங்களையுடையவர்கள் எ—று.

என்ன உள்ளார் எனஇயையும். நீண்டனவும் தொகையான்மிக்கனவுமாதலின் இவ்வாறுவமித்தார். (சு)

எழுக்கொடு முத்தலை யெஃகம்வின் ஞஞ்சில்
கழுக்கடை சங்கொடு கப்பணம் வெவ்வாண்
மழுக்கதை சக்கரம் வச்சிர மாதி
விழுப்படை யாவும் விராவிய கையார்.

இ—ள்: எழு– எழுவும், கொடு முத்தலை– கொடியசூலமும், எஃகம்— வேலும், வில்—வில்லும், நாஞ்சில்—கலப்பையும், கழுக்கடை—சிற்றீட்டியும், சங்கொடு—வளைதடியும், கப்பணம்—கப்பணமும், வெவ் வாள்–கொடியவாளும், மழு—மழுவும், கதை—தண்டும், சக்கரம்—சக்கரமும், வச்சிரம்– குலிசமும், ஆதி—முதலாகிய, விழு படை யாவும்—சிறந்தபடைக்கலங்களெல்லாம், விராவிய கையார்—அமைந்தகைகளையுடையவர்கள் எ—று.

முத்தலை-மூன்றுதலைகளையுடையது. கழுக்கடை-கழுவைக்கடையிலுடையது. (௭)

எண்டகு நேமிக ளேழு மளக்கர்
மண்டல மானவு மன்னுயிர் யாவுங்
கொண்டிடி னுங்குறை வின்றி நிரம்பா
தண்டம தென்ன வகன்ற வயிற்றார்.

இ—ள்: எண் தகும் நேமிகள் எழும்—மதிக்கத்தகுந்த எழுசமுத்திரங்களையும், அளக்கர் மண்டலம் ஆனவும்—அந்தக்கடல்களாற்சூழப்பெற்ற நிலவுலகமுழுவதையும், மன் உயிர் யாவும்—அந்நிலவுலகத்தில் நிலைபெற்றுவாழும் உயிர்களெல்லாவற்றையும், கொண்டிடினும்—உட்கொண்டாலும், குறைவு இன்றி நிரம்பாது—பூரணமாகநிறையாமல், அண்டமது என்ன அகன்ற—அண்டத்தைப்போல விசாலித்திருக்கின்ற, வயிற்றார்—வயிற்றையுடையவர்கள் எ--று.

நிரம்பாது அகன்ற என இயைக்க. (௮)

விழுமிய பஃறலை வெம்பணி யேனைக்
குழுவொடு போற்றினர் கொண்டுற லாற்றா
தழுதிட நாடி யதற்கயர் வார்போற்
கழல்க ளரற்று கழற்றுணை கொண்டார்.

இ—ள்: விழுமிய பல் தலை வெம் பணி—சிறந்த பலதலைகளையுடைய கொடிய ஆதிசேடன், ஏனை குழுவொடு—மற்றையநாகர்களுடன், போற்றினர் கொண்டு உறல் ஆற்றாது—சுமந்துகொண்டிருக்கமுடியாமல், அழுதிட—அழ, நாடி அதற்கு அயர்வார் போல்—அதனையறிந்து அவரழுவதற்காய்த் தாமுமழுவார்போல, கழல்கள் அரற்று—வீரக்கழல்களொலிக்கின்ற, கழல் துணை கொண்டார்—இரண்டுகால்களையுடையவர்கள் எ—று.

ஏனைக்குழு என்றது அனந்தன் வாசுகி தக்கன் கார்க்கோடகன் சங்கபாலன் குளிகன் பதுமன் மகாபதுமன் என்பவர்களை. இவரெண்மரும் எண்டிசைகளினும்நின்று பூமியைத்தாங்குவர். சுமக்கமுடியாமை அசுரர் கால்மிதித்துநடத்தலாலென்க. அயர்வார்போல் அரற்று என இயையும். (௯)

இருபுய மோர்முக மெய்திய வானோ
னொருவனை வெல்ல வோராயிர ரானேம்
பொருவகை சென்றிடல் புன்மைய தென்னா
வருபழி யுன்னி மனந்தளர் கின்றார்.

இ—ள்: இருபுயம் ஓர் முகம் எய்திய வானோன் ஒருவனை வெல்ல—இரண்டுபுயங்களையும் ஒருமுகத்தையுமுடைய தேவசாதியானொருவனைவெல்லுதற்கு, ஒரு ஆயிரர் ஆனேம் பொருவகை சென்றிடல்—ஆயிரக்கணக்கானநாங்கள் போர்செய்யச்செல்லுதல், புன்மையது என்னா—இழிவென்று, வரு பழி உன்னி—அதனால்வரும்வசையைநினைத்து, மனம் தளர்கின்றார்—மனஞ்சோருகின்றவர்கள் எ--று.

தாங்கள் பெருந்தொகையானமுகங்களையுங்கைகளையுமுடையாராதலின் பகைவரை ‘இருபுயமோர்முகமெய்தியவானோன்’ என்று இழித்துக்கூறினார். (௧௦)

மாகர வான்முன மாயையின் வந்தா
னாகையி னாலிவ னைதென வானிற்
போகுவ னாலிது பொய்யல வல்லே
யேகுமி னேகுமி னென்றுசெல் கின்றார்.

இ—ள்: முனம்—முன்னே, மா கரவால் மாயையின் வந்தான்—பெருங்கரவுடன் மாயஞ்செய்து (அரசவைக்கண்) வந்தான், ஆகையினுல்-ஆதலினுல், இது என வானில் போகுவன்-(எங்களைக்கண்டவுடனஞ்சி) விரைவில் ஆகாயத்திலொளித்தோடுவான், இது பொய் அல—இதுபொய்யன்று, வல்லே ஏகுமின் ஏகுமின்—விரைவாகப்போங்கள்போங்கள், என்று செல்கின்றார்—என்றுகூறிப்போகின்றவர்கள் எ—று.

ஒருவருமுணராவண்ணமென்பார் 'மாகரவால்' என்றார். (கக)

மீளிகை யாலெறி மேதகு வேரா
மாளிகை கோபுர மண்டபம் வீழ்வ
காளிக ரன்ன கரங்கள்கொ டேற்றுத்
தூளிகள் செய்தனர் தூர்த்திடு கின்றார்.

இ—ள்: மீளி கையால் எறி மேதகு வேரம்—வீரவாகுதேவர் கையினுலெடுத்தெறிந்த சிறந்தகுளிகைகளும், மாளிகை- மாளிகைகளும், கோபுரம்- கோபுரங்களும், மண்டபம்- மண்டபங்களுமாகிய, வீழ்வ- விழும்பொருள்களை, காளிகர் அன்ன கரங்கள் கொடு ஏற்று— சர்ப்பங்களை நிகர்த்த கைகளாலேந்தி, தூளிகள்செய்தனர் தூர்த்திடுகின்றார்—தூளாக்கி நிறைக்கின்றவர்கள் எ—று.

காளிகர்-நஞ்சையுடையவர். காளிகம்-நஞ்சு. நீண்டவடிவும் கொடியசெயலுமுடைமையாற் கைக்குப்பாம்புகளையுவமித்தார். (கஉ)

எய்யென மெய்யிடை யெங்கும் வியர்ப்பச்
செய்யன கண்வழி செந்தழல் சிந்த
வெய்ய வுயிர்ப்பெழ வேர்வுள மூள
வொய்யென வோடின ருற்றிடு கின்றார்.

இ—ள்: எய் என மெய் இடை எங்கும் வியர்ப்ப- முட்பன்றியைப்போலச் சரீரமெங்கும் வியர்வையரும்ப, செய்யன கண் வழி செம் தழல் சிந்த- சிவந்த கண்களினின்றும் சிவந்த அக்கினிப்பொறிகள்சிதற, வெய்ய உயிர்ப்பு எழ- கொடியபெருமூச்சுத்தோன்ற, உளம் வேர்வு மூள- மனத்திற்கோபமூள, ஒய் என ஓடினர் உற்றிடுகின்றார்- விரைவாக ஓடிவருகின்றவர்கள் எ—று.

விரைந்தோடிவருதற்குக்காரணம் பதினொராஞ்செய்யுளிற்கூறப்பட்டது. ()

நாகர் தமக்கொர் நமன்றனை யன்னோ
ராகிய வாயிர ராயிர மொய்ம்பர்
வேகம தாகி விழுத்தகு வீர
வாகுவை யெய்தி மடங்கலி னார்த்தார்.

இ—ள்: நாகர் தமக்கு ஒர் நமன் தனை அன்னோர்- தேவர்களுக்கு ஒருயமனையொத்தவர்கள், ஆகிய— இதுகாறுங்கூறப்பட்டதன்மைகளையுடைய, ஆயிர மொய்ம்பர் ஆயிரர்—சகத்திரவாகுகளாயிரவரும், வேகமது ஆகி- வேகமாக, விழுத்தகு வீரவாகுவை எய்தி- சிறப்புப்பொருந்திய வீரவாகுதேவரையணுகி, மடங்கலின் ஆர்த்தார்- சிங்கத்தைப்போல ஆரவாரித்தார்கள் எ—று.

உயிரைக்கவருமாறு தேடித்திரிதலால் யமனையுவமித்தார். (கச)

ஆர்த்திடு மோதை யகன்செவி செல்லத்
தார்த்தொகை தூங்கு தடம்புய வீரன்
பார்த்தனன் மூவெயில் பண்டெரி செய்த
தீர்த்த னெனச்சிறி தேநகை செய்தான்.

இ—ள்: ஆர்த்திடும் ஓதை அகன் செவி செல்ல- அவர்களாரவாரித்தஓசை யானது அகன்றகாதிற்கேட்டவுடன், தார் தொகை தூங்கு தடம் புய வீரன்—மாலைகளின்றொகுதி தூங்கப்பெற்ற விசாலித்தபுயங்களையுடைய வீரவாகுதேவர், பார்த்தனன்—பார்த்து, மூ எயில் பண்டு எரிசெய்த தீர்த்தன் என-முப்புரங்களையும் முற்காலத்திலெரித்த சிவபிரானைப்போல, சிறிதே நகைசெய்தான்- சற்றேசிரித்தார் எ—று.

கோபச்சிரிப்பாதலின் சிவபிரான் முப்புரதகனஞ்செய்தபோதுசிரித்ததையுவமித்தார். (கரு)

மேனிமிர் மந்தர வெற்பென நின்றே
வானள வோங்கு மராமர மொன்றைத்
தேனினம் வான்றிசை சிந்தி யரற்ற
வூன்முதிர் கைகொ டொசித்தனன் மன்னே.

இ—ள்: மேல் நிமிர் மந்தர வெற்பு என நின்று-மேலாகவுயர்ந்த மந்தரமலையைப்போல நிலைப்பட்டு, வான் அளவு ஓங்கும்—ஆகாயமளவுமுயர்ந்திருக்கின்ற, மராமரம் ஒன்றை—ஒருஆச்சாமரத்தை, தேன் இனம் வான் திசை சிந்தி அரற்ற-மொய்த்திருந்தவண்டுக்கூட்டங்கள் ஆகாயத்திலுந்திக்குகளிலுஞ்சிதறி ஒலிக்க, ஊன் முதிர் கை கொடு ஒசித்தனன்—தசைப்பற்றுமிகுந்தகையினால் முரித்தார் எ—று.

மராமரமொன்றை ஒசித்தனன் எனஇயையும். (கசு)

அண்ட மிருண்டிட வாதவ ரானோர்
மிண்டிய பேரொளி வீந்திட வீரன்
வண்டழை துன்று மராமர மங்கை
கொண்டது பன்முறை கொட்புறல் செய்தான்.

இ—ள்: அண்டம் இருண்டிட—ஆகாயமெங்கும் இருள, ஆதவர் ஆனோர் மிண்டிய பேர் ஒளி வீந்திட— சூரியாது நெருங்கிய பெரியஒளி கெட, வீரன்—வீரவாகுதேவர், அங்கை கொண்டது-அகங்கையில் முரித்தெடுத்த, வண் தழை துன்றும் மராமரம்—செழிப்பான தழைகள்நெருங்கிய ஆச்சாமரத்தை, பல் முறை கொட்புறல் செய்தான்—பலமுறைசுழற்றினார் எ—று. (கஎ)

வேறு.

மாயிரு மருப்புள மராமர மிறுத்தே
தூயனம ராடன்முய றொன்னிலைமை நோக்கி
யாயிர மடுத்தபுய ராயிரரு மங்கண்
மூயினர்க ளண்ணலை முரட்படை சொரிந்தார்.

இ—ள்: தூயன்- தூய்மையையுடைய வீரவாகுதேவர், மா இரு மருப்பு உள மராமரம் இறுத்து— மிகப்பெரியகிளைகளையுடைய ஆச்சாமரத்தைமுரித்தெடுத்து, அமர் ஆடல் முயல் தொல் நிலைமை நோக்கி— போர்செய்தற்குமுயலுகின்ற பழையநிலையைப்பார்த்து, ஆயிரம் அடுத்த புயர் ஆயிரரும்— சகத்திரவாகுகள் ஆயிரவரும், அங்கண்—அவ்விடத்து, அண்ணலை மூயினர்கள்—அந்த வீரவாகுதேவரைவளைந்து, முரண் படை சொரிந்தார்—வலியபடைக்கலங்களையேவினார்கள் எ—று.

தம்மைப்பற்றுமாறு முன்வந்தாரோடெல்லாம் இவ்வாறேபோர்தொடுத்தனராதலின் 'தொன்னிலைமை' என்றார். மூய்தல்-மூடுதல். (கஅ)

தொடுத்தனர்கள் வார்கணைக டொட்டனர்கள் வைவே
லெடுத்தபல தோமர மெறிந்தனர்க ளாலம்

விடுத்தனர்கண் மூத்தலை வியன்கழுமு ளுய்த்தா
ரடற்குலிசம் வீசினர்க ளாழிக டுரந்தார்.

இ—ள்: வார் கணைகள் தொடுத்தனர்கள்—நீண்டபாணங்களையேவினார்கள், வை வேல் தொட்டனர்கள்—கூரியவேற்படைகளையுஞ்செலுத்தினார்கள், எடுத்த பல தோமரம் எறிந்தனர்கள்-கையிலெடுத்த பலதோமரங்களையும்வீசினார்கள், ஆலம் விடுத்தனர்கள்—மழுப்படைகளையுமேவினார்கள், மூத்தலை வியன் கழுமுள் உய்த்தார்—மூன்றுதலைகளையுடைய பெரிய சூலப்படைகளையுஞ்செலுத்தினார்கள், அடல் குலிசம் வீசினர்கள்—வலிய வச்சிராயுதங்களையுஞ்செலுத்தினார்கள், ஆழிகள் துரந்தார்—சக்கராயுதங்களையுஞ்செலுத்தினார்கள் எ—று. (௧௯)

இப்பரிசி னுள்ளபடை யாவுமுறை தூங்கு
மைப்புயல்க ளென்னவரை வின்றிவிரை வாக
வொப்பரிய வீரன்மிசை யுய்த்திடலு மன்னோன்
றுப்பொடு மரந்தனி சுழற்றியட லுற்றான்.

இ—ள்: இ பரிசின்—இவ்வாறே, உள்ள படை யாவும்- தம்மிடத்திருந்தபடைகளெல்லாவற்றையும், உறை தூங்கும் மை புயல்கள் என்ன—மழையைப்பெய்கின்ற கரியமேகங்களைப்போல, வரைவு இன்றி—அளவில்லாமல், விரைவு ஆக- விரைவில், ஒப்பு அரிய வீரன் மிசை உய்த்திடலும்—ஒப்பில்லாத வீரவாகுதேவர்மேற்செலுத்த, அன்னோன்—அவ்வீரர், துப்பொடு- வலிமையுடன், மரம் தனி சுழற்றி—தமதுகையிலுள்ள மராமரமொன்றையேசுழற்றி, அடல் உற்றான்—(அவைகளையெல்லாம்) அழித்தார் எ—று.

அசுரரேவியபடைகட்குச்சிறிதுமஞ்சினாரல்லரென்பதுபோதர 'துப்பொடு' என்றார். (௨௦)

விட்டபடை யாவையும் வெறுந்துகள வாகப்
பட்டிட மரங்கொடு பராகமவை செய்ய
வுட்டெளிவின் மானவ ரோராயிர ரும் வீரற்
கிட்டினர் வளைந்தனர் கிளர்ந்தமர் முயன்றார்.

இ—ள்: விட்ட படை யாவையும் வெறும் துகள ஆக பட்டிட—அசுரரேவிய ஆயுதங்களெல்லாம் நுண்மையானதுகளாயழியும்படி, மரம் கொடு பராகம் அவை செய்ய— மராமரத்தினால் வீரவாகுதேவர்பொடிபடுத்த, உள் தெளிவு இல் மானவர் ஓராயிரரும்—மனத்தெளிவில்லாத ஆயிரம் அசுரவீரர்களும், வீரன் கிட்டினர்- வீரவாகுதேவரையணுகி, வளைந்தனர்- சூழ்ந்து, கிளர்ந்து அமர் முயன்றார்—ஊக்கமாகப்போர்செய்யத்தொடங்கினார்கள் எ—று.

துகள என்பதில் அகரம் சாரியை. தாமேவியபடைகளையெல்லாம் மராமரத்தாற்றுகளாக்கியபொழுதே வெல்லுதலரிதென்றுதுணியாது பின்னும்போர்தொடங்குதலின் 'உட்டெளிவின்மானவர்' என்றார். அவை-பகுதிப்பொருள்விகுதி.

ஒட்டியம ராடிய வோராயிரவர் தாமுங்
கெட்டிரிய மேருநிகர் சேழ்கிளர் புயத்தோன்
மட்டுநனை வார்சினை மரங்கொடு புடைத்தே
சட்டக மிறந்துபடு தன்மைபுரி குற்றான்.

இ—ள்: மேரு நிகர் சேழ் கிளர் புயத்தோன்— மேருமலையைப்போன்ற பொன்னிறம்விளங்குகின்றபுயங்களையுடைய வீரவாகுதேவர், ஒட்டி அமர் ஆடிய ஓராயிரவர் தாமும் கெட்டு இரிய— நெருங்கிப்போர்செய்த ஆயிரம்வீரர்களும் அழிந்துசிதற, மட்டு நனை வார் சினை மரம் கொடு புடைத்து—தேனிறைந்த அரும்புகளையுடைய நீண்டகொப்புகள்செறிந்த மராமரத்தினாலடித்து, சட்டகம் இறந்

துபடுதன்மை புரிகுற்றுன்—அவர்களுடையசரீரங்கள் அழிந்துபோம்படிசெய்தார் எ-று. (உஉ)

செக்கர்புரை குஞ்சிகெழு சென்னிகள் கிழிந்தார்
நெக்கனர் கபோலவகை நெற்றிபிள வுற்று
ரக்கநிரை சிந்தின ரலங்குகுழை யற்று
ருக்கனர்கள் பல்லெயி றுடைந்தனர்க டுண்டம்.

இ—ள்: செக்கர் புரை குஞ்சி கெழு சென்னிகள் கிழிந்தார்—(அவ்வாறழித்தபொழுது)சிலர் செவ்வானம்போன்ற குடுமிபொருந்தியதலைகள் கிழியப்பெற்றூர்கள், கபோலவகை நெக்கனர்– சிலர் கன்னங்களுடையப்பெற்றூர்கள், நெற்றி பிளவுற்றூர்– சிலர்நெற்றிகள்பிளக்கப்பெற்றூர்கள், அக்கநிரை சிந்தினர்—சிலர் கண்வரிசைகள் அழியப்பெற்றூர்கள், அலங்கு குழை அற்றூர்---சிலர் விளங்குகின்ற காதுகளையிழந்தார்கள், பல் எயிறு உக்கனர்கள்– சிலர் பற்களும் வக்கிரதந்தங்களுஞ் சிதறப்பெற்றூர்கள், துண்டம் உடைந்தனர்கள்—சிலர் மூக்குடையப்பெற்றூர்கள் எ—று.

எயிறு-கடைவாயிலிருந்து வெளியேவளைந்துதோன்றும் பற்கள். (உங)

வாய்நிரை பகிர்ந்தனர்கண் மாழைதிகழ் கண்ட
மானவு முரிந்தனர்க ளற்றனர்கள் பொற்றோ
ளூனமக லங்கைக ளொசிந்தனர் தசைந்தே
பீனமுறு மார்பிடை பிளந்தனர் தளர்ந்தார்.

இ—ள்: வாய்நிரை பகிர்ந்தனர்கள்– சிலர் வாய்நிரைகள் கிழியப்பெற்றூர்கள், மாழை திகழ் கண்டம் ஆனவும் முரிந்தனர்கள்---சிலர் அழகுவிளங்குகின்ற கழுத்துகளும் முரியப்பெற்றூர்கள், பொன் தோள் அற்றனர்கள்-- சிலர் அழகிய புயங்களையிழந்தார்கள், ஊனம் அகல் அங்கைகள் ஒசிந்தனர்—சிலர்குற்றமற்ற அகங்கைகள்முரியப்பெற்றூர்கள், தசைந்து பீனம் உறும் மார்பு இடை பிளந்தனர் தளர்ந்தார்—சிலர் தசைப்பற்றுமிகுந்துபருத்திருக்கின்ற நெஞ்சு இடையிலேபிளக்கப்பெற்றுத்தளர்ந்தார்கள் எ--று.

பொற்றோள்-பொன்னுபரணம்விளங்குகின்ற புயமெனினுமாம். உம்மை-எச்சம். பீனம்-பருமை. (உச)

உந்திகள் குடங்கரி னுடைந்துகுடர் யாவுஞ்
சிந்தினர் மருங்கெழில் சிதைந்தனர் புறங்கண்
முந்துதொட ரென்பொடு முரிந்தனர்கள் வாமஞ்
சந்துபொரு கின்றமுழந் தாளடிக ளற்றூர்.

இ—ள்: உந்திகள் குடங்கரின் உடைந்து குடர் யாவும் சிந்தினர்—சிலர் வயிறுகள் குடமுடைந்தாற்போலுடைந்து குடரெல்லாஞ்சிதறப்பெற்றூர்கள், மருங்கு எழில் சிதைந்தனர்—சிலர் இடைகளின்அழகு அழியப்பெற்றூர்கள், புறங்கள் முந்து தொடர் என்பொடு முரிந்தனர்கள்—சிலர் முதுகுகள் மேலுங்கீழுந்தொடர்ந்திருக்கின்ற எலும்புகளுடன் முரியப்பெற்றூர்கள், வாமம் சந்து பொருகின்ற முழந்தாள் அடிகள் அற்றூர்—சிலர் தொடைகளும் பொருத்துக்களும் ஒன்றேடொன்றிணையான முழங்கால்களும் கால்களும் அழியப்பெற்றூர்கள் எ—று. ()

வீழ்ந்தனர்க ளோர்சிலவர் வீழ்ந்துமிதி பட்டுத்
தேய்ந்தனர்க ளோர்சிலவர் செய்யகுடர் சிந்திச்
சாய்ந்தனர்க ளோர்சிலவர் தங்குருதி யாற்றுட்
டோய்ந்தனர்க ளோர்சிலர் துடித்தனர்கள் சில்லோர்.

இ—ள்: ஓர் சிலவர் வீழ்ந்தனர்கள்-சில அசுரர்கள் விழுந்தார்கள், ஓர் சிலவர் வீழ்ந்து மிதிபட்டு தேய்ந்தனர்கள்—சில அசுரர்கள் விழுந்து மிதிபட்டு அழிந்தா

ர்கள், ஓர் சிலவர் செய்ய குடர் சிந்தி சாய்ந்தனர்கள்—சில அசுரர்கள் சிவந்தநிற மான குடல்கள் சிதறப்பெற்றுச்சாய்ந்தார்கள், ஓர் சிலர் தம் குருதி ஆற்றுள் தோய்ந்தனர்கள்—சில அசுரர்கள் தமதுமேனியினின்று பாய்ந்த இரத்தவெள்ளத் திலமிழ்ந்தினுர்கள், சில்லோர் துடித்தனர்கள்—சில அசுரர்கள் துடித்தார்கள் எ—று. (உசு)

எறிந்திடு படைத்தொகுதி யேகுமுனம் வீழ்ந்து
மறிந்தனர்க ளோர்சிலவர் மாய்ந்துசக னம்போய்ச்
செறிந்தனர்க ளோர்சிலர் சிதைந்துதலை போயு
முறிந்தவுடல் கொண்டமர் முயன்றனர்கள் சில்லோர்.

இ—ள்: ஓர் சிலவர்– சில அசுரர்கள், எறிந்திடு படை தொகுதி ஏகு முனம் வீழ்ந்து மறிந்தனர்கள்– தாமேவியபடைக்கலக்கூட்டங்கள் வீரவாகுதேவர்க் கெதிரேபோதற்குமுன் விழுந்திறந்தார்கள், ஓர் சிலர் மாய்ந்து சகனம் போய் செறிந்தனர்கள்–சில அசுரர்கள் இறந்து விண்ணுலகத்திற்போய்ச்சேர்ந்தார்கள், சில்லோர் தலை சிதைந்து போயும் முறிந்த உடல் கொண்டு அமர் முயன்றனர்கள்—சில அசுரர்கள் தலையழிந்துபோனபின்னும் குறையுடலைக்கொண்டு போர்முயன்றுர்கள் எ—று.

உம்மை இழிவு. (உஎ)

ஏரகலும் வீரர்த மியாக்கையிது வண்ணஞ்
சேரவிற லுற்றுடைய செவ்வியி னெழுந்த
சோரிநதி மாநகர் தொலைத்துவளன் வாரி
வாரிதி நிறைந்தவனி மீதினு மடுத்த.

இ—ள்: ஏர் அகலும் வீரர் தம் யாக்கை– அழகுநீங்கப்பெற்ற வீரர்களுடைய சரீரங்கள், இதுவண்ணம்– இவ்வாறு, சேர இறல் உற்று உடைய செவ்வியின்– ஒருங்கேஅழிதலைப்பொருந்தியபொழுது, எழுந்த சோரி நதி- பெருகிய இரத்தயாறு, மா நகர் தொலைத்து—சிறந்த அந்த மகேந்திரபுரத்தையழித்து, வளன் வாரி—அங்குள்ள செல்வங்களெல்லாவற்றையும்வாரிப்போய், வாரிதி நிறைந்து—சமுத்திரத்திற்பாய்ந்து (மிஞ்சி), அவனி மீதினும் அடுத்த—பூவுலகதிலும்நிரம்பியது எ—று.

சின்னபின்னமாக்கப்பட்டமையின் 'ஏரகலும்-யாக்கை' என்றுர். (உஅ)

வேறு.

அறந்தெ ரிந்துண ராண்டகை யகன்மரம் புடைப்பக்
குறைந்த சென்னிவான் றிரிவன வெயிற்றெருடு குலவிச்
செறிந்த தேவரோ டமிர்தொளித் துண்டவர் சென்னி
நிறைந்தி டாமதித் துணைகவர்ந் துலவுத னேரும்.

இ—ள்: அறம் தெரிந்து உணர் ஆண்டகை அகன் மரம் புடைப்ப—தருமநெறிகளை ஆராய்ந்தறிந்த வீரராகியவீரவாகுதேவர் ஆச்சாமரத்தினுலடிக்க, குறைந்த சென்னி—சிதைந்த தலைகள், எயிற்றெருடு குலவி வான் திரிவன— வக்கிரதந்தங்களுடன்விளங்கி ஆகாயத்திலுலாவுந்தன்மை, செறிந்த தேவரோடு ஒளித்து அமிர்து உண்டவர் சென்னி—நெருங்கிய தேவர்களுடனெளித்திருந்து அமிர்தத்தையுண்ட அசுரர்களுடையதலைகள், நிறைந்திடா மதி துணை கவர்ந்து–கலைநிறையப்பெருத இரண்டுபிறைகளைக்கவ்விக்கொண்டு, உலவுதல் நேரும்—உலாவுவதைப்போலும் எ—று.

பெருந்தொகையானதேவரென்பார் 'செறிந்ததேவர்' என்றுர். மதித்துணைகவர்ந்து என்றதனல் இல்லுவமை. (உகூ)

அடல்கொண் மொய்ம்பினன் மரம்புடைத் தலுஞ்சில வவுண
ருடல்சி னப்பரி முகத்தவர் தலைதுமிந் துதிர
நெடிதும் வாய்வழி சிந்தவீழ்ந் தனர்நெடுங் கடலுள்
வடவை மாமுக மங்கிகான் றிடுவதே மான.

இ—ள்: அடல் கொள் மொய்ம்பினன் மரம் புடைத்தலும்—வலிமைபொருந்தியபுயங்களையுடைய வீரவாகுதேவர் மராமரத்தினலடித்தபொழுது, உடல் சினப் பரி முகத்தவர் சில அவுணர்—பெருங்கோபம்பொருந்திய குதிரையின்முகத்தையுடைய சிலஅசுரர்கள், தலை துமிந்து—தலையறப்பெற்று, நெடும் கடலுள் வடவை மா முகம் அங்கி கான்றிடுவதே மான—நெடிய சமுத்திரத்தில் பெரிய வடவாமுகமானது அக்கினியைச்சொரிவதையேபோல, உதிரம் நெடிதும் வாய் வழி சிந்த—இரத்தமானது மிகுதியாக வாயினின்றுபாய, வீழ்ந்தனர்—விழுந்தார்கள் எ—று.

வடவை-பெண்குதிரை. அசுரரது குதிரைமுகத்தின் வாயின்வழியே இரத்தஞ் சிந்துவது வடவாமுகத்தினின்று அக்கினிதோன்றுவதுபோலுமென்க. தலைதுமிந்து வீழ்ந்தனர் எனஇயையும். (௫௦)

வள்ளன் மாமரத் தண்டுகொண் டடித்தலும் வலியோர்
பிள்ளை மாமதி யெயிற்றணி சிந்திவிண் பெயர்ந்தே
யள்ளல் வேலையின் முறைமுறை வீழ்வன வதன்கட்
டுள்ளு மீன்கண முகண்டுவீழ் கின்றதோர் தொடர்பின்.

இ—ள்: வள்ளல் மா மர தண்டு கொண்டு அடித்தலும்—வீரவாகுதேவர் பெரியமராமாகிய தண்டினலடித்தபொழுது, வலியோர் பிள்ளை மா மதி எயிற்று அணி சிந்தி விண் பெயர்ந்து—வலியஅசுரர்களது சிறந்தபிறைச்சந்திரனைநிகர்த்த வக்கிரதந்தநிரைகள்சிதறி ஆகாயத்திற்போய், அள்ளல் வேலையில் முறைமுறை வீழ்வன—சேறுபொருந்திய கடலில் நிரைநிரையாக விழுவன, அதன்கண் துள்ளும் மீன்கணம் உகண்டு வீழ்கின்றது ஓர் தொடர்பின்—அந்தச்சமுத்திரத்திற்றுள்ளுகின்ற மீன்கூட்டங்கள்பாய்ந்துவிழுகின்றதன்மையைப்போல எ—று.

தொடர்பின் வீழ்வன என இயையும். வீரவாகுதேவர் மராமரத்தாலடித்த போதுதிர்ந்த வக்கிரதந்தங்கள் வரிசையாகமேற்கிளம்பிப்போய்க் கடலில்விழுதல் மீன்கூட்டங்கள் துள்ளிப்பாய்ந்துவிழுதல்போலும் என்பதாம். (௫௧)

வலிந்த வூழ்முறை யாவரே கடந்தவர் மரத்தாற்
பொலந்த யங்குபூண் மார்பின னெற்றிடும் பொழுதிற்
கலந்து போர்செய்தா ரோர்சிலர் வாளொடு கரம்போய்த்
தொலைந்து ளார்செலு நெறியின்வீழ்ந் தவர்சிரந் துணிப்ப.

இ—ள்: பொலம் தயங்கு பூண் மார்பினன்—பொன்னாற்செயயப்பட்டு விளங்குகின்ற ஆபரணத்தையணிந்த மார்பையுடைய வீரவாகுதேவர், மரத்தால் எற்றிடும்பொழுதில்- மராமரத்தினலடிக்கும்பொழுது, கலந்து போர் செய்தார் ஓர்சிலர் கரம்—செறிந்துநின்று போர்செய்த சிலஅசுரர்களது கைகள், வாளொடு போய்—ஏந்தியிருந்தவாட்படையுடன் சிதைந்து போய், தொலைந்துளார் செலும் நெறியின் வீழ்ந்து—தோற்ற அசுரர்களோடுகின்ற வழியில் விழுந்து, அவர் சிரம் துணிப்ப—அவர்களுடைய தலைகளைவெட்டுவன, (ஆதலின்), வலிந்த ஊழ்முறை யாவரே கடந்தவர்—வலியதாகிய விதியின்வலியை யார்தாம் வென்றவர்? (ஒருவருமில்லை) எ—று.

எண்ணத்தக்கதீங்கினின்றுந் தப்பியோடியவழியும் எண்ணத்தகாததீங்குவிளைந்து மாளுதலாகிய திருட்டாந்தத்தால் விதியின்வலியை வற்புறுத்தினர். ()

இனைய பற்பல நிகழ்ந்திட விணையிலா னொருவன்
றினையின் வேலையி லாயிரம் புயமுடைத் திறலோ
ரனைவர் தம்மையும் பலதுணி படுந்திற னட்டுத்
தனிமை தன்னொடு நின்றன னமர்க்களந் தன்னில்.

இ—ள்: இனைய பற்பல நிகழ்ந்திட—இவைபோன்ற பலபலசெயல்கள் நிகழ, இணை இலா ஒருவன்— ஒப்பில்லாத வீரவாகுதேவர், தினையின் வேலையில்—கொடிப்பொழுதினுள், ஆயிரம் புயம் உடை திறலோர் அனைவர் தம்மையும்– சகத்திரவாகுகளெல்லோரையும், பல் துணி படும் திறன் அட்டு– பல துண்டங்களாகும்படியழித்து, தனிமைதன்னொடு அமர்க்களம் தன்னில் நின்றனன்– தனியே போர்க்களத்தில் நின்றார் எ–று.

தினை காலத்தின்சிறுமையையுணர்த்திற்று. (௩௩)

சகத்திரவாகுகள்வதைப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் அ0௩.

வச்சிரவாகுவதைப்படலம்.

வீரவாகுதேவர் வச்சிரவாகுவென்னுமசுரனைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சகத்திரவாகுகளழிந்தமையைக்கேள்வியுற்ற சூரபன்மன் தனது இளையபுதல்வனுகிய வச்சிரவாகுவையனுப்ப, அவன் சேனைகளோடுவந்து வீரவாகுதேவருடன் பொருது இறந்தான் என்பதாம்.

கூடி யார்அம ரியற்றினோர் தம்வலி குறைந்து
வீடி யாவிபோய் விளிதலு மன்னது விரைவி
னேடி விண்ணிடை நணுகிய தூதுவர் நில்லா
தோடி யாளுடை யவுணர்கோன் முன்புசென் றுரைப்பார்.

இ—ள்: கூடி ஆர் அமர் இயற்றினோர்— ஒருங்குகூடிவந்து பெரும்போரைச்செய்த சகத்திரவாகுகள், தம் வலி குறைந்து—தங்கள்வலிமைகுன்றி, வீடி ஆவி போய் விளிதலும்—சின்னபின்னமாகி உயிர்நீங்கியழிய, விண் இடை நணுகிய தூதுவர்– ஆகாயத்தில் வந்துநின்ற தூதர்கள், அன்னது விரைவில் நேடி—அந்நிகழ்ச்சியைவிரைவிலறிந்து, நில்லாது ஓடி— தாமதித்துநில்லாமலோடிப்போய், ஆள் உடை அவுணர்கோன் முன்பு சென்று—தங்களையடிமையாகவுடைய அசுரர்க்கரசனை சூரபன்மனுக்குமுன் போய், உரைப்பார்–இவ்வாறுசொல்வார்கள் எ–று. (௧)

துன்று மாயிர மொய்ம்புடை நின்படைத் தொகைஞர்
சென்று சில்லமர் புரிந்தன ரவனது தெரியா
வொன்றொர் பாதவம் பறித்தனன் புடைத்தலு மொருங்கே
பொன்றி வீழ்ந்தனர் புகுந்தவா றீதெனப் புகன்றார்.

இ—ள்: துன்றும் ஆயிர மொய்ம்பு உடை நின் படை தொகைஞர்— நெருங்கிய ஆயிரம்புயங்களையுடைய உமதுசேனைவீரர்கள், சென்று சில் அமர் புரிந்த

னர்—போய்ச்சிறிதுநேரம்போரைச்செய்தார்கள், அவன் அது தெரியா—அந்தத்தூதன்அதனைப்பார்த்து, ஒன்று ஓர் பாதவம் பறித்தனன் புடைத்தலும்– ஒருமராமரத்தைமுரித்தெடுத்து அதனாலடிக்க, ஒருங்கே பொன்றி வீழ்ந்தனர்– அவர்களெல்லாரும் இறந்துவிழுந்தார்கள், புகுந்தவாறு ஈது–நிகழ்ந்தசெயல் இதுவேயாம், என புகன்றார்– என்றுகூறினார்கள் எ–று.

தாங்கூறியதுண்மையென்பதைத்தேற்றுவார் 'புகுந்தவாறீது' என்றார். ()

புகன்ற வேலையி னவுணர்கோன் புரையிலோன் வன்மை
புகன்ற வேலையின் வடவையா ரழலெனப் பொங்கி
யகன்ற னன்பெரு மிதத்துட னாணையுந் திறனு
மகன்ற னன்பெருந் துயர்கொளீஇ யினையன வறைவான்.

இ—ள்: புரை இலோன் வன்மை புகன்ற வேலையின்— ஒப்பில்லாதவீரவாகுதேவரது வலிமையைத்தூதர்கூறியபொழுது, அவுணர் கோன்—சூரபன்மன், புகன்ற வேலையின் வடவை ஆர் அழல் என பொங்கி— ஆரவாரிக்கின்றகடலிலுள்ள நிறைந்தவடவாமுகாக்கினியைப்போலக்கோபித்து, அகன்ற நன் பெருமிதத்துடன் ஆணையும் திறலும் அகன்றனன்—பரந்த சிறந்தசெருக்கும் ஆஞ்ஞையும் வலியும் கெடப்பெற்று, பெரும் துயர் கொளீஇ— மிகுந்ததுக்கத்தைக்கொண்டு, இனையன அறைவான்—இவற்றைச்சொல்வான் எ—று.

அகன்றநன் எனற்பாலது எதுகைச்சிறப்புநோக்கித்திரிந்தது. (௩)

உமைய ளித்திடு சிறுமகன் றூதுவ னொருவ
னெமது முன்னம்வந் தவமதி செய்தன னேகி
யமரில் யாரையு மட்டுநின் றின்னமு மகலா
னமது கொற்றமு நன்றுநன் றாலென நகைத்தான்.

இ—ள்: உமை அளித்திடு சிறு மகன் தூதுவன் ஒருவன்–உமாதேவிபெற்ற சிறுபாலனுடைய தூதனொருவன், எமது முன்னம் வந்து அவமதி செய்தனன்–எமக்கெதிரேவந்திருந்து அவமானஞ்செய்து, ஏகி— திரும்பிப்போய், அமரில் யாரையும் அட்டு நின்று—போரிலெதிர்த்தாரனைவரையுமழித்துநின்று, இன்னமும் அகலான்—இதுகாறும்போகின்றிலான், நமது கொற்றமும் நன்று நன்று—எங்கள் வெற்றியும் நன்றாயிருக்கின்றது நன்றாயிருக்கின்றது, என நகைத்தான்—என்றுகூறிச்சிரித்தான் எ—று.

கொற்றமுமென்பதில் உம்மை ஆணைபுகழ்முதலியவற்றைத்தழீஇயது. நன்று நன்று குறிப்பான்மறுத்தது. திருமால்முதலிய தேவர்களையெல்லாம்வென்ற எங்கள் வெற்றியெல்லாம் இத்தூதனாலழிந்தனவேயென்று துக்கித்தான் என்பதுகுறிப்பு. தங்கள்வளத்தையும் வீரத்தையும் பழித்துப்பேசினாராதலின் 'அவமதி செய்தனன்' என்றான். (௪)

முச்சகம்புக ழவுணர்கோன் முனிவினை முன்னி
யச்செ னக்கிளர்ந் தெழுந்துசென் றவனடி வணங்கி
மெய்ச்சி ரங்களோ ரையிரு திறலுடை விறல்சேர்
வச்சி ரத்திரு மொய்ம்புடைக் காதலன் வகுப்பான்.

இ—ள்: மெய் சிரங்கள் ஓர் ஐயிரு திறல் உடை விறல் சேர் வச்சிர திரு மொய்ம்பு உடை காதலன்– மெய்ம்மையாகிய பத்துத்தலைகளையும் வலியையுடைய வெற்றிமிக்க வைரித்த சிறந்த இருபதுபுயங்களையுமுடைய புதல்வன், முச்சகம் புகழ் அவுணர்கோன் முனிவினை முன்னி—மூவுலகத்தாராலும் புகழப்படுகின்ற (தன் பிதாவாகிய) சூரபன்மனது கோபக்குறிப்பையறிந்து, அச்சென கிளர்ந்து எழுந்து சென்று—விரைவிற்கிளம்பியெழுந்துபோய், அவன் அடி வணங்கி— அச்சூரபன்மனது கால்களைவணங்கி, வகுப்பான்—இவ்வாறுசொல்வான் எ—று.

அச்சு-விரைவுக்குறிப்பு. முச்சகம்-சுவர்க்கம் மத்தியம் பாதலம்என்பன. ()

நொய்ய தூதுவன் பொருட்டினு லித்திற நுவற
லைய கேட்கநிற் கியலுமே யிறையிவ ணமர்தி
மொய்யில் யான்சென்று மற்றவன் பெருமுரண் முருக்கிக்
கைய கப்படுத் துய்ப்பனு லன்னது காண்டி.

இ—ள்: ஐய கேட்க—பிதாவே! யான்சொல்வனவற்றைக்கேட்பீர், நொய்ய தூதுவன் பொருட்டினல் இத்திறம் நுவறல் நிற்கு இயலுமே—அற்பனுகிய தூதனுக்காக இவ்வாறுகூறுதல் அரசர்க்கரசராகிய உமக்குத்தகுமா?, இறை இவண் அமர்தி- சிறிதுநேரம் இவ்விடத்திருப்பீர், மொய்யில் யான் சென்று- வலிமையுடன் நான்போய், அவன் பெரு முரண் முருக்கி— அந்தத்தூதனுடைய பெருவலியையழித்து, கையகப்படுத்து- கைப்பற்றி, உய்ப்பன்— உமக்குமுன் கொணர்ந்துவிடுவேன், அன்னது காண்டி- அதனைப்பார்ப்பீராக எ—று.

ஏ-எதிர்மறை. சிறிதும்வலியில்லாதவென்பான் 'நொய்ய' எனவும், சேனைமுதலியவைகளுடனென்பான் 'மொய்யில்' எனவும், முன்பலரைக்கொன்று வென்றவீரங்களையெல்லாமடக்கியென்பான் 'பெருமுரண்முருக்கி' எனவும், தவறுதென்பான் 'அன்னதுகாண்டி' எனவும் கூறினுன். (சு)

வேறு.

என்ன லோடு மிறப்பெதி ருற்றிடா
மன்னன் மைந்தனை நோக்கி மகிழ்வுறு
வன்ன தன்மையை யாற்றுதி நீயெனப்
பன்னி யேகும் படிபணித் தானரோ.

இ—ள்: என்னலோடும்- என்றுவச்சிரவாகுகூறியவுடன், இறப்பு எதிருற்றிடா மன்னன்-பலகாலமாக அழிவுவராப்பெறுதுவாழ்ந்த சூரபன்மன், மைந்தனை நோக்கி மகிழ்வுறு—புதல்வனுகிய வச்சிரவாகுவைப்பார்த்து மகிழ்ந்து, நீ அன்ன தன்மையை ஆற்றுதி என பன்னி -நீ அத்தன்மையைச்செய்யக்கடவாயென்று கூறி, ஏகும்படி பணித்தான்-போம்படிஅனுமதிகொடுத்தான் எ—று.

மகிழ்ந்தது தன்புதல்வனுடைய வீரத்திறத்தைநோக்கியென்க. (எ)

விடைபு ரிந்திட மெய்வழித் தாதைத
னடிவ ணங்கி யகன்றுமன் கோயிலிற்
புடையி ருந்ததன் போர்ப்படைச் சாலையி
னிடைபு குந்தனன் யாரும் வழுத்தவே.

இ—ள்: விடை புரிந்திட- அனுமதிகொடுத்தவுடன், மெய் வழி தாதை தன் அடி வணங்கி-(வச்சிரவாகு) உண்மையானமுறையமைந்த தன்பிதாவாகிய சூரபன்மனதுகால்களைப்பணிந்து, அகன்று-(அவ்விடத்தினின்று)நீங்கி, மன் கோயிலில் புடை இருந்த தன் போர் படை சாலையின் இடை- சூரபன்மனதுகோயிலின்பக்கத்திலிருந்த தனதுஆயுதசாலையினுள், யாரும் வழுத்த புகுந்தனன்—எல்லோருந்துதிக்கச்சென்றுன் எ—று.

போர்ப்படைச்சாலை-போருக்குரியஆயுதங்கள்வைக்கப்படுகின்றசாலை. (அ)

அட்ட வின்றி யயர்தரு சாலிகை
யிட்டு மார்பி னிறுக்கி வயத்தகு
பட்டி கைக்கலன் பாலத் துறுத்தியே
புட்டி லங்குலி பூண்டு பொருக்கென.

இ—ள்: அட்டல் இன்றி அமர்தரு சாலிகை—அழிவில்லாமலிருக்கின்றசட்டையை, மார்பின் இட்டு இறுக்கி—நெஞ்சிலணிந்து இறுக்கி, வயத்தரு பட்டிகை கலன் பாலத்து உறுத்தி—வெற்றிக்குரியவீரபட்டமாகிய ஆபரணத்தை நெற்றியிற்றரித்து, பொருக்கென அங்குலி புட்டில் பூண்டு—விரைவாக விரல்களில் உறைகளைத்தரித்து எ—று.

சாமானியமானபடைகளால் அழித்தற்கியலாததாய் நெஞ்சைக்காத்துகொண்டிருக்குஞ்சட்டையென்பார் 'அட்டலின்றியமர்தருசாலிகை' என்றார். ஆயுதங்களைத்தொடுத்தல் ஏவுதல்முதலியவற்றாற்றழும்பேறாவண்ணம் விரலுறைதரிக்கப்படுமென்க. (௯)

ஆணி கொண்ட வயிற்கணை பெய்தபொற்
றூணி கொண்டுபின் றும்பை மிலேச்சியே
நாணி கொண்டு நலந்தரு கார்முகம்
பாணி கொண்டு படைபிற வேந்தியே.

இ—ள்: ஆணி கொண்ட அயில் கணை பெய்த பொன் தூணி பின் கொண்டு—ஆணிபோலமைந்த கூர்மைபொருந்திய பாணங்களை நிறைத்த அழகிய அம்புக்கூட்டைமுதுகிற்றரித்து, தும்பை மிலேச்சி—தும்பைமாலையைச்சூடி, நாணி கொண்டு நலம் தரு கார்முகம் பாணி கொண்டு—நாணுடையதாய் நன்மையைப் பயக்கின்ற வில்லைக்கையிலெடுத்து, படை பிற ஏந்தி—பிறபடைக்கலங்களையும் எடுத்துத்தாங்கி எ—று.

நாணி என்பதில் இகரம்சாரியை. பாணங்களைவிரைவிற்றொடுத்தேவுதற்கும் வெற்றிபெறுதற்குமியைந்தவில்லென்பார் 'நலந்தருகார்முகம்' என்றார். (௧௦)

கொற்ற மாரமர்க் கோலங்க ளுள்ளன
முற்ற வேகொண்டு மூரிவில் வெஞ்சமர்
கற்ற காளை கதுமென நோக்கியே
சுற்று கம்மியர்க் கின்னன சொல்லுவான்.

இ—ள்: மூரி வில் வெம் சமர் கற்ற காளை—வலிய் கொடியவிற்போரை இனிதுபயின்ற வச்சிரவாகு, கொற்றம் ஆர் அமர் கோலங்கள் உள்ளன முற்ற கொண்டு—வெற்றிபொருந்திய போருக்குரியகோலங்களாயுள்ளனவற்றை முழுதாகக்கொண்டு, கதும் என நோக்கி—விரைவாகப்பார்த்து, சுற்று கம்மியர்க்கு இன்னன சொல்லுவான்—சூழ்ந்துநிற்கின்ற ஏவலாளர்களுக்கு மேல்வரும்வாசகங்களைச்சொல்வான் எ—று.

காளை உவமவாகுபெயர். வெற்றிபெறுதற்கேற்றகோலமென்பார் 'கொற்றமாரமர்க்கோலம்' என்றார். (௧௧)

மிக்க நம்படை வெள்ளத்தி லோர்சில
தொக்க பூசற் றொழிலினை முற்றிய
விக்க ணந்தரு வீரவ னென்றலுந்
தக்க தேயெனத் தாழ்ந்தவர் போயினார்.

இ—ள்: மிக்க நம் படை வெள்ளத்தில் ஓர் சில—மிகுதியாயுள்ள எங்கள்சேனைவெள்ளங்களுட்சிலவற்றை, தொக்க பூசல் தொழிலினை முற்றிய—தொகுதியானபோர்த்தொழிலைச்செய்துமுடிக்கும்படி, இக்கணம் இவண் தருவீர்—இந்தக்கணப்பொழுதிற்றானே இவ்விடத்து வருவிப்பீர்கள், என்றலும்—என்றுகூறியவுடன், அவர்—அந்தஏவலாளர்கள், தக்கது என—நன்றென்றுகூறி, தாழ்ந்து—வணங்கி, போயினார்—அப்பாற்போனார்கள் எ—று.

தொக்கபூசல்—பெரும்போர். (௧௨)

ஆங்கு நின்றிடு மேவல ரப்பணி
தாங்கி யேகத் ததுவர்தங் கோமக

நீங்க லின்றுதன் னீழலின் வந்திடும்
பாங்கர் யாரையு நோக்கிப் பகருவான்,

இ—ள்: ஆங்கு நின்றிடும் ஏவலர் அ பணி தாங்கி ஏக—அவ்விடத்தினின்ற ஏவலாளர்கள் அந்தக்கட்டளையைச் சிரமேற்கொண்டுசெல்ல, தகுவர் தம் கோமகன்—அசுரர்களதுதலைவனுகியவச்சிரவாகு, நீங்கல் இன்று தன் நீழலின் வந்திடும் பாங்கர் யாரையும் நோக்கி—பிரிதலின்றித்தன்னுடைய நிழலைப்போலத்தொடர்ந்துவருகின்ற தோழர்களெல்லாரையும்பார்த்து, பகருவான்—சொல்வான் எ—று.

ஆபத்துநேர்ந்தகாலத்தும் அகலாதுநின்று துணைபுரியத்தக்காரென்பது போதர 'நீங்கலின்றுதன்னீழலின்வந்திடும்பாங்கர்' என்றார். இன்றியென்னுமெச்சத்து இகரம் உகரமாகத்திரிந்துநின்றது. (கங)

குமர வேள்விடு கோற்றொழிற் றூதனைச்
சமரில் வென்றொரு தாம்பிற் றளைபுரீஇ
யிமையொ டுங்குமு னெந்தைமு னுய்க்குவ
னமைதிர் போருக் கனைவிரு மென்றனன்.

இ—ள்: குமர வேள் விடு கோல் தொழில் தூதனை—முருகவேளனுப்பிய கொலைத்தொழிலில்வல்ல தூதுவனை, சமரில் வென்று—போரில்வெற்றிகொண்டு, ஒரு தாம்பில் தளைபுரீஇ—ஒருகயிற்றாற்கட்டி, இமை ஒடுங்கும் முன் எந்தை முன் உய்க்குவன்—கண்ணிமைகள் ஒன்றோடொன்றுகூடுங்காலவெல்லைக்குள் எங்களரசனுக்குமுன் கொண்டுவந்துவிடுவேன், அனைவிரும் போருக்கு அமைதிர்—நீங்களெல்லீரும் போர்க்குரியகோலத்தைக்கொள்வீர்கள், என்றனன்—என்றுகூறினன் எ—று.

கொல் கோலெனமுதனீண்டது. (கச)

பாலன் மற்றிவை பன்னலு நன்கென
வேலு கின்ற விளைஞரு மள்ளரு
மேலை வெஞ்சமர் செய்ய விரைந்துபோர்க்
கோல மெய்திக் குழீஇயினர் கொட்புற.

இ—ள்: பாலன் இவை பன்னலும்—வச்சிரவாகு இவ்வசனங்களைக்கூறியவுடன், ஏலுகின்ற இளைஞரும் மள்ளரும்—கூடவருகின்றகாளையர்களும்வீரர்களும், நன்கு என—நல்லதென்றுகூறி, மேலை வெம் சமர் செய்ய—மேன்மைபொருந்திய கொடியபோரைச்செய்யும்படி, விரைந்து போர் கோலம் எய்தி—விரைவாகப்போர்க்கோலத்தைப்புனைந்து, கொட்பு உற குழீஇயினர்—அவனைச்சூழ்ந்துகூடினார்கள் எ—று. (கரு)

தாறு கொண்டவன் றன்குறிப் பிற்செலு
நூறு நூறு தொறிற்பரி மான்பெறீஇ
வீறு பண்ணமை தேரொன் றின் வெய்தென
வேறி னன்மொய்ம் பிருபது கொண்டுளான்.

இ—ள்: தாறு கொண்டவன் தன் குறிப்பில் செலும் நூறுநூறு தொறில் பரிமான் பெறீஇ—முட்கோலைக்கையிற்கொண்டசாரதியின்குறிப்பின்படிசெல்லுகின்ற வேகத்தையுடையபதினாயிரங்குதிரைகள்பூட்டப்பெற்று, வீறு—சிறந்த, பண் அமை தேர் ஒன்றின்—பண்படுத்தப்பெற்ற ஒருதேரில், இருபது மொய்ம்பு கொண்டு உளான்—இருபதுபுயங்களைக்கொண்டுள்ள வச்சிரவாகு, வெய்தென ஏறினன்—விரைவாக ஏறினன் எ—று.

முட்கோலாலுங் கையாலுஞ் சொல்லாலும் பிறவற்றாலுங்காட்டப்படுங்குறிப்புக்களெல்லாமடங்க பொதுமையில் 'குறிப்பு' என்றார். (கசு)

தந்தி ரத்துத் தலைவர்த மைந்தரு
மந்தி ரத்து மதிஞர்த மைந்தருஞ்
சுந்த ரத்துத் தொடர்பினிற் சுற்றுறா
வெந்தி ரப்பெருந் தேர்களி லேறினார்.

இ—ள்: தந்திரத்து தலைவர் தம் மைந்தரும்—சேனைத்தலைவர்களுடையபுத்திரர்களும், மந்திரத்து மதிஞர் தம் மைந்தரும்—மந்திரித்தொழில்பயின்ற அறிஞர்களது புத்திரர்களும், சுந்தரத்து தொடர்பினில் சுற்றுறா—அழகினமைதியுடன் சூழ்ந்து, எந்திர பெரும் தேர்களில் ஏறினார்—உருளைகளையுடைய பெரிய தேர்களில் ஏறினார்கள் எ—று.

பார்ப்போர்கண்ணுக்கழகாகவென்பார் 'சுந்தரத்துத்தொடர்பினில்' என்றார்.

ஆன வேலை யரசன் சுதன்விடப்
போன கம்மியர் போர்வினை கூறியே
யானை மேல்கொண் டிரும்பணை யெற்றலுஞ்
சேனை தம்முட் சிலதிரண் டுற்றவே.

இ—ள்: ஆனவேலை—அப்பொழுது, அரசன் சுதன் விட போன கம்மியர்—சூரபன்மனதுபுதல்வனாகிய வச்சிரவாகு அனுப்பப்போன ஏவலாளர்கள், யானைமேல் கொண்டு—யானையின்மேலேறி, போர்வினை கூறி—போர்த்தொழிலையறிவித்து, இரும் பணை எற்றலும்—பெரிய முரசவாத்தியத்தைமுழக்க, சேனை தம்முள் சில திரண்டு உற்ற—அங்குள்ளசேனைகளுள்ளே சில தொகுந்துவந்தன எ—று. (௧௮)

ஒருங்கு தாம்பல வோடலி னன்னவை
பரங்கொ ளற்கரி தாகிப் படிமகள்
புரங்கி ழிந்திடு புண்கொண் டரற்றல்போ
லிரங்கு மோதைகொண் டேகுவ தேர்களே.

இ—ள்: ஒருங்கு பல ஓடலின்—ஒருங்கேபலகூடி ஓடுதலினால், அன்னவை பரம் கொளற்கு அரிது ஆகி—அவற்றின்பாரத்தைச்சுமத்தற்கியலாமல், புரம் கிழிந்திடு புண்கொண்டு—சரீரங்கிழியப்பெற்றபுண்ணையுடையவளாகி, படிமகள் அரற்றல் போல்—பூமிதேவிபுலம்புதலைப்போல, தேர்கள்—தேர்க்கூட்டங்கள், இரங்கும் ஓதை கொண்டு ஏகுவ—இரங்குகின்றவோசையையுடையனவாய்ச்செல்வன எ—று.

பலதேர்க்கூட்டங்கள் இரங்கலோசையுடனோடுதல் பூமிதேவி சரீரங்கிழியப்பெற்றழுதல்போலும் என்பதாம். தற்குறிப்பேற்றம். (௧௯)

கருவி வானங் கடலுண்டு செல்லுறும்
வரைக ளாமென வந்துதம் மேலுறீஇ
யுருமி னத்தை யுகுத்தொலி கேட்டலும்
வெருவி வீழ விரைவன வேழமே.

இ—ள்: கருவி வானம்— (உலகம்வளம்பெறுதற்குக்) காரணமாயிருக்கின்ற மேகங்கள், கடல் உண்டு—கடனீரைப்பருகி, செல்லுறும் வரைகள் ஆம் என—நடக்கின்றமலைகளாமென்றுநினைத்து, வந்து தம் மேல் உறீஇ—வந்து தங்கள்மேற்படிந்து, உரும் இனத்தை உகுத்து—இடிக்கூட்டங்களைச்சொன்று, ஒலி கேட்டலும் வெருவி வீழ—அவ்விடியொலிக்கெதிராகவிளைக்கின்ற பிளிற்றொலியைக்கேட்டவுடன் அஞ்சிவிழ, வேழம் விரைவன—யானைகள்விரைந்துசெல்வன எ—று.

மேகங்கள் நடைமலையென்றுநினைத்து யானைகளின்மேற்படிந்து இடியையுகுத்து அவ்விடியொலிக்கெதிரொலியாகயானைகள்பிளிற அஞ்சிவீழ்ந்தன எ

ன்பதுகருத்து. இதனால்யானைகளின்பெருமையும் உயரமும் ஒலியின்கடுமையும் பிறவும்விளக்கப்பட்டன. (௨௦)

கிட்டி நாடு நயனமுங் கேடுசெய்
தொட்ட லார்த முளமுஞ் சுழன்றிட
வெட்டு மாதிரத் தெல்லையுஞ் சாரிகை
வட்ட மாகி வருவன வாசியே.

இ—ள்: வாசி—குதிரைகள், கிட்டி நாடும் நயனமும் கேடுசெய்து—உற்றுப்பார்க்கின்றகண்களையுங்கெடுத்து, ஒட்டலார் தம் உளமும் சுழன்றிட—பகைவர்களதுமனமுஞ்சுழலும்படி, எட்டு மாதிரத்து எல்லையும்–எட்டுத்திக்குகளினெல்லைமுழுவதினும், சாரிகை வட்டம் ஆகி வருவன–இடம்வலச்சுற்றாகச் சுழன்றுவருவன எ–று.

கண்கெடுவதும் மனஞ்சுழல்வதும் முறையே சாரிகைவரும்வேகத்தைப்பார்த்தலாலும் நினைத்தலாலுமென்க. (௨௧)

ஆடல் வேல்கதை யாழி யலப்படை
பாடு சேர்ந்த பலகையொள் வாள்சிலை
நீடு சூல நெடுமழு வாதியாக்
கூடு பல்படை கொண்டிடு கையினார்.

இ—ள்: ஆடல் வேல்– வெற்றிபொருந்திய வேலும், கதை– தண்டும், ஆழி– சக்கரமும், அலப்படை– கலப்பைப்படையும், பாடு சேர்ந்த பலகை– பெருமைபொருந்தியபரிசையும், ஒள் வாள்– ஒளிபொருந்தியவாளும், சிலை– வில்லும், நீடு சூலம்–நீண்டசூலமும், நெடு மழு–நெடியமழுவும், ஆதி ஆ–முதலாக, கூடு பல் படை கொண்டிடு கையினார்—தொகுந்திருக்கின்ற பல ஆயுதங்களை ஏந்திய கையையுடையவர்கள் எ–று.

இதுமுதலைந்துசெய்யுட்கள் அசுரவீரரைவருணித்தன. (௨௨)

இடித்த சொல்ல ரிமையவர் போர்பல
முடித்த மொய்ம்பர் முரணிய பல்படை
வடித்த கற்பினர் மால்வரை யானவை
படித்த லத்திற் படர்ந்தன்ன காட்சியார்.

இ—ள்: இடித்த சொல்லர்– இடியைப்போன்ற அதிர்ந்தசொல்லைப்பேசுகின்றவர்கள், இமையவர் போர் பல முடித்த மொய்ம்பர்– தேவர்களுடன் பற்பல போர்களைச்செய்துமுடித்தவீரர்கள், முரணிய பல் படை வடித்த கற்பினர்– வலியபலபடைக்கலப்போர்களில் தெளிந்தபயிற்சியையுடையவர்கள், மால் வரை ஆனவை படித்தலத்தில் படர்ந்து அன்ன காட்சியார்– பெரியமலைகள் பூமியில்நடந்தாற்போன்ற தோற்றத்தையுடையவர்கள் எ–று. (௨௩)

விசும்பின் மாலை மிலைச்சிய குஞ்சியர்
பசும்பொன் வீரமெய்ப் பட்டிகை நெற்றியர்
நிசும்ப ரன்னதொர் நேரலர் சோரியி
னசும்ப றாத வகன்பில வாயினார்.

இ—ள்: விசும்பின் மாலை மிலைச்சிய குஞ்சியர்– இடிமாலையைத்தரித்தகுடுமியையுடையவர்கள், பசும் பொன் வீர மெய் பட்டிகை நெற்றியர்– செம்பொன்னாற்செய்யப்பட்ட மெய்ம்மையாகிய வீரபட்டத்தையணிந்தநெற்றியையுடையவர்கள், நிசும்பர் அன்னது ஓர் நேரலர்—நிசும்பனென்னும்பெயரையுடையஅசுரனைப்போன்றதறுகண்ணர், சோரியின் அசும்பு அறாத அகன் பில வாயினார்—இரத்தப்பெருக்குநீங்காத அகன்ற குகைபோன்ற வாயையுடையவர்கள் எ—று.

இடிகளைமின்னலாற்றொடுத்து மாலையாக்கியணிந்திருப்பரென்க. நிசும்பர் முற்காலத்தில் மிகக்கடூரமான குணமுஞ்செயலுமுடையராய்வாழ்ந்த ஒருஅசுர சாதியார், அசும்பு-ஊற்று. (௨௪)

தீம டங்கற் றிறலினர் தென்புலக்
கோம டங்கலின் கொள்கையர் தங்கிளை
தாம டங்கத் தறிபிளந் தார்த்தெழு
மாம டங்க றனைப்பொரும் வன்மையார்.

இ—ள்: மடங்கல் தீ திறலினர்-ஊழித்தீயைநிகர்த்த உக்கிரத்தையுடையவர்கள், தென்புல கோ மடங்கலின் கொள்கையர்—தென்றிசைக்கிறைவனாகிய யமனைநிகர்த்த கொலைத்தொழிலையுடையவர்கள், தம் கிளை தாம் மடங்க தறி பிளந்து ஆர்த்து எழு மடங்கல் மா தனை பொரும் வன்மையார்—தமதுசுற்றத்தவர்களழியும்படி கற்றூணைப்பிளந்து ஆரவாரித்தெழுந்த நரசிங்கத்தைநிகர்த்தவலிமையையுடையவர்கள் எ—று.

இராக்கதரும் அசுரரும் இனத்தாற்சிறிதுவேறுபட்டவராயினும் தொழின் முதலியவற்றாலொத்தலின் 'தங்கிளை' என்றார். (௨௫)

ஏகும் வெஞ்சமர்க் கென்றலும் பூண்பரீ இ
மாக மஞ்ச வளர்ந்தெழு தோளினர்
மோக மில்லவர் மொய்ம்பினின் மேலவ
ரார்கும் வீர ரளப்பில ரெய்தினர்.

இ—ள்: வெம் சமர்க்கு ஏகும் என்றலும்—கொடியபோருக்குப்புறப்படுங்களென்றுபறையறைந்தவுடன், பூண் பரீஇ மாகம் அஞ்ச வளர்ந்து எழு தோளினர்—ஆபரணங்கள் மூட்டற ஆகாயமுமச்சங்கொள்ளும்படிவளர்ந்துகிளர்கின்றபுயங்களையுடையார், மோகம் இல்லவர்—சோம்பலில்லாதவர்கள், மொய்ம்பினின் மேலவர்—வலிமையான் மேம்பட்டவர்கள், ஆரும் வீரர்—இவ்விலக்கணங்களையுடைய வீரர்கள், அளப்பு இலர் எய்தினர்—அளவிறந்தவர்கள் புறப்பட்டுவந்தார்கள் எ—று.

பூண் என்றது தோளணியை. அவை மூட்டறுவது அளவிறந்தபூரிப்புடன் வளர்தலால். நம்மையணுகுமாறு வளர்கின்றனவே மேலும்வளர்ந்தால் யாதுதீங்கு நேருமோ என்று ஆகாயமஞ்சுவது. போரைக்கேட்டவுடன் புயங்கள்வளர்தல் கூறப்படவே போர்செய்தற்கண் அவர்கொண்ட ஆவல் மிகப்பெரிதென்பது இனிது தோன்றிற்று. (௨௬)

ஐந்து நூறெனும் வெள்ள மழுங்குதேர்
தந்தி யின்குழுத் தானு மனையதே
யுந்து மாக்க ளோராயிர வெள்ளமாம்
பந்த மிக்க பதாதி யிரட்டியே.

இ—ள்: அழுங்கு தேர் ஐந்து நூறு எனும் வெள்ளம்—ஒலிக்கின்ற தேர்கள் ஐஞ்ஞூறாகிய வெள்ளமாம், தந்தியின் குழு தானும் அனையதே—யானைகளின் றொகையும் அதுவேயாம், உந்தும் மாக்கள் ஓராயிர வெள்ளம் ஆம்—உயர்ந்த குதிரைகள் ஆயிரவெள்ளமாகும், பந்தம் மிக்க பதாதி இரட்டி—ஒழுங்குமிகுந்த காலாட்படைஇரண்டாயிரவெள்ளமாம் எ—று.

வேண்டியஅமைதிப்படி தலைவரால்நிறுத்தப்படுவனவாதலின் 'பந்தமிக்கபதாதி' என்றார். (௨௭)

இத்தொ கைப்படு மீரிரு தானையு
மைத்தி ரைக்கடல் வாரியி னார்ப்புறீஇப்
பத்தி ரட்டி படர்புயத் தண்ணலைத்
தத்த மிற்கலந் தொன்றித் தழீஇயின.

இ—ள்: இ தொகை படும் ஈரிரு தானையும்-முற்கூறிய கணக்கமைந்த நான்குவகைப்பட்ட சேனைகளும், மை திரை கடல் வாரியின் ஆர்ப்பு உறீஇ—கரிய திரைபொருந்திய சமுத்திரநீரைப்போன்ற ஆரவாரத்தையுடையனவாய், பத்து இரட்டி படர் புயத்து அண்ணலை—பரந்த இருபதுபுயங்களையுடைய வச்சிரவாகுவை, தத்தமில் கலந்து ஒன்றி தழீஇயின—தம்முட்சேர்ந்து ஒருமித்துச்சூழ்ந்தன எ—று.

பேரொலிதோன்ற ஆரவாரித்தென்பார் 'மைத்திரைக்கடல்வாரியினார்ப்புறீஇ' என்றார். (உஅ)

துடிவ லம்புரி துந்துபி சச்சரி
கடிகொண் மொந்தை கரடிகை தண்ணுமை
யிடிகொள் பேரி யிரலைக ளாதியா
முடிவி லாவிய முற்று முழங்கிய.

இ—ள்: துடி-உடுக்கும், வலம்புரி-வலம்புரிச்சங்கும், துந்துபி-துந்துபியும், சச்சரி—சச்சரியும், கடி கொள் மொந்தை- சிறப்பையுடைய ஒருகட்பறையும், கரடிகை- கரடிகையும், தண்ணுமை- மத்தளமும், இடி கொள் பேரி- இடியைப்போல (அதிர்ந்தஒலியுடன்) முழங்குகின்ற பேரியும், இரலைகள்— கொம்புகளும், ஆதி ஆம்—முதலாகிய, முடிவு இலா இயம் முற்றும்- அளவிறந்த வாத்தியங்களெல்லாம், முழங்கிய- ஒலித்தன எ—று.

துந்துபி-துந்து என்னுங்குறிப்புடன் முழங்குதலால்வந்தபெயர். (உகூ)

இற்ற வெல்லையி னீரிரு தானையு
நெற்றி யேகடை நீடய லிற்செல
மற்று ளார்களும் வந்திட வச்சிரப்
பொற்ற டம்புயன் பொள்ளென வேகினான்.

இ—ள்: இற்ற எல்லையின்—இப்படியானசமயத்தில், ஈரிரு தானையும்—நால்வகைப்பட்ட சேனைகளெல்லாம், நெற்றி கடை நீடு அயலில் செல — முன்னணியினும்பின்னணியினும் நெடியபக்கங்களினுமாகச்சூழ்ந்துவர, மற்று உளார்களும் வந்திட—மற்றையவீரர்களுமுடன்வர, வச்சிர பொன் தடம் புயன்—வைரமான அழகிய விசாலித்தபுயங்களையுடைய அசுரன், பொள்ளென ஏகினான்—விரைவிற்போனான் எ—று.

மற்றுளார்-பாங்கர் படைத்தலைவர் முதலாயினோர். (௩0)

வல்லி யக்கடு மான்பொரு மானவர்
செல்லி யக்கமுஞ் செல்வினை மாறுகொள்
சொல்லி யக்கமுந் துண்ணெனத் தொக்கெழு
பல்லி யக்கட லார்ப்பும் பரந்தவே.

இ—ள்: வல்லிய கடு மான் பொரு மானவர் செல் இயக்கமும்—புலியாகிய கொடியமிருகத்தைப்போன்ற வீரர்கள் நடக்கின்ற ஆரவாரமும், செல்வினை மாறு கொள் சொல் இயக்கமும்- இடியையும் பகைக்கின்ற பேச்சினாரவாரமும், துண் என தொக்கு எழு பல்லிய கடல் ஆர்ப்பும்—விரைவில் தொகுதியாகமுழங்குகின்ற வாத்தியக்கூட்டங்களினாரவாரமும், பரந்த—எங்கும்பரவின எ—று.

பகைவரைப்பாய்ந்துகொல்லுதலால் வீரர்க்குப்புலியையுவமைகூறினர். இடிபோன்ற அதிர்ச்சியும் முழக்கமுமமைந்த சொல்லென்பார் 'செல்லினைமாறுகொள்சொல்' என்றார். பல்லியக்கடல் உருவகம். (௯௧)

ஊழி மால்படை யொல்லென வேயெழப்
பூழி யீண்டிவிண் பொள்ளென மூடிய
வேழ மால்வரை வீழ்தரு தானநீ
ராழி யென்ன வகன்புவி கொள்ளவே.

இ—ள்: ஊழி மால் படை ஒல் என எழ—பழைய பெரிய சைனியங்கள் விரைவாகப்புறப்படுதலால், பூழி ஈண்டி— தூளிகள்செறிந்து, விண் பொள் என மூடிய— ஆகாயத்தை விரைவில்மூடின, வேழ மால் வரை வீழ்தரு தான நீர் ஆழி என்ன அகன் புவி கொள்ள—யானைகளாகிய பெரியமலைகளினின்றுஞ் சிந்துகின்றமதநீர் கடல்போலாகி விசாலமான பூமியை வளைந்துகொள்ள எ—று.

கொள்ள மூடிய என இயைக்க. நெடுங்காலமழிவின்றிப்பல்கியசேனையென்பார் 'ஊழிமால்படை' என்றார். (௯௨)

திகந்த மெட்டுந் திருநிழ லோச்சியே
யுகந்த தேர்களி னொண்கொடி யாடுவ
குகன்வி டுத்திடு கொற்றவ னாற்றல்கண்
டகன்சி ரங்க ளசைப்பன போன்றவே.

இ—ள்: திகந்தம் எட்டும் திரு நிழல் ஓச்சி— எட்டுத்திக்கினெல்லைமுழுவதுஞ்சிறந்தநிழலைப்பரப்பி, உகந்த தேர்களின் ஒள் கொடி ஆடுவ— உயர்ந்த தேர்களின்கண்ண ஒளிபொருந்திய கொடிகளசையுந்தன்மை, குகன் விடுத்திடு கொற்றவன் ஆற்றல் கண்டு— முருகவேளாலனுப்பப்பட்ட வீரவாகுதேவருடைய வலிமையைப்பார்த்து, அகன் சிரங்கள் அசைப்பன போன்ற— அகன்றதலைகளையசைப்பன போன்றிருந்தன எ—று.

தலையசைத்தல் வியந்துமெச்சிக்கொண்டதற்கோரறிகுறியென்க. உகத்தல்- உயர்தல். (௯௩)

ஆகு மெல்லை யவுணர்மன் றேர்மிசைப்
பேய்கள் சூழ்ந்து பிணங்கி மலைந்தன
காகம் யாவுங் கழுகும்வெஞ் சேனமுங்
கூகை யோடு குழீஇயிரங் குற்றவே.

இ—ள்: ஆகும் எல்லை—அவ்வாறான சமயத்தில், அவுணர் மன் தேர் மிசை—அசுரத்தலைவனாகிய வச்சிரவாகுவின் தேரின்மேல், பேய்கள் சூழ்ந்து பிணங்கி மலைந்தன—பேய்க்கூட்டங்கள்வந்துசுற்றி ஒன்றோடொன்றுமாறுபட்டுச் சண்டைசெய்தன, காகம் யாவும் கழுகும் வெம் சேனமும்— எல்லாக்காகங்களும் கழுகுகளும் கொடியபருந்துகளும், கூகையோடு குழீஇ— கூகைகளுடன்கூடி, இரங்குற்ற—ஒலித்தன எ-று.

பலகாகங்களென்பார் 'காகம்யாவும்' என்றார். இச்செய்யுளினும் பிற்செய்யுட்களினுங்கூறப்படுவன தீயசகுனங்களென்க. பிரயாணப்படும்பொழுது நற்சகுனங்காணப்படின் நன்மையும் தீயசகுனங்காணப்படின் தீமையும் விளையும். (௯௪)

மடித்த வாயுடை வச்சிர மொய்ம்பினன்
பிடித்த கையிற் பெருஞ்சிலை வீழ்ந்தது
தொடுத்த வெந்நூறு தூணியு மிற்றதாற்
றுடித்த வாலிடக் கண்களுந் தோள்களும்.

இ—ள்: மடித்த வாய் உடை வச்சிர மொய்ம்பினன்—இதழ்மடிக்கப்பெற்ற வாயையுடைய வச்சிரவாகுவென்பவன், கையில் பிடித்த பெரும் சிலை வீழ்ந்தது—கையிற்பிடித்திருந்த பெரியவில் தவறிவிழுந்தது, தொடுத்த வெர் உறு தூணியும் இற்றது—முதுகிற்கட்டப்பட்டிருந்த அம்புக்கூடும் அறுந்துவிழுந்தது, இடக ண்களும் தோள்களும் துடித்த- அவனுடைய இடக்கண்களும் இடப்புயங்களுந்து டித்தன எ—று.

வாய்மடித்தல் கோபக்குறிப்பாமென்க. ஆடவர்க்கு வலக்கண்ணும்வலப்புய முந்துடித்தல்நற்சகுனமும் இடக்கண்ணும் இடப்புயமுந்துடித்தல் துர்ச்சகுனமு மாம். தொடுத்தவெந்நுறு தூணி=வென்தொடுத்துறு தூணி. (நடு)

அண்ணன் மைந்தன தாழியந் தேர்மிசைக்
கண்ண கன்கொடி கையற வீழ்ந்தன
விண்ணி னேறு விசும்பின்றி யார்ப்பன
வெண்ணி றீக்குறி யிவ்வகை யுற்றவே.

இ—ள்: அண்ணல் மைந்தனது ஆழியம் தேர் மிசை— சூரபன்மனதுபுதல் வனுகிய வச்சிரவாகுவினது உருளைபொருந்திய தேரிலுள்ள, கண் அகன் கொடி—இடமகன்றகொடிகள், கையற வீழ்ந்தன—நிலைகெட்டுவீழ்ந்தன, விண்ணின் ஏறு விசும்பு இன்றி ஆர்ப்பன—இடிகள் மேகமில்லாமல்முழங்கின, இவ் வகை– இப்படியாக, எண் இல் தீக்குறி உற்ற-அளவிறந்த தீயசகுனங்கள் நிகழ்ந்தன எ—று.

பரந்தகொடியென்பார் 'கண்ணகன்கொடி' எனவும், விலங்கினுண்முதலிய பிறபொருள்களைவிலக்குதற்குரிய அடைபுணர்த்தி 'விண்ணினேறு' எனவும் கூறினர். மேகமின்றித்தோன்றுமிடியை வெள்ளிடியென்பர். மழைபெய்தற்காய் மேகங்களினின்றுதோற்றுமிடியினும் வெள்ளிடி சகுனத்தில் மிகுந்ததீமையைச்செய்வதாம். (நசு)

உற்ற காலவை யுள்ளுறக் கொள்கிலன்
செற்ற மேல்கொண்டு சென்னியொர் பத்துளான்
மற்றொர் தூணியும் வார்சிலை யுங்கொளாப்
பொற்ற டங்கை புறந்தனிற் சேர்த்தினன்.

இ—ள்: உற்றகால்—இவ்வாறு கெட்டசகுனங்களுண்டானபொழுது, சென்னி ஒர் பத்து உளான்- பத்துத்தலைகளையுடைய வச்சிரவாகு, அவை உள்ளுற கொள்கிலன்—அவற்றை மனத்திற்சிந்திக்காதவனாய், செற்றம் மேல் கொண்டு—கோபமிகப்பெற்று, மற்று ஒர் தூணியும் வார் சிலையும் கொளா—வேறோரம்புக் கூட்டையும் நீண்டவில்லையுமெடுத்து, பொன் தடம் கை புறம் தனில் சேர்த்தினன்—அழகியவிசாலித்த அகங்கையிலும் முதுகிலும் சேர்த்துக்கொண்டான் எ—று.

அம்புக்கூட்டைமுதுகிற்கட்டி வில்லைக்கையிலேந்தினனென்க. (நஎ)

மொய்கொள் வச்சிர மொய்ம்பனித் தன்மையால்
வெய்ய தன்படை வெள்ளமொ டேகியே
செய்ய வேலுடைச் சேவக னேவல்செ
யைய னின்ற வடுகள மெய்தினன்.

இ—ள்: மொய் கொள் வச்சிரமொய்ம்பன்—வலியையுடைய வச்சிரவாகு வென்பான், இ தன்மையால்—இப்படி, வெய்ய தன் படை வெள்ளமொடு ஏகி—கொடிய தனதுசேனைவெள்ளத்துடன்போய், செய்ய வேல் உடை சேவகன் ஏவல் செய் ஐயன் நின்ற அடுகளம் எய்தினன்—சிறந்த வேற்படையையுடைய வீராகிய முருகவேளதுதொண்டைச்செய்கின்ற வீரவாகுதேவர் நின்ற போர்க்களத்தை அடைந்தான் எ—று.

செய்யவேல் சிவந்தவேலெனினுமாம். ஏவல்-தூதுமுதலியன. (௩௮)

வண்டு லாந்தொடை வச்சிர வாகுதன்
றண்ட மோடு சமர்க்களஞ் சேர்தலு
மண்டர் நாயகன் றூதுவ னன்னவை
கண்டு நின்று கழறுதன் மேயினன்.

இ—ள்: வண்டு உலாம் தொடை வச்சிரவாகு—வண்டுகளுலாவப்பெற்ற மலர்மாலையையணிந்தவச்சிரவாகுவென்பான், தன் தண்டமோடு சமர்க்களம் சேர்தலும்—தன்னுடையசேனைகளுடன் போர்க்களத்தையணுக, அண்டர் நாயகன் தூதுவன்—தேவநாயகராகிய முருகவேளின் தூதரான வீரவாகுதேவர், அன்னவை கண்டு—அந்நிகழ்ச்சிகளைப்பார்த்து, நின்று கழறுதல் மேயினன்—நின்று சொல்வாராயினர் எ—று. (௩௧)

வேறு.

இந்திர ஞால வையத் திறைவனே யல்லன் மற்றை
மைந்தரி லொருவ னாகும் வருபவன் வருவான் றன்னை
முந்திய தானை யோடு முரணற முருக்கி வீட்டி
யந்திவான் புகுமு னெந்தை யடிதொழப் போவ னென்றான்.

இ—ள்: வருபவன்—என்னுடன்போர்செய்யவருபவன், இந்திர ஞால வையத்து இறைவன் அல்லன்—இந்திரஞாலமென்னுந்தேரையுடைய தலைவனாகிய சூரபன்மனல்லன், மைந்தரில் ஒருவன் ஆகும்—அவனதுபுத்திரர்களுளொருவனேயாம், வருவான் தன்னை முந்திய தானையோடு முரண் அற முருக்கி வீட்டி—வருகின்றஇவ்வசுரனை முற்பட்டுவருகின்றசேனைகளோடும் வலிமைகெடும்படி அழித்துவிழுத்தி, அந்தி வான் புகும் முன்—செவ்வானந்தோற்றுதற்குமுன், எந்தை அடி தொழ போவன்—எங்கள்கடவுளதுபாதங்களைவணங்க மீண்டுசெல்வேன், என்றான்—என்றுகூறினார் எ—று.

மாலைக்காலந்தோன்றுதற்குமுன்னென்பார் 'அந்திவான்புகுமுன்' என்றார். சூரபன்மனொழிந்த மற்றையஅசுரர்களையெல்லாம்வெல்வேனென்னுந் துணிவுடையாராதலின் குறித்தகாலத்தினுள் அழித்து மீண்டுசெல்வதாகநிச்சயித்தார். ()

எறிதிரை யளக்க ரென்ன வீண்டுறு மனிகம் யாவு
முறைமுறை சாடி வந்த முதல்வனை முடித்து மாலை
யுறுதன்முன் விசய மோடு மொய்யென மீளே னென்னி
னறுமுக வையன் றூத னாவனோ வடிய னென்றான்.

இ—ள்: எறி திரை அளக்கர் என்ன ஈண்டுறும் அனிகம் யாவும் முறை முறை சாடி—திரைவீசுகின்றகடலைப்போல நெருங்கிவருகின்றசேனைகளெல்லாவற்றையும் முறைமுறையாக அழித்து, வந்த முதல்வனை முடித்து—வந்துசேர்ந்ததலைவனையும் அழித்து, மாலை உறுதல் முன்—மாலைக்காலம்வருதற்குமுன், விசயமோடும் ஒய் என மீளேன் என்னில்—வெற்றியோடும் விரைவாகத்திரும்பிப்போகாதொழிவனாயின், அடியன்—அடியேன், அறுமுக ஐயன் தூதன் ஆவனோ—முருகக்கடவுளின் தூதுவனாவேனோ?, என்றான்—என்று சபதங்கூறினார் எ—று.

ஓ-எதிர்மறை. பெருந்தொகைச்சேனையாதலின் கடலையுவமித்தார். (௪௧)

எண்டிசை புகழும் வீர னினையன விளம்பிச் செவ்வேள்
புண்டரீ கத்துப் பொற்றாள் புந்தியா லிறைஞ்சிப் போற்றி
மண்டமர் முயன்று நேமி மறிதர வரைகள் கீற [னர்.
வண்டமுந் திசையும் வானுங் குலுங்கத்தோள் கொட்டி யார்த்த

இ—ள்: எண் திசை புகழும் வீரன் இனையன விளம்பி— எட்டுத்திக்கிலுமுள்ளாரால் புகழப்படுகின்ற வீரவாகுதேவர் இவ்வசனங்களைக்கூறி, செவ்வேள் புண்டரீகத்து பொன் தாள் புந்தியால் இறைஞ்சி போற்றி— முருகவேளின் தாமரைமலர்போன்ற அழகிய திருவடிகளை மனத்தால்வணங்கித் துதித்து, மண்டு அமர் முயன்று— நெருங்கியபோரைச்செய்யமுயன்று, நேமி மறிதர—சமுத்திரங்கள் கட்டுடையவும், வரைகள் கீற—மலைகள் கிழியவும், அண்டமும் திசையும் வானும் குலுங்க— அண்டங்களும் திக்குகளும் ஆகாயமும் நடுங்கவும், தோள்கொட்டி ஆர்த்தான்—புயங்களிற்றட்டி ஆரவாரித்தார் எ—று.

கண்முன்னிலைப்படாமையின் மனத்தால்வணங்கினர். தோளிற்றட்டிய அதிர்ச்சியாலும் ஆர்த்தமுழக்கத்தாலும் கடல்மறிதல் முதலியன நிகழ்ந்தன. (சஉ)

ஆர்த்திடு மோதை கேளா வமர்குறித் தெழுதேர் மேலோர்
கார்த்திடு தந்தி மேலோர் கவனமாப் புரவி மேலோர்
பேர்த்திடு நிலத்தின் மேலோர் பிறங்குசீ ரவுணர் யாரும்
வேர்த்தனர் திரிந்து சிந்தை வெருவினர் விளம்பு கின்றார்.

இ—ள்: அமர் குறித்து எழு தேர் மேலோர்—போரைக்குறித்துச்செல்லுந்தேர்களின்மேல் வருகின்றவர்களும், கார்த்திடு தந்தி மேலோர்— கருநிறமான யானைகளின்மேல்வருகின்றவர்களும், கவன புரவி மா மேலோர்— வேகமான குதிரைகளின்மேல்வருகின்றவர்களும், பேர்த்திடு நிலத்தின் மேலோர்—பூமியின்மேல்நடக்கின்றவர்களும் ஆகிய, பிறங்கு சீர் அவுணர் யாரும்— விளங்குகின்ற சிறப்பையுடைய அசுரரனைவரும், ஆர்த்திடும் ஓதை கேளா— வீரவாகுதேவராரவாரித்த ஓசையைக்கேட்டு, வேர்த்தனர்—சரீரம் வேர்த்து, சிந்தை திரிந்து—மனம்வேறுபட்டு, வெருவினர்— பயந்து, விளம்புகின்றார்—(பின்வருமாறு)சொல்வார்கள் எ—று.

பேர்ந்திடு எனற்பாலது விகாரமாயிற்று. நிலத்தின்மேற்பேர்ந்திடுவோரெனமாற்றிக்கூட்டுக. (சங)

வாழிய வுலகம் யாவு மன்னுயிர்த் தொகையு மாய
வூழியிற் றனிநின் றார்க்கு முருத்திர னார்ப்போ வன்றே
லாழிகட் கரச னார்ப்போ வண்டங்க ணெக்க வார்ப்போ
வேழ்கட லுடைந்த வார்ப்போ வித்திற மார்ப்ப தென்றார்.

இ—ள்: இத்திறம் ஆர்ப்பது—இவ்வாறு ஆரவாரிப்பது, உலகம் யாவும் மன் உயிர் தொகையும் மாய ஊழியில் தனி நின்று ஆர்க்கும் உருத்திரன் ஆர்ப்போ— எல்லாவுலகங்களும் அவற்றிற்பொருந்திய எல்லாவுயிர்க்கூட்டங்களும் அழியும்படி ஊழிக்காலத்தில் தனித்துநின்று ஆரவாரிக்கின்ற உருத்திரமூர்த்தியினது ஒலியோ?, அன்றேல் ஆழிகட்கு அரசன் ஆர்ப்போ— அல்லது சமுத்திரராசனாகிய வருணனது ஆரவாரமோ?, அண்டங்கள் நெக்க ஆர்ப்போ—அண்டங்களுடைந்த ஆரவாரமோ?, ஏழ் கடல் உடைந்த ஆர்ப்போ— ஏழுகடல்களுமுடைந்த ஆரவாரமோ?, என்றார்—என்று (ஒருவரோடொருவர்) ஐயுற்றுப்பேசினார்கள் எ—று.

ஓகாரங்கள் ஐயம். வாழிய அசைநிலை. (சச)

செருவலி கொண்ட சீற்றச் செங்கணு னார்க்கு மோதை
மருமலர்த் தொடைய லாக வச்சிர வாகு வென்போ
னிருபது செவியி னூடு மிரவியம் புழைகள் புக்க
வுருமணச் சேற லோடு முளம்பனித் துரைக்க லுற்றான்.

இ—ள்: செரு வலி கொண்ட சீற்ற செம் கணன் ஆர்க்கும் ஓதை— போர் வலிமையைக்கொண்ட கோபமிகுந்த சிவந்தகண்களையுடைய வீரவாகுதேவர் ஆர

வரிக்குமோசையானது, மரு மலர் தொடையல் ஆகு வச்சிரவாகு என்போன் இருபது செவியின் ஊடும்—வாசனைபொருந்திய மலர்மாலையையணிந்த மார்பையுடைய வச்சிரவாகுவென்னும்அசுரனது இருபதுகாதுகளிலும், இரவியம் புழைகள் புக்க உரும் என சேறலோடும்—மலைமுழைகளில்விழுந்த இடியைப்போல நுழைய, உளம்பனித்து உரைக்கலுற்றான்—மனம்நடுங்கிச் சொல்வான் எ—று.

செவிப்புலனைவாதைசெய்துகொண்டுநுழைதலால் மலைமுழையில்விழுந்த இடியையுவமித்தார். செவியினூடும் சேறலோடும் எனஇயையும். (சரு)

ஈரெழு திறத்த வான வுலகினு ளின்று காறிப்
பேரொலி கேட்ட தின்றாற் பிறந்ததித் துழனி யாதோ
தேருதி ரென்று பாங்க ருழையரிற் செப்பத் திண்டேர்ச்
சாரதி விசய னென்பான் றாழ்ந்திவை புகல லுற்றான்.

இ—ள்: ஈரெழு திறத்த ஆன உலகினுள்—பதினான்குவகையானஉலகங்களுள், இன்றுகாறு இ பேர் ஒலி கேட்டது இன்று—இன்றுவரை இப்படிப்பட்ட பேரோசை கேட்டதில்லை, பிறந்தது இ துழனி யாதோ—தோன்றிய இந்தப் பேரோசை ஏதோ?, தேருதிர் என்று—ஆராயுங்களென்று, பாங்கர் உழையரில் செப்ப—பக்கத்திலுள்ளபரிசனர்களிடங்கூற, திண் தேர் சாரதி விசயன் என்பான்—வலியதேரிற்சாரதியாயிருந்த விசயனென்பவன், தாழ்ந்து இவை புகலலுற்றான்—வணங்கிப்பின்வருவனவற்றைச்சொல்வான் எ—று.

பூமிமுதலிய மேலேழுலகங்களும் அதலமுதலிய கீழேழுலகங்களுமாக உலகம் பதினான்காமென்க. (சகூ)

தெற்றென வுணர்தி மான்றேர் செலுத்திய வலவ னென்றே
மற்றென துரையை யெள்ளல் வல்லைமேற் காண்டி யெந்தை
யற்றமில் படையி னோடு மமர்செய வருத னாடி
யொற்றென நின்றோன் போர்வேட் டார்த்திடு மொலியீ தென்றான்.

இ—ள்: தெற்றென உணர்தி—தெளிவாக அறிந்துகொள்வீர், மான் தேர் செலுத்திய வலவன் என்று எனது உரையை எள்ளல்—குதிரைபூண்டதேரைச் செலுத்துகின்றசாரதியென்றுநினைத்து என்னுடையவார்த்தையை இகழாதீர், மேல் வல்லை காண்டி—இனிவிரைவில் உண்மையையறிவீர், எந்தை அற்றம் இல் படையினோடும் அமர்செய வருதல் நாடி—எங்கள்தலைவராகிய நீர் குற்றமற்றசேனைகளுடன் போர்செய்யவருவதையறிந்து, ஒற்று என நின்றோன் போர்வேட்டு ஆர்த்திடும் ஒலி ஈது—தூதாகவந்துநின்றவீரன் போர்செய்யவிரும்பிஆரவாரித்தஓசை இது, என்றான்—என்றுகூறினான் எ—று.

ஐயமறவென்பான் 'தெற்றென' எனவும், என்றாற் செலுத்தப்படுகின்ற தேர்நெருங்கிப்போனவுடன் இவ்வொலியின்னதென்பதை இனிதுணர்வீரென்பது போதர 'வல்லைமேற்காண்டி' எனவும் கூறினான். எந்தை முன்னிலையில்வந்த படர்க்கை. (சஎ)

தூதுவ னார்ப்பி தென்று சொல்லுமு னுருத்துக் கண்கண்
மீதெரி பொங்க நக்கு வெய்துயிர்த் துரப்பி யான்போ
யீதொரு கணத்தி னன்னா னிகன்முர ணழித்துப் பற்றித்
தாதைமு னுய்ப்பன் காண்டி சரதமித் தன்மை யென்றான்.

இ—ள்: தூதுவன் ஆர்ப்பு இது என்று சொல்லுமுன்—தூதனுடைய ஆரவாரமிதுவென்று சாரதிசொல்லிமுடியுமுன், உருத்து—கோபித்து, கண்கள் மீது எரி பொங்க நக்கு—கண்களினின்று அக்கினிப்பொறிகள்தோன்றச் சிரித்து, வெய்து உயிர்த்து—பெருமூச்சுவிட்டு, உரப்பி—உரப்பி, யான் போய்—

நான்சென்று, ஈது ஒரு கணத்தின் — இந்த ஒருகணப்பொழுதினுள், அன்னோன் இகல் முரண் அழித்து — அத்தாதனுடைய போர்வலியையடக்கி, பற்றி — பிடித்து, தாதை முன் உய்ப்பன் — என்பிதாவின்முன் கொண்டுபோய்விடுவேன், இத ன்மை சரதம் — இச்சம்பவம்நடைபெறுதல் நிச்சயம், காண்டி — அறிவாய், என்றா ன் — என்றுகூறினான் எ — று.

வெய்துயிர்த்தல்-வெப்பமுடையதாகமூச்சைவிடுதல். உரப்புதல்-பெருந்தொ னியாகச் சத்தமிடுதல். (௪௮)

என்றிவை யுரைத்துப் போது மெல்லையின் முன்ன மாகச்
சென்றிடு மவுண வீரர் சேனையை வருத்துச் சீறித்
தன்றுணைத் தாளுந் தோளுந் தடக்கையு மனிக மாக
நின்றதோர் வீரன் றன்னை நேமியிற் சுற்றி யார்த்தார்.

இ — ள்: என்று இவை உரைத்து போதும் எல்லையின் முன்னம் ஆக — என்று இவ்வசனங்களைக்கூறி வச்சிரவாகு செல்லுதற்குமுன்னே, சென்றிடும் அவுண வீரர் — உடன் சென்ற அசுரவீரர்கள், சேனையை வருத்து — சேனைகளை அணிவகுத்து, சீறி — கோபித்து, தன் துணை தாளும் தோளும் தட கையும் அனிகம் ஆக நின்றது ஓர் வீரன் தன்னை நேமியில் சுற்றி — தம்முடைய இரண்டுபாதங்களும் புயங்களும் விசாலித்த கைகளுமே சேனையாகக்கொண்டுநின்ற வீரவாகு தேவரைக்கடல்வளைந்தாற்போலவளைந்து, ஆர்த்தார் — ஆரவாரித்தார்கள் எ — று.

தனியேநின்ற வீரனென்பார் 'தன்றுணைத்தாளுந்தோளுந்தடக்கையுமனிக மாக நின்றதோர்வீரன்' என்றார். பிறிநிலையேகாரந்தொக்கது. (௪௯)

கைதனி லிருந்த செம்பொற் கார்முகங் குனித்து வெங்கோ
லெய்தனர் முசல நாஞ்சி லெறிந்தனர் தண்டஞ் சூலம்
பெய்தனர் கணிச்சி விட்டார் பிண்டிபா லங்க ளார்த்தார்
நெய்தவ ழயில்வே றொட்டார் நேமிக ளுருட்டு கின்றார்.

இ — ள்: கை தனில் இருந்த செம் பொன் கார்முகம் குனித்து வெம் கோல் எய்தனர் — சிலர் கையிலிருந்த செம்பொற்பூணணிந்தவில்லைவளைத்துக் கொடிய பாணங்களையேவினார்கள், முசலம் நாஞ்சில் எறிந்தனர் — சிலர் இருப்புலக் கைகளையுங்கலப்பைப்படைகளையுமேவினார்கள், தண்டம் சூலம் பெய்தனர் — சிலர் தண்டாயுதங்களையுஞ் சூலங்களையும்வீசினார்கள், கணிச்சி விட்டார் — சிலர் மழுப்ப டைகளைச்செலுத்தினார்கள், பிண்டி பாலங்கள் தூர்த்தார் — சிலர் பிண்டிபாலங்க ளைச்செலுத்தினார்கள், நெய் தவழ் அயில் வேல் தொட்டார் — சிலர் நெய்பூசப்பெ ற்ற கூரியவேற்படையைச்செலுத்தினார்கள், நேமிகள் உருட்டுகின்றார் — சிலர் ச க்கரப்படைகளைச் சுழற்றிவீசினார்கள் எ — று.

கறைதோன்றாவண்ணம் நெய்பூசப்படுவதென்க. (௫௦)

வேறு.

தஞ்செனக் கொடுமைசெய் தானவப் படைஞர்கள்
வெஞ்சினத் தன்மையால் விடுபடைக் கலமெலாங்
கஞ்சனைச் சிறைசெயுங் காரணன் றூதுவன்
செஞ்சுடர்ப் படிவமேற் செவ்வனவ் வந் துற்றவே.

இ — ள்: தஞ்சு என் கொடுமை செய் தானவ படைஞர்கள் — தமக்குத்துணை யாமென்றுநினைத்துத் தீமைகளைச்செய்கின்ற அசுரவீரர்கள், வெம் சின தன் மையால் விடு படைக்கலம் எலாம் — மிகுந்தகோபத்துடன்செலுத்திய ஆயுதங்க ளெல்லாம், கஞ்சனை சிறை செயும் காரணன் தூதுவன் செம் சுடர் படிவமேல் — (முற்காலத்திற்) பிரமதேவரைச்சிறையில்வைத்த முருகக்கடவுளது தூதராகிய வீ

ரவாகுதேவரது சிவந்தநிறமான ஒளிபொருந்தியசரீரத்தில், செவ்வண் வந்து உற்ற—நன்றாகவந்துபட்டன எ—று.

காரணன்-உலகந்தோன்றுதற்கும் நிற்றற்கும் காரணமாயிருப்பவன். உலகத்தார் இம்மைமறுமையிரண்டினுமெய்தற்பாலனவாகிய இன்பங்களைப்பெறுதற்கு நல்வினையேசாதனமென்றுவிரும்பிச்செய்வதுபோல, அசுரர் தீவினைகளே தமக்குவேண்டியஆக்கங்களைத் தரத்தக்கனவென்று துணிந்துசெய்தலின் 'தஞ்செனக்கொடுமைசெய்தானவப்படைஞர்கள்' என்றார். (௫௧)

துய்யன்மேல் வெம்படைத் தொகுதிவந் தடைதலு
மெய்யெலா முற்றதான் மிக்கசோ ரிப்புனல்
மையறீர் காலையின் வந்தெழும் பரிதிபாற்
பையவே செய்யதண் கதிர்வரும் பான்மைபோல்.

இ—ள்: துய்யன் மேல் வெம் படை தொகுதி வந்து அடைதலும்—தூய்மையையுடைய வீரவாகுதேவர்மீது கொடியபடைக்கலக்கூட்டங்கள்வந்துபட்டவுடன், மையல் தீர் காலையின் வந்து எழும் பரிதி பால் பைய செய்ய தண் கதிர் வரும் பான்மை போல்—உயிர்கள் நித்திரைமயக்கம்நீங்கியெழும்புகின்ற காலைப்போதில்வந்துஉதயஞ்செய்கின்றசூரியனினின்று மெல்லமெல்லவாகச் சிவந்த இளங்கிரணங்கள் தோற்றுகின்றதன்மையைப்போல, மெய் எலாம்- சரீரமெங்கும், மிக்க சோரி புனல் உற்றது—மிகுதியாகியஇரத்தநீர்சிந்தியது எ-று.

சிவந்தநிறமுடைமையால் உதயசூரியனையுங்கிரணங்களையுமுவமித்தார். உதயமலையினின்றுமேலெழுந்தோறுமென்பார் 'பைய' எனவும், வெப்பமின்மையால் 'தண்கதிர்' எனவும் கூறினார். (௫௨)

ஆனதோர் காலையெம் மையன்வெஞ் சினமுறா
மானினம் பலபல மருவியே செறிவுழி
மேனிவந் தேகியோர் வேங்கைபாய்ந் தடுதல்போற்
றானவப் படையினைத் தாக்குதன் மேயினான்.

இ—ள்: ஆனது ஓர் காலை—அப்படியானசமயத்தில், எம் ஐயன் வெம் சினம் உறா— எங்கள்தலைவராகிய வீரவாகுதேவர் கொடியகோபத்தைக்கொண்டு, மான் இனம் பலபல மருவி செறிவுழி—பற்பலமான்கூட்டங்கள் வந்துசெறிந்திருக்கின்றவிடத்தில், ஓர் வேங்கை-ஒருவேங்கைப்புலியானது, மேல் நிவந்து ஏகி-மேற்கிளர்ந்துசென்று, பாய்ந்து அடுதல் போல்—பாய்ந்து அழிப்பதுபோல, தானவ படையினை தாக்குதல் மேயினான்—அசுரசேனைகளையழிக்கத்தொடங்கினார் எ—று.

விரைந்துபாய்ந்துகொல்லுதலால் வீரவாகுதேவர்க்குப்புலியையும், அவரணுகியவுடன் அவரதுகோபத்தையுந்திறலையுங்கண்டு நடுங்கியொதுங்குதலால் அசுரர்க்குமான்களையும் உவமித்தார். (௫௩)

ஆயிர மாயிர மவதிசே ரவுணர்தஞ்
சேயதண் குஞ்சியைச் செங்கையாற் பற்றியே
பாயிருந் தரையினும் பாற்படு கிரியினு
மேயெனு மளவைமுன் னெற்றியே யெறியுமால்.

இ—ள்: ஆயிரம் ஆயிரம் அவதி சேர் அவுணர் தம் சேய தண் குஞ்சியை செம் கையால் பற்றி- ஆயிரமாயிரமென்னுந்தொகையான அசுரர்களுடைய சிவந்த குளிர்ந்தகுடுமிகளைச்சிவந்தகையாற்பிடித்து, பாய் இரும் தரையினும் – பரந்த பெரியபூமியிலும், பால் படு கிரியினும்—பக்கங்களிலுள்ளமலைகளிலும், ஏ எனும்

அளவை முன் எற்றி எறியும்—எ யென்றுசொல்லுங்காலவளவையின்முன் அடித்து எறிவார் எ—று.

சுகந்தைதலந்தடவிவார்ந்துமுடிக்கப்பெற்ற இளமையிராதலின் 'தண்குஞ்சி' என்றூர். ஒவ்வொருமுறையினும் ஆயிரமசுரராகப் பல்முறைபற்றி அடித்தெறிந்தார் என்பதாம். (௫௪)

எய்யுப்வெம் படைகளு மெறியும்வெம் படைகளுங்
கையினிற் பற்றியே கனலெழப் பிசைதரு
மொய்யெனப் பதைபதைத் தோலமிட் டுயிருகச்
செய்யபொற் றாள்களாற் சிலவரைத் தேய்த்திடும்.

இ—ள்: எய்யும் வெம் படைகளும் எறியும் வெம் படைகளும்— எய்யப்படுகின்ற கொடியபடைக்கலங்களையும் வீசப்படுகின்ற கொடியபடைக்கலங்களையும், கையினில் பற்றி—கையாற்பிடித்து, கனல் எழ பிசைதரும்— அக்கினிபற்றும்படிபிசைவார், ஒய் என பதைபதைத்து ஓலம் இட்டு உயிர் உக—விரைவாகப்பதைபதைத்துக்குழறி உயிர்போம்படி, செய்ய பொன் தாள்களால் சிலவரை தேய்த்திடும்—சிவந்த அழகியபாதங்களாற் சிலரை அரைப்பார் எ—று.

ஒன்றோடொன்றுரிஞ்சுதலால் அக்கினிதோன்றுவது. ஒய் விரைவுக்குறிப்பு. எய்யப்படுவன அம்புவகைகள். எறியப்படுவன எழு மழு முதலியன. (௫௫)

மத்தமால் கரிகளும் வாம்பரித் தொகுதியுஞ்
சித்திரந் திகழ்மணித் தேர்களு மவுணர்தங்
கொத்தொடே வீழ்தரக் கோலமா லடிதனக்
கொத்ததன் றாள்களா லுதைபுரிந் துலவுறும்.

இ—ள்: மத்த மால் கரிகளும்—மதம்பொருந்திய பெரியயானைகளும், வாம் பரி தொகுதியும்—தாவிச்செல்லுகின்றகுதிரைக்கூட்டங்களும், சித்திரம் திகழ் மணி தேர்களும்— அழகுவிளங்குகின்ற இரத்தினமழுத்தப்பெற்றதேர்களும், அவுணர் தம் கொத்தொடு வீழ்தர—அசுரர்கூட்டத்துடன் விழும்படி, கோல மால் அடி தனக்கு ஒத்த தன் தாள்களால் உதைபுரிந்து—அழகுபொருந்திய திருமாலின்பாதங்களை நிகர்த்த தமதுபாதங்களாலுதைத்து, உலவுறும்—உலாவுவார் எ—று.

சித்திரம் சித்திரித்தபிரதிமைகளெனவும் மணித்தேர் மணிகட்டப்பட்டதேரெனவும் கூறினுமாம். நீண்டுபெருத்த திருவடிகளாதலின் 'கோலமாலடிதனக்கொத்ததன்றாள்கள்' என்றார். (௫௬)

கிடைத்திடுஞ் சிலவரைக் கீண்டன னீண்டமெய்
துடித்திடக் கழல்களாற் றுகைத்தனன் சிலவரை
யடித்தனன் சிலவரை யரைத்தனன் சிலவரைப்
புடைத்தனன் சிலவரைப் புதுமரத் தண்டினால்.

இ—ள்: கிடைத்திடும் சிலவரை கீண்டனன்—எதிர்ப்பட்ட சிலஅசுரரைக் கிழித்தார், சிலவரை நீண்ட மெய் துடித்திட கழல்களால் துகைத்தனன்—சிலஅசுரரை நீண்டசரீரந்துடிக்கும்படி பாதங்களாற்றுவைத்தார், சிலவரை அடித்தனன்—சிலஅசுரரையடித்தார், சிலவரை அரைத்தனன்—சிலஅசுரரையரைத்தார், சிலவரை புது மர தண்டினால் புடைத்தனன்—சிலஅசுரரைப் புதியமரமாகிய தண்டால்மோதினார் எ—று. (௫௭)

மத்தவெங் கரிபரி வயவர்தே ராயின
பத்துநூ றுருதலைப் படநெடும் பாணியாற்
குத்திடுஞ் சிகரமேற் கோளரி பாய்ந்தெனத்
தத்தியே திரிதருந் தலைமலைக் குலமிசை.

இ—ள்: மத்தவெம் கரி பரி வயவர் தேர் ஆயின—மதநீரைச்சிந்துகின்ற கொடியயானைகளும் குதிரைகளும் காலாட்களும் தேர்களுமாகிய நால்வகைச்சேனைகளும், ஒரு தலை பத்து நூறு பட—ஒவ்வொருமுறையிலும் ஆயிரக்கணக்காய ழியும்படி, நெடும் பாணியால் குத்திடும்—நெடிய கைகளாற்குத்துவார், சிகரமேல் கோளரி பாய்ந்து என—மலைமுடிகளிற் சிங்கம்பாய்ந்தாற்போல, தலை மலைக்குலம் மிசை—தலைகளாகிய மலைக்கூட்டங்களின்மேல், தத்தி திரிதரும்—பாய்ந்துதிரிவார் எ—று.

பகைவரைக்கொல்லும்படி தேடிப்பாய்தலாற் சிங்கத்தையுவமித்தார். (௫௮)

தேரெலா மிற்றன திண்டிறற் கவனமாப்
பேரெலா மிற்றன பிளிறுமால் கரிகளின்
றாரெலா மிற்றன தானவத் தலைவர்செய்
போரெலா மிற்றன புகழெலா மிற்றதே.

இ—ள்: தேர் எலாம் இற்றன—(அப்படி வீரவாகுதேவர் சிதைத்துத்திரியும் பொழுது) தேர்களெல்லாமழிந்தன, திண் திறல் கவன மா பேர் எலாம் இற்றன—மிக்கவலிமைபொருந்திய வேகத்தையுடைய குதிரைகளென்னும் பெயருடையனவெல்லாமழிந்தன, பிளிறும் மால் கரிகளின் தார் எலாம் இற்றன—பிளிறுகின்ற பெரியயானைகளினிரைகளெல்லாமழிந்தன, தானவ தலைவர் செய் போர் எலாம் இற்றன— அசுரத்தலைவர்கள்செய்த போர்முழுதும்அழிந்தன, புகழ் எலாம் இற்றது— அவர்களுடைய புகழ்முழுதுமழிந்தன எ—று.

பேர்-ஆகுபெயர். (௫௯)

ஆங்கதோர் பொழுதினி லவுணருக் கிறைமகன்
பாங்கராய் வந்திடும் பல்பெருங் குமரரு
மோங்குநாற் படையொடு மொருவனைச் சுற்றியே
தாங்குபல் படையினாற் சமர்முயன் றாற்றினார்.

இ—ள்: அது பொழுதினில்— அப்பொழுது, அவுணருக்கிறை மகன் பாங்கர் ஆய் வந்திடும் பல் பெரும் குமரரும்— சூரபன்மனது புதல்வனாகிய வச்சிரவாகுவின் தோழராகவந்த பல சிறந்த புதல்வர்கள்யாவரும், ஓங்கும் நால் படையொடும் ஒருவனை சுற்றி—மிகுந்த சதுரங்கசேனைகளுடன் ஒப்பற்ற வீரவாகு தேவரைவளைந்து, தாங்கு பல் படையினால் சமர் முயன்று ஆற்றினார்—கையிலேந்திய பலவகையான படைக்கலங்களினாற் போரைமுயன்றுசெய்தார்கள் எ—று.

ஆங்கு ஓர்-அசைநிலைகள். பாங்கர் பக்கமெனினுமாம். ஊக்கமாய்ச்செய்தார்களென்பார் 'முயன்றாற்றினார்' என்றார். (௬௦)

வேறு.

அன்ன காலையில் வீரவா குப்பெய ரறிஞன்
றன்ன தோர்கரத் திருந்திடு பழுமரத் தண்டான்
முன்னர் வந்துசூழ் மைந்தர்கண் முரட்படை யோடுஞ்
சின்ன மாகியே விளிவுறப் புடைத்தனன் றிரிந்தான்.

இ—ள்: அன்ன காலையில்—அப்பொழுது, வீரவாகு பெயர் அறிஞன்—வீரவாகென்னும்பெயரையுடைய அறிவிற்சிறந்தார், தன்னது ஓர் கரத்து இருந்திடு பழு மர தண்டால்—தம்முடைய ஒருகையிலிருந்த பெரிய மரமாகிய தண்டினால், முன்னர் வந்து சூழ் மைந்தர்கள் முரண் படையோடும் சின்னமாகி விளிவுற—எதிரேவந்துவளைந்த அசுரகுமாரர்கள் வலியசேனைகளுடன்சேதப்பட்டு அழியும்படி, புடைத்தனன் திரிந்தான்—அடித்துத்திரிந்தார் எ—று. (௬௧)

செய்ய மத்தக மிற்றன விற்றன செழுந்தாள்
கைக ளிற்றன மருப்பிணை யிற்றன கரிகள்
வெய்ய காலுட னெருத்தமு மிற்றன மிலைச்சுங்
கொய்யு ளைத்தலை யிற்றன குரகதக் குழுவே.

இ—ள்: கரிகள்—யானைகள், செய்ய மத்தகம் இற்றன—சிறந்த மத்தகங்கள் அழியப்பெற்றன, செழும் தாள் இற்றன—கொழுப்பான கால்கள்முறியப்பெற்றன, கைகள் இற்றன—துதிக்கைகள் சிதையப்பெற்றன, மருப்பு இணை இற்றன—இரண்டுகொம்புகளுமொடியப்பெற்றன, குரகத குழு—குதிரைக்கூட்டங்கள், வெய்ய கால் உடன் எருத்தமும் இற்றன—கொடிய கால்களும் பிடர்களும் அழியப்பெற்றன, மிலைச்சும் கொய் உளை தலை இற்றன—அழகுசெய்யப்பெற்றிருக்கின்ற கொய்யப்பட்ட பிடர்மயிர்பொருந்திய தலைகள்அழியப்பெற்றன எ—று.

வேகமாகப்பாயுங்கால்களாதலின் 'வெய்யகால்' எனவும், ஒழுங்குபெறவாரப்பெற்றவென்பார் 'மிலைச்சும்' எனவும் கூறினர். (௬௨)

தட்ட ழிந்தன பாரக மழிந்தன சகடு
கெட்ட ழிந்தன கேதன மழிந்தன கிளர்ந்த
மொட்ட ழிந்தன பாகின மழிந்தன முரண்மாக்
கட்ட ழிந்தன வொழிந்தன கனைகுரற் பலதேர்.

இ—ள்: தட்டு அழிந்தன—தட்டுகளழியப்பெற்றன, பாரகம் அழிந்தன—பார்களழியப்பெற்றன, சகடு கெட்டு அழிந்தன—உருளைகள் சேதப்பட்டு அழிந்தன, கேதனம் அழிந்தன—கொடிகளழியப்பெற்றன, கிளர்ந்த மொட்டு அழிந்தன—உயர்ந்த கூம்புகளழியப்பெற்றன, பாகு இனம் அழிந்தன—சாரதிக்கூட்டம்அழியப்பெற்றன, முரண் மா கட்டு அழிந்தன—வலியகுதிரைநிரைகளழியப்பெற்றன, கனை குரல் பல் தேர் ஒழிந்தன—அதிர்ந்த ஓசையையுடைய பலதேர்கள் (இவ்வாறே) அழிவெய்தின எ—று. (௬௩)

கால்க ளுற்றிடும் வெஞ்சிலை யிற்றன கடிய
கோல்க ளிற்றன பரிதிக ளிற்றன கொட்பார்
தோல்க ளிற்றன நாந்தக மிற்றன தூண்டும்
வேல்க ளிற்றன நாஞ்சில்க ளிற்றன விரைவில்.

இ—ள்: விரைவில்—விரைவாக, கால்கள் உற்றிடும் வெம் சிலை இற்றன—குதைகள்பொருந்திய கொடிய விற்கள் அழிந்தன, கடிய கோல்கள் இற்றன—வேகமாய்ச்செல்லுகின்ற பாணங்கள் அழிந்தன, பரிதிகள் இற்றன—சக்கராயுதங்கள் அழிந்தன, கொட்பு ஆர் தோல்கள் இற்றன—சுழலுந்தன்மைபொருந்திய பரிசைகள் அழிந்தன, நாந்தகம் இற்றன—வாட்படைகள் அழிந்தன, தூண்டும் வேல்கள் இற்றன—செலுத்தப்படுகின்ற வேற்படைகள் அழிந்தன, நாஞ்சில்கள் இற்றன—கலப்பைப்படைகளும் அழிந்தன எ—று.

கடிய கொடிய எனினுமாம். (௬௪)

நெரிந்த சென்னிக ணெரிந்தன மார்பக நெடிது
சரிந்த வெங்குடர் சரிந்தன விழுக்குடைத் தசைகள்
சொரிந்த மூளைகள் சொரிந்தன விரிந்தெழு சோரி
திரிந்த கூளிக டிரிந்துமாய் வுற்றன சேனை.

இ—ள்: சென்னிகள் நெரிந்த—தலைகள் நெரிந்தன, மார்பகம் நெரிந்தன—நெஞ்சுகளும் நெரிந்தன, வெம் குடர் நெடிது சரிந்த—நெடியகுடல்கள் மிகவும்சரிந்தன, விழுக்கு உடை தசைகள் சரிந்தன—நிணத்தையுடைய தசைகள்சொரிந்

தன, மூளைகள் சொரிந்த-மூளைகள் சிந்தின, விரிந்து எழு சோரி சொரிந்தன-பரந்து கிளருகின்ற இரத்தநீர்கள்பாய்ந்தன, கூளிகள் திரிந்த—பேய்கள் உலாவின, சேனை திரிந்து மாய்வுற்றன-இவ்வாறே காலாட்சேனைகள் சிதறியழிந்தன எ-று.

கரந்து ணிந்தனர் புயங்களுந் துணிந்தனர் காமர்
சிரந்து ணிந்தனர் நாசிக டுணிந்தனர் செழும்பூ
ணுரந்து ணிந்தனர் கழலடி துணிந்தன ருளதொல்
வரந்து ணிந்தனர் வன்மையுந் துணிந்தனர் மைந்தர்.

இ—ள்: மைந்தர்— அசுரகுமாரர்கள், கரம் துணிந்தனர்—கைகள் அறப்பெற்றார்கள், புயங்களும் துணிந்தனர்—தோள்களும் அறப்பெற்றார்கள், காமர் சிரம் துணிந்தனர்—அழகிய தலைகள் அறப்பெற்றார்கள், நாசிகள் துணிந்தனர்—மூக்கு அறப்பெற்றார்கள், செழும் பூண் உரம் துணிந்தனர்—சிறந்த ஆபரணங்களையணிந்த நெஞ்சு முரியப்பெற்றார்கள், கழல் அடி துணிந்தனர்—வீரக்கழலைத் தரித்த கால்கள் முரியப்பெற்றார்கள், உள தொல் வரம் துணிந்தனர்— தமக்குள்ள பழையவரங்கள் அழியப்பெற்றார்கள், வன்மையும் துணிந்தனர்— வலிமையுமழியப்பெற்றார்கள் எ—று.

உம்மைகள் எச்சங்கள். (௬௬)

வாக்கி னாற்சிலர் தம்முயி ருண்டிடும் வன்கைத்
தாக்கி னாற்சிலர் தம்முயி ருண்டிடுஞ் சமர்செ
யூக்கி னாற்சிலர் தம்முயி ருண்டிடு முலம்பு
நோக்கி னாற்சிலர் தம்முயி ருண்டிடு நொய்தின்.

இ—ள்: நொய்தின்—விரைவாக, வாக்கினால் சிலர் தம் உயிர் உண்டிடும்—கடுஞ்சொற்களாற் சிலருடைய உயிரைப்போக்குவார், வன் கை தாக்கினால் சிலர் தம் உயிர் உண்டிடும்- வலியகைக்குத்தினாற் சிலருடைய உயிரைநீக்குவார், சமர் செய் ஊக்கினால் சிலர் தம் உயிர் உண்டிடும்- போர்செய்கின்ற உற்சாகத்தாற் சிலருடைய உயிரைப்போக்குவார், உலம்பும் நோக்கினால் சிலர் தம் உயிர் உண்டிடும்-கர்ச்சிதத்துடன்கூடியபார்வையினாற் சிலருடைய உயிரைப்போக்குவார் எ-று.

உண்டிடும் இலக்கணை. (௬௭)

அங்க ணோர்சில வவுணரை யாடல்வெம் பரியை
வெங்கண் யானையை யிரதத்தை வாரினன் விரைவின்
மங்குல் வானினுந் தரையினுங் கடலினும் வரைக
ளெங்கு மாகியே வீழ்தர வீரனார்த் தெறிந்தான்.

இ—ள்: வீரன்—வீரவாகுதேவர், அங்கண்—அவ்விடத்தில், ஓர் சில அவுணரை—சில அசுரர்களையும், ஆடல் வெம் பரியை- வலிய கொடிய குதிரைகளையும், வெங்கண் யானையை-தறுகண்மையையுடைய யானைகளையும், இரதத்தை—தேர்களையும், விரைவில் வாரினன்—விரைவாகவாரியெடுத்து, மங்குல் வானினும் தரையினும் கடலினும் வரைகள் எங்கும் ஆகி வீழ்தர—மேகங்கள்சஞ்சரிக்கின்ற ஆகாயத்திலும் பூமியிலும் கடல்களிலும் மலைகளெல்லாவற்றிலும்போய் விழும்படி, ஆர்த்து எறிந்தான்—ஆரவாரித்து எறிந்தார் எ—று.

ஆடல் வெற்றியுங்கொலையுமாம். (௬௮)

அன்பு லப்புறு கொடுந்தொழி லவுணர்க ளமரும்
வன்பு லத்துயிர் கொளவரு மறலிதன் றூதர்
துன்பு மச்சமு மணங்குட னகன்றுதற் றுதிப்பத்
தென்பு லத்தவன் முன்னுற வீசினன் சிலரை.

இ—ள்: அன்பு உலப்புறு கொடுந்தொழில் அவுணர்கள் அமரும் வன் புலத்து— அன்புநீங்கப்பெற்ற தீயதொழிலைச்செய்கின்ற அசுரர்கள் வாழுகின்ற வலிய மகேந்திரநகரத்தில், உயிர் கொள வரும் மறலி தன் தூதர்—உயிரைக்கவரும்படிவருகின்ற யமனுடைய தூதர்கள், துன்பும் அச்சமும் அணங்குடன் அகன்று தன் துதிப்ப—துயாமும் பயமும் வருத்தமும்நீங்கித் தம்மைத்துதிக்கும்படி, சிலரை— சிலஅசுரர்களை, தென்புலத்தவன் முன் உற வீசினன்— யமனுக்கெதிரே செல்லும்படி எறிந்தார் எ—று.

யமலோகத்திற்புகுமாறு வீசினர் என்பதாம். துன்பு-ஈண்டு அரியகாரியத்தை முடித்தற்கட்டோன்றும் ஆலோசனை. அச்சம் உயிரெடுக்கப்புகும்போது தம்மைநலிவரோவென்னும் நடுக்கம். அணங்கு-உயிரெடுத்துக்கொண்டு யமலோகஞ்செல்லுங்காறும் நேரும் மெய்வருத்தம். காவலான்மிக்கநகரமாதலின் வன்புலமென்றார். வன்புலம் போர்க்களமெனினுமாம். (௬௯)

ஒருத லைப்படுங் கேளிரைத் துன்னுவா னுய்ப்பக்
கருதி ஞன்கொலோ சிற்சில வவுணர்தங் கணத்தை
நிருதி மாநகர் புகுந்திட வீசின னிகரில்
சுருதி நாயக னேவலாற் றியதனித் தூதன்.

இ—ள்: நிகர் இல் சுருதி நாயகன் ஏவல் ஆற்றிய தனி தூதன்— ஒப்பில்லாத வேதமுதல்வராகிய முருகக்கடவுளது தொண்டுகளைச்செய்கின்ற ஒப்பற்ற தூதராகிய வீரவாகுதேவர், ஒருதலை படும் கேளிரை துன்னுவான் உய்ப்ப கருதினன் கொல்—ஒருவகுப்பான சுற்றத்தவர்களை ஒருங்குகூடும்படி செலுத்தக்கருதினர்போலும், (எனெனில்), சிற்சில அவுணர் தம் கணத்தை—சிலசில அசுரர் கூட்டத்தை, நிருதி மா நகர் புகுந்திட வீசினன்—நிருதியினுடைய பெரியநகரத்திற்போகும்படியெறிந்தார் எ—று.

கொல் ஐயம். சுருதிநாயகன்-வேதங்களால் நிச்சயித்துக்கூறப்படுந்தலைவன். நிருதி இராக்கதகணத்தானுதலின் இவ்வாறுகூறினர். (௭௦)

நேர்ந்து போர்புரிந் துயிர்தனை விடாததந் நிலைமை
யோர்ந்து விண்ணவர் மானங்கள் விடுத்திடா துயர்வான்
சார்ந்த ஞாயிறு பிளந்திடா தாடலின் றன்மை
சேர்ந்து ளார்பெறுந் துறக்கமேல் வீசினன் சிலரை.

இ—ள்: நேர்ந்து போர் புரிந்து உயிர்தனை விடாத தம் நிலைமை ஓர்ந்து—எதிர்த்துப்போர்செய்து இறவாமையின் றசிலஅசுரர்களுடைய போர்நிலையைப்பார்த்து, விண்ணவர் மானங்கள் விடுத்திடாது—தேவர்கள் விமானங்களையனுப்பாமலும், உயர் வான் சார்ந்த ஞாயிறு பிளந்திடாது—உயர்ந்த ஆகாயத்திற்பொருந்திய சூரியமண்டலத்தைப்பிளந்து செல்லாமலும், ஆடலின் தன்மை சேர்ந்துளார் பெறும் துறக்கமேல்—வீரத்தன்மையமைந்தார்பெறும் பதமாகிய சுவர்க்கத்தில், சிலரை வீசினன்—சிலரையெறிந்தார் எ—று.

பற்பலநாட்களாகப் பெரியபகைமுகங்களில் ஓயாதுநின்று கடும்போர்செய்த சுத்தவீரர் இறப்பின் தேவர்கள் விமானத்திலேற்றிச்செல்லச் சூரியமண்டலத்தைப்பிளந்து தேவரூபமாய் வீரசுவர்க்கம் புகுவர், இவ்வாறன்றி அப்பதவியில் இலகுவாய்ப்போய்ச்சேரும்படி சிலரையள்ளியெறிந்தார் என்பதாம். ஆடலின்றன்மைசேர்ந்துளார் பெறுந்துறக்கம்-வீரசுவர்க்கம். (௭௧)

எண்டி சைப்புறத் தாங்கியே பெயர்கிலா திரக்கங்
கொண்ட வெங்கரிக் கிரையெனச் சிலவரைக் கொடுக்குந்

தெண்டி ரைப்புனல் பருகிய நிரப்பது தீர
வுண்டி யாகவே வடவைபாற் சிலவரை யுய்க்கும்.

இ--ள்: எண் திசை புறம் தாங்கி பெயர்கிலாது இரக்கம் கொண்ட வெம் கரிக்கு இரை என— எட்டுத்திக்குகளினெல்லைகளையுஞ்சுமந்து அசைவின்றி வருத்தமுற்றுநிற்கின்ற கொடிய திக்குயானைகளுக்குணவாக, சிலவரை கொடுக்கும்--சிலரைக்கொடுப்பார், தெள் திரை புனல் பருகிய நிரப்பு அது தீர—தெளிந்த திரைபொருந்தியகடனீரைப்பருகிய வறுமையொழியும்படி, உண்டி ஆக—உணவாக, வடவைபால் சிலவரை உய்க்கும்— வடவாமுகாக்கினியினிடத்துச்சிலஅசுரரையெறிவார் எ-று.

திக்கினந்தங்களினுங்கடல்களினுஞ் சிற்சிலஅசுரரையெறிந்தனரென்பதுகுறிப்பு. பசிதீரும்படி வேறுணவுகளையுண்ணாது கடனீரையே பருகிக்கொண்டிருத்தலின் 'தெண்டிரைப்புனல்பருகியநிரப்பு' என்றார். (எஉ)

ஏந்த லின்னபல் வகையினு லடுதலு மிமைப்பின்
வீந்த தானைக டுணைவரும் பொன்றினர் மிக்கோ
ரோய்ந்து வானினுங் கடலினுந் திசையினு முலைந்து
சாய்ந்து போயினர் மானமும் வன்மையுந் தவறி.

இ—ள்: ஏந்தல் இன்ன பல் வகையினுல் அடுதலும்– வீரவாகுதேவர் இவைபோன்ற பலவிதங்களால் அழிக்க, தானைகள் இமைப்பின் வீந்த—சேனைகள் விரைவிலழிந்தன, துணைவரும் பொன்றினர்—துணையாய்வந்த குமாரர்களும் இறந்தார்கள், மிக்கோர்—இறவாதெஞ்சினோர், ஓய்ந்து—தளர்ந்து, வானினும் கடலினும் திசையினும் உலைந்து—ஆகாயத்திலுஞ்சமுத்திரத்திலுந்திக்குகளிலும் அலைந்து, மானமும் வன்மையும் தவறி– அபிமானத்தையும் வலிமையையுமிழந்து, சாய்ந்து போயினர்—தோற்றோடினார்கள் எ—று. (எங)

மற்றிந் நீர்மையைக் காண்டலும் வச்சிர வாகு
விற்ற தேகொலா நம்பெருந் தானையென் றிரங்கிச்
செற்ற மீக்கொடு வலவனை நோக்கியித் தேரை
யொற்றன் முன்னுற விடுத்தியாற் கடிதென வுரைத்தான்.

இ—ள்: வச்சிரவாகு—வச்சிரவாகுவென்பவன், இ நீர்மையை காண்டலும்– இத்தன்மையைக்கண்டவுடன், நம் பெரும் தானை இற்றதே என்று இரங்கி– நமது பெருந்திரளான சேனைகள்அழிந்தனவேயென்று துக்கங்கொண்டு, செற்றம் மீக்கொடு--கோபமிகப்பெற்று, வலவனை நோக்கி– சாரதியைப்பார்த்து, இ தேரை ஒற்றன் முன் உற கடிது விடுத்தி—இந்தத்தேரைத்தூதுவனுக்குமுன்னே விரைவிற்செலுத்துவாய், என உரைத்தான்–என்றுகூறினான் எ—று. (எச)

உரைக்கும் வாசகங் கேட்டலுந் தொழுதுமுன் னுற்ற
பரிக்கு லங்களின் மத்திகை வீசியே பாக
னருக்க னாழியந் திகிரியூர் வலவனு மஞ்சி
வெருக்கொ ளும்படி தேரினை வீரன்முன் விடுத்தான்.

இ—ள்: உரைக்கும் வாசகம் கேட்டலும்—வச்சிரவாகு சொல்லிய வசனத்தைக்கேட்டவுடன், பாகன்– சாரதியானவன், தொழுது-கைகூப்பி, முன் உற்ற பரி குலங்களில் மத்திகை வீசி— தனக்குமுன்னுகின்ற குதிரைக்கூட்டங்களின்மேற்சம்மட்டியைவீசி, அருக்கன் ஆழியம் திகிரி ஊர் வலவனும் அஞ்சி வெருக்கொளும்படி– சூரியனது ஒருருள்பொருந்திய தேரைச்செலுத்துகின்ற சார

தியாகிய அருணனும் பயந்து திகைக்கும்படி, தேரினை வீரன்முன் விடுத்தான்—அவனேறியதேரை வீரவாகுதேவருக்குமுன் செலுத்தினன் எ-று.

உம்மை-சிறப்பு. சூரியன்றேரிலும்பார்க்கவிரைந்து அந்தரமார்க்கமாய்ச்செல்லுதலின் அருணனுமஞ்சினனென்க. ஒற்றையாழித்தேரை ஆகாயமார்க்கத்தில் ஒரேவகையானகதியாகத் தினந்தோறுஞ்செலுத்தும் பயிற்சியுடையானாகிய அருணனும் அஞ்சினனெனவே, அவனிலும் இவன் சாரத்தியத்திறமையின் மிக்கானென்பது போதரும். முன்உற்ற முதன்மைபொருந்திய எனினுமாம். (௭௫)

கொடிய வெஞ்சினந் திருகியே சூர்தரு குமரன்
கடிது போர்செய்வான் வருவது மேலையோன் காணா
முடிவி லாமகிழ் வெய்தியே முழுதுல களந்த
நெடிய மாலினு நெடியன்மற் றிவனென நிமிர்ந்தான்.

இ—ள்: சூர் தரு குமரன் – சூரபன்மன்பெற்ற புதல்வனாகியவச்சிரவாகு, கொடிய வெம் சினம் திருகி – கொடிய கடுங்கோபம் முறுகி, போர் செய்வான் கடிது வருவது – போரைச்செய்யும்படி விரைவில்வருந்தன்மையை, மேலையோன் காணா – மேன்மையையுடையவீரவாகுதேவர்பார்த்து, முடிவு இலா மகிழ்வு எய்தி – அளவிறந்தசந்தோஷத்தைக்கொண்டு, இவன் முழுது உலகு அளந்த நெடிய மாலினும் நெடியன் என — இவர் எல்லாவுலகங்களையுமளந்த நெடிய வடிவத்தையுடைய திருமாலினும்பார்க்க நெடியவரென்றுகண்டோர்சொல்லும்படி, நிமிர்ந்தான்—உயர்ந்தவடிவத்தைக்கொண்டார் எ-று.

வச்சிரவாகுவை விரைவிற்கொன்று மீண்டுசெல்லநினைத்திருத்தலின் அவன் போர்க்குவருவதைக்கண்டவுடன் மகிழ்ச்சியெய்தினர். (௭௬)

நெடிய தாள்புவி யளந்திடப் புயங்கள்விண் ணெருக்க
முடியெ லாங்கடந் தண்டகோ ளகைதனை முட்ட
வடிவ மைந்திடு திறலினன் பணிபதி மயங்க
வடிபெ யர்ந்துபார் வெடிபட விடிபட வார்த்தான்.

இ—ள். நெடிய தாள் புவி அளந்திட— நெடியபாதங்கள் பூவுலகத்தையளக்கவும், புயங்கள் விண் நெருக்க– தோள்கள் ஆகாயத்தைநெருக்கவும், முடி எலாம் கடந்து அண்ட கோளகை தனை முட்ட —முடியானது எல்லாவுலகங்களையுங்கடந்துபோய் அண்டகடாகத்தைத்தொடவும், வடிவு அமைந்திடு திறலினன் — பெரியவடிவத்தைக்கொண்டுநின்ற வீரவாகுதேவர், பணிபதி மயங்க அடி பெயர்ந்து– ஆதிசேடனும் மயங்கும்படி பாதங்களைப்பெயர்த்துவைத்து, பார் வெடிபட—பூவுலகம் வெடிபடவும், இடி பட—இடிபோலும்பேரொலிபிறக்கவும், ஆர்த்தான்– ஆரவாரித்தார் எ-று.

பெயர்த்தென்பதில் வல்லொற்று மெல்லொற்றாய்த்திரிந்தது. பூமிமுழுவதையும் மூடவென்பார் 'புவியளந்திட' என்றார். பணிபதி-சர்ப்பங்களுக்குத்தலைவன். மயங்குவது பாரம்நெரித்தலால். (௭௭)

புரம டங்கலுந் தெறுகணை போன்றுளான் பொன்னோன்
வரம டங்கலுஞ் சோரிய தடங்கலும் வாணா
ளுரம டங்கலு முண்டிடத் தறியின்வந் துதித்த
நரம டங்கலும் வெருவர வெரியெழ நகைத்தான்.

இ—ள்: புரம் அடங்கலும் தெறு கணை போன்று உளான்—முப்புரங்களையுமழித்தபாணமாகிய திருமாலைநிகர்த்த [நெடியவடிவத்தைக்கொண்ட] வீரவாகுதேவர், பொன்னோன் வரம் அடங்கலும்—இரணியன்பெற்றவரங்களெல்லாவற்

றையும், சோரியது அடங்கலும்- (அவனுடைய) இரத்தமுழுவதையும், வாழ்நாள் உரம் அடங்கலும்—ஆயுள்முழுவதையும் வலிமைமுழுவதையும், உண்டிட—உண்ணும்படி, தறியின் வந்து உதித்த--கற்றூணில்வந்துதோற்றிய, நாமடங்கலும் வெருவா—நரசிங்கமும் பயப்படும்படி, எரி எழ நகைத்தான்— அக்கினிப்பொறிதோன்றச்சிரித்தார் எ—று.

புரமடங்கலுந்தெறுகணை-குறிப்புமொழி. அடங்கலுமென்பதைவாணுளுக்குங்கூட்டுக. உண்டிட என்பதை இரத்தத்திற்காம்போது பருக எனவும், ஏனையவற்றிற்காம்போது அழிக்க எனவும் உரைக்க. நாமடங்கலும் என்றஉம்மை சிறப்பு. போன்றுள்ளான் நகைத்தான் என இயையும். பெருஞ்சினத்துடன்சிரித்தாராதலின் இவ்வாறுகூறினர். (எஅ)

முச்ச கம்புகழ் திறலினுன் முறுவலு முழக்கும்
வச்சி ரத்தட மொய்ம்பினுன் கேட்டலு மறுகி
மெய்ச்சி ரத்தொகை துளக்கியா ரழலெழ விழித்து
நச்செ யிற்றர வாமெனச் செயிர்த்திவை நவில்வான்.

இ—ள்: மு சகம் புகழ் திறலினுன் முறுவலும் முழக்கும்—மூவுலகத்தாராலும் புகழப்படும் வலிமையையுடைய வீரவாகுதேவரது சிரிப்பையும் ஆரவாரத்தையும், வச்சிர தட மொய்ம்பினுன் கேட்டலும்—வயிரமான விசாலித்த புயங்களையுடையஅசுரன் கேட்டவுடன், மறுகி- மனஞ்சுழன்று, மெய் சிர தொகை துளக்கி— மெய்ம்மையான தலைக்கூட்டங்களையசைத்து, ஆர் அழல் எழ விழித்து- நிறைந்த அக்கினிப்பொறிகள்தோன்றப்பார்த்து, நச்சு எயிற்று அரவு ஆம் என செயிர்த்து—நஞ்சைக்காலுகின்ற பற்களையுடைய சர்ப்பம்போலக் கோபித்து, இவை நவில்வான்— இவ்வசனங்களைச்சொல்வான் எ—று.

கண்டோரஞ்சத்தக்கவாறுகோபித்தலின் 'நச்செயிற்றரவாமெனச்செயிர்த்து' என்றார். (எகூ)

வீர நன்றுநின் னுண்மையு நன்றுமே தக்க
பேரு நன்றுபே ராற்றலு நன்றுநீ பெற்ற
சீரு நன்றுநின் விஞ்சையு நன்றுசெய் கின்ற
போரு நன்றுநிற் கேற்பதிவ் வார்ப்பெனப் புகன்றுன்.

இ—ள்: நின் வீரம் நன்று—தூதனே! உன்னுடைவீரம் நன்றுயிருக்கின்றது, ஆண்மையும் நன்று—ஆண்டன்மையும் நன்றுயிருக்கின்றது, மேதக்க பேரும் நன்று—மேன்மையான புகழும்நன்றுயிருக்கின்றது, பேர் ஆற்றலும் நன்று—சிறந்த வலிமையும் நன்றுயிருக்கின்றது, நீ பெற்ற சீரும் நன்று- நீ பெற்றுக்கொண்ட சிறப்பும் நன்றுயிருக்கின்றது, நின் விஞ்சையும் நன்று— உன்னுடையவித்தையும் நன்றுயிருக்கின்றது, செய்கின்ற போரும் நன்று— நீ செய்துவருகின்ற போரும்நன்றுயிருக்கின்றது, இவ் ஆர்ப்பு நிற்கு ஏற்பது—இந்த ஆரவாரம் உனக்குத்தக்கதேயாம், என புகன்றுன்—என்றுகூறினுன் எ—று.

புகழ்வான்போலப்பழித்துக்கூறினுன். வீரம் ஆண்மைமுதலியவற்றுன் மிகக்குறைந்தாயாகிய உனக்குப்பெருவீரர்செய்யும் இந்தக்கர்ச்சனை தகாதுஎன்பதாம்.

மற்று மோருரை புகலுவான் வந்தெதிர் மலைந்த
கொற்ற வீரரைப் படுத்தன மென்றுளங் கொண்டா
யற்றெ னாமினி விடுமதி நின்மிட லலைத்துப்
பற்றி யெந்தைமுன் விடுப்பனு னுனையெனப் பகர்ந்தான்.

இ—ள்: மற்றும் ஓர் உரை புகலுவான்— பின்னுமொருவார்த்தையைக்கூறுவான், வந்து எதிர் மலைந்த கொற்ற வீரரை படுத்தனம் என்று உளம் கொண்

டாய்- வந்துஎதிர்த்துப்போர்செய்த வெற்றியையுடையவீரர்களையழித்தோமென்றுநினைத்தாய், அற்று எலாம் இனி விடு— அவ்வெண்ணங்களெல்லாவற்றையும் இனியொழிப்பாய், நின் மிடல் அலைத்து—உனதுவலிமையையடக்கி, உனை பற்றி எந்தை முன் விடுப்பன்—உன்னைப்பிடித்துக்கொண்டுபோய் என் பிதாவின் முன்னேவிடுவேன், என பகர்ந்தான்—என்றுவச்சிரவாகு கூறினன் எ—று.

மதி-முன்னிலையசை. முந்தியவீரர்களைப்போல என்னையுங்கொன்றுவிடலாமென்றுசிந்தித்துத் தருக்குற்றாய், அவரைப்போல யானுன்னாலிறந்துபடேன், நினைத்துவந்தகாரியத்தைத்தவறாதுமுடிப்பேன் என்றான் என்பதுகருத்து. (அக)

நின்னை வென்றிட முயலுவன் றமியனு நீயு
மென்னை வென்றிட முயலுதி யிருவரு மதனைப்
பன்னி நிற்பதிற் பயனெவன் கடிதமர் பயிறி
பின்னை வென்றுளார் வெல்லுக வென்றனன் பெரியோன்.

இ—ள்: தமியனும் நின்னை வென்றிட முயலுவன்—யானும் உன்னைவெல்லுதற்குமுயற்சிசெய்வேன், நீயும் என்னை வென்றிட முயலுதி-நீயும் என்னைவெல்லுதற்கு முயற்சிசெய்வாய், இருவரும் அதனை பன்னி நிற்பதில் பயன் எவன்—இருதிறத்தாரும் அச்செயல்களைப் பேசிநிற்பதனால் வரும்பிரயோசனம்யாது? கடிது அமர் பயிறி—விரைவிற்போரைச்செய்வாய், பின்னை வென்றுளார் வெல்லுக—போர்தொடங்கியபின் வென்றவர் வெற்றிபெறுக, என்றனன்—என்றுகூறினர், பெரியோன்—பெரியவராகியவீரவாகுதேவர் எ—று.

அவரவர்வீரப்பாட்டைச் செயலாற்காட்டுவதன்றிப்புகழ்ந்துபேசுதலாற் பயனில்லையென்றார் என்பதாம். தமியனும்நீயுமென்ற உம்மைகள் எச்சங்கள். (அஉ)

என்னு முன்னரே வச்சிர வாகுவென் றிசைக்கு
மன்னன் மாமகன் றன்றுகைக் கார்முகம் வாங்கிப்
பொன்னி னொண்ணொலி கொண்டொரா யிரங்கணை பூட்டி
மின்னு லாந்தனி வேலவன் றூதன்மேல் விடுத்தான்.

இ—ள்: என்னும் முன்னர்- என்றுசொல்லிமுடிக்குமுன், வச்சிரவாகு என்று இசைக்கும் மன்னன் மா மகன்- வச்சிரவாகுவென்றுசொல்லப்படுகின்ற சூரபன்மனது சிறந்தபுதல்வன், தனது கை கார் முகம் வாங்கி—தன்னுடையகையிலிருந்தவில்லைவளைத்து, பொன்னின் நாண் ஒலி கொண்டு— பொன்மயமாகிய நாணில் ஓசையையுண்டாக்கி, ஓராயிரம் கணை பூட்டி- ஆயிரமம்புகளைத்தொடுத்து, மின் உலாம் தனி வேலவன் தூதன்மேல் விடுத்தான்—ஒளிபொருந்திய ஒப்பற்ற வேற்படையையுடைய முருகக்கடவுளது தூதாகியவீரவாகுதேவர்மேல் எவினன் எ—று.

என்னுமுன்னர் விடுத்தான் எனஇயையும். (அங)

விடுத்த வாயிரம் பகழியும் விடலைதன் மிசையே
யடுத்த வெல்லையிற் காணுறா வங்கையொன் றதனை
யெடுத்து முன்னுற வோச்சியே யங்கவை யெனைத்தும்
பிடித்து வல்லையி னுண்டுகள் பட்டிடப் பிசைந்தான்.

இ—ள்: விடுத்த ஆயிரம் பகழியும்—வச்சிரவாகுசெலுத்திய ஆயிரம்பாணங்களும், தன் மிசை அடுத்த எல்லையில்—தமக்கெதிரேயணுகியபொழுது, விடலை காணுறா— வீரவாகுதேவர்பார்த்து, அம் கை ஒன்று அதனை எடுத்து முன்னுற ஓச்சி- அழகிய ஒருகையையுயர்த்தி எதிரேநீட்டி, அவை எனைத்தும் பிடித்து—அ

ந்த அம்புகளெல்லாவற்றையும்பிடித்து, வல்லையில் நுண் துகள் பட்டிட பிசைந்தான்—விரைவில் நுண்மையானதுகளாகும்படி பிசைந்தார் எ—று. (௮௪)

விட்ட வாளிகள் பூழிபட் டிடுதலும் வெகுண்டு
மட்டு வாகைவெஞ் சிலையினைப் பின்னரும் வணக்கி
நெட்டி லைச்சர மொருபதி னுயிர நிறத்திற்
பட்டி டும்படி தொட்டன னவுணர்கோன் பாலன்.

இ—ள்: அவுணர் கோன் பாலன்—சூரபன்மனது புதல்வனாகிய வச்சிரவாகு, விட்ட வாளிகள் பூழிபட்டிடுதலும்-தானேவியபாணங்கள் துகளானவுடன், வெகுண்டு- கோபித்து, மட்டு வாகை வெம் சிலையினை பின்னரும் வணக்கி-- தேன்பொருந்திய வாகைமலர்மாலை தூக்கப்பெற்ற கொடியவில்லைப் பின்னும்வளைத்து, நெடு இலை சரம் ஒரு பதினுயிரம்- நெடிய இலைத்தொழின்முற்றிய பதினுயிரம்பாணங்களை, நிறத்தில் பட்டிடும்படி தொட்டனன்- மார்பிலழுந்தும்படியேவினான் எ—று.

இலைச்சரம்-இலைபோலுங்கூர்மையமையச்செய்யப்பட்ட பாணம். (௮௫)

அசைவி லானது நோக்கியே முந்துபோ ரகத்தி
விசைமை நீங்கியே முடிந்திடு தானவ ரிட்ட
முசல மாகிய தொன்றினை யெடுத்துமுன் வந்த
விசிகம் யாவையும் புடைத்தனன் றிசைதொறும் வீழ.

இ—ள்: அசைவு இலான் அது நோக்கி- தளர்ச்சியில்லாதவராகிய வீரவாகுதேவர் அத்தன்மையைப்பார்த்து, முந்து போர் அகத்தில் இசைமை நீங்கி முடிந்திடு தானவர் இட்ட முசலம் ஆகியது ஒன்றினை எடுத்து- முன்னிகழ்ந்தபோரிற் புகழ்நீங்கியிறந்த அசுரர்கள் இட்ட ஒரு இருப்புலக்கையையெடுத்து, முன் வந்த விசிகம் யாவையும்-எதிரேவந்த அம்புகளெல்லாவற்றையும், திசைதொறும் வீழ புடைத்தனன்- பலதிக்குகளிலுஞ்சிதறிவிழும்படியடித்தார் எ—று.

பெருந்தொகையானபாணங்களெதிரேவரும்பொழுதும் அஞ்சிப்பின்கொடாதுநிற்றலின் 'அசைவிலான்' எனவும், கையிலிருந்தபடைகளை விழவிட்டுமாண்டனராதலின் 'இசைமைநீங்கியேமுடிந்திடு' எனவும் கூறினர், (௮௬)

வழுவில் வாளிகள் வறிதுபட் டிடுதலு மற்றும்
விழுமி தாகிய வொருபதி னுயிரம் விசிகம்
பழுது றுதன தூண்டியே யாண்டகை பரித்த
வெழுவை நுண்டுக ளாக்கியே பின்னரு மெய்வான்.

இ—ள்: வழு இல் வாளிகள் வறிதுபட்டிடுதலும்- குற்றமற்ற அம்புகள் வீண்பட்டுப்போக, மற்றும்- பின்னும், விழுமிது ஆகிய ஒரு பதினுயிரம் விசிகம்- சிறந்தபதினுயிரமம்புகளை, பழுது உறுதன தூண்டி— குற்றமற்றனவாகத்தெரிந்து ஏவி, ஆண்டகை பரித்த எழுவை நுண் துகள் ஆக்கி—வீரவாகுதேவரேந்தியிருந்த முசலத்தை நுண்மையானதூளாகச்செய்து, பின்னரும் எய்வான்— பின்னும் ஏவுவான் எ—று.

மற்று வினைமாற்று. ஆண்டகை-வீரர். (௮௭)

தலையி லாயிரங் களத்தினி லாயிரந் தடந்தோண்
மலையி லாயிர முரத்தினி லாயிரம் வயத்தா
ணிலையி லாயிரங் கணைகளாத் தூண்டின னீடுங்
கொலையி லாயிரங் கூற்றினைப் போலுறுங் கொடியோன்.

இ—ள்: நீடும் கொலையில் ஆயிரம் கூற்றினை போல் உறும் கொடியோன்— மிகுந்தகொலைத்தொழிலில் ஆயிரக்கணக்கான கூற்றுவனைநிகர்த்திருக்கின்ற கொ

டியவனுகிய வச்சிரவாகு, தலையில் ஆயிரம்— வீரவாகுதேவரது தலையில் ஆயிரம் பாணங்களும், களத்தினில் ஆயிரம் —கழுத்தில் ஆயிரம்பாணங்களும், தடம் தோள் மலையில் ஆயிரம்— விசாலித்த மலைபோன்ற புயங்களில் ஆயிரம்பாணங்களும், உரத்தினில் ஆயிரம்—நெஞ்சில் ஆயிரம்பாணங்களும், வய தாள் நிலையில் ஆயிரம் கணைகள் ஆ—வெற்றிபொருந்திய கால்களாகிய நிற்றற்குரியகருவிகளில் ஆயிரம் பாணங்களுமாக, தூண்டினன்- ஏவினன் எ—று.

தோண்மலை-உருவகம். ஆயிரங்கூற்றுவரையுவமித்ததனால் கொலைத்தொழிலைநன்குபயின்றுனென்பது குறிப்பாயிற்று. (அஅ)

கையி லேந்திய பேரெழு முரிந்திடக் காமர்
செய்ய மெய்ம்முழு தீண்டியே பகழிகள் செறிய
வைய னின்றனன் ஓரிறை வருந்தியே யதற்பின்
ஐெய்யெ னச்சென்று வெய்யவன் றேரினை யுதைத்தான்.

இ—ள்: கையில் ஏந்திய பேர் எழு முரிந்திட—கையிற்றங்கியிருந்த பெரிய எழுப்படை முரிந்தபின், காமர் செய்ய மெய் முழுது ஈண்டி பகழிகள் செறிய—அழகிய சிவந்தநிறமான சரீரமுழுவதினும் நெருங்கிப்பாணங்களழுந்த, ஐயன்—வீரவாகுதேவர், ஓர் இறை வருந்தி நின்றனன்—ஒருநொடிப்பொழுதளவும் வருத்தமுற்றுநின்று, அதற்பின்—அதன்பின்பு, ஒய் என சென்று—விரைவாகப்போய், வெய்யவன் தேரினை உதைத்தான்— கொடியவனுகிய வச்சிரவாகு ஏறிய தேரை உதைத்தார் எ—று.

எழுமுரிந்துவீழ்ந்த இடைபார்த்துப் பாணமேவியழுத்தினனென்க. (அகூ)

உதைத்த காலையிற் பண்ணுறு பரியெலா மொருங்கே
பதைத்து வீழ்ந்தன பாகனு முருண்டனன் பட்டான்
கதித்த வையமு மழிந்தது வன்னது காணு
மதித்து வேறொரு தேரிடைப் பாய்ந்தனன் மறவோன்.

இ—ள்: உதைத்த காலையில்— அவ்வாறு உதைத்தபொழுது, பண் உறு பரி எலாம் ஒருங்கே பதைத்து வீழ்ந்தன—பண்ணமைக்கப்பட்ட குதிரைகளெல்லாம் ஒன்றுந்தவருமற் பதைத்துவிழுந்திறந்தன, பாகனும் உருண்டனன் பட்டான்—சாரதியும் உருண்டுவிழுந்து இறந்தான், கதித்த வையமும் அழிந்தது-வேகம்பொருந்திய தேரும் அழிந்தது, மறவோன் அன்னது காணு— வச்சிரவாகு அத்தன்மையைப்பார்த்து, மதித்து வேறு ஒரு தேரிடை பாய்ந்தனன்— சிந்தித்து வேறொரு தேரிற்பாய்ந்தான் எ—று.

மறவோன்-இரக்கமில்லாதோன். தனக்குப்பொருத்தமாயும் அயலாயும் நின்ற ஒருசேமத்தேரில் உடனேபாய்ந்தனனுதலின் 'மதித்து-பாய்ந்தனன்' என்றூர்.

பாய்ந்து வச்சிர வாகுவாந் தொல்பெயர் படைத்தோன்
றேய்ந்த வொண்பிறை பணியொடு சேர்ந்தன சிலையி
னுய்ந்தொ ராயிர மயிற்கணை பூட்டியே யடுபோ
ரேந்த னெற்றியுட் செறித்தன னமரர்க ளிரங்க.

இ—ள்: வச்சிரவாகு ஆம் தொல் பெயர் படைத்தோன்—வச்சிரவாகுவென்னும் பழையபெயரைப்பெற்றவீரன், பாய்ந்து-வேறொருதேரிற்பாய்ந்து, தேய்ந்த ஒள் பிறை பணியொடு சேர்ந்து அன சிலையின்—கலைகுறைந்த சிறந்தபிறைச்சந்திரன் தன்னைப்பற்றியகரும்பாம்போடுகூடியிருந்தாற்போன்றவில்லில்,ஆய்ந்து ஒரு ஆயிரம்அயில் கணை பூட்டி—தெரிந்து கூரிய ஆயிரமம்புகளைத்தொடுத்து, அ

டு போர் ஏந்தல் நெற்றி உள்—கொலைத்தொழில்பொருந்திய போரைச்செய்கின்ற வீரவாகுதேவரது நெற்றியில், அமரர்கள் இரங்க செறித்தனன்—தேவர்கள் மனம் வருந்தும்படி அழுத்தினான் எ—று.

வில்லுக்குப்பிறையும் நாணுக்குப்பாம்பும் உவமை. தேவர்கள் ஆகாயத்தினின்று பார்ப்பவர்களென்க. (௬௧)

ஆயி ரங்கணை நுதலிடை யழுத்தலு மடல்வேற்
றூய வன்றிருத் தூதுவன் சூரருள் புரிந்த
தீய வன்றடந் தேரினைச் செங்கையா லெடுத்து
மீயு யர்ந்திடும் விண்ணிடை யெறிந்தனன் விடுத்தான்.

இ—ள்: ஆயிரம் கணை நுதலிடை அழுத்தலும்—வச்சிரவாகு ஆயிரமம்புகளை நெற்றியிலழுத்தியவுடன், அடல் வேல் தூயவன் திரு தூதுவன்—வலிய வேற்படையையுடைய பரிசுத்தராகிய முருகக்கடவுளின் சிறந்த தூதராகிய வீரவாகுதேவர், சூர் அருள்புரிந்த தீயவன் தடம் தேரினை—சூரபன்மன்பெற்ற கொடியபுதல்வனாகிய வச்சிரவாகுவினது விசாலமானதேரை, செம் கையால் எடுத்து—சிவந்தகையினால்தூக்கி, மீ உயர்ந்திடும் விண் இடை எறிந்தனன் விடுத்தான்—மேலாகவுயர்ந்த ஆகாயத்தில் எறிந்துவிட்டார் எ—று. (௬௨)

விண்ண கத்திடை யெறிந்தபின் வீரவா குப்பே
ரண்ணல் வச்சிர வாகுவந் தேறுவா னமைந்து
பண்ணு றுத்திய வேமமாய் நின்றதேர் பலவுந் [தான்.
துண்ணெ னப்புடைத் தெறிந்துதைத் தொல்லையிற் றொலைத்

இ—ள்: விண்ணகத்திடை எறிந்த பின்—ஆகாயத்திலெறிந்தபின்பு, வீரவாகு பேர் அண்ணல்—வீரவாகுவென்னும்பெயரையுடையதலைவர், வச்சிரவாகு வந்து ஏறுவான் அமைந்து பண் உறுத்திய ஏமம் ஆய் நின்ற தேர் பலவும்—வச்சிரவாகு வந்தவுடனேறும்படியமைந்து பண்படுத்தப்பெற்றுநின்ற சேமத்தேர்களெல்லாவற்றையும், துண் என புடைத்து எறிந்து உதைத்து—கண்டோர்நடுங்கும்படி அடித்தும் எறிந்தும் உதைத்தும், ஒல்லையில் தொலைத்தான்—விரைவிலழித்தார் எ—று.

பண்ணுறுத்தியதேர் எனஇயையும். மிகுந்தஉக்கிரத்துடனென்பார் 'துண்ணென' என்றார். (௬௩)

தொலைக்கு மெல்லையி னவுணர்கோன் மதலைதொல் புவிக்கோ
ரிலக்கம் யோசனை யெல்லையின் காறும்விண் ணேகி
யலக்க ணுற்றுமீண் டழிதரு தேருட னமரில்
வெலற்க ருந்திற லறுமுகன் றூதன்முன் வீழ்ந்தான்.

இ—ள்: தொலைக்கும் எல்லையின்—அவ்வாறழித்தபொழுது, அவுணர்கோன் மதலை—சூரபன்மனதுபுதல்வனாகிய வச்சிரவாகு, தொல் புவிக்கு ஓர் இலக்கம் யோசனை எல்லையின் காறும்—பழையபூமியினின்று ஓரிலக்கயோசனை தூரம் வரையும், விண் ஏகி—மேலேபோய், அலக்கண் உற்று—வருத்தமெய்தி, மீண்டு—திரும்பி, அமரில் வெலற்கு அரும் திறல் அறுமுகன் தூதன் முன்—போரில்வெல்லுதற்கரிய வலிமையையுடைய முருகக்கடவுளின் தூதராகிய வீரவாகுதேவருக்குமுன், அழிதரு தேர் உடன் வீழ்ந்தான்—அழிந்ததேருடன் விழுந்தான் எ—று.

ஏகி வீழ்ந்தான் எனஇயையும். (௬௪)

நிலவ ரைப்புறுஞ் சூர்மக னெழுந்துதன் னெடிய
சிலைவ ளைத்தமர் செய்திட முன்னலுந் திறலின்

நலைமை பெற்றவன் கண்டுகை யோச்சியத் தனுவை
வலிது பற்றியே முரித்தனன் பேரொலி மயங்க.

இ—ள்: நில வரைப்பு உறும் சூர்மகன் எழுந்து—பூவுலகத்தில்வந்துவீழ்ந்த வச்சிரவாகு எழும்பி, தன் நெடிய சிலை வளைத்து அமர் செய்திட முன்னலும்-தன்னுடைய நெடியவில்லைவளைத்துப்போர்செய்யும்படிசிந்திக்க, திறலின் தலைமை பெற்றவன் கண்டு—வலிமையினுல்முதன்மையைப்பெற்றிருக்கின்ற வீரவாகுதேவர் அதனைப்பார்த்து, கை ஓச்சி—கையைநீட்டி, அ தனுவை வலிது பற்றி—அந்தவில்லை வலாற்காரமாகப்பிடித்து, பேர் ஒலி மயங்க முரித்தனன்—பெருத்தஓசையுண்டாகும்படி முரித்தார் எ—று.

முன்னலும் முரித்தனன் எனஇயையும். வச்சிரவாகு தன்னுலியன்றமட்டுந் தகைந்தபோதும் விடாதுபற்றிமுரித்தனராதலின் 'வலிதுபற்றி முரித்தனன்' என்ருர். (கூ௫)

ஏந்து கார்முகந் தனைமுரித் திடுதலு மெரியிற்
காந்து கண்ணுடை வச்சிர மொய்ம்பனோர் கரத்தின்
வாய்ந்த வாள்கொடே யெதிர்தலுந் தன்னுடை மருங்கி
ஞந்த கந்தனை யுறைகழித் தறிவன்மே னடந்தான்.

இ—ள்: ஏந்து கார்முகம் தனை முரித்திடுதலும்—வீரவாகுதேவர் ஏந்திய வில்லைமுரித்தவுடன், எரியில் காந்து கண் உடை வச்சிர மொய்ம்பன்—அக்கினியைப்போல அழல்வீசுகின்றகண்களையுடைய வச்சிரவாகு, ஓர் கரத்தின் வாய்ந்த வாள் கொடு எதிர்தலும்-ஒருகையில் வாய்ப்பான வாட்படையையேந்திக்கொண்டு எதிர்க்க, அறிவன்—அறிஞராகிய வீரவாகுதேவர், தன் உடை மருங்கில் நாந்தகம் தனை உறை கழித்து—தம்முடையஅரையிற்கட்டப்பட்டிருந்தவாளை உறையினின்றும்நீக்கி, மேல் நடந்தான்—எதிரேசென்ருர் எ—று.

எதிர்தலும் நடந்தான் எனஇயையும். போர்க்கியைந்தவாளென்பார் 'வாய்ந்தவாள்' என்ருர். (கூ௬)

நடந்து வச்சிர வாகுமுன் னுய்த்திட நனிதோ
ளடைந்த வாளினை விலக்கியே யறிவரி லறிவன்
கடந்த போர்வலி கொண்டதன் வாளினுற் கடிது
தடிந்து வீட்டின னவுணர்கோ னுந்தகத் தடக்கை.

இ—ள்: அறிவரில் அறிவன்—அறிவுடையாரெவரினுஞ் சிறந்தஅறிஞராகியவீரவாகுதேவர், நடந்து—எதிரேபோய், வச்சிரவாகு முன் உய்த்திட நனி தோள் அடைந்த வாளினை விலக்கி-வச்சிரவாகுமுன்னேவீசத் தம்முடையபுயத்தை மிகஅணுகிவந்தவாளைத்தடுத்து, கடந்த போர் வலி கொண்ட தன் வாளினுல்—மிகுந்தபோர்வலிமையையுடைய தமதுவாட்படையினுல், அவுணர்கோன் நாந்தக தட கை கடிது தடிந்து வீட்டினன்- வச்சிரவாகுவினது வாளையேந்திய விசாலித்தகையை விரைவிற்றுணித்துவிழுத்தினுர் எ—று.

தெய்வத்தன்மையமைந்தவாளாதலின் 'கடந்தபோர்வலிகொண்டதன்வாள்' என்ருர். (கூ௭)

செய்ய தோர்கரந் துணிபடத் தீயவன் செறுத்தோர்
கையி ருந்திடு தண்டினை யெறிதலுங் கண்டு
மையில் கேள்வியன் றுணிபடுத் தவுணர்கோன் மதலை
யையி ரண்டவாந் தலையையும் வாளினு லறுத்தான்.

இ—ள்: செய்யது ஓர் கரம் துணிபட—சிறந்தகைவெட்டுப்பட்டவுடன், தீயவன் செறுத்து— கொடிய வச்சிரவாகுகோபித்து, ஓர் கை இருந்திடு தண்டினை எறிதலும்—ஒருகையிலிருந்ததண்டாயுதத்தை வீச, மை இல் கேள்வியன் கண்டு- குற்றமில்லாத நூற்கேள்வியையுடைய வீரவாகுதேவர்பார்த்து, துணிபடுத்து—அத்தண்டாயுதத்தைவெட்டி, அவுணர்கோன் மதலை ஐயிரண்ட ஆம் தலையையும்- சூரபன்மனதுபுதல்வனாகிய வச்சிரவாகுவின் பத்துத்தலைகளையும், வாளினால் அறுத்தான்- வாட்படையினால்வெட்டினார் எ—று.

வலக்கையும் வாளேந்தியகையுமாதலின் 'செய்யதோர்கரம்' என்றார். (௬௮)

வேறு.

எந்தைதன் றூதுவ னெறிந்த வாளினா
லைந்திரு சென்னியு மற்று வீழ்தலு
மைந்தியல் வச்சிர வாகு வாகிய
வெந்திற லவுணர்கோன் வீடி னானரோ.

இ—ள்: எந்தை தன் தூதுவன் எறிந்த வாளினால்—முருகக்கடவுளது தூதாகிய வீரவாகுதேவர்வீசியவாட்படையினால், ஐந்திரு சென்னியும் அற்று வீழ்தலும்—பத்துத்தலைகளும் வெட்டுப்பட்டுவிழ, மைந்து இயல் வச்சிரவாகு ஆகிய வெம் திறல் அவுணர்கோன்- வலிமைபொருந்திய வச்சிரவாகுவென்னும்பெயர் வாய்ந்த பெருந்திறலையுடைய அசுரத்தலைவன், வீடினான்- இறந்தான் எ—று. ()

ஆடிய லவுணர்த மண்ண றன்மகன்
வீடிய காலையின் வெருவிப் பாங்கரி
னாடிய வவுணர்க ணனிபு லம்புறீஇ
யோடினர் திசைதொறு முடைந்து போயினார்.

இ—ள்: ஆடு இயல் அவுணர் தம் அண்ணல் தன் மகன் வீடிய காலையின்—போர்செய்துநின்ற சூரபன்மனதுபுதல்வனாகிய வச்சிரவாகு இறந்தபொழுது, பாங்கரில் நாடிய அவுணர்கள்- பக்கத்திற்பார்த்துநின்ற அசுரர்கள், வெருவி- அஞ்சி, நனி புலம்புறீஇ—மிகத்துன்பமுற்று, உடைந்து- நிலைகுலைந்து, திசைதொறும் ஓடினர் போயினார்—எல்லாத்திக்குகளினும் ஓடிப்போனார்கள் எ—று.

துஞ்சினன் வச்சிரத் தோளன் கண்டிது
நெஞ்சக மகிழ்ந்திவ ணிற்ப னேயெனின்
வெஞ்சின வவுணர்கோன் வினவிற் றீமையென்
றஞ்சினன் கரந்தென வருக்கன் போயினான்.

இ—ள்: வச்சிர தோளன் துஞ்சினன்—வச்சிரவாகுஇறந்தான், இது கண்டு—யான் இதனைப்பார்த்து, நெஞ்சகம் மகிழ்ந்து இவண் நிற்பன் எனில்—மனமகிழ்ந்து இவ்விடத்தில் நிற்பேனாயின், வெம் சின அவுணர்கோன் வினவில் தீமை என்று—கொடுங்கோபத்தையுடைய சூரபன்மன்கேட்டறிந்தாற்றீமைசம்பவிக்குமென்று சிந்தித்து, அஞ்சினன் கரந்து என- பயந்துமறைந்தாற்போல, அருக்கன் போயினான்—சூரியன் அத்தமித்தான் எ—று.

நிற்பனேயெனின் தீமை எனஇயையும். தற்குறிப்பேற்றம். (௧௦௧)

வச்சிரவாகுவதைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௬௦௪.

யாளிமுகன்வதைப்படலம்.

வீரவாகுதேவர் யாளிமுகனென்னுமசுரனைக்கொன்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சூரியனத்தமித்தவுடன் வீரவாகுதேவர் மகேந்திரத்தினின்றுமீண்டு இலங்கைவழியாய் வடதிசையைநோக்கிச்செல்லும்பொழுது அவ்விலங்கைநகரைக்காவல்செய்திருந்த யாளிமுகனென்னுமசுரன் சேனைகளுடனெதிர்த்துப்போர்செய்தான். வீரவாகுதேவர் அவனையுஞ்சேனைகளையும் வாட்படையினற்றுணித்துவீழ்த்தி அப்பாற்சென்றார் என்பதாம்.

திண்டிற லவுணர்கோன் சிறுவன் வீந்தது
மண்டம ரியற்றிட வருந ரின்மையுந்
தண்டம துடைந்ததுந் தபனன் மாய்ந்ததுங்
கண்டன னினையன கருதன் மேயினான்.

இ—ள்: திண் திறல் அவுணர் கோன் சிறுவன் வீந்ததும்—மிக்கவலியினையுடைய சூரபன்மனதுபுதல்வனாகிய வச்சிரவாகு இறந்ததையும், தண்டமது உடைந்ததும்– உடனின்றசேனைகள்தோற்றோடியதையும், மண்டு அமர் இயற்றிட வருநர் இன்மையும்– நெருங்கியபோரைச்செய்தற்கு வருகின்றவர்கள் வேறில்லாமையையும், தபனன் மாய்ந்ததும்– சூரியனத்தமித்ததையும், கண்டனன்– (வீரவாகுதேவர்) பார்த்து, இனையன கருதல் மேயினான்– இவற்றைச்சிந்திப்பார் எ—று.

எந்தையை யெள்ளினா னிருந்த கோநகர்
சிந்தினன் புரத்தையுஞ் சிறிது வீட்டினன்
வந்தவர் யாரையு மாய்வு செய்தனன்
புந்தியின் வெகுளியிற் சிறிது போக்கினேன்.

இ—ள்: எந்தையை எள்ளினான் இருந்த கோநகர் சிந்தினன்—எங்கள்தலைவராகிய முருகவேளையிகழ்ந்த சூரபன்மனிருக்கின்ற கோயிலையழித்து, புரத்தையும் சிறிது வீட்டினன்—நகரத்தையுஞ்சற்றேயழித்து, வந்தவர் யாரையும் மாய்வு செய்தனன்– எதிர்த்துவந்தவர்களெல்லாரையுங்கொன்று, புந்தியின் வெகுளியில் சிறிது போக்கினேன்—என்மனக்கோபத்திற்சிறிதுதீரப்பெற்றேன் எ—று.

எள்ளினான்-வினையாலணையும்பெயர். (உ)

ஏலவெம் போர்செய வெவரும் வந்திலர்
ஞாலம தவிரொளி நடாத்து ஞாயிறு
மேல்கட லீந்தினன் விரைய போயினான்
மாலையு மிவ்விடை வந்து நேர்ந்ததே.

இ—ள்: ஏல வெம் போர் செய எவரும் வந்திலர்—இசையுமாறு கொடியபோரைச்செய்தற்கு வேறொருவரும்வந்திலர், ஞாலமது அவிர் ஒளி நடாத்தும் ஞாயிறு மேல் கடல் நீந்தினன் விரைய போயினான் —நிலவுலகமெங்கும் விளங்குகின்றசோதியைப்பரப்புகின்ற சூரியன் மேற்றிசைக்கடலைக்கடந்து விரைவிலத்தமித்தான், மாலையும் இவ்விடை வந்து நேர்ந்தது—மாலைக்காலமும் இப்பொழுதுவந்துசேர்ந்தது எ—று.

தமக்கிளையாதுநின்றென்பார் 'ஏல' என்றார். பின்னையஉம்மை எச்சம். (௩)

அறந்தனை நினைகிலா தல்லல் செய்பவ
ருறைந்திடு நகரிதி னொற்றிற் போந்தயான்
சிறந்திடு மறுமுகத் தேவ தேவனை
மறந்திட லாங்கொலிம் மாலை காறுமே.

இ—ள்: அறம் தனை நினைகிலாது அல்லல் செய்பவர் உறைந்திடும் நகர் இதின்—தருமசிந்தையின்றி உயிர்களுக்குத்துன்பத்தைச்செய்பவராகிய அசுரர்கள் வாழுகின்ற இந்நகரத்தில், ஒற்றில் போந்த யான்—தூதாகவந்த நான், சிறந்திடும் அறுமுக தேவதேவனை—சிறந்தஆறுதிருமுகங்களையுடையமுருகவேளை, இமாலை காறும் மறந்திடல் ஆம் கொல்—இந்தமாலைக்காலம்வரையும் மறந்திருத்தல் தக்கதா? எ—று.

தேவதேவன்-தேவத்தலைவன். விதித்தகட்டளையைச்செய்துமுடித்தவுடன் மீண்டுசெல்வதேதக்கதென்பதுகுறிப்பு. (௪)

ஏவரும் வழுத்திய வெந்தை கந்தவேள்
பூவடி தணந்திடு புலம்பு மிவ்விடைத்
தேவர்கள் புன்மையுந் தீர வல்லையிற்
போவது துணிவெனப் புந்தி தேற்றினான்.

இ—ள்: ஏவரும் வழுத்திய எந்தை கந்தவேள் பூ அடி தணந்திடு புலம்பும்—எல்லாராலுந் துதிக்கப்படுகின்ற எங்கள்தலைவராகியமுருகக்கடவுளதுமலர்போலுந்திருவடிகளைப்பிரிந்ததுன்பமும், இவ் இடை தேவர்கள் புன்மையும் தீர—இந்நகரிற்சிறையிருக்கின்றதேவர்களுடையதுயரமுந்தீரும்படி, வல்லையில் போவது துணிவு—விரைவிற்போவதேகடமையாம், என புந்தி தேற்றினான்—என்று மனத்தைத்தெளிவித்தார் எ—று.

போவதே என்பதிற் பிரிநிலையேகாரந்தொக்கது. தேவர்கள்புன்மையுந்தீர என்றதனால் தாம் மீண்டுபோனவுடன் முருகவேள் போர்க்கெழுந்தருளுதலை நிச்சயித்தாரென்பதுதோன்றிற்று. (௫)

தேற்றிய திறலுடைச் செம்மலிம்மென
மாற்றலர் படுநில வரைப்பு நீங்கியே
காற்றெனக் கனலெனக் கால னென்னவெங்
கூற்றென மறுகிடைக் குலவி யேகினான்.

இ—ள்: தேற்றிய திறல் உடை செம்மல்—இவ்வாறு துணிந்த வலியினையுடைய வீரவாகுதேவர், மாற்றலர் படும் நில வரைப்பு இம்மென நீங்கி-பகைவர்களழிந்தபோர்க்களத்தை விரைவாக நீங்கி, காற்று என கனல் என காலன் என்ன வெம் கூற்று என—காற்றைப்போலவும் அக்கினியைப்போலவும் காலனைப்போலவும் கொடியயமனைப்போலவும், மறுகு இடை குலவி ஏகினான்—வீதியில்விளங்கிச்சென்றார் எ—று.

இம் விரைவுக்குறிப்பு. மிகுந்தவேகமாகச்செல்லுதலாற்காற்றையும் உக்கிரமாகச்செல்லுதலால் அக்கினியையும் பகைவருயிர்களைக்கவர்தலாற் காலனையுங் கூற்றுவனையும் உவமித்தார். எவருங்காணுமாறுசென்றாரென்பார் 'குலவியேகினான்' என்றார். (௬)

திறல்கெழு மொய்ம்புடைச் செல்வன் செல்லுழி
மறுகிடை யவுணர்கண் மறலி மற்றிவன்
குறுகலிர் நுங்களைக் கொல்வன் கொல்வனென்
றறைகுநர் முறைமுறை யரற்றி யோடினார்.

இ—ள்: திறல் கெழு மொய்ம்பு உடை செல்வன் செல்லுழி—வீரவாகுதேவர் அவ்வாறு போம்பொழுது, மறுகு இடை அவுணர்கள்—வீதிகளிலெதிர்ப்ப

40

ட்ட அசுரர்கள், இவன் மறலி– இவன்யமனாகும், 'குறுகலிர்– அணுகாதீர்கள், நுங்களை கொல்வன் கொல்வன் என்று—(அணுகினால்) உங்களைக்கொல்வான் கொல்வான் என்று, அறைகுநர்—சொல்லுகின்றவர்களாய், அரற்றி—புலம்பி, முறைமுறை ஓடினார்—நிரைநிரையாக ஓடினார்கள் எ—று.

அடுக்கு அச்சம்பற்றிவந்தது. அறைகுநர் என்பதில் ஆக்கச்சொல் எஞ்சிநின்றது. (எ)

எஞ்சிய வவுணர்கள் யாரு மிவ்வகை
யஞ்சின ரிரிந்திட வழிந்து முன்னையா
டுஞ்சிய வாவணத் தொகைக டந்தோராய்
விஞ்சிய மகேந்திரம் விடுத்து நீங்கினான்.

இ—ள்: எஞ்சிய அவுணர்கள் யாரும்—இறவாதுநின்ற அசுரர்களனைவரும், இவ்வகை அஞ்சினர் இரிந்திட– இவ்வாறுபயந்தோட, அழிந்து முன்னையாள் துஞ்சிய ஆவண தொகை கடந்து ஓராய்—அழிவடைந்து மூதேவிவசிக்கப்பெற்ற வீதிக்கூட்டங்களைக்கடந்துபோய், விஞ்சிய மகேந்திரம் விடுத்து நீங்கினான்—பெரியமகேந்திரபுரத்தைவிட்டு நீங்கினார் எ–று.

இரிந்திட ஓராய் எனஇயையும். சிறப்புடையபொருள்களில் இலக்குமியும் சிறப்பிழந்தபொருள்களில் மூதேவியும்வசிப்பதியல்பாதலின் 'அழிந்துமுன்னையா டுஞ்சியவாவணத்தொகை' என்றார். (அ)

புடையகன் மகேந்திர புரத்தை நீத்தபின்
விடைபொரு வலியினான் விண்ணின் பாலெழீஇ
முடுகினன் வழிக்கொடு முருகற் போற்றியே
வடதிசை யிலங்கையின் வரைப்பு நண்ணினான்.

இ—ள்: விடை பொரு வலியினான்—இடபத்தைப்போன்ற வலிமையையுடைய வீரவாகுதேவர், புடை அகல் மகேந்திரபுரத்தை நீத்தபின்– இடமகன்ற மகேந்திரபுரியைக்கடந்தபின், முருகன் போற்றி– முருகக்கடவுளைத்துதித்து, விண்ணின் பால் எழீஇ–ஆகாயமார்க்கமாகக்கிளர்ந்து, முடுகினன் வழிக்கொடு– விரைந்துசென்று, வடதிசை இலங்கையின் வரைப்பு நண்ணினான்—வடக்குத்திக்கிலுள்ள இலங்கைநகரியெனெல்லையையடைந்தார் எ—று. (௯)

வேறு.

ஆங்கது காலையி லனைய, பாங்கரின் மேவரு பழையோ
னோங்கிய மூவெயி லுள்ளோர், தாங்கிய வன்மை தரித்தோன்.

இ—ள்: அது காலையில்—அப்பொழுது, அனைய பாங்கரில் மேவரு பழையோன்– அந்தநகரத்தில் வாழ்ந்திருந்தபழையவன், ஓங்கிய மூ எயில் உள்ளோர் தாங்கிய வன்மை தரித்தோன்—உயர்ந்த முப்புரங்களிலும்வாழ்ந்த அசுரர்கள்பெற்றிருந்த வலிமையை உடையவன் எ—று.

அதுகாலையில் இருந்தனனெனப்பதினான்குஞ்செய்யுளோடியையும். முற்காலந்தொட்டுவாழ்ந்திருத்தலின் 'பழையோன்' என்றார். ()

முடியு மகேந்திர மூதூர், வடதிசை யாரரண் மன்னி
யுடைய விலங்கையி னோம்பும், படியறு காவல் பரித்தோன்.

இ—ள்: முடியும் மகேந்திர முது ஊர் வடதிசை ஆர் அரண் மன்னி உடைய இலங்கையின்—வீரவாகுதேவராலழிவுபட்டிருக்கின்ற பழைய மகேந்திரநகரத்தின் வடக்குத்திக்கிற் சிறந்த அரணாக நிலைபெற்றிருக்கின்ற இலங்கைநகரத்தில்,

ஓம்பும் படி அரு காவல் பரித்தோன்– பேணுகின்ற ஒப்பற்ற காவற்றொழிலை வகித்திருப்பவன் எ—று. (௧௧)

ஆயிர மர்முக னடுதோ், ளோய்வி லிராயிர முடையோன்
ஞாயிறு தன்மக னகரின், வாயில்க ளன்னதோர் வாயான்.

இ—ள்: ஆயிர மா முகன்— பெரிய ஆயிரம்முகங்களையுடையவன், அடுதோள் ஓய்வு இல் இராயிரம் உடையோன்–கொலையைச்செய்கின்றசோர்வில்லாத இரண்டாயிரங்கைகளையுடையவன், ஞாயிறு தன் மகன் நகரின் வாயில்கள் அன்னது ஓர் வாயான்—சூரியனது புதல்வனாகிய யமனுடைய சம்யமினிநகரத்திலிருக்கின்றவாயில்களைப்போன்ற வாய்களையுடையவன் எ–று.

பெருந்தொகையான பிராணிகள் உட்புகுந்து மீளாதடங்கி அழிதற்கேற்றனவாதலின் யமனுடையநகரத்தின் வாயிலையுவமித்தார். மா-யாளியுமாம். (௧௨)

வடவரை யாயிரம் வந்தோர், குடல்கொடு மேவிய தொப்பான்
படைபல பாணி பரித்தான், கடையழல் கான்றிடு கண்ணன்.

இ—ள்: வடவரை ஆயிரம் வந்து ஓர் உடல் கொடு மேவியது ஒப்பான்—ஆயிரக்கணக்கான மேருமலைகள் வந்து ஒருவடிவமாயிருந்தாற்போன்ற பெரியரூபத்தையுடையவன், படை பல பாணி பரித்தான்– பலபடைக்கலங்களைக்கையிலேந்தியவன், கடை அழல் கான்றிடு கண்ணன்— வடவாமுகாக்கினியைச்சொரிகின்றகண்களையுடையவன் எ—று.

மிகுந்தவெப்பமுள்ளபொறிகளைக்காலுதலின் 'கடையழல்கான்றிடுகண்ணன்' என்றார். (௧௩)

தண்ணளி யோரிறை தானு, முண்ணிகழ் வற்ற வுளத்தா
னெண்ணரும் வெம்பவம் யாவும், பண்ணின னன்று பயின்றான்.

இ—ள்: தண்ணளி ஓர் இறை தானும் உள் நிகழ்வு அற்ற உளத்தான்—அன்பானது அற்பமாயினும் உள்ளேபொருந்தப்பெறாத மனத்தையுடையவன், எண்ண அரும் வெம் பவம் யாவும் நன்று பண்ணினன் பயின்றான்— அளவிடப்படாத கொடியபாவங்களெல்லாவற்றையும் நன்றாகச்செய்து பழகியவன் எ—று.

இறை ஆகுபெயர். (௧௪)

மீளில் சினத்ததி வேகக், கோளரி யைத்தரு கொடியோன்
யாளி முகத்தவ னென்போன், வாள்வய முற்றிடு வலியோன்.

இ—ள்: மீள் இல் சினத்து அதிவேக கோளரியை தரு கொடியோன்— நீங்காத கோபத்தையுடைய அதிவீரனென்னும்பெயருள்ள சிங்கம்போன்றபுதல்வனைப் பெற்றகொடியவன், யாளிமுகத்தவன் என்போன்— யாளிமுகனென்னும் பெயரையுடையவன், வாள் வயம் உற்றிடு வலியோன்— வாட்போரில் வெற்றியைப்பெறுகின்ற வலியவன் எ—று.

அதிவேகக்கோளரி-உருவகம். வாள்-ஆகுபெயர். (௧௫)

வேறு.

பெருந்தகை யாங்கவன் பெயர்ந்த காலையி
னருந்திறற் சூரனை யடைந்து மீண்டுபின்
மருந்துறழ் தன்மகன் மாட்சி தேர்வுறீஇ
யிருந்தனன் வருந்தியே யிலங்கை தன்னிடை.

இ—ள்: பெருந்தகை அவன் பெயர்ந்தகாலையின்—பெருந்தகைமையையுடையஅந்தவீரவாகுதேவர் அவ்விடத்துத் திரும்பிவந்தபொழுது, அரும் திறல் சூரனை அடைந்து பின் மீண்டு-சிறந்தவலிமையையுடையசூரபன்மனிடஞ்சென்று பின்திரும்பிவந்து, மருந்து உறழ் தன் மகன் மாட்சி தேர்வுறீஇ— அமிர்தத்தைப் போன்ற தன்புதல்வனுடைய மரணத்தையறிந்து, வருந்தி-வருத்தங்கொண்டு, இலங்கை தன் இடை இருந்தனன்— இலங்கைநகரத்திலிருந்தான் எ—று.

அருமைப்புதல்வனென்பார் 'மருந்துறழ்-மகன்' என்றார். பெயர்ந்தகாலையின் இருந்தனன் எனஇயையும். (௧௬)

சண்டவெங் கதிகொடு தமியன் சேறலுங்
கண்டனன் யாரிவன் கள்வன் போலுமால்
விண்டலந் நீந்தியே மேவு வானெனத்
தொண்டுசெ யுழையரி லொருவன் சொல்லுவான்.

இ—ள்: சண்ட வெம் கதி கொடு தமியன் சேறலும்—(அவ்வாறிருக்கும் பொழுது வீரவாகுதேவர்)உக்கிரமானகொடியவேகத்துடன் தனித்தவராய்ப்போக, கண்டனன்—பார்த்து, விண் தலம் நீந்தி மேவுவான்—ஆகாயவழியாக இந்நகரைத்தாண்டிச்செல்வான், இவன் யார்—இவனார்?, கள்வன் போலும்– திருடன்போலத்தோற்றுகின்றான், என—என்றுகூற, தொண்டு செய் உழையரில் ஒருவன் சொல்லுவான்—அவனதுஏவல்களைச்செய்கின்ற பரிசனர்களுள் ஒருவன் சொல்வான் எ—று.

ஆகாயமார்க்கமாய் விரைந்துசெல்லுதலாற் கள்வனென்றயிர்த்தான். (௧௭)

நங்குல நாயக நவில்வன் கேட்டிநீ
செங்கதிர் முளைத்துழிச் செல்வற் காணிய
பொங்கொளி மகேந்திர புரத்திற் போந்தனை
யிங்குநின் றிருமக னிருந்து காப்பவே.

இ—ள்: நம் குல நாயக—எங்கள்குலத்தார்க்கரசனே! நவில்வன் கேட்டி—யான்சொல்வேன் கேட்பீராக, செம் கதிர் முளைத்துழி– சிவந்தகிரணங்களையுடையசூரியன் உதித்தபொழுது, இங்கு நின் திருமகன் இருந்து காப்ப— இந்நகரில் உம்முடையசிறந்தபுதல்வன் இருந்துகாவல்செய்ய, நீ—நீர், செல்வன் காணிய—எங்களரசனாகிய சூரபன்மனைக்காணும்பொருட்டு, பொங்கு ஒளி மகேந்திர புரத்தில் போந்தனை—சிறந்தஒளியையுடைய மகேந்திரநகரிற்போனீர் எ—று.

முளைத்துழிப்போந்தனை எனஇயையும். (௧௮)

போந்திடு கின்றபின் புணரி தன்னுள்வா
னீந்தின னீங்கிவ னோர வன்னதை
வாய்ந்திடு பெருந்திறன் மடங்கற் பேரினோன்
காந்திய கனலெனக் கண்டு சீறினான்.

இ—ள்: போந்திடுகின்ற பின்—நீர் அவ்வாறுபோனபின்பு, இவன் புணரி தன்னுள் வான் நீந்தினன் ஈங்கு நேர—இந்தவீரன் சமுத்திரத்தின்கண் ஆகாயமார்க்கமாகத்தாண்டி இவ்விடத்தில்வர, வாய்ந்திடு பெரும் திறல் மடங்கல் பேரினோன் அன்னதை கண்டு—வீரசிங்கனென்பான் அத்தன்மையைப்பார்த்து, காந்திய கனல் என சீறினான்—சொலித்தெரிகின்ற அக்கினியைப்போலக்கோபித்தான் எ—று.

வாய்ந்திடுபெருந்திறன்மடங்கற்பேரினோன்-வாய்ப்பானசிறந்தவீரம்பொருந்தியசிங்கத்தின் பெயரையுடையான். கடுங்கோபங்கொண்டானென்பான் 'காந்திய கனலெனச்சீறினான்' என்றான். (௧௯)

சீறினன் படையொடு சென்று தாக்கலும்
வீறொடு வருமவன் வெகுண்டு வாளுரீஇ
மாறம ரியற்றியே மற்ற வன்றனைக்
கோறல்செய் தொருவிறல் கொண்டு மேயினான்.

இ—ள்: சீறினன்—கோபித்து, படையொடு சென்று தாக்கலும்—சேனைகளுடன்போய்ப்போர்செய்தலும், வீறொடு வரும் அவன்—பெருமையுடன்வந்த அந்தவீரன், வெகுண்டு வாள் உரீஇ—கோபித்து வாட்படையை (உறையினின்றும்) உருவியெடுத்து, மாறு அமர் இயற்றி—எதிர்த்துப்போர்செய்து, அவன் தனை கோறல்செய்து—அந்தவீரசிங்கனைக்கொன்று, ஒரு விறல் கொண்டு மேயினான்—ஒருவெற்றியைக்கொண்டுவந்தான் எ—று.

முதல்வெற்றியென்பான் 'ஒருவிறல்' என்றான். (உ௦)

மின்னவிர் பூணுடை வீர மொய்ம்பினா
னின்னதோ ரிலங்கையி னிடைக்கட் பாய்ந்தன
னன்னவ னடிபொறா தாழி யுற்றதாற்
பொன்னகர் வளனொடு மங்கட் புக்கபோல்.

இ—ள்: மின் அவிர் பூண் உடை வீரமொய்ம்பினான்—ஒளிவிளங்குகின்ற ஆபரணங்களையுடையவீரவாகு, இன்னது ஓர் இலங்கையின் இடைக்கண் பாய்ந்தனன்—பின் இந்த இலங்கைநகரினடுவிற் பாய்ந்தான், (அப்பொழுது), அன்னவன் அடி பொறாது ஆழி உற்றது—(இந்நகரம்) அவனுடையகால்மிதியைத்தாங்கமாட்டாமற் கடலிலமிழ்ந்தியது, பொன் நகர் வளனொடும் அங்கண் புக்க போல்—(முற்காலத்திற்) சுவர்க்கலோகம் தன்னிடத்துள்ளசெல்வங்களோடும் அந்தக்கடலிலமிழ்ந்தினாற்போல எ—று.

போல் உற்றது எனஇயையும். முன்னொருகாலத்தில் துருவாசமுனிவர் இந்திரனதுசபைக்குப்போக அவன் உபசரிக்காது அரம்பையர்நடனத்திலுங்கீதங்களிலும்புலனைச்செலுத்தியிருந்தமையால் அவர் அவனுடையவளங்களெல்லாங் கடலிலமிழ்ந்தும்படி சபித்தனர். அவைஅவ்வாறேஅமிழ்ந்தின என்க. புக்கது என்பதில் ஈற்றுயிர்மெய்கெட்டது. (உக)

புக்கிட வளப்பிலர் பொன்ற வேனையோ
ரக்கண மெழுந்தன ரவற்கண் டஞ்சியே
திக்கொடு வானமுஞ் சிந்த நின்மகன்
மைக்கட லகமொரீஇ வல்லை யெய்தினான்.

இ—ள்: புக்கிட—இலங்கைநகர் கடலிலமிழ்ந்தியபொழுது, அளப்பு இலர் பொன்ற—அளவிறந்தவீரர்களிறக்க, ஏனையோர் அக்கணம் எழுந்தனர்—எஞ்சியவீரர்கள் அந்தக்கணத்திற்றானேயெழும்பி, அவன் கண்டு அஞ்சி—அந்தவீரவாகுவைக்கண்டுபயந்து, திக்கொடு வானமும் சிந்த—திக்குகளிலும் ஆகாயத்திலுஞ் சிதற, நின் மகன்—உமதுபுதல்வனாகியஅதிவீரன், மை கடல் அகம் ஒரீஇ—கரியகடலினின்றுமெழும்பி, வல்லை எய்தினான்—விரைவாகக்கரையேறினான் எ—று.

ஏனையோர் சிந்த எனஇயையும். (உஉ)

வெய்தென விவண்வரும் வீர னோடமர்
செய்தனன் வாள்கொடு செவ்வி யன்னதின்
மைதவழ் மேனியின் மதலை மார்புதாள்
கைதலை யொருதலை கண்ட மாக்கினான்.

இ—ள்: வெய்தென இவண் வரும் வீரனோடு அமர் செய்தனன்—(கரையேறியபின்) விரைவாகஇவ்விடத்தில்வந்த இந்தவீரனுடன் போர்செய்தான், செ

வ்வி அன்னதில்—அப்பொழுது, வாள் கொடு—வாட்படையினால், மை தவழ் மேனியின் மதலை மார்பு தாள் கை தலை—கருமைபொருந்தியசரீரத்தையுடைய உமது புதல்வனுடைய நெஞ்சையும் கால்களையும் கைகளையும் தலையையும், ஒரு தலை கண்டம் ஆக்கினான்—ஒரேமுறையில் இவன் வெட்டினான் எ—று. (உ௩)

பூழியம் புயமுடைப் பொருநன் பின்னுறக்
கேழுறு வானெறி கிளர்ந்து போந்திடா
வாழிய மகேந்திர வரைப்பிற் புக்கன
னாழுறு மிலங்கையு மாழி மேலெழ.

இ—ள்: பூழியம் புயம் உடை பொருநன்—திருநீற்றையணிந்த புயங்களையுடையஇந்தவீரன், பின்னுற-பின்பு, கேழ் உறு வான் நெறி கிளர்ந்து போந்திடா—நிறம்விளங்குகின்ற ஆகாயமார்க்கமாகக்கிளம்பிப்போய், ஆழுறும் இலங்கையும் ஆழி மேல் எழ—அழுந்திய இலங்கைகடலின்மேல் முன்போற்கிளம்பிநிற்க, மகேந்திர வரைப்பில் புக்கனன்—மகேந்திரநகரிற்புகுந்தான் எ—று.

உம்மை எச்சம். (உ௪)

சூருறை திருநகர் துன்னி யாயிடைச்
சீரினை முழுவதுஞ் சிந்தி நங்குல
வீரரொ டேயமர் விளைத்து வென்றவ
ணேருந ரின்மையி னீங்கி னானரோ.

இ—ள்: சூர் உறை திரு நகர் துன்னி—சூரபன்மனிருக்கின்ற சிறந்தமகேந்திரபுரத்திற்போய், ஆயிடை சீரினை முழுவதும் சிந்தி—அந்நகரிலுள்ள சிறப்புகளெல்லாவற்றையும் முற்றுமழித்து, நம் குல வீரரொடு அமர் விளைத்து வென்று—எங்களினத்தாராகிய வீரர்களுடன் போர்செய்துவெற்றிகொண்டு, அவண் நேருநர் இன்மையின் நீங்கினான்—அவ்விடத்திலெதிர்ப்பாரொருவருமில்லாமையால் மீண்டான் எ—று.

அசுரவீரரென்பான் 'நங்குலவீரர்' என்றான். சூர்-கடைக்குறை. (உ௫)

என்னலு முருமினு மிடித்த சொல்லினன்
வன்னிகொ ளுயிர்ப்பினன் மடித்த வாயினன்
றுன்னிய வியர்ப்பினன் சுழலுங் கண்ணினன்
மெய்ந்நிறை வெகுட்சியன் விளம்பன் மேயினான்.

இ—ள்: என்னலும்—என்று (பரிசனர்களுளொருவன்) கூறியவுடன், உருமினும் இடித்த சொல்லினன்—(கேட்டயாளிமுகன்) இடிமுழக்கத்தினின்றுமகடினவோசையானசொல்லைப் பேசுகின்றவனும், வன்னி கொள் உயிர்ப்பினன்—தீப்பொறிகள்தோற்றுகின்ற பெருமூச்சையுடையவனும், மடித்த வாயினன்—இதழ்மடிக்கப்பெற்ற வாயையுடையவனும், துன்னிய வியர்ப்பினன்—செறிந்த வியர்வையையுடையவனும், சுழலும் கண்ணினன்—சுழலுகின்ற கண்களையுடையவனும், மெய் நிறை வெகுட்சியன்—சரீரத்தில் நிறைந்தகோபத்தையுடையவனும், விளம்பல் மேயினான்—சொல்லானுயினான் எ—று.

அடங்காக்கோபமுடையானென்பார் 'மெய்ந்நிறைவெகுட்சியன்' என்றார். என்னலும் விளம்பன் மேயினான் என இயையும். (உ௬)

காண்டிடுமென் கடிமுறை கடந்து மைந்தனை
யீண்டுயிர் வெளவியே யிறைவ னார்புகா
மீண்டிடு கள்வனிவ் வீரந் தன்னொடே
மாண்டிட வடுருவன் வன்மை யாலென்றான்.

இ—ள்: என் கடி முறை கடந்து—என்னுடையகாவன்முறையையிகந்து, மைந்தனை ஈண்டு உயிர் வெளவி—எனது புதல்வனை இவ்விடத்திற்கொன்று, இ

றைவன் ஊர் புகா மீண்டிடு கள்வன்—எங்களரசனது மகேந்திரநகரத்திற்புகுந்து திரும்பிய இக்கள்வன், இ வீரம் தன்னெடு மாண்டிட— இந்தவீரத்துடனிறக்கும்படி, வன்மையால் அடுகுவன்—என்வலிமையினலழிப்பேன், காண்டி– காண்பாயாக, என்றான்—என்று கூறினான் எ—று.

தன்கூற்றையுறுதிப்படுத்த 'காண்டி' என்றான். (௨௭)

என்றிவை விளம்பியே யாளி மாமுகன்
குன்றென வெழுந்தொரு கொற்ற வாள்கொளீஇ
நின்றசில் படையொடு நேர்ந்து வீரன்முன்
சென்றன னினையன செப்பல் மேயினான்.

இ—ள்: யாளி மா முகன்—பெரிய யாளிமுகங்களையுடைய அசுரன், என்று இவை விளம்பி—என்று இவ்வசனங்களைக்கூறி, குன்று என எழுந்து—மலைபெயர்ந்தாற்போலெழும்பி, ஒரு கொற்ற வாள் கொளீஇ—வெற்றிபொருந்திய ஒரு வாளையேந்தி, நின்ற சில் படையொடும்—அயலில்நின்ற சில சேனைகளுடன், வீரன் முன் நேர்ந்து சென்றனன்—வீரவாகுதேவருக்குமுன் எதிர்த்துப்போய், இனையன செப்பல் மேயினான்—இவற்றைச்சொல்வானாயினான் எ—று.

பெரியவடிவமுடையனாதலாலும் திடுக்கென்றெழுதலாலும் எழும்போது நிலமதிர்தல்முதலியனநிகழ்தலாலும் 'குன்றெனவெழுந்து' எனவும், பற்பல போர்களில் வெற்றிதந்தவாளென்பார் 'கொற்றவாள்' எனவும் கூறினார். (௨௮)

நங்கடன் முறையினை நடாத்து மைந்தனை
யிங்கடல் செய்தனை யினைய காப்பொரீஇ
யங்கடற் போந்தனை யழிவு செய்தனை
வெங்கடல் கடந்தனை மீடி யேகொலாம்.

இ—ள்: நம் கடன்முறையினை நடாத்தும் மைந்தனை இங்கு அடல் செய்தனை—என்னுடைய தொழின்முறையைச்செய்துகொண்டிருந்த புதல்வனாகிய அதிவீரனை இங்கேகொன்று, இனைய காப்பு ஒரீஇ—இந்தக்காவலைக்கடந்து, அங்கு அடல் போந்தனை—அந்தவீரமகேந்திரநகரத்தில்வலிமையுடன்சென்று, அழிவு செய்தனை—அழிவுகளைச்செய்து, வெம் கடல் கடந்தனை மீடி கொல்—கொடியகடலைக்கடந்து திரும்பிப்போவாயா? எ—று.

கடன்முறையென்றது காவலை. கரைதெரியாக்கடலென்பான் 'வெங்கடல்' என்றான். கொல்-எதிர்மறை. (௨௯)

ஒல்லொலி யளக்கரை யுகண்டு நிற்கினிச்
செல்லுத லரிதியான் செருவி னேர்ந்தனன்
கொல்லுவன் பெருவயங் கொள்வ னீயிவண்
வல்லது புரிமதி மதியி லாயென்றான்.

இ—ள்: ஒல் ஒலி அளக்கரை உகண்டு நிற்கு இனி செல்லுதல் அரிது—ஒல்லென்னுங்குறிப்பொலியையுடைய கடலைக்கடந்து நீ இனிப்போவது அருமை, (ஏனெனில்), யான் செருவில் நேர்ந்தனன்—நான் போர்செய்யுமாறு எதிர்த்து வந்தேன், கொல்லுவன் பெரு வயம் கொள்வன்— உன்னைக்கொன்று சிறந்த வெற்றியைப்பெறுவேன், மதி இலாய்– புத்தியில்லாதவனே!, நீ இவண் வல்லது புரி—நீ இங்கேசெய்யவல்லபோர்களைச்செய்வாய், என்றான்— என்று கூறினான் எ—று.

இவண்-என்னெதிரே. மதி-முன்னிலையசை. (௩௦)

சொற்றது கேட்டலுந் தழனிப் பேரொலி
யுற்றெறி கனலென வுயிர்ப்பு மூரலுஞ்

செற்றமு மெய்தியே துளக்கிச் சென்னியைக்
கொற்றமொய்ம் புடையதோர் குரிசில் கூறுவான்.

இ—ள்: சொற்றது கேட்டலும்—யாளிமுகன்சொல்லிய வசனத்தைக்கேட்டவுடன், கொற்ற மொய்ம்பு உடையது ஓர் குரிசில்—வீரவாகுதேவர், துழனி பேர் ஒலி உற்று—கர்ச்சிதமானபேரோசையைச்செய்து, எரி கனல் என உயிர்ப்பும் மூரலும் செற்றமும் எய்தி—சொலித்தெரிகின்ற அக்கினியைப்போலப்பெருமூச்சும் சிரிப்பும் கோபமும் பொருந்தி, சென்னியை துளக்கி—தலையையசைத்து, கூறுவான்—எதிர்சொல்வார் எ—று. (௩க)

ஒருதலை புடையவென் னுயர்வு மாயிரந்
தருதலை யுடையநின் றாழ்வும் யாமிவட்
பொருதலை யிழைத்திடும் போது காண்புறுங்
கருதலை பெருவடி வமைந்த காட்சியே.

இ—ள்: ஒரு தலை உடைய என் உயர்வும்—ஒருதலையையுடைய எனது பெருமையும், ஆயிரம் தரு தலை உடைய நின் தாழ்வும்— ஆயிரக்கணக்கான தலைகளையுடைய உனது சிறுமையும், யாம் இவண் பொருதலை இழைத்திடும்போது காண்புறும்—நாங்களிவ்விடத்திற்போர்செய்யும்பொழுதுகாணப்படும், பெரு வடிவு அமைந்த காட்சி கருதலை— பெருத்தவடிவத்தையுடையனாயிருக்கின்ற தோற்றத்தை மதியாதே எ—று.

எங்கள் உயர்வுதாழ்வுகளை உருவத்தான்மதியாது ஆற்றலான் மதிப்பதேதக்கது என்பதாம். (௩உ)

தீயவ விம்மொழி திண்ணந் திண்ணமுன்
மாயிரும் புழைக்கையின் மாமு கங்களோ
ராயிரந் தன்னையு மறுத்து வீட்டியே
நாயினங் கவரிய நல்கு வேனென்றான்.

இ—ள்: தீயவ—கொடியவனே!, உன் மா இரும் புழைக்கையின் மா முகங்கள் ஓர் ஆயிரம் தன்னையும் அறுத்து வீட்டி—உனது மிகப்பெரியதுதிக்கைகளையுடைய ஆயிரம் யாளிமுகங்களையும்வெட்டிவிழுத்தி, நாய் இனம் கவரிய நல்குவேன்— நாய்க்கூட்டங்கள்கவ்வும்படிகொடுப்பேன், இ மொழி திண்ணம் திண்ணம்—இந்தவார்த்தைநிச்சயம் நிச்சயம், என்றான்—என்றுகூறினார் எ—று.

மா, இரும்-ஒருபொருட்சொற்கள். புழைக்கை—உட்டுளைபொருந்தியகை.

கருணைகொ ணந்தியங் கணத்த னிவ்வகை
யுரைதரு மெல்லையி னுததி மேருமால்
வரையினை விழுங்கிய வளைந்த தேயென
விரைவொடு படைஞர்கள் வீரற் சுற்றினார்.

இ—ள்: கருணை கொள் நந்தியம் கணத்தன் இவ்வகை உரைதரும் எல்லையின்—அருளையுடைய நந்திகணத்தவராகிய வீரவாகுதேவர் இவ்வாறு கூறியபொழுது, உததி மேரு மால் வரையினை விழுங்கிய வளைந்தது என—கடலானதுபெரிய மேருமலையை அகப்படுத்தும்பொருட்டுச்சூழ்ந்தாற்போல, படைஞர்கள்— சேனைவீரர்கள், விரைவொடு வீரன் சுற்றினார்—விரைவில் வீரவாகுதேவரைச்சூழ்ந்தார்கள் எ—று.

சேனைகள் கரும்நிறமும்பெருந்தொகையினவுமாகிப் பொன்னிறமான வீரவாகுதேவரை வளைந்துநிற்றலின் இவ்வாறு உவமித்தார். உததி-நீர்தங்குமிடம்.

சுற்றிய தானையர் தோன்றன் மீதுதாம்
பற்றிய படைக்கலம் பலவுந் தூண்டியே
செற்றமொ டமர்வினை செய்யச் சூறைபோன்
மற்றவர் சூழலுள் வாள்கொண் டெய்தினன்.

இ—ள். சுற்றிய தானையர்– அவ்வாறுவளைந்த சேனைவீரர்கள், தாம் பற்றிய படைக்கலம் பலவும்—தாங்களேந்தியிருந்த படைக்கலங்கள்பலவற்றையும், தோன்றல் மீது தூண்டி—வீரவாகுதேவர்மேற்செலுத்தி, செற்றமொடு அமர்வினை செய்ய—கோபத்துடன்போர்த்தொழிலைச்செய்ய, சூறை போல்—சுழல்காற்றைப்போல, அவர் சூழலுள் வாள் கொண்டு எய்தினன்– அந்த அசுரவீரரதுதொகுதியினுள் வீரவாகுதேவர் வாட்படையையேந்திக்கொண்டுசென்றார் எ—று.

சூறைபோல் எய்தினன் என இயையும். மிகவும்வேகமாகச் சுழன்றுசெல்லுதலாற் சுழல்காற்றையுவமித்தார். (௩௫)

துண்டமு மகலமுந் தோளுந் தாளுமொண்
கண்டமுஞ் சென்னியுங் கரமு மானவை
விண்டுவிண் டழிவுற வெய்ய தானவர்
தண்டம தனைத்தையுந் தடிந்திட் டானரோ.

இ—ள்: துண்டமும் அகலமும் தோளும் தாளும் ஒள் கண்டமும் சென்னியும் கரமும் ஆனவை—மூக்கும் மார்பும் புயங்களும் கால்களும் சிறந்தகழுத்தும் தலையும் கைகளுமாகிய உறுப்புகளெல்லாம், விண்டு விண்டு அழிவுற—வேறுவேறாகி அழியும்படி, வெய்ய தானவர் தண்டமது அனைத்தையும் தடிந்திட்டான்—கொடிய அசுரசேனைகளெல்லாவற்றையும் வெட்டினார் எ—று. (௩௬)

வேறு.

அறுகு மாமுகத் தண்ண லாற்றவுங்
கறுவு பெற்றிடுங் கருத்தின் வீரனைக்
குறுகி யாயிரங் கொண்ட கைகளா
லிறுதி யூழிநா ளிடியி னெற்றினன்.

இ—ள்: அறுகு மா முகத்து அண்ணல்—யாளியின்பெரியமுகங்களையுடைய அசுரன், ஆற்றவும் கறுவு பெற்றிடும் கருத்தின்–(தன்படைவீரரழிந்தமையால்) மிகக்கோபம்பொருந்தியமனத்துடன், வீரனை குறுகி– வீரவாகுதேவரையணுகி, ஆயிரம் கொண்ட கைகளால்—ஆயிரமென்னுந்தொகைப்பட்ட கைகளினால், இறுதி ஊழிநாள் இடியின் எற்றினன்— உலகமெல்லாமழிகின்ற முடிவுகாலத்திற்றோன்றுகின்ற இடியைப்போல மோதினன் எ—று.

பெருந்தாக்கமாகவென்பார் 'இறுதியூழிநாளிடியின்' என்றார். (௩௭)

அடித்த கைகளை யங்கை யொன்றினாற்
பிடித்து மேலவன் பெருங்கை வாளினா
லுடைத்த சோரிநீ ருகுத்து வீழ்ந்திறை
துடித்தி டும்படி துண்ட மாக்கினன்.

இ—ள்: மேலவன்—வீரவாகுதேவர், அடித்தகைகளை அம் கை ஒன்றினால் பிடித்து—தம்மேல்மோதிய ஆயிரங்கைகளையும் ஒரு அகங்கையாற்பிடித்து, பெரும் கை வாளினால்–சிறந்தகையிற்பொருந்தியவாட்படையினால், உடைத்த சோரி நீர் உகுத்து வீழ்ந்து இறை துடித்திடும்படி—உடைத்தாயிருந்த இரத்தநீரைச்சொரிந்து விழுந்து சிறிதுநேரந்துடிக்கும்படி, துண்டமாக்கினன்—வெட்டினார் எ—று.

பெருங்கை-வலக்கை. வாளினால் துண்டமாக்கினன் என இயையும். ()

ஆயி ரங்கர மறறு மற்றுள
வாயி ரங்கர மவைக ணீட்டியே
யாயி ரங்கிரி யவைப றித்தன
ணுயி ரங்கண ணுடல் கொண்டுளான்.

இ—ள்: ஆயிரம் கணன் ஆடல் கொண்டு உளான்— இந்திரனைவெற்றிகொண்டவனுகிய யாளிமுகன், ஆயிரம் கரம் அறலும்—ஆயிரங்கைகளும்வெட்டுப்பட்டவுடன், மற்று உள ஆயிரம் கரம் அவைகள் நீட்டி—மற்றைய ஆயிரங்கைகளையும் நீட்டி, ஆயிரம் கிரி அவை பறித்தனன்-ஆயிரம் மலைகளைப்பிடுங்கியெடுத்தான் எ-று.

அவை பகுதிப்பொருள்விகுதி. கண்ணன் என்பதில் ணகரவொற்றுத்தொக்கது. (௩௯)

பறித்த வாயிரம் பருப்ப தத்தையுங்
கறுத்து வீரன்மேற் கடிது வீசலு
மிறத்தல் கொண்டுமெய் யெங்கு மெய்தியே
புறத்து வீழ்ந்தன வுடைந்து பூழியாய்.

இ—ள்: பறித்த ஆயிரம் பருப்பதத்தையும்-பிடுங்கியெடுத்த ஆயிரம் மலைகளையும், கறுத்து வீரன் மேல் கடிது வீசலும்-கோபித்து வீரவாகுதேவர்மேல் விரைவாக யாளிமுகனெறிய, இறத்தல் கொண்டு மெய் எங்கும் எய்தி- அவைமிகுதியாகவந்துவீரவாகுதேவருடைய சரீரமுழுவதும்பட்டு, பூழி ஆய் உடைந்து—துகளாயுடைந்து, புறத்து வீழ்ந்தன—அயலில் விழுந்தன எ—று.

வீரவாகுதேவரது சரீரம் மிகக்கடினமாதலின் மலைகள் ஊறுசெய்யாது உடைந்துவீழ்ந்தன. (௪0)

பொற்றை யாவையும் பூழி யாகியே
யற்ற காலையி லையன் றூதுவன்
மற்றை யாயிரம் வான்க ரத்தையுங்
கொற்ற வாள்கொடே குறைத்து வீட்டினன்.

இ—ள்: பொற்றை யாவையும் பூழி ஆகி அற்றகாலையில்— யாளிமுகனேவியமலைகளெல்லாம் துகளாயுடைந்தபொழுது, ஐயன் தூதுவன்—முருகக்கடவுளது தூதாகிய வீரவாகுதேவர், மற்றை ஆயிரம் வான் கரத்தையும்—வெட்டுப்படாதெஞ்சியிருந்தபெரிய ஆயிரங்கைகளையும், கொற்ற வாள் கொடு குறைத்து வீட்டினன்-வெற்றிபொருந்தியவாட்படையினுல் வெட்டிவிழுத்தினர் எ-று. (௪௧)

இழைக்கு மெல்லையி னெய்துங் கூற்றினை
யழைக்கு மாறென வார்த்துத் தானவன்
றழைக்கு மொய்ம்பினன் றன்னைப் பற்றுவான்
புழைக்கை முற்றவும் பொள்ளென் றுய்த்தனன்.

இ—ள்: தானவன்—யாளிமுகாசுரன், இழைக்கும் எல்லையின் எய்தும் கூற்றினை அழைக்குமாறு என ஆர்த்து— முடிவுகாலத்தில்வருகின்ற யமனைஅழைக்குந்தன்மையைப்போல ஆரவாரித்து, தழைக்கும் மொய்ம்பினன் தன்னை பற்றுவான்—செழிப்பான புயங்களையுடைய வீரவாகுதேவரைப்பிடிக்கும்படி, புழைக்கை முற்றவும் பொள்ளென்று உய்த்தனன்—ஆயிரந்துதிக்கைகளையும் விரைவில் நீட்டினன் எ—று.

இழைக்குமெல்லை-படைத்தற்கடவுளால் விதிக்கப்பட்ட வாழ்நாளினெல்லை. விரைவிலிறப்பவனுதலின் 'கூற்றினையழைக்குமாறெனவார்த்து' என்றார். ()

உய்த்த காலையி னொருதன் வாளினு
லெய்த்த வன்மைசேர் யாளி மாமுகன்

பத்து நூறெனப் பட்ட சென்னியுங்
கொத்தொ டேவிழக் குறைத்திட் டானரோ.

இ—ள்: உய்த்த காலையின்—ஆயிரந்திக்கைகளையும் சீட்டியபொழுது, ஒரு தன் வாளினால்—ஒப்பற்ற தமது வாட்படையினால், எய்த்த வன்மை சேர் யாளி மா முகன் பத்து நூறு என பட்ட சென்னியும்—இளைக்கப்பெற்றவலியையுடைய பெரியயாளிமுகாசுரனது ஆயிரமென்னுந்தொகைப்பட்ட தலைகள்முழுவதையும், கொத்தொடே விழ குறைத்திட்டான்—தொகுதியாகவிழும்படி வெட்டினார் எ—று.

வாளினாற்குறைத்திட்டான் என இயையும். வலிகுன்றியவென்பார் 'எய்த்த வன்மைசேர்' என்றார். (சரு)

யாளிமுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௬௪௭.

வீரவாகுமீட்சிப்படலம்.

வீரவாகுதேவர் மீண்டு திருச்செந்தியம்பதிக்குச் சென்றமையைக் கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

வீரவாகுதேவர் இலங்கையினின்றுமீண்டு திருச்செந்திப்பதியிற்சென்று முருகவேளைவணங்கி நிகழ்ந்தசெயல்களையறிவித்தார் என்பதாம்.

இன்ன பான்மையால் யாளி மாமுகன்
றன்னை யட்டபின் றன்கை வாளினைப்
பொன்னு லாவுறை புகுத்திச் சென்றனன்
மின்னு செஞ்சுடர் மேனி வீரனே.

இ—ள்: இன்ன பான்மையால் யாளி மா முகன் தன்னை அட்ட பின்—இவ்வாறு பெரியயாளிமுகாசுரனைக்கொன்றபின்பு, மின்னு செம் சுடர் மேனி வீரன்—பிரகாசிக்கின்ற சிவந்தசோதிபொருந்திய வடிவத்தையுடைய வீரவாகுதேவர், தன் கை வாளினை பொன் உலாவு உறை புகுத்தி—தமது கையிலிருந்த வாட்படையை அழகுபொருந்திய உறையினுட்செருகி, சென்றனன்—நடந்தார் எ—று.

அட்டபின் சென்றனன் என இயையும். (௧)

இந்தி ரத்திரு விலங்கை நீங்கியே
யந்தி ரைக்கட லழுவம் வாவியே
கந்த மாதனங் கவின்ற வேலைசேர்
செந்தி மாநகர் சென்று புக்கனன்.

இ—ள்: இந்திர திரு இலங்கை நீங்கி—பெருஞ்செல்வத்தையுடைய இலங்கைநகரத்தைநீங்கி, அம் திரை கடல் அழுவம் வாவி—அழகிய திரைபொருந்திய கடற்பரப்பைக்கடந்து, கந்தமாதனம் கவின்ற வேலை சேர் செந்தி மா நகர் சென்று புக்கனன்—கந்தமாதனமலை விளங்குகின்ற கடற்கரையையணுகியிருக்கின்ற சிறந்ததிருச்செந்திப்பதியில்வந்து சேர்ந்தார் எ—று.

கரைசேர்ந்து கந்தமாதனமலையைக்கடந்து திருச்செந்திப்பதியில்வந்துசேர்ந்தார் என்க. (௨)

புக்க காலையிற் பொருவி லாற்றலான்
மிக்க சேவகன் மேவல் காணுறாத்
தொக்க பாரிடஞ் சேரமற் காணுறு
மைக்க ருங்கடன் மான வார்த்தவே.

இ—ள்: புக்க காலையில்—அவ்வாறுவந்து சேர்ந்தபொழுது, தொக்க பாரிடம்—கூட்டமாகிய பூதசேனைகள், பொரு இல் ஆற்றலால் மிக்க சேவகன் மேவல் காணுறா-ஒப்பில்லாத வலிமையினாற்சிறந்தவீரவாகுதேவர்வருவதைப்பார்த்து, சேரமன் காணுறும் மை கரும் கடல் மான ஆர்த்த—சந்திரனுதிப்பதைக்கண்ட மிகக்கருமையானநிறத்தையுடைய சமுத்திரத்தைப்போல ஒலித்தன எ—று.

மை கரும்—ஒருபொருட்பன்மொழி. சந்திரனுதிக்குங்காலத்திற் கடலலை மோதிப்பெருகுவதும் மறையுங்காலத்தில் ஒய்ந்துவற்றுவதும் இயல்பென்க. சந்திரனைச்சேய்மையிற்கண்டவுடன் கடல்பெருகியார்த்தல்போல வீரவாகுதேவரதுவரவை அதிகதூரத்திற்கண்டவுடன் பூதர்கள்உவகைமிக்கு ஒலித்தனர் என்பதாம். (௩)

பாரி டத்தொகை பரிக்கு மன்னவர்
சேர வந்துதஞ் செங்கை கூப்பியே
வீர வாகுவை மெய்யு றத்தழீஇ
யார்வ மெய்தினா ரன்பு கூறினார்.

இ—ள்: பாரிட தொகை பரிக்கும் மன்னவர்—பூதசேனைகளைக்காக்கின்ற தலைவர்கள், சேர வந்து—ஒருங்கேவந்து, தம் செம் கை கூப்பி—தங்கள்சிவந்த கைகளைக்குவித்து, வீரவாகுவை மெய் உற தழீஇ—வீரவாகுதேவரைஇறுகத்தழுவி, ஆர்வம் எய்தினார்—அன்புகொண்டு, அன்பு கூறினார்—பிரியவசனங்களைச்சொன்னார்கள் எ—று.

மெய்யுற-இருவர்சரீரமும் ஒன்றோடொன்றுபொருந்த. (௪)

தழுவு வோர்தமைத் தானும் புல்லியே
யிழிஞர் தம்பதிக் கேகும் வெம்பவ
மொழிவ தாயின னுமைக்கண் டேனெனா
முழுவ லன்பினன் முகமன் கூறினான்.

இ—ள்: தழுவுவோர் தமை தானும் புல்லி—வீரவாகுதேவர் தம்மைத்தழுவிய பூதசேனாபதிகளைத் தாமுந்தழுவி, உமை கண்டு—உங்களைக்கண்டதனால், இழிஞர் தம் பதிக்கு ஏகும் வெம் பவம் ஒழிவது ஆயினன் எனா—இழிவையுடைய அசுரர்களது நகரத்திற்குச்சென்ற பாவம்நீங்கப்பெற்றேனென்று, முழுவல் அன்பினன்—பூரணமானஅன்பையுடையவராய், முகமன் கூறினான்—உபசாரவசனங்களைச்சொன்னார் எ—று.

முழுவல் முழுமை. எனா கூறினான் என இயையும். (௫)

விலக்கில் வன்மைகொள் வீர வாகுவை
யிலக்கத் தெண்மரு மெதிர்ந்து மற்றவன்
மலர்க்க ருங்கழல் வணங்கிக் கைதொழ
வலக்க ணீங்குமா றனையர்ப் புல்லினான்.

இ—ள்: விலக்கு இல் வன்மை கொள் வீரவாகுவை—தடுத்தற்கரிய வலிமையையுடைய வீரவாகுதேவரை, இலக்கத்து எண்மரும் எதிர்ந்து—இலக்கத்தெட்டுவீரர்களும்எதிர்ப்பட்டு, அவன் மலர் கரும் கழல் வணங்கி கைதொழ—அவரது மலர்போன்ற பெரியபாதங்களைப்பணிந்து கைகுவித்து நிற்க, அலக்கண் நீங்குமா

று அனையர் புல்லினன்— தம்மைப்பிரிந்தமையாலுண்டானதுன்பம் நீங்கும்படி (வீரவாகுதேவர்) அவர்களைத் தழுவினர் எ—று.

கருமை-ஈண்டுப்பெருமை. (௬)

அமைவில் பாரிடத் தனிக வேந்தருந்
தமர்க ளாயினோர் தாமுஞ் சூழ்வர
விமல னாகியே வீற்றி ருந்திடுங்
குமர நாயகன் கோயின் மேயினன்.

இ—ள்: அமைவு இல் பாரிடத்து அனிக வேந்தரும்—அளவிறந்துநிற்கின்ற பூதசேனையின்தலைவர்களும், தமர்கள் ஆயினோர் தாமும் சூழ்வர—தம்பியர்களாகிய இலக்கத்தெண்மரும் சூழ்ந்துவர, விமலன் ஆகி வீற்றிருந்திடும் குமர நாயகன் கோயில் மேயினன் — மலரகிதராயெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளது திருக்கோயிலையடைந்தார் எ—று. (௭)

விண்டு வானுளோர் விரிஞ்சன் மாதவர்
கொண்ட லூர்பவன் குழுமிப் பாங்குற
வண்டர் நாயக னமருந் தன்மையைக்
கண்டு முந்துகண் களிப்பின் மேயினன்.

இ—ள்: விண்டு விரிஞ்சன் கொண்டல் ஊர்பவன் வானுளோர் மாதவர் குழுமி பாங்கு உற—திருமாலும் பிரமதேவரும் மேகத்தை(வாகனமாகக்கொண்டு) ஊர்ந்துசெல்பவனாகிய இந்திரனும் மற்றையதேவர்களும் சிறந்தமுனிவர்களுஞ் செறிந்துபக்கத்தில்நிற்க, அண்டர்நாயகன் அமரும் தன்மையை கண்டு—தேவநாயகராகிய முருகக்கடவுள் வீற்றிருக்குந்தன்மையைத்தரிசித்து, முந்து கண்களிப்பின் மேயினன்—சிறந்த நேத்திரானந்தத்தில்அமிழ்ந்தினர் எ—று.

விஷ்ணுஎன்னும் வடமொழி விண்டுஎனத்தமிழில்வழங்கிற்று. வியாபகனென்பதுபொருள். விரிஞ்சன்—உலகங்களைப்படைப்பவன். காட்சியால்வருமுவகையைக் கண்களிப்பென்றார். (௮)

உள்ள மென்புட னுருகத் தூயநீர்
வெள்ளங் கண்ணுற விதிர்ப்பு மேவரப்
பொள்ளெ னப்புரம் பொடிப்பச் சூரடும்
வள்ளல் சேவடி வணங்கி னனரோ.

இ—ள்: உள்ளம் என்புடன் உருக—மனமானதுஎலும்புகளுடன் உருக, தூய நீர் வெள்ளம் கண் உற—தூய்மையான ஆனந்தபாஷ்பம் வெள்ளமாகக் கண்களினின்றுசிந்த, விதிர்ப்பு மேவர—நடுக்கமுண்டாக, பொள் என புரம் பொடிப்ப—விரைவாகச்சரீரம்புளகங்கொள்ள, சூர் அடும் வள்ளல் சே அடி வணங்கினன்—சூரபன்மனையழிக்கும் முருகக்கடவுளது சிவந்த திருவடிகளைப்பணிந்தார் எ—று.

அன்பின்பெருக்கத்துடன் கடவுளைவணங்குவார்க்கு இக்குறிகளுளவாமென்க. கடினபதார்த்தமாகிய எலும்பு உருகுதல் கூறப்படவே தசைமுதலியன உருகுதல் கூறாதேயமையும். (௯)

அணங்கு சால்வுறு மந்தண் சேவடி
வணங்கி மும்முறை மகிழ்ச்சி யன்பிவை
யிணங்க வஞ்சலித் தேத்தி நிற்றலுங்
குணங்கண் மேற்படுங் குமரன் கூறுவான்.

இ—ள்: அணங்கு சால்வுறும் அம் தண் சே அடி மும்முறை வணங்கி—தெய்வத்தன்மைமிகுந்த அழகிய குளிர்ந்தசிவந்தபாதங்களை மூன்றுமுறைபணிந்து, மகிழ்ச்சி அன்பு இவை இணங்க அஞ்சலித்து ஏத்தி நிற்றலும்—சந்தோஷமும் பத்

தியுமாகிய இவைகள்பொருந்தக்கைகுவித்துத் துதித்துநிற்க, குணங்கள் மேற்படும் குமரன் கூறுவான்—குணங்களுக்குஅதீதராய்நிற்கின்ற முருகக்கடவுள் (அவரை நோக்கித்) திருவாய்மலர்வார் எ—று.

பணிந்தார்க்குவிரும்பியபேற்றைக்கொடுப்பனவாதலின் 'அணங்குசால்வுறும்-அடி' என்றார். குணம் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்பன. அவை நம்மனோரதுமனத்தைத்தம்வயப்படுத்திக் காலந்தோறும்வேற்றுமைப்படுத்தல்போலக் கடவுளைவேற்றுமைப்படுத்தாமையின் 'குணங்கண்மேற்படுங்குமரன்' என்றார்.()

சுரரை வாட்டுறுஞ் சூரன் முன்புபோய்
விரைவி னன்மொழி விளம்ப மற்றவ
னுரைசெய் திட்டது மொல்லை மீண்டது
மரபி னிவ்விடை வகுத்தி யாலென்றான்.

இ—ள்: சுரரை வாட்டுறும் சூரன் முன்பு போய்—தேவர்களைவருத்துகின்ற சூரபன்மனுக்குமுன்போய், விரைவில் நம் மொழி விளம்ப—விரைவாக யாங்கூறிய கட்டளையைக்கூற, அவன் உரைசெய்திட்டதும்— அச்சூரபன்மன் அதற்குக்கூறிய எதிர்மொழியையும், ஒல்லை மீண்டதும்—(பின்) விரைவாகத்திரும்பி வந்தமையையும், மரபின் இவ்விடை வகுத்தி என்றான்— முறைப்படி இவ்விடத்திற்சொல்வாயாகவென்று திருவாய்மலர்ந்தார் எ—று.

ஆதியந்தமாகவென்பார் 'மரபின்' என்றார். (கக)

வீரன் கூறுவான் விமல நின்மொழி
சூரன் முன்புபோய்ச் சொல்ல விண்ணுளோ
ராரி ருஞ்சிறை யதனை வீடலே
காரி யம்மெனக் கருத்திற் கொண்டிலன்.

இ—ள்: வீரன் கூறுவான்—(அவ்வாறு முருகவேள்திருவாய்மலர) வீரவாகுதேவர் சொல்வார், விமல—மலரகிதரே!, சூரன் முன்பு போய் நின் மொழி சொல்ல— சூரபன்மனுக்குமுன் சென்று தேவரீர்கூறியகட்டளையை அடியேன் கூற, விண் உளோர் ஆர் இரும் சிறை அதனை வீடலே காரியம் என கருத்தில் கொண்டிலன் — தேவர்களுக்கமைந்திருக்கின்ற பெரிய சிறையைவிடுதலே செயற்பாலதென்று மனத்திற்றெளிந்திலான் எ—று.

விடல் என்பது நீட்டல்விகாரமாயிற்று. (கஉ)

கெடல ருஞ்சுரர் கிளையை வெஞ்சிறை
விடுகி லேனெனு வெகுண்டு கூறினு
னடிக ளன்னதா லாண்டு நீங்கியே
கடிது வந்தனன் கரும மீதென்றான்.

இ—ள்: அடிகள்— கடவுளே! கெடல் அரும் சுரர் கிளையை வெம் சிறை விடுகிலேன் எனு வெகுண்டு கூறினான்— கெடுதலில்லாத தேவர்கூட்டத்தாரைக் கொடியசிறையினின்றுவிடமாட்டேனென்று கோபித்துச்சொன்னான், அன்னதால்— அதனால், ஆண்டு நீங்கி கடிது வந்தனன்— அவ்விடத்தினின்றுநீங்கி விரைவில்வந்தேன், கருமம் ஈது என்றான்— நிகழ்ந்தகாரியமிதுவென்று (வீரவாகுதேவர்) விண்ணப்பஞ்செய்தார் எ—று.

அமிர்தமுண்டமையால் அழியாதுவாழ்பவராதலின் 'கெடலருஞ்சுரர்' என்றார். (கங)

என்ற காலையின் யாண்டு மாகியே
நின்று முற்றொருங் குணர்ந்த நீர்மையா

னுன்றன் செய்கையு ளொன்றுஞ்சொற்றிலை
நன்று மற்றது நவிறி யாலென்றான்.

இ—ள்: என்றகாலையின்— என்று வீரவாகுதேவர்கூறியபொழுது, யாண்டும் ஆகி நின்று முற்று ஒருங்கு உணர்ந்த நீர்மையான்— எங்கும்வியாபித்துநின்று எல்லாநிகழ்ச்சிகளையும் ஒருங்கேயறிந்ததன்மையையுடைய முருகவேள், உன் தன் செய்கையுள் ஒன்றும் சொற்றிலை— அன்பனே! நீ அந்நகரிற்செய்தசெயல்களுள் ஒன்றையாயினுங்கூறினாயல்லை, நன்று அது நவிறி—நன்றாக அதனைச்சொல்வாய், என்றான்-என்று அருளிச்செய்தார் எ-று.

மகேந்திரத்தினிகழ்ந்தசெயல்களெல்லாவற்றையுந் தமது கடவுட்டன்மையாலறிந்துளாரென்பதுபோதா 'யாண்டுமாகிநின்றுமுற்றொருங்குணர்ந்தநீர்மையான்' எனவும், விரிவாகவென்பார் 'நன்று' எனவும் கூறினார். (௧௪)

தொட்டக்க முற்றுவாழ் சூரன் மாநக
ரடுத்த காலையி னகன்ற வேலையிற்
றடுத்து ளோரைநின் சரண வன்மையாற்
படுத்து வந்தனன் பான்மை யீதென்றான்.

இ—ள்: தொடக்கம் உற்று வாழ் சூரன் மா நகர் அடுத்தகாலையின்—முதன்மைபொருந்தி வாழ்ந்திருக்கின்ற சூரபன்மனது பெரிய மகேந்திரபுரத்திற் போனபொழுதும், அகன்ற வேலையில்-மீண்டபொழுதும், தடுத்துளோரை—தடைசெய்தவர்களை, நின் சரணவன்மையால் படுத்து வந்தனன்—தேவரீரது திருவடிகளின் வலிமையினாற் கொன்றுவந்தேன், பான்மை ஈது—யான்செய்த செயலிதுவே, என்றான்—என்று (வீரவாகுதேவர்) விண்ணப்பஞ்செய்தார் எ—று.

ஈதே என்பதில் தேற்றேகாரந்தொக்கது. தேவரீருடைய திருவடிகளை வழிபாடுசெய்து பெற்றவலிமையாலென்பார் 'நின்சரணவன்மையால்' என்றார். நகரழித்தது முதலியவற்றைக்கூறுதல் தற்புகழ்ச்சியாமென்றுவிடுத்தார். (௧௫)

அருந்தி றற்புய னனைய செப்பலு
மிருந்த கந்தவே ளிகலி னோர்களால்
வருந்தி னாய்கொலோ மன்ற வென்றுதன்
றிருந்து பேரருள் செய்தன் மேயினான்.

இ—ள்: அரும் திறல் புயன் அனைய செப்பலும்—வீரவாகுதேவர் அவ்வாசகங்களை விண்ணப்பஞ்செய்ய, இருந்த கந்தவேள்—செவிசாத்தியிருந்த முருகக்கடவுள், இகலினோர்களால் மன்ற வருந்தினாய் கொல் என்று—பகைவர்களால் மிகவருத்தமடைந்தாய் போலுமென்று திருவாய்மலர்ந்து, தன் திருந்து பேர் அருள் செய்தல் மேயினான்—தம்முடைய சிறந்த பெருங்கருணையைப்பாலித்தார் எ—று.

அருந்திறற்புயன்-சிறந்தவீரம்பொருந்திய புயத்தையுடையான். (௧௬)

அங்கவ் வெல்லையி னாயி ரம்பெயர்ச்
செங்கண் மாயவன் றிசைமு கத்தவன்
மங்குன் மேலவன் வதன நோக்கியே
யெங்க ணாயக னினைய கூறுவான்.

இ—ள்: அவ் எல்லையின்—அப்பொழுது, எங்கள் நாயகன்—எங்கள் கடவுளாகிய முருகவேள், ஆயிரம் பெயர் செம் கண் மாயவன் திசைமுகத்தவன் மங்குல் மேலவன் வதனம் நோக்கி-ஆயிரநாமங்களைப்பெற்ற சிவந்தகண்களையுடைய திருமாலினையும் நான்குமுகங்களையுடைய பிரமதேவரையும் மேகத்தின்மேற்செல்கி

ன்ற இந்திரனதும் முகங்களைப்பார்த்து, இனைய கூறுவான்— இவற்றைத்திரு வாய்மலர்வார் எ—று. (கஎ)

தேவ ரைச்செயுஞ் சிறைவி டுத்துநீ
மேவு நன்கெனு வெய்ய சூர னுக்
கேவு தூதைவிட் டியம்பு வித்தனம்
பாவி யன்னது பயனென் றுன்னலான்.

இ—ள்: தேவரை செயும் சிறைவிடுத்து நீ நன்கு மேவு எனு—தேவர்களைவைத்தசிறையினின்றும் நீக்கி நீ நன்றாகவாழ்ந்திருப்பாயென்று, வெய்ய சூரனுக்கு—கொடியசூரபன்மனுக்கு, ஏவு தூதை விட்டு இயம்புவித்தனம்—அனுப்பப்படுகின்ற தூதவனையேவிச்சொல்லித்தேம், பாவி அன்னது பயன் என்று உன்னலான்—பாவியாகியஅவன் அவ்வசனத்தைப் பயனுள்ளதாக நினைத்திலான் எ—று.

அவ்வசனத்தைப்பொருட்படுத்தாது பழித்தானென்பதாம். (௧அ)

வீத லேயவன் விதிய தாதலிற்
றீதில் விண்ணவர் சிறைவி டோமென
வோதி னனவ னுயர்வு நீக்குவான்
போது நாளையா மெனப்பு கன்றனன்.

இ—ள்: வீவதே அவன் விதியது ஆதலின்—இறப்பதேஅவனுடையவிதியாயிருத்தலால், தீது இல் விண்ணவர் சிறை விடோம் என ஓதினன்—குற்றமற்ற தேவர்களது சிறையைவிடமாட்டோமென்று மறுத்துக்கூறினன், (ஆதலின்), அவன் உயர்வு நீக்குவான்—அந்தச்சூரபன்மனுடைய மேன்மையை நீக்கும்பொருட்டு, யாம் நாளை போதும்—நாம் நாளைக்குபுறப்படுவோம். என புகன்றனன்— என்றுதிருவாய்மலர்ந்தார் எ—று.

தேவர்சிறையைவிடமறுத்தமையால் இனிப் போர்செய்துகொல்வோமென்றார் என்பதாம். உயர்வு-இறுமாப்பு வலி வீரம் வளம் ஆயுள்முதலியன. அது பகுதிப்பொருள்விதி. (௧௯)

ஆறு மாமுகத் தைய னிவ்வகை
கூறக் கேட்டுளோர் கொடிய சூர்மிசைச்
சேறு மென்றசொற் றெளிவி னந்துயர்
மாறிற் றென்றனர் மகிழ்ச்சி யெய்தினர்.

இ—ள்: ஆறு மா முகத்து ஐயன் இவ்வகை கூற கேட்டுளோர்—சிறந்த ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள் இவ்வாறுதிருவாய்மலரக்கேட்டதேவர்கள், கொடிய சூர் மிசை சேறும் என்ற சொல் தெளிவில்—கொடியவனாகியசூரபன்மன்மீது போர்செய்யப்புகுவோமென்று தேவரீர்திருவாய்மலர்ந்தவசனத்தின்தேற்றத்தால், நம் துயர் மாறிற்று என்றனர்- அடியேங்களதுதுன்பம் நீங்கியதென்றுகூறி, மகிழ்ச்சி எய்தினர்-சந்தோஷங்கொண்டார்கள் எ—று.

திருவாக்குக்கிடைத்தவுடன் துயர்மாறிற்றெனவே, முருகவேள் கொடுத்த வாக்கைத்தவறாதுமுடிப்பரொன்னும் நம்பிக்கை அவர்களிடம் நிறைந்திருந்ததென்பதுபுலப்பட்டது. (௨௦)

ஆன வத்துணை யாடன் மொய்ம்பினன்
றான வப்பதிச் சயந்த னுற்றது
மேனைச் செய்கையு மெடுத்துக் கூறியே
வான வர்க்கிறை மனத்தைத் தேற்றினன்.

இ—ள்: ஆன அ துணை—அவ்வாறுநிகழ்ந்த அச்சமயத்தில், ஆடல் மொய்ம்பினன்—வீரவாகுதேவர், தானவ பதி சயந்தன் உற்றதும் ஏனை செய்கையும் எ

டுத்துக்கூறி—அசுரர் வாழுகின்றமகேந்திரநகரத்திற் சயந்தன்சிறையிருந்ததையும் பிறசெயல்களையும் எடுத்துச்சொல்லி, வானவர்க்கு இறை மனத்தை தேற்றினன்—தேவர்க்கரசனாகிய இந்திரனது மனத்தைத்தெளிவித்தார் எ—று.

ஏனைச்செய்கையென்றது தாமுரையாடியதும் சயந்தன் தங்கள்செயல்களைப்பிதாவுக்குக்கூறும்படிவேண்டியதும் முதலாயின. புத்லவன்முதலாயினோர்தன்னைப்பிரிந்தமைபற்றியும் சிறையிருப்பதுபற்றியும் மிக்ககவலைகொண்டிருந்தானாதலின் அக்கவலைநீங்குதற்கேற்ற வசனங்களையியைத்துக்கூறித்தெருட்டினரென்க. (௨௧)

சீரு லாமகேந் திரபு ரத்தினும்
வீர வாகுமீண் டதுவி ளம்பினு
மார னூர்க்கட லலைப்ப வாண்டுறுஞ்
சூர னுற்றதும் பிறவுஞ் சொல்லுவாம்.

இ—ள்: வீரவாகு சீர் உலாம் மகேந்திரபுரத்தினும் மீண்டது விளம்பினும்— வீரவாகுதேவர் சிறப்புப்பொருந்திய மகேந்திரநகரத்தினின்று திரும்பியசெயலை (இதுகாறும்) கூறினோம், ஆர் அனூர் கடல் அலைப்ப ஆண்டு உறும் சூரன் உற்றதும் பிறவும் சொல்லுவாம்—பெருந்துன்பமாகியகடல் வருத்த அந்நகரத்திலிருந்த சூரபன்மன்செய்தசெயல்களையும் பிறவற்றையும்இனிச்சொல்லுவோம் எ—று.

ஆரனூர்-நிறைந்ததுன்பம். உற்றது: மனத்தெளிவெய்தியிருந்தது நகர்செய்தது முதலியன. பிற அதன்மேனிகழ்ந்த அமைச்சியல்முதலியன. (௨௨)

வீரவாகுமீட்சிப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௩௯௩.

சூரனகர்புரிபடலம்.

சூரபன்மன் வீரவாகுதேவராலழிக்கப்பட்ட மகேந்திரநகரைப்புதுப்பித்தமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சூரபன்மன் தன்மகனாகிய வச்சிரவாகுஇறந்தமையைக்கேள்வியுற்றுத் துன்பமுற்று அமைச்சனாகியதருமகோபனாற்றெளிவுபெற்று, இவ்வண்டத்திலிருக்கின்ற பிரமதேவர்முருகக்கடவுளுடனிருத்தலால் மற்றையண்டத்திலிருக்கின்றபிரமதேவரையழைப்பித்து அழிந்தநகரைத்திருத்துவித்து முன்போலரசிருந்தனன் என்பதாம்.

ஊக வான்படை யுலப்ப வச்சிர
வாகு மாண்டதும் வாகை மொய்ம்பினோ
னேகுந் தன்மையு மேவற் றூதுவர்
சோக மோடுபோய்ச் சூர்முன் கூறினார்.

இ—ள்: ஏவல் தூதுவர்—ஏவலாளராகிய தூதர்கள், சோகமோடு சூர் முன் போய்—மனத்துக்கத்துடன் சூரபன்மனுக்குமுன்சென்று, ஊக வான் படை உலப்ப வச்சிரவாகு மாண்டதும்—அணிவகுப்பையுடைய பெருந்தொகையான சேனைகள் மாள வச்சிரவாகுஇறந்ததையும், வாகை மொய்ம்பினன் ஏகுந்தன்மையும்—வீரவாகுதேவர் மீண்டுசெல்லுந்தன்மையையும், கூறினார்— தெரிவித்தார்கள் எ—று. (௧)

ஈரைஞ் சென்னிசே ரிளைய கான்முளை
வீரஞ் சிந்தியே விளிந்த வாற்றினைச்
சூரன் கேட்டலுந் துளங்கித் துன்பெனும்
வாரி யுள்ளுற மயங்கி வீழ்ந்தனன்.

இ—ள்: சூரன்—சூரபன்மன், ஈர் ஐஞ் சென்னி சேர் இளைய கான்முளை வீரம் சிந்தி விளிந்தவாற்றினை கேட்டலும்—பத்துத்தலைகள்பொருந்திய இளையபுதல்வனாகியவச்சிரவாகு வீரங்குன்றியிறந்ததன்மையைக் கேட்டவுடன், துளங்கி—நடுங்கி, துன்பு எனும் வாரி உள் உற மயங்கி வீழ்ந்தனன்—துன்பமாகியகடல் மனத்திற்பொருந்த மயங்கிவிழுந்தான் எ—று.

துன்பெனும்வாரி-உருவகம். (உ)

வேறு.

கண்ணிடை நெடும்புனல் கால மைந்தன்மே
லுண்ணிக ழன்புசென் றுயிரை யீர்ந்திடத்
துண்ணென வுயிர்ப்பெனும் புகையுஞ் சுற்றிட
வெண்ணருஞ் செல்லல்கொண் டிரங்கி யேங்கினான்.

இ—ள்: கண் இடை நெடும் புனல் கால—கண்களினின்றும் மிகுந்த துக்கநீர்வடிய, மைந்தன் மேல் உள் நிகழ் அன்பு சென்று உயிரை ஈர்ந்திட—புதல்வனிடத்து மனத்திற்பொருந்தியஅன்பானதுபுகுந்து உயிரைவதைக்க, உயிர்ப்பு எனும் புகையும் துண் என சுற்றிட—பெருமூச்சாகியபுகையும் விரைவில் வந்துசூழ, எண்ணரும் செல்லல் கொண்டு இரங்கி ஏங்கினான்—மதித்தற்கரிய துக்கத்தைக்கொண்டு வருந்தி ஏக்கங்கொண்டான் எ—று.

உம்மை எச்சம். அன்பின்பெருக்கத்திற்கேற்றவாறு துக்கம்பெருகி வாதைசெய்தலால் 'உண்ணிகழன்புசென்றுயிரையீர்ந்திட' எனவும், அளவிறந்தவென்பார் 'எண்ணரும்' எனவும் கூறினார். (௩)

ஏங்கினன் புலம்பலு மினைய வெய்யசூர்
பாங்கமர் தமர்களும் பரிச னத்தருந்
தீங்குசெ யரக்கருந் தெரிவை மார்களு
நீங்கற வழுதனர் நெடுங்க ணீருக.

இ—ள்: ஏங்கினன் புலம்பலும்—ஏக்கங்கொண்டுபுலம்ப, இனைய வெய்ய சூர் பாங்கு அமர் தமர்களும் பரிசனத்தரும் தீங்குசெய் அரக்கரும் தெரிவைமார்களும்—இந்தக்கொடியசூரபன்மனது பக்கத்திலிருந்த சுற்றத்தவர்களும் பரிவாரங்களும் தீமையைச்செய்கின்ற அரக்கர்களும் பெண்களும், நெடும் கண் நீர் உக—நெடியகண்களினின்றும் நீர்சிந்த, நீங்கற அழுதனர்—ஓயாமலழுதார்கள் எ—று. (௪)

பழிதவிர் கற்புடைப் பதுமை தன்மக
னொழிவுறு தன்மையை யோர்ந்து மாமலர்க்
குழலவிழ்ந் தலமரக் கொங்கை மேற்புடைத்
தழுதனள் வீழ்ந்தனண் மறிக்கு மங்கையாள்.

இ—ள்: பழி தவிர் கற்பு உடை பதுமை—குற்றமற்றகற்பையுடையபதுமகோமளையென்பாள், தன் மகன் ஒழிவுறு தன்மையை ஓர்ந்து—தன்புதல்வனிறந்ததன்மையயறிந்து, மா மலர் குழல் அவிழ்ந்து அலமர—சிறந்தமலர்களையணிந்த கூந்தல் அவிழ்ந்துஅலைய, கொங்கைமேல் புடைத்து—தனங்களின்மேலடித்து, மறிக்கும் அங்கையாள்—உதறுகின்றஅங்கைகளையுடையவளாய், அழுதனள் வீழ்ந்தனள்—அழுதுவிழுந்தாள் எ—று.

பிறஆடவாதுமுகத்தையும்பாராத உத்தமக்கற்பென்பார் 'பழிதவிர்கற்பு' எனவும், சுகந்தமலர்களென்பார் 'மாமலர்' எனவும் கூறினார். (௫)

தொல்லிய லிழுக்கிய சூர னென்பவன்
புல்லிய பின்முறைப் புணர்வின் மாதருஞ்
சில்லியற் கூந்தறாழ் சேடி மார்களு
மெல்லவ ருந்தழீ இ யிரங்கன் மேயினார்.

இ—ள்: தொல் இயல் இழுக்கிய சூரன் என்பவன் பின்முறை புணர்வின் புல்லிய மாதரும்—தொன்றுதொட்டுவழங்குமொழுக்கத்தினின்றும் வழுவிய சூரபன்மனானவன் பின்பு மணஞ்செய்துகூடிய பெண்களும், சில் இயல் கூந்தல் தாழ் சேடிமார்களும்— பொன்வட்டத்தகட்டணியையணிந்த கூந்தல் அவிழ்ந்து தூங்கப்பெற்ற தோழியர்களும், எல்லவரும் தழீஇ- மற்றும் பெண்களெல்லோருங்கூடி, இரங்கல் மேயினார்—அழத்தொடங்கினார்கள் எ—று.

பின்முறை-முதன்மனைவியைமணந்தபின். (௬)

களமெழு மிசையொலி கடிநல் யாழொலி
துளையொலி வயிரொலி தூரி யத்தொலி
யளமரு மொழியொலி யடங்கி யப்பெரு
வளநகர் புலம்பொலி மயங்கிற் றென்பவே.

இ—ள்: களம் எழும் இசை ஒலி—மிடற்றினின்றுதோன்றுகின்ற கீதங்களினோசையும், கடி நல் யாழ் ஒலி—சிறந்தநல்லயாழ்களினின்றுண்டாகின்ற இசையும், துளை ஒலி—குழன்முதலியதுளைக்கருவிகளினோசையும், வயிர் ஒலி—கொம்புகளினோசையும், தூரியத்து ஒலி—வாத்தியங்களினோசையும், அளமரும் மொழி ஒலி அடங்கி—வழங்கப்படுகின்ற வார்த்தைகளினோசையும் (ஆகிய இவையெல்லாம்) அடங்கப்பெற்று, அ பெரு வள நகர்—அந்தச்சிறந்தவளப்பம்பொருந்திய மகேந்திரநகரில், புலம்பொலி மயங்கிற்று— அழுகையோசைமிகுந்தது எ—று.

அலமரும் என்பது போலியாயிற்று. (௭)

அன்னது போழ்தினி லறத்தைக் காய்தரு
துன்னெறி மந்திரி சூர பன்மனா
மன்னவன் முன்னுற வந்து கைதொழு
தின்னன கேண்மென விசைத்தன் மேயினான்.

இ—ள்: அன்னது போழ்தினில்—அப்பொழுது, அறத்தை காய்தரு துர்நெறி மந்திரி—தருமநெறியையழித்த துன்மார்க்கத்தையுடைய மந்திரியானவன், சூரபன்மன் ஆம் மன்னவன் முன்னுற வந்து—சூரபன்மனாகிய அரசனுக்குமுன்னேவந்து, கைதொழுது—கைகுவித்து, இன்னன கேண்ம் என—இவ்வசனங்களைக்கேட்பீராகவென்று, இசைத்தல் மேயினான்-சொல்லத்தொடங்கினான் எ-று.

துர் நெறி என்பது துன்னெறியெனத்திரிந்தது. கேளுமென்னும் முற்றுஉகாரவுயிர்கெட்டு ளகரம் ணகரமாய்த்திரிந்துநின்றது. அறத்தைக்காய்தருமந்திரி-தருமகோபன். (௮)

மெய்ப்புவி யண்டங்கள் பரித்த மேன்மையை
யொப்பருந் திருவினை யுலப்பி லாயுளை
செப்பருந் திறலினை சிறந்த சீர்த்தியை
யிப்பரி சழுங்குத லியற்கை யாகுமோ.

இ—ள்: மெய் புவி அண்டங்கள் பரித்த மேன்மையை—சிறந்த பூமியின்கூறான பல அண்டங்களை ஆளுகின்ற மேன்மையையுடையீர், ஒப்பு அரும் திருவினை—ஒப்பில்லாத செல்வத்தையுடையீர், உலப்பு இல் ஆயுளை—அழியாதவாழ்நா

ளையுடையீர், செப்பு அரும் திறலினை— சொல்லிமுடித்தற்கரிய வலிமையையுடையீர், சிறந்த சீர்த்தியை—சிறந்த கீர்த்தியையுடையீர், இ பரிசு அழுங்குதல் இயற்கை ஆகுமோ—இப்படிவருந்துதல் தகுதியாமோ? எ--று.

ஓ-எதிர்மறை. மேன்மையை முதலியன முன்னிலைவினையாலணையும்பெயர்சள். அற்பர்களே இவ்வாறுவருந்தத்தக்கார் என்பதாம். (௯)

தெண்டிரை நேமிவான் செறிந்து கொள்ளினு
மண்டம தழியினு மனைத்து மாயினும்
விண்டிட லின்றிவாழ் வீர நீமனங்
கொண்டிடு திண்மையுங் குன்றற் பாலதோ.

இ—ள்: தெள் திரை நேமி வான் செறிந்து கொள்ளினும்—தெளிந்த திரை பொருந்திய கடல் ஆகாயம்வரைபெருகி மூடிக்கொண்டாலும், அண்டமது அழியினும்—அண்டங்களழிந்தாலும், அனைத்தும் மாயினும்— எல்லாப்பொருள்களுமழிந்தாலும், விண்டிடல் இன்றி வாழ் வீர— அழியாமல்வாழ்கின்றவீரனே!, நீ மனம் கொண்டிடு திண்மையும் குன்றற்பாலதோ— நீர் மனத்திற்கொண்டதைரியமுங்குறையத்தக்கதா? (அன்றே) எ—று.

உம்மை முன்னையனசிறப்பு, பின்னையது ஒழிந்தார்திண்மைகுன்றுதலைத்தழீஇநிற்றலின் எச்சத்தின்பாற்படும். எத்துணையிடர்கள்நேரினும் உமதுதைரியங்குன்றற்பாற்றன்று என்பதாம். (௧0)

ஏவரும் வியத்தகு மிறைவ நீயிவ
ணோவென வரற்றியே யுயங்குற் றுயெனின்
மூவரு நகைப்பர்கண் முன்ன மேவல்செய்
தேவரு நகைப்பர்கள் புகழுந் தேயுமால்.

இ—ள்: ஏவரும் வியத்தகும் இறைவ—எத்தகைமேம்பாடுடையாராலும் புகழத்தகுந்தஅரசனே!, நீ இவண் ஓ என அரற்றி உயங்குற்றுய் எனின்—நீர் இவ்விடத்தில் ஓவென்னுங்குறிப்புடன் புலம்பிச்சோர்வீரானல், மூவரும் நகைப்பர்கள்—மும்மூர்த்திகளுஞ்சிரிப்பார்கள், முன்னம் ஏவல் செய் தேவரும் நகைப்பர்கள்—முன்னேயேவற்றொழில்களைச்செய்துவந்த தேவர்களுஞ்சிரிப்பார்கள், புகழும் தேயும்—உமதுகீர்த்தியுங்குன்றும் எ—று.

உம்மை-ஏவருமென்பதில் உயர்வு; மூவருமென்பதில் முற்றுமெடச்சம்; தேவருமென்பதில் இழிவோடெச்சம்; புகழுமென்பதில் எச்சம். ஓ-இரக்கக்குறிப்பு. அரசர்க்கரசனாகியநீர் அழுதுகொண்டிருப்பது பழிப்புக்கிடமானகாரியம் என்பதாம். (௧௧)

பூதர்தம் படையல புராரி நல்கிய
காதல னேயல கழற விட்டதோர்
தூதுவன் செய்தபுன் றொழிலுக் காற்றலை
பேதுற லாகுமோ பெருமைக் கீறிலாய்.

இ—ள்: பூதர் தம் படை அல—பூதசேனைகளல்ல, புராரி நல்கிய காதலன் அல—சிவபிரானருளியபாலகனுமல்லன், கழற விட்டது ஓர் தூதுவன் செய்த புன் தொழிலுக்கு— தன்கருத்தைத்தெரிவிக்கும்படி முருகவேளாலனுப்பப்பட்ட ஒரு தூதன் செய்த எளியதொழிலுக்காக, பெருமைக்கு ஈறு இலாய்—அளவிறந்தபெருமையையுடையீர், ஆற்றலை பேதுறல் ஆகுமோ— சகிக்கமுடியாமல்வருந்துதல் தக்கதா (தக்கதன்றே) எ—று.

ஈறிலாய் முன்னிலைக்குறிப்புவினையாலணையும்பெயர். பூதர்படையுஞ்சிவகுமாரனுமல்லாத தூதுவனென இயைத்துரைக்க. அற்பன்செய்தவெற்றிக்கழுவது பெருமைக்குறைவாம் என்பதாம். (௧௨)

தந்தையர் துஞ்சினுந் தம்முன் பின்னவர்
மைந்தர்க டுஞ்சினு மற்றுஞ் சார்ந்தவர்
தந்தொகை துஞ்சினுஞ் சயத்தின் மேலையோர்
சிந்தைகொள் வன்மையிற் சிறிதுந் தேயுமோ.

இ—ள்: தந்தையர் துஞ்சினும்—பிதாமாரிறந்தாலும், தம் முன் பின்னவர் மைந்தர்கள் துஞ்சினும்— தமையன்மாருந் தம்பிமாரும் புத்திரர்களுமிறந்தாலும், மற்றும் சார்ந்தவர் தம் தொகை துஞ்சினும்- மற்றும் இனத்தார்கூட்டம் அழிந்தாலும், சயத்தின் மேலையோர் சிந்தை கொள் வன்மையில் சிறிதும் தேயுமோ- வெற்றியினாற்சிறந்தவீரர்களதுமனம் கொண்டிருக்கின்றதைரியத்திற் சிறிதாயினும் குன்றப்பெறுமா? எ—று.

உம்மை முன்னையன சிறப்பு; பின்னையது இழிவு. சுத்தவீரர்கள் போரிலிறந்தவர்களைக்குறித்துச் சிறிதுந்தைரியம்நீங்கப்பெறார் என்பதாம். (௧௩)

மேதகு பெருந்திறல் வீரர் தம்மையு
மாதரும் வெல்வரான் மாயு மூழ்வரி
னாதலி னின்மகற் காயுள் குன்றலிற்
றூதனு மட்டன னாகித் தோன்றினான்.

இ—ள்: மாயும் ஊழ் வரின்—இறக்கும்விதியணுகினால், மேதகு பெரும் திறல் வீரர் தம்மையும் மாதரும் வெல்வர்— சிறந்த பெருவலியையுடைய வீரர்களைத்தானும் பெண்களும் வெல்வார்கள், ஆதலின்—ஆதலால், நின் மகற்கு ஆயுள் குன்றலில் தூதனும் அட்டனன் ஆகி தோன்றினான்— உம்முடைய புதல்வனுக்கு வாணாள்முடிந்தமையால் தூதனும் அழித்தவனாக விளங்கினான் எ—று.

உம்மை-முன்னையது உயர்வு; பின்னையன இழிவு. ஆதலின் தோன்றினான் எனஇயையும். உமது புதல்வனைக்கொன்றதனால் தூதனை வீரனாகமதித்தல் தவறு என்பதாம். (௧௪)

வெவ்விய வொன்னலர் வினையும் வன்மையுங்
கைவரு நெல்லியங் கனியி னாடியே
செய்வகை தேற்றினஞ் செய்க லாதிவ
ணைவது மாண்மையி னலத்திற் காகுமோ.

இ—ள்; வெவ்விய ஒன்னலர் வினையும் வன்மையும்— கொடிய பகைவர்களுடைய செயல்களையும் வலிமையையும், கை வரு நெல்லியம் கனியின் நாடி— அகங்கையிற்பொருந்திய தேவநெல்லிக்கனியிற்பார்ப்பதுபோலப்பார்த்து, செய்வகை தேற்றினம் செய்கலாது—செய்யவேண்டியகாரியத்தைத்தெளிந்துசெய்யாமல், இவண் நைவதும்— இவ்விடத்தில் வருந்துவதும், ஆண்மையின் நலத்திற்கு ஆகுமோ—ஆண்மையின்சிறப்பிற்குத்தக்கதா? (அன்றே) எ—று.

பின்னைய உம்மை இழிவு. பகைவராலிடர்நேர்ந்தவழி அவரது தொழிலூக்கத்தையும் வலியையும் அறிந்து வெல்லமுயல்வதன்றி, இப்படித்துன்பப்பட்டுச் சோர்ந்திருத்தல்தகாது என்பதாம். வன்மை-மெய்வலியும் படைவலியுமாம். ஆழ்ந்தபுத்தியாலாராய்ந்தென்பான் ‘கைவருநெல்லியங்கனியினாடி’ என்றான். தேவநெல்லிக்கனியைக்கையில்வைத்திருப்பார் ஊன்றிநோக்கியவழி எல்லாப்பொருள்களையுங்காண்பரென்க. (௧௫)

வரங்களு மதுகையும் வரம்பின் றெய்தியே
யுரங்கிளர் சூரனென் றொருபேர் பெற்றநீ
தரங்கம தடைவதுந் தலைமைக் கேற்பதோ
விரங்கலை யிரங்கலை யென்று தேற்றினான்.

இ—ள்: வரங்களும் மதுகையும் வரம்பு இன்று எய்தி உரம் கிளர் சூரன் என்று ஒரு பேர் பெற்ற நீ—வரங்களையும் வலிமையையும் அளவில்லாமற்பெற்றுத் தைரியம்விளங்குகின்ற சூரனென்னுமொருபெயரைக்கொண்டிருக்கின்ற நீர், தரங்கமது அடைவதும் தலைமைக்கு எற்பதோ— துன்பப்படுவதும் முதன்மைக்கி யைவதாமோ?, இரங்கலை இரங்கலை—வருந்தாதீர் வருந்தாதீர், என்று தேற்றினன்—என்று தெளிவித்தான் எ—று.

பின்னைய உம்மை எச்சம். உரங்கிளர் பேர் என இயையும். ஓ-எதிர்மறை. சிறந்தபெயரும் பெயருக்கேற்றதகுதியுமுடையராகியநீர் தகுதியில்லார்போற்கலங்குதல் கூடாது என்பது கருத்து. (௧௬)

மேற்றிக ழறத்தினை வெகுளு நாமத்தான்
றேற்றலு மவுணர்கோன் றெளிவு பெற்றெழீஇ
யாற்றருந் துயரினை யடக்கித் தன்பணிக்
கூற்றிய வுழையரை நோக்கிக் கூறுவான்.

இ—ள்: மேல் திகழ் அறத்தினை வெகுளும் நாமத்தான் தேற்றலும்— தருமகோபன் இவ்வாறுகூறித்தெளிவிக்க, அவுணர்கோன்—சூரபன்மன், தெளிவு பெற்று எழீஇ—மனத்தெளிவுகொண்டு எழும்பி, ஆற்ற அரும் துயரினை அடக்கி—சகித்தற்கரியதுன்பத்தை ஒருவாறு அடக்கி, தன் பணி கூற்று இயல் உழையரை நோக்கி—தன்னுடைய ஏவற்கட்டளையின்படியொழுகுகின்ற பரிசனரைப்பார்த்து, கூறுவான்—சொல்வான் எ—று.

மேற்றிகழறத்தினைவெகுளுநாமத்தான்-மேலாகவிளங்குகின்ற தருமத்தைக் கோபித்தவனென்னும் பொருளமைந்தபெயரையுடையான். ஆற்றவென்பதில் அகரந்தொக்கது. (௧௭)

சேயுயிர் வௌவியே சிறந்த விந்நகர்
மாய்வது புணர்த்திடு வலிய தூதுவன்
போயது தெரிந்திரோ புகலக் கேட்டிரோ
நீயிர்கள் வாய்மையை நிகழ்த்து மென்னவே.

இ—ள்: சேய் உயிர் வௌவி சிறந்த இ நகர் மாய்வது புணர்த்திடு வலிய தூதுவன்—என்மகனுடைய உயிரைக்கவர்ந்து சிறந்த இந்நகரமழியும்படிசெய்த வலியவனாகிய தூதன், போயது தெரிந்திரோ— போனவிடத்தைக்கண்டீர்களா?, புகல கேட்டிரோ-(கண்டிலீரேல்)யாராயினுஞ்சொல்லக்கேள்விப்பட்டீர்களா?, நீயிர்கள் வாய்மையை நிகழ்த்தும்—நீங்கள் உண்மையைச்சொல்லுங்கள், என்ன—என்றுவினவ எ—று. (௧௮)

துப்புட னிவ்வழி தூதிற் சென்றுளா
னிப்புர மகன்றன னிலங்கை நோக்குறா
வப்புற மேகின னதனைக் கண்டன
மெய்ப்பரி சிஃதென விளம்பி னாரரோ.

இ—ள்: துப்புடன் இவ்வழி தூதில் சென்றுளான்—வலிமையுடன் இந்நகரிற்றூதாகவந்தவன், இ புரம் அகன்றனன்— இந்நகரத்தைநீங்கி, இலங்கை நோக்குறா அப்புறம் ஏகினன்—இலங்கைநகரைநோக்கி அப்பாற்போயினான், அதனை கண்டனம்—அதனை (யாம்) கண்டோம், இஃது மெய் பரிசு—இதுஉண்மையான சம்பவம், என விளம்பினர்—என்றுகூறினார்கள் எ—று.

அதிகதூரங்கழிந்தானென்பார் ‘அப்புறமேகினன்’ என்றார். (௧௯)

வேறு.

அம்மொழி வினவ லோடு மவுணர்கோன் றன்பா னின்ற
கம்மியர் தம்மை நோக்கிக் கடிதுபோ யகில நல்கிச்

செம்மலர் மிசையே வைகுந் திசைமுகத் தொருவன் றன்னை
யிம்மெனக் கொணர்தி ரென்ன வனையவ ரிசைக்க லுற்றார்.

இ—ள்: அவுணர்கோன்— சூரபன்மன், அ மொழி வினவலோடும்— அவர்கள்சொல்லியவசனத்தைக்கேட்டவுடன், தன் பால் நின்ற கம்மியர் தம்மை நோக்கி—தன்பக்கத்தினின்ற ஏவலாளரைப்பார்த்து, கடிது போய்—நீர் விரைந்துசென்று, அகிலம் நல்கி செம் மலர் மிசை வைகும் திசைமுகத்து ஒருவன் தன்னை இம்மென கொணர்திர்—உலகங்களைப்படைத்துக்கொண்டு சிவந்ததாமரைமலராசனத்தின்மேலிருக்கின்ற நான்குமுகங்களையுடைய ஒப்பற்றபிரமதேவரை விரைவிலழைத்துவாருங்கள், என்ன—என்றுகூற, அனையவர் இசைக்கலுற்றார்—அந்தஏவலாளர்கள் சொல்லத்தொடங்கினார்கள் எ—று.

நோக்கி என்ன எனஇயையும். (௨௦)

ஈங்கிது கேட்டி மன்ன வினையமு தண்ட நல்குந்
தேங்கமழ் பதுமத் தண்ண றேவர்கோ னாதி யான
பாங்கின ரோடு மேவிப் படையொடும் புவியில் வந்த
காங்கெயன் றன்க ணுற்றா னென்பராற் கண்டோ ரென்றார்.

இ—ள்: மன்ன—அரசனே!, இது கேட்டி— யாஞ்சொல்வனவற்றைக்கேட்பீர், இனைய முது அண்டம் நல்கும் தேம் கமழ் பதுமத்து அண்ணல்— இந்தப் பழைய அண்டத்தைப்படைத்த வாசனைகமழாநின்ற தாமரைமலராசனத்திலிருக்கின்றபிரமதேவர், தேவர்கோன் ஆதி ஆன பாங்கினரோடு மேவி— இந்திரன் முதலானபரிசனர்களுடன்கூடி, படையொடும் புவியில் வந்த காங்கெயன் தன் கண் உற்றான்—சேனைகளோடும் பூவுலகத்தில்வந்திருக்கின்ற முருகவேளின்பக்கத்திலிருக்கின்றார், என்பர்—என்றுபேசுகின்றார்கள், கண்டோர்— பார்த்துவந்தவர்கள், என்றார்—என்றுகூறினார்கள் எ—று.

கண்டோர் என்பர் எனஇயையும். காங்கேயன்- வடசொல்; இது இசைநோக்கிக்குறுகிற்று; கங்கையின்புதல்வனென்பதுபொருள். (௨௧)

தொழுவர்க ளினைய மாற்றஞ் சொற்றலுஞ் சூரன் கேளா
விழுமிது விழுமி தென்னா வெய்துயிர்ப் பெய்திச் சீறி
யழலெழ நகைத்து மற்றை யண்டத்தி னிருந்து நல்குஞ்
செழுமல ரயனைப் பற்றிச் செல்லுமின் வல்லை யென்றான்.

இ—ள்: தொழுவர்கள் இனைய மாற்றம் சொற்றலும்—ஏவலாளர்கள் இந்த வசனத்தைக்கூற, சூரன் கேளா—சூரபன்மன்கேட்டு, விழுமிது விழுமிது என்னா—இதுநன்றுநன்றென்றுகூறி, வெய்துயிர்ப்பு எய்தி சீறி—பெருமூச்சுவிட்டுக்கோபித்து, அழல் எழ நகைத்து—அக்கினிதோன்றச்சிரித்து, மற்றை அண்டத்தின் இருந்து நல்கும் செழு மலர் அயனை வல்லை பற்றி செல்லுமின் என்றான்—அடுத்தஅண்டத்திலிருந்து படைக்கின்ற செழுமையானதாமரைமலராசனராகிய பிரமதேவரை விரைவிற்பிடித்துவாருங்களென்று கட்டளைசெய்தான் எ—று.

விழுமிது குறிப்பாற்பழித்தது. அடுக்குப் பழிப்பின்மிகுதியைக்காட்டிற்று. தான்விதித்தவேலை நாடோறுந்தவறாதுசெய்துதிரிந்த தேவர்கள் மிடலுடையார் போன்றுமாற்றானிடம்புகுந்திருத்தலாற் கோபித்துத் தன்னதிகாரத்தை அகத்துட் பழித்தானென்க. (௨௨)

கொற்றவ னினைய மாற்றங் கூறலு முழையர் கேளா
விற்றிது செய்து மென்னா விசைவுகொண் டொல்லை யேகி
மற்றையண் டத்திற் சென்று வானவர் முதுவன் றன்னைப்
பற்றினர் கொணர்ந்தார் தங்கோன் பணித்திடு பரிசு கூறி.

இ—ள்: கொற்றவன் இனைய மாற்றம் கூறலும்—சூரபன்மன் இவ்வசனத்தைக்கூற, உழையர் கேளா—ஏவலாளர்கள் கேட்டு, இற்று இது செய்தும் என்று இசைவு கொண்டு—இவ்வாறே இதனைச் செய்வோமென்று சம்மதித்து, ஒல்லை ஏகி—விரைவில் நடந்து, மற்றைஅண்டத்தில் சென்று—அடுத்தவண்டத்திற் போய், தம் கோன் பணித்திடு பரிசு கூறி—தங்களரசன்கூறிய கட்டளையைத் தெரிவித்து; வானவர் முதுவன் தன்னை பற்றினர் கொணர்ந்தார்—அங்குள்ளதேவத்தலைவராகியபிரமதேவரைப்பிடித்துக்கொண்டுவந்தார்கள் எ—று. (௨௩)

பரிசனர் பலரு மீண்டிப் பார்புகழ் சூர னென்னு
மரசன்முற் கொணர்ந்து வேறோ ரண்டத்தி னயனை யுய்ப்ப
வரிசையா லவனை நோக்கி மாணழி வுற்ற மற்றித்
திருநக ரதனைத் தொன்மை போலவே செய்தி யென்றான்.

இ—ள்: பரிசனர் பலரும் ஈண்டி—ஏவலாளர்கள்பலரும் கூடிச்சென்று, வேறு ஓர் அண்டத்தின் அயனை—வேறோரண்டத்திலுள்ள பிரமதேவரை, பார் புகழ் சூரன் என்னும் அரசன் முன் கொணர்ந்து உய்ப்ப—பூவுலகத்தாராற்புகழப்படுகின்ற சூரபன்மனாகிய அரசனுக்குமுன் கொண்டுவந்துவிட, வரிசையால் அவனை நோக்கி—(சூரபன்மன்) முறைப்படிஅவரைப்பார்த்து, மாண் அழிவு உற்ற இ திரு நகர் அதனை தொன்மை போல செய்தி—மாட்சிகெட்ட சிறந்தஇந்தநகரத்தைப் பழைமைபோலமைப்பீர், என்றான்—என்றுகூறினான் எ—று.

உம்மை முற்று. எவ்வெப்பொருள்கள் எங்கெங்கே எவ்வாறமைந்திருந்தனவோ அவ்வப்பொருள்கள் அங்கங்கே அவ்வாறமையவென்பான் 'தொன்மைபோல' என்றான். கோபக்குணமின்றிப் பார்த்தானென்பதுபோதர 'வரிசையால்-நோக்கி' என்றார். (௨௪)

சூரன்மற் றிதனைச் செப்பச் சொற்பணி தலைக்கொண் டைய
வோரிறை யொடுங்கு முன்ன ருனதுதொன் னகர மாற்ற
வேருற முன்ன மேபோ லியற்றுவன் யானே யென்னாப்
பேருல குதவு கின்ற பெற்றியை நினைந்து செய்வான்.

இ—ள்: சூரன் இதனை செப்ப—சூரபன்மன் இவ்வசனத்தைக்கூற, சொல் பணி தலைக்கொண்டு—(அந்தப்பிரமதேவர்) அவன்சொல்லியஏவலைச் சிரமேற்கொண்டு, ஐய—அரசனே!, ஓர் இறை ஒடுங்கும் முன்னர்—ஒருகணப்பொழுது கழிதற்குமுன், உனது தொல் நகரம் முன்னம் போல் ஆற்ற ஏர் உற—உம்முடையபழையஇந்நகரம் முன்போல மிகஅழகுபொருந்தும்படி, யானே இயற்றுவன்—நானேசெய்வேன், என்னா—என்றுகூறி, பேர் உலகு உதவுகின்ற பெற்றியை நினைந்து செய்வான்—பெரியஉலகங்களைப்படைக்கின்ற தன்மையைநினைத்துஅமைப்பார் எ—று.

அர் அம் சாரியைகள். ஏ-முன்னையது அசை; பின்னையது பிரிநிலை. உலகங்களைப்படைப்பதுபோல அழிந்தவைகளையும் படைத்தார் என்பதாம். (௨௫)

பொன்மதின் மாட வீதி பொலன்மணிச் சிகரம் வேர
மன்மதன் விழையுஞ் சோலை மண்டபம் வாவி பொய்கை
சென்மலி யரங்க மன்றந் தெற்றியே முதல வெல்லாந் [ன்னோ:
தொன்மைபோ லாகத் தன்கைத் தொழின்முறை படைத்தான் ம

இ—ள்: பொன் மதில்—பொன்னாற்செய்யப்பட்ட மதில்களும், மாட வீதி—மாடங்களையுடைய வீதிகளும், பொலன் மணி சிகரம்—பொன்மயமான இரத்தினமழுத்தப்பெற்ற தூபிகளும், வேரம்—சூளிகைகளும், மன்மதன் விழையு

ம் சோலை-மன்மதனும்விரும்பத்தக்க சோலைகளும், மண்டபம்-மண்டபங்களும், வாவி—வாவிகளும், பொய்கை—தடாகங்களும், செல் மலி அரங்கம்— ஆகாயத்தையளாவிய நடனசாலைகளும், மன்றம்—சபைகளும், தெற்றி முதல எல்லாம்-திண்ணைகளும் முதலாகியபொருள்களெல்லாவற்றையும், தொன்மை போல் ஆக—முன்போலமைய, தன் கை தொழில் முறை படைத்தான்— தமதுகைத்தொழிலாற்செய்யப்பட்டதுபோலப் படைத்தார் எ—று.

செல்-ஆகுபெயர். மிகநுட்பமாகப்படைத்தாரென்பார் 'கைத்தொழின்முறைபடைத்தான்' என்றார். (௨௬)

இவ்வகை நகர முற்று மெழில்பெறப் படைத்த பின்றை
மைவரை மேனி மன்னன் மாபெருங் கோயி றன்னைச்
செவ்வியின் முதுமை போலச் சிறப்பினாற் றிருத்தல் செய்தா
னைவகை யிருபான் கொண்ட வல்லியங் கமலத் தண்ணல்.

இ—ள்: இவ்வகை நகரம் முற்றும் எழில்பெற படைத்த பின்றை- இப்படி நகரமுழுவதையும் அழகுபொருந்தப்படைத்தபின், மை வரை மேனி மன்னன் மா பெரும் கோயில் தன்னை— கருமலைபோன்றவடிவத்தையுடைய சூரபன்மனிருக்கின்ற மிகப்பெரியகோயிலை, செவ்வியில் முதுமை போல சிறப்பினால் திருத்தல்செய்தான்— நன்றாக முன்போற் சிறப்பமையத்திருத்தினார், ஐவகை இருபான் கொண்ட அல்லியம் கமலத்து அண்ணல்— நூறென்னுந்தொகைப்பட்ட அகவிதழ்பொருந்திய தாமரைமலராசனத்தில்வீற்றிருக்கின்றபிரமதேவர் எ—று. அண்ணல் செய்தான் என இயையும். (௨௭)

கொன்பெரு நகரு மந்தண் கோயிலும் படைத்த லோடு
மன்பெருந் தகைய சூரன் மற்றவன் செய்கை நோக்கி
யன்புசெய் துவகை யாகி யவுணர்கள் யாரும் போற்ற
முன்புபோ லரிமா னேற்று முழுமணித் தவிசி னுற்றான்.

இ—ள்: கொன் பெரும் நகரும் அம் தண் கோயிலும் படைத்தலோடும்—மிகப்பெரிய அந்நகரத்தையும் அழகிய வளமார்ந்தகோயிலையும் இவ்வாறுபடைத்தவுடன், மன் பெரும் தகைய சூரன் - மிகுந்தபெருந்தகுதியையுடையசூரபன்மன், அவன் செய்கை நோக்கி- அந்தப்பிரமதேவருடையசெயலைப்பார்த்து, அன்புசெய்து— அவர்மேலன்புபாராட்டி, உவகை ஆகி— மனமகிழ்ந்து, அவுணர்கள் யாரும் போற்ற—அசுரர்களெல்லோருந்துதிக்க, முன்பு போல்-முன்போல, அரிமான் ஏற்று முழு மணி தவிசின் உற்றான் — ஆண்சிங்கங்களாற்சுமக்கப்படுகின்ற பெரியஇரத்தினங்களிழைத்துச்செய்யப்பட்ட ஆசனத்தில் அரசிருந்தான் எ—று.

கொன் பெரும் ஒருபொருட்சொற்கள். உம்மைப்போலச்சித்திரமாகப்படைக்கத்தக்காரொருவருமில்லையென்று இன்சொற்கூறியென்பார் 'அன்புசெய்து' எனவும், முன்னிருந்ததுன்பங்கள்நீங்கியென்பார் 'உவகையாகி' எனவும் கூறினார். (௨௮)

உற்றன னாகிப் பின்ன ரோதிமத் திறையை நோக்கி
மற்றுநின் னண்டஞ் சென்று வைகுதி நல்கி யென்னுச்
சொற்றன னேவ வன்னோன் றுன்னென விடைபெற் றேகிப்
பெற்றதன் னண்டஞ் சென்று பிறங்குதன் னுலகம் புக்கான்.

இ—ள்: உற்றனன் ஆகி—அரசிருந்து, பின்னர் ஓதிமத்து இறையை நோக்கி—பின்பு அன்னவாகனத்தையுடையதலைவராகிய பிரமதேவரைப்பார்த்து, நின் அண்டம் சென்று நல்கி வைகுதி என்னு சொற்றனன் ஏவ— (நீர்) உம்மு

டையஅண்டத்திற்போய்ப்படைத்துக்கொண்டிருப்பீரென்று சொல்லியனுப்ப, அன்னோன் துண்ணென விடை பெற்று ஏகி—அவர்விரைவில் அனுமதியைப் பெற்றுச்சென்று, பெற்ற தன் அண்டம் சென்று— தமக்குரிமையாகப்பெற்றுக்கொண்ட அண்டத்திற்போய், பிறங்கு தன் உலகம் புக்கான்— விளங்குகின்றதமதுசத்தியலோகத்தையடைந்தார் எ---று. (௨௧)

சூரனகர்புரிபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௧௧அ.

சூரனமைச்சியற்படலம்.

முருகவேள்போர்க்குவாநினைந்திருப்பதைக்குறித்துச் சூரபன்மன் அமைச்சியல்செய்தமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

சூரபன்மன் முருகவேள்போர்க்குவாநினைந்திருத்தலைத் தூதர்வாயிலாயறிந்து தம்பி புதல்வர் அமைச்சர் முதலானவர்களையழைத்து நிகழ்ந்தசெயல்களையெல்லாங்கூறி அவரவரெண்ணக்கருத்துகளைவினவ, அவர்கள் தத்தங்கருத்துகளை ஏற்றவாறேகூறிமுடித்தனர். சிங்கமுகாசுரன் அவற்றைமறுத்து, தேவரைச் சிறைநீக்கி முருகவேளைப்பணிந்துவாழ்தலேதக்கது, அங்ஙனஞ்செய்யாவிடின் யாங்கள் ஒருங்கேயிறக்கவேண்டிநேரிடும் என்பதைவிளங்கக்கூறினன். சூரபன்மன் அவற்றிற்கிணங்காது மறுத்துக்கூறுதலால் பின் அவனும் அச்சூரபன்மனதுஎண்ணத்திற்குடன்பட்டான். பின் சூரபன்மன் அமைச்சியலைமுடித்து முன்போலரசிருந்தான் என்பதாம்.

அந்தநல் லமையந் தன்னி னவுணர்கோ னேவல் போற்றி
முந்துசெல் லொற்ற ரானோர் மூரிநீர்க் கடலை வாவிச்
செந்தியிற் சென்று கந்தன் சேனையும் பிறவுந் தேர்ந்து
வந்தனர் விரைவி னங்கண் மன்னனை வணங்கிச் சொல்வார்.

இ—ள்: அந்த நல் அமையம் தன்னின்—அப்படிப்பட்ட நல்லசமயத்தில், அவுணர்கோன் ஏவல் போற்றி முந்து செல் ஒற்றர் ஆனோர்—சூரபன்மனதுகட்டளையைப்பேணி முன்சென்ற தூதர்கள், மூரி நீர் கடலை வாவி செந்தியில் சென்று—வலியநீரையுடைய கடலைக்கடந்து திருச்செந்திப்பதியிற்போய், கந்தன் சேனையும் பிறவும் தேர்ந்து—முருகக்கடவுளதுசேனைத்தொகையையும் மற்றுங்காரியங்களையுமறிந்து, விரைவின் அங்கண் வந்தனர்—விரைவாக அவ்விடத்தில்வந்து, மன்னனை வணங்கி சொல்வார்—சூரபன்மனைப்பணிந்து சொல்லுவார்கள் எ---று.

துக்கமுங்கோபமுந்தணிந்து அரசிருக்குஞ்சமயமென்பார் 'அந்தநல்லமையம்' எனவும், தாரகனிறந்தமையைக்கேள்வியுற்றபின் அனுப்பப்பட்ட பகன் மயூரன் முதலிய தூதரென்பார் 'அவுணர்கோனேவல்போற்றிமுந்துசெல்லொற்றரானோர்' எனவும், மிகுந்தவிசாலமும் ஆழமுமானகடலென்பார் 'மூரிநீர்க்கடல்' எனவும் கூறினார். பிற-வலிமை படைப்பயிற்சி மனக்குறிப்பு முதலாயின. அங்கண்-அவைக்களத்தில். சூரபன்மன் தூதரையனுப்பியது உற்பத்திகாண்டத்தில் அசுரேந்திரன்மகேந்திரஞ்செல்படலத்திற்கூறப்பட்டுளது. (௧)

ஏற்றவெம் பூத வெள்ள மிராயிரம் படையின் வேந்தர்
நூற்றுட னெண்மர் பின்னு நுவலருஞ் சிறப்பின் மிக்கோர்
மேற்றிக ழிலக்கத் தொன்பான் வீரர்மற் றிளைய ரோடுந்
தோற்றமில் பரமன் மைந்தன் றொடுகட லுலகின் வந்தான்.

இ—ள்: ஏற்ற வெம் பூத வெள்ளம் இராயிரம்—போர்செய்தற்கியைந்த கொடிய இரண்டாயிரவெள்ளம்பூதசேனைகளும், படையின் வேந்தர் நூற்றுடன் எண்மர்— நூற்றெட்டுச்சேனைத்தலைவர்களும், பின்னும்— இவரன்றி, நுவலரும் சிறப்பின் மிக்கோர் மேல் திகழ் இலக்கத்து ஒன்பான் வீரர்—சொல்லுதற்கரிய சிறப்பினுன்மேம்பட்ட மேன்மைவிளங்கப்பெற்ற இலக்கத்தொன்பதுவீரர்களும் ஆகிய, இளையரோடும்—இவர்களுடன், தோற்றம் இல் பரமன் மைந்தன்—பிறப்புமிறப்புமற்ற சிவபிரானதுகுமாரர், தொடு கடல் உலகின் வந்தான்—சகரரால் முற்காலத்திற்றோண்டப்பெற்ற சமுத்திரத்தாற்சூழப்பட்ட இப்பூவுலகத்தில் வந்தார் எ—று.

தோற்றமின்றேல் அழிவுமின்றென்னும்நியாயம்பற்றி 'தோற்றமில்' என்றதற்குப் பிறப்புமிறப்புமற்ற என்றும். பரமன்-முதற்கடவுள். (உ)

சாதமீ தவுணர் கோவே தாரக வீரன் றன்னைக்
கரையறு மாயை போற்றுங் காமரு பிறங்க றன்னை
யிருபிள வாக வேலா லெறிந்தன னீறு செய்து
திரைபொரு மளக்கர் வேலைச் செந்திமா நகரி னுற்றான்.

இ—ள்: அவுணர் கோவே—அசுரர்க்கரசனே!, தாரக வீரன் தன்னை-தாரகாசுரனாகியவீரனையும், கரை அறு மாயை போற்றும் காமரு பிறங்கல் தன்னை—அளவிறந்தமாயங்களைப்பேணிச்செய்கின்ற சிறந்த கிரவுஞ்சமலையையும், இரு பிளவு ஆக—இரண்டுபாதியாகும்படி, வேலால் எறிந்தனன் ஈறுசெய்து—வேற்படையைவீசியழித்து, திரை பொரும் அளக்கர் வேலை செந்தி மா நகரின் உற்றான்—திரைமோதுகின்றகடலின் கரையிலுள்ள பெரியதிருச்செந்திப்பதியில் வந்திருக்கின்றார், ஈது சாதம்—இது உண்மையே எ—று.

வேலால் ஈறுசெய்து எனஇயைக்க. இதுமுதனீண்டது. (௩)

விலங்கிய கதிர்வே லண்ணல் விரைந்திவண் மேவு மாற்றா
லுலங்கிளர் மொய்ம்பிற் றூத னொருவனை விடுத்தா னன்னா
னிலங்கையை யழித்து வந்தான் யாளிமா முகவன் றன்னை
வலங்கையின் வாளாற் செற்று வாரிதி கடந்து போனான்.

இ—ள்: விலங்கிய கதிர் வேல் அண்ணல்- பிரகாசிக்கின்றசோதியையுடைய வேற்படையையேந்தியமுருகக்கடவுள், விரைந்து இவண் மேவும் ஆற்றால்—விரைவில் இவ்விடத்துவரும்படி, உலம் கிளர் மொய்ம்பில் தூதன் ஒருவனை விடுத்தான் —திரண்டகற்போன்றபுயங்களையுடைய ஒருதூதனையனுப்பினார், அன்னான்—அவன், இலங்கையை அழித்து வந்தான்— இலங்கைநகரையழித்து இங்கேவந்து, யாளி மா முகவன் தன்னை வலம் கையின் வாளால் செற்று வாரிதி கடந்து போனான்—(பின்) பெரியயாளிமுகாசுரனை வலக்கையிலேந்தியவாட்படையினல்வெட்டிக் கடலைக்கடந்து மீண்டுசென்றான் எ—று.

விளங்கிய எனற்பாலது போலியாயிற்று. வலக்கை எனற்பாலது எதுகைநோக்கிமெலிந்தது. மிகுந்தவலிமையையுடைய தூதனென்பார் 'உலங்கிளர்மொய்ம்பிற்றூதன்' என்றார். (௪)

செங்கதி ரயில்வேன் மைந்தன் றெண்டிரைப் புணரி வாவிப்
பொங்குவெங் கணங்க ளோடும் போர்ப்படை வீர ரோடு

மிங்குவந் தாடல் செய்வா னெண்ணின னிருந்தா னீது
சங்கையென் றுன்னல் வாய்மை தகுவன வுணர்தி யென்றார்.

இ—ள்: செம் கதிர் அயில் வேல் மைந்தன்— சிவந்தசோதியைப்பரப்புகின்ற கூரியவேற்படையையேந்திய முருகவேள், பொங்கு வெம் கணங்களோடும் போர் படை வீரரோடும்- கோபமூளுகின்ற கொடியபூதசேனைகளோடும் போர் செய்யவல்லசேனாவீரர்களோடும், தெள் திரை புணரி வாவி— தெளிந்த திரை பொருந்தியகடலைக்கடந்து, இங்கு வந்து ஆடல் செய்வான் எண்ணினன் இருந்தான்— இங்கேவந்து போர்செய்யும்படி நினைத்திருக்கின்றார், ஈது சங்கை என்று உன்னல்- இதனைச்சந்தேகமாகநினைக்கவேண்டாம், வாய்மை—உண்மையேயாம், தகுவன உணர்தி—அதற்காய்ச்செய்யத்தக்கனவற்றைச்சிந்திப்பீர், என்றார்—என்று தூதர்கள்கூறினார்கள் எ—று.

தேற்றேகாரந்தொக்கது. (௫)

ஒற்றர்சொல் வினவி மன்ன னொருதனி யிளவ றன்னை
யற்றமில் கேள்வி சான்ற வமைச்சரை மைந்தர் தம்மைச்
சுற்றமோ டமைந்த தானைத் தொல்பெருந் தலைமை யோரை
மற்றொரு கணத்தின் முன்னர் மரபொடு கொணரு வித்தான்.

இ—ள்: மன்னன் ஒற்றர் சொல் வினவி—சூரபன்மன் தூதர்கூறியவசனத்தைக்கேட்டு, ஒரு தனி இளவல் தன்னை—ஒப்பற்றதம்பியாகிய சிங்கமுகாசுரனையும், அற்றம் இல் கேள்வி சான்ற அமைச்சரை— குற்றமற்ற நூற்கேள்வியையுடைய மந்திரிமாரையும், மைந்தர் தம்மை—புத்திரர்களையும், சுற்றமொடு அமைந்த தானை தொல் பெரும் தலைமையோரை- இனமுறையோடமைந்துவாழுகின்ற பழைய பெரிய சேனைத்தலைவர்களையும், ஒரு கணத்தின் முன்னர் மரபொடு கொணருவித்தான்—ஒருகணப்பொழுதினுள் முறைப்படியழைப்பித்தான் எ—று.

வினவிக்கொணருவித்தான் என இயையும். ஒருதனி-ஒருபொருட்சொற்கள். ஏவலாளரையனுப்பி நிகழ்ந்தசெயல்களைத் தெரிவித்தழைப்பித்தானென்பார் 'மரபொடுகொணருவித்தான்' என்றார். (௬)

வேறு.

ஆங்கவர் யாவரு மவுணர் மன்னவன்
பூங்கழல் கைதொழூஉப் புடையின் வைகலுந்
தீங்கனல் சுடுவதோர் சீற்ற முள்ளெழ
வீங்கிய வுயிர்ப்பினன் விளம்பன் மேயினான்.

இ—ள்: அவர் யாவரும்—அவ்வாறு வந்தவர்களனைவரும், அவுணர் மன்னவன் பூ கழல் கைதொழூஉ புடையின் வைகலும்—அசுரர்க்கரசனாகிய சூரபன்மனது மலர்போன்றகால்களைப்பணிந்து பக்கத்திலிருந்தவுடன், தீ கனல் சுடுவது ஓர் சீற்றம் உள் எழ- கொடிய அக்கினியையுஞ்சுடத்தக்ககோபம் தன்மனத்திற்றோன்ற, வீங்கிய உயிர்ப்பினன் விளம்பல் மேயினான்—பெருமூச்சையுடையவனாய்ச் சொல்லத்தொடங்கினான் எ—று.

வைகலும் விளம்பன்மேயினான் என இயையும். (௭)

போற்றல ராகிய புலவர் யாரையு
மாற்றருஞ் சிறையில்யான் வைத்த பான்மையைத்
தேற்றிய மகபதி சென்று சென்னிமே
லாற்றினை வைத்திடு மமலற் கோதினான்.

இ—ள்: போற்றலர் ஆகிய புலவர் யாரையும் மாற்ற அரும் சிறையில் யான் வைத்த பான்மையை தேற்றிய மகபதி— (நமது) குலப்பகைவர்களாகிய தேவர்க

ளெல்லோரையும் விலக்குதற்கரியசிறையில் நான்வைத்ததன்மையையறிந்த இந்திரன், சென்று- போய், சென்னி மேல் ஆற்றினை வைத்திடும் அமலற்கு ஓதினன்— சிரசின்மேற்கங்கைநதியையணிந்தசிவபிரானுக்கு விண்ணப்பஞ்செய்தான எ—று.

போற்றலர்- பேணியொழுகாதவர்கள். தேற்றிய ஈண்டுத்தன்வினையாய்நின்றது. (௮)

கண்ணுத லுடையதோர் கடவுள் வல்லையோ
ரண்ணலங் குமரனை யளித்து மைந்தநீ
விண்ணவர் சிறையினை வீட்டிச் செல்கெனத்
துண்ணென நம்மிசைத் தூண்டி னனரோ.

இ—ள்: கண் நுதல் உடையது ஓர் கடவுள்—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான், வல்லை—விரைவாக, ஓர் அண்ணலம் குமரனை அளித்து-பெருமைபொருந்திய ஒரு புதல்வனைத்தோற்றுவித்து, மைந்த—புதல்வனே!, நீ விண்ணவர் சிறையினை வீட்டி செல்க என—நீ தேவர்களதுசிறையை நீக்கிவருவாயென்று, துண்ணென நம் மிசை தூண்டினன்—விரைவாக எம்மிடத்திலனுப்பினர் எ—று.

அளித்துத்தூண்டினன் என இயையும். (௯)

வாய்த்திடு கயிலைமால் வரையை வைகலுங்
காத்திடு நந்திதன் கணத்து வீரரு
மீத்தகு பூதரும் விரவ மாலய
னேத்திட வரன்மக னிம்ப ரெய்தினன்.

இ—ள்: வாய்த்திடு கயிலை மால் வரையை வைகலும் காத்திடு நந்திதன் கணத்து வீரரும்— சிறந்த கயிலையாகிய பெரியமலையைத் தினந்தோறுங்காவல்செய்கின்ற நந்திகணத்துவீரர்களும், மீ தகு பூதரும்—மேன்மைபொருந்திய பூதர்களும், விரவ—உடன்வரவும், மால் அயன் ஏத்திட—திருமாலும் பிரமதேவருந்துதிக்கவும், அரன்மகன் இம்பர் எய்தினன்—சிவபிரானதுபுதல்வராகியமுருகவேள் இவ்வுலகத்தில்வந்தார் எ—று. (௧௦)

பாரிடை யுற்றுளான் பாணி கொண்டதோர்
கூருடை வேலினற் கொடிய குன்றொடு
தாரக னிளவலைத் தடிந்து பின்னுற
வாரிதி யகன்கரை வந்து வைகினன்.

இ—ள்: பார் இடை உற்றுளான்— பூவுலகத்தில்வந்த முருகவேள், பாணி கொண்டது ஓர் கூர் உடை வேலினல்- கையிலிருந்த ஒப்பற்ற கூர்மைபொருந்திய வேற்படையினல், கொடிய குன்றொடு தாரக இளவலை தடிந்து—கொடிய கிரவுஞ்சமலையையும் எனது தம்பியாகிய தாரகனையுங்கொன்று, பின்னுற-பின்பு, வாரிதி அகன் கரை வந்து வைகினன்- அகன்ற சமுத்திரக்கரையில் வந்திருந்தார் எ—று.

மாயங்களைச்செய்து பகைவரையகப்படுத்துவதாதலின் 'கொடியகுன்று' என்றான். வாரிதி-நீர்தங்குமிடம். தாரகவிளவல் விசேடணவிசேடியங்கள் நிலைமாறிநின்ற இருபெயரொட்டுப்பண்புத்தொகை. வாரிதியகன்கரை என்றது திருச்செந்திப்பதியைக்குறித்தது. (௧௧)

அன்னதோ ராறுமுக னங்கோர் தூதனை
யென்னிடை விடுத்தலு மேகி மற்றவன்
மைந்நிற நெடுங்கடல் வரைப்பிற் பாய்ந்தொராய்ப்
பொன்னவி ரிலங்கைமா புரத்தை வீட்டினன்.

இ—ள்: அன்னது ஓர் அறுமுகன்—அந்தமுருகவேள், ஓர் தூதனை என்னிடை விடுத்தலும்—ஒரு தூதனைஎன்னிடத்திலனுப்ப, அவன் எகி- அவன் வந்து, மை நிற நெடும் கடல் வரைப்பில் பாய்ந்து ஓராய்— கருநிறம்பொருந்திய நெடிய கடலினெல்லையினின்று பாய்ந்துபோய், பொன் அவிர் இலங்கை மாபுரத்தை வீட்டினன்—அழகுவிளங்குகின்ற பெரிய இலங்கைநகரையழித்தான் எ—று.

பொன்னவிரிலங்கை பொன்னாலமைக்கப்பட்ட இலங்கை எனினுமாம். ()

இலங்கையங் காவலு மிகப்புற் றின்னதோர்
பொலங்கெழு திருநகர் நடுவட் புக்குலாய்
நலங்கிள ரென்னவைக் களத்தி னண்ணினான்
கலங்கல னிறையது மாயைக் கற்பினான்.

இ—ள்: இலங்கையம் காவலும் இகப்புற்று– இலங்கைநகரிலுள்ள காவல்களையுங்கடந்து, இன்னது ஓர் பொலம் கெழு திரு நகர் நடுவண் புக்கு உலாய்- இந்த ஒப்பற்ற பொன்மயமாய்விளங்குகின்ற சிறந்த நகரத்தினடுவே வந்துலாவி, மாயை கற்பினான்—மாயப்பயிற்சியையுடையனாதலின், இறையதும் கலங்கலன்—சிறிதுமஞ்சாதவனாய், நலம் கிளர் என் அவைக்களத்தில் நண்ணினான்— அழகுவிளங்குகின்ற எனதுசபையிற் புகுந்தான் எ—று.

உம்மை முன்னையது எச்சமும் பின்னையது இழிவுமாம். (௪௩)

நண்ணின னெதிருற நவையில் வீரர்போல்
விண்ணவர் பாங்கராச் சிலவி ளம்பியென்
கண்முனஞ் சிலருயிர் களைந்து வன்மையா
லெண்ணலன் பின்னுற வெழுந்து போயினான்.

இ—ள்: நவை இல் வீரர் போல் எதிருற நண்ணினன்— குற்றமில்லாதவீரர்களைப்போல எதிரேவந்திருந்து, விண்ணவர் பாங்கர் ஆ சில விளம்பி— தேவர்பக்ஷமாகச்சிலவசனங்களைக்கூறி, என் கண் முனம் சிலர் உயிர் களைந்து—என்னுடைய கண்ணுக்குமுன்னே சிலவீரர்களுடைய உயிரைக்கவர்ந்து, வன்மையால்—வலிமையோடும், எண்ணலன்—என்னைமதியாதவனாகி, பின்னுற எழுந்து போயினான்—பின்பு எழுந்துசென்றான் எ—று.

சுத்தவீரரென்பான் 'நவையில்வீரர்' எனவும், தேவரையுயர்த்தியும் நம்மவரைத்தாழ்த்தியுமென்பான் 'விண்ணவர்பாங்கரா' எனவும் கூறினான். (௪௪)

போயவ னின்னகர் பொடித்துச் சிந்தியா
னேயின வேயின படைஞர் யாரையு
மாயுறு வித்தனன் மற்று மென்னிளஞ்
சேயுயிர் கொண்டனன் செருக்கு நீங்கலான்.

இ—ள்: போயவன்—அவ்வாறுபோனதூதன், இ நகர் பொடித்து சிந்தி- இந்நகரத்தைத்துகளாக்கியழித்து, யான் ஏயின ஏயின படைஞர் யாரையும் மாயுறுவித்தனன்— யானனுப்பிய அனுப்பிய சேனைவீரர்களெல்லாரையுங்கொன்று, செருக்கு நீங்கலான்— தருக்குநீங்காதவனாய், மற்றும்—பின்னும், என் இளம் சேய் உயிர் கொண்டனன்—எனது இளையமகனாகிய வச்சிரவாகுவின் உயிரைக் கவர்ந்தான் எ—று.

அடுக்குப்பன்மைபற்றிவந்தது. மற்று-வினைமாற்று. (௪௫)

அழிந்ததித் திருநக ரளப்பி றானைகள்
கழிந்தன செறிந்தது களேவ ரத்தொகை

கிழிந்தது பாரகங் கெழீஇய சோரியா
றொழிந்ததென் னாணையு முயர்வுந் தீர்ந்ததால்.

இ—ள்: இ திரு நகர் அழிந்தது—சிறந்த இந்நகரம் அழிந்துபோயிற்று, அளப்பு இல் தானைகள் கழிந்தன—அளவிறந்தசேனைகள் இறந்தன, களேவர தொகை செறிந்தது—பிணத்தொகுதி நெருங்கியது, பாரகம் கிழிந்தது—பூமிகிழிந்தது, சோரி ஆறு கெழீஇய—இரத்தவெள்ளம்பரவின, என் ஆணையும் ஒழிந்தது—என்னுடைய அதிகாரமும் அழிந்தது, உயர்வும் தீர்ந்தது—மகிமையும் நீங்கிற்று எ—று.

பிணமலைப்பாரத்தைத் தாங்கலாற்றாமையாற் பூமிகிழிந்ததென்க. (௧௬)

ஒற்றென வந்தவவ் வொருவன் றன்னையும்
பற்றிவெஞ் சிறையிடைப் படுத்தி னேனலேன்
செற்றில னூறதே யெனினுஞ் செய்திலே
னெற்றினி வசையுரைக் கீறு கூறுகேன்.

இ—ள்: ஒற்று என வந்த அவ் ஒருவன் தன்னையும் பற்றி வெம் சிறையிடை படுத்தினேன் அலேன்—என்னிடத்துத்தூதாகவந்த அந்த ஒருவீரனையாயினும்பிடித்துக் கொடியசிறையில்வைத்திலேன், செற்றிலன்—கொன்றுமிலேன், ஊறது எனினும் செய்திலேன்—ஊறுபாட்டையாயினுஞ்செய்யாதுவிட்டேன், இனி வசையுரைக்கு எற்று ஈறு கூறுகேன்—இனி எனக்குண்டான வசைமொழிக்கு எவ்வாறு முடிவுகூறுவேன்? எ—று.

ஒருவன்றன்னையும் என்றஉம்மை இழிவு. அற்பனாகிய தூதன் அரசனாகிய என்னை அவமதிசெய்துசெல்லவும் யான் அவனுக்குச் சிறிதுமவமானஞ்செய்திலனாதலால் அளவிறந்தவசையைப்பெற்றேன் என்பதாம். (௧௭)

இம்பரி னிவையெலா மிழைத்த தூதுவ
னம்பதி யிகந்துபோ யிலங்கை நண்ணிய
மொய்ம்புடை யாளிமா முகவற் சாடியே
யம்புதி கடந்தன னவனி யெய்தினான்.

இ—ள். இம்பரின் இவை எலாம் இழைத்த தூதுவன்—இந்நகரத்தில் இவைகளையெல்லாஞ்செய்த தூதன், நம் பதி இகந்து போய்—எங்கள்நகரத்தைக்கடந்துசென்று, இலங்கை நண்ணிய மொய்ம்பு உடை யாளி மா முகவன் சாடி—இலங்கைநகரிலிருந்த வலிமைபொருந்திய பெரிய யாளிமுகாசுரனையழித்து, அம்புதி கடந்தனன்—கடலைக்கடந்து, அவனி எய்தினான்—பூமியிற்சென்றான் எ—று.

அவனியென்றது திருச்செந்திப்பதியை. அந்நகரத்துள்ளாரனைவரினும் பெருவலிபெற்றுடையனாதலின் 'மொய்ம்புடையாளிமாமுகவன்' என்றான். (௧௮)

கார்பொரு மிடற்றவன் காதன் மாமகன்
வாரிதி கடந்தவண் வந்து நம்மொடும்
போர்பொர நினைகுவான் போலு மிவ்வெலாஞ்
சாரணர் மொழிந்தனர் சரத மாகுமால்.

இ—ள்: கார் பொரு மிடற்றவன் காதல் மா மகன்—கருநிறமார்ந்த கண்டத்தையுடைய சிவபிரானது அன்பிற்கிடமான சிறந்தபுதல்வர், வாரிதி கடந்து இவண் வந்து—சமுத்திரத்தைக்கடந்துஇவ்விடத்தில்வந்து, நம்மொடும் போர் பொர நினைகுவான்—எம்முடன்போர்செய்யநினைத்திருக்கின்றார், இவ் எலாம் சாரணர் மொழிந்தனர்—இவைகளெல்லாவற்றையுந் தூதர்கள் (ஆராய்ந்துவந்து) சொன்னார்கள், சரதம் ஆகும்—உண்மையேயாம் எ—று.

நஞ்சுண்டுகறுத்தமிடற்றதலின் 'கார்பொருமிடறு' என்றான். போலும்- ஒப்பில்போலி. (௧௯)

நெற்றியி லனிகமாய் நின்ற பூதரைச்
செற்றிகல் வீரரைச் செகுத்துச் சேயினை
வெற்றிகொண் டேனையர் தமையும் வீட்டியே
மற்றொரு விகலைமுன் வரவல் லேனியான்.

இ—ள்: யான்—நான், நெற்றியில் அனிகம் ஆய் நின்ற பூதரை செற்று—முன்னணியிற் சேனைகளாகநின்றபூதர்களையழித்து, இகல் வீரரை செகுத்து—வலிய இலக்கத்தொன்பதுவீரர்களையுங்கொன்று, சேயினை வெற்றி கொண்டு—முருகவேளைவென்று, ஏனையர் தமையும் வீட்டி—மற்றுள்ளவர்களையுங்கொன்று, ஒரு விகலை முன் வர வல்லேன்—ஒருவிநாடியினுள்வாரத்தக்கேன் எ—று.

தேவர்க்காக வேறும் யார்யார்வந்தெதிர்ப்பினும் அவர்களையுமழித்தென்பான் 'ஏனையர்தமையும்வீட்டி' என்றான். (௨௦)

சூரனென் றொருபெயர் படைத்த தொல்லையேன்
பாரிடர் தம்மொடும் பாலன் றன்னொடும்
போரினை யிழைத்தடல் புரிந்து வெல்லினும்
வீரம தன்றென வறிது மேவினேன்.

இ—ள்: சூரன் என்று ஒரு பெயர் படைத்த தொல்லையேன்—சூரனென்று ஒருபெயரைப்பெற்றுள்ள பழையவனாகியயான், பாரிடர் தம்மொடும் பாலன் தன்னொடும் போரினை இழைத்து அடல்புரிந்து வெல்லினும்— பூதர்களோடுஞ் சிறுவனோடும் போரைச்செய்து அழித்துவென்றாலும், வீரமது அன்று என—வீரமாகாதென்றுசிந்தித்து, வறிது மேவினேன்—வாளாவிருந்தேன் எ—று.

வேறுவீரர்களையனுப்பி வெல்லநினைத்தேனென்பதுகுறிப்பு. (௨௧)

துய்த்திடுந் திருவினில் வலியிற் சூழ்ச்சியி
லெத்துணைப் பெரியர்தா மெனினு மேலையோர்
கைத்தொரு வினைசெயக் கருதிற் றம்முடை
மெய்த்துணை யோரைமுன் வினவிச் செய்வரால்.

இ—ள்: துய்த்திடும் திருவினில் வலியில் சூழ்ச்சியில் எத்துணை பெரியர் தாம் எனினும்—அனுபவிக்கப்படுகின்றசெல்வத்தினாலும் வலியாலும் உபாயத்தாலும் எவ்வளவு சிறந்தவர்களாயிருந்தாலும், மேலையோர்—பெரியோர்கள், கைத்து ஒரு வினை செய கருதில்—ஒருவரோடுபகைத்து ஒருகருமத்தைச்செய்யநினைத்தால், தம் உடை மெய் துணையோரை முன் வினவி செய்வர்—தங்கள் உற்ற துணைவர்களை முதலிலாராய்ந்துசெய்வார்கள் எ—று.

யான்செய்யவேண்டியகருமங்களை எண்ணிமுடிக்குமாற்றலுடையேனாயினும் அரசொழுகவேண்டியமுறைப்படி உங்களை உசாவினேன் என்பது கருத்து.

ஆதலின் வினவினன் யானு மாற்றுத
லீதென வுரைத்திரா லென்று மன்னவ
னோதினன் அன்னதை யுணர்ந்து கைதொழூஉ
மேதியம் பெயரினு னிலைவி ளம்பினான்.

இ—ள்: ஆதலின்—(ஒழுகவேண்டியமுறை இது) ஆதலால், யானும் வினவினன்—யானும் உங்களுடன்ஆலோசித்தேன், ஆற்றுதல் ஈது என உரைத்திர் என்று—செயற்பாலதின்னதென்றுசொல்லுங்களென்று, மன்னவன் ஓதினன்—சூரபன்மன் கூறினான், (௯—ற), அன்னதை உணர்ந்து கைதொழூஉ—அ

தனைக்கேட்டுக்கைகுவித்து, மேதியம் பெயரினன்-(மந்திரிமாருளொருவனாகிய) மகிடனென்பான், இவை விளம்பினன் — இவ்வசனங்களைச்சொன்னான் எ—று.

உம்மை எச்சம். மேதியம்பெயரினன்-எருமையின்பெயரையுடையான். ()

மேலுயர் மாயைகள் விளைக்கும் வெற்பினை
மாலினை வென்றநின் வலிய தம்பியை
யேலவோர் கணத்தின்மு னெறிந்த வீரனைப்
பாலனென் றுரைப்பது முணர்வின் பாலதோ.

இ—ள்: மேல் உயர் மாயைகள் விளைக்கும் வெற்பினை—மிகச்சிறந்தமாயங்களைச்செய்துபயின்ற கிரவுஞ்சமலையையும், மாலினை வென்ற வலிய நின் தம்பியை— திருமாலையும்வென்ற பெருவலியையுடைய உமது தம்பியையும், ஏல ஓர் கணத்தின் முன் எறிந்த வீரனை — தகுதியுடன் ஒருகணத்தினுட்பிளந்தழித்த முருகவேளை, பாலன் என்று உரைப்பதும் உணர்வின் பாலதோ — சிறுபிள்ளையென்றுசொல்வதும் விவேகத்தின்பாற்படுமோ? எ—று.

ஓ எதிர்மறை. பிற்செய்யுட்களிலுமன்ன. உம்மை இழிவு. பெருமாயங்களைச்செய்யவல்ல கிரவுஞ்சமலையையும் போராற்றலையுடைய உமது தம்பியையும் பிளந்தமையால் முருகவேள் சிறந்தவீரர் என்பதாம். (௨௪)

மேதகு தாரக வீரன் றானையை
யாதிபர் தம்முட னட்ட தீரரை
யேதுமோர் வலியிலர் வெளியரென்பதும்
பூதரென் றிகழ்வதும் புலமைப் பாலவோ.

இ—ள்: மேதகு தாரக வீரன் தானையை ஆதிபர் தம் உடன் அட்ட தீரரை— மேன்மைபொருந்திய வீரனாகிய தாரகாசுரனதுசேனையைத் தலைவர்களுடனழித்த வீரர்களை, ஏதும் ஓர் வலி இலா எளியர் என்பதும் — சிறிதும்வலிமையில்லாத அற்பர்களென்றுசொல்வதும், பூதர் என்று இகழ்வதும் - பூதர்களென்றுநிந்திப்பதும், புலமைப்பாலவோ — உய்த்துணர்வின்பாற்படுமோ? எ-று.

அதிபர் என்பது அடிநோக்கிநீண்டது. மிக்கவலியையும் வீரத்தையுமுடைய அசுரசேனைகளையுந்தலைவரையுமழித்தமையால் இலக்கத்தொன்பதின்மரும் பூதரும் மகாவீரர்களே, அற்பர்களல்லர் என்பதாம். (௨௫)

மீதெழு திரைக்கடல் விரைவிற் பாய்ந்துநம்
மூதெயில் வளநகர் முடித்து நின்னுடைக்
காதல னுயிரையுங் கவர்ந்த கள்வனைத்
தூதனென் றுரைப்பது மறிஞர் சூழ்ச்சியோ.

இ—ள்: மீது எழு திரை கடல் விரைவில் பாய்ந்து- மேலாகக்கிளருகின்ற திரைபொருந்தியகடலை விரைவாகக்கடந்து, நம் முது எயில் வள நகர் முடித்து— எங்களது பழையமதிலாற்சூழப்பெற்ற செல்வங்களமைந்தநகரத்தையழித்து, நின் உடை காதலன் உயிரையும் கவர்ந்த கள்வனை — உம்முடையபுத்திரனதுஉயிரையுங் கவர்ந்த வஞ்சகனை, தூதன் என்று உரைப்பதும் அறிஞர் சூழ்ச்சியோ— தூதனென்றுசொல்வதும் அறிவுடையாரதுபுத்தியாகுமா? எ-று.

பற்பலவீரச்செயல்களைச்செய்தானாதலால் மகாவீரனென்பதன்றித் தூதனென்றுகூறுதல் தக்கதன்று என்பதாம். உம்மை- முன்னையது எச்சம்; பின்னையது இழிவு. கடத்தற்கரியகடலென்பான் 'மீதெழுதிரைக்கடல்' எனவும், அழித்தற்கரியநகரமென்பதுபோதர 'மூதெயில்வளநகர்' எனவும் கூறினான். (௨௬)

கற்றையஞ் சிறையுடைக் கலுழ னூர்தரு
கொற்றவன் றிசைமுக னமரர் கோமகன்

மற்றொரு வடிவமாய் வந்த தேயலா
லொற்றுவ னிலைமைவே றுணரற் பாலதோ.

இ—ள்: கற்றையம் சிறை உடை கலுழன் ஊர்தரு கொற்றவன்—கற்றையானசிறகையுடைய கருடவாகனத்திலேறிச்செல்கின்ற திருமாலும், திசைமுகன்—நான்குமுகங்களையுடைய பிரமதேவரும், அமரர்கோமகன்—தேவர்க்கரசனாகிய இந்திரனும், ஒரு வடிவம் ஆய் வந்ததே அலால்—ஒருருவமாகத்திரண்டுவந்ததென்றுகொள்வதேயன்றி, ஒற்றுவன் நிலைமை வேறு உணரற்பாலதோ—(இங்குவந்த) தூதனுடையநிலை வேறுவிதமாக நினைக்கத்தக்கதா? எ—று.

ஏ தேற்றம். கற்றை-தொகுதி. தூதனென்றுநினைப்பது தவறு என்பதாம்.

உன்றனி யிளவலு மொருநின் னோங்கலும்
பொன்றிய காலையே புராரி மைந்தன்மேற்
சென்றிலை யல்லதுன் சேனை தூண்டியும்
வென்றிலை தாழ்த்திவண் வறிது மேவினாய்.

ஞ—ள். உன் தனி இளவலும் ஒரு நின் ஓங்கலும் பொன்றிய காலையே—உமது சிறந்ததம்பியாகியதாரகனும் ஒப்பற்ற உம்முடையகிரவுஞ்சமலையும் அழிந்தபொழுதே, புராரி மைந்தன் மேல் சென்றிலை—சிவபிரானதுபுதல்வராகிய முருகவேள்மீது போர்க்குப்போகாதுவிட்டீர், அல்லது உன் சேனை தூண்டியும் வென்றிலை—நீர்போகாவிடின் உமதுசேனைகளையனுப்பியாயினும் வெற்றிகொண்டிலீர், தாழ்த்து இவண் வறிது மேவினாய்—தாமதித்து இவ்விடத்தில் வாளாவிருந்தீர் எ—று.

ஏ-பிரிநிலை. பின்னையஉம்மை இழிவு. உடனேபோர்க்குச்செல்லாதது தவறு என்பதாம். (உஅ)

தீயழல் வறியதே யெனினுஞ் சீரியோ
ரேயிது சிறிதென வெள்ளற் பாலரோ
வாயத னாற்றலை யடக்க லாரெனின்
மாயிரும் புவியெலா மிறையின் மாய்க்குமால்.

இ—ள்: தீ அழல் வறியது எனினும்—கொடியஅக்கினிப்பொறி சிறிதாயிருந்தாலும், சீரியோர் ஏ இது சிறிது என எள்ளற்பாலரோ—விவேகிகள் ஏ! இது சிறுபொறிதானே என்று பழிப்பார்களா (பழியார்கள் ஏனெனில்), ஆயதன் ஆற்றலை அடக்கலார் எனில்—உடனே அந்தப்பொறியின்வலியையடக்காதுவிடுவார்களானால், மா இரும் புவி எலாம் இறையில் மாய்க்கும்—மிகப்பெரியபூவுலகமுழுவதையும் ஒருமாத்திரைப்பொழுதினுள் அழிக்கும் (ஆதலின்) எ—று.

ஏ-இகழ்ச்சிக்குறிப்பு. பெரியோர்பகை அற்பமாயிருப்பினும் அதனைப்பொருட்படுத்தி உடனே அழிக்கவேண்டும் அழிக்காவிடின் அப்பகைபரந்து அவரைக்கிளையுடன்மாய்க்கும் என்பதுகுறிப்பு. (உகூ)

மாற்றலர் சூழ்ச்சிய தெனினு மாறதாய்
வீற்றொரு நிலைமைய தெனினு மேவுமு
னேற்றெதிர் காப்பரே யென்னி னன்னவர்க்
காற்றரு மிடுக்கண்வந் தடைதற் பாலதோ.

இ—ள்: மாற்றலர் சூழ்ச்சியது எனினும்—பகைவராதுஉபாயமாயிருந்தாலும், மாறது ஆய் வீற்று ஒரு நிலைமையது எனினும்—(அல்லது) தமக்குமாறாகவந்த வேறொருகாரியமானாலும், மேவுமுன் எதிர் ஏற்று காப்பர் என்னின்—வருவதற்குமுன் எதிர்சென்றுதடுத்துக் காப்பார்களானால், அன்னவர்க்கு ஆற்ற

ரும் இங்கண் வந்து அடைதற்பாலதோ—அவர்களுக்குச் சகிக்கக்கூடாததுன்பம்வந்துசேரத்தக்கதா? (சேராதே) எ—று.

வருமுற்காத்தல் வந்துழிக்காத்தல் வந்தபின்காத்தலென்னுமூவகைநெறிகளுள் ஏனையிரண்டுநெறிகளும் சிலகாலங்களிற்றவறவுங்கூடுமாதலின் வருமுற்காத்தலேதக்கது என்பதாம். (௩௦)

துறந்திடா வளந்தனைத் துய்த்துச் செய்வகை
மறந்தன மாகியே வன்மை யாளரை
யெறிந்தவர் தமையிகழ்ந் திங்ஙன் வாழ்துமேற்
சிறந்தவர் யாமலா லேவர் சீரியோய்.

இ—ள்: சீரியோய்—சிறந்தஅரசனே!, துறந்திடா வளம் தனை துய்த்து—அழியாதசெல்வத்தையனுபவித்து, செய்வகை மறந்தனம் ஆகி—செய்யவேண்டியகாரியங்களை மறந்தோமாய், வன்மையாளரை எறிந்தவர் தமை இகழ்ந்து—வலியவீரர்களைக்கொன்றபகைவரை (வலியில்லாதவரென்று) நிந்தித்து, இங்ஙன் வாழ்துமேல்—இங்கே வாழ்ந்திருப்போமானால், யாம் அலால் சிறந்தவர் எவர்—நாங்களன்றிச்சிறந்தவீரர் வேறுயாவர்? எ—று.

நிலையானபெருஞ்செல்வமென்பான் 'துறந்திடாவளம்' எனவும், அத்தகையசெல்வச்செருக்கால் நமக்குவருந்தீங்குகளுக்குத்தீர்வுதேடாமலென்பான் 'வளந்தனைத்துய்த்துச்செய்வகைமறந்தனமாகி' எனவும், இறந்தவீரர்களைப்போல நாமும் பகைவராலிறக்கநேரிடுமென்பதைச் சிந்தியாதென்பான் 'வன்மையாளரையெறிந்தவர்தமையிகழ்ந்து' எனவும், இங்ஙனம்வாழின் யாமெல்லாம் மிக அற்பர்களாவோமென்பான் புகழ்வான்போலப்பழித்து 'சிறந்தவர்யாமலாலேவர்' எனவும் கூறினான். அரசன்முற்கூறுதலால் முன்னிலைவாசகங்களை உளப்பாட்டுத்தன்மையாற்கூறினான். (௩௧)

முன்னமக் குமரன்மேன் முனிந்து சேறியே
லுன்னகர்க் கேகுமோ வொற்று மற்றுநீ
யன்னது புரிந்திலை யாடன் மைந்தனோ
டிந்நக ரழிந்ததென் றிரங்கற் பாலையோ.

இ—ள்: முன்னம் அ குமரன் மேல் முனிந்து சேறியேல்—முந்தியே அந்தச்சிறுவர்மீது கோபித்துப் போருக்குப்போனீராயின், உன் நகர்க்கு ஒற்று ஏகுமோ—உம்முடையநகரத்திற்குத் தூதன்வருவானோ?, நீ அன்னது புரிந்திலை—நீர் அதனைச்செய்யாமல், ஆடல் மைந்தனோடு இ நகர் அழிந்தது என்று இரங்கற்பாலையோ—வலிய வச்சிரவாகுவென்னும்புதல்வனுடன் இந்நகரமழிந்ததென்றுவருந்துதல் தகுமா? எ—று.

பிரிநிலையேகாரந்தொக்கது. தாரகனைக்கொன்றவுடனென்பான் 'முன்னம்' எனவும், உம்முடைய சோர்வையறிந்தே தூதன்வந்தழித்தானென்பான் 'முனிந்துசேறியேலுன்னகர்க்கேகுமோவொற்று' எனவும், உமதுசெய்கைத்தாழ்வினால் வந்ததீங்காதலின் வருந்துதல் தகாதென்பான் 'அன்னதுபுரிந்திலை-இரங்கற்பாலையோ' எனவும் கூறினான். (௩௨)

மொய்யுடை நின்மகன் முடிந்த தன்மையு
மையநின் றிருநக ரழிவ தானதுஞ்
செய்யுறு நிலைமைக டெரிந்து செய்திடா
மையலின் கீழ்மையால் வந்த வாகுமால்.

இ—ள்: ஐய—அரசனே!, மொய் உடை நின் மகன் முடிந்ததன்மையும்—வலிமையுடைய உமதுபுத்திரன் இறந்ததன்மையும், நின் திரு நகர் அழிவது

ஆனதும்—உம்முடைய சிறந்தநகரம் அழிந்ததன்மையும், செய்யுறு நிலைமைகள் தெரிந்து செய்திடாமையலின் கீழ்மையால் வந்த ஆகும்— செய்யவேண்டிய காரியங்களை (அவ்வக்காலங்களில்) ஆராய்ந்துசெய்யாத அறியாமையாகிய தாழ்விஞல்வந்ததீங்குகளாம் எ--று.

முற்செய்யுளிற்கூறியதை இச்செய்யுளால் வற்புறுத்தினன். (௩௩)

கழிந்திடு பிழையினைக் கருதிச் சாலவுள்
ளழிந்திட லியற்கையன் றறிஞர்க் காதலா
லொழிந்தன போகவொன் றுரைப்பன் கேண்மியா
னிழிந்ததென் றுன்னலை யிமைப்பிற் செய்திரே.

இ—ள்: கழிந்திடு பிழையினை கருதி சால உள் அழிந்திடல் அறிஞர்க்கு இயற்கையன்று — முன்னிகழ்ந்தவறுகளைக்குறித்து மிகமனம்வருந்துதல் அறிவுடையார்க்குத்தக்கதன்று, ஆதலால்- ஆதலினல், ஒழிந்தன போக— முன்னிகழ்ந்தவைபோக, ஒன்று உரைப்பன்—ஒருமுடிவுரையைச்சொல்வேன், கேள்--கேட்பீர், இழிந்தது என்று உன்னலை—தவறானபுத்தியென்றுநினைக்கவேண்டாம், இமைப்பில் நீ செய்தி—விரைவில் நீர் அதனைச்செய்வீர் எ—று.

மியா-முன்னிலையசை. போக-வியங்கோள்முற்று. என்வார்த்தையைக்கேட்டபின் முந்தியேபோர்க்குப்போகாது புதல்வருமொருவனையும் நகரத்தையும் அழியவிடுத்தேனேயென்று மனம்வருந்துவீர் அங்ஙனம்வருந்தவேண்டாம் என்பான் படர்க்கைமுகத்தால் 'கழிந்திடுபிழையினைக்கருதிச்சாலவுள்ளழிந்திடலியற்கையன்றறிஞர்க்கு' எனவும், அதனைப்பின்னும்வற்புறுத்துவான் 'ஒழிந்தனபோக' எனவும், இனி முன்போல் யாதொருபிழையும்வாராவண்ணந் தக்கவுபாயமொன்றைக்கூறுவனென்பான் 'ஒன்றுரைப்பன்' எனவும், இச்சபையிலுள்ளாருள் எவரெவ்வாறுகூறினும் அவற்றைப்பொருட்படுத்தாது என்புத்தியையேகடைப்பிடிப்பீரென்னுங்குறிப்புத்தோன்ற 'கேள்' எனவும், அவ்வாறுகேட்டொழுகிற்றீமையொன்றும்வாராதென்பான் 'இழிந்ததென்றுன்னலை' எனவும், நம்பிச்செய்வீரென்பான் 'இமைப்பிற்செய்திரே' எனவும் கூறினன். (௩௪)

ஆயது பிறவிலை யவுணர் தம்மொடு
மேயின படையொடும் விரைந்து கண்ணுதற்
சேயினை வளைந்தமர் செய்யப் போதியா
னீயினித் தாழ்க்கலை நெருநல் போலவே.

இ—ள்: ஆயது பிற இலை—யான்சொல்லும்புத்தி வேறொன்றுமன்று, அவுணர்தம்மொடும் மேயின படையொடும்- அசுரவீரர்களோடும் இங்குள்ளசேனைகளோடும், விரைந்து கண்ணுதல் சேயினை வளைந்து அமர்செய்ய போதி-விரைவிற் சிவகுமாராகியமுருகவேளைச்சூழ்ந்து போர்செய்யப் போவீர், நெருநல் போல நீ இனி தாழ்க்கலை—முன்போல நீர் இனித்தாமதஞ்செய்யாதீர் எ—று.

போர்க்குப்போகாது தாமதித்தமை தவறென்று முன்கூறிமுடித்தானாதலின் 'ஆயதுபிறவிலை' எனவும், பகைவர் சிறந்தவீரராதலின் எல்லாச்சேனைகளோடும் எல்லாவீரர்களோடும் ஒருங்குபோய்வளைதல்வேண்டுமென்பதுபோதர 'அவுணர்தம்மொடுமேயினபடையொடும்-போதி' எனவும், பராமுகஞ்செய்யாதீரென்பான் 'நீயினித்தாழ்க்கலைநெருநல்போல' எனவும் கூறினன். (௩௫)

என்றிவை மேதிய னிசைப்பக் கேட்டலு
நன்றிது வாமென நவின்று கையெறிந்
தொன்றிய முறுவலு முதிப்ப நல்லறங்
கொன்றிடு தூர்க்குண னினைய கூறுவான்.

இ—ள்: என்று இவை மேதியன் இசைப்ப—என்று இந்தவாசகங்களை மகிடனென்னுமந்திரிசொல்ல, கேட்டலும்—கேட்டவுடன், நல் அறம் கொன்றிடு துர்க்குணன்—நல்வழிப்படுத்துவதாகிய தருமநெறியைத்தவிர்த்த துர்க்குணனென்னுமந்திரியானவன், இது நன்று ஆம் என நவின்று கை எறிந்து—இது நல்லதென்றுகூறிக் கைதட்டி, ஒன்றிய முறுவலும் உதிப்ப—இயைந்ததாகிய சிரிப்புத்தோன்ற, இனைய கூறுவான்—இவற்றைச்சொல்வான் எ—று.

நன்று-குறிப்பாற்பழித்தது. பாவநெறிகளையேபோதிக்கின்றவென்பார் 'அறங்கொன்றிடு' எனவும், பழிப்பார்க்குச்சிரிப்புமுடன்றோன்றுவதியல்பாதலின் 'ஒன்றியமுறுவலுமுதிப்ப' எனவும் கூறினர். (௩௬)

வன்றிற லுவணன்மேல் வந்த மாயன்மே
னின்றிடு மமரர்மே னேர்ந்து போர்செயச்
சென்றிலை யிளையராற் றிறல்கொண் டேகினை
யின்றினிப் பாலன்மே லேக லாகுமோ.

இ—ள்: வன் திறல் உவணன் மேல் வந்த மாயன் மேல்—மிக்கவலிமையையுடைய கருடவாகனத்தில் ஏறிவந்த திருமாலின்மேலும், நின்றிடும் அமரர் மேல்—மற்றைய தேவர்கள்மேலும், நேர்ந்து போர் செய சென்றிலை—எதிர்த்துப் போர்செய்யப்போகாமல், இளையரால் திறல்கொண்டு ஏகினை—தம்பிமார்களால் வெற்றிபெற்றுவந்தநீர், இனி இன்று பாலன் மேல் ஏகல் ஆகுமோ—இனி இந்நாளிற் சிறுவன்மீது போர்செய்யச்செல்லுதல் தகுமா? (தகாதே) எ—று.

திருமால்முதலிய தேவர்களினும் முருகவேள் மிகக்குறைந்தவலியுடையாரென்பது இவனுடைய கருத்தாதலின் இவ்வாறுகூறினன். ஏகினை-முன்னிலைவினையாலணையும்பெயர். (௩௭)

இறுதியி லாயுளு மிலங்கு மாழியு
மறுவிலா வெறுக்கையும் வலியும் வீரமும்
பிறவுள திறங்களுந் தவத்திற் பெற்றனை
சிறுவனோ டேயமர் செய்தற் கேகொலாம்.

இ—ள்: இறுதி இல் ஆயுளும்—அழியாத வாழ்நாளையும், இலங்கும் ஆழியும்—விளங்குகின்ற ஆஞ்ஞாசக்கரத்தையும், மறு இலா வெறுக்கையும்—குற்றமற்ற செல்வத்தையும், வலியும் வீரமும்—வலிமையையும் வீரத்தையும், பிற உள திறங்களும்—வேறுமுள்ள பலவரங்களையும், சிறுவனொடு அமர் செய்தற்கு ஆம் கொல்—பாலகனோடு போர்செய்தற்கா, தவத்தில் பெற்றனை—தவஞ்செய்துபெற்றுக்கொண்டீர்? எ—று.

இவைகளின்றியுஞ் சிறுவனாகியபகைவனைவெல்லலாம் என்பதாம். ஆயிரத்தெட்டண்டங்களையுமடக்கியாளுஞ்சக்கரமென்பான் 'இலங்குமாழி' எனவும், நிறைந்தசெல்வமென்பான் 'மறுவிலாவெறுக்கை' எனவும் கூறினன். மறுவிலா என்பதை வலிக்கும்வீரத்திற்குமொட்டுக. (௩௮)

மேதகு பசிப்பிணி யலைப்ப வெம்பலிக்
காதல்கொண் டலமருங் கணங்க டம்மையுந்
தூதுவன் றன்னையுந் தொடர்ந்து போர்செயப்
போதியோ வமரரைப் புறங்கண் டுற்றுளாய்.

இ—ள்: அமரரை புறங்கண்டு உற்றுளாய்—தேவர்களைப் புறங்கொடுக்கச் செய்திருக்கின்ற வீரராகிய நீர், மேதகு பசி பிணி அலைப்ப வெம் பலி காதல் கொண்டு அலமரும் கணங்கள் தம்மையும்—பெரும்பசியாகியநோய்வருத்துத

லாற் கொடியபலிகளில் விருப்பங்கொண்டு அலைகின்ற பூதர்களையும், தூதன் தன்னையும்— தூதனையும், தொடர்ந்து போர் செய போதியோ—தேடிப்போர்செய்தற்குப்போகின்றீரா? எ—று.

மகாவீரரையஞ்சுவித்த நீர் இந்த அற்பர்களை எதிராக நினைத்துப்போர்செய்யச்செல்லுதல் தவறு என்பதாம். தனியிடங்களிலிருந்து எதிர்ப்பட்டபிராணிகளினுயிரைப்போக்கியும் இரத்தமுதலியவைகளையுட்கொண்டும் உழல்கின்றவென்பான் 'வெம்பலிக்காதல்கொண்டலமரும்' என்றான். (௩௯)

இன்றுநின் பெரும்படைக் கிறைவர் யாரையுஞ்
சென்றிட விடுக்குதி சிறிது போழ்தினிற்
குன்றெறி பகைஞனைக் கூளி தம்மொடும்
வென்றிவண் மீள்குவர் வினைய மீதென்றான்.

இ—ள்: இன்று நின் பெரும் படைக்கு இறைவர் யாரையும் சென்றிட விடுக்குதி—இத்தினத்திற்றானே உம்முடைய சிறந்த சேனைக்குரியதலைவர்களெல்லோரையும் போர்க்குப்போகும்படியனுப்புவீர், குன்று எறி பகைஞனை கூளி தம்மொடும் சிறிது போழ்தினில் வென்று இவண் மீள்குவர்-(அவர்கள்) கிரவுஞ்சமலையைப்பிளந்த பகைவராகியமுருகவேளைப் பூதசேனைகளுடன் அற்பநேரத்துள்வென்று இவ்விடத்திற்றிரும்பிவருவார்கள், வினையம் ஈது என்றான்—செயற்பாலதாகியஉபாயம் இதுவே என்று (துர்க்குணன்) சொல்லிமுடித்தான் எ—று.

பகைவர்மகாவீரராதலின் நீரேபோர்க்குப்போகவேண்டுமென்று கூறிமுடித்தமகிடனது கோட்பாட்டைமறுத்து, நீர் போர்க்குச்செல்லுதல் தகாதென்றும் சேனைவீரரையனுப்பி வெற்றிகொள்ளலாமென்றும் இவன்கூறிமுடித்தானென்க. (௪௦)

கருதிடு துர்க்குணக் கயவ னின்னன
வுரைதரு முடிவினி லொழிக வீங்கெனக்
கருமணி யாழியங் கைய மைத்தரோ
தருமவெம் பகையுடை யமைச்சன் சாற்றுவான்.

இ—ள்: கருதிடு துர்க்குண கயவன் இன்னன உரைதரும் முடிவினில்—(மந்திரிமாருளொருவனாக) மதிக்கப்படுகின்ற துர்க்குணனாகிய கீழ்மகன் இவைபோல்வனவற்றைக்கூறியமுடிவில், ஈங்கு ஒழிக எனா - இத்துணையில் அமைக என்று, கரு மணி ஆழியம் கை அமைத்து—நீலரத்தினமழுத்தப்பெற்ற மோதிரத்தையணிந்தகையையமைத்துக்காட்டி, தரும வெம் பகை உடை அமைச்சன் சாற்றுவான்— தருமத்தினுடன் கொடியபகைமையையுடைய மந்திரிசொல்வான் எ—று.

தருமவெம்பகையுடையமைச்சன்-தருமகோபனாகியமந்திரி, கருதிடு-ஆலோசித்துப்பேசுகின்ற எனினுமாம், தன்கருத்தைக்கூறிமுடித்தற்கிதுவேயிடையாதலானும் அதிகாரமுடையனாதலானும் கையமைத்தனன். (௪௧)

குலம்படு நவமணி குயின்று பொன்புனை
யலம்படை கொண்டுபுன் முதிரை யாக்கத்தாற்
புலம்படக் கீறுவ போலும் வீரநீ
சிலம்படி மைந்தனோ டாடல் செய்வதே.

இ—ள்: வீர—வீரரே!, நீ சிலம்பு அடி மைந்தனோடு ஆடல் செய்வது—நீர் சிலம்பையணிந்த கால்களையுடைய சிறுவனோடு போர்செய்யப்புகுவது, குலம் படு நவ மணி குயின்று பொன் புனை அலம் படை கொண்டு—சாதியானுயர்ந்த நவ

ரத்தினங்களையழுத்திப் பொன்னாற்செய்யப்பட்ட கலப்பையைக்கருவியாகக்கொண்டு, புன் மூரிரை ஆக்கத்தால் புலம் பட கீறுவ போலும்— புன்செய்த்தானியங்களின்விளைவைவிரும்பிப் புன்றரைகளிற்படும்படி கீறுவதுபோலும் எ—று.

விலையுயர்ந்த இரத்தினமென்பான் 'குலம்படுநவமணி' என்றான். நன்செய்களிலுபயோகிக்கற்பாலதாகிய சிறந்தகலப்பையைப் புன்செய்த்தரைகளிலுபயோகித்தால் தக்கபயனெய்தாமையேயன்றி அந்தக்கருவியின் மதிப்புங்குன்றுதல்போல, பெருவீரரிடங்காட்டற்பாலதாகியஉமதுபோர்வலியைச் சிறுபாலனிடங்காட்டப்புகின் தக்கபயனைஎய்தமாட்டீர் உமதுமதிப்புங்குன்றும் என்பதாம். ()

மேலுயர் கண்ணுதல் விமல னன்றெனி
ஞாலவ னன்றெனி னயனு மன்றெனிற்
காலனு மன்றெனிற் காவல் வீரநீ
பாலனொ டமர்செயிற் பயனுண் டாகுமோ.

இ—ள்: மேல் உயர் கண் நுதல் விமலன் அன்று எனின்— மேன்மைபெற்றுச்சிறந்த நெற்றிக்கண்ணையுடைய உருத்திரமூர்த்தியல்லராயின், ஆலவன் அன்று எனின்— ஆலிலையிற்றுயிலுகின்ற திருமாலுமல்லராயின், அயனும் அன்று எனில்— பிரமதேவருமல்லராயின், காலனும் அன்று எனில்— யமனுமல்லனானால், காவல் வீர— உலகத்தைக்காக்கின்றவீரரே!, நீ பாலனொடு அமர் செயில் பயன் உண்டாகுமோ— நீர் சிறுபாலனோடு போர்செய்வதனால் யாதேனும் பயனுண்டா? (இல்லையே) எ—று.

சிறந்தவீரரோடன்றிச்சிறுபாலரோடு போர்செய்வதாற்பயனின்று என்பதாம். அரசர்க்கரசராகியவீரரேயென்பான் 'காவல்வீர' என்றான். முற்செய்யுளிற் கூறிய கருத்தைவற்புறுத்தியது இச்செய்யுளென்க. மேலுயர் விமலன் எனஇயையும். கண்ணுடனியைத்து ஏற்றவாறுபொருள்கூறினுமாம். (௪௩)

மன்னிளங் குதலைவாய் மதலை மீதினு
மின்னினி யமர்செய விறத்தி யென்னினு
மன்னவ னினதுபே ராற்றல் காண்பனேல்
வென்னிடு மெதிர்ந்துபோர் விளைக்க வல்லனோ.

இ—ள்: மன் இளம் குதலை வாய் மதலை மீதின்— மிக இளமையான நிரம்பா மென்சொல்லைப்பேசுகின்ற வாயையுடைய பாலகனோடு, இன்னினி அமர் செய இறத்தி என்னினும்— இனிப்போர்செய்யச்செல்வீராயினும், அன்னவன்— அவன், நினது பேர் ஆற்றல் காண்பனேல்— உம்முடைய பெரியவலியைக்கண்டால், வென்னிடும்—புறங்காட்டியோடுவான், எதிர்ந்து போர் விளைக்க வல்லனோ— எதிர்த்துப்போர்செய்யவல்லவனோ? எ—று.

என்னினுமென்ற உம்மை போர்க்குச்செல்லமாட்டீரென்பதைச்சுட்டிநிற்றலின் எதிர்மறை. முந்திய உம்மை அசைநிலை. (௪௪)

நேரலர் தங்களை நேர்ந்து ளாரெனப்
பேரிக லாற்றியே பெரிது மாய்வது
பூரியர் கடனலாற் புலமைக் கேற்பதோ
சீரியர் கடனவை தெரிந்து செய்வதே.

இ—ள்: நேரலர் தங்களை நேர்ந்துளார் என பேர் இகல் ஆற்றி பெரிது மாய்வது— தமக்கெதிராகாத அற்பர்களை எதிரிகளென்றுநினைத்துப் பெரும்பகைசாதித்து மிகவருந்துவது, பூரியர் கடன் அலால் புலமைக்கு ஏற்பதோ—கீழோருடையகடனன்றி அறிவுடைமைக்கேற்றசெயலாகுமா?, அவை தெரிந்து செய்வதே சீரியர் கடன்—அவற்றையாராய்ந்துசெய்வதே விவேகிகளுடைய கடமையாம் எ—று.

பின்னைய ஏ-பிரிவில. அற்பமானபகையையடக்குதற்காக அதிகமானமுயற்சியைச்செய்வது வீண் என்பதாம். (௬௫)

எரிமுக னிரணிய னெனுமுன் மைந்தரி
லொருவனுக் காற்றல ரிலக்கத் தொன்பது
பொருதிறல் வயவரும் பூதர் யாவரு
மரனருள் புரிதரு மறுமு கத்தனும்.

இ—ள்: எரிமுகன் இரணியன் எனும் உன் மைந்தரில் ஒருவனுக்கு- அக்கினிமுகனும் இரணியனுமென்றுசொல்லப்படுகின்ற உமதுபுத்திரர்களுள் ஒருவனுக்கு, இலக்கத்து ஒன்பது பொரு திறல் வயவரும்- இலக்கத்தொன்பதென்னுந்தொகைப்பட்ட போர்செய்யத்தக்க வலியினையுடைய வீரர்களும், பூதர் யாவரும்—எல்லாப்பூதர்களும், அரன் அருள்புரிதரும் அறுமுகத்தனும்- சிவபிரான் பெற்றபுதல்வராகியமுருகவேளும், ஆற்றலர்—எதிர்நிற்கமாட்டார்கள் எ—று.

இவ்விருபுதல்வருளொருவரையனுப்புவதும் வீண் என்பதாம். (௬௬)

கிள்கொடு நகங்கொடு கிள்ளு மொன்றினை
வாள்கொடு தடியுமோ வன்மை சான்றதோ
ராள்கொடு முடித்திடு மவரை வென்றிட
நீள்கொடு மரங்கொடு நீயுஞ் சேறியோ.

இ—ள்: கிள் கொடு நகம் கொடு கிள்ளும் ஒன்றினை—கிழிக்கின்ற வளைந்த நகத்தினாற்கிள்ளத்தக்க ஒருபொருளை, வாள் கொடு தடியுமோ—வாட்படையினால் ஒருவன்வெட்டுவானா? (வெட்டானே; அதுபோல), வன்மை சான்றது ஓர் ஆள் கொடு முடித்திடும் அவரை வென்றிட—வலிமைமிருந்த ஒருபடைவீரனால் அழிக்கத்தக்க அந்தப்பகைவரைவெல்லுதற்கு, நீள் கொடுமரம் கொடு நீயும் சேறியோ— நெடியவில்லையேந்திக்கொண்டு நீரும்போகின்றீரா? (போகாதீர்) எ—று.

உம்மை சிறப்பு. உம்முடைய புதல்வருள் ஒருவர்க்கேனுமாற்றாத அற்பரையழிக்க அரசர்க்கரசராகிய நீர் புகுவது தகாதகாரியம்என்பதைத் திருட்டாந்தமுகத்தான் வற்புறுத்தினன். (௬௭)

மாணிமை கூடுறு மகவு தன்னொடு
மேணறு சாரத ரினங்க டம்மொடும்
பூணுதி செருவெனும் புகற்சி கேட்பரே
னாணுவர் நமரெலா நகுவர் தேவரும்.

இ—ள்: மாண் இமை கூடுறு மகவு தன்னொடும்—சிறந்த இமைகள்பொருந்தப்பெறாத சிறுபாலனோடும், ஏண் அறு சாரதர் இனங்கள் தம்மொடும்—வலிமையில்லாத பூதர்கூட்டத்தோடும், செரு பூணுதி எனும் புகற்சி கேட்பரேல்—போர்தொடங்குகின்றீரென்ற சொல்லைக்கேட்பார்களாயின், நமர் எலாம் நாணுவர்- நம்மவர்களெல்லாரும் வெட்கப்படுவார்கள், தேவரும் நகுவர்- தேவர்களுஞ்சிரிப்பார்கள் எ—று.

மிகச்சிறுபிராயமான புதல்வனென்பான் 'மாணிமைகூடுறுமகவு' எனவும், தகுதியற்றகாரியத்தைச்செய்யப்புகுதலால் உமக்குவருமிழிவாவைத் தமக்குவருவதாக நினைப்பரென்பான் 'நாணுவர்' எனவும், அங்ஙனம்புகின் உம்முடைய ஆற்றலைமதித்துத் தேவர்கள் அஞ்சமாட்டார்களென்பான் 'நகுவர்தேவரும்' எனவும் கூறினன். மாணிமை-மாட்சிமையெனினுமாம். (௬௮)

பொற்றறையை முடித்தனன் பொருவி றம்பியைச்
செற்றன னென்றிளஞ் சிறுவன் றன்னையும்

வெற்றிகொள் புதல்வனை வீட்டி னானென
வொற்றையு மதித்தனை தொன்மை யுன்னலாய்.

இ—ள்: பொற்றையை முடித்தனன்—கிரவுஞ்சமலையையழித்தான், பொரு இல் தம்பியை செற்றனன்—ஒப்பில்லாத தாரகனாகியதம்பியையுங்கொன்றான், என்று—என்னுங்காரணங்களால், இளம் சிறுவன் தன்னையும்—பாலியப்பிராயத்தையுடைய சிறுவனையும், வெற்றி கொள் புதல்வனை வீட்டினான் என—வெற்றியையுடைய உமது இளையபுதல்வனைக்கொன்றானென்றதனால், ஒற்றையும்—அவனது தூதனையும், மதித்தனை-வீராகமதித்தீர், தொன்மை உன்னலாய்-உமது பழமைகளை நினைத்திலீர் எ—று.

முன்பெற்றுக்கொண்ட வரங்களையும் வீரங்களையும் வெற்றிகளையும் பிறவற்றையுஞ் சிந்தித்தீரேல் இவ்வாறுமதிக்கமாட்டீர், அவர்களை அற்பராகமதிப்பீர் என்பதாம். (௪௯)

ஆறணி செஞ்சடை யண்ண றந்திடும்
பேறுடை வேலினைப் பிள்ளை யுய்த்தலு
மாறுள படையினான் மாற்ற லாமையா
லீறது வாயின னிளவ றாரகன்.

இ—ள்: பிள்ளை—முருகவேள், ஆறு அணி செம் சடை அண்ணல் தந்திடும் பேறு உடை வேலினை உய்த்தலும்—கங்கைநதியையணிந்த சிவந்த சடைமுடியையுடைய சிவபிரான்கொடுத்த மகிமையையுடைய வேற்படையைச்செலுத்த, இளவல் தாரகன்—உமது தம்பியாகிய தாரகாசுரன், மாறு உள படையினால் மாற்றலாமையால்— எதிரான தெய்வப்படையாலழியாதுநின்றதனால், ஈறது ஆயினன்—அழிவையடைந்தான் எ—று.

தக்க எதிர்ப்படையைச்செலுத்தாமையாலிறந்தானேயன்றி வலி முதலியவற்றின்குறைவாலிறந்திலன் என்பதாம். இதுமுதன்மூன்றுசெய்யுட்கள் முற்செய்யுளிற்சுட்டிக்கூறப்பட்ட ஞானதுகோட்பாட்டைநிராகரிப்பன. (௫௦)

குறுமுனி தொல்லைநாட் கூறும் வாய்மையா
லிறுதியை யடைந்ததாங் கிருந்த மால்வரை
யறிகிலை யீதெலா மாற்றல் கூடுறாச்
சிறுவன செய்கையே சிந்தை கோடியால்.

இ—ள்: குறுமுனி தொல்லைநாள் கூறும் வாய்மையால்— அகத்தியமுனிவர் முன்னாளிற்சொன்னசாபத்தினால், ஆங்கு இருந்த மால் வரை இறுதியை அடைந்தது— அவ்விடத்திலிருந்த பெரியகிரவுஞ்சமலை அழிவையெய்தியது, ஈது எலாம் அறிகிலை—இந்தநுட்பங்களொன்றையுமறியாமல், ஆற்றல் கூடுறா சிறுவன செய்கையே சிந்தைகோடி— வலிமைபொருந்தப்பெறாத பாலகனது செயல்களையே (பெரியனவாக) மனத்திற்கொள்கின்றீர் எ—று.

அழியுங்காலவெல்லைவந்ததனாலழிந்ததன்றி முருகவேளினாற்றலாலழிந்ததன்று என்பதாம். சிறுவன என்பதில் அகரம் ஆறனுருபு. ஏ-பிரிநிலை. (௫௧)

எச்சமொ டழிவுறா விரதஞ் சாலிகை
கைச்சிலை பெற்றிலன் கருதி நீயவை
யச்சொடு புரிந்திலை யதனிற் றாதனால்
வச்சிர வாகுவா மகனுந் துஞ்சினான்.

இ—ள்: எச்சமொடு அழிவுறா இரதம் சாலிகை கை சிலை பெற்றிலன்—யாகஞ்செய்து அழியாததேரையுஞ்சட்டையையும் கையிலேந்தப்படுகின்ற வில்லையும் பெற்றிலான், நீ கருதி அவை அச்சொடு புரிந்திலை-நீர் அதனைநினைத்து அவை

களை அடையாளமாகக்கொடாதுவிட்டனர், அதனில்—ஆதலால், வச்சிரவாகு ஆம் மகனும்—வச்சிரவாகுவென்னும்புதல்வனும், தூதனால் துஞ்சினன்— தூதனாலி றந்தான் எ—று.

போர்க்குவேண்டிய சிறந்தகருவிகளின்மையாலிறந்தான் என்பதாம். (௫௨)

> பலவினி மொழிவதென் படியி றானவத்
> தலைவரி லொருவனை விளித்துத் தானையோ
> டிலையயின் முருகன்மே லேவு வாயெனி
> னலைவுசெய் தொல்லையி லடல்பெற் றேகுவான்.

இ—ள்: இனி பல மொழிவது என்—இன்னும் பலவசனங்களைச்சொல்லு தலாற்பிரயோசனம்யாது?, படி இல் தானவ தலைவரில் ஒருவனை விளித்து— ஒப்பில்லாத சேனைத்தலைவர்களுளொருவனையழைத்து, தானையோடு—சேனைகளுடன், இலை அயில் முருகன் மேல் ஏவுவாய் எனின்—இலைத்தொழின்முற்றிய வேற்படையையேந்தியமுருகவேள்மீது போர்க்கனுப்புவீராயின், அலைவுசெய்து ஒல்லையில் அடல்பெற்று ஏகுவான்— அவன் அவர்களையலைத்து விரைவில் வெற்றிகொண்டு மீண்டுவருவான் எ—று.

இங்குள்ளஅசுரசேனைத்தலைவருள் வீரம் வலி உபாயம்முதலியவற்றாற்சிறந்தாெனாருவனைத்தெரிந்தழைத்தென்பான் ‘படியிறானவத்தலைவரிலொருவனைவிளித்து’ என்றான். (௫௩)

> அன்னது செய்கென வறத்தைச் சீறுவான்
> சொன்னதோ ரிறுதியின் முறுவ றோன்றிடக்
> கன்னிகர் மொய்ம்புடைக் கால சித்தெனுங்
> கொன்னவில் வேலினா னினைய கூறுவான்.

இ—ள்: அன்னது செய்க என—(ஆதலால்) அப்படிச்செய்வீரென்று, அறத்தை சீறுவான் சொன்னது ஒர் இறுதியில்—தருமகோபன்சொல்லிமுடித்தமுடிவில், கல் நிகர் மொய்ம்பு உடை காலசித்து எனும் கொன் நவில் வேலினான்—மலையைநிகர்த்தபுயங்களையுடையகாலசித்தென்றுசொல்லப்படுகின்ற எவர்க்குமச்சத்தைவிளைக்கின்றவேற்படையையுடையவீரன், முறுவல் தோன்றிட— குறுநகையுண்டாக, இனைய கூறுவான்—இவற்றைச்சொல்வான் எ—று.

நவிலல்-செய்தல். முன் மந்திரிமார்கூறியவசனங்கள் தனக்கிணங்காமையாற் சிரித்தானென்க. (௫௪)

> செந்தியி னிருந்திடுஞ் சிறுவன் சாரதர்
> தந்தொகை தன்னொடு மீண்டு சாருமே
> லெந்தையோர் சிலவரை யேவ லல்லது
> மந்திரம் வேண்டுமோ மற்றி தற்குமே.

இ—ள்: செந்தியின் இருந்திடும் சிறுவன் சாரதர் தம் தொகை தன்னொடும் ஈண்டு சாருமேல்—திருச்செந்திப்பதியில்வந்திருக்கின்றபாலகர்பூதர்கூட்டத்தோடு இந்நகரிற் போர்க்குவருவாராயின், எந்தை ஓர் சிலவரை ஏவல் அல்லது—எங்களரசராகியநீர் சிலவீரரையனுப்பிவெல்வதன்றி, இதற்கும் மந்திரம் வேண்டுமோ– இதற்கும் ஒரு அமைச்சியல்வேண்டியதா? எ–று.

எந்தை-முன்னிலையில்வந்தபடர்க்கை. உம்மை இழிவு. இங்கேபோர்க்குவந்தபின் வீரரையனுப்பிவெல்வதன்றிப் பகைவரிருக்குமிடத்தைத்தேடிப்போவது தகாதென்பது இவனுட்கிடை. செந்திப்பதியைச் சயந்திபுரமென்பர் வடநூலார்.

> வயந்தனை தையனை வாச வன்றனைச்
> சயந்தனைப் பிறர்தமைச் சமரின் வென்றநா

ளியைந்தெமை வினவலை யின்றோர் பாலற்கா
வியன்பெரு மந்திரம் வேண்டிற் றுங்கொலோ.

இ—ள்: வயந்தனது ஐயனை வாசவன் தனை சயந்தனை பிறர் தமை சமரின் வென்ற நாள்—மன்மதனது பிதாவாகிய திருமாலையும் இந்திரனையும் சயந்தனையும் மற்றையோர்களையும் போரில்வெற்றிகொண்டகாலத்தில், இயைந்து எமை வினவலை—மனமியைந்து எங்களைக்கேட்டீரில்லை, இன்று ஓர் பாலற்கு ஆ வியன் பெரு மந்திரம் வேண்டிற்று ஆம் கொல்—இத்தினத்தில் ஒருசிறுவனுக்காக மிகப் பெரிய அமைச்சியல் வேண்டப்பட்டதா? எ—று.

வசந்தன் என்பதுபோலியாயிற்று. வசந்தகாலத்தைத்தன்றொழிற்கேற்றதாகவுடையானென்பதுபொருள். சிறந்தபுகழ்படைத்ததலைவரையெல்லாம் ஒருவரோடும் ஆலோசியாதுவென்ற உமக்கு ஒருசிறுவனைவெல்லுதற்கண் இத்துணைப்பெரியஅமைச்சியல் வேண்டியதில்லையே என்பதுகருத்து. (௫௬)

அண்டர்க ளொடுங்கின ரரக்க ரஞ்சின
ரெண்டிசைக் கிழவரு மேவ லாற்றுவர்
மண்டம ரவுணரின் வலியர் பூதராங்
கண்டன மின்றியாங் கலியின் வண்ணமே.

இ—ள்: அண்டர்கள் ஒடுங்கினர்—தேவர்கள்யாவரும் (எமக்கு)அடங்கினார்கள், அரக்கர் அஞ்சினர்—இராக்கதர்கள்பயந்தார்கள், எண் திசை கிழவரும் ஏவல் ஆற்றுவர்—திக்குப்பாலர்களெண்மரும்ஏவல்களைச்செய்கின்றார்கள், மண்டு அமர் அவுணரின் பூதர் வலியர் ஆம்—இவ்வாறே நெருங்கியபோரில் வென்றிபெற்ற அசுரர்களினின்று பூதர்கள் வலிமையுள்ளவர்களாம், யாம் கலியின்வண்ணம் இன்று கண்டனம்—நாங்கள் கலியுகத்தினியல்பை இன்றைக்குக் கண்டுகொண்டோம் எ—று.

சிறந்தவீரராகியதம்மை அற்பராகிய பூதர்வெல்லக்கருதியமையால் இவ்வாறுகூறினான். உயர்ந்தோர்தாழ்வதும் தாழ்ந்தோருயர்வதும் கலியுகத்தினியல்பு. பலகாலஞ்சென்றபின்பிறப்பதாகிய கலியுகத்தினியல்பு இப்பொழுதேதோன்றிற்றெனப்பரிகசித்துக்கூறினனென்க. பெரும்போரென்பான் 'மண்டமர்' என்றான். (௫௭)

பணிக்குதி தமியனைப் பரமன் மைந்தனைக்
கணத்தொகை வீரரைக் கால பாசத்தாற்
பிணித்திவண் வருகுவ னென்று பேசலுந்
துனைக்கெனச் சண்டனென் றொருவன் சொல்லுவான்.

இ—ள்: தமியனை பணிக்குதி—அடியேனுக்கு அனுமதிகொடும், (கொடுத்தால்), பரமன் மைந்தனை—சிவபிரானதுபுதல்வரையும், கணத்தொகை வீரரை—பூதகணவீரர்களையும், காலபாசத்தால் பிணித்து—யமபாசத்தாற்கட்டி, இவண் வருகுவன்—இவ்விடத்தில்வருவேன், என்று பேசலும்—என்றுகாலசித்தென்பான்கூறுதலும், சண்டன் என்று ஒருவன்—சண்டனென்கின்ற ஒருவீரன், துனைக்கென சொல்லுவான்—விரைவாகச்சொல்வான் எ—று.

துனைக்கு-விரைவுக்குறிப்பு. காலனைப்போரில்வென்று அவனிடத்துள்ள பாசத்தைப்பறித்துக் காலசித்தென்னும்பெயர்பெற்றானாதலின் காலபாசத்தாற்கட்டிவருவேனென்றுகூறினன். (௫௮)

கழிபசி நோயடங் கவலும் பூதரு
மழலையம் பிள்ளையு மற்ற வற்குறு
தொழில்புரி சிலவருஞ் சூழ்ச்சிப் பாலரோ
வழகிது மந்திர மவுணர்க் காற்றவே.

இ—ள்: கழி பசி நோய் அட கவலும் பூதரும்— மிகுந்தபசிநோயானதாலே தலாற் கவலைப்படுகின்ற பூதர்களும், மழலையம் பிள்ளையும்- நிரம்பாமென்சொல்லைப்பேசுகின்ற பாலரும், அவற்கு உறு தொழில் புரி சிலவரும்— அந்தப்பாலருக்குவேண்டிய தொண்டுகளைச்செய்கின்ற சிலபரிசனர்களும், சூழ்ச்சிப்பாலரோ— ஆலோசிக்கப்படவேண்டியவர்களா?, அவுணர்க்கு மந்திரம் ஆற்ற அழகிது—அசுரர்களுடையஅமைச்சியல் மிகநன்றாயிருக்கின்றது! எ--று.

பசியினால்வருந்துகின்றவர்களும் குழந்தையும் எவலாளருமாகியஇவர்கள் வலியற்றவர்களாதலால் அவர்களைவெல்லுதற்காக அமைச்சியல்செய்யவேண்டியதில்லை என்பதாம். அழகிது குறிப்பாற்பழித்தது. (௫௯)

கொல்லுவன் பூதரைக் குமரன் றன்னையும்
வெல்லுவன் பிறரையும் விளிவு செய்வனான்
மல்லலந் தோளுடை மன்னர் மன்னவுன்
சொல்லதின் றென்னவித் துணையுந் தாழ்த்துளேன்.

இ—ள்: மல்லலம் தோள் உடை மன்னர் மன்ன—வலிமைபொருந்திய புயங்களையுடைய அரசர்க்கரசரே!, பூதரை கொல்லுவன்- (யான்போய்) பூதர்களைக்கொல்வேன், குமரன் தன்னையும் வெல்லுவன்-முருகக்கடவுளையும் வெல்வேன், பிறரையும் விளிவு செய்வன்—மற்றைவீரர்களையும் அழிப்பேன், உன் சொல்லது இன்று என்ன இத்துணையும் தாழ்த்துளேன்- உம்முடையஅனுமதியில்லாமையால் இதுகாறுந்தாமதித்துள்ளேன் எ-று.

உம்மைகள் எச்சங்கள். (௬0)

ஏவுதி தமியனை யிமைப்பிற் சென்றியான்
மூவர்கள் காப்பினு முரணிற் றாக்கியே
தூவுறு சார்தத் தொகுதி தன்னொடு
மேவலன் றனையிவண் வென்று மீள்வனால்.

இ—ள்: தமியனை ஏவுதி—என்னை விடைகொடுத்தனுப்புக, யான் இமைப்பில் சென்று—யான் நொடிப்பொழுதினுட்போய், மூவர்கள் காப்பினும் முரணில் தாக்கி- மும்மூர்த்திகளும்வந்து காத்தாலும் வலிமையுடன்அடர்த்து, தூ உறு சாரத தொகுதி தன்னொடு— தசைகளிற்சென்றுமொய்க்கின்ற பூதகணங்களுடன், மேவலன் தனை வென்று--பகைவராகிய முருகவேளைவெற்றிகொண்டு, இவண் மீள்வன்— இந்நகர்க்குத் திரும்பிவருவேன் எ—று.

தாக்கி வென்று என இயையும். உம்மை-சிறப்பு. தூ பற்றுக்கோடும் பகையும் வலியுமெனக்கொண்டு அவ்வவற்றிற்கேற்றவாறுரைப்பினுமாம். (௬௧)

எனவிவை சண்டனங் கிசைத்த வெல்லையி
னனலியென் றுரைத்திடு மவுணர் காவலன்
சினமொடு முறுவலுஞ் சிறிது தோன்றிட
வினையமொ டிம்மொழி விளம்பல் செய்குவான்.

இ—ள்: சண்டன்--சண்டனென்பவன், என இவை இசைத்த எல்லையின்— என்று இவ்வசனங்களைக்கூறியபொழுது, அனலி என்று உரைத்திடும் அவுணர் காவலன்—அனலியென்றுசொல்லப்படுகின்ற அசுரசேனைத்தலைவன், சினமொடு சிறிது முறுவலும் தோன்றிட- கோபமுங்குறுநகையுந்தோற்ற, வினையமொடு இ மொழி விளம்பல்செய்குவான்--சூழ்ச்சியுடன் இந்தவசனத்தைச்சொல்வான் எ--று.

கோபக்குறிப்பிற் குறுநகையுமொன்றென்க. ஏனையோர்பேசும்போதே தான்பேசவேண்டியவற்றையெண்ணியிருந்தானாதலின் 'வினையமொடு' என்றார். ()

தெம்முனை மரபிலோர் சிறுவ னென்னினும்
வெம்மையொ டேற்குமேல் வெகுண்டு மேற்செலா
தெம்மொடு மந்திரத் திருப்ப ரேயெனி
னம்மவோ சூரருக் கழகி தாற்றலே.

இ—ள்: தெவ் முனை மரபில்-பகைமுனைக்குரிய முறைப்படி, ஓர் சிறுவன் என்னினும்—ஒரு பாலனாயிருந்தாலும், வெம்மையொடு ஏற்குமேல்—உக்கிரத்தோடெதிர்ப்பானாயின், வெகுண்டு மேற்செலாது—கோபித்து அவன்மீது போர்க்குப்போகாமல், எம்மொடும் மந்திரத்து இருப்பர் எனின்—எங்களுடன் அமைச்சியல்செய்துகொண்டிருப்பாராயின், சூரருக்கு ஆற்றல் அழகிது—சூரருடைய வலிமை நன்றாயிருக்கின்றது! எ—று.

உம்மை இழிவு. அம்ம-வியப்பு. ஓ-அசை. மாற்றான்வருவானாயின் ஆலோசியாமல் உடனேபோர்க்குச்செல்வதே வீரர்க்கிலக்கணமாம், சூரனென்னும் பெயரைப்பெற்ற மகாவீரராகியநீர் அவ்வாறுசெய்யாது தாமதித்து அமைச்சியல்செய்துகொண்டிருப்பது தகாதகாரியம் என்பதாம். முன்னிலைப்படுத்திக்கூற வேண்டியவசனத்தை அரசனைப்பழித்தலிற் படர்க்கையாகக்கூறிமுடித்தான். ()

என்றிது மொழிதலு மெரியுங் கண்ணின
னொன்றிய முறுவல னுயிர்க்கு நாசியன்
கன்றிய மனத்தினன் கறித்து மெல்லிதழ்
தின்றிடு மெயிற்றினன் சிங்கன் கூறுவான்.

இ—ள்: என்று இது மொழிதலும்—என்று இந்தவசனங்களை (அனலியென்பான்) கூறியவுடன், சிங்கன்—சிங்கனென்னுஞ்சேனைத்தலைவன், எரியும் கண்ணினன்—அழலுகின்ற கண்களையுடையவனும், ஒன்றிய முறுவலன்—தோன்றிய சிரிப்பையுடையவனும், உயிர்க்கும் நாசியன்—பெருமூச்சைவிடுகின்ற மூக்கையுடையவனும், கன்றிய மனத்தினன்—புழுங்குகின்ற மனத்தையுடையவனும், மெல் இதழ் கறித்து தின்றிடும் எயிற்றினன்—மெல்லிய உதடுகளைக்கடித்துத்தின்னுகின்ற பற்களையுடையவனும், கூறுவான்—சொல்வான் எ—று.

மொழிதலும் கூறுவான் என இயையும். கோபக்குறிகள்தோன்றுவது பகைவரை நினைத்தலாலென்க. (௩௪)

வெந்தொழின் மறவரை விளித்த தன்மையு
மந்திர மிருந்தது மனங்கொள் சூழ்ச்சியு
மிந்திர னுதவிசெ யிளையன் வன்மையைச்
சிந்திட வேகொலா நினைந்த செய்கையே.

இ—ள்: வெம் தொழில் மறவரை விளித்த தன்மையும்—கொடுந்தொழிலையுடைய வீரர்களை இங்கேயழைத்ததன்மையும், மந்திரம் இருந்ததும்-அமைச்சியல் செய்தமையும், மனம் கொள் சூழ்ச்சியும்—மனத்தில் ஆலோசிக்கப்படுகின்ற உபாயங்களும், இந்திரன் உதவி செய் இளையன் வன்மையை சிந்திட நினைந்த செய்கை ஆம் கொல்—இந்திரனுக்குத்துணைசெய்யுமாறுவந்த பாலகருடைய வலிமையை அழித்தற்குநினைந்த செயல்களா? எ—று.

கொல் பழித்தலில்வந்தவினா. அற்பனாகிய பகைவனைவெல்லுதற்கு இத்துணை ஆலோசனையும் முயற்சியும்வேண்டற்பாலனவல்ல என்பதாம். (௩௫)

இருநில வண்டமே லிருந்து ளோரெலா
மருவல ராகியே வருக வந்திடி

றொருதமி யேன்பொரு துலையச் செய்வனற்
றெரியலை போலுநின் னடியன் றிண்மையே.

இ—ள்: இரு நில அண்ட மேல் இருந்துளோர் எலாம் மருவலர் ஆகி வருக— பெரியபூமியின்கூறான அண்டங்களிலிருக்கின்றவர்கள்யாவரும் பகைவராய்வருக, வந்திடின்—அங்ஙனம்வந்தாலும், ஒரு தமியேன் பொருது உலையச் செய்வன்—யானொருவனேநின்று போர்செய்து அவர்களைத்தோற்றோடச்செய்வேன், நின் அடியன் திண்மை தெரியலை போலும்—உம்முடைய அடியேனது தைரியத்தை இதுகாறும் நீரறியீர்போலும்! எ—று.

சிறப்பும்மைதொக்கது. யான் எத்தகையபகைவரையும் எளிதில்வெல்லத்தக்க தைரியமுடையவனாயிருப்ப இத்துணை ஆலோசனைகளை ஏன்செய்கின்றீர் என்பதுகுறிப்பு. (௬௬)

வன்மையை யுரைப்பது மரபன் றுலெனைச்
சென்மென விடுக்குதி சேனை யோடுபோ
யுன்முனி வுற்றிடு மொன்ன லாரையட்
டின்மைய தாக்கியே வருவ னீண்டென்றான்.

இ—ள்: வன்மையை உரைப்பது மரபு அன்று—எனதுவலிமையை யானே புகழ்ந்துபேசுவது தக்கதன்று, எனை சென்ம் என விடுக்குதி—என்னைப்போவென்றுகூறியனுப்புவீர், சேனையோடு போய்— (அனுப்பியவுடன்) யான் சேனைகளுடன்போய், உன் முனிவு உற்றிடும் ஒன்னலாரை அட்டு—உம்முடன்விரோதங்கொண்ட பகைவரெல்லாரையுமழித்து, இன்மையது ஆக்கி— இல்லையென்னும்படிசெய்து, ஈண்டு வருவன்—இங்கேவருவேன், என்றான்— என்று (சிங்கனென்பவன்) கூறினான் எ—று.

மற்றெல்லாரினுமிக்க வலியுடையனென்று தன்னைநினைந்துஇறுமாப்புற்றானதலின் 'வன்மையையுரைப்பதுமரபன்று' என்றான். ஈண்டு- விரைவிலெனினுமாம். (௬௭)

இன்னவை போல்வன வியல்பி னேனைய
துன்னெறி யமைச்சருஞ் சூழ்ச்சித் தொல்படை
மன்னரு மிசைத்தலும் வயங்கு செங்கதி
ரொன்னலன் கையமைத் துரைத்தன் மேயினன்.

இ—ள்: இன்னவை போல்வன— இவைபோன்ற பற்பலகோட்பாடுகளை, இயல்பின்—முறைப்படி, ஏனைய துர் நெறி அமைச்சரும் சூழ்ச்சி தொல் படை மன்னரும் இசைத்தலும்— துன்மார்க்கத்தையுடைய மற்றையமந்திரிமார்களும் உபாயபுத்தியையுடைய பழைய சேனைத்தலைவர்களுங்கூற, வயங்கு செம் கதிர் ஒன்னலன் கை அமைத்து—பானுகோபன் அவர்களைக்கையினாலடக்கி, உரைத்தல் மேயினன்—சொல்லத்தொடங்கினான் எ—று.

இயல்பின்- ஒருவர்பின்னொருவராக. வயங்குசெங்கதிரொன்னலன்- விளங்குகின்றசிவந்தகிரணங்களையுடைய சூரியனுக்குப் பகைவன். (௬௮)

சென்றிடு முனிவரர் தியங்க மாயைசெய்
குன்றுட னிளவலைக் குமரன் கொன்றிடு
மன்றெனை விடுத்திலை யழைத்தொன் றோர்ந்திலை
யின்றிது வினவுவ தென்னை யெந்தைநீ.

இ—ள்: எந்தை நீ– என்பிதாவே! நீர், சென்றிடு முனிவரர் தியங்க மாயை செய் குன்றுடன் இளவலை— போக்குவரவுசெய்கின்ற முனிவர்கள்மயங்கும்படி

மாயங்களைச்செய்கின்றகிரவுஞ்சமலையையும் தாரகனையும், குமரன் கொன்றிடும் அன்று—முருகவேளழித்த அத்தினத்தில், எனை விடுத்திலை—என்னைப்போர்க்கனுப்பாதும், அழைத்து ஒன்று ஓர்ந்திலை—வருவித்து ஓராலோசனையையுஞ்செய்யாதுமிருந்துவிட்டு, இன்று இது வினவுவது என்னை—இத்தினத்தில் இதனைவினவுவதெதற்காகாக? எ—று.

ஒன்றும் என்ற இழிவுசிறப்பும்மைதொக்கது. அன்று ஆலோசித்து என்னையனுப்பினீரேல் அவர்களைவென்றுவந்திருப்பேன், அங்ஙனமின்றி இதுகாறுந் தாமதஞ்செய்து அழிவுண்டாக்கியதும் இப்போது இவர்களெல்லாரையுமழைத்து அமைச்சியல்செய்வதுந்தவறுமென்று தன்பிதாவின்மேற்குறைபாராட்டிக்கூறினனென்க. (௬௯)

உள்ளூறு கரவின னொருவ னும்பரா
னெள்ளரு மொற்றுவந் தீண்டு போர்செயின்
முள்ளெயி றின்னமு முற்றுந் தோன்றிலாப்
பிள்ளையை விடுக்குமோ பெரியை சாலநீ.

இ—ள்: உள் உறு கரவினன் உம்பரான் ஒருவன்—மனத்திற்கபடத்தையுடைய தேவர்பக்கத்தானொருவன், எள்ள அரும் ஒற்று வந்து ஈண்டு போர் செயின்—இகழ்தற்கரிய தூதாகவந்து இங்கே போரைச்செய்தால், சால பெரியை நீ—மிகப்பெரியவராகியநீர், முள் எயிறு இன்னமும் முற்றும் தோன்றிலா பிள்ளையை விடுக்குமோ— முள்ளைப்போன்றபற்கள் இன்னும் முழுதாகத்தோற்றப்பெறாதபாலனைப் போர்க்கனுப்பலாமா? எ—று.

தன்னின்மேம்பட்டவலியுடையாரையுஞ் சூழ்ச்சியால்வெல்லவல்லானென்பதுபோதர 'உள்ளூறுகரவினன்' எனவும், தூதனென்றுசிந்தித்துக் கண்டாரெவரும்பகைக்காவண்ணம்வந்தென்பான் 'எள்ளருமொற்றுவந்து' எனவும், சிறுபிராயத்தையுடையவனும் போர்திருந்தாதவனும் சூழ்ச்சியில்லாதவனுமாகியபாலனென்பான் 'முள்ளெயிறின்னமுமுற்றுந்தோன்றிலாப்பிள்ளை' எனவும், ஒவ்வொருகாரியங்களையும் உய்த்துணர்ந்துசெய்யுந்தகவுடையீரென்பான் 'சாலப் பெரியை' எனவும் கூறினன். ஈண்டுபோர் பெரும்போரெனினுமாம். (௭௦)

இழித்தகு தூதனு லிடர்ப்பட் டாயெனும்
பழித்திறம் பூண்டனை பால னாவியை
யொழித்தனை நகரமு மொருங்கு சீரற
வழித்தனை நீயுன தறிவி லாமையால்.

இ—ள்: நீ- (பிதாவே!) நீர், உனது அறிவு இலாமையால்--உம்முடையபுத்தியீனத்தால், இழித்தகு தூதனால் இடர்ப்பட்டாய் எனும் பழித்திறம் பூண்டனை—இகழத்தக்க தூதுவனால் வருத்தமடைந்தீரென்னும்வசையைப்பெற்றீர், பாலன் ஆவியை ஒழித்தனை— சிறுபிள்ளையாகியவச்சிரவாகுவினுயிரையும்போக்கினீர், நகரமும் சீர் அற ஒருங்கு அழித்தனை—இந்நகரத்தையும் சிறப்புக்கெடும்படி ஒருங்கேயழித்தீர் எ—று.

தூதுசேறல் வலியிலார்தொழிலாதலின் 'இழித்தகுதூதன்' என்றான். தக்கவீரரையனுப்பித் தூதனையடக்காமையால் இவைகளெல்லாம்நிகழ்ந்தன என்பதாம். (௭௧)

பொருளல தொன்றினைப் பொருளெ னக்கொடு
வெருவுதல் செய்வதும் வினைய மோர்கிலா
தொருசெயல் விரைந்துசெய் தயங்கி வாழ்தலும்
பெரியவர் கடமையோ பேதைத் தன்மையே.

இ—ள்: பொருள் அலது ஒன்றினை பொருள் என கொடு வருவுதல்செய்வதும்—பொருட்படுத்தவேண்டாதஒருகாரியத்தைப் பொருளாகக்கருதி அதற்குப்பயப்படுவதும், வினையம் ஓர்கிலாது ஒரு செயல் விரைந்து செய்து உயங்கிவாழ்தலும்—செயற்பாலனவற்றை ஆராய்ந்தறியாது ஒருகாரியத்தை விரைவிற்செய்து (அதனால்வந்ததீங்கிற்காக) வருந்திக்கொண்டுவாழுதலும், பெரியவர் கடமையோ—பெரியவர்களுக்கு முறையாமோ?, பேதைத்தன்மையே— அறியாமையேயாம் எ—று.

எ-தேற்றம். மிகநொய்யாராகியபகைவர்க்காய் மிக்க ஆலோசனைகளைச்செய்வதும், பெருஞ்சூழ்ச்சியுடையானாகிய தூதனுடன் சிறுபாலனைப் போர்செய்யுமாறனுப்பி இறக்கவிட்டுவருந்துவதும் அறிவீனமாமென்பதுகுறிப்பு. (௭௨)

பொற்றையொ டிளவலைப் பொன்ற வீட்டினோன்
கொற்றமும் பூதர்தங் குழாத்தி னாற்றலு
மொற்றுவ னிலைமையு முணரிற் சென்றியான்
பற்றிமுன் னுய்க்குவன் பிணித்துப் பாசத்தால்.

இ—ள்: பொற்றையொடு இளவலை பொன்ற வீட்டினோன் கொற்றமும்—கிரவுஞ்சமலையுடன் உமதுதம்பியை அழியும்படிபிளந்த முருகவேளினதுவெற்றியையும், பூதர் தம் குழாத்தின் ஆற்றலும்—பூதர்கூட்டத்தின் வலியையும், ஒற்றுவன் நிலைமையும் உணரின்—தூதனதுவீரத்தையும் அறிந்தால், யான் சென்று—நான்உடனேபோய், பற்றி—அவர்களைப்பிடித்து, பாசத்தால் பிணித்து—கயிற்றாற்கட்டி, முன் உய்க்குவன்—உமக்குமுன்கொணர்ந்துவிடுவேன் எ—று.

நீர் எனக்கறிவியாமையாற் செய்திலேன் என்பதாம். (௭௩)

ஆயிரத் தெட்டெனு மண்டத் துக்கெலா
நாயக முதல்வநீ நம்ப னல்கிய
சேயமர் குறித்தெழல் சீரி தன்றெனை
யேயினை வெற்றிகொண் டிருத்தி யெம்பிரான்.

இ—ள்: எம் பிரான்—எங்கள்பிதாவே!, ஆயிரத்து எட்டு எனும் அண்டத்துக்கு எலாம் நாயக முதல்வ—ஆயிரத்தெட்டென்னுந்தொகைப்பட்ட அண்டங்களுக்கெல்லாம் அதிபதியான அரசரே!, நீ-நீர், நம்பன் நல்கிய சேய் அமர் குறித்து எழல் சீரிது அன்று—சிவபிரான் பெற்ற பாலகனோடும் போர்செய்யநினைத்துப்புறப்படுதல்சிறப்பன்று, எனை ஏயினை வெற்றிகொண்டு இருத்தி—என்னையனுப்பி வெற்றிபெற்றிருப்பீராக எ—று.

உமக்கிணையாகாதநொய்யருடன் நீர்போர்க்குப்போவது வசையாதலால் என்னையனுப்புவீர் என்பதாம். (௭௪)

ஆண்டெனை விடுத்தியே லமர தாற்றிட
மூண்டிடு மவர்தொகை முருக்கித் தேவரா
யீண்டுறு வோரையு மிமைப்பில் வென்றுபின்
மீண்டிடு வேனென விளம்பி னானரோ.

இ—ள்: ஆண்டு எனை விடுத்தியேல்—அந்தப்பகைவர்களிருக்குமிடத்திற்கு என்னையனுப்புவீராயின், அமரது ஆற்றிட மூண்டிடும் அவர் தொகை முருக்கி—போர்செய்தற்காய்ப் பகைமூண்டிருக்கின்ற அவர்களதுதொகுதியையழித்து, தேவர் ஆய் ஈண்டுறுவோரையும் இமைப்பில் வென்று—தேவர்களாக அவர்களுடன் கூடியிருக்கின்றவர்களையும் நொடிப்பொழுதில் வெற்றிகொண்டு, பின் மீண்டிடுவேன்—பின்பு திரும்புவேன், என விளம்பினான்—என்று பானுகோபன்கூறினான் எ—று. (௭௫)

இரவியம் பகையவ னினைய சிற்சில
வுரைதரு மிறுதியி னுலைவு றுதகோர்
முரணுறு தாதைதன் முகத்தை நோக்கியே
குரைகழ லிரணியன் கூறன் மேயினான்.

இ—ள்: இரவியம்பகையவன் இனைய சிற்சில உரைதரும் இறுதியின்—பானுகோபன் இவைபோன்ற சிலவார்த்தைகளைச்சொல்லியமுடிவில், உலைவு உறுதது ஓர் முரண் உறு தாதை தன் முகத்தை நோக்கி—அழியாதவலிமைபொருந்திய பிதாவாகிய சூரபன்மனதுமுகத்தைப்பார்த்து, குரை கழல் இரணியன் கூறன்மேயினான்—ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த இரணியன் சொல்லத்தொடங்கினான் எ—று. (௭௬)

வேறு.

வள்ளற் றன்மைசேர் வயப்பெருஞ் சூரனோர் மழலைப்
பிள்ளைப் போர்வலிக் கிரங்கின னெனுமொழி பிறக்கி
னுள்ளத் தேநினை நினைக்கினும் வெருவுமொன் னலரு
மெள்ளற் கேதுவாம் விடுத்தியான் மந்திர மினியே.

இ—ள்: வள்ளற்றன்மை சேர் வய பெரும் சூரன்— இறைமைத்தன்மை பொருந்திய வெற்றியையுடைய பெரிய சூரனென்பான், ஓர் மழலை பிள்ளை போர் வலிக்கு இரங்கினன் எனும் மொழி பிறக்கின்—குதலைவார்த்தையைப்பேசுகின்ற ஒருசிறுவனுடைய போர்வலிமையைக்குறித்து வருந்தினானென்னுஞ்சொற்றோன்றினால், உள்ளத்தே நினை நினைக்கினும் வெருவும் ஒன்னலரும் எள்ளற்கு ஏது ஆம்—மனத்தில்உம்மைநினைத்தாலும் பயப்படுகின்ற பகைவர்களும் இகழ்தற்குக்காரணமாம், (ஆதலின்), இனி மந்திரம் விடுத்தி—இனி அமைச்சியலை விடுவீர் எ—று.

வள்ளற்றன்மை-வளமுடையனாந்தன்மை. வளம் ஈண்டு இராச்சியாங்கங்களினமைதி. உம்மைகள் இழிவு. நீர் பிறருக்கஞ்சுவீரானால் உமக்கு ஒருவருமஞ்சார் என்பதுகுறிப்பு. (௭௭)

மைதி கழ்ந்திடு மிடற்றவன் மதலைமா நிலத்தி
னெய்தி னானமர்க் கென்றலு மென்றனை விளித்து
வெய்தெ னப்பொர விடுத்திலை வெறுத்தியோ வினையேன்
செய்தி டுந்தவ றுண்டுகொ லுனக்கொரு சிறிது.

இ—ள். மை திகழ்ந்திடு மிடற்றவன் மதலை—நஞ்சார்ந்தகண்டத்தையுடைய சிவபிரானதுகுமாரர், மா நிலத்தின் அமர்க்கு எய்தினான் என்றலும்—பெரிய பூவுலகத்திற் போர்செய்யவந்தாரென்று கேள்விப்பட்டவுடன், என் தனை விளித்து வெய்தென பொர விடுத்திலை—என்னையழைத்து விரைவாகப்போர்செய்தற்கனுப்பாதுவிட்டீர், வெறுத்தியோ—என்மேல் வெறுப்புக்கொண்டீரா?, வினையேன் உனக்கு செய்திடும் தவறு ஒருசிறிது உண்டு கொல்—பாவியேன் உமக்குச்செய்தகுற்றம் அற்பமாயினும் உண்டா? எ—று.

உம்முடையசொல்லைக்கேட்டொழுகும்புதல்வனாக யானிருப்பவும் இதுகாறுமென்னைப்போர்க்கனுப்பாதுவிட்டகாரணம் யாது என்பதாம். சிறிதும் என்னும்உம்மை தொக்கது. (௭௮)

பானல் போலொளிர் மிடற்றினன் பாலன்மேற் பசிநோய்க்
கூனை வேட்டுழல் பூதர்மே லொழிந்துளார் தம்மேன்
மான வெஞ்சமர்க் கெம்முனோன் சேறலும் வசையே
சேனை யோடியா னேகுவன் செருத்தொழில் புரிய.

இ--ள்: பானல் போல் ஒளிர் மிடற்றினன் பாலன் மேல்—கருங்குவளை மலரைப்போல விளங்குகின்ற கண்டத்தையுடைய சிவபிரானது புதல்வர்மேலும், பசி நோய்க்கு ஊனை வேட்டு உழல் பூதர் மேல்—பசியாகிய நோயைத்தீர்க்கும் பொருட்டுத் தசையைவிரும்பியலைகின்ற பூதர்கள்மேலும், ஒழிந்துளார் தம் மேல்—மற்றையோர்மீதும், மான வெம் சமர்க்கு எம் முனோன் சேறலும் வசையே-அபிமானமிக்க கொடியபோரைச்செய்தற்கு எங்கள்தமையனாகிய பானுகோபன்போவதும் வசையேயாம், செரு தொழில் புரிய—போர்த்தொழிலைச்செய்யும்படி, சேனையோடு யான் ஏகுவன்—சேனைகளுடன் யான்போவேன் எ—று.

உம்மை- எச்சம். ஏ-தேற்றம். பானல் ஆகுபெயர். கரியகண்டமென்பான் 'பானல்போலொளிர்மிடறு' எனவும், அக்கினிமுகனையுமுளப்படுத்தி 'எம்முனோன்' எனவும் கூறினான். எம்மிலும்வலிகுறைந்தாருடன்பொர நீர்போவதும் பானுகோபன்போவதும் தக்கனவல்ல, யான்போவதே தக்கது என்பதாம். (எக)

வெற்றிப் பேரம ராற்றியே மேவலர் தொகையைச்
செற்றுத் தேவர்கள் யாரையுந் தடிந்து செல்குவனா
லிற்றைக் கங்குலி னென்றனை யேவுதி யெனலு
மற்றைத் தம்பியா மெரிமுக னினையன வகுப்பான்.

இ—ள்: வெற்றி பேர் அமர் ஆற்றி—வெற்றியைத்தருகின்ற பெரும்போரைச்செய்து, மேவலர் தொகையை செற்று—பகைவர்கூட்டத்தையழித்து, தேவர்கள் யாரையும் தடிந்து செல்குவன்—தேவர்களெல்லோரையுங்கொன்று வருவேன், இற்றை கங்குலின் என் தனை ஏவுதி—இந்த இராப்பொழுதில் என்னையனுப்புவீர், எனலும்—என்று இரணியன்சொல்ல, மற்றை தம்பி ஆம் எரிமுகன் இனையன வகுப்பான்—மற்றையதம்பியாகிய அக்கினிமுகாசுரன் இவ்வசனங்களைச்சொல்வான் எ—று.

அமைச்சியல்செய்தகாலம் இரவாதலின் 'இற்றைக்கங்குலின்' என்றான். பானுகோபனது தம்பிமாரிருவருள் ஒருதம்பியாகிய இரணியன்கூறிமுடித்தானாதலின் அக்கினிமுகனை 'மற்றைத்தம்பியாமெரிமுகன்' என்றார். (அ௦)

இணையி லாவண்ட டாயிரத் தெட்டினுக் கிறைநீ
துணைய தாயொரு வீரகே சரியுளன் சுதராய்க்
கணித மில்லவர் யாமுளங் கரிபரி கடுந்தே
ரணிகொ டானவப் படையுள வலகிலா தனவே.

இ—ள்: நீ இணை இலா அண்டம் ஆயிரத்தெட்டினுக்கு இறை—நீர் ஒப்பில்லாத ஆயிரத்தெட்டண்டங்களுக்குத் தலைவராயிருக்கின்றீர், துணையதாய் ஒரு வீரகேசரி உளன்—உமக்குத்தம்பியாக வீரத்தான்மிக்க சிங்கம்போல்வாரொருவரிருக்கின்றார், சுதர் ஆய் கணிதம் இல்லவர் யாம் உளம்—புத்திரர்களாக அளவிறந்தவர்களாகிய நாங்களிருக்கின்றோம், கரி பரி கடும் தேர் அணி கொள் தானவ படை அலகு இலாதன உள—யானைகளும் குதிரைகளும் வேகமாய்ச்செல்லுகின்ற தேர்களும் அணிவகுப்புப்பொருந்திய அசுரசேனைகளும் அளவிறந்தனவாயிருக்கின்றன எ—று.

வீரகேசரியென்றுசுட்டியது சிங்கமுகாசுரனை. (அக)

அழிவில் பார்குள தேருள சிலையுள வலிதான்
றொழிவி லாதம ரம்புபெய் தூணியு முளவா
லிழிவி றெய்வதப் படைகண்முற் றும்முள விறைமைத்
தொழின டாத்துறு பரிதியு மொன்றுண்டு தொல்லோய்.

இ—ள்: தொல்லோய்—பழைய என்பிதாவே?, அழிவு இல் பாகு உள தேர் உள—அழிவில்லாத சாரதியையுடையதேர்களிருக்கின்றன, சிலை உள—விற்களுமிருக்கின்றன, அஃதான்று—அதுவன்றி, ஒழிவு இலாது அமர் அம்பு பெய் தூணியும் உள— எடுக்குந்தோறுங்குறையாமலிருக்கின்ற அம்புகள்நிறைத்தகூடுகளும்இருக்கின்றன, இழிவு இல் தெய்வத படைகள் முற்றும் உள-கீழ்மையில்லாத தெய்வப்படைகளெல்லாமிருக்கின்றன, இறைமை தொழில் நடாத்துறு பரிதி ஒன்றும் உண்டு—அரசியலைநடாத்துகின்ற ஆஞ்ஞாசக்கரமொன்றுமிருக்கின்றது எ—று.

அன்றியென்னும்வினையெச்சத்தினீற்றிகரம் உகரமாகி அஃது முன்வந்தமையின் முதனீண்டது. நெடுங்காலமாக அரசியலை நடாத்திவருபவனாதலின் 'தொல்லோய்' எனவும், எந்தப்பெரியபடைகளையும் எத்துணைப்போராற்றலுடைய வீரர்களையும் அழிக்கவல்லதெய்வப்படையென்பான் 'அழிவிறெய்வதப்படை' எனவும் கூறினான். முற்செய்யுளிற்கூறப்பட்டதேர் சேனைவகையிற்சேர்ந்ததெனவும் இச்செய்யுளிற்கூறப்பட்டதேர் ஏறுந்தேரெனவுங்கொள்க. (அஉ)

அண்ட மாயிரத் தெட்டையுங் கன்னலொன் றதனிற்
கண்டு மீடரு மிந்திர ஞாலமுங் கவனங்
கொண்ட தோர்தனி மடங்கலு முனக்குள குறிக்கின்
விண்டு மாலுறு மாயைகள் பலவுள மேலோய்.

இ—ள்: மேலோய்—மேன்மையையுடையபிதாவே!, அண்டம் ஆயிரத்து எட்டையும் கன்னல் ஒன்று அதனில் கண்டு மீள்தரும் இந்திரஞாலமும்—ஆயிரத்தெட்டண்டங்களையும் ஒருநாழிகைப்பொழுதிற் பார்த்துத்திரும்புகின்ற இந்திரமாஞாலத்தேரும், கவனம் கொண்டது ஓர் தனி மடங்கலும்—வேகத்தையுடைய ஒப்பற்ற ஒருசிங்கவாகனமும், உனக்கு உள—உம்மிடத்திருக்கின்றன, குறிக்கின்—ஆராயுமிடத்து, விண்டும் மாலுறும் மாயைகள் பல உள—திருமாலுமயங்கத்தக்க பல மாயங்களும் இருக்கின்றன எ—று.

விண்டும் என்றஉம்மை சிறப்பு. மிகுதியானமாயங்களைச்செய்தலால் மாயனென்னும்பெயர்பெற்றவராதலின் மாயங்களின் அருமைபெருமைகளைக்கூறுமிடத்து 'விண்டுமாலுறுமாயைகள்' என்றான். (அங)

இன்ன பான்மைசேர் வெறுக்கைபெற் றீறிலா துறையு
மன்னர் மன்னநிற் போன்றுளார் யாவரே மலையக்
கன்னி பாலகன் றூதுவன் சிறுதொழில் கருத்தி
லுன்னி யுன்னியே யிரங்கவுந் தகுவதோ வுனக்கே.

இ—ள்: இன்ன பான்மை சேர் வெறுக்கை பெற்று— இத்தன்மையான பலவளங்களையெல்லாம்பெற்று, ஈறு இலாது உறையும் மன்னர் மன்ன—அழிவில்லாமலிருக்கின்ற அரசர்க்கரசனே!, நின் போன்றுளார் யாவர்— உம்மைப்போன்றவர்கள் வேறியாவர் (ஒருவருமில்லை), உனக்கு—அங்ஙனமாகிய உமக்கு, மலையக்கன்னி பாலகன் தூதுவன் சிறு தொழில் கருத்தில் உன்னி உன்னி- உமாதேவியின்புதல்வராகிய முருகவேளது தூதன்செய்தசிறுமையானதொழிலை மனத்தில்நினைத்துநினைத்து, இரங்கவும் தகுவதோ—வருந்துவதும் தக்கதா? எ—று.

உம்மை இழிவு. அதிகமானபோர்க்கருவிகளெல்லாமிருத்தலால் அற்பமான ஒருபகையைவெல்லுதற்கு ஆலோசித்துவருந்தவேண்டாம் என்பதாம். சிறுதொழில் வச்சிரவாகுவையும் பிறரையும் நகரையுமழித்தல் எதிர்பேசல் முதலியன. ()

குழந்தை வெண்பிறை மிலைச்சியோன் மதலையைக் குறுத்தா
ளிழிந்த பூதரைப் பிறர்தமை வென்றிட வெமரில்

விழைந்த மானவ ரொருவரை விடுப்பதே யன்றி
யழிந்தி ரங்கியே வினவுமோ விதுகொ லுன் னறிவே.

இ—ள்: குழந்தை வெண் பிறை மிலைச்சினோன் மதலையை—வெள்ளிய இளம்பிறையையணிந்த சிவபிரானது குமாரரையும், குறும் தாள் இழிந்த பூதரை—குறுகியகால்களையுடைய எளிய பூதர்களையும், பிறர் தமை வென்றிட—மற்றைய வீரர்களையும்வெல்லுதற்கு, எமரில் விழைந்த மானவர் ஒருவரை விடுப்பதே அன்றி—நம்மவருட் போகவிரும்பிய ஒருவீரரையனுப்புவதேயல்லாமல், அழிந்து இரங்கி வினவுமோ—மனமழிந்துவருந்தி எங்களுடன் ஆலோசிக்கவேண்டுமோ?, உன் அறிவு இது கொல்—உம்முடைய அறிவு இதுதானோ? எ—று.

குறுந்தாளென்பதில் மெல்லொற்று வல்லொற்றாயது. பிறரென்பது இலக்கத்தொன்பதின்மரை. இச்செயலால் நீர் புத்திநுட்பமில்லாதீரென்பது வெளிப்பட்டதென்பான் 'இதுகொலுன்னறிவு' என்றான். (அ௫)

மூளும் வெஞ்சமர் புரிந்தவென் னிளவல்பன் முடியும்
வாளி னாலடு மொற்றனை மற்றுளார் தம்மைக்
கேளொ டுந்தடிந் தல்லது கேடில்சீர் நகர்க்கு
மீள்க லேனெனப் பகர்ந்தனன் வெய்யசூ ரனையே.

இ—ள்: மூளும் வெம் சமர் புரிந்த என் இளவல் பல் முடியும் வாளினால் அடும் ஒற்றனை—மூண்ட கொடியபோரைச்செய்த என்னுடையதம்பியினது பலதலைகளையும் வாளால்வெட்டிய தூதனையும், மற்றுளார் தம்மை— மற்றுமுள்ளவர்களையும், கேளொடும் தடிந்து அல்லது—சுற்றத்தவர்களுடனழித்தல்லாமல், கேடு இல் சீர் நகர்க்கு மீள்கலேன்— அழிதலில்லாதசிறப்பையுடைய இந்நகரத்திற்குத் திரும்பிவரேன், என வெய்ய சூர் உரை பகர்ந்தனன்—என்று கொடிய சபதவாக்கைக்கூறினேன் எ—று. (அ௬)

காந்தை சூடுவான் குமரனைப் பொருதல்கா தலியா
யிருந்த வீரர்க ளளப்பில ராயினு மிப்போர்
விரைந்து நீயெனக் குதவுதி யேகுவன் மேனாட்
பொருந்து பாதலத் தரக்கர்மேற் சென்றதே போல.

இ—ள்: காந்தை சூடுவான் குமரனை பொருதல் காதலியா இருந்த வீரர்கள் அளப்பிலர் ஆயினும்—காந்தைமலரையணிந்த சிவபிரானதுபுதல்வருடன் போர்செய்வதைவிரும்பியிருந்தவீரர்கள் அளவிறந்தவர்களானாலும், இ போர்—இந்தப்போரை, நீ விரைந்து எனக்கு உதவுதி- நீர் விரைவில் எனக்குத்தருவீர், மேல் நாள் பாதலத்து பொருந்து அரக்கர்மேல் சென்றதே போல—முன்னொளிற்பாதாளத்திலிருந்த இராக்கதர்கள்மீது போர்க்குப்போனதையேபோல, ஏகுவன்— இப்பொழுதும்போவேன் எ—று.

தம்பியைக்கொன்றபழியைத்தீர்க்கநினைத்துச்சபதங்கூறித் தன்னையனுப்பும்படி இரந்தானென்க. பாதலத்தரக்கர்மேற்சென்றதேபோல ஏகுவன் என்றதனால் வெற்றிகொண்டுமீளுதற்கையமில்லையென்பதைத்தேற்றினான். (அ௭)

வலிய தோர்சிலை யீறிலாக் கவசம்வான் படைக
ளுலகு தந்தவ னளித்திட முன்புபெற் றுடையேன்
குலம டங்கவா ளரக்கரைத் தடிந்திசை கொண்டேன்
மெலிய னன்றியா னறுமுகன் மேலெனை விடுத்தி.

இ—ள்: வலியது ஓர் சிலை—வலிமையையுடைய ஒப்பற்றவில்லையும், ஈறு இலா கவசம்— அழியாதசட்டையையும், வான் படைகள்—சிறந்தபடைக்கலங்களையும், உலகுதந்தவன் அளித்திட முன்பு பெற்றுடையேன்— உலகங்களைப்படைத்த பிரமதேவர்தாமுற்காலத்திற் பெற்றிருக்கின்றேன், வாள் அரக்கரை குலம் அடங்க தடிந்து இசைகொண்டேன்—வாட்போரில்வல்ல இராக்கதர்களை வம்சமழியும்படிகொன்று கீர்த்திபெற்றேன், (ஆதலின்), யான் மெலியன் அன்று—யான்வலியற்றவனல்லன், அறுமுகன் மேல் எனை விடுத்தி—முருகக்கடவுளுடன் போர்செய்ய என்னையனுப்புவீர் எ—று.

தன்னையனுப்புதலாற்றவறுவராதென்பதை இச்செய்யுளாற்சுட்டினான். ()

என்னு மாற்றங்க ளெரிமுக முடையவ னிசைப்ப
வன்ன வன்றனை விலக்கியே கரதல மமைத்துச்
சென்னி யாயிரம் பெற்றுள சிங்கமா முகத்தோன்
மன்னர் மன்னனை நோக்கியே வகுத்துரை செய்வான்.

இ—ள்: என்னும் மாற்றங்கள் எரிமுகம் உடையவன் இசைப்ப— என்று இந்தவசனங்களையெல்லாம் அக்கினிமுகத்தையுடைய அசுரன் கூற, சென்னி ஆயிரம் பெற்று உள சிங்க மா முகத்தோன்—ஆயிரந்தலைகளைப்பெற்றுள்ளவனாகிய பெரியசிங்கமுகாசுரன், அன்னவன் தனை கரதலம் அமைத்து விலக்கி—அந்த அக்கினிமுகனைக்கையமைத்துத்தடுத்து, மன்னர் மன்னனை நோக்கி—அரசர்க்கரசனாகியசூரபன்மனைப்பார்த்து, வகுத்து உரைசெய்வான்—விரித்துச்சொல்வான் எ—று. (௮௯)

மந்தி ரத்தருந் தானையந் தலைவரு மகாருந்
தந்த மக்கியல் வன்மையே சாற்றிய தல்லா
லிந்தி ரப்பெருந் திருவுறு முன்றனக் கியன்ற
புந்தி சொற்றில ரிம்மொழி கேளெனப் புகல்வான்.

இ—ள்: மந்திரத்தரும் தானையம் தலைவரும் மகாரும்—மந்திரிமார்களுஞ்சேனைத்தலைவர்களும் புத்திரர்களும், தந்தமக்கு இயல் வன்மையே சாற்றியது அல்லால்—தங்கள் தங்களுக்கிருக்கின்ற வலிமையையேசொல்லிமுடித்ததன்றி, இந்திர பெரும் திரு உறும் உன் தனக்கு இயன்ற புந்தி சொற்றிலர்— பெரிய இந்திரச்செல்வத்தையனுபவித்திருக்கின்றஉமக்குத் தகுந்தபுத்தியைச்சொன்னாரல்லர், (ஆதலின்), இ மொழி கேள்—இந்தவசனங்களைக்கேட்பீர், என புகல்வான்—என்று சொல்வான் எ—று.

என்னையனுப்பினால் எல்லாரையும் வென்றுவருவேன் என்றிங்ஙனமாகப் பெரும்பாலார் கூறிமுடித்தாராதலின் 'தந்தமக்கியல்வன்மையேசாற்றியதல்லால்-புந்திசொற்றிலர்' என்றான். இந்திரத்திரு-இந்திரனதுசெல்வம்போன்ற (சிறந்த) செல்வம். (௯௦)

வேறு.

பெற்றிடு திருவினிற் பிறந்த வெஞ்சினங்
கற்றவ ருணர்வையுங் கடக்கு மன்னது
முற்றுறு கின்றதன் முன்ன மன்பினோ
ருற்றன கூறியே யுணர்த்தல் வேண்டுமால்.

இ—ள்: பெற்றிடு திருவினில் பிறந்த வெம் சினம்- பெற்றுக்கொண்ட செல்வச்செருக்காற்பிறந்த கொடியகோபமானது, கற்றவர் உணர்வையும் கடக்கும்—கற்றறிந்த விவேகிகளுடைய அறிவையும் வெல்லும், (ஆதலின்), அன்னது முற்றுகின்றதன் முன்னம்—அந்தக்கோபம் முதிர்தற்குமுன், அன்பினோர்— அ

ன்புள்ளவர்கள் உற்றன கூறி உணர்த்தல்வேண்டும்—வேண்டியமதிகளைச்சொல்லித்தெளிவித்தல்வேண்டும் எ—று.

உம்மை சிறப்பு. செல்வச்செருக்குடையார்க்குக்கோபந்தோன்றியவழி அது நன்மைதீமைகளையுய்த்துணர்தலின்மனத்தைச்செல்லவொட்டாது நகையுமென்பான் 'பெற்றிடுதிருவினிற்பிறந்தவெஞ்சினங்கற்றவருணர்வையுங்கடக்கும்' எனவும், தகைந்தவழி அக்கோபத்தால் விளையுந்தீமைகளை அவர்க்கறிவுறுத்தல்கூடாதாகலின் 'அன்னதுமுற்றுறுகின்றதன்முன்னம்-உணர்த்தல்வேண்டும்' எனவும், கேட்போனிடத்துத்தோன்றும் வெகுளியைப் பொருட்படுத்தாது அவனுய்ந்துவாழ்தற்கேற்றமதியை இடித்துக்கூறி என்பான் 'உற்றனகூறி' எனவும், அங்ஙனமின்றி அவனுளத்திற்கேற்பக்கூறிக்கெடுப்பவர்கள் பெயர்மாத்திரத்தாலன்றிச்செயலாற்றுணையாகாரென்பது போதர 'அன்பினோர்-உணர்த்தல்வேண்டும்' எனவும் கூறினான். (௬௧)

மன்னவர் செவியழன் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவ ரமைச்சர்க டுணைவர் மேலையோ
ரொன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே.

இ—ள்: மன்னவர் செவி அழல் மடுத்தது ஆம் என—அரசர்களுடைய காதில் தீக்கோலைச்செருகினாற்போல, நல் நெறி தருவது ஓர் நடுவுநீதியை சொன்னவர்—நல்வழியையுண்டாக்குகின்ற பொதுநிலையானநீதிகளை இடித்துரைத்தவர்களே, அமைச்சர்கள் துணைவர் மேலையோர்—மந்திரிமார்களும் துணைவர்களும் பெரியோர்களுமாவர், விழைந்தவாறு உரைக்கின்றார்கள் ஒன்னலரே—அவனுளம்போனவாறு சொல்லிமுடிப்பவர்கள் பகைவர்களேயாவர் எ—று.

"நகுதற்பொருட்டன் றுநட்டன்மிகுதிக்கண்-மேற்சென்றிடித்தற்பொருட்டு" என்றார் திருவள்ளுவரும். பிறிநிலையேகாரந்தொக்கது. அதிகமான வெறுப்பை விளைக்கும்வசனமாதலின் 'செவியழன்மடுத்ததாமென-சொன்னவர்' எனவும், முன்னர் வெறுப்பை விளைப்பனவாயினும் நோயாளர்க்குக்கொடுக்கப்படும் மருந்துபோலப் பின்னர்நன்மையைப்பயப்பனவாதலின் 'நன்னெறிதருவது' எனவும், நெறிப்படியமைந்தநீதியென்பான் 'நடுவுநீதி' எனவும் கூறினான். (௬௨)

முற்றுற வருவது முதலு மன்னதாற்
பெற்றிடு பயன்களும் பிறவுந் தூக்கியே
தெற்றென வுணர்ந்துபின் பலவுஞ் செய்வரேற்
குற்றமொன் றவர்வயிற் குறுக வல்லதோ.

இ—ள்: முற்றுறவருவதும்—முடியும்வகையையும், முதலும்—தொடங்கும் வகையையும், அன்னதால் பெற்றிடு பயன்களும்—அச்செயலாற்கிடைக்கும் பிரயோசனங்களையும், பிறவும் தூக்கி—பிறவற்றையுஞ்சீர் தூக்கி, தெற்றென உணர்ந்து—தெளிவாக அறிந்து, பின் பலவும் செய்வரேல்—பின்பு எல்லாக்காரியங்களையுஞ் செய்வார்களானால், அவர்வயின் குற்றம் ஒன்று குறுக வல்லதோ—அவர்களிடத்து ஒருகுற்றமாயினும் அணுகத்தக்கதாமோ? எ—று.

ஓ-எதிர்மறை. பிற இடையூறுநேர்தன்முதலாயின. எந்தக்கருமத்தைத்தொடங்கும்போதும் அதனைமுட்டறமுடித்தற்கேற்ற அறிவும் பொருளும் ஆற்றலும் துணையும் பிறவும் உளவாவென்பதையும் உளவாயவழியும் முடிக்குங்காறும் நேரும் மெய்வருத்தம்முதலியவற்றிற்குத்தக்க பயன்கிடைக்குமாவென்பதையுஞ்சிந்தித்தல்வேண்டும், அவ்வாறு சிந்தியாது நேர்ந்தவாறுதொடங்குவார் இடர்ப்படுதன் மாத்திரமன்றி அக்கருமத்தைமுடிக்கவும்மாட்டார் என்பதாம். "முடிவுமிடையூறு முற்றியாங்கெய்தும்-படுபயனும்பார்த்துச்செயல்" என்றார்திருவள்ளுவரும். தொ

டங்கலுந்தொடங்காமையுமாகிய இருவழிகளுளொன்றைநிச்சயிக்காவண்ணம் மனத்தைப்பொதுமையினிறுத்தி ஆராய்ந்தென்பான் 'தூக்கி' என்றான். எண்ணாமற்செய்த கருமங்களால் இப்பொழுது இத்துணைத்தீங்குநேர்ந்ததென்பது குறிப்பு. இச்செய்யுளிற்குறிப்பாற்சுட்டியதைப் பிற்செய்யுட்களால் வெளிப்படுத்துகின்றானென்க. (கூங)

மால்வரு தொடர்பினால் வனத்துச் செல்லுமீன்
கோல்வரு முணவினைக் குறித்து வௌவியே
பால்வரு புணர்ப்பினிற் படுதல் போலநீ
மேல்வரு கின்றதை வினவல் செய்கிலாய்.

இ—ள்: மால் வரு தொடர்பினால் வனத்து செல்லும் மீன்—அறியாமையுடன் நீரிற்சஞ்சரிக்கின்ற மீனினங்கள், கோல் வரும் உணவினை குறித்து வௌவி—தூண்டிலின்மாட்டப்பெற்று வருகின்ற உணவுப்பொருளைக்குறித்துக்கவர்ந்து, பால் வரு புணர்ப்பினில் படுதல் போல—அவ்வுணவினுள்ளிருந்த தூண்டிலிற்சிக்குதல்போல, நீ—நீர், மேல் வருகின்றதை வினவல்செய்கிலாய்— பின்வருங்காரியங்களை ஆராய்கின்றிலீர் எ—று.

மால்வரு தொடர்பு-அறியாமையுடனுண்டாயதொடர்பு. புணர்ப்பு-உபாயம். உபாயபுத்தியில்லாமலென்பான் 'மால்வருதொடர்பினால்' எனவும், நெடுந்தூரத்திற்றானே தனக்குரிய உணவுப்பொருளென்று நியமித்து விரைந்தோடிவந்து கவர்ந்தென்பான் 'குறித்துவௌவி' எனவும் கூறினான். மீன்கள் தமக்குவருந்தீமையையெண்ணாது அற்பமான உணவைவிரும்பிச்சிக்குண்டிறத்தல்போல நீரும் உமக்குவருந்தீமைகளையெண்ணாது தேவரைச்சிறைவைத்துச்சிக்கிக்கொண்டீர் இனியிறந்துபடுவீர் என்பது உட்கிடை. (கூச)

இந்திர னாதியா மிறைவர் தங்களை
யந்தரத் தமரரை யலைத்த தீயவர்
முந்துறு திருவொடு முடிந்த தல்லதை
யுய்ந்துள ரிவரென வுரைக்க வல்லமோ.

இ—ள்: இந்திரன் ஆதி ஆம் இறைவர்தங்களை—இந்திரன்முதலான தேவத்தலைவர்களையும், அந்தரத்து அமரரை—விண்ணுலகத்திலிருக்கின்ற மற்றுந்தேவர்களையும், அலைத்த தீயவர்—வருத்திய கொடியவர்கள், முந்து உறு திருவொடும் முடிந்தது அல்லது—முன்பெற்றிருந்தசெல்வங்களுடன் அழிந்ததேயன்றி, உய்ந்துளர் இவர் என உரைக்க வல்லமோ—உய்ந்திருந்தவரிவரென்று (ஒருவரையேனும்) சொல்லுதற்குவன்மையுடையோமா? எ—று.

ஐ-சாரியை. அவர்போல நீரும் உமதுசெல்வங்களுடனழிவீரென்பதுகுறிப்பு. (கூரு)

தேவர்கள் யாரையுந் திரைகொள் வேலையின்
மேவரு மீன்றொகை விரைவிற் றம்மென
வேவினை யினிதுகொ லினைய செய்கைதம்
மாவியில் விருப்பில ரன்றி யார்செய்வார்.

இ—ள்: திரை கொள் வேலையில் மேவரும் மீன் தொகை விரைவில் தம் என—திரைமோதுகின்ற சமுத்திரத்திற்பொருந்திய மீன்கூட்டங்களை விரைவில் அகப்படுத்திக்கொண்டுவாருங்களென்று கூறி, தேவர்கள் யாரையும் ஏவினை—எல்லாத்தேவர்களையுமனுப்பினீர், இனிது கொல்—இதுநல்லதா?, இனைய செய்கை தம் ஆவியில் விருப்பு இலார் அன்றி ஆர் செய்வார்— இப்படியானகொடுஞ்செயலைத் தம்முயிரில் விருப்பமில்லாதவர்களேயன்றி வேறுயார்தாஞ்செய்வார்கள்? எ—று.

குலாசாரத்துக்கியையாதகுற்றேவலை வலிந்துசெய்வித்தமையால் இறப்பீர் என்பதாம், தம்மினெனற்பாலது ஈறுகெட்டுநின்றது. பிறிதிலையேகாரந்தொக்கது. (௯௬)

அறைகழல் வாசவற் கலக்க ணாற்றியே
யிறையினை யழித்தனை யிருந்த மாநகர்
நிறைதரு வளனெலா நீக்கு வித்தனை
சிறையிடை யுய்த்தனை தேவர் யாரையும்.

இ—ள்: அறை கழல் வாசவற்கு அலக்கண் ஆற்றி இறையினை அழித்தனை—ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த இந்திரனுக்குத்துன்பத்தைச்செய்து அவனதுஅரசியலைக்கெடுத்தீர், இருந்த மா நகர் நிறைதரு வளன் எலாம் நீக்குவித்தனை—அவனிருந்த பெரியநகரத்தில்நிறைந்திருந்த செல்வங்களெல்லாவற்றையும் தவிர்ப்பித்தீர், தேவர் யாரையும் சிறை இடை உய்த்தனை—தேவர்களெல்லோரையும் சிறையில்வைத்தீர் எ—று.

காலந்தோறும் நேர்ந்தபகைவரையெல்லாம் ஏற்ற உபாயங்களாற்கொன்றும் வென்றும் தண்ணுணையைநீஇய பெருந்தகையென்பான் 'அறைகழல்வாசவன்' எனவும், தானிருக்குமிடத்தைவிட்டு அலைந்துதிரியுமாறுசெய்தென்பான் 'அலக்கணாற்றி' எனவும், சிற்சிலவளங்களைக்கவர்ந்துகொணர்ந்தமையும் எஞ்சியவளங்களையெரித்தமையுமடங்க 'நீக்குவித்தனை' எனவும் கூறினான். (௯௭)

அத்தகு தேவரா லைய நங்களுக்
கித்துணை யலக்கண்வந் தெய்திற் றிங்கிது
மெய்த்திற மாமென விரைந்துட் கொள்ளலை
பித்தரின் மயங்கினை பேதை யாயினாய்.

இ—ள்: ஐய—அரசனே!, அத்தகு தேவரால்—அங்ஙனம்வருத்தப்பட்டதேவர்களால், நங்களுக்கு இத்துணை அலக்கண் வந்து எய்திற்று—எங்களுக்கு இவ்வளவுதுன்பம்வந்துசேர்ந்தது, இது மெய்த்திறம் ஆம் என விரைந்து உட்கொள்ளலை—இது உண்மையாமென்று விரைவில்நினையாமல், பித்தரில் மயங்கினை—பைத்தியகாரரைப்போல மயக்கமடைந்து, பேதை ஆயினாய்—மூடராயினீர் எ—று.

பைத்தியம்பிடித்தார் இயற்கையறிவுமாறித் தம்நோய்க்கேற்றஅறிவுஞ்செயலுமுடையாதல்போல நீரும் இயற்கையறிவுநீங்கி அழிவுக்கேற்ற விபரீதபுத்தியையுஞ்செயலையுமுடையானீரென்பான் 'பித்தரின்மயங்கினை' எனவும், அதனால் அரசியற்குவேண்டியஆழ்ந்தபுத்தியையுமிழந்தீரென்பான் 'பேதையாயினாய்' எனவும் கூறினான். (௯௮)

பொன்னக ரழிந்தநாட் புகுந்த தேவரை
யின்னமும் விட்டிலை யிரக்க நீங்கினா
யன்னதற் கல்லவோ வாறு மாமுக
னுன்னுடன் போர்செய வுற்ற தன்மையே.

இ—ள்: பொன் நகர் அழிந்த நாள் புகுந்த தேவரை இன்னமும் விட்டிலை—சுவர்க்கலோகமழிந்தகாலத்திற் சிறைப்பட்டதேவர்களை இதுகாறும்விட்டிலீர், இரக்கம் நீங்கினாய்—அவர்கள்மேற்சிறிதாயினும் இரக்கம்வைத்திலீர், ஆறு மாமுகன் உன்னுடன் போர் செய உற்ற தன்மை—ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள் உம்மோடுபோர்செய்யவந்ததன்மை, அன்னதற்கு அல்லவோ—அத்தேவர்களைச் சிறைமீட்டற்பொருட்டன்றோ? எ—று.

அல்லவோ-தேற்றம். (௯௯)

வேறு.

பேறு தந்திடு பிஞ்ஞகன் பெருந்திரு வுடனீர்
நூறு தன்னுட னெட்டுக மிருமென நுவன்றான்
கூறு கின்றதோர் காலமுங் குறுகிய ததனைத்
தேறு கின்றிலை விதிவலி யாவரே தீர்ந்தார்.

இ—ள்: பேறு தந்திடு பிஞ்ஞகன்—எங்களுக்குவேண்டியவரங்களை முற்காலத்திற்றந்தசிவபிரான், நீர் பெரும் திரு உடன் நூறு தன் உடன் எட்டு உகம் இரும் என நுவன்றான்— நீங்கள் பெருஞ்செல்வத்தோடும் நூற்றெட்டுகங்காறும் வாழ்ந்திருப்பீராகவென்று கூறினார், கூறுகின்றது ஓர் காலமும் குறுகியது—அவர்சொல்லிய அந்தக்காலவெல்லையும் அணுகியது, அதனை தேறுகின்றிலை—அணுகியபோதும் அதனைச்சிந்திக்கின்றிலீர், விதிவலி யாவரே தீர்ந்தார்—ஊழின்வலியை யார்தாங்கடந்தவர்கள்? (ஒருவருமில்லையே) எ—று.

உம்மை எச்சம். விதிவழியே உம்முடையபுத்தியுஞ்செல்லுகின்றதென்பது குறிப்பு. (௧00)

எத்தி றத்தரு நுங்களை வெல்கில ரெமது
சத்தி வென்றிடு மென்றனன் கண்ணுதற் றலைவ
னத்தி றத்தினு லல்லவோ வறுமுகக் குமர
னுய்த்த செய்யவே லுண்டது தாரக னுயிரை.

இ—ள்: கண் நுதல் தலைவன்—நெற்றிக்கண்ணையுடையசிவபிரான், நுங்களை எ திறத்தரும் வெல்கிலர்—உங்களை எந்தவீரர்களும்வெல்லமாட்டார்கள், எமது சத்தி வென்றிடும் என்றனன்—எம்முடையசத்தியொன்றேவெல்லும் என்று அருளினார், அத்திறத்தினுல் அல்லவோ— அக்காரணத்தாலன்றோ, அறுமுக குமரன் உய்த்த செய்ய வேல்—ஆறுதிருமுகங்களையுடைய முருகவேளேவிய சிறந்தவேற்படை, தாரகன் உயிரை உண்டது-தாரகாசுரனுடைய உயிரைக்கவர்ந்தது எ—று.

உம்மை சிறப்பு. தலைவன் என்றனன் என இயையும். சுப்பிரமணியக்கடவுள் சிவபிரானின்வேறாகாது அவருடையசத்தியாயிருப்பதை 'ஆதலினமதுசத்தியறுமுகன்' எனத் திருவிளையாட்டுப்படலத்திற் கூறுதலானுமறிக. சத்தி-வேற்படையுமாம். (௧0௧)

பேதை வானவர் தங்களைச் சிறையிடைப் பிணித்தா
யாத லானுனக் கானதென் றுன்பமே யல்லா
லேது மோர்பய னில்லதோர் சிறுதொழி லியற்றி
வேத னைப்படு கின்றது மேலவர் கடனே.

இ—ள்: பேதை வானவர் தங்களை சிறையிடை பிணித்தாய்—ஏழைகளாகிய தேவர்களைச்சிறையில்வைத்தீர், ஆதலால்—அதனுல், துன்பமே அல்லால் உனக்கு ஆனது என்—துயரமேயன்றி உமக்குக்கிடைத்தபயன் வேறியாது?, ஏதும் ஓர் பயன் இல்லது ஓர் சிறுதொழில் இயற்றி வேதனைப்படுகின்றது—யாதொருபிரயோசனமுமில்லாத ஒரு புன்றொழிலைச்செய்து (அதனுல்) வருந்துவது, மேலவர் கடனே—பெரியோர்களுக்கு முறையாகுமா? எ—று.

ஏ-பிரிநிலை. ஓ-எதிர்மறை. புத்தியீனத்தாற் பயனற்றதொழிலைச்செய்து இடர்ப்படுகின்றீர் என்பதாம். (௧0௨)

குரவ ரைச்சிறு பாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மைமே லவரை

யருமறைத்தொழி லாளரை யொறுத்தன ரன்றே
நிரய முற்றவுஞ் சென்றுசென் றலமரு நெறியோர்.

இ—ள்: குரவரை— குரவர்களையும், சிறு பாலரை— சிறுபிள்ளைகளையும், மாதரை—பெண்களையும், குறை தீர் விரத நல் தொழில் பூண்டுளோர் தம்மை–குற்றமற்ற நல்லவிரதங்களையனுட்டிக்கின்ற முனிவர்களையும், மேலவரை—பெரியோர்களையும், அரு மறை தொழில் ஆளரை—சிறந்த வைதிகானுட்டானங்களையுடைய பிராமணர்களையும், ஒறுத்தனர் அன்றே—தண்டித்தவர்களன்றே, நிரயம் முற்றவும் சென்றுசென்று அலமரும் நெறியோர்— எல்லாநரகங்களினும் போய்ப்போயலையுந்தன்மையையுடையவர்கள்! எ—று.

அன்றே பலரறிதேற்றம். குரவர் தாய்தந்தையரும் உபாத்தியாயரும் ஞானோபதேசஞ்செய்த ஆசாரியருமாம். மேலவர்-கல்வி தொழில் ஒழுக்கம்முதலியவற்றான்மேம்பட்டார். அடுக்குப்பன்மைபற்றியது. மறைத்தொழிலாளர்-வேதங்களிற்கூறப்பட்ட கிரியைகளையுடையார்; வேதங்களை ஓதலும் ஓதுவித்தலுமாகிய தொழிலையுடையாரெனினுமாம். இருபத்தெட்டுக்கோடியென்னுந்தொகைப்பட்ட நரகங்களிலென்பான் ‘நிரயமுற்றவும்’ என்றான். நீர் தேவரைவருத்துதலால் இம்மைச்சுகத்தையிழப்பதன்றி மறுமைச்சுகத்தையும் இழப்பீர் என்பதாம். (௧௦௩)

அமரர் தம்பெருஞ் சிறையினை நீக்குதி யாயிற்
குமர நாயக னீண்டுபோ ராற்றிடக் குறியா
னமது குற்றமுஞ் சிந்தையிற் கொள்ளல னாளை
யிமையொ டுங்குமுன் கயிலையின் மீண்டிடு மெந்தாய்.

இ—ள்: எந்தாய்—எங்கள்தலைவரே!, அமரர் தம் பெரும் சிறையினை நீக்குதி ஆயின்—நீர் தேவர்களுக்குநியமித்த பெரியசிறையைவிடுவீரானால், குமரநாயகன் ஈண்டு போர் ஆற்றிட குறியான்—முருகக்கடவுள் இவ்விடத்தில்வந்து போர்செய்யநினைக்கமாட்டார், நமது குற்றமும் சிந்தையில் கொள்ளலன்— நாங்கள் செய்தகுற்றத்தையும் மனத்தில்நினைக்கமாட்டார், நாளை—நாளைத்தினத்தில், இமை ஒடுங்குமுன் கயிலையில் மீண்டிடும்—இமைப்பொழுதுமுடியுமுன் திருக்கைலாசமலைக்குத்திரும்பிப்போவார் எ—று.

பெருஞ்சிறை-கடுஞ்சிறை. நமதுகுற்றம்-இகழ்ந்துபேசுதல்முதலியன. ()

சிட்ட ராகியே யமர்தரு மிமையவர் சிறையை
விட்டி டாதுநீ யிருத்தியேன் மேவலர் புரங்கள்
சுட்ட கண்ணுதல் குமரனங் குலமெலாந் தொலைய
வட்டு நின்னையு முடித்திடுஞ் சரதமென் றறைந்தான்.

இ—ள்: நீ—அரசனே! நீர், சிட்டர் ஆகி அமர்தரும் இமையவர் சிறையை விட்டிடாது இருத்தியேல்—மேலவர்களாயிருக்கின்ற தேவர்களுடைய சிறையை இன்னும்விடாமலிருப்பீராயின், மேவலர் புரங்கள் சுட்ட கண் நுதல் குமரன்—பகைவர்களுடைய முப்புரங்களையெரித்த நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது புதல்வர், நம் குலம் எலாம் தொலைய அட்டு—எங்கள்குலமுழுவதுங் கெடும்படி அழித்து, நின்னையும் முடித்திடும்—உம்மையும் அழிப்பார், சரதம்—இது நிச்சயம், என்று அறைந்தான்—என்றுசிங்கமுகாசுரன் கூறினான் எ—று.

இருத்தியேல் முடித்திடும் எனஇயையும். எங்களையொருங்கேயழிக்கவல்லாரென்பதுபோதர ‘மேவலர்புரங்கள்சுட்டகண்ணுதல்குமரன்’ என அடைபுணர்த்தினான். (௧௦௫)

தடுத்து மற்றிவை யுரைத்தலும் வெய்யசூர் தடக்கை
புடைத்து வெய்துயிர்த் துரப்பியே நகைநிலாப் பொடிப்பக்
கடித்து மெல்லித ழதுக்கிமெய் பொறித்திடக் கனன்று
முடித்த னித்தலை துளக்கியே யின்னன மொழிவான்.

இ—ள்: தடுத்து இவை உரைத்தலும்—சிங்கமுகாசுரன் தன்னெண்ணத்தை மறுத்து இவ்வசனங்களைச்சொன்னவுடன், வெய்ய சூர்—கொடியசூரபன்மன், தட கை புடைத்து—விசாலித்தகைகளை (ஒன்றோடொன்று) தாக்கி, வெய்துயிர்த்து— பெருமூச்சுவிட்டு, உரப்பி—அதட்டி, நகை நிலா பொடிப்ப—சிரிப்பாகிய நிலவு தோற்ற, மெல் இதழ் கடித்து அதுக்கி—மெல்லியஉதட்டைக்கடித்து அதுக்கி, மெய் பொறித்திட கனன்று—சரீரத்தினின்று தீப்பொறிகள்தோன்றக்கோபித்து, முடி தனி தலை துளக்கி—கிரீடத்தையணிந்தஒப்பற்றதலையையசைத்து, இன்னன மொழிவான்—இவற்றைச்சொல்வான் எ—று.

பொடித்தல்-இருளையழித்தலுமாம். அதுக்கல்-பல்நிரையினுள் ஒதுக்குதல். பெருஞ்சீற்றங்கொண்டென்பார் ‘மெய்பொறித்திடக்கனன்று’ என்றார். (௧௦௬)

ஏவற் றொண்டுசெய் தின்னமுங் காந்தவிந் திரற்குந்
தேவர்க் குஞ்சிறு பாலற்குஞ் சிவனுறை கயிலைக்
காவற் பூதர்க்கு மஞ்சினை கருத்தழிந் தனையோ
மூவர்க் கும்வெலற் கரியதோர் மொய்ம்புகொண் டுடையோய்.

இ—ள்: மூவர்க்கும் வெலற்கு அரியது ஓர் மொய்ம்பு கொண்டு உடையோய்-மும்மூர்த்திகளாலும்வெல்லுதற்கரிய வலிமையைப்பெற்றிருக்கின்ற எனது தம்பியே?, ஏவல் தொண்டு செய்து இன்னமும் காந்த இந்திரற்கும்-யானேவியதொண்டுகளைச்செய்து இதுகாறுமொளித்திருந்த இந்திரனுக்கும், தேவர்க்கும்—தேவர்களுக்கும், சிறு பாலற்கும்—சிறுபிள்ளைக்கும், சிவன் உறை கயிலை காவல் பூதர்க்கும்—சிவபிரான்வீற்றிருக்கின்ற திருக்கைலாசமலையைக்காவல்செய்திருந்த பூதர்களுக்கும், அஞ்சினை—பயந்து, கருத்து அழிந்தனையோ—மனநிலைகெட்டாயா! எ—று.

சிறந்த வீரர்களையுமஞ்சுவிக்கும் ஆற்றலுடையாய் சிறிதும்வலியற்ற நொய்யர்க்கஞ்சுவதும் அவரைப்புகழ்வதும் புதுமையாயிருக்கின்றது என்பதாம். (௧௦௭)

எல்லை நாள்வரை யிழைத்தது மெம்பெருஞ் சத்தி
வெல்லு நுங்களை யென்றதுங் கண்ணுதல் விமலன்
சொல்ல யான்முன்பு கேட்டிலன் வஞ்சமுஞ் சூழ்வும்
வல்லை வல்லைகொ லெம்பிநீ புதிதொன்று வகுத்தாய்.

இ—ள்: எல்லைநாள் வரை இழைத்ததும்—வாழ்நாளினெல்லையை வரையறுத்ததையும், எம் பெரும் சத்தி நுங்களை வெல்லும் என்றதும்—எமதுபெரியசத்தி உங்களைவெற்றிகொள்ளுமென்றதையும், கண் நுதல் விமலன் சொல்ல யான் முன்பு கேட்டிலன்—நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான்கூற யான்முற்காலத்திற்கேட்டிலேன், புதிது ஒன்று வகுத்தாய்—புதிதாகஒருநிகழ்ச்சியைக்கூறினாய், (ஆதலின்), எம்பி நீ—என்தம்பீ! நீ, வஞ்சமும் சூழ்வும் வல்லை வல்லை கொல்—வஞ்சகத்திலும் உபாயத்திலும் மிகச்சாமர்த்தியமுடையாய்போலும்! எ—று.

அடுக்கு வன்மையின் மிகுதியைச்சுட்டிற்று. சிவபிரானருளிச்செய்தபோது சூரபன்மன்கேட்டிலனாதலின் ‘புதிதொன்றுவகுத்தாய்’ எனவும், அதுபற்றியே ‘வஞ்சமுஞ்சூழ்வும்வல்லைவல்லை’ எனவும் தம்பியைக்கோபித்தான். (௧௦௮)

நூற்றின் மேலுமோ ரெட்டுக நுவலருந் திருவின்
வீற்றி ருந்தர சியற்றுதி ரென்னினு மேனா
ளாற்றி னைச்சடை வைத்தவன் கொடுத்திடு மழியாப்
பேற்றை யாவரே விலக்குவா ரதுபிழை படுமோ.

இ—ள்: நூற்றின் மேலும் ஓர் எட்டு உகம் நுவலரும் திருவின் வீற்றிருந்து அரசியற்றுதிர் என்னினும்— நூற்றெட்டுகங்காறுஞ் சொல்லுதற்கரிய செல்வத்தோடுவீற்றிருந்து அரசியல்செய்வீரென்று (சிவபிரான்) கூறியிருந்தாலும், மேல் நாள்—முற்காலத்தில், ஆற்றினை சடை வைத்தவன் கொடுத்திடும் அழியா பேற்றை—கங்கைநதியைச்சடைமுடியிலணிந்த அந்தச்சிவபிரான் தந்த அழியாவரத்தை, யாவரே விலக்குவார்—யார்தாம்விலக்கவல்லார்?, அது பிழைபடுமோ—அவ்வரம் தவறுபடுமா? எ—று.

சிவபெருமான் எனக்கு அழியாவரத்தைத்தந்தாராதலால் நூற்றெட்டுகம்வரைவாழும்படி அவர்விதித்தாலும் அழிவுவாராது என்பதாம். (௧௦௧)

ஆதி நாயக னெம்பெருஞ் சத்தியே யல்லா
லேதி லார்வெலா ரென்னினுஞ் சத்தியு மிறையும்
பேத மோவரங் கொடுத்தவ னடுமென்கை பிழையே
யோத லாவதோர் வழக்கமே யுண்மைய தன்றால்.

இ—ள்: ஆதி நாயகன்—முதற்கடவுளாகியசிவபிரான், எம் பெரும் சத்தியே அல்லால் ஏதிலார் வெலார் என்னினும்- எம்முடைய சிறந்தசத்தியேயன்றிப் பிறர்வெல்லமாட்டார்களென்று அருளிச்செய்தாலும், சத்தியும் இறையும் பேதமோ—சத்தியுஞ்சிவமும் பேதமா?,வரம் கொடுத்தவன் அடும் என்கை பிழையே—வரத்தைக்கொடுத்தவர் அழிப்பாரென்பது தவறேயாம், ஓதல் ஆவது ஓர் வழக்கமே- சிவமுஞ்சத்தியுமென்று இரண்டாக்கிக்கூறுகின்ற வழக்கமேயல்லாமல், அது உண்மை அன்று—அதுமெய்யன்று எ—று.

தீயின்வெம்மைபோலச் சிவத்துடன் சத்தி அபின்னமாயிருத்தலால் 'சத்தியுமிறையும்பேதமோ' எனவும், சிவமின்றிச்சத்திதனித்தெய்துதல் ஒருவாற்றானுங் கூடாதென்றுதுணிந்தானாதலின் 'வரங்கொடுத்தவனடுமென்கைபிழையே' எனவும், பிரமத்தினுடைய மாயையையேகுணகுணிபாவத்தாற்சத்தியெனப்பெயர்கொடுத்து வழங்குவதன்றி அதனின்வேறாக ஒருபொருளுமில்லையென்பான் 'ஓதலாவதோர்வழக்கமேயுண்மையதன்று' எனவும் கூறினான். "சிலர் வித்தையென்றும் சிலர் பரையென்றும் சிலர் வியோமமென்றும் சிலர் ஆனந்தமென்றும் சிலர் மாயையென்றுங்கூறுகின்றார்கள்" என்றுகாளிதாசகவிகூறியவாறு சத்தியைப்பலரும் பலவாறுகூறிவழங்குவர். இறைவர் அபேதமானசத்தியைப்பேதமாக ஒருருவமாக்கியேவினரென்பதையும் அவரங்ஙனஞ்செய்யவல்லாரென்பதையுமுணராமையாற் சூரபன்மனிவ்வாறுகூறினனென்க. (௧௧௦)

பழுது றுதுநம் போலவே வேள்வியைப் பயிலா
தழிவி லாவரம் பெற்றிலன் றாரக னதனா
லொழிவ தாயினன் வச்சிர வாகுவு முணர்வில்
குழவி யாதலின் மாய்ந்தன னீதுகோல் குறையே.

இ—ள்: பழுது உறுது நம் போல வேள்வியை பயிலாது-தவறுபடாமல் எம்மைப்போல யாகத்தைச்செய்யாமையால், தாரகன்—தாரகாசுரன், அழிவு இலா வரம் பெற்றிலன்—அழியாவரத்தைப்பெற்றிலான், அதனால் ஒழிவது ஆயினன்—அக்காரணத்தாலிறந்தான், வச்சிரவாகுவும் உணர்வு இல் குழவி ஆதலின்

மாய்த்தனன்—வச்சிரவாகுவும் அறிவுநிரம்பாத குழந்தையாதலால் இறந்தான், ஈது குறை கொல்—இது குற்றமா? எ—று.

சிங்கமுகனையுமுளப்படுத்தி நம்போல என்றான். மிகவூக்கமாகவேள்வியைச்செய்யாமையால் அவனுக்கு அழியாவரங்கிடைத்திலதென்று அவனிறந்ததற்கோர் காரணத்தைக்கற்பித்தான். (௧௧௧)

அண்ட மாயிரத் தெட்டையுந் தனியர சாட்சி
கொண்டு வைகினன் குலத்தொடு மமரர்தங் குழுவைத்
தொண்டு கொண்டனன் யாவர்வந் தெதிர்க்கினுந் தொலையே
னுண்டு கொல்லிவ ணெனக்குநே ராகவே யொருவர்.

இ—ள்: அண்டம் ஆயிரத்து எட்டையும் தனி அரசாட்சி கொண்டு வைகினன்—ஆயிரத்தெட்டண்டங்களையுந் தனியேயரசியற்றுந்திறத்தைப்பெற்றிருக்கின்றேன், அமரர் தம் குழுவை குலத்தொடும் தொண்டுகொண்டனன்—தேவர் கூட்டத்தாரைமுற்றாக ஏவலாளராக்கினேன், யாவர் வந்து எதிர்க்கினும் தொலையேன்—யார்தாம் வந்தெதிர்த்தாலுந்தோற்கமாட்டேன், (ஆதலின்), இவண் எனக்கு நேர் ஆக ஒருவர் உண்டு கொல்—இவ்வுலகத்தில் எனக்கிணையாக எவராயினுமொருவர் இருக்கின்றாரா? (இல்லையே) எ—று.

யான் தாரகனைப்போலழியமாட்டேனென்பதை இச்செய்யுளாலும் பிற்செய்யுட்களாலும் வற்புறுத்திக்கூறினானென்க. (௧௧௨)

தவமு யன்றுழ லமரரி னரக்கர்க டம்மி
னவுணர் தங்களி னாயிரத் தெட்டெனு மண்டம்
புவன முற்றவு மொருதனி யாழியாற் புரந்தே
யெவரெ னக்குநே ராகவே யழிவிலா திருந்தார்.

இ—ள்: தவம் முயன்று உழல் அமரரின்—தவத்தைச்செய்துவருந்துகின்ற தேவர்களுள்ளும், அரக்கர்கள் தம்மின்—இராக்கதர்களுள்ளும், அவுணர் தங்களின்—அசுரர்களுள்ளும், ஆயிரத்து எட்டு எனும் அண்டம் புவனம் முற்றவும்—ஆயிரத்தெட்டென்னுந்தொகையான அண்டங்களையும் அவற்றிலுள்ள உலகங்கள் முழுவதையும், ஒருதனி ஆழியால் புரந்து—ஒப்பற்ற ஒருஆஞ்ஞாசக்கரத்தாற்காத்து, எனக்கு நேர் ஆக அழிவு இலாது இருந்தார்—எனக்கொப்பாக அழியாமலிருந்தவர்கள், எவர்—யாவர்? (ஒருவருமில்லையே) எ—று.

தவமுயன்றுழல் என்பதை அரக்கர்க்கும் அவுணர்க்கும் ஒட்டுக. (௧௧௩)

மாலயன் முத லாகிய முதுவர்கள் வரம்பில்
கால மாகயா னமரரைச் சிறைசெயக் கண்டுஞ்
சால வென்றனக் கஞ்சியே யிருந்தனர் தனியோர்
பால னோகொலா மழிவிலா வென்னுயிர் படுப்பான்.

இ—ள்: மால் அயன் முதல் ஆகிய முதுவர்கள்—திருமாலும் பிரமதேவரு முதலான தேவத்தலைவர்கள், வரம்பு இல் காலம் ஆக யான் அமரரை சிறைசெய கண்டும்—அளவிறந்தகாலமாக நான்தேவர்களைச்சிறையில்வைத்திருக்கக்கண்டும், என் தனக்கு சால அஞ்சி இருந்தனர்—எனக்குமிகப்பயந்திருந்தார்கள், (அங்ஙனமாக), தனி ஓர் பாலன் கொல்—தனிமையான ஒரு சிறுபிள்ளைதானோ, அழிவு இலா என் உயிர் படுப்பான்—அழியாத என்னுடைய உயிரை அழிக்கவல்லான்? எ—று.

உம்மை இழிவு. பிரமாமுதலியதேவத்தலைவர்களினும் முருகவேளை வலிகுறைந்தாராகமதித்தானாதலின் இங்ஙனங்கூறினான். சிறையைவிடும்படி கேட்டற்குமஞ்சியென்பான் 'சால-அஞ்சி' என்றான். (௧௧௪)

வேறு பாடுறா வச்சிரப் படிவமு மிடனு
மீறி லாததோ ராயுளும் பெற்றிடு மென்னை
யூறு தான்செயக் கூடுறா தொருவர்க்கு மென்றால்
மாறு போர்செய்து பாலனோ வெனையட வல்லான்.

இ—ள்: வேறுபாடு உறா வச்சிர படிவமும் மிடலும் ஈறு இலாதது ஓர் ஆயுளும் பெற்றிடும் என்னை—வேறுபாட்டையடையாத வச்சிரயாக்கையையும் வலிமையையும் அழியாத ஆயுளையும்பெற்றிருக்கின்ற என்னை, ஊறு செய—ஊறுபடுத்துதற்கு, ஒருவர்க்கும் கூடுறாது என்றால்—ஒருவராலுமியலாதானால், பாலனோ—சிறுபிள்ளையா, மாறு போர் செய்து எனை அட வல்லான்—எதிர்த்துப் போர்செய்து என்னையழிக்கவல்லவன்? எ—று.

ஊறுபடுத்தலேயியலாததாதலின் அழித்தல் எங்ஙனங்கூடும் என்பதாம். பிளத்தல் துணித்தல் முதலிய தொழில்வகையாற் பிரித்தற்கியலாததவென்பான் 'வேறுபாடுறா' என்றான். நரை திரை முதலியவற்றையெய்தாமையால் அங்ஙனங்கூறினானெனினுமாம். (௧௧௬)

எண்ணி லாததோர் பாலக னெனைவெல்வ னென்கை
விண்ணி லாதவன் றன்னையோர் கனியென வெஃகிக்
கண்ணி லாதவன் காட்டிடக் கையிலா தவன்போ
யுண்ணி லாதபே ராசையிற் பற்றுமா றொக்கும்.

இ—ள்: எண் இலாதது ஓர் பாலகன் எனை வெல்வன் என்கை—வீரருளொருவனாக எண்ணத்தகாத ஒருபுதல்வன் என்னைவெல்வானென்றுகூறுதல், விண்ணில் ஆதவன் தன்னை ஓர் கனி என வெஃகி கண்ணிலாதவன் காட்டிட—ஆகாயத்திலுள்ள சூரியனை ஒருபழமென்றுவிரும்பி ஒருகுருடன்காட்ட, கை இலாதவன் போய்—கையில்லாத ஒருவன் அவனேவற்படிபோய், உள் நிலாத பேர் ஆசையால் பற்றுமாறு ஒக்கும்—மனத்திலடங்காத பேராசையுடன் பிடிக்குந்தன்மையைப்போலும் எ—று.

நில்லாத என்பதில் லகரவொற்றுத்தொக்கது. குருடன்காட்டுதலும் கையிலான்பற்றுதலும் பொய்த்தல்போலப் பாலன்வெல்வதும் பொய்படும் என்பதாம்.

என்று மற்றிவை சூரபன் மாவிசைத் திடலுந்
துன்று பஃறலைச் சீயமா முகமுடைத் துணைவ
னன்று நன்றென வினவியே யின்னமு நானிங்
கொன்று கூறுவன் முனியலை கேட்டியென் றுரைப்பான்.

இ—ள்: சூரபன்மா—சூரபன்மன், என்று இவை இசைத்திடலும்—என்றுஇந்தவசனங்களைக்கூறியவுடன், துன்று பல் தலை சீய மா முகம் உடை துணைவன்—நெருங்கிய பலதலைகளையும் பெரிய சிங்கமுகங்களையுமுடைய அவனதுதம்பியானவன், நன்று நன்று என வினவி—நல்லது நல்லது என்றுகேட்டு, நான் இன்னமும் ஒன்று இங்கு கூறுவன்—யான்இன்னுமொருவசனத்தையிங்கே சொல்வேன், முனியலை கேட்டி—கோபமெய்தாமற் கேட்பீர், என்று உரைப்பான்—என்றுசொல்வான் எ—று.

இதுகாறுந்தேற்றியுஞ் சிறிதுந்தெளிந்திலானேயென்று மனம்வருந்திக் கேட்டானென்பார் 'நன்றுநன்றெனவினவி' என்றார். (௧௧௭)

வாலி தாமதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியு முக்கணு நாற்பெரும் புயமு
நீல மாமணிக் கண்டமுங் கொண்டுநின் றனனும்
மூல காரண மில்லதோர் பராபர முதல்வன்.

இ—ள்: மூல காரணம் இல்லது ஓர் பராபர முதல்வன்—தமக்கு முதற்காரணமானபொருள் பிறிதொன்றுமில்லாத சுத்தமாயாதீதரான சிவபிரான், வாலிது ஆம் மதி சடிலமும்—தூய்மையான சந்திரனையணிந்த சடைமுடியையும், பவள மால் வரையே போலும் மேனியும்— பவளத்தாலான பெரியமலையையே போன்ற சிவந்தநிறத்திருமேனியையும், முக்கணும்—மூன்றுதிருக்கண்களையும், நால் பெரும் புயமும்—பெரிய நான்குபுயங்களையும், நீல மா மணி கண்டமும் கொண்டு நின்றனன்—நீலநிறமான சிறந்ததிருமிடற்றையுமுடையராய் எழுந்தருளியிருக்கின்றார் எ—று.

கடவுள் இங்கேகூறப்பட்ட தியானரூபத்துடன் திருக்கைலாசகிரியிலெழுந்தருளியிருக்கின்றார் என்பதாம். வரையே என்பதில் ஏ-தேற்றம். ஞானசந்திரனென்பான் 'வாலிதாமதி' எனவும், உருவம்நான்கும் அருவம்நான்கும் அருவுருவமொன்றுமாகிய நவந்தருபேதங்களையெல்லாங்கடந்துநின்றபதிப்பொருள் என்பான் 'பராபரமுதல்வன்' எனவும், அனாதியாயுள்ளவென்பான் 'மூலகாரணமில்லது' எனவும் கூறினான். (௧௧௮)

தன்னை நேரிலாப் பரம்பொரு ளனியுருக் கொண்ட
தென்ன காரண மென்றியே லைந்தொழி லியற்றி
முன்னை யாருயிர்ப் பாசங்கண் முழுவது மகற்றிப்
பின்னை வீடுபே றருளுவா னினைந்தபே ரருளே.

இ—ள்: தன்னை நேர் இலா பரம்பொருள் தனி உரு கொண்டது என்ன காரணம் என்றியேல்-தமக்கொப்பாவார்பிறரில்லாத முதற்பொருளாகிய சிவபெருமான் ஒப்பற்றதிருவுருவத்தைக்கொண்டது யாதுகாரணம்பற்றியென்பீராயின், ஐந்தொழில் இயற்றி முன்னை ஆர் உயிர் பாசங்கள் முழுவதும் அகற்றி—படைத்தன்முதலிய ஐந்துதொழில்களையுஞ்செய்து பழைய அரியஆன்மாக்களின்பாசங்களெல்லாவற்றையும் நீக்கி, பின்னை வீடுபேறு அருளுவான் நினைந்த பேர் அருளே—அதன்பின் முத்திப்பேற்றைக்கொடுக்கும்படி நினைத்த பெருங்கருணையேயாம் எ—று.

அருளுதற்பொருட்டேயுருவங்கொண்டார்என்பதாம். இறைமைக்குணமாறுமமையப்பெற்றமுதற்பொருளென்பான் 'தன்னைநேரிலாப்பரம்பொருள்' எனவும், எங்கள்பௌதிகதேகம்போலாது அருளேமயமானவடிவமென்பான் 'தனியுரு' எனவும், இருவினையொப்புமுதலானபக்குவங்களெய்தப்பெற்றவுயிரென்பான் 'ஆருயிர்' எனவும், தொழினிகழ்த்துமாற்றாற் பக்குவப்படுத்தியென்பான் 'தொழிலியற்றி-அகற்றி' எனவும், பதமுத்தி பரமுத்தியிரண்டுமடங்க 'வீடுபேறு' எனவும் கூறினான். வீடுபேறருளுவான் என்றதில் உபலக்கணத்தால் இம்மையின்பங்களையுமமைத்துக்கூறுக. ஆருயிர் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனமூவகைப்பட்டவுயிர்களெனவுங்கூறுவர். அவருள் விஞ்ஞானகலர்: அட்டவித்தியேசுரர் அனுசதாசிவர் சத்தகோடிமகாமந்திரர் எனமூவகையர். இவர்கள் ஆணவமலமொன்றைமாத்திரமுடையார். இவர் பக்குவராயவழிப் பதிஅறிவிலே தன்மைமாத்திரையாய்நின்று திருவருளையுதிப்பித்து மலத்தைப்போக்கியிரட்சிப்பார். பிரளயாகலர்: நூற்றுப்பதினெட்டுருத்திரர்களாம். இவர்கள் ஆணவம் கன்மம் என்னுமிருமலங்களையுடையர். இவர் பக்குவராயவழி மான்மழுவும் நாற்புயமும் காளகண்டமும் முக்கண்களுமுடையவராயெழுந்தருளி முன்னிலைமாத்திரையாய்நின்று மலத்தைப்போக்கியிரட்சிப்பார். சகலர்: பிரம விஷ்ணுக்கள்முதற் பிபீலிகையீறாகவுள்ளவர்கள். இவர்கள் ஆணவம் கன்மம் மாயை என்னுமும்மலங்களையுமுடையவர்கள். இவர்களுக்குக் குருமூர்த்தியாயெழுந்தருளித்தீக்கைசெய்து மலத்தைப் போக்கியிரட்சிப்பர். (௧௧௯)

அப்ப ரன்றனை யுன்னியே யளவைதீர் கால
மெய்ப்பெ ருந்தவ மியற்றினை யதுகண்டு வெளிப்பட்
டொப்பி லாவர முதவியே யாங்கதற் கொழிவுஞ்
செப்பி வைத்தனன் றேர்ந்திலை போலுமத் திறனே.

இ-ள்: அ பரன் தனை உன்னி—அவ்வியல்பையுடைய சிவபெருமானை நினைத்து, அளவை தீர் காலம் மெய் பெரும் தவம் இயற்றினை— அளவிறந்தகாலமாகச் சிறந்த பெருந்தவத்தைச்செய்தீர், அது கண்டு வெளிப்பட்டு—(அச்சிவபிரான்) அத்தன்மையைப்பார்த்துப்பிரசன்னராகி, ஒப்பு இலா வரம் உதவி—ஒப்பில்லாதவரத்தைத்தந்து, அதற்கு ஒழிவும் செப்பி வைத்தனன்—அதற்குஅழிவையும் (அப்பொழுதே) கூறிமுடித்தார், அத்திறன் தேர்ந்திலை போலும்—அத்தன்மையை நீரறிந்திலீர்போலும் எ-று.

அவரேயொழிவுகூறியதனாலும் அவ்வெல்லையணுகியதனாலும் அழிந்துபடுவோமென்பதற்கையமின்றென்பது குறிப்பு. (௧௨௦)

பெறல ருந்திரு வுடையநீ யறத்தினைப் பேணி
முறைபு ரிந்திடா தாற்றலா லமரரை முனிந்து
சிறையில் வைத்தனை யதுகண்டு நின்வலி சிந்தி
யிறுதி செய்திட வுன்னினன் யாவர்க்கு மீசன்.

இ-ள்: பெறல் அரும் திரு உடைய நீ—எவராலும் பெறுதற்கரிய செல்வத்தையுடையநீர், அறத்தினை பேணி முறை புரிந்திடாது—தருமநீதியையனுசரித்து அரசியலைச்செய்யாமல், ஆற்றலால் அமரரை முனிந்து சிறையில் வைத்தனை—வலிமையினால் தேவர்களைக்கோபித்துச் சிறையில்வைத்தீர், அது கண்டு—அதனைப்பார்த்து, நின் வலி சிந்தி இறுதி செய்திட—உம்முடைய வலிமையையழித்துக்கொல்லும்படி, யாவர்க்கும் ஈசன் உன்னினன்-எல்லாத்தேவர்க்கும்முதற்றேவராகியசிவபிரான் திருவுளம்பற்றினார் எ-று.

நீதிகோடிநடத்தலால் உம்மேல்வெறுப்புற்றார் என்பதாம். (௧௨௧)

வரம ளித்தயா மழிப்பது முறையன்று வரத்தாற்
பெருமை பெற்றுள சூரனை யடுவது பிறர்க்கு
மரிதெ னப்பர னுன்னியே தன்னுரு வாகு
மொருமக கற்கொடு முடித்துமென் றுன்னினா னுளத்தில்.

இ-ள்: வரம் அளித்த யாம் அழிப்பது முறை அன்று—வரத்தைக்கொடுத்த நாம் கொல்வது நீதியன்று, வரத்தால் பெருமை பெற்று உள சூரனை அடுவது பிறர்க்கும் அரிது—வரத்தைக்கொடுத்தமையால் எவரினுமிக்கபெருமையைப் பெற்றிருக்கின்ற சூரபன்மனையழிப்பது பிரமாமுதலிய பிறதேவர்களாலுங்கூடாது, என பரன் உன்னி—என்று சிவபிரான் திருவுளம்பற்றி, தன் உரு ஆகும் ஒரு மகன் கொடு முடித்தும் என்று—தமதுவடிவமாகிய ஒப்பற்ற புதல்வரைக்கொண்டு அழிப்போமென்று, உளத்தில் உன்னினான்—மனத்திற்றுணிந்தார் எ-று.

உம்மை எச்சம். சிவபிரானது வடிவமேகுமாரக்கடவுளது வடிவுமாயமைந்ததென்பதை அவைபுகுபடலத்து ௧௨௧ஞ்செய்யுளாலும், "ஆறுமாமுகஞ்சேர்த்துள்ளநமக்கவையவன்முகங்க ளாறுமாயிருந்தவேதமறையுந்தாரகவெழுத்தோ ராறுமாங்கவனுமத்தாறெழுத்துமாயிருந்தவன்றே" எனத்தணிகைப்புராணங்கூறுதலாலும் உணர்க. (௧௨௨)

செந்நி றத்திரு மேனியுந் திருமுக மாறு
மன்ன தற்கிரு தொகையுடைத் தோள்களு மாக

முன்னவர்க்குமுன் னாகிய பராபர முதல்வன்
றன்னு தற்கணா லொருதனிக் குமரனைத் தந்தான்.

இ—ள்: செம் நிற திருமேனியும்—சிவந்தநிறம்பொருந்திய திருமேனியும், திருமுகம் ஆறும்—அழகிய ஆறுமுகங்களும், அன்னதற்கு இரு தொகை உடை தோள்களும் ஆக—முகங்களின்றொகைக்கிருமடங்கானதொகையமைந்த புயங்களும்அமைய, முன்னவர்க்கு முன் ஆகிய பராபர முதல்வன்—பிரமாமுதலியதேவத்தலைவர்க்கெல்லாந்தலைவராகிய சிவபிரான், தன் நுதல் கணால்—தம்முடைய நெற்றிக்கண்களினின்றும், ஒரு தனி குமரனை தந்தான்—ஒப்பற்ற ஒருபுத்திரரைத் தோற்றுவித்தார் எ—று.

ஆகத் தந்தான் என இயையும். (கஉங)

மானு டத்தரின் விலங்கினிற் புட்களின் மற்று
மூன முற்றுழல் யாக்கையிற் பிறந்துளா ரொப்ப
நீநி னைக்கலை பராஞ்சுடர் நெற்றியந் தலத்தே
தானு தித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்.

இ—ள்: மானுடத்தரின் விலங்கினில் புட்களில் மற்றும் ஊனம் உற்று உழல் யாக்கையில் பிறந்துளார் ஒப்ப—மானுடர்களாகவும் மிருகங்களாகவும் பறவைகளாகவும் வேறுமுள்ள குற்றம்பொருந்தியுழல்கின்ற சரீரங்களாகவும் பிறந்த ஆன்மாக்களைப்போல, நீ நினைக்கலை—நீர்நினைக்கவேண்டாம், மறைகளும் கடந்தது ஓர் தலைவன்—வேதங்களாலும் அறியப்படாதுநின்ற முதல்வராகியமுருகவேள், பராஞ்சுடர் நெற்றியம் தலத்தே உதித்தனன்—சிவபிரானதுநெற்றிக்கண்ணினின்றேதோற்றினார் எ—று.

ஏ-தேற்றமும் பிரிநிலையுமாம். ஊனம் யோனிவாய்ப்படல்முதலியன. வேதங்களையோதியுணர்ந்தார்க்கும் உணர்தற்கரியராய்நிற்றலின் 'மறைகளுங்கடந்ததோர்தலைவன்' என்றான். நிட்களராகியகடவுள் நம்மையழித்தற்பொருட்டுச் சகளத்திருமேனிகொண்டாரென்பதுகருத்து. (கஉச)

சீல மில்லவர்க் குணரவொண் ணாதசிற் பரனைப்
பால னென்றனை யவனிடத் திற்பல பொருளு
மேலை நாள்வந்து தோன்றிய சிறியதோர் வித்தி
னாலம் யாவையு மொடுங்கியே யவதரித் ததுபோல்.

இ—ள்: சீலம் இல்லவர்க்கு உணர ஒண்ணாத சிற்பரனை பாலன் என்றனை—நல்லொழுக்கமில்லாதவர்களாலறிதற்கரியவராயிருக்கின்றகடவுளைப் பாலகரென்றகூறினீர், சிறியது ஓர் வித்தின் ஆலம் யாவையும் ஒடுங்கி அவதரித்தது போல்—சிறியஒருவிதையின்கண்ணே பெரியஆலமரமுழுவதும் அடங்கித்தோன்றினாற்போல, அவனிடத்தில் பல பொருளும் மேலைநாள் வந்து தோன்றிய—அவரிடத்து எல்லாப்பொருள்களும் முற்காலத்தில்வந்துதோற்றின எ—று.

சீலம் எண்டு இயமமுதலியயோகாங்கங்களினமைதி. சிற்பரன்-ஞானரூபர். சிறியதாகியஒருவித்தினின்று விழுது கிளை முதலியவற்றுடனிருந்த பெரியஆலமரந்தோன்றுதல்போல, பாலரூபத்தைக்கொண்ட இந்தக்கடவுளினின்று பிரபஞ்சமெல்லாந்தோன்றின என்பதாம். (கஉரு)

அருவு மாருவ னுருவமு மாருவ னருவு
முருவு மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்
கருமமாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம னாடலை யாவரே பகர்ந்திடற் பாலார்.

இ—ள்: அருவும் ஆகுவன்—அருவத்திருமேனியாயும் நிற்பார், உருவமும் ஆகுவன்- உருவத்திருமேனியாயும் நிற்பார், அருவும் உருவும் இல்லது ஓர் தன்மையும் ஆகுவன்—அருவமும் உருவமுமல்லாத (அருவுருவத்) திருமேனியாயும் நிற்பார், ஊழின் கருமம் ஆகுவன்—பழையமுறைப்படி காரியமாயும்நிற்பார், நிமித்தமும் ஆகுவன்- காரணமாயும்நிற்பார், பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற்பாலார்—கடவுளுடையலீலையை யார்தாஞ்சொல்லிமுடிக்கவல்லார்? எ—று.

கண்டாய்- முன்னிலையசை. அருவத்திருமேனி சிவம் சத்தி நாதம் விந்து என்பன. உருவத்திருமேனி பிரமன் விட்டுணு உருத்திரன் மகேச்சுரன் என்பன. அருவுருவத்திமேனி சதாசிவம். ஆகவே நவந்தருபேதமாய்நிற்பவரென்பது பெறப்பட்டது. தோன்றலும் நிற்றலும் அழிதலுமாகியதொழின்முறைக்கேற்பவென்பான் 'ஊழின்' என்றான். கருமம்-செயப்படுபொருளாகியபிரபஞ்சம். நிமித்தம் அதனைப்படைத்தற்குரிய முதல் துணை நிமித்தமென்னுமூவகையானகருவி; நிமித்தகாரணமென்பாருமுளர். உருவமென்பதில் இருபத்தைந்துசேவலருபங்களையுமமைக்க. எல்லாமாய்நிற்பாராதலின் அவரதுபெருமையை முற்றுமறிந்துகூறுதல் இயலாது என்பதாம். ஊழின்கருமமாகுவனிமித்தமுமாகுவன் என்றதற்கு ஊழ்வினைப்பயனுகியும்நிற்பார் அப்பயனையூட்டுவிக்குங்கருத்தாவாகியும்நிற்பார் எனினுமாம். (கஉசு)

வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவா
யாதிக் காதியா யுயிர்க்குயி ராய்நின்ற வமலன்.

இ—ள்: முடிவிற்கும் முடிவு ஆய் ஆதிக்கு ஆதி ஆய் உயிர்க்கு உயிர் ஆய் நின்ற அமலன்—உலகமழிந்தபின்னும் எஞ்சிநிற்பவராய் அவ்வுலகந்தோன்றமுன்னும்(தமதிச்சையாற்கொள்ளப்பட்டதிருமேனியுடன்)தோன்றிநிற்பவராய் ஆன்மாக்களெவற்றிற்கும் அந்தரான்மாவுமாய் நிலைபெற்றஅக்கடவுள், வேத காட்சிக்கும் உபநிடத்து உச்சியில் விரித்த போத காட்சிக்கும் காணலன்—வேதங்களாலுணர்த்தப்படும் உணர்ச்சிக்கும் அவ்வேதங்களின்சிரசாகிய உபநிடத்துகளின்முடிவில் விரித்துக்கூறப்படுகின்ற ஞானஅறிவிற்கும் தோற்றப்படாதவர், புதியரில் புதியன்—புதியவர்களெல்லாரினும்புதியவர், மூதக்கார்க்கும் மூதக்கவன்—பழையவர்களெல்லாரினும்பழையவர் எ--று.

உம்மைகள் சிறப்பு. முன்னையஇரண்டும் எண்ணுமாம். ஆதிக்கும் என்பதிற் சிறப்பும்மைதொக்கது. காட்சி-அறிவு. வேதங்களையோதியுணர்ந்தவழியும் வேதசிரசாகிய உபநிடத்துகளையோதியுணர்ந்தவழியும் அருளில்வழிக் காண்டலரிதாதலின் 'வேதக்காட்சிக்கும்— -- — காணலன்' எனவும், தமக்குப்பின்றோன்றியயாக்கையுடையாரெல்லாருமூப்பவும் நிலைபெற்றஇளமையுடையராய்நிற்றலின் 'புதியரிற்புதியன்' எனவும், தமக்குமுன்றோன்றினரெல்லார்க்குமுற்பட்டவராய்நிற்றலின் 'மூதக்கார்க்குமூதக்கவன்' எனவும் கூறினான். அத்தகைய அதீதப்பொருளினுற்றலை நீர் காண்பதும் வெல்வதும் பாலனென்றிகழ்வதுமெவ்வாறு என்பதுகுறிப்பு. பிற்செய்யுட்களுக்குமிதுவேகுறிப்பென்க. (கஉஎ)

ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானு நீயுமா யிசைத்துமென் றுலஃ தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை.

இ—ள்: ஞானம் தான் உரு ஆகிய நாயகன் இயல்பை—ஞானமேதிருமேனியாகவுடைய அப்பெருமானுடையதன்மையை, யானும் நீயும் ஆய் இசைத்தும்

என்றால்—நானும்நீருமாகப் பேசிமுடிப்போமென்றுமுயன்றால், அஃது எளிதோ—அது இலகுவாமோ?, மோனம் தீர்கலா முனிவரும் முழுதும் தேற்றிலர்—மவுனநிலைநீங்கப்பெறாத முனிவர்களும் அவற்றையெல்லாமறிந்திலார், தானும் இன்னமும் தன் பெரும் தலைமை காண்கிலன்—தாமும் இதுகாறும் தமது சிறந்த மான்மியங்களையறிகின்றிலார் எ—று.

ஞானமுற்றினார்க்குவெளிப்படுதலின் 'ஞானந்தானுருவாகியநாயகன்' என்றான். உம்மை முனிவரும் தானும் என்பவற்றில் உயர்வு; ஓ எதிர்மறை. ஞானரூபராகிய முருகவேளது பெருமைகளை ஞானஞ்சிறிதுமில்லாதநாங்கள் அறிந்து கூறுதல்கூடாதென்பான் 'ஞானந்தானுருவாகியநாயகனியல்பையானுநீயுமாயிசைத்துமென்றாலஃதெளிதோ' எனவும், ஞானமில்லாதயாமாத்திரமன்று ஞானநிலையின்முற்றிநின்றபெரியோர்களும் ஒருசிறிதுணர்வதன்றி முற்றாவுணரமாட்டாரென்பான் 'மோனந்தீர்கலாமுனிவருந்தேற்றிலர்முழுதும்' எனவும், தம்மின்வேறாயொருபொருளுமின்றியும் முற்றறிவுடையராயும்நிற்றலின் சுட்டியறிதற்கூடாதென்பான் 'தானுங்காண்கிலனின்னமுந்தன்பெருந்தலைமை' எனவும் கூறினான். 'தம்பெருமையறியாததம்மிறைவர்' என்றார் வாதவூரர்புராணத்தாரும்.

தத்த மாற்றங்க ணிறுவிய சமயிகள் பலருங்
கத்து புன்சொலை வினவின ரவன்செயல் காணார்
சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
யுய்த்து ணர்ந்திடு நீரரே யொருசிறி துணர்வார்.

இ—ள்: தத்தம் மாற்றங்கள் நிறுவிய சமயிகள் பலரும் கத்து புன்சொலை வினவினர்—தங்கள்தங்கள்கூற்றுகளைத் தாபித்துப்பேசுகின்றசமயவாதிகள்பலரும் பிதற்றுகின்ற எளியசொற்களைக்கேட்டொழுகுகின்றவர்கள், அவன் செயல் காணார்—அந்தக்கடவுளுடையசொரூபநிலையையறியமாட்டார்கள், சுத்த வாதுளம் முதலிய தந்திர தொகுதி உய்த்து உணர்ந்திடும் நீரரே—தூய்மையையுடைய வாதுளமுதலாகிய சைவாகமங்களின்றொகையை ஆராய்ந்தறியும் அறிஞர்களே, ஒரு சிறிது உணர்வார்—அற்பமாகஅறிவார்கள் எ—று.

சிவபிரானாலருளிச்செய்யப்பட்டனவும் பதியிலக்கணங்களை உள்ளவாறேவிரித்துக்கூறுவனவுமாதலின் 'சுத்தவாதுளமுதலியதந்திரத்தொகுதி' எனவும், பிறசமய நூல்கள் உள்ளவாறேகூறாமையின் அவற்றைக்கேட்டோர் மயங்குவரென்பான் 'தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்கத்துபுன்சொலைவினவினரவன்செயல்காணார்' எனவும் கூறினான். ஈண்டுக்கண்டிக்கப்பட்டசமயங்கள் உலோகாயதமுதலியபுறச்சமயங்களென்க. (௧௨௧)

கருவி மெய்ப்புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்
பொருளெ னப்படு நான்மையு மைவகைப் பொறியு
மிருதி றத்தியல் வினைகளுங் காலமு மிடனு
மரபின் முற்றுறு பயனுமாய் நின்றனன் வள்ளல்.

இ—ள்: கருவி மெய் புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்பொருள் எனப்படும் நான்மையும்—கருவியாயிருக்கின்ற மெய்ம்மையாகியபுலனும் காட்டுவானும் காண்பானும் காட்சிப்பொருளுமென்றுசொல்லப்படுகின்ற சாதனசதுட்டயங்களும், ஐவகை பொறியும்—ஐந்துவகையானபொறிகளும், இருதிறத்து இயல் வினைகளும்—இருவகையவாயிருக்கின்றவினைகளும், காலமும்—மூவகைக்காலங்களும், இடனும்—மூவகையிடங்களும், மரபில் முற்றுறு பயனும் ஆய்—முறையே முற்றுப்பெறுகின்றபிரயோசனமுமாகி, வள்ளல் நின்றனன்—முருகக்கடவுள் நின்றார் எ—று.

கருவிமெய்ப்புலனென்றது காட்சியை. ஐம்பொறி-மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. இருவினை-நல்வினை தீவினை என்பன. முக்காலங்கள்-இறப்பு நிகழ்வு எதிர்வு என்பன. மூவிடங்கள்-தன்மை முன்னிலை படர்க்கை என்பன. பயன்-வினைப்பயன். எல்லாமாய்நின்றாரென்பது தாற்பரியம். (௧௫௦)

ஞால முள்ளதோர் பரம்பொரு ளெனப் புகலு
மாலும் வேதனு மாயையாம் வரம்பினுட் பட்டார்
மூல மாகிய தத்துவ முழுவதுங் கடந்து
மேலு யர்ந்திடு தனிமுத லவனன்றி வேறார்.

இ—ள்: ஞாலம் உள்ளது ஓர் பரம்பொருள் நாம் என புகலும் மாலும் வேதனும்—உலகத்திலுள்ள பரப்பிரம்மயாமேயென்றுகூறிய திருமாலும் பிரமதேவரும், மாயை ஆம் வரம்பினுள் பட்டார்—அப்பெருமானுடைய மாயையாகிய எல்லையினுள்ளகப்பட்டவர்கள், மூலம் ஆகிய தத்துவம் முழுவதும் கடந்து மேல் உயர்ந்திடு தனி முதல்—உலகத்தோற்றத்திற்குமுதலாயிருக்கின்ற தத்துவங்களெல்லாவற்றையுங்கடந்து மேற்பொருளாயுயர்ந்திருக்கின்ற ஒப்பற்றமுதல்வர், அவன் அன்றி வேறு ஆர்—அவரொருவரேயன்றி வேறுயாவர்? எ—று.

மெய்யானபரம்பொருளென்பான் 'ஞாலமுள்ளதோர்பரம்பொருள்' எனவும், மாயாமலத்துடன்கூடியவராதலால் 'மாயையாம்வரம்பினுட்பட்டார்' எனவும், முப்பத்தாறுதத்துவங்களுக்கும் அதீதமாமென்பான் 'மூலமாகியதத்துவமுழுவதுங்கடந்து' எனவும் கூறினான். தத்துவமுப்பத்தாறுவன: ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் வித்தியாதத்துவம் ஏழும் சிவதத்துவம் ஐந்துமாம். (௧௫௧)

தூய பார்முத லாகவே குடிலையின் றுணையு
மேய வண்டமு முயிர்களும் வியன்பொருள் பலவு
மாயு நின்றன னல்லனு மாயின னவன்றன்
மாயை யாவரே கடந்தனர் மறைகளு மயங்கும்.

இ—ள்: தூய பார் முதல் ஆக குடிலையின் துணையும் மேய அண்டமும்—தூய்மையான பிருதிவிமுதலாகச் சுத்தமாயைவரையுள்ள அண்டங்களும், உயிர்களும்—அவைகளிலுள்ள பலவகையானஆன்மாக்களும், வியன் பொருள் பலவும் ஆயும் நின்றனன்—சிறந்தபலவகைப்பொருள்களுமாகியும்நின்றார், அல்லனும் ஆயினன்—அவையல்லாதவராகியும் நின்றார், அவன் தன் மாயை யாவரே கடந்தனர்—அவருடையமாயத்தையார்தாங்கடந்தவர்கள்?, மறைகளும் மயங்கும்—வேதங்களும் (அவரியல்பைவரையறுத்தற்கியலாது) தடுமாறும் எ—று.

விச்சுவரூபியாயும் விச்சுவாதிகராயும் நின்றாரென்பது தாற்பரியம். மூவகைத்தத்துவங்களினுமடங்கியிருக்கின்றவென்பான் 'பார்முதலாகவேகுடிலையின்றுணையுமேய' என்றான். பின்னைய உம்மைசிறப்பு. (௧௫௨)

இன்ன தன்மைசேர் முதல்வனைச் சிறுவனென் றிகழ்ந்து
பன்னு கின்றனை யவுணர்தங் கிளையெலாம் படுத்து
நின்னை யுந்தடிந் திடுவனே ரிமைப்பினி னிரப்புந்
தன்ன ருட்டிறங் காட்டுவான் வந்தனன் சமர்மேல்.

இ—ள்: இன்ன தன்மை சேர் முதல்வனை சிறுவன் என்று இகழ்ந்து பன்னுகின்றனை—இப்படிப்பட்டமான்மியங்களையுடைய முருகக்கடவுளைப் பாலனென்றுநிந்தித்துப்பேசுகின்றீர், ஓர் இமைப்பினில் அவுணர்தம் கிளை எலாம் படுத்து நின்னையும் தடிந்திடுவன்—அவர் ஒருநொடிப்பொழுதினுள் அசுரர்களங்களையெல்லாஞ்சங்கரித்து உம்மையுங்கொல்லவல்லார், இரப்பும் தன் அருள் திறம் கா

ட்டுவான்—பூரணமாகக்கொண்டதம்முடைய கருணையைக்காட்டும்பொருட்டு, சமர்மேல் வந்தனன்—போர்க்குவந்தார் எ—று.

வரம்பிலாற்றலுடையாரென்பது இதனாற்பெறப்பட்டது. சொல்லானும் நினைவானும் கட்பார்வையானும் அழிக்கவல்லவராயிருந்தும் படையெடுத்துப் பொருதுகொல்லநினைந்தது தமது பேராற்றலைக்கண்டுதாழ்ந்துஉய்யநினைத்தலுங்கூடுமென்னுங்குறிப்பினாலாம் என்பதாம். ௧௧அ ஞ் செய்யுண்முதல் இதுகாறும் முருகவேள்பாலரல்லர் முழுமுதற்கடவுளேயென்பதும் அவரைவெல்லுதலரிதென்பதும் அவரும்மைக்கொல்வதுநிச்சயமென்பதும் கூறப்பட்டன. (௧௩௩)

அற்ற மில்வகை யாயிரத் தெட்டெனு மண்டம்
பெற்ற னம்மென வியந்தனை தத்துவ பேத
முற்று ணர்ந்திலை தரணியோ வளப்பில வுளகாண்
மற்றை யண்டங்கள் கேட்டியேன் மருளுதி மன்னோ.

இ—ள்: அற்றம் இல்வகை ஆயிரத்து எட்டு எனும் அண்டம் பெற்றனம் என வியந்தனை—குறைவில்லாதபடி ஆயிரத்தெட்டென்னுந்தொகையான அண்டங்களை ஆளப்பெற்றேமென்று புகழ்ந்தீர், தத்துவ பேதம் உற்று உணர்ந்திலை—தத்துவங்களின் பிரிவுகளை ஆராய்ந்தறிந்திலீர், தரணியோ அளப்பு இல உள—பிருதிவியிலோ அளவிறந்த அண்டங்கள் இருக்கின்றன, மற்றை அண்டங்கள் கேட்டியேல் மருளுதி—மற்றைத்தத்துவங்களிலுள்ள அண்டத்தொகைகளைக்கேள்விப்பட்டீரானால் அதிசயமடைவீர் எ—று.

ஆயிரகோடியண்டங்கள் பிருதிவியின்கூறாயுளவாதலின் 'அளப்பிலவுள' எனவும், அவற்றினும் மிகுந்த பெருந்தொகையமைந்த அண்டங்கள் அப்புமுதலிய ஏனைத்தத்துவங்களொவ்வொன்றினுமுள அவற்றையெல்லாமெடுத்துக்கூறின் நீர்பெற்ற அண்டங்களைப்புகழ்ந்துகூறமாட்டீரென்பான் 'மற்றையண்டங்கள்கேட்டியேன்மருளுதி' எனவும் கூறினன். (௧௩௪)

குடிலை யீறதா வாரியே முதலதாக் குழுமி
யுடைய வண்டங்க ளலகில வென்பரொன் றொன்றி
னடைத லுற்றிடு புவனத்தின் பெருமையா ரறிந்தார்
முடிவு றாததோர் பொருளினை முடிவுகூ றவற்றோ.

இ—ள்: வாரி முதலது ஆ குடிலை ஈறது ஆ குழுமி உடைய அண்டங்கள் அலகில என்பர்—அப்புமுதலாகச் சுத்தமாயையீறாகவுள்ளதத்துவங்களிற் செறிந்திருக்கின்ற அண்டங்கள் அளவில்லாதனவென்று ஞானிகள்கூறுவார்கள், ஒன்றொன்றின் அடைதலுற்றிடு புவனத்தின் பெருமை யார் அறிந்தார்—ஒவ்வோரண்டங்களிலுமிருக்கின்ற புவனங்களின்தொகையை யார் அறிந்தவர்கள்? (ஒருவருமில்லை), முடிவு உறாதது ஓர் பொருளினை முடிவு கூற வற்றோ—வரையறையெய்தாத ஒருபொருளை வரையறுத்துக்கூறமுடியுமா (முடியாதே) எ—று.

பிருதிவிதத்துவத்திற்பலவுளவென்பதை முற்செய்யுளிற்கூறினனாதலின் அதனைவிடுத்து 'வாரியேமுதலதா' என்றான். அண்டத்தொகை இங்ஙனம் அளவிறந்தனவாயிருத்தலின் ஆயிரத்தெட்டண்டங்களை நீர்பெற்றது ஒருபெருமையாகுமா என்பது குறிப்பு. ஒன்று ஒன்று என்பன எண்ணுப்பெயர்களுக்குரிய விதிபெறாது பொதுவிதிப்படிபுணர்ந்துநின்றன. (௧௩௫)

அன்ன வாகிய வண்டங்க ளனந்தகோ டியையுந்
தன்ன தாணையா லோரிமைப் பொழுதினிற் றாவும்

பின்னர் மாற்றவும் வல்லதோ ராதியம் பிரான்கா
ணுன்னொ டேபொரு மாடலாற் செந்திவந் துற்ருன்.

இ—ள்: அன்ன ஆகிய அண்டங்கள் அனந்தகோடியையும்— அப்படிப்பட்ட அனேககோடியண்டங்களையெல்லாம், தன்னது ஆணையால் ஓர் இமை பொழுதினில் தரவும் பின்னர் மாற்றவும்—தம்முடைய கட்டளையினுல் ஒருநொடிப்பொழுதினுள்ளே தோற்றுவிக்கவும் பின்பு அழிக்கவும், வல்லது ஓர் ஆதியம் பிரான்—வல்லவராகிய முதற்கடவுளே, உன்னொடு பொரும் ஆடலால் செந்தி வந்து உற்ருன்—உம்முடன்போர்செய்தலாகிய திருவிளையாட்டைமேற்கொண்டு திருச்செந்திப்பதியிலெழுந்தருளிவந்திருக்கின்ருர் எ—று.

தன்னது என்பதில் னகரவொற்று விரித்தல். நீர் ஆயிரத்தெட்டண்டங்களை ஆளவல்லீர்; அப்பாலர் எல்லாவண்டங்களையும் நினைத்தமாத்திரத்தில் ஆக்கவும் அழிக்கவும் வல்லார் என்பது குறிப்பு. இதுகாறும் மூன்றுசெய்யுட்களாற்சூரனுணையின்சிறுமையும் முருகவேளாணையின்பெருமையுங்குறிக்கப்பட்டன. (௧௩௬)

வச்சி ரத்தனி யாக்கைபெற் றனமென மதித்தா
யிச்சி ரத்தையை விடுமதி யிருவினைக் கீடா
வச்செ டுத்திடு முயிர்கண்மாய்ந் திடுமென வறிஞர்
நிச்ச யித்தனர் முடிவுரு திருத்திகொ னீயே.

இ—ள்: வச்சிர தனி யாக்கை பெற்றனம் என மதித்தாய்—அரசனே! நீர் ஒப்பில்லாத வச்சிரகாயத்தைப்பெற்றிருக்கின்ருேமென்று நினைத்திருக்கின்றீர், இ சிரத்தையை விடு—இந்தஎண்ணத்தையொழித்துவிடுவீர், இரு வினைக்கு ஈடு ஆ அச்சு எடுத்திடும் உயிர்கள் மாய்ந்திடும் என அறிஞர் நிச்சயித்தனர்—இருவினைகளை அனுபவித்தற்கேற்பச் சரீரமெடுத்துப்பிறந்த ஆன்மாக்களெல்லாம் இறக்குமென்றுபெரியோர்கள்நிச்சயித்திருக்கின்ருர்கள், (ஆதலால்), நீ முடிவு உருது இருத்தி கொல்—நீர் இறவாதிருப்பீரா? (இருக்கமாட்டீர்) எ—று.

மதி—முன்னிலையசை. இறவாதிருத்தற்கேதுவின்ருதலால் உம்முடைய கோட்பாடுபொருந்தாது என்பதாம். (௧௩௭)

பெருமை பெற்றிடு வானத்தி னிலத்திடைப் பிறந்தோ
ரிருமை பெற்றிடு காயமு மிறந்திடுந் திண்ணம்
பருமி தத்துநின் வச்சிர யாக்கையும் பாரி
னுரிமை பெற்றுள தாதலா னழிவின்றி யுறுமோ.

இ—ள்: பெருமை பெற்றிடு வானத்தில் நிலத்திடை பிறந்தோர் இருமை பெற்றிடு காயமும்—பெருமைபொருந்திய ஆகாயவுலகத்திலும் பூவுலகத்திலும் பிறந்தவர்களது இருவகையானசரீரங்களும், இறந்திடும்—அழிந்துபோம், திண்ணம்—இதுநிச்சயம், பருமிதத்து நின் வச்சிர யாக்கையும்—இறுமாப்பையுடைய உமது வச்சிரகாயமும், பாரின் உரிமை பெற்று உளது ஆதலான்—பிரிதிவியின் சம்பந்தமுள்ளது ஆனபடியால், அழிவு இன்றி உறுமோ—அழியாதிருக்குமா? (அழிந்தேதீரும்) எ—று.

தேவசரீரமும் மானுடசரீரமுமென்பான் 'இருமைபெற்றிடுகாயமும்' என்ருன். பருமிதத்தையாக்கைக்கடையாக்கிப்பெருமையையுடையவெனஉரைப்பினுமாம். யாக்கையும் என்றஉம்மை எச்சம். முற்செய்யுட்கருத்தை வற்புறுத்திக்கூறியது இச்செய்யுளென்க. (௧௩௮)

அழிவின் மெய்வரம் பெற்றன மென்றனை யதற்கு
மொழித ருஞ்சொற்ருள் கேண்மதி முச்சகந் தன்னுட்

கெழிய மன்னுயிர் போற்சில வைகலிற் கெடாது
கழிபெ ரும்பக லிருந்திடும் பான்மையே கண்டாய்.

இ—ள்: அழிவு இல் மெய் வரம் பெற்றனம் என்றனை—சிறந்த அழியா வரத்தைப்பெற்றோமென்றுகூறினீர், அதற்கு மொழிதரும் பொருள் கேள்—அதற்கு அறிஞர்கூறும்பொருளைக்கேட்பீராக, முச்சகம் தன்னுள் கெழிய மன் உயிர் போல் சில வைகலில் கெடாது—மூவுலகங்களிலுமிருக்கின்ற நிலைபெற்றஆன்மாக்களைப்போலச் சிலநாட்களிலிறவாமல், கழி பெரும் பகல் இருந்திடும் பான்மையே—எண்ணிறந்தகாலமிருக்குந்தன்மையேயாம் எ—று.

மதி கண்டாய்-முன்னிலையசைகள். ஏ-தேற்றம். சிவபிரான் அழியாவரங் கொடுத்ததும் பின் நூற்றெட்டுயுகம் வாழ்ந்திருக்கும்படி அருளிச்செய்ததும் ஒன்றற்கொன்று முரணுகாமையை விளக்கிறானென்க. (கஙகூ)

அச்சு தன்னய னமரரா கியபெய ரவர்க்கு
நிச்ச யம்படு முகமனே யானபோ னினது
வச்சி ரத்தனி யாக்கையு மழிவிலா வரமு
முச்ச கந்தொழப் பல்லுக மிருத்தலாய் முடியும்.

இ—ள்: அச்சுதன் அயன் அமரர் ஆகிய பெயர்—அச்சுதனும் அயனும் அமரருமென்றபெயர்கள், அவர்க்கு நிச்சயம் படும் முகமனே ஆன போல்—அவ்வப்பெயரையுடையார்க்கு நிச்சயமான உபசாரமாய்முடிதல்போல, நினது வச்சிர தனி யாக்கையும்—உம்முடைய ஒப்பற்றவச்சிரசரீரமும், அழிவு இலா வரமும்—அழியாவரமும், முச்சகம் தொழ பல் உகம் இருத்தல் ஆய் முடியும்—மூவுலகத்தாருங் கைகுவித்துத்தொழப் பலயுகங்காறும்வாழ்ந்திருத்தலாகவேமுடியும் எ—று.

அச்சுதன்னயன் என்பதில் னகரவொற்றுவிரித்தல். அச்சுதன்—அழிவில்லாதவன். அஜ என்னும்வடமொழி அயனென்றாயிற்று; தோற்றமில்லாதவனென்பதுபொருள். அமரர்—இறத்தலில்லாதவர்கள். அழிவுடையாராகியதிருமாலை அச்சுதனென்றும் தோற்றமுடையாராகிய பிரமதேவரை அயனென்றும் இறப்பவர்களாகியதேவர்களை அமரரென்றும் காரணப்பெயராலழைப்பது காலநீடிப்பையே காட்டிநிற்றல்போல, நீர்பெற்ற அழியாவரமும் அழியாதயாக்கையும் பலகாலம்நீடித்திருத்தலையே சுட்டுமன்றி ஒருகாலுமிறவாதிருத்தலைச் சுட்டாது என்பதாம். ஒருபோதுமுண்மையாகாதென்பான் 'நிச்சயம்படுமுகமன்' என்றான். ()

வான்செய் தேவரை நீயலைக் கின்றதை மதியா
வூன்செய் கின்றபல் லுயிருக்கு முயிரதா மொருவன்
றான்செய் கின்றதொல் வரத்தினைத் தான்றவிர்த் திடுமே
லேன்செய் தாயென வினவியே நிறுவுவா ரெவரே.

இ—ள்: நீ வான்செய் தேவரை அலைக்கின்றதை மதியா—நீர் ஆகாயவுலகத்தில்வாழுகின்ற தேவர்களை வருத்துவதைச்சிந்தித்து, ஊன் செய்கின்ற பல் உயிருக்கும் உயிரது ஆம் ஒருவன்—உடம்பையெடுத்த பலஆன்மாக்களுக்கும் பரமான்மாவாயிருக்கின்ற ஒப்பற்ற கடவுள், தான் செய்கின்ற தொல் வரத்தினை தான் தவிர்த்திடுமேல்—தாங்கொடுத்தவரத்தைத் தாமேவிலக்குவாரானால், ஏன் செய்தாய் என வினவியே நிறுவுவார் எவர்- ஏனிப்படிச்செய்தீரென்றுவினாவித் தடுப்பவர் யாவர்? எ—று.

பிரிநிலையேகாரந்தொக்கது. உடலையியக்கிநிற்குமுயிர்போல உயிரையியக்கிநிற்பவர் கடவுளாதலால் 'உயிருக்குமுயிரதாமொருவன்' எனவும், சீவான்மா

வென்பான் 'ஊன்செய்கின்றபல்லுயிர்' எனவும் கூறினான். வச்சிரயாக்கையும் அழியாவரமுமுடைமையால் இறக்கமாட்டேனென்னுஞ் சூரபன்மனதுகோட்பாட்டை ககஎ ஞ்செய்யுண்முதலிதுகாறும் ஐந்துசெய்யுட்களால் மறுத்துக்கூறினான். முன்னையநான்குசெய்யுட்களும் உண்மைகூறிமறுத்தன; இச்செய்யுள்வினாவான்மறுத்தது. (௧௪௧)

கெடுத லில்லதோர் வளனொடு நீயுநின் கிளையும்
படுத லின்றியே வாழ்தியென் றின்னன பகர்ந்தே
னிடுதல் கொண்டிடு சிறையிடைத் தேவரை யின்னே
விடுதல் செய்குதி யென்றன னறிஞரின் மிக்கான்.

இ—ள்: கெடுதல் இல்லது ஓர் வளனொடு நீயும் நின் கிளையும் படுதல் இன்றி வாழ்தி என்று—அழிவில்லாத செல்வத்தோடு நீரும் உம்முடைய சுற்றத்தவர்களும் இறத்தலின்றி வாழ்வீர்களென்றுநினைத்து, இன்னன பகர்ந்தேன்— இவற்றைப்போதித்தேன், இடுதல் கொண்டிடு சிறையிடை தேவரை இன்னே விடுதல்செய்குதி— இட்டுவைத்திருக்கின்ற சிறையினின்றுந் தேவர்களை இப்பொழுதே விடுவீர், என்றனன்–என்றுகூறினான், அறிஞரில் மிக்கான்–அறிவுடையார்களுட்சிறந்தவனாகிய சிங்கமுகாசுரன் எ—று.

பெருவளமென்பான் 'கெடுதலில்லதோர்வளன்' எனவும், பகைவர்களுக்கஞ்சிக்கூறினேனல்லனென்பதுபோதர 'நீயுநின்கிளையும்-வாழ்தியென்றின்னனபகர்ந்தேன்' எனவும் கூறினான். நீயுநின்கிளையும்வாழ்தி-சிறப்பினால் முன்னிலையொருமைமுடிபேற்றது. (௧௪௨)

இன்ன பான்மையான் மடங்கலம் பெருமுகத் திளவல்
சொன்ன வாசகம் வினவியே மணிமுடி துளக்கிக்
கன்ன மூடுசெங் கனல்செறித் தாலெனக் கனன்று
முன்னை யாகியோன் பின்னருஞ் சிற்சில மொழிவான்.

இ—ள். இன்னபான்மையால்-இப்படியாக, மடங்கலம் பெரு முகத்து இளவல் சொன்ன வாசகம் வினவி—பெரியசிங்கமுகத்தையுடைய தம்பி சொல்லிய வார்த்தையைக்கேட்டு, மணி முடி துளக்கி—அழகிய தலையையசைத்து, கன்னம் ஊடு செம் கனல் செறித்தால் என கனன்று—காதினுள்ளே சிவந்த அக்கினியைநுழைத்தாற்போலக்கோபித்து, முன்னை ஆகியோன்—தமையனாகியசூரபன்மன், பின்னரும் சிற்சில மொழிவான்—பின்னுஞ்சிலவசனங்களைச்சொல்லுவான் எ—று.

தீயிற்காய்ச்சிய இருப்புக்கோலைநுழைத்தாற்போலவென்பார் 'செங்கனல்செறித்தாலெனா' என்றார். சிங்கமுகன்போதித்தன உறுதிமொழிகளாயினும் சூரபன்மனால் மிக்கவெறுப்புடன்கேட்கப்பட்டமையின் இவ்வாறு கூறினார். மணிமுடி-இரத்தினகிரீடத்தையணிந்ததலை எனினுமாம். முன்னை-முன்பிறந்தான். ()

காற்றிற் றள்ளுண்டு நெருப்பினிற் சூடுண்டு கங்கை
யாற்றிற் றாக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை யுண்டழு தேவிளை யாடு
சேற்றைப் பாலனை யேபரம் பொருளென நினைந்தாய்.

இ—ள்: காற்றில் தள்ளுண்டு—காற்றினாலுந்தப்பெற்று, நெருப்பினில் சூடுண்டு—அக்கினியினாற்சுடப்பட்டு, கங்கை ஆற்றில் தாக்குண்டு—கங்கைநதியினால் மோதப்பட்டு, சரவணம் புக்கு அலையுண்டு—சரவணவாவியிற்சென்று அலைக்கப்பட்டு, வேற்றுப்பேர் முலை உண்டு—வேற்றுத்தாயருடைய முலைப்பாலைப்பருகி,

அழுது விளையாடும்—அழுதுவிளையாடித்திரிந்த, நேற்றை பாலனையோ—நேற்றுப்பிறந்தகுழந்தையையோ, பரம்பொருள் என நினைந்தாய்—முதற்கடவுளென்றும‌தித்தாய்? எ—று.

முருகக்கடவுள் அக்கினிப்பொறிகளாகஅவதரித்து வாயுதேவனாலும் அக்கினிதேவனாலும் கங்கையிற்கொண்டுசெல்லப்பட்டாராதலால் 'காற்றிற்றள்ளுண்டு நெருப்பினிற்சூடுண்டு' எனவும், பின்னர்க்கங்கைநதியாற் சரவணதடாகத்திற்செலுத்தப்பட்டாராதலால் 'கங்கையாற்றிற்றுக்குண்டு' எனவும், சரவணதடாகத்திற்சேர்ந்தவுடன் குழந்தைவடிவாய் வீற்றிருந்தாராதலால் 'சரவணம்புக்கலையுண்டு' எனவும், கார்த்திகைப்பெண்களறுவராலும் பாலூட்டி வளாக்கப்பட்டாராதலால் 'வேற்றுப்பேர்முலையுண்டு' எனவும், இவைநிகழ்ந்து சிலநாட்கடாமுங்கழிந்திலவென்பான் 'நேற்றைப்பாலன்' எனவும், இங்கேகூறப்பட்ட இழுக்குகளையெய்தியபாலர் ஒருகாலும் பரம்பொருளாகாரென்பான் 'பாலனையோபரம்பொருளெனநினைந்தாய்' எனவும் கூறினான். ௧௧௮ஞ்செய்யுண்முதல் ௧௩௨ஞ்செய்யுள்காறுங்கூறிய கோட்பாட்டைமறுத்தற்கு இங்ஙனங்கூறினானென்க. (௧௪௪)

பிரமமாகிய வொருபொரு ளுயிரெனப் பேர்பெற்
றுருவ மெண்ணில கொண்டுதன் மாயையா லுலப்பில்
கரும பேதங்க ளாற்றிடும் பல்புனற் கடத்து
ளிரவி தன்னுருத் தனித்தனி காட்டிய வியல்பின்.

இ—ள்: பிரமம் ஆகிய ஒரு பொருள்—பிரமமென்றுசொல்லப்படுகின்ற ஒருபொருள்தானே, உயிர் என பேர் பெற்று—சீவனென்னும் பெயரைப்பெற்று, பல் புனல் கடத்துள் இரவி தன் உரு தனித்தனி காட்டிய இயல்பின்— பலதொகையான நீர்நிறைந்தகுடங்களுள்ளே சூரியன்தன்வடிவத்தைத் தனித்தனிகாட்டுந்தன்மைபோல, உருவம் எண் இல கொண்டு— அளவிறந்தவடிவங்களாய்த்தோன்றி, தன் மாயையால் உலப்பு இல் கருமபேதங்கள் ஆற்றிடும்—தனதுமாயையினால் அளவிறந்த தொழில்வகைகளையெல்லாஞ்செய்யும் எ—று.

சரீரத்துக்குநீர்க்குடமும் பிரமத்திற்குச்சூரியனும் சீவான்மாவுக்குப்பிரதிபிம்பசூரியனும் உவமை. பிரிநிலையேகாரந்தொக்கது. சீவான்மாவெனப் பிறிதொன்றிலையென்பதைவற்புறுத்துவான் 'உயிரெனப்பேர்பெற்று' என்றான். ஆன்மா என்னும்பதம் சீவனுக்கும் ஈசுரனுக்கும் பொதுவாய்நின்று ஈசுரனுக்காம்போது பரமான்மாவெனவும் சீவனுக்காம்போது சீவான்மாவெனவும் வழங்குமென வேதாந்தஞானிகள்கூறும்மெய்ப்பொருளை உள்ளவாறுணராமையால் பிரமமே சீவனென்னும்பெயர்பெற்றதாகக் கூறிமுடித்தான். அதற்கேற்பவே பலவடிவங்கள் கொள்வதாகவுங் கருமங்களைச்செய்வதாகவும் கூறினான். (௧௪௫)

கடந்த கர்ந்துழி யவற்றிடை வெளிகக னத்தோ
டடைந்த வாறுபோல் யாக்கையின் பேதக மனைத்து
முடிந்த காலையிற் றொன்மைபோ லபேதமா மொழிக்குந்
தொடர்ந்த சிந்தைக்கு நாடொணு தமர்பெருஞ் சோதி.

இ—ள்: கடம் தகர்ந்துழி அவற்று இடை வெளி ககனத்தோடு அடைந்தவாறு போல்—குடங்களுடைந்தவுடன் அவற்றிற்காணப்பட்ட ஆகாயங்கள் மகாகாயத்தோடுகலந்ததன்மைபோல, யாக்கையின் பேதகம் அனைத்தும் முடிந்தகாலையில்—பலவகையானசரீரங்களெல்லாமழிந்தபொழுது, மொழிக்கும் தொடர்ந்த சிந்தைக்கும் நாட ஒணுது அமர் பெரும் சோதி— வாக்கினாலுந் தன்னைத்தொடருகின்ற மனத்தினாலும் அறியப்படாதிருக்கின்ற சிறந்த சோதிவடிவினதாகிய பிரமம், தொன்மைபோல் அபேதம் ஆம்— முன்போலப்பேதமற்றதாகும் எ—று.

உவமேயமாகிய சரீரங்கள் பலவடிவாதற்கேற்ப உவமானமாகியகுடங்களையும் பலவடிவாகக்கூறுக. பிரமவித்தையிற்பற்றிநிற்குமனமென்பான் 'தொடர்ந்தசிந்தை' என்றான். மொழிக்குஞ்சிந்தைக்குநாடொறுமை- வாக்காற்கூறவும் மனத்தானினைக்கவும் அடங்காமை. ஈண்டுக்காட்டியஉவமை வினைத்தொடர்பறுத்தஉத்தமாதிகாரிகட்கே முற்றும்பொருந்தும்; ஏனையர்க்குப் பிம்பப்பிரதிபிம்பபாவத்தின்மாத்திரம் பொருந்தும் என்க. (௧௬௬)

பிரம மேயிவ ரல்லவ ரிவரெனப் பேதித்
திருமை யாகவே கொள்ளலை யாக்கையே வேறு
பரம மாகிய வுயிரெலா மொன்றுபல் பணியும்
பொருள தாகியே யொருமையாய் முடிந்தவா போல.

இ—ள்: இவரே பிரமம் என—இவரேபிரமமென்றும், இவர் அல்லவர் என—இவர் பிரமமல்லாதவரென்றும், பேதித்து இருமை ஆக கொள்ளலை—பேதப்படுத்தி இரண்டுவகையாகக்கொள்ளற்க, யாக்கையே வேறு—சரீரமே வேறாயுள்ளது, பரமம் ஆகிய உயிர் எலாம் ஒன்று—பரமாயிருக்கின்ற உயிர்களெல்லாமொன்றே, (அது எதுபோலுமெனில்), பல் பணியும் பொருள் அது ஆகி ஒருமை ஆய் முடிந்தவா போல—பலவகையான ஆபரணங்களெல்லாம் பொன்னாகி ஒன்றாய் முடிந்ததன்மைபோல எ—று.

பொன்னொன்றே பலபணிகளானாற்போலப் பிரமமொன்றே பலசீவான்மாக்களாயிற்று என்பதாம். பிரிநிலையேகாரம்பிரித்துக் கூட்டப்பட்டது. முடிந்தவாறு என்பதில் ஈற்றுயிர்மெய்கெட்டது. பிரமமே சீவான்மாவெனத்திரித்துணர்ந்தானாதலின் 'பரமமாகியவுயிர்' என்றான். கடாகாயத்திற்கும் கடசூரியனுக்குமுள்ள சலனமுதலியஉபாதிகள் ஆகாயத்திற்குஞ் சூரியனுக்குமில்லையாதல்போலச் சீவான்மாவுக்கு வினைவயத்தான்வருஞ்சுகதுக்கங்களொன்றும் பிரமத்திற்கின்மையானும் இவ்வாறே ஊகிக்கப்படும் பிறவேதுக்களானும் சீவான்மாவுக்கும் பிரமத்துக்கும் வேற்றுமைபெரிதென்பது வெள்ளிடைமலைபோல்விளங்கக்கிடப்பவும் அஞ்ஞானத்திமிர்ப்பால் அபேதமாகக்கூறினனென்க. (௧௬௭)

விறலும் வன்மையு மில்லவர் தாழ்வர்மே தக்க
நெறிய ரோங்குவ ரீதுல கத்திடை நிகழ்ச்சி
யிறுதி யில்லதோர் பெரியன்யா னறுமுக னென்போன்
சிறிய னாதலி னவனையான் வெல்குவன் றிண்ணம்.

இ—ள்: விறலும் வன்மையும் இல்லவர் தாழ்வர்—வீரமும் வலிமையுமில்லாதவர்கள் கீழ்மைப்படுவார்கள், மேதக்க நெறியர் ஓங்குவர்—அவற்றான்மிக்கதன்மையையுடையவர்கள் பெருமைபெறுவார்கள், ஈது உலகத்திடை நிகழ்ச்சி—இதுவே உலகத்தில்நடைபெறும்வழக்கம், யான் இறுதி இல்லது ஓர் பெரியன்—நான் அழிவில்லாதபெரியவன், அறுமுகன் என்போன் சிறியன்—முருகவேள் சிறுபாலர், ஆதலின்—ஆனகாரணத்தால், அவனை யான் வெல்குவன்—அவரை நான்வெற்றிகொள்வேன், திண்ணம்—இதுநிச்சயம் எ—று.

தான் வரத்தானும் உருவத்தானும் பெரியனென்பான் 'இறுதியில்லததோர் பெரியன்யான்' எனவும், முருகவேள் தன்னைப்போல வீரயாகமுற்றி வரம்பெறாதவரும் உருவத்தாற்சிறியருமென்பான் 'அறுமுகனென்போன்சிறியன்' எனவும் கூறினான். இச்செய்யுளால் ௧௬௩ஞ்செய்யுளிற்கூறியகருத்து மறுக்கப்பட்டது.

தொகைமை சான்றநங் குரவர்பல் லோருமுயிர் தொலைத்த
பகைஞ ராதலி னமரரைச் சிறையிடைப் படுத்தேன்
மிகைசெய் தார்களை நாடியே வேந்தொறுத் திடுத
றகைமை யேயென மனுமுறை நூல்களுஞ் சாற்றும்.

இ—ள்: தொகைமை சான்ற நம் குரவர் பல்லோர் உயிர் தொலைத்த பகைஞர் ஆதலின்-தொகையான்மிக்க எங்கள் முன்னோர்பலருடையஉயிர்களைக்கொன்ற பகைவர்களாதலால், அமரரை சிறையிடை படுத்தேன்—தேவர்களைச்சிறையில்வைத்தேன், வேந்து மிகைசெய்தார்களை நாடி ஒறுத்திடுதல் தகைமையே என—அரசன் குற்றஞ்செய்தவர்களைத்தேடித்தண்டித்தல் தக்கதேயென்று, மனுமுறை நூல்களும் சாற்றும்—மனுதருமசாத்திரங்களும் கூறும் எ—று.

தங்குலத்தைநலிவித்தபகைவரைத்தண்டித்தல் இராசதருமமாதலால், சிவபிரான் எனக்குத்தந்தவரங்களைத்தவிர்க்க ஏதுவில்லை என்பதாம். ௧௪௪ ஞ்செய்யுளை மறுத்தது இச்செய்யுளென்க. மனுமுறைநூல்கள்—மனுவென்னுமரசனியற்றிய நீதிகளைக்கூறும்நூல்கள். உம்மை—எச்சம். (௧௪௯)

மாக ராயுளோர் காப்பினை விடுகிலன் மற்றைப்
பாக சாதனன் றன்னையு மருஞ்சிறைப் படுப்ப
னேக நாயக னெய்தினு மெதிர்ந்துபோர் புரிவ
னாகை யாலினி யிச்சிறு மொழிகளை யயர்த்தி.

இ—ள்: மாகர் ஆய் உளோர் காப்பினை விடுகிலன்—தேவர்களாயுள்ளவர்களுடையசிறையை யான்விடமாட்டேன், மற்றை பாகசாதனன் தன்னையும் அரும் சிறை படுப்பன்—அகப்படாமலொளித்திருக்கின்ற இந்திரனையும் பற்றிக் கொடியசிறையில்வைப்பேன், ஏகநாயகன் எய்தினும் எதிர்ந்து போர்புரிவன்-முதற்கடவுளாகியசிவபிரான்வந்தாலும் எதிர்த்துப்போர்செய்வேன், ஆகையால்--ஆதலினால், இனி இ சிறு மொழிகளை அயர்த்தி—இனி இந்தஎளியபேச்சுக்களைத்தவிர்ப்பாய் எ-று.

உம்மை முன்னையது எச்சம்; பின்னையது சிறப்பு. நீகூறுவனவற்றைச் சிறிதும்பொருட்படுத்தமாட்டேனாதலின் இனி என்னுடனெதிர்த்து ஒன்றும்பேசாதொழியென்பான் 'இச்சிறுமொழிகளையயர்த்தி' என்றான். (௧௫௦)

உரைப்ப தென்னினி யொருவயிற் றென்னுட னுதித்துப்
பெருக்க முற்றனை நங்குலப் பகைஞரைப் பெரிது
நெருக்க லின்றியே யவர்கள்பாற் பட்டனை நீயே
யிருக்க மற்றொரு தெவ்வரும் வேண்டுமோ வெனக்கே.

இ—ள்: என் உடன் ஒருவயிற்று உதித்து பெருக்கம் உற்றனை—என்னோடுகூட ஒருதாய்வயிற்றிற்பிறந்துவளர்ந்தாய், (அங்ஙனம்பிறந்துவளர்ந்தும்), நம் குல பகைஞரை பெரிதும் நெருக்கல் இன்றி—எங்கள்குலப்பகைவரை மிகவும் அடர்க்காமல், அவர்கள் பால் பட்டனை— அவர்கள்பக்கத்தவனாய்விட்டாய், இனி உரைப்பது என்---இதன்மேல் யான்சொல்லவேண்டியதென்னை!, நீ இருக்க எனக்கு மற்று ஒரு தெவ்வரும் வேண்டுமோ—நீயிருக்கும்போது எனக்கு வேறொருபகைவரும்வேண்டுமோ! எ—று.

இதன்மேல் நீசெய்யத்தக்கதீங்கில்லையென்பான் 'உரைப்பதென்னினி' எனவும், உற்றபோரிலொருதோள்போனின்றுதவற்பாலாயென்பான் 'ஒருவயிற்றென்னுடனுதித்துப்பெருக்கமுற்றனை' எனவும், அத்தகையநீ இச்சமயத்தில் மாறுபட்டனையென்பான் 'நீயிருக்கமற்றொருதெவ்வரும்வேண்டுமோ' எனவும் கூறினான். (௧௫௧)

பத்துக் கொண்டநூ றுடையதோர் சென்னியும் பலவாங்
கொத்துக் கொண்டமர் தோள்களுங் கரங்களின் குழுவு
மெத்துக் காற்றினை வன்மையும் வீரமு மிழந்தாய்
பித்துக் கொண்டவர் தம்மினும் பேதைமை பிடித்தாய்.

இ—ள்: பத்து கொண்ட நூறு உடையது ஓர் சென்னியும்–ஆயிரமென்னு ந்தொகைப்பட்ட தலைகளையும், பல ஆம் கொத்து கொண்டு அமர் தோள்களும் கரங்களின் குழுவும்—பலதொகுதியையுடையனவாயிருக்கின்ற புயங்களையும் கைகளின் கூட்டங்களையும், எத்துக்கு ஆற்றினை—என்சுமந்தாய்?, வன்மையும் வீரமும் இழந்தாய்—வலிமையையும் வீரத்தையுமிழந்தாய், பித்து கொண்டவர் தம்மினும் பேதைமை பிடித்தாய்–பைத்தியம்பிடித்தவர்களினும் அதிகமான மூடத்தன்மையைக் கொண்டாய எ—று.

இரண்டாயிரம்புயங்களும் இரண்டாயிரங்கைகளுமென்பான் 'பலவாங்கொத்துக்கொண்டமர்தோள்களுங்கரங்களின்குழுவும்' என்றான். ஒருதலையையும் இரண்டுபுயங்களையுமுடையார்தாமுமஞ்சாதிருப்ப நீ அஞ்சினையென்பான் 'பத்துக்கொண்ட நூறுடையதோர்சென்னியும்...............எத்துக்காற்றினை' எனவும், சொல்லத்தக்கனவிவை தகாதனவிவை என்பதைச்சிறிதுஞ்சிந்தியாது பேசினையென்பான் 'பித்துக்கொண்டவர்தம்மினும்பேதைமைபிடித்தாய்' எனவும் கூறினான். (௧௫௨)

வேறு.

தானவர் வழிமுறை தன்னை விட்டனை
வானவர் போன்றனை வன்மை சிந்தினை
மேனிகழ் திட்பமும் விறலு மாண்டனை
மோனமொ டருந்தவ முயலப் போதிநீ.

இ—ள்: நீ தானவர் வழிமுறை தன்னை விட்டனை—நீ அசுரர்களது ஒழுக்கத்தைத்தவறவிட்டாய், வானவர் போன்றனை—தேவர்களைப்போன்றாய், வன்மை சிந்தினை—வலிமைநீங்கினாய், மேல் நிகழ் திட்பமும் விறலும் மாண்டனை—மேலாகவிளங்குகின்ற தைரியத்தையும் வீரத்தையுமிழந்தாய் (ஆதலின்), மோனமொடு அரும் தவம் முயல போதி--மௌனத்தோடு அரியதவத்தைச்செய்யப்புகுவாய் எ—று.

தேவர்மேல் இரக்கம்வைத்தாயென்பான் 'தானவர்வழிமுறைதன்னைவிட்டனை' எனவும், பாவஞ்செய்தற்குப்பயந்தாயென்பான் 'வானவர்போன்றனை' எனவும், குலத்துக்கேற்ற ஆற்றலும் குணமும் இலனாயினையென்பான் 'வன்மைசிந்தினை மேனிகழ்திட்பமும்விறலுமாண்டனை' எனவும், வலியில்லாதாரே தவஞ்செய்வாரென்று கருதினனாதலின் 'அருந்தவமுயலப்போதி' எனவும், என்முன்னிலையில் இவ்வாறான நொய்யமொழிகளை இனிக்கூறாது போவென்பான் 'மோனமொடு-போதி' எனவும் கூறினான். (௧௫௩)

மறந்தனை யிழந்தனை மான நீங்கினை
சிறந்திடு மவுணர்தஞ் சீர்த்தி மாற்றிடப்
பிறந்தனை யீண்டொரு பயனும் பெற்றிலை
யிறந்தனை போலுநீ யிருந்து ளாய்கொலோ.

இ—ள்: மறம் தனை இழந்தனை—தறுகண்மையையிழந்தாய், மானம் நீங்கினை—அபிமானத்தையுமிழந்தாய், சிறந்திடும் அவுணர் தம் சீர்த்தி மாற்றிட பிறந்தனை—சிறந்தஅசுரர்களது கீர்த்தியைக்கெடுக்கும்படி பிறந்தாய், ஈண்டு ஒரு பயனும் பெற்றிலை—இப்பிறப்பில் ஒருபயனையும் பெற்றிலாய், (ஆதலின்), நீ இறந்தனை போலும்--நீஇறந்தவனேயொப்பாய், இருந்துளாய் கொல்—இருந்தவனாக மதிக்கப்படுவாயோ? எ—று.

அசுரர்குலத்தாரனைவரும் மானமும் மறமும் பிறவுமுடையராக நீயொருவனே இலனாயினையென்பான் 'சிறந்திடுமவுணர்தஞ்சீர்த்திமாற்றிடப்பிறந்தனை' எனவும், யாக்கையெடுத்துப்பிறந்ததற்குப்பயன் பகைவரையடக்கி முதன்மைபெற்று வாழ்தலேயென்றுநினைந்தானாதலின் 'ஈண்டொருபயனும்பெற்றிலை' எனவு

ம், அங்ஙனம் வாழாதார் உயிருடனிருப்பினும் எண்ணப்படாரென்பான் 'இறந்தனைபோலுநீ' எனவும், இனிஇதனைமறுத்துப்பேச ஒருநியாயமுமின்றென்பான் 'இருந்துளாய்கொல்' எனவும் கூறினான். (௧௫௪)

மந்திரி யாதியர்ன் மற்றி தற்குநீ
சிந்தையில் வெருக்கொளிற் றிசைமு கத்தர்போ
லைந்திய லங்கமொன் றங்கை பற்றுதி
வெந்திற லேயெனப் படையும் வீசியே.

இ—ள்: நீ மந்திரி ஆதி—தம்பீ! நீ எனக்குமந்திரியாயிருப்பாய், இதற்கும் சிந்தையில் வெரு கொளில்—இவ்வாறிருத்தற்கும் மனத்திற்பயங்கொண்டால், வெம் திறல் என படையும் வீசி—மிக்கவலிமையையிழந்ததுபோலப் படைக்கலங்களையுமெறிந்துவிட்டு. திசைமுகத்தர் போல் ஐந்து இயல் அங்கம் ஒன்று அங்கை பற்றுதி—பிரமதேவரைப்போல ஒருபஞ்சாங்கத்தைக்கையிலெடுத்துப்பிடிப்பாய் எ—று.

புத்திகூறுதலில் விருப்பமும் போர்செய்தற்கண் அச்சமுமுடையாயென்பதைச்சுட்ட 'மந்திரியாதி' எனவும், மந்திரிமாரும் சிற்சிலகாலங்களிற்போர்க்குச் செல்லநேரிடுமாதலின் அம்முயற்சியும் உனக்கிசையாது ஒருகாலுங்கையிற்படையெடாத முயற்சியையே தேடிக்கொள்ளென்பான் 'இதற்குநீசிந்தையில்வெருக்கொளில்-ஐந்தியலங்கமொன்றங்கைபற்றுதி' எனவும் கூறினான். திசைமுகத்தர் இழிவுபற்றியபன்மை; பிரமாவின்றொழிலைச்செய்யும் மைந்தர்களையுமடக்குதற்குப்பன்மையாற்கூறினரெனினுமாம். ஐந்தியலங்கம்-ஐங்தென்னுங்தொகைபொருந்திய அங்கம்; ஆகுபெயராய் அவைவரையப்பெற்ற புத்தகத்தையுணர்த்திற்று. ()

கிளைத்திடு கள்ளியின் கிளைக ளாமென
வளர்த்தனை பலதலை வரம்பில் கைத்தல
நெளித்தனை சுமந்தனை நெடிது காலமா
யிளைத்தனை வலியிலா யாது செய்திநீ.

இ—ள்: கிளைத்திடு கள்ளியின் கிளைகள் ஆம் என பலதலை வளர்த்தனை—தழைத்திருக்கின்ற கள்ளிமரத்தின்கொப்புகளைப்போலப் பலதலைகளைவளர்த்து, வரம்பு இல் கைத்தலம் நெளித்தனை சுமந்தனை—அளவிறந்த கைகளை நெளித்துச் சுமந்து, நெடிது காலம் ஆ இளைத்தனை—நெடுங்காலமாக இளைத்தாய், வலி இலாய்—வலிமையில்லாதவனே!, நீ யாது செய்தி—நீ என்னசெய்யப்போகின்றாய் எ—று.

ஒருதொழிற்குமுதவாதனவற்றை வீணேசுமந்தாய் என்பதாம். (௧௫௬)

பண்டுணர் வில்லதோர் பருவ மாதலிற்
சண்டனை வருணனைத் தளையி னிட்டனை
யண்டரை யலைத்தனை யறிவு கூடலிற்
பெண்டிரி னடுங்கினை பேடி போலுநீ.

இ—ள்: பண்டு உணர்வு இல்லது ஓர் பருவம் ஆதலின் சண்டனை வருணனை தளையின் இட்டனை—முற்காலத்தில் உய்த்துணர்வில்லாத பிராயமாதலினால் யமனையும் வருணனையும் விலங்குபூட்டிச்சிறையில்வைத்தாய், அண்டரை அலைத்தனை—மற்றுந்தேவர்களையும் வருத்தினாய், அறிவு கூடலில்—இப்பொழுது அறிவுமுதிர்தலால், பெண்டிரில் நடுங்கினை—பெண்களைப்போல நடுக்கங்கொண்டாய், நீ பேடி போலும்—நீ பேடிபோலிருக்கின்றாய் எ—று.

அறிவுமுதிர்ச்சிக்கேற்ப ஆற்றன்முதலியனபெருகாமையால் இங்ஙனம்பழித்துக்கூறினான். ஆண்மைக்குணமில்லாதார்க்குப் பேடியையுவமித்தலியல்பு. ()

பன்னெடுந் தலையுடைப் பால னாகுமுன்
வன்மையு மாடலும் வந்து பார்த்திட
வின்னமும் வந்திலள் வருந்தி யீன்றதா
யன்னைதன் குறைகொலோ வருவ மானதே.

இ—ள்: பல் நெடும் தலை உடை பாலன் ஆகும் உன் வன்மையும் ஆடலும் வந்து பார்த்திட—பலதொகையாகிய நெடியதலைகளையுடைய மகனாகிய உன்னுடைய வலிமையையும் வீரத்தையும் வந்துபார்க்கும்பொருட்டு, வருந்தி ஈன்ற தாய் இன்னமும் வந்திலள்—வருந்திப்பெற்ற தாயானவள் இன்னும்வந்திலாள், அருவம் ஆனது அன்னை தன் குறை கொல்—அவள் அரூபியானது அவளுடைய தவக்குறையினாலோ! எ—று.

உருவத்துடனிருந்து உன்பேடித்தன்மையைக்கண்டு உன்றாய் துக்கமுறுவதினும் அருவமாய் உன்னைக்காணாதிருப்பதே நன்று என்பது உட்கிடை. புதல்வர் அறிவு ஆற்றன்முதலியவற்றாற்சிறப்புறின் மகிழ்வது தாயர்க்கியல்பு. (௧௫௮)

பகையென வொன்றுறிற் பதைப தைத்தெழீஇச்
சிகையுடை வாலுளைச் சீயஞ் சீறியே
தகுவிறல் கொள்ளுமா லவற்றின் றன்மையாய்
மிகுதலை பெற்றதும் வீண்கொ லெம்பிநீ.

இ—ள்: சிகை உடை வால் உளை சீயம்—அடர்ச்சியான வெள்ளிய பிடர்மயிரையுடைய சிங்கமானது, பகை என ஒன்று உறில்—பகையாக ஒருமிருகம் வந்தால், பதைபதைத்து எழீஇ சீறி—துடிதுடித்தெழும்பிக் கோபித்து, தகு விறல் கொள்ளும்—சிறந்த வெற்றியைப்பெறும், எம்பி நீ—என்தம்பி நீ!, அவற்றின் தன்மை ஆய் மிகு தலை பெற்றதும் வீண் கொல்—அச்சிங்கத்தின்வடிவாக அதிகமான தலைகளைப்பெற்றிருப்பதும் வீணாயிற்றா! எ—று.

உருவத்திற்கேற்ற ஆற்றலைப்பெற்றிலாயென்பதுகுறிப்பு. (௧௫௯)

பூதரைத் தலைவரைப் புராரி மைந்தனை
யேதிலர் யாரையும் யான்வென் றேகுவ
னீதளர் வெய்திட னினது மாநகர்
போதுதி யென்றனன் புலனில் புந்தியான்.

இ—ள்: யான்—நான், பூதரை தலைவரை புராரி மைந்தனை ஏதிலர் யாரையும் வென்று ஏகுவன்—பூதர்களையும் தலைவர்களையும் சிவபிரானதுகுமாரராகிய முருகவேளையும் மற்றும்வீரர்களெல்லோரையும் வெற்றிகொண்டுவருவேன், நீ தளர்வு எய்திடல்—நீ வருந்தவேண்டாம், நினது மா நகர் போதுதி—உன்னுடைய சிறந்தநகரத்திற்குப்போவாய், என்றனன்—என்றுகூறிமுடித்தான், புலன் இல் புந்தியான்—உய்த்துணர்வில்லாத புத்தியையுடைய சூரபன்மன் எ—று.

ஏதிலர்யாரையுமென்றது இலக்கத்தொன்பதின்மரை. உன்னைப்போர்க்குப் போகும்படிசொல்வேனோவென்றெண்ணி அஞ்சவேண்டாமென்பான் 'நீதளர் வெய்திடல்' என்றான். (௧௬௦)

என்றிவை யவுணர்கோ னிசைத்த காலையி
னன்றிவ னுணர்வென நகைத்துக் கண்டொறுந்
துன்றிய பேரழல் சொரிய வெஞ்சினத்
தொன்றிய தன்னுளத் தினைய வுன்னுவான்.

இ—ள்: அவுணர்கோன் என்று இவை இசைத்தகாலையில்—சூரபன்மன் இவ்வசனங்களைக்கூறியபொழுது, இவன் உணர்வு நன்று என நகைத்து—(சிங்

கமுகன்) இவனுடைய அறிவு நன்றாயிருக்கின்றதென்றுசிரித்து, கண் தொறும் துன்றிய பேர் அழல் சொரிய—கண்களினின்றும் செறிந்த பெரிய தீப்பொறிகள் சிந்த, வெம் சினத்து—பெருங்கோபத்துடன், ஒன்றிய தன் உளத்து இளைய உன்னுவான்—ஒருவழிப்பட்ட தன்னுடையமனத்தில் இவைகளைநினைப்பான் எ—று.

நன்று குறிப்பாலிகழ்ந்தது. நேர்மையானமனமென்பார் 'ஒன்றியதன்னுளம்' என்றார். (௧௬௩)

உறுதியை யுரைத்தன னுணர்வி லாதவன்
வறிதெனை யிகழ்ந்தனன் வருவ தோர்கில
னிறும்வகை நாடினன் யாதொர் புந்தியை
யறிவிலர்க் குரைப்பவ ரவரிற் பேதையோர்.

இ—ள்: உறுதியை உரைத்தனன்— யான் நற்போதனைகளையேகூறினேன், (கூறியபோதும்), உணர்வு இலாதவன் வறிது எனை இகழ்ந்தனன்—நல்லறிவில்லாதவனாதலால் வீணாக என்னைநிந்தித்தான், வருவது ஓர்கிலன்— பின்விளையுங்கேட்டை நினைக்கின்றிலான், இறும் வகை நாடினன்—அழியும்வழியைத்தேடிக்கொண்டான், யாது ஓர் புந்தியை அறிவிலர்க்கு உரைப்பவர் அவரில் பேதையோர்—எந்தப்புத்தியையாவது மூடர்களுக்குச்சொல்வோர் அவரிலும் பெருமூடர்களாவார்கள் எ—று.

பிரிநிலையேகாரந்தொக்கது. மூடர்கள் நற்புத்திகூறுவாரை மூடர்களென்றும் தம்மைவிவேகிகளென்றும் மதிப்பதன்றித் தமதுகுற்றத்தை ஒருபோதும் ஒத்துக்கொள்ளாராதலின் 'அறிவிலர்க்குரைப்பவரவரிற்பேதையோர்' என்றான். ()

உய்த்தனர் தேன்மழை யுதவிப் போற்றினுங்
கைத்திட றவிருமோ காஞ்சி ரங்கனி
யத்தக வல்லவோ வறிவி லாதவன்
சித்தம துணர்வகை தெருட்டு கின்றதே.

இ—ள்: உய்த்தனர் தேன் மழை உதவி போற்றினும்—தேன்மழையைக்கொண்டுசென்று சொரிந்துவளர்த்தாலும், காஞ்சிரம் கனி கைத்திடல் தவிருமோ—(அப்படிவளர்க்கப்பட்ட) காஞ்சிரமரத்தின்பழம் கைப்புநீங்கப்பெறுமா?, (பெறாதே), அறிவு இலாதவன் சித்தமது உணர்வகை தெருட்டுகின்றது அத்தகவு அல்லவோ—விவேகமில்லாதவனுடைய மனம் தெளியும்படி போதிப்பதும் அத்தன்மையேயன்றோ! எ—று.

கைப்பைநீக்குதற்கேற்ற பெருமுயற்சிகளைச்செய்யினும் காஞ்சிரங்கனியின் சுவைமாறாமைபோல, நன்னிலைப்படுத்தற்கேற்றபெரும்போதனைகளையெல்லாஞ் செய்யினும் துட்டருடையமனம் நன்னிலைப்படாது என்பதாம். தெருட்டுகின்றதும் என்பதில் எச்சவும்மைதொக்கது. (௧௬௫)

தொலைக்கருந் திருவுடைச் சூரன் புந்தியைக்
கலக்கினு முய்வகை கருது கின்றில
னலக்கணுற் றிருந்துநா மிரங்கி யாவதென்
விலக்கரும் விதியையாம் வெல்ல வல்லமோ.

இ—ள்: தொலைக்க அரும் திரு உடை சூரன் புந்தியை கலக்கினும்—எவராலுமழித்தற்கரிய செல்வத்தையுடைய சூரபன்மனது மனத்தைக்கலங்கச்செய்தாலும், உய்வகை கருதுகின்றிலன்—உய்யும்வழியை நினைக்கின்றிலான், நாம் அலக்கண் உற்று இருந்து இரங்கி ஆவது என்—நாம் துன்பப்பட்டுக்கொண்டிருந்து இரங்குதலால் விளையும் பயன்யாது?, (ஒன்றுமில்லை), யாம் விலக்க அரும் விதி

யை வெல்ல வல்லமோ—நாங்கள் தடுத்தற்கரிய விதியைவெல்லுதற்கு வலியுடையோமா? எ—று.

உம்மை இழிவு. செல்வச்செருக்கினையுடையசூரனென்பான் 'தொலைக்கருந்திருவுடைச்சூரன்' எனவும், விதிவழிச்செல்லும்புத்தியைத்தடுத்தல் எவ்வாற்றானுங் கூடாதென்பான் 'விலக்கரும்விதியையாம்வெல்லவல்லமோ' எனவும் குறித்தான். யாம் என்றது பிறரையுமுளப்படுத்திற்று. (௧௬௪)

ஆவது விதியெனி னனைத்து மாயிடும்
போவது விதியெனி னெவையும் போகுமாற்
றேவருக் காயினுந் தீர்க்கத் தக்கதோ
வேவரு மறியொணு வீசற் கல்லதே.

இ—ள்: ஆவது விதி எனின் அனைத்தும் ஆயிடும்— நல்விதியிருந்தால் எல்லாம்வந்துசேரும், போவது விதி எனின் எவையும் போகும்— அழியவேண்டிய விதியிருந்தால் எல்லாமழிந்துபோம், எவரும் அறிய ஒணு ஈசற்கு அல்லது—எவர்களாலுமறிதற்கரிய சிவபிரானலன்றி, தேவருக்கு ஆயினும் தீர்க்க தக்கதோ—மற்றெந்தத்தேவர்களாலும்விலக்கத்தகுந்ததாமோ? எ—று.

ஓ-எதிர்மறை. ஆவதுவிதி போவதுவிதி என்பன பண்புத்தொகை. கடவுளாலன்றி மற்றெவராலும் மாற்றமுடியாதவிதியை என்போதனையால் மாற்றுவது இயலாது என்பதாம். (௧௬௫)

நீண்டசெஞ் சடைமுடி நிமல னீந்தநாண்
மாண்டது மாய்ந்திடு மெல்லை வந்ததா
லீண்டுளார் யாவரு மிறையுந் துஞ்சுமாற்
பூண்டிடு மமரர்கோன் றவமும் பொய்க்குமோ.

இ—ள்: நீண்ட செம் சடைமுடி நிமலன் ஈந்த நாள் மாண்டது— நெடிய சிவந்தசடைமுடியையுடைய சிவபிரானருளிய காலவெல்லைமுடிந்தது, மாய்ந்திடும் எல்லை வந்தது—இறக்குங்காலமணுகியது, (ஆதலின்), ஈண்டு உளார் யாவரும் இறையும் துஞ்சும்— இந்நகரத்திலுள்ளாரனைவருமிறப்பார்கள் சூரபன்மனுமிறப்பான், அமரர்கோன் பூண்டிடும் தவமும் பொய்க்குமோ—தேவர்க்கரசனாகிய இந்திரன்செய்ததவமும் பொய்படுமோ? (படாதே) எ—று.

தவமுமென்றஉம்மை வாழ்நாளெல்லையைத்தழீஇநிற்றலின் எச்சம். தவத்தைவிசேடித்ததெனக்கொண்டு சிறப்பாக்குவார்சிலர். (௧௬௬)

இறப்பது சரதமே யிறைவ னென்னுரை
வெறுத்தன னிகழுமேல் வேண்டி யின்னும்யான்
மறுத்தெதிர் மொழியலன் மன்ன வென்பிழை
பொறுத்தியென் றின்னுரை புகல்வ தல்லதே.

இ—ள்: இறைவன் இறப்பது சரதமேல்—சூரபன்மனிறந்துபோவது நிச்சயமாதலாலும், என் உரை வெறுத்தனன் இகழுமேல்—என்னுடையவசனத்தை வெறுத்துநிந்திக்கின்றானாதலாலும், யான்—நான், மன்ன என் பிழை பொறுத்தி என்று—அரசனே! என்னுடைய குற்றத்தைப்பொறுத்துக்கொள்ளுவீரென்று, இன் உரை புகல்வது அல்லது—இன்சொற்களைக்கூறுவதேயன்றி, இன்னும் வேண்டி மறுத்து எதிர் மொழியலன்—பின்னும்மெலிந்து மறுத்து எதிர்மொழிகளைப்பேசமாட்டேன் எ—று.

அழிதற்கேற்றகாலமும் புத்தியும் பொருந்தியிருத்தலால் யான் இனி எதிர்த்துப்பேசுதலாற்பயனில்லை, இணக்கமாகப்பேசுவேன் என்பதாம். (௧௬௭)

மன்னவர் மன்னவன் வள்ளல் வேலினு
லின்னினி யிறந்திடு மிதுவு நோக்கியே
பின்னுமிங் கிருந்திடல் பிழைய தாகுமா்ன்
முன்னுற முடிவதே முறைய தாமெனு.

இ—ள்: மன்னவர் மன்னவன்—அரசர்க்கரசனுகிய சூரபன்மன், வள்ளல் வேலினுல் இன்னினி இறந்திடும்—முருகக்கடவுளேவும் வேற்படையினுல் இனியிறப்பான், இதுவும் நோக்கி—இதையும்பார்த்துக்கொண்டு, பின்னும் இங்கு இருந்திடல் பிழையது ஆகும்—பின்பும் இவ்வுலகத்திலிருப்பது தவருகும், முன்னுற முடிவதே முறையது ஆம்—முந்தியிறப்பதேதகுதியாகும், எனு—என்று எ—று.

இதுவுமென்றஉம்மை இழிவு. பின்னைய ஏ-பிரிநிலை. எனு சிந்தனைசெய்திடு எனப்பிற்செய்யுளோடியையும். தமையனிறப்பவுந் தன்னுயிரைப்பேணினுனென்னும்நிந்தைசாருமென்பான் 'பின்னுமிங்கிருந்திடல்பிழையதாகும்' என்றுன்.

சிந்தனை செய்திடு சிங்க மாமுகன்
றந்தையை நிகர்வரு தம்முன் ருடொழா
வந்தனை செய்தனன் மன்ன சீறிடேல்
புந்தியி லேன்பிழை பொறுத்தல் வேண்டுமால்.

இ—ள்: சிந்தனை செய்திடு சிங்க மா முகன்—இவ்வாறுநினைத்த பெரியசிங்கமுகங்களையுடைய அசுரன், தந்தையை நிகர்வரு தம்முன் தாள் தொழா—பிதாவையொத்த தமையனுகிய சூரபன்மனதுகால்களைத்தொழுது, வந்தனை செய்தனன்—வழிபாடுசெய்து, மன்ன சீறிடேல்—அரசனே! கோபங்கொள்ளற்க, புந்தி இலேன் பிழை பொறுத்தல்வேண்டும்—புத்தியில்லாத யான்செய்தகுற்றத்தைப் பொறுத்தருளவேண்டும் எ—று.

வந்தனைசெய்தனன்கேட்டலும் என களஉ ஞ்செய்யுளோடியையும். சிங்கமுகனுக்குத்தமையனுயதேயன்றிக் குலத்திற்கும் முதல்வனுயிருத்தலின் 'தந்தையை நிகர்வருதம்முன்' என்றுர். (கசுக)

சிறியவ ரொருபிழை செய்யின் மேலவர்
பொறையொடு பின்னரும் போற்ற லல்லதை
யிறையது்ம் வெகுள்வரோ யானுஞ் செய்பிழை
யறிவனீ யன்றியே யார தாற்றுவார்.

இ—ள்: சிறியவர் ஒரு பிழை செய்யில்—வயதாலிளையவர்கள் ஒருகுற்றத்தைச்செய்தால், மேலவர் பொறையொடு பின்னரும் போற்றல் அல்லது—மூத்தவர்கள் அதனைப்பொறுத்துக்கொண்டு பின்னும் அவரைப்பேணுவதேயன்றி, இறையதும் வெகுள்வரோ—சற்றேனுங்கோபிப்பார்களா?, (கோபியார்கள்; ஆதலால்), யான் செய் பிழையும்—யான்செய்தகுற்றத்தையும், அறிவன் நீ அன்றி—அறிவிற்சிறந்தவாாகிய நீர் சகிக்கவேண்டியதன்றி, யார் ஆற்றுவார்—வேருர்சகிக்கத்தக்கவர்கள்? எ—று.

யான் வயதாலிளையேனும் நீர் மூத்திருமாதலின் என்குற்றத்தை நீரேபொறுக்கவேண்டும் என்பதாம். யானுமென்றஎச்சவும்மை பிரித்துக்கூட்டப்பட்டது.

பொறுத்தனை கோடியென் புன்மை யுள்ளமேற்
செறுத்தனை யிகழ்ந்திடல் செருவிற் சென்றியான்
மறுத்தெதிர் மலைந்திடு மாற்ற லார்தமை
யொறுத்திடு கின்றன னதனை யோர்திநீ.

இ—ள்: என் புன்மை பொறுத்தனை கோடி—யான்செய்தகுற்றத்தைப்பொறுத்துக்கொள்வீர், உள்ளமேல் செறுத்தனை இகழ்ந்திடல்— மனத்திற்கோபங்கொண்டு இகழவேண்டாம், யான் செருவில் சென்று—யான் போர்க்குப்போய், மறுத்து எதிர் மலைந்திடும் மாற்றலார் தமை ஒறுத்திடுகின்றனன்—தடுத்து எதிர்நின்றுபோர்செய்யும்பகைவர்களையழிப்பேன், நீ அதனை ஓர்தி—நீர் அதனை அறிவீர் எ—று.

போருக்கனுப்பியபின் என்வீரத்தையறிவீராகவென்பான் 'அதனையோர்தி' என்றான். (௧௭௧)

> செருவினுக் கேகுவன் செறுநர் தம்மிசைத்
> தருதியால் விடையெனத் தம்பி கேட்டலும்
> பெரிதுள மகிழ்ந்தனன் பிறங்கு காதலால்
> வருதியென் றனையனை மார்பிற் புல்லினான்.

இ—ள்: செறுநர் தம் மிசை செருவினுக்கு ஏகுவன்—யான் பகைவருடன் போர்செய்யப்போவேன், விடை தருதி என—அதற்கு அனுமதிகொடுப்பீராகவென்று, தம்பி கேட்டலும்—தம்பியாகிய சிங்கமுகன்கேட்டவுடன், பெரிது உளம் மகிழ்ந்தனன்—சூரபன்மன் மிகமனமகிழ்ந்து, பிறங்கு காதலால்—மிகுந்தஆவலோடும், அனையனை வருதி என்று—அந்தச்சிங்கமுகனை வருவாயென்று அழைத்து, மார்பில் புல்லினான்—மார்பிலணைத்துத்தழுவினான் எ—று. (௧௭௨)

> பையர வளித்திடும் பாதலத்தினில்
> வையக வரைப்பினிற் றிசையின் வான்களிற்
> செய்யவண் டங்களிற் செய்யும் வென்றியு
> ளையநிற் கேதுகொ லரிய தானதே.

இ—ள்: ஐய—ஐயனே!, பை அரவு அளித்திடும் பாதலத்தினில்—படத்தையுடைய ஆதிசேடனாற்காக்கப்படுகின்ற பாதலவுலகத்தினும், வையக வரைப்பினில்—பூவுலகத்தினும், திசையின் வான்களில்—எட்டுத்திக்குகளிலும் ஆகாயவுலகங்களிலும், செய்ய அண்டங்களில்— சிறந்த அண்டங்களிலும், செய்யும் வென்றியுள்— பெறவேண்டியவெற்றிகளுள், நிற்கு அரியது ஆனது எது—உனக்கரியதுயாது? (ஒன்றுமில்லையே) எ—று.

எங்குஞ்சென்று எல்லாரையும்வெல்லவல்லாயென்பதாம். அன்பின்மிகுதியால் தம்பியை ஐய என்றான். (௧௭௩)

> நீக்கமில் கேள்வியாய் நீமுன் சொற்றன
> தூக்குறி னென்மனத் துணிவுந் திட்பமு
> மூக்கமு முணரவே பொன்ன லாரெனு
> மாக்களை யடுவதோர் மடங்க லல்லையோ.

இ—ள்: நீக்கம் இல் கேள்வியாய்—குறைவற்ற நூற்கேள்வியையுடையவனே!, நீ முன் சொற்றன தூக்குறின்—நீ முன்னே சொல்லியவைகளை ஆராயுமிடத்து, என் மன துணிவும் திட்பமும் ஊக்கமும் உணரவே—என்னுடைய மனத்தைரியத்தையும் வலிமையையும் உற்சாகத்தையுமறிதற்கேயாம், ஒன்னலார் எனும் மாக்களை அடுவது ஓர் மடங்கல் அல்லையோ— (நீ) பகைவரென்றுசொல்லப்படுகின்ற யானைகளையழிக்கின்ற சிங்கமன்றோ! எ—று.

ஏ தேற்றம். மிருகாசனுகியசிங்கத்தின்முகங்களையுடையையாதலானும் விவேகியாதலானும் நீ முன்கூறியவைஉளக்கருத்தல்லவெனவும் இப்போதுகூறியதே உன்கருத்தெனவும் உணர்ந்துகொண்டேன் என்பதாம். (௧௭௪)

சென்றனர் மாற்றல ரென்கை தேர்தியேற்
கொன்றபின் னல்லது கும்பிட் டோடிட
வென்றபி னல்லது வெகுளி தீர்தியோ
வுன்றன தாற்றலை யுணர்கி லேன்கொலோ.

இ—ள்: மாற்றலர் சென்றனர் என்கை தேர்தியேல்—பகைவர்கள் போருக்குவந்தார்களென்பதை (நீ) அறிவாயானால், கொன்றபின்—அவர்களைக்கொன்றபின்பு, அல்லது கும்பிட்டு ஓடிட வென்றபின் அல்லது—கொல்லாவிட்டால் கைதொழுதுகொண்டு ஓடிப்போம்படி வெற்றிகொண்டபின்னல்லாமல், வெகுளி தீர்தியோ—கோபம்நீங்குவாயா? உன் தனது ஆற்றலை உணர்கிலேன்கொல்—உன்னுடையவலிமையை நான் அறியேனா! எ—று.

ஓ-முன்னையது எதிர்மறை. உன்வலியைநானறிந்துளேனாதலால் நீ முன் கூறியவை என்னைச்சோதித்தற்கேயென்பதை இனிதுதுணிந்தேன் என்பதாம்.

இற்றைநா ளின்னக மேகி யாயிடை
யுற்றிடு படையெலா மொருங்கு கொண்டுநீ
கொற்றமொ டிருக்குதி குமர னீண்டுறின்
மற்றுனை விளிக்குவன் வருதி யாலென்றான்.

இ—ள்: நீ இற்றைநாள் நின் நகர் ஏகி—நீ இத்தினத்தில் உன்னுடையநகரத்திற்போய், ஆயிடை உற்றிடு படை எலாம் ஒருங்கு கொண்டு—அங்கேயிருக்கின்றசேனைகளெல்லாவற்றையும் ஒருங்குசேர்த்துக்கொண்டு, கொற்றமொடு இருக்குதி—வெற்றியோடிருப்பாய், குமரன் ஈண்டு உறின்—முருகவேள் இங்கேபோர்க்குவந்தால், உனை விளிக்குவன்—உன்னையழைப்பேன், வருதி என்றான்—வருவாயென்று சூரபன்மன்கூறினான் எ—று.

படை ஆயுதங்களெனினுமாம். வெற்றிபெறுதற்கேற்றமுயற்சியுடனிருப்பாயென்பான் 'கொற்றமொடிருக்குதி' என்றான். (௧௭௬)

ஒல்லென முருகவே ளுனது மாநகர்
செல்லினு மேகலை செருவுக் கன்னது
சொல்லினை விடுத்தியோர் தூதன் றன்னையான்
வல்லையி னமர்செய வருகின் றேனென்றான்.

இ—ள்: முருகவேள் ஒல்லென உனது மா நகர் செல்லினும்—முருகக்கடவுள் விரைவாக உம்முடையபெரிய இந்நகரத்திற்கு வந்தாலும், செருவுக்கு ஏகலை—நீர் போர்க்குப்போகவேண்டாம், அன்னது சொல்லினை—அந்நிகழ்ச்சியைக்கூறி, ஓர் தூதன் தன்னை விடுத்தி—ஒரு தூதனையனுப்புவீர், யான் வல்லையின் அமர்செய வருகின்றேன்—யான் விரைவிற்போர்செய்தற்குவருவேன், என்றான்—என்றுசிங்கமுகன்கூறினான் எ—று.

ஒல் விரைவுக்குறிப்பு. சூரபன்மனிறக்குமுன் தானிறக்கவேண்டுமென்றாகருதினனாதலின் இவ்வாறுகூறினான். (௧௭௭)

என்றலு மவுணருக் கிறைவ னீங்கிது
நன்றென விடையது நல்கத் தாழ்ந்துபோய்த்
தன்றிரு மாநகர் சார்ந்து வைகினான்
வன்றிற லுடையதோர் மடங்கற் பேரினான்.

இ—ள்: என்றலும்—என்றுசிங்கமுகன்சொல்லியவுடன், அவுணருக்கு இறைவன்—அசுரர்க்கரசனாகிய சூரபன்மன், இது நன்று என விடையது நல்க—

இதுநல்லதென்றுகூறி அனுமதிகொடுக்க, வன் திறல் உடையது ஓர் மடங்கல் பேரினன்—மிகுந்தவலிமையையுடைய ஒப்பற்றசிங்கமுகாசுரன், தாழ்ந்து போய்—வணங்கிப்போய், தன் திரு மா நகர் சார்ந்து வைகினன்—தன்னுடைய சிறந்தபெரிய நகரத்திற்புகுந்திருந்தான் எ—று. (௧௭௮)

ஆனதோர் பொழுதினி லரச னுண்டுறை
தானையந் தலைவரைத் தனயர் தங்களை
யேனையர் யாரையு மேகச் செய்துதன்
மாநக ரிந்திர வளத்தின் வைகினன்.

இ—ள்: ஆனது ஓர் பொழுதினில்—அப்பொழுது, அரசன்-சூரபன்மன், ஆண்டு உறை தானையம் தலைவரை- அந்நகரிலிருக்கின்ற சேனைத்தலைவர்களையும், தனயர் தங்களை—புத்திரர்களையும், ஏனையர் யாரையும்—மற்றுமெல்லோரையும், ஏகச்செய்து—அவரவரிருப்பிடத்துக்குப்போம்படியனுப்பி, தன் மா நகர் இந்திர வளத்தின் வைகினன்—தன்னுடைய பெரியநகரத்திற் பெருஞ்செல்வத்தோடுவாழ்ந்திருந்தான் எ—று.

சிங்கமுகன் தன்னகர்க்கேகியபொழுதென்பார் 'ஆனதோர்பொழுதினில்' என்றார். (௧௭௯)

அந்தமில் வளனுடை யவுணர் காவலன்
மந்திர மிருந்தது வகுத்துக் கூறினூ
மிந்திரன் முதலினோர் யாரு மேத்திடச்
செந்தியி னமர்ந்தவன் செய்கை செப்புவாம்.

இ—ள்: அந்தம் இல் வளன் உடை அவுணர்காவலன் மந்திரம் இருந்தது வகுத்து கூறினும்—அளவிறந்தசெல்வங்களையுடைய அசுரர்க்கரசனாகிய சூரபன்மன் அமைச்சியல்செய்தமையை(இதுகாறும்)விரித்துச்சொன்னோம், (இனி), இந்திரன் முதலினோர் யாரும் ஏத்திட செந்தியின் அமர்ந்தவன் செய்கை செப்புவாம்—இந்திரன்முதலிய தேவர்கள்யாவருந்துதிக்கத் திருச்செந்திப்பதியிலெழுந்தருளியிருந்த முருகக்கடவுள் செய்தகாரியங்களைச் சொல்வோம் எ—று.

இக்காண்டமுடிவையும் பிற்காண்டத்தொடக்கத்தையுங்குறித்துக்கூறிய செய்யுளிதுவென்க. (௧௮௦)

சூரனமைச்சியற்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௧௧௭௮.

மகேந்திரகாண்டம் முற்றுப்பெற்றது.

STACKS

S... ...CTION